புதிய பாடத்திட்டம் - 2017

தமிழ்

க.பொ.த. உயர்தரம்

தரம் - 12

தமிழ் 1 இற்குரிய முழுப்பாடத்திட்டமும் உள்ளடங்கியது

தொகுப்பாக்கம்
கலாநிதி, பண்டிதர்
செ.திருநாவுக்கரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய பாடத்திட்டம்

க.பொ.த உயர்தரம்

தரம் - 12

தமிழ்

(2017 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்துள்ள புதிய பாடத்திட்டத்திற்கு அமைவான தரம் 12 இன் தமிழ் பாடநூல் பகுதி 1 இற்குரிய முழுப்பாடத்திட்டமும் அடங்கியது.)

நூல் தொகுப்பாக்கக் குழு

கலாநிதி, பண்டிதர். செ.திருநாவுக்கரசு

திரு.யூசுப். எம். அஸ்றப் B.A, Ta.Trd
(ஆசிரியர், அல் - அஸ்றக்ப் தேசிய பாடசாலை, நிந்தவூர்)

திரு.எஸ்.கௌதமன் NDT (Tamil. Spe)
(ஆசிரியர், கிரான் ம.கல்லூரி, மட்டக்களப்பு

திருமதி குணேஸ்வரி இரகுநாதன் B.A, M.A, P.G.D.E
(இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் விபரம்

நூலின் தலைப்பு	:	தமிழ் (க.பொ.த உ/தரம் -12)
தொகுப்பாசிரியர்	:	கலாநிதி செ.திருநாவுக்கரசு
மூன்றாம் பதிப்பு	:	27 மே 2019
பதிப்புரிமை	:	திருமதி. விஜயலட்சுமி திருநாவுக்கரசு
கணினி வடிவமைப்பு	:	ஜே.எஸ். பிரின்டர்ஸ், சில்லாலை வீதி பண்டத்தரிப்புச் சந்தி, யாழ்ப்பாணம் T.P. 0772487212
மொத்தப் பக்கங்கள்	:	631 + x
விலை	:	1200.00

Title	:	TAMIL (G.C.E A/L -12)
Collection	:	Dr.S.Thirunavukkarasu
Third Edition	:	27 May 2019
Copy Right	:	Mrs. Vijayaledchumy Thirunavukkarasu.
Computer Printing	:	J.S. Printers, Sillalai Road, Pandatheruppu. Jaffna. T.P. 0772487212
Price	:	Rs 1200.00
ISBN No	:	978 - 955 - 52960 - 6-9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம்



பேராதனை, யாழ்ப்பாணம், உப்சலா (சுவீடன்), அரிசோனா (அமெரிக்கா) ஆகிய பல்கலைக்கழகங்களின் பேராசிரியரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் தமிழ்த்துறைத் தலைவரும், இரட்டைக் கலாநிதியும், பல நூற்றுக்கணக்கான மாணவர்களின் அன்புக்குரிய தமிழாசானுமாகிய அமரர், ஆ.வேலுப்பிள்ளை (21.11.1936 - 1.11.2015) அவர்களின் பாதக் கமலங்களுக்கு இத் தமிழ்நூல் சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும்வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகு மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

மனோன்மணீயம்
பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் தொகுப்பாக்கக் குழு



செ.திருநாவுக்கரசு

யூசுப்.எம்.அஸ்றப்

எஸ்.கௌதமன்

குணேஸ்வரி இரகுநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

2017 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்துள்ள புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாக க.பொ.த உயர்தரம் - 12 வகுப்பிற்கான **தமிழ் பகுதி - 1** நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் தமிழிலக்கிய வடிவங்களான சிறுகதை, நாவல், நாடகம் பற்றிய கட்டுரைகளும், நூல் அறிமுகம், நூலாசிரியர் வரலாறு போன்றவைகளும் விரிவான முறையில் தரப்பட்டுள்ளன. அவை **தமிழ் பகுதி - 2** இனைக் கற்பதற்குப் பெருந்துணை புரியக் கூடியவை. மேலும் பீ.ஏ, எம்.ஏ வகுப்புகளில் தமிழைப் பயிலும் மாணவர்களுக்கும் பயனளிப்பவை.

இந்நூற் தொகுப்பில் என்னுடன் இணைந்து இளம் ஆசிரியர்களும், தமிழ்மொழியைப் பாடசாலைகளில் ஆர்வத் துடன் கற்பிப்பவர்களுமாகிய நால்வர் பங்கேற்று உழைத்திருக்கிறார்கள். ஏதோ ஒரு வகையில் இவர்கள் அனைவரும் எனது மாணவர்களாவர். இந்நூலுக்கான அணிந்துரையை எனது குருவும், பேராசிரியருமான **அ.சண்முகதாஸ்** அவர்களும், அவர்தம் துணைவியார் பேராசிரியர் **திருமதி மனோன்மணி சண்முகதாஸ்** அவர்களும் இணைந்து வழங்கி எம்மைப் பெருமைப்படுத்தி உள்ளனர். இந்நூலுக்கான எழுத்துக்களை கணினி அச்சில் பொறித்து வடிவமைத்துத் தந்தவர், கோண்டாவில் **திரு.சூ.சஞ்சீவ்காந்த்** அவர்கள். அழகான முறையில் அட்டைப் படத்தினை உருவாக்கி உதவியவர்கள் இல 388, கோயில் வீதி, நல்லூர் என்னும் முகவரியில் இயங்கும் **எம்.வி. கிறபிக்ஸ்** நிறுவனத்தினர். இந்நூலினை நல்லமுறையில் அழகாக அச்சில் வெளிக் கொணர்ந்தவர்கள் சில்லாலை வீதி, பண்டத்தரிப்புச் சந்தியில் இயங்கும் **ஜே. எஸ்.** பதிப்பக உரிமையாளர் **எம்.லிகான்** அவர்களும், ஊழியர்களும். இவர்கள் அனைவருக்கும் எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

- தொகுப்பாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரை

தமிழ்மொழி உலகச் செம்மொழிகளில் ஒன்று. இம்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் யாவரும் பெருஞ் சிறப்புப் பெற்றவர்கள். பண்டைக் காலத்தில் தமிழ் மொழிக் கற்கையென்பது வாய்மொழிக் கல்வியாகவே நடைபெற்றது. திண்ணைப் பள்ளியிலும் குருகுலத்திலும் தமிழ் பயிற்றப்பட்டது. செவிப்புலன் மூலமாகக் கல்வி உள்வாங்கப்பட்டு மனப்பதிவாகப் பேணப்பட்டது. பின்னர் தமிழ்மொழி இலக்கிய இலக்கணங்கள் ஏட்டிலே எழுதப்பட்டபோது ஏட்டுச் சுவடிகளிலே கற்றலும், கற்பித்தலும் நடைபெற்றன. புதிய விஞ்ஞான அறிவு வளர்ச்சி நிலையிலேயே அச்சுப்பொறிகள் 19 ஆம் நூற்றாண்டிலே பயன்பாட்டிற்கு வந்தபோது தமிழ் நூல்கள் உருவாக்கம் பெற்றன. கல்வி பயிற்றலிலும் மேலைநாட்டாரது பள்ளிக் கல்வியும் பாட நூல்களும் பரவலாக்கம் பெற்றன.

அந்த வகையிலே பாடநூலாக்கம் பலராலும் மேற் கொள்ளப்பட்டு இன்றுவரையும் தொடர்கிறது. குறிப்பாகத் தமிழ் மொழியை உயர்நிலையிலே பயிற்றுவதற்குப் பாடநூல்கள் மட்டு மன்றித் துணை நூல்களும் பெரிதும் வேண்டப்பட்டன. பண்டைய தமிழிலக்கிய இலக்கண நூல்கள் பற்றிய தெளிவான விளக்கங்கள் தேவைப்பட்டன. பழைய உரையாசிரியரின் உரைநடை கடினமாக இருந்தமையால் எளிய மொழிநடையில் உரைகளும், விளக்கமும் எழுதப்பட்டன. இத்தகைய துணை நூல்கள் தமிழ்மொழியைப் பயிற்றும் ஆசிரியர்களுக்கும், பயிலும் மாணவர்களுக்கும் மிகுந்த பயனளிப்பவை.

கல்விப் பொதுத் தராதர உயர்தரத்திலே தமிழ்மொழியைப் பயிலும் மாணவர்களுக்கு 2017 ஆம் ஆண்டு தொடக்கம் புதிய பாடத்திட்டம் பயன்படுத்தப்பட உள்ளது. அத்திட்டத்துள்ளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கப்பட்டுள்ள பாடப் பகுதிகளை எளிதாகப் பயிற்றுவதற்கும், பயில்வதற்கும் ஒரு துணைநூல் மிகவும் இன்றியமையாதது. அத்தேவையை நிறைவு செய்யுமுகமாகக் கலாநிதி. செ. திருநாவுக்கரசு ஒரு நூலை யாத்துள்ளார். க.பொ.த உயர்தரம் - 12 இல் பயிலும் மாணவர்களும், பயிற்றும் ஆசிரியர்களும் பயன்பெறும் வகையில் நூல் கட்டமைக்கப்பட்டுள்ளது. பாடத்திட்டத்துள் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகள் அனைத்திற்கும் வேண்டிய விளக்கம், குறிப்புரை என்பன இணைக்கப்பட்டுள்ளன. குறிப்பிடப்பட்டுள்ள இலக்கியம், புலவர், இலக்கணம், சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை என்பன பற்றிய அறிமுக விளக்கமும், பொருள் நிலையான விளக்கமும் பயிற்றுவதற்கும் பயில்வதற்கும் வாய்ப்பாகத் தொகுக்கப்பட்டுள்ளன. மேலும் பாடத்திட்டத்தின் பகுதி 1 இல் அடங்கும் எல்லாப் பகுதிகளையும் ஒரே தொகுப்பு நூலாக எழுதியிருப்பது கற்பதற்கு வாய்ப்பாக உள்ளமை சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது.

இன்னும் தமிழ் மொழியைக் கற்க வேண்டும் என்ற பெரு விருப்புடைய மாணவர்கள் தன்னிலைக் கற்றலுக்கும் இந்நூல் பெரிதும் பயன்படும். இத்தகைய பணியைச் செய்த நூலாசிரியரும் நூலாக்கக் குழுவினரும் பாராட்டுக்குரியவர்கள். தமிழ் பயிற்றல், பயிலல் என்ற கல்வித் தளத்தில் இந்நூலுக்கு ஒரு சிறப்பான இடம் உண்டு.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
பேராசிரியர் ச. மனோன்மணி

01.01.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

		பக்கம்
	சமர்ப்பணம்	iii
	தமிழ்த்தாய் வாழ்த்து	iv
	நூல்தொகுப்பாக்கக் குழு	v
	முன்னுரை	vi
	அணிந்துரை	vii
	பொருளடக்கம்	ix
1.	சங்ககாலப் பாடல்கள்	01
	அ. குறுந்தொகை	
	ஆ.நற்றிணை	
	இ. புறநானூறு	
2.	திருக்குறள்	37
	- பொருட்பால் (5 - 11 அதிகாரங்கள்)	
3.	சிலப்பதிகாரம்	91
	- ஊர்காண்காதை (15 - 61 அடிகள்)	
4.	திருவாசகம்	110
	- கோயில் திருப்பதிகம் - மாணிக்கவாசகர்	
5.	அமலனாதிபிரான்	133
	- திருப்பாணாழ்வார்	
6.	கம்பராமாயணம்	153
	- குகப்படலம் (கங்கைகாண் படலம்)	
7.	தேம்பாவணி	239
8.	பாரதியார் பாடல்கள்	299
	அ. குயிற்பாட்டு	
	ஆ.கண்ணம்மா என் காதலி	

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. பெண் விடுதலை
ஈ. பாஞ்சாலி சபதம்

பக்கம்

9. ஈழநாட்டுக் குறம் - ப.கு.சரவணபவன் 323

10. பாரதியார் - பண்டிதர்.மு.நல்லதம்பி 331

11. கட்டுரைகள் 341

அ. தமிழ்த் தொண்டு - சுவாமி விபுலாநந்தர்

ஆ.தமிழர் நாகரிகத்தில் கிராம வாழ்க்கை
- புதுமைப் பித்தன்

இ. மானுடம் தழுவிய கவிஞர்கள்
- பேராசிரியர் க.கைலாசபதி

12. சிறுகதைகள் 387

அ. தியாகம் - கு.அழகிரிசாமி

ஆ.தேர் - எஸ்.பொன்னுத்துரை

13. நாவல் 454

- ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது - வ.அ.இராசரெத்தினம்

14. நாடகம் 588

- இரு துயரங்கள் - இ.முருகையன்

15. மாதிரி வினாப்பத்திரம் 626

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சங்ககாலப் பாடல்கள்

கி.மு. 5000 ஆண்டுகளுக்கு முன்னரே சங்ககாலம் தொடங்கி விட்டது எனச் சில தமிழ் அறிஞர்கள் கூறுவர். இருப்பினும் கி.பி முதலாம் நூற்றாண்டு தொடக்கம் மூன்றாம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியைச் சங்ககாலம் எனக் கருதுவது மரபாகி விட்டது. தமது **தமிழ் இலக்கிய வரலாறு** என்ற நூலில் பேராசிரியர் வி.செல்வநாயகம் அவர்கள் இதனை குறிப்பிட்டுள்ளார். இந்த முந்நூறு ஆண்டு காலப் பகுதியில் வேங்கடம் முதல் தென்குமரி வரைக்கும் பரந்து கிடந்த பழந்தமிழகத்தின் நிலப்பரப்பினை சேர, சோழ, பாண்டியர்களான மூவேந்தர்களும் பாரி, காரி போன்ற பல குறுநில மன்னர்களும் ஆட்சி புரிந்தனர். தமிழகத்தின் இயற்கை யோடு இணைந்ததாக, மக்கள் வாழ்க்கை அமைந்திருந்த இக்காலப் பகுதியில் வள்ளல்களும், புலவர்களும் வற்றாத ஜீவநதிகளாக விளங்கினர். தென்மதுரை, கபாடபுரம், தற்போதைய மதுரை ஆகியவற்றைத் தலைமையிடங்களாகக் கொண்டு முறையே முதல், இடை, கடை எனத் தமிழ்ச் சங்கங்கள் அமைத்துப் புலவர்களும், புரவலர்களான மன்னர்களும் தமிழ் வளர்த்தனர்.

ஐந்நூற்றுக்கு மேற்பட்ட சங்கத் தமிழ்ப் புலவர்கள் உட்படப் பல ஆயிரம் புலவர்கள் வளர்த்த தமிழ்ச் செல்வங்கள் பலவும் கடல் கோள்களாலும், செல், சிதல் போன்றவற்றினாலும், அரசியற் படையெடுப்புக்களாலும், அக்கறையின்மையாலும் அழிந்தவை போக, எஞ்சியவற்றைத் தமிழ்ப் பற்றுடையோர் தொகுத்து ஒழுங்குபடுத்தினர். பாட்டு, அளவு, பொருள் முதலான குறிக்கப்பட்ட பண்புகள் கருதித் தொகுக்கப்பட்ட பல்வேறு தனிப்பட்ட புலவர்களது பாடல்களின் தொகுதி **எட்டுத்தொகை** நூல்களென்றும், தனித்தனியே புலவர்கள் பாடிய நீண்ட பாடல்கள் **பத்துப்பாட்டு** நூல்களென்றும் அழைக்கப்பட்டன. 2426 தனிநிலைச் செய்யுள்கள் எட்டுத் தொகையில் அடங்கியுள்ளன. எட்டுப் புலவர்களின் பத்து நூல்கள் பத்துப் பாட்டினுள் அடங்கியுள்ளன. அகத்திணை, புறத்திணை ஆகிய இரு பிரிவுகளாகத் தமிழர் வாழ்வியலை ஒழுங்குபடுத்திக் காதலுக்கும், வீரத்திற்கும், அறநெறிகளுக்கும் களமமைத்துக் கவிபாடிய சங்கப் புலவர் பெருமை சாலச் சிறந்ததாகும். பொய்யடிமை இல்லாத சங்கச் சான்றோர் படைத்தளித்த சங்கப்பாடல்களே தமிழ் இலக்கியங்களின் வரலாற்றையும், அக்காலத் தமிழ்ச் சமூகங்களின் வரலாற்றையும் அறியத் துணை நிற்பனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகியன எட்டுத்தொகை நூல்களாகும். இவற்றுள் பதிற்றுப்பத்து, புறநானூறு, பரிபாடல் ஆகியன புறத்திணை சார்ந்தவை. ஏனைய நூல்கள் அகத் திணையின் பாற்படுவன. பரிபாடல் இருதிணைக் கருத்துக்களையும் கூறுவதால் புறத்திணையில் அடங்குகிறது. பத்துப்பாட்டு நூல்களாக; திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப் படை (மலைபடுகடாம்), குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, பட்டினப் பாலை, நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி ஆகியன காணப் படுகின்றன. குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, பட்டினப் பாலை ஆகிய மூன்றும் அகத்திணை சார்ந்தவை. இருதிணை கூறும் நெடுநல்வாடை உட்பட ஏனைய ஏழு நூல்களும் புறத்திணையில் அடங்குவன. இருப்பினும் ஆற்றுப்படை நூல்கள் ஐந்தும் தனித்துவம் வாய்ந்தவை.

சங்கப்பாடல்கள் ஏறத்தாழ 35 ஆயிரம் அடிகளாலானவை. அக்காலத்தைய அரசியல், சமய, சமூக நிலைகளைச் சித்திரிப்பனவாகவும், சுருங்கச் சொல்லி விளங்க வைப்பனவாகவும், செம்மைசேர் மொழித் திறனுடையனவாகவும் இக்காலப் பாடல்கள் காணப்படுவதால், தமிழர்களின் தொன்மைக்கும், இலக்கியச் செழுமைக்கும் சான்றுகளாக விளங்குகின்றன.

அ. குறுந்தொகை

எட்டுத் தொகை நூல்களுள் நற்றிணைக்கு அடுத்த படியாகத் தொகுக்கப் பெற்றதாகக் கருதப்படும் இந்நூல், கடவுள் வாழ்த்து நீங்கலாக 401 அகத் திணைச் செய்யுள்களைக் கொண்டது. 205 புலவர்கள் பாடிய அகப்பாடல்கள், நான்கு அடி முதல் எட்டு அடிவரையில் குறுகியனவாகக் காணப்படினும், பொருட் டிறன் மிக்கவை. 182 புலவர்கள் இயற் பெயராலும், 18 புலவர்கள் இயற் பெயரல் லாத பாடலடி உவமைப் பெயராலும், ஐவர் இயற் பெயராலும் உவமைப் பெயராலும் அடையாளங் காணப் பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலினைத் தொகுத்தவர் யாரெனத் தெரியவில்லை. தொகுப்பித்தவர் பூரிக்கோ எனத் தெரிகிறது. 396 செய்யுள்கள் நேரிசை ஆசிரியப்பாவினாலும், 05 செய்யுள்கள் நிலைமண்டில ஆசிரியப்பாவினாலும் ஆனவை. பாரதம் பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்தைப் பாடியுள்ளார். பேராசிரியரின் சிறந்த உரையொன்று இதற்குளதாயினும், இப்போது கிடைத்திலது. பேராசிரியர் உரையெழுதாத 20 செய்யுள்களுக்கும் நச்சினார்க்கினியர் உரைசெய்தனரென்பர். சங்ககால நூல்களிலே அதிக அளவுக்கு உரையாசிரியர்களின் எடுத்துக்காட்டில் குறுந்தொகைப் பாடல்களே உள்ளன. காவியப் பெருமை பெற்ற இறையனார், வெள்ளிவீதியார், ஆதிமந்தியார் போன்றோர் பாடிய பாடல்கள் இத்தொகை நூலிலேயே உள்ளன. செம்புலப்பெயனீரார், அணிலாடு முன்றிலார், குப்பைக்கோழியார் முதலான பல புலவர்கள் தமது செய்யுள்களில் கையாண்ட உவமைகள் மூலம் அறியப்பட்டுள்ளனர். காதல் வாழ்க்கையின் பல்துறை அளாவிய கண்ணியங்களை இந்நூலில் கண்டு அனுபவிக்க முடியும். எளிய உவமைகளும், பொருத்தமான உருவகங்களும், உள்ளுறை உவமம், இறைச்சி முதலான படிமங்களும் குறுந்தொகைப் பாடல்களில் சிறப்பாக விளங்குகின்றன. அரிய நீதிக் கருத்துக்களும், வாழ்வியல் உண்மைகளும் இந்நூலினை அணி செய்துள்ளன.

1. **இளமை பாரார் வளநசைஇச் சென்றோர்**
இவணும் வாரார் எவண ரோவெனப்
பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை யிலங்கெயி றாக
நகுமே தோழி நறுந்தண் காரே

(பாடல் – 126)

பாடியவர்: ஒக்கூர் மாசாத்தி

இவர் கடைச் சங்க காலப் பெண்பாற் புலவர்களில் ஒருவர். குறுந்தொகை நூலில் இவரது செய்யுள்கள் ஐந்து 126,139, 186, 220, 275 ஆம் பாடல்களாக இடம்பெற்றுள்ளன. அத்துடன் அக நானூற்றில் இரு செய்யுள்களும் (324,384), புறநானூற்றில் ஒரு செய்யுளும் (279) இடம் பிடித்துள்ளன. பாண்டிய நாட்டின் திருக்கோட்டியூர் என்னும் ஊருக்கு அருகிலுள்ள ஊர் ஒக்கூர். தற்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது சிவகங்கை மாவட்டத்திலுள்ளது. இங்கு பிறந்து வாழ்ந்த மாசாத்தியார், புத்த சமயத்தைத் தழுவியவராவர்.

திணை : முல்லை

ஒழுக்கம் : இருத்தல்

துறை : பருவங்கண்டு அழிந்த (மனம் கலங்கி வருந்திய) தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

(பொருள் தேடுவதற்காக தலைவியைப் பிரிந்து சென்ற தலைவர் மீண்டு வருவேனெனக் கூறிச் சென்ற கார்காலம் வந்தும் வராமையால், தலைவி தோழியை நோக்கி, "கார்காலம் வந்துவிட்டது; முல்லைக் கொடிகள் அரும்பின; தலைவர் இன்னும் வந்திலர்" என வருந்திக் கூறியது.)

கொண்டு கூட்டும் முறை :

இளமை பாரார் வளநசைஇச் சென்றோர் இவணும் வாரார் எவணரோ என, நறும் தண்கார், பெயல் புறந்தந்த பூங்கொடி முல்லை தொகுமுகை இலங்கு எயிறு ஆக நகும்.

சொற்பொருள் :

இளமை பாரார் - (தன்னுடையதும் என்னுடையதும்) இளமைப் பருவத்தைக் கருதாது; வளம் நசை இச் சென்றோர் - பொருளை விரும்பி என்னைப் பிரிந்து சென்ற தலைவர்; இவணும் வாரார் -இவ்விடத்து இன்னும் மீண்டு வந்திலர்; எவணரோ - எங்குள்ளாரோ; என - என்று கருதி; நறுதண்கார் - நறுமணமுள்ள குளிர்ந்த கார்காலமானமானது; பெயல்புறந்தந்த - மழையாற் பாதுகாக்கப்பட்ட; பூங்கொடி முல்லை - பூவுடைய முல்லைக் கொடியினது; தொகுமுகை இலங்கு எயிறு ஆக - தொகுதியான அரும்புகளைத் தன் ஒளிவீசும் பற்களாகக் கொண்டு; நகும் - நம்மைப் பார்த்துச் சிரிக்கும். நகுமே, காரே என்பவற்றிலுள்ள "ஏ"காரங்கள் அசைநிலைகளாகும்.

பொழிப்பு :

தன்னுடையதும் என்னுடையதுமான இளமைப் பருவத்தைக் கருத்தில் கொள்ளாது, பொருளை விரும்பி என்னைப் பிரிந்து சென்ற தலைவர், இவ்விடத்து இன்னும் மீண்டு வந்திலர். அவர் எங்குள்ளாரோ? என்று, நறுமணமிக்க குளிர்ந்த கார்காலமானது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழையாற் பாதுகாக்கப்பட்ட பூவையுடைய முல்லைக் கொடியினது, தொகுதியான அரும்புகளைத் தன் ஒளி வீசும் பற்களாகக் கொண்டு, நம்மைப் பார்த்துச் சிரிக்கும்.

விளக்கம் :

இக்குறுந்தொகைச் செய்யுளின் முடிவாக "தோழி சென்றோர் எவணரோ எனக்கார் நகும்" என்பதாகக் காணப் படுகிறது. இதன் மூலம் "கார்காலம் வந்துவிட்டது; தலைவர் இன்னும் வந்திலர்" என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. "எவணரோ என" என்பதைக் கார்காலத்தின் சிந்தனையாகக் கருத வேண்டும். தலைவி, தலைவனின் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள். ஆனால் அவன் எங்கிருக் கிறானோ? என்ற சந்தேகத்துடனும் எள்ளலுடனும் கார்காலம் முல்லை முகைகளைப் பற்களாகக் கொண்டு நகைக் கின்றது என்பதாகும். முல்லைத் திணையின் இருத்தல் ஒழுக்கத்துக்குரிய இச் செய்யுள், பிரிந்து சென்ற தலைவர் கூறியபடி, கார்காலம் வந்தும் அவர் மீண்டு வராமை காரணமாகத் தலைவி அடைந்த மனவருத்தத்தினைத் தோழிக்குக் கூறுவதாக அமைந் துள்ளது. பெயலும் (மழையும்), முல்லை முகையும் கார்காலத்தைக் குறிப்பன. பொருள் தேடிச் செல்பவர், இளமையின் அருமையை விரும்பின் அது, அவர்களது செயலுக்கு இடையூறாக அமையும். ஆதலால் வளத்தை விரும்பி இளமையைப் பாராது சென்றவர் எனப்பட்டது. பூ என்பது முல்லை. முதலுக்கு அடையாக வந்துள்ளது. தொகுமுகை இலங்கெயிறாக உருவகிக்கப் பட்டுள்ளது. "தொகு முகை" என்பது வரிசையாக அமைந்துள்ள முல்லை அரும்புகளைக் குறித்தது. எனவே கார்காலத்தின் பற்களாக உருவகப் படுத்தப் பட்டுள்ளது. முல்லை மலர் நறுமணம் மிக்கது. (நறுமை); பெயல் (மழை) குளிர்மை (தண்மைமிக்கது. இவ்விரண்டும் கார்காலத்துக் குரியவை. ஆதலால் "நறுந் தண்கார்" எனப்பட்டது. "இவணும்" என்பதில் "ஓ"காரம் உயர்வுச் சிறப்புக்குரியது. கார்காலத்தை மகளாகக் கருதி, ஏகதேச உருவக அணியாகக் கொண்டு, "உம் தலைவர், தாம் கூறிய பருவம் வந்தும் வராதது கண்டு நீவிர் இன்னும் உயிரோடு உள்ளீரோ?" என்னும் எள்ளல் காரணமாக நகைக்கும் எனவும் உரையாசிரியர்கள் பொருள் கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருஞ்சொற் பொருள் :

நசைஇ - விரும்பி; இவணும் - இவ்விடத்தில்; எவணரோ - எவ்விடத்துள்ளாரோ; பெயல் - மழை; முகை - அரும்பு, மொட்டு; இலங்கு - ஒளிவீசும்; எயிறு - பல்; நகும் - சிரிக்கும்; புறந்தந்த - பாதுகாத்த; கார் - கார்காலம்(மழைக்காலம்)

குறிப்புகள்

1. பொருள் தேடுவதற்காகத் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன், கார்காலம் வந்ததும் மீண்டு வருவேன் எனக் கூறிச் சென்றான். குறித்த கார்காலம் வந்ததும் அவன் திரும்பி வரவில்லை. இதனால் மனம் வருந்திய தலைவி, தோழிக்கு உரைப்பதாக இச் செய்யுள் விளங்குகிறது.

2. இளமைப் பருவம் நிலையற்றது; அது வீணே கழிந்து போனால் திரும்பவும் பெற முடியாதது. அத்தகைய இளமைப் பருவத்தைக் கருத்தில் கொள்ளாமல், அனுபவிக்காமல், எப்போதும் தேடிப் பெறக் கூடிய பொருட் செல்வத்தை விரும்பி நாடிச் சென்ற தலைவனின் செயலை எண்ணிக் கார்காலம் சிரிப்பதாகவும், "கார்காலம் வந்ததும் திரும்பி வருவேன்" என்ற தலைவனின் கூற்றுப் பொய்த்து விட்டதே; இனிமேல் யாது செய்யப் போகிறாய்? என்று தலைவியின் நிலைமையைப் பார்த்துக் கார்காலம் சிரிப்பதாகவும் இச்செய்யுளின் உட்பொருள் அமைந்துள்ளது.

3. கார்காலத்துக்குரிய அடையாளங்களாகப் பெயலும், முல்லையும் இச் செய்யுளில் இடம்பெற்றுள்ளன. மழையினால் பாதுகாக்கப்பட்டதாக பூங்கொடி முல்லை விளங்குகிறது. கார்கால மழையின்றேல் முல்லைக் கொடி வாடி விடும். இப்போது முல்லைக் கொடி பூத்திருக்கிறது. அரும்புகள் வரிசையாக விளங்குகின்றன என்பதைச் செய்யுள் உணர்த்துகிறது.

4. "தொகுமுகை இலங்கெயிறாக" என்பதில் கார்காலத்தின் ஒளி மிகுந்த பற்களாக, வரிசையாகத் தோன்றும் முல்லையரும்புகள் உருவகிக்கப்பட்டுள்ளன.

5. "இவணும் வாரார்" என்பதில், பிரிந்து சென்ற தலைவர் இன்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவில்லையே என்ற ஏக்கம் தொனிக்கிறது. "இவணும்" என்பதிலுள்ள "ஓ" வானது "உரிய காலம் வந்தும் இன்னும் வரவில்லையே" என்பதை உயர்வு நவிற்சியாகக் காட்டுகிறது. அதாவது குறித்த காலக்கெடுவின் எல்லையை உயர்த்திக் கூறுகிறது எனக. "எவணரோ" என்பது தலைவர் எங்கிருக் கிறாரோ? என்பதை உணர்த்துகிறது. இவ்வாறு ஏளனத்துடன் கார்காலம் கேட்பதாகவே இச் செய்யுளில் கொள்ள முடிகிறது.

6. ஒரு பாடலில் ஒரு ஒழுக்கம் மாத்திரம் கூறப்பட்டுள்ளது. இங்கு முல்லை நிலத்துக்குரிய இருத்தல் ஒழுக்கம் மட்டும் கூறப்பட்டுள் ளது.

7. வடமொழிக் கலப்பில்லாததும், சிறியனவும் ஆகிய சொற்கள் இதில் கையாளப்பட்டுள்ளன.

8. தொகுமுகை - வினைத்தொகை; நசைஇ - வினையெச்சம்; இவணும் - வினையெச்சம்; புறந்தந்த - பெயரெச்சம்; பூங்கொடி - வேற்றுமைத் தொகை; இலங்கு - பெயரெச்சம்.

2. **கன்றுதன் பயமுலை மாந்த முன்னிற்**
றினைபிடி யுண்ணும் பெருங்கன் னாட
கெட்டிடத் துவந்த வுதவி கட்டில்
வீறுபெற்று மறந்த மன்னன் போல
நன்றிமறந் தமையா யாயின் மென்சீர்க்
கலிமயிற் கலாவத் தன்னவிவள்
ஒலிமென் கூந்த லுரியவா நினக்கே

(பாடல் - 225)

பாடியவர் : கபிலர்

அந்தணகுலத்தவரான இவர், வேள்பாரியின் உயிர்நண்பர். துறவு வாழ்வினை மேற்கொண்டு வாழ்ந்தவர். பாண்டி நாட்டுத் திருவாதவூரிலே பிறந்தவர். 278 செய்யுள்கள் இவர் பாடியதாகத் தொகை நூல்களில் காணப்படுகின்றன. இவற்றுள் அதிகமானவை அகத்திணை சார்ந்தவை. ஆரிய அரசன் பிருகதத்தனுக்குத் தமிழின் இனிமையை எடுத்துக் கூறுமுகமாகக் "குறிஞ்சிப் பாட்டு" நூலினைச் செய்தவர். பாரியின் பண்புபற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது பாடல்கள் அநேகம். பாரி மறைந்த பின், பாரிமகளிருக்குத் தந்தை போலிருந்து காத்தவர். பாரிமறைவு தந்த துயரினால் தாமும் வடக்கிருந்து உயிர் துறந்தவர். கலித்தொகையில் குறிஞ்சிக் கலியைப் பாடியவர். குறிஞ்சித்திணைப் பாடல்களையே அதிகம் (191) பாடியமையால் "குறிஞ்சிக் கபிலர்" எனப்பட்டவர். அகுதை இருங்கோவேள், ஓரி, வேள்பாரி, செல்வக்கடுங்கோ வாழியாதன், சேரமான் மாந்தரஞ் சேரல் இரும்பொறை, வையாவிக் கோப்பெரும் பேகன், நள்ளி, மலையமான் திருமுடிக்காரி, மலையன், விச்சிக்கோன் முதலானோரைக் கபிலர் பாடியுள்ளார்.

இவர் பாடிய செய்யுள்கள் நற்றிணையில் பத்தொன் பதும், குறுந்தொகையில் இருபத்தொன்பதும், ஐங்குறுநூற்றில் குறிஞ்சிப் பாட்டு நூறும், பதிற்றுப் பத்தில் ஏழாம்பத்துச் செய்யுள்கள் பத்தும், அகநானூற்றில் பதினாறும், புறநானூற்றில் இருபத்தெட்டும் காணப்படுகின்றன. மேலும் "நெட்டிலையிருப்பை" என்ற தனிச் செய்யுள் ஒன்றும், திருவள்ளுவ மாலையில் ஒன்றும், இன்னா நாற்பதில் நாற்பது செய்யுள்களும், குறிஞ்சிப் பாட்டில் 108 அடியிலான செய்யுளையும் பாடியுள்ளமையை அறிய முடிகின்றது. கபிலரின் ஏனைய பிரபந்தங்கள் 11 ஆந் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன.

திணை : குறிஞ்சி

ஒழுக்கம் : புணர்தல்

துறை : வரைவிடை வைத்துப் பிரிவாற்குத் தோழி சொல்லியது.

(இதுவரை காலமும் உன் விருப்பப்படி ஒழுகி வந்த நாம் செய்த நன்றியை மறவாது, எம் விருப்பத்திற்கு இணங்க விரைவில் வரைந்து (தலைவியைத் திருமணஞ் செய்து) கொள்வாயாக என்று தோழி யானவள் வரைவிடை வைத்துத் (திருமணத்தை முன்னிறுத்தி) தலைமகனுக்குச் சொல்லியது. அதாவது களவொழுக்கத்தில் இதுவரை ஈடுபட்டு வந்த தலைமகன், பின்னும் தலைவியைத் திருமணஞ் செய்தலைக் கருதாது பிரிந்து செல்ல முயலும் போது தோழி, தந்திரமாகத் திருமணத்தை வலியுறுத்திக் கூறியதெனலாம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுகூட்டும் முறை :

கன்று தன் பயம் முலை மாந்த, முன்றில் தினை பிடி உண்ணும் பெருகல் நாட! கெட்ட இடத்து உவந்த உதவி கட்டில் வீறு பெற்று மறந்த மன்னன் போல, நன்றி மறந்து அமையாய் ஆயின், இவள் மெல்சீர் கலி மயில் கலாவத்து அன்ன ஒலிமெல் கூந்தல் நினக்கே உரிய ஆம்.

சொற்பொருள்:

கன்று தன் பயம் முலை மாந்த - யானைக் கன்று தனது பாலுள்ள முலைகளைக் குடித்துக் கொண்டிருக்க; முன்றில் தினை - வீட்டின் முற்றத்தில் உலரவைத்த தினைப் பயிரை; பிடி உண்ணும் - பெண்யானை உண்ணுவதற்கு இடமாகியுள்ள; பெருகல் நாட - பெரிய மலை நாட்டினை உடையவனே; கெட்ட இடத்து உவந்த உதவி - தான் வறுமையுற்ற(பலமிழந்த) காலத்தில் பிறரால் பெற்று மகிழ்ந்த உதவியினை; கட்டில் வீறு பெற்று - அரசு கட்டிலாகிய சிறப்பைப் பெற்றதும்; மறந்த மன்னன் போல - மறந்துவிட்ட மன்னன் போல; நன்றி மறந்து - நீ யாம் செய்த நன்றியை மறந்து; அமையாய் ஆயின் - அமையவில்லையாயின்(நன்றி மறந்தவனாயிராமல் நன்றியை நினைத்து வரைந்து கொள்வாயாகின்); இவள் - இத் தலைவி யினுடைய; மெல்சீர் கலிமயில் கலாவத்து அன்ன - மெல்லிய சிறப்பையுடைய ஆரவாரிக்கும் மயிலினது பீலியைப் போன்ற; ஒலிமெல் கூந்தல் - தழைத்த மெல்லிய கூந்தற் பகுதிகள்; நினக்கே உரிய ஆம் - நினக்கே உரிமையுடையனவாகும்.

பொழிப்பு:

யானைக் கன்று தனது பாலுள்ள முலைகளைக் குடித்துக் கொண்டிருக்க, வீட்டின் முற்றத்திலுள்ள உலரவைத்த தினைப் பயிரைப் பெண்யானை உண்ணும் பெரிய மலைநாட்டினை உடையவனே! தான் வறுமையுற்ற(பலமிழந்த) காலத்தில் பிறரால் பெற்று மகிழ்ந்த உதவியினை, அரசு கட்டிலாகிய சிறப்பைப் பெற்றதும் மறந்துவிட்ட மன்னன் போல, நீ நாம் செய்த நன்றியை மறந்து நடவாமல் நன்றியை நினைத்துத் தலைவியை மணந்து கொள்வா னாயின், இத்தலைவியின் மெல்லிய சிறப்பையுடைய ஆரவாரிக்கும் மயிலினது பீலியைப் போன்ற தழைத்த மெல்லிய கூந்தற் பகுதிகள் உனக்கே உரிமையுடையனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் :

இச் செய்யுளின் முடிவாக "நாட, நன்றி மறந்து அமையா யாயின் இவள் கூந்தல் நினக்கே உரியவாம்" என்பதும், முக்கிய கருத்தாக "நீ யாம், புரிந்த நன்றியை மறவாமல் விரைவில் வரைந்து கொள்ள வேண்டும்" என்பதும் காணப்படுகிறது. தலைவனே! இதுவரை காலமும் தலைவியிடம் நீ அனுபவித்த இன்பங்களை மறந்து அவளை விட்டுப் பிரிந்து செல்லாது, அவளைத் திருமணஞ் செய்து வாழ்வீராயின், அவளது அழகு முழுவதும் உனக்கே உரியதாகும். அவ்வாறின்றி நீ நன்றி மறந்து அவளைப் பிரிந்து செல்வீராயின், அவள் பிரிவின் வேதனையால் அழகிழந்து விடுவாள். எனவே அவளது அழகு உனக்கு அனுபவிக்க உரிமை அற்றதாய் ஆகிவிடும் என்ற உட்கருத்தே இச் செய்யுளில் நிறைந்துள்ளது. தான் நல்ல நிலைக்கு வருமளவும் பிறரின் உதவியை மகிழ்வுடன் பெற்றுவிட்டுப் பின்னர், நல்ல நிலையை(அரசாட்சியை) அடைந்த போது அந்த உதவியை மறந்து விடும் மன்னன் போல் நடவாது, நன்றியை நினைத்து நடப்பாயாகில் தலைவியின் அழகு நலம் யாவும் உனக்கே உரிமையாகும் எனத் தோழி கூறினாள் என்க. கெட்ட இடம், கெட்டிடம் ஆயிற்று. வீறு - அரசு கட்டிலாற் பெற்ற சிறப்பு. கட்டில் - சிங்காதனம். "நன்றி மறந்து அமையாய்" என்றது நன்றி மறவாது அமைவாய் என்பதைக் குறித்தது. கன்று தன் முலை மாந்திக் கொண்டிருக்கையில், தன் பசியைப் போக்கவும், கன்றுக்குரிய பாலைப் பெறுவதற்கும் தினைக் கதிர்களைப் பிடி உண்பது போல, நீயும்(தலைவனும்) நாங்கள்(தலைவியும், தோழியும்) உன் வரவை எதிர்பார்த்து மகிழ்ந்திருக்கையில், உன் கடமையாக இவளை வரைந்து கொள்வதையும், பொருளீட்டுதலையும் ஒருங்கே மேற்கொள்ள வேண்டுமென்பது தோழி கூற்றாக இச் செய்யுளில் உணர்த்தப்பட்டுள்ளது. தலைவியின் கூந்தலில் தலைவன் துயின்று இன்புறுதலால் அதனை அவனுக்கு உரிமையாகக் கூறப்பட்டது. "உரியவாம்" எனப் பன்மையில் கூறியதன் மூலம் கூந்தல் முதலான பலவற்றையும் குறித்ததெனலாம்.

அருஞ்சொற் பொருள் :

பயம் - பால்; மாந்த - குடிக்க; முன்றில் - முற்றம்; பிடி - பெண் யானை; பெருங்கல் - மலை; கெட்டிடம் - கெட்ட இடம்(பலமற்ற/ வறுமையுற்ற இவளை); உவந்த - மகிழ்ந்த; வீறு - வலிமை; சீர் - சிறப்பு; கலி - ஆரவாரம்; கலாவம் - மயிற் பீலி; உரியவா - உரியவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகள்

1. தோழி திருமணத்தை வலியுறுத்தி(வரைவை) க் கூறியபடியால் வரைவிடை வைத்துப் பிரிவாற்கு(பிரிந்து செல்ல முயன்ற வர்க்கு)த் தோழி சொல்லியதாக இச் செய்யுள் அமைந்துள்ளது.

2. பெண்யானை, தன் கன்றுக்குப் பால் தருவதுடன், தினைக் கதிர்க் கட்டுகளைக் களவாக உண்டு தன் பசியையும் போக்குகிறது. இதன் மூலம் தலைவன், தன் சுற்றத்தை வாழ வைப்பதுடன் (பொருளீட்டி), தலைவியின் அழகைக் களவாகத் தானும் அனுபவிக்கிறான் என்பது குறிப்பால் உணர்த்தப்படுகிறது.

3. நன்றி மறவாது செயற்படுதலே உயர்ந்த அறமாகும் என்பதும் இச் செய்யுளில் விலியுறுத்தப்படுகிறது.

4. இச் செய்யுளில் "இறைச்சி" என்னும் குறிப்புப் பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது. பெண்யானை கன்றுக்குப் பாலூட்டிய படி தினையையும் உண்ணுதல்போல, தலைவனும் பொருளை ஈட்டுவதுடன் தலைவியின் நலனையும் பேணி அவளை வரைந்து கொள்ள வேண்டும் என்னும் குறிப்புத் தோன்ற அமைதலால் இது இறைச்சிப் பொருளாகும்.

5. "கருப்பொருள் பிறிதோர் பொருட்டு உபகாரப்படுதலேயன்றி, அக்கருப்பொருள் தன்னுள்ளே தோன்றும் பொருளும் உள. அஃது உள்ளுறை உவமம் அன்று; இறைச்சி என்று கொள்க." (வேறொரு பொருளை விளக்கக் கருப்பொருள் பயன்படுவதுடன், கருப்பொருளானது தனக்குள்ளேயே கொண்டிருக்கக் கூடிய இன்னொரு பொருளும் உள்ளது என்பது இதன் கருத்து. இச் செய்யுளுக்கான உரையில் நச்சினார்க்கினியரும், இறைச்சிப் பொருள் பற்றி மாறனலங்காரம் நூலும் இவ்வாறு விளக்கந் தருகின்றன).

நன்றி மறந்த மன்னன் போன்று செய்ந்நன்றி மறவாது தலைவியை மணந்து கொள்வீரானால் இவளது கூந்தல் உனக்குரியது என்பதில் உவமையும் பொருளும் ஒத்து முடிந்துள்ளன. இதனை "உள்ளுறை உவமம்" எனக் கொள்ள முடியாது. ஏனெனில் "நாட" என்பதில் வேறோர் பொருள் தோற்றுவிக்கப் பட்டுள்ளது. தன் கன்றிற்குப் பயன்பட்டுப் பிறர்க்கு உயிரைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கின்ற தினையைத் தானுண்டு அழிவு செய்தாற் போல, நீயும் உன் பொருள் தேடுதலாகிய கருமத்தில் ஈடுபட்டு, எமக்கு உயிராகிய இவளைத் துயருறுத்தி எம்மை இறந்துபட வைத்தல் ஆகாது என்பது உள்ளுறை உவமையாகும். ஆயினும் இது உவமைப் பொருளை முற்றாக உணர்த்தவில்லை. மேலும் "நீ அப்படிச் செய்யாதவனாயின் இவள் கூந்தல் நலம் உனக்கே யுரியது" எனப் பொருள் இருப்பதால் அது இறைச்சிப் பொருளாயிற்று.

6. கலி மயிற்கலாவம் – உவமானம்; தலைவியின் தழைத்த மெல்லிய கூந்தல் – உவமேயம்; மென்மையும் அழகும் – பொதுத் தன்மை.

7. மாந்த – வினையெச்சம்; உண்ணும் – பெயரெச்சம், வினைமுற்று; உவந்த – பெயரெச்சம்; வீறு பெற்று – வினையெச்சம்; மறந்த – பெயரெச்சம்; மறந்தமையாயின் – வினையெச்சம்.

8. "உரியவா நினக்கே" என்பது நினக்கே உரியவாம் எனப் பொருள் தரும்.

9. போல, அன்ன ஆகியன ஒரு பொருள் குறித்த இடைச் சொற்கள். உம், ஆயின், ஏ(நினக்கே) என்பனவும் இடைச் சொற்களாகும்.

3. **பூவொடு புரையுங் கண்ணும் வேயென**
விரல்வனப் பெய்திய தோளும் பிறையென
மதிமயக் குறூஉம் நுதலு நன்றும்
நல்லமன் வாழி தோழி யல்கலும்
தயங்குதிரை பொருத தாழை வெண்பூக்
குருகென மலரும் பெருந்துறை
விரிநீர்ச் சேர்ப்பனொடு நாகஅ வுங்கே

(பாடல் -226)

பாடியவர் : மதுரை எழுத்தாளன் சேந்தம்பூதன்

இப்புலவர் பாடிய இரண்டு செய்யுள்கள் (90,226) குறுந்தொகை நூலில் இடம்பெற்றுள்ளன.

திணை : நெய்தல்

ஒழுக்கம் : இரங்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறை : வரைவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது

(பிரிந்து சென்ற தலைவன் மீண்டு வந்து திருமணம் செய்யும் வரை, தலைவி பிரிவுத் துன்பத்தைத் தாங்க மாட்டாள் என நினைத்து வருந்திய தோழிக்குத் தனது நிலைமையைக் கழிவிரக்கத்தோடு தலைவி எடுத்துக் கூறியது)

வரைவிடை – திருமணம் முடிக்கும் வரை; ஆற்றாள் – துன்பத் தாங்கமாட்டாள்; கவன்ற – கவலையுற்ற; கிழத்தி – தலைவி;

கொண்டு கூட்டும் முறை:

தோழி வாழி – தோழியே வாழ்வாயாக; அல்கலும் தயங்கு திரை பொருத, தாழை வெண்பூ குருகு என மலரும், பெருதுறை விரிநீர் சேர்ப்பனொடு, நகா ஊங்கு, பூவொடு புரையும் கண்ணும், வேல் என விறல் வனப்பு எய்திய தோளும், பிறை என மதி மயக்குறூஉம் நுதலும், நன்றும் நல்ல மன்.

சொற்பொருள் :

தோழி; அல்கலும் – இரவு தோறும்; தயங்குதிரை பொருத – விளங்கிய அலைகளால் மோதப்பட்ட; தாழை வெண்பூ – தாழையினது வெண்பூவானது; குருகு என மலரும் – நாரையைப் போல மலர்தலைச் செய்வதற்கு இடமாகிய; பெருதுறை விரிநீர் சேர்ப்பனொடு – பெரிய துறைகளைக் கொண்ட அகன்ற நீர்ப் பரப்பையுடைய தலைவனாகிய சேர்ப்பனோடு; நகா ஊங்கு – அளவளாவிச் சிரித்து மகிழ்வதற்கு முன்பு; பூவொடு புரையும் கண்ணும் – தாமரை மலரையொத்த கண்களும்; வேல் என விறல் வனப்பு எய்திய தோளும் – மூங்கிலைப் போல வெற்றியையுடைய அழகைப் பெற்ற தோள்களும்; பிறை என மதி மயக்குறூஉம் நுதலும் – பிறை என்று கருதும்படி கண்டார் அறிவை மயங்கச் செய்யும் நெற்றியும்; நன்று நல்ல – மிக நல்லனவாகப் பொலிவுற்று இருந்தன; மன் – அந்த நிலை இப்பொழுது கழிந்து போய்விட்டது.

பொழிப்பு :

தோழியே வாழ்வாயாக! இரவு தோறும் விளங்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைகளால் மோதப்பட்ட தாழையினது வெண்ணிறப் பூவானது, நாரையைப் போல மலர்தலைச் செய்வதற்கு இடமான பெரிய துறைகளைக் கொண்ட அகன்ற நீர்ப் பரப்பையுடைய தலைவனாகிய சேர்ப்பனோடு, அளவளாவிச் சிரித்து மகிழ்வதற்கு முன்பு, தாமரை மலரையொத்த கண்களும், மூங்கிலைப் போன்ற நெற்றியையுமுடைய அழகைப் பெற்ற தோள்களும், பிறையென்று கருதும்படி கண்டார் அறிவை மயங்கச் செய்யும் நெற்றியும் மிக நல்லனவாகப் பொலிவுற்று இருந்தன, அந்த நிலை இப்பொழுது கழிந்து விட்டது.

விளக்கம் :

இந் நெய்தற்றிணைச் செய்யுளின் முடிவாக, "தோழி! சேர்ப்பனொடு நகாஅ வூங்கு, கண்ணும் தோளும் நுதலும் நல்லமன்!" என்பது கூறப்பட்டுள்ளது. அதாவது சேர்ப்பனோடு அளவளாவிச் சிரித்து மகிழ்வதற்கு முன்பு, எனது(தலைவியின்) கண்ணும், தோளும், நெற்றியும் நல்லனவாய்ப் பொலிவுடன் விளங்கின என்பதாகும். மறுதலையாக அவன் பிரிந்து சென்ற பின் அவை முன்பு போலிராது பொலிவிழந்து விட்டன என்பதும் ஊகமாக உணர்த்தப்பட்டது. எனவே "தலைவனின் பிரிவினால் என் மேனி நலம் (தலைவியின்)அழிந்தது" என்பதே இச் செய்யுளின் பிரதான கருத்தாகும். "விறல் வனப்பு" என்பது பிறர் தோள் வனப்போடு ஒப்புநோக்கும் பொழுது, தான் யாவற்றையும் விஞ்சி வெற்றி பெறும் வனப்பு ஆகும். நகுதல் - கூடிக் குலாவி அளவளாவுதல், இடக்கரடக்கலாய்க் கூறப்பட்டது. சேர்ப்பன் - நெய்தல் நிலத் தலைவன். வாழி - அசைநிலை. நெய்தல் நிலத்தில் செந்தாழையும் உண்டாதலால் வெண்பூ என வேறுபடுத்திச் சுட்டப்பட்டது. ஏகாரம் - ஈற்றசை.

அருஞ்சொற்பொருள்:

புரைய - ஒப்ப; வேய் - மூங்கில்; விறல் - வெற்றி; வனப்பு - அழகு; எய்திய - அடைந்த, பெற்ற; மதி - அறிவு, சந்திரன்; மயக்குறூஉம் - மயங்கச் செய்யும்; நுதல் - நெற்றி; அல் -இரவு; தயங்கு - விளங்குகின்ற; திரை - அலை; பொருத - மோத; குருகு - நாரை; துறை - கடற்றுறை; சேர்ப்பன் -நெய்தல் நிலத் தலைவன்; நகாஅ - அளவளாவிச் சிரித்து; ஊங்கே - முன்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகள்

1. அகவற் பாவாலான 7 அடியுள்ள, இரண்டு ஒழுக்கத்துக்கான நெய்தல் திணைச் செய்யுள் இதுவாகும். தலைவனின் பிரிவை எண்ணி இரங்கியிருத்தலை உணர்த்துவது.

2. "பூவொடு புரையும் கண்ணும்" என்பது "பூவையொத்த கண்" எனப் பொருள்தரினும் பெருவழக்கை ஒட்டித் தாமரைப் பூவையே சிறப்பாகக் குறித்ததெனலாம். புரைய - போன்ற, ஒத்த; இடைச் சொல்லாகும்; "உம்" விகுதி பெற்று வந்துள்ளது.

3. "வேயென விறல் வனப்பு எய்திய தோள்" என்பதில் உவமையணி காணப்படுகிறது. இதில் வேய் - உவமானம்; தோள் - உவமேயம்; வலிமையும் அழகும் - பொதுத் தன்மை.

4. பிறை - உவமானம்; நெற்றி - உவமேயம்; அழகும் வடிவமும் - பொதுத் தன்மை. "மதி மயக்குறூஉம் நுதல்" என்பது உயர்வு நவிற்சியாகும்.

5. ஓடு, உம், என, ஓ ஆகியன தத்தம் பொருளுணர்த்தும் இடைச் சொற்களாகும்.

6. புரையும், மயக்குறூஉம், எய்திய, மலரும், தயங்கு ஆகிய சொற்கள் பெயரெச்சங்களாகும். இவற்றுள் மலரும் என்பது வினை முற்றாகவும் வரும்.

7. பொருத - வினையெச்சம்; நகாஅ - வினையெச்சம்; விரிநீர் - வினைத் தொகை.

8. தலைவி பேரழகுடையவள் என்பதை உணர்த்துமுகமாகப் பூவை யொத்த கண், பிறையையொத்த நெற்றி, மூங்கிலையொத்த தோள் என வர்ணிக்கப்பட்டுள்ளது. அவற்றுள்ளும் பூவில் சிறந்த தாமரைக் கண்ணையும், கண்டாரை மயங்கச் செய்யும் நெற்றியையும், விறல் வனப்பு எய்திய தோளையும் கையாண்டமை சிறப்பானதாகும்.

9. "தயங்கு திரை" என்பது ஒளி விளங்குகின்ற அலை எனவும், மெல்லிய அலை எனவும் கருதப்படும்.

10. கடற்கரையிலுள்ள தாழையின் வெண்ணிறப் பூக்களை நாரைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என நினைத்துப் பிறர் கொய்யாது விடுதல் போல, தலைவியின் உண்மை நிலையினை உணராத தலைவனும், அவளைத் திருமணம் செய்யாது, அவளின் அழகையும், வாழ்வையும் வீணாக்குகின்றான் என்னும் குறிப்புப் பொருளும் இச் செய்யுளில் காணப்படுகிறது.

11. "அல்கலும் தயங்குதிரை பொருத தாழை" என்பதனூடாகத் தலைவி, தலைவனைப் பிரிந்து இரவு தோறும் விரக வேதனையால் அலைக்கழிக்கப் படுகிறாள் எனக் குறிப்பால் உணர்த்தப்பட்டுள்ளது.

12. "குருகு" என்பது நாரை, கடற் பறவை ஆகியவற்றைக் குறிக்கும் இங்கு வெண்ணிறப் பூக்களுக்கு உவமையாகக் கூறப்பட்டதால் நாரையெனக் கொள்ளலாம்.

4. **வாரலெஞ் சேரி தாரனின் றாரே**
அலரா கின்றாற் பெரும காவிரிப்
பலராடு பெருந்துறை மருதொடு பிணித்த
ஏந்துகோட் டியானைச் சேந்தன் றந்தை
அரியலம் புகவினங் கோட்டு வேட்டை
நிரைய வொள்வா ளிளையர் பெருமகன்
அழிசி யார்க்கா டன்னவிவள்
பழிதீர் மாணலம் தொலைவன் கண்டே!

(குறுந்தொகை – பாடல் : 258)

பாடியவர்: பரணர்

இவர் கடைச் சங்க காலப் புவலர். இவர் பாடிய 17 செய்யுட்கள் குறுந்தொகையில் உள்ளன. அகநானூறு (34), புறநானூறு (12), நற்றிணை (12), பதிற்றுப் பத்து (5 ஆம் பத்து) ஆகிய தொகை நூல் களில் இவரால் பாடப்பட்ட செய்யுட்களுள. இவருடன் கபிலர் நெருங் கிய நட்புடையவர். தலைசிறந்த புலவர்களான இவ்விருவரையும் இணைத்துக் "கபிலபரணர்" எனக் குறிப்பிடும் வழக்கு உள்ளது. சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி, சேரமான் குடக்கோ சேரலாதன், சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி, வையாவிக் கோப்பெரும் பேகன் போன்றோர் பரணராற் பாடப் பட்டோரில் முக்கியமான சிலர்.

திணை: மருதம்
ஒழுக்கம்: ஊடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறை : தோழி, தலைமகற்கு வாயில் மறுத்தது.

(பரத்தையிடம் சென்று வந்த தலைவன்மேல் தலைவி கொண்ட ஊடலைத் தோழி, தலைவனுக்கு எடுத்துரைத்து வாயில் மறுத்தது. வாயில் -தோழி; மறுத்தது - தூதுக்கு உடன்படாதது)

கொண்டு கூட்டும் முறை:

பெரும! காவிரிப் பலர் ஆடு பெருந்துறை மருதொடு பிணித்த ஏந்து கோட்டு யானைச் சேந்தன்; தந்தை, அரியல் அம் புகவின அம்தோட்டு வேட்டை நிரைய ஒள்வாள் இளையர் பெருமகன் அழிசி ஆர்க்காடு அன்ன இவள் பழிதீர் மாண் நலம் தொலைதல் கண்டே அலராகின்றால்; வாரல் எம் சேரி; தாரல் நின்தாரே!

சொற்பொருள் :

பெரும! - தலைவ; காவிரிப் பலர் ஆடு பெருந்துறை - காவிரியில், பலரும் வந்து நீராடும் பெரிய நீர்த்துறையின் கரையிலே; மருதொடு பிணித்த - மருத மரத்தில் கட்டப்பட்ட; ஏந்து கோட்டு யானைச் சேந்தன் - மேல்நோக்கி வளைந்த தந்தங்களையுடைய யானைகளைக் கொண்டவன் சேந்தன்; தந்தை - அவனது தந்தையும்; அரியல் அம் புகவின - கள்ளாகிய உணவையும்; அம் தோட்டு வேட்டை - அழகிய விலங்குக் கூட்டத்தை வேட்டையாடும் தொழிலையும்; நிரைய ஒள்வாள் - பகைவருக்கு நரகம் போன்ற ஒளி பொருந்திய வாளையும் பெற்றுள்ளவனும்; இளையர் பெருமகன் - இளம் வீரர்களுக்குத் தலைவனுமாகிய; அழிசி ஆர்க்காடு அன்ன இவள் - அழிசி என்பவனது ஆர்க்காடு என்னும் நகரைப் போன்ற இவளது (தலைவியினுடைய); பழிதீர் மாண் நலம் தொலைதல் கண்டே - குற்றமற்ற மாட்சிமையுடைய பேரழகு அழிதலைக் கண்டு; அலராகின்றால் - எம் ஊரில் அலர் (பழிச்சொல்) மிகுகின்றதனால்; வாரல் எம் சேரி - இனி எம் சேரிப்பக்கம் வராதீர்; தாரல் நின்தாரே - உம் மாலையையும் எமக்குத் தராதீர்!

பொழிப்பு :

தலைவ! காவிரியில், பலரும் வந்து நீராடும் பெரிய நீர்த்துறையின் கரையில் மருத மரத்தில் கட்டப்பட்ட, மேல்நோக்கி வளைந்த தந்தங்களையுடைய யானைகளைக் கொண்டவன் சேந்தன். அவனது தந்தை கள்ளாகிய உணவையும், அழகிய விலங்குக் கூட்டத்தை வேட்டையாடும் தொழிலையும், பகைவருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரகம் போன்ற ஒளி பொருந்திய வாளையும் பெற்றுள்ளவனும், இளம் வீரர்களுக்குத் தலைவனுமாகிய அழிசி என்பவன். அவனது ஆர்க்காடு என்னும் நகரைப் போன்ற இவளது (தலைவியின்) குற்றமற்ற மாட்சிமையுடைய பேரழகானது அழிதலைக் கண்டு, எம் ஊரில் அலர் (பழிச் சொல்) எழுகின்றமையால் இனி எம் சேரிப்பக்கம் வருவதைக் கைவிடுவாயாக. உம் மாலையையும் எமக்குத் தராதிருப்பாயாக.

விளக்கம் :

இச் செய்யுள் மருதத் திணைக்குரியது. பரத்தையை நாடித் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன், மீண்டும் தலைவியிடத்துச் சேரும் விருப்புடன் திரும்பி வந்து, அவளிடம் தான் வந்திருப்பதை அறிவிக்குமாறு தோழியைக் கேட்கிறான். அதற்குத் தோழி, "தலைவி அழகிழந்தாள்; ஆதலால் நினக்கு ஆகும் பயன் ஒன்றுமில்லை; நீ இவ்விடம் வரவேண்டாம்" என்று கூறித் தலைவியிடம் தூது செல்வதற்கு மறுத்துரைத்ததாக இச் செய்யுள் அமைந்துள்ளது. தார் தருதல் என்பது தலைவனும் தலைவியும் கூடுதலைக் குறிக்கும். வராதீர்! தார் தராதீர்! எனினும், இவள் நலம் உமது பிரிவின் நிமித்தம் குலைகின்றமையால், அதனைக் கண்டு ஊரில் அலராகிறது. அதற்காகத் தூதுக்கு உடன்படுகின்றோம் (வாயில் நேர்ந்தது) என வலிந்து கொள்ளக் கூடிய இன்னொரு பொருளும் இச் செய்யுளில் உண்டு. எனவே வாயில் மறுத்தது, வாயில் நேர்ந்தது ஆகிய இரு விதத்தினையும் உரைகாரர் சுட்டிக் காட்டியுள்ளனர். அலர் - பரத்தையர் கூறும் பழிச் சொல். ஆற்றங் கரைகளில் மருத மரம் வளர்த்தல் வழக்கமாகும். தலைவியின் உடனலம் அழிவதற்குக் காரணம் தலைவனின் பரத்தையிற் பிரிவும், அவனைப் பிரிந்த தலைவியின் துயரமுமாகும். தலைவியின் "மாண்நலம் தொலைதல்" கண்டு ஊரவர்கள் பல காரணங்களைக் கற்பித்துப் பழி கூறுவர் என்க. அழகிழந்த தலைவியிடம் நீ இன்பம் பெறுவதற்கு முடியாதாகையால் இங்கு வரவும் வேண்டாம், எம்மிடம் உமது விருப்பத்துக்குரிய மாலையைத் தரவும் வேண்டாம் என்பட்டது. தோழி கூற்றாக விளங்குவது இச் செய்யுள். அழிசி என்பவனின் ஆர்க்காடு நகரம் - உவமானம்; தலைவி - உவமேயம்; பேரழகும் சிறப்பும் - பொதுத் தன்மை. நரகம் - உவமானம்; ஒள்வாள் - உவமேயம்; துன்பந்தருதல் - பொதுத் தன்மை. ஆடு பெருந்துறை - வினைத் தொகை; ஏந்து கோடு - வினைத் தொகை. ஆடு, ஏந்து எனும் சொற்கள் முக்காலமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்த்துபவை. ஏ(தாரே), ஆல்(அலராகின்றால்), அன்ன (உவம உருபு), ஏ (கண்டே) ஆகியன இடைச் சொற்கள்.

அருஞ்சொற் பொருள் :

வாரல் – வரவேண்டாம்; தாரல் – தரவேண்டாம்; தார் – மாலை; அலர் – வசை, பழிச்சொல், பழிமொழி; பெரும – தலைவ, பெருமானே; மருது – மருத மரம்; துறை – நீர்த்துறை; பிணித்த – கட்டிய; ஏந்து கோட்டு – மேல் நோக்கி வளைந்த கொம்பு அல்லது தந்தம்; அரியல் – கள்; புகவு – உணவு; தோடு – விலங்குத் தொகுதி; நிரையம் – நரகம்; ஒள் – ஒளி பொருந்திய, ஒளிவீசும்; பெருமகன் – பெருமைக்குரியவன்; பழிதீர் – குற்றமற்ற; மாண் – மாட்சிமை, பெருமை, சிறப்பு; நலம் – அழகு, நன்மை; தொலைதல் – குலைதல், அழிதல்.

குறிப்புகள்

1. இம் மருதத் திணைச் செய்யுளின் பிரதான உட்கருத்துத் தோழியானவள், பரத்தையிற் பிரிந்துசென்று மீண்டு வந்த தலைவன், தலைவியைச் சந்திப்பதற்குத் தூது செல்ல மறுத்துரைத்ததாகும். இதனையே "வாயில் மறுத்தது" எனக் கூறப்பட்டுள்ளது. வாயில் என்பது தோழி முதலான பன்னிரு வரைக் குறிப்பதாகும் எனத் தொல்காப்பியம் கூறுகிறது.

தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாடினி இளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப

(தொல்காப்பியம் – கற்பியல் 52).

2. இச் செய்யுளின் இன்னோர் கருத்தாக "வாயில் நேர்ந்ததூஉம்" என்பதையும் கொள்ள முடியும். இது வலிந்து பொருள் கொள்வதாகும். தலைவியின் மாணலம் தொலைவதால் ஊரில் அலர் தோன்றியுள்ளது. எனவே தூது செல்ல உடன்படுகின் றேன் எனத் தோழி கூற்றாக வருவதாகும்.

3. சேந்தன் என்பவன் யானை வேட்டுவனாகிய அழிசியின் மகன். நெடுவேட்டுவன் போன்றதொரு படைத் தலைவன். சோழருக் காகக் காவிரிப் பெருந்துறையருகே யானைகளை வசப்படுத்து பவன். சோழநாட்டவனாகிய இவன் சிறந்த வீரனாவான்.

4. சேந்தனின் தந்தை அழிசி என்பவன். அவன் கள்ளை விரும்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்பவன்; விலங்குக் கூட்டங்களை வேட்டையாடுபவன்; இளம் வீரர்களின் தலைவன்; பகைவரை அழிப்பதாகிய ஒளி பொருந்திய வாளினை உடையவன்; அவனது எழில் நிறைந்த நகர் ஆர்க்காடு ஆகும். இவைதான் இச் செய்யுள் கூறும் அழிசி பற்றிய செய்திகள்.

5. இச் செய்யுளில் சேந்தன், அழிசி ஆகிய இருவரது வீரமும் கூறப்பட்டுள்ளது. யானைகளைப் பிடிப்பதில் சேந்தன் கைதேர்ந்தவன். அவனது தந்தை அழிசியோ விலங்குகளையும் பகைவர்களையும் வேட்டையாடக் கூடியவன். அத்துடன் இளைய வீரர் படைக்குத் தலைவனாக விளங்குபவன் எனப்படுகிறது.

6. காவிரியாற்று நீர்த் துறையில் எப்போதும் மக்கள் பலர் நீராடுவர். ஆற்றங்கரையில் மருத மரங்கள் வளர்ந்திருக்கும். அவற்றுள் யானைகள் கட்டப்பட்டிருக்கும் எனக் கூறுவதனூடாகக் காவிரி வளமும், சோழநாட்டு வளமும் காட்டப்பட்டுள்ளது.

7. சங்ககாலத் தமிழர்கள் இறைச்சி முதலியவற்றை உணவாகக் கொண்டமை பற்றியும், வீரர்கள் யானை பிடித்தல், விலங்குகளை வேட்டையாடல், பகைவருடன் வாட்போரிட்டு வெல்லுதல் முதலியவற்றையும் இச் சங்கச் செய்யுள் வெளிக்காட்டியுள்ளது.

ஆ. நற்றிணை

சங்ககால அகத்திணை நூல்களில் திணை என்னும் பெயரால் திகழ்வது நற்றிணையே யாகும். தொகைநூல்களுள் இதுவே முதலில் தொகுக்கப்பட்டதென்பர். எட்டுத் தொகை நூல்களைப் பட்டியலிடும் வெண்பாவும் இதனையே முதலில் குறிப்பிட்டுள்ளது. 275 புலவர்கள் பாடிய அகத்துறைச் செய்யுள்களில் ஆட்சி முறை, ஆட்சிப்பரப்பு, அறப்போர், மொழியோம்பல், நெறிபேணல், அன்பு, அருள், நட்பு, ஒருமை முதலிய தமிழக வரலாறு விளக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலுக்குப் பாரதம் பாடிய பெருந்தேவனாரின் மாயோன் மீதான கடவுள் வாழ்த்துச் செய்யுளும் உண்டு. விழுமிய பயன் விளைக்கத்தக்க செய்யுள்கள் 9 முதல் 12 வரையிலான அடிகளால் அமைந்தவை. பன்னாடு தந்த பாண்டியர் பேரரசன் மாறன்வழுதி இதைத் தொகுக்க உதவினான். தொகுத்தாரை அறிய முடியவில்லை. பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயங்கார் அவர்களின் சிறந்த உரையொன்று இந்நூலுக்குண்டு. நற்றிணைப் புலவர்களில் சிலரும் தாம் பாடிய பாடல் வரிகளினால் பெயர் பெற்றுள்ளனர். தேய்புரி பழங்கயிற்றினார், விழிக்கட்பேதைப் பெருங்கண்ணனார், தும்பிசேர் கீரனார், மடல் பாடிய மாதங்கீரனார், வண்ணப்புறக்கந்தரத்தனார், மலையனார், தனிமகனார் முதலிய பலரும் இதிலடங்குவர். காலால் பந்து விளையாடுதல், காதலர் வரவைப் பல்லி கூறுவதாகக் கருதுதல், காதலன் வரும்வரை காதலி சுவரிலே கோடிட்டு நாள்களை எண்ணுதல், குருகு, கிளி, நாரை போன்றவற்றைத் தூது விடுதல் முதலான செய்திகளையும், பழக்கங்களையும் நற்றிணையில் காணமுடிகின்றது. காதலின் உயரிய கொள்கைகளையும் கோட்பாடுகளையும் இரசனையுணர்வுடன் இந்நூல் தந்துள்ளது. நன்மை + திணை = நற்றிணை என்பதற்கேற்ப, பொருண்மையும் செம்மையும் வாய்ந்த அகவாழ்வுச் சித்திரங்களாக நற்றிணைப் பாடல்கள் விளங்குகின்றன.

விளையா டாயமொடு வெண்மண லழுத்தி
மறந்தனந் துறந்த காழ்குகை யகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினுஞ் சிறந்தது நுவ்வை யாகுமென்
றன்னை கூறினள் புன்னையது சிறப்பே
யம்ம நாணுது நும்மொடு நகையே
விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலு மிலங்குநீர்த்
துறைகெழு கொண்கநீ நல்கி
னிறைபடு நீழல் பிறவுமா றுளவே

(பாடல் - 172)

பாடியவர் : *பாடியவர் பெயர் தெரியவில்லை*

திணை : *நெய்தல்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கம் : இரங்கல்

துறை : பகற்குறி வந்த தலைமகனைத் தோழி வரைவு கடாயது.

(பகற்பொழுதில் தலைவியைச் சந்திக்க வந்த தலைமகனுக்குத் தோழி, பகலிலே தலைவியைச் சந்திப்பதிலுள்ள இடர்ப்பாடுகளை எடுத்துக் கூறி, இப்படி வந்து சந்திப்பதை விடுத்து விரைவாகத் தலைவியை மணமுடிக்குமாறு கூறியது)

கொண்டு கூட்டும் முறை :

விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப வலம்புரி வான்கோடு நரலும் இலங்குநீர் துறைகெழு கொண்க! விளையாடும் ஆயமொடு வெண்மணல் அழுத்தி மறந்தனம் துறந்த காழ்முகை அகைய, நெய் பெய் தீம்பால் பெய்து இனிது வளர்ப்ப, நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று அன்னை கூறினள் புன்னையது சிறப்பே, அம்ம நாணுதும் நும்மொடு நகையே, நீ நல்கின் நிறைபடு நீழல் பிறவும் யாருளவே.

சொற்பொருள் :

விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப - புதியவராய் வந்த பாணர்கள் பாடுகின்ற மெல்லிய இசைப் பாட்டுப் போல; வலம்புரி வான்கோடு நரலும் - வெண்ணிறமான வலம்புரிச் சங்கு ஒலியெழுப்புகின்ற; இலங்குநீர் துறைகெழு கொண்க - விளங்கிய நீர்த் துறையையுடைய நெய்தல் நிலத் தலைவனே; விளையாடும் ஆயமொடு வெண்மணல் அழுத்தி - யாம் எம்மோடு விளையாடும் தோழியர் கூட்டத்தோடு சென்று ஒரு நாள் வெண்மையான மணலில் புதைத்து; மறந்தனம் துறந்த - பின்னர் அதனை மறந்து விட்ட; காழ்முகை அகைய - புன்னை விதையானது வேரூன்றி முளைவிட (அதனைக் கண்டு மகிழ்ந்து); நெய் பெய் தீம்பால் பெய்து இனிது வளர்ப்ப - நெய் கலந்த இனிய பாலை நீராக வார்த்து மகிழ்வுடன் வளர்க்கும் நாளில்; நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று அன்னை கூறினள் புன்னையது சிறப்பே - எமது அன்னை எம்மை நோக்கி நீங்கள் வளர்த்து வரும் புன்னையானது உங்களிலும் சிறந்தது, அது உங்களுடன் பிறந்த தங்கையாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுதியுடையது, என்று புன்னையின் சிறப்பை எடுத்துரைத்தாள்; நாணுதும் நும்மொடு நகையே - ஆதலால் எமது தங்கையாகிய புன்னையின் நிழலில் நின்று உம்மோடு சிரித்து விளையாடி மகிழ்வதற்கு நாம் வெட்கப் படுகின்றோம்; அம்ம! நீ நல்கின் நிறைபடு நீழல் பிறவும் யாருளவே - அம்மாவோ! நீ இவளை அணைந்து கொள்வதற்கு நிறைவான நிழல் பிறவும் இங்குள்ளன; காண்பாயாக (அவற்றினிடை செல்லுதல் நல்லதாகும்).

பொழிப்புரை :

புதியவராய் வந்த பாணர்கள் பாடுகின்ற மெல்லிய இசைப் பாட்டுப் போல வெண்ணிற வலம்புரிச் சங்கு ஒலி எழுப்புகின்ற, விளங்கிய நீர்த் துறையை உடைய நெய்தல் நிலத் தலைவனே! யாம், எம்மோடு விளையாடும் தோழியர் கூட்டத்தோடு சென்று ஒரு நாள் வெண்மையான மணலில் புதைத்துப் பின்னர் அதனை மறந்து விட்ட புன்னை விதையானது வேரூன்றி முளைவிட(அதனைக் கண்டு மகிழ்ந்து) நெய் கலந்த இனிய பாலை நீராக வார்த்து மகிழ்வுடன் வளர்க்கும் நாளில், எமது அன்னை எம்மை நோக்கி நீங்கள் வளர்த்து வரும் புன்னையானது உங்களிலும் சிறந்தது; அது உங்களுடன் பிறந்த தங்கையாகும் தகுதியுடையது; என்று புன்னையின் சிறப்பை எடுத்துரைத்தாள். ஆதலால் எமது தங்கையாகிய புன்னையின் நிழலில் நின்று உம்மோடு சிரித்து விளையாடி மகிழ்வதற்கு நாம் வெட்கப் படுகின்றோம். அம்மாவோ! நீ இவளை அணைந்து கொள்வதற்கு நிறைவான நிழல் பிறவும் இங்குள்ளன; காண்பாயாக (அவற்றினிடை செல்லுதல் நல்லதாகும்).

விளக்கம் :

தலைவன் தலைவியைப் பகற் பொழுதில் சந்தித்துக் களவொழுக்கத்தில் ஈடுபடுதல் பகற்குறி எனப்படும். இரவுப் பொழுதில் குறித்த இடத்தில் சந்தித்துக் களவொழுக்கத்தில் ஈடுபடுதல் இரவுக் குறி எனப்படும். இச் செய்யுளில் பகற்குறி வந்த தலைவனிடம் தோழி, தலைவியை விரைந்து மணந்து கொள்ளுமாறு கூறுகிறாள். இதனால் "பகற்குறி வந்த தலைமகனைத் தோழி வரைவு கடாயது" செய்யுளின் துறை ஆயிற்று. "நீ நல்கி நிறை படு நீழல் பிறவு மாருளவே" என்பது செய்யுளின் முடிவாகும். அதாவது இவளை அணைந்து கொள்வதற்கு நிறைவான நிழல் வேறும் இங்குள்ளன;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்பாயாக என்பது இதன் பொருளாகும். "அம்ம! நாணுது நும்மொடு நகையே" என்பது இச் செய்யுளின் பிரதான கருத்தாகும். புன்னை மர நிழலில் உன்னுடன் சிரித்து விளையாடி மகிழ வெட்கப்படுகிறோம். ஏனெனில் புன்னை எமது தங்கை போன்றது என்பதனூடாகப் பகலில் தலைவியைச் சந்திப்பது முடியாதென் பதைக் கூறி, வரைவினை மேற்கொள்ளத் தூண்டினாள் தோழி என்க. வேறு மரத்தின் நிழல் உண்டு என்பதனூடாக இரவுக்குறியைக் குறிப்பிட்ட தோழி, அதுவும் ஆபத்தானதாகையால் வரைந்து கொள்ளலே சிறந்ததென வலியுறுத்தினாள் எனலாம். உடன் பிறந்தார், சுற்றத்தார் ஆகியோர் அருகிலிருக்கும்போது தன் காதலனுடன் தலைவி அளவளாவிக் கூடிக் குலாவி மகிழ்வது தகுதியுடையதன்று. ஆதலால் "நாணுது" எனப்பட்டது. இதனால் பகற்குறி மறுக்கப்பட்டு வரைவு கடாயது எனலாம். விறர் – இளமை; வளரிசை – மென்மையிலும் மேலான மெல்லிய இசை; காழ் – விதை; இங்கு புன்னைக் கொட்டையைக் குறித்தது. அகைய – தோன்ற; நுவ்வை – நுமது தங்கை; "பிறவு மாருளவே" என்பது "பிறவும் + ஆர் + உளவே" என வரும். இதில் "ஆர்" அசைநிலையாகும். எனவே பிறவும் உளவே எனக் கொள்ளுதல் வேண்டும்.

அருஞ்சொற் பொருள் :

ஆயம் – தோழியர் கூட்டம்; அழுத்தி – புதைத்து; காழ் – விதை; அகைய – தோன்ற; தீம்பால் – இனிய பால்; நும் – உமது; நுவ்வை – உமது தங்கை; நாணுது – வெட்கப்படுகிறது; நகை – சிரிப்பு; விருந்து – புதியவராய்; பாணர் – போர்க்களங்களில் யாழ் மீட்டிப் பாடுவோர்; விளர் – இளமை; கடுப்ப – போல; வான்கோடு – சங்கு; இலங்கு – விளங்குகின்ற; கெழு – உடைய; கொண்க – நெய்தல் நிலத் தலைவர்; நல்கி – அணைந்து; நிறைபடு – நிறைந்த; பிறவும் – வேறும்; உளவே – உள்ளன.

குறிப்புகள்

1. அகவற் பாவாலான நெய்தல் திணைக்குரிய 7 அடிச் செய்யுள் இதுவாகும். நெய்தல் நில ஒழுக்கம் இரங்கல் ஆகையால், தலைவன், தலைவியை வரைந்து கொள்ள வேண்டி இரங்கியிருத்தலின்பாற் பட்டது.

2. அன்னையானவள் புன்னை மரத்தினைத் தலைவிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழிக்கும் தங்கை எனக் கூறினாள் என்பதன் மூலம், தங்கை யின் எதிரில் தலைவி, தலைவனுடன் கூடிக் குலாவுதல் தகாது எனப்பட்டது. இதனால் பகற்குறிக்கு அஞ்சி உடன்பட மறுத்து வரைவினை மேற்கொள்ளுமாறு கூறப்பட்டது.

3. நிறைபடு நீழல் பிறவும் உளவே என்பது இரவுக் குறியைக் குறித்தது. எனினும், அதுவும் பொருத்தமில்லை என உணர்த்தப் பட்டது.

4. நெய்தல் நிலத் தலைவனின் நீர்த்துறை வளத்தினை "வலம்புரி வான்கோடு நரலும்" என்பதால் காட்டப்பட்டது. பெறுமதியான வலம்புரிச் சங்குகள் நிறைந்த துறை எனப்பட்டது.

5. விருந்திற் பாணர் விளரிசை - உவமானம்; வலம்புரி வான்கோடு நரலுதல் - உவமேயம்; மென்மையும் இனிமையும் - பொதுத் தன்மை.

6. "அம்ம" என்பது ஒலிக் குறிப்பு.

7. அழுத்தி, அகைய, பெய்து, ஆகுமென்று, நல்கி - வினையெச் சங்கள்; விளையாடும், துறந்த, இலங்கு, நிறைபடு - பெயரெச் சங்கள்; வினையாகும் இனிது, நாணுது - பெயரெச்சமும் வினைமுற்றும் இரண்டும்; கடுப்ப - இடைச்சொல்.

இ. புறநானூறு

கடைச் சங்கப் புலவர்கள் பாடிய பல தனிப்பாடல்கள் பொருள், அளவு, பாவகை போன்றவற்றைக் கருதி எட்டுத் தொகை நூல்களாகத் தொகுக்கப் பட்டன. இவற்றுள் புறப் பொருளை ஒட்டிய நானூறு அகவற்பாக்கள் புறநானூறு என வழங்கும். இந் நூலினைத் தொகுத்தவர், தொகுப் பித்தவர் பெயர்களை அறிய முடிய வில்லை. புறம், புறப் பாட்டு ஆகிய பெயர்களாலும் இந்நூல் அழைக்கப் படுகின்றது.

தமிழகத்தின் முக்காலத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவேந்தர்கள், வீரர்கள், புலவர்கள், வள்ளல்கள், ஆகிய பலருடைய சரித்திரக் குறிப்புக்கள் இந்நூலால் விளங்கும். நவின்றோர்க் கினிமையும், பொருளாழமுடைத்தாதலும், விழுமியது பயத்தலும், விளங்குதாரணத்தாகுதலும் இந்நூலின் சிறப்பியல்புகள். பாரதம் பாடிய பெருந்தேவனார் இந்நூலின் கடவுள் வாழ்த்தைச் சிவபிரான் மீது பாடியுள்ளார். 4 அடி முதல் 40 அடி வரையில் அமைந்த புறநானூற்றுப் பாடல்களை 160 புலவர்கள் பற்பல காலங்களில் பாடியுள்ளனர். இன்னார் பாடியதென அறியமுடியாத 16 பாடல்களும் இந்நூலிலுள. 44 பாடல்களில் சில வரிகள் அழிந்து காணப்படு கின்றன. பழந்தமிழர் வாழ்வியலின் பல்பரிமாணங்களையும் புறநானூற்றில் காண முடிகின்றது. அரசர்களுக்கும் புலவர்களுக்கு இடையிலான அன்பின் அதியுன்னதத்தையும் தரிசிக்க கூடியதாயுள்ளது. இரும்பிடர்த்தலையார், தொடித்தலை விழுத்தண் டினார் போன்ற பல புலவர்கள், தாம் கையாண்ட சொற்றொடர்கள் மூலமே பெயர் பெற்றுள்ளனர். தமிழ்ச் சமுதாயத்தின் அரசியல், சமூக நிலைகளையும், கல்வி, நாகரிகம், பொருளாதாரம், கலைவளர்ச்சி முதலானவற்றையும் இந்நூற் செய்யுள்களினூடாக அறிய முடிகின்றது. பண்டைத் தமிழகத்தின் 15 பாண்டிய மன்னர்கள், 18 சோழ வேந்தர்கள், 18 சேர அரசர்கள் ஆகியோரை இந்நூல் சிறப்பித்துக் கூறுகின்றது. இவர்களுள் இமயவரம்பன், சேரன் செங்குட்டுவன், பாண்டியன் நெடுஞ்செழியன், சோழன் கரிகாலன் போன்ற பெருமை மிக்க அரசர்களும் அடங்குவர். மங்கையர் மங்கல அணி அணிதல், கணவனிறந்த பொழுது பெண்கள் அணிகளைக் களைதல், இறந்தவரைத் தாழியிற் கவித்தல், நடுகல் வழிபாடு, பெண்கள் கைம்மை நோன்பு நோற்றல், ஊண் சுருக்குதல், உடன்கட்டையேறுதல் ஆகிய செய்திகளுடன், பத்து ஆடை வகைகளையும், இருபத்தெட்டு அணிவகைகளையும், முப்பது படைக்கல வகைகளையும், அறுபத்தேழு உணவு வகைகளையும் இந்நூல் எடுத்துக் கூறுகிறது. இருபாற்புலவர்களுடன், அரசர்களும் பாடிய செய்யுள்கள் புறநானூற்றில் அடங்கியுள்ளன. புறநானூறு தமிழர்களின் தொன்மையான இலக்கியச் சொத்தாகும்.

நகுதக் கனரே, நாடுமீக் கூறுனர்;
இளையவ னிவனென வுளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும் தேரு மாவும்
படையமை மறவரு முடையம் யாமென்
றுறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றங் கோலே னாகுக
ஓங்கிய சிறப்பி னுயர்ந்த வேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
உலகமொடு நிலைஇய பார்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் நிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா வின்மையா னுறவே.

(பாடல் 72)

பாடியவர் : தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியன்.

சங்ககாலப் புலவர்களால் பாடப்பட்ட பெருமைக் குரிய மன்னர்களில் இவனும் ஒருவன். மாங்குடி மருதனார் பாடிய பத்துப் பாட்டில் இடம்பெறும் நூலாகிய மதுரைக் காஞ்சியின் பாட்டுடைத் தலைவனும் இவனேயாவான். புற நானூற்றில் இவனைப் பற்றிப் பாடப்பட்ட 10 செய்யுள்களும், இவன் பாடிய 72 ஆம் செய்யுளும் உள்ளன. இவன் தந்தை இறந்த பின், சிறு வயதில் முடி சூடியவன். தலையாலங்கானத்துப் போரினால் சிறப்படைந்தவன். போருக்குச் செல்லும் போது சிறுவர்கள் அணியும் ஐம்படைத் தாலியைத் தனது காலில் இருந்து கழற்றாதவன். அடுபோற் செழியன். பொற்றேர்ச்செழியன், மறப்போர்ச் செழியன், இயல்தேர்ச்செழியன் என பலவாறு புகழப்பட்டவன். மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை ஆகிய நூல்களின் பாட்டுடைத் தலைவன். புற நானூற்றில் 10 புலவர்கள் இவனைப் பாடியுள்ளனர். இவர்களுள் பரணர், கல்லாடனார் போன்ற புலவர்களும் அடங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணை : காஞ்சி

துறை : வஞ்சினக் காஞ்சி

(தன்னை ஏளனமாகவும், தம்மை உயர்த்தியும் பேசிய சினங்கொண்ட வேந்தர்களை வென்று அடிமைப் படுத்துவேன் எனத் தனது வீரமும் மானமும் வெளிப் படுமாறு வஞ்சினத்துடன் சபதம் செய்தமையால் இதன் துறை வஞ்சினக் காஞ்சி எனப்பட்டது).

கொண்டு கூட்டும் முறை:

"நாடுமீக் கூறுநர் நகுதக் கனரே; இளையவன் இவன்" என உளையக் கூறிப், படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள் நெடுநல் யானையும், தேரும், மாவும், படை அமை மறவரும், உடையம் யாம் என்று உறுதுப்பு அஞ்சாது, உடல் சினம் செருக்கிச் சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை, அருஞ்சமஞ் சிதையத் தாக்கி, முரசமொடு ஒருங்கு அகப்படேஎன் ஆயின் பொருந்திய என் நிழல் வாழ்நர் சென்னிழல் காணாது "கொடியன் எம் இறை" எனக் கண்ணீர் பரப்பிக், குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக! ஓங்கிய சிறப்பின் உயர்ந்த வேள்வி மாங்குடி மருதன் தலைவன் ஆக, உலகமொடு நிலை இய பலர்புகழ் சிறப்பின் புலவர் பாடாது வரைக, என் நிலவரை; புரப்போர் புன்கண் கூர, இரப்போர்க்கு ஈயா இளமை யான் உளவே.

சொற்பொருள்:

நாடுமீக் கூறுநர் - இவனுடைய நாட்டினை உயர்வாகப் பேசுபவர்கள்; நகுதக் கனரே - நகைப்புக்கு இடமானவரே; இளையவன் இவன் என உளையக் கூறி - இவன் இளையவன் என வெறுப்புடன் கூறி; படுமணி இரட்டும் - இருபுறமும் கட்டப்பட்ட மணிகள் ஒலி எழுப்பும்; பாவடிப் பணைத்தாள் - பரந்த காலடிகளையும், பருத்த கால்களையும் உடையதுமான; நெடுநல் யானையும் - உயர்ந்த யானைப் படையையும்; தேரும் - தேர்ப் படையையும்; மாவும் - குதிரைப் படையையும்; படை அமை மறவரும் - ஆயுதந் தாங்கிய படைவீரரையும்; உடையம் யாம் என்று - கொண்டவர்கள் யாம் என்று; உறுதுப்பு அஞ்சாது - புல்லிய வார்த்தைகளைப் பேச அஞ்சாது; உடல் சினம் செருக்கி - உடல் சினம் கொண்டு விளங்குமாறு; சிறுசொல் சொல்லிய - ஏளனமான வார்த்தைகளைப் பேசிய; சினங்கெழு வேந்தரை - சினம் மிகுந்த அரசர்களை; அருஞ்சமம் சிதையத் தாக்கி - அரிய போரிலே சிதையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியாகத் தாக்கி அழித்து; முரசமொடு ஒருங்கு அகப்படே என் ஆயின் - அவர்களது முரசங்களோடு, அவர்களையும்சேர்த்துக் கைப்பற்றா மல் விடுவேனாயின்; பொருந்திய என் நிழல் வாழ்நர் - பொருந்தி அமைந்த என் பாதுகாப்பில் வாழும் குடிமக்கள்; சென்னிழல் காணாது - சென்று தங்கி வாழ்வதற்குரிய வேறு பாதுகாப்பான இடத்தினைக் காணாமல்; கொடியன் எம் இறை எனக் கண்ணீர் பரப்பி - எம் அரசன் கொடியவன் எனக் கண்ணீர் விட்டு; குடிபழி தூற்றும் - குடிமக்கள் பழி சொல்லித் தூற்றுகின்ற; கோலேன் ஆகுக - கொடுங் கோலன் ஆகுவேன்; ஓங்கிய சிறப்பின் உயர்ந்த வேள்வி - மேன்மையான சிறப்பையும், உயர்வான அறிவையும் கொண்ட; மாங்குடி மருதன் தலைவன் ஆக - மாங்குடி மருதனைத் தலைவனாக உடைய; உலக மொடு நிலை இய பலர்புகழ் சிறப்பின் - உலகத்தோடு நிலைபெற்ற பலராலும் புகழப்படுகின்ற சிறப்பினை உடைய; புலவர் பாடாது வரைக என் நிலவரை - புலவர்களால் என் நாட்டு எல்லை புகழ்ந்து பாடப் படாததாக விளங்கட்டும்; புரப்போர் புன்கண் கூர - என்னால் பாதுகாக்கப்படுவோர் கண்கள் சோருமாறு; இரப்போர்க்கு ஈயா - இரப்போர்க்கு எதனையும் ஈய முடியாதவாறு; இன்மை யான் உறவே - வறுமையானது என்னை வந்து அடையட்டும்.

பொழிப்பு :

இவனுடைய நாட்டினை உயர்வாகப் பேசுபவர்கள் நகைப்புக்கு இடமானவர்கள்; இவன் இளையவன் என வெறுப்புடன் கூறி, இருபுறங்கட்டப்பட்ட மணிகள் ஒலிக்கும் பரந்த காலடிகளையும், பருத்த கால்களையும் உடைய உயர்ந்த யானைப் படையையும், தேர்ப் படையையும், குதிரைப் படையையும், ஆயுதந் தாங்கிய காலாட்படை வீரர்களையும் நாம் கொண்டவர்கள் என்று புன்மையானவற்றைப் பேச அஞ்சாது, உடல் முழுதும் சினம் மேலிட ஏளனமான சொற்களைப் பேசிய சினம் மிகுந்த அரசர்களை, அரிய போரிலே சிதறும்படியாகத் தாக்கியழித்து, அவர்களது முரசங்களுடன் அவர்களையும் ஒன்று சேரக் கைப்பற்றாது விடுவேனாயின், பொருந்தி அமைந்த எனது ஆட்சிப் பாதுகாப்பில் வாழும் குடி மக்கள், சென்று வாழ்வதற்கும் பாதுகாப்பான வேறு இடம் இன்மையால் "கொடியவன் எங்கள் அரசன்" எனக் கண்ணீர் விட்டுப் பழிசொல்லித் தூற்றுகின்ற கொடுங்கோலன் ஆவேனாக. மேலான சிறப்பையும் உயர்ந்த அறிவையும் உடைய மாங்குடி மருதனைத் தலைவனாக உடைய உலகத்தோடு நிலைபெற்ற பலராலும் புகழப்படுகின்ற சிறப்பினையுடைய புலவர்களால் என் நாட்டு எல்லை பாடப்படாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக ஆகுக. என்னால் பாதுகாக்கப்படுவோரின் வருந்திய கண்கள் சோருமாறு இரப்பவர்களுக்கு எதனையும் கொடுக்க முடியாதவாறு வறுமை என்னை வந்து சேரட்டும்.

விளக்கம் :

இச் செய்யுளானது தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனால் பாடப்பட்டது. தன்னை இளையவன் என்றும் தனது நாட்டை உயர்த்திக் கூறுவோர் நகைப்பிற் கிடமானவர்கள் என்றும் எதிர்த்து நிற்கும் தங்கள் படைபலம் பெரியது என்றும், ஏளனமொழி கூறியோரை போர்க்களத்தில் சிதறியோடுமாறு செய்து பெருவெற்றி பெறுவேனென்றும், அவ்வாறு செய்யேனாகில் தனது குடிமக்கள் தன்னைக் "கொடுங்கோலன்" எனக் கூறட்டும்; மேலான மாங்குடி மருதனைத் தலைவராகவுடைய புலவர்கள் தனது நாட்டைப் பாடாது போகட்டும்; தனது பாதுகாப்பிலுள்ள இரப்பவர் களுக்கு ஈய முடியாத வறுமை தன்னை வந்து சேரட்டும் என்று சபதம் செய்வதாகவும் அமைந்துள்ளது. மேலும் குடியோம்பல், சுற்றம் காத்தல், புலவரைப் போற்றுதல், இரவலர்க்கு உதவுதல் ஆகியன ஒரு நாட்டை ஆளும் மன்னனின் முதற் கடமைகள் என்பதையும் இச் செய்யுள் வலியுறுத்தியுள்ளது. தமிழ் நாட்டை ஆட்சி செய்து, பல போர்களில் வெற்றி வாகை கண்டு, புலவர்கள் பலரால் புகழ்ந்து பாடப்பெற்ற தகுதியை உடைய பாண்டியன் நெடுஞ்செழியனே இச் செய்யுளைப் பாடியமை சிறப்பானது. அவனும் சங்க காலப் புலவர்களில் ஒருவன் என்பதும் கருதத் தக்கது.

அருஞ்சொற்பொருள் :

மீக் கூறுநர் – உயர்த்திக் கூறுபவர், சிறப்பித்துக் கூறுபவர்; நகுதல் – சிரித்தல்; உளைய – வெறுப்புடன்; இரட்டும் – அசைந்து ஒலிக்கும்; பாவடி – பரவிய அடி; பணை – திரட்சி; தாள் – கால்; மா – குதிரை; மறவர் – வீரர்; உறுதுப்பு – உற்ற வலிமை, புல்லிய வார்த்தைகள்; சினம் – கோபம்; செருக்கி – விளங்குமாறு; சிறுசொல் – இகழ்ச்சிச் சொல், ஏளனமான சொல்; சினம் கெழு – கோபம் மிகுந்த; அருஞ்சமம் – அரிய போர்; சிதைய சிதறிட; ஒருங்கு – சேர்த்து; சென்னிழல் – செம்மையான நிழல், சென்று வாழக்கூடிய பாதுகாப் பான இடம்; இறை – அரசன்; கோல் – செங்கோல்; கேள்வி – அறிவு; நிலை இய – நிலை பெற்ற; வரைக – நீங்குக; நிலவரை – நிலத்தின் எல்லை; புரப்போர் – பாதுகாக்கப் படுவோர்; புன்கண் கூர – துயருற; இன்மை – வறுமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகள்

1. இச் செய்யுளில் பாண்டியன் நெடுஞ் செழியன் வஞ்சினம் கூறுதல் முக்கியமான பாடுபொருளாக அமைந்துள்ளது. அதன் மூலம் அவனை எதிர்த்த அரசர்கள் கூறிய ஏளனமான சொற்களும், அதற்கு மறுதலையாக நெடுஞ்செழியனின் வஞ்சினச் சொற்களும் வெளிப்பட்டுள்ளன.

2. இச் செய்யுளில் பாண்டியன் நெடுஞ் செழியனின் தன்மான உணர்வும், வீரமும் வெளிப்பட்டுள்ளன. தன்னை இழிவாகப் பேசியவர்களைப் போர்க்களத்தில் சிதறடித்து அவர்களையும், முரசங்களையும் கைப்பற்றுவேன் எனக் கூறுவதுடன், அவ்வாறு செய்யாமல் இருப்பேனாகில் எனது குடிமக்கள் கொடுங்கோலன் எனப் பழி தூற்றுதலுக்கும், மாங்குடி மருதனைத் தலைவராக வுள்ள புலவர்கள் எனது நிலவெல்லையைப் பாடாது ஒழிதலுக் கும், எனது குடிமக்களில் இரப்போர்க்கு அவர்களின் கண் சோருமாறு எதையும் கொடுக்க முடியாத வறுமை என்னை வந்தடைதற்கும் உரியவன் ஆவேன் என்று கூறியவற்றை உணர்த்தி நிற்கின்றது.

3. **பாண்டியன் நெடுஞ் செழியனை இழிவான முறையில் அரசர்கள் கூறிய வார்த்தைகள் :**

   i. இவனுடைய நாட்டை உயர்த்திப் பேசுபவர்கள் நகைப்புக் கிடமானவர்கள்.

   ii. இவன் அனுபவமில்லாத இளையவன்.

   iii. இரு புறங்களும் மணிகள் ஒலிக்கும், பரந்த காலடிகளையும் பருத்த கால்களையும் உடைய உயர்ந்த யானைப் படை, தேர்ப் படை, குதிரைப் படை, ஆயுதம் தாங்கிய வீரர்களை உடைய காலாட் படை ஆகியவற்றை நாம் கொண்டிருப்பவர் கள்.

4. **பாண்டியன் நெடுஞ்செழியன் கூறிய வஞ்சின வார்த்தைகள் :**

   I. புன்மையான வார்த்தைகளைப் பேசிய, சினம் மிகுந்த அரசர்களைப் போரில் தாக்கி அழிப்பேன்.

   ii. அவர்களது முரசங்களுடன் அவர்களையும் ஒருசேரக் கைப்பற்றுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. அவர்களை அழித்து வெற்றி கொள்ளேனாயின், எனது ஆட்சியில் வாழும் குடிமக்கள் சென்று வாழ்வதற்குப் பாதுகாப்பான வேறிடம் இன்மையால் "எங்கள் அரசன் கொடியவன்" என்று கண்ணீர் விட்டுப் பழி சொல்லித் தூற்றும் கொடுங் கோலன் ஆகுவேனாக.

iv. மேலான சிறப்பையும், உலகத்தாரின் போற்றுதலையும் உடைய அறிவிற் சிறந்த மாங்குடி மருதனைத் தலைவராகக் கொண்ட புலவர்களால், எனது நிலத்தின் எல்லையானது புகழ்ந்து பாடப் படாதது ஆகுக.

v. என்னால் பாதுகாக்கப் படுபவர்களின் வருத்தமுற்ற கண்கள் சோருமாறு, இரப்பவர்களுக்கு எதனையும் வழங்க முடியாத வறுமை என்னை வந்து சேர்வதாக.

5. இவன் இளையவன் என நெடுஞ்செழியனை இகழ்ந்ததுடன் தலையாலங்கானம் என்னும் இடத்தில் போர் செய்து நின்றவர்கள்:

i. சோழ நாட்டை ஆண்ட இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி
ii. சேர நாட்டை ஆண்ட மாந்தரஞ் சேரல் இரும்பொறை
iii. கொங்கு நாட்டை ஆண்ட திதியன்
iv. எழினி எருமையூரன்
v. இருங்கோவேள்
vi. பொருநன்

2. ஒருநாள் செல்லலம்; இருநாள் செல்லலம்;
பன்னாள் பயின்று, பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ;
அணிபூண் அணிந்த யானை இயல்தேர்
அதியமான்; பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினும், நீட்டா தாயினும், யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுஅது; பொய்யா காதே!
அருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா; வாழ்க அவன்றாளே!

(புறநானூறு - பாடல் : 101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடியவர் : ஔவையார்

கடைச்சங்க காலத்தில் புகழ் வாய்ந்த பெண்பாற் புலவர் இவர். தொகை நூல்களில் குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு ஆகியவற்றில் ஔவையார் பாடிய 59 செய்யுட்களுள. குறுந்தொகையில் 15 செய்யுட்கள் காணப்படுகின்றன. புறநானூற்றில் 23 செய்யுட்கள் உள. அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் அரசனுடன் பேரன்பு பூண்டவர் இவர். அவன் தனக்குக் கிடைத்த சாகா வரமிக்க நெல்லிக் கனியை ஔவையாருக்கு அளித்தான். பல்வேறு நீதிக் கருத்துக்களைத் தமது செய்யுட்களில் ஆங்காங்கே கூறுவது இவருக்குக் கைவந்த கலையாகும். பிற்காலத்தில் தமிழிலக்கிய வரலாற்றில் சில ஔவையார்கள் இடம்பெற்ற போதிலும் அனைவருக்கும் முன்னோடி இந்தச் சங்ககால ஔவையார் ஆவார்.

திணை : பாடாண் (பாடப்படும் ஆண்மகனின் ஒழுகலாற்றினைக் கூறுவது பாடாண் திணையாகும். வீரம், வெற்றி, கொடை, நட்பு, தண்ணளி ஆகியன இவற்றுள் அடங்கும்).

துறை : பரிசில் கடாநிலை

(பரிசில் கடாநிலை என்பது யாவரும் பரிசு பெற்றனர்; யான் பெற்றிலன் எனத் தனது பரிசில் நீங்காமல் இருக்கும் என்ற நம்பிக்கையுடன், தலைவனுக்குப் பரிசில் விரும்புவோன் தன் சுற்றத்தினரது துன்பம் முதலானவற்றைக் கூறி பரிசில் கேட்டு நின்ற நிலையாகும். பரிசில் தாழ்ப்பினும் தருதல் தப்பாது என்று தன் நெஞ்சத்துக்கு உரைத்து அதனைத் தருமாறு குறிப்பால் வேண்டுதல் ஆகும். அதியமான் நெடுமான் அஞ்சியின் வள்ளன்மையை எடுத்துக் கூறி, அவனிடம் சென்று பரிசில் பெறுமாறு கூறியது. பரிசில் பெறக் காலந் தப்பினும் அவன் பரிசில் தருதல் தப்பாது என உரைத்து, அதனைத் தருமாறு குறிப்பாக வேண்டுதலால் பரிசில் கடாநிலை ஆயிற்று).

கொண்டு கூட்டும் முறை :

ஒரு நாள் செல்லலம், இருநாள் செல்லலம்; பன்னாள் பயின்று பலரொடு செல்லினும், தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ; அணிபூண் அணிந்த யானை இயல்தேர் அஞ்சி அதியமான் பரிசில் பெறாஉங்காலம் நீட்டினும், நீட்டாதாயினும் யானை தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டிடை வைத்த கவளம் போலக் கையகத்தது அது; பொய்யாகாதே! அருந்தே மாந்த நெஞ்சம் வருந்த வேண்டா; அவன் தாள் வாழ்க!

சொற்பொருள் :

ஒருநாள் செல்லலம் - ஒருநாள் சென்றாலும்; இரு நாள் செல்லலம் - இரு நாட்கள் சென்றாலும்; பன்னாள் பயின்று பலரொடு செல்லினும் - பல நாட்கள் பலரோடும் மீள மீளச் சென்றாலும்; தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ - முதல் நாள் போலவே உதவுகின்ற பண்பினன்; அணிபூண் அணிந்த யானை - பூண்கள் அணிந்த யானையையும்; இயல்தேர் - உருவாக்கப்பட்ட தேரையும் உடையவன்; அதியமான் - அதியமான் நெடுமான் அஞ்சி; பரிசில் பெறூஉங் காலம் - பரிசிலைப் பெறுவதற்குரிய காலமானது; நீட்டினும் நீட்டாதாயினும் - நீடித்தாலும், நீடிக்காவிட்டாலும்; யானை தன் கோட்டிடை வைத்த கவளம் போல - யானைக் கொம்புக ளிடையே (தந்தங்களிடையே) வைக்கப்பட்ட உருண்டை அதனை விட்டு ஒருபோதும் தவறாதது போல; கையத்தது அது - அவன் தரும் பரிசில் நம் கையிலேயே உள்ளது; பொய்யாகாதே - அது தப்பாதது; அருந்தே மாந்த நெஞ்சம் வருந்த வேண்டா - உண்ண ஆசைப்பட்ட நெஞ்சமே! நீ பரிசில் கிடைக்காதோ என நினைந்து வருந்த வேண்டாம்; அவன் தாள் வாழ்க - அவனது திருவடிகள் வாழ்வதாக.

பொழிப்பு :

ஒருநாள், இருநாள் சென்றாலும், பலநாட்கள் பலரோடு சென்றாலும், முதல்நாள் போலவே உதவுகின்ற பண்பினன். பூண்கள் அணிந்த யானையையும், செய்யப்பட்ட தேரினையும் உடையவன் அதியமான் நெடுமான்அஞ்சி. பரிசில் பெறுங் காலமானது நீடிப் பினும், நீடிக்காதாயினும் யானைகளின் கொம்புகளிடையே வைக்கப் பட்ட உருண்டையானது அதனை விட்டு ஒருபோதும் தவறாதது போல, அவன் தரும் பரிசில் நம் கையிலேயே உள்ளது; அது தப்பாதது. உண்ண ஆசைப்பட்ட நெஞ்சமே! நீ பரிசில் கிடைக் காதோ என வருந்த வேண்டாம். அவன் தாள்கள் வாழ்வதாக.

விளக்கம் :

எப்போது சென்றாலும் எத்தனை தடவைகள் சென்றாலும் நெடுமான் அஞ்சி அதியமானிடம் பரிசில் பெற முடியும் என்பதனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக அம் மன்னனின் ஈகைக் குணத்தினை எடுத்துக் காட்டும் செய்யுளிது. பலமுறை பலரோடு சென்றாலும் முதல் நாள் தருவது போன்ற விருப்புடன் உதவுபவன் அவன். ஆதலால் பரிசு கிடைக்குமோ, கிடைக்காதோ என அஞ்ச வேண்டாம் எனத் தன் நெஞ்சத்திற்குக் கூறுமாப்போல் செய்யுள் அமைந்துள்ளது. ஏனெனில், யானைக் கொம்புகளிடையே வைத்த உருண்டை ஒருபோதும் தவறுவதில்லை. அதுபோல் அதியமானின் ஈகையும் தவறாது கிடைக்கும். எனவே அது நம்கையிலேயே உள்ளதாகும் எனப்பட்டது. அருந்தே மாந்த - உண்ண ஆசைப்பட்ட; "அருந்த" என்பது கடைக் குறையாக "அருந்" எனப்பட்டது. அதனுடன் "ஏமாந்த" சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. அருந்தென முன்னிலை ஏவலாக்கி உரைக்கவும் முடியும். அதியமான் "விருப்பினன்" என முன்னுக்குக் கூட்டிப் பொருள் கொள்க. யானைக் கொம்புகளிடையே வைக்கப் பட்ட கவளம் - உவமானம்; அதியமானின் பரிசில் - உவமேயம்; தவறாதிருப்பது - பொதுத் தன்மை. "தாளே" என்பதில் "ஏ" காரம் ஈற்றசை. "மாதோ" என்பதும் ஒழிபிசைச் சொல்லாகும்; பொருளற்றது. கையகத்தது - கையிலுள்ளது, கைவசமுள்ளது. உம், அம், போன்ற, போல, ஏ - இடைச் சொற்கள்.

அருஞ்சொற் பொருள் :

செல்லலம் - சென்றாலும்; தலைநாள் - முதல் நாள்; அணி பூண் - பூண்கள் அணிந்த, ஆபரணம் அணிந்த; இயல் - உருவாக்கப் பட்ட, செய்யப்பட்ட, இயற்றிய; பெறாஉம் - பெறும்; கோடு - கொம்பு, தந்தம்; கவளம் - உருண்டை; பொய்யாகாது - தவறாகாது; தாள் - திருவடி, கால்.

குறிப்புகள்

1. இச் செய்யுளின் பாட்டுடைத் தலைவன் அதியமான் நெடுமான் அஞ்சி ஆவான். இவன் தகடூரில் இருந்து அரசாண்டவன். குதிரை மலைத் தலைவன். உண்டோரை நெடுங்காலம் வாழச் செய்யும் அரிய நெல்லிக் கனியைப் பெற்றும், அதனைத் தானுண்ணாது தமிழ்ப் பெருமாட்டி ஔவைக்கு அளித்தவன். சேரர் குலத்தவன், வள்ளலாகிய மலையமானைச் சோழர் துணையோடு வென்றவன். போர்கள் பலவற்றில் வெற்றிகண்டவன். ஔவையார், பரணர், பெருஞ்சித்திரனார், பொன்முடியார், அரிசில் கிழார் ஆகிய புலவர்கள் இம் மன்னனைப் போற்றிப் பாடியுள்ளனர். இவனை ஒழிக்கக் கருதிய பலருள் சேரமான் தகடூர் எறிந்த பெருஞ் சேரல் இரும்பொறை என்பவன் இவனை வென்று தகடூரையும் அழித்தான். தகடூர்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்போர் காரணமாகத் "தகடூர் யாத்திரை" என்னும் நூலே பின்னர் எழுந்தது. ஔவையார் இவன் மீது நட்புக் கொண்டு பாடிய பாடல்கள் பல. "நீல மணி மிடற்று ஒருவன் போல மன்னுக பெரும" என இவனை ஔவையார் வாழ்த்தியுள்ளார். இவனது மகன், பொகுட்டெழினி. புறநானூற்றில் இவன் மீதான பாடல்கள் 26 வரையில் உள்ளன.

2. அதியமான் நெடுமான் அஞ்சி வள்ளன்மையிற் சிறந்தவனாகையால், அவனிடம் எப்போது சென்றும் பரிசில் பெற முடியும்; எத்தனை தடவைகள் சென்றும் பரிசில் பெற முடியும். பல பேருடன் சென்றும் பரிசில் பெற முடியும். பரிசில் அளிக்கும்போது முதல் நாள் கொடுப்பவன் போன்ற மனத்துடனும் விருப்பமுடனும் கொடுப்பான் என்கிறார் ஔவையார்.

3. காலம் நீடித்தும், நீடிக்காமலும் இருந்தாலும் பரிசில் நிச்சயம் கிடைக்குமாதலால் நெஞ்சமே நீ வருந்தாதே எனப்பட்டது. சில வேளைகளில் உண்ணுவதற்குப் பொருள் கிடையாத (பரிசில் கிடைக்காமல்) போய்விடுமோ என்று வருந்தாதே நெஞ்சமே எனக் கூறியதும், அதியமான் அளிக்கின்ற பரிசில் யானைக் கொம்புகளிடையே வைத்த கவளம் போன்று தவறாதிருப்பது எனக் குறிப்பிட்டதும், அது எமது கையிலேயே எப்போதும் உள்ளது எனக் கூறியதும், அவனது பரிசில் ஒரு பொழுதும் பொய்யாகாமல் கிடைக்கும் என்பதை உறுதிப் படுத்துவதாகும்.

4. ஔவையார் தனது நெஞ்சத்துடன் கூறியதாக இச் செய்யுள் அமைந்துள்ளது.

5. பயின்று, பலரொடு, செல்லினும், நீட்டினும், நீட்டாதாயினும், போல, வருந்த ஆகியவை வினையெச்சச் சொற்கள். போல – உவம உருபு; பெறுஉம் , வைத்த, மாந்த ஆகியவை பெயரெச்சச் சொற்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. திருக்குறள்

தமிழிலுள்ள நீதி நூல்களுள் உலகப் புகழ் வாய்ந்த ஒப்பற்ற நூலாக விளங்குவது திருக்குறளாகும். சங்கம் மருவிய கால முற்பகுதியில் எழுந்ததாகக் கருதப்படும் இந்நூலில் கூறப் படாத கருத்துக்களே இல்லை எனலாம். கால, தேச வர்த்த மானங்களைக் கடந்து எந்நாட்ட வர்க்கும், எச்சமயத்தார்க்கும் பொதுவான கருத்துக்களைத் திருக்குறள் தந்துள்ளது. தமிழில் இந்நூலின் கருத்துக்களை எடுத் தாளாத அறிஞர்களும், புலவர் களும் மிகக் குறைவு. அதனைப் போற்றாத தமிழ்ப்புலவரும் இல்லை. சர்வதேச அமைப்பான ஐக்கியநாடுகள் தாபனத்தின் "யுனெஸ்கோ" நிறுவனம் திருக்குறளை உலகப் பொதுநூலாக அங்கீகரித்துள்ளது. இத்தகைய சிறப்பமைந்த தமிழ் நூலினைத் திருவள்ளுவர் ஆக்கியளித்துள்ளார். தமிழகத்தின் திருமயிலாப்பூரில் வாழ்ந்தவர் அவர். நெசவாளர் குடும்பத்தினர். அவரின் படிசொற்றவறாத பத்தினி வாசுகியம்மையார். பெற்றோர் ஆதியும் பகவனும். இவ்வாறான திருவள்ளுவரின் வாழ்க்கை பற்றிய செய்திகள் கர்ணபரம்பரையாக வழங்கி வருகின்றன. "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு; எனப் பாரதியாரும் வள்ளுவரைப் போற்றியுள்ளார். "திருவள்ளுவமாலை" என்னும் நூலில் 53 புலவர்கள் திருவள்ளுவரையும், திருக்குறளையும் போற்றியுள்ளனர்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறளும் ஒன்று. இதனை முப்பானூல், உத்தரவேதம், தெய்வநூல், திருவள்ளுவர், பொய்யா மொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை என அழைப்பர். தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிமேலழகர், பருதி, திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காளிங்கர் ஆகிய பதின்மர் இந்நூலுக்கு உரை கண்டுள்ள போதிலும், நால்வர் உரைகள் மாத்திரமே இன்று கிடைப்பனவாயுள்ளன. திருக்குறள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைகளிலெல்லாம் பரிமேலழகருரையே தலைசிறந்ததென்பர். தற்காலத்தில் திருக்குறளுக்கான உரைகள் பல்வேறு அறிஞர் களாலும் எழுதப்பட்டுள்ளன.

திருக்குறள் ஏழு சீர்களைக் கொண்ட ஒன்றேமுக்கால் அடியினாலான குறள்வெண்பாவினால் ஆக்கப்பட்டதாகும். அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் ஆகிய முப்பெரும் பிரிவுகளையுடையது. 133 அதிகாரங்களையும், பத்துப் பத்துப் பாக்களாக 1330 குறட்பாக்களையும் கொண்டது. இந்நூல் முழுவதற்கும் முறையே கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் ஆகிய அதிகாரங்கள் நான்கும் பாயிரமாக விளங்குகின்றன. 38 அதிகாரங்களில் பாயிரம்(04), இல்லறவியல்(20), துறவறவியல்(13), ஊழியல்(01) ஆகிய பிரிவு களையுள்ளடக்கி அறத்துப்பால் அமைந்துள்ளது. அதே போன்று அரசியல்(25), அங்கவியல்(32), ஒழிபியல்(13) ஆகிய பகுதிகளைக் கொண்டதாக 70 அதிகாரங்களில் பொருட்பால் விளங்குகிறது. காமத்துப்பாலானது களவியல்(07), கற்பியல்(18) ஆகிய 25 அதிகாரங்களைக்கொண்டதாகும்.

திருக்குறள் ஒரு மரத்தின் இருகிளைகள் போன்று மனிதன் செல்ல வேண்டிய நன்மை தரும் வழியையும், செல்லக்கூடாத தீமைதரும் வழியையும் எடுத்தியம்புகிறது. அன்பே பண்பாகவும், அறமே பயனாகவும் திகழ்வது இல்லறமென்றும், அதற்கு அன்புடைமை, விருந்தோம்பல், ஒப்புரவறிதல், ஈகை போன்றவை சிறந்த அறங்களென்றும் கூறுகிறது. அருளே பண்பாகவும் வீடுபேறே பயனாகவும் விளங்கும் துறவறத்துக்கு அருளுடைமை, மெய்யுணர்வு, அவாவின்மை, தவம், துறவு முதலான பண்புகள் இன்றியமையாதன என்கிறது. அத்துடன் ஊழின் பெருவலிமை யையும் காட்டுகிறது. பொருட்பாலின் அரசியல், அமைச்சியல், அரணியல், கூழியல், படையியல், நட்பியல், குடியியல் ஆகிய ஏழு பகுதிகளிலும் அரசனுக்கு இருக்கவேண்டிய பண்புகள், அவன் ஆற்ற வேண்டிய கடமைகள் என்பவற்றையும், அவனுக்குரிய அங்கங்கள் ஆறினதும் இயல்புகள், கடமைகள், பண்புகள் ஆகியவற்றையும் கூறியுள்ளது. மேலும் ஒழிபியலில் "குடிமை" தொடங்கிக் "கயமை" வரையுள்ள 13 அதிகாரங்களில் எக்காலமும் பொருந்தக்கூடிய வாழ்வியல் உண்மைகள் கூறப்பட்டுள்ளன. தமிழர் வாழ்வியலை களவு, கற்பு என இருபகுதிகளாக வகுத்து, கற்பனைச் சிறப்போடும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை நயத்தோடும், நாட கப்பண்போடும், உணர்ச்சிச் செறிவோடும் பாடிய குறட்பாக்கள் காமத்துப் பாலுக்குரியவை. திருக்குறள் "அ"கரத்தில் தொடங்கி "ன" கரத்தில் முடிகிறது ("அகரமுதல", "கூடிமுயங்கப்பெறின்"). இந்நூலினை அற இலக்கியமாக, அறிவு இலக்கியமாக, உணர்ச்சி இலக்கியமாகக் கருதமுடிகிறது. உலகிலுள்ள மொழிகளுள் பொருளுக்கும் இலக்கணங்கூறிய பெருமை கொண்ட மொழியாகத் தமிழை அணி செய்த திருக்குறள் நூல் தமிழர்களின் அழியாத சொத்தாகும். இது முப்பதுக்கு மேற்பட்ட மொழி பெயர்ப்புகளைக் கண்டுள்ளது. மேலும் ஒரே மொழியில் பலர் மொழிபெயர்ப்புகளையும் செய்துள்ளனர்.

நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புவலர், நான் முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர் முதலான பல பெயர்களால் திருவள்ளுவர் அழைக்கப்பட்டுள்ளார். இதனாற் றான் "வள்ளுவர் தந்த திருமறையைத் தமிழ் மாதின் இனிய உயிர்நிலையை, உள்ளந் தெளிவுறப் போற்றுவமே, நெஞ்சில் உத்தமராகி நின்றொழுகுவமே" என வியந்து பாராட்டியுள்ளார் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள்.

பொருட்பால் - அரசியல்

திருக்குறளின் இரண்டாவது பிரிவாகப் பொருட்பால் அமைந்துள்ளது. அது 70 அதிகாரங்களைக் கொண்டும் அரசியல், அங்கவியல், ஒழிபியல் ஆகிய மூன்று பகுதிகளாகவும் காணப் படுகிறது. இதில் முற்பகுதியான அரசியலானது, 25 அதிகாரங்களை உடையது. அவற்றுள் முதலில் இடம்பெறும் இறைமாட்சி, கல்வி, கல்லாமை, கேள்வி ஆகியவற்றையடுத்ததாக ஐந்தாவது அதிகார மாகிய **அறிவுடைமை** முதல் **வலியறிதல்** ஈறாக ஆறு அதிகாரங்கள் இங்கு தரப்பட்டுள்ளன. ஓர் அரசனிடம் இருக்க வேண்டிய அறிவுடைமை, குற்றங்கடிதல், பெரியோரைத் துணைக்கோடல், சிற்றினஞ்சேராமை, தெரிந்து செயல்வகை, வலியறிதல் ஆகிய பண்புகள் இங்கு அதிகார ரீதியாக எடுத்து விளக்கப்பட்டுள்ளன. இவற்றினைக் கடைப்பிடிக்கும் அரசன், குறையணுகாது வாழ்வா னென்றும், இந்தப் பண்புகளை விலக்கி நடப்போன் பெருங் கேட்டினால் அழிந்து விடுவானென்றும் திருக்குறள் உரைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அறிவுடைமை

(கல்வி, கேள்விகளினாலான அறிவோடு, உண்மையறிவு உடையவனாதல். இதனை உணர்த்தவே கல்வி, கேள்வி ஆகிய அதிகாரங்களை அடுத்ததாக இவ்வதிகாரம் அமைந்துள்ளது).

1. அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்.

சொற்பொருள்:

அறிவு அற்றம் காக்கும் கருவி - அரசர்க்கு அறிவென்பது அழிவு வராமல் காக்கும் கருவியாகும்; செறுவார்க்கும் உள்ளளிக்கல் ஆகா அரண் - அதுவுமன்றி, பகைவற்கு அளிக்க முடியாத உள்ளரணுமாகும்.

பொழிப்பு:

அரசருக்கு அறிவென்பது அழிவு வராமற் காக்கும் கருவி யாகும். அதுவுமன்றிப் பகைவற்கு அழிக்க முடியாத உள்ளரணு மாகும்.

விளக்கம்:

காத்தல் - முன்னரே அறிந்து நீக்குதல்; உள்ளரண் - உள்ளதாகிய பாதுகாவல்; உட்புகுந்து அழிக்கலாகாத அரணாகும். இக் குறளில் அறிவின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. காக்கும் - பாதுகாக்கும்; கருவி - சாதனம்; செறுவார் - பகைவர், எதிரிகள்; அற்றம் - முடிவு, இறுதி, அழிவு; அரண் - பாதுகாவல்.

2. சென்ற இடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு.

சொற்பொருள்:

சென்ற இடத்தால் செலவிடா - மனத்தை, அது சென்ற புலத்தின்கண் செல்ல விடாது; தீது ஒரிஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு - அப்புலத்தின் நன்மை, தீமைகளை ஆராய்ந்து, தீயதனை நீக்கி, நல்லதன் வழி செலுத்துவது அறிவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு :

மனத்தை, அது சென்ற இடத்தின்கண் செல்ல விடாது, தீயவற்றை நீக்கி, நல்லவற்றின் வழியே செலுத்துவது அறிவாகும்.

விளக்கம் :

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனப் புலன்கள் ஐந்தானாலும், ஒரு காலத்தில் ஒன்றின் மீதே மனம் செல்லு மாகையால் "இடத்தால்" எனப்பட்டது. விடாது என்பது கடைக் குறையினால் "விடா" ஆகியது. அறிவு உயிரின் குணமாகையால் புலனறிந்து செலுத்துவது அறிவு என்கிறார். இடத்தால் - புலனால்; செலவிடாது - செல்ல விடாது; தீது - தீமை; ஓரீஇ - விலக்கி, நீக்கி; நன்றின்பால் - நல்லதனிடத்தே; உய்ப்பது - செலுத்துவது.

3. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு.

சொற்பொருள் :

எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் - எந்தப் பொருளை எவர் சொல்லக் கேட்பினும்; அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு - அப்பொருளின் மெய்யான பயனைக் காணவல்லது அறிவாகும்.

பொழிப்பு :

எந்தப் பொருளை எவர் சொல்லக் கேட்டாலும், அந்தப் பொருளின் உண்மையான பயனைக் காணவல்லது அறிவாகும்.

விளக்கம் :

சத்வ, இராஜத, தாமச குணங்கள் மூன்றும் மாறி மாறி வருதல் எல்லோர்க்கும் பொதுவான உண்மையாகும். இதனால் இழிந்த பொருள் உயர்ந்தோர் வாயிலும், உயர்ந்த பொருள் இழிந்தோர் வாயிலும் வரக்கூடும். அதேபோன்று பயனுள்ள உறுதிப் பொருள் பகைவர் வாயினும், பயனற்ற கெடுதிப் பொருள் நண்பர் வாயினும் கேட்கப் படலாம். இதனையே "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்" என்றார். மெய்ப்பொருள் என்பது இயல்பு நோக்கிக் கொள்ளாது, பயன் நோக்கிக் கொள்ளுதலாகும். யார் யார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய் - எவரதும் வாயினாற் சொல்கின்ற; மெய் - நிலைபெறல், உண்மை.

4. **எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய் நுண்பொருள் காண்ப தறிவு.**

சொற்பொருள்:

தான் எண் பொருளளவாகச் செலச் சொல்லி - தான், சொல்லுஞ் சொற்களை அரிய பொருளாயினும் கேட்பவருக்கு எளிய பொருளாகுமாறு மனங் கொளச் சொல்லி; பிறர் வாய் நுண்பொருள் காண்பது அறிவு - பிறர் சொல்லும் நுட்பமான பொருள் அரிதாயினும், அதனை விளங்கிக் காணவல்லது அறிவாகும்.

பொழிப்பு:

தான், சொல்லும் சொற்களை, அரிய பொருளாயினும் கேட்பவருக்கு எளிய பொருளாகுமாறு மனங் கொளச் சொல்லி, பிறர் சொல்லும் நுட்பமான பொருள் அரிதாயினும் அதனைக் காண வல்லது அறிவாகும்.

விளக்கம்:

அறிவுடைய தொழில், இக் குறளில் அறிவின்மையை ஏற்றிக் கூறப்பட்டுள்ளது. சொல்வனவற்றை வழுவின்றி இனிது விளங்குமாறு சொல்லுக; கேட்பவற்றை வழுவாயினும் பயனைக் கண்டுணர்க என்று கூறப்பட்டுள்ளது. எண்பொருள் - எளிய பொருள்; செலச் சொல்லி - மனங் கொளச் சொல்லி, மனதில் விளங்குமாறு சொல்லி; பிறர்வாய் - பிறர் சொல்லும் சொற்கள்; நுண்பொருள் - நுட்பமான பொருள்.

5. **உலகந் தழீஇய தொட்பம் மலர்தலுங் கூம்பலு மில்ல தறிவு.**

சொற்பொருள்:

உலகம் தழீ இயது ஒட்பம் - உயர்ந்த அறிவுடைய உலகத்தவரை நட்பாக்கிக் கொள்வது ஒருவனுடைய சிறந்த அறிவாகும்; மலர்தலும் கூம்பலும் இல்லது அறிவு - அத்தகைய நட்பு முதலில் மலர்தலும், பின்பு கூம்புதலும் இன்றி ஒரே நிலையில் விளங்கச் செய்வது அறிவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு :

உயர்ந்த அறிவுடைய உலகத்தவரை நட்பாக்கிக் கொள்வது ஒருவனது சிறந்த அறிவாகும். அத்தகைய நட்பு முதலில் மலர்தலும் பின்னர் கூம்புதலும் இன்றி ஒரே நிலையில் இருக்கச் செய்வதும் அறிவாகும்.

விளக்கம் :

உலகம் என்பது - இங்கு உயர்ந்தோரைக் குறித்தது; தழீஇயது - தழுவிக் கொண்டது, நட்பாகக் கொண்டது; ஒட்பம் - நுண்ணறிவு; மலர்தல் - மகிழ்ச்சி தரல்; கூம்புதல் - மகிழ்ச்சி குறைந்து வெறுப்புக் கூடுதல்; இல்லது - இல்லாமை, இல்லாதொழிதல்.

6. எவ்வ துறைவ துலக முலகத்தேர்
டவ்வ துறைவ தறிவு.

சொற்பொருள் :

உலகம் எவ்வது உறைவது - உலகம் எவ்வாறு நடைபெறு கின்றதோ; உலகத்தோடு அவ்வது உறைவது அறிவு - அவ் உலகத்தோடு ஒட்டித் தானும் அதன் வழியே ஒழுகி வாழ்வது அரசனுக்கு அறிவாகும்.

பொழிப்பு :

உலகம் எவ்வாறு நடைபெறுகிறதோ, அதனையொட்டி, அதன்படி ஒழுகுவது அரசனுக்கு அறிவாகும்.

விளக்கம் :

உலகத்தை ஆளுவதால், தான் நினைத்தபடி நடந்து பழி, பாவம் தேடுவதை விடுத்து, உலக நடப்பதறிந்து அதற்கேற்ப நடப்பதே ஓர் அரசனுக்குரிய அறிவாக அமையும் எனப்பட்டது. இந்தக் குறள் தொடங்கி ஐந்து குறள்களும் அறிவின் இலக்கணத் தையே கூறுகின்றன. எவ்வது - எவ்வாறு; உறைவது - நடப்பது, ஒழுகுவது; அவ்வது - அதனோடு ஒட்டி, அதன் வழியில்; உலகம் - உலக மாந்தர்.

7. அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அ:தறி கல்லா தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொருள் :

அறிவுடையார் ஆவது அறிவார் - சிறந்த அறிவுடையவர்கள் எதிர்காலத்தில் நடக்கவிருப்பதை அறிந்திடும் தூரப் பார்வையைக் கொண்டிருப்பர்; அறிவிலார் அஃது அறிகல்லாதவர் - அறிவற்ற வர்கள், அதனை முன் அறிய மாட்டார்கள்.

பொழிப்பு :

சிறந்த அறிவுடையவர்கள், எதிர்காலத்தில் நிகழவிருப்பதை தூரதிருஷ்டியால் அறிந்து கொண்டிருப்பார். அறிவற்றவர்கள் அதனை முன் அறிய மாட்டார்.

விளக்கம் :

அறிவுடையோர் தூர நோக்கு உடையவர்கள் என்பது இக் குறட் பாடலின் மையக் கருத்தாகும். முன்னறிதல் என்பது முன்னே எண்ணி அறிதலாகும். "அஃதறி கல்லாதவர்" என்பது தூரப் பார்வை இல்லாதார். வந்தால் அறிவோம் என்றிருப்போர். ஆவது - எதிர்காலத்தில் நிகழ்வது. அஃது - எதிர்கால நிகழ்வை; அறி கல்லாதவர் - அறிய மாட்டாதவர்.

8. **அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ தஞ்சல் அறிவார் தொழில்.**

சொற்பொருள் :

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை - அஞ்ச வேண்டியதற்கு அஞ்சாமலிருத்தல் பேதைமை ஆகும்; அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில் - அஞ்சத்தக்கது இதுவென அறிந்து அஞ்சுதல் அறிவுடை யார் தொழிலாகும்.

பொழிப்பு :

அஞ்ச வேண்டியதற்கு அஞ்சாமலிருத்தல் பேதைமை. அஞ்சத்தக்கது இது என அறிந்து அஞ்சுதல் அறிவுடையார் செயலாகும்.

விளக்கம் :

அஞ்சுதல் - பயப்படுதல்; அஞ்சாமை - பயப்படாமை; அதாவது எண்ணாது அல்லது கருதாது நிற்றல். அஞ்சுதல் - கருதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது எண்ணித் தவிர்த்தல்; இதுவே அறிவார் தொழில் எனப்பட்டது; இறைமாட்சிக்குரியதும் இதுவே ஆகும். பேதைமை – அறியாமை.

9. **எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை**
அதிர வருவதோர் நோய.

சொற்பொருள்:

எதிரதாகக் காக்கும் அறிவினார்க்கு – எதிர்காலத்தில் வரக் கூடிய தீங்கினை முன்னறிந்து, அதிலிருந்தும் தம்மைக் காக்க வல்ல அறிவினை உடையவர்க்கு; அதிர வருவது ஓர் நோயில்லை – அவர் நடுங்கும் வண்ணம் உண்டாகக் கூடிய துன்பம் ஒன்றுமில்லை.

பொழிப்பு:

எதிர்காலத்தில் வரக்கூடிய தீமையை முன்னறிந்து அதிலிருந்து தம்மைக் காக்கவல்ல அறிவுடையோர்க்கு, அவர் நடுங்கும் வண்ணம் ஏற்படக்கூடிய துன்பம் ஒன்றுமில்லை.

விளக்கம்:

"நோய்" எனக் கூறியமையால் அதனைக் காத்துக் கொள்ளலாம் அல்லது காத்துக் கொள்ளாமலும் விடலாம் என்றாகிறது. அறிவுடையார் காத்துக் கொள்வர்; அறிவற்றோர் காத்துக் கொள்ளார் என்க. காரணம் அறிந்து காத்தவர் துன்பமுறார் எனக் கொள்க. எதிரதா – எதிர் காலத்தில் நிகழும்; காக்கும் – காத்துக் கொள்ளும்; அதிர – நடுங்க; நோய் – துன்பம்;

10. **அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்**
என்னுடைய ரேனு மிலர்.

சொற்பொருள்:

அறிவுடையார் எல்லாம் உடையார் – அறிவுடையவர்கள், தம் அறிவினால் பிறிதொன்றும் இலராயினும் எல்லாம் உடையவராகத் தம்மை நிறைவு செய்து கொள்வர்; அறிவிலார் என் உடையரேனும் இலர் – அறிவிலாதார், எல்லாம் உடையதாய் இருந்தும் ஒன்றும் இல்லாதவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு :

அறிவுடையார் தம் அறிவினால் பிறிதொன்றும் இலராயினும் எல்லாம் உடையவராய்த் தம்மை நிறைவு செய்து கொள்வர். அறிவிலாதார் எல்லாம் உடையவராயிருந்தும் ஒன்றும் இல்லாதவ ராவார்.

விளக்கம் :

செல்வங்கள் எல்லாம் அறிவினால் உண்டாக்கப் படுவதும், காத்தலும் ஆகையால் அதற்குக் காரணமான அறிவுடையோரை "எல்லாம் உடையார்" என்றார். அறிவில்லாதவரிடம் செல்வங்கள் அமைந்து கிடந்தாலும் அவற்றைக் காக்கும் அறிவு இல்லாமையால் "என்னுடையரேனுமிலர்" என்றார். என்னும் - என்னு என்று உம்மை விகாரத்தால் தொக்கது.

1. அதிகாரப் பொருட் சுருக்கம்

அறிவு, அரசர்க்கு இறுதி வராமல் காப்பதுடன், பகைவரால் அழிக்க முடியாத உள்ளரணாகவும் விளங்கும் கருவியாகும். மனத்தினைப் போன போக்கில் செல்ல விடாது நன்மையின்பால் செலுத்துவதும் அதுவேயாகும். யாதொரு பொருளை எவர் சொல்லக் கேட்பினும் அதன் உண்மைப்பயனைக் காட்ட வல்லதும் அறிவாகும். தான் சொல்லும் சொற்களைப் பிறர் மனம் கொள்ளுமாறு தெளிவாகச் சொல்லி பிறர் கூறும் அரிய சொற் பொருள்களையும் நுண்மையாக உணர்ந்து கொள்வது அறிவு. உலகத்தை நட்பாக்குவது ஒட்பம்; அந்த நுண் அறிவு மலர்தலும் கூம்புதலும் இல்லாத ஒரு நிலையுடையது. உலகம் எவ்வாறு நடந்து கொள்கின்றதோ, அதனோடு சேர்ந்து ஒழுகுவதும் அறிவாகும். அறிவுடையார் வரப்போவதை முன்னுக்கு அறிய வல்லவர். அறிவிலார் அதனை முன்னறிய மாட்டார். அச்சப்பட வேண்டியதற்கு அச்சப்படாமலிருப்பது பேதைமையாகும். அச்சப்பட வேண்டியதற்கு அஞ்சுவது அறிவுடையார் செய்கையாகும். வரக் கூடியதை முன்னறிந்து காக்கவல்ல அறிவினார்க்கு அவர்கள் நடுங்கக் கூடிய துன்பம் எதுவு மில்லை பிறிதொன்றும் இலராயினும் அறிவுடை யோர்க்கு எல்லாம் உண்டு. அறிவிலாரோ எல்லாமிருந்தும் எதுவும் இல்லாதவராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. குற்றங்கடிதல்

(அதாவது காமம், வெகுளி, கடும் பற்றுள்ளம், மானம், உவகை, மதம் எனப்பட்ட ஆறு குற்றங்களையும் ஓர் அரசன் தன்னிடத்தில் நிகழாதவாறு கடிந்து கொள்ளல் என்பதாகும். இவை குற்றமென்று அறிதல், கடிதல் ஆகியவை அறிவுடையோரிடத்திலேயே காணப்படும். ஆகையால் அறிவுடைமை என்னும் அதிகாரத்தை அடுத்து வைக்கப்பட்டுள்ளது. வடமொழியில் குற்றங் கடிதலை பகை வர்க்கம் என்பர். கடிதல் - அழித்தல், நீக்குதல்)

1. **செருக்குஞ் சினமுஞ் சிறுமையும் இல்லார்**
பெருக்கம் பெருமித நீர்த்து.

சொற்பொருள்:

செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார் பெருக்கம் - அகந்தை, கோபம், காமம் ஆகிய சிறுமை ஆகிய குற்றங்கள் இல்லாத அரசருடைய செல்வம்; பெருமித நீர்த்து - மேன்மை யுடையது.

பொழிப்பு:

அகந்தை, கோபம், காமம் ஆகிய குற்றங்களை இல்லாத வரின் செல்வம் மேம்பாடுடையது.

விளக்கம்:

செல்வக் களிப்பினால் அகந்தை உண்டாகின்றது. அளவில் லாத காமம், சிறியோர் செய்கையாதலால் (இழிந்தோர்) சிறுமை எனப்பட்டது. இவை நீதியில்லாதவை. இவற்றைக் கடிந்தவர்களின் (நீக்கியவர்களின்) செல்வம், நீதியின் பாற்பட்டவை; மதிப்புடை யவை. ஆதலால் ஓர் அரசனுக்கு வேண்டியவையும் இவைதான் எனக் கூறப்பட்டுள்ளது. செருக்கு - அகந்தை, கர்வம், ஆணவம்; சினம் - கோபம்; சிறுமை - காமம்; பெருக்கம் - செல்வப் பெருக்கம்; பெருமிதம் - மேம்பாடு, மேன்மை, பெருமை, சிறப்பு; நீர்த்து - உடையது, விளங்குவது, இயல்பானது, தன்மையானது.

2. **இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா**
உவகையும் ஏதம் இறைக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொருள்:

இவறலும் – வேண்டும்போது பொருள் கொடாத உலோபத் தன்மையும்; மாண்பு இறந்த மானமும் – நன்மையில் நீங்கிய பெருமை இல்லாத மான உணர்வும்; மாணா உவகையும் – சிறப்பில்லாத மகிழ்ச்சியும்; இறைக்கு ஏதம் – அரசனுக்குக் குற்றங்களாகும்.

பொழிப்பு:

உலோபத் தன்மையும், மாட்சிமை இல்லாத மான உணர்வும், சிறப்பற்ற மகிழ்ச்சியும் அரசனுக்குக் குற்றங்களாகும்.

விளக்கம்:

உலோபம், மாண்பற்ற மானம், மட்டற்ற மகிழ்ச்சி ஆகியவை அரசனுக்குக் குற்றங்கள் ஆகுமெனக் குறள் உரைக்கின்றது. "மாண்பிறந்த மானம்" என்பதனால் பெரியோரை வணங்காமை, செய்யக் கூடாததைச் செய்து முடித்தல் முதலியவற்றைக் கருதியது என்க. "மாணா உவகை" என்பது காமம் தொடர்பான பழி கண்ணோட்டம் (அளவிறந்த உவகை) முதலியவற்றைக் கருதிய தாகும். இவறல் – உலோபத் தன்மை; ஏதம் – குற்றம்; இறை – அரசன்.

3. **தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக் கொள்வர் பழிநாணு வார்.**

சொற்பொருள்:

பழிநாணுவார் – பழிக்கு அஞ்சுவோர்; தினைத் துணையாம் குற்றம் வரினும் பனைத் துணையாகக் கொள்வர் – தமக்கு ஏற்படக் கூடிய தினையளவு குற்றத்தையும் அதனைப் பனையளவாகக் கொள்வர்.

பொழிப்பு:

பழிக்கு அஞ்சுவோர், தமக்கு ஏற்படக் கூடிய தினை அளவு குற்றத்தையும் பனை அளவாகக் கொள்வர்.

விளக்கம்:

பழிக்குப் பயப்படுவோர் தமக்குண்டான சிறிய குற்றத்தையும் பெரிய குற்றமாகக் கருதிக் கொள்வர் என்பது இக் குறளால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலப்படுகிறது. அத்தகையவர்கள் மேலான அறிவுடையவர்கள். மறுதலையாக அறிவில்லாதார் பெரிய குற்றத்தையும் சிறிதாகக் கொள்வரெனலாம். எனவே ஓர் அரசன் அறிவுடையவனாகப் பழிக்கு அஞ்ச வேண்டும் எனப்பட்டது. தினைத் துணை - தினையளவு; பனைத் துணை - பனையளவு; நாணுவார் - அஞ்சுவார், பயப்படுவார்; பழி -குற்றம்.

4. குற்றமே காக்க பொருளாகக் குற்றமே அற்றந் தரூஉம் பகை.

சொற்பொருள் :

அற்றம் தரூஉம் பகை குற்றமே - ஒருவனுக்கு அழிவைத் தரும் பகை குற்றமே ஆகும்; குற்றமே பொருளாகக் காக்க -ஆதலால் அக் குற்றம், தன்னிடத்தில் வராமல், தன்னைக் காப்பதையே குறிக் கோளாய்க் கொள்ள வேண்டும்.

பொழிப்பு :

ஒருவனுக்கு அழிவைத் தரும் பகை குற்றமே ஆதலால் அது தன்னிடம் ஏற்படாமல் தன்னைக் காப்பதையே குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

விளக்கம் :

ஒருவனுக்குப் பகைவர் இல்லாதவிடத்தும் குற்றமெனக் கருதப்படுபவைகளே பகையாக விளங்கும். ஆதலால் அக் குற்றங்கள் தம்மிடம் வந்து சேராதபடி காத்தலே அரசருக்குரியது என்பது இக் குறட்பாவின் கருத்தாகும். "குற்றமே காக்க" என்பது நற்பண்பினால் தீமை வராது காக்க என்பதாகும். அற்றம் - அழிவு, இறுதி; தரூஉம் - தரும்; உயிரளபெடையாக வந்துள்ளது. "பொருளாகக் காக்க" என்பதனால் குற்றம் அணுகாது பயனுள்ளதாகக் காக்க என உணர்த்தப்பட்டுள்ளது.

5. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்.

சொற்பொருள் :

வருமுன்னர் காவாதான் வாழ்க்கை - குற்றம் உண்டாவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பே, அது உண்டாகாதவாறு காத்துக் கொள்ளாத அரசனின் வாழ்க்கை; எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும் - நெருப்பின் எரிமுகத்து முன் வைத்த வைக்கோல் போல அழிந்து விடும்.

பொழிப்பு :

குற்றம் உண்டாவதற்கு முன்பே, அது உண்டாகாதவாறு காத்துக் கொள்ளாத அரசனின் வாழ்க்கை, நெருப்பின் எரிமுகத்து வைத்த வைக்கோல் போன்று அழிந்து விடும்.

விளக்கம் :

குற்றம் உண்டாகமுன் காத்தல் வேண்டும்; அன்றேல் அழிவு தான் என்பதை உணர்த்தும் குறள் இதுவாகும். "வரும்" என்னும் பெயரெச்சமானது, "முன்னர்" எனும் காலப் பெயர் கொண்டுள்ளது. இதனால் காக்க வேண்டிய காலம் உணர்த்தப்பட்டுள்ளது. குற்றம் சிறியதாயினும் அதனால் பெருஞ் செல்வம் அழிந்து விடும் என்பது உவமையாற் கூறப்பட்டுள்ளது. எரிமுன்னர் வைத்தூறு - உவமானம்; வருமுன்னர் காவாதான் வாழ்க்கை - உவமேயம்; அழிந்து விடல் - பொதுவியல்பு. காவா - பாதுகாக்காதாதல்; எரி - தீ, நெருப்பு; வைத்தூறு - வைத்த வைக்கோல்; தூறு - குவியல்.

6. தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின் என்குற்ற மாகும் இறைக்கு.

சொற்பொருள் :

தன் குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காண்கிற்பின் - முதலின் தன் குற்றத்தினைப் போக்கிய பின், பிறர் குற்றத்தினைக் காண முற்படுபவனாகில்; இறைக்கு ஆகும் குற்றம் என் - அரசனுக்கு உண்டாகத் தக்க குற்றம் யாது? ஒன்றுமில்லை.

பொழிப்பு :

முதலில் தன் குற்றத்தினைப் போக்கிய பின் பிறர் குற்றத் தினைக் காண முற்படும் அரசனுக்கு உண்டாகத்தக்க குற்றம் யாது? ஒன்றுமில்லை.

விளக்கம் :

தன் குற்றத்தை நீக்கிய அரசனே நீதி செய்வதற்குரியவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை இக் குறள் எடுத்துக் காட்டுகிறது. "என் குற்றமாகும் இறைக்கு" என்பதன் மூலம் எவ்வித குற்றமும் ஏற்படாது என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது. இறை - அரசன்; காண்கிற்பின் - காணுவானாயின், காண முற்படின்.

7. செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும்.

சொற்பொருள்:

செயற்பால செய்யாது இவறியான் செல்வம் - பொருளினால் தனக்குச் செய்ய வேண்டியவற்றைச் செய்யாது, சிக்கனம் செய்து சேர்த்து வைத்தவனுடைய செல்வமானது; உயற்பால தன்றிக் கெடும் - பின்னர் உய்வதற்கு இடமின்றியே அழிந்து போகும்.

பொழிப்பு:

பொருளால் தனக்குச் செய்யவேண்டியதைச் செய்யாமல் கஞ்சத் தனத்தோடு சேர்த்து வைத்தவனுடைய செல்வம், பின்னர் உய்வதற்கு இடமின்றி அழிந்து போகும்.

விளக்கம்:

செயற்பாலதாவன : அறம், பொருள், இன்பம் சார்ந்தவை. பொருளாற் பொருள் செய்தலாவது பெருக்குதல். அறம் செய்யாமையாலும், பொருளைப் பெருக்காமையாலும் "உயற்பாலதன்றி" என்றும், இன்பப் பயன் கொள்ளாமையால் "கெடும்" என்றும் கூறப்பட்டது. செயற்பால - செய்யக் கூடியவை; இவறியான் - உலோபத் தன்மை உடையவன்; உயற்பால - உய்வடையக் கூடிய; கெடும் - கெட்டு விடும், அழியும்.

8. பற்றுள்ள மென்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன் றன்று.

சொற்பொருள்:

பற்றுள்ளமென்னும் இவறன்மை - பொருளிலே பற்று வைத்துப் பிறருக்கு வழங்காத உலோபத் தன்மை; எற்றுள்ளும் எண்ணப்படுவது ஒன்று அன்று - எக்குற்றத்துள்ளும் அடக்க முடியாது, தனித்த இயல்புடைய ஒரு குற்றமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு :

பொருளிலே பற்றுக் கொண்டு எவர்க்கும் ஈயாத உலோபத் தன்மை, எக் குற்றத்துள்ளும் அடங்காத தனிவியல்புடைய ஒரு குற்றமாகும்.

விளக்கம் :

"எவற்றுள்ளும்" என்பது "எற்றுள்ளும்" என இடைக் குறைந்து நின்றது. எல்லாக் குற்றங்களிலும் அடக்க முடியாத, தனித் தன்மை வாய்ந்ததுமான குற்றம் இவறன்மை எனப்பட்டது. இதிலிருந்து அதன் தீமையை உணர முடிகிறது. பற்று - விருப்பம்; இவறன்மை - உலோபத்தனம்; கஞ்சத்தனம்; எற்றுள்ளும் - எவற்றுள்ளும்; எண்ணப்படுவது - கருதப்படுவது, சேர்க்கப்படுவது; அன்று - அல்ல.

9. வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க நன்றி பயவா வினை.

சொற்பொருள் :

எஞ்ஞான்றும் வியவற்க தன்னை - எவ்வளவு தான் உயர்ந்த நிலையில் இருந்தாலும் செருக்கினால் எப்பொழுதும் தற் புகழ்ச்சியைக் கொள்ள வேண்டாம்; நன்றி பயவா வினை நயவற்க - தனக்கு நன்மை தராத செயலினைச் செய்ய விரும்ப வேண்டாம்.

பொழிப்பு :

தம்மைத் தாம் புகழ்கின்ற தற்புகழ்ச்சியைக் கொள்ள வேண்டாம்; தனக்கு நன்மை தராத செயலையும் செய்ய விரும்ப வேண்டாம்.

விளக்கம் :

தன்னைத் தானே புகழும் தற்புகழ்ச்சி செருக்கினால் ஏற்படு வது, அது அறம், பொருள் வழி நில்லாதாகையால் "எஞ்ஞான்றும் வியவற்க" எனப்பட்டது. அதேபோல் அறம், பொருள், இன்பங்கள் சேராத செயல்களால் பழியும் பாவமும் ஏற்படும். அதனால் அவற்றை "நயவற்க" எனப்பட்டது. வியவற்க - வியக்க வேண்டாம், புகழ வேண்டாம்; நயவற்க - விரும்ப வேண்டாம்; எஞ்ஞான்றும் என்பொழுதும்; நன்றி பயவா - நன்மை தராத.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. **காதல் காதல் அறியாமை உய்க்கிற்பின்**
ஏதில ஏதிலார் நூல்.

சொற்பொருள் :

காதல் காதல் அறியாமை உய்க்கிற்பின் - தனது விருப்பத் தினைப் பிறர் அறியாதவாறு அனுபவிக்க வல்லவனாயின்; ஏதிலார் நூல் ஏதில - அவனைப் பகைவர் வஞ்சித்துச் செய்யும் சூழ்ச்சிகள், அவனிடம் பலிக்க மாட்டா.

பொழிப்பு :

தனது விருப்பத்தைப் பிறர் அறியாதவாறு அனுபவிக்க வல்லவனாயின், அவனைப் பகைவர் வஞ்சித்துச் செய்யும் சூழ்ச்சிகள், அவனிடம் பலிக்க மாட்டா.

விளக்கம் :

"காதல் காதல்" எனக் கூறியதால் "விருப்பத்துக்குரியவை பலவும்" எனக் கருதுக. நேர் நின்று பகைக்காமல், வஞ்சகத்தால் பகைத்து அழிக்கச் சூழ்ச்சிகள் செய்வோரின் எண்ணம் பலிக்காது என்பதை "ஏதிலார் நூல் ஏதில" எனப்பட்டது. மேலும், அரசனது விருப்பத்தை அறிவாராயின், பகைவர் வஞ்சிப்பாராதலால், அவர் அறியாமலேயே அனுபவிக்க வல்லவன் என உணர்த்தப்பட்டது. உய்க்கிற்பின் - நுகர்ந்தால், அனுபவித்தால்; ஏதிலார் - பகைவர்; நூல் - வஞ்சக எண்ணம்; ஏதில - பழுதாம், பலிக்காதாம்.

2. அதிகாரப் பொருட் சுருக்கம்

அகந்தையும் கோபமும், காமமாகிய சிறுமையும் ஆகிய குற்றமற்ற அரசரின் செல்வம் மேலான தன்மையை உடையது. உலோபத்தனம், நன்மையில் நீங்கிய மானம், அளவற்ற மகிழ்ச்சி ஆகியவை அரசனுக்குரிய குற்றங்களாகும். பழிக்கு அஞ்சுபவர், தினையளவு குற்றத்தையும் பனையளவாகக் கொள்வர். தனக்கு இறுதி பயக்கும் பகை குற்றமேயாதலால், அக்குற்றம் தன்னிடம் வராமல் காக்க வேண்டும். குற்றம் ஏற்படக் கூடியதை முற்காலத்தி லேயே அறிந்து காவாதவன் வாழ்க்கை எரிமுகத்தின் முன்வைத்த வைக்கோல் போல அழிந்து விடும். தனது குற்றத்தை முதலில் நீக்கிப் பின்னர் பிறர் குற்றங்களைக் காணவல்ல அரசனுக்கு உண்டாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய குற்றம் எதுவுமில்லை. தன்னிடமுள்ள பொருளைக் கொண்டு தனக்குச் செய்ய வேண்டியதைச் செய்யாது சிக்கனம் செய்த உலோபியின் பொருட் செல்வம், உய்வதின்றி அழிந்து விடும். பொருளைத் தக்கவிடத்தில் செலவிட முடியாத பற்றுக் கொண்ட உலோபத்தன்மை, குற்றங்கள் எல்லாவற்றுள்ளும் வைத்து எண்ண முடியாத பெரிய குற்றமாகும். அரசன் தன்னைத் தானே புகழுதலும், நன்மை பயவாச் செயல்களை விரும்புவதும் கூடாது. தான் விரும்பிய பொருள்களைப் பிறர் அறியாதவாறு அனுபவிக்க வல்ல அரசனைப் பகைவர் வஞ்சிக்க நினைக்கும் எண்ணம் நிறைவேறாது கெட்டு விடும்.

3. பெரியாரைத் துணைக்கோடல்

(ஆறுவகையான குற்றங்களையும் நீக்கி (கடிந்து), காவல் சக்கரத்தைச் செலுத்துவதற்குரிய அரசன், தீய நெறி விலக்கி, நன்னெறி செலுத்தும் பேரறிவுடையோரைத் தனக்குத் துணையாகக் கொண்டிருத்தல் பற்றியது இவ் அதிகாரம். பேரறிவுடையார் என்பது அரசர்க்கும், அரச அங்கங்களுக்கும் மானுடத் தெய்வக் குற்றங்கள் வராமற் காக்கும் அமைச்சர், புரோகிதர் முதலியோராவர்).

1. அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை திறனறிந்து தேர்ந்து கொளல்

சொற்பொருள்:

அறன் அறிந்து மூத்த அறிவுடையோர் கேண்மை - அறத்தினது தன்மையை நுணுகி ஆராய்ந்தறிந்து, உணர்ந்த தன்னிலும் மூத்த அறிவுடையோரது நட்பினை; தேர்ந்து திறன் அறிந்து கொளல் - அரசன், அதன் அருமையை ஆராய்ந்து, கொள்ளுந் திறம் அறிந்து கொள்ள வேண்டும்.

பொழிப்பு:

தருமம் இதுவென அறிந்த மூத்தோரை ஆராய்ந்து, அவருடன் நட்புக் கொள்ள வேண்டும்.

விளக்கம்:

அறத்தின் நுண்மையை நூல்களாலன்றி, உய்த்துணரலாலும் அறிந்து கொள்ள முடியும். ஆதலால் "அறனறிந்து" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மூத்தல்" என்பது அறிவு, ஒழுக்கம் காலம் ஆகியவற்றால் முதிர்தலாகும். "திறனறிதல்" என்பது நன்கு மதித்தல், நிலை உயரச் செய்தல். அவரவர்க்குரிய ஆற்றலில் விளங்குதல் முதலானவை களாகும். கேண்மை - நட்பு; தேர்ந்து - ஆராய்ந்து.

2. உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும் பெற்றியார்ப் பேணிக் கொளல்.

சொற்பொருள் :

உற்ற நோய் நீக்கி - தெய்வத்தாலும், மக்களாலும் தனக்கு வந்த துன்பங்களை நீக்கக் கூடிய வழிகளை அறிந்து நீக்கி; உறாமை முற்காக்கும் பெற்றியார் - பின்னும் அத்தகைய துன்பங்கள் வராதவாறு முன்னரே அறிந்து காக்கவல்ல தன்மையினையுடை யாரை; பேணிக் கொளல் - அரசன் துணையாகக் கொள்ள வேண்டும்.

பொழிப்பு :

தனக்கு வந்த துன்பங்களை நீக்கும் வழியறிந்து நீக்கிப் பின்னரும் அத்தகைய துன்பம் ஏற்படாமல் முன்னரேயறிந்து காக்கவல்ல இயல்புடையாரை, அரசன் துணையெனக் கொள்ள வேண்டும்.

விளக்கம் :

தெய்வத்தால் வருந் துன்பங்களாவன : மழையின்மை, மழை மிகுதி, காற்று, தீ, போன்றவற்றால் வரும் பிணிகள் போன்றவை. மக்களால் வருந் துன்பங்களாவன : பகைவர், கள்வர், கற்றத்தார் முதலியோரால் வருவன. முற்காத்தல் என்பது தெய்வத்தால் வருவதைத் துர்க்குறி போன்றவற்றால் அறிந்து சாந்திகள் செய்து காத்தலாகும். மனிதர்களால் வருவதை அவர்தம் குணம், இங்கிதம், செயல் முதலியவற்றால் அறிந்து காத்தலாகும். உவப்பன : நன்கு மதித்தல் போன்றன. முற்காக்கும் தன்மையினாலும், நன்கு மதிக்கும் தன்மையினாலும் பெரியாரது இலக்கணமும், அவரைத் துணை யாகக் கொள்ள வேண்டுமென்பதும் கூறப்பட்டுள்ளது. உற்றநோய் - வருந் துன்பம்; உறாமை - வராமல்; பெற்றியார் - தன்மையுடையார்; கொளல் - கொள்ளல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியோரைப் பேணித் தமராக் கொளல்

சொற்பொருள்:

பெரியோரைப் பேணித் தமராக் கொளல் - பெரியவர்களைப் போற்றித் தமக்குச் சிறந்தவர்களாக (தம்மவர்களாக)க் கொள்ளுதல்; அரியவற்றுள் எல்லாம் அரிது - அரசர்க்கு அரிய பேறுகள் எல்லா வற்றிலும் அரியதாகும்.

பொழிப்பு:

பெரியாரைப் போற்றிப் பேணித் தமராகக் கொள்ளுதல், அரசர்க்கு அரிய பேறுகள் எல்லாவற்றிலும் அரியதாகும்.

விளக்கம்:

உலகத்திலுள்ள அனைத்தையும் அரசர்கள் பெறக் கூடுமாயினும், பெரியோரைத் துணையாகக் கொள்வதே அவை யாவிலும் பெரியதும் அரியதும் ஆகுமென்பதை இக்குறள் உணர்த்து கிறது. இதனால் பெரியோர் கேண்மை அரசனுக்குக் கட்டாயம் தேவை என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது. தமர் - தம்மவர், உறவினர்.

4. தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல் வன்மையு ளெல்லாந் தலை.

சொற்பொருள்:

தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல் - அறிவு, ஆற்றல் முதலியவற்றால் தம்மிலும் மேலானவரைத் தம்மவராகக் கொண்டு தாம் அவர் வழிநின்று ஒழுகுதல்; வன்மையுள் எல்லாம் தலை - அரசர்க்குரிய வல்லமைகள் அனைத்திலும் மேலானதாகும்.

பொழிப்பு:

அறிவு, ஆற்றல் முதலியவற்றால் தம்மிலும் மேலானவரைத் தம்மவராகக் கொண்டு தாம் அவர் வழி நின்றொழுகுதல், அரசர்க்குரிய வல்லமைகள் அனைத்திலும் தலையானதாகும்.

விளக்கம்:

பொருள், படை, அரண்களாலான வலிமையிலும் பெரியோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரைத் துணைக் கோடல் வல்லமை மிகுந்தது என்பதை இக் குறள் கூறியுள்ளது. தமரா - தமக்குரியவராய்; "தமராய்" என்பது கடைக் குறையினால் "தமரா" என வந்துள்ளது. வன்மை - வலிமை, ஆற்றல்; தலை - மேலானது, உயர்வானது; ஒழுகுதல் - பின்பற்றி நடத்தல்.

5. சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

சொற்பொருள்:

சூழ்வார் கண்ணாக ஒழுகலான் - அமைச்சரைக் கண்ணாகக் கொண்டு நடத்தலால்; மன்னவன் சூழ்வாரைச் சூழ்ந்து கொளல் - அரசன் அத்தன்மையரான அமைச்சரை ஆராய்ந்து தனக்குத் துணையாகக் கொள்ள வேண்டும்.

பொழிப்பு:

அமைச்சரைக் கண்ணாகக் கொண்டு அரசினை நடத்த வேண்டி இருப்பதால், அரசன், அத்தன்மையான அமைச்சரை ஆராய்ந்து, தனக்குத் துணையாகக் கொள்ள வேண்டும்.

விளக்கம்:

அரசன் தானே எதையும் நடத்த வல்லவன் ஆயினும், பல்வேறு அளவிறந்த தொழில் பாரங்களால் கஷ்டப்படும் போது, அதை நடத்துவதற்கு அமைச்சர் துணை தேவைப்படும். ஆதலால் அமைச்சரைக் கண்ணாகக் கூறப்பட்டது. இக் குறளில் பெரியார் என்ற வகையில் அமைச்சரின் துணை கருதப்பட்டது. சூழ்ந்து - ஆராய்ந்து; ஆராய்தல் என்பது அமைச்சியலில் கூறப்படும் அமைச்சருக்குரிய இயல்புகளை ஆராய்தலாகும். சூழ்வார் - பொறுப்பை ஏற்பவர், பாரத்தினை ஏற்பவர். அரசன் ஆற்ற வேண்டிய பொறுப்பை ஏற்பவர் அமைச்சர் ஆவார். பாரம் - சுமை, பொறுப்பு.

6. தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்

சொற்பொருள்:

தக்கார் இனத்தனாய்த் தான் ஒழுக வல்லானை - தகுதி வாய்ந்த (பெரியாரை) இனத்தினையுடையவனாய்த் தானும் அறிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக வல்ல அரசனை; செற்றார் செயக் கிடந்தது இல் - அவன் பகைவர் செய்யக் கூடிய துன்பம் ஒன்றுமில்லை.

பொழிப்பு:

தகுதிவாய்ந்த பெரியோரை இனத்தவராகக் கொண்டு, தானும் ஒழுகவல்ல அரசனை, அவன் பகைவர் செய்யக் கூடிய தீங்கு யாதும் இல்லை.

விளக்கம்:

தக்கார் - அறிவொழுக்கங்களால் தகுதி உடையவர்கள். ஒழுகுதல் - அற நூல்களின் நெறி வழுவாமல் நடத்தல். பகைவர் செய்யக் கூடிய துன்பங்கள்: வஞ்சித்தல், கூடினவரைப் பிரித்தல், வேறுபகை விளைத்தல் முதலியன. பகைவர் பல்வேறு துன்பங் களைச் செய்வாரெனினும், அவற்றைத் தானும் அறிந்து, பெரியோர் சொற்கேட்டு ஒழுகுவாரிடத்தில் அவற்றுள் ஒன்றும் துன்பம் செய்ய மாட்டா என்க. இதனையே "செற்றார் செயக் கிடந்தது இல்" எனப்பட்டது. செற்றார் - பகைவர்; செயக்கிடந்த - செய்வதற்குரியது; இல் - இல்லை; இனத்தனாய் - இனத்தவராய்.

7. **இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே**
கெடுக்குந் தகைமை யவர்.

சொற்பொருள்:

இடிக்கும் துணையாரை ஆள்வாரை - தமது தவறான செயலைக் கண்டால் இடித்துரைக்க வல்ல (நெருங்கிச் சொல்ல வல்ல) துணைவரை, இவர் நமக்குச் சிறந்தவர் என்று கொண்டு ஆளும் அரசரை; கெடுக்கும் தகைமையவர் யார் - கெடுக்கும் பெருமை உடைய பகைவர் உலகத்தில் யாவர்?

பொழிப்பு:

தமது தவறான செயல்கண்டு இடித்துரைக்கும் துணைவரை, இவர் நமக்குச் சிறந்தவர் என்று கொண்டு ஆளும் அரசரை, கெடுக்கும் பெருமையுடைய பகைவர் உலகத்தில் யாவர்? ஒருவரும் இல்லை.

விளக்கம்:

நீதியற்ற நெறியில் அரசன் செல்கையில் அவனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்கிச் சென்று தமது அனுபவத்தினால் நீதியை வலியுறுத்தித் தவறிழைக்க விடாமல் தடுக்கக் கூடியவர் துணையிருக்கும் போது, எந்தப் பகைவராலும் அரசனுக்குத் துன்பம் ஏற்படாது என்ற கருத்தை இக்குறள் உணர்த்துகிறது. இடிக்கும் - இடித்துரைக்கும், நெருக்க மாகவுரைக்கும்; தகைமை - தகுதி, பெருமை: யாரே என்பதில் ஏகாரம் ஈற்றசை.

8. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னஞ்
கெடுப்பா ரிலானுங் கெடும்.

சொற்பொருள்:

இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன் - தன் தவறுகளை இடித்துரைத்துத் திருத்துவோரைத் துணையாகக் கொள்ளாத காப்பற்ற அரசன்; கெடுப்பார் இலானும் கெடும் - தன்னைக் கெடுக்கவல்ல எதிரிகள் இல்லாமலே கெட்டழிவான்.

பொழிப்பு:

தன் தவறுகளை இடித்துரைத்துத் திருத்துவோரைத் துணையாகக் கொள்ளாத அரசன், தன்னைக் கெடுக்கவல்ல பகைவர்கள் இல்லாமலே கெட்டழிவான்.

விளக்கம்:

"இல்லாத", "ஏமரா" என்பன பெயரெச்சச் சொற்கள். கெடுப் பார் உளர் என்பது தோன்ற "இலானும்" எனப்பட்டது. தானே கெடு தல் என்பதுநெறியில்லா நெறி சென்று கெடுதலாகும். இடிப்பாரை - இடித்துரைப்பவரை; ஏமரா - காவலற்ற, காப்பற்ற; இலானும் - இல்லாது விடினும்.

9. முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை.

சொற்பொருள்:

முதல் இலார்க்கு ஊதியம் இல்லை - முதல் இன்றி வணிகம் செய்வார்க்கு, அதனால் வரும் ஊதியம் கிட்டாது; மதலையாம் சார்பு இலாதார்க்கு நிலை இல்லை - இது போன்று தம்மைத் தாங்கிக் காப்பாற்ற வல்ல துணையில்லாத அரசர்க்கு நிலைத்த வாழ்வு இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு :

முதல் இன்றி வணிகம் செய்வார்க்கு அதனால் வரும் ஊதியம் இல்லை. இதுபோன்று தம்மைத் தாங்கிக் காப்பாற்ற வல்ல துணையற்ற அரசர்க்கு நிலைத்த வாழ்வு இல்லை.

விளக்கம் :

முதலைப் பெற்றே இலாபம் பெற வேண்டும் என்பது போல, தாங்குவாரைப் பெற்றே நிலைபெற வேண்டும் என்பதாகும். "நிலை" என்பது அரசர் தம் பொறுப்புகளோடு சலியாது நிற்றல். ஊதியம் - வருமானம்; மதலை - பற்றுக் கோடு; சார்பு - துணை; நிலை - நிலைபெறுகை.

10. பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே நல்லார் தொடர்கை விடல்.

சொற்பொருள் :

பல்லார் பகை கொளலின் பத்து அடுத்த தீமைத்து - தான், தனியனாய் நின்று பலரோடும் பகை கொள்ளுதலின் பத்து மடங்கு தீமையை உடையது; நல்லார் தொடர் கைவிடல் - அரசன், நல்லவர்களாகிய பெரியாரின் துணையைக் கொள்ளாதொழிதல் ஆகும்.

பொழிப்பு :

தான், தனித்து நின்று பலரோடும் பகை கொள்ளுதலின் பத்து மடங்கு தீமையை உடையது, பெரியாரின் நட்பைக் கொள்ளாது விடல் ஆகும்.

விளக்கம் :

பலரோடு பகை கொள்ளினும் ஒரு வகையால் உய்தல் கூடும். ஆனால் நல்லார் தொடர்பைக் கைவிட்டால் எந்த வகையாலும் உய்தல் முடியாது என்பதை இக் குறட்பா உணர்த்தியுள்ளது. எனவே அரசன் பெரியோரைத் துணைக்கோடல் அவசியமானதாகும். பல்லார் - பலர்; பத்தடுத்த - பத்து மடங்கு; நல்லார் - பெரியார்; கைவிடல் - நட்பை விடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அதிகாரப் பொருட் சுருக்கம்.

அரசன் அறமுணர்ந்த, தன்னிலும் மூத்த அறிவுடையோர் நட்பினை ஆராய்ந்து, அவர்களைத் துணையாகக் கொள்ள வேண்டும். தெய்வத்தாலும், மக்களாலும் தனக்கு வந்த துன்பங் களை நீக்கும் வழியறிந்து நீக்கி, அவை போல்வன பின்னர் வரா வண்ணம் முன்னரே அறிந்து காக்க வல்ல தன்மையுடைய பெரியோரை அரசன் துணையாகக் கொள்ள வேண்டும். பெரியோரைப் பேணித் தம்மவராகக் கொள்ளல், அரசனுக்கு அரியவற்றுள் அரிய பெரும் பேறாகும். தம்மிலும் பார்க்க அறிவு முதலியவற்றால் சிறந்த பெரியோரைத் துணையாக்கித் தாம் அவர் வழி நின்றொழுகுதல் அரசனுக்குள்ள வலிமைகளில் தலைசிறந்தது. அரசன் தனது பொறுப்புக்களை ஏற்கும் அமைச்சரைக் கண்ணாகக் கொண்டு அரசு நடத்தலால், அத்தகையவரை ஆராய்ந்து தனக்குத் துணையாகக் கொள்ள வேண்டும். தகுதி வாய்ந்த இனத்தவரை உடையவனாய், தானும் அறிந்து ஒழுக வல்ல அரசனுக்குப் பகைவர் செய்யக் கூடிய துன்பம் எதுவுமில்லை. தீயவற்றை இடித்துரைத்துத் தடுக்கக் கூடிய பெரியோரைத் துணையாகக் கொண்ட அரசனை கெடுத்தழிக்க வல்ல பகைவர் உலகிலில்லை. இடித்துரைத்து வழிகாட்டக் கூடிய பெரியோரைத் துணையாகக் கொள்ளாத காவலற்ற அரசன் பகை கொண்டு கெடுப்பார் இலராயினும் அழிந்து விடுவான். பொருள் முதல் இல்லாதவர்க்கு வருமானம் இல்லாதது போன்று, தம்மைத் தாங்குவதற்கான துணையில்லாத அரசர்க்கு நிலையான வாழ்வு இல்லை. தான், தனித்து நின்று பலரோடும் பகை கொள்ளுவதிலும் பார்க்க, அரசன் பெரியாரோடு நட்பினைக் கொள்ளாதிருத்தல் பத்து மடங்கு தீமை தருவதாகும்.

4. சிற்றினஞ் சேராமை

(அதாவது சிறிய இனத்தைப் பொருந்தாமை ஆகும். சிறிய இனமாவது, நல்லதில் நன்மையும், தீயதில் தீமையும் இல்லை என்போரும், பிளவு படுத்துவோரும், காமுகரும், வஞ்சகரும் உள்ளிட்ட குழுவினராவர். அறிவைத் திரித்து இருமையும் கெடுக்கும் இயல்பு சிற்றினத்தவரிடம் காணப்படுவதால் பெரியாரைத் துணை கொண்டு பயன்பெறல் வேண்டும் என்பதற்காக அதனை அடுத்த அதிகாரமாக வைக்கப்பட்டது).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. **சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான் சுற்றமாச் சூழ்ந்து விடும்.**

சொற்பொருள்:

பெருமை சிற்றினம் அஞ்சும் - சிற்றினத்தைக் கண்டு அச்சம் அடைவது பெரியோர் இயல்பு; சிறுமைதான் சுற்றமாய்ச் சூழ்ந்து விடும் - அந்தச் சிற்றினத்தைச் சுற்றமாகக் கொள்வது சிறியோர் இயல்பு.

பொழிப்பு:

சிற்றினத்தைக் கண்டு அச்சமடைவது பெரியோர் இயல்பு. அந்தச் சிற்றினத்தைச் சுற்றமாகக் கொள்வது சிறியோர் இயல்பு.

விளக்கம்:

அறிவுடைய பெரியார் சிற்றினத்தாரால் அறிவு திரியுமென் றும், தமக்குத் துன்பம் நேருமென்றும் அஞ்சுவர். அறிவில்லாத சிறியவர் அதனைப் பொருட்படுத்தாது சிற்றினத்தைச் சுற்றமாக எண்ணி நடப்பர் என்பதை இக்குறள் வெளிப்படுத்தியுள்ளது. சிற்றினம் - குணத்தாலும் நடத்தையாலும் சிறிய இனம்; பெருமை - பெரியோர்; அஞ்சும் - பயப்படும்; சிறுமை - சிறியோர்; சுற்றம் - உறவு; சூழ்ந்து விடும் - எண்ணித் துணியும்.

2. **நிலத்தியல்பான் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க் கினத்தியல்ப தாகும் அறிவு.**

சொற்பொருள்:

நிலத்து இயல்பான் நீர் திரிந்து அற்றாகும் - தான் சேர்ந்த நிலத்தின் இயல்பாலே நீரானது தன் தன்மை திரிந்து அந் நிலத்தின் தன்மையை உடையதாகும். மாந்தர்க்கு இனத்தியல்பு அறிவு அதாகும் - அதுபோல மாந்தர்க்குத் தாம் சேர்ந்த இனத்தின் இயல் பாலே அறிவும் தன் தன்மை திரிந்து, அவ்வினத்தின் இயல்புடைய தாகும்.

பொழிப்பு:

தான் சேர்ந்த நிலத்தின் இயல்பாலே நீரானது தன் தன்மை திரிந்து அந் நிலத்தின் தன்மையை உடையதாகும். அதுபோல,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாந்தர்க்குத் தாம் சேர்ந்த இனத்தின் இயல்பாலே அறிவும், தன் தன்மை திரிந்து அவ்வினத்தின் தன்மை உடையதாகும்.

விளக்கம் :

இக்குறளில் எடுத்துக்காட்டு உவமை பயன்படுத்தப்பட்டுள்ளது. நிலத்தின் இயல்பாலே நீர் திரிதல் - உவமானம்; இனத்தின் இயல்பாலே மாந்தரின் அறிவு திரிதல் - உவமேயம்; சேர்ந்த இடத்தால் திரிபடைந்து நிலை மாறுதல் - பொதுவியல்பு. வானிலிருந்து விழும் நீர், விழுந்த நிலத்திற்கேற்ப நிறம், சுவை முதலிய பண்புகளில் திரிந்து விடுவது போல, மாந்தர்களின் தனி நிலைக்குரியதான அறிவும், பிற இனத்தோடு சேர்ந்துவிட்டால் காட்சி முதலிய தொழில்கள் திரியும் என்பதை இக்குறள் கூறுகிறது. திரிதல் - நிலைமாறுதல்; அற்றாகும் - அத்தன்மையுடையதாகும்; மாந்தர் - மனிதர்; அதாகும் - அதுபோன்றதாகும்.

3. மனத்தானும் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானும் இன்னா னெனப்படுஞ் சொல்.

சொற்பொருள் :

மாந்தர்க்கு உணர்ச்சி மனத்தான் ஆம் - மனிதர்களுக்குப் பொது உணர்வு (இயற்கை உணர்வு) தம் மனம் காரணமாக உண்டாகும்; இன்னான் எனப்படும் சொல், இனத்தான் ஆம் - இவன், இத் தன்மையானவன் என்று உலகத்தாரால் சொல்லப்படும் சொல், இனங்காரணமாக உண்டாகும்.

பொழிப்பு :

மனிதர்களுக்கு இயற்கை உணர்வு, தம் மனம் காரணமாக உண்டாகும். இவன் இத்தன்மையன் என்று உலகோராற் சொல்லப் படும் சொல், இனம் காரணமாக உண்டாகும்.

விளக்கம் :

இயற்கையான புலனுணர்வு இனம் வேண்டாதாகையால், அதனை "மனத்தானாம்" எனப்பட்டது. செயற்கையான விசேட உணர்வு பற்றி, நல்லவன் என்றாக அல்லது தீயவன் என்றாக நிகழும் சொல்லுக்கு இனம் வேண்டுதலின் "இனத்தானாம்" என்று கூறப் பட்டது. "திரியும் மனத்தானாம்" என்பதை இங்கு உணர்த்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளது. மனத்தானாம் - மனத்தினாலாவதாம்; இனத்தானாம் - இனத்தினாலாவதாம்; இன்னான் - இத்தகையவன்; சொல் - சொல்லப்படுதல்.

4. மனத்து ளதுபோலக் காட்டி ஒருவற்
கினத்துள தாகும் அறிவு.

சொற்பொருள்:

அறிவு - அந்தச் சிறப்பு உணர்வு; ஒருவர்க்கு மனத்துளது போலக் காட்டி - ஒருவர்க்கு மனத்தின் கண்ணே உள்ளது போல தன்னைப் புலப்படுத்தி; இனத்து உளதாகும் - அவன் சேர்ந்த இனத்தின் கண்ணே உளதாகும்.

பொழிப்பு:

அந்த விசேட உணர்வானது, ஒருவர்க்கு மனத்தில் உள்ளது போலத் தன்னைப் புலப்படுத்தி, அவன் சேர்ந்த இனத்தில் உள்ளதாகும்.

விளக்கம்:

உண்மையை நோக்காத போது மனத்தில் உள்ளது போலக் காட்டியும், பின்னர் நோக்கியவழி சேர்ந்த இனத்தில் உள்ளதாக விளங்கும் எனவும் கூறப்பட்டது. எனவே விசேட உணர்வின் மூலம் இனத்திலேயே உள்ளது என்றாகிறது. அறிவு - விசேட அறிவு, சிறப்பறிவு, சிறப்புணர்வு.

5. மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்.

சொற்பொருள்:

மனம் தூய்மை செய்வினை தூய்மை இரண்டும் - விசேட உணர்வு புலப்படுவதற்கான மனத் தூய்மையும், செய்யும் செயல் காரணமான செயல் தூய்மையும் ஆகிய இவ்விரண்டும்; இனம் தூய்மை தூவா வரும் - ஒருவன் சேருகின்ற இனத் தூய்மையைப் பற்றுக் கோடாகக் கொண்டே அமைவதாகும்.

பொழிப்பு:

ஒருவன் சேரும் இனத்தைப் பொறுத்ததாகவே அவனது மனத் தூய்மையும், செயலின் தூய்மையும் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்:

மனத் தூய்மை - விசேட உணர்வு புலப்படுமாறு இயற்கையாகவே அறியாமையிலிருந்தும் நீங்குதல், செயல் தூய்மை - மொழி, மெய் போன்றவற்றால் செய்யும் நல்வினை உடையவனாதல்; தூவ - அப் பொருட்டாதல். ஒருவன் இனத் தூய்மை உடையவனாதல், அதனோடு பயிற்சிகளால் செயல் தூய்மை உடையவனாதல், அதனால் விசேட உணர்வு, புலப்பட்டுச் சொல்லும் செயலும் தூயவனாதல் ஆகியவற்றை இனத் தூய்மையை ஆதாரமாகக் கொண்டே பெற முடியும் என்பதே இக் குறட்பாவின் நுண்ணிய கருத்தாகும். செய்வினை - செயல்; தூவா - அதனால், அதன் பொருட்டால்.

6. மனந்தூயார்க் கெச்சநன் றாகும் இனந்தூயார்க் கில்லைநன் றாகா வினை.

சொற்பொருள்:

மனம் தூயார்க்கு எச்சம் நன்றாகும் - தூய மனம் உடையவர்க்கு அவற்றின் சந்ததியாகிய மக்கட் பேறு நல்லதாக அமையும்; இனம் தூயார்க்கு நன்று ஆகா வினை இல்லை - இனத் தூய்மை உடையவர்க்கு நன்றாகாத செயல் என்று எதுவும் இல்லை.

பொழிப்பு:

மனத் தூய்மை உடையவர்க்கு மக்கட் பேறு நன்கு அமையும். இனத் தூய்மை உடையவர்க்கு நன்றாகாத செயல் எதுவுமில்லை. (எல்லாம் நன்றாகும்).

விளக்கம்:

காரியம், காரணத்தினின்றும் வேறாகாதாகையால் "எச்சம் நன்றாகும்" எனப்பட்டது. இது மக்கட் பேற்றைக் கருதினாலும், பின்னால் எஞ்சும் புகழ் முதலியவற்றையும் உள்ளடக்கும். இனத் தூய்மை நல்லினத்தோடு எண்ணிச் செய்யப்படுதலால் யாவும் நல்லவாம் என்று கூறப்பட்டது. எச்சம் - மீதி, மிச்சம், சொச்சம்; வினை - செயல்.

7. மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம் எல்லாப் புகழுந் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொருள் :

மன் உயிக்கு மனநலம் ஆக்கம் - நிலைபெற்ற உயிர்களுக்கு மனத்தின் நன்மை, செல்வத்தைக் கொடுக்கும்; இன நலம் எல்லாப் புகழும் தரும் - இனத்தின் நன்மை, அதனோடு எல்லாப் புகழையும் கொடுக்கும்.

பொழிப்பு :

நிலைபெற்ற உயிர்களுக்கு மனத்தின் நன்மை செல்வத்தைக் கொடுக்கும். இனத்தின் நன்மை அதனோடு எல்லாப் புகழையும் கொடுக்கும்.

விளக்கம் :

"மன் உயிர்" என்பதால் உயர் திணையே கருதப்பட்டது என்க. "தரும்" என்ற இட வழுவமைதிச் சொல்லினை "மன நலம் மன்னுயிர்க் காக்கம் தரும்" எனக் கூட்டிப் பொருள் கொள்க. மனம் நன்றாகவிருந்தால், அதுவே அறமாதலால் ஆக்கம் தரும் எனப் பட்டது. புகழ் கொடுத்தற்குரிய நல்லோர் தாமே இனமாக விளங்குதலால் "இன நலமெல்லாப் புகழுந் தரும்" எனக் கூறப்பட்டுள்ளது. இவற்றினூடாக மன நன்மையானது இன நன்மை பற்றியே வரும் என்பதும், இவ்விரு நன்மைகள் உடையோர்க்கு பலவித நன்மைகளு முண்டாகும் என்பதும் இக்குறளினால் உணர்த்தப்பட்டுள்ளது. நலம் -நன்மை; ஆக்கம் - பொருள், செல்வம்.

8. **மனநலம் நன்குடைய ராயினுஞ் சான்றோர்க் கினநலம் ஏமாப் புடைத்து.**

சொற்பொருள் :

மனநலம் நன்கு உடையராயினும் - (நல்வினையால்) மன நன்மையை நன்கு உடையவர்களாயினும்; சான்றோர்க்கு இன நலம் ஏமாப்பு உடைத்து - சான்றோர்க்கு இன நன்மையே நல்ல காவலாய் அமைந்து விடும்.

பொழிப்பு :

மன நலம் நன்கு உடையவர்களாயினும், சான்றோர்க்கு இன நலமே நல்ல காவலாய் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்:

நல்வினையால் மன நலம் நன்கு அமைந்திருந்த போதும், அதனையுடைய சான்றோருக்கும் இன நலமே நல்ல காவலாய் அமையும் என்பதே இந்தக் குறட்பாவின் அடிப்படைக் கருத்தாகும். ஏமாப்பு - காப்பு, காவல். இன நலம் இல்லையேல், மன நலமும் வழி தவறக் கூடும் என்பதே இங்கு உணர்த்தப்பட்டுள்ளது.

9. மனநலத்தி னாகும் மறுமைமற் ற.்.தும்
இனநலத்தி னேமாப் புடைத்து.

சொற்பொருள்:

மன நலத்தின் மறுமையாகும் - ஒருவர்க்கு மன நன்மையால் மறுமை இன்பம் உண்டாகும்; மற்றஃதும் இன நலத்தின் ஏமாப்பு உடைத்து - அதற்கு அச்சிறப்புத் தானும், இன நன்மையால் மேலும் வலிமை பெறுதலை உடையதாகும்.

பொழிப்பு:

ஒருவர்க்கு மன நலத்தால் மறுமை இன்பம் உண்டாகும். அது இன நலத்தால் மேலும் சிறப்புடையதாகும்.

விளக்கம்:

மன நன்மையே மறுமை தரும்; அதற்கு மேலும் சிறப்புத் தருவது இன நன்மையாகும் என இக்குறள் கூறுகிறது. மன நலம் திரியினும் அதனை நல்வழியிற் செலுத்துவது இன நலம் ஆகும். எனவே அதனால் மன நலம் சிறப்புறும் எனப்பட்டது. "மற்றஃதும்" என்பதில் "மற்று" வினைமாற்று ஆகும்; உம்மை இறந்த, தழீஇய எச்சவும்மை (மற்றும், அஃதும்). "மன நலம் சில வேளை மாறு பட்டாலும்" என்பதை உணர்த்திற்று. எனவே இன நலமே, மன நலத்தைச் சிறப்பாக்கும் எனப்பட்டது. ஏமாப்பு - பாதுகாப்பு, காவல்.

10. நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉ மில்.

சொற்பொருள்:

நல்லினத்தின் ஊங்கு துணையும் இல்லை - ஒருவர்க்கு நல்ல இனத்தைப் போன்ற மிக்க துணை வேறு இல்லை; தீயினத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லற் படுப்பதூஉம் இல் - தீய இனத்தைப் போன்று மிகவும் துன்பம் தருவதும் வேறில்லை.

பொழிப்பு :

ஒருவர்க்கு நல்ல இனத்தைப் போன்று மிக்க துணை வேறு இல்லை. தீய இனத்தைப் போன்று மிகத் துன்பம் தருவதும் வேறு இல்லை.

விளக்கம் :

"தீயினத்தின் (ஊங்கு) அல்லற் படுப்பதூஉம் இல்" எனக் கொள்க. நல்லினம், அறியாமையின் நீங்கித் துயருறாமற் காத்தலின் அதனைத் "துணை" எனவும், தீயஇனம், அறிவின் நீங்கித் துயருறுத்தலின் அதனைப் "பகை" என்றும் கூறினார் என்க. "அல்லற்படுப்பது" - ஓதுப் பெயர். ஊங்கு - மிகுந்த, மேம்பட்டது; அல்லல் - துன்பம்; படுப்பதூ - விளைவிப்பது, தருவது.

4. அதிகாரப் பொருட் சுருக்கம்

பெரியோர்கள் சிற்றினம் கண்டு அஞ்சுவார்கள். சிறியோர்கள் அவரையே சுற்றமாகக் கொள்வார்கள். நிலத்தின் தன்மையால் நீர் திரிபடைதல் போன்று, மனிதர்க்கு அவர்கள் சேர்ந்த இனத்தின் தன்மையைப் பொறுத்து அறிவு அமையும். மனிதர்க்கு விசேட உணர்வு மனத்தால் உண்டாகும். இவன், இத்தன்மையன் என்று உலகோர் சொல்லும் சொல், இனங் காரணமாக உண்டாகும். ஒருவரது விசேட அறிவானது மனத்தில் உள்ளது போன்று புலப்படுத்தினாலும், அவர் சேர்ந்த இனத்திலேயே உண்மையில் உள்ளதாகும். மனத் தூய்மை, செயல் தூய்மை ஆகிய இரண்டும் ஒருவர்க்கு இனத் தூய்மையைப் பற்றுக் கோடாகக் கொண்டே உள்ளன. மனத் தூய்மை உடையவர்களுக்கு அவர்களின் சந்ததியாகிய மக்கட் பேறு நல்லதாய் அமையும். இனத் தூய்மை உடையவர்களுக்கு எல்லாமும் நல்லதாய் அமையும். மனநலம் செல்வத்தைக் கொடுக்கும், இன நலம் எல்லா வகையான புகழையும் தரும். மன நலம் சிறந்ததாக உடையவராயினும் பெரியாராகிய சான்றோர்க்கு இன நலம் அதற்கு வலிமை சேர்ப்பதாகும். ஒருவர்க்கு மன நலத்தினால் மறுமை இன்பம் உண்டாகும். அதற்கு அச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பானது இன நலத்தினால் பெறும் வலிமையைப் பொறுத்து அமையும். ஒருவர்க்கு நல்ல இனத்தவரைப் போன்ற மிக்க துணை எதுவும் இல்லை. தீய இனத்தவரைப் போன்ற மிகுந்த பகையும் இல்லை.

5. தெரிந்து செயல்வகை

(அரசன், தான் செய்யும் செயல்களை ஆராய்ந்து செய்யும் திறம் என்பதே இதுவாகும். அச்செயல், பெரியாரைத் துணைக் கோடல் பயனுடைய வழியாதலின் அவரோடு செய்யப்படுவதால் "சிற்றினஞ் சேராமை"யின் பின்னர் வைக்கப்பட்டுள்ளது.

1. அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும் ஊதியமுஞ் சூழ்ந்து செயல்.

சொற்பொருள்:

அழிவதூஉம் - செய்யப்படுவதாகிய செயலால் அப்பொழுது ஏற்படுகின்ற அழிவையும்; ஆவதூஉம் - அழிந்த பின்னர், ஆக்க முறுவதையும்; ஆதி வழிபயக்கும் ஊதியமும் - ஆகிநின்று பிற்காலத் தில் தரும் ஊதியத்தையும்; சூழ்ந்து செயல் - நன்கு ஆராய்ந்து (ஆக்கம் தரும் செயலைச்) செய்ய வேண்டும்.

பொழிப்பு:

செய்யப் போவதாகிய செயலால் ஏற்படுகின்ற அழிவு, ஆக்கம் பெறும் ஊதியம் ஆகியவற்றை நன்கு ஆராய்ந்து (ஆக்கம் தரும் செயலைச்) செய்ய வேண்டும்.

விளக்கம்:

எச் செயலையும் ஆக்கம் தரும்படியாக நன்கு ஆராய்ந்து செய்ய வேண்டும் என்பதை இக்குறள் உணர்த்துகிறது. நிகழ் காலத்தில் அழிவைத் தரினும் பின்னர் ஆக்கத்தைத் தருமாயின் அதனை "ஊதியம்" எனக் கூறப்பட்டது. ஆகவே இரண்டு காலத்தும் பயன் கருதிச் செய்க எனப்பட்டது. வழிபயக்கும் - ஆகி நின்று பின்னர் தருகின்ற; சூழ்ந்து - சீர் தூக்கி, ஆராய்ந்து.

2. தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க் கரும்பொருள் யாதொன்று மில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொருள்:

தெரிந்த இனத்தொடு தேர்ந்து எண்ணிச் செய்வார்க்கு - இவர் தக்கவர் என்று ஆராய்ந்து தெரிந்து கொண்ட இனத்தினரோடு கூடி, செய்யப்படும் செயலை நன்கு ஆராய்ந்து பின் தாமும் எண்ணிச் செய்து முடிக்க வல்ல அரசர்க்கு; அரும் பொருள் யாதொன்றும் இல் - அடைய முடியாத பொருள் எதுவும் கிடையாது.

பொழிப்பு:

இவர் தக்கவர் என்று ஆராய்ந்து தெரிந்து கொண்ட இனத்தினரோடு சேர்ந்து, செய்யப்படும் செயலை நன்கு ஆராய்ந்து, பின்னர் தாமும் எண்ணிச் செய்து முடிக்கவல்ல அரசர்க்கு, அடைய முடியாத பொருள் எதுவும் கிடையாது.

விளக்கம்:

தக்கவரைத் தேர்ந்தெடுத்தல், அவருடன் சேர்ந்து செயலை ஆராய்தல், பின்னர் தாமும் எண்ணி (சிந்தித்து) முடிவெடுத்துச் செயற்படுதல் ஆகியவற்றைப் பின்பற்றும் அரசனுக்கு எதையும் அடைய முடியும் என்ற கருத்தினை இக் குறட்பா முன்வைத்துள்ளது. "செய்வார்க்கு" வினை (செயல்) ஆகிய செயற்படுபொருள் வருவிக்கப்பட்டது. அரிய பொருள்களை எளிதில் எய்துவரென்பதும், வினைமேற் செல்லல் முதலானவற்றால் அது சாத்தியமாகும் என்பதும் இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. எனவே செய்யத்தக்க வினையையும், அதனைச் செய்யுமாறும் உணர்த்தப்பட்டது என்க. தேர்ந்து - ஆராய்ந்து; அரும் - அருமையான; இல் - இல்லை.

3. ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை ஊக்கா ரறிவுடை யார்.

சொற்பொருள்:

ஆக்கம் கருதி முதல் இழக்கும் செய்வினை - பின் உண்டாகக் கூடிய ஆக்கத்தினை மனதில் கொண்டு இப்போதுள்ள முதலினை இழப்பதாகிய செயலினை; அறிவுடையார் ஊக்கார் - அறிவுடையவர்கள் மேற்கொள்ள மாட்டார்.

பொழிப்பு:

பின்னர் உண்டாகக் கூடிய ஊதியத்தினை (ஆக்கத்தை) மனதிற் கொண்டு இப்போதிருக்கும் முதலினை இழப்பதாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலினை அறிவுடையோர் மேற்கொள்வார்.

விளக்கம்:

"கருதி" என்னும் வினையெச்சம், "இழக்கும்" என்னும் பெயரெச்ச வினை கொண்டது. ஆக்கத்துடன் முதலையும் இழக்கும் செயல்களாவன: வலிமையையும் பொருத்தமான காலத்தையும், பொருந்தும் இடத்தையும் அறியாது பிறர் மண் கொள்ளச் சென்று, தம் மண்ணையும் இழத்தல் போல்வன. முன் செய்த செயலாவதால் "செய்வினை" எனப்பட்டது. முதல் - செயலுக்கான செலவு முதலானவை. ஊக்கார் - மேற்கொள்ளார், செய்யமாட்டார்.

4. தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும் ஏதப்பா டஞ்சு பவர்.

சொற்பொருள்:

இளிவு என்னும் ஏதப்பாடு அஞ்சுபவர் - இதனைத் தொடங்குவதால் பகைவரின் இளிவரலாகிய குற்றநிலைக்கு (கேலிக்கு) ஆளாக நேரிடும் என்பதனைத் தெரிந்தோர்; தெளிவு இலதனைத் தொடங்கார் - தெளிவில்லாத (துணிதல் இல்லாத) செயலைத் தொடங்கமாட்டார்.

பொழிப்பு:

இதனைத் தொடங்குவதால் (பகைவரின்) இளிவரவு என்னும் குற்ற நிலைக்கு ஆளாக நேரிடும் என்பதனைத் தெரிந்து பயப்படுவோர், தெளிவு இல்லாத செயலைத் தொடங்கமாட்டார்.

விளக்கம்:

தொடங்கின் இடையில் விட முடியாதாகையால் "தொடங்கார்" எனப்பட்டது. இளிவரவு - ஒரு செயலால் அழிவு எய்திய பின், அதன் காரணமாக அறிவும், மானமும் இவர் இலர் என உலகத்தார் இகழும் இகழ்ச்சியாகும். அது குற்றமாக விளங்கும் என்பதால் "இளிவு என்னும் ஏதப்பாடு" என்று கூறப்பட்டது. எனவே தெளிவு பெற்று செயலினைத் தொடங்குக என அறிவுறுத்தப்பட்டது என்க. "தெளிவு இலதனை" என்பது தெளிவற்ற, துணிதலில்லாத எனப் பொருள் தரும். ஏதப்பாடு - குற்றம்; அஞ்சுபவர் - பயப்படுவோர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு.

சொற்பொருள் :

வகை அறச் சூழாது எழுதல் - செய்வதற்குரிய செயல்களை முற்றாக ஆராய்ந்து பார்க்காது அவற்றைத் தொடங்குதல்; பகை வரைப் பாத்திப் படுப்பது ஓர் ஆறு - பகைவர் வளரும் நிலத்திலேயே, (பாத்தியில்) அவரை நிலைபெறச் செய்வதற்குரிய ஒரு நெறியாகும்.

பொழிப்பு :

செய்வதற்குரிய செயல்களை முற்றாக ஆராய்ந்து பார்க்கா மல் அவற்றைத் தொடங்குதல், பகைவரை, அவர் வளரும் நிலத்தில் நிலை பெறச் செய்வதற்குரிய ஒரு நெறியாகும்.

விளக்கம் :

செயல் திறங்களாவன : வலி, காலம், இடம் ஆகியவற்றால் தனக்கும், பகைவர்க்கும் உள்ள நிலைமைகள், செயல் தொடங்கும் போது ஏற்படக் கூடிய இடையூறுகள், அவற்றை நீக்கும் வழிகள், வெல்லக் கூடிய வழிகள், அதனாற் கிடைக்கும் பயன்கள் முதலியன. இவற்றுள் சில எஞ்சினும் பகைவர்க்கு வாய்ப்பாகுமாதலால் முற்றும் பெற எண்ண வேண்டும் என்பதனை "அற" எனப்பட்டது. வகை - செயலுக்கான வழிகள்; அற - முற்றாக; சூழாது - ஆராயாது; பாத்தி - பயிர் விளையும் பாத்தி; படுப்பது - நிலைபெறச் செய்வது; ஆறு - நெறி, வழி; "பாத்தி" என்பதை இங்கு பகைகள் வளரும் நிலம் என்பதாகும்.

6. **செய்தக்க அல்ல செயக்கெடுஞ் செய்தக்க**
செய்யாமை யானுங் கெடும்.

சொற்பொருள் :

செய்தக்க அல்ல செயக் கெடும் - அரசன், தன் செயல்களுள் செய்யக் கூடாதனவற்றைச் செய்வதாலும் கேடு உண்டாகும்; செய்யாமை யானும் கெடும் - அதனுடன் செய்ய வேண்டிய செயல்களைச் செய்யாமையினாலும் கேடு உண்டாகும்.

பொழிப்பு :

அரசன் தான் செய்யக் கூடாத செயல்களைச் செய்வதாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேடு உண்டாகும். அத்துடன் செய்ய வேண்டிய செயல்களைச் செய்யாமையாலும் கேடு உண்டாகும்.

விளக்கம் :

செய்தக்க அல்லாதன : பெரிய முயற்சிகள், பயனற்ற முயற்சிகள், சிறியதோ, ஐயத்துக்குரியதோ பின்னர் துயர் விளைவிப்பன போன்றனவாகும். செய்யத்தக்கன : சிறிய, பயனுள்ள, சந்தேகமற்ற, பின்னர் துயர் விளைவிக்காத முயற்சிகள். இவற்றைச் செய்யாமையால் அறிவு, ஆண்மை, பெருமை என்னும் மூவகை ஆற்றலுள்ள பொருள், படை ஆகியன சுருங்கிப் பகைவற்கு எளியனாகும் நிலையுண்டாகும் இவை கேட்டிற்குரியன. ஆகவே செய்யக் கூடியதைச் செய்யவும், செய்யக் கூடாததைச் செய்யாதிருக்கவும் இக்குறள் வலியுறுத்திற்று எனலாம். செய்தக்க - செய்யத்தக்க; கெடும் - அழியும், கேடுறும்.

7. எண்ணித் துணிக கருமந் துணிந்தபின் எண்ணுவ மென்ப திழுக்கு.

சொற்பொருள் :

கருமம் எண்ணித் துணிக - ஒரு செயலை நன்றாக எண்ணித் துணிந்த பின் அதனை மேற்கொள்க; துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு - செயலைத் தொடங்கியபின், அதன் நன்மை தீமைகளை எண்ணுவோம் என்பது இழுக்கைத் தரும் (குற்றத்தைத் தரும்).

பொழிப்பு :

ஒரு செயலை நன்றாக எண்ணித் துணிந்த பின் மேற்கொள்க. செயலைத் தொடங்கிய பின்னர் எண்ணுவோம் என்பது இழுக்கினைத் தந்து விடும்.

விளக்கம் :

முன் கூட்டியே நன்மை, தீமைகளைச் சிந்தித்து ஒரு செயலை மேற்கொள்ள வேண்டும் என்பது இக் குறளால் வலியுறுத்தப் பட்டுள்ளது. தொடங்கிவிட்டு எண்ணுதல் என்பது துயர் தருமாதலால் "இழுக்கு" எனப்பட்டது. செய்வனவும் உபாயமறிந்தே தொடங்குக என்பதைத் "துணிக கருமம்" எனப்பட்டது. கருமம் - செயல்; இழுக்கு - பொல்லாங்கு, குற்றம், நிந்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. **ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று போற்றினும் பொத்துப் படும்.**

சொற்பொருள்:

ஆற்றின் வருந்தா வருத்தம் - பொருத்தமாக முடிக்கக் கூடிய உபாயத்தால் தொடங்கப்படாத முயற்சி; பலர் நின்றுபோற்றினும் பொத்துப்படும் - பலர் துணை நின்று தவறு வராமற் பாதுகாத்தாலும் நிறைவு படாமற் தவறி விடும்.

பொழிப்பு:

பொருத்தமான உபாயத்துடன் தொடங்காத முயற்சி, பலர் நின்று தவறு வராமற் காத்தாலும் நிறைவு படாது.

விளக்கம்:

செயலை முடிக்கத்தக்க உபாயமானது : பொருளுடைய வனுக்கும் பொருள் கொடுத்தல், செம்மை உடையவளிடம் இனிமையாகப் பேசுதல் முதலான பலவற்றையும் நூலார் கூறுவர். அவரவர்க்கேற்றவாறு நடந்து கொள்ளல் என்பதாகும். புரைபடுதல் - கருதிய நன்மையின்றித் தீமை பயத்தல் ஆகும். ஆற்றின் - உபாயவழியால்; வருந்தா - முயலாத; வருத்தம் - முயற்சி; போற்றினும் - காப்பாற்றினும்; பொத்துப்படும் - தவறுபடும்.

9. **நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர் பண்பறிந் தாற்றாக் கடை**

சொற்பொருள்:

அவரவர் பண்பு ஆற்றாக் கடை - அவரவர் குணங்களை ஆராய்ந்து அவற்றிற்கேற்பச் செயல்களைச் செய்யாது விடின்; நன்று ஆற்றவுள்ளும் தவறு உண்டு - நல்ல நோக்கத்துடனான செயல் களிலும் குற்றம் ஏற்படுவதுண்டு.

பொழிப்பு:

அவரவர் குணமறிந்து அவற்றுக்கேற்பச் செயல் புரியாது விடின், நன்னோக்கத்துடனான செயல்களிலும் குற்றம் ஏற்படுவது உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்:

நல்ல உபாயமாவது கொடுத்தலும், இனிய சொல் சொல்லுதலும் ஆகும். அவற்றை அவரவர் பண்பறிந்து ஆற்ற வேண்டும். அவற்றுக்கு உரியவரல்லாதாரிடத்துச் செய்தலும் தவறாகும். இதனையே நல்லவை செய்யினும் தவறுண்டாகும் எனப்பட்டது. ஆற்றல் - ஆற்றுதல், செய்தல்; ஆற்றாக் கடை - செய்யாது விடுதல்.

10. **எள்ளாத எண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு கொள்ளாத கொள்ளா துலகு.**

சொற்பொருள்:

எள்ளாத எண்ணிச் செயல் வேண்டும் - உலகம் இழிவாகக் கொள்ளாத செயல்களைச் சிந்தித்துச் செய்ய வேண்டும்; தம்மொடு கொள்ளாத உலகு கொள்ளாது - ஏனெனில், அரசர் தமக்குப் பொருந்தாத உபாயங்களைச் செய்வாராயின், உலகம் அதனை ஏற்றுக் கொள்ளாது.

பொழிப்பு:

உலகம் இழிவாகக் கொள்ளாத செயல்களைச் சிந்தித்துச் செய்ய வேண்டும. ஏனெனில், அரசர் தமக்குப் பொருந்தாத உபாயங்களை மேற்கொள்வாராயின் உலகம் அதனை ஏற்றுக் கொள்ளாது.

விளக்கம்:

"தம்" என்பது ஆகுபெயர். தாம் வலியராயிருந்து மெலியார்க்குக் கொடுத்தல், மெலியராயிருந்து வலியார்க்குரிய ஒறுத்தலைச் செய்தல் ஆகிய இரண்டும் அறிவிலார் செயல்களாகும். ஆதலால் இதனை "உலகங் கொள்ளா"தெனப்பட்டது. தத்தம் வன்மை, மென்மை என்பனவற்றிற்கேற்பச் செய்தல் முதலானவை உலகம் ஏற்றுக் கொள்பவையாகும். எள்ளாத - இழிவுபடுத்தாத, கேவலப்படுத்தாத; தம்மொடு - தம்முடன்; கொள்ளாத - பொருந்தாத, ஏற்றதல்லாத; கொள்ளாது - ஏற்காது;

5. அதிகாரப் பொருட் சுருக்கம்

ஒரு செயலைச் செய்யும் போது அழிவு உண்டாவதையும், பின்னர் ஆக்கம் உண்டாவதனையும், ஆக்கத்தின் வழி நின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊதியம் கிடைப்பதனையும் சீர்தூக்கிச் செயல் புரிதல் வேண்டும். தாம் தெரிந்து கொண்ட இனத்தோடு செய்யப் புகும் செயல் பற்றி ஆராய்ந்து, பின்னர் தாமும் நன்கு ஆராய்ந்து எண்ணிச் செயல் முடிக்க வல்ல அரசர்க்கு அடைவதற்கரிய பொருளென்று எதுவு மில்லை. கிடைக்கக் கூடிய ஊதியத்தினைக் கருதி முன்னிருந்த முதலை இழக்கக் கூடிய செயலை அறிவுடையார் மேற்கொள்ளார். தமக்கு ஏற்படும் இழிவரவுக்கு அஞ்சுபவர், தமது இனத்தோடு ஆராய்ந்தும் தெளிவில்லாத செயலைச் செய்யத் துணிய மாட்டார். சென்றால் நிகழக் கூடிய தீங்குகளை எலலாம முழுவதும் எண்ணாது. அரசன் பகைவர் மேற் செல்லுதல், பகைவரை, அவர்கள் வளரும் நிலத்தில் நிலைபெறச் செய்யும் ஒரு நெறியாகும். அரசன் செய்யத்தக்கன அல்லாத செயல்களைச் செய்வதால் மட்டுமன்றி, செய்யத்தக்க செயல்களைச் செய்யாதிருந்தாலும் கெடுதி உண்டாகும். செய்யத்தக்க கருமத்தை, அதன் உபாயங் களைக் கருத்தில் கொண்டு தொடங்குதல் வேண்டும். கருமத்தைத் தொடங்கிய பின் எண்ணுவோம் என்றிருத்தல் குற்றமாகும். முடிக்கக் கூடிய உபாயத்தால் ஒரு கருமத்தைச் செய்ய முயலாத முயற்சி, பலர் சேர்ந்து காப்பாற்ற முனைந்தாலும் நிறைவேறாது போய்விடும். அவரவர் குணங்களுக்குத் தக்கதாக அணுகி முடிக்காத செயலானது, நன்னோக்கத்துடன் செய்யப்பட்ட போதும் தவறு உண்டாகும். அரசர், தனது நிலைக்குப் பொருந்தாத உபாயங்களைச் செயல் முடித்தற் பொருட்டு மேற்கொள்வாராயின், அதனை உலகத் தார் இகழ்வர். ஆதலால் உலகம் இகழாத உபாயங்களைக் கைக் கொள்ளல் வேண்டும்.

6. வலியறிதல்

(அதாவது அரசனுக்குரிய உபாயங்களில் ஒறுத்தல் (தண்டித் தல்) குறித்ததான அரசனின் நால்வகை வலிகளையும், தகுதியால் அளந்து அறிதலாகும்).

1. வினைவலியுந் தன்வலியும் மாற்றான் வலியும் துணைவலியுந் தூக்கிச் செயல்.

சொற்பொருள்:

வினை வலியும் – அரசன் தான் செய்யக் கருதிய செயலின் வலிமையும்; தன் வலியும் – அதனைச் செய்து முடிக்கும் தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லமையையும்; மாற்றான் வலியும் - பகைவனது வல்லமையையும்; துணை வலியும் - தனக்கும், பகைவர்க்கும் துணைநிற்போர் வல்லமையையும்; தூக்கிச் செயல் - சீர்தூக்கிப் பார்த்துத் (தனது பக்கத்து வலிமை மிகுமாயின்) செயலில் இறங்க வேண்டும்.

பொழிப்பு :

தான் செய்யக் கருதிய செயல், செய்து முடிக்கும் தனது வல்லமை, பகைவனது வல்லமை, தனக்கும் பகைவர்க்கும் உள்ள துணையின் வல்லமை ஆகியவற்றினைச் சீர்தூக்கி அறிந்தே ஓர் அரசன் செயலில் இறங்க வேண்டும்.

விளக்கம் :

இந் நால்வகை வலிமைகளும் சாதகமாக இருந்தாலே ஓர் அரசன் பகைவரை எதிர்த்துச் செயலில் இறங்க வேண்டும். வினைவலி: காவலரண்களை முற்றுகையிடல், கைப்பற்றிக் கொள்ளுதல் முதலானவை. தன் வலி; தனது ஆற்றல் மிகுந்திருத்தல் மாற்றான் வலி; பகைவன் வலிமை குன்றியிருத்தல். துணைவலி; தனது பக்கத் துணை பலம் கொண்டிருத்தல். வினை- செயல்; தூக்கி - சீர்தூக்கி, ஆராய்ந்து.

2. ஒல்வ தறிவ தறிந்ததன் கண்தங்கிச் செல்வார்க்குச் செல்லாத தில்.

சொற்பொருள் :

ஒல்வது அறிவது அறிந்து - தமக்கு ஏற்றதான செயலையும் அதற்கு வேண்டுவதான வலிமையையும் அறிந்து; அதன் கண் தங்கிச் செல்வார்க்கு - எப்பொழுதும் மனம், மொழி, மெய்களை அதனிடத்து வைத்துப் பகைமேற் செல்பவர்களுக்கு; செல்லாதது இல் - அவர்களால் இயலாதது ஒன்றுமில்லை.

பொழிப்பு :

தமக்கு ஏற்றதான செயலையும், அதற்கு வேண்டுவதான வலிமையையும் அறிந்து, அதனிடத்தில் எப்பொழுதும் கவனம் செலுத்தி பகை முடிக்கச் செல்பவர்களால் முடியாதது எதுவு மில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்:

ஒல்வது - வினைவலி மூன்றையும் குறிப்பதாகவும், "அறிவ" என்பது துணை வலியைக் குறிப்பதாகவும் கருதுக. நால்விதமான வலிமைகளும் அமைந்திருந்தாலே பகையை வெல்ல முடியும் எனலாம். ஒல்வது - இயலக் கூடியது; அறிவது - அதற்கேற்ற வலிமை; அதன்கண் - அதனிடத்தில்; தங்கி - வைத்து, நிலை நிறுத்தி; செல்லாதது - இயலாதது, முடியாதது.

3. **உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி இடைக்கண் முரிந்தார் பலர்.**

சொற்பொருள்:

உடைத்தம் வலி அறியார் - தமது வல்லமையின் அளவை அறியாதவர்கள்; ஊக்கத்தின் ஊக்கி - மனவெழுச்சியால் தம்மிலும் வலிமையுடையவர்களுடன் செயல் புரியத் தொடங்கி; இடைக்கண் முரிந்தார் பலர் - அவர்கள் எதிர்த்ததால் செயல் முடிக்கப் பெறாது இடையே கெட்ட அரசர் உலகத்தில் பலருளர்.

பொழிப்பு:

தமது வல்லமையின் அளவறியாது, மனவூக்கத்தினால் தம்மிலும் வல்லமையுடையவர்களுடன் வினையாற்றத் தொடங்கி, அவர்கள் எதிர்த்ததால் வினை முடிவுறாமல் இடையே கெட்ட அரசர் உலகத்தில் பலருளர்.

விளக்கம்:

"உடைய தம்" என்பது "உடைத்தம்" என வந்துள்ளமையால் "உடைய" அவாவி நின்ற செயற்படு பொருளாகும். மூவகை ஆற்றல் உள்ளவர்களில் சிலரே சிறப்பான அறிவுடையர்களாதலின் "முரிந்தார் பலர்" எனப்பட்டது. எனவே தம் வலியறிந்து வினை தொடங்குக என உணர்த்தப்பட்டது. அரசன், பகைவருடன் ஆற்றும் வினை போராகும். ஊக்கத்தின் - மனவெழுச்சியின், உந்துதலின்; ஊக்கி - தொடங்கி; முரிந்தார் - கெட்டழிந்தவர்கள்.

4. **அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை வியந்தான் விரைந்து கெடும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொருள் :

ஆங்கு அமைந்து ஒழுகான் - அயல் வேந்தரோடு பழகும் முறை தெரியாதவனாயும்; அளவு அறியான் - தன் வலிமையின் அளவை அறியாதவனாயும்; தன்னை வியந்தான் - தன்னைத் தானே புகழ்ந்து கொள்பவனாயும் அவரோடு பகைத்த அரசன்; விரைந்து கெடும் - விரைவாக அழிந்து விடுவான்.

பொழிப்பு :

அயல் வேந்தருடன் பழகும் முறை தெரியாதவனாயும், தன் வலிமையின் அளவை அறியாதவனாயும், தன்னைத் தானே புகழ்ந்து கொள்பவனாயும், அவரோடு பகைத்த அரசன், விரைவில் அழிவான்.

விளக்கம் :

நட்பாயொழுகுதல், வலியறிந்து பகைத்தல் ஆகிய இரண்டினுள் ஒன்றே பகை வேந்தருடன் செய்யத்தக்கது. இவை தவிர, தான் மெலியனாய் இருந்து கொண்டு அவரோடு பகை கொள்பவனுக்கு ஒருபோதும் நிலையின்மையின் "விரைந்து கெடுமே" எனப்பட்டது. அமைந்து - பொருத்தமுற; அளவு - தனது வலிமையின் எல்லை; வியந்தான் - புகழ்வான்; விரைந்து - வேகமாக.

5. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ் சால மிகுத்துப் பெயின்.

சொற்பொருள் :

பீலிபெய் சாகாடும் அச்சு இறும் - பாரம் குறைந்த மயிலிறகை ஏற்றிய வண்டியின் அச்சும் முறிந்து விடும்; அப்பண்டம் சால மிகுத்துப் பெயின் - அப் பொருளை அளவுக்கதிகமாக ஏற்றினால்.

பொழிப்பு :

பாரம் குறைந்த மயிலிறகை அளவுக்கதிகமாக வண்டியில் ஏற்றினால் வண்டியின் அச்சும் முறிந்து விடும். (அதுபோல் அரசனும் தனது வலிமைக்கு மேலாக முயன்றால் அழிவது உறுதி)

விளக்கம் :

மயிற்பீலி மிகவும் நொய்மையானது. அதனைக் கூட அளவுக்கு மிஞ்சி ஏற்றினால் வண்டியின் அச்சு உடைந்து விடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதனுடாக ஓர் அரசன் தான் வலியன் என்றும், பல அரசர்களை எளியர் என்றும் பகைத்துக் கொண்டால், அந்த வலிமை அழிந்து விடும் என்பதாகும். அச்சு உடைந்து விடும் என்பதைக் கூறியதன் மூலம் மீதியாகவுள்ள அரசனின் அழிவை உணர்த்தி நிற்பதை "பிறிது மொழிதல்" என நூலோர் கூறுவர். பீலி - மயிற்றோகை; சாகாடு - வண்டி; இறும் - முறியும்; சால - மிகவும்; மிகுத்து - அளவுக்கு அதிகமாக; பெயின் - ஏற்றின்.

6. நுனிக்கொம்பர் ஏறினார் அ.ஃதிறந் தூக்கின் உயிர்க்கிறுதி ஆகி விடும்.

சொற்பொருள்:

கொம்பர் நுனி ஏறினார் அஃது இறந்து ஊக்கின் - மரத்தின் உச்சாணிக் கிளையில் ஏறியவர் மேலும் ஊக்கத்தினால் ஏற முற்படின்; உயிர்க்கு இறுதி ஆகிவிடும் - அவ்வூக்கம் அவரது உயிருக்கு இறுதியாய் முடிந்து விடும். (அதுபோல அரசனும் ஓர் எல்லை வரையே செல்ல முடியும்).

பொழிப்பு:

மரத்தின் உச்சாணிக் கொப்பினை ஏறியவர், மேலும் ஊக்கத் தினால் மேலே ஏற முற்படின், அவ்வூக்கமே அவரது உயிருக்கு இறுதியாய் முடிந்து விடும். (அரசனும் ஓர் எல்லை வரையே முயற்சிக்க முடியும். மேலும் முயற்சித்தால் அழிய நேரிடும்).

விளக்கம்:

"நுனிக் கொம்பர்" என்பது பின் முன்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத் தொகை "கொம்பர் நுனி" என்றாகும். அதுவே கொம்பினது நுனி என வேற்றுமையுருபு ஏற்கும். உயிரிழத்தலை இறுதி எனப்பட்டது. நுனிக் கொம்பர் ஏறிநின்று ஊக்கத்தால் மேல் ஏறிநின்று உயிரிழப்பவர் போன்று அரசனும் பகைவர் மேல், தன்னால் செல்லக் கூடிய அளவு போரில் செல்ல முடியுமே தவிர, மேற் சென்றால் உயிருக்கே இறுதியாகி விடும் என்பதை இக்குறள் "பிறிது மொழிதல்" மூலம் உணர்த்தியுள்ளது. கொம்பர் - கொப்பு, கிளை; அஃதிறந்து (ஆஃதுஇறந்து) - அந்த அளவினைக் கடந்து; ஊக்கின் - முயற்சிப்பின்; இறுதி - முடிவு, மரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. **ஆற்றின் அளவறிந் தீக அதுபொருள்**
போற்றி வழங்கு நெறி.

சொற்பொருள்:

ஆற்றின் அளவு அறிந்து ஈக – பிறருக்குக் கொடுக்கும் போது தமக்குள்ள பொருளின் அளவு அறிந்து ஈதல் வேண்டும்; அது பொருள் போற்றி வழங்கும் நெறி – அங்ஙனம் ஈதல் பொருளைப் போற்றி வாழும் நெறியாகும்.

பொழிப்பு:

பிறருக்குக் கொடுக்கும் போது தம்மிடமுள்ள பொருளின் அளவு அறிந்து ஈதல் வேண்டும். அவ்வாறு ஈதல் பொருளைப் போற்றி வாழும் நெறியாகும்.

விளக்கம்:

*"ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு" என்ற பழமொழியை உணர்த்தும் குறட்பா இதுவெனலாம். அளவறிந்து கொடுக்காவிட்டால் அரசனும் கெட்டழிய நேரிடும் என்பதை இதனூடு அறியலாம். அளவுக்கேற்ப ஈதல் என்பது "போற்றி வழங்கும் நெறி" எனப்பட்டது. ஈதலுக்கான எல்லை பற்றித் **திரிகடுகம்** நூல் குறிப்பிடுகையில் ஒருவனிடம் இருக்கும் பொருளை நான்கு கூறாக்கி, இரண்டு பங்கினைத் தனக்கும், ஒரு பங்கினை இடர் வந்த போது பயன்படுத்தவும், ஏனைய ஒரு பங்கினையே ஈதலும் செய்ய வேண்டும் என்பதையும் நோக்குக. ஆற்றின் – ஈயும் நெறியின்; அளவு – எல்லை; ஈக – கொடுத்திடுக; நெறி – வழி.*

8. **ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை**
போகா றகலாக் கடை.

சொற்பொருள்:

போகு ஆறு அகலாக் கடை – அரசர்க்கு பொருளைச் செலவு செய்யும் வழி விரிவில்லாது இருக்குமாயின்; ஆகு அளவு இட்டியதாயினும் கேடு இல்லை – ஆக்கிக் கொள்ளும் பொருளின் அளவு சிறியதாயிருந்தாலும் அதனால் கேடு இல்லை.

பொழிப்பு:

அரசர் பொருளைச் செலவு செய்யும் வழி விரிவற்று இருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயின் ஆக்கிக் கொள்ளும் பொருளின் அளவு சிறியதாயிருந்தாலும் அதனால் கேடு இல்லை.

விளக்கம் :

இட்டிது – சிறியது; அகலா – விரிவின்றி; கேடு – நட்டம், தீமை; ஆறு – வழி. இட்டிது அகலா என்பது பண்புத் தொழில்கள் பொருள் மேல் நின்றன. முதலும் செலவும் தம்முள் ஒப்பினும் அதனால் கேடில்லை என்பதாகும். அதாவது வரவு சிறிதாயினும் செலவும் குறைந்திருப்பின் கேடு இல்லையாம் என்று கருதுக.

9. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல் இல்லாகித் தோன்றாக் கெடும்.

சொற்பொருள் :

அளவு அறிந்து வாழாதான் வாழ்க்கை – தனக்குள்ள பொருளின் எல்லையை அறிந்து அதற்கேற்ப வாழ முடியாதவன் வாழ்க்கை; உளபோல இல்லாகித் தோன்றிக் கெடும் – வருவாய் உள்ளது போலத் தோன்றி, உண்மையில் இல்லாமலே போய்க் கெட்டு விடும்.

பொழிப்பு :

தன் பொருளின் எல்லையறிந்து அதற்கேற்ப வாழாதவனின் வாழ்க்கை, உள்ளதுபோலத் தோன்றி இல்லாது போய்விடும்.

விளக்கம் :

உளபோல – உள்ளது போல; இல்லாகி – இல்லாததாகி; கெட்டு விடும் – அழிந்து விடும். இக் குறட்பாவானது பொருளின் வலிமையினைக் கூறுகிறது. அதனை அளவறிந்து பேணுதலையும் வலியுறுத்துகிறது. அதனைக் கடைப்பிடியாதவன் வாழ்க்கை அழிந்து விடும் என்கிறது.

10. உளவரை தூக்காத ஒப்புர வாண்மை வளவரை வல்லைக் கெடும்.

சொற்பொருள் :

உளவரை தூக்காத ஒப்புரவு ஆண்மை – தனது பொருளின் அளவைச் சீர்தூக்கிப் பாராதவனின் ஒப்புரவு என்னும் ஆண்மை யால்; வளவரை வல்லைக் கெடும் – அவனது செல்வத்தின் எல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவாகக் கெட்டு விடும்.

பொழிப்பு :

தனது பொருளின் அளவைச் சீர்தூக்கிப் பராதவனின் ஒப்புரவு என்னும் ஆண்மையால், அவனது செல்வத்தின் அளவு விரைந்து அழிந்து விடும்.

விளக்கம் :

இக் குறட்பாவும் பொருட் செல்வத்தின் எல்லையறிதல், செலவு செய்கையில் சீர்தூக்கிப் பார்த்தல் முதலானவற்றைக் கூறுமுகமாகப் பொருள் வலிமையை எடுத்துக் காட்டியுள்ளது. தூக்காத - சீர்தூக்காத, ஆராயாத; ஒப்புரவு - உலக நடையறிந்து ஒழுகுதல்; ஆண்மை - வல்லமை, ஆற்றல்; வளவரை - செல்வத்தின் எல்லை; வல்லை - விரைவாய்.

6. அதிகாரப் பொருட் சுருக்கம்.

செய்யக் கருதிய செயலின் வலிமை, தனது, செயல் முடிக்கும் வலிமை, பகைவரின் வலிமை, தனக்கும் பகைவர்க்கும் துணையானோர் வலிமை ஆகியவற்றைச் சீர்தூக்கிப் பார்த்துத் தன் வலிமை மிகுமானால் செயலினைத் தொடங்குதல் வேண்டும். தாம் செய்யவிருக்கும் செயலையும், அதற்கு வேண்டுவதான வலிமையையும் அறிந்து, அதன்கண் முழுக் கவனமும் வைத்துப் பகைமேற் செல்வோர்க்கு முடியாத செயலென்று எதுவும் இல்லை. தம்முடைய வல்லமையின் அளவை அறியாமல் மனவூக்கத்தினால் செயலைத் தொடங்கி, பகைவர் எதிர்ப்பினால் அது நிறைவுபடாது இடையில் கெட்டழிந்த அரசர் பலர் உலகில் உளர். அயல் வேந்தரோடு பொருத்தமான முறையில் அணுகாமலும், தனது வலிமையின் அளவை அறியாமலும் தன்னைத் தானே புகழ்ந்து பகைவரை எதிர்கொண்ட அரசன் விரைந்து அழிவான். நொய்மையான மயிலிறகையும் அளவுக்கதிகமாக வண்டியில் ஏற்றினால் வண்டியின் அச்சு உடைந்து விடும். அதுபோல் எளியவரான பலரோடு பகை கொண்ட அரசன், தான் வலிமை வாய்ந்தவனானாலும் அழிந்து விடுவான். மரத்தின் நுனிக் கொம்பினில் ஏறியவர் ஊக்கமுடன் இன்னும் மேலே ஏறுவாராயின் அதுவே அவரது உயிர்க்கு இறுதியாகி விடும். அதுபோல் அரசனும் தன்னால் இயலக்கூடிய எல்லை வரையே பகைமேற் செல்ல வேண்டும். தம்மிடமுள்ள பொருளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவறிந்து ஈய வேண்டும். அதுவே பொருள் பேணுவோர் போற்றும் நெறியாகும். அரசருக்குப் பொருள் வரும் வழியின் அளவு சிறிதாயினும், பொருள் செலவழிந்து போகின்ற வழியளவு பெருகாதாயின் அதனால் கேடில்லை. பொருளின் அளவறிந்து வாழாதவனுடைய வாழ்க்கை உள்ளது போலத் தோன்றினாலும் உய்வின்றி அழிந்து போகும். உள்ளதாகிய வளத்தின் எல்லையைச் சீர்தூக்கிப் பாராத ஒப்புரவாகிய ஆண்மையால், உள்ள பொருள் வளமெல்லாம் விரைவாக அழிந்து விடும்.

குறிப்புகள்.

1. அறிவுடைமை பற்றிய கருத்துக்கள் :

அ) அறிவு இறுதி வராமல் காக்கும் கருவி

ஆ) அறிவு, பகைவராலும் உட்புகுந்து அழிக்க முடியாத அரண்.

இ) அறிவு, மனம் போனபடி செல்லவிடாது நன்மையின்பால் செலுத்துவது.

ஈ) அறிவு, யார் எதைச் சொன்னாலும் அதில் மெய்ப்பொருள் காண்பது.

உ) தான் சொல்லும் அரிய பொருளையும் கேட்பார் மனங் கொளச் சொல்வது அறிவு.

ஊ) பிறர் கூறும் அரிய பொருளையும் நுண்மையாக அறிந்து உணர்வது அறிவு.

எ) மலர்தலும் கூம்புதலும் இல்லாமல் ஒரே தன்மையுடையது அறிவு.

ஏ) உலகத்தை நட்பாக்குவது அறிவு.

ஐ) உலகத்தோடு சேர்ந்து அதற்கேற்ப ஒழுகச் செய்வது அறிவு.

2. அறிவுடையார் இயல்புகள் :

அ) எதிர் காலத்தில் நடக்கவிருப்பதை முன்கூட்டியே அறிய வல்லவர்.

ஆ) அஞ்ச வேண்டியதற்கு அஞ்சுபவர்.

இ) வரக்கடவதை முன்னர் அறிந்து காக்க வல்லவராதலால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுக்கமுறும் துன்பமடையாதவர்.

ஈ) பிறிதொன்றும் இல்லாராயினும் அறிவுடைமையால் எல்லாம் உடையவர்.

3. அறிவிலார் இயல்புகள் :

அ) பிற்காலத்தில் வரக்கூடியதை முன்கூட்டியே அறிய மாட்டாதவர்.

ஆ) அஞ்சவேண்டியதற்கு அஞ்சாத பேதைமை கொண்டவர்.

இ) பின்னால் வருவதை முன்கூட்டியே அறிய முடியாமையால் நடுக்குறும் துன்பத்துக்கு உள்ளாகுபவர்.

4. **குற்றம் கடிதலாவது**; அரசன், ஆறுவகையான குற்றங்களையும் தன்னிடத்தில் நிகழாமற் கடிதலாகும். (கடிதல் – நீக்குதல்).

5. குற்றம் கடிதல் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள அரசன் கடைப் பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் :

அ) செருக்கின்றி நடத்தல்

ஆ) சினங் கொள்ளாதிருத்தல்.

இ) காமமாகிய சிறுமையைப் பேணாதிருத்தல்.

ஈ) பழிக்கு நாணுதல்

உ) தனக்கு இறுதி தரக்கூடிய பகையாகிய குற்றம் அணுகாமல் பாதுகாத்தல்.

ஊ) வருமுன் காத்தல்.

எ) முதலில் தன் குற்றம் நீக்கிப் பின்னர் பிறர் குற்றம் காணல்.

ஏ) பொருட் செல்வத்தால் செய்யத் தக்கவற்றைச் செய்தல்.

ஐ) பொருளின்மேல் பற்றுக் கொண்டு உலோபஞ் செய்யாதிருத்தல்.

ஒ) தன்னைப் புகழாதிருத்தல்

ஓ) நன்மை தராத செயலைச் செய்யாதிருத்தல்

ஔ) தான் விரும்பும் பொருள்களைப் பிறர் அறியாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவிக்க முடிதல்.

6. "குற்றம் கடிதல்" அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள அரசன் பின்பற்றக் கூடாத, அவனுக்குக் கேடு விளைவிக்கக் கூடிய செயல்கள் :

அ) செருக்கு

ஆ) சினம்

இ) காமம்

ஈ) உலோபத் தனம்

உ) பழிக்கு நாணாமை

ஊ) நன்மையில்லா மானம்

எ) அளவற்ற மகிழ்ச்சி

ஏ) பகையணுகல்

ஐ) வருமுன் காவாமை

ஒ) தன் குற்றம் நீக்காமல் பிறர் குற்றம் காணல்.

ஓ) பொருளால் செய்ய வேண்டியதைச் செய்யாமை

ஔ) பொருளின் மேல் பற்று வைத்து உலோபஞ் செய்தல்.

க) தன்னை வியந்து கொள்ளல்.

கா) தான் விரும்பும் பொருள்களைப் பிறர் அறியாமல் அனுபவிக்காமை.

7. "பெரியாரைத் துணைக்கோடல்" என்னும் அதிகாரத்தில் கூறப் பட்டுள்ள பெரியாரின் இயல்புகள் :

அ) அறத்தினது நுண்மையை அறிந்த அறிவுடையவர்கள்.

ஆ) தெய்வத்தாலும், மக்களாலும் ஏற்படக் கூடிய துன்பங்களை நீக்கும் முறையறிந்து நீக்குவதுடன், பின்னரும் அத்தகைய துன்பங்கள் வராது முற்கூட்டியே அறிந்து காக்க வல்ல வர்கள்.

இ) அரசர்க்குரிய பேறுகளில் எல்லாம் சிறந்த பேறாகத் துணை நிற்கக் கூடியவர்கள்.

ஈ) அரசனிடத்துத் தீயன கண்டால் நெருங்கி இருந்து இடித்துரைத்துத் தடுக்க வல்லவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ) அரசனின் பாரத்தினை (பொறுப்பினை)த் தாம் ஏற்று நடத்தி அவனின் கண்ணாக விளங்கக் கூடியவர்கள்.

8. பெரியாரைத் துணையாகக் கொண்ட அரசன் அடையக் கூடிய நன்மைகள் பற்றித் திருக்குறளின் "பெரியாரைத் துணைக் கோடல்" அதிகாரத்தில் கூறப்பட்ட கருத்துக்கள் :

அ) பெரியாரைத் தமராகப் பேணுவதே அரியவற்றுள் பெரிய பேறாகும்.

ஆ) பெரியாரைப் பேணித் தம்மவராகக் கொள்ளல் அரசனின் வலிமைகளுள் தலை சிறந்தது.

இ) தனது பாரத்தை ஏற்று நடத்தும் அமைச்சர் கண்ணாக விளங்குவதால் அவரை ஆராய்ந்து துணை கொள்ளல் மூலம் பெறும் நன்மை.

ஈ) தகுதி வாய்ந்த பெரியாரைத் துணையாகக் கொள்வதால் பகைவரால் தீங்கு நேராமை.

உ) தவறை இடித்துரைக்கும் பெரியாரின் துணை இருக்கையில் தன்னைக் கெடுக்கக் கூடிய பகைவர் இல்லாமை.

9. "பெரியாரைத் துணைக் கோடல்" அதிகாரத்தில் கூறப்பட்ட பெரியாரைத் துணை கொள்ளாமையால் அரசனுக்கு ஏற்படக் கூடிய தீமைகள் :

அ) இடித்துரைத்துத் தவறைத் திருத்தும் பெரியார் துணை யில்லாத காவலற்ற மன்னன், கெடுப்பாரின்றியே கெட்டழி வான்.

ஆ) பொருள் முதலில்லார்க்கு வருமானம் கிடையாதது போன்று, தம்மைத் தாங்கி நிற்கக் கூடிய பெரியார் துணையில்லா அரசனுக்கு வாழ்வு நிலைத்ததாயிராது.

இ) தான், தனித்து நின்று பலரோடும் பகை கொள்ளுதலின் பத்து மடங்கு தீமை உடையது நல்லாராகிய பெரியாரின் நட்பை விலக்குதல் ஆகும்.

10. "சிற்றினம் சேராமை" என்னும் அதிகாரத்தில் இன நலம் பற்றிக் கூறப்பட்ட கருத்துக்கள் :

அ) நிலத்தின் இயல்புக்கேற்ப நீர் காணப்படுவது போல், அறிவும் இனத்தின் இயல்புக்கேற்ப மனிதர்களிடம் காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) மனிதர்க்கு மனத்தினால் பொதுவுணர்வு உண்டாகுமாயினும், இவன் இத்தன்மையன் என்று உலகோர் சொல்லும் சொல் இனங் காரணமாக உண்டாகும்.

இ) விசேட உணர்வானது ஒருவர்க்கு மனத்திலுள்ளது போல் தன்னைப் புலப்படுத்தினாலும், அது இனத்தின்கண் உள்ளதாகும்.

ஈ) மனத்தூய்மை, செயற்றூய்மை ஆகிய இரண்டும் இனத் தூய்மையைப் பற்றுக்கோடாகக் கொண்டே உருவாகும்.

உ) மனத்தூயர்க்கு எச்சம் நன்றாயிருப்பினும் இனத்தூயர்க்கு யாவும் நலமாகும்.

ஊ) மன நலமானது நிலைபெற்ற உயிர்களுக்கு ஆக்கம் தருவது போல் இன நலம் எல்லாப் புகழையும் தரும்.

எ) மனநலம் நன்குடையவர்க்கும் அதற்கான வலிமையை அளிப்பது இன நலமாகும்.

ஏ) மன நலத்தினால் மறுமை இன்பம் கிடைத்தாலும், அச் சிறப்பும் இன நலத்தினாலேயே வலிமை பெறுவதாகும்.

ஐ) நல்லினத்தின் மிக்க துணையில்லை; தீய இனத்தின் மிக்க பகையும் இல்லை.

11. குணத்தினால் பெரியவர்க்கும், சிறியவர்க்கும் "சிற்றினம் சேருதல்" தொடர்பாகத் திருவள்ளுவர் முன்வைத்த கருத்து :

பெரியவர்கள் சிற்றினத்தைக்கண்டு அஞ்சுவார்கள்; சிறியவர்களோ அதனைச் சுற்றமாகக் கருதிக் கொள்வார்கள்.

12. அரசன், ஆராய்ந்து செயல் புரிதல் வேண்டும் என்பது பற்றித் திருவள்ளுவர் கூறும் கருத்துக்கள் :

அ) அழிவு ஏற்படுதல், பின்னர் ஆக்கமுண்டாதல், அதனால் வருமானம் உண்டாதல் ஆகியவற்றைச் சீர்தூக்கி ஆராய்ந்து செயல் புரிதல் வேண்டும்.

ஆ) தாம் தேர்ந்தெடுத்த இனத்தோடு ஆலோசித்துச் செயலைச் செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) தெரிந்த இனத்தோடு ஆலோசித்த பின், தானும் நன்கு சிந்தித்துச் செயலில் இறங்க வேண்டும்.

ஈ) ஆக்கம் கருதி முதல் இழக்கும் செயலைச் செய்யக் கூடாது.

உ) ஆராய்ந்து துணியாத செயலில் இறங்கி உலகோர் கூறும் இளிவரவுக்கு ஆளாகக் கூடாது.

ஊ) நிகழக் கூடிய திறங்களை முற்றவெண்ணாது, பகைவர் மேற் செயலில் இறங்கக் கூடாது.

எ) செய்ய வேண்டாததைச் செய்தலும், செய்ய வேண்டியதைச் செய்யாதிருத்தலும் கேட்டினை உண்டாக்கும்.

ஏ) முடிக்கும் உபாயத்தை எண்ணிச் செயலைத் தொடங்காமல், தொடங்கிய பின் எண்ணுவோம் என நினைப்பது கேடு தரும்.

ஐ) முடிக்கும் உபாயங்களை ஆராய்ந்து செய்யாத செயல் நிலைபேறாது.

ஒ) அவரவர் குணப் பண்பறிந்து செயல் செய்யாதுவிடின், நன்னோக்கமும் பிழைத்து விடும்.

ஓ) தனக்குப் பொருந்தாத உபாயங்களைப் பேணிச் செயல் புரியின் உலகோர் இகழ்வர்.

13. வள்ளுவர் கூறும் அரசனுக்குரிய நால்வகை வலிமைகள் :

அ) செயல் வலிமை ஆ) தன் வலிமை

இ) பகைவன் (மாற்றான்) வலிமை ஈ) துணை வலிமை.

14. வலியறிதலின் அவசியம் பற்றி வள்ளுவர் கூறும் கருத்துக்கள் :

அ) நால்வகை வலிமைகளையும் சீர்தூக்கிப் பகைமேற் செல்லல் வேண்டும்.

ஆ) தமக்கு இயலக் கூடிய செயலையும், அதற்கான வலிமையையும் அறிந்து அதில் அதிக கவனம் செலுத்திச் செயலில் இறங்க வேண்டும்.

இ) தனது வலிமையின் அளவை அறியாது செயல் புரிதல் ஆகாது.

ஈ) அயல் வேந்தரோடு பொருத்தமாகப் பழகுதலும், தன் வலி அறிதலுமின்றிப் பகைமேற் செல்லல் அழிவைத் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ) எளியவர் (பலவீனமானவர்) பலரைப் பகைவராகக் கொண்டு செயலில் இறங்கினால், தான் எவ்வளவு வலிமை கொண்டிருந்தாலும் அழிய நேரிடும்.

ஊ) தனது எல்லையைக் கடந்து (வலி இயல்பு) அப்பாற் சென்றால் அழிய நேரிடும்.

எ) தனது பொருளின் அளவறிந்து பிறர்க்கு ஈதல் வேண்டும்.

ஏ) பொருள் வரவு குறைந்தாலும், செலவு அதிகரிக்காவிடில் கேடில்லை.

ஐ) அளவறிந்து வாழாதவன் வாழ்க்கை உளதுபோல் காட்டிப் பின்னர் கெட்டு விடும்.

ஒ) தனது பொருள் வளத்தை ஆராய்ந்து செயற்படாத ஒப்புரவு ஆற்றலால் அவனது செல்வம் விரைந்து அழியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சிலப்பதிகாரம்



தமிழிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் முதலாவதான சிலப்பதிகாரம், சங்கம் மருவிய காலப்பிற் பகுதியில் எழுந்ததாகக் கருதப்படுகின்றது. சேரன் செங்குட்டுவனின் இளவலான இளங்கோவடிகள் இதனை இயற்றினார். குன்றக்குரவர்களும், மதுரைக் கூலவாணிகன் சாத்தனாரும் கூறிய செய்திகளை அடிப்படையாகக் கொண்டே இளங்கோவடிகள் "நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணி ஆரம்" படைத்தளித்தார்.

தமிழ் நாட்டுக் கதையினைக் கருப்பொருளாகக் கொண்டு கோவலன், கண்ணகி வரலாற்றைக் கூறும் முதற்றமிழ்க் குடிமக்கள் காப்பியம் இதுவாகும். புகார்க்காண்டம் (10காதைகள்), மதுரைக் காண்டம் (13காதைகள்), வஞ்சிக் காண்டம் (07காதைகள்) ஆகிய மூன்று காண்டங்களையும், மங்கலவாழ்த்துப் பாடல் முதலாக வரந்தருகாதை ஈறாக முப்பது காதைகளையும் தன்னகத்தே கொண்டு, வஞ்சிப்பா, கலிப்பா தழுவிய அகவற் பாக்களினாலும், உரையிடைப்பட்ட செய்யுள்களாலும், வெண்பாக்களாலும் சிலப்பதிகாரம் அமைந்துள்ளது.

அரசியல் பிழைத்தோர்க் கறங்கூற்றா மென்பதும்
ஊரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேற்றுவரென்பதும்
ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதும்
சூழ்வினைச் சிலம்பு காரணமாகச்
சிலப்பதி கார மென்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்"

எனவரும் செய்யுளால் சிலப்பதிகார காப்பிய நோக்கத்தினை இளங்கோவடிகள் கூறியிருக்கின்றார். புகார், மதுரை, வஞ்சி போன்ற நகர மக்களது வாழ்வியலும், கிராம மக்களின் வாழ்வியலும் இணைந்த தமிழ்நாட்டின் வரலாறு இந்நூல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தின் சோழநாட்டில் உருவாகி, பாண்டிய நாட்டில் வளர்ச்சி பெற்று, சேரநாட்டில் முழுமை பெறும் காப்பியமிது. கோவலன் – கண்ணகி திருமணத்தின் போது பலரும் வாழ்த்துரைக்கும் நிகழ்ச்சியுடன் கதை தொடங்கி, விண்ணுலகிலிருந்து கண்ணகித் தெய்வம் வரமளிப்பதுடன் முற்றுப் பெறுகிறது. முத்தமிழ் இலக்கியப் பெட்டகமான சிலப்பதிகாரத்தில் நாட்டாரியற் பண்பாட்டுக் கோலங்கள் பலவுண்டு. கானல்வரி, ஆற்றுவரி, அம்மானைவரி, கந்துகவரி, குரவைப்பாட்டு, வள்ளைப்பாட்டு முதலானவை இசைப்பாட்டுக்களாகும். பல்வேறு இடங்களில் இது ஒரு 'நாடகக் காப்பியம்' என்னும் விதத்தில் உரையாடல்களையும், பாத்திர வார்ப்புக்களையும் இளங்கோவடிகள் உருவாக்கித் தந்துள்ளார். தமிழ் மக்களது தேசியக் காப்பியமாக, குடிமக்கள் காப்பியமாக, முத்தமிழ்க்காப்பியமாக, மூவேந்தர் காப்பியமாக, பெண்ணின் பெருமை பேசும் காப்பியமாக, 'சிலம்பினை' நாம் நோக்க முடிகிறது. சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் உரைகண்டுள்ளார்.

இளங்கோவடிகள் வரலாறு

சிலப்பதிகார காவியத்தின் நூலாசிரியரான இளங்கோவடி களின் இயற்பெயர் தெரியவில்லை. இளவரசன் என்பதனால் இளங்கோ எனப்பட்டார். சேர நாட்டின் வஞ்சி நகரைத் தலையிட மாகக் கொண்டு அரசாண்ட சேரலாதன் என்பவனின் இளைய மகனே இவராவார். இவர் சேரன் செங்குட்டுவனுக்குத் தம்பியும் ஆவார். துறவு பூண்டமையால் அடிகளானார். இவர் வஞ்சி மூதூர் மணி மண்டபத்தில் தந்தையுடன் இருக்கையில், அங்கு வந்த நிமித்திகன் ஒருவன் இவரை நோக்கி, அரசாளுதற்குரிய இலக்கணம் இருப்பதாகக் கூற, தமையன் செங்குட்டுவன் இருக்க இவ்வாறு முறைமை கெடக் கூறுவதா என வெகுண்டு தமையனுக்குத் துன்பமுண்டாகாதவாறு குணவாயிற் கோட்டத்திலே துறவு பூண்டனர். இந்நூல் இயற்றுவதற்கான காரணம் இதன் பதிகத்து முற்பகுதியில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இவர் துறவு பூண்ட பின்னரே சிலப்பதிகாரம் இயற்றப்பட்டது. காவிரிப் பூம் பட்டினத் திலும், வஞ்சி நகரிலும் நடந்தவற்றை அறிந்தோர் வாய்க் கேட்டும் வஞ்சியிலும், வடநாட்டிலும் நிகழ்ந்தவற்றைத் தாமே கண்டும், கேட்டும் இந்நூலினை எழுதியுள்ளார். குன்றக் குரவர்களும், மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாரும் கூறிய பத்தினித் தெய்வம் பற்றிய செய்திகளும், சாத்தனாரின் வேண்டுகோளும் இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் இயற்றக் காரணமாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்குட்டுவன் பத்தினிக் கோட்டம் இயற்றி, கண்ணகிக்கு விழா எடுத்தபோது கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும் கலந்து கொண்டமை பற்றி "வரந்தருகாதை" குறிப்பிட்டுள்ளது. அவ் வேந்தன் இலங்கையில் பத்தினித் தெய்வத்திற்குக் கோயில் அமைத்தாரெனவும், அவரது காலம் கி.பி 2 ஆம் நூற்றாண்டு எனவும் அறிய முடிகிறது. எனவே சிலப்பதிகாரம் இயற்றப்பட்ட காலமும் அதுவாயிருக்க முடியும் எனலாம். இளங்கோவடிகளைச் சைவ சமயத்தவரென ஒரு சாராரும், சமண சமயத்தவரென இன்னொரு சாராரும் கூறுவர். இளங்கோவடிகளின் தந்தையும், தமையனும் சைவ சமயத்தவர்கள் ஆவர். அடிகள் துறவு பூண்டிருந்ததாலும் சிலம்பின் கதையைப் பாடும் போது அதற்கேற்ப சமணத் துறவியையும் படைத்து சமண சமயக் கருத்துக்களையும் தந்துள்ளார். மேலும் பல்வேறு சமயக் கருத்துக்களுக்கும் இடந்தந்துள்ளார். சமய நடுநிலையாளராகத் தம்மைக் காட்டியுள்ளார் எனவும் கூறப்படுகிறது.

ஊர்காண் காதை - கதைச்சுருக்கம்

சிலப்பதிகாரத்தின் 14வது காதையாகவும், மதுரைக் காண்டத்தின் நான்காவது காதையாகவும் "ஊர்காண் காதை" அமைந்துள்ளது. இது, புறஞ்சேரி இறுத்த காதையை அடுத்தும், அடைக்கலக் காதைக்கு முன்னரும் காணப்படுகிறது. கோவலன் மதுரைப் பேரூர்(நகர்) சென்று அதன் இயல்புகளைக் கண்டறிந்த பகுதியாதலால் இப் பெயர் பெற்றது எனலாம். பொழிலும், கழனியும் புட்கள் எழுந்து ஆரவாரம் செய்யக் கீழ்த் திசையில் ஞாயிறு தோன்றியது. இறைவன் கோயிலில் வலம்புரிச் சங்கும், காலை முரசும் ஒலித்தன. கோவலன், தியானத்திருந்த கவுந்தி அடிகளை (சமணத் துறவி) வணங்கித் தான் உற்ற துன்பங்களை உரைத்து, மதுரை நகர் சென்று அங்குள்ள பெரு வணிகர்க்குத் தன் நிலைமையைத் தெரியப்படுத்தி வருமளவும், "இப் பைந்தொடி நுமது பாதக் காப்பினள்" என்று கூறினான். அதுகேட்ட அடிகள், உலகிலே மக்கள் எய்தும் இன்ப, துன்பங்களின் காரணங்களை எடுத்துரைத்து, முன்னரும் துன்பமுற்றோர் பலர் உளர் என்பதற்கு இராமனையும், நளனையும் எடுத்துக் காட்டி, நீ அவர்கள்போல் இல்லை; உன் மனைவியுடன் பிரியா வாழ்க்கை பெற்றனை; ஆதலால் நடந்ததை எண்ணி வருந்தாது, மதுரை நகர் சென்று பொருந்தும் இடம் அறிந்து வருக என்றனர். இவ்வாறு அடிகளார் கூறியதும் கோவலன், மதில் சூழ்ந்த மதுரைக்குச் சென்று, மகளிர் காதலருடன் புனல், பொழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாடி, நிலாமுற்றச் சேக்கை மீதிருந்து கார்ப்பருவ வரவை எண்ணி இன்புறும் முது வேனிலின் கடை நாளில், அரசனிடம் சிறப்புப் பெற்ற பொற்றொடி மடந்தையருடன் செழுங்கடிச் செல்வர் களும் வையங்காவலரும் மகிழ்ந்திருக்கும் வீதி, அறுபத்து நாலு கலையுணர்ந்த பரத்தையரின் சிறுபெரும் வீதிகள், செல்வமிக்க அங்காடி வீதி, பயனுடைய இரத்தினக் கடை வீதி(நவமணிகளின் இலக்கணம் இதில் கூறப்பட்டுள்ளது), நால்வேறு தெருக்கள், சந்திகள் ஆகியவற்றை உடைய பேரூரைக் கண்டு(பெருநகரை) புறஞ் சேரிக்கண் மீண்டனன். "ஊர்காண் காதை" யில் இடம்பெற்ற செய்திகள் இவையாகும்.

பாடப்பரப்பு

கோவலன், கவுந்தி அடிகளை வணங்கித் தனது துயர் நிலை கூறுவதும், அதுகேட்டு அடிகளார் அவனைத் தேற்றும் பொருட்டு அறவுரைகள் கூறி மனம் வருந்தாது மதுரை நகர் சென்று திரும்புக எனவுரைத்ததுமான 15 - 61 அடிகள் வரையுள்ள பகுதியே பாடப்பரப்புக்கானது.

ஊர்காண் காதை - பாடப்பரப்பின் கதைச்சுருக்கம்

கோவலன், தியான நிலையிலிருந்த கவுந்தி அடிகளைக் கைதொழுது, போற்றித் தான் நல் நெறியின் நீங்கிய தன்மை உடையவன் ஆவேன்; மலர்போலும் மேனியையுடைய கண்ணகி பெருந்துயர் அடையுமாறு, அறியாத நாட்டின் தொல்லை மிகுந்த வழிகளில் அலையச் செய்து சிறுமையுற்றேன், பழமையான மதுரைப் பேரூர் சென்று வரும் வரையில் இவள், தங்களின் காவலில் இருக்கட்டும், அதனால் தங்களுக்குத் துன்பம் ஏதும் உண்டோ? என்றான். அதற்கு அடிகள், கோவலனுக்குப் பதில் கூறுவார்; நீ காதலியோடு, அறவழி செல்லாது தீய வழி சென்று தனியே துன்பங்களை அனுபவித்துள்ளாய், பாவச் செயல்களை விட்டு நீங்குங்கள்; அவ்வாறு நீங்காவிடின் அப்பாவச் செயல்களின் பயனாகத் துன்பங்களை அனுபவிக்க நேரிடும்; இவ்வாறு அறநெறியினின்ற பெரியோர்கள் கேட்பவர் இயல்புக்கு ஏற்றவாறு தங்கள் நாவைக் குறுந்தடியாகக் கொண்டு வாயாகிய பறையினை அடித்துக் கூறினாலும், அறிவு என்னும் உறுதி இல்லாதவர்கள், அது நன்மையானது என ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். பின்பு அத்தீய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெவ்வினையானது தோன்றிப் பாவங்களின் பயனை அனுபவிக்கச் செய்து துன்புறுத்தும்போது தமது அறியாமையால் மயங்குகின்றனர். கற்றுணர்ந்த பெரியோர்கள் தவிர்க்கவியலாத தீவினைப் பயனை நுகரும்போது செயலிழந்து கலங்க மாட்டார்கள்.

மகளிரைப் பிரிதலால் ஏற்படும் துன்பமும், அவரைப் புணர்தலால் ஏற்படும் துன்பமும், மன்மதன் மயங்குவதால் உண்டாகும் துன்பமும் சுருண்ட கூந்தலையுடைய பெண்டிரைப் புணர்ந்தோருக்கு என்றும் உள்ளதல்லால், ஒப்பற்ற தனி வாழ்க்கையுடைய துறவியர்க்கு இல்லை. பெண்டிரும், உண்டியும் மாத்திரம் உலகில் இன்பந் தருபவை எனக் கருதி வாழ்பவர்கள், அளவற்ற துன்பத்தையே முடிவில் காண்பவராகி, துறவிகள் விலக்கிவிட்ட காமத்தையே பற்றுக் கோடாகக் கொண்டு, அதனுள் மூழ்கிக் கரைகாண முடியாத துன்பத்தை அடைந்தவர்கள், இந் நிகழ்காலத்தில் மட்டுமன்றி முந்திய காலத்திலும் பலர் இருந்துள்ளனர். இது தொன்று தொட்டு வரும் பழமையாகும்.

தந்தையின் கட்டளையால் தன் மனைவியுடன் காடு சென்று, அங்கே அவளைப் பிரிந்து மிக்க துன்பத்தில் வருந்தியவன், வேத முதல்வனான நான்முகனைப் பெற்ற திருமால்(அவதாரம்) என்பதை நீ அறியவில்லையா? அது யாவரும் அறிந்த தொன்மைக் கதையல்லவா? (புட்கரனுடன்) சூதாடித் தாயத்தால் நிலத்தையும், ஆட்சியையும் இழந்து, தமயந்தியுடன் வெம்மையான கானகஞ் சென்று, அங்கே அவளை உறக்கத்தில் விட்டுப் பிரிந்து சென்ற நளன், பொருள் மீதான ஆசையினால் அவளைப் பிரிந்தவனும் அல்லன்; அவனுடைய மனைவியும் தீமையோடு பொருந்திய இழிகுணத்தவளும் அல்லள். அவ்வாறிருக்க, அடர்ந்த காட்டில் அவளை நடு யாமத்தில் விட்டுப் பிரிந்தது அவர் முன் செய்த தீவினையல்லவா? அது, அவளின் தவறு எனச் சொல்வதற்கு ஏதும் காரணங்களை உன்னால் கூற முடியுமா? நீ அவர்களைப் போன்று மனைவியைப் பிரிந்து வருந்தவில்லை. மனைவியுடன் பிரியாத வாழ்க்கையைப் பெற்றிருக்கின்றாய். எனவே நடந்ததை எண்ணி வருந்தாமல், பாண்டிய மன்னன் ஆளும் மதுரைப் பெருநகர் சென்று, பொருத்தமான இடத்தை அறிந்து (வாணிகம் செய்யக்கூடிய) இங்கு திரும்பி வருவாயாக என்று அடிகள் கூறியதும் (கோவலன் புறப்பட ஆயத்தமானான்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(15 - 20 அடிகள் வரை)

1. **கோவலன் சென்று கொள்கையின் இருந்த**
காவுந்தி ஐயையைக் கைதொழுது ஏத்தி
நெறியின் நீங்கியோர் நீர்மையேன் ஆகி
நறுமலர் மேனி நடுங்குதுயர் எய்த
அறியாத் தேயத்து ஆரிடை உழந்து
சிறுமை உற்றேன் செய்தவத்தீர் யான்

கொண்டு கூட்டும் முறை :

கோவலன் சென்று கொள்கையின் இருந்த காவுந்தி ஐயையைக் கைதொழுது ஏத்தி, செய்தவத்தீர் யான் நெறியின் நீங்கியோர் நீர்மையேன் ஆகி, நறுமலர் மேனி நடுங்குதுயர் எய்த அறியாத் தேயத்து ஆரிடை உழந்து சிறுமை உற்றேன்.

சொற்பொருள் :

கோவலன் சென்று - கோவலன் எழுந்து சென்று; கொள்கையின் இருந்த - தியான நிலையில் இருந்த; காவுந்தி ஐயையைக் கைதொழுது ஏத்தி - கவுந்தி அடிகளைக் கைகூப்பி வணங்கி நாவினாற் போற்றி; செய்தவத்தீர் - தவப் பெருமாட்டியே!; யான் - நான்; நெறியின் நீங்கியோர் நீர்மையேன் ஆகி - நல்லொழுக்க வழியினின்றும் தவறிய தன்மையன் ஆயினேன்; நறுமலர் மேனி நடுங்குதுயர் எய்த - அழகிய மலர் போலும் மென்மையான உடலினையுடைய கண்ணகி, பெருந்துயரம் அடையுமாறு; அறியாத் தேயத்து ஆரிடை உழந்து - முன்பின் அறித்திராத நாட்டின் தொல்லை மிகுந்த வழிகளில் அழைத்துவந்து அலையச் செய்த; சிறுமை உற்றேன் யான் - சிறுமையுடையவன் ஆயினேன்.

பொழிப்பு :

கோவலன் எழுந்து சென்று தியான நிலையில் இருந்த கவுந்தி அடிகளைக் கைகூப்பி வணங்கி நாவினாற் போற்றி தவப் பெருமாட்டியே!நான் நல்லொழுக்க வழியினின்றும் தவறிய தன்மையன் ஆயினேன். அழகிய மலர் போலும் மென்மையான உடலினையுடைய கண்ணகி, பெருந்துன்பம் அடையுமாறு முன்பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்திராத நாட்டின் தொலைவை மிகுந்த வழிகளில் அழைத்து வந்து அலையச் செய்த சிறுமையுடையவன் ஆயினேன்.

விளக்கம்:

தியானத்திலிருந்த கவுந்தியடிகளிடம் சென்று, அவரை வணங்கிய கோவலன், தன் நிலைக்கு இரங்கிக் கூறிய வார்த்தைகள் இவையாகும். ஆடவர்க்குரிய தூய ஒழுக்கத்தில் இருந்தும் விலகி, கண்ணகியினை விட்டு மாதவிபாற் சென்று, காலங்கடந்த நிலையில் திரும்பி வந்ததனையே கோவலன் சுட்டிக் கூறினான் என்க. மேலும் கண்ணகியை அழைத்துக் கொண்டு காடுகளிலும், முள் நிறைந்த பாதைகளிலும் முன்பு தெரிந்திராத நாட்டில் அலைந்து திரிவதனை நினைத்து வருந்தினான் எனவும் கருதுக. "சிறுமையுற்றேன்" என்பதனால் தன் செயல் எவ்வளவு தூரம் கண்ணகிக்குத் துயரம் விளைவிப்பது என்பதை உணர்த்தினான் என்க. "கொள்கையின் இருந்த" என்பது "தவ ஒழுக்கத்தில் இருந்த" என்பதாகும். "கோவலன் - கண்ணகி ஆகியோரின் துன்பம் அறியாமல் இருந்த" எனவும் பொருள் கொள்ள முடியும். இருந்த, நடுங்கு - பெயரெச்சங்கள்; சென்று, ஏத்தி, எய்த, உழந்த - வினையெச்சங்கள்; நடுங்குதுயர், செய்தவம் - வினைத் தொகைகள்; இன், ஐ ஆகியன இடைச் சொற்கள்.

அருஞ்சொற்பொருள்:

கொள்கையின் - தவவொழுக்கத்தில், தியானத்தில்; ஏத்தி - போற்றி; நெறியின் - தூய வழியின்; நீங்கிய - தவறிய, விலகிய; நீர்மையேன் - தன்மையேன்; நறு - வாசனை, அழகு; மேனி - உடம்பு; நடுங்குதுயர் - பெருந் துன்பம்; எய்த - அடைய; தேயம் - நாடு, தேசம்; ஆங்கிடை - வழிகளிடையே, பாதைகளிடையே; உழந்து - அலைந்து, வருந்தி; சிறுமை - கீழ்மை, கேவலம்; உற்றேன் - அடைந்தவனாயினேன்; செய்தவத்தீர் - தவத்தினாற் சிறந்தவர், செய்த தவத்தினை உடையவர்.

(21 - 32 அடிகள் வரை)

2. **தொன்னகர் மருங்கின் மன்னர் பின்னோர்க்கு**
என்னிலை உணர்த்தி யான்வரும் காறும்
பாதக் காப்பினள் பைந்தொடி ஆகலின்
ஏதம் உண்டோ அடிகள் ஈங்கு? என்றலும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவுந்தி கூறும் காதலி தன்னொடு
தவந்தீர் மருங்கின் தனித்துயர் உழந்தோய்
மறந்துறை நீங்குமின் வல்வினை ஊட்டும் என்று
அறத்துறை மாக்கள் திறத்தில் சாற்றி
நாக்கடிப்பு ஆக வாய்ப்பறை அறையினும்
யாப்பறை மாக்கள் இயல்பில் கொள்ளார்
தீதுடை வெவ்வினை உறுத்த காலை
பேதைமை கந்தாப் பெரும்பேது உறுவர்

கொண்டு கூட்டும் முறை :

தொல்நகர் மருங்கின் மன்னர் பின்னோர்க்கு, என் நிலை உணர்த்தி யான் வருங்காறும் பைந்தொடி பாதக் காப்பினள் ஆகலின் ஏதம் உண்டோ? அடிகள் ஈங்கு என்றலும், கவுந்தி கூறும்; காதலி தன்னொடு தவம் தீர் மருங்கின் தனித்துயர் உழந்தோய்! மறத்துறை நீங்குமின் வல்வினை ஊட்டும் என்று அறத்துறை மாக்கள் திறத்தில் சாற்றி, நாக்கடிப்பு ஆக வாய்ப்பறை அறையினும், யாப்பு அறை மாக்கள் இயல்பிற் கொள்ளார்; தீதுடை வெவ்வினை உறுத்த காலை பேதைமை கந்தாப் பெரும்பேது உறுவர்.

சொற்பொருள் :

தொல்நகர் மருங்கின் - பழைமையான இம் மதுரை நகரிலுள்ள; மன்னர் பின்னோர்க்கு - பெருவணிகர்க்கு; என் நிலை உணர்த்தி - என் நிலைமையினைத் தெரிவித்து; யான் வருங்காறும் - நான் மீண்டு வரும் வரையிலும்; பைந்தொடி பாதக் காப்பினள் - பசிய தொடியினை உடைய இவள் (கண்ணகி) தங்களின் காவலை உடையவளாக இருக்கட்டும்; ஆகலின் ஏதம் உண்டோ? அடிகள் ஈங்கு என்றலும் - அதனால் தங்களுக்கு ஏதேனும் துன்பம் உண்டோ? என்று கோவலன் கேட்கவும்; கவுந்தி கூறும் - கோவலனுக்குப் பதிலாகக் கவுந்தி கூறுவார்; காதலி தன்னொடு தவம் தீர் மருங்கின் தனித்துயர் உழந்தோய்! - அன்புடைய மனைவியோடு அறவழி செல்லாது தீயவழி சென்று தனியே துன்பங்களை அனுபவித்து விட்டாய்; மறத்துறை நீங்குமின் - பாவச் செயல்களை விட்டு நீங்குங்கள்; வல்வினை ஊட்டும் என்று - நீங்கீராயின் அப் பாவச் செயல்களின் பயனாகத் துன்பங்களை அனுபவிக்க நேரிடும் (வினை வலிமையானது; தவறாமல் நுகர்விக்கும்) என; அறத்துறை மாக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறத்தில் சாற்றி - அறநெறியில் நின்ற பெரியோர்கள், கேட்பவர் இயல்புக்கு ஏற்ப; நாக்கடிப்பு ஆக வாய்ப்பறை அறையினும் - தங்கள் நா ஆகிய குறுந்தடியினால் வாய் ஆகிய பறையினை அறைந்து கூறினாலும்; யாப்பு அறை மாக்கள் - அறிவு என்னும் உறுதி இல்லாதவர்கள்; இயல்பிற் கொள்ளார் - அது நன்மையுடையதென ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்; தீதுடை - (பின்பு) அத் தீமையுடைய; வெவ்வினை - கொடிய வினையானது; உறுத்த காலை - தோன்றிப் பாவங்களின் பயனை அனுபவிக்கச் செய்து துன்புறுத்தும் போது; பேதைமை கந்தாப் பெரும் பேதுறுவர் - அறியாமை காரணமாக மிகவும் மயக்கமுறுவர்.

பொழிப்பு :

பழைமையான இம்மதுரை நகரிலுள்ள பெரு வணிகர்களுக்கு என் நிலைமையைத் தெரிவித்து நான் மீண்டு வரும் வரையிலும், பசிய தொடியினையுடைய இவள் (கண்ணகி) தங்களின் காவலை உடையவளாக இருக்கட்டும். அதனால் தங்களுக்கு ஏதேனும் துன்பம் உண்டோ? என்று கோவலன் கேட்டதும், கோவலனுக்குப் பதிலாக கவுந்தியடிகள் கூறுவார்; அன்புடைய மனைவியோடு, அற வழி செல்லாது தீயவழி சென்று தனியே துன்பங்களை அனுபவித்து விட்டாய்; பாவச் செயல்களை விட்டு விலகுங்கள், விலகீராயின் அப்பாவச் செயல்களின் பயனாகத் துன்பங்களை அனுபவிக்க வேண்டியிருக்கும் என்று, அறநெறியில் வாழும் பெரியோர்கள், கேட்பவர் இயல்புக்கு ஏற்றதாகத் தங்கள் நாவாகிய குறுந்தடியினால் வாயாகிய பறையினை அறைந்து கூறினாலும், அறிவு என்னும் உறுதி இல்லாதவர்கள், அது நன்மையுடையது என ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். பின்பு அத்தீமையான வினையானது பயனை அனுப விக்கச் செய்து துன்புறுத்தும்போது, தம் அறியாமை காரணமாகப் பெரிதும் மயக்கமுறுவர்.

விளக்கம் :

கவுந்தியடிகளின் பாதுகாப்பில் கண்ணகியை ஒப்படைத்து விட்டு, மதுரை நகர் சென்று, அங்குள்ள பெரு வணிகர்களிடம் தன்னுடைய துயரமான நிலையினைத் தெரிவித்து மீண்டு வரும் நோக்கத்தைக் கோவலன் தெரிவித்தபோது அடிகள் கூறிய அறவுரை யாகிய பதிலுரை இங்கே கூறப்பட்டுள்ளது. அடுத்துவரும் பாடலடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிலும் இது தொடரும். "மன்னர் பின்னோர்" என்பது நால்வகை வருணத்தாருடன் அரசர்களை அடுத்துவரும் வணிகர்களைக் குறித்தது. "என்னிலை" என்றது, முன்பு தானிருந்த நிலையையும், இப்போது அடைந்துள்ள நிலையையும் என்க. பாதக்காப்பு - பாதமாகிய காவல். பைந்தொடி - அன்மொழித் தொகை. பெரியோரைச் சார்ந்தோருக்கு யாதும் தீங்கு நேராது என்ற நம்பிக்கையில் "ஏதம் உண்டோ?" என்றான் என்க. தீர்தல் - ஒழிதல்; "தவந்தீர் மருங்கின் தனித்துயர் உழந்தோய்" என்றது முன்பு நல்வினை செய்த நீ சிறிது தீவினை செய்தமையால் ஒப்பற்ற துயர்தனை நுகர்ந்தாய் என்பதாகும். திறம் - நன்மை, தீமை என்பவற்றின் வகை. "அறைந்து சாற்றினும்" என்பதாகச் "சாற்றி அறையினும்" என்பதைக் கருதுக. உருத்தல் - தோன்றிப் பயனளித்தல். "கந்து" என்பது பற்றுக்கோடு ஆகும். "கந்தா" என்பது பற்றுக்கோடில்லாததைக் குறிக்கும். தவந்தீர், அறத்துறை - பெயரெச்சங்கள்; தன்னொடு, தனித்துயர், சாற்றி, இயல்பில் - வினையெச்சங்கள்; ஓடு, இன், என்று, ஐ, உம் - இடைச் சொற்கள். வல்வினை - குறிப்பு வினைச் சொல்.

அருஞ்சொற்பொருள்:

தவந்தீர் - தவக்குறைவு, தவமொழிந்த; மருங்கில் - பக்கத்தில், நெறியில், வழியில்; உழந்தோய் - வருந்தினாய்; மறம் - பாவச் செயல், அறத்துக்கு மாறான செயல்; வல்வினை - கொடிய பழவினை; ஊட்டும் - அனுபவிக்கச் செய்யும்; அறத்துறை - அறவழி; மாக்கள் - மக்கள்; திறம் - நன்மை, தீமைகளின் வகை; சாற்றி - எடுத்துக் கூறி; கடிப்பு - குறுந்தடி; வாய்ப்பறை - வாயே பறையாக; அறையினும் - அறைந்து கூறினும், அடித்துரைப்பினும்; யாப்பறை - உறுதியற்ற அறிவு; இயல்பில் - தமது நிலையில்; உருத்த - தோன்றிப் பயனளித்த; காலை - வேளையில்; பேதைமை - அறியாமை; கந்து - பற்றுக் கோடு; பேதுறுவர் - மயங்குவர்.

(33 - 45 அடிகள் வரை)

ஒய்யா வினைப்பயன் உண்ணும் காலை
கையாறு கொள்ளார் கற்று அறி மாக்கள்
பிரிதல் துன்பமும் புணர்தல் துன்பமும்
உருவி லாளன் ஒறுக்கும் துன்பமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிகுழல் மாதர்ப் புணர்ந்தோர்க்கு அல்லது
ஒருதனி வாழ்க்கை உரவோர்க்கு இல்லை
பெண்டிரும் உண்டியும் இன்பம் என்று உ லகில்
கொண்டோர் உறூஉம் கொள்ளாத் துன்பம்
கண்டனர் ஆகிக் கடவுளர் வரைந்த
காமம் சார்புஆ காதலின் உழந்து ஆங்கு
ஏமம் சாரா இடும்பை எய்தினர்
இன்றே அல்லால் இறந்தோர் பலரால்
தொன்றுபட வரூஉம் தொன்மைத்து ஆதலின்

கொண்டு கூட்டும் முறை :

கற்று அறி மாக்கள், ஒய்யா வினைப்பயன் உண்ணும் காலை கையாறு கொள்ளார்; பிரிதல் துன்பமும், புணர்தல் துன்பமும், உருவிலாளன் ஒறுக்கும் துன்பமும், புரிகுழல் மாதர் புணர்ந்தோர்க்கு அல்லது ஒருதனி வாழ்க்கை உரவோர்க்கு இல்லை; பெண்டிரும் உண்டியும் இன்பம் என்று உலகில் கொண்டோர் உறூஉம் கொள்ளாத் துன்பம் கண்டனர் ஆகிக் கடவுளர் வரைந்த காமம் சார்பாக் காதலின் உழந்து ஆங்கு, ஏமம் சாரா இடும்பை எய்தினர். இன்றே அல்லால் இறந்தோர் பலரால், தொன்று பட வரூஉம் தொன்மைத்து ஆதலின்.

சொற்பொருள் :

கற்று அறி மாக்கள் - அற நூல்களைக் கற்றுணர்ந்த பெரியவர்கள்; ஒய்யா வினைப்பயன் உண்ணும் காலை - போக்க வொண்ணாத தீவினையின் பயனாகிய துன்பத்தினை அனுபவிக்கும் காலத்தில்; கையாறு கொள்ளார் - செயலிழந்து கலங்க மாட்டார்கள்; பிரிதல் துன்பமும் - மகளிரைப் பிரிதலால் வரும் துன்பமும்; புணர்தல் துன்பமும் - அவரைப் புணர்தல் காரணமாக ஏற்படும் துன்பமும்; உருவிலாளன் ஒறுக்கும் துன்பமும் - இவ்விரு காலத்திலும் மன்மதன் உண்டாக்கும்(காம மயக்கம்) துன்பமும்; புரிகுழல் மாதர் புணர்ந் தோர்க்கு அல்லது - சுருண்ட கூந்தலையுடைய பெண்டிரைப் புணர்ந்து வாழ்வோர்க்கு என்றும் உள்ளதல்லால்; ஒருதனி வாழ்க்கை உரவோர்க்கு இல்லை - ஒப்பற்ற தனித்த வாழ்க்கையினை உடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறவியர்க்கு இவை ஒருபோதும் இல்லை; பெண்டிரும் உண்டியும் இன்பம் என்று உ லகில் கொண்டோர் - இவ்வுலகத்தில் மகளிரும், உணவுமே இன்பம் தரத்தக்க பொருளாம் என்று கருதி வாழ்பவர்கள்; உறாஉம் கொள்ளாத் துன்பம் கண்டனர் ஆகி - அளவற்ற துன்பத்தையே முடிவில் காண்பவராகி; கடவுளர் வரைந்த காமம் சார்பாக் காதலின் உழந்து - துறவிகள் நீக்கிய, காமத்தையே பற்றுக் கோடாகக் கொண்டு, காதலிலே வருந்தி; ஆங்கு - அதனுள் மூழ்கி; ஏமம் சாரா இடும்பை எய்தினர் - கரைகாண முடியாத துன்பத்தை அடைந்தவர்கள்; இன்றே அல்லால் இறந்தோர் பலரால் - இந்நிகழ் காலத்து மட்டுமன்றி, முற்காலத்திலும் பலர் இருந்துள்ளனர்; தொன்றுபட வருஉம் தொன்மைத்து ஆதலின் - இது தொன்று தொட்டு வரும் பழைமையை உடையது(காலம் காலமாக நடந்து வருவது).

பொழிப்பு :

அற நூல்களைக் கற்றுணர்ந்த பெரியவர்கள் தவிர்க்க முடியாத தீவினைப் பயனாகிய துன்பத்தினை அனுபவிக்கும் காலத்தில் செயலிழந்து கலங்க மாட்டார்கள். மகளிரைப் பிரிதலால் ஏற்படும் துன்பமும் அவரைப் புணர்தல் காரணமாக ஏற்படும் துன்பமும் இவ்விரு காலத்திலும் மன்மதன் உண்டாக்கும் துன்பமும் சூருண்ட கூந்தலையுடைய பெண்டிரைப் புணர்ந்து வாழ்வோர்க்கு என்றும் உள்ளதல்லால் ஒப்பற்ற தனித்த வாழ்க்கையினை உடைய துறவியர்க்கு இவை ஒருபோதும் இல்லை. இவ்வுலகில் மகளிரும், உணவுமே இன்பம் தரத்தக்க பொருள்கள் என்று கருதி வாழ்பவர்கள் அளவற்ற துன்பத்தையே முடிவில் காண்பவராகி துறவிகள் விலக்கிக் கொண்ட காமத்தையே பற்றுக் கோடாகக் கொண்டு, காதலிலே வருந்தி அதனுள் மூழ்கி கரைகாண முடியாத துன்பத்தை அடைந்தவர்கள், இந்நிகழ் காலத்தில் மட்டுமன்றி, முற்காலத்திலும் பலர் இருந்துள்ளனர்; இது தொன்று தொட்டு வரும் பழைமையை உடையதாகும்.

விளக்கம் :

கவுந்தி அடிகள் கோவலனுக்குக் கூறிய அறக் கருத்துக்கள் இப்பகுதியில் தொடர்ந்து இடம்பெற்றுள்ளன. தீவினைப் பயனை அனுபவிக்கும்போது அற நூல்களைக் கற்றவர்கள் கலங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டார்கள். மகளிரைப் பிரிதல், அவரைப் புணர்தல், மன்மதன் காம மயக்கத்தை உண்டாக்கல் ஆகியவற்றாலான துன்பம் பெண்களைப் புணர்ந்தோர்க்கல்லாது, துறவியர்களுக்குக் கிடையாது. பெண்களும், உணவும் இவ்வுலகின் இன்பங்கள் எனக் கருதி வாழ்வோர் முடிவில் அளவிறந்து துன்பத்தில் ஆழ்ந்து வருந்துவர். இக்காலத்தில் மட்டுமன்றி முற்காலத்திலும் பலர் இவ்வாறு இருந்துள்ளனர். இது காலாகாலமாக நடந்து வருவது எனக் கவுந்தி அடிகள் கூறிய கருத்துரை அமைந்துள்ளது. "ஒய்யா வினைப் பயன்" என்பது தீவினையின் பயனைத் தவிர்க்க முடியாது; அனுபவித்தே தீர வேண்டியது என்பதாகும். ஒய்யாமை - போக்க முடியாமை. "ஒரு தனிவாழ்க்கை உரவோர் - துறவிகள், முனிவர்கள். "உருவிலாளன் ஒறுக்கும் துன்பம்" என்பது மன்மதனின் காம மயக்கத்தால் ஏற்படும் துன்பமாகும். "ஏமம்" என்பது காவல் ஆகும். "ஏமம் சாரார்" என்பதனால் காவலில்லாத(கரைகாணாத) துன்பம் உணர்த்தப் பட்டது. "காமம் சார்பாக் காதல்" - காமத்தைப் பற்றுக் கோடாகக் கொண்ட அன்பு. "தொன்று படவரூஉம்" என்றதினால் தொன்று தொட்டு வரும் நிகழ்ச்சி எனப்பட்டது. புரிகுழல் - வினைத்தொகை; உறூஉம், படவரூஉம் ஆகிய சொற்களில் உயிரளபெடை அமைந்துள்ளது. ஒய்யா, உண்ணும், கையாறு, கற்றுஅறி, ஒறுக்கும், உறூஉம், கொள்ளா, வரைந்த, தாரா, படவரூஉம் ஆகிய சொற்கள் பெயரெச்சங்களாகும். புணர்ந்தோர்க்கு, உரவோர்க்கு, உழந்து, ஆங்கு என்பன வினையெச்சங்களாகும். உம், அல்லது, கு, ஆகி, இன் ஆகியன இடைச் சொற்களாகும். உண்ணும் என்ற சொல் வினை முற்றாகவும்(பசு உண்ணும்) வரக் கூடியது.

அருஞ்சொற்பொருள் :

ஒய்யா - போக்க முடியாத, தவிர்க்கவியலாத; உண்ணும் - அனுபவிக்கும், நுகரும்; கையாறு - செயலிழத்தல்; மாக்கள் - மக்கள்; புணர்தல் - சேர்க்கை; உரு இலாளன் - மன்மதன்; ஒறுக்கும் - மயக்கி வருத்தும்; புரி - சுருண்ட; குழல் - கூந்தல்; உரவோர் - துறவிகள், வலிமையுடையோர்; உறூஉம் - அடையும்; கடவுளர் - முனிவர்கள், துறவியர்; வரைந்த - நீக்கிய, விலக்கிய; காமம் - பெருவிருப்பம்; உழந்து - வருந்தி; ஏமம் - காவல்; இடும்பை - துன்பம்; தொன்று - முன்பு; வரூஉம் - வருகின்ற; தொன்மை - பழைமை.

(46 - 61 அடிகள் வரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்
வேத முதல்வற் பயந்தோன் என்பது,
நீ அறிந்திலையோ நெடுமொழி அன்றோ
வல்லாடு ஆயத்து மண்அரசு இழந்து,
மெல்லியல் தன்னுடன் வெங்கான் அடைந்தோன்
காதலில் பிரிந்தோன் அல்லன் காதலி
தீதொடு படூஉம் சிறுமையள் அல்லள்
அடவிக் கானகத்து ஆய் இழை தன்னை
இடைஇருள் யாமத்து இட்டு நீக்கியது
வல்வினை அன்றோ மடந்தைதன் பிழைஎனச்
சொல்லலும் உண்டேல் சொல்லாயோநீ
அனையையும் இல்லை ஆய்இழை தன்னொடு
பிரியா வாழ்க்கை பெற்றனை அன்றே
வருந்தாது ஏகி மன்னவன் கூடல்
பொருந்துழி அறிந்து போதிஈங்கு என்றலும்

கொண்டு கூட்டும் முறை :

தாதை ஏவலின் மாதுடன் போகிக் காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன் வேத முதல்வற் பயந்தோன் என்பது, நீ அறிந் திலையோ? நெடுமொழி அன்றோ? வல்லாடு ஆயத்து மண் அரசு இழந்து மெல்லியல் தன்னுடன் வெங்கான் அடைந்தோன், காதலில் பிரிந்தோன் அல்லன்; காதலி தீதொடு படூஉம் சிறுமையள் அல்லள்; அடவிக் கானகத்து ஆய் இழை தன்னை இடைஇருள் யாமத்து இட்டு நீக்கியது வல்வினை அன்றோ? மடந்தைதன் பிழைஎனச் சொல்ல லும் உண்டேல் சொல்லாயோ நீ! அனையையும் அல்லை, ஆயிழை தன்னொடு பிரியா வாழ்க்கை பெற்றனை அன்றே! வருந்தாது ஏகி மன்னவன் கூடல் பொருந்துழி அறிந்து போதி ஈங்கு என்றலும்.

சொற்பொருள் :

தாதை ஏவலின் - தந்தையின் ஏவலால்; மாதுடன் போகி - தன் மனைவியுடன் காட்டுக்குச் சென்று; காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன் - அங்கே அவளைப் பிரிந்து மிக்க துன்பத்தில் வருந்தியவன்; வேத முதல்வற் பயந்தோன் என்பது - வேத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்வனான நான்முகனை ஈன்ற திருமால் என்பதனை; நீ அறிந்திலையோ? - நீ அறிய வில்லையா? நெடுமொழி அன்றோ? - அது யாவரும் அறியும் வண்ணமான தொன்மையான கதை அல்லவா? வல்ஆடு ஆயத்து - (புட்கர னுடன்) சூதாடித் தாயத்தால்; மண்அரசு இழந்து - நிலத்தினையும் அரசாட்சியையும் இழந்து; மெல்லியல் தன்னுடன் வெங்கான் அடைந்தோன் - மெல்லிய தன்மையுடைய தமயந்தியுடன் வெம்மை யான காட்டை அடைந்தவ னாகிய நளன்; காதலில் பிரிந்தோன் அல்லன் - பொருள்மேல் வைத்த ஆசையால் அவளைப் பிரிந்தவனும் அல்லன்; காதலி தீதொடு படுஉம் சிறுமையள் அல்லள் - அவனுடைய மனைவியையும் தீமையோடு பொருந்திய இழிகுணத்தவள் அல்லள்; அடவிக் கானகத்து ஆய் இழை தன்னை - அவ்வாறிருக்க, அடர்ந்த காட்டில் செப்பஞ் செய்யப்பட்ட ஆபரணங்கள் அணிந்த அவளை; இடை இருள் யாமத்து இட்டு நீக்கியது - இருள் நிறைந்த நடு யாமத்தின்கண் உறங்குகையில் விட்டுப் பிரிந்து சென்றது; வல்வினை அன்றோ? - அவர் முன் செய்த தீவினை அல்லவா?; மடந்தைதன் பிழை எனச் சொல்லலும் உண்டேல் சொல்லாயோ நீ - அவ்வாறன்றி அத்தமயந்தியின் பிழையே அதற்குக் காரணம் என்று சொல்லுதற்கு வேறு உண்டாயின் நீ அதனைச் சொல்லுவாயாக; அனையையும் அல்லை - நீ அவர்களைப் போன்று மனைவியைப் பிரிந்து வருந்தவில்லை; ஆயிழை தன்னொடு பிரியா வாழ்க்கை பெற்றனை அன்றே - நீ ஆபரணம் அணிந்த உன் மனைவியினின்றும் பிரியாத வாழ்க்கையைப் பெற்றிருக்கின்றாய்; வருந்தாது ஏகி மன்னவன் கூடல் - எனவே நடந்ததை எண்ணி வருந்தாமல் பாண்டிய மன்னன் ஆளும் மதுரை நகரினுள் சென்று; பொருந்துழி அறிந்து போதி ஈங்கு என்றலும் - பொருந்துமான இடத்தை அறிந்து இங்கு வருவாயாக என்று அடிகள் சொல்லியதும் (செய்யுள் தொடர்கிறது).

பொழிப்பு :

தந்தையின் ஏவலால், தன் மனைவியுடன் காட்டுக்குச் சென்று, அங்கே அவளைப் பிரிந்து மிகுந்த துன்பத்தில் வருந்தியவன், வேத முதல்வனாகிய நான்முகனைப் பெற்ற திருமால் என்பதை நீ அறிய வில்லையோ? அது யாவரும் அறிந்த தொன்மை யான கதை அல்லவா? சூதாடித் தாயத்தால் நிலத்தினையும் அரசாட்சியையும் இழந்து, மெல்லிய இயல்புடைய தமயந்தியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெம்மையான காட்டை அடைந்த நளன் பொருள் மீதான ஆசையால் அவளைப் பிரிந்தவனும் அல்லன். அவனுடைய மனைவியும் தீமையுடன் பொருந்திய இழிகுணத்தவளும் அல்லள். அவ்வாறிருக்க, அடர்ந்த காட்டில் அவளை இருள் செறிந்த நடுயாமத்தில் நித்திரையின்கண் விட்டுப் பிரிந்து சென்றமை, அவர் முன் செய்த தீவினை அல்லவா? அவ்வாறன்றி அத்தமயந்தியின் தவறே அதற்குக் காரணம் என்று சொல்வதற்கு வேறு யாதும் இருந்தால் நீ அதைச் சொல்வாயாக. நீ அவர்களைப் போன்று மனைவியைப் பிரிந்து வருந்தவில்லை. உன் மனைவியினின்றும் பிரியாத வாழ்க்கையைப் பெற்றிருக்கிறாய். எனவே நடந்ததை எண்ணி வருந்தாமல், பாண்டிய மன்னன் ஆளும் மதுரை நகரினுள் சென்று, பொருத்தமான இடத்தை அறிந்து இங்கு வருவாயாக என்று அடிகள் சொல்லியதும் (செய்யுள் தொடர்கிறது).

விளக்கம் :

தொடர்ந்தும் கவுந்தி அடிகள் கூறிய அறவுரைகளும், ஈற்றில் கோவலனை அவனது வியாபாரத்துக்குப் பொருத்தமான இடத்தினை மதுரை நகர் சென்று அறிந்து திரும்பி வருமாறு கூறியதும் இங்கே இடம்பெற்றிருக்கின்றன. விதியின் விளையாட்டால் திருமாலின் அவதாரமாகிய இராமன், வனத்தில் சீதையைப் பிரிந்து வருந்தியதும், முன் செய்த தீவினைப் பயனால் நளன், தமயந்தியுடன் காட்டுக்குச் சென்று, அங்கே நள்ளிரவில் அவளை விட்டுப் பிரிந்து வருந்தியதும் இங்கு அடிகள் வாயிலாகக் கோவலனுக்குக் கூறப் பட்டுள்ளன. இவற்றினூடாக விதியின் வலிமை எடுத்துக் காட்டப் பட்டுள்ளது. மேலும் மனைவியுடன் பிரிவில்லாமல் இருக்கும் கோவலன் முன்னவர்களிலும் பார்க்கப் பேறு பெற்றவன் எனப் படுகிறது. அவனது துயரைத் தேற்றுவதாகக் கவுந்தி அடிகளின் கூற்றுக் காணப்படுகிறது. "நீ அறிந்திலையோ" என்பது அறிந்திருந்தும் இரங்குதல் அறிவுடைமையாகாது என்பதாகும். "காதலிற் பிரிந்தோனல்லன்" என்பதற்குத் தன் விருப்பம் காரணமாகவும், அவள் விருப்பம் காரணமாகவும் பிரிந்தோனல்லன் என்றும், காதலினின்றும் நீங்கினோன் அல்லன் என்றும் பொருள் கொள்ளலாம். "தீதொடு" என்பதில் "தீது" என்பது பிறர் நெஞ்சு புகுதலைக் குறிக்கும். அடைந்தோன் - வினையாலணையும் பெயர்; ஆயிழை - (ஆய்+இழை) ஆராய்ந்தெடுத்த ஆபரணமணிந்தவள்; ஏவலின், நீங்க, இழந்து, தன்னுடன், இட்டு, சொல்லலும், ஏகி, அறிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவை வினையெச்சச் சொற்கள். படூஉம், பிரியா ஆகியவை பெயரெச்சச் சொற்கள். "இன், என்பது. ஓ, உம் ஆகியவை இடைச் சொற்கள். அறிந்திலையோ என்பதில் "ஓ" காரம் பொருளை உணர்த்தியுள்ளது.

அருஞ்சொற்பொருள் :

தாதை – தந்தை; ஏவல் – கட்டளை; மாது – பெண்; போகி – போய்; உழந்தோன் – வருந்தியவன்; நெடுமொழி – தொன்மைக் கதை, நீண்டகாலக் கதை; வல் – ஆது; ஆயம் – தாயம்; வெங்கானம் – வெம்மை நிறைந்த காடு, கொடிய காடு; தீது – பிறர் நெஞ்சு புகுதல், தீமை; படூஉம் – பொருந்தும்; சிறுமையள் – இழிவானவள்; அடவிக் கானகம் – செறிந்த காடு; ஆயிழை – ஆராய்ந்தெடுக்கப்பட்ட ஆபரணம் அணிந்த பெண்; கூடல் – மதுரை; பொருந்துழி – பொருந்தக் கூடிய கதை; ஈங்கு – இங்கு.

குறிப்புகள்

1. சிலப்பதிகாரம் மதுரைக் காண்டத்தில் நான்காவது காதையான "ஊர்காண் காதை"யில் 15 – 61 வரையுள்ள அடிகளில் கூறப்பட்ட கருத்துக்களே இங்கு கருதத் தக்கவை.

2. தியானத்திலிருந்த கவுந்தியடிகளை வணங்கிய கோவலன், தனது துன்பியல் நிலையைக் கூறி, தான் மதுரை நகர் சென்று, தனது வணிக முயற்சிக்குப் பொருந்தும் இடத்தினை அறிந்து வரும் வரை கண்ணகியை அவரிடம் அடைக்கலமாக ஒப்படைத்ததாகக் கூறல், அதற்குக் கவுந்தியடிகள் பதில் கூறுமுகமாக அறவுரைகளையும், ஆறுதலுரைகளையும் கூறி அவனை மதுரை நகர் சென்று வருமாறு விடை கொடுத்தல் ஆகியனவே இப்பகுதியில் அமைந்துள்ளன.

3. கோவலன் தன்னைப் பற்றிக் கவுந்தியடிகளிடம் கூறியவை :

i. நல்லொழுக்க நெறியினின்றும் விலகிய தன்மையன்.

ii. அழகிய மலர் போன்ற மென்மையான உடலினையுடைய கண்ணகியை, முன்னர் அறிந்திராத நாட்டின் தொல்லைமிகு வழிகளில் அலையச் செய்தவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. சிறுமையான (கேவலமான) செயல் புரிந்தவன்.

iv. மதுரை நகர் சென்று, பொருந்துமிடம் அறிந்து நான் மீளும் வரை கண்ணகி உங்கள் பாதக் காப்பினள்.

v. கண்ணகியை உங்களிடம் அடைக்கலமாய் விட்டுச் செல்வ தால் தங்களுக்கு ஏதாகிலும் துன்பம் உண்டோ?

4. கோவலனுக்குக் கவுந்தியடிகள் கூறியவை :

i. மனைவியுடன் அறவழி செல்லாது, தீய வழி சென்று நீ துன்பங்களை அனுபவித்துள்ளாய்.

ii. பாவச் செயல்களை விட்டு நீங்குங்கள்; அவ்வாறு நடக்கா விட்டால் அவற்றின் பயனாகத் துன்பங்களை அனுபவிக்க நேரிடும் என்று, அறநெறியாளர்கள் தங்கள் நாவினைக் குறுந்தடியாகக் கொண்டு, வாயாகிய பறையினை அறைந்து கூறினாலும், அறிவு என்னும் உறுதியில்லாதவர்கள், அதன் நன்மையை ஏற்கார்.

iii. தீவினையானது பின்னர் வருத்தும் போது அறியாமையால் மிகவும் வருந்துபவர் அறிவுறுதி அற்றோர். கற்றறிந்தோர் செயலிழந்து கலங்க மாட்டார்.

iv. பெண்டிரைப் பிரியும் துன்பமும், அவரைப் புணர்தலால் உண்டாகும் துன்பமும், இவ்விரு காலத்திலும் மன்மதன் விளைவிக்கும் துன்பமும், பெண்களைப் புணர்ந்து வாழ்வோர்க்கு உள்ளதல்லால் துறவியர்க்கு இல்லை.

v. பெண்டிரும் உணவுமே இன்பந்தரும் பொருட்கள் என வாழ்பவர்கள் முடிவில் துன்பத்தையே காண்பர்.

vi. துறவிகள் நீக்கிய காமத்தையே பற்றுக் கோடாகக் கொண்டு காதலில் மூழ்கித் துன்பப்பட்டோர் இன்றல்ல, முந்தைய காலத்திலும் இருந்துள்ளனர்.

vii. காமத்தால் காதலுக்காட்பட்டுத் துயருற்றோர் கதை தொன்மையானது.

viii. தந்தையின் ஏவலால் தன் மனைவியுடன் காடு சென்று, வனத்தில் அவளைப் பிரிந்து வருந்திய இராமன், திருமாலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதாரம் என்பது யாவரும் அறிந்த கதையென்பதை நீ அறியமாட்டாயா?

ix. புட்கரனுடன் சூதாடி, நாட்டை இழந்து, மனைவியுடன் கானகஞ் சென்று, நள்ளிரவில் உறக்கத்தில் அவளைப் பிரிந்து சென்ற நளன், பொருளாசையால் பிரிந்து செல்ல வில்லை. அவனது மனைவியும் பிழையேதும் செய்தவள் அல்லள், அவர்கள் தீவினைப் பயனின் விளைவே அதுவா கும். அதைவிட வேறேதும் காரணம் இருந்தால் சொல்லு வாயாக.

x. நீ அவர்களைப் போன்று மனைவியைப் பிரியவில்லை; அவளைப் பிரியாத வாழ்க்கையைப் பெற்றிருக்கிறாய்.

xi. நடந்ததை எண்ணி வருந்தாது, பாண்டியனின் மதுரை நகர் சென்று, உன் வணிகத்துக்குப் பொருத்தமான இடத்தினை அறிந்து, இவ்விடம் மீள்வாயாக.

5. அணிச் சிறப்புக்கள்:

i. நறுமலர் – உவமானம்; கண்ணகியின் மேனி – உவமேயம்; மென்மையும் அழகும் – பொதுத் தன்மை.

ii. பசுந்தொடி (பசிய வளையல்களை அணிந்த கண்ணகி) – அன்மொழித் தொகை.

iii. நாக்கடிப்பு (நாவாகிய குறுந்தடி), வாய்ப்பறை (வாயாகிய பறை) – உருவக அணிகள்.

iv. ஆயிழை (ஆராய்ந்தெடுக்கப்பட்ட ஆபரணமணிந்தவள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மாணிக்கவாசகர் அருளிய
திருவாசகம் - கோயில் திருப்பதிகம்

- மாணிக்கவாசக சுவாமிகள்

சைவ சமயக் குரவர்களில் நான்காமவர் மாணிக்கவாசக சுவாமிகள். சைவத் திருமுறைகள் பன்னிரண்டினுள், இவர் இயற்றிய திருவாசகமும், திருக்கோவையாரும் எட்டாந் திருமுறையில் இடம்பெற்றுள்ளன. இவரது காலம் கி.பி 9 ஆம் நூற்றாண்டு எனக் கருதப்படுகிறது. தமிழகத்துப் பாண்டிய நாட்டின் திருவாதவூர் இவர் பிறந்த இடமாகையால் இயற்பெயர் மறைந்து திருவாதவூரர் என்பதே நிலைத்துள்ளது. இவரின் பெற்றோர் சம்புபாத சிவாச்சாரியாரும், சிவஞானவதியும் ஆவர். 16 ஆண்டினுள் சைவ தத்துவ நூல்களையும், உலகியல் நூல்களையும் கற்றுத் தேறிய இவர், அரிமர்த்தன பாண்டிய மன்னனின் முதலமைச்சராகப் பணியாற்றினார். அம் மன்னனால் "தென்னவன் பிரம்மராயன்" எனப் பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டார். சிவ பக்தியும், ஆன்மீக நாட்டமும் மேலோங்கிக் காணப்பட்டார்.

சோழ நாட்டின் மேலைக் கடற்கரைக்குக் குதிரை வாங்கும் பொருட்டு அரசனால் அனுப்பப்பட்ட திருவாதவூரரை, இறைவன் ஆட்கொள்ள விரும்பி அங்கேயுள்ள ஆவுடையார் கோவில் என்னும் திருப் பெருந்துறையிலுள்ள சோலையொன்றில் குருந்த மர நிழலில் சிவமுனிவர் வடிவத்தில் சிவகணங்கள் சூழ, "அர அர" ஒலி முழங்க, சிவஞானப் பொருளை உணர்த்திக் கொண்டிருந்தார். அதைக்கண்டு, "காந்தம் கண்ட இரும்பு போல்" ஈர்க்கப்பட்டுத் தம்வசம் இழந்து, குருவை நாடிச் சென்று, அவரிடம் உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணித்துத் தம்மை ஆட்கொள்ளுமாறு வேண்டி நின்றார் திருவாதவூரர். குரு வடிவில் எழுந்தருளியிருந்த சிவபெருமானும் வாதவூரருக்கு நயன தீட்சை அளித்தார். வாதவூரர் பக்தி வெள்ளத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் திளைத்து மாணிக்கம் போன்ற வாசகங்களால் இறைவனைப் புகழ்ந்து பாட, இறைவனும் "மாணிக்க வாசகர்" என்ற திருநாமஞ் சூட்டித் திருக்கோயிற் பணி செய்யும் படி பணித்து அடியார்களோடு மறைந்தருளினார். கொண்டுவந்த பொருள்களை எல்லாம் திருக்கோயிற் திருப்பணிக்கும், பெருமானுக்கும் செலவிட்டு முடிந்த நிலையில் மன்னனிடமிருந்து குதிரைகள் வாங்கி வருமாறு கட்டளை வர இறைவனை வேண்டினார். "ஆவணி மூலத்தில் குதிரைகளைக் கொண்டு வருவோம், நீ முன்னே சென்று இம் மாணிக்கக் கல்லினை மன்னனிடம் கொடுப்பாயாக" என அருளினார் சிவபெருமான். மாணிக்கவாசகரிடம் மாணிக்கக்கல் பெற்ற பாண்டியன் மகிழ்ந் தானாயினும் குதிரைகள் வராமை கண்டு வாதவூரரைச் சிறையில் இட்டு வருத்தினான். எம்பெருமான் காட்டு நரிகளைப் பரிகளாக்கித் தாமே குதிரைப் பாகனாக வேடமிட்டுக் குதிரைகளை ஓட்டி வருதலைக் கண்டு மன்னன் வாதவூரரிடம் மன்னிப்புக் கேட்டுச் சிறை நீக்கினான்.

அன்றிரவு பரிகள் யாவும் நரிகளாகின. வெகுண்ட மன்னன் வாதவூரரைச் சுடுமணலில் நிறுத்தி முதுகில் கல்லேற்றித் தண்டித்தான். வாதவூரர் இறைவனை மனமுருகி வேண்ட, வைகையாறு பெருக்கெடுத்து அணை கடந்து ஓடச் செய்தார் இறைவன். அரசகட்டளைப்படி தத்தம் பங்குக்குரிய அணைப் பகுதிகளை அனைவரும் அடைத்தனர். சிவபக்தையான வந்தி என்னும் செம்மனச் செல்வியின் பொருட்டு சிவபெருமானே கூலியாளாய் வந்து பிட்டுக்கு மண் சுமந்தார். அரசனின் பிரம்படிக்கு ஆளாகித் தம்மேல் பட்ட அடி, பேசிடும் சகல ஜீவராசிகள் முதுகிலும் பட்டு வடுவுறத் திருவிளையாடல் நிகழ்த்திக் காட்டினார். எல்லாம் இறைவனின் செயலே என்று உணர்ந்த பாண்டியன் வாதவூரரிடம் தவறுக்கு வருந்தினான். அவரும் பிழை பொறுத்து தம் அமைச்சர் பதவியைத் துறந்து திருப்பெருந்துறை, உத்தர கோசமங்கை, திருவாரூர், திருவிடை மருதூர், சீர்காழி, திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம் முதலிய தலங்களுக்குச் சென்று சிவ பெருமானை வணங்கிப் பதிகங்கள் பாடி, அற்புதங்கள் நிகழ்த்திக் கொண்டிருந்தார். தில்லைச்சிதம்பரத்தில் ஊமைப் பெண்ணைப் பேச வைத்தமை, புத்தரை வாதில் வென்றமை போன்ற அற்புதங்களைச் செய்தருளினார். தில்லை நடராசப் பெருமானின் வேண்டுகோளின் படி தாம் பாடிய திருவாசகப் பாடல்களை ஓதும் போது, இறைவன் அவற்றைச் சிவனடியார் வேடத்திலிருந்து ஓலைச் சுவடியில் எழுதிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டதுடன், " பாவை பாடிய வாயால் கோவை ஒன்று பாடுக" எனவும் விண்ணப்பித்தார். அதன்படி மாணிக்க வாசகர் திருச்சிற்றம் பலக் கோவையாரைப் பாடப்பாட இறைவன் அதனையும் எழுதிக் கொண்டார். "மாணிக்கவாசகர் சொல்ல அழகிய சிற்றம்பல முடை யான் எழுதியது" என்று கையொப்பமிட்டு அதனைக் கனசபையின் பஞ்சாக்கரப் படியில் வைத்து விட்டு மறைந்தருளினார். மறுநாட் காலை தில்லைவாழ் அந்தணர்கள் ஓலைச் சுவடியைக் கண்டு, அம்பலவாணன் கையெழுத்திட்டு இருப்பதை அறிந்து மாணிக்க வாசகரிடம் வினவினார்கள். அவரையே இப்பாடல்களுக்குப் பொருள் சொல்ல வேண்டினார்கள். மாணிக்கவாசகரோ அவர்களை அழைத்துக் கொண்டு பொற்சபையை அடைந்து அங்குள்ள இறைவனின் திருக்கூத்தினைச் சுட்டிக்காட்டி இவரே இத் திருவாசகத்திற்குப் பொருள் என்று காட்டியதுடன் அங்கு எழுந்த சிவ சோதியில் இரண்டறக் கலந்து விட்டார். அந்நாளே ஆனி மகம் ஆகிய நன்னாள்.

திருவாசகம் ஐம்பத்தொரு தலைப்புகளில் 658 பாடல்களைக் கொண்டது. சிவபுராணம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப் பகுதி, போற்றித் திருவகவல் ஆகிய முதல் நான்கும் அகவற் பாவாலான நெடும் பாடல்களாகும். மாணிக்க வாசகர் தில்லை (25), திருப்பெருந் துறை(20), திருவண்ணாமலை (02), திருத்தோணிபுரம் (01), திருவாரூர் (01), உத்தர கோச மங்கை (01), திருக்கழுக்குன்றம் (01) என்றவாறு தலங்கள் ரீதியாகப் பாடியுள்ளார். மாணிக்கவாசகர் தமது இனிய இறை அனுபவத்தைப் பைந்தமிழ்ப் பாடலாகப் பக்தி ரசம் சொட்டத் திருவாசகமாகத் தந்துள்ளார். "திருவாசகத்துக்குருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்" என்பதற்கிணங்க தமிழ் மொழியை பக்திக்குரிய மொழியாக்கியதில் இத் தெய்வீகப் பனுவல்கள் முக்கிய இடம் பெற்றுள்ளன. நாட்டுப்புறப் பண்பாடு தழுவிய பாடல்களை திருப்பொற்சுண்ணம், திருவெம்பாவை, திருவுந்தியார், திருக் கோத்தும்பி, திருச்சாழல், திருப்பூவல்லி, திருவேசறவு, திருப் பொன்னூஞ்சல் முதலான தலைப்புக்களில் பாடித் தந்துள்ளார். ஒவ்வொரு பாடலும் உடலையும் உள்ளத்தையும் உருக வைப்பது. அழுதழுது இறைவனை அடைந்தவர் மாணிக்கவாசகர் என்பர். சாயுச்சியமுத்தி பெற்றவர்; ஞான மார்க்கத்தைப் பேணி அருள் பெற்றவர். இறைவனைச் சற்குருவாகக் கண்டவர். இவரது திருவாசகப் பாடல்கள், பாடல்களின் வரிசையில் சிவபுராணத்தில் தொடங்கி அச்சோப்பதிகத்தில் முடிவடைகிறது. "நன்றே செய்வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே" என இறைவனைக் கேட்டு நின்ற மாணிக்கவாசகர் அகத்திணைச் செய்யுளாக 400 கட்டளைக் கலித்துறைப் பாக்களாக பேரின்பம் விரவிய திருக் கோவையார் பாடல்களையும் தந்து தமிழுக்கும் சமயத்திற்கும் அரிய பணியாற்றியுள்ளார். 32 ஆண்டுகள் மட்டும் இவ்வுலகில் வாழ்ந்து காலத்தால் அழியாத தெய்வீகப் பனுவல்களைத் தந்து இறைவனு டன் இரண்டறக் கலந்து விட்டார்.



இங்கு திருவாசகத் திலுள்ள "கோயில் திருப் பதிகம்" இடம் பெற்றுள் ளது. இது தில்லையில் அருளப் பெற்றது. அனு போக இலக்கணமான ஆன்மா இறைவனுடன் இரண்டறக் கலத்தலைத் தனது தூய பக்தி நிலை யில் நின்று இறை அனுபவமாக மாணிக்கவாசகர் பாடியுள்ளார். பத்துப் பாடல்கள் கொண்ட பதிகமாகவும் அந்தாதித் தொடையிலும் அமைந்து பக்தி மணம் கமழுகின்றது.

கோயில் திருப்பதிகம்

தில்லையில் அருளிச் செய்யப்பட்டது

அனுபோக இலக்கணம்

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

1. மாறிநின்(று) என்னை மயக்கிடும் வஞ்சப்
புலன்ஐந்தின் வழியடைத்(து) அமுதே
ஊறிநின்(று) என்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந்(து) அருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடைய அன்பே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொருள்:

தேறலின் தெளிவே! - தெளிந்த தேனே!; சிவபெருமானே!; திருப் பெருந்துறையுறை சிவனே! - திருப் பெருந்துறையில் கோயில் கொண்டு வீற்றிருக்கின்ற சிவனே!; ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த - முடிவு இல்லாத நற்கதிகள் யாவற்றையும் கடந்து அப்பால் நின்ற; இன்பமே என்னுடைய அன்பே - இன்பமயமானவனே!, எனது அன்புக்குரியவனாய் விளங்குபவனே; மாறிநின்று என்னை மயக்கிடும் - மெய்ம்மையிலிருந்து பிசகி என்னை மயக்கி, மெய்ப் பொருளைப் பொய்ப் பொருளாய்க் காட்டும்; வஞ்சப் புலன் ஐந்தின் வழி அடைத்து - வஞ்சனை மிக்க புலன்களாகிய ஐந்து கருவிகளின் வாசனையை நீக்கி; அமுதே ஊறிநின்(று) - பேரானந்த அமுத ஊற்றாகி - என்னுள் எழு பரஞ்சோதி - என்னுள்ளத்தில் எழுகின்ற பரஞ்சோதியாய்; உள்ளவா காண வந்(து) அருள்வாய் - உள்ளவனே! உன்னைக் காணும்படி எனக்கு வந்து அருள் செய்வாயாக.

பொழிப்பு :

தெளிந்த தேனே! சிவபெருமானே! திருப்பெருந்துறையில் கோயில் கொண்டு வீற்றிருக்கும் சிவனே! முடிவற்ற நற்கதிகள் யாவினையும் கடந்து நின்ற இன்ப மயமானவனே! என் அன்புக் குரியவனே! மெய்ம்மையிலிருந்து பிசகி, என்னை மயக்கி, மெய்ப் பொருளைப் பொய்ப்பொருளாய்க் காட்டும் வஞ்சனை மிக்க புலன்களாகிய ஐந்து கருவிகளின் வாசனையை நீக்கிப் பேரானந்த அமுத ஊற்றாய் என்னுள் எழுகின்ற பரஞ்சோதியாய் உள்ளவனே! உண்னைக் காணும்படி எனக்கு வந்து அருள் செய்வாயாக.

விளக்கம் :

இம்மை, மறுமை ஆகிய உலகங்கள் இந்திரியங்களால் (சுக்கிலங்களால்) நுகரப்படுபவையாதலால் நிலையற்றவை. பரம் பொருளோ இந்திரிய நுகர்ச்சிக்கு அப்பாற்பட்டது. அதன் நித்திய மான ஆனந்தம் சுவர்க்க போகத்திலும் மேலானது. இக் கருத்தை இப் பனுவல் வெளிப்படுத்தியுள்ளது. பொய்ம்மையிலிருந்து மெய்ம் மைக்கு இட்டுச் செல்லுதல் இதுதான். மணிவாசகர் தனது வஞ்சப் புலன்களை அடைத்து பேரானந்த மயமான இறையருளை தனது உள்ளத்தில் உருவாக்கிய பரஞ்சோதியே! என்று ஊனும் உடலும் உருகி நெகிழ்கிறார். ஜீவாத்மா, பரமாத்மாவுடன் இரண்டறக் கலத்தலே அனுபோகமாகும். பரமாத்மாவை ஜீவாத்மா சிக்கெனப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்த நிலையிது. மணிவாசகரது நிலையும் அதுவே ஆகி உள்ளதை இப் பாடல் காட்டுகிறது. வஞ்சப் புலன்கள் – சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐம்புலன்கள் உருவாவதற்குக் காரணமான கருவிகளாகிய ஐம்பொறிகளையே இங்கு சுட்டி நிற்கிறது. அவை மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியனவாகும்.

அருஞ்சொற்பொருள்:

காண வந்து – உள்நின்று; தேறல் – தேன்; பதம் – நற்கதி; கடந்த – அப்பால் நின்ற.

2. **அன்பினால் அடியேன் ஆவியோ(டு) ஆக்கை**
ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யானிதற்(கு) இலன்ஓர் கைம்மாறு
முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடைச் சிவபுரத்(து) அரைசே.

சொற்பொருள்:

முன்புமாய்ப் பின்பும் முழுதுமாய்ப் பரந்த முத்தனே! – உலக உயிர்களின் தோற்றத்திற்கு முன்னரும், உலக ஒடுக்கத்திற்குப் பின்னரும், உலக உயிர்கள் முழுவதிலும் நிறைந்து நிற்கின்ற எவற்றுக்கும் கட்டுப்படாதவனே!; முடிவிலா முதலே – எல்லையற்ற பரம்பொருளாகிய முதல்வனே!; தென்பெருந் துறையாய் – தெற்கேயுள்ள திருப்பெருந்துறையில் கோயில் கொண்டு அமர்ந்தவனே; சிவபெருமானே; சீருடைச் சிவபுரத்து அரசே! – சிறப்புக்களை உடைய சிவபுரத்தின் அரசனாக விளங்குபவனே!; அன்பினால் அடியேன் ஆவியோடு ஆக்கை ஆனந்தமாய்க் கசிந்து உருக – உன்மீது கொண்ட பேரன்பின் காரணமாக அடியேனுடைய உயிரும் உடலும் ஆனந்த மயமாய் நெகிழ்ந்து உருக; என்பரம் அல்லா – என் தருதிக்கு மேலான; இன்னருள் தந்தாய் – இனிய அருட் செல்வத்தைத் தந்துள்ளாய்; யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறு – இதற்கு யான் செய்யக் கூடிய பதிலுதவி(கைம்மாறு) ஒன்றும் இல்லையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு :

உலக உயிர்கள் தோற்றத்திற்கு முன்னும், உலக ஒடுக்கத் திற்குப் பின்னும், உலக உயிர்களிலும் நிறைந்து நிற்கின்ற எதிலும் கட்டுப் படாதவனே! எல்லையற்ற பரம்பொருளாகிய முதல்வனே! தென் திருப்பெருந்துறையில் கோயில் கொண்டிருப்பவனே! சிவபெருமானே! சிறப்பமைந்த சிவபுரத்தின் அரசனாக விளங்கு பவனே! உன்மீது கொண்ட பேரின்பம் காரணமாக அடியேனுடைய உயிரும் உடலும் ஆனந்தமாய் நெகிழ்ந்து உருக, என் தகுதிக்கும் மேலான இனிய அருள் செல்வத்தை அளித்துள்ளாய். இதற்குப் பயன் செய்யக் கூடிய கைம்மாறு ஒன்றும் இல்லையே.

விளக்கம் :

மணிவாசகர், இறைவன் தனக்களித்த பெருங்கருணையை நினைத்து நெக்குருகிப் பாடிய பாடல் இதுவெனலாம். சிவானந் தத்தின் மேலீட்டால் ஜீவ போதமானது அகண்ட சிவ போதமாக விரிவடைவதை இங்கு காணலாம். தன் தகுதிக்கு மேலான திருவருளைத் தந்ததற்காகக் கழிவிரக்கப் படுவதையும் பார்க்க முடிகிறது. தன்னால் பதிலுதவி ஏதும் செய்ய முடியவில்லையே என்ற மணிவாசகரின் ஆதங்கத்தையும் உணர முடிகிறது. மேலும் இறைவன் முன்னைக்கும், பின்னைக்கும் முடிவில்லா முதலாய் விளங்குபவன் என்பதையும் இப் பாடலில் காண முடிகிறது.

அருஞ்சொற்பொருள் :

ஆக்கை - உடல்; கசிந்து - உள்நின்று, நெக்குருகி; என்பரம் அல்லா - என் தகுதிக்கு மேலான; முத்தனே - எதிலும் கட்டுப் படாதவனே; சீர் - சிறப்பு.

3. அரைசனே அன்பர்க்(கு) அடியனேன் உடைய
அப்பனே ஆவியோ(டு) ஆக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின்(று) உருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரைஉணர்(வு) இறந்துநின்(று) உணர்வதோர் உணர்வே
யான் உன்னை உரைக்குமா(று) உணர்த்தே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொருள் :

அன்பர்க்(கு) அரசனே! - உன்பால் அன்பு கொண்டோர்க்கு அரசனாக விளங்குபவனே!; அடியனேன் உடைய அப்பனே - அடியவனாகிய என்னுடைய தந்தையைப் போன்றவனே!; ஆவியோடு ஆக்கை புரை புரை கனியப் புகுந்து நின்று உருக்கி - எனது உயிருடன் உடலிலுள்ள எலும்பின் உள்துளை எல்லாம் நெகிழக் கூடியதாய் உட்புகுந்து நின்று உருக்கி; பொய் இருள் கடிந்த மெய்ச் சுடரே! - பிரபஞ்சத்துக்குரிய இருள், வெளிச்சம் ஆகியவற்றுக்கு அப்பால் இருக்கும் உண்மையான ஆத்ம ஜோதியே; திரை பொரா மன்னும் - அலைகள் மோதாமல் நிலைபெற்ற; அமுதத் தெண் கடலே - பேரானந்த அமுதமாகிய தெளிந்த கடல் போன்றவனே!; திருப்பெருந் துறையுறை சிவனே! - திருப்பெருந் துறையில் கோயில் கொண்டு வீற்றிருக்கின்ற சிவபெருமானே!; உரை உணர்வு இறந்து நின்று உணர்வதோர் உணர்வே - சொல்லால் விளக்கிட முடியாமல் நின்று, உணர்வினால் உணர்ந்து கொள்ளக் கூடிய அனுபவப் பொருளே!; யான் உன்னை உரைக்குமா(று) உணர்த்தே - அடியவனாகிய யான் உன்னைப்பற்றிச் சொல்லக் கூடியவற்றை உள்நின்று உணர்த்து வாயாக.

பொழிப்பு :

உன்பால் அன்பு கொண்டோர்க்கு அரசனே! அடியவனான என்னுடைய தந்தையே! எனது உயிருடன் உடலிலுள்ள எலும்புகளின் உள் துளை எல்லாம் நெகிழக் கூடியதாய் உட்புகுந்து உருக்கி, பிரபஞ்சத்தின் இருள், ஒளி ஆகியவற்றுக்கு அப்பாலிருக்கும் உண்மையான ஆத்ம ஜோதியே! அலைகள் மோதாமல் நிலைபெற்ற பேரானந்த அமுதமாகிய தெளிந்த கடல் போன்றவனே! திருப் பெருந்துறையில் கோயில் கொண்டு வீற்றிருக்கும் சிவபெருமானே; சொல்லால் விளக்கக் கூடிய உணர்விற்கு அப்பால் நின்று உள்ளத்தால் உணர்ந்து கொள்ளக் கூடிய அனுபவப் பொருளே! அடியவனாகிய யான் உன்னைப் பற்றிக் கூறக் கூடியவற்றை உள் நின்று உணர்த்துவாயாக.

விளக்கம் :

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அந்தக்கரணங் களுக்கு அப்பாற்பட்ட பிரக்ஞானம் ஆகிய பெருநிலையை அருளு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறு மாணிக்கவாசகர் வேண்டுவதை இப்பாடலில் காணலாம். பரமாத்மாவின் ஒளியானது, இருளுக்கும் வெளிச்சத்திற்கும் அப்பாற் பட்டது; பரம்பொருள் அசைவற்ற பேரானந்தம், அதனைச் சொற்களால் வர்ணிக்க முடியாது; உள்ளத்தால் உணர்ந்து கொள்ளவே முடியும் என்பதையும் இங்கு காண முடிகிறது. புரை புரை கனிய - எலும்புகளின் உள் துளையெல்லாம் நெகிழ்ந்து உருக; உரையுணர்வு இறந்து நின்ற - சொற்களால் கூறக் கூடிய உணர்வினைக் கடந்து நின்ற; திரை பொரா மன்னும் - அலைகள் மோதாது நிலைபெற்ற; பொய்யிருள் கடந்த மெய்ச் சுடரே - உலகின் இருள், ஒளி ஆகியவற்றுக்கு அப்பாலிருக்கும் உண்மையான பேரொளியே; உரைக்குமாறு உணர்த்தே - சொல்லும் விதத்தினை உணர்த்துவாயாக;

அருஞ்சொற்பொருள்:

அப்பனே - தந்தையே; புரை புரை - உட் துளைகள்; கனிய - நெகிழ, இளக; திரை - அலை; பொரா - மோதாத, பொருந்தாத; மன்னும் - நிலைபெற்ற; தெண் - தெளிந்த; இறந்து நின்று - கடந்து நின்று, அப்பால் நின்று, முடியாமல் நின்று;

4. **உணர்ந்தமா முனிவர் உம்பரோ(டு) ஒழிந்தார்**
உணர்வுக்கும் தெரிவுஅரும் பொருளே
இணங்கிலி எல்லா உயிர்கட்கும் உயிரே
எனைப்பிறப்(பு) அறுக்கும்எம் மருந்தே
திணிந்ததோர் இருளில் தெளிந்ததூ வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கள்தாம் இல்லா இன்பமே உன்னைக்
குறுகினேற்(கு) இனியென்ன குறையே.

சொற்பொருள்:

உணர்ந்த மாமுனிவர் - பரம்பொருள் பற்றி நன்குணர்ந்த பெருந்தவ முனிவர்களுக்கும்; உம்பரோ(டு) - தேவர்களுக்கும்; ஒழிந்தார் - ஏனையவர்களுக்கும்; உணர்வுக்கும் தெரிவு அரும் பொருளே - உணர்ந்து அறிய முடியாத அரிய பொருளாக விளங்குபவனே!; இணங்கிலி - ஒப்பற்றவனே!; எல்லா உயிர்கட்கும் உயிரே - உலக உயிர்கள் அனைத்துக்கும் உயிராய் விளங்குபவனே!;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனைப் பிறப்பு அறுக்கும் எம் அரு மருந்தே – எனது பிறவிப் பிணியை இல்லாமற் செய்கின்ற எமது அரிய மருந்து போன்றவனே!; திணிந்த தோர் இருளில் தெளிந்ததூ வெளியே – செறிந்திருக்கும் பிரபஞ்ச மாகிய இருளில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஞான வெளியே!; திருப்பெருந் துறையுறை சிவனே! – திருப்பெருந் துறையில் கோயில் கொண்டு அமைந்துள்ள சிவபெருமானே!; குணங்கள் தாம் இல்லா இன்பமே – முக்குணங்களும் அற்ற இன்பமான பொருளே!; உன்னைக் குறுகினேற்கு இனி என்ன குறையே – உன்னை அடைந்தவர்களுக்கு இனிமேல் யாதும் குறையில்லை.

பொழிப்பு :

பரம்பொருள் பற்றி நன்குணர்ந்த பெருந்தவ ஞானிகளும், தேவர்களும் ஏனையோர்களும் அறிந்துணர முடியாத அரிய பொருளே! ஒப்பற்றவனே! உலக உயிர்கள் அனைத்திற்கும் உயிராய் விளங்குபவனே! எனது பிறவிப் பிணியை நீக்கும் எமது அருமருந்து போன்றவனே! செறிந்த பிரபஞ்சமாகிய இருளில் பிரகாசிக்கும் ஞான வெளியே! திருப்பெருந்துறையில் கோயில் கொண்டு அமைந்துள்ள சிவபெருமானே! முக்குணங்களும் அற்ற இன்பமான பொருளே! உன்னை அடைந்தவர்க்கு இனிமேல் என்ன குறையிருக்கப் போகிறது? ஒன்றுமில்லை.

விளக்கம் :

நிறை ஞானிகள், தேவர்கள், ஏனையோர் பரம்பொருளை முற்றும் அறியார். ஒப்பற்ற அவன் உயிர்களுக்கு உயிர் போன்றவன். எனக்கும் அவனுக்கும் உள்ள தொடர்பினை அறியும்போது நான் முத்தி பெறுபவனாவேன் என மாணிக்கவாசகர் கூறுவதை இப்பாடல் உணர்த்தியுள்ளது. குணங்களைக் கடந்து இருளிலும் பிரகாசிக்கும் ஞான வெளியாகிய சிவபெருமானை அறிகிறவரே பூரணமடைபவ ராகிறார் என்று சிந்திக்க வைக்கும் பாடலிது எனலாம். அனுபோக நிலையினை எடுத்துக் காட்டும் முகமாக அமைந்துள்ளது. உணர்ந்த மாமுனிவர் – பரம்பொருள் பற்றி அறிந்துணர்ந்த நிறை ஞானிகள்; பிறப்பறுக்கும் எம்மருந்தே – பிறவி நோய்க்கு எமக்கு மருந்தாக விளங்குபவன்; திணிந்ததோர் இருளில் – செறிந்துள்ள பிரபஞ்சமாகிய இருளில்; தெளிந்த தூவெளி – தெளிவான ஞான வெளி; குணங்கள் தாமில்லா – குணங்களைக் கடந்து நின்ற, குணாதீதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருஞ்சொற்பொருள்:

உம்பர் – தேவர்கள்; ஒழிந்தார் – ஏனையவர்கள்; இணங்கிலி – ஒப்பில்லாதவன்; குறுகினேற்கு – அடைந்தவர்க்கு.

5. **குறைவிலா நிறைவே கோதிலா அமுதே**
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீ என் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை என்இரக் கேனே

சொற்பொருள்:

குறைவிலா நிறைவே – குறையணுகாத பூரணமான பொருளே!; கோதிலா அமுதே – குற்றமற்ற அமுதம் போன்றவனே; ஈறிலா செழுஞ் சுடர்க் குன்றே – முடிவே இல்லாத செழுமையான ஜோதி மலையே!; மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்து – வேதமாகவும், வேதத்தின் சாரமாகவும் (பொருளாகவும்) வந்து; என் மனத்திடை மன்னிய மன்னே – என் உள்ளத்தில் நிலைபெற்ற தலைவனே!; சிறை பெறா நீர்போல் – கரையற்ற வெள்ளம் போல்; சிந்தைவாய் பாயும் – மனத்தின்கண் பாய்கின்ற; திருப்பெருந் துறையுறை சிவனே! – திருப்பெருந் துறையில் கோயில் கொண்டுறை கின்ற சிவபெருமானே!; நீ என் உடலிடங் கொண்டாய் – இறைவனே நீ, என் உடலினை இடமாகக் கொண்டு தங்கியுள்ளாய்; இனி உன்னை என் இரக்கேனே – இனி நான், உன்னிடம் இரந்து கேட்பதற்கு யாது உள்ளது (ஒன்றுமில்லை).

பொழிப்பு:

குறையணுகாத நிறைவான பொருளே! குற்றமற்ற அமுதே! முடிவேயில்லாத செழுமையான ஒளிச் சுடர் மலையே! வேதமாயும், அதன் பொருளுமாயும் வந்து என் மனத்தில் நிலைபெற்ற அரசனே! கரையற்ற வெள்ளம் போல் என் மனதுள் பாய்கிற, திருப்பெருந் துறையில் கோயில் கொண்டுறைகின்ற சிவபெருமானே! இறை வனே! நீ, என் உடலினை இடமாகக் கொண்டு தங்கியுள்ளாய்! இனி நான் உன்னிடம் இரந்து கேட்பதற்கு யாது உள்ளது? ஒன்றுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்:

பூரணன் ஆகிய நீ என்னுள் நிறைந்துள்ளாய்; இனி நான் வேண்டுவதற்கு யாது உள்ளது? என்று மணிவாசகர் இறைவனைக் கேட்பதாக அமைந்த இப்பாடல், இரண்டறக் கலத்தலாகிய நிலையை உணர்த்துவது. இறைவனே என்னுள் இருக்கும் போது இனி, எனக்கு என்ன வேண்டும் என்ற கருத்தினைச் சுட்டுவதுடன், இறைவனின் பேரன்பு வெள்ளத்தில் திளைத்த ஜீவாத்மாவின் நிலையையும், அதன் பரவசத்தையும் தெரிவிப்பது. இறைவன் பூரணன்; இனிமையானவன்; ஒளிமயமானவன்; வேத மயமானவன்; அருள் வெள்ளமானவன்; அன்பர் உள்ளத்து உறைபவன் என்பதை நாம் இப்பாடலில் விளங்கிக் கொள்ள முடிகிறது.

அருஞ்சொற்பொருள்:

கோதிலா - குற்றமிலா; ஈறிலா - முடிவிலா; கொழுஞ்சுடர் - செழுமையான சுடர்; மறை - வேதம்; மன்னிய - நிலைபெற்ற; மன்னே - அரசனே, தலைவனே; சிறைபெறா - கரையற்ற; சிந்தை - மனம், உள்ளம்; இடங்கொண்டாய் - இடமாக்கிக் கொண்டாய்; இரக்கேனே - இரப்பேனே, இரந்து கேட்பேனே.

6. **இரந்(து) இரந்(து) உருக என்மனத் துள்ளே**
எழுகின்ற சோதியே இமையோர்
சிரந்தனில் பொலியும் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தஆ காயம் நீர்நிலம் தீகால்
ஆயவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டுகொண்(டு) இன்றே.

சொற்பொருள்:

இரந்து இரந்(து) உருக என் மனத்துள்ளே எழுகின்ற சோதியே - உன்னை வேண்டி வேண்டி உருக, என் மனத்தில் தோன்றுகின்ற ஒளியே; இமையோர் சிரந்தனில் பொலியும் கமலச் சேவடியாய் - வானவர்கள் தம் தலைமீது வைத்துப் போற்றும் தாமரை மலர் போன்ற திருவடிகளை உடையவனே; திருப்பெருந்துறையுறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனே - திருப்பெருந்துறைத் திருத்தலத்தில் உறைகின்ற சிவ பெருமானே; நிரந்த ஆகாயம் நீர் நிலை தீ கால் ஆயவை - எங்கும் வியாபித்துள்ள ஐம்பூதங்களாகவும் இருக்கின்றாய்; அல்லையால் ஆங்கே கரந்ததோர் உருவே - அதற்கு அப்பாலும் மறைந்திருக்கும் வடிவினனே; இப்பொழுது உன்னைக் கண்ணுறக் கண்டுகொண்டு களித்தனன் - இப்பொழுது உன்னைக் கண்ணாரக் கண்டு கொண்ட தினால் அகமகிழ்ந்தேன்.

பொழிப்பு :

உன்னை வேண்டி வேண்டி உருக, என் மனத்தில் தோன்றுகின்ற ஒளியே! வானவர்கள் தமது தலைமீது வைத்துப் போற்றும் தாமரை மலர் போன்ற திருவடிகளை உடையவனே! திருப் பெருந்துறைத் திருத்தலத்தில் உறைகின்ற சிவபெருமானே! எங்கும் வியாபித்துள்ள ஐம்பூதங்களாகவும் இருக்கின்றாய்; அதற்கப்பாலும் மறைந்திருக்கும் வடிவினனே! இப்பொழுது உன்னைக் கண்ணாரக் கண்டு கொண்டு உளம் மிக மகிழ்ந்தேன்.

விளக்கம் :

"இன்றே" என்பதில் "ஏ"காரம் அசை நிலை. ஐம்பூதங்களா வன: நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகியவை. போற்றுதலுக்கு ஏற்ப உள்ளத்தில் ஒளிர்பவன் அவன்; ஐம்பூதங்களில் பொலிபவன் அவன்; ஐம்பூத உலகுக்கு அப்பாலும் மறைந்து இருப்பவன் அவன்; அவனே சிவபெருமான் என்பதை இப் பாடல் உணர்த்தியுள்ளது. அத்தகைய இறைவன், உள்ளத்தில் அவர் கண்டு களிக்க எழுந்துள்ளான்; அவரது மனத்துள் எழுகின்ற ஜோதியாய் விளங்குகிறான் என்பதனை அறிக. கமலம் - உவமானம்; இறைவனின் சேவடி - உவமேயம்; சிவந்த நிறம் - பொதுத் தன்மை. சேவடி - பண்புத் தொகை.

அருஞ்சொற்பொருள் :

இமையோர் - வானவர், தேவர்கள்; சோதி - சுடர், ஒளி; சிரம் - தலை; பொலியும் - திகழும்; கமலம் - தாமரை; சேவடி - திருவடி; நிரந்த - எங்கும் வியாபித்துள்ள, எங்கும் நிறைந்த; ஆயவை - ஆகியவை; அல்லவை - அவையில்லாத; கரந்த - மறைந்துள்ள, ஒளித்துள்ள; களித்தனன் - மகிழ்ந்தனன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. இன்(று) எனக்(கு) அருளி இருள்கடிந்(து) உள்ளத்(து)
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீஅலால் பிறிதுமற்(று) இன்மை
சென்றுசென்று அணுவாய்த் தேய்ந்துதேய்ந்(து) ஒன்றாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ அல்லை அன்றியொன்(று) இல்லை
யார்உன்னை அறியகிற் பாரே.

சொற்பொருள்:

திருப்பெருந்துறையுறை சிவனே! - திருப்பெருந்துறையில் கோயில் கொண்டு உறைகின்ற சிவபெருமானே!; இன்று எனக்கு அருளி - இப்போது எனக்கு அருள் புரிந்து; இருள் கடிந்து - அஞ்ஞானமாகிய இருளை அகற்றி; உள்ளத்து எழுகின்ற ஞாயிறே போன்று நின்ற நின் தன்மை - மனத்தில் உதிக்கின்ற, சூரியனை ஒத்ததான உன் இயல்பை; நினைப்பற நினைந்தேன் - நான் நினையாமல் நினைந்தேன்; நீ அலால் பிறிது மற்று இன்மை - உன்னைத் தவிர வேறு ஒரு பொருளும் இல்லை எனும்படி; சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாய் - உலகிலுள்ள பொருள்களில் போய்ப் போய் அணு உருவமாகித் தேய்ந்து தேய்ந்து மீண்டும் ஒரு வடிவமாகின்றாய்; ஒன்று நீ அல்லை - நீ ஒரு பொருளும் இல்லை; அன்றி ஒன்றும் இல்லை - உனையன்றி ஒரு பொருளும் இல்லை; யார் உனை அறியகிற்பாரே - உன்னை உள்ளபடி அறிய வல்லவர் யார்?

பொழிப்பு:

திருப்பெருந்துறை சிவபெருமானே! இப்போது எனக்கு அருள் புரிந்து அஞ்ஞானமாகிய இருளை அகற்றி, மனத்தில் உதிக்கின்ற சூரியனை ஒத்ததான உன் இயல்பை நான் நினையாமல் நினைந்தேன். உன்னைத் தவிர வேறொரு பொருளும் இல்லை யெனும்படி உலகிலுள்ள பொருள்களில் போய்ப் போய் அணு உருவமாகித் தேய்ந்து தேய்ந்து, மீண்டும் ஒரு உருவமாகின்றாய். நீ ஒரு பொருளும் இல்லை; உனையன்றி வேறொரு பொருளும் இல்லை. உன்னை உள்ளபடி அறியக் கூடியவர் யாருளர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்:

சிவஞானபோதமானது உள்ளத்தில் ஒடுங்கும் போது, ஜீவ போதமானது ஒழிகிறது. இறைவனே! நீ மாயா காரியங்களான காலதேச வர்த்தமானங்களாகப் பரிணமிக்கவில்லை. நீ ஆதாரமாய் இருப்பதனால் பரிணமித்துள்ள அவைகள் புலப்படுகின்றன. ஞானிகளைத் தவிர மற்றவர்களுக்கு இவ்வுண்மை விளங்குவதில்லை என்பதை இப்பாடல் உணர்த்தியுள்ளது. "நீ அலாற் பிறிது மற்றின்மை" என்பதனால் இறைவனின் தனித் தன்மை விளங்குகிறது. அந்தப் பிறிது மற்றின்மையாகிய பரம்பொருள், உலகிலுள்ள பொருள்கள் அனைத்திலும் சென்று சென்று, மீண்டும் அணு அணுவாக அவற்றில் நின்று தேய்ந்து தேய்ந்து பழையபடி ஏகனாகிறது (ஒரு பொருளாக விளங்குகிறது). இறைவன் அநேகனாய் விளங்குகிறான்; மீண்டும் ஏகனாகிறான்; இது ஒரு விளையாட்டு. இப்படிப் பட்ட உனது விளையாட்டை அறியக் கூடியவர் யாருளர்? என மணிவாசகர் கேட்டு வியப்புறுவதை இப் பாடலிற் காணலாம். "ஏ" காரம் அசைநிலை.

அருஞ்சொற்பொருள்:

இருள் - அறியாமை, அஞ்ஞானம்; கடிந்து - போக்கி, நீக்கி, அகற்றி; ஞாயிறு - சூரியன்; தன்மை - இயல்பு; நினைப்பற - நினையாமல்; அறியகிற்பாரே - அறியக் கூடியவர், அறிய வல்லவர்.

8. **பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்**
பரந்ததோர் படரொளிப் பரப்பே
நீருறு தீயே நினைவதேல் அரிய
நின்மலா நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை எழுந்ததோர் தேனே
திருப்பெருந் துறையுறை சிவனே
யார்உற(வு)எனக்(கு) இங்(கு)ஆர் அயல் உள்ளார்
ஆனந்தம் ஆக்கும்என் சோதி.

சொற்பொருள்:

திருப்பெருந்துறையுறை சிவனே - திருப்பெருந்துறையில் கோயில் கொண்டு வீற்றிருக்கும் சிவபெருமானே!; பார்பதம் அண்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துமாய் முளைத்துப் படர்ந்ததோர் படரொளிப் பரப்பே - நிலவுலகம், சுவர்க்கம், அண்டம் (வெளி) அனைத்துமாய்த் தோன்றி எங்கும் பரந்து விளங்குகின்ற ஒளிமயமான பொருளே!; நீர் உறு தீயே - நீரிலிருந்து தோன்றிய நெருப்பாகவும் விளங்குபவனே!; நினைவதேல் அரிய நின்மலா - நினைப்பதற்கு அரியதாய் மலங்களிலிருந்து நீங்கியவனே!; நின்னருள் வெள்ளச் சீருறு சிந்தை எழுந்ததோர் தேனே - உனது அருள் வெள்ளமானது, தெளிவடைந்த என் மனத்தினுள் எழுகின்ற இனிமை நிறைந்தவனே!; யார் உறவு எனக்கு இங்கு ஆர் அயல் உள்ளார் - (சிவானந்தம் பெற்ற) எனக்கு இங்கு உற்றாரும், சுற்றத்தவர்களும் யார் இருக்கிறார்கள்; ஆனந்தம் ஆக்கும் என் சோதி - ஆனந்த மயமாக்கும் என்னுடைய ஒளியே!

பொழிப்பு :

திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே! நிலவுலகம், சுவர்க்கம், அண்டவெளி அனைத்துமாய்த் தோன்றி எங்கும் பரந்து விளங்குகின்ற ஒளிமயமானவனே! நீரிலிருந்து தோன்றிய நெருப்பாக விளங்குபவனே! நினைப்பதற்கு அருமையான மும்மலங்களிலிருந்து நீங்கியவனே! உன் அருள் வெள்ளமானது தெளிவடைந்த என் உள்ளத்தின் கண் எழச்செய்த தேன் போன்றவனே! எனக்கு (சிவானுபவம் பெற்ற) இங்கு உற்றாரும் சுற்றத்தவரும் எவருள்ளனர்? (உன்னைத் தவிர).

விளக்கம் :

அனைத்தும் சிவரூபம்; தெளிந்த உள்ளத்தில் இறைவன் தேனாகத் திகழ்கின்றான்; சிவானந்தம் பெற்றார்க்கு உற்றாரும் வேற்றாரும் இல்லை என்ற கருத்தினை முன்வைத்துள்ள பாடலாக இது அமைந்துள்ளது. "நீருறு தீயே" என்பது முரண் தொடையாகும். ஆயினும் விஞ்ஞான ரீதியாக இது உண்மை. ஊழிக் காலத்தில் வடவாக்கினியானது நிரிலிருந்து தான் எழுகின்றது. எனவே நீரில் தோன்றிய நெருப்பே என்று மணிவாசகர் இறைவனைப் போற்றினார் எனக் கருதுக. நின்மலன் - மல நீக்கமுடையவன்; படரொளிப் பரப்பு - வியாபித்துள்ள ஒளிப்பரப்பு, பரந்துள்ள ஒளி வெள்ளம்.

அருஞ்சொற்பொருள் :

பார் - உலகம்; பதம் - சுவர்க்கம்; அண்டம் - வெளி; முளைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தோன்றி; உறு - உற்ற; சீர் உறு - தெளிவடைந்த; சிந்தை - மனம்; எழுந்த - தோன்றிய; தேனே - இனிமையானவனே, தேன் போன்றவனே; அயல் - சுற்றம்; ஆக்கும் - உருவாக்கும், தோற்று விக்கும்; சோதி - ஒளி.

9. சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற்(கு) அரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும்ஆ னந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருள் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக்(கு) அருளாய்
வந்துநின் இணையடி தந்தே.

சொற்பொருள்:

சோதியாய்த் தோன்றும் உருவமே - ஒளிமயமாய்த் தோன்றும் உருவமே!; அருவாம் ஒருவனே - உருவமற்ற அருவமாய் விளங்கும் ஒருவனே!; சொல்லுதற்கு அரிய ஆதியே நடுவே அந்தமே - சொற்களால் எடுத்துச் சொல்வதற்கு அரியதான தொடக்கம், நடு, முடிவு ஆகியவைகளாய் உள்ளவனே!; பந்தம் அறுக்கும் ஆனந்த மா கடலே - உலகப் பற்றுக்களை இல்லாமற் செய்யும் ஆனந்தப் பெருங்கடலே!; தீதிலா நன்மைத் திருவருட் குன்றே - தீமை அணுகாத நன்மையையே தருகின்ற திருவருளாகிய மலையே!; திருப்பெருந்துறையுறை சிவனே - திருப்பெருந்துறையில் எழுந்தருளி யிருக்கும் சிவபெருமானே!; யாது நீ போவதோர் வகை எனக்கு அருளாய் - நீ என்னை விட்டு அகன்று போகும் வகை எது என்பதை எனக்கு அருளுவாயா? (எதுவும் இல்லை); வந்து நின் இணையடி தந்தே- எனவே, உன் திருவடிப் பேற்றினை எனக்குத் தந்தருளு வாயாக.

பொழிப்பு:

ஒளி மயமான உருவமே! உருவமற்ற அருவமாய் விளங்கும் ஒருவனே! சொல்லற்கரிய தொடக்கம், நடு, முடிவு, என நிற்கின்ற வனே! உலகப் பற்றுக்களை அகற்றும் ஆனந்தப் பெருங்கடலே! தீமையற்ற நன்மையைத் தரும் திருவருள் மலையே! திருப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்துறை அமர்ந்த சிவபெருமானே! நீ, என்னைவிட்டு நீங்கிப் போகும் வகையினை எனக்கு அருளுவாயா? (எதுவும் இல்லை) ஆதலால் உன் திருவடியாகிய பேற்றினை எனக்குத் தந்து அருள்வாயாக.

விளக்கம்:

சீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் பிரிவில்லை என்பதை மாணிக்கவாசகர் பாடிய இப் பாடல் கூறுகிறது, யாது நீ போவது ஓர் வகை - நீ என்னை விட்டு நீங்கும் வகை எது? எனக் கேட்பதனூடாக எதுவுமில்லை எனப் பொருள் கொள்ள முடிகிறது. பாடலின் முற்பகுதியில் இறைவனுடன் ஐக்கியமான ஆன்மாவானது இறைவனின் திருவருட் குணங்களைக் கூறி வியந்து நிற்பதைக் காண முடிகிறது. "நீ வந்து நின் இணையடி தந்து, யாது போவதோர் வகை, எனக்கு அருளாய்" எனக் கொண்டு கூட்டிப் பொருள் கொளின் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். போவது - உன்னிடம் வருவது.

அருஞ்சொற்பொருள்:

அருவாம் - உருவமற்றது; ஆதி - தொடக்கம்; அந்தம் - முடிவு; பந்தம் - பிறவித் துன்பம், கட்டு, தளை; அறுக்கும் - அகற்றும், நீக்கும்; மாகடல் - பெருங்கடல்; தீதிலா - தீமையில்லாத; குன்று - மலை; வகை - வழி, தன்மை, கூறுபாடு; இணையடி - திருவடிகள்.

10. தந்த(து)உன் தன்னைக் கொண்ட(து)என் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன்(று) இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்ற(து)ஒன்(று) என்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடல்இடங் கொண்டாய்
யான்இதற்(கு) இலன்ஓர் கைம்மாறே.

சொற்பொருள்:

தந்தது உன் தன்னை - இறைவனாகிய உன்னையே எனக்குத் தந்துள்ளாய்; கொண்டது என் தன்னை - அதற்குப் பதிலாகச் சிறியேனாகிய என்னை நீ ஏற்றுக் கொண்டுள்ளாய்; சங்கரா! -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாக்களுக்குச் சுகத்தைச் செய்பவனே!; ஆர்கொலோ சதுரர் - இந்தப் பண்டமாற்றில் யார் கெட்டிக்காரர்; அந்தம் உன்று இல்லா ஆனந்தம் பெற்றேன் - முடிவில்லாத பேரின்பமொன்றினை உன்னிடமிருந்து நான் பெற்றுள்ளேன்; என்பால் நீ பெற்றது ஒன்று யாது? - இதற்கு ஈடாக நீ என்னிடமிருந்து பெற்றுக் கொண்ட பொருள் யாது?; சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான் - என் நெஞ்சத்தையே கோவிலாகக் கொண்ட எம் பெருமானே!; திருப்பெருந் துறையுறை சிவனே - திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே!; எந்தையே ஈசா என் உடல் இடம் கொண்டாய் - என் தந்தையே! ஈசனே! என் உடம்பையே இடமாகக் கொண்டுள்ளாய்; இதற்கு யான் - இந்த உபகாரத்திற்கு நான்; ஓர் கைம்மாறு இலன் - செய்யக் கூடிய பதிலுதவி ஒன்றுமில்லை.

பொழிப்பு :

இறைவனாகிய உன்னையே எனக்குத் தந்துள்ளாய் அதற்குப் பதிலாகிய சிறியேனாகிய என்னை நீ ஏற்றுக் கொண்டுள்ளாய். ஆன்மாக்களுக்குச் சுகத்தைச் செய்பவனே! இந்தப் பண்டமாற்றில் யார் கெட்டிக்காரர்? முடிவில்லாத பேரின்பத்தை உன்னிடமிருந்து நான் பெற்றுள்ளேன். இதற்கு ஈடாக நீ, என்னிடமிருந்து பெற்றுக் கொண்ட பொருள் யாது? என் நெஞ்சத்தையே கோவிலாகக் கொண்ட பெருமானே! திருப்பெருந்துறையில் உறைந்துள்ள சிவபெருமானே! என் தந்தையே! ஈசனே! என் உடம்பையே இடமாகக் கொண்டுள்ளாய். இந்த உபகாரத்திற்கு நான் செய்யக் கூடிய கைம்மாறு ஒன்றுமில்லை.

விளக்கம் :

சீவசக்தி வெறும் கற்பனையானது என்பதை அனுபூதி மான்கள் அறிந்துள்ளனர். யான், எனது என்பவற்றை ஒழிப்பதற்கு ஏற்றதாக, பொய்யான சீவசொரூபம் தேய, அது இருந்த இடத்தில் மெய்யான சிவசொரூபம் மிளிர்கிறது. இதனை மணிவாசகர் கண்டின்புற்றுள்ளமை இப் பாடலில் விளங்குகிறது. "அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்" என்பது சிவானந்தமே ஆகும். உடலும் உள்ளமும் இறைவனே நிறைந்து விளங்குவதனை "என் உடலிடங் கொண்டாய்" எனப்பட்டது. "கொலோ சதுரர்?" எனக் கேட்பதனூ டாக இறைவனைச் சிக்கெனப் பிடித்த தன்மையை அறிய முடிகிறது. "ஏ" காரம் அசைநிலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருஞ்சொற்பொருள் :

சங்கரா – ஆன்மாக்களுக்குச் சுகமளிப்பவர்; சதுரர் – திறமை வாய்ந்தவர்.

குறிப்புகள்

1. *இறைவனுடன் ஆன்மாவானது இரண்டறக் கலத்தலாகிய சுத்தாத்துவ நிலையை எடுத்துக் கூறும் அனுபோக இலக்கண மாகக் கோயில் திருப்பதிகப் பாடல்கள் பத்தும் அமைந்துள்ளன.*

2. *கோயில் என்பது தில்லைத் திருத்தலத்தைச் சிறப்பாகக் குறிப்ப தாகையால், அங்கு மாணிக்கவாசகப் பெருமானால் பாடப்பட்ட இப் பதிகமானது, "கோயில் திருப்பதிகம்" எனப்பட்டது.*

3. கோயில் திருப்பதிகத்தில், தன்னை ஆட்கொள்ளும் சிவபெருமான் பற்றி மாணிக்கவாசகர் எடுத்துக் கூறியவைகள்:

i. *மெய்ப்பொருளை பொய்ப்பொருளாய்க் காட்டும் வஞ்சப் புலன்களின் வாசனையை நீக்கி, என்னுள் அமுதூற்றாய் எழுகின்ற பரஞ்சோதியாய் விளங்குகின்றாய்.*

ii. *யான் உன்மீது கொண்ட பேரன்பினால், அடியேனுடைய ஊனும் உயிரும் ஆனந்தமாய்க் கசிந்துருக, என் தகுதிக்கு மேலான இனிய அருட் செல்வத்தைத் தந்தருளினாய்.*

iii. *எனது உயிருடன் உடலிலுள்ள எலும்பின் உட்துளை எல்லாம் நெகிழக் கூடியதாய், உட்புகுந்து நின்று உருக்கினாய்.*

iv. *எனைப் பிறப்பறுக்கும் அருமருந்தாய் விளங்குகிறாய்.*

v. *மறையுமாய், மறையின் பொருளுமாய் வந்து என் மனத்தி டையே நிலை பெற்றுள்ளாய்.*

vi. *கரையற்ற வெள்ளம் போன்று என் சிந்தையினூடு அருள் வெள்ளமாய்ப் பாய்கின்றாய்.*

vii. *என் உடலினை உனக்குரிய இடமாகக் கொண்டு தங்கினாய்.*

viii. *இரந்து இரந்து உருக, என்மனத்துள் எழுகின்ற சோதியா னாய்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ix. யான் உனைக் கண்ணாரக் கண்டு களிப்படையச் செய்தாய்.

x. இப்பொழுது எனக்கு அருள் புரிந்து, அஞ்ஞான இருளை அகற்றி, மனத்தில் உதிக்கும் ஞாயிறை ஒத்ததான உன் இயல்பை நான் நினையாமல் நினைக்கச் செய்தாய்.

xi. தெளிவடைந்த என் மனத்தினுள் உன் அருள் வெள்ள மானது இனிமை தருமாறு நிறைந்தாய்.

xii. என்னை விட்டு அகலாதபடி யான் உன்னைச் சிக்கெனப் பிடித்துள்ளமையால், உன் திருவடிப் பேற்றினை அருளுமாறு வேண்டச் செய்தாய்.

xiii. எல்லையில்லாத பரமானந்தம் எனக்களித்தாய்.

xiv. இறைவனாகிய உன்னையே எனக்குத் தந்தருளி. சிறிய வனாகிய என்னை நீ ஏற்றுக் கொண்டாய்.

4. கோயில் திருப்பதிகத்தில் மாணிக்கவாசகர் குறிப்பிடும் இறை வனின் இயல்புகள்:

i. தெளிந்த தேனாய் இனிமை தருபவன்.

ii. திருப்பெருந் துறையில் கோயில் கொண்டமர்ந்தவன்.

iii. முடிவில்லாத பதங்கள் யாவற்றையும் கடந்தவன்.

iv. அன்பு மயமானவன்.

v. முன்புமாய், பின்புமாய், முழுதுமாய்ப் பரந்த முத்தன்.

vi. முடிவில்லா முதலாய் விளங்குபவன்.

vii. சிறப்புடைய சிவபுரத்தின் அரசனாக விளங்குபவன்.

viii. அடியவற்கு அரசன்.

ix. பிரபஞ்சத்தின் இருள், ஒளி ஆகியவற்றைக் கடந்த மெய்ச் சுடராக விளங்குபவன்.

x. அமுதத் தேன் கடலானவன்.

xi. சொற்களைக் கடந்து அப்பால் நின்று உள்ளத்தால் உணரக் கூடியவன்.

xii. நிறை ஞானிகள், தேவர்கள், ஏனையோர் யாவராலும் உணர்ந்து கொள்ள முடியாத அரிய பொருளானவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

xiii. ஒப்பற்றவன்.

xiv. எல்லா உயிர்களுக்கும் உயிரானவன்.

xv. குணங்களைக் கடந்த இன்ப மயமானவன்.

xvi. குறைவிலா நிறைவானவன்.

xvii. குற்றமில்லாத அமுதமானவன்.

xviii. எல்லையில்லாத செழுமையான சுடர் மலையாய் விளங்குபவன்.

xix. வானவர் சிரந்தனில் பொலிகின்ற திருவடிகளை உடையவன்.

xx. ஐம்பூதங்களாயும், அதற்கு அப்பால் மறைந்தும் காணப்படும் உருவினன்.

xxi. பொருட்களில் போய்ப் போய் அணுவாகிப் பின்னர் தேய்ந்து தேய்ந்து ஒரு வடிவமாகி ஏகனாய் விளங்குபவன்.

xxii. தான், ஒரு பொருளாகாமலும், தானின்றி ஒரு பொருள் இல்லாமலும் காணப்படுபவன்.

xxiii. உலகம், சுவர்க்கம், அண்டவெளி ஆகியவைகளாய் தோன்றிப் பரவி நிற்கும் ஒளி வெள்ளமானவன்.

xxiv. நீரிலிருந்து தோன்றும் நெருப்புப் போன்றவன்.

xxv. நினைப்பதற்கரிய, மலநீக்கம் பெற்றவன்.

xxvi. சோதி வடிவானவன்.

xxvii. உருவமற்ற அருவமானவன்.

xxviii. முதல், நடு, கடை என உள்ளவன்.

xxix. பிறவிப் பிணியறுக்கும் ஆனந்த மாகடலாய் விளங்குபவன்.

xxx. தீமை அணுகாத நன்மை தருகின்ற திருவருட் குன்றானவன்.

5. கோயில் திருப்பதிகத்தில் மாணிக்கவாசகர் வெளிப்படுத்தும் பக்தியின் உன்னத நிலை :

i. இறைவன், தன்னை ஆட்கொண்ட விதங்களை மெய்யும் மனமும் உருகப் பாடியமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. இறைவனின் அருங்குணவியல்புகளைப் பக்திரசம் சொட்டச் சொட்ட எடுத்துக் காட்டியமை.

iii. இறைவனின் பெரும் கருணைக்கு நிகரான கைம்மாறு இல்லையே எனக் கழிவிரக்கப்பட்டமை.

iv. இறைவனைச் சிக்கெனப் பிடித்த தன் செயல்களை பக்தியுடன் வெளிப்படுத்தியமை.

❋❋❋❋❋❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அமலனாதிபிரான்

- திருப்பாணாழ்வார்.

வைணவ உலகம் போற்றும் பன்னிரு ஆழ்வார்களுள் திருப்பாணாழ்வாரும் ஒருவர். இவர் பிறந்த இடம் சோழ நாட்டின் உறையூர். திருமாலின் ஸ்ரீ வத்ஸ (சங்கு) அம்சமாகப் பிறந்த இவரை, நெற் பயிர்களுக்குள் கிடந்த குழந்தை நிலையில் பாணன் ஒருவன் கண்டெடுத்து வளர்த்தான். இவரது காலம் கி.பி 8 ஆம் நூற்றாண்டு என்பர். துன்மதி ஆண்டின் கார்த்திகை மாதத் தேய்பிறை பொருந்திய துவிதியைத் திதியின் ரோகிணி நட்சத்திரத்தன்று புதன் கிழமையில் இவர் பிறந்தார் எனக் கருதப் படுகிறது. குலத்துக் கேயுரிய யாழ் மீட்டிப் பாடுவதில் சிறந்த தேர்ச்சி பெற்றதனால் "திருப்பாணர்" என அழைக்கப்பட்டார்.

திருப்பாணர் திருவரங்கத்து நாதருக்குப் பாடல் திருத் தொண்டு செய்ய விரும்பினாராயினும், தாம் தாழ்ந்த குலத்தவராத லால் திருவரங்கத்தில் காலடி வைக்கத் தயங்கி, தென் திருக் காவிரியின் தென்கரையில் துறைமுகத்துக்கெதிரில் யாழுங் கையுமாக நின்று திருவரங்கப் பெருமானை திசை நோக்கித் தொழுது வந்தார். குரலும் யாழும் ஒத்திசைக்கப் பெருமாள் மீது இனிமையான பாடல்களைப் பாடிப் பரவசப்பட்டு வருகையில் ஒரு நாள், திருவரங்க நாதனை ஆராதிக்கும் உலோக சாரங்க முனிவர், காவிரியில் நீராடி, துளப மணிமாலை, தாமரை மணிமாலை ஆகியன கழுத்தில் அணிந்து கொண்டு, அரங்கப் பெருமானின் திருமஞ்சனத்திற்குரிய நீரினைக் குடத்திலேந்தி வருகையில், திருப்பாணாழ்வாரைக் கண்டு அப்பாற் செல்லக் கூவினார். இவ்வுலகத் தொடர்பு அற்றிருந்த பாணர் அம் மொழியைச் செவியுறாதிருக்கக் கோபம் கொண்ட முனிவர் ஒரு கல்லை எடுத்துப் பாணர் மீது வீசியதும், பாணரின் நெற்றியில் இருந்து குருதி பெருகியது. சுய நினைவடைந்த பாணர் எதிரே தூரத்தே முனிவர் நிற்பதைக் கண்டு அவ்விடம் நீங்கிச் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்க நாதருக்குச் திருமஞ்சன நீராட்டுச் செய்ய உலோக சார முனிவர் சென்ற போது பெருமாள் நெற்றியிலிருந்து குருதி வடியக் கண்டு, கோயிலார் அனைவருக்கும் தெரிவித்து, அரசனும் அறிந்தும் யாதும் செய்யவிலாது நின்றனர். திருப்பாணாழ்வரின் பக்தியை உலகோர் அறியச் செய்ய விரும்பிய அரங்க நாதர், உலோக சாரர் கனவில் தோன்றி "முனிவ! நீ சென்று எமது நல்லன்பராகிய திருப்பாணரைத் தாழ்ந்த குலத்தவர் என்று கருதாமல் உன் தோளிற் சுமந்து இங்கு கொண்டு வருக" எனக் கட்டளையிட்டார். பெரியார்கள் பலரையும் அழைத்துக் கொண்டு பாணரிடம் சென்ற முனிவர், இறைவன் கட்டளையைக் கூறவும், முதலில் தயங்கிய பாணர், பின்னர் முனிவருடன் தோளில் அமர்ந்து போய்ப் பெருமாள் திரு முன்னிலையில் இறக்கிவிடப் பட்டார். அங்கே அவர் கண்ட காட்சி அற்புதமானது. திருப்பாணாழ்வார் இறைவனது திருவடி முதல் தலை வரையுள்ள அவயவங்கள் எல்லாவற்றையும் ஒன்றன் பின் ஒன்றாகக் கண்குளிரக் கண்டு மனம் உருகினார். எல்லா அவயவங்களிலும் மனதை ஈடுபடுத்தி வழிபட்டார். அழகிய மணவாளரிடம் தாம் நுகர்ந்த அழகையும், இன்பத்தையும் உலகத்தார் அனுபவிக்கும் பொருட்டு இறைவனின் திருமேனி அழகைச் சிறந்த பத்துப் பாட்டுகளாகப் பாடினார். இதன் தொடக்கம் "அமலனாதி பிரான்" என்பதாகும். ஆதலால் இப் பதிகத்திற்கும் இதே பெயர் நிலைத்து விட்டது. இதன் பின்னர் அடியவர் அனைவருங் காணப் பெருமாள் திருவடியை வணங்கி, அத் திருவடிகளிலேயே மறைந்து பேரின்ப வீட்டை அடைந்தார். திருப் பாணாழ்வாரைத் தோளில் தூக்கி வந்த உலோக சார முனிவரையும் இறைவன் திருவருள் புரிந்து, ஆட்கொண்டார். திருப்பாணாழ்வார் பாடிய திருத்தலங்கள் திருவரங்கம், திருவேங்கடம், பரமபதம் ஆகியவை. பாணர், முனிவாகனர், யோகி வாகனர், கவீசுவரர் ஆகியன இவரது மறுபெயர்களாகும். "என் னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்று பாடியபடி தன் பூத உடலோடு ஆண்டாள் போல் அரங்கப் பெருமா னோடு இரண்டறக் கலந்தவர் இவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப் பாணாழ்வார் திரு வரங்கப் பெருமான் மீது பாடிய பத்துப் பாடல்களும் அரங் கனின் திருவடியில் தொடங்கி, தலைவரை உள்ள உறுப்புக் களாகி பாதம், ஆடை, உந்தி, உதர பந்தனம், மார்பு, கழுத்து, வாய், கண்கள், உடல், தலை ஆகியவற்றின் வடிவழகையும், குண வழகையும் அற்புதமாகக் காட்சிப் படுத்துகின்றன. நாயகன், நாயகி பாவத்தில் திருப் பாணாழ்வார் பாடிய பதிகம் இதுவாகும். இப் பாடல்கள் பத்தும் "அமலனாதி பிரான்" என்னும் பெயர் கொண்ட பதிகமாக விளங்குகின்றது. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் முதலாயிரமாயுள்ள 947 திருப்பாடல்களில் திருப்பாணாழ்வார் பாடியவை 927 – 936 வரையில் இடம்பெற்றுள்ளன. இப்பத்துப் பாடல்களுமே இவர் பாடி அருளியவையாகும். இவை பழமறையின் பொருள்கள். இங்கு இப் பாடல்களை உள்ளடக்கிய பதிகம் இடம் பெற்றுள்ளது.

அரங்கனின் கமலபாதம் வந்து விட்டது!

1. **அமல னாதிபிரா னடியார்க்**
கென்னை யாட்படுத்த
விமலன், விண்ணவர் கோன்விரை
யார்பொழில் வேங்கடவன்,
நிமலன் நின்மலன் நீதிவானவன்
நீள்மதிளரங்கத் தம்மான், திருக்
கமலபாதம் வந்தென் கண்ணி
னுள்ளன வொக்கின்றதே.

சொற்பொருள்:

அமலன் – மல நீக்கமுள்ள இறைவன்; ஆதிபிரான் – தொன்மையானவன்; அடியார்க்கு என்னை ஆட்படுத்த – மெய் அடியவர்களுள் என்னையும் ஒருவனாக ஆட்கொண்டவன்; விமலன் – மல நீக்கமுள்ளவன்; விண்ணவர் கோன் – வானவர்களின் அரசன்; விரையார் பொழில் வேங்கடவன் – வாசனை மிக்க மலர்ச் சோலை களையுடைய திருவேங்கடமலையில் வீற்றிருப்பவன்; நிமலன் நின்மலன் – பாசங்களிலிருந்து நீங்கியவன்; நீதி வானவன் – தரும நீதியைச் செய்கின்ற வானுலகத்தவன்; நீள்மதிள் அரங்கத்து அம்மான் – நீண்ட மதில்களாற் சூழப்பட்ட திருவரங்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஸ்ரீரங்கத்தில்) கோயில் கொண்டுள்ள பெருமான்; திருக்கமலபாதம் – அவனுடைய தாமரை மலர் போன்ற திருவடிகள்; வந்து என் கண்ணில் உள்ளன ஒக்கின்றதே – என் கண்களில் வந்து தெரிவதைக் கண்ணாரக் காண்கின்றேன்.

பொழிப்பு :

மலநீக்கமுள்ள இறைவன், தொன்மையானவன்; மெய்யடியார்களுள் என்னையும் ஒருவனாக ஆட்கொண்டவன். அழுக்கற்றவன்; தேவர்களின் தலைவன்; வாசனை மிக்க சோலைகளை உடைய திருவேங்கட மலையில் வீற்றிருப்பவன்; பாசங்களிலிருந்தும் நீங்கியவன்; தரும நீதியைச் செலுத்தும் வானுலகத்தவன்; நீண்ட மதில்களால் சூழப்பட்ட திருவரங்கத்தில் கோயில் கொண்ட பெருமான்; அவனுடைய தாமரை மலர்ப் பாதங்கள் எனது கண்களுக்குத் தெரிவதைப் பார்க்கின்றேன்.

விளக்கம் :

திருவரங்கனின் திருப்பாதம் தனது கண்களுக்குத் தோன்றுமாறு வந்துவிட்டதென நெக்குருகித் திருப்பாணாழ்வார் பாடிய பாடல் இதுவாகும். தாமரை மலர் – உவமானம்; பெருமாளின் திருவடிகள் – உவமேயம்; மென்மையும், நிறமும், அழகும் – பொதுவியல்புகள். ஒக்கின்றதே – பொருந்துகின்றதே என்பதாகும். அமலன், விமலன் விண்ணவர் கோன், வேங்கடவன், நிமலன், நின்மலன், நீதிவானவன், ஆதிபிரான், அரங்கத்து அம்மான் ஆகிய பெயர்களில் பெருமாளைப் போற்றுவதையும் காண முடிகிறது. இறைவனின் கல்யாண குணங்களுக்கு ஏற்ற விதத்தில் புராணங்கள் பல்வேறு பெயர்களையும் கூறியுள்ளன. நிமலன், விமலன், நின்மலன், அமலன் ஆகியன மும்மலங்களாகிய அழுக்குக்களினின்றும் நீங்கிய பரிசுத்தமானவன் இறைவன் என்பதை உணர்த்துவதாகும். "ஆதி பிரான்" என்பது இறைவன், தொன்மையானவன் என்பதைச் சுட்டுவதாகும். "நீதி வானவன்" என்பதால் நீதியைச் செய்யும் வானுலகத் தேவன் என்பதைக் கருதுக.

அருஞ்சொற்பொருள் :

ஆட்படுத்த – ஆளாகக் கொண்ட; விரை – வாசனை; கமலம் – தாமரை; ஒக்கின்றதே – தோன்றுகின்றதே, பொருந்துகின்றதே, ஒத்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கனின் சிவந்த ஆடையைச் சிந்திக்கின்றேன்.

2. உவந்த வுள்ளத்தனா யுலக
மளந் தண்டமுற
நிவந்த நீள்முடியன் அன்று
நேர்ந்த நிசாசரரை,
கவர்ந்தவெங் கணைக்காகுத்தன் கடியார்பொழில்
அரங்கத் தம்மான், அரைச்
சிவந்த ஆடையின் மேல்சென்ற
தாமென் சிந்தனையே.

சொற்பொருள்:

உவந்த உள்ளத்தனாய் - அருள் புரிகின்ற மனத்தினனாய்; உலகம் அளந்து அண்டம் உற நிவந்த நீள் முடியன் - பாதாள உலகம் முதல் வானுலகம் வரை அண்டங்களை, விசுவரூபம் எடுத்து, ஈரடியால் மூவுலகம் அளந்து நின்ற நீண்ட திருமுடியினை உடையவன்; அன்று நேர்ந்த நிசாசரரை கவர்ந்த வெங்கணைக் காகுத்தன் - முன்பு போர் புரிய வந்த இலங்கை அரக்கர்களை அழித்த கொடிய அம்பினையுடைய இராமனாகியவன்; கடியார் பொழில் அரங்கத்து அம்மான் - வாசனை வீசும் சோலைகளையுடைய திருவரங்கத்தில் உறைகின்ற பெருமான்; அரைச் சிவந்த ஆடையின் மேல் என் சிந்தனையே சென்றதாம் - அவனுடைய அரையிற் கட்டப்பட்ட சிவப்பு நிற ஆடையின் மேல் என் சிந்தனையானது செல்கிறது.

பொழிப்பு:

அருளும் மனத்தினனாய், ஈரடியால் மூவுலகையும் அண்டங் களையும் அளந்து நின்ற நீண்ட முடியினை உடையவன். முன்பு, போரிட வந்த இலங்கை அரக்கர்களை அழித்த, கொடிய அம்பினை உடைய இராமன். மணங்கமழும் சோலைகளையுடைய திருவரங் கத்தில் உறைகின்ற பெருமான். அவனுடைய அரையிற் கட்டப்பட்ட சிவப்புநிற ஆடையின் மேல் என் சிந்தனையானது செல்கிறது.

விளக்கம்:

திருவரங்கப் பெருமானின் சிவந்த நிற ஆடையைத் தன் மனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணி உருகுவதாக ஆழ்வார் பாடிய பாடல் இதுவாகும். அரையில் பெருமான் அணிந்த சிவப்பு நிற ஆடை மீது தான், தன் மனம் சென்று தங்கியிருப்பதாகக் கூறுகிறார். அந்தத் திருவரங்கப் பெருமான் வாசனை வீசும் மலர்களாலான சோலைகள் சூழ வீற்றிருக்கின்றான் என்கிறார். அவற்றோடு புராணங்கள் கூறுகின்ற ஈரடியால் மூவுல களந்த (வாமன அவதாரம் எடுத்து) கதையையும், பாதாளம் முதல் வானவெளி கடந்து வானுலகின் எல்லை வரை எழுந்து நின்று விசுவரூபம் காட்டிய திருமாலின் அற்புதத் திருக்கோலத்தையும், அன்று இராம அவதாரம் எடுத்து, இலங்கையின் அரக்கர்களைச் சீதையின் பொருட்டாகப் போர் புரிந்து அழித்த செயலையும் இணைத்துப் பெருமாள் மேல் ஏற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார் திருப் பாணாழ்வார்.

அருஞ்சொற்பொருள்:

உவந்த - மகிழ்ந்த, உதவிய; அண்டம் - உலகங்கள் யாவும்; உற - கடந்து; நிவந்த - உயர்ந்து நின்ற; நிசாசரர் - அரக்கர்கள்; கவர்ந்த - உயிர்களைப் பறித்த; வெங்கணை - கொடிய அம்பு; காகுத்தன் - இராமன்; கடி - வாசனை; சிந்தனை - எண்ணம்.

அவனது திருவுந்தியின்மேல் என் மனம் உள்ளது.

3. **மந்தி பாய்வட வேங்கட**
மாமலை, வானவர்கள்,
சந்திசெய்ய நின்றா னரங்கத்
தரவி னணையான்,
அந்திபோல் நிறத்தாடையு மதன்மேல்
அயனைப்படைத் ததோரெழில்
உந்தி மேலதன் றோஅடி
யேனுள்ளத் தின்னுயிரே.

சொற்பொருள்:

மந்தி பாய் வட வேங்கட மாமலை - மந்திக் குரங்குகள் பாய்ந் தோடுகின்ற வடக்கேயுள்ள திருவேங்கட மலையில்; வானவர்கள் சந்தி செய்ய நின்றான் - தேவர்கள் வழிபடுமாறு எழுந்தருளியவன்; அரங்கத்து அரவின் அணையான் - திருவரங்கத் திருத்தலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்பணை மேல் பள்ளி கொள்பவனாகிய பெருமான்; அந்தி போல் நிறத்து ஆடையும் - அவனது, அந்தி வானம் போற் சிவந்த ஆடையும்; அதன் மேல் அயனைப் படைத்த ஓர் உந்தி மேலதன்றோ - அதற்கு மேலே காணப்படும், பிரம்மாவைத் தோற்றுவித்த அழகிய திருவுந்தி யின் மீதும்; அடியேன் உள்ளத்தின் இன்னுயிரே - அடியவனாகிய எனது இனிய உயிரின் மனமானது தங்கியுள்ளது.

பொழிப்பு :

மந்திக் குரங்குகள் தாவும் வடக்கிலுள்ள திருவேங்கட மலையில் தேவர்கள் வழிபடுமாறு எழுந்தருளியவன். திருவரங்கத் திருத்தலத்தில் பாம்பணை மீது பள்ளி கொள்பவன். அவனது, அந்திவானம் போற் சிவந்த ஆடையும், அதற்கு மேலே காணப்படும் பிரமனைத் தோற்றுவித்த அழகான திருவுந்தி மீதும் அடியவனாகிய எனது இனிய உயிரின் மனமானது தங்கியுள்ளது.

விளக்கம் :

இப்பாடலானது திருவரங்கப் பெருமானின் திருவுந்தி (கொப்பூழ்) மேல் மனங் கொண்டு ஆழ்வார் பாடிய பாடலாகும். தனது உடல் தாங்கிய உயிரினுள் இருக்கும் மனத்தில், பெருமானின் திருவுந்தி பற்றிய நினைவுகளே நிறைந்துள்ளதாக் குறிப்பிட்டுள்ளார். திருமாலின் திருப்பதிகளில் திருவேங்கட மலையும் ஒன்றாகும். இன்று பிரசித்தி பெற்ற திருப்பதித் திருக்கோவிலே அதுவாகும். தமிழ் நாட்டின் வடக்கெல்லையிலே அன்று காணப்பட்ட இத் திருத்தலம், இன்று ஆந்திர மாநிலத்துக்குச் சொந்தமாயிற்று. மலையிலுள்ள மரங்களில் குரங்கினங்கள் தாவுவதையும், பாம்பணையில் பள்ளி கொண்ட கோலத்தில் திருமால் திருவரங்கத் திருப்பதியில் விளங்குவதையும் திருப்பாணர் சுட்டிக் காட்டி மனமுருகுகின்றார். திருவரங்கத்தானின் திருவுந்தியானது பிரம்மனின் பிறப்புக்குரியது. திருமால், பிரமனைத் தன் திருவுந்தியிலிருந்து தோற்றுவித்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. அதனை எடுத்துக் காட்டியதுடன் அந்தத் திருவுந்தியின் மேல் தனது மனம் உள்ளதாகவும் பாடியுள்ளார்.

அருஞ்சொற்பொருள் :

சந்தி செய்யும் - வழிபடும்; அந்தி - மாலை நேரம்; அயன் - பிரமன்; உந்தி - கொப்பூழ், தொப்பூழ்; படைத்த - படைத்தருளிய, தோற்றுவித்த.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சதுரமா மதிள்சூ ழிலங்கைக்
கிறைவன் தலைபத்து
உதிர வோட்டிஓர் வெங்கணை
யுய்த்தவ னோதவண்ணன்,
மதுரமா வண்டுபாட மாமயிலாட
ரங்கத்தம்மான், திருவயிற்
றுதர பந்த னமென்
றுள்ளத்துள்நின் றுலாகின்றதே.

சொற்பொருள்:

சதுரமா மதிள் சூழ் இலங்கைக்கு இறைவன் – நாற் புறமும் மதில்களாற் சூழப்பட்ட இலங்கைக்கு அரசனாகிய இராவணனின்; தலை பத்து உதிர ஓட்டி ஓர் வெங்கணை உய்த்தவன் – பத்துத் தலைகளும் விழுந்து விடும்படி ஒரு கொடிய அம்பினை அவன்மீது செலுத்தி அழித்தவன்; ஓத வண்ணன் – கடல் போல நீல நிறமுடையவன்; மதுர மா வண்டு பாட மாமயில் ஆட – இனிமையாக வண்டுகள் ரீங்காரஞ் செய்கின்ற, அழகிய மயில்கள் ஆடுகின்ற சோலைகளையுடைய; அரங்கத்தம்மான் – திருவரங்கம் என்னும் திருத்தலத்தில் வீற்றிருக்கின்ற பெருமானின்; திருவயிற்று உதர பந்தனம் – அழகான வயிறாகிய சுருளின் மீது; என் உள்ளத்துள் நின்று உலாகின்றதே – எனது மனம் நின்று உலாவுகின்றது.

பொழிப்பு:

நாற்புறமும் மதில்களாற் சூழப்பட்ட இலங்கையின் வேந்தனாகிய இராவணனின் பத்துத் தலைகளும் உதிர்ந்து விழுமாறு கொடியதொரு அம்பினை அவன்மீது செலுத்திக் கொன்றவன்; கடல் போன்ற நீல நிறமுடையவன்; இனிமையாக வண்டுகள் ரீங்காரமிடும், அழகிய மயில்கள் ஆடும் சோலைகளையுடைய திருவரங்கத் திருத்தலத்தில் வீற்றிருக்கும் பெருமானின் அழகிய வயிறாகிய சுருளின் மீது என் மனம் நின்று உலாவுகின்றது.

விளக்கம்:

இப் பாடலில் திருவரங்கப் பெருமாள் வயிற்றின் அழகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயங்கிய ஆழ்வார், தன் மனம் அதன் மீது உலாவுகின்றது எனப் பாடியுள்ளார். மேலும் இலங்கை வேந்தன் இராவணனுடன் போரிட்டு, அவனது பத்துத் தலைகளையும் உதிர வைத்து, அவனை அழித்து விட்ட இராமபிரானின் செயலையும் புகழ்ந்து கூறப்பட்டது. திரு மாலின் அவதாரங்களில் ஒன்றாக இராமாவதாரம் விளங்குவது இங்கு கருதத் தக்கது. ஓதம் - கடல்; வண்ணன் - நீல நிறமுடையவன்; உதரம் - வயிறு; பந்தனம் - சுருள், கட்டு; உதர பந்தனம் - வயிற்றுச் சுருள் எனக் கருதுக.

அருஞ்சொற்பொருள் :

சதுரம் - நாற்புறம்; மதிள் - மதில்; இறைவன் - வேந்தன், அரசன்; உதிர - கீழே உதிர்ந்து விழுமாறு; ஓட்டி - செலுத்தி; கணை - அம்பு; வெம் - கொடிய; உய்த்தவன் - அழித்தவன்; ஓதம் - கடல்; மதுரம் - இனிமை; மாமயில் - அழகான மயில்;

அவனது திருமார்பு தான் என்னை ஆட்கொண்டது

5. பார மாய பழவினை
பற்றறுத்து, என்னைத்தன்
வாரமாக்கி வைத்தான் வைத்ததன்றி
யென்னுள் புகுந்தான்,
கோரமாதவம் செய்தனன் கொலறியே
னரங்கத் தம்மான்திரு
வார மார்பதன் றோஅடி
யேனை யாட்கொண்டதே.

சொற்பொருள் :

பாரமாய் பழவினை பற்றறுத்து - சுமையாக விளங்குகின்ற முன்வினைப் பயன்களை இல்லாமற் செய்து; என்னைத் தன் வாரமாக்கி வைத்தான் - என்னைத் தன் அன்பிற்குகந்தவனாக்கி வைத்தான்; வைத்ததன்றி என்னுள் புகுந்தான் - வைத்த தோடல்லாமல் என் மனத்தினுள்ளும் புகுந்து கொண்டான்; கோர மாதவம் செய்தனன் கொல் அறியேன் - (இத் திருவருளினைப் பெறுவதற்கு) கடுமையான பெருந்தவத்தினை அடியவனாகிய யான் செய்துள்ளேனோ என்பதை அறியமாட்டேன்; அரங்கத்து அம்மான் - திருவரங்கத்து உறையும் பெருமானின்; திருவார மார்பு அது அன்றோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியேனை ஆட்கொண்டதே - அன்புக்குரிய திருமார்பல்லவோ அடியவனாகிய என்னை ஆட்கொண்டுள்ளது.

பொழிப்பு :

சுமையாக விளங்கும் முன்வினைப் பயன்களை நீக்கி, என்னைத் தனது அன்பிற்குரிய அடியவனாக்கி வைத்ததோடு, என்னுள்ளத்திலும் புகுந்து கொண்டான். இதற்குக் கடுமையான பெருந்தவத்தினை அடியனேன் செய்துள்ளேனோ தெரியாது. திருவரங்கப் பெருமானின், அன்புக்குரிய திருமாதுனின் அடியவனாகிய என்னை ஆட்கொண்டுள்ளது.

விளக்கம் :

திருவரங்கப் பெருமானின் திருமார்பு, தன்னை ஆட்கொண்டமை பற்றிய திருப்பாணரின் பாடலிது. அந்தப் பெருமான், எனது பழவினைகளின் பற்றினை அகற்றியதோடு தனது பேரன்புக்குரியவனாக என்னை ஆளாக்கிக் கொண்டான் என்றார். இத்தகைய பேற்றினை அடைவதற்கு யான் எவ்வித புண்ணியம் முன்னர் செய்திருப்பேனோ? என்று தன்னையே வியக்கிறார். "கோர மாதவம் செய்தனன் கொல்" எனக் கேட்டு, அதுவும் நான் அறிய மாட்டேன் என இறைவனை எண்ணிக் கசிந்துருகுகிறார். அன்பின் வலைதனில் அகப்படும் ஆரமுதல்லவா இறைவன்? அதனால் ராணரின் அன்புக்குக் கட்டுப்பட்டுள்ளார் எனலாம். "என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே" என்னும் திருஞானசம்பந்தர் தேவாரத்தையும் இங்கே ஒப்பிட்டு நோக்க முடியும்.

அருஞ்சொற்பொருள் :

பாரமாய் - சுமையாய்; பழவினை - முன்வினை; பற்று - பயன், ஆசை; வாரமாக்கி - அன்புக்குரியவனாக்கி; கோரமாதவம் - கடுமையான பெருந்தவம்; கொல் - இடைச் சொல்; ஆட்கொள்ளல் - ஆளாகக் கொள்ளல்.

அவனது திருக்கமுத்து என்னை உய்வித்தது

6. துண்ட வெண்பிறை யான்துயர்
தீர்த்தவன் அஞ்சிறைய
வண்டுவாழ் பொழில்சூ ழரங்கநகர்
மேய வப்பன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டரண்ட பகிரண்டத் தொருமாநிலம்
எழுமால்வரை, முற்றும்
உண்ட கண்டங்கண் டீரடி
யேனை யுய்யக்கொண்டதே.

சொற்பொருள்:

துண்ட வெண் பிறையான் துயர் தீர்த்தவன் – இளம் பிறைச் சந்திரனை அணிந்த சிவபெருமானின் துன்பத்தை நீக்கியவன்; அஞ்சிறைய வண்டுவாழ் பொழில் சூழ் அரங்க நகர் மேய அப்பன் – அழகிய சிறகுகளை உடைய வண்டுகள் வாழ்கின்ற சோலைகளால் சூழப்பெற்ற, திருவரங்கத் திருத்தலத்தில் உறைகின்ற தந்தையாகிய பெருமானின்; அண்டரண்ட பகிரண்டத்து ஒரு மாநிலம் எழுமால் வரை – பாதாளம், பூலோகம், மேலுலகம் ஆகியவற்றையும் ஒருசேர; முற்றும் உண்ட கண்டங்கண்டீர் – முழுவதுமாய் உண்ட திருக் கழுத்து; அடியேனை உய்யக் கொண்டதே – அடியவனாகிய என்னை ஆட்கொண்டதாகும்.

பொழிப்பு:

இளம்பிறைச் சந்திரனை அணிந்த சிவபெருமானின் துன்பத்தை நீக்கியவன். அழகிய சிறகுகளை உடைய வண்டுகள் வாழ்கின்ற சோலைகள் சூழப்பட்ட திருவரங்கத் திருத்தலத்தில் உறைகின்ற என் தந்தையாகிய பெருமானின், மூவுலகங்களுக்கும் அப்பால் கடந்து எழுந்து நின்ற, அவற்றை ஒருசேர முழுதுமாய் உண்ட திருக்கழுத்து அடியேனை ஆட்கொண்டுள்ளது.

விளக்கம்:

இப் பாடலில் திருவரங்கப் பெருமானின் திருக்கழுத்து, தன்னை ஆட்கொண்டமை பற்றித் திருப்பாணாழ்வார் பாடியுள்ளார். மூவுலகையும் தாண்டி எழுந்து நின்ற (விசுவரூபமெடுத்து) திருமால், சிறு குழந்தையாகி ஏழு உலகங்களையும் உண்ட கிருஷ்ணவதாரக் கதை இப்பாடலில் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. அப்படியாக உலகை விழுங்கிய திருக்கழுத்தாகிய கண்டமே தன்னை உய்யக் கொண்டது என்கிறார் பாணர். மேலும் இப்பாடலில் சிவ பெருமானுக்கு எற்பட்ட துன்பத்தைத் தீர்த்தவராகவும் திருமால் சித்திரிக்கப்பட்டுள்ளார். இதுவும் புராணத்துடன் தொடர்புபட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையாகும். திருவரங்கத் திருநகரை வர்ணிக்கையில் "அஞ்சிறை வண்டு வாழ் பொழில் சூழ்" என்கிறார். வண்டுகள் தேனெடுப்பதற்காக மலர்களில் தங்கியிருக்கின்ற சோலைகள் என்பது இதன் பொருளாகும். அஞ்சிறை - அழகிய சிறகுகள், உட்சிறகுகள் ஆகிய கருத்துக்களுக்குரியன.

அருஞ்சொற்பொருள்:

துண்ட வெண்பிறை - இளம் பிறைச் சந்திரன்; பொழில் - சோலை; மேய - உறையும்; அப்பன் - தந்தையாகியவன்; அண்டர் அண்டம் - வானுலகம்; பகிரண்டம் - பூலோகம் முதலானவை; ஒருமாநிலம் - ஒரு பெரிய இடம்;எழு - எழுந்த; மால் - திருமால், வரை - எல்லை; ஒருசேர - முழுவதுமாய்; கண்டம் - கழுத்து.

அவன் பவளச் செவ்வாய் என்னைக் கவர்ந்தது

7. **கையி னார்சுரி சங்கன**
லாழியர், நீள்வரைபோல்
மெய்யனார் துளப விரையார்
கமழ்நீள் முடியெம்
ஐயனார், அணியரங்க னாரரவி
னணைமிசை மேயமாயனார்,
செய்யவா யையோ! என்னைச்
சிந்தை கவர்ந்ததுவே!

சொற்பொருள்:

கையினார் சுரி சங்கு - வலம்புரிச் சங்கினைக் கையில் ஏந்தியவர்; அனல் ஆழியன் - கையில் அக்கினியையும் சக்கராயுதத்தையும் ஏந்தியவர்; நீள்வரைபோல் மெய்யனார் - நீண்ட மலைபோன்ற உடலினை உடையவர்; விரையார் கமழ் நீள் முடி எம் ஐயனார் - மணம் வீசுகின்ற (துளப மாலை அணிந்த) நீண்ட திருமுடியினை உடைய எமது ஐயனானவர்; அணி அரங்கனார் அரவின் அணை மிசை மேய மாயனார் - அழகு நிறைந்த திருவரங்கப் பெருமான், பாம்பணை மேல் பள்ளி கொள்ளும் மாயவனார்; செய்யவாய் ஐயோ! என்னைச் சிந்தை கவர்ந்ததுவே - ஐயகோ! அவரது பவளம் போன்ற சிவந்த வாயானது என் மனத்தைக் கவர்ந்ததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு :

வலம்புரிச் சங்கு, அக்கினி, சக்கராயுதம் ஆகியவற்றைக் கைகளில் ஏந்தியவர்; நீண்ட மலைபோன்ற உடலினர்; வாசனை கமழும் மாலையணிந்த நீண்ட திருமுடியினையடையவர்; அழகுவாய்ந்த திருவரங்கப் பெருமான் பாம்பணை மீது பள்ளி கொள்ளும் மாயவனார்; அவரது பவளம் போன்ற சிவந்த வாயானது என் மனத்தைக் கவர்ந்துள்ளது.

விளக்கம் :

இப் பாடலின் மூலம் திருமால் கைகளில் ஏந்திய வலம்புரிச் சங்கு, அக்கினி, சக்கராயுதம் ஆகியன கூறப்பட்டுள்ளன. "சங்கு சக்கரதாரி" எனவும் திருமால் அழைக்கப்படுகிறார். சங்கு (ஸ்ரீவஸ்தம்) அவதாரமாகிய திருப்பாணாழ்வார் அவதரித்தாரென நம்பப்படுகிறது. திருமாலின் உடலானது நீண்ட மலைபோன்று காட்சி தருவதாகவும் திருப்பாணர் வியந்துள்ளார். நீள்வரை - உவமானம்; திருமாலின் உடல் - உவமேயம்; நீண்டதாகவும் வலிமையாகவும் இருத்தல் - பொதுவியல்பு. அதே வேளை நீள் முடியினர் எனவும், அந்த முடியில் வாசனை கமழ்வதாகவும் கூறியுள்ளார். வாசனையைத் தருகின்ற துளபமாலை (துளசி மாலை) அணிந்தவர் திருமாலாகையால் இதனைக் கூறினார் என்க. திருவரங்கப் பெருமானைப் பாம்பின் அணையில் துயில்பவர் என்ற புராணச் செய்தியையும் இணைத்துக் காட்டியுள்ளார். ஐயனார், மாயவனார் ஆகிய சொற்களினூடாக அன்புக்குரியவர், மாயம் செய்பவர் எனக் கருத முடிகிறது. செய்ய வாய் - சிவந்த வாய், பவள வாய். தமிழ் இலக்கியங்கள் அதிகளவில் வாயினை வர்ணிக்கும் போது சிவந்த வாயினைக் குறிக்க, பவளத்தை உவமையாக்குவன. இங்கேயும் பவளம் - உவமானம்; திருவேங்கடவன் வாய் - உவமேயம்; சிவப்பு நிறம் - பொதுவியல்பு.

அருஞ்சொற்பொருள் :

சுரி சங்கு - வளைந்த சங்கு, வலம்புரிச் சங்கு; அனல் - நெருப்பு, தீ; ஆழி - சக்கரம், சமுத்திரம், வட்டம், மோதிரம்; வரை - மலை; விரை - வாசனை; கமழ் - வீசுகின்ற; மிசை - மேல்; மேய - உறங்கும், பள்ளி கொள்ளும்; செய்ய - சிவந்த.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பரிய னாகிவந்த அவுண
னுடல்கீண்ட, அமரர்க்கு
அரிய ஆதிபிரா னரங்கத்
தமலன் முகத்து,
கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து
செவ்வரி யோடிநீண்டவப்
பெரிய வாய கண்களென்னைப்
பேதைமை செய்தனவே!

சொற்பொருள்:

பரியனாகி வந்த அவுணர் உடல் கீண்ட - பெரிய உருவத்தினனாக வந்த அசுரனாகிய இரணியனின் உடலைக் கிழித்து அழித்த; அமரர்க்கு அரிய ஆதி பிரான் - தேவர்களாலும் அறிய முடியாத தொன்மை மிக்க இறைவன்; அரங்கத்து அமலன் - திருவரங்கத் திருத்தலத்தில் வீற்றிருக்கும் மலங்களிலிருந்து நீங்கிய பெருமானின்; முகத்துக் கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து பெரியவாய கண்கள் - முகத்தில் கரியனவாகிப் பக்கம் நீண்டு ஒளிர்வுடன் திகழும் பெரிய கண்கள்; என்னைப் பேதைமை செய்தனவே - அடியவனாகிய என்னை மயக்கி விட்டன.

பொழிப்பு:

பருத்த, பெரிய உருவில் வந்த அசுரனாகிய இரணிய கசிபுவின் உடலைக் கிழித்து அழித்த, தேவர்களாலும் அறிதற்கரிய தொன்மையான இறைவன் திருவரங்கத் திருத்தலத்தில் வீற்றிருக்கும் மல பந்தங்களிலிருந்து நீங்கிய பெருமானின், கரியனவாகிப் பக்கம் நீண்டு ஒளியுடன் திகழும் பெரிய கண்கள், அடியவனாகிய என்னை மயக்கி விட்டன.

விளக்கம்:

இப்பாடலிலும் புராணம் கூறும் திருமாலின் நரசிம்ம அவதாரம் பற்றிய கதை தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. தனது பக்தனாகிய பிரகலாதனின் துன்பத்தை அகற்றும் பொருட்டு, அவனது தந்தையாகிய இரணிய கசிபுவை நரசிம்மம் (நரசிங்கம்) வடிவில் தோன்றி, உடலைக் கிழித்து அழித்த பெருமானின் அருட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல் கூறப்பட்டுள்ளது. தனக்கு மனிதராலோ, விலங்குகளாலோ உயிராபத்து நேரிடக் கூடாதென்று இறைவனிடம் வரம் வாங்கிய இரணியனை, மனித ரூபமும், சிங்க ரூபமும் கொண்ட மாறுபட்ட உருவில் தூணிலிருந்து தோன்றிப் பரம்பொருளாகிய திருமால் (விஷ்ணு) அழித்தமை புராண வரலாறு ஆகும். தேவர்களாலும் அரிதுணர முடியாதவன் திருமால் என்பதும் இங்கு பாணரின் பாடலடியால் காட்டப்பட்டுள்ளது. "ஆனா அறிவான் அகலான் அடியவர்க்கு வானாடர் காணாத மன்" என்று இதனையே திருவருட் பயன் நூல் கூறும். அமலன் - மும் மலங்களாலும் பீடிக்கப்படாதவன் என்பதாகும். விமலன், நிமலன், நின்மலன் ஆகிய சொற்களும் இப் பொருளையே உணர்த்துவன. அழுக்கற்றவன், பரிசுத்தமானவன் எனவும் கருத முடியும். தன்னை மயங்கச் செய்த, திருவரங்கப் பெருமானின் அருட் கண்கள் பற்றித் திருப்பாணரின் வர்ணனை நயமிக்கது. முகத்தில் கரிய நிறமுடையனவாகவும், பக்கம் நீண்டிருப்பனவாகவும் (புடைபரந்து) ஒளிர்ந்து கொண்டிருப்பன வாகவும் (மிளிர்தல்), பெரியனவாகவும் விளங்குவதாகக் கூறியுள் ளார். கரியவாகி, பரந்து, மிளிர்ந்து - வினையெச்சச் சொற்களாகும்.

அருஞ்சொற்பொருள் :

பரியனாகி - பெரிய உருவினனாகி; அவுணன் - அசுரன்; கீண்ட - கிழிய; புடை பரந்து - பக்கமாய் நீண்டு; மிளிர்ந்து - ஒளிர்ந்து; பேதைமை - மயக்கம்.

அவன் நீலமேனி என் மனத்தை நிறைத்தது

9. **ஆலமா மரத்தி னிலைமே**
லொரு பாலகனாய்,
ஞாலமேழு முண்டா னரங்கத்
தரவி னணையான்,
கோலமாமணி யாரமும் முத்துத்தாமமும்
முடிவில்ல தோரெழில்
நீல மேனி யையோ!
நிறைகொண்டதென் நெஞ்சினையே!

சொற்பொருள் :

ஆலமாமரத்தின் இலைமேல் ஒரு பாலனாய் - பெரிய ஆலமரத்தின் இலையொன்றின் மீது ஒரு சிறு பாலகனாய்; ஞாலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழும் உண்டான் - ஏழு உலகங்களையும் ஒரு சேர உண்டவன்; கோலமாமணி ஆரமும் - அழகிய மணிமாலையும்; முத்துத் தாமமும் - முத்து மாலையும் அணிந்து; முடிவில்லதோர் எழில் - எல்லையற்ற அழகுடன் திகழும்; நீல மேனியையோ நிறை கொண்டது என் நெஞ்சினையே - நீல நிற மேனி தான் என் நெஞ்சத்தில் முழுவதுமாக நிறைந்து விட்டது.

பொழிப்பு :

பெரிய ஆலமரத்தின் இலையொன்றின் மீது ஒரு சிறு பாலகனாய், ஏழு உலகங்களையும் ஒரு சேர உண்டவன். அழகிய மணிமாலையும், முத்துமாலையும் அணிந்து, எல்லையில்லா அழகுடன் திகழும் நில நிற மேனிதான், என் நெஞ்சம் முழுவதும் நிறைந்து விட்டது.

விளக்கம் :

"ஆலிலைக் கிருஷ்ணன்" என அழைக்கப்படுபவன் கண்ணன். அவர் ஆலிலை மேல் பாலகனாய்த் தோன்றிய புராணக் கதை யாவரும் அறிந்ததே. திருப்பாணாழ்வாரும் அதனையே இங்கு திருவரங்கத்தானின் லீலையாகக் குறிப்பிட்டுள்ளார். அதே போன்று மண்ணுண்ட வாயினுள் ஏழுவுலகங்களையும் தாயார் யசோதைக்குக் காட்டி நின்ற மாயவனின் கதையும் பாகவத நூலில் உள்ளது. சிறுவயதில் கண்ணனின் தோற்றத்தைப் பார்க்கும் போது மணிமாலை, முத்து மாலை போன்றன கழுத்தில் அணிந்து மார்பில் தவழும் நீல நிற மேனியுடையவனாய் விளங்குவதையும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இவை அனைத்தும் திருமாலின் கிருஷ்ணாவதாரத்தில் நடந்தவைகளாகும். அதுவும் ஆயர் குலப் பிள்ளையின் சிறு வயது நடவடிக்கைகளாகும்.

"மண்ணைத் தின்று விழுங்கியவன் - அவன்
மாய உலகங் காட்டியவன்
பெண்ணின் நல்லாள் யசோதரையின் - நல்ல
பிரியமான சிறுவனடி!"

என்னும் பாடல் வரிகள் ஏழு உலகமுண்ட கண்ணனின் லீலையைக் காட்டுவதையும் நோக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருஞ்சொற்பொருள் :

மா – பெரிய; ஒரு சேர – முழுவதுமாய்; கோலம் – அழகு; ஆரம் – மாலை; தாமம் – மாலை; எழில் – அழகு.

அவனைக் கண்டேன்: மற்றொன்றைக் காணேன்

10. **கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்**
உண்ட வாயன்என் னுள்ளம் கவர்ந்தானை,
அண்டர் கோனணி யரங்கன்என் னமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே.

சொற்பொருள் :

கொண்டல் வண்ணனை – கார்முகில் போன்ற நிறத்தவனை; கோவலனாய் வெண்ணெய் உண்ட வாயனை – ஆயர் சேரிச் சிறுவனாய் வெண்ணெய் திருடியுண்ட வாயினை உடையவனை; என் உள்ளம் கவர்ந்தானை – என் மனங்கவர்ந்தவனை; அண்டர் கோன் – வானவர் அரசனை; அணி அரங்கன் என் அமுதினை – திரு வரங்கத்தில் அமர்ந்த என் அமுதம் போன்றவனை; கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே – கண்ட கண்கள், வேறொன்றையும் காண மாட்டா.

பொழிப்பு :

கார்முகில் வண்ணனை, வெண்ணெய் உண்ட ஆயர்குலச் சிறுவனை, என்னுள்ளம் கவர்ந்தவனை, வானவர் தலைவனை, திருவரங்கத் திருத்தலத்தில் உறைகின்ற என் அமுதம் போன்ற வனைக் கண்ட கண்கள், வேறொன்றையும் பார்க்க மாட்டா.

விளக்கம் :

திருவரங்கப் பெருமானின் அவயவங்களை ஒவ்வொன்றாகக் கண்டு உடலும் மனமும், உருகிநின்ற பாணர், பதிகத்தின் பத்தா வதான இறுதிப் பாடலில் பெருமானின் அவயவங்களின் அழகைப் பார்த்த கண்கள், வேறொன்றையும் பார்க்க மாட்டா எனக் குறிப்பிட் டுள்ளார். பரபக்தியின் உச்ச நிலை இதுவாகும். கண்களால் பார்த்த மாத்திரத்திலேயே உள்ளத்தில் உவகை பொங்கி விடுகிறது பாணருக்கு. "என் உள்ளம் கவர்ந்தானே" என்கிறார். வேறொன்றை யும் சிந்திக்க முடியாமல் இறைவனுடன் ஐக்கியமாகிய தன்மை இப் பாடலாற் புலப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருஞ்சொற்பொருள் :

கொண்டல் - மழை மேகம்; வண்ணனை - நிறமுடையவனை; கோவலன் - (ஆயர் குலத்தவன்) மாடுகள் மேய்க்கும் சிறுவன்; அண்டர் - தேவர்; கோன் - தலைவர், அரசன்; அணி - அழகு; காணாவே - காண மாட்டா.

குறிப்புகள்

1. திருப்பாணாழ்வார், திருவரங்கப் பெருமானின் அவயவங்களில் மனம் பறிகொடுத்த தன்மை :

திருவரங்கனின் திருப் பாதங்கள்	-	என் கண்களில் உள்ளன.
திருவரங்கனின் சிவந்த ஆடையில்	-	என் சிந்தனை மேவி நிற்கிறது
திருவரங்கனின் திருவுந்தியில்	-	என் உள்ளத்தில் மேவிய உயிர் நிற்கிறது.
திருவரங்கனின் திருவயிறு	-	அடியேன் உள்ளத்தில் உலாவுகின்றது
திருவரங்கனின் திருமார்பு	-	அடியேனை ஆட்கொண்டது.
திருவரங்கனின் திருக் கழுத்து	-	அடியேனை உய்யச் செய்தது.
திருவரங்கனின் பவளச் செவ்வாய்	-	என் சிந்தை கவர்ந்தது.
திருவரங்கனின் கண்கள்	-	என்னைப் பேதைமை செய்தன.
திருவரங்கனின் நீல மேனி	-	என் மனத நிறைத்தது.

2. திருவரங்க (ஸ்ரீரங்கம்)ப் பெருமாள் பற்றிய திருப் பாணாழ்வரின் வருணனைகள் :

அமலன்	ஆதிபிரான்
விமலன்	விண்ணவர் கோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட வேங்கடவன்	நிமலன்
நின்மலன்	நீதி வானவன்
திருவரங்கத்தம்மான்	உவந்த உள்ளத்தன்
துளபமாலை நிவந்த நீள் முடியன்	வெங்கணைக் காகுத்தன்
வானவர் சந்தி செய்ய நின்றவன்	அரவினணையான்
அந்தி போல் நிறத்த ஆடையன்	அயனைப் படைத்த உந்தியன்
ஓத வண்ணன்	துண்டப் பிறையான் துயர் தீர்த்தவன்
மாநிலம் முற்றும் உண்ட கண்டன்	சுரி சங்கினை ஏந்திய கையன்.
அக்கினி ஏந்தியவன்	சக்கராயுதம் ஏந்தியவன்
நீள்வரை மெய்யன்	துளப விரையார் கமழ் நீள் முடியன்
மாயன்	ஐயன்
அவுணன் உடல் தீண்டியவன்	அமரர்க்கரிய ஆதி பிரான்
பெரிய கண்களுடையவன்	ஆலிலை மேல் பாலகன்
ஞாலம் ஏழும் உண்டவன்	மணிமாலை, முத்து மாலை தவழ்கின்றவன்
கொண்டல் வண்ணன்	வெண்ணெய் உண்ட வாயன்
கோவலன்	அண்டர் கோன்
என் உள்ளங் கவர்ந்தான்	என்னைத் தன் வாரமாக்கிய வன்
என்னுட் புகுந்தவன்	என் பழவினை பற்றறுத்தவன்

3. திருவரங்கம் பற்றிய திருப்பாணாழ்வாரின் வருணனைகள் :

நீள்மதிலரங்கம்

கடியார் பொழிலரங்கம்

மதுரமா வண்டு பாட, மயிலாடுமரங்கம்

வண்டுவாழ் பொழில் சூழரங்கம்

அணியரங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. திருவேங்கடம் பற்றிய திருப் பாணாழ்வரின் வருணனைகள் :

விரையார் பொழில் வேங்கடம்

மந்தி பாய் வட வேங்கடம்

5. இலங்கை பற்றிய திருப்பாணாழ்வாரின் வருணனைகள் :

சதுர மாமதில் சூழ் இலங்கை

6. "அமலனாதி பிரான்" பதிகத்தில் வந்துள்ள இதிகாச - புராணக் கதைகள் :

அ) இராவணன் வதம் (இராமன் அவதாரம்).

ஆ) இரணியன் வதம் (நரசிம்ம அவதாரம்).

இ) இலங்கை அரக்கர் வதம் (இராம அவதாரம்).

ஈ) சிவன் துயர் தீர்த்தமை (புராணக் கதை).

உ) மூவுலகை ஈரடியால் அளந்தமை (வாமன அவதாரம்).

ஊ) திருவுந்தியில் இருந்து பிரம்மனைப் படைத்தமை (புராணக் கதை).

எ) ஆலிலைமேல் பாலகனாய்த் தோன்றியமை (கிருஷ்ணாவதாரம்).

ஏ) திருடிய வெண்ணெய் உண்டமை (கிருஷ்ணாவதாரம்).

ஐ) உலகமுண்டமை (கிருஷ்ணாவதாரம்).

7. திருவரங்கத்தம்மானின் அவயவங்களில் ஈடுபட்டுருகிய திருப் பாணாழ்வார், பாடிய பதிகத்தில் தன்னை இறைவன் ஆட் கொண்டமை பற்றிக் கூறியவை :

அ) அடியார்க்கென்னை ஆட்படுத்தியவன்.

ஆ) பாரமாய பழவினைப் பற்றறுத்துத் தன் வாரமாக்கி வைத்தவன்.

இ) என்னுள்ளங் கவர்ந்தவன்.

ஈ) "என்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே"

உ) திருவரங்கன் அவயவங்கள் ஒவ்வொன்றும் என் உள்ளத்தில் நீங்காமல் நிறைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கம்பராமாயணம்

கம்பரும் கம்பராமாயணமும்

திருமாலின் திருவவதாரமான இராமபிரானின் வரலாற்றைச் சுவை மிகுந்த சமயக் காப்பியமாகத் தந்தவர் "கல்வியிற் பெரிய" கம்பராவார். வடமொழி இதிகாசமான வால்மீகி இராமாயணத்தைப் பின்பற்றித் தமிழ் மொழியில் கம்பர் படைத்தளித்த "இராமாவதாரம்" பின்னர் கம்பராமாயணம் என வழங்குவதாயிற்று. பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்யா காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் ஆகிய ஆறு காண்டங்களையும், 118 படலங்களையும், 10400 விருத்தப்பாக்களையும் கொண்டமைந்த இந்நூலில், மூல நூலில் கூறப்படாத பல விடயங்களும் புதுமையான கருத்துக்களும் இணைந்து தமிழர் பண்பாட்டுக்குகந்த பான்மையுடன், காப்பிய வளர்ச்சியில் உச்சம் பெற்றுக் காணப்படுகின்றது. கற்பனை விரிவும், கலை நயமும், கவினுறு சொல்லாட்சியும், அணிகளின் சிறப்பும், கதாபாத்திர ஒழுங்கமைப்பும், பழைமையுடன் புதுமையைச் சேர்க்கும் உத்தியும் ஒருங்கிணைந்து கம்பரின் கவிதா மேன்மையைக் காட்டி நிற்கின்றன.

இராமாயணம் என்பதை இராம + அயநம் எனப் பிரித்துப் பொருள் கொள்ளலாம். இராமன் - அழகன்; அயநம் - கதை; சொற்புணர்ச்சியால் அயநம் என்பது அயணம் எனத் திரிபுற்று விளங்குவதாலும், இராமாயணம் ஆயிற்று. எனவே கம்பர் பாடிய இராமாயணம் (கம்பர் + இராமாயணம்) கம்பராமாயணம் எனப் படுகின்றது. ஆதி காவியமாகிய வால்மீகியின் இராமாயணத்தில் சொல்லப்படாத மிதிலைக் காட்சி, வரைக்காட்சி, பொழில் நுகர்ச்சி, புனலாட்டு, இரணியன் கொலை, கும்பகருண வீடணர் சல்லாபம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதையை நிலத்தொடு பெயர்த்தமை போன்ற பல செய்திகள் கம்பரது படைப்பில் புதியனவாகக் காணப்படுகின்றன. தமிழ் நாட்டை வளமூட்டும் காவிரி நதியினால் ஊட்டம் பெற்றவையாகக் கம்பரும், அவரை ஆதரித்த சடையப்ப வள்ளலும் பிறந்த ஊர்கள் விளங்கியமையால் தமது காவியத்தில் இடம்பெறும் கோசல நாட்டைக் "காவிரி நாடன்ன கழனிநாடு" எனப் பாடியுள்ளார் கம்பர். அகத்திணை, புறத்திணை தழுவிய கருத்துக்களும், தமிழர் நாகரிகப் பெருமை, இலக்கியச்சுவை, அழகியலுணர்ச்சி, பெருங்காப்பியப் பண்பு, பாவிக வனப்பு ஆகியன நிரம்பிய முத்தமிழ் இலக்கியமாகவும் கம்பராமாயணத்தை நோக்க முடிகிறது. உலகியல் வாழ்வினைத் திறம்பட எடுத்துக்காட்டுகின்ற கம்பரது காவியத்தில் மக்கட்பண்பின் மகத்துவம், கற்பின் திறம், குருபக்தி, பெற்றோர் வழிபாடு, அறக்கோட்பாடு, அவதார நோக்கின் நிறைவு, பல்வேறு கிளைக் கதைகள் என்றவாறு செல்நெறி பரந்தும், விரிந்தும், பயனுற அமைந்துள்ளது. திருக்குறள், நாலடியார், போன்ற நூற்கருத்துக்கள், ஆங்காங்கே பொருத்தமுறக் கையாளப்பட்டுள்ளன. உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம், சிலேடை, மடக்கு, உயர்வு நவிற்சி, இயல்பு நவிற்சி, ஒட்டு, விபாவினை, சுவை முதலான பல்வேறு அணிகளின் பிரயோகம் கவிதைகளுக்கு அழகூட்டுகின்றன. உணர்வுகளின் சித்திரிப்புக்களும், உயர்வான சந்த அலங்காரங் களும், இயைபுபெறும் இனிய தமிழ்ச் சொற்களும், அவற்றுடன் இசைந்துவரும் வடசொற்களும் சேர்ந்து "ஒண்பாவிற்குயர்கம்பன்" என்பதை உணர்த்தி நிற்கின்றன. நாடகச்சுவை ததும்பும் வடிவமைப்பும், தமிழகக் கலை வாழ்வின் வளமும் சுவையும், தமிழ் நடையின் பெருமிதமும், பண்பாட்டு ஓவியமாக, வருணனைச் சிறப்புமிக்க சிந்தனைச் சிகரமாக, தமிழாட்சியின் சொல் வளமிக்க செய்யுள்கள் நிறைந்த உணர்ச்சிக் காவியமாகக் கம்பராமாயணத்தை நிலைபெறச் செய்துள்ளன.

சோழ நாட்டின் திருவழுந்தூரில் பிறந்தவர் கம்பர். இவர் உவச்சர் குலத்தினர்; ஆதித்தன் என்னும் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டவர்; சோழ மன்னன் குலோத்துங்கனாலும் ஆதரிக்கப்பட்டவர்; கி.பி 9ஆம் நூற்றாண்டுக் கும் 12ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர். கம்பரின் வாழ்வியற் காலம் பற்றிய சரியான தகவல்கள் கிடைக்கவில்லை. அவரது பெற்றோர் பற்றியும் தெளிவான தகவல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. ஊகமான செய்திகளும், கர்ண பரம்பரைக் கதைகளுமே கிடைத்துள்ளன. எனினும் தமிழிலக்கிய ஆய்வாளர் பலரது கருத்தின்படி, கி.பி 12ஆம் நூற்றாண்டினைக் கம்பர் வாழ்ந்த காலமாகவும் அக்காலப்பகுதியிலேயே கம்பராமாயணம் நூல் எழுந்தது எனவும் கொள்ளுவது பொருத்தமாகும். சோழ மன்னனின் விருப்பப்படி சடையப்ப வள்ளலின் உதவியுடன் கம்பர் பாடிய இராமாயணம் திருவரங்கப் பெருமாள் சந்நிதியில் திருமாலுக்குரிய பங்குனித் திங்கள் திருநாளில் வைணவ ஆச்சாரியார் நாதமுனிகள் முன்னிலையில் அரங்கேற்றஞ்செய்யப்பட்டது. அப்போது நாத முனிகளால் "கவிச்சக்கரவர்த்தி" எனப் பட்டமளித்துக் கௌரவஞ் செய்யப்பட்டது.

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீக்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர்' அன்னவர்க் கேசர ணாங்களே"

இவ்வாறு பாயிரத்தின் முதற் பாடலைக் கடவுள் வாழ்த்துடன் பாடிய கம்பர், தமது நூலின் ஆயிரம் பாடல்களுக்கு ஒரு முறை தன்னை ஆதரித்த சடையப்ப வள்ளலைப் போற்றிப் பாடி நன்றிக் கடனைச் செலுத்தியுள்ளார். "வெண்ணெய் வாழ் வண்ணன்" (அகலிகைப் படலம்), "மழையென்று ஆசங்கை கொண்ட மீளி அண்ணல்" (நாகபாசப் படலம்) என்பன சில எடுத்துக்காட்டுக்கள். மேலும் இராமபிரானுக்குத் திருமுடி சூட்டப்படும் போது சடையப்பனுடைய முன்னோர் அம்முடியினை எடுத்துக் கொடுக்க வசிட்டனே சூட்டினானென்பதை "விரைசெறி கமலத்தாள் சேர் வெண்ணெய் மன் சடையன்றங்கள் மரபினோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி" எனப் பாடியுள்ளார். சடகோபர் அந்தாதி, சரசுவதி அந்தாதி, ஏரெழுபது, சிலை எழுபது, திருக்கை வழக்கம் முதலிய நூல்களையும் கம்பர் பாடியதாக அறிய முடிகின்றது. "ஆய கலைகள்" எனத் தொடங்கும் கலைமகள் மீதான வெண்பாவும் கம்பருடையதேயாகும். இவை தவிரக் கம்பர் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பாடிய தனிப்பாடல்களும் உள. தனிப்பாடற்றிரட்டு நூல்களில் இவை காணப்படுகின்றன.

ஒரு சந்தர்ப்பத்தில் "தாசி பொன்னிக்குக் கம்பனடிமை" எனக் கம்பரால் ஏடு எழுதிக் கொடுக்கப்பட்டமை அரசன் முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரணைக்கு வந்த போது "உலகமாதாவாகிய ஸ்ரீலக்ஷ்மிக்குக் கம்பனடிமை" என்பதே அதன் பொருளென உணர்த்தியவர் கம்பர் என அறிய முடிகின்றது. இது போன்று அவரது தனிப்பட்ட வாழ்வுடன் தொடர்புடைய கதைகளையும் பாடல்களையும் வீராச்சாமிச் செட்டியார் எழுதிய "விநோதரச மஞ்சரி" போன்ற நூல்கள் வாயிலாகத் தெரிந்து கொள்ளலாம். ஒரு முறை சோழ மன்னனுடன் கோபித்துக் கொண்டு "மன்னவனும் நீயோ? வள நாடும் உன்னதோ? எனப் பாடியவரும் கம்பர்தான். தமிழ், வடமொழி ஆகியவற்றில் வல்லவராக விளங்கிய கம்பரால் தமிழுள்ள வரையிலும் நிலைக்கக் கூடிய இராமாயணச் செல்வத்தை வழங்க முடிந்துள்ளது. "கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும்" என்ற வழக்கு மொழி கம்பரின் பெருமையைச் சாற்றுகின்றது. "கம்பநாடன் கவிதையைப் போல் கற்றோர்க் கிதயம் களியாதே" என்பதும் தமிழில் வழங்கும் தொடராகும். தமிழுக்குக் கதியாக விளங்கக் கூடிய நூல்கள் திருக்குறளும், கம்பராமாயணமும் என்றார் செல்வக்கேசவராய முதலியார். "கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்" என்றும் "புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு" என்றும் கவி பாடினார் மகாகவி பாரதியார். "தமிழ்மொழி தனக்கொரு தவச்சிறப்பைத் தந்தது கம்பனின் கவிச்சிறப்பே" எனப் பாடியவர் நாமக்கல் கவிஞர்.

"காலமெனும் ஆழியிலும்
காற்று மழை ஊழியிலும்
சாகாது கம்பனவன் பாட்டு அது
தலைமுறைக்கு எழுதிவைத்த சீட்டு"

என இனிமை ததும்பப் பாடியவர் கண்ணதாசன். கம்பரது கவிதைகள் சாகாவரம் பெற்றவை. அவரது கவித்துவம் காலந்தந்த கொடை. அதனைப் பெற்ற தமிழன்னை பாக்கியசாலி. அந்தத் தமிழுக்குக் கம்பராமாயணம் உயிர் போன்றது. அதன் சுவை மாந்திக் களிப்பது எமது கடனாகும்.

இராமசரிதையானது தமிழ் நாட்டில் பல ஆயிரம் ஆண்டு களுக்கு முன்னர் இருந்தே பயின்று வந்ததாகும். பழந்தமிழ் இலக்கியங்கள் பலவிலும் அதற்கான சான்றுகள் காணக் கிடைக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடுந்தெறல் இராமனுடன் புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வௌவிய ஞான்றை
நிலம்சேர் மதர் அணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இளைப்பொலிந் தாங்கு"

எனப் புறநானூற்றில் காண முடிகின்றது.

"தாதை ஏவலின் மாதுடன் போகி
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்
வேத முதல்வன் பயந்தோன் என்பது
நீ அறிந்திலையோ? நெடுமொழி அன்றோ?"

(சிலப்பதிகாரம் ஊர்காண் காதை)

"மூவுலகும் ஈரடியான் முறைநிறும்பா வகை முடியத்
தூவிய சேவடி சேப்ப, தம்பியொடு தாள்போந்து
சோஅரணும் பேர்மடிய தொல்இலங்கை கட்டழித்த
சேவகன் சீர்கேளாத செவிஎன்ன செவியே!"

(சிலப்பதிகாரம் - ஆய்ச்சியர் குரவை)

இவ்வாறு சங்கம் மருவிய கால நூலான சிலப்பதிகாரத்தில் இராமாவதாரக்கதை எடுத்தாளப்பட்டுள்ளது. பல்லவர் காலத்துக் குலசேகர ஆழ்வார், திருவரங்கம் சித்திர கூடத்தில் எழுந்தருளியிருக்கும் கோவிந்தராஜப் பெருமானை இராமபிரானாகப் பாவித்து பத்துப் பாசுரங்கள் பாடியுள்ளார். அத்துடன் "மன்னுபுகழ் கோசலைக்கு மணி வயிறு வாய்த்தவனே" முதலான தாலாட்டுப் பாசுரங்கள் பத்தினையும், இராமபிரான் கானகம் சென்றமை, தசரதன் புலம்பல் முதலான பத்துப் பாசுரங்களையும் பாடியுள்ளார். விஷ்ணு சித்தராகிய பெரியாழ்வாரோ, ஒன்பது பாசுரங்களில் சீதைக்கு அனுமன் தெரிவித்த அடையாளங்கள் குறித்துப் பாடியுள்ளார். எனவே சங்க காலம் முதற்கொண்டு தமிழர் மத்தியில் நன்கு அறியப்பட்ட இராமனின் கதையை கம்பர் புதுவடிவம், புதுமை பொழியும் வண்ணம் நல்கினார் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகப்படலம் (கங்கை காண் படலம்)

கம்பராமாயணத்தின் இரண்டாவது காண்டமாக அயோத்தியா காண்டம் அமைந்துள்ளது. காண்டம் (பெரும்பிரிவு); படலம் (சிறுபிரிவு அல்லது உட்பிரிவு) எனப் பொருள்படும். அயோத்தியா காண்டத்தின் ஆறு செல்படலத்துக்கு அடுத்ததாகவும், இறுதிப்படலமான திருவடிசூட்டுப்படலதிற்கு முன்னதாகவும் "குகப்படலம்(கங்கைகாண் படலம்)" விளங்குகிறது. இதில் 72 பாடல்கள் உள்ளன. பரதன் குகனைச் சந்தித்து அவனது உதவியுடன் அவனும், அவனுடன் வந்தவர்களும் கங்கையைக் கடந்து வனம் சென்று இராமனைக் காண முடிந்தமையால் இது "குகப்படலம்" என அழைக்கப்படுகிறது. அது போலவே பரதன் கங்கை நதியைக் காண்கின்ற படலமாகையால் "கங்கைகாண் படலம்" எனவும் கூறப்படுகிறது. ஏற்கெனவே இராமன் கங்கைக் கரையை காணும் பகுதியாக ஆறாவது படலமான "கங்கைப் படலம்" இருப்பதால் பரதன் கங்கையைக் காணும் பகுதி "கங்கை காண் படலம்" எனவாயிற்று.

பரதன் நடந்து சென்று கங்கைக் கரையை அடைதல், சேனைகளுடன் வரும் பரதனைக் கண்டு குகன் சந்தேகமுற்றுத் தென்கரையில் நின்று போருக்குத் தயார் நிலையில் இருக்குமாறு தனது சேனைகளுக்குக் கட்டளையிடல், குகன் பரதனைக்காணத் தனி நாவாயில் (படகு) வடகரைக்கு வருதல், சுமந்திரன் மூலம் இராமனின் சகோதரன் போன்றவன் குகன் என்பதை அறிந்த பரதன் அவனை அன்போடு நோக்குதல், பரதனின் எளிமைக் கோலம் கண்ட குகன், தான் தவறாக எண்ணியதற்கு வருத்தப்படல், மேலும் பரதனை வாழ்த்தி இராமன் உறைந்த, உறங்கிய இடங்களைக் காட்டி, இலக்குவன் செயல்களையும் எடுத்துக்கூற, அதுகேட்டுப் பரதன் வருத்தமுறல், குகன் கட்டளைப்படி வரவழைக்கப்பட்ட நாவாய்களில் ஏறிப் பரதனும், சத்துருக்கனும், தாய்மார்களும், உடன்வந்தோர்களும், சேனைகளும் கங்கையைக் கடந்து தென்கரையை அடைதல், இடையிலே நாவாயில் தாய்மார்களைக் குகனுக்குப் பரதன் அறிமுகப்படுத்த, குகன் அவர்களை வணங்குதல், தாய்மார்கள் பல்லக்கில் வர, பரதன் நடந்துவரல், நடந்துவரும் பரதனைப் பரத்துவாச முனிவர் வரவேற்றல் முதலான செய்தி கள் குகப்படலத்தில் (கங்கைகாண் படலத்தில்) இடம் பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே இராமன் இருந்த இடங்களைக் குகன் காட்டிய போது மிகவும் துன்பமுற்றுத் தன்னையே நொந்து கொண்ட பரதனின் நிலை வரையுள்ள 43 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

குகப் படலம் (கங்கைகாண் படலம்)

பரதன் கங்கைக் கரையை அடைதல்.

கலிவிருத்தம்

01. **பூவிரி பொலன் கழல், பொரு இல் தானையான்,**
காவிரி நாடு அன்ன கழனி நாடு ஒரீஇ,
தாவர சங்கமம் என்னும் தன்மைய
யாவையும் இரங்கிட, கங்கை எய்தினான்.

கொண்டு கூட்டும் முறை :

பூவிரி பொலன் கழல் பொரு இல் தானையான் காவிரி நாடு அன்ன கழனி நாடு ஒரீஇ, தாவர சங்கமம் என்னும் தன்மைய யாவையும் இரங்கிட, கங்கை எய்தினான்.

சொற்பொருள் :

பூவிரி - பூத் தொழிலாற் சிறப்புப் பெற்ற; பொலன் கழல் - பொன்னால் செய்யப்பட்ட வீரக் கழலை அணிந்த; பொருஇல் தானையான் - ஒப்பற்ற சேனையை உடைய; காவிரி நாடு அன்ன - காவிரி நதியால் வளம் பெறும்(தமிழ் நாட்டின்) சோழ நாட்டை ஒத்த; கழனி நாடு ஒரீஇ - வயல் வளம் மிக்க கோசலை நாட்டை விட்டு நீங்கி; தாவர சங்கமம் என்னும் தன்மைய யாவையும் - அசையாமல் நிலைத்திருக்கும் நிலைத் திணைப் பொருட்களும், அசையக் கூடிய இயங்குதிணைப் பொருட்களுமாகிய இருவகைப்பட்ட எல்லா உயிர்களும்; இரங்கிட - (தன் நிலைகண்டு) வருந்திட; கங்கை எய்தினான் -கங்கை நதிக்கரையை அடைந்தான்.

பொழிப்பு :

பூவேலைப்பாட்டினால் சிறப்புப் பெற்ற, பொன்னால் செய்யப் பட்ட வீரக் கழலை அணிந்த, ஒப்பற்ற சேனையை உடைய பரதன் காவிரி நதியால் வளம் பெற்ற சோழ நாட்டை ஒத்த வயல் வளம் மிக்கதாகிய [illegible]லை நாட்டை விட்டு நீங்கி, நிலைத்திணை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்குதிணை ஆகிய இருவகைப்பட்ட எல்லா உயிர்களும் (தன் நிலைகண்டு) வருத்தமுற கங்கைக் கரையை அடைந்தான்.

விளக்கம்:

அரச குமாரனாகிய பரதன், மரவுரி தரித்து துறவுக் கோலத்துடன் வருதல் கண்டு இருவகைப்பட்ட உயிர்களும் வருந்தின எனக் கூறப்பட்டுள்ளது. ஏழுவகையான உயிர்வர்க்கங்களைத் தாவரம், சங்கமம் என இரண்டினுள் அடக்கியுள்ளமை புலனாகிறது. மரம், செடி, கொடி முதலான தாவரங்கள் இடம்பெயர்ந்து செல்ல முடியாத நிலைத்திணையாகவும், இடம்பெயர்ந்து செல்லக் கூடிய ஊர்வன, நீர்வாழ்வன, பறவை, விலங்கு, மனிதர், தேவர் முதலியவை இயங்குதிணையாகவும் இச்செய்யுளில் காட்டப்பட்டுள்ளன. மேலும் கம்பர் தனது நாடாகிய சோழ நாட்டைக் கோசல நாட்டுக்கு உவமையாக்கியுள்ளார். இருநாடுகளின் பயிர்வள மேம்பாடும், கம்பரின் தாய்நாட்டுப் பற்றும், "உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை" (தொல் - பொருளதிகாரம் - உவமவியல் - 3) என்னும் தந்திரத்திற்கேற்ப உவமைப் பொருள் உவமிக்கப்படும் பொருளிலும் உயர்வானதாயிருக்க வேண்டும் என்பதால், சோழ நாட்டைக் கோசல நாட்டிலும் மேலாகக் கம்பர் கருதியதையும் நோக்கலாம்.

அருஞ்சொற்பொருள்:

பூவிரி - வேலைப்பாடுடைய; பொலன் - பொன்; கழல் - வீரர்கள் காலகளில் அணியும் வீரக் கழல் ஆகிய ஆபரணம்; பொருஇல் - ஒப்பற்ற; தானை - சேனை; அன்ன - ஒத்த, போன்ற; கழனி - வயல்; ஓரீஇ - நீங்கி, விலகி; தாவர சங்கமம் - இடம்விட்டு இயங்கும், இயங்காத உயிர்கள்; தன்மைய - இயல்புடைய; இரங்கி - வருந்திட; எய்தினான் - சேர்ந்தான், அடைந்தான்.

கங்கைக் கரை அடைந்த சேனையின் சிறப்பும் மிகுதியும்

02. எண்ண அருஞ் சுரும்பு தம் இனத்துக்கு அல்லது,
கண் அகன் பெரும் புனல் கங்கை எங்கணும்
அண்ணல் வெங்கரி மதத்து அருவி பாய்தலால்,
உண்ணவும், குடையவும், உரித்து அன்று ஆயதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு கூட்டும் முறை :

கண் அகன் பெரும் புனல் கங்கை, அண்ணல் வெங்கரி மதத்து அருவி எங்கணும் பாய்தலால், எண்ண அருஞ் சுரும்பு தம் இனத்துக் கல்லது, உண்ணவும், குடையவும், உரித்தன்று ஆயது

சொற்பொருள் :

கண் அகன் - இடம் அகன்ற; பெரும் புனல் - மிக்க நீரை உடைய; கங்கை - கங்கையாறு; அண்ணல் - பெருமையுடைய; வெங்கரி - கொடிய யானைகளின்; மதத்து அருவி - மதநீர்ப் பெருக்காகிய அருவி; எங்கணும் பாய்தலால் - எல்லா இடங்களிலும் பாய்ந்து ஓடுவதால்; எண்ண அரும் சுரும்பு தம் இனத்துக் கல்லது - எண்ணிக் கணக்கிடுவதற்கு முடியாத வண்டுக் கூட்டங்களுக்கு அல்லாமல் (ஏனைய உயிர்களுக்கு); உண்ணவும் - குடிக்கவும்; குடையவும் - குளித்து மூழ்கவும்; உரித்தன்று ஆயது - உரிமையற்ற தாக ஆகிவிட்டது.

பொழிப்பு :

இடம் அகன்ற அதிகளவு நீரை உடைய கங்கையாறு, பெருமையுடைய கொடிய யானைகளின் மதநீர்ப் பெருக்காகிய அருவி எல்லா இடங்களிலும் பாய்ந்து ஓடுவதால், எண்ணிக் கணக்கிடுவதற்கு முடியாத வண்டுக் கூட்டங்களுக்கு அல்லாமல் ஏனைய உயிர்களுக்கு குடிக்கவும், குளித்து மூழ்கவும் உரிமையற்றது ஆகிவிட்டது.

விளக்கம் :

கங்கை நீரிலும் பார்க்க யானைகளின் மதநீர்ப் பெருக்கு அதிகம் எனக் கூறியதன் மூலம், யானைகளின் கூடுதலான எண்ணிக்கை உணர்த்தப்பட்டுள்ளது. வண்டுகள் மத்நீரில் படிந்து (விழுந்து) குடைந்து உண்ணும் இயல்புடையன. ஆதலால் கங்கை நீர் இப்போது வண்டினத்துக்கே உரியதாயிற்று எனப்பட்டது. மதங்கொண்ட யானையின் உடலில் வெப்பம் அதிகரித்திருக்கும்; அத்துடன் தாக்குதலுக்கான மூர்க்கமும் அதிகரித்திருக்கும். எனவே "வெங்கரி" (வெம்மையுடைய யானை, கொடிய யானை) எனக் கூறப்பட்டது. "ஆயதே" என்பதில் "ஏ"காரம் ஈற்றசையாகும். கங்கையாற்றில் கூடுதலான யானைகளினால் மதநீர்ப் பெருக்கு அதிகரித்ததெனக் கூறியமை உயர்வு நவிற்சி அணியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருஞ்சொற்பொருள் :

சுரும்பு - வண்டு; எண்ணரும் - கணக்கிட முடியாத; கண் அகன் - இடமகன்ற; புனல் - நீர், கங்கை; அண்ணல் - பெருமை மிக்க; வெங்கரி - கொடிய யானை, வெம்மையுடைய யானை; உண்ணவும் - குடிக்கவும், பருகவும்; குடையவும் - குளித்து மூழ்கவும்; ஆயது - ஆயிற்று.

03 **அடிமிசைத் தூளி புக்கு, அடைந்த தேவர் தம் முடி உறப் பரந்தது ஓர்முறைமை தேர்ந்திலெம் நெடிது உயிர்த்து உண்டவும், நீந்தி நின்றவும், பொடிமிசைப் புரண்டவும், புரவி ஈட்டமே.**

கொண்டு கூட்டும் முறை :

அடிமிசைத் தூளி புக்கு, அடைந்த தேவர் தம் முடி உறப் பரந்தது ஓர்முறைமை தேர்ந்திலெம் நெடிது உயிர்த்து உண்டவும், நீந்தி நின்றவும், பொடிமிசைப் புரண்டவும், புரவி ஈட்டமே.

சொற்பொருள் :

அடிமிசைத் தூளி புக்கு - (குதிரைகளின்) காலடிகளின் மேலெழுந்த தூசி (அமரருலகத்தில்) புகுந்து; அடைந்த தேவர் தம் - அங்கே உள்ள தேவர்களின்; முடி உறப் பரந்தது - தலைகள் மீது படும்படியாகத் தேவருலகம் முழுவதும் பரவியது; ஓர்முறைமை தேர்ந்திலெம் - (இவ்வாறான) ஒரு தன்மையை மனிதராகிய எம்மால் ஆராய்ந்தறிய முடியவில்லை (ஊகித்தறியவே முடிகிறது); நெடிது உயிர்த்து உண்டவும் - பெருமூச்சு விட்டு நீரைப் பருகியவையும்; நீந்தி நின்றவும் - (நீரில்) நீந்திக் கொண்டு இருந்தவையும்; பொடிமிசைப் புரண்டவும் - மண்ணில் விழுந்து புரண்டவையும்; புரவி ஈட்டமே - (இவ்வாறு காணப்பட்டவை எல்லாம்) குதிரைகளின் கூட்டத் தொகுதிகளே ஆகும்.

பொழிப்பு :

குதிரைகளின் காலடிகளால் மேலெழுந்த தூசி தேவருல கத்தில் புகுந்து, அங்குள்ள தேவர்களின தலைகள் மீது படும் படியாகத் தேவருலகம் முழுவதும் பரவியது. இத்தகு இயல்பினை அனுமானிக்க முடிவதேயன்றி, ஆராய்ந்தறிய (மனிதராகிய) எம்மால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை. பெருமூச்சு விட்டு நீரைப் பருகியவை, நீரில் நீந்திக் கொண்டு இருந்தவை, மண்ணில் விழுந்து புரண்டவை எல்லாம் குதிரைத் தொகுதிகளே ஆகும்.

விளக்கம் :

இச் செய்யுளில் குதிரைப் படையின் மிகுதி கூறப்பட்டுள்ளது. குதிரைகளின் காலடித் தூசி வானுலகில் பரவியதையும் அறிய மாட்டோம்; ஆனால் இங்கு நீரிலும், நிலத்திலும் நின்றவை யாவும் குதிரைகளே என்று குதிரைப்படைப் பெருக்கம் உணர்த்தப் பட்டுள்ளது. "ஈட்டமே" என்பதிலுள்ள "ஏ"காரம் ஈற்றசையாகும். உயர்வு நவிற்சியாகக் குதிரைகளின் மிகுதி கூறப்பட்டுள்ளது. புக்கு, உற, உயிர்த்து ஆகிய சொற்கள் வினையெச்சங்களாகும். அடைந்த, உண்டவும், புரண்டவும் ஆகியன பெயரெச்சங்களாகும். உம், ஏ ஆகியன இடைச் சொற்களாகும்.

அருஞ்சொற்பொருள் :

அடிமிசை - காலடிகளின் மேல்; தூளி - புழுதி; புக்கு - புகுந்து; முடி - தலை; உற - படும்படி; பரந்தது - பரவியது; முறைமை - தன்மை, இயல்பு; தேர்ந்தில - அறிய முடியவில்லை; நெடிது - நீண்ட; உயிர்த்து - பெருமூச்சு விட்டு; உண்டவும் - பருகியவையும்; பொடி - மண்; புரவி - குதிரை; ஈட்டம் - தொகுதி, கூட்டம்;

04. பாலை ஏய் நிறத்தொடு, பண்டு தான் படர்
ஓலை ஏய் நெடுங் கடல், ஓடிற்று இல்லையால்'
மாலை ஏய் நெடு முடி மன்னன் சேனை ஆம்
வேலையே மடுத்தது, அக் கங்கை வெள்ளமே.

கொண்டு கூட்டும் முறை :

அக் கங்கை வெள்ளம், பாலை ஏய் நிறத்தொடு தான் பண்டு படர் ஓலை ஏய் நெடுங் கடல், ஓடிற்று இல்லை. மாலை ஏய் நெடுமுடி மன்னன் சேனை ஆம் வேலையே மடுத்தது.

சொற்பொருள் :

அக் கங்கை வெள்ளம் - அக் கங்கையாற்றின் நீர்ப் பெருக்கு; பாலை ஏய் நிறத்தொடு - பாலினை ஒத்த வெண்மை நிறத்துடன்; தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டு படர் - தான் முன்பு சென்று சேர்கின்ற; ஓலை ஏய் நெடுங் கடல் - ஆரவாரம் பொருந்திய நீண்ட கடலினிடத்தே; ஓடிற்று இல்லை - ஓடிச் சென்று கலந்ததில்லை; (ஏனெனில்) மாலை ஏய் நெடுமுடி - பூமாலை பொருந்திய நீண்ட மணிமுடியைச் சூடிய; மன்னன் சேனை ஆம் வேலையே - அரச குமாரனாகிய பரதனது சேனையாகிய கடலே; மடுத்தது - அதனை உண்டு விட்டது.

பொழிப்பு :

அக் கங்கையாற்றின் நீர்ப் பெருக்கு, பாலினை ஒத்த வெண்மை நிறத்துடன் தான் முன்பு சென்று சேர்கின்ற ஆரவாரம் மிக்க கடலினிடத்தில் சென்று கலந்ததில்லை. ஏனெனில், பூமாலை பொருந்திய நீண்ட மணிமுடியைச் சூடிய இளவரசனாகிய பரதனது சேனையாகிய கடல், அதனை உண்டு விட்டது.

விளக்கம் :

இச் செய்யுளில் பரதனுடன் வந்த சேனையின் மிகுதி, உயர்வு நவிற்சியாகக் கூறப்பட்டுள்ளது. பரதனது சேனைக் கடல், வழிவந்த இளைப்பினால் கங்கை நீரைப் பருகியபடியால் கங்கையில் நீரே இல்லாமல் வற்றிவிட்டது என்பதாகும். "ஒல்" என்பது ஒலி மிகுதியைக் குறிக்கும். அதுவே "ஓலை" எனப்பட்டது; ஆரவாரிக்கும் நெடுங்கடல் எனக் கூறப்பட்டமையைக் காண்க. (இல்லையால்) "ஆல்" (வெள்ளமே) "ஏ" என்பன அசைகளாகும். ஏற்கெனவே யானைப் படையின் மதநீர்ப் பெருக்குக் கலத்தலால் கங்கையின் வெண்ணிறம் மாறிற்று என்று கூறியமைக்கு முரணாக , இச் செய்யுளில் காலாட் படையினர் குடித்து முடித்ததால் கங்கை நீர் முற்றாக வற்றி விட்டது எனக் கூறப் பட்டுள்ளது. ஓடு, ஆல், ஏ என்பன இடைச் சொற்கள். "படர்" என்பது வினைத் திரிசொல்லாகும். இச் செய்யுளில் சேர்ந்தது, அடைந்தது என்னும் பொருள் வந்தாலும், பரவியது, தழுவியது என்னும் பொருள்களையும் உணர்த்தும்.

அருஞ்சொற்பொருள் :

பாலை - பாலினை; ஏய் - ஒத்த, பொருந்திய; பண்டு - முன்பு; படர் - சேர்தல், அடைதல், தழுவல், பரவுதல்; ஓலை - ஆரவாரம், ஒலித்தல்; வேலை - கடல்; மடுத்தது - குடித்தது, உண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. கான்தலை நண்ணிய காளை பின் படர்
தோன்றலை , அவ்வழித் தொடர்ந்து சென்றன
ஆன்றவர் உணர்த்திய அக்குரோணிகள்
மூன்று பத்து ஆயிரத்து இரட்டி முற்றுமே.

கொண்டு கூட்டும் முறை :

கான்தலை நண்ணிய காளை பின் படர் தோன்றலை, அவ்வழி தொடர்ந்து சென்றன முற்றும், ஆன்றவர் உணர்த்திய மூன்று பத்து ஆயிரத்து இரட்டி அக்குரோணிகள் .

சொற்பொருள் :

கான்தலை நண்ணிய – காட்டினிடத்தே சென்ற; காளை பின் படர் – இராமனின் பின்னே அவனை நாடிச் சென்ற; தோன்றலை – பரதனை; அவ்வழி – அந்த வழியிலே; தொடர்ந்து சென்றன – பின் தொடர்ந்து சென்ற சேனைகள்; முற்றும் – முழுவதும்; ஆன்றவர் உணர்த்திய – பெரியோர்களாற் கணக்கிட்டு உணர்த்தப் பெற்ற; மூன்று பத்து ஆயிரத்து இரட்டி – அறுபதினாயிரம்; அக்குரோணிகள் – அக்குரோணிகள் ஆகும்.

பொழிப்பு :

காட்டினிடத்தே சென்ற இராமனின் பின்னே அவனை நாடிச் சென்ற பரதனை அந்த வழியிலே பின் தொடர்ந்து சென்ற சேனைகள் முழுவதும் பெரியோர்களாற் கணக்கிட்டு உணர்த்தப் பெற்ற அறுபதினாயிரம் அக்குரோணிகள் ஆகும்.

விளக்கம் :

அக்குரோணி என்பது ஓர் எண்ணல் அளவாகும். இரண்டு இலட்சத்துப் பதினெண்ணாயிரத்து எழுநூறு கொண்டது ஓர் அக்கு ரோணி என்பது பண்டைய வழக்கு. இப்படி அறுபதினாயிரம் அக்கு ரோணிகள் சென்றன என்பதினால் சேனையின் மிகுதி உணர்த்தப் பட்டது. இதில் நாற்படைகளும் அடங்கும். "அக்ஷௌஹிணீ" என்னும் வட சொல்லின் திரிபே அக்குரோணி ஆகும். ஓர் அக்குரோணி சேனையில் மட்டும் 21870 யானைகளும் 21870

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்களும், 65610 குதிரைகளும், 190350 காலாட்படையினரும் இடம்பெறும் என்பது முடிபு. "முற்றுமே" என்பதிலுள்ள "ஏ"காரம் ஈற்றசை. நண்ணிய, உணர்த்திய என்பன பெயரெச்சச் சொற்கள். தொடர்ந்து என்பது வினையெச்சம். "படர்" என்பது பெயரெச்சமாயும், வினை முற்றாயும் வரக் கூடியது. படர் தோன்றல் (பெயரெச்சம்), நீ படர் (வினை முற்று). மூன்று பத்து ஆயிரம் = முப்பதாயிரம்; அதனை இரட்டித்து வருவது அறுபதாயிரம் என்க.

அருஞ்சொற்பொருள் :

கான்தலை – காட்டினிடத்தே; நண்ணிய – சென்ற; காளை – இராமன்; படர் – சென்ற; தோன்றல் – பரதன்; ஆன்றவர் – பெரியோர், சான்றோர்; உணர்த்திய – கணக்கிட்டுக் கூறிய.

பரதன் சேனையுடன் வருதல் கண்டு குகன் ஐயுற்றுச் சீற்றமுறுதல்

06. **அப் படை கங்கையை அடைந்த ஆயிடை,**
துப்பு உடைக் கடலின் நீர் சுமந்த மேகத்தை
ஒப்பு உடை அண்ணலோடு உடற்றவே கொலாம்
இப் படை எடுத்தது? என்று, எடுத்த சீற்றத்தான்.

கொண்டு கூட்டும் முறை :

அப்படை கங்கையை அடைந்த ஆயிடை, இப்படை எடுத்தது துப்பு உடைக் கடலின் நீர் சுமந்த மேகத்தை, ஒப்பு உடை அண்ணலோடு உடற்றவே கொல்? என்று எடுத்த சீற்றத்தான்.

சொற்பொருள் :

அப்படை – அந்தச் சேனை; கங்கையை அடைந்த ஆயிடை – கங்கைக் கரையை நெருங்கிய அச் சமயத்தில்; (அதுகண்ட குகன்) இப் படை எடுத்தது – இந்தச் சேனை புறப்பட்டது; துப்பு உடைக் கடலின் நீர் சுமந்த மேகத்தை – பவளம் உடைய கடலிலிருந்து நீரை முகந்து சூல்கொண்ட கருமேகத்தை; ஒப்பு உடை அண்ணலோடு – உவமையாகப் பெற்ற கரிய திருமேனியையுடைய இராமபிரானோடு; உடற்றவே கொல் – போர் செய்வதற்காகவோ; என்று – என நினைத்து; எடுத்த சீற்றத்தான் – கோபம் மேலெழுந்தவனாய்க் கங்கையின் தென்கரையில் வந்து தோன்றினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு :

அந்தச் சேனை கங்கையின் வட கரையை நெருங்கிய அச் சமயத்தில்(அதனைக் கண்ட குகன்) இந்தச் சேனை புறப்பட்டதன் நோக்கம். பவளமுடைய கடலிலிருந்து நீரை முகந்து சூலுற்ற கருமேகத்தை உவமையாகப் பெற்ற கரிய திருமேனியையுடைய இராமபிரானோடு போர் செய்வதற்காகவோ? எனக் கருதி மேலெழுந்த கோபமுடையவனாய்க் கங்கையின் தென்கரையில் வந்து தோன்றினாள்.

விளக்கம் :

வடகரையினைப் பரதனும் சேனைகளும் வந்து சேர்வதைக் கண்ட குகன், இராமபிரானுடன் யுத்தம் செய்யவே பரதன், சேனைகளுடன் வந்துள்ளான் எனச் சந்தேகப்பட்டு மிகுந்த கோபத்துடன் தென்கரையில் தோன்றியமையை இச் செய்யுள் காட்டுகிறது. அவனது தவறான சிந்தனைக்கு அவன் வருந்துவதைப் பின்னர் காண முடியும். "ஏ" (உடற்றவே) வினாவை உணர்த்துகிறது. "கொலாம்" என்பதில் "கொல்" என்பது ஐயத்தை உணர்த்துகிறது. "ஆம்" - அசைச் சொல்லாகும். அடைந்த, சுமந்த, ஒப்புடை, எடுத்த - பெயரெச்சங்கள்; இன், ஐ, என்று, கொல் இடைச் சொற்கள்; உடற்றவே - வினைமுற்று.

அருஞ்சொற்பொருள் :

படை - சேனை; ஆயிடை - அச்சமயத்தில்; துப்பு - பவளம்; சுமந்த - முகந்த, உறுஞ்சிய; ஒப்புடை - உவமையான; அண்ணல் - தலைவன், இராமன்; உடற்றவே - போர் செய்யவே; சீற்றம் - கோபம்;

07. குகன் எனப் பெயரிய கூற்றின் ஆற்றலான்
தொகை முரண் சேனையைத் துகளின் நோக்குவான்
நகை மிக, கண்கள் தீ நாற, நாசியில்
புகை உற, குனிப்புறும் புருவப் போர்விலான்.

கொண்டு கூட்டும் முறை :

குகன் எனப் பெயரிய கூற்றின் ஆற்றலான் தொகை முரண் சேனையைத் துகளின் நோக்குவான் நகை மிக, கண்கள் தீ நாற, நாசியில் புகை உற, குனிப்புறும் புருவப் போர்விலான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொருள் :

குகன் எனப் பெயரிய - குகன் என்ற பெயரை உடைய; கூற்றின் ஆற்றலான் - இயமனை ஒத்த வீர பராக்கிரமத்தையுடைய வேடர் தலைவன்; தொகை முரண் சேனையை - கூட்டமாகக் காணப்படும் வலிமையையுடைய (பரதனின்) சேனையை; துகளின் நோக்குவான் - ஒரு தூசி போலப் பார்ப்பவனாய்; . நகை மிக - (இகழ்ச்சிச் சிரிப்பு) சிரிப்பு அதிகமாக; கண்கள் தீ நாற - கண்களிலிலிருந்து தீ தோன்ற; நாசியில் புகை உற - (உள்ளே எரியும் கோப நெருப்பினால்) மூக்கிலிருந்து புகை வெளிவர; குனிப்புறும் - (கோப மிகுதியால்) மேலேறி வளைந்த; புருவப் போர்விலான் - புருவமாகிய போர்க்குரிய வில்லை உடையவனானான்.

பொழிப்பு :

குகன் என்ற பெயரை உடைய, இயமனை ஒத்த வீர பராக்கிரமத்தையுடைய வேடுவர் தலைவன், கூட்டமாயுள்ள வலிமை மிக்க (பரதனின்) சேனையை ஒரு தூசி போலப் பார்ப்பவனாய், இகழ்ச்சிச் சிரிப்பு மிகுந்திட, கண்களில் கோபத்தினால் நெருப்புத் தோன்ற, (அதனால்) மூக்கிலிருந்து புகை வெளிவர, (கோப மிகுதியால்) மேல் வளைந்த புருவமாகிய போர்க்குரிய வில்லை உடையவனானான்.

விளக்கம் :

இதற்கு முன்னுள்ள பாடலில் குகனை "எடுத்த சீற்றத்தான்" எனக் கூறி முடித்த கவிஞர், இப்பாடலில் சீற்றத்தினால் உண்டான மெய்ப்பாடுகளைக் கூறியுள்ளார். இகழ்ச்சிச் சிரிப்பு, கண்களில் நெருப்புத் தோன்றல், மூக்கிலிருந்து புகைவரல், புருவம் மேல் வளைதல் ஆகியவை பரதன் சேனையைக் கண்டு சினங்கொண்ட குகனின் உடலில் ஏற்பட்ட மாற்றங்களாகும் என்க. புருவப் போர்வில் என்பது உருவகம். வில், புருவத்திற்கு உவமை. வளைதல் தன்மை பொது. கோபத்தினால் புருவம் மேலேறி மேலும் வளைந்தது. போர் செய்கையில் வில்லை வளைப்பது இயல்பு. எனவே "போர்விலான்" எனப்பட்டது. விலான் - வில்லையுடையவன். கோபத்தால் கண்கள் சிவப்பதை, நெருப்புத் தோன்றல் எனப்பட்டது. அதேபோல் கோப மூச்சு வெளிப்பட்டதையும் நோக்குக. கூற்றுவன் - உவமானம்; குகன் - உவமேயம்; வீரபராக்கிரமம் - பொதுவியல்பு. அதுபோன்று தூசி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவமானம்; பரதனின் சேனை - உவமேயம்; இழிவான நிலை - பொதுத் தன்மை. பெயரிய, ஆகியன பெயரெச்சங்கள். மிக, நாற என்பன வினையெச்சங்கள். குனிப்புறும் என்பது பெயரெச்சமாகவும், வினைமுற்றாகவும் வரக்கூடிய சொல்லாகும். ஏன, இன், ஆன், ஐ, இல் ஆகியன இடைச் சொற்களாகும்.

அருஞ்சொற்பொருள்:

பெயரிய - பெயருடைய; ஆற்றலான் - வீரபராக்கிரம முடையவன்; தொகைமுரண் - அதிக தொகையான; துகை - தூசி; நகை - சிரிப்பு; நாற - தோன்ற; நாசி - மூக்கு; குனிப்புறும் - வளையும்; விலான் - வில்லையுடையவன்.

08. **மை உற உயிர் எலாம் இறுதி வாங்குவான்**
கை உறு கவர் அயில் பிடித்த காலன்தான்
ஐ - ஐந் நூறாயிரம் உருவம் ஆயின
மெய் உறு தானையான், வில்லின் கல்வியான்.

கொண்டு கூட்டும் முறை:

மை உற, இறுதி உயிர் எலாம் வாங்குவான், கை உறு கவர் அயில் பிடித்த காலன் தான் ஐ - ஐந் நூறாயிரம் உருவம் ஆயின உறு மெய் தானையான்; வில்லின் கல்வியான்.

சொற்பொருள்:

மை உற - தீமை உண்டாக; இறுதி உயிர் எலாம் வாங்குவான் - இறுதி நாள் வந்தபோது உயிர்கள் எல்லாவற்றையும் (அவற்றின் உடலிலிருந்து) வாங்குகின்ற; கை உறு கவர் அயில் பிடித்த காலன் தான் - கையில் பொருந்தி மூன்று கிளைகளாகப் பிரியும் சூலத்தை ஏந்திய இயமனே; ஐ - அழகிய; ஐந் நூறாயிரம் உருவம் ஆயின - ஐந்து இலட்சம் வடிவங்கள் எடுத்தாற்போன்ற; உறு மெய் தானையான் - வலிய உடம்பினையுடைய சேனையை உடையவன்; வில்லின் கல்வியான் - வில் வித்தையில் தேர்ந்தவன்.

பொழிப்பு:

தீமை உண்டாக, இறுதி நாள் வந்தபோது உயிர்கள் எல்லா வற்றையும் (அவற்றின் உடலிலிருந்து) எடுத்துக்கொள்கின்ற கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்தி மூன்று கிளைகளாகப் பிரியும் சூலத்தை ஏந்திய இயமனே, அழகிய ஐந்து இலட்சம் வடிவங்கள் எடுத்தாற்போன்ற வலிய உடம்பினையுடைய சேனையை உடையவன்; வில் வித்தையில் தேர்ந்தவன்.

விளக்கம் :

ஐ - அழகு; ஐந்நூறாயிரம் - ஐந்து இலட்சம். இச் செய்யுளில் குகனது சேனை வீரர்கள் காலனை ஒத்தவர்கள் என்று சேனைப் பெருமை கூறப்பட்டுள்ளது. குகனின் சேனை வீரர்களின் எண்ணிக்கை ஐந்து இலட்சம். ஒவ்வொருவரும் இயமனுக்குச் சமமான உடல் வலிமையுடையவர்கள் என உணர்த்தியமையை அறிக. மை - தீமை; முதற்குறையாக வந்தது.

அருஞ்சொற்பொருள் :

மை - தீமை; உற - பொருந்தி; கவர் - கிளை; அயில் - சூலம்; காலன் - இயமன்; ஐ - அழகு, வியப்பு; மெய் - உடம்பு, உண்மை; தானை - படை, சேனை; கல்வியான் - தேர்ந்தவன், சிறந்தவன்.

09. **கட்டிய கரிகையன், கடித்த வாயினன்,**
வெட்டிய மொழியினன், விழிக்கும் தீயினன்,
கொட்டிய துடியினன், குறிக்கும் கொம்பினன்,
"கிட்டியது அமர்" எனக் கிளறும் தோளினான்.

கொண்டு கூட்டும் முறை :

கட்டிய கரிகையன்; கடித்த வாயினன்; வெட்டிய மொழியினன்; விழிக்கும் தீயினன்; கொட்டிய துடியினன்; குறிக்கும் கொம்பினன்; "அமர் கிட்டியது" எனக் கிளறும் தோளினான்.

சொற்பொருள் :

கட்டிய - (இடைக்கச்சில்) கட்டப்பட்டுள்ள; கரிகையன் - உடைவாளை உடையவன்; கடித்த வாயினன் - (பற்களால்) உதட்டைக் கடித்துக் கொண்டிருப்பவன்; வெட்டிய மொழியினன் - கடுமையாகப் பேசும் சொற்களை உடையவன்; விழிக்கும் தீயினன் - (கண்கள்) விழித்துப் பார்க்கையில் நெருப்புத் தன்மை கொண்டவன்; கொட்டிய துடியினன் -அடிக்கப்படும் உடுக்கையை உடையவன்; குறிக்கும் கொம்பினன் - (போர்) குறித்து ஒலிக்கப்பெறும் ஊது கொம்பினை உடையவன்; அமர் கிட்டியது - போர் அருகில் வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது; எனக் கிளரும் தோளினான் - என்று கருதி மகிழ்ச்சியால் மேல் எழும்பும் தோள்களை உடையவன் ஆகி (அடுத்த பாடலில் தொடர்கிறது).

பொழிப்பு :

இடைக்கச்சில் கட்டப்பட்டுள்ள உடைவாளினையும், பற்களால் உதட்டைக்கடித்துக் கொண்டிருக்கும் வாயினையும், கடுமையாகப் பேசும் சொற்களையும், கண்கள் விழித்துப் பார்க்கையில் நெருப்புத் தன்மையையும், அடிக்கப்படும் உடுக்கையையும், போர் குறித்து ஒலிக்கப்பெறும் ஊது கொம்பினையும், "போர் அருகில் நெருங்கி வந்து விட்டது" என்று கருதி மகிழ்ச்சியால் மேல் எழும்பும் தோள்களையும் உடையவனாகி.....

விளக்கம் :

உதட்டைப் பற்களால் கடித்தல், உரத்த சத்தமிட்டுக் கடுமையாகப் பேசுதல், கண்கள் நெருப்புப்பொறி பறத்தல் போல் சிவந்திருத்தல் ஆகியவை கோபத்தினால் குகனிடையே ஏற்பட்ட மெய்ப்பாடுகளாகும். போர் கிடைத்துவிட்டால் வீரர்கள் மகிழ்வது இயல்பாகையால், "கிட்டியது அமர்" என மகிழ்ந்து குகனது தோள்கள் புடைத்து மேலெழுந்தன என்க. துடியும், ஊதுகொம்பும் போர்க் காலத்தில் வீரர்களுக்கு எழுச்சியூட்டும் வாத்தியங்களாகும். குகன் போருக்கு ஆயத்தமானதை இப்பாடல் உணர்த்துகிறது. கட்டிய, கடித்த, வெட்டிய, கொட்டிய பெயரெச்சங்களாகும். விழிக்கும், கிளரும், குறிக்கும், கிட்டியது போன்றவை பெயரெச்சங்களாகவும் வினைமுற்றுக்களாகவும் வரும். அன், ஆன், என, உம் ஆகியவை இடைச்சொற்களாகும்.

அருஞ்சொற்பொருள்

கரிகை - உடைவாள்; வெட்டிய - கடுமையாகப் பேசும்; கொட்டிய - அடிக்கப்படும்; அமர் - போர்; கிளரும் - மேலெழும், எழுச்சியுறும்; குறிக்கும் - ஒலிக்கப்படும், ஊதப்படும்.

10. **"எலி எலாம் இப்படை அரவம், யான்" என,**
ஒலி எலாம் சேனையை உவந்து கூவினான் -
வலி உலாம் உலகினில் வாழும் வள் உகிர்ப்
புலி எலாம் ஒரு வழிப் புகுந்த போலவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு கூட்டும் முறை :

இப்படை எலாம் எலி; யான் அரவம் என, வலி உலாம் உலகினில் வாழும் வள் உகிர்ப் புலி எலாம் ஒரு வழிப் புகுந்த போல, ஒலி உலாம் சேனையை உவந்து கூவினான்.

சொற்பொருள் :

இப்படை எலாம் எலி - (பரதனின்) இந்தச் சேனைகள் யாவும் எலிகளாகும்; யான் அரவம் - யான், இந்த எலிகளைத் தின்றொழிக்கும் பாம்பாவேன்; என - என்று வீர வார்த்தை பேசி; வலி உலாம் - வலிமை நிரம்பிய; உலகினில் வாழும் - உலகத்தில் வாழுகின்ற; வள் உகிர்ப் புலி எலாம் - வன்மையான (கூரிய) நகத்தையுடைய புலி எல்லாம்; ஒரு வழிப் புகுந்த போல - ஒரே இடத்தில் வந்து சேர்ந்தன எனும்படியாக உள்ள; ஒலி உலாம் சேனையை - (தனது) ஆரவாரம் மிக்க (வேடுவர்) சேனையை; உவந்து கூவினான் - மகிழ்ச்சியால்(பரதன் சேனையுடன் போரிட வருமாறு) அழைத்தனன்.

பொழிப்பு :

(பரதனின்) இந்தச் சேனைகள் யாவும் எலிகளாகும்; யான், இந்த எலிகளைத் தின்றொழிக்கும் பாம்பாவேன் என்று வீர வார்த்தை பேசி, வலிமை நிரம்பிய உலகத்தில் வாழுகின்ற வன்மையான கூரிய நகத்தையுடைய புலிகள் எல்லாம் ஒரே இடத்தில் வந்து சேர்ந்தன என்று சொல்லும் படியாக (தனது) ஆரவாரம் மிக்க சேனையை (வேடுவர்) மகிழ்ச்சியுடன் (பரதன் சேனைகளுடன் போரிட வருமாறு) அழைத்தனன்.

விளக்கம் :

"இப்படை" என்றது பரதன் சேனையாகும். பரதனின் படைகளை எலிகளாகவும், குகனைப் பாம்பாகவும் இங்கு உருவகிக்கப்பட்டுள்ளது. "வள்உகிர்ப்புலி" என்றது வளமான நக முடைய புலி என்பதாகும்; புலியின் நகத்துக்கு வளமாவது கூர்மை எனலாம். எனவே "கூரிய நகம்" எனக் கருதுக. "போலவே" என்பதிலுள்ள "ஏகாரம்" ஈற்றசை. வள் உகிர்ப் புலி எலாம் ஒரு வழிப் புகுந்த - உவமானம்; குகனின் சேனை - உவமேயம்; வலிமை - பொதுத் தன்மை; என, எலாம், போல, ஐ, இல் ஆகியன இடைச் சொற்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருஞ்சொற்பொருள் :

அரவம் – பாம்பு; உலாம் – ஆரவாரம்; உவந்து – மகிழ்ந்து; வள் – வளவிய, வளமான; உகிர் – நகம்; கூவினான் – அழைத்தான்.

11. **மருங்கு அடை தென் கரை வந்து தோன்றினான் –**
ஒருங்கு அடை நெடும் படை ஒல்லென் ஆர்ப்பினோடு
அருங் கடையுகம்தனில், அசனி மா மழை
கருங் கடல் கிளர்ந்தெனக் கலந்து சூழவே.

கொண்டு கூட்டும் முறை :

ஒருங்கு அடை நெடும் படை, அருங் கடை உகம் தனில், அசனி மா மழை கருங் கடல் கிளர்ந்து என ஒல் என் ஆர்ப்பினோடு கலந்து சூழ, மருங்கு அடை தென் கரை வந்து தோன்றினான்.

சொற்பொருள் :

ஒருங்கு அடை நெடும் படை – ஒருங்கு சேர்ந்து வந்த பெரிய (வேட்டுவச்) சேனை; அருங்கடை உகம் தனில் – அரிய கடை ஊழிக் காலத்தில்; அசனி மா மழை – இடியோடு கூடிய மேகமும்; கருங் கடல் – கரிய கடலும்; கிளர்ந்து என – (ஒலித்து) மிக்கு எழுந்தாற் போல; ஒல் என் ஆர்ப்பினொடு – "ஒல்" என்னும் பேராரவாரத்தினோடு; கலந்து சூழ – ஒன்று சேர்ந்து தன்னைச் சுற்றி வர; மருங்கு அடை – பக்கத்தில் உள்ள; தென் கரை – (கங்கையாற்றின்) தெற்குக் கரையில்; வந்து தோன்றினான் – (குகன்) வந்து தென்பட்டான்.

பொழிப்பு :

ஒருங்கு சேர்ந்து வந்த பெரிய (வேட்டுவச்) சேனை, அரிய கடையூழிக் காலத்தில் இடியோடு கூடிய மேகமும், கரிய கடலும் (ஒலித்து) மிக்கு எழுந்தாற் போல "ஒல்" என்னும் பேராரவாரத்தோடு ஒன்று சேர்ந்து தன்னைச் சுற்றி வர குகன் பக்கத்தில் உள்ள (கங்கை யாற்றின்) தெற்குக் கரையில் வந்து தோன்றினான்.

விளக்கம் :

பரதனும், படைவீரர்களும் இராமனுடன் போர் புரிவதற்கா கவே வருகிறார்கள் எனத் தவதறாகக் கருதிய குகன், மிக்க கோபங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட தன் படையினருடன் கங்கையின் தென்கரையில் போர் புரியத் தயாரான நிலையில் வந்து நிற்பதை இச்செய்யுள் எடுத்துக் கூறுகிறது. படைகளின் மிகுதியும், ஆரவாரத்துடன் குகனைச் சூழ்ந்து நிற்றலும் பற்றி, ஊழிக்காலத்து மேகமும், பொங்கும் கடலும் சேர்ந்தது போல என்று உவமையாகக் கூறப்பட்டுள்ளது. "தோன்றினான்" என்பதனூடாகக் குகன் தன்னுடையதும் தனது படையினதும் பேராற்றலைப் பரதனுக்கும் படையினருக்கும் எடுத்துக் காட்டுவதற்காகவே எனக் கருதுக. மேலும் கங்கையின் வடகரையில் பரதனும், தென் கரையில் குகனும் நின்றபடியால் "வந்து சேர்ந்தான்" எனக் கூறாது "தோன்றினான்" எனப்பட்டது. ஒல் என்பது ஆரவாரத்தைக் குறிக்கும், ஒலிக்குறிப்பினை உணர்த்தும் இடைச் சொல். வந்து, ஒருங்கு, கிளர்ந்தென, கலந்து, ஒல்லென என்பன வினையெச்சங்கள். நெடும், அரும், கரும் - பெயரெச்சங்கள். என்று, ஓடு, தனில், என ஆகியன இடைச் சொற்கள். "சூழவே" என்பதில் "ஏ"காரம் ஈற்றசை.

அருஞ்சொற்பொருள்:

மருங்கு - பக்கம்; அடை - உள்ள; ஆர்ப்பு - ஆரவாரம்; கடையுகம் - ஊழிக்காலம்(உலக முடிவின் இறுதிக் காலம்); அசனி - இடி முழக்கம்; கிளர்ந்து - எழுச்சி பெற்று, மிக்குற்று.

குகன் தன் சேனைக்குக் கட்டளை இடுதல்

12. **தோன்றிய புளிஞரை நோக்கி, "சூழ்ச்சியின்**
ஊன்றிய சேனையை உம்பர் ஏற்றுதற்கு
ஏன்றனென், என் உயிர்த் துணைவற்கு ஈகுவான்
ஆன்ற பேர் அரசு' நீர் அமைதிர் ஆம்" என்றான்.

கொண்டு கூட்டும் முறை

தோன்றிய புளிஞரை நோக்கி, ஆன்ற பேர் அரசு என் உயிர்த் துணைவற்கு ஈகுவான், சூழ்ச்சியின் ஊன்றிய சேனையை உம்பர் ஏற்றுதற்கு ஏன்றனென், நீர் அமைதிர் ஆம் என்றான்.

சொற்பொருள்:

(தென்கரை வந்த குகன்)தோன்றிய புளிஞரை நோக்கி - (தன்னால் அழைக்கப்பட்டுத் தன் முன் வந்துள்ள) வேடர் சேனையி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னரைப் பார்த்து; ஆன்ற பேர் அரசு - நிரம்பிய பெரிய அரசாட்சியை; என் உயிர்த் துணைவற்கு - என் உயிர் போல் சிறந்த தோழனாகிய இராமனுக்கு; ஈகுவான் - தருவதற்காக; சூழ்ச்சியின் ஊன்றிய சேனையை - (அதனை அவன் பெறாமல் தடுக்கும்) ஆலோசனை யோடு எதிரில் (வடகரையில்) காலூன்றி நிற்கும் (பரதனின்) சேனையை; உம்பர் ஏற்றுதற்கு - (போரில் கொன்று) வீர சுவர்க்கம் அடையச் செய்வதற்கு (தேவருலகம் செல்ல விடுவதற்கு); ஏற்றனென் - தொடங்கியுள்ளேன்; நீர் அமைதிர் - நீங்களும் இச் செயலுக்கு உடன்படுவீர்களாக; என்றான் - என்று சொன்னான்.

பொழிப்பு :

(தென்கரை வந்த குகன்) தன்னால் அழைக்கப்பட்டுத் தன் முன் வந்துநிற்கும் வேடர் சேனையினரை நோக்கி, நிரம்பிய பெரிய அரசாட்சியை, என் உயிர் போலச் சிறந்த தோழனாகிய இராமனுக்குத் தருவதற்காக, அதனைத் தடுக்கும் ஆலோசனையுடன் வடகரையில் காலூன்றி நிற்கும் பரதனின் சேனையைப் போரில் கொன்று வீர சுவர்க்கம் செல்ல விடுவதற்கு தொடங்கியுள்ளேன். நீங்களும் இதற்கு உடன்படுவீர்களாக என்று சொன்னான்;

விளக்கம் :

அரசனின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடப்பது சேனையா யினும், அதற்குத் தனது கருத்தைத் தெரிவித்து, உடன்பாடு பெறல் பண்பாடு என்பது இச் செய்யுளால் உணர்த்தப்பட்டுள்ளது. போரில் இறந்தவரை "வீர சுவர்க்கம் எய்தினார்" என்பது மரபாகையால் "உம்பர் ஏற்றுதல்" எனப்பட்டது. "ஈகுவான்" என்பது இங்கு வினையெச்சமாகி நின்று ஏற்றுவதற்கு என்னும் வினையோடு முடிந்துள்ளது. தோன்றிய, ஊன்றிய, ஆன்ற - பெயரெச்சங்கள்; நோக்கி, துணைவற்கு என்பன - வினையெச்சங்கள். ஐ, இன் முதலியன இடைச் சொற்கள்.

அருஞ்சொற்பொருள்

புளிஞர் - வேடர்; சூழ்ச்சியின் - ஆலோசனையின், தந்திரத் தின்; ஊன்றிய - காலூன்றிய; உம்பர் - தேவர்; ஏன்றனென் - தொடங்கியுள்ளேன், ஆரம்பித்துள்ளேன்; ஈகுவான் - கொடுப்பதற் காக, தருவதற்காக; ஆன்ற - நிரம்பிய; அமைதிர் - உடன்படுவீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. **"துடி எறி நெறிகளும், துறையும், சுற்றுற**
ஒடியெறி அம்பிகள் யாதும் ஓட்டலிர்'
கடி எறி கங்கையின் கரை வந்தோர்களைப்
பிடி எறி, பட எனா பெயர்த்தும் கூறுவான்.

கொண்டு கூட்டும் முறை :

துடி எறி ; நெறிகளும், துறையும், சுற்றுற ஒடியெறி; அம்பிகள் யாதும் ஓட்டலிர்; கடி எறி கங்கையின் கரை வந்தோர்களைப் பிடி; பட எறி, எனா பெயர்த்தும் கூறுவான்.

சொற்பொருள் :

துடி எறி - போர்ப் பறைகளை அடியுங்கள்; நெறிகளும், துறையும் - வருவதற்குரிய வழிகளையும், ஏறுதற்குரிய துறையையும் (தென்கரைக்கு); சுற்றுற ஒடியெறி - அழித்து நீக்கிச் சூழலில் இல்லாமல் செய்யுங்கள்; அம்பிகள் யாதும் ஓட்டலிர் - தோணிகளில் ஒன்றையும் (கங்கையில்) ஓட்டாதீர்கள்; கடி எறி கங்கையின் - விரைந்து அலைவீசி வரும் கங்கையாற்றின்; கரை வந்தோர்களை - தென்கரைக்கு (தாமாக முயன்று) வந்தவர்களை; பிடி - பிடியுங்கள்; பட எறி - (அவர்களை) இறக்கும்படி அழியுங்கள்; எனா - என்று(குகன்) கூறி; பெயர்த்தும் - மேலும்; கூறுவான் - சில வீர வார்த்தைகளைச் சொல்லுவான்.

பொழிப்பு :

(பரதனும் சேனைகளும் வட கரையிலிருந்து தென் கரைக்கு) வருவதற்குரிய வழிகளையும், துறையையும் அழித்து நீக்கிச் சூழலில் இல்லாமற் செய்யுங்கள்; தோணிகளில் ஒன்றையும் (கங்கையில்) ஓட்டாதீர்கள். விரைந்து அலைவீசி வரும் கங்கையாற்றின் தென்கரைக்கு வந்தோர்களைப்(தாமாக முயன்று) பிடியுங்கள். அவர்களை இறக்கும்படி அழியுங்கள் என்று குகன் கூறி, மேலும் சில வீர வார்த்தைகளைச் சொல்லலுற்றான்.

விளக்கம் :

"துடி" என்பது போர்ப்பறையைக் குறிக்கும். இதனைக் கூறுதலால் ஏனைய பறைகளும் ஒலிக்கட்டும் எனக் கருதப்படும். பரதனும், சேனைகளும் இராமன் மீது போர் புரிய வருவதாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறாகப் புரிந்து கொண்ட குகன், தன் படையினருக்கு விடுத்த எச்சரிக்கையே இப்பாடலில் கூறப்பட்டுள்ளது. தனது படைகளுக்கு அவன் உற்சாகமூட்டுகிறான். "கடிஎறி" என்பது காவலாக வை எனவும் பொருள் தரும். அது "பிடி"என்பதற்குப் பின்வரின் பொருந்தும். இப்பாடலில் முன்னுக்கு வந்து கங்கையின் விரைவைச் சுட்டுகிறது. விரைவாக அலைவீசி வருகின்ற கங்கையில் தோணியின் உதவியின்றிச் செல்ல முடியாதாகையால் "அம்பிகள் யாதும் ஓட்டலிர்" எனப்பட்டது. ஆயினும் தமது ஆற்றலால் நீந்தியோ, வேறு வழிகளிலோ யாராவது கங்கையைக் கடந்து வந்தால் அவர்களைப் பிடித்து இறக்கும்படி அழியுங்கள் எனக் குகன் கட்டளை இடுவதை "பிடி","பட எறி" என்பதனால் சுட்டப்பட்டுள்ளது. வீரரைத் தனிமையில் நோக்கி ஒருமையில் கூறிய போதிலும், "ஓட்டலிர்" எனப் பன்மை யிலும் கூறியதை நோக்கின் ஒருமை பன்மை மயக்கமாக விளங்கு வதைக் காணலாம். சுற்றுற, வந்தோர்களை, பெயர்த்தும், பட ஆகி யவை வினையெச்சச் சொற்கள். கடி - பலகுணம் தழுவிய உரிச் சொல். வினையெச்சச் சொல்லாகவும் வரும். துடி, பிடி, கரை ஆகிய சொற்கள் பெயராகவும், வினையாகவும் வரக்கூடியவை. உம், எனா, இன் - இடைச் சொற்கள்.

அருஞ்சொற்பொருள்:

துடி - பறை; நெறி - வழி; சுற்றுற - சூழ; ஒடி - அழித்து; அம்பிகள் - தோணிகள்; ஓட்டலிர் - ஓட்டாதீர்; கடி எறி - விரைந்து அலைஎறியும்; பட - இறக்கும்படி; பெயர்த்தும் - மேலும்.

குகன் தன் சேனைகளுக்குக் கூறிய வீர வார்த்தை

கலித்துறை

14. அஞ்சன வண்ணன், என் ஆர்
உயிர் நாயகன், ஆளாமே,
வஞ்சனையால் அரசு எய்திய
மன்னரும் வந்தாரே!
செஞ் சரம் என்பன தீ
உமிழ்கின்றன, செல்லாவோ?
உஞ்சு இவர் பேரய்விடின், "நாய்க்குகன்"
என்று, எனை ஓதாரோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு கூட்டும் முறை :

என் ஆர் உயிர் நாயகன் அஞ்சன வண்ணன் அரசு ஆளாமே, வஞ்சனையால் எய்திய மன்னரும் வந்தாரே! தீ உமிழ்கின்றன செஞ் சரம் செல்லாவோ? இவர் உஞ்சு போய்விடின், "நாய்க்குகன்" என்று, எனை ஓதாரோ?

சொற்பொருள் :

என் ஆர் உயிர் நாயகன் – என் அரிய உயிர்த் துணைவனாகிய; *அஞ்சன வண்ணன்* – மைபோலும் கரிய நிற மேனி அழகனான இராம பிரான்; *அரசு ஆளாமே* –ஆட்சி உரிமை அடையாதபடி; *வஞ்சனை யால்* – சூழ்ச்சியால்; *எய்திய* – அவ்வரசாட்சியைக் கைப்பற்றிக் கொண்ட; *மன்னரும்* – அரசரும் (பரதனும்); *வந்தாரே* – (என்னருகில் இப்பொழுது) வந்துள்ளார் அன்றோ!; *தீ உமிழ்கின்றன செஞ்சரம்* – நெருப்பைக் கக்குகின்றனவாய (என்) சிவந்த அம்புகள்; *செல்லாவோ* – (இவர்கள் மேல்) செல்லாமல் போய்விடுமோ?; *இவர் உஞ்சு போய்விடின்* – இவர்கள் (என் அம்புக்குத் தப்பிப்) பிழைத்து (இராமன் இருக்கும் இடம்) போய்விட்டால்; *நாய்க்குகன் என்று* – (உலகோர்) குகன் நாய் போன்ற கீழான குணமுடையவன் என்று; *எனை* – என்னைப் பற்றி; *ஓதாரோ* – சொல்லாமல் இருப்பார்களா?

பொழிப்பு :

என் அரிய உயிர்த் துணைவனாகிய, மைபோலும் கரிய நிற மேனி அழகனாகிய இராமபிரான் ஆட்யுரிமை எய்தாதபடி சூழ்ச்சியால் அவ்வரசாட்சியைக் கைப்பற்றிய அரசரும் (பரதனும்) வந்துள்ளார் அன்றோ! நெருப்பைக் கக்குகின்றனவாய என் சிவந்த அம்புகள் (இவர்கள் மேல்) செல்லாமல் போய்விடுமோ? இவர்கள் (என் அம்புகளுக்குத் தப்பிப்) பிழைத்து இராமன் இருக்கும் இடம் போய் விட்டால், உலகோர் நாய் போன்ற கீழான குணமுடையவன் என்று என்னைப் பற்றி சொல்லாமல் இருப்பார்களா?

விளக்கம் :

இராமன் பெற வேண்டிய அரசைப் பரதன் பெற்றது பற்றிய குகனின் சீற்றமே இப்பாடலினூடு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. "நாய்" என்பது ஒருவரைக் கீழ்மைப் படுத்திப் பேசப் பயன்படுவதாகையால் இங்கே தன்னை "நாய்க் குகன்" என்றான் என்க. இராமனும் குகனும் கருநிற மேனியர்களாதலால், "அஞ்சன வண்ணன்" என ஈடுபாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன் கூறினான் எனக் கருதுக. பரதனின் படைகளை இராமனிருக்கும் இடம் செல்லவிடில், இராமன் மீது, தான் காட்டும் நன்றியுணர்வுக்குப் பாதகமானது என்பதால் தன்னை இழித்துப் பேசினான் குகன் எனக் கருதுக. மேலும் நாயானது எசமானிடம் காட்டும் விசுவாசத்தைத் திருடனொருவன் சிறிது உணவு கொடுத்தால் அவனிடமும் காட்டும். இதுவே அதன் இழிகுணம். இதனாலேயே "நாய்" என்று கூறாமல் "நாய்க் குகன்" என்று இழிவரல் தோன்றக் கூறப்பட்டுள்ளது. ஏகார, ஓகாரங்கள் ஐயவினாப் பொருளில் வந்துள்ளன. இவை இடைச் சொற்கள், மன்னர் என்பது இகழ்ச்சிக் குறிப்பு. அஞ்சனம் - உவமானம்; இராமனின் திருமேனி - உவமேயம்; கருமை - பொதுத் தன்மை. செஞ்சரம், ஆருயிர் - பண்புத் தொகைகள். உம், இன், என்று ஆகியனவும் இடைச் சொற்களாகும்.

15. **ஆழ நெடுந் திரைஆறு கடந்து**
இவர் போவாரோ?
வேழ நெடும் படை கண்டு
விலங்கிடும் வில்லாளோ?
"தோழமை" என்று, அவர்
சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ?
ஏழமை வேடன் இறந்திலன் என்று,
எனை ஏசாரோ?

கொண்டு கூட்டும் முறை :

இவர் ஆழம் நெடுந் திரைஆறு கடந்து போவாரோ? வேழ நெடும் படை கண்டு விலங்கிடும் வில் ஆளோ? "தோழமை" என்று, அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ? ஏழமை வேடன் இறந்திலன் என்று, எனை ஏசாரோ?

சொற்பொருள் :

இவர் - பரதனும் சேனைகளும்; ஆழம் - ஆழத்தையும்; நெடுந் திரை - நீண்ட அலைகளையும் உடைய; ஆறு கடந்து - கங்கையாற்றைக் கடந்து; போவாரோ - அப்பால் (தென்கரைக்கு) செல்வார்களோ? வேழ நெடும் படை - யானைகளை உடைய நீண்ட பெரிய சேனையை; கண்டு - பார்த்து (பயந்து); விலங்கிடும் - புற முதுகு காட்டி விலகிச் செல்கின்ற; வில் ஆளோ - வில் வீரனோ (நான்); "தோழமை" என்று - (உனக்கும் எனக்கும்) நட்பு என்பதாக;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சொல்லிய சொல் - அந்த இராம பிரான் கூறிய வார்த்தை; ஒரு சொல் அன்றோ - (காப்பாற்றி மதிக்கத்தக்க) ஒப்பற்ற வார்த்தை அல்லவா?; (அந்த நட்புக்கு மாறாக இவர்களைப் போகவிட்டால்) ஏழமை வேடன் - அற்பனாகிய இந்த வேடன்; இறந்திலன் - இவ்வாறு இராமனோடு நட்புச் செய்து இப்பொழுது பரதனோடு நட்புச் செய்து அவர்கள் சேனைக்குப் பயந்து அவர்களைப் போக விட்டால்) இறந்து போகலாமே (இவ்விதம் மானங்கெட்டு வாழ்வதைவிட); என்று, எனை ஏசாரோ - என்றிவ்வாறு உலகத்தார் என்னைப் பழியாமல் விடுவார்களா (பழிப்பர்).

பொழிப்பு :

நீண்ட அலைகளை உடைய கங்கை ஆற்றைக் கடந்து அப்பாற் செல்வார்களோ? யானைகளை உடைய நீண்ட பெரும் சேனையைப் பார்த்துப் பயந்து புறமுதுகு காட்டிச் செல்கின்ற வில் வீரனோ நான்? உனக்கும் எனக்கும் நட்பு என்பதாக அந்த இராமபிரான் கூறிய வார்த்தை ஒப்பற்ற வார்த்தை அல்லவா (அந்த நட்புக்கு மாறாக இவர்களைப் போகவிட்டால்) அற்பனாகிய இந்த வேடன் இவ்விதம் மானமழிந்து வாழ்வதை விட இறந்து போகலாமே! என்று உலகத்தார் எனைப் பழியாது விடுவார்களோ? (பழிப்பர்).

விளக்கம் :

"போகாரோ", "ஏசாரோ" என்பவற்றுள் எதிர்மறை இறுதியில் ஓகாரங்கள் ஐயவினாப் பொருளில் வந்துள்ளன. இதேபோல் "வில்லாளோ" என்பதில் ஓகாரம் எதிர்மறைப் பொருளிலும், "சொல் அன்றோ" என்பதில் ஓகாரமானது தேற்றப் பொருளிலும் வந்துள்ளன. "தோழமை" என்பது பண்பாட்டுப் பெயரால் தோழனைக் குறித்தது. காட்டில் வாழும் தமக்கு "வேழ நெடும் படை" ஒரு பொருட்டல்ல எனக் குகன் கூறினான் எனக் கருதுக. அதேபோன்று "ஏழமை" என்பது அறியாமைப் பொருளை உணர்த்துவதாயினும் இங்கு எளிமை, அற்பம் ஆகிய இகழ்ச்சிப் பொருள்களில் வந்துள்ளது. ஓகாரங்கள் இடைச் சொற்களாகும். கடந்து. கண்டு, என்று ஆகியன வினையெச்சங்கள். விலங்கிடும், சொல்லிய ஆகியன பெரெச்சங்கள். விலங்கிடும் என்பது வினை முற்றாகவும் வரக் கூடியது. நெடுந்திரை, நெடும்படை, ஏழமை ஆகியன பண்புத் தொகைச் சொற்களாகும். இறந்திலன் என்பது எதிர்மறை வினைமுற்று ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருஞ்சொற்பொருள் :

வேழம் - யானை; நெடும் - நீண்ட; விலங்கிடும் - விலகிப் போகும்; வில்லாளோ - வில் வீரனோ; ஒரு சொல் - மதிப்புள்ள சொல்.

16. **"முன்னவன்" என்று நினைந்திலன்;**
மொய் புலி அன்னான் ஓர்
பின்னவன் நின்றனன் என்றிலன்;
அன்னவை பேசானேல்,
என் இவன் என்னை இகழ்ந்தது?
இவ் எல்லை கடந்து அன்றோ?
மன்னவர் நெஞ்சினில்,
வேடர் விடும் சரம் வாயாவோ?

கொண்டு கூட்டும் முறை :

இவன் முன்னவன் என்று நினைந்திலன்; மொய் புலி அன்னான் ஓர் பின்னவன் நின்றனன் என்றிலன்; அன்னவை பேசானேல், என்னை இகழ்ந்தது என்? இவ் எல்லை கடந்து அன்றோ? வேடர் விடும் சரம் மன்னவர் நெஞ்சினில், வாயாவோ?

சொற்பொருள்

இவன் - இப்பரதன்; முன்னவன் என்று நினைந்திலன் - இராமபிரான் தனது அண்ணன் என்று நினைத்தானில்லை; மொய் புலி அன்னான் ஓர் பின்னவன் நின்றனன் - வலிமை நெருங்கிய புலியை ஒத்த இளவலாகிய இலக்குவன் இராமனுக்குத் துணையாக உள்ளான்; என்றிலன் - என்று கருதினானும் இல்லை; அன்னவை பேசானேல் - அந்த இராம, இலக்குவணர்களைப் பற்றி நினைக்கா விட்டாலும்; என்னை இகழ்ந்தது என் - என்னையும் ஒரு பொருட்டாக மதியாமல் இகழ்ந்தது எது கருதி?: இவ் எல்லை கடந்து அன்றோ - (இவன் இராமனுடன் போர் செய்வது) எனது எல்லையைக் கடந்து சென்றால் அல்லவா? வேடர் விடும் சரம் - வேடர்கள் விடுகின்ற அம்புகள்; மன்னவர் நெஞ்சினில் - அரசாகளன மார்புகளில்; வாயாவோ - தைத்து உள் நுழைய மாட்டாவோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு :

இப்பரதன், இராமபிரான் தனது அண்ணன் என்று நினைத் தானில்லை. வலிமை நெருங்கிய புலியினையொத்த இலக்குவன் அவனுக்குத் துணையாக உள்ளான் என்பதையும் கருதினானில்லை. அந்த இராம, இலக்குவணர்களைப் பற்றி நினைக்காவிட்டாலும் என்னையும் ஒரு பொருட்டாக மதியாமல் இகழ்ந்தது எது கருதி? (இவன் இராமனுடன் போர் செய்வது) எனது எல்லையைக் கடந்து சென்றால் அல்லவா? வேடர்கள் விடுகின்ற அம்புகள் அரசர்களின் மார்புகளில் தைத்து உள் நுழையமாட்டாவோ?

விளக்கம் :

இராமனைத் தமையன் எனக் கருதியிருந்தால் அரசை அவனிடம் கொடுத்திருப்பான். புலிபோன்ற இலக்குவணனின் துணையை அறிந்திருந்தால் போருக்கு வந்திருக்க மாட்டான். தனது ஆற்றலையும் (குகனின்) உணராதவனாக உள்ளான் எனக் குகன் கூற்று அமைந்துள்ளது. மேலும், தனது எல்லையைக் கடந்து சென்றால் அல்லவோ இராமனுடன் போர் புரிய முடியும் என்பதிலும் வேடுவர் அம்புகள் மன்னர்கள் நெஞ்சுகளைத் துளைத்துச் செல் லாவோ? என்பதிலும் குகனின் வீரவார்த்தைகளும், பரதனையும் சேனைகளையும் இகழ்ந்து கூறும் இயல்பும் வெளிப்படுகின்றன. "பேசானேல்" என்பது உபசார வழக்காக "எண்ணுதல்" என்னும் பொருளில் வந்துள்ளது. மொய்புலி - வினைத்தொகை; அன், ஏல், ஓ, இல் ஆகியன இடைச் சொற்கள். வாயாவோ என்பதிலுள்ள ஓகாரம் எதிர்மறைப் பொருளில் வாய்க்கும் எனப் பொருள் தரும். பேசானேல் என்பது நினைக்கானேல் என வழக்குப் பெறும். அன்னவை - இராம, இலக்குவணர் பற்றியவை.

அருஞ்சொற்பொருள் :

முன்னவன் - அண்ணன்; மொய் - நெருங்கிய; அன்னான் - ஒத்தவன், போன்றவன்; பின்னவன் - தம்பி; பேசானேல் - நினையானேல்; சரம் - அம்பு; வாயாவோ - துளைத்துச் செல்லாதோ.

17. **பாவமும் நின்ற பெரும் பழியும்,**
பகை நண்போடும்,
ஏவமும், என்பவை மண்
உலகு ஆள்பவர் எண்ணாரோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவது போக, என் ஆர்
உயிர்த் தோழமை தந்தான்மேல்
போவது, சேனையும் ஆர் உயிரும்
கொடு போய் அன்றோ?

கொண்டு கூட்டும் முறை :

மண் உலகு ஆள்பவர் பாவமும் நின்ற பெரும் பழியும், பகை நண்போடும், ஏவமும், என்பவை எண்ணாரோ? ஆவது போக, என் ஆர் உயிர்த் தோழமை தந்தான் மேல் போவது, ஆர் உயிரும், சேனையும் கொடு போய் அன்றோ?

சொற்பொருள் :

மண் உலகு ஆள்பவர் - (இப்) பூவுலகத்தை ஆளுகின்ற அரசர்கள்; பாவமும் - (தாம் ஒரு செயலைச் செய்யும்போது அதனால் விளையும்) பாவத்தையும்; நின்ற பெரும் பழியும் - (செயல் முடிந்தபிறகு அதனால்) தம்மேல் நின்ற பெரும் பழியையும்; பகை நண்போடும் - இன்னார் பகைவர், இன்னார் நண்பர் என்பவற்றையும்; ஏவமும் - விளையும் குற்றங்களையும்; என்பவை - என்று இவை போலச் சொல்லப்படுகின்றவற்றையும்; ண்ணாரோ - நினைக்க மாட்டாரோ?; ஆவது போக -அது கிடக்கட்டும்; என் ஆர் உயிர்த் தோழமை தந்தான் மேல் போவது - எனக்கு அரிய உயிரோடு ஒத்த நட்புறவைத் தந்த இராமன்மேல் படையெடுத்துச் செல்வது; ஆர் உயிரும், சேனையும் கொண்டு போய் அன்றோ - தம்முடைய அரிய உயிரையும், சேனைகளையும் (எனக்குத் தப்பி) உடன் கொண்டு சென்ற பிறகல்லவா (முடியும்).

பொழிப்பு :

இப் பூவுலகத்தை ஆளுகின்ற அரசர்கள் (தாம் செய்யுமொரு செயலின் விளைவான) பாவத்தையும் (செயல் முடிந்தபிறகு அதனால்) தம்மேல் நின்ற பெரும் பழியையும் பகைவர்கள், நண்பர்கள் யார்?யார்? என்பதையும் விளையும் குற்றங்களையும் இவை போலச் சொல்லப்படுவனவற்றையும் நினைக்க மாட்டார் களோ? அது கிடக்கட்டும், எனக்கு அரிய உயிரோடு ஒத்த நட்புறவைத் தந்த இராமன்மேல் படையெடுத்துச் செல்வது, தம்முடைய அரிய உயிரையும், சேனைகளையும் (எனக்குத் தப்பி) உடன் கொண்டு சென்ற பிறகல்லவா முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் :

பரதன் அண்ணனைக் கொல்வதால் ஏற்படும், பழி, பாவம் என்பவற்றைக் கருதினானில்லை என்பதால் குகன் இவ்வாறு கூறினான் எனக் கருதுக. பகைவர்கள் யார்? நண்பர்கள் யார்? என்பதைப் போருக்குச் செல்பவர்கள் அறிந்து செயல்பட வேண்டுமாகையால், தான் இராமனது நண்பன் என்பதை அறிந்து படையெடுத்துச் செல்வதைத் தவிர்க்க வேண்டும் எனப்பட்டது. மேலும் குகனின் கூற்றானது "நான், இவனையும் இவனின் சேனையையும் உயிரோடு போக விட்டால் தானே இவன் இராமன் இருக்கும் இடம் வரை செல்ல முடியும்" என்பதாக அமைந்துள்ளது. இதனூடாகக் குகன் தனது வீரத்தை எடுத்துக் காட்டியுள்ளான் என்க. ஏவம் - எவ்வம் என்பதன் திரிபு. குற்றம் எனப் பொருள்படும். "அது போகட்டும்" என்பதன் மூலம் பரதன் சிந்திக்காவிட்டாலும் பரவாயில்லை. அவனும் சேனைகளும் என்னால் அழிக்கப்பட்டபின் எவ்வாறு இராமனிடம் செல்ல முடியும்? என்பதான வீரவார்த்தைகளைக் கூறினான் என்க. "எண்ணாரோ", "அன்றோ" என்பவற்றிலுள்ள ஓகாரங்கள் வினைப் பொருளில் வந்தன. உம், ஓ ஒன்பன இடைச் சொற்கள். ஆருயிர் - பண்புத் தொகை; நின்ற - பெயரெச்சம்; போக, போவது, கொடுபோய் என்பன வினையெச்சங்கள்.

அருஞ்சொற்பொருள் :

ஏவமும் - குற்றமும்; ஆவது போக - அது போக; ஆர் - அரிய; கொடுபோய் - கொண்டு போய்;

18. **அருந் தவம் என் துணை ஆள,**
இவன் புவி ஆள்வானோ?
மருந்துஎனின் அன்று உயிர்'
வண் புகழ் கொண்டு, பின் மாயேனோ?
பொருந்திய கேண்மை
உகந்தவர் தம்மொடு போகாதே
இருந்தது நன்று' கழிக்குவென்,
என் கடன் இன்றோடே.

கொண்டு கூட்டும் முறை :

என் துணை அருந்தவம் ஆள, இவன் புவி ஆள்வானோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் மருந்து எனின் அன்று; வண்புகழ் கொண்டு, பின் மாயேனோ? பொருந்திய கேண்மை உகந்தவர் தம்மொடு போகாதே இருந்தது நன்று; என் கடன் இன்றோடு கழிக்குவென்.

சொற்பொருள் :

என் துணை - எனக்கு நண்பனாகிய இராமன்; அருந்தவம் ஆள - அரிய தவத்தைச் செய்து கொண்டிருக்க; இவன் - இப் பரதன்; புவி ஆள்வானோ - உலகத்தை ஆட்சி செய்வானோ?; உயிர் மருந்து எனின் - என்னுடைய உயிர் கிடைத்தற்கரிய தேவர் அமுதமோ என்றால்; அன்று - அல்ல (நான் அதை அரிதெனக் காப்பாற்ற நினைக்கவில்லை); வண்புகழ் கொண்டு - (இராமனுக்காகப் பரதனை எதிர்த்து) அதனால் சிறந்த புகழைப் பெற்று; பின் மாயேனோ? அதன் பிறகு உயிர் துறக்க மாட்டேனோ?; பொருந்திய கேண்மை - மிகவும் ஒட்டிய நட்புறவை; உகந்தவர் தம்மொடு - என்பால் கொண்டு மகிழ்ந்த இராம, இலக்குவர்களோடு; போகாதே - உடன் செல்லாமல்; இருந்தது நன்று - (நான்) இங்கேயே தங்கியிருந்தது நல்லதாகப் போயிற்று; என் கடன் - நான் இராமனுக்குச் செய்ய வேண்டிய கடமையை; இன்றோடு கழிக்குவென் - இன்றைக்கே செய்து முடிப்பேன்.

பொழிப்பு :

எனக்கு நண்பனாகிய இராமன் அரிய தவத்தைச் செய்து கொண்டிருக்க, இப்பரதன் உலகத்தை ஆட்சி செய்வானோ? என்னுடைய உயிர் கிடைத்தற்கரிய தேவாமிர்தமோ என்றால் இல்லை (நான் அதை அரிதாக நினைத்துக் காப்பாற்ற நினைக்க வில்லை). (இராமனுக்காகப் பரதனை எதிர்த்து) அதனால் சிறந்த புகழைப் பெற்று அதன் பிறகு உயிர் துறக் மாட்டேனோ? மிகவும் ஒட்டிய நட்புறவை என்பால் கொண்டு மகிழ்ந்த இராம, இலக்குவர்களோடு உடன் செல்லாமல் (நான்) இங்கேயே இருந்தது நல்லதாகப் போயிற்று. நான் இராமனுக்குச் செய்ய வேண்டிய கடமையை இன்றைக்கே செய்து முடிப்பேன்.

விளக்கம் :

என்துணை என் நண்பன் எனினும், என் அண்ணன் எனினும் பொருந்தும். "குகனோடு ஐவரானோம்" என்பதைக் கருதுக. தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் பெரிதல்ல என்பதையே "உயிர் மருந்து எனினும் அல்ல" எனக் குகன் கூறினான் என்க. இராம, இலக்குவர்களுடன் போயிருக்க வேண்டியவன் போகாமல் இருந்தது இப்போது நல்லதாய்ப் போயிற்று; ஏனெனில் பரதனுடன் போர் புரிந்து இராமனுக்குப் பகைவராயுள்ளோரை அழிக்கும் வாய்ப்புக் கிட்டியதால் எனக் குகன் கூறினான் என்க. "இன்றோடே" என்பதிலுள்ள "ஏ"காரம் ஈற்றசை. அருந்தவம் - பண்புத் தொகை; ஆள்வேனோ - என்பதிலுள்ள ஓகாரம் இகழ்ச்சிக் குறிப்பு. ஆள விடமாட்டேன் என்பதாகும். அதே போன்று மாயேனோ என்பதிலுள்ள ஓகாரம் மாய்வேன் என்பதை உணர்த்திய தேற்றம். ஓகாரங்கள் அனைத்தும் இடைச் சொற்கள். எனின், ஓடு, ஏ, என் ஆகியவைகளும் இடைச் சொற்களாகும். ஆள, கொண்டு, தம்மொடு என்பன வினையெச்சங்கள். பொருந்திய - பெயரெச்சம். இருந்தது நன்று என்பதில் இருந்தது வினையாலணையும் பெயர். அதேபோன்று கழிக்குவென் என் கடன் என்பதிலும் கழிக்குவென் வினை முற்றாகும். இது பெயரெச்சமாகவும் வரக் கூடியது.

அருஞ்சொற்பொருள்:

துணை - அண்ணன், நண்பன்; மருந்து - தேவாமிர்தம்; வண் புகழ் - சிறந்த புகழ்; மாயேனோ - இறக்கேனோ; பொருந்திய - ஒட்டிய; கேண்மை - நட்பு, உறவு; உகந்தவர் - (இராம இலக்குவர்) மகிழ்ந்தவர்; கழிக்கும் - செய்து முடிக்கும்; கடன் - கடமை.

19. **தும்பியும் மாவும் மிடைந்த**
பெரும் படை சூழ்வு ஆரும்,
வம்பு இயல் தார் இவர்
வாள் வலி கங்கை கடந்து அன்றோ?
வெம்பிய வேடர் உளீர்!
துறை ஓடம் விலக்கீரோ?
நம்பி முன்னே, இனி நாம்
உயிர் மாய்வது நன்று அன்றோ?

கொண்டு கூட்டும் முறை:

தும்பியும், மாவும், மிடைந்த பெரும் படை சூழ்வு ஆரும், வம்பு இயல் தார் இவர் வாள் வலி கங்கை கடந்து அன்றோ? வெம்பிய வேடர் உளீர்! துறை ஓடம் விலக்கீரோ? நம்பி முன்னே, நாம் உயிர் மாய்வது இனி நன்று அன்றோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொருள் :

தும்பியும் - யானைகளும்; மாவும் -குதிரைகளும்; மிடைந்த - நெருங்கிய; பெரும் படை - பெரிய சேனையால்; சூழ்வு ஆரும் - சூழப்படுதல் பொருந்திய; வம்பு இயல்தார் இவர் - புதுமணம் வீசுகின்ற மாலையை அணிந்துள்ள இவர்; வாள் வலி - வாளேந்திய படையின ரின் ஆற்றலை; கங்கை கடந்து அன்றோ? - இக் கங்கையாற்றினைக் கடந்து போன பின் அல்லவா?(காட்ட முடியும்); வெம்பிய வேடர் உளீர் - (இவர்களைக் கண்டு) மனப் புளுக்கம் அடைந்துள்ள வேடர்களாய் உள்ளவர்களே; துறை ஓடம் விலக்கீரோ? - கங்கை நீர்த் துறையில் இவர்களுக்கு ஓடம் விடுவதை நிறுத்தி விடுங்கள்; (ஒருவேளை இவர்கள் நம்மைத் தடுத்து மேற்செல்லும் ஆற்றல் உடையவராயின் இவர்களோடு போரிட்டு); நம்பி முன்னே - இராம பிரானுக்கு முன்னாலேயே; நாம் உயிர் மாய்வது - நமது உயிர் போவது; இனி நன்று அன்றோ - இனிமேல் நல்லது அல்லவா?

பொழிப்பு :

யானைகளும், குதிரைகளும் நெருங்கிய பெரிய சேனையால் சூழப்படுதல் பொருந்திய, புதுமணம் வீசும் மாலையை அணிந்துள்ள இவரது வாளேந்திய படையினரின் ஆற்றலை இக் கங்கையைக் கடந்து போன பின் அல்லவா காட்ட முடியும் (இவர்களைக் கண்டு) மனப் புளுக்கம் அடைந்துள்ள வேடர்களே கங்கை நீர்த் துறையில் இவர்களுக்கு ஓடம் விடுதலை நிறுத்தி விடுங்கள் (ஒருவேளை இவர்கள் நம்மைத் தடுத்து மேற்செல்லும் ஆற்றல் உடையவராயின் இவர்களோடு போரிட்டு) இராமனுக்கு முன்னாலேயே நமது உயிர் போவது இனிமேல் நல்லது அல்லவா?

விளக்கம் :

குகன் பேசிய வீர வசனங்களில் ஒன்றாக "இவர் வாள் வலி கங்கை கடந்து அன்றோ" என்பதைக் கருதுக. மணம் வீசும் மாலையைப் பரதன் அணிந்தான் என்பது குகனின் கற்பனைக் கூற்று. உண்மையில் தந்தை இறந்த துயரம், தமையன் காடேகிய துன்பம் ஆகியவற்றால் வருத்தமுற்று வருகின்ற பரதன் மணம் வீசும் மாலையை அணிந்து வருகிறான் என்பது பொருத்தமற்றது. போரில் வெற்றி தோல்வி உறுதியல்ல என்பதையுணர்ந்தே குகன், தன் வீரர்களை நோக்கி, ஒரு வேளை எம்மைத் தடுத்து மேலே அவர்கள் சென்றாலும் அவர்களுடன் போரிட்டு இராமனுக்கு முன்னர் மடிவது எமக்கு நல்லதல்லவா என்றான் எனக் கொள்க. "நம்பி முன்னே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதில் இராமனுக்கு முன்னால் (அவர் பார்க்கும் படி) என்றும், இராமன் போரில் மரணமடைவதற்கு முன்னர் என என்றும் இரு பொருள்படக் கருத முடியும். அன்றோ, விலக்கீரோ என்பவற்றி லுள்ள ஓகாரம் வினாப்பொருளில் வந்தது. தும்பி, மா என்பன பாடலில் ஒருமையாக வரினும் பன்மையாகக் கொள்ளலே பொருத்தமானது. வம்பு இயல்தார் என்பது புதிய மணம் வீசுகின்ற மாலை எனப் பொருள் கொள்ளப்படும். வம்பு - புதுமை; எனவே புதுமணம் எனப்படும். மிடைந்த, சூழ்வு ஆரும், வெம்பிய ஆகியன பெயரெச்சங்கள். யாவும், கடந்து, முன்னே, மாய்வது என்பன வினையெச்சங்கள். உம், ஓ என்பன இடைச் சொற்கள்.

அருஞ்சொற்பொருள்:

தும்பி – யானை; மா – குதிரை; மிடைந்த – நெருங்கிய; சூழ்வு ஆரும் – சூழப் பெற்ற; வம்பு – மணம், புதுமை; இயல் – தன்மை, இயல்பு; தார் – மாலை; வலி – ஆற்றல், வல்லமை; வெம்பிய – மனப் புளுக்கமடைந்த; உளீர் – உள்ளவர்களே; நம்பி – இராமன்; மாய்வது – இறந்து விடுவது.

போன படைத் தலை வீரர்தமக்கு
இரை போதா இச்
சேனை கிடக்கிடு; தேவர் வரின்,
சிலை மா மேகம்
சோனை பட, குடர் சூறை பட,
சுடர் வாளோடும்
தானை பட, தனி யானை பட,
திரள் சாயேனோ?

கொண்டு கூட்டும் முறை:

போன படைத் தலை வீரர்தமக்கு இரை போதா இச்சேனை கிடக்கிடு; தேவர் வரின், சிலை மா மேகம் சோனை பட, குடர் சூறை பட, தானை சுடர் வாளோடும் பட, தனி யானை பட, திரள் சாயேனோ?

சொற்பொருள்:

போன – (நம்முடன்) வந்துள்ள; படைத் தலை வீரர் தமக்கு – சேனையின்கண் உள்ள வீரர்களுக்கு; இரை போதா – (ஒரு வேளைப்) போர்க்கும் பற்றாத; இச்சேனை – (இந்தப்) பரதனின் சேனை; கிடக்கிடு – கிடக்கட்டும்; தேவர்வரின் – தேவர்களே (படையெடுத்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தாலும்; சிலை மா மேகம் - என் வில்லாகிய கரிய மேகம்; சோனை பட - அம்பு மழையைச் சொரிய; குடர் சூறை பட - எதிரிகளின் குடல் சிதைந்து அலைய; தானை சுடர் வாளோடும் பட - எதிரிப் படைகள் தம் கைகளிற் பிடித்த வாளோடும் இறந்தொழிய; தனி யானை பட - ஒப்பற்ற யானைகள் அழிய; திரள் சாயேனோ? - (அப்படைக்) கூட்டத்தை நிலை குலைக்காமல் விட்டு விடுவேனோ?

பொழிப்பு :

(நம்முடன்) வந்துள்ள சேனையிலுள்ள வீரர்களுக்கு ஒரு வேளைப் போருக்கும் காணாத இப் பரதனின் சேனை கிடக்கட்டும். தேவர்களே படையெடுத்து வந்தாலும் என் வில்லாகிய கரிய மேகம் அம்பு மழையைச் சொரிய எதிரிகளின் குடல்கள் சிதைந்து அழிய எதிர்ப் படைகள் தம் கைகளிற் பிடித்த வாள்களோடும் இறந்துவிட, ஒப்பற்ற யானைகளும் அழிய, (அப்படைக்) கூட்டத்தை நிலை குலையச் செய்யாமல் விட்டு விடுவேனோ?

விளக்கம் :

இரை என்பது வீரர்களுக்கு உணவாவது போர் ஆதலால் ஒருவேளைப் போர் எனப்பட்டது. போன படைத்தலை வீரர் என்பது இராம, இலக்குவணர்களையும் குறிக்க வல்லது. நம்மிடம் தப்பிச் சென்றாலும் அவர்களது வீரத்திற்கு ஒரு வேளைக்கும் பற்றாது என்பதாகும். "தேவர் வரின்" என்பது சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. எவர் வந்தாலும் என்பதை உணர்த்தியது. "ஓ" வினாப் பொருளில் வந்தது. இப் பாடலில் தனது வில்லின் வலிமையைக் குகன் உரைத்தான் என்க. இச் சேனை கிடக்கிடு என்பது குகனின் அலட்சியமான இழிவுரை ஆகும். ஏனெனில் தேவர்களே வந்தாலும். அவர்களும் அழிவது உறுதியெனக் கூறும் மனத்திட்மும், தனது வீரத்தின் மீதுள்ள நம்பிக்கையுமாகும். திரள் சாயேனோ என்பதில் பரதனையும் சேனைகளையும் அழித்தொழிக்காமல் இருப்பேனோ என்னும் வீராவேசம் தொனிக்கிறது. போன - பெயரெச்சம்; தமக்கு, வரின், பட வாளோடும் என்பன வினையெச்சங்கள். கிடக்கிடு - வினை முற்று. சாயேனோ என்பதில் "ஓ"காரம் இங்கு எதிர்மறை வினாப் பொருளில் வந்துள்ளது. திரள்சாய்ப்பன் (கூட்டத்தை நிலை குலைத்து விடுவேன்) என்னும் கருத்துடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருஞ்சொற்பொருள்:

போன - நம்முடன் வந்துள்ள; இரை - உணவு; சிலை - அம்பு; மாமேகம் - கரிய மேகம்; சோனை - மழை, புனல்; பட - சொரிய, அலைய, இறக்க; தானை - சேனை; சாயேன் - விடுவேன்.

21. **நின்ற கொடைக் கை என்**
அன்பன் உடுக்க நெடுஞ் சீரை
அன்று கொடுத்தவள் மைந்தர் பலத்தை,
என் அம்பாலே
கொன்று குவித்த நிணம்கொள் பிணக் குவை
கொண்டு ஓடி,
துன்று திரைக் கடல்,
கங்கை மடுத்து இடை தூராதோ?

கொண்டு கூட்டும் முறை:

அன்று கொடை நின்ற கை, என் அன்பன் நெடுஞ் சீரை உடுக்க கொடுத்தவன் மைந்தர் பலத்தை, என் அம்பால் கொன்று குவித்த நிணம் கொள் பிணக் குவை, கங்கை கொண்டு ஓடி, துன்று திரைக் கடல், மடுத்து இடை தூராதோ?

சொற்பொருள்:

அன்று - (முடிசூட்டு விழா நிகழவிருந்த) அந்நாள்; கொடை நின்ற கை - (முடி சூட்டுவதற்கு முன்பு செய்ய வேண்டிய தானம் முதலியவற்றைச் செய்து) நின்ற திருக்கரங்களையுடைய; என் அன்பன் - எனது அன்பிற்குரிய இராமன்; நெடுஞ் சீரை உடுக்க - பெரிய மரவுரியை உடுக்கும் நிலையை; கொடுத்தவள் - (அவனுக்கு) ஏற்படுத்திக் கொடுத்தவளாகிய கைகேயியின்; மைந்தர் பலத்தை - மகனான பரதன் சேனையை; என் அம்பால் கொன்று குவித்த - என்னுடைய அம்பினால் கொன்று குவியல் செய்த; நிணம் கொள் பிணக் குவை - கொழுப்பு மிகுதியாகவுடைய பிணங்களின் திரட்சியை; கங்கை - இந்தக் கங்கையாறானது; கொண்டு ஓடி - இழுத்துக் கொண்டு விரைந்து ஓடி; துன்று திரைக் கடல் - நெருங்கிய அலைகளை உடைய கடலில்; மடுத்து - அவற்றைச் சேர்த்து; இடை தூராதோ - அக்கடலினிடத்தைத் தூர்த்து விடாதோ? (தூர்த்து விடும்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு :

(முடிசூட்டு விழா நிகழவிருந்த) அந்நாள் (முடி சூடமுன் ஆற்ற வேண்டியதான தருமங்களைச் செய்த) திருக்கரக் கரங்களையுடைய எனது அன்பிற்குரிய இராமன் பெரிய மரவுரியை உடுக்கும் நிலைமை யை ஏற்படுத்திக் கொடுத்தவளாகிய கைகேயியின் மைந்தரான பரதன் சேனையை, என் அம்பால் கொன்று குவியல் செய்த, கொழுப்பு மிகுந்த பிணங்களின் திரட்சியை, இந்தக் கங்கையா றானது இழுத்துக் கொண்டு விரைவாக ஓடி, நெருங்கிய அலைகளை உடைய கடலில் அவற்றைச் சேர்த்து, அக்கடலினிடத்தைத் தூர்த்து விடாதோ? (தூர்த்து விடும்).

விளக்கம் :

இப்பாடலில் தனது வீரத்தினைக் குகன் பறைசாற்றக் காணலாம். பரதன் சேனையைத் தனது அம்பினாற் கொன்று, குவியலாய்க் கிடக்கும் பிணங்களைக் கங்கையாறு இழுத்துச் சென்று கடலில் சேர்க்கும் என்றும், அப்படி இழுத்துச் சென்ற பிணங்களின் மிகுதியால் கடல் தூர்ந்து விடும் என்றும் குகன் வீர முழக்கம் செய்கிறான். "நின்ற கொடைக் கை" என்பதற்கு எப்போதும் வள்ளன்மை மிகுந்த இராமனின் கை எனவும் பொருள் கொள்ளலாம். மரவுரி இங்கு சீரை எனப்பட்டது. அதன் பொல்லாங்கு கருதி நெடுஞ்சீரை எனப்பட்டது. கொடுத்தவள் என்பது கைகேயியை. அவளது வரமே இராமன் மரவுரி தரித்து வனமேகக் காரணமாயிற்று. மைந்தர் என்பதால் பரத, சத்துருக்கர்களைக் குறிப்பிட்டமையை அறியலாம். சத்துருக்கன், கைகேயியின் மகனல்லாவிடினும், பரதனுடன் எப்போதும் சேர்ந்திருப்பதால் அவ்வாறு கூறினானென்க. பிணக்குவை என்பதனால் எதிரி சேனையின் பெருக்கம் கூறப்பட்டது. தூராதோ என்பதிலுள்ள ஓகாரம் எதிர்மறை வினாப்பொருளில் வந்துள்ளது. தூர்க்கும் என்பதை உணர்த்துகிறது. திரைக் கடல் - வேற்றுமைத் தொகை; கொடைக் கை - பண்புத் தொகை; நின்ற, துன்று, குவித்த ஆகியன பெயரெச்சச் சொற்கள். உடுக்க, பலத்தை, அம்பாலே, கொன்று, கொண்டு, ஓடி, மடுத்து ஆகியன வினையெச்சச் சொற்கள். கொண்டுஓடி என்பது முதல் வினை (கொண்டு) துணை வினை (ஓடி) ஆகியவற்றையுடைய எச்ச வினையாகும். ஐ (சீரை), ஏ (அம்பாலே) ஆகியன இடைச் சொற்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருஞ்சொற்பொருள் :

அன்பன் - அன்புக்குரியவன் (இராமன்); நெடும் - பெரிய, நீண்ட; நின்ற - செய்து நின்ற; நிணம் - கொழுப்பு; குவை - குவியல்; துன்று - நெருங்கிய; திரை - அலை; மடுத்து - சேர்த்து; தூராதோ - மூடி நிரப்பாதோ, தூர்க்காதோ.

22. **ஆடு கொடிப் படை சாடி,**
அறத்தவரே ஆள
வேடு கொடுத்தது, பார்" எனும் இப்
புகழ் மேவீரோ?
நாடு கொடுத்த என் நாயகனுக்கு
இவர், நாம் ஆளும்
காடு கொடுக்கிலர் ஆகி,
எடுத்தது காணீரோ?

கொண்டு கூட்டும் முறை :

ஆடு கொடி படை சாடி, அறத்தவர் ஆள, வேடு பார் கொடுத்தது, எனும் இப் புகழ் மேவீர், நாடு கொடுத்த என் நாயகனுக்கு இவர் நாம் ஆளும் காடு கொடுக்கிலர் ஆகி எடுத்தது காணீர்.

சொற்பொருள் :

ஆடு - அசையும்; கொடி - கொடிகளை உடைய; படை - சேனைகளை; சாடி - கொண்டழித்து; அறத்தவர் ஆள - தருமத்தின் துணைவர்களான இராம, இலக்குவணர்கள் ஆளும்படி; வேடு - வேடுவர்கள்; பார் கொடுத்து - (இந்தப்) பூமியை மீட்டுக் கொடுத்தனர்; எனும் இப் புகழ் மேவீர் - என்கின்ற இப் புகழை அடையுங்கள்; நாடு கொடுத்த என் நாயகனுக்கு - (இவர்கள் ஆளும்படி) தான் ஆட்சி புரிய வேண்டிய நாட்டைக் கொடுத்துவிட்டு வந்த என் தலைவனாகிய இராமனுக்கு; இவர் - பரதனாகிய இவர்; நாம் ஆளும் காடு - நாம் ஆட்சி செய்யும் நமக்குரிமையாகிய இந்தக் காட்டையும் ; கொடுக்கிலர் ஆகி - ஆட்சி செய்யும்படி கொடுக்க மனமில்லாதவராகி; எடுத்தது - படை எடுத்து வந்துள்ளதை; காணீர் - காணுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு :

அசையும் கொடிகளை உடைய சேனைகளைக் கொண்ட ழித்து, தருமத்தின் துணைவர்களான இராம, இலக்குவணர்கள் ஆளும்படி வேடுவர்கள் (இந்தப்) பூமியை மீட்டுக் கொடுத்தனர் என்கின்ற இப் புகழை அடையுங்கள். (இவர்கள் ஆளும்படி) தான் ஆட்சி புரிய வேண்டிய நாட்டைக் கொடுத்துவிட்டு வந்த என் தலைவனாகிய இராமனுக்கு, பரதனாகிய இவர் நாம் ஆட்சி செய்யும் நமக்குரிமையாகிய இந்தக் காட்டையும்ஆட்சி செய்யும்படி கொடுக்க மனமில்லாதவராகி படை எடுத்து வந்துள்ளதைக் காணுங்கள்.

விளக்கம் :

குகன் தன் போர் வீரர்களுக்குக் கூறும் செய்தியாக இப்பாடல் காணப்படுகிறது. போர் புரிவதற்குரிய நியாயங்கள் இப்பாடலில் கூறப் பட்டுள்ளன. அதனூடாகப் போர் புரிவதற்கான தூண்டுதலைத் தன் படைவீரர்களுக்குக் குகன் கொடுத்ததையும், உளவியல் ரீதியான அணுகு முறையையும் இதில் காண முடிகிறது. "ஆடு கொடி படை சாடி" எனக் கூறுவது போரில் விருப்பத்துடன் ஈடுபடும் வீரர்களுக்கு ஊக்கம் கொடுப்பதாகும். அறத்தின் பொருட்டு உயிரையும் கொடுக்கும் மனமுடையோராகிய வீரர்களைப் பார்த்து "அறத்தவரே ஆள " எனப்பட்டது. "வேடு கொடுத்தது இப்பார்" எனக் கூறியதன் மூலம் வேடுவர்களைப் புகழ்ந்து, அவர்களுக்குரிய ஆட்சியைப் பறிக்க வருவோரை எதிர்த்தழிக்கும் மனப்பாங்கினை ஊட்டுவதாக அமைந்துள்ளது. மேலும் "நாம் ஆளும் காடு கொடுக்கிலர் ஆகி" என்று கூறியதன் மூலம், எதிரிகளை அழிக்க வேண்டிய கடப்பாடு வலியுறுத்தப்பட்டுள்ளது. அறத்தவரே என்பதில் ஏ தேற்றம். மேவீரோ, காணீரோ என்பதில் ஓகாரம் வினாப்பொருளில் வந்துள்ளது. மேவீர், காணீர் எனப் பொருள் வழி வலியுறுத்தப்பட்டது. ஆடுகொடி - வினைத்தொகை; சாடி, ஆள, ஆகி என்பன வினையெச் சங்கள். கொடுத்த, ஆளும் - பெயரெச்சங்கள். எடுத்தது காணீரோ என்பதில் எடுத்தது வினையாலணையும் பெயர். கொடுத்தது வினை முற்றாகவும், பெயரெச்சமாகவும் வரக்கூடியது. இப் பாடலில் பெயரெச்சமாய் வந்துள்ளது.

23. **மாமுனிவர்க்கு உறவாகி**
வனத்திடையே வாழும்
கோ முனியத் தகும் என்று,
மனத்து இறை கொள்ளாதே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ முனை உற்றிடில், ஏழு கடற்
படை என்றாலும்,
ஆ முனையின் சிறு கூழ்
என இப்பொழுது ஆகாதோ?

கொண்டு கூட்டும் முறை :

மாமுனிவர்க்கு உறவாகி வனத்திடையே வாழும் கோ முனியத் தகும் என்று, மனத்து இறை கொள்ளாது, ஏ முனை உற்றிடில், இப்பொழுது ஏழு கடற் படை என்றாலும், ஆ முனையின் சிறு கூழ் என ஆகாதோ?

சொற்பொருள் :

மாமுனிவர்க்கு - பெரிய தவசிகளுக்கு; உறவாகி - இனிய சுற்றமாகி; வனத்திடையே வாழும் - காட்டினிலே வாழும்; கோ - இராமன்; முனியத் தகும் - (தன் தம்பியாகிய பரதனை எதிர்த்தால் என்னை) வெறுத்துக் கோபிப்பான்; என்று - என; மனத்து இறை கொள்ளாது - மனத்தின்கண் சிறிதும் நினைக்காமல்; ஏ முனை உற்றிடில் - போர் முனையில் (பரதனைச்) சந்தித்துப் போரிட்டால் இப்பொழுது - இந் நேரத்தில்; ஏழு கடற் படை என்றாலும் - ஏழு கடலளவு சேனைகள் என்றாலும்; ஆ முனையின் சிறு கூழ் என - பசு, உண்ணும் பொருட்டு முயல்கையில், அதன் எதிரில் கிடந்த சிறிய புல் என்று சொல்லும்படி; ஆகாதோ? - அனைத்தும் அழிந்து போகாதோ? (போகும்).

பொழிப்பு :

பெரிய தவசிகளுக்கு இனிய சுற்றமாகிக் காட்டினிலே வாழும் இராமன் (தன் தம்பியாகிய பரதனை எதிர்த்தால் என்னை) வெறுத்துக் கோபிப்பான் என மனத்தின்கண் சிறிதும் நினைக்காமல், போர் முனையில் (பரதனைச்) சந்தித்துப் போரிட்டால், இந் நேரத்தில் ஏழு கடலளவு சேனைகள் என்றாலும் பசு, உண்ணும் பொருட்டு முயல்கையில், அதன் எதிரில் கிடந்த சிறிய புல் என்று சொல்லும் படி அனைத்தும் அழிந்து போகாதோ? (போகும்).

விளக்கம் :

பரதனை எதிர்ப்பது இராமனுக்கு உகந்ததாயிராது என்பதைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகன் அறிந்திருப்பதையும், ஆனால் போரின் வேகத்தைக் குறைக்கக் கூடிய அந்த எண்ணத்திற்குச் சிறிதும் இடங்கொடாமல் போரை நடத்திச் செல்ல விரும்புவதையும் இப்பாடல் காட்டுகிறது. இப்பாடலிலும் பசித்த பசுவின் முன் புல் போலத் தன் சேனை, பரதனின் படைகளை அழித்து விடும் எனக் குகன் வீரம் பேசுவதையும் காண முடிகிறது. பசித்த பசுவின் முன் புல் - உவமானம்; குகனின் சேனையின் முன் பரதனின் சேனை - உவமேயம்; முற்றாக அழிதல் - பொதுத் தன்மை. காட்டிலே தங்கியிருக்கும் இராமனுக்கு அங்கு தவ வாழ்வு வாழ்ந்து வரும் முனிவர்களே உறவினர்களாவர் என்பதையும் பாடலில் காண முடிகிறது. "ஆகாதே" என்பதில் "ஏ"காரம் ஈற்றசை. "ஆகும்" என்பதே பொருளாகும். உறவாகி, முனிய, மனத்து, உற்றிடில், முனையின் ஆகியவை வினையெச்சங்கள். வாழும் - பெயரெச்சமாயும், வினை முற்றாகவும் வரக்கூடியது.

அருஞ்சொற்பொருள்:

மா - பெரிய; வனம் - காடு; கோ - தலைவன், அரசன்; முனிய - கோபிக்க; இறை - சிறிதளவும், இறைவன், அரசன், வரி; ஏ - போர்; உற்றிடில் - சந்திப்பின், போரிடில்;

24. **என்பன சொல்லி, இரும்பு அன**
மேனியர் ஏனோர் முன்,
வன் பணை வில்லினன், மல் உயர்
தோளினன், வாள் வீரற்கு
அன்பனும், நின்றனன்; நின்றது
கண்டு, அரிஏறு அன்ன
முன்பனில் வந்து, மொழிந்தனன்
மூரிய தேர் வலலான்.

கொண்டு கூட்டும் முறை:

வன் பணை வில்லினன்; மல் உயர் தோளினன்; வாள் வீரற்கு அன்பனும்; இரும்பு அன மேனியர் ஏனோர் முன், என்பன சொல்லி, நின்றனன்; நின்றது கண்டு, மூரிய தேர் வல்லான், அரிஏறு அன்ன முன்பனில் வந்து, மொழிந்தனன்.

சொற்பொருள்:

வன்பணை வில்லினன் - வலிய கட்டமைந்த பருத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லினை உடையவனும்; மல் உயர் தோளினன் - மல் யுத்தத் தொழிலால் சிறப்புற்ற தோளினை உடையவனும்; வாள் வீரற்கு அன்பனும் - வாள் வலிமையிற் சிறந்த இராமபிரானுக்கு அன்பு பூண்டவனும் ஆகிய குகன்; இரும்பு அன மேனியர் ஏனோர் முன் - இரும்பினை ஒத்த வலிமையை உடைய ஏனைய வேடுவவீரர்களுக்கு முன்னால்; என்பன சொல்லி - இத்தகைய வீர வார்த்தைகள் பலவற்றைச் சொல்லி; நின்றனன் - நின்றான்; நின்றது கண்டு - (குகன்) நின்ற கோலத்தினைப் பார்த்து; மூரிய தேர் வல்லான் - வலிய தேரை ஓட்டுதலில் வல்லவனாகிய சுமந்திரன்; அரிஏறு அன்ன முன்பனில் - ஆண் சிங்கத்தை ஒத்த வலிமை படைத்த பரதனுக்கு முன்னால்; வந்து, மொழிந்தனன் - வந்து நின்று சில சொற்களைக் கூறுவானாயினன்.

பொழிப்பு :

வலிய கட்டமைந்த பருத்த வில்லினை உடையவனும், மல் யுத்தத் தொழிலால் சிறப்புற்ற தோளினை உடையவனும், வாள் வலிமையிற் சிறந்த இராமபிரானுக்கு அன்பு பூண்டவனும் ஆகிய குகன், இரும்பினை ஒத்த வலிமையை உடைய ஏனைய வேடுவ வீரர்களுக்கு முன்னால் இத்தகைய வீர வார்த்தைகள் பலவற்றைக் கூறி நின்றனன். குகன் நின்ற கோலத்தைப் பார்த்து, வலிய தேரை ஓட்டுதலில் வல்லவனாகிய சுமந்திரன், ஆண் சிங்கத்தை ஒத்த வலிமை படைத்த பரதனுக்கு முன்னால் வந்து நின்று சில சொற் களைக் கூறலுற்றான்.

விளக்கம் :

"என்பன சொல்லி" எனக் குறிப்பிட்டதன் மூலம், இதற்கு முன்னுள்ள பத்துப் பாடல்களிலும் குகன் கூறிய வீரவார்த்தைகள் அனைத்தையும் சொல்லி என இப் பாடலில் உணர்த்தியுள்ளமை யைக் காணலாம். "நின்றனன்" என்பதனூடாக மேலும் செயல்கருதி நின்றதைக்(போரிடல்) கருதச் செய்துள்ளது. அத்துடன் பரதனின் உண்மை நிலையைத் தெரியாமல் போருக்குச் செல்லாது நின்றனன் எனவும் கருத முடியும். "மூரிய" என்பது "தொன்மையான" எனவும் பொருள் தரும். சுமந்திரன் சூரியகுல மன்னர்களுக்குத் தொன்று தொட்டுத் தேர் செலுத்துவதில் வல்லவனாகையால் இதுவும் பொருத்தமானது. "வாள் வீரற்கு அன்பனும்" என்பதனூடாகக் குகன் கூறிய வார்த்தைகள் அனைத்தும் இராமபிரான் மீது வைத்திருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பினாலேயே கூறப்பட்டவை என்பதை உணர்த்தி நிற்கின்றன. இரும்பு - உவமானம்; வேடுவர் மேனிகள் - உவமேயம்; வலிமையும் கருமையும் - பொதுத் தன்மை; அரி ஏறு - உவமானம்; பரதன் - உவமேயம்; வீரமும் வலிமையும் - பொதுத் தன்மை. சொல்லி, வந்து, கண்டு என்பன வினையெச்சங்கள். அன், அன்ன ஆகியன உவமை உருபுகள். உயர்தோள் - வினைத் தொகை.

அருஞ்சொற்பொருள்:

ஏனோர் - ஏனைய வேடர்கள்; வன் - வலிய; பணை - பருத்த; அரி ஏறு - ஆண் சிங்கம்; முன்பன் - பரதன்; மொழிந்தனன் - கூறினன், சொல்லினன்; மூரிய - வலிய, தொன்மையான.

சுமந்திரன் குகனைப்பற்றிப் பரதனுக்கு விளக்குதல்

25 கங்கை இரு கரை உடையான்;
கணக்கு இறந்த நாவாயான்;
உங்கள் குலத் தனி நாதற்கு
உயிர்த் துணைவன்; உயர் தோளான்;
வெங்கரியின் ஏறு அனையான்;
வில் பிடித்த வேலையினான்;
கொங்கு அலரும் நறுந் தண் தார்க்
குகன் என்னும் குறி உடையான்.

கொண்டு கூட்டும் முறை:

கங்கை இரு கரை உடையான்; கணக்கு இறந்த நாவாயான்; உங்கள் குலத் தனி நாதற்கு உயிர்த் துணைவன்; உயர் தோளான்; வெங்கரியின் ஏறு அனையான்; வில் பிடித்த வேலையினான்; கொங்கு அலரும் நறுந் தண் தார் குகன் என்னும் குறி உடையான்.

சொற்பொருள்:

கங்கை - கங்கை ஆற்றின்; இரு கரை உடையான் - இரண்டு கரைப் பகுதிகளிலும் உடைய நிலங்களைத் தனக்குச் சொந்தமாக உடையவன்; கணக்கு இறந்த - அளவில்லாத; நாவாயான் - படகுகளை உடையவன்; உங்கள் குலத் தனி நாதற்கு - உங்கள் சூரிய வம்சத்தில் திருவவதாரம் செய்த ஒப்பற்ற தலைவனாகிய இராமனுக்கு; உயிர்த் துணைவன் - உயிர் போன்ற நண்பன்; உயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோளான் - உயர்ந்த தோள்களை உடையவன்; வெங்கரியின் ஏறு அனையான் - (மதங்கொண்ட) கொடிய ஆண் யானையை ஒத்தவன்; வில் பிடித்த வேலையினான் - வில்லைக் கையிலேந்திய சேனைக் கடலை (வேட்டுவ வீரர்களாகிய) உடையவன்; மகரந்தங்கள் சிந்த அலரும் நறுந் தண்தார் - மகரந்தங்கள் சிந்த இதழ்கள் மலர்ந்த வாசனை மிக்க மலர்களாலான குளிர்ந்த மாலையை அணிந்துள்ள; குகன் என்னும் குறி உடையான் - குகன் என்னும் பெயரை உடையவன் (அடுத்த பாடலிலும் தொடர்கிறது).

பொழிப்பு :

கங்கையாற்றின் இரண்டு கரைப் பகுதிகளிலும் உடைய நிலங்களைத் தனக்குச் சொந்தமாக உள்ளவன்; அளவில்லாத படகுகளை உடையவன்; உங்கள் சூரிய வம்சத்தில் திருவவதாரம் செய்த ஒப்பற்ற தலைவனாகிய இராமனுக்கு உயிர் நண்பன்; உயர்ந்த தோள்களை உடையவன்; (மதங்கொண்ட) கொடிய ஆண் யானையை ஒத்தவன்; வில்லேந்திய வேட்டுவச் சேனைக் கடலை உடையவன்; மகரந்த மணிகள் சிந்த இதழ்கள் விரிந்த மலர்களாலான வாசனை மிக்க குளிர்ந்த மாலையை அணிந்துள்ள குகன் என்னும் பெயரை உடையவன்.

விளக்கம் :

இராமனைக் காணும் நோக்குடன் விரைவாகக் கங்கையைக் கடக்க நிற்கின்ற பரதனுக்கு, கங்கையின் இரு கரைகளும், அவற்றில் ஓடுகின்ற கணக்கற்ற படகுகளும் குகனுக்கே சொந்தமானவை என்பதை சுமந்திரன் முதலில் தெரியப்படுத்தியதைக் காணலாம். இராமனிடத்தே அன்பு உடையவரிடம் பரதனும் அன்பு செலுத்து வானாகையால் "தனி நாதற்கு உயிர்த் துணைவன்" என்றான் என்க. மேலும் இராமனை மீண்டும் அயோத்திக்கு அழைத்து வருவதற்கும் உதவக் கூடியவன் இந்தக் குகனே என்பதையும் இதன் மூலம் தெரியப் படுத்தினான். அடுத்து அவனது பேராற்றலும் பெருமையும் கூறி அவனை வெல்லல் கடினம் என்பதையும் உணர்த்தி விடுகிறான். இப் பாடல் மூலம் சுமந்திரனின் இராஜ தந்திரமான பேச்சையும். சிறந்த அமைச்சனுக்குரிய பண்பையும் காண முடிகிறது. குகன் "கொங் கலரும் நறுந் தண்தார் அணிந்தவன்"எனக் கூறியமையின் மூலம், இராமனின் நண்பனைச் சுமந்திரன் புகழ்ந்து கூறினான் எனக் கருதுக. இராமனின் கானக நிலைமைகள் யாவற்றையும் மதியூகி யான சுமந்திரன் முன்னரே அறிந்துள்ளமையைக் குகன் பற்றிய அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றுக்கள் எடுத்துக் காட்டுகின்றன. வெங்கரியின் ஏறு - உவமானம்; குகன் - உவமேயம்; வீரமும் வலிமையும் - பொதுத் தன்மை; உயிர்த் தோழன் என்பது புஜபல பராக்கிரமம் உடையவன் எனக் கொள்க. இறந்த, பிடித்த, அலறும் என்பன பெயரெச்சச் சொற்கள். அலறும் என்பது வினைமுற்றாகவும் வரும். வெங்கரி - பண்புத் தொகை. என்னும், கு (நாதற்கு) ஆகியன இடைச் சொற்கள்.

அருஞ்சொற்பொருள்:

கணக்கு இறந்த - அளவில்லாத, கணக்கற்ற; நாவாய் - படகு; வெங்கரி - கொடிய யானை; ஏறு - ஆண்; வேலை - கடல், அலுவல்; கொங்கு - மகரந்தம்; அலரும் - மலரும்; நறு - வாசனை; தண் - குளிர்; தார் - மாலை; குறி - பெயர்.

26. கல் காணும் திண்மையான்;
கரை காணாக் காதலான்;
அற்கு ஆணி கண்டனைய
அழகு அமைந்த மேனியான்;
மல் காணும் திரு நெடுந் தோள்
மழை காணும் மணி நிறத்தாய்!
நிற் காணும் உள்ளத்தான்;
நெறி எதிர் நின்றனன் என்றான்.

கொண்டு கூட்டும் முறை:

மல் காணும் திரு நெடுந்தோள் மழை காணும் மணி நிறத்தாய்; கல் காணும் திண்மையான்; கரை காணாக் காதலான்; காணில் அல் கண்டு அனைய அழகு அமைந்த மேனியான்; நெறி எதிர் நின் காணும் உள்ளத்தான்; நின்றனன்; என்றான்.

சொற்பொருள்:

மல் காணும் திரு நெடுந்தோள் - மற் போரில் எல்லைகண்ட அழகிய நெடுந் தோள்களை உடைய; மழை காணும் மணி நிறத்தாய் - கார் மழையைக் கண்டால் போன்ற நீல மணி போலும் நிறம் வாய்ந்த திருமேனி அழகனே; கல் காணும் திண்மையான் - மலையைக் கண்டாற் போன்ற வலிமை உடையவன்; கரை காணாக் காதலான் - (இராமனிடம்) எல்லை காண முடியாத பேரன்பை உடையவன்; காணில் - அவனது வடிவத்தைப் பார்த்தால்; அல் கண்டு அனைய அழகு அமைந்த மேனியான் - இருளைக் கண்டாற் போன்ற அழகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்திய உடம்பை உடையவன்; (இத்தகைய குகன்) நெறி எதிர் - நீ செல்கின்ற வழியின் எதிரில்; நின் காணும் உள்ளத்தான் - உன்னைப் பார்க்கும் உள்ளம் உடையவனாய்; நின்றனன் என்றான் - நின்று கொண்டுள்ளான் என்று சுமந்திரன் சொன்னான்.

பொழிப்பு :

மற்போரில் எல்லை கண்ட நெடிய தோள்களை உடைய கார் மழையைக் கண்டால் போன்ற நீல மணி போலும் நிறம் வாய்ந்த திருமேனி அழகனே; மலையைக் கண்டாற் போன்ற வலிமை உடையவன்; இராமனிடம் எல்லை காண முடியாத பேரன்பினை உடையவன்; அவனது வடிவத்தைப் காணில், இருளைப் போன்ற அழகு நிறைந்த உடம்பை உடையவன்; இத்தகைய குகன் நீ செல்கின்ற வழியின் எதிரில் நின்னைக் காணும் மனம் உடையவனாய் நின்று கொண்டிருக்கிறான் என்று சுமந்திரன் கூறினான்.

விளக்கம் :

பரதனின் வருகையைத் தவறாகப் புரிந்து கொண்டு அவனுடன் போர் புரிய ஆயத்தமுடன் நிற்கும் குகனை, அவன் இராமன் மீது கொண்ட பேரன்பு காரணமாக, பரதனைக் கண்டு மகிழும் பொருட்டு எதிர்பார்த்து நிற்கிறான் எனச் சுமந்திரன் கூறினான் என்க. தென்கரையில் நிற்கும் குகனது தோற்றம், வடகரையில் சற்றுத் தள்ளி நிற்கும் பரதனுக்குத் தெளிவாகவன்றிப் பொதுவாகவே தெரிகின்றது எனக் கருதியே சுமந்திரன் கூறினான் எனக் கருதுக. மேனி நிறம், அழகு என்பவற்றால் இராமன், பரதன், குகன் ஆகிய மூவரும் ஒரே வகையினர் எனக் காண்க. குகன் மீது பரதனுக்குத் தவறான எண்ணம் வரக் கூடாது என சுமந்திரன் கருதியதை அறிய முடிகிறது. மழை - உவமானம்; பரதனின் நிறம் - உவமேயம்; கருமை - பொதுத் தன்மை; நீலமேனி - உவமானம்; பரதனின் நிறம் - உவமேயம்; நீல நிறம் - பொதுத் தன்மை; மலை - உவமானம்; குகன் - உவமேயம்; வலிமை - பொது; அல் - உவமானம்; குகன் - உவமேயம்; இருண்ட நிறம் - பொது; காணும், அமைந்த - பெயரெச்சங்கள். காணும் என்பது வினைமுற்றாகவும் வரும்.

அருஞ்சொற்பொருள் :

மல் - மார்பு; திண்மை - வலிமை; அல் - இரவு; திரு - அழகு, செல்வம், உயர்வு, திருமகள்; மணி - நீல மணி; நெறி - பாதை, வழி, மார்க்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகனைக் காணப் பரதன் கங்கையின் வடகரை அருகில் விரைதல்

27. தன் முன்னே, அவன் தன்மை,
தந்தை துணை முந்து உரைத்த
சொல் முன்னே உவக்கின்ற
துரிசு இலாத் திரு மனத்தான்,
"மன் முன்னே தழீஇக்
கொண்ட மனக்கு இனிய துணைவனேல்,
என் முன்னே அவற் காண்பென்,
யானே சென்று" என எழுந்தான்.

கொண்டு கூட்டும் முறை :

தன் முன்னே, அவன் தன்மை, தந்தை துணை முந்து உரைத்த சொல் முன்னே உவக்கின்ற துரிசு இலாத் திரு மனத்தான், மன் முன்னே தழீஇக் கொண்ட மனக்கு இனிய துணைவனேல், என் முன்னே யானே சென்று அவற் காண்பென், என எழுந்தான்.

சொற்பொருள் :

தன் முன்னே - தன் எதிரில்; அவன் தன்மை - அந்தக் குகனின் நல்லியல்புகளை; தந்தை துணை - தன் தந்தையின் நண்பனாகிய சுமந்திரன்; முந்து உரைத்த - முற்பட்டுச் சொல்லிய; சொல் முன்னே - சொல்லுக்கு முன்பாக; உவக்கின்ற - மகிழ்ச்சி அடைகின்ற; துரிசு இலாத் திருமனத்தான் - சிறிதளவும் குற்றமில்லாத நன் மனத்தை உடையவனாகிய பரதன்; மன் முன்னே தழீஇக் கொண்ட - நம் அரசனாகிய இராமன், வனம் புகும் முன்னரே தழுவிக் கொண்டுள்ள (அன்பினால்); மன்க்கு இனிய துணைவனேல் - அவன் மனத்துக்கு இனிய துணைவன் ஆனால்; என் முன்னே - என்னை அவன் வந்து பார்ப்பதற்கு முன்னமே; யானே சென்று அவற் காண்பென் - நானே முதலிற் சென்று அவனைக் காணுவேன்; என எழுந்தான் - என்று சொல்லிப் புறப்பட எழுந்தான்.

பொழிப்பு :

தன் எதிரில் அந்தக் குகனின் நல்லியல்புகளை தனது தந்தையாகிய தசரதனின் நண்பனாகிய சுமந்திரன் முற்பட்டுச் சொல்லிய சொல்லின் முன்பாக, மகிழ்ச்சி அடைகின்ற சிறிதளவும் குற்றமில்லாத தூய மனத்தை உடையவனாகிய பரதன், நம் அரச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னாகிய இராமன், வனம் புகு முன்னரே (அன்பினால்) தழுவிக் கொண்ட அவன் மனத்துக்கு இனிய துணைவன் ஆனால், என்னை அவன் வந்து பார்ப்பதற்கு முன்னமே நானே சென்று அவனைப் பார்ப்பேன் என்று சொல்லிப் புறப்படுவதற்காக எழுந்தான்.

விளக்கம்:

இராமன் மீது பேரன்புடைய குகனைத் தாமே முதலிற் சென்று காணப் பரதன் விரும்பினான் என்பதும், இராமன் அன்பினால் குகனைத் தழுவிக் கொண்டான் என்ற சொல் செவியில் விழு முன்னரே பரதனின் உள்ளம் உவகையால் நிறைந்தது என்பதும் இங்கு உணர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் பரதன், இராமன் மீது வைத்துள்ள அன்பு வெளிக்காட்டப்பட்டுள்ளது. "என் முன்னே" என்பதை, எனக்கு முன்னவன் (அண்ணன்) எனக் கொண்டு, அண்ணனைத் தம்பியே சென்று பார்க்க வேண்டும் என்பதைப் பரதன் கூறினான் எனவும் கொள்ள முடியும். இராமனின் அன்புக்குரிய வனான குகனை பின்னோரிடத்தில் "இன் துணைவன் இராக வனுக்கு; இலக்குவற்கும், இளையவற்கும் எனக்கும் மூத்தான்" (கங்கை காண் படலம்/குகப் படலம் 67 ஆம் பாடல்) எனக் கோசலைக்குப் பரதன் அறிமுகம் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது. தசரதனின் நண்பன் சுமந்திரன் என்பதும், அதனால் சுமந்திரனைத் தந்தை போலவே பரதன் நினைத்தான் என்க. பரதன் "துரிசு இலாத் திருமனத்தான்" என்பதால் சிறிதளவும் குற்றமில்லாத நல்ல மனமுடையான் என்பதை அறிக. முன்னே, முந்து, தழீஇ, சென்று - வினையெச்சங்கள். உரைத்த, உவக்கின்ற, கொண்ட, இனிய, பெயரெச்சங்கள். தழீஇ - உயிரளபெடை; என, என், ஏ ஆகியவை இடைச் சொற்கள்.

அருஞ்சொற்பொருள்:

தன்மை - இயல்பு; முந்து - முற்பட்டு; உவக்கின்ற - மகிழ்கின்ற; துரிசு - தூசி (சிறிதளவு); திரு - அழகிய, தூய; மன் - அரசன்; தழீஇ - தழுவி; அவற் காண்பென் - அவனைக் காண்பேன்.

பரதன் நிலை கண்டு, குகன் திடுக்கிடுதல்

28. **என்று எழுந்த தம்பியொடும்,**
எழுகின்ற காதலொடும்,
குன்று எழுந்து சென்றது எனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர் கங்கைக் கரை குறுகி
நின்றவனை நோக்கினான், திரு மேனி
நிலை உணர்ந்தான்,
துன்று கரு நறுங் குஞ்சி எயினர் கோன்;
துணணென்றான்.

கொண்டு கூட்டும் முறை :

என்று எழுந்த தம்பியொடும், எழுகின்ற காதலொடும், குன்று எழுந்து சென்றது என குளிர் கங்கைக் கரை குறுகி நின்ற வனை,துன்று கரு நறுங் குஞ்சி எயினர் கோன் நோக்கினான், திரு மேனி நிலை உணர்ந்தான்; துண்ணென்றான்.

சொற்பொருள் :

என்று - இவ்வாறு சொல்லி; எழுந்த தம்பியொடும் - தன்னுடன் புறப்பட்ட சத்துருக்கனொடும்; எழுகின்ற காதலொடும் - (குகனைப் பார்க்கப் போகிறோம் என்று) உள்ளத்திலே மேன்மேலும் உண்டாகின்ற பேரன்பினோடும்; குன்று எழுந்து சென்றது என - ஒரு மலையானது புறப்பட்டுச் சென்றது போன்று; குளிர் கங்கைக் கரை குறுகி - குளிர்ச்சி மிகுந்த கங்கையாற்றின் வடகரையை அணுகி; நின்றவனை - நின்ற பரதனை; துன்று கரு நறுங் குஞ்சி எயினர் கோன் - நெருங்கிய கருமையான மணம் வீசும் தலை முடியினை உடைய வேடர் தலைவனாகிய குகன்; நோக்கினான் - கண்ணால் பார்த்தான்; திருமேனி நிலை - பரதனின் வாடிச் சோர்ந்துள்ள திருமேனியின் நிலையை; உணர்ந்தான் - தன் அனுபவத்தால் உணர்ந்து கொண் டான்; துண் என்றான் - திடுக்குற்றான்.

பொழிப்பு :

இவ்வாறு சொல்லி, தன்னுடன் புறப்பட்ட சத்துருக்கனோடும் (குகனைப் பார்க்கப் போகிறோம் என்று) உள்ளத்திலே மேன்மேலும் உண்டாகின்ற பேரன்பினோடும், ஒரு மலை புறப்பட்டுச் சென்றது போல, குளிர்ச்சி மிகுந்த கங்கையின் வடகரையை அணுகி நின்ற பரதனை, நெருங்கிய கருமையான மணம் வீசும் தலை முடியினை உடைய வேடர் தலைவனான குகன் கங்கையின் தென்கரையிலே நின்று கண்ணால் பார்த்தான். வாடிச் சோர்ந்துள்ள பரதனின் திருமேனி நிலையைத் தன் அனுபவத்தால் உணர்ந்து திடுக்குற்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் :

பரதனைப் பற்றித் தான் எண்ணியதற்கும், தற்போதைய அவனது நிலைக்கும் மாறுபாடு கண்டு துணுக்குற்றான் குகன் என்க. இராமனுக்கு இலக்குமணன் போல, பரதனுக்குச் சத்துருக்கன் ஆதலால் "எழுந்த தம்பி" எனப்பட்டது. பரதனின் கட்டளைப்படி செயற்படும் தம்பி அவன் எனலாம். தன் அண்ணனின் பேரன்புக் குரியவன் குகன் என அறிந்ததும், அவனைக் காணும் ஆவலும், அவன்மீது பேரன்பும் பரதனுக்கு உண்டாயிற்று எனக் கருதுக. குன்று – உவமானம்; பரதன் – உவமேயம்; வலிமை மிக்க தோற்றம் – பொதுத் தன்மை; "நின்றவன்" வினையாலணையும் பெயர்; ஐ உருபு பெற்று வந்துள்ளது. ஓடும், என், ஐ, ஆன் ஆகியவை இடைச் சொற்கள். எழுந்து, குறுகி – வினையெச்சங்கள். கருநறுங் குறிஞ்சி – பண்புத் தொகை.

அருஞ்சொற்பொருள் :

காதல் – அன்பு; குன்று – மலை; குறுகி – அணுகி, நெருங்கி; துன்று – நெருங்கிய; குஞ்சி – தலைமுடி; எயினர் – வேடர்; கோன் – தலைவன்; துணு – ஒலிக் குறிப்புச் சொல்; துண்ணென்றான் – திடுக்குற்றான்.

29. **வற்கலையின் உடையானை,**
மாசு அடைந்த மெய்யானை,
நற் கலை இல் மதி என்ன
நகை இழந்த முகத்தானை;
கல் கனியக் கனிகின்ற துயரானைக்
கண்ணுற்றான்;
வில் கையினின்று இடை வீழ,
விம்முற்று, நின்று ஒழிந்தான்.

கொண்டு கூட்டும் முறை :

வற்கலையின் உடையானை, மாசு அடைந்த மெய்யானை, நற்கலை இல் மதி என்ன நகை இழந்த முகத்தானை, கல் கனிய கனிகின்ற துயரானை, கண்ணுற்றான்; கையினின்று வில் இடை வீழ, விம்முற்று, நின்று ஒழிந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொருள்:

வற்கலையின் உடையானை - மரவுரியாலான ஆடையினை உடுத்துள்ள; மாசு அடைந்த மெய்யானை - புழுதி படிந்த உடம்பை யுடைய; நற் கலை இல் மதி என்ன - நல்ல கலைகள் இல்லாத (ஒளியற்ற) சந்திரன் போல; நகை இழந்த முகத்தானை - ஒளி இழந்த முகத்தை உடைய; கல் கனிய கனிகின்ற துயரானை - கல்லும், கரைந்து உருகும்படி குழைந்துருகும் துன்பத்தை உடைய பரதனை; கண்ணுற்றான் - (குகன்) தன் கண்ணால் நோக்கிப் பார்த்து; கையினின்று வில் இடை வீழ - தன் கையிலிருந்த வில்லானது தானாகவே சோர்ந்து நிலத்தின் கீழ் விழும்படி; விம்முற்று - துன்பத்தால் கலக்கமுற்று; நின்று ஒழிந்தான் - ஒரு செயலுமற்று நின்று கொண்டிருந்தான்.

பொழிப்பு:

மரவுரியாலான ஆடையினை உடுத்துள்ள, புழுதி படிந்த உடம்பையுடைய, நல்ல கலைகள் இல்லாத (ஒளியற்ற) சந்திரன் போல ஒளி இழந்த முகத்தை உடைய, கல்லும் கரைந்து உருகும்படி குழைந்துருகும் துன்பத்தை உடைய, பரதனைத் (குகன்) தன் கண் ணால் நோக்கிப் பார்த்து, தன் கையிலிருந்த வில்லானது தானாகவே சோர்ந்து நிலத்தின் கீழ் விழும்படி துன்பத்தால் கலக்கமுற்று ஒரு செயலுமற்று நின்று கொண்டிருந்தான்.

விளக்கம்:

பரதனின் தோற்றம் (திருமேனி நிலை) எவ்வாறிருந்தது என்பதை இப் பாடல் விளக்குகிறது. இராமன் காடேகிய துயரத்தைக் காட்டுவதாக அவனது நிலை காணப்பட்டது. இப்படிப் பட்டவனைத் தவறாக நினைத்து விட்டோமென்ற தன்னிரக்கம் உண்டாகிக் கையறுநிலையைக் குகனுக்கு ஏற்படுத்தி விட்டது. ஆதலால்தான் "நின்று ஒழிந்தான்" எனப்பட்டது. செயலற்று நின்று கொண்டிருந் தான் என்பதாகும். சந்திரனுக்குரிய முப்பத்திரண்டு கலைகளால் ஒளி கூடும். ஒளியிழந்த பரதனின் முகத்தைக் கலைகளில்லாத சந்திர னுக்கு உவமிக்கப்பட்டுள்ளது. எப்போதும் குகனை விட்டு நீங்காத வீர வில்லும், கைசோர்ந்து விழுந்தது எனக் கூறியதால், குகனின் துன்ப நிலை உணர்த்தப்பட்டுள்ளது. ஐ உருபுகள் இடைச்சொற்கள் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றும், என்ன ஆகியனவும் அவ்வாறே. அடைந்த, இழந்த, கனிகின்ற என்பன பெயரெச்சங்கள். கனிய, கையினின்று, முகத்தானை, விம்முற்று, நின்று, வீழ ஆகியன வினையெச்சங்கள். "கல் கனியக் கனிகின்ற துயரான்" என்பதில் பரதனின் அளவிறந்த துயரம் வெளிக் காட்டப்பட்டுள்ளது.

அருஞ்சொற்பொருள் :

வன்கலை - மரவுரி ஆடை; மாசு - குற்றம், புழுதி; மெய் - உடம்பு, உண்மை; நற்கலை - (சந்திரனின்) நல்ல கலை; மதி - சந்திரன், அறிவு; நகை - புன் சிரிப்பு; கனிய - உருக; விம்முற்று - கலக்கமுற்று; ஒழிந்தான் - செயலற்று நின்றான்;

30. **நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான்;**
அயல் நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான்; தவ வேடம்
தலைநின்றான்;
துன்பம் ஒரு முடிவு இல்லை;
திசை நோக்கித் தொழுகின்றான்;
எம்பெருமான் பின் பிறந்தார்
இழைப்பரோ பிழைப்பு? என்றான்

கொண்டு கூட்டும் முறை :

நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான்; அயல் நின்றான், தம்பியையும் ஒக்கின்றான்; தவ வேடம் தலைநின்றான்; துன்பம் ஒரு முடிவு இல்லை; திசை நோக்கித் தொழுகின்றான்; எம்பெருமான் பின் பிறந்தார் பிழைப்பு இழைப்பரோ? என்றான்.

சொற்பொருள் :

நம்பியும் - ஆடவரிற் சிறந்த இப் பரதனும்; என் நாயகனை - என் தலைவனாகிய இராமனை; ஒக்கின்றான் - ஒத்திருக்கிறான்; அயல் நின்றான் - அருகில் இருக்கின்றவன் (சத்துருக்கன்); தம்பியையும் ஒக்கின்றான் - இராமனின் உடன் பிரியாத் தம்பி இலக்குவனை ஒத்திருக்கின்றான்; தவ வேடம் தலைநின்றான் - (இப் பரதன்) தவத்துக்குரிய வேடத்தை மேற்கொண்டுள்ளான்; துன்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முடிவு இல்லை - இவன் படுகின்ற துன்பத்திற்கோ ஒரு அளவே இல்லை; திசை நோக்கித் தொழுகின்றான் - இராமன் சென்ற தென் திசையைப் பார்த்து அவ்வப்போது வணங்குகின்றான் (இவ்வாறு இவன் துயர் விளங்குதலால்); எம்பெருமான் - எம் கடவுளாகிய இராமனின்; பின் பிறந்தார் - தம்பிகள்; பிழைப்பு இழைப்பரோ? - தவறு செய்வார்களோ?; என்றான் - என்று நினைத்தான்.

பொழிப்பு :

ஆடவரிற் சிறந்த இப் பரதனும் என் தலைவனாகிய இராமனை ஒத்திருக்கிறான். அருகில் இருக்கின்ற சத்துருக்கனும் இலக்குவனை ஒத்திருக்கின்றான். இப் பரதன் தவவேடம் மேற் கொண்டுள்ளான். இவனது துன்பத்திற்கு ஓர் அளவே இல்லை. இராமன் சென்ற தென் திசையைப் நோக்கி அடிக்கடி வணங்குகின்றான். (இவ்வாறு இவன் துயர் விளங்குதலால்) எமது இராமனாகிய கடவுளுக்குத் தம்பிமார்கள் தவறு செய்வார்களோ? என நினைத்தான்.

விளக்கம் :

பரதனும் சத்துருக்கனும் அவர்கள் தரித்துள்ள தவ வேடமும் இராம இலக்குவர்களை ஒத்தது எனக் கூறப்படுகிறது. இராமனைப் பிரிந்த பரதனின் துயரம், இராமன் சென்ற திசை நோக்கி அடிக்கடி வணங்குதல் மூலம் வெளிப்படுகிறது. தனது பேரன்புக்குரிய இராமனின் தம்பியர் தவறு இழைப்பரோ? எனக் கேட்டுக் குகன் தன் தவறான கருத்துக்கு மனம் வருந்துகிறான். குகனின் பரதன் மீதான சந்தேகம் தீர்ந்த பாடலிதுவாகும். இராமனின் தம்பியர் தவறு செய்யார் என்ற மனவுறுதி குகனுக்குக் கிட்டுகிறது. உம், ஐ, ஓ ஆகியன இடைச் சொற்கள். "இழைப்பரோ" என்பதில் "ஓ" காரம் வினாப்பொருளில் வந்தது. "இழைக்கார்" என்ற கருத்தை உணர்த்தியுள்ளது. நோக்கி - வினையெச்சம்;

அருஞ்சொற்பொருள் :

நம்பி - ஆண்களில் சிறந்தவன்; தலைநின்றான் - மேற்கொண்டான்; பிழைப்பு - தவறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகன் நாவாயில் தனியே கங்கையின் வடகரை வந்து சேர்தல்

31. **உண்டு இடுக்கண் ஒன்று**
உடையான், உலையாத அன்பு உடையான்,
கொண்ட தவ வேடமே கொண்டிருந்தான்
குறிப்பு எல்லாம்
கண்டு, உணர்ந்து, பெயர்கின்றேன்;
காமின்கள் நெறி என்னா,
தண் துறை, ஓர் நாவாயில், ஒரு
தனியே தான் வந்தான்.

கொண்டு கூட்டும் முறை :

உண்டு இடுக்கண் ஒன்று உடையான், உலையாத அன்பு உடையான், கொண்ட தவவேடமே கொண்டிருந்தான் குறிப்பு எல்லாம் கண்டு, உணர்ந்து, பெயர்கின்றேன்; நெறி காமின்கள் என்னா, தண் துறை, தான் ஓர் நாவாயில், ஒரு தனியே வந்தான்.

சொற்பொருள் :

உண்டு இடுக்கண் ஒன்று உடையான் - புதிதாக உண்டான துன்பமொன்றை உடையவனும்; உலையாத அன்பு உடையான் - இராமனிடம் சிறிதும் தளர்ச்சியில்லாப் பேரன்பு உடையவனும்; கொண்ட தவவேடமே - இராமன் கொண்டிருந்த தவ வேடத்தையே; கொண்டிருந்தான் - தானும் கொண்டிருப்பவனும் ஆகிய இப் பரதனின்; குறிப்பு எல்லாம் - மனக்கருத்து எல்லாம்; கண்டு - கண்டு நேரில் பார்த்தறிந்து; உணர்ந்து - அதனை என் அனுபவத்தால் உணர்ந்து; பெயர்கின்றேன் - திரும்பி வருகின்றேன்; நெறி காமின்கள் என்னா - (அதுவரை) வழியைப் பார்த்திருங்கள் என்று சொல்லி; தண் துறை - குளிர்ந்த நீர்த் துறையில்(கங்கையின்); தான் ஓர் நாவாயில் ஒரு தனியே வந்தான் - (குகன்) தான் ஒரு படகில் வேறெவரும் இன்றித் தனியே வந்து தென் கரையைச் சேர்ந்தான்.

பொழிப்பு :

புதிதாய் உண்டான துன்பமொன்றை உடையவனும், இராம னிடம் சிறிதும் குன்றாத பேரன்புடையவனும், இராமன் கொண்டிருந்த தவ வேடத்தையே தானும் கொண்டிருப்பவனும் ஆகிய இப் பரதனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனக்கருத்தெல்லாம் நேரில் நான் பார்த்து உணர்ந்து திரும்பி வருகின்றேன்; அதுவரை வழியைப் பார்த்திருங்கள் என்று சொல்லிக் குளிர்ந்த நீர்த்துறையில் தான் மட்டும் ஒரு படகில் வேறெவரும் இன்றித் தனியே வந்து தென் கரையைச் சேர்ந்தான் குகன்.

விளக்கம்:

தோற்றத்தால் விளங்காத செய்திகளை நெருக்கத்தால் விளங்க முடியுமெனக் குகன் கூறிப் பரதனிருக்குமிடம் செல்வதை இப்பாடல் காட்டுகிறது. இங்கு "அறிந்து" எனக் கூறாது "உணர்ந்து" எனக் கூறியது சிறப்பானதாகும். அதில் பூரணமான புரிந்துணர்வு வெளிப்படும். இதுவரை பரதனை மாறாகக் கருதிப் பேசிய குகன், இப்போது தான் தனியாகவே பரதனைச் சந்திக்கச் செல்வது அவனது கருத்தியல் மாற்றமெனலாம். பரதன் மீதான பெரு நம்பிக்கையுமாகும். வேறு எக்காரணத்தாலும் நிலை குலையாத அன்பே "உலையாத அன்பு" ஆகும். கண்டு, உணர்ந்து ஆகியன வினையெச்சங்கள். உண்டு என்பது பெயரெச்சமாய் வந்துள்ள போதும் வினை முற்றாகவும் வரக்கூடிய சொல். மேலும் "உண்டு வந்தான்", "உண்டு மகிழ்ந்தான்" என்பவற்றுள் முதல் வினையாகவும் வர வல்லது. "என்னா" – இடைச் சொல்.

அருஞ்சொற்பொருள்:

இடுக்கண் – துன்பம்; உலையாத – தளர்வில்லாத; குறிப்பு – நோக்கம்; பெயர்கின்றேன் – திரும்பி வருகின்றேன்; காமின்கள் – பாதுகாத்திடுங்கள்; நெறி – வழி; தண் – குளிர்ச்சி; நாவாய் – படகு.

குகனும் பரதனும் ஒருவரை ஒருவர் வணங்கித் தழுவுதல்

32. வந்து எதிரே தொழுதானை
வணங்கினான்; முலர் இருந்த
அந்தணனும் தனை வணங்கும் அவனும்,
அவன் அடி வீழ்ந்தான்;
தந்தையினும் களிகூர்ந்து தழுவினான்
தகவு உடையோர்
சிந்தையினும் செனனியினும் வீற்றிருக்கும்
சீர்த்தியான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு கூட்டும் முறை :

வந்து எதிரே தொழுதானை வணங்கினான். மலர் இருந்த அந்தணனும் தனை வணங்கும் அவனும், அவன் அடி வீழ்ந்தான்; தகவு உடையோர் சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான், தந்தையினும் களிகூரத் தழுவினான் .

சொற்பொருள் :

வந்து – (கங்கையின் வடகரைக்கு) வந்து; எதிரே தொழுதானை – தன்னை எதிர் நின்று கும்பிட்ட பரதனை; வணங்கினான் – (குகன்) தானும் வணங்கினான்; மலர் இருந்த அந்தணனும் – (திருமாலின் திருவுந்தியாகிய) தாமரையில் வீற்றிருக்கும் வேதியனாகிய பிரமனும்; தனை வணங்கும் அவனும் – தன்னை வணங்குகின்ற சிறப்புப் பெற்ற பரதனும்; அவன் அடி வீழ்ந்தான் –அந்தக் குகனின் திருவடிகளை வீழ்ந்து வணங்கினான்; தகவு உடையோர் சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான் – நடுவு நிலைமையிற் சிறந்த மேலோர்கள் மனத்திலும், தலையிலும் ஏற்றிப் போற்றப்படும் புகழ் நலமுடைய உத்தம குகனும்; தந்தையினும் களிகூர – பெற்ற தந்தையிலும் பார்க்க மகிழ்ச்சி மிக; தழுவினான் – (பரதனைத் தூக்கி) மார்போடு அணைத்துக் கொண்டான்.

பொழிப்பு :

கங்கையின் வடகரைக்கு வந்து, தன்னை எதிர் நின்று வணங்கிய பரதனைக் குகனும் வணங்கினான். திருமாலின் திருவுந்தியாகிய தாமரை மலரில் வீற்றிருக்கும் வேதியனான பிரமனும் தன்னை வணங்கும் சிறப்புப் பெற்ற பரதனும், அந்தக் குகனின் திருவடிகளில் விழுந்து வணங்கினான். (அதுகண்டு) நடுவு நிலைமையாற் சிறந்த மேலோர்கள் மனத்திலும், தலையிலும் வைத்துப் போற்றப்படுகின்ற உத்தமனாகிய குகனும், பெற்ற தந்தையிலும் பார்க்க மகிழ்ச்சி அதிகரிக்கப் பரதனை மார்போடு எடுத்து அணைத்துக் கொண்டான்.

விளக்கம் :

அளவு கடந்த அன்பின் பெருக்கைப் பரதன், குகன் ஆகிய இருவரிடமுமாக இப்பாடல் காட்டுகிறது. வணங்கினான், அடி வீழ்ந்தான், தழுவினான் ஆகிய மூன்று நிகழ்ச்சிகள் இருவரது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பையும் எடுத்துக் காட்ட இப் பாடலில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பிரமனும் வணங்கும் பெருமைக்குரியவன் பரதன். அவனே குகனின் அடி வீழ்ந்தான் எனப்படும் போதும், மேலோராற் போற்றப்படும் குகன் தன் அடி வீழ்ந்த பரதனை எடுத்து அணைத்துக் கொண்டான் எனப்படும்போதும், இராமபிரானின் பேரன்புக்குரிய இருவேறுபட்ட தம்பியர்களின் அன்பின் திறத்தைக் காணமுடிகிறது. குகனை அண்ணனாகக் கருதிப் பரதனும், பரதனை மகனாகக் கருதிக் குகனும் அன்பு காட்டியமையையும் இப்பாடல் வெளிக்காட்டுகிறது. "வந்து","களிகூர","எதிரே" என்பன வினையெச்சங்கள். , இருந்த என்பது பெயரெச்சம். தொழுதான் வினையாலணையும் பெயர். வணங்கும், வீற்றிருக்கும் என்பன இங்கு பெயரெச்சங்களாய் வந்துள்ளன. வினைமுற்றாகவும் அச்சொற்கள் வரக் கூடியவை. அவன் - பிரதிப் பெயர்.

அருஞ்சொற்பொருள்:

மலர் - தாமரை மலர்; அந்தணன் - பிரமன்; தகவு - நடு நிலைமை; சென்னி - தலை; சீர்த்தியான் - புகழுடையவன், சிறப்புடையவன்; களிகூர - மகிழ்ச்சி பொங்க;

குகன் பரதனிடம் வந்த காரணம் கேட்டல்

33. **தழுவின புளிஞர் வேந்தன்**
தாமரைச் செங்கணானை,
எழுவினும் உயர்ந்த தோளாய்!
எய்தியது என்னை? என்ன,
முழுது உலகு அளித்த தந்தை
முந்தையோர் முறையினின்றும்
வழுவினன்; அதனை நீக்க, மன்னனைக்
கொணர்வான் என்றான்.

கொண்டு கூட்டும் முறை:

தழுவின புளிஞர் வேந்தன், தாமரைச் செங்கணானை, எழுவினும் உயர்ந்த தோளாய்! எய்தியது என்னை? என்ன, உலகு முழுது அளித்த தந்தை முந்தையோர் முறையினின்றும் வழுவினன்; அதனை நீக்க, மன்னனைக் கொணர்வான் என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொருள்:

தழுவின புளிஞர் வேந்தன் - (அவ்வாறு பரதனைத் தழுவிக் கொண்ட) வேடர் தலைவனாகிய குகன்; தாமரைச் செங்கணானை - செந்தாமரை மலர் போலும் கண்களையுடைய பரதனைப் பார்த்து; எழுவினும் உயர்ந்த தோளாய் - கணைய மரத்திலும் வன்மை மிக்க உயர்ந்த தோள்களை உடையவனே!; எய்தியது என்னை என்ன - (இக் கங்கைக் கரைக் காட்டுக்கு) நீ வந்த காரணம் என்ன என்று வினாவ; உலகு முழுது அளித்த தந்தை - உலகம் முழுவதையும் ஒரே குடையின் கீழ் ஆட்சி செய்த சக்கரவர்த்தியாகிய எனது தந்தை தசரதன்; முந்தையோர் முறையினின்றும் வழுவினன் - தனது மரபின் முன்னோர்கள் காட்டிய நீதி முறையிலிருந்தும் தவறி விட்டான்; அதனை நீக்க - அந்த நீதியை நீக்கும் பொருட்டு; மன்னனைக் கொணர்வான் - முறைப்படி அடுத்து அரசாள வேண்டிய இராமனைத் திரும்ப அழைத்துக் கொண்டு செல்வதற்காக; என்றான் - வந்துள்ளேன் என்றான்.

பொழிப்பு:

(அவ்வாறு பரதனைத் தழுவிக் கொண்ட) வேடர் தலைவனாகிய குகன், செந்தாமரை மலர் போலும் கண்களையுடைய பரதனைப் பார்த்து, கணைய மரத்திலும் வன்மை மிக்க உயர்ந்த தோள்களை உடையவனே! (இக் கங்கைக் கரையின் காட்டுக்கு) நீ வந்த காரணம் என்னவென்று வினாவ, உலகம் முழுவதையும் ஒரே குடையின் கீழ் ஆட்சி செய்த சக்கரவர்த்தியாகிய எனது தந்தை, முந்தையோர் காட்டிய முறையினின்றும் தவறி விட்டான். அந்த அநீதியை நீக்கும் பொருட்டு, முறைப்படி அடுத்து அரசாள வேண்டிய இராமனைத் திரும்ப அழைத்துக் கொண்டு செல்வதற்காகவே வந்துள்ளேன் என்றான்.

விளக்கம்:

தந்தை என்ற நிலையிலிருந்து தசரதன் தவறினான் அன்றி மன்னன் என்ற நிலையில் இருந்து அன்று எனக் கூறியிருப்பது சிறப்பானது. மேலும், "அண்ணனைக் கொணர்வான்", "இராமனைக் கொணர்வான்" என்று கூறாமல் "மன்னனைக் கொணர்வான்" எனக் கூறியமை, நாடு, காடு ஆகிய எங்கு இருப்பினும் இராமனே அயோத்தியின் மன்னன் என்பதில் பரதனுக்குள்ள உறுதி தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமன் அயோத்திக்கு மீளத் திரும்பி அரசேற்றதும் முன்னோர் முறைமை சரியாகிவிடும் என்பது பரதனின் கூற்றாகும். மூத்தோர், இளையோரைத் தழுவுதலே மரபாகையால், அண்ணன் போன்ற குகனே பரதனைத் தழுவினான் என்க. தாமரை மலர் - உவமானம்; பரதனின் கண்கள் - உவமேயம்; சிவந்த நிறம் - பொதுத் தன்மை; ஐ, உம், என்ன - இடைச் சொற்கள். உயர்ந்த, அளித்த - பெயரெச்சங்கள். நீக்க - வினையெச்சம்.

அருஞ்சொற்பொருள்:

தழுவின - கட்டி அணைத்த; புளிஞர் - வேடர்; எழு - கணைய மரம்; முந்தையோர் - முன்னோர்; முறை - மரபுநெறி; வழுவினன் - தவறினன்; கொணர்வான் - அழைத்துச் செல்வான்.

பரதனைக் குகன் வணங்கிப் பாராட்டி நெகிழ்தல்

34. கேட்டனன், கிராதர் வேந்தன்
கிளர்ந்து எழும் உயிர்ப்பன் ஆகி,
மீட்டும், மண் அதனில் வீழ்ந்தான்;
விம்மினன், உவகை வீங்க;
தீட்ட அரு மேனி மைந்தன்
சேவடிக் கமலப் பூவில்
பூட்டிய கையன், பொய் இல்
உள்ளத்தன், புகலலுற்றான்:

கொண்டு கூட்டும் முறை:

கிராதர் வேந்தன் கேட்டனன், கிளர்ந்து எழும் உயிர்ப்பன் ஆகி, மீட்டும் மண் அதனில் வீழ்ந்தான்; உவகை வீங்க விம்மினன், தீட்ட அரு மேனி மைந்தன் சேவடிக் கமலப் பூவில் பூட்டிய கையன், பொய்யில் உள்ளத்தன், புகலல் உற்றான்.

சொற்பொருள்:

கிராதர் வேந்தன் - வேடர் தலைவனான குகன்; கேட்டனன் - (பரதன் சொல்லிய வார்த்தைகளைக்) கேட்டு, கிளர்ந்து எழும் உயிர்ப்பன் ஆகி - மேலெழுந்து மிகும் பெருமூச்சு உடையவனாகி; மீட்டும் - திரும்பவும்; மண் அதனில் வீழ்ந்தான் - பூமியில் விழுந்து (பரதனை) வணங்கி; உவகை வீங்க - மனமகிழ்ச்சி மேலும் பெருகிட; விம்மினன் - உடம்பு பூரித்து; தீட்ட அரு மேனி மைந்தன் - எழுதலாகாத திருமேனியை உடைய பரதனது; சேவடிக் கமலப் பூவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– திருவடிகளாகிய தாமரை மலர்களில்; பூட்டிய கையன் – இறுக அணைத்த கைகளுடன்; பொய்யில் உள்ளத்தன் – பொய்யற்ற தூய மனத்துடன்; புகலல் உற்றான் – சில வார்த்தைகள் சொல்லலானான்.

பொழிப்பு :

வேடர் தலைவனான குகன், பரதன் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டு, மேலெழுந்து மிகும் பெருமூச்சு உடையவனாகித் திரும்பவும் (முன்னர் வணங்கியதை விட) பூமியில் விழுந்து (பரதனை) வணங்கி, மனமகிழ்ச்சி மேலும் பெருகிட உடம்பு பூரித்து, எழுத முடியாத திருமேனியை உடைய பரதனின் திருவடிகளாகிய தாமரை மலர்களில் இறுக அணைத்த கைகளுடன், பொய்யற்ற தூய மனத்துடன், சில வார்த்தைகள் சொல்லலானான்.

விளக்கம் :

மீட்டும் என்பது மீண்டும் எனப் பொருள் கொள்ளும். அதாவது ஏற்கெனவே முதலில் வணங்கிய பின்னர், திரும்பவும் பரதனின் திருவடிகளில் குகன் விழுந்து வணங்கினான் என்பதாகும். ஆனால் "மீட்டு" என்பதே பொருத்தமானதென்றும், குகன் உயிர்ப்பை மீட்டுப் பின்னர் வணங்கினான் எனக் கூறுவாரும் உளர். பரதன் கூறும் வார்த்தைகளால் கிளர்ந்தெழும் உயிர்ப்பைப் பெற்ற குகன் அவ்வுயிர்ப்பை மீட்டு, இயல்பு நிலைக்குத் திரும்பினான் என்க. "சேவடி கமலப் பூவில்" என்பதில் உருவக அணி வந்துள்ளது. சேவடியாகிய தாமரை மலரில் என்பது பொருளாகும். இங்கு சேவடியும், கமலப் பூவும் ஒருமையில் கூறப்பட்டாலும் சேவடிகள், கமலப் பூக்கள் எனக் கொள்வதே இயல்பாகும். "தீட்ட அருமேனி" என்பது பரதனின் திருமேனி அழகை வார்த்தைகளால் எழுதிக் காட்டவோ, ஓவியமாகத் தீட்டிக் காட்டவோ முடியாத அளவுக்குப் பெருமை பெற்றது எனக் கொள்க. "பூட்டிய கையன்" என்பதால் பரதனின் இரண்டு திருவடிகளையும் குகன் இறுகப் பற்றிக் கொண்டான் என்பதை அறிக. "பொய் இல் உள்ளத்தன்" என்பது குற்றமற்ற தூய மனத்தினன் என்பதாகும். கிளர்ந்து, வீங்க, தீட்ட, என்பன வினையெச்சங்கள். "பூட்டிய", "பொய்இல்" ஆகியன பெயரெச்சங்கள். மீட்டும் என்பது இப்பாடலில் மீண்டும் என்ற பொருளில் வினையெச்சமாய் வந்துள்ளது. அதுவே வினை முற்றாகவும், பெயரெச்சமாகவுங் கூட வரக் கூடிய சொல்லாகும். மீட்டும் கைகள், யாழை மீட்டும் என்பன உதாரணங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருஞ்சொற்பொருள்:

கிராதர் - வேடர்; உயிர்ப்பன் - பெருமூச்சுவிட்டு; உவகை - மகிழ்ச்சி; தீட்ட - எழுத, வரைய; அரு - அரிய; பொய்யில் - தூய, பொய்யில்லாத.

35. **தாய் உரைகொண்டு தாதை உதவிய**
தரணி தன்னை,
தீவினை என்ன நீத்து,
சிந்தனை முகத்தில் தேக்கி,
போயினை என்ற போழ்து, புகழினோய்!
தன்மை கண்டால்,
ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ,
தெரியின் அம்மா!

கொண்டு கூட்டும் முறை:

புகழினோய்! தாய் உரைகொண்டு தாதை உதவிய தரணி தன்னை, தீவினை என்ன நீத்து, முகத்தில் சிந்தனை தேக்கி, போயினை என்ற போழ்து, தன்மை கண்டால், தெரியின் ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ, அம்மா!

சொற்பொருள்:

புகழினோய் - புகழ் உடையவனே!; தாய் உரைகொண்டு - தாயாகிய கைகேயியின் வார்த்தைகளைக் கொண்டு; தாதை உதவிய - (உன்) தந்தையாகிய தசரதன் அளித்த; தரணி தன்னை - கோசல நாட்டு அரசாட்சியை; தீவினை என்ன நீத்து - தீய வினை வந்து சேர்ந்தது போலக் கருதிக் கைவிட்டு; முகத்தில் சிந்தனை தேக்கி - முகத்தில் கவலை தேங்கியவனாய்; போயினை - காட்டுக்கு வந்தாய்; என்ற போழ்து - என்ற காலத்தில்; தன்மை கண்டால் - (உன்) நல்லியல்புகளை; தெரியின் - ஆராய்ந்தால்; ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ - ஆயிரம் இராமர் உளராயினும் நின் ஒருவருக்குச் சமானம் ஆவாரோ; அம்மா!

பொழிப்பு:

புகழுடையவனே! தாயாகிய கைகேயியின் வார்த்தைகளைக் கொண்டு, உன் தந்தை தசரதன் அளித்த கோசல நாட்டு அரசுரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையைத் தீயவினை வந்து சேர்ந்தது போலக் கருதிக் கைவிட்டு, முகத்தில் கவலை தேங்கியவனாய், காட்டுக்கு வந்தாய் என்ற காலத்தில், உன் நல்லியல்புகளை அறிந்து ஆராய்ந்தால் ஆயிரம், இராமர் உளராயினும் நின் ஒருவருக்குச் சமானம் ஆவாரோ அம்மா!

விளக்கம்:

பரதனது மேலான குணத்தைக் குகன் வாயிலாக வெளிப் படுத்தும் பாடலிதுவாகும். இராமன், தந்தை அளித்த அரசைத் துறந்து வந்தான். ஆனால் பரதனோ தந்தையும், தாயும் அளித்த அரசைக் கைவிட்டு வந்தான். இராமனின் பிரிவால் துயர் தோய்ந்த முகத்தினனாய் நிற்கின்றான். எனவேதான் "ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ" எனக் குகன் உரைத்தான் எனக் கருதுக. இவ்வடியினூடாக இராமனைக் குறைத்துக் கூறும் நோக்கம் குகனுக்கு இல்லை. ஆனால் பரதனை உயர்த்திக் கூறுவதே நோக்கமாய் இருந்தது எனலாம். அண்ணனுக்குரிய ஆட்சியுரிமை தம்பிக்குக் கிடைத்ததைத் தீவினை வந்து சேர்ந்தது போலப் பரதன் கருதினான் என்க. கொண்டு, நீத்து, தேக்கி, போழ்து, கண்டால், தெரியின் என்பன வினையெச்சச் சொற்களாகும். உதவிய - பெயரெச்சம். ஆவரோ என்பதில் வரும் ஏகாரம் வினாப் பொருளில் வந்து, ஆகார் என்னும் பொருளைச் சுட்டுகிறது. அம்மா என்பது வியப்பிடைச்சொல்.

அருஞ்சொற்பொருள்:

உரை - வார்த்தை; தாதை - தந்தை; தரணி - பூமி; தீவினை - தீய வினை; நீத்து - கைவிட்டு, விலக்கி; தேக்கி - தேங்கி;

36. **என் புகழ்கின்றது, ஏழை**
எயினனேன்? இரவி என்பான் -
தன் புகழ்க் கற்றை,
மற்றை ஒளிகளைத் தவிர்க்குமாபோல்,
மன் புகழ் பெருமை நுங்கள்
மரபினோர் புகழ்கள் எல்லாம்
உன் புகழ் ஆக்கிக் கொண்டாய் -
உயர் குணத்து உரவுத் தோளாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு கூட்டும் முறை :

உயர் குணத்து உரவுத் தோளாய்! ஏழை எயினனேன் என் புகழ்கின்றது? இரவி என்பான் தன் புகழ்க் கற்றை, மற்றை ஒளிகளைத் தவிர்க்குமா போல், மன் புகழ் பெருமை நுங்கள் மரபினோர் புகழ்கள் எல்லாம், உன் புகழ் ஆக்கிக் கொண்டாய்

சொற்பொருள் :

உயர்குணத்து உரவுத்தோளாய் - உயர்வான உத்தம குணங்களையும், வலிமையான தோள்களையும் உடைய பரதனே; *ஏழை எயினனேன்* - அறிவில்லாத வேடனாகிய யான்; (உன்னை) *என் புகழ்கின்றது* - எவ்வாறு புகழ முடியும்; *இரவி என்பான் தன்* - சூரியன் என்று சொல்லப்படுபவன் தன்; *புகழ்க் கற்றை* - புகழாகிய ஒளித் தொகுதியால்; *மற்றை ஒளிகளைத் தவிர்க்குமா போல்* - மற்றைய கோள்கள், உடுக்கள் ஆகியவற்றின் ஒளிகளையெல்லாம் அடக்கிக் கீழ்ப்படுத்தி மேற்சென்றுள்ளவாறு போல; *மன்புகழ் பெருமை நுங்கள் மரபினோர் புகழ்கள் எல்லாம்* - எல்லா அரசர்களாலும் பாராட்டப் பெறும் பெருமை படைத்த உங்கள் சூரியவம்சத்து முன்னைய அரசர்களது எல்லாப் புகழ்களையும்; *உன் புகழ் ஆக்கிக் கொண்டாய்* - உனது புகழுக்குள் அடங்குமாறு செய்து கொண்டாய்.

பொழிப்பு :

உயர்வான் உத்தம குணங்களையும், வலிமையான தோள் களையும் உடைய பரதனே! அறிவில்லாத வேடனாகிய யான் உன்னை எவ்வாறு புகழ முடியும்? சூரியன் தன் புகழாகிய ஒளித் தொகுதியால் மற்றைய கோள்கள், உடுக்கள் ஆகியவற்றின் ஒளி களையெல்லாம் அடக்கிக் கீழ்ப்படுத்தி மேற்செல்வது போல எல்லா அரசர்களாலும் பாராட்டப் பெறும் பெருமை படைத்த உங்கள் சூரியவம்சத்து முன்னைய அரசர்களது எல்லாப் புகழ்களையும், உனது புகழுக்குள் அடங்குமாறு செய்து கொண்டாய்.

விளக்கம் :

பரதனுக்கு முன்னால் தன்னடக்கமாக "ஏழை எயினன்" என்று குகன் கூறினான். சூரியனின் புகழாய் அமைவது ஒளிக் கற்றை. ஆதலால் அதனைப் "புகழ்க் கற்றை" எனப்பட்டது. சூரியனது ஒளிக் கற்றை - உவமானம்; பரதன் புகழ் - உவமேயம்; ஏனையவற்றைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுள் அடக்கி விஞ்சி நிற்பது - பொதுத் தன்மை (சூரிய ஒளியானது ஏனையவற்றின் ஒளிகளையும், பரதன் புகழானது ஏனைய முன் அரசர்களின் புகழ்களையும்). உயர்குணம் - பண்புத் தொகை; உரவுத் தோள் - பண்புத் தொகை; புகழ்க் கற்றை - உருவக அணி; ஏன், போல், ஓர், எல்லாம், ஆய் ஆகியன இடைச் சொற்கள்.

அருஞ்சொற்பொருள் :

எயினன் - வேடன்; இரவி - சூரியன்; கற்றை - கதிர்; மன் - அரசன்; நுங்கள் - உங்கள்; மரபினோர் - வம்சத்தவர்; உரவு - வலிமை.

குகன் பரதனிடத்துக் கொண்ட பேரன்பு

37. **என இவை அன்ன மாற்றம்**
இயைவன பலவும் கூறி
புனை கழல், புலவு வேற் கை,
புளிஞர்கோன் பொரு இல் காதல்
அனையவற்கு அமைவின் செய்தான்'
ஆர் அவற்கு அன்பு இலாதார்?
நினைவு அருங் குணம்கொடு அன்றோ,
இராமன்மேல் நிமிர்ந்த காதல்?

கொண்டு கூட்டும் முறை :

புனை கழல், புலவு வேற்கை புளிஞர்கோன் என இவை அன்ன மாற்றம் இயைவன பலவும் கூறி, பொரு இல் காதல் அனைய வற்கு அமைவின் செய்தான்; அவற்கு அன்பிலாதார் யார்? இராமன் மேல் நிமிர்ந்த காதல் நினைவு அருங் குணம்கொடு அன்றோ?

சொற்பொருள்:

புனை கழல் - அலங்கரிக்கப்பட்ட வீரக் கழலை அணிந்த; புலவு வேற்கை - புலால் மணம் வீசுகின்ற வேலினைப் பிடித்த கையினையுடைய; புளிஞர்கோன் - வேடர் தலைவனாகிய குகன்; என இவை அன்ன மாற்றம் இயைவன பலவும் கூறி - இவ்வாறு இவை போன்ற பொருத்தமான சொற்கள் பலவற்றையும் சொல்லி; பொரு இல் காதல் அனையவற்கு - இராமனிடத்தும் அதனால் தன்னிடத்தும் ஒப்பற்ற பேரன்பினை உடைய பரதனுக்கு; அமைவின் செய்தான் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்திய நல்லுபசரிப்புக்களைச் செய்தான்; அவற்கு அன்பிலா தார் யார் – அப்பரதனிடத்து அன்பு செய்யாதார் யார் உளர்?; இராமன் மேல் நிமிர்ந்த காதல் – இராமனின் மேல் சென்று உயர்ந்த அன்பு; நினைவு அருங்குணம் கொடு அன்றோ – (இராமன் சக்கரவர்த்தித் திருமகன் என்பதனால் அல்ல) நினைக்கவும் முடியாத நற்குணங் களின் இருப்பிடமாக அவன் விளங்கினான் என்பதனால் அல்லவா? (அக்குணங்கள் இராமனின் தம்பியாகிய இவனிடமும் இருத்தலால் இவன் மீதும் அன்பு நிமிர்ந்து விளங்குகிறது).

பொழிப்பு :

அலங்கரிக்கப்பட்ட வீரக் கழலை அணிந்த, புலால் மணம் வீசும் வேலினைப் பிடித்த கைகளினையுடைய், வேடர் தலை வனாகிய குகன், இவ்வாறு இவை போன்ற பொருத்தமான சொற்கள் பலவற்றையும் சொல்லி, இராமனிடத்தும் அதனால் தன்னிடத்தும் ஒப்பற்ற பேரன்பினை உடைய பரதனுக்குப் பொருந்திய நல்லுப சரிப்புக்களைத் தகுதியாகச் செய்தான். அப்பரதனிடம் அன்பு செய்யாதவர்கள் யார் உளர்? இராமன் மீது சென்று உயர்ந்து நிற்கும் பேரன்பானது (அவன் சக்கரவர்த்தித் திருமகன் என்பதனால் அன்று) நினைக்கவும் முடியாத நற்குணங்களின் உறைவிடமாக அவன் விளங்கினான் என்பதனால் அல்லவா? (அக்குணங்கள், இராமனின் தம்பியாகிய பரதனிடமும் விளங்குவதால் இவன் மீதும் எனக்கு அன்பு மேலோங்கி நிற்கிறது).

விளக்கம் :

"அமைவின் செய்தான்" என்பது பரதனின் தகுதிக்கும், குண நலத்திற்கும் அப்போதைய துயர் நிறைந்த நிலைமைக்கும் பொருத்தமான முறையில் வழுவாது உபசரித்தான் என்பதாகும். இராமனிடம் காணப்பட்ட குணங்கள் பரதனிடமும் காணப்படுவதால் இராமன் மேலுண்டான அன்பின் பெருக்கத்தைப் போலப் பரதனிடமும் குகனுக்கு அன்பு பெருகியது. எனப்பட்டது. "பொரு இல் காதல்" என்பது அளவிறந்த பேரன்பைக் குறித்தது. குகனது இயல்பு நிலையைக் கூறுகையில் புனைகழல், புலவு வேற்கை என வர்ணிக்கப் பட்டுள்ளது. "ஆர் அவற்கு அன்பு இலாதார்?"என்பதனூடாகப் பரதன் மீது எவரும் அன்பு கொள்வர் எனும் உறுதிப்பாடு விளங்குகிறது. பரதனின் நிலை அவ்வாறு உணர்த்தியுள்ளது. "அன்றோ" என்பதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ள "ஓ" காரம் தேற்றத்தை (உறுதியை) உணர்த்துகிறது. அன்ன, உம், இன், கு, ஓ ஆகியன இடைச் சொற்கள். கூறி, அமைவின் ஆகியன வினையெச்சங்கள். நிமிர்ந்த - பெயரெச்சம்; அருங்குணம் - பண்புத் தொகை; புனைகழல் - வினைத் தொகை; புலவு வேல் -பண்புத் தொகை.

அருஞ்சொற்பொருள் :

அன்ன - போல; மாற்றம் - வேறுபட்ட; இயைவன - பொருத்தமான; புனை - அலங்கரிக்கப்பட்ட, செப்பஞ் செய்யப்பட்ட; கழல் - வீரக் கழல் (வீரர்கள் காலில் அணிவது); புலவு - புலால் மணம்; பொருஇல் - ஒப்பற்ற; அமைவின் - பொருத்தமானதை; நிமிர்ந்த -மேலோங்கிய, உயர்ந்த, அதிகரித்த.

இராமன் தங்கிய இடம் எது? எனப் பரதன் குகனைக் கேட்டல்

38. **அவ் வழி அவனை நோக்கி**
அருள்தரு வாரி அன்ன
செவ் வழி உள்ளத்து அண்ணல்,
தென் திசைச் செங் கை கூப்பி,
எவ் வழி உறைந்தான் நம்முன்?
என்றலும், எயினர் வேந்தன்,
இவ் வழி, வீர! யானே காட்டுவல்;
எழுக! என்றான்.

கொண்டு கூட்டும் முறை :

அருள்தரு வாரி அன்ன செவ்வழி உள்ளத்து அண்ணல் அவ்வழி அவனை நோக்கி, தென் திசைச் செங்கை கூப்பி, நம்முன் எவ்வழி உறைந்தான்? என்றலும், எயினர் வேந்தன் வீர! இவ் வழி, யானே காட்டுவல் எழுக என்றான்.

சொற்பொருள் :

அருள்தரு வாரி அன்ன - கருணைப் பெருங்கடலை ஒத்த; செவ்வழி உள்ளத்து அண்ணல் - நேர்மையான வழியில் செல்லும் மனத்தை உடைய பரதன்; அவ்வழி - அப்போது; அவனை நோக்கி - குகனைப் பார்த்து; தென் திசைச் செங்கை கூப்பி - இராமன் சென்றுள்ள தென் திசையை நோக்கித் தன் சிவந்த கைகளைக் குவித்து வணங்கி; நம்முன் - நம்முடைய அண்ணன்; எவ்வழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறைந்தான் – எந்த இடத்தில் தங்கி இருந்தான்; என்றலும் – என்று கேட்ட உடனே; எயினர் வேந்தன் – வேடர் அரசனாகிய குகன்; வீர! – வீரனே!; இவ் வழி – இந்த இடத்தில்; யானே காட்டுவல் – நானே (அவ்விடத்தினை உனக்குக்) காண்பிப்பேன்; எழுக என்றான் – என்னுடன் புறப்படுவாயாக என்றான்.

பொழிப்பு :

கருணைப் பெருங்கடலை ஒத்த, நேர் வழியில் செல்லும் மனத்தை உடைய பரதன், அப்போது குகனைப் பார்த்து, இராமன் சென்ற தென் திசையை நோக்கித் தன் சிவந்த கைகளைக் குவித்து வணங்கி, நம்முடைய அண்ணன் எந்த இடத்தில் தங்கி இருந்தான் என்று கேட்டவுடனே வேடர் அரசனாகிய குகன், வீரனே! இந்த இடத்தில் நானே (அவ்விடத்தினை உனக்குக்) காண்பிப்பேன் என்னுடன் புறப்படுவாயாக என்றான்.

விளக்கம் :

இராமன் சென்ற திசை நோக்கிப் பரதன் வணங்குதலும், இராமன் தங்கிய இடம் எதுவெனக் குகனைக் கேட்டலும், அதற்குக் குகன் அவ்விடத்தினை நான் காட்டுவேன், புறப்படுவாயாக என்றலும் இப்பாடல் மூலம் உணர்த்தப்பட்டுள்ளது. "அவ்வழி" என்பது அவ்வேளை அல்லது அப்போது எனவும், "எவ்வழி" என்பது எந்த இடம் எனவும் பாடலில் வந்துள்ளன. அதேபோல "செவ்வழி" என்பது நேரிய வழியாகவும், "இவ்வழி" என்பது இவ்விடமாகவும் பொருள் தரும். அருள் தரும் வாரி – உவமானம்; பரதன் – உவமேயம்; கருணை காட்டல் – பொதுத் தன்மை. செங்கை என்பது பண்புத் தொகை. நோக்கி, கூப்பி – வினையெச்சங்கள்; உம்,ஏ ஆகியன இடைச் சொற்கள். யானே என்பதில் "ஏ" காரம் தேற்றப்பொருளில் வந்துள்ளது.

அருஞ்சொற்பொருள் :

வாரி – கடல்; அண்ணல் – தலைவன்; செங்கை – சிவந்த கை; உறைந்தான் – தங்கியிருந்தான்; காட்டுவல் – காட்டுவேன்.

இராமன் வைகிய இடம் கண்ட பரதன் நிலையும் நினைவும்

39. **கார் எனக் கழிது சென்றான்;**
கல்லிடைப் படுத்த புல்லின்,
வார் சிலைத் தடக் கை வள்ளல்,
வைகிய பள்ளி கண்டான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்மிசைப் பூதைத்து வீழ்ந்தான்;
பருவரற் பரவை புக்கான்
வார் மணிப் புனலால் மண்ணை
மண்ணுநீர் ஆட்டும் கண்ணான்.

கொண்டு கூட்டும் முறை :

கார் எனக் கடிது சென்றான்; வார் சிலைத் தடக்கை வள்ளல், வைகிய கல்லிடைப் படுத்த புல்லின் பள்ளி கண்டான்; பார்மிசைப் பதைத்து வீழ்ந்தான்; பருவரல் பரவை புக்கான்; வார் மணிப் புனலால் மண்ணை மண்ணுநீர் ஆட்டும் கண்ணான்.

சொற்பொருள் :

(குகன் காட்டிய இடத்துக்குப் பரதன்) கார் எனக் கடிது சென்றான் - மேகம் போல் விரைவாகச் சென்றான்; வார் சிலைத் தடக்கை வள்ளல் - கட்டமைந்த வில்லேந்திய நீண்ட கைகளையுடைய இராமன்; வைகிய - தங்கியிருந்த; கல்லிடைப் படுத்த புல்லின் பள்ளி - கற்களின் இடையே பரப்பப்பட்ட புல்லால் ஆகிய படுக்கையை; கண்டான் - பார்த்தான்; பார்மிசை - பூமியின் மேல்; பதைத்து - துடிதுடித்து; வீழ்ந்தான் - விழுந்தான்; பருவரல் பரவை புக்கான் - துன்பமாகிய கடலில் புகுந்து; வார் மணிப் புனலால் - பெருகுகின்ற முத்துமணி போன்ற கண்ணீரினால்; மண்ணை - பூமியை; மண்ணுநீர் ஆட்டும் - திருமஞ்சனத் தண்ணீரால் குளிப் பாட்டுகின்ற; கண்ணான் - கண்ணுடையவனானான்.

பொழிப்பு :

(குகன் காட்டிய இடத்துக்குப் பரதன்) மேகம் போல் விரைவாகச் சென்று, கட்டிறுக்கமான வில்லினை ஏந்திய இராமன் தங்கியிருந்த, கற்களின் இடையே பரப்பப்பட்ட புல்லால் ஆகிய படுக்கையை பார்த்துப் பூமி மேல் துடிதுடித்து வீழ்ந்து, துன்பம் என்னும் கடலில் புகுந்து, பெருகிடும் முத்துமணி போன்ற கண்ணீரினால் பூமியை திருமஞ்சன நீரினாற் குளிப்பாட்டுகின்ற கண்ணுடையவனானான்.

விளக்கம் :

பரதன், இராமன் வைகிய இடத்தைக் கண்டதும் மனதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதைபதைப்பும், அதனால் ஏற்பட்ட துன்பமும் உண்டாகக் கண்ணீரினால் அவ்விடத்தைத் திருமஞ்சன நீராட்டினான் என இப்பாடல் கூறுகிறது. பரதனின் கண்களிலிருந்து வடிந்த கண்ணீர் பூமியில் வீழ்ந்ததைக் கவிஞர் "திருமஞ்சன நீராட்டு" எனக் கவிநயத்தோடு குறிப்பிட்டுள்ளார். கார் - உவமானம்; பரதனின் செல்கை - உவமேயம்; விரைந்து செல்லல் - பொதுத் தன்மை. கடிது, பதைத்து, புனலால் - வினையெச்சங்கள்; படுத்த, வைகிய, ஆட்டும் - பெயரெச்சங்கள். "ஆட்டும்" என்பது வினை முற்றாகவும் வரக் கூடியது. இன், ஆல் என்பன இடைச் சொற்கள்.

அருஞ்சொற்பொருள்:

கார் - மேகம்; கடிது - விரைந்து; படுத்த - பரப்பப்பட்ட; வார்சிலை - கட்டமைந்த வில்; தடக்கை - நீண்ட கை, பெரிய கை; வைகிய - தங்கிய, உறைந்த; பள்ளி - படுக்கை; பார் - பூமி; மிசை - மீது, மேல்; பருவரல் - துன்பம்; பரவை - கடல்; வார்மணி - பெருகிடும் முத்துமணி; புனல் - நீர்; நீர் ஆட்டும் - நீரால் நனைக்கின்ற.

40. இயன்றது, என் பொருட்டினால்
இவ் இடர் உனக்கு என்ற போழ்தும்,
அயின்றனை, கிழங்கும் காயும்
அமுது என; அரிய புல்லில்
துயின்றனை எனவும், ஆவி துறந்திலென்;
சுடரும் காசு
குயின்று உயர் மகுடம் சூடும்செல்வமும்
கொள்வென் யானே!

கொண்டு கூட்டும் முறை:

உனக்கு இவ் இடர் என் பொருட்டினால் இயன்றது என்ற போழ்தும், கிழங்கும் காயும் அயின்றனை, அமுது என அரிய புல்லில் துயின்றனை எனவும் யான் ஆவி துறந்திலென்; சுடரும் காசு குயின்று உயர் மகுடம் சூடும் செல்வமும் கொள்வென்.

சொற்பொருள்:

உனக்கு இவ் இடர் - (இராமா!) உனக்கு இவ் வனவாசமாகிய துன்பம்; என் பொருட்டினால் இயன்றது என்ற போழ்தும் - என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக ஏற்பட்டது என அறிந்த அவ்வேளையிலும்; (பிறகு) கிழங்கும் காயும் அமுது என அயின்றனை - கிழங்கு, காய் முதலிய வற்றை அமுதுபோலக் கருதி உண்டாய்; அரிய புல்லில் துயின்றனை - உறங்குவதற்கு ஏற்றதல்லாத கடினமான புற்படுக்கையில் உறங் கினாய்; எனவும் - என்று அறிந்த இவ் வேளையிலும்; யான் ஆவி துறந்திலென் - யான் உயிர் போகப் பெற்றேனில்லை; (அத்துடன்) சூடரும் காசு குயின்று உயர் மகுடம் - ஒளிவீசும் பொன்னாற் செய்யப் பட்ட உயர்வான திருமுடியை; சூடும் செல்வமும் கொள்வென் - சூட்டிக் கொள்ளும் அரசுச்செல்வத்தையும் ஏற்றுக் கொள்வேன் போலும்.

பொழிப்பு :

இராமா! உனக்கு இவ்வனவாசமாகிய துன்பம் என் காரண மாக ஏற்பட்டது என அறிந்த அவ்வேளையிலும், பின்னர் கிழங்கு, காய் முதலியவற்றை அமுதுபோலக் கருதி உண்டாய்; உறங்குவதற்கு ஏற்றதல்லாத கடினமான புற்படுக்கையில் துயின்றாய் என்று அறிந்த இவ்வேளையிலும் யான் உயிர் போகப் பெற்றேன் இல்லை. (எனவே இம்மட்டோடு அல்லாமல்) ஒளிவிடும் பொன்னா லான உயர்வான திருமுடியைச் சூட்டிக் கொள்ளும் அரசுச் செல்வத்தையும் ஏற்றுக் கொள்வேன் போலும்.

விளக்கம் :

பரதன், தன்னைத்தானே நொந்து கூறுவதாக அமைந்த பாடலிது. தன்னால்தான் இராமனுக்கு இத்தகைய துன்பங்கள் ஏற்பட்டதாகக் கருதிப் பரதன் மனம் வருந்துகின்றான். அரண் மனையில் அமுது உண்பதை வழக்கமாகக் கொண்ட இராமன், வனத்தில் அமுது போல நினைத்துக் கிழங்கு, காய் முதலியவற்றை உண்டான்; அரண்மனையில் அம்சத்தூளிகா மஞ்சத்தில் உறங்கிய வன், வனத்தில் கற்களிடையே பரவிய கடினமான புற்படுக்கையில் உறங்கினான்; இவற்றை எண்ணிய பரதன், தனது உயிர் இதை அறிந்தும் இன்னமும் போகவில்லையே என்று ஆதங்கப்படுகிறான். அப்படியானால் திருமுடியினையும் ஒருவேளை சூட்டிக் கொள்வேன் போலும் எனத் தனது நிலையைத் தாழ்த்தி உரைக்கின்றான் என்பதை இப்பாடல் உணர்த்தியுள்ளது. "யானே" என்பதில் "ஏ"காரம் ஈற்றசை. சூடரும், சூடும், அரிய - பெயரெச்சங்கள்; குயின்று, போழ்தும் - வினையெச்சம். ஆல், என்ற, என ஆகியவை இடைச் சொற்கள். உயர் மகுடம் - வினைத் தொகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருஞ்சொற்பொருள்:

இயன்றது - நேர்ந்தது, உண்டாகியது; இடர் - துன்பம்; போழ்தும் - பொழுதும், வேளையில், சந்தர்ப்பத்தில்; அயின்றனை - உண்டாய்; அரிய - கடினமான, இயலாத; ஆவி - உயிர்; துறந்திலென் - போக்கவில்லை, சாகவில்லை; சுடரும் - ஒளிவிடும்; காசு - பொன்; குயின்று - செய்யப் பெற்று; மகுடம் - முடி.

இலக்குவன் யாது செய்தனன் எனப் பரதன் குகனை வினவுதல்

41. தூண்தர நிவந்த தோளான்
பின்னரும் சொல்லுவான்! அந்
நீண்டவன் துயின்ற சூழல்
இது எனின், நிமிர்ந்த நேயம்
பூண்டவன், தொடர்ந்து பின்னே
போந்தவன், பொழுது நீத்தது
யாண்டு? என, இனிது கேட்டான்;
எயினர்கோன் இதனைச் சொன்னான்

கொண்டு கூட்டும் முறை:

தூண்தர நிவந்த தோளான் பின்னரும் சொல்லுவான், அந் நீண்டவன் துயின்ற சூழல் இது எனின், நிமிர்ந்த நேயம் பூண்டவன், தொடர்ந்து பின்னே போந்தவன், பொழுது நீத்தது யாண்டு என, இனிது கேட்டான்; எயினர்கோன் இதனைச் சொன்னான்:

சொற்பொருள்:

தூண்தர - தூணினை ஒத்த; நிவந்த தோளான் - உயர்ந்த தோள்களையுடைய பரதன்; பின்னரும் சொல்லுவான் - மீண்டும் குகனை நோக்கிச் சொல்லுவான்; அந் நீண்டவன் துயின்ற சூழல் இது எனின் - அந்த நெடியவனாகிய இராமன் உறங்கிய இடம் இது என்றால்; நிமிர்ந்த நேயம் பூண்டவன், தொடர்ந்து பின்னே போந்தவன் - அவ் இராமனிடத்தில் மேலான அன்பு கொண்டு அவனைப் பின்தொடர்ந்து வந்தவனாகிய இலக்குமணன்; பொழுது நீத்தது - இரவுப் பொழுதைக் கழித்தது; யாண்டு - எவ்விடத்தில்; என, இனிது கேட்டான் - என்று இனிமையுடன் வினாவினான்; எயினர் கோன் - வேடர் தலைவனாகிய குகன்; இதனைச் சொன்னான் - இந்த விடையினைச் சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு :

தூணினை ஒத்த உயர்ந்த தோள்களையுடைய பரதன், மீண்டும் குகனை நோக்கிச் கூறுவான். அந்த நெடியவனாகிய இராமன் உறங்கிய இடம் இதுவென்றால், அந்த இராமனிடம் மேலான அன்புகொண்டு அவனைப் பின்னால் தொடர்ந்து வந்த இலக்குமணன் இரவுப் பொழுதைக் கழித்தது எவ்விடத்தில்? என்று இனிமையாக வினாவினான்; வேடர் அரசனாகிய குகன், இந்த விடையினைக் கூறினான்.

விளக்கம் :

"நெடியவன்" திருமாலாகையால், அவனது அவதாரமாகிய இராமனைக் கம்பர் பலவிடங்களில் இவ்வாறு கூறியுள்ளார். இப்பாடலில் "நீண்டவன்" என்றார். "நிமிர்ந்த நேயம்" என்பது மேற்செல்லும் அன்பு; உயர்ந்த அன்பு. இலக்குவணன் பற்றி வினவுகையில் பரதனுக்கு ஏற்பட்ட உள்ளத்து நெகிழ்வையே "இனிமையுடன் கேட்டான்" எனப்பட்டது. தூண் - உவமானம்; பரதனின் தோள்கள் - உவமேயம்; வலிமை - பொதுத்தன்மை. நிவந்த, துயின்ற, நிமிர்ந்த ஆகியவை பெயரெச்சச் சொற்கள். பின்னரும் தொடர்ந்து, பின்னே ஆகியவை வினையெச்சச் சொற்கள். உம், எனின், என, ஐ ஆகியன இடைச்சொற்கள்.

அருஞ்சொற்பொருள் :

தர - ஒத்த; நிவந்த - உயர்ந்த; துயின்ற - உறங்கிய; நிமிர்ந்த - மேற்சென்ற, மேலான; நேயம் - அன்பு; பூண்டவன் - கொண்டிருப்பவன், அணிந்திருப்பவன்; போந்தவன் - வந்தவன்; நீத்தது - கழித்தது; யாண்டு - எவ்விடம்.

இலக்குவன் செயல் பற்றிக் குகனது விடை

42. அல்லை ஆணிடு அமைந்த மேனி
அழகனும் அவளும் துஞ்ச,
வில்லை ஊன்றிய கையோடும்,
வெய்து உயிர்ப்போடும், வீரன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய்!
கண்கள் நீர் சொரிய, கங்குல்
எல்லை காண்பு அளவும் நின்றான்;
இமைப்பிலன் நயனம் என்றான்.

கொண்டு கூட்டும் முறை :

கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய்! அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச, வீரன் வில்லை ஊன்றிய கையோடும், வெய்து உயிர்ப்போடும், கண்கள் நீர் சொரிய, கங்குல் எல்லை காண்பளவும் நயனம் இமைப்பிலன் நின்றான் என்றான்.

சொற்பொருள் :

கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய்! - மலையினைக் கீழ்ப் படுத்திய உயர்ந்த தோள்களையுடையவனே; அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகனும் - இருளைப் பயன்படுத்தி அமைத்தால் போன்ற கரிய திருமேனியையுடைய அழகிற் சிறந்த இராமனும்; அவளும் - அந்தச் சீதாப் பிராட்டியும்; துஞ்ச - உறக்கம் கொள்ள; வீரன் - இலக்குமணன்; வில்லை ஊன்றிய கையோடும் - வில்லின் மீது வைத்த கையுடன்; வெய்து உயிர்ப்போடும் - வெப்பமான மூச்சு உடையவனாய்; கண்கள் நீர் சொரிய - தன் இரண்டு கண்களும் நீரைச் சொரிய; கங்குல் எல்லை காண்பளவும் - இரவானது தன் முடிவான விடியலைக் காணுமளவும்; நயனம் இமைப்பிலன் - கண்கள் இமை கொட்டாமல் (உறங்காமல்); நின்றான் என்றான் - நின்று கொண்டே காவல் செய்திருந்தான் என்று குகன் கூறினான்.

பொழிப்பு :

மலையினைக் கீழ்ப்படுத்திய உயர்ந்த தோள்களை உடைய வனே! இருளைப் பயன்படுத்தி அமைத்தாற் போன்ற கரிய திருமேனி யுடைய அழகிற் சிறந்த இராமனும், அந்தச் சீதாப் பிராட்டியும் உறக்கம் கொள்ள, இலக்குமணன் வில்லின் மீது வைத்த கையுடன், வெப்பமான மூச்சு உடையவனாய், தன் இரண்டு கண்களும் நீரைச் சொரிய, இரவானது தன் முடிவின் எல்லையாகிய விடியலைக் காணும் வரையும், கண்கள் இமை கொட்டாமல் (உறக்கமின்றி) நின்று கொண்டே காவல் செய்திருந்தான் என்று குகன் கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் :

"வில்லை ஊன்றிய கை" என்றது நீண்ட நேரம் நிற்பதற்கு ஊன்றுகோலாக விளங்கியமையை உணர்த்திற்று. "கண்கள் நீர் சொரிய" என்றதும், "நயனம் இமைப்பிலன்" என்றதும் இலக்குமண னின் பேரன்பையும், விழித்திருந்து காவல் காத்ததையும் வெளிக் காட்டுகிறது. "கங்குல் எல்லை காண்பளவும்" என்பதால் விடியும் வரையில் உறங்காதிருந்தான் எனப்பட்டது. கல் - உவமானம்; பரதனின் தோள்கள் - உவமேயம்; வலிமை - பொதுத் தன்மை. இருளால் அமைத்த மேனி - உவமானம்; இராமனின் மேனி - உவமேயம்; கருமை நிறம் - பொதுத் தன்மை. அமைந்த, ஊன்றிய, உயர்ந்த - பெயரெச்சங்கள். துஞ்ச, வெய்து, சொரிய, அளவும், உயிர்ப்போடும் - வினையெச்சங்கள்.

அருஞ்சொற்பொருள் :

அல்லை - இருளை; ஆண்டு - பயன்படுத்தி, உபயோகித்து; மேனி - தேகம்; துஞ்ச - உறங்க, நித்திரை செய்ய; வெய்து - வெப்பமான; உயிர்ப்பு - மூச்சு; கல்லை - மலையை; சொரிய - இறைக்க, வழிய விட; எல்லை - (விடியல்) முடிவு; காண்பு - காணும்; இமைப்பிலன் - உறங்காதவன்; நயனம் - கண்.

பரதன் தன்னை நொந்து உரைத்தல்

43. என்பத்தைக் கேட்ட மைந்தன்,
இராமனுக்கு இளையோர் என்று
முன்பு ஒத்த தோற்றத்தேமில்,
யான் என்றும் முடிவு இலாத
துன்பத்துக்கு ஏது ஆனேன்; அவன்,
அது துடைக்க நின்றான்;
அன்பத்துக்கு எல்லை உண்டோ? அழகிது,
என் அடிமை! என்றான்

கொண்டு கூட்டும் முறை :

என்பத்தைக் கேட்ட மைந்தன், இராமனுக்கு இளையோர் என்று முன்பு ஒத்த தோற்றத் தேமில், யான் என்றும் முடிவு இலாத துன்பத்துக்கு ஏது ஆனேன்; அவன், அது துடைக்க நின்றான்; அன்பத்துக்கு எல்லை உண்டோ? என் அடிமை அழகிது என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொருள் :

என்பத்தை – என்று (குகன்) சொன்னதை; கேட்ட மைந்தன் – கேட்ட பரதன்; இராமனுக்கு இளையார் என்று – இராமனுக்குத் தம்பிகள் எள்று சொல்லும்படி; முன்பு ஒத்த தோற்றத் தேமில் – பிறக்கும் பொழுது ஒத்த தன்மையான பிறப்பைப் பெற்ற எங்கள் இருவரிலும்; யான் என்றும் முடிவு இலாத துன்பத்துக்கு ஏது ஆனேன் – எக்காலத்தும் கரை காண முடியாத பெருந்துன்பத்தை இராமன் அடைவதற்குக் காரணமாக ஆகிவிட்டேன்; அவன் – அந்த இலக்கு மணன்; அது – அத்துன்பத்தை; துடைக்க நின்றான் – இராமனிட மிருந்து நீக்குவதற்குத் துணையாக இராமனுடன் நின்றான்; அன்பத் துக்கு எல்லை உண்டோ? – அன்புக்கு ஒரு வரையறை உண்டோ?; என் அடிமை அழகிது – நான், இராமனிடம் இராமனுக்குச் செய்யும் அடிமைத் திறம் நன்றாயிருந்தது; என்றான் – என்று கூறினான்.

பொழிப்பு :

என்று (குகன்) சொன்னதை கேட்ட பரதன், இராமனுக்குத் தம்பிகள் என்று சொல்லும்படி, பிறக்கும் போது ஒத்த தன்மையான பிறப்பைப் பெற்ற எங்கள் இருவரிலும், பரதனாகிய யான் எக்காலத் தும் கரைகாண முடியாத பெருந்துன்பத்தை இராமன் அடைவதற்குக் காரணமாக ஆகிவிட்டேன். அந்த இலக்குமணன் அத்துன்பத்தை இராமனிடமிருந்து நீக்குவதற்குத் இராமனுக்குத் துணையாக நின்றான். அன்புக்கு ஒரு வரையறை உண்டோ? நான், இராமனுக் குச் செய்யும் அடிமைத் திறம் நன்றாயிருந்தது என்றான்.

விளக்கம் :

பரதன், தன்னையே தான் நொந்து கழிவிரக்கப்படும் பாடலிது வாகும். தானும் இலக்குமணனும் இராமனுக்குத் தம்பியராயிருந்தும், இராமனின் துன்பத்துக்குக் காரணமாக நான் ஆகிவிட்டேன்; அத்துன்பத்தைத் துடைக்கும் வண்ணம் இராமனுடன் துணை நின்றவன் இலக்குமணன் எனப் பரதன் வேதனைப் படுவதைக் காண முடிகிறது. மேலும் "என் அடிமை அழகிது" என்னுந் தொடரில் இராமனுக்குத் தான் செய்யும் அடிமைத் திறம் நன்றாயிருந்தது எனத் தன்னையே தாழ்த்திக் கொள்கிறான். இத் தொடரில் புகழ்வது போல இகழும் இயல்பைக் காணமுடிகிறது."என்பது" என்பத்து என விரித்தல் விகாரம் பெற்று வந்துள்ளது. அதேபோல் அன்பத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதில் "அன்பு" என்பது அத்துச் சாரியை பெற்று வந்துள்ளது. (பிறப்பால் இருவரும் ஒத்தவராயினும் இலக்குமணன் அன்பால் உயர்ந்தான்; நான் அடிமையில் தாழ்ந்தேன் எனப் பரதன் கூறுவது நோக்கத்தக்கது) ஐ, கு, என்று, ஓ ஆகியன இடைச் சொற்கள். "உண்டோ" என்பதில் ஓகாரம் வினைப் பொருளில் வந்தது. கேட்ட, ஒத்த, இலாத - பெயரெச்சங்கள்; துடைக்க, ஏது - வினை யெச்சங்கள்.

அருஞ்சொற்பொருள் :

என்பத்தை - என்பதை; தோற்றத்தேமில் - பிறப்பினால் ஒத்த தன்மையருள்; அன்பத்துக்கு - அன்புக்கு; அழகிது - நல்லாயிருந்தது; அடிமை - அடிமைத் திறம், குற்றேவல் செய்தல்.

குறிப்புகள்

1. பரதனின் சேனை பற்றிய வர்ணனை :

i. ஒப்பற்ற சேனை.

ii. கங்கை நீரிலும் பார்க்க யானைகளின் மதநீர்ப் பெருக்கு அதிகமாயிருத்தலால், வண்டுக் கூட்டங்களைத் தவிர்ந்த எவரும் குளிக்கவும், குடிக்கவும் முடியாத யானைகளின் பெருக்கமுடையது.

iii. குதிரைகளின் காலடி கிளப்பும் தூசிப்படை, அமரருலகஞ் சென்று தேவர்களின் முடிகளில் பரவியமையை அனுமானிக் கத்தக்க குதிரைப் படைப் பெருக்க முடையது.

iv. நீரைப் பருகியவை, நீந்திக் கொண்டிருந்தவை, மண்ணில் விழுந்து புரண்டவை எனக் குதிரைக் கூட்டங்கள் விளங்கும் பெருக்கமுடையது.

v. நீண்ட கடலினைச் சென்று கலக்கும் கங்கையாற்றின் வெண்ணிற நீரானது, பரத சேனையாகிய கடல் உண்டு விட்டமையால், கடலில் சேர முடியாத அளவு சேனைப் பெருக்கமுடையது.

vi. பரத சேனைகளின் எண்ணிக்கை, பெரியோர்கள் கணிப்பின் படி அறுபதினாயிரம் அக்குரோணிகள் ஆகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பரதன், சேனையுடன் வருதல் கண்ட குகனின் சீற்றம் பற்றிய வர்ணனை :

i. பரதனின் சேனையானது கங்கையின் வடகரையை அண்மிக்கக் கண்ட குகன், இச்சேனை கரிய மேனியையுடைய அண்ணல் இராமனுடன் போர் செய்யவே வந்துள்ளது என நினைத்து கோபம் மேலிட்டவனாய் கங்கையின் தென்கரைக்கு வந்து நின்றான்.

ii. இயமனை ஒத்த ஆற்றலுடைய குகன், வலிய கூட்டமாயுள்ள பரத சேனையை நோக்கி, இகழ்ச்சிச் சிரிப்புடன், கண்கள் நெருப்புக் கக்க, மூக்கினிலிருந்து கோபத்தால் புகைவர, கோபத்தால் வளைந்த புருவமாகிய போர் வில்லை உடையவனானான்.

iii. இறுதிக் காலத்தில் உயிர் கவரும் இயமனே, ஐந்து இலட்சம் வடிவமெடுத்தாற் போன்ற வலிய உடம்பினையும் பெரும் எண்ணிக்கையிலான சேனையையும் உடைய வில் வித்தையில் சிறந்த குகன், இடைக்கச்சில் கட்டப்பெற்ற உடை வாளினையும், பற்களால் கடித்த உதட்டினையும், கடுமையான சொற்களையும், கோபக் கனல் பொங்கும் கண்களையும், அடிக்கப்படும் உடுக்கையையும், ஒலிக்கப் படும் ஊதுகொம்பினையும், போர் குறித்து மகிழ்ச்சியால் புடைத்து நிற்கும் தோள்களையும் உடையவனாய் விளங்கினான்.

iv. பரதனின் படைகளெல்லாம் எலிகள்; நான் அவற்றைத் தின்றொழிக்கும் பாம்பாவேன் என்று வீரம் பேசி, உலகில் வாழும் வலிமையுடைய புலிகள் அனைத்தும் ஓரிடம் சேர்ந்தன போன்று தனது ஆரவாரம் மிக்க சேனையைப் போர் புரிய மகிழ்ச்சியுடன் அழைத்தான்.

v. ஒன்று சேர்ந்து வந்த வேட்டுவச் சேனையானது, ஊழிக் கால மேகமும், கரிய கடலும் ஒலித்து எழுந்தது போல, ஆரவாரத்துடன் சூழ்ந்து வரக் கங்கையின் தென் கரையில் தோன்றினான்.

vi. தன் முன் நிற்கும் சேனை வீரரை நோக்கி, என் உயிர் போலும் இராமன் ஆட்சியைப் பெறாமல் தடுப்பதற்காக வடகரையில் வந்து நிற்கும் பரதனின் சேனைகளை அழித்துச் சுவர்க்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்ப எண்ணியுள்ளேன். அதற்கு நீங்கள் உடன் படுவீர்களாக என்றான்.

vii. போர்ப் பறைகளை அடியுங்கள்; பரத சேனை தென் கரை வருவதற்கான வழிகளை அடையுங்கள்; தோணிகள் ஒன்றையும் ஓட்டாதீர்கள்; வேறு வழிகளில் தாமாக வருபவர் களைப் பிடியுங்கள்; அவர்களை இறக்கும்படி அழியுங்கள் என்றான்.

3. குகன் தனது சேனைகளுக்குக் கூறிய வீர வார்த்தைகள் :

i. என் அரிய உயிர்த் தோழனாகிய இராமன் அரசைப் பெற முடியாதபடி, வஞ்சனையால் ஆட்சியைக் கவர்ந்த பரதனும் வந்துள்ளாரோ? நெருப்பை உமிழும் என் சிவந்த அம்புகள், இவர்கள் மேற் செல்லாது விடுமோ? இவர்கள் இராமன் இருக்குமிடம் போய் விட்டால், குகன் நாய் போன்று கீழானவன் என உலகோர் என்னைப் பற்றிச் சொல்லாமல் இருப்பார்களா?

ii. ஆழமான பெரிய அலைகளையுடைய கங்கையாற்றைக் கடந்து இவர்கள் போய் விடுவார்களோ? யானைகளை யுடைய பெருஞ் சேனை கண்டு புற முதுகிடும் வில் வீரன் நானோ? "தோழமை உடையோம்" என இராம பிரான் கூறிய வார்த்தையை மறந்து, இவர்களைப் போக விட்டால் நான் இறந்து விடலாமே. அப்படியும் செய்யவில்லையென என்னை உலகோர் பழிக்காது விடுவார்களா?

iii. இராமனை அண்ணனென்றும், வீரனான இலக்குவன் துணையுள்ளான் என்றும் நினையாமலும், என்னை மதியா மலும் போர் செய்ய வந்தவர்கள், எனது எல்லை கடந்து சென்றால் அல்லவா போர் செய்ய முடியும்? வேடர்கள் விடும் அம்பு அரசர்கள் மார்பினைத் துளைக்காதோ?

iv. பூவுலக அரசர்கள் பாவம், பழி, நண்பர், பகைவர், விளையும் குற்றம், ஏனையவை யாவற்றையும் நினையாரோ? அது கிடக்கட்டும், இராமன் மீது படையெடுப்பது தம்முடைய அரிய உயிர்களையும், சேனைகளையும் எனக்குத் தப்பிக் கொண்டு சென்றால் அல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

v. எனது நண்பனாகிய இராமன் அருந் தவஞ் செய்ய, இப் பரதன் உலகை ஆள்வானோ? என்னுடைய உயிர் தேவாமிர்தமோ எனக்கு? இராமனுக்காகப் பரதனை எதிர்த்துப் புகழ் பெற்ற பின் உயிர் துறக்க மாட்டேனோ? இராம இலக்குவரோடு உடன் செல்லாமல் இங்கு தங்கியதும் நல்லதாயிற்று. இராமனுக்குச் செய்ய வேண்டிய கடமையை இன்றே செய்து முடிப்பேன்.

vi. யானைகள், குதிரைகள் நெருங்கிய இவர்களது பெரும் படையின் ஆற்றல், கங்கையாற்றைக் கடந்து போனபின் அல்லவா தெரியும். "மனக் கலக்கம் அடையாமல் வேடர் களே" இவர்கள் செல்ல ஓடம் விடுவதை நிறுத்துங்கள். இவர்களைத் தடுக்க முடியாவிட்டால், போரிட்டு நமது உயிர் அழிவது நன்றல்லவா?

vii. நமது வீரர்களது ஒரு வேளைப் போருக்கும் பரத சேனை பற்றாது. தேவர்களே படையெடுத்து வந்தாலும் என் வில்லாகிய கரிய மேகம் அம்பு மழை சொரிய எதிரிச் சேனைகள் கையிற் பிடித்த படைக் கலங்களோடும், யானை களோடும் அழியுமாறு அவற்றை நிலை குலைக்காமல் விடுவேனோ?

viii. கொடைகள் செய்து நின்ற திருக்கரங்களையுடைய இராமன், பெரிய மரவுரி அணியக் கொடுத்த கைகேயி மகனான பரதன் சேனையை, எனது அம்பினால் கொன்று குவித்துப் பிணங்களின் திரட்சியை, இக்கங்கை நீரிழுத்துச் சென்று கடலில் சேர்த்துக் கடலினைத் தூர்த்து விடாதோ?

ix. அசையும் கொடிகளையுடைய சேனைகளைக் கொன்றொ ழித்து, இராம இலக்குவர் இப் பூமியை ஆளும்படி மீட்டுக் கொடுத்தனர் வேடர்கள் என்ற புகழினை அடையுங்கள். தன்து ஆட்சிக்குரிய நாட்டைக் கொடுத்து விட்டு வந்த இராமனை, இக் காட்டையும் ஆட்சி செய்யக் கொடுக்க மனமற்ற பரதன் படைகொண்டு வந்ததைக் காணுங்கள்.

x. தன் தம்பியாகிய பரதனை எதிர்த்தால் இராமன் கோபிப்பான் எனக் கருதாமல், போர் முனை சென்று பரத சேனையுடன் போரிட்டால், ஏழு கடலளவு சேனை என்றாலும் பசு முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின்னக் கிடந்த புல் எனும்படி அனைத்தும் அழிந்து போகாதோ?

4. சுமந்திரன் குகனைப் பற்றிப் பரதனுக்குக் கூறியவை :

i. கங்கையாற்றின் இருகரைகளிலுமுள்ள நிலங்களைத் தனக்குச் சொந்தமாக்கியுள்ளவன்.

ii. அளவில்லாத படகுகளை உடையவன்.

iii. உங்கள் சூரிய குலத்தில் திருவவதாரஞ் செய்த இராமனுக்கு உற்ற நண்பன்.

iv. உயர்ந்த தோள்களை உடையவன்.

v. கொடிய ஆண் யானையை ஒத்தவன்.

vi. கையில் வில்லேந்திய வேட்டுவ சேனையை உடையவன்.

vii. மணம் வீசும் மாலையை அணிந்தவன்.

viii. குகன் என்னும் பெயரினை உடையவன்.

ix. மற்போரில் எல்லை கண்ட அழகிய நீண்ட தோள்களை உடையவன்.

x. கார் மழையைக் கண்டாற் போன்ற நீல மணி போலும் திருமேனியுடையவன்.

xi. மலை போன்ற வலிமையுடையவன்.

xii. இராமன் மேல் எல்லையில்லாத பேரன்புடையவன்.

xiii. இருள் போலும் அழகிய உடம்பை உடையவன்.

xiv. நீ செல்லும் வழியில் உன்னைப் பார்க்கும் மனமுடைய வனாய் நிற்கின்றான்.

5. பரதன் நிலை கண்ட குகன் செயற்பாடுகள் :

i. தனது தம்பியாகிய சத்துருக்கனோடு கங்கையின் வட கரையில் குகனைக் காணும் விருப்போடு நின்ற பரதனை தென்கரையில் நின்ற படி குகன் நோக்கினான். வாடிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோர்ந்துள்ள பரதனின் நிலையை அனுபவத்தால் உணர்ந்து திடுக்குற்றான்.

ii. மரவுரி ஆடையுடுத்த, புழுதி படிந்த உடம்பையுடைய, நல்ல கலைகளில்லாத சந்திரன் போல ஒளியிழந்த முகத்தை யுடைய, கல்லும் கரைந்து விடும் துன்பத்தை உடைய, பரதனைக் கண்ணாற் பார்த்துத் தன் கையிலிருந்த வில்லும் தானாகவே சோர்ந்து விழ, துன்பத்தால் கலக்க முற்று செயலற்று நின்றான்.

iii. இப்பரதனும், என் தலைவனாகிய இராமனை ஒத்திருக் கிறான். பரதனுடன் வந்த தம்பியும் இலக்குவனைப் போல இருக்கின்றான். இந்தப் பரதன் அடைகின்ற துன்பத்திற்கு அளவே இல்லை. இராமன் சென்ற தென் திசை நோக்கி அவ்வப்போது வணங்குகின்றான். எமது கடவுளாகிய இராமனின் தம்பியர்கள் தவறு செய்வார்களோ? நான் தவறாக நினைத்து விட்டேன் என நினைத்தான்.

iv. இப்பரதனின் மனக் கருத்தினை நேரிற் பார்த்தறிந்து, அதனை என் அனுபவத்தால் உணர்ந்து திரும்பி வருகின்றேன் எனத் தன் வீரர்கட்குச் சொல்லி விட்டுத் தான் மட்டும் தனியாக ஒரு நாவாயில் பரதனிருக்கும் வடகரைக்கு வந்தான் குகன்.

v. வடகரையை அடைந்ததும், தன் எதிரில் நின்று வணங்கிய பரதனைத் தானும் வணங்கினான். இருவரும் ஒருவரை ஒருவர் அணைத்து மகிழ்ந்தனர்.

6. குகனுக்கும் பரதனுக்கும் இடையிலான உரையாடல்கள்:

i. பரதனைத் தழுவிக் கொண்ட குகன், பரதனை நோக்கி இக் காட்டிற்கு நீர் வந்த காரணம் என்னவென்று கேட்க அதற்குப் பரதன், என் தந்தையாகிய தசரதன், தன் முன்னோர் பேணிய மரபு முறையினின்றும் தவறி விட்டான்; அந்த அநீதியை நீக்கும் பொருட்டு முறைப்படி அரசாள, இராமனை அழைத் துச் செல்வதற்காக வந்தேன் என்றான்.

ii. இது கேட்ட குகன், மீண்டும் பூமியில் விழுந்து பரதனை வணங்கித் தனது பொய்யற்ற குற்றமில்லாத மனத்தால் சில வார்த்தைகள் சொல்லலுற்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. புகழுடையவனே! தாயின் வார்த்தை கேட்டுத் தந்தை தந்த அரசாட்சியைத் தீவினை வந்து சேர்ந்தது போலக் கருதிக் கைவிட்டு, முகத்தில் கவலையுடன் காட்டுக்கு வந்த உன் நல்லியல்புகளை அறியுமிடத்து ஆயிரம் இராமர் உளராயினும் நின் ஒருவருக்குச் சமமாக ஆவரோ? என்றான்.

iv. உத்தம குணங்களையுடைய பரதனே! அறிவில்லாத வேடனாகிய யான் எவ்வாறு உன்னைப் புகழ முடியும்? சூரியனுடைய ஒளித் தொகுதி ஏனையகோள்கள், உடுக்கள் ஆகியவற்றின் ஒளிகளையெல்லாம் கீழ்ப்படுத்தி, மேலாக விளங்குவது போல, உன் புகழ் ஆகிய ஒளித் தொகுதியால், சூரிய வம்சத்தரசர்கள் எல்லாரதும் எல்லாப் புகழ்களையும் உனது புகழுக்குள் அடக்கிக் கொண்டாய் என்றான்.

v. பரதனுக்கேற்ற நல்லுபசரிப்புக்களை வழங்கிய குகனைப் பரதன் நோக்கி, நம்முடைய அண்ணன் எந்த இடத்தில் தங்கியிருந்தான்? எனக் கேட்டலும், நானே அவ்விடத்தைக் காட்டுவேன்; என்னுடன் புறப்படுவாயாக எனக் குகன் கூறிப் பரதனுடன் விரைவாகச் சென்றான். இராமன் தங்கிய கற்களின் இடையே பரப்பப்பெற்ற புல்லாலாகிய படுக்கையைப் பார்த்தவுடனே பரதன் நிலத்தில் வீழ்ந்தான். துன்பக் கடலில் துடிதுடித்துக் கண்ணீர் மல்க, அக் கண்ணீரால் நிலத்தைக் குளிப்பாட்டினான்.

vi. என் பொருட்டால் இத் துன்பம் உனக்கு ஏற்பட்டது. இதை அறிந்தும் வனத்தில் காய், கனி, கிழங்கு, முதலானவற்றை அமுதமெக் கருதி உண்டாய். உறங்குவதற்கு அரியதான புற் படுக்கையில் உறங்கினாய். இதையறிந்தும் என் உயிர் போகவில்லை. ஒரு வேளை பொன்னாலான முடியினைச் சூட்டிக் கொள்ளும் அரச செல்வத்தையும் ஏற்றுக் கொள் வேன் போலும் என இராமனை நினைத்துப் பரதன் வேதனைப்பட்டான்.

vii. பின்னரும் பரதன் குகனைப் பார்த்து, இந் நெடியவனாகிய இராமன் உறங்கிய இடம் இது என்றால், இராமன் மேற் பேரன்பு கொண்ட இலக்குவன் இரவைக் கழித்தது எவ்விடத்தில் என்று கேட்டான். அதற்குக் குகன், இருளால் அமைத்ததை ஒத்த உருவத்தை உடைய இராமனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராட்டியும் உறங்க, இலக்குவன் வில்லின்மேல் வைத்த கையுடன், தன்னிரு கண்களும் நீரைச் சொரிய, விடியுமளவும் இமை கொட்டாமல் நின்று கொண்டே காவல் செய்தான் எனக் கூறினான்.

viii. குகன் கூறியதைக் கேட்ட பரதன், இராமனுக்குத் தம்பியர் களாகிப் பிறந்தவர்களில் ஒத்த தன்மையான எங்களிருவரில் பரதனாகிய யான், எக் காலத்திலும் கரை காண முடியாத துன்பத்தை இராமன் அடைவதற்குக் காரணமாய் ஆகி விட்டேன். இலக்குவனோ அத் துன்பத்தைத் துடைக்க இராமனுக்குத் துணையாய் நின்றான். அன்புக்கும் எல்லை உளதோ? நான் இராமனுக்குச் செய்யும் அடிமைத் திறம் நன்றாயிருந்தது (இழிவாக) எனத் தன்னையே நொந்து கூறினான்.

7. கம்பனின் கவித்துவச் சிறப்புகள்:

I. கலிவிருத்தம், கலித்துறை, அறுசீர் ஆசிரிய விருத்தம் ஆகிய பாவினங்களால் பாடல்களைப் புனைந்துள்ளமை.

ii. பொருணயம், கலைநயம், ஓசை நயம், உணர்ச்சி நயம், மொழிநயம், அணிநயம் ஆகியவற்றால் சிறந்து விளங்கும்படி பாடல்களைப் படைத்தமை.

iii. நாடகப் பாங்குடனும், உரையாடற் பண்புடனும் பாடல்கள் விளங்குகின்றமை.

iv. எதுகை, மோனை அணிப் பிரயோகத்தினாலும், உயர்வு நவிற்சி அணிக் கையாளுகையினாலும் அதிகமான பாடல்கள் இனிமை ததும்பும்படி தந்துள்ளமை.

v. பல்வேறு பாடல்களிலும் அழகொளிரும் வர்ணனைச் சிறப்புகள் காணப்படுகின்றமை.

vi. தமிழ்ப் பண்பாட்டுச் செந்நெறியினின்றும் பிசகாது பாடல் களை வடிவமைத்தமை.

உ+ம்: "காவிரி நாடன்ன கழனி நாடு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. அணிச் சிறப்புகள் :

i. "காவிரி நாடன்ன கழனி நாடு" (உவமை அணி)

ii. பரதனின் சேனை பற்றிய பாடல்களில் உயர்வு நவிற்சி அணி பயன்படுத்தப்பட்டுள்ளது. (2-5 வரையுள்ள பாடல்கள்)

iii. "நீர் சுமந்த மேகத்தை ஒப்புடை அண்ணல்" (உவமை அணி)

iv. "கூற்றின் ஆற்றலான்" (உவமை அணி)

v. "காலன் தான் ஐ ஐந்நூறாயிரம் உருவம் ஆயின மெய்யுறு தானையான்" (உவமை அணி)

vi. "எலியெலாம் இப்படை; அரவம் யான்" (உருவக அணி)

vii. "கடையுகம் தனில் அசனி மாமழை கருங்கடல் கிளர்ந்தென" (உவமை அணி).

viii. "மொய்புலி அன்னான்" (உவமை அணி)

ix. "சிலை மா மேகம்" (உருவக அணி)

x. "ஆ முனையின் சிறு கூழ் என" (உவமை அணி)

xi. "இரும்பு அன மேனியர்" (உவமை அணி)

xii. "வெங்கரியின் ஏறு அனையான்" (உவமை அணி)

xiii. "கல் காணும் திண்மையான்", "மழை காணும் மணி நிறத்தாய்", "அல் கண்டு அனைய அழகு அமைந்த மேனி" (உவமை அணிகள்)

xiv. "நற்கலை இல் மதி என்ன நகை இழந்த முகத்தானை" (உவமை அணி)

xv. "தாமரைச் செங்கணானை" (உவமை அணி)

xvi. "சேவடி கமலப் பூவில்" (உருவக அணி)

xvii. "இரவி என்பான் தன் புகழ்க் கற்றை, மற்றை ஒளிகளைத் தவிர்க்குமாபோல் மன்புகழ் பெருமை நுங்கள் மரபினோர் புகழ்கள் எல்லாம் உன் புகழ் ஆக்கிக் கொண்டாய்" (உவமை அணி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. தேம்பாவணி

தமிழிலுள்ள கிறிஸ்தவ இலக்கியங்களில் தலைசிறந்தது தேம்பாவணியாகும். இந்நூல் இத்தாலிய நாட்டில் வெனிஸ் மாநிலத்திலுள்ள ஒரு சிற்றூரில் 1680.11.08 இல் பிறந்து, தமது 30 ஆவது வயதில் சமயப் பணிக்காக தென்னிந்தியாவின் தமிழ் நாட்டுக்கு 1710 இல் வந்து, மதுரையில் இருந்து தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் கத்தோலிக்க சமயப் பணியோடு, அருந்தமிழ்ப் பணியு மாற்றிய கொன்ஸ்தாந்தியஸ் பெஸ்கி [Constantius Beschi] என இயற்பெயர் கொண்ட வீரமாமுனிவரால் இயற்றப்பட்ட பெருங்காப்பியமாகும். இயேசு பெருமானின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பரின் வரலாற்றைத் தேம்பாவணி சித்திரிக்கின்றது. சீவகசிந்தாமணியைப்போல் ஒரு காப்பியத்தைப் படைக்க வேண்டுமென்ற ஆவலினால் உந்தப்பட்டே வீரமாமுனிவர் இந்நூலினைப் படைத்தார். இக்காப்பியத்தில் கம்பராமாயணத்தின் கவியின்பமும், திருக்குறளின் அறக்கருத்துகளும் காணக்கிடைக்கின்றன. இந்நூலினைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றும்போது கேட்டு மகிழ்ந்த புலவர்கள், காப்பிய ஆசிரியருக்கு "வீரமாமுனிவர்" என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தனர். இயேசு சபைக்குருவான இவர் இத்தாலியம், கிரேக்கம், இலத்தீன், எபிரேயம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் சிறந்த தேர்ச்சியுடையவர். தமிழின் எழுத்துச் சீர்திருத்தத்தின் முன்னோடி வீரமாமுனிவரேயாவர். தொன்னூல் விளக்கம், சதுரகராதி (தமிழின் முதல் அகராதி), தமிழ் - இத்தாலிய அகராதி, வாமன்கதை, அவிவேகபூரணகுருகதை (பரமார்த்தகுரு கதை), திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை, கருணாம்பரப்பதிகம், அடைக்கல நாயகி வெண்கலிப்பா, தமிழ்ச்செய்யுள் தொகை முதலான பல நூல்களை இயற்றித் தமிழ்மொழிக்கு அணி செய்துள்ளார். இவை தவிர வேதியர் ஒழுக்கம், வேதவிளக்கம், திருச்சபை போதகம், போதம் மறுத்தல், லூத்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனத்தியல்பு முதலான நூல்கள் மூலம் சமயப் பணியையும் ஆற்றியுள்ளார்.

தேன்+பா+அணி எனக் கொண்டு, தேன்போன்ற இனிமை யான பாக்களினால் அழகு செய்யப்பட்ட காப்பியத்துக்குத் **தேம்பாவணி** எனப் பெயர் சூட்டினார் வீரமாமுனிவர். அத்துடன் தேம்பா+அணி எனக்கருதி வாடாத மாலை எனப்பொருள் கொள்ளவும் முடியும். மூன்று காண்டங்களையும், முப்பத்தாறு படலங்களையும், 3615 விருத்தப்பாக்களையும் கொண்டது இந் நூலாகும். பாயிரத்தை அடுத்து, நாட்டுப்படலம் முதல் மகனேர்ந்த படலம் வரை முதலாவது காண்டமும் (1225 பாடல்கள்), பைதிரம் நீங்குபடலம் முதல் சோடு தோர்வைப் படலம் வரை இரண்டாவது காண்டமும் (969 பாடல்கள்), குழவிகள் வதைப் படலம் முதல் முடிசூட்டுபடலம் வரை மூன்றாவது காண்டமும் (1421 பாடல்கள்) அமைந்துள்ளன. ஒவ்வொரு காண்டமும் தலா பன்னிரு படலங்களைக் கொண்டுள்ளது. யேசுநாதரின் பிறப்பு, வளர்ப்புடன் கிறிஸ்தவசமயப் பெருமைகளும் இதில் கூறப்பட்டுள்ளன. தமிழ்மரபுக்குரிய பண்புகளோடு, தமிழிலில்லாத சில புதுவகை அணிகளும் கையாளப்பட்டதுடன், மேனாட்டுப் புலவர்களான தாந்தே, தாசோ, ஹோமர்,வர்ஜில் போன்றோரின் கருத்துகளும் இடம்பெற்றுள்ளன. சற்றுக் கடினமான மொழி நடையையுடைய காப்பியமென இதனைக் கருதுவோரும் உளர். வடமொழிச் சொற்களும் இந்நூலில் அதிகம் இடம்பெற்றுள்ள போதிலும், தமிழிலக்கிய மரபை மீறாமல், காப்பியப் பண்புகளுக்கு அமைவாகத் தீந்தமிழ்ச் சுவை சொட்டத் தந்துள்ளார் வீரமாமுனிவர்.

சொல்லழகு, பொருளழகு, சந்த இன்பம், அணிச் சிறப்பு ஆகியன அமைந்த காப்பியம் இதுவாகும். 105 வரலாற்றுப் பகுதிகளைக்கூறுவதாக அமைந்துள்ளது. இக்காப்பியத்தில் சூசையப்பர் "வளன்" எனக்குறிப்பிடப்படுவதுடன், அவரது வரலாற்றைக் கூறும் நூலில் இயேசுகிறிஸ்து, மரியன்னை ஆகியோரது வரலாறும் இணைக்கப்பட்டுள்ளது. 1665ஆம் ஆண்டில் ஆகிர்தமரியாள் என்னும் கன்னியாஸ்திரி ஸ்பானிய மொழியில் எழுதிய "The city of god" எனும் நூலை இக் காலப் பண்புகளுக்கு அமைவாகத் தீந்தமிழ்ச் சுவை சொட்டத் தந்துள்ளார் வீரமாமுனிவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சிப் படலம்

தேம்பாவணி காப்பியத்தின், முதற் காண்டத்தில் 11 ஆவது படலமாகக் "காட்சிப் படலம்" விளங்குகிறது. "நாட்டுப் படலம்" முதல் "மகன் நேர்ந்த படலம்" வரை பன்னிரு படலங்கள் முதற் காண்டத்தில் உள. இதில் பத்தாவதான "மகவருள் படலத்தை" யடுத்து "காட்சிப் படலம்" காணப்படுகிறது. இப் படலம், மொத்தமாக 123 பாடல்களைக் கொண்டபோதிலும் பாடப் பரப்புக்குரியதான முதல் 34 பாடல்களும் இங்கு தரப்பட்டுள்ளன. மனிதனாக இம் மண்ணில் அவதரித்த இயேசு பிரான், எளிய வாழ்க்கை வாழ்ந்த இடையர்களுக்கும், பற்று அற்று வாழ்ந்த மூவேந்தர்களுக்கும் திருக் குழந்தை வடிவிலே தோன்றிக் காட்சி கொடுத்த செய்தியைக் கூறும் பகுதி இதுவாகும். வானவர், இறைவனை வணங்க இடையர்களை அழைத்தல், இடையர்கள் இறைவனை வணங்குதல், உள்ளமுருகி இறைவனைப் போற்றுதல், இறைவனின் தாயையும் தந்தையையும் வாழ்த்துதல், காணிக்கையை அளித்தல், இடையர்களின் மகிழ்ச்சி, இடையர் வீடு திரும்புதல், திருக்குழந்தையை வாழ்த்துதல், இடையர்கள் அனுதினமும் குகைக்கு வருதல், இடையர்கள் அடைந்த இன்பம், சாந்தி என்ற இடைச்சி எழுப்பிய ஐய வினாக்கள், மரியாள் விடையிறுத்தல், சாந்தி தான் கேட்ட வேதவுரைகளைக் கூறல் ஆகிய விடயங்கள் பாடப் பரப்புக்குரியன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானவர் இறைவனை வணங்க இடையர்களை அழைத்தல்

1. இன்னவாயில் இன்ன தன்னை இன்னயாவையும் ஆகையில்,
பொன்ன நாடு துன்னும் உம்பர், பொன்னுருக்கொடு ஆங்குபோய்,
மின்னல் நேரும் அன்னை ஈன்ற வேத நாதனைத் தொழ,
உன்னலாத கோவர் இன்பம் உண்ண உற்று அழைத்தனர்.

கொண்டு கூட்டும் முறை :

இன்ன வாயில், இன்ன தன்மை, இன்ன யாவும் ஆகையில், பொன்ன நாடு துன்னும் உம்பர், பொன் உருக்கொடு ஆங்கு போய், கோவர் உன்னலாத, இன்பம் உண்ண மின்னல் நேரும் அன்னை ஈன்ற வேத நாதனைத் தொழ, உற்று அழைத்தனர்.

சொற்பொருள் :

இன்ன வாயில் - குகையாகிய இவ்விடத்தில்; இன்ன தன்மை - இவ்விதமாய்; இன்ன யாவும் ஆகையில் - இவையெல்லாம் நிகழ்கையில்; பொன்ன நாடு துன்னும் உம்பர் - அழகிய பொன்னுலகில் வாழும் வானவர்கள்; பொன் உருக்கொடு ஆங்கு போய் - பொன் மயமான உருவங்கொண்டு அவ்விடத்தே (ஆயர்களின் இருப்பிடம்) போய்ச் சேர்ந்து; கோவர் உன்னலாத - இடையர்கள் நினைத்தற்கரிய; இன்பம் உண்ண - இன்பம் கொள்ளுமாறு; மின்னல் நேரும் அன்னை ஈன்ற வேதநாதனைத் தொழ - மின்னலைப் போன்ற கன்னித் தாய் மரியாள் பெற்ற வேதங்களுக்குத் தலைவனாகிய திருக்குழந்தையை வணங்குவதற்கு; உற்று அழைத்தனர் - அவர்களை அணுகி அழைக்தனர்.

பொழிப்பு :

குகையாகிய இவ்விடத்தில், இவ்விதமாய் இவையெல்லாம் நிகழ்கையில், அழகிய பொன்னுலகில் வாழும் வானவர்கள் பொன் மயமான உருவங்கொண்டு அவ்விடத்தே (இடையர்களின் இருப்பிடத்துக்கு) போய்ச் சேர்ந்து, இடையர்கள் நினைத்தற்கரிய இன்பம் கொள்ளுமாறு, மின்னல் போன்ற கன்னித்தாய் மரியாள் பெற்ற வேதங்களுக்குத் தலைவனாகிய திருக்குழந்தையை வணங்குவதற்கு, அவர்களை அணுகி அழைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் :

தேவர்கள், தம்முடன் சேர்ந்து திருக்குழந்தையை வணங்க வருமாறு இடையர்களை அழைத்தமை இங்கு கூறப்பட்டுள்ளது. வானுலகம் அழகிய பொன் மயமானதாகையால் "பொன்ன நாடு" எனப்பட்டது. வானவரும் அழகிய வடிவங் கொண்டதால் "பொன் உருக்கொடு" எனப்பட்டது. மின்னல் - உவமானம்; மரியன்னை - உவமேயம்; ஒளி வீசுதல் - பொதுத்தன்மை. "உன் அலாத இன்பம் உண்ண" என்பதனால் நினைத்தும் பார்க்க முடியாத பேரின்பத்தை அனுபவிக்க என்றாகிறது. "உற்று அழைத்தனர்" என்பது வானவரே இடையர்களை அணுகி அழைத்தமையை உணர்த்துகிறது. யாவும், போய், தொழ, உண்ண, உற்று, கொடு ஆகியவை வினையெச்சங்கள். துன்னும், நேரும், ஈன்ற ஆகியன பெயரெச்சங்கள். நேரும் என்பது வினை முற்றாகவும் வரும். ஆகையில், உம், ஐ என்பன இடைச்சொற்கள்.

அருஞ்சொற்பொருள் :

துன்னும் - வாழும்; உம்பர் - வானவர், தேவர்; பொன் உரு - அழகிய உருவம்; நேரும் - ஒக்கும்; உன் அலாத - நினைத்தற்கரிய; கோவர் - இடையர்; உற்று - அணுகி.

இடையர்கள் இறைவனை வழிபடல்

2. கொழுந்துறும் குளிர்ந்தமுல்லை கொண்டகோவர் கூட்டமும்
எழுந்துறும் குடத்தியாரும் ஏகி, ஆய காட்சியால்
விழுந்துறும் களிப்புவிஞ்சி, வேதநாதன் மேற்பதம்
தொழுந்தொறும் தொழுந்தொறும் துளங்குகின்ற தோற்றமே.

கொண்டு கூட்டும் முறை :

கொழுந்து உறும் குளிர்ந்த முல்லை கொண்ட கோவர் கூட்டமும், எழுந்து உறும் குடத்தியாரும் ஏகி, ஆய காட்சியால் களிப்பு விஞ்சி, வேதநாதன் மேல் பதம் விழுந்து உறும் தொழுந்தொறும் தொழுந்தொறும் துளங்குகின்ற தோற்றமே.

சொற்பொருள் :

கொழுந்து உறும் - இளந் தளிர்கள் தழைக்கும்; குளிர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லை கொண்ட கோவர் கூட்டமும் – குளிந்த முல்லை நிலத்தைக் குடியிருப்பாகவுடைய இடையர் கூட்டமும்; எழுந்து உறும் குடத்தியாரும் ஏகி – அவர்களோடு எழுந்து வரும் இடைச்சியருமாகச் சேர்ந்து போய்; ஆய காட்சியால் – அங்கே அவர்கள் கண்ட காட்சியால் ஆகும்; களிப்பு விஞ்சி – மகிழ்ச்சி மேலோங்கி; வேத நாதன் மேல் பதம் – வேதநாதனாகிய அத் திருக்குழந்தையின் கால்கள் மீது; விழுந்து உறும் – விழுந்து; தொழுந்தோறும் தொழுந்தோறும் – மீண்டும் மீண்டும் வணங்குகின்ற போது; துளங்குகின்ற தோற்றமே – விளங்குகின்ற தோற்றங் கண்டனர்.

பொழிப்பு :

இளந் தளிர்கள் தழைக்கும் குளிந்த முல்லை நிலத்தைக் குடியிருப்பாகவுடைய இடையர் கூட்டமும், அவர்களோடு எழுந்து வரும் இடைச்சியருமாகச் சேர்ந்து போய், அங்கே அவர்கள் கண்ட காட்சியால் ஆகும் மகிழ்ச்சி மேலோங்கி, வேதநாதனாகிய அத் திருக் குழந்தையின் கால்கள் மீது விழுந்து, மீண்டும் மீண்டும் வணங்கு கின்ற போது விளங்குகின்ற தோற்றங் கண்டனர்.

விளக்கம் :

முல்லை நிலம் அதன் இயற்கைப் பொருளாகிய முல்லை யால் இப்பெயர் பெற்றது. "கொண்டனர்" என்ற சொல் வருவித்து முடிக்கப் பெற்றது. "தொழுந்தோறும் தொழுந்தோறும்" என்பதனால் மீண்டும் மீண்டும் வணங்கினர் எனக் கருத முடிகிறது. "துளங்குகின்ற தோற்றம்" என்பதை விளங்குகின்ற, தெளிவான தோற்றம் எனக் கொள்க. உறும், குளிர்ந்த, கொண்ட, ஆய, துளங்குகின்ற – பெயரெச்சங்கள். எழுந்து, ஏகி, விழுந்து, விஞ்சி – வினையெச் சங்கள். உம், ஆல், தொறும், ஏ – இடைச் சொற்கள். தோற்றமே என்பதில் "ஏ" காரம் ஈற்றசை.

அருஞ்சொற்பொருள் :

கொழுந்து – தளிர்; உறும் – தழைக்கும்; கோவர் – இடையர், ஆயர்; குடத்தி – இடைச்சி; ஏகி – சென்று; பதம் – கால்; துளங்குகின்ற – விளங்குகின்ற, தெளிவான.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மாலைமேவு வேங்கைபற்றி வண்டுஉணாதென, மன மாலைமேவு வேங்கைபற்றி வண்டு,உணாதென மன மாலையாக, வீங்குஉவந்து, வாசம் ஆரும் முல்லை ஆர் மாலையாக, ஈங்குவந்து வாசம்ஆரும் முல்லையார்.

கொண்டு கூட்டும் முறை :

வண்டு மாலை மேவு வேங்கை பற்றி உணாது என, மன மாலை மேவு வேங்கை பற்றி வண்டு உணாது என, மன மாலை ஆக வீங்கு உவந்து வாசம் ஆரும் முல்லை ஆர், மாலை ஆக ஈங்கு வந்து வாசம் ஆரும் முல்லையார்.

சொற்பொருள் :

வண்டு மாலை மேவு வேங்கை பற்றி உணாது என - வண்டானது மாலையில் மலரும் வேங்கை மலரில் அமர்ந்து தேனை உண்ணாத தன்மை போல; மன மாலை மேவு வேங்கை பற்றி வண்டு உணாது என - மன மயக்கத்தை அடைவதற்குக் காரணமான பொன்னின் மீது பற்று வைத்துக் குற்றத்தைப் புரியாதவர்களாக; மன மாலை ஆக வீங்கு உவந்து வாசம் ஆரும் முல்லை ஆர் - மன இயல்பு கொண்டு, மிகவும் மகிழ்ந்து மணம் பொருந்திய முல்லை மலர்களால்; மாலை ஆக - கட்டப் பெற்ற மாலைகளோடு; ஈங்கு வந்து வாசம் ஆரும் முல்லையார் - இங்கு வந்து (குகைக்கு) அவ்விடையர்கள் எல்லாப் பக்கங்களிலும் நிறைந்து நின்றனர்.

பொழிப்பு :

வண்டானது மாலையில் மலரும் வேங்கை மலரில் அமர்ந்து தேனை உண்ணாத தன்மை போல, மன மயக்கத்தை அடைவதற்குக் காரணமான பொன்னின்மீது பற்று வைத்துக் குற்றத்தைப் புரியாதவர் களாக, மன இயல்பு கொண்டு, மிகவும் மகிழ்ந்து மணம் பொருந்திய முல்லை மலர்களால் கட்டப் பெற்ற மாலைகளோடு இங்கு வந்து (குகைக்கு) அவ்விடையர்கள் எல்லாப் பக்கங்களிலும் நிறைந்து நின்றனர்.

விளக்கம் :

இச் செய்யுள் மடக்கு அணி கொண்டதாகும். சொல்லணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் அடங்குவது மடக்கணி. வேங்கை மலரின் தேனை புண்ணாத வண்டு - உவமானம்; பொன்னின் மீது பற்று வைக்காத இடையர்கள் - உவமேயம்; ஆசையற்ற நிலை - பொதுவியல்பு. "ஆரும்" என்ற ஈற்றடி " செய்யும்" எனும் முற்று."ஆர்வர்" என்ற பொருளில் புதியன புகுதலாகப் பலர்பாலுக்கு வந்துள்ளது. இரண்டாம் அடி இறுதியில் வந்த "என மன" என்ற சீர், முதற்கண் விட்டிசைத்ததாகி (ன - மன) வந்த கூவிளம் எனக் கொள்க. "வேங்கை" என்பது வேங்கை மலரையும், பொன்னையும் உணர்த்தி நின்றது. அதேபோல் "முல்லையார்" என்பது முல்லைப் பூக்களையும், இடையர்களையும் குறித்து நின்றதெனலாம். இரண்டாம் அடியில் வந்த "வண்டு உணாது" என்பது "குற்றம் புரியாது" எனும் பொருளினதாகும். "மாலை" என்ற சொல் நான்கு அடிகளிலும் முறையே மாலைக்காலம், மயக்கம், மனஇயல்பு, பூமாலை ஆகிய வேறுபட்ட பொருள்களில் வந்துள்ளது. "வாசம்" என இறுதியில் வந்துள்ள சொல், எல்லாவிடங்களிலும் என்ற பொருளில் அமைந்துள்ளது. மேவு, வீங்கு, ஆரும் - பெயரெச்சங்கள்; பற்றி, உணாது, உவந்து - வினையெச்சங்கள். என, ஆக, உம், ஆர் - இடைச் சொற்கள்.

அருஞ்சொற்பொருள்:

மாலை - மாலைக்காலம், மயக்கம், மன இயல்பு, பூமாலை; வேங்கை - வேங்கைமரம், பொன்; பற்றி - அமர்ந்து, பற்றுக் கொண்டு; உணாது - உண்ணாது, குற்றம் புரியாது; வீங்கு - மிகுந்து; உவந்து - மகிழ்ந்து; வாசம் - மணம், எங்கும்; ஈங்கு - இங்கு; முல்லையார் - இடையர்கள், முல்லைப் பூக்கள்.

இறைவனைப் போற்றத் தொடங்குதல்

4.பஞ்(ச) அரங்கில் இன்பு அரங்கு பான்மையால், அடைவரத்து அஞ்சலம் குழித்து உவந்து அமிழ்ந்து, அமிழ்ந்(து) உளந்தனில் விஞ்ச இன்பம், நெஞ்சு அடங்குஇல், மேவல் ஆர்ந்ததம்முயிர் உஞ்சல் ஆடி, வாயின் வாயிலுற்று உரைத்தலுற்றனர்.

கொண்டு கூட்டும் முறை:

பஞ்ச அரங்கில் இன்ப அரங்கு பான்மையால் அடைவரத்து அம் சலம் குழித்து, உவந்து அமிழ்ந்து அமிழ்ந்து உளம் தனில் விஞ்ச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பம், நெஞ்சு அடங்கு இல் மேவல் ஆர்ந்த தம் உயிர் உஞ்சல் ஆடி, வாயின் வாயில் உற்று உரைத்தல் உற்றனர்.

சொற்பொருள் :

பஞ்ச அரங்கில் - ஐம்பொறிகளாகிய அரங்கில்; இன்ப அரங்கு பான்மையால் - இன்பம் நுகர்ந்த தன்மையால்; அடைவரத்து - அடைந்த வரமென்னும்; அம் சலம் குழித்து - அழகிய கடலைத் தோண்டி; உவந்து அமிழ்ந்து அமிழ்ந்து - அதனுள் மகிழ்ந்து மூழ்கி; உளம் தனில் விஞ்ச இன்பம் - மூழ்கிய உள்ளத்தில் பேரின்பம் பெருகப் பெற்று; நெஞ்சு அடங்கு இல் மேவல் ஆர்ந்த தம் உயிர் உஞ்சல் ஆடி - அப் பேரின்பம் நெஞ்சுக்குள் அடங்காமல் மேலோங்குமாறு தம் உயிர் ஊஞ்சலாட; வாயின் வாயில் உற்று உரைத்தல் உற்றனர் - வாயின் வழியாக அப் பேரின்பம் வெளிப்படப் பின்வருமாறு (இடையர்கள்) கூறலாயினர்.

பொழிப்பு :

ஐம்பொறிகளாகிய அரங்கில் இன்பம் நுகர்ந்த தன்மையால், அடைந்த வரமென்னும் அழகிய கடலைத் தோண்டி, அதனுள் மகிழ்ந்து மூழ்கி, மூழ்கிய உள்ளத்தில் பேரின்பம் பெருகப் பெற்று, அப் பேரின்பம் நெஞ்சுக்குள் அடங்காமல் மேலோங்குமாறு தம் உயிர் ஊஞ்சலாட, வாயின் வழியாக அப் பேரின்பம் வெளிப்படப் பின்வருமாறு (இடையர்கள்) கூறலாயினர்.

விளக்கம் :

பஞ்ச + அரங்கு = பஞ்சவரங்கு. அது பஞ்சரங்கு எனத் தொகுத்தல் விகாரமாயிற்று. ஊஞ்சல் என்பதன் குறுக்கல் விகாரம் உஞ்சல் ஆயிற்று. அடைந்த வரம் எனும் அழகிய கடலைக் குறிக்கும், "அடைவரத்து அம்சலம்" உருவக அணி. உடம்பின்கண் செயற்படும் ஐம்பொறிகள் எனக் கொள்க. "தம் உயிர் உஞ்சல் ஆடி" என்பது பேரானந்தத்தால் உயிர் தள்ளாட என்பதாகும். வாயின் வாயில் - வாய் வழியாக; உற்று உரைத்தல் - வெளிப்படுமாறு கூறுதல், குறிப்பிட்ட வற்றைக் கூறுதல்; குழித்து, அமிழ்ந்து, உவந்து, ஆடி, உரைத்தல், உற்று ஆகியன பெயரெச்சங்கள். இல், ஆல் என்பன இடைச் சொற்கள். உற்று என்பது உவமை உருபாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருஞ்சொற்பொருள் :

பஞ்ச - ஐந்து; அரங்கு - உடலாகிய இடம்; பான்மை - தன்மை, இயல்பு; அம் - அழகிய; சலம் - கடல், நீர்; அடை - அடைந்த; வரத்து - வரத்தின்; குழித்து - அகழ்ந்து, தோண்டி; உவந்து - மகிழ்ந்து; அமிழ்ந்து - மூழ்கி; விஞ்ச - பெருக, மேலோங்க, அதிகரிக்க; மேவல் - மேலோங்கி; ஆர்ந்த - அடைதல், அனுபவித்தல்; உஞ்சல் - ஊஞ்சல்; உற்று - வெளிப்பட.

உள்ளம் உருகி இறைவனைப் போற்றுதல்

5. எண்ணுளே அடங்கலின்றி ஏந்து மாட்சி பூண்டு, வான
விண்ணுளே பொலிந்து வந்த விண்ணவர்க்கு வேந்தனே!
புண்ணுளே மருந்து நீவிப்போன ஆட்டை மீட்கவோ,
மண்ணுளே எழுந்துவந்து மண்ணன் என்று உதித்தனை?

கொண்டு கூட்டும் முறை :

எண் உளே அடங்கல் இன்றி, ஏந்து மாட்சி பூண்டு, வான் விண் உளே பொலிந்து உவந்த, விண்ணவர்க்கு வேந்தனே! புண் உளே மருந்து நீவிப் போன ஆட்டை மீட்கவோ, மண் உளே எழுந்து வந்து மண்ணன் என்று உதித்தனை.

சொற்பொருள் :

எண் உளே அடங்கல் இன்றி - நம் கணிப்பிற்கும் அடங்காத முறையில்; ஏந்து மாட்சி பூண்டு - உயர்ந்த மாட்சிமை பூண்டு; வான் விண் உளே பொலிந்து உவந்த - சிறந்த விண்ணுலகில் பொலிவுடன் மகிழ்ந்து இருந்த; விண்ணவர்க்கு வேந்தனே - வானவர்க்கு அரசனே; புண் உளே மருந்து நீவிப் போன ஆட்டை மீட்கவோ - உன்னை விட்டுப் பிரிந்து காணாமற் போன ஆட்டை அதன் புண்ணுக்கு மருந்து தடவி மீட்டுக் காக்கவென்றோ; மண் உளே எழுந்து வந்து - இம் மண் உலகிற்கு அவதாரம் எடுத்து வந்து; மண்ணன் என்று உதித்தனை - மனிதனாகப் பிறந்துள்ளாய்.

பொழிப்பு :

நம் கணிப்பிற்கும் அடங்காத முறையில் உயர்ந்த மாட்சிமை பூண்டு, சிறந்த விண்ணுலகில் பொலிவுடன் மகிழ்ந்து இருந்த வானவர்க்கு அரசனே! உன்னை விட்டுப் பிரிந்துபோன ஆட்டை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் புண்ணுக்கு மருந்து தடவி மீட்டுக் காக்கவென்றோ, இம் மண் உலகிற்கு அவதாரம் எடுத்து வந்து மனிதனாகப் பிறந்துள்ளாய்.

விளக்கம் :

இறைவனை ஆயனாகவும் ஆன்மாக்களை ஆடுகளாகவும் உருவகித்தல் விவிலிய மரபாகும் (மத்தேயு 10:1- 15). பிரிந்து போன - பாவத்தால் கடவுளை விட்டு விலகிப் பேய்க்கு (சாத்தான்) அடிமையான மனிதன் என்று கொள்க. "எண் உளே அடங்கல் இன்றி" என்பது, எவ்வகையான கணிப்புகளுக்கும் அடங்காத என்று கொள்க. மண்ணன் - மனிதன்; மண்ணுலகிற்கு அவதாரம் எடுத்து வந்ததால் இப் பெயராற் குறிப்பிடப்பட்டது. பொலிந்து, நீவி, எழுந்து, வந்து, பூண்டு - வினையெச்சச் சொற்கள்; ஏந்து, போன - பெயரெச்சச் சொற்கள். இன்றி, என்று - இடைச் சொற்கள். மீட்கவோ என்பதில் ஓகாரம் ஈற்றசை; வினாப் பொருளில் வந்தது.

அருஞ்சொற்பொருள் :

மாட்சி - மகிமை, பெருமை, மாண்பு; பூண்டு - அணிந்து, தாங்கி; நீவி - தடவி; எழுந்து - அவதாரம் எடுத்து; உதித்தனை - பிறந்தனை, தோன்றினை.

6. **ஒண்தலங்கள் அண்டஉம்ப ரும்தொழும் பராபரா!**
விண்தலம் கலந்துஇலங்கு வெண்களங்கன் ஒப்பெனா,
மண்தலங்கள் எங்கும் யாரும் வாழ, ஈரவெண்குடை
கொண்டு, அலங்கல் கொண்டதேறல் கொண்ட அன்பு கொற்றவா!

கொண்டு கூட்டும் முறை :

ஒண் தலங்கள் அண்ட உம்பரும் தொழும் பராபரனே! மண் தலங்கள் எங்கும் யாரும் வாழ, விண் தலம் கலந்து இலங்கு வெண் களங்கன் ஒப்பு எனா, ஈர வெண்குடை கொண்டு அலங்கல் கொண்ட தேறல் கொண்ட அன்பு கொற்றவா.

சொற்பொருள் :

ஒண் தலங்கள் அண்ட உம்பரும் தொழும் பராபரனே - ஒளி மயமான இடங்களைக் கொண்ட வானுலகில் வாழும் வானவரும் வணங்குகின்ற பராபரனே!; மண் தலங்கள் எங்கும் யாரும் வாழ - இம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணுலகின் இடங்கள் எங்கும் யாவரும் நல்வாழ்வு வாழும் பொருட்டு; விண்தலம் கலந்து இலங்கு வெண் களங்கன் ஒப்பு எனா - வான மண்டலத்தில் தங்கிய, பிரகாசிக்கும் வெண்ணிறமான மதிக்கு ஒப்பென்று சொல்லத்தக்க; ஈர வெண்குடை கொண்டு - குளிர்ச்சி பொருந்திய வெண்கொற்றக் குடையையுந் தாங்கி; அலங்கல் கொண்ட தேறல் கொண்ட அன்பு கொற்றவா - மாலையிலே பொருந்திய தெளிந்த தேனுக்கு ஒப்பான இனிய அன்பு கொண்ட மன்னவனே!

பொழிப்பு :

ஒளி மயமான இடங்களைக் கொண்ட வானுலகில் வாழும் வானவரும் வணங்குகின்ற பராபரனே! இம் மண்ணுலகின் இடங்கள் எங்கணும் யாவரும் நல்வாழ்வு வாழும் பொருட்டு வான மண்டலத் திலுள்ள, பிரகாசிக்கும் வெண்ணிறமான மதிக்கு ஒப்பென்று கூறத்தக்க குளிர்ச்சி பொருந்திய வெண்கொற்றக் குடையையுந் தாங்கி மாலையிலே பொருந்திய தெளிந்த தேனுக்கு ஒப்பான இனிய அன்பு கொண்ட மன்னவனே!

விளக்கம் :

வெண்மதி - உவமானம்; வெண் கொற்றக் குடை - உவமேயம்; அருள் செய்தல் - பொதுவியல்பு. தெளிந்த தேன் - உவமானம்; இறைவனின் அன்பு - உவமேயம்; இனிமை - பொதுத் தன்மை. இப் பாடலில் தேவகுமாரனாகிய திருக்குழந்தை பராபரா (வணங்கு தற்குரிய மேலானவன்), கொற்றவா (அரசனே) என அழைக்கப் படுவதைக் காணலாம். "பரா்பரா" என்பதற்கு ஆதரிப்பவன் என்னும் பொருளும் உண்டு. தொழும், இலங்கு, கொண்ட - பெயரெச்சங்கள். கலந்து, வாழ, கொண்டு - வினையெச்சங்கள். உம், என இடைச் சொற்கள். அண்டம் என்பது கடைக் குறையாய் அண்ட என வந்துள்ளது.

அருஞ்சொற்பொருள் :

ஒண் - ஒளி; தலம் - இடம்; அண்டம் - வானுலகம்; உம்பர் - தேவர்; இலங்கு - ஒளி வீசும், பிரகாசிக்கும்; வெண்களங்கன் - சந்திரன்; ஈர - குளிர்ந்த; வெண் குடை - வெண் கொற்றக் குடை; அலங்கல் - மாலை; தேறல் - தெளிந்த தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. மணிக்கலத் தகத்துஅமைத்த வானமிர்தமார்பினோய்!
பிணிக்குலத் தகத்துஉதித்த பெற்றிஆய்ந்து வாழ்த்திட
பணிக்குலத்தகத்து அடங்கிலால், பணித்த நின்பணி,
அணிக்குலத்து, அகத்து அணிந்த அன்பு பேர்கிலாகுமே.

கொண்டு கூட்டும் முறை :

மணிக் கலத்து அகத்து அமைத்த வான அமிர்த மார்பினோய்! பிணிக் குலத்து அகத்து உதித்த பெற்றி ஆய்ந்து வாழ்த்திடப் பணிக் குலத்து அகத்து அடங்கு இலால், பணித்த நின் பணி அணிக் குலத்து அகத்து அணிந்த அன்பு பேர் கு இல் ஆகுமே!

சொற்பொருள் :

மணிக் கலத்து அகத்து அமைத்த – மாணிக்கம் பதித்த பாத்திரத்தில் ஊற்றி வைத்த; வான அமிர்த மார்பினோய்! – தேவாமிர்தம் போன்ற மார்பினை உடையவனே; பிணிக் குலத்து அகத்து உதித்த – நோய் கொண்ட மனிதக் குலத்தில் நீ வந்து பிறந்த; பெற்றி ஆய்ந்து வாழ்த்திட – தன்மையை ஆராய்ந்து வாழ்த்துதல் என்பது; பணிக் குலத்து அகத்து அடங்கு இலால் – சொற்களின் கூட்டத்தில் அடங்காமையால்; பணித்த நின் பணி அணிக் குலத்து அகத்து அணிந்த – ஏவிய உன் கட்டளையை அணி வகைகளாகக் கொண்டு மனத்துள் அணிந்து நிற்கும்; அன்பு பேர்கு இல் ஆகுமே! – எங்கள் அன்பு என்றும் நீங்காது நிலை பெறுவதாகும்.

பொழிப்பு :

மாணிக்கப் பாத்திரத்தில் இட்ட தேவாமிர்தம் போன்ற மார்பினை உடையவனே! (பிறவித் துன்பமாகிய) நோய் கொண்ட மனித குலத்தில் நீ வந்து பிறந்த தன்மையை ஆராய்ந்து வாழ்த்துதல் என்பது சொற்களின் கூட்டத்தில் அடங்காமையால், பணித்த உன் கட்டளையை அணி வகைகளாகக் கொண்டு மனதில் அணிந்து நிற்கும் எங்கள் அன்பு, என்றும் நீங்காமல் நிலை பெறுவதாகும்.

விளக்கம் :

மாணிக்கப் பாத்திரத்தில் இட்ட தேவாமிர்தம் – உவமானம்; இறைவனின் மார்பு – உவமேயம்; காக்கும் மருந்தாய் விளங்குதல்– பொதுத் தன்மை. "பணிக் குலத்து அகத்து அடங்கு இலால்" என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்களால் கூற முடியாதது என்பதாகும். அதாவது சொல்லையும் கடந்து நிற்பது. பிணிக்குலம் என்பது நோயுற்ற மனித குலத்தைக் கருதினும், பிணி என்பது பிறவிப் பிணியைக் குறிப்பதே பொருத்தமானது. கலத்து, அகத்து, ஆய்ந்து, வாழ்த்திட, பேர்கு – வினையெச்சங்கள்" அமைத்த, உதித்த, அடங்கு, பணித்த, அணிந்த – பெயரெச்சங்கள். மணி, பிணி, பணி என்பவற்றுள் எதுகை அணி காணப்படுகிறது. "ஆகுமே" என்பதில் "ஏ"காரம் ஈற்றசை. தேற்றப் பொருளில் "ஆகும்" என்பதை உணர்த்துவது.

அருஞ்சொற்பொருள் :

மணி – மாணிக்கம்; கலம் – பாத்திரம்; அகத்து – உள்ளே; அமைத்த – ஊற்றிய, இட்ட; வான் அமிர்தம் – தேவாமிர்தம்; பிணி – நோய்; உதித்த – தோன்றிய; பெற்றி – தன்மை; ஆய்ந்து – ஆராய்ந்து; பணி – சொல், வேலை, ஆபரணம், கட்டளை; அணி – ஆபரணம், வரிசை, அழகு; பேர்கு இல் – நீங்காமல், பெயராமல்.

அன்னையையும் வளன் முனிவரையும் வாழ்த்துதல்

8. இரவிவேய்ந்த கஞ்சம் ஈன்ற இலகுமுத்தம் ஏய்த்து வெல்
புரவுஇல், வேய்ந்த சேயைஈன்ற பொருவில் அன்னை! வாழுதி"
சுருதிவேய்ந்த மாட்சிபூண்ட துணைவனாய மாதவத்து
உருவில் வேய்ந்த வேந்த! வாழி உறுதி என்று வாழ்த்தினார்

கொண்டு கூட்டும் முறை :

இரவி வேய்ந்த, கஞ்சம் ஈன்ற இலகு முத்தம் ஏய்த்து, வெல்புரவில் வேய்ந்த சேயை ஈன்ற பொருஇல் அன்னை வாழுதி! சுருதி வேய்ந்த, மாட்சி பூண்ட, துணைவன் ஆய மாதவத்து, உருவில் வேய்ந்த, வேந்த வாழி! உறுதி என்று வாழ்த்தினார்.

சொற்பொருள் :

இரவி வேய்ந்த – சூரிய கிரகணங்கள் ஊடுருவ; கஞ்சம் ஈன்ற – இதனால் மலர்ந்த தாமரை மலர் ஈன்ற; இலகு முத்தம் ஏய்த்து – ஒளியுள்ள முத்துப் போல; வெல்புரவில் வேய்ந்த சேயை ஈன்ற – யாரையும் வெல்லும் கொடையிற் சிறந்த மகனைப் பெற்றெடுத்த; பொருஇல் அன்னை வாழுதி! – ஒப்பற்ற அன்னையே நீ வாழ்க!; சுருதி வேய்ந்த, மாட்சி பூண்ட – வேத வடிவினனான, மாட்சிமை பூண்ட;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணைவன் ஆய மாதவத்து உருவில் வேய்ந்த - மரியாளின் துணைவன் ஆகிய பெருந்தவத்து வடிவாகத் தோன்றிய; வேந்த வாழி! - மன்னனாகிய தூசையே நீ நன்கு வாழ்வாயாக; உறுதி என்று வாழ்த்தினார் - என்று அங்கு வந்த இடையர்கள் வாழ்த்தினர்.

பொழிப்பு :

தூரிய கிரகணங்கள் ஊடுருவுவதால் மலர்ந்த தாமரை மலர் ஈன்ற ஒளிவீசும் முத்துப் போல, யாரையும் வெல்லும் கொடையிற் சிறந்த மகனைப் பெற்றெடுத்த ஒப்பற்ற அன்னையே நீ வாழ்வாயாக! வேத உருவினனான மாட்சிமை பூண்ட மரியாளின் துணைவன் ஆகிய பெருந்தவத்து வடிவில் தோன்றிய மன்னனாகிய தூசையே நீ நன்கு வாழ்வாயாக! என்று அங்கு வந்த இடையர்கள் வாழ்த்தினர்.

விளக்கம் :

திருக்குழந்தையின் தாய், தந்தை இருவரையும் இடையர்கள் வாழ்த்துவதாக அமைந்த செய்யுள் இதுவாகும். தாமரை மலர் ஈன்ற ஒளி வீசும் முத்து - உவமானம்; திருக் குழந்தையாகிய இயேசு - உவமேயம்; ஒளி வீசும் அழகு - பொதுவியல்பு. "ஏய்ப்ப" என்பது உவமை உருபாகையால் "ஏய்த்து" என்ப. ஒத்ததாக என்னும் பொருளைத் தருவதாகும். "புரவில் வேய்ந்த" என்பது கொடையிற் சிறந்த எனக் கருதுக. "மாதவத்து உருவில் வேய்ந்த" என்பதைப் பெருந் தவத்தின் வடிவில் தோன்றிய எனக் கொள்க. வேய்ந்த, ஈன்ற, பூண்ட, ஆய - பெயரெச்சங்கள். ஏய்த்து - வினையெச்சம்; இல், என்று, ஆய - இடைச் சொற்கள்.

அருஞ்சொற்பொருள் :

இரவி - தூரியன்; வேய்ந்த - ஊடுருவ; கஞ்சம் - தாமரை; முத்தம் - முத்து; புரவில் - கொடையில்; பொருவில் - ஒப்பற்ற; சுருதி - வேதம்.

காணிக்கை வைத்த பூமாலைகளின் தோற்றம்

9. இடத்துஇடத்து அடர்த்தியுற்ற இக்குஉடைத்த இன்புசொற் குடத்தியர்க்கு, அமைந்த பற்றல் கூர்ந்து, தோன்றல் தாள்மிசைத் தடத்துணர்க்கு அமைத்ததேறல் தாங்கு மாலை சாத்தலும், முடித்த திங்களைத் தொடுத்து உடுக்கள் உற்றல் ஒத்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு கூட்டும் முறை :

இடத்து இடத்து அடர்த்தி உள்ள, இக்கு உடைத்த இன்பு சொல் குடத்தியர்க்கு அமைத்த பற்றல் கூர்ந்து, தடத்துணர்க்கு அமைத்த தேறல் தாக்கு மாலை, தோன்றல் தாள்மிசை சாத்தலும், முடித்த திங்களைத் தொடுத்து உடுக்கள் துற்றல் ஒத்ததே.

சொற்பொருள் :

இடத்து இடத்து அடர்த்தி உள்ள - (குகையின்) எல்லா இடங்களிலும் மிக நெருக்கமாக நின்று கொண்டிருந்த; இக்கு உடைத்த இன்பு சொல் குடத்தியர்க்கு அமைத்த பற்றல் கூர்ந்து - கரும்பையும் இனிமையால் வென்ற, இனிய சொல்லை உடைய இடைச்சியர்க்கு உள்ளத்தில் உண்டான பக்தி மிகுதியால்; தடத்துணர்க்கு அமைத்த தேறல் தாக்கு மாலை - பெரிய இதழ்களுக்கிடையே பொருந்திய தேன் ததும்பும் மாலைகளை; தோன்றல் தாள்மிசை சாத்தலும் - திருக் குழந்தையின் திருவடிகளில் காணிக்கையாகச் சாத்தினதும்; முடித்த திங்களைத் தொடுத்து உடுக்கள் துற்றல் ஒத்ததே - அது பூரண சந்திரனைச் சூழ்ந்து நட்சத்திரங்கள் குவியலாகக் கொட்டிக் கிடப்பதை ஒத்திருந்தது.

பொழிப்பு :

(குகையின்) எல்லா இடங்களிலும் மிக நெருக்கமாக நின்று கொண்டிருந்த, கரும்பையும் வென்ற, இனிய சொல்லுடைய இடைச்சியர்கள், உள்ளத்தில் உண்டான பக்தி மிகுதியால், பெரிய இதழ்களுக்கிடையே பொருந்திய தேன் ததும்பும் மாலைகளைத் திருக்குழந்தையின் திருவடிகளில் காணிக்கையாகச் சாத்தினதும் அது பூரண சந்திரனைச் சூழ்ந்து விண்மீன்கள் குவியலாகக் கொட்டிக் கிடப்பதை ஒத்திருந்தது.

விளக்கம் :

"இக்கு" என்பது கரும்பு, தேன் ஆகியவற்றை இனிமை கருதியுணர்த்துவது. இங்கு கரும்பையும் வெல்லக் கூடிய குடத்தியரின் இனிய சொல் எனப்பட்டது. முடித்த திங்களைத் தொடுத்து உடுக்கள் துற்றல் - உவமானம்; மாலைகள் சூழத் திருக் குழந்தை காட்சி தரல் - உவமேயம்; அழகும் பொலிவும் - பொதுவியல்பு. இடத்து, சாத்தலும், துற்றல், கூர்ந்து - வினையெச்சச் சொற்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள, படைத்த, அமைத்த, தாக்கு, முடித்த ஆகிய சொற்கள் பெயரெச்சங்கள். "ஒத்ததே" என்பதில் "ஏ" காரம் ஈற்றசை. "ஒத்தது" என்பதே கருத்தாகும். கு, மிசை, உம் ஆகியன இடைச்சொற்கள்.

அருஞ்சொற்பொருள் :

இடத்து இடத்து - எல்லா இடங்களிலும்; அடர்த்தி - நெருக்கம், செறிவு; இக்கு - கரும்பு, தேன், கள்; உடைத்த - வெல்லக் கூடிய; இன்பு - இனிமை; பற்றல் - பக்தி, அன்பு; கூர்ந்து - மிகுந்து; தட - பெரிய; துணர் - பூஇதழ், பூங் கொத்து; அமைத்த - பொருந்திய; தேறல் - தேன்; தாக்கு - ததும்பும்; தோன்றல் - இயேசு, தலைவர்; மிசை - மேல், மீது; சாத்தலும் - சமர்ப்பித்தலும், அணிதலும், தரித்தலும்; முடித்த திங்கள் - பூரணசந்திரன், நிறைமதி; தொடுத்து - சூழ்ந்து; உடுக்கள் - நட்சத்திரங்கள், தாரகைகள், விண்மீன்கள்; துற்றல் - கிடத்தல்.

பசுவின் பாலைக் காணிக்கை வைத்த தோற்றம்.

10. **ஏதமின்றி மாலியீன்ற காந்தி என்று, தோன்றலைக்**
கோதுஅகன்று உயிர்த்த கோதை தாள்முன், அன்னகோவலர்,
சீத இன்பமோடு இரங்கு(ம்) தேனமிழ்தம் ஈகலும்,
பாதமொன்று(ம்) சோமன்ஈன்ற பால்நிலாவை மானுமே.

கொண்டு கூட்டும் முறை :

ஏதம் இன்றி மாலி ஈன்ற காந்தி என்று தோன்றலை, கோது அகன்று உயிர்த்த கோதை தாள் முன், அன்ன கோவலர், சீத இன்பமோடு இரங்கு தேன் அமிழ்தம் ஈகலும், பாதம் ஒன்று சோமன் ஈன்ற பால் நிலாவை மானுமே.

சொற்பொருள் :

ஏதம் இன்றி மாலி ஈன்ற காந்தி என்று - குறை இல்லாமல் கதிரவன் தந்த கதிரைப் போன்ற; தோன்றலை - திருக் குழந்தையை; கோது அகன்று உயிர்த்த கோதை தாள் முன் - தன் கன்னிமைக்குப் பழுதில்லாமல் பெற்றெடுத்த மாலை போன்ற மரியாவின் திருவடி களின் முன்னே; அன்ன கோவலர் - இங்கு வந்த இடையர்கள்; சீத இன்பமோடு இரங்கு தேன் அமிழ்தம் ஈகலும் - குளிர்ந்த மகிழ்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோடு இனிமையான பாலைக் காணிக்கையாகத் தந்ததும்; பாதம் ஒன்று சோமன் ஈன்ற பால் நிலாவை மானுமே - மரியாளின் பாதத்தை ஒருங்கு அலங்கரித்த இனிய பாலோ, பிறைச் சந்திரன் பிறப்பித்த பால் ஒளியைப் போன்று விளங்கியது.

பொழிப்பு :

குறை இல்லாமல் கதிரவன் தந்த கதிரைப் போன்ற திருக் குழந்தையை தன் கன்னிமைக்குப் பழுதில்லாமல் பெற்றெடுத்த மாலை போன்ற மரியாளின் திருவடிகளின் முன், அங்கு வந்த இடையர்கள் குளிர்ந்த மகிழ்ச்சியுடன் இனிமையான பாலைக் காணிக்கையாக அலங்கரித்ததும், அது பிறைச் சந்திரனின் பால் ஒளியைப் போன்று விளங்கியது.

விளக்கம் :

இதுவும் இடையர்களின் காணிக்கைகள் பற்றிய செய்யுளாகும். மரியாளின் காலடியில் இனிய பசும் பாலை வைத்து வணங்கி நின்றமையை அறிய முடிகிறது. மரியாள் பாதங்களில் சமர்ப்பிக்கப் பட்ட பால் ஒளியின் தோற்றம், வானத்துப் பால் நிலாவுக்கு உவமை கூறப்பட்டுள்ளது. மாலி என்ற காந்தி - உவமானம்; மரியாளின் திருக் குழந்தை - உவமேயம்; மென்மையும் அழகும் - பொதுத் தன்மை; பாலை இங்கு "தேன் அமிழ்தம்" எனச் சிறப்பிக்கப் பட்டுள்ளது. தேன் அமிழ்தமாகிய பால் என உருவகிக்கப்பட்டுள்ளமை அறிக. ஈன்ற, என்ற, இரங்கு, உயிர்த்த - பெயரெச்சங்கள்; அகன்று, இன்பமோடு, - வினையெச்சங்கள். என்று, இன்றி, ஐ, அன்ன, ஓடு, உம், ஐ, ஏ ஆகியன இடைச் சொற்கள். அன்ன - உவம உருபாகும். "மானுமே" என்பதில் "ஏ"காரம் ஈற்றசை. "மானும்" என்ற பொருளை உணர்த்துகிறது.

அருஞ்சொற்பொருள் :

ஏதம் - குற்றம்; மாலி - சூரியன்; காந்தி - ஒளிக் கதிர்; தோன்றல் - இயேசு; கோது - குற்றம்; உயிர்த்த - பெற்ற; கோதை - மாலை; சீதம் - குளிர்ச்சி; இரங்கு - அன்புடன்; அமிழ்தம் - தேவாமிர்தம்; சோமன் - சந்திரன்; பால் நிலா - ஒளி நிலா; மானுமே - ஒக்குமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையர் வானின்பம் பெற்றார்.

11. பால்நிலத்து அமைத்த அன்பு பதுமநேரு கண்செய,
தேன்நிலத்தினாரை நோக்கு(ம்) சிறுவன் இன்பு காட்டலால்,
மேல் நிலத்தினாரின் ஒத்த விரியு(ம்) காட்சியுற்று, உளம்
வான்நிலத்தின் ஆர்ந்த இன்பு, மலியவாழ மாந்தினார்.

கொண்டு கூட்டும் முறை :

தேன் நிலத்தினாரை நோக்கு சிறுவன், பால் நிலத்து அமைத்த அன்பு பதுமம் நேரு கண் செய இன்பம் காட்டலால், மேல் நிலத்தினாரின் ஒத்த விரியு காட்சி உற்று, உளம் வான் நிலத்தின் ஆர்ந்த இன்பு மலிய வாழ மாந்தினார்.

சொற்பொருள் :

தேன் நிலத்தினாரை நோக்கு சிறுவன் - தேன் நிறைந்த பூக்களை உடைய முல்லை நிலத்து இடையரை நோக்கிக் குழந்தைநாதன்; பால் நிலத்து அமைத்த அன்பு - மரியாளின் காலடியில் நிலத்தில் காணிக்கையாகப் பாலை இட்டுவைத்த அவ் அன்பை; பதுமம் நேரு கண் செய இன்பம் காட்டலால் - தாமரை மலர் போன்ற தன் கண்களால் நோக்கி இன்பம் ஊட்டியமையால்; மேல் நிலத்தினாரின் ஒத்த விரியு காட்சி உற்று - மேலுலகத்தவராகிய வானவர்க்கு ஒத்ததான விரிந்த ஞானத்தைத் தாமும் பெற்று; உளம் - தமது உள்ளத்தில்; வான் நிலத்தின் ஆர்ந்த இன்பு மலிய வாழ மாந்தினார் - வானுலகில் நிறைந்துள்ள இன்பம் மிகுதியாகப் பெற்று. வாழுமாறு அருள் புரிந்தார்.

பொழிப்பு :

தேன் நிறைந்த பூக்களை உடைய முல்லை நிலத்து இடையரை நோக்கிக் குழந்தைநாதன் மரியாளின் காலடியில், நிலத்தில் காணிக்கையாகப் பாலை இட்டுவைத்த அவ் அன்பை தாமரை மலர் போன்ற் தன் கண்களால் நோக்கி இன்பம் ஊட்டியமையால், மேலுலக வானவர்க்கு ஒத்ததாக விரிந்த ஞானத்தைத் தாமும் பெற்று, தமது உள்ளத்தில் வானுலகில் நிறைந்துள்ள இன்பம் மிகுதியாகப் பெற்று, வாழுமாறு அருள் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்:

முல்லை நிலத்தில் தேனடைகள் காணப்படுவதும், மலர்களில் தேன் நிறைந்து காணப்படுவதும் இயற்கையாதலால் "தேன் நிலத்தினாரை" என்று முல்லை நிலத்தில் வாழும் ஆயர்களைக் கூறப்பட்டுள்ளது. திருக்குழந்தையின் அருள் நோக்கும், அக் குழந்தை ஆயர்களுக்கு இன்பமூட்டியதும், அவ்விடம், மேலுலக வானவர்க்குரிய விரிந்த ஞானம் தருமிடமாய் விளங்கியதும், இடையர்களின் உள்ளமும் வானுலகப் பேரின்பம் எய்தி வாழுமாறும், திருக் குழந்தைநாதன் அருள் செய்தார் என்க. பதுமம் – உவமானம்; திருக்குழந்தையின் கண் – உவமேயம்; மென்மையும் அழகும் – பொதுத் தன்மை. வானுலக இன்பத்தை இடையர்களின் உள்ளமும் அனுபவிக்கும் வண்ணம் திருக்குழந்தைநாதன் தமது கண் நோக்கினால் அருள்புரிந்தார் என்க. "மாந்தினார்" என்னும் சொல் இங்கு "அருளினார்" எனப் பொருள் தரும். அமைத்த, நோக்கு, ஒத்த, விரியு, ஆர்ந்த – பெயரெச்சங்கள். செய, காட்டலால், உற்று, மலிய, வாழ – வினையெச்சங்கள். ஆல், இன் – இடைச் சொற்கள். நேரு, ஒத்த – ஆகியன உவமைஉருபுகள்.

அருஞ்சொற்பொருள்:

பதுமம் – தாமரை; மேல் நிலத்தினார் – வானவர்; காட்சி – ஞானம், அறிவு; ஆர்ந்த – நிறைந்த; மலிய – மிகுதியாக; மாந்தினார் – அருளினார், குடித்தார், உண்டார்.

கன்னித் தாயும் வளனும் இடையர்களுக்கு விடைகொடுத்தல்.

12. **கன்னியாய தாயும், ஓங்கு காவலா னும் அன்புற,**
இன்இறாலினும் கனிந்த இன்ப அம் சொல் ஓதலால்,
உன்னம் மேவும் ஈர அன்பு முன்னமுள் உறாமையால்,
மின்ன(ல்) மாரி தூவலொத்த' வீழும் நாட்டம் மாரியே.

கொண்டு கூட்டும் முறை:

கன்னி ஆய தாயும், ஓங்கு காவலானும், அன்பு உற இன் இறாலினும் கனிந்த இன்பம் அம் சொல் ஓதலால், உன்னம் மேவும் ஈர அன்பு முன்னம் உள் உறாமையால், மின்ன மாரி தூவல் ஒத்த வீழும் நாட்ட மாரியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொருள் :

கன்னி ஆய தாயும் - தாயாகிய கன்னி மரியாளும்; ஓங்கு காவலானும் - சிறந்த காவலனான சூசையும்; அன்பு உற இன் இறாலினும் கனிந்த இன்பம் - அன்புடன், இனிய தேனடைகளிலும் கனிவான இன்பம் தந்த; அம் சொல் ஓதலால் - அழகிய சொற்களைச் சொல்லியமையால்; உன்னம் மேவும் ஈர அன்பு - (அந்த இடையர் கள்) தம் உள்ளத்தில் சிந்தனையால் மேலோங்கிய அன்பினை; முன்னம் உள் உறாமையால் - கருதுகையில் நெஞ்சம் தாங்க முடி யாமையால்; மின்ன மாரி தூவல் ஒத்த - மின்னலோடு மழையானது தூவுகின்றமையை ஒத்ததாக (மழைத் தூறலை); வீழும் நாட்ட மாரியே - தம் கண்களிலிருந்தும் ஆனந்தக் கண்ணீரைச் சொரிந்தனர்.

பொழிப்பு :

தாயாகிய கன்னி மரியாளும், சிறந்த காவலனாகிய சூசையும், அன்புடன், இனிய தேனடைகளிலும் கனிவான இன்பமளித்த அழகிய சொற்களைச் கூறியமையைக் கேட்ட அவ் இடையர்கள், தம் உள்ளத்தில் சிந்தனையால் மேலோங்கி நின்ற குளிர்ந்த அன்பினைக் கருதும்போது நெஞ்சம் தாங்க முடியாமையால், மின்னலோடு மழை தூவுவதை ஒத்ததாகத் தம் கண்களிலிருந்தும் ஆனந்தக் கண்ணீ ரைச் சொரிந்தனர்.

விளக்கம் :

மரியாளும் சூசையும் கூறிய அன்பு கனிந்த வார்த்தைகளால் இடையர்கள் ஆனந்தக் கண்ணீர் விட்டதை இப் பாடல் கூறுகிறது.மின்னமாரி தூவல் - உவமானம்; (இடையர் கண்களி லிருந்து) வீழும் நாட்டமாரி - உவமேயம்; நீர் தூவுதல் - பொதுத் தன்மை. மரியாளும் சூசையும் சொல்லிய இனிய சொற்கள் இனிய தேனடை (தேன் வதை) களிலும் பார்க்க இன்பம் தந்தது எனப்படுகிறது. அத்துடன் அவர்கள் கூறிய சொற்களை "அம் சொல்" என்று கூறியமையால், அவை அழகிய சொற்கள் எனப்படினும், உள்ளம் மகிழ வைக்கும் ஆனந்தச் சொற்கள் எனக் கொள்க. "உள்ளம் மேவும் ஈர அன்பு" என்பதால் இடையர்கள் உள்ளங்களில் தம் சிந்தனையால் மேலோங்கிய குளிர்ந்த அன்பு எனக் கருதுக. "முன்னம் உள் உறாமையால்" என்பது கருத்தினில் நெஞ்சம் தாங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாமையால் எனக் கருதுக. ஆய, ஓங்கு, கனிந்த, மேவும், ஒத்த, வீழும், நாட்ட ஆகியன பெயரெச்சச்சொற்கள். வீழும், மேவும் என்பன வினை முற்றாகவும் வரும். உற, ஓதலால், உறாமையால் ஆகியன வினையெச்சங்கள். ஆய, உம், ஆல், ஏ - இடைச் சொற்கள். மாரியே என்பதில் "ஏ" காரம் ஈற்றசை.

அருஞ்சொற்பொருள் :

உற - பெருக, சேர; இறால் - தேனடை; அம் - அழகிய; ஓதலால் - சொன்னதால், கூறலால்; உன்னம் - கருத்து, மனம், சிந்தனை, ஒரு மரம்; முன்னம் - கருத்து, குறிப்பு; உறாமை - தாங்காமை; மின்ன - மின்னல்; மாரி - மழை; தூவல் - தூறல்; ஒத்த - போன்ற; நாட்டமாரி - கண்ணீர், (நாட்டம் - கண்)

இடையர் வீடு திரும்புதல்

13. **ஏவலாகி, மூவரை இறைஞ்சி ஏங்கி ஏகினர்,**
ஆவலாகி ஆங்கு வைத்த ஆவியல்லது இல்லதால்,
மேவலாகி, ஆவியாக வேய்ந்த அன்பு இலாதெனில்,
ஓவலாகி, வெற்றுடல்கள் ஊரையுற்றல் ஒத்ததே.

கொண்டு கூட்டும் முறை :

ஏவல் ஆகி, மூவரை இறைஞ்சி, ஏங்கி ஏகினர். ஆவல் ஆகி, ஆங்கு வைத்த ஆவி அல்லது இலாததால் மேவல் ஆகி, ஆவியாக வேய்ந்த அன்பு இலாது எனின், ஓவல் ஆகி, வெற்று உடல்கள் ஊரை உற்றல் ஒத்ததே.

சொற்பொருள் :

ஏவல் ஆகி - பிரிந்து செல்லுமாறு கட்டளை பிறக்கவே; மூவரை இறைஞ்சி - இயேசு, மரியாள், சூசை ஆகிய மூவரையும் அவ்விடையர்கள் வணங்கி; ஏங்கி ஏகினர் - ஏக்கத்தோடு அவ்விடம் விட்டுச் சென்றனர்; ஆவல் ஆகி - (அவ்விடத்திலேயே தங்க வேண்டும் என்ற) ஆசை கொண்டு; ஆங்கு வைத்த ஆவி அல்லது இலாததால் - அங்கு இட்டு வைத்த தங்களது உயிர் தமக்கு இல்லாமையால்; மேவல் ஆகி - வீடு திரும்ப இசைந்த போது; ஆவியாக வேய்ந்த அன்பு இலாது எனின் - தமக்கு உயிராக அம் மூவர் மீதும் கொண்ட அன்பு மட்டும் இல்லாது போனால்; ஓவல் ஆகி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் ஓய்ந்ததாகி; வெற்று உடல்கள் ஊரை உற்றல் ஒத்ததே - வெறும் உடல்கள் மட்டுமே ஊரை அடைதலுக்கு ஒப்பாயிருக்கும்.

பொழிப்பு :

பிரிந்து செல்லுமாறு கட்டளை பிறக்கவே, மூவரையும் அவ்விடையர்களும், இடைச்சியர்களும் வணங்கி, ஏக்கத்தோடு அவ்விடம் விட்டுச் சென்றனர். அங்கேயே தங்க வேண்டுமென்ற ஆசை கொண்டு அவர்கள் அங்கு இட்டு வைத்த உயிர் தமக்கு இல்லாமையால், வீடு திரும்ப இசைந்த போது, தமக்கு உயிராக அம் மூவர் மீது கொண்ட அன்பு மட்டும் இல்லாது போனால், உயிரற்ற வெற்று உடல்கள் மட்டுமே ஊரை அடைதலுக்கு ஒத்ததாயிருக்கும்.

விளக்கம் :

திருக்குழந்தையையும், பெற்றோரையும் பிரிந்து வீடு செல்ல இடையர்களுக்கு விருப்பமில்லை. வீடு திரும்புமாறு கட்டளை பிறந்ததும் தங்களது உயிர்களை அங்கேயே விட்டுவிட்டுத் திரும்பினார்கள். தமது உயிருக்குப் பதிலாக அம் மூவரிடத்தும் கொண்ட அன்பு மட்டும் இல்லாது விடின், வெறும் வெற்றுடல்கள் ஊரை அடைதலை ஒத்திருக்கும் எனப் பாடல் கூறுகிறது. விட்டுவிட்டு வந்த உயிருக்குப் பதிலாக மூவரிடத்தும் வைத்த பேரன்பு உயிராக விளங்கியது என்பதை இதனால் அறிய முடிகிறது. "உயிர் ஓரிடமும் உடல் ஓரிடமும்" என்ற வழக்கை இது எடுத்துக் காட்டுகிறது. மூவர் மீதும் வைத்த பேரன்பு இல்லாமை உவமேயமாகவும், வெற்றுடல்கள் உவமானமாகவும் கூறப்பட்டு, உயிரற்ற தன்மை பொதுவியல்பாக உணர்த்தப்பட்டுள்ளது. ஆகி, இறைஞ்சி, ஏங்கி, ஆங்கு, ஏகின், இல்லாததால், உற்றல், ஊரை - வினையெச்சங்கள். வைத்த, வேய்ந்த, வெற்று - பெயரெச்சங்கள். ஆகி, அல்லது, எனின், ஐ - இடைச் சொற்கள். ஒத்ததே என்பதில் "ஏ" காரம் ஈற்றசை.

அருஞ்சொற்பொருள் :

ஏவல் - கட்டளை; இறைஞ்சி - வணங்கி; ஏகினர் - சென்றனர்; ஆவல் - ஆசை; ஆங்கு - அங்கு, அங்கே; ஆவி - உயிர்; மேவல் - இசைந்து; வேய்ந்த - கொண்ட, அமைந்த; ஓவல் - ஓய்ந்து; உற்றல் - அடைதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் மகனை வாழ்த்துதல்

14. ஏகம் ஆணை யேக, எங்கும் ஏகனாகி ஆள்பவன்,
மாகம் மேவும் மாடம் நீக்கி, மாடுமேவு உழைக்கு உறைந்து
ஆகம் மாடை வேந்தர் நீக்கி, ஆயரை தெரிந்ததென்று
ஓகையாக ஓகனோடும் ஓங்குதாயும் வாழ்த்தினாள்.

கொண்டு கூட்டும் முறை :

ஏக ஆணை ஏக எங்கும் ஏகன் ஆகி ஆள்பவன், மாகம் மேவும் மாடம் நீக்கி, மாடு மேவு உழைக்கு உறைந்து, ஆகம் மாடை வேந்தர் நீக்கி, ஆயரைத் தெரிந்தது என்று ஓகை ஆக, ஓகனோடும் ஓங்கு தாயும் வாழ்த்தினாள்.

சொற்பொருள் :

ஏக ஆணை ஏக எங்கும் - தன் ஒரே ஆணை எங்கும் செல்ல; ஏகன் ஆகி ஆள்பவன் - ஒருவனாய் இருந்து ஆளும் ஆண்டவன்; மாகம் மேவும் மாடம் நீக்கி - வானத்தை எட்டக் கூடிய மாட மாளிகைகளை விலக்கி; மாடு மேவு உழைக்கு உறைந்து - மாடுகள் தங்கும் குடிலின்கண் தங்கி; ஆகம் மாடை வேந்தர் நீக்கி - மார்பில் பொன் அணி பூண்ட மன்னரையும் விலக்கி; ஆயரைத் தெரிந்தது என்று ஓகை ஆக - இந்த ஆயர்களைத் தெரிந்தெடுத்தது ஏனோ என்று வியப்புண்டாக; ஓகனோடும் ஓங்கு தாயும் வாழ்த்தினாள் - உவகை கொண்ட சூசையோடு மகிழ்ச்சியால் பூரித்த தாயாகிய மரியாளும் குழந்தையை வாழ்த்தினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு :

தன் ஒரே ஆணை எங்கும் செல்ல, ஒருவனாய் இருந்து ஆளும் ஆண்டவன், வானத்தை எட்டும் மாட மாளிகைகளை விலக்கி, மாடுகள் தங்கும் குடிலின்கண் தங்கி, மார்பில் பொன்னணி பூண்ட மன்னர்களையும் புறக்கணித்து, இந்த ஆயர்களைத் தெரிந்தெடுத்தது ஏனோவென்று வியப்புண்டாக, உவகை கொண்ட ஆசையோடு மகிழ்ச்சியால் பூரித்த தாயாகிய மரியாளும் திருமகனை வாழ்த்தினாள்.

விளக்கம் :

தாயும், தந்தையும் திருமகனை வாழ்த்திய பாடலிது. எங்கும் தன் ஆணை யைச் செலுத்தும் ஆண்டவனாகிய இயேசு, மாட மாளிகைகளைப் புறக் கணித்து மாட்டுத் தொழுவத்தில் தங்கியதும், செல்வச் செழிப்புள்ள மன்னர்களைத் தவிர்த்து, இடையர்களைத் தேர்ந்தெடுத்ததும் ஏனோ? என்ற வியப்புடன், தாய், தந்தை ஆகிய இருவரும் மன மகிழ்ச்சியோடு திருக் குழந்தையை வாழ்த்தினர் என்க. ஏக, எங்கும், ஆகி, நீக்கி, உறைந்து - வினையெச்சங்கள். மேவு, ஓங்கு - பெயரெச்சங்கள். ஓடும், உம், ஐ, என்று - இடைச் சொற்கள். "ஏக" என்பது பெயரெச்சமாகவும் வரும். "ஏக ஆணை" (பெயரெச்சம்), "ஏகச் சொன்னான்" (வினையெச்சம்).

அருஞ்சொற்பொருள் :

ஏகம் - ஒரே; ஏக - செல்ல; ஆணை - கட்டளை; ஏகன் - ஒருவன்; மாகம் - வானம்; மேவு - எட்டும், தொடும்; மாடம் - மாட மாளிகை; உழை - இடம்; உறைந்து - தங்கி, வாழ்ந்து; ஓகன் - மகிழ்பவன்; ஓங்கு - உயர்ந்த, மனம் பூரித்த.

இடையர் நாள்தோறும் குகைக்கு வருதல்.

15. முன் அருந்திய தீஞ்சுவை, முல்லையார்,
பின் அருந்திடப் பெட்புறீஇ, நாடொறும்
மின் அருந்திய மெல்லடியாள் கரத்து,
அன்(ன) அருந்திருச் சேய்தொழ அண்ணுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு கூட்டும் முறை :

முன் அருந்திய தீம் சுவை முல்லையார், பின் அருந்திடப் பெட்பு உறீஇ, மின் அருந்திய மெல் அடியாள் கரத்து அன்ன அருந் திருச்சேய் தொழ, நாள் தொறும் அண்ணுவார்.

சொற்பொருள் :

முல்லையார் முன் அருந்திய தீம் சுவை - இடையர்கள் முன்பு தாம் பரவசமாகிப் பருகிய பேரின்பமாகிய இனிய சுவையை; பின் அருந் திடப் பெட்பு உறீஇ - பின்னரும் நுகர்ந்திட ஆசை கொண்டு; மின் அருந்திய மெல் அடியாள் கரத்து - மின்னொளியை உட் கொண்டு விளங்கிய மென்மையான பாதங்களையுடைய மரியாளின் கைகளில்; அன்ன அருந்திருச்சேய் தொழ - அமர்ந்திருக்கும் அந்த அருமையான திருக்குழந்தையைக் கண்டு வணங்குவதற்கு; நாள் தொறும் அண்ணுவார் - நாள்தோறும் கூட்டமாக வந்து சேருவர்.

பொழிப்பு :

இடையர்கள், முன்பு தாம் பரவசமாகிப் பருகிய பேரின்ப மாகிய இனிய சுவையைப் பின்னரும் நுகர்ந்திட ஆசை கொண்டு, மின்னொளியை உட்கொண்டு விளங்கிய மெல்லிய பாதங் களையுடைய மரியாளின் கைகளில் அமர்ந்திருக்கும் அந்த அருமை யான திருக்குழந்தையைக் கண்டு வணங்குவதற்காக நாள்தோறும் கூட்டமாக வந்து சேருவர்.

விளக்கம் :

இப்பாடலிலிருந்து தொடரும் பாடல்கள் (15-33) அந்தாதி யாய் அமைவன. அடியாள் + கரத்து = அடியாள் கரத்து என உயர்திணை சார்ந்த ஆறாம் வேற்றுமைத் தொகைப் பொருளில் இயல்பாக வரத் தக்கது. ஆனால் "அடியாட்கரத்து" எனத் திரிந்து எளிமைப் படுத்தப்படாது பாடலில் வந்துள்ளது. அன்ன + அரும் = அன்னரும் எனத் தொகுத்தல் விகாரமாயிற்று. "மின்னருந்திய மெல்லடி" என்பது மின்னலையொத்த ஒளி பொருந்திய மென்மை யான திருவடியாகும். அருந்திய - பெயரெச்சம்; அருந்திட, உறீஇ, நாள்தொறும், தொழ - வினையெச்சங்கள். ஆர், தொறும், அன்ன ஆகியவை இடைச் சொற்கள். தீம் சுவை - பண்புத் தொகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருஞ்சொற்பொருள் :

அருந்திய - குடித்த, பருகிய; தீம் - இனிய; பெட்பு - ஆசை, வேட்கை; உறீஇ - கொண்டு; அன்ன - அந்த, போல; அண்ணுவார் - சேருவார், கூடுவார், அடைவார்.

இடையர்க்கு திருமகன் இன்பம் நோக்குதல்.

16. **அண்ணி, நீர்தவழ் தீயென அம்புயக்**
கண்ணி தாள்மிசை பெய்தஉழி, காதலன்
விண்ணின் நீர்முகில் மீனென நோக்கலோடு,
உள், நிலா வொடு இன்பஓர் மழை தூவினான.

கொண்டு கூட்டும் முறை :

அண்ணி, நீர் தவழ் தீ என, அம்புயக் கண்ணி தாள்மிசை பெய்த உழி, காதலன், விண்ணின் நீர்முகில் மீன் என நோக்கலோடு உள் நிலாவொடு இன்ப ஓர் மழை தூவினான்.

சொற்பொருள் :

அண்ணி - இடையர்கள் நெருங்கிச் சூழ்ந்து; நீர் தவழ் தீ என - நீரில் பூத்த நெருப்புப் போன்ற; அம்புயக் கண்ணி தாள்மிசை பெய்த உழி - தாமரை மலர்களாலான மாலையைத் தன் திருவடிகளில் சாத்திய பொழுது; காதலன் - அவர்கள் மேல் அன்பு கொண்ட திருக் குழந்தைநாதன்; விண்ணின் நீர்முகில் மீன் என - வானில் நீர் கொண்ட மேகம் மின்னுவது போல; நோக்கலோடு - தன் கண்களால் அவர்களைப் பார்த்து; உள் நிலாவொடு - இடையர்களின் உள்ளத்தில் ஞானஒளியைத் தந்ததோடு; இன்ப ஓர் மழை தூவினான் - பேரின்ப மாகிய ஒரு மழையையும் பெய்யச் செய்தான்.

பொழிப்பு :

இடையர்கள் நெருங்கிச் சூழ்ந்து, நீரில் பூத்த நெருப்புப் போன்ற தாமரை மலர்களாலான மாலையைத் தன் திருவடிகளில் சாத்திய பொழுது, அவர்கள் மேல் அன்பு கொண்ட திருக்குழந்தை நாதன், வானத்தில் நீர் கொண்ட மேகம் மின்னுவதைப் போலத் தன் கண்களால் அவர்களைப் பார்த்து, இடையர்களின் உள்ளத்தில் ஞானவொளியைத் தந்ததோடு, பேரின்பமானதொரு மழையையும் பெய்யச் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்:

பெய்துழி - "பெய்தவழி" என்பதன் தொகுத்தல் விகாரம். நீரில் பூத்த நெருப்பு - உவமானம்; தாமரை மலர் - உவமேயம்; சிவப்பு நிறமும் ஒளி வீச்சும் - பொதுவியல்பு; விண்ணின் நீர் முகில் மீன் - உவமானம்; திருக் குழந்தையின் அருள் நோக்கு - உவமேயம்; அருள் மழை பொழிதல் - பொதுவியல்பு. இன்ப ஓர் மழை - உருவக அணி (இன்பமாகியதொரு மழை). அம்புயக் கண்ணி - தாமரை மலர்களாலான மாலை; சில வேளை தாமரை மலர் போன்ற கண்ணினை உடையவள் என்ற இன்னோர் பொருளையும் தரும். "தவழ்" - பெயரெச்சம். "பெய்த உழி" -வினையெச்சம்; "நோக்கலோடு" - வினையெச்சம்; என, ஓடு, ஓடு -இடைச் சொற்கள். மின் என்பது மீன் என முதல் நீட்டமாய் விகாரமடைந்துள்ளது.

அருஞ்சொற்பொருள்:

அண்ணி - அடைந்து, நெருங்கி, சேர்ந்து; தவழ் - தவழும், விளங்கும், மிதக்கும்; அம்புயம் - தாமரை; கண்ணி - மாலை, கண்ணையுடையவள்; தாள் - கால், பாதம்; பெய்த உழி - சாத்திய போது, இட்டபோது; மீன் - மின்னல்; நோக்கலோடு - பார்த்தலோடு; உள் நிலா - உள்ளத்தில் ஞான ஒளி.

இடைச்சியர் இன்பம்

17. **தூவி ஓடிய வாரிது வற்றொடு,**
காவில் ஓடிய முத்தென, காதலால்
நாவில் ஓடிய நற்புகழ் சிந்து வார்;
ஏவி ஓடிய கோல் விழி ஏந்தினார்.

கொண்டு கூட்டும் முறை:

தூவி ஓடிய வாரி துவற்றொடு, காவில் ஓடிய முத்து என, ஏவி ஓடிய கோல்விழி காதலால், நாவில் ஓடிய நல் புகழ் சிந்துவார்.

சொற்பொருள்:

தூவி ஓடிய வாரி துவற்றொடு - மழை பொழிந்து ஓடிய வெள்ளம் மிகுதலால்; காவில் ஓடிய முத்து என - (அதனுடன்) காட்டில் ஓடிக் கரையில் ஒதுங்கிய முத்துப் போல; ஏவி ஓடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோல்விழி - ஏவப் பெற்றுப் பாய்ந்த அம்பு போன்ற கண்களைத் தாங்கிய அவ் இடைச்சியர்; காதலால் - திருக்குழந்தை மேல் கொண்ட அன்பினால்; நாவில் ஓடிய நல் புகழ் சிந்துவார் - தம் நாவில் பொருந்திய நல்ல புகழுரைகளைப் பொழிந்து நிற்பர்.

பொழிப்பு :

மழை பொழிந்து ஓடிய வெள்ளம் மிகுதலால் அதனுடன் காட்டில் ஓடிக் கரையில் ஒதுங்கிய முத்துப் போன்று, ஏவப் பெற்றுப் பாய்ந்த அம்பு போன்ற கண்களையுடைய அவ்விடைச்சியர், திருக் குழந்தை மேற்கொண்ட அன்பினால், தம் நாவிற் பொருந்திய நல்லுரைகளைக் கூறி வாழ்த்தினர்.

விளக்கம் :

ஏவப் பெற்ற அம்பு - உவமானம்; இடைச்சியர் கண்கள் - உவமேயம்; கூர்மை - பொதுத் தன்மை. "நாவில் ஓடிய நல் புகழ்" என்பது வாழ்த்துரைகளைக் குறித்தது. "சிந்துவார்" என்பதை வாழ்த்தினர், கூறினர், புகழ்ந்தனர் எனக் கொள்க. "தூவி ஓடிய வாரி துவல்" என்பது விரைந்து ஓடிய மழை வெள்ளம் என்க. (தூவல் - மழை; தூவி - மழை பொழிந்து). வெள்ளத்துடன் சேர்ந்து ஓடிக் கரையொதுங்கிய காட்டின் முத்தினை, திருக்குழந்தையின் அன்பு வெள்ளத்தில் அகப்பட்டுக் கரை சேர்ந்த இடைச்சியர்க்கு உவமையாகக் கொள்ளலாம். தூவி, துவற்றொடு, காதலால் - வினையெச்சங்கள்; ஓடிய - பெயரெச்சம். ஒடு, என, ஆல், இல் - இடைச் சொற்கள்.

அருஞ்சொற்பொருள் :

தூவி - மழைபொழிந்து; வாரி - வெள்ளம்; தூவல் - விரைவு; கா - காடு, பூஞ்சோலை; நாவில் ஓடிய - நாவில் பொருந்திய; ஏவி - அனுப்பிய; கோல் - அம்பு;

சாந்தி என்னும் இடைச்சி மரியாளிடம் பேசத் தொடங்குதல்.

18. **ஏந்தி, ஒங்கு உளத்து இன்ப நெடுங்கடல்**
நீந்தி நீந்தி, நிலைக்கரை காண்கிலா,
காந்தி வேய்ந்தனளைக் கனிந்து ஒதுவாள்;
சாந்தி நாமம் தரித்த குடத்தியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு கூட்டும் முறை :

சாந்தி நாமம் தரித்த குடத்தி, ஏந்தி ஓங்கு உளத்து இன்ப நெடுங்கடல் நீந்தி நீந்தி நிலைக்கரை காண்கு இலா காந்தி வேய்ந்தனளைக் கனிந்து ஓதுவாள்.

சொற்பொருள் :

சாந்தி நாமம் தரித்த குடத்தி - சாந்தி என்னும் பெயர் தாங்கிய ஓர் இடைச்சி; ஏந்தி ஓங்கு உளத்து - பரவசத்தால் நிறைந்து நின்ற தனது உள்ளத்தில் ஊற்றெடுத்த; இன்ப நெடுங்கடல் நீந்தி நீந்தி - பேரின்பமாகிய நெடிய கடலை நீந்தி நீந்திப் பார்த்தும்; நிலைக்கரை காண்கு இலா - நிலை கொள்வதற்கான கரையினைக் காண முடியாமல்; காந்தி வேய்ந்தனளைக் கனிந்து ஓதுவாள் - ஆதவனின் ஒளியை ஆடையாக அணிந்த கன்னி மரியாளை நோக்கிக் கனிவுடன் பேசலுற்றாள்.

பொழிப்பு :

சாந்தி என்னும் பெயருடைய ஓர் இடைச்சி, (திருக் குழந்தையின் அருள் நோக்குக் கிடைத்த) பரவசத்தால் நிறைந்து நின்ற தனது உள்ளத்தில் ஊற்றெடுத்த, பேரின்பமாகிய நெடிய கடலை நீந்தி நீந்திப் பார்த்தும் நிலை கொள்வதற்கான (கரையேறுவதற்கு) கரையினைக் காணமுடியாமல், ஆதவனின் ஒளியை ஆடையாக உடுத்த கன்னி மரியாளை நோக்கிக் கனிவுடன் பேசலுற்றாள்.

விளக்கம் :

"ஏந்தி ஓங்கு உளத்து" என்பது பேரின்ப பரவசத்தால் நிறையப் பெற்றிருந்த மனத்தில் என்க. "இன்ப நெடுங்கடல்" - உருவக அணி. நீந்தி நீந்தி என்பதால் தொடர்ச்சியாக அந்த பேரின்பத்தை நுகர்ந்து பார்த்தும் எனக் கருதுக. "நிலைக் கரைக்கு காண்கு இலா" எனக் கூறப்பட்டமை, அந்த அனுபவத்திற்கு எல்லை காண முடியாமல் என்பதாகும். "கனிந்து" என்பதால் பணிவுடன், நெகிழ்ச்சியுடன், பேரன்புடன் எனக் கொள்க. "காந்தி வேய்ந்தனள்" என்னும் தொடரில் உருவக அணி அமைந்துள்ளது. சூரிய ஒளியாகிய ஆடையை அணிந்தவள் என்பதாகிறது. "ஓங்கு உளத்து" - வினைத் தொகை. ஏந்தி, நீந்தி, கனிந்து, காண்கு- வினையெச்சங்கள். ஓங்கு, தரித்த - பெயரெச்சங்கள். "குடத்தியே" என்பதில் "ஏ" காரம் ஈற்றசை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருஞ்சொற்பொருள்

தரித்த – பூண்ட; நெடும் – நீண்ட; காண்கு – காண; இலா – இல்லாமல், இயலாமல், முடியாமல்; காந்தி – ஒளி; வேய்ந்தனள் – அணிந்தவள்; கனிந்து – நெகிழ்ந்து.

19. **குடத்தி வாய்மொழி கோதென, கோதையாய்!**
உடத்தி நீஒருவாது, அருளோந்துகேள்!
மடத்து, யாதெனும் கிள்ளை வகுத்தன
இடத்து, யாவரும் கேட்பதுஇல் ஆவதோ?

கொண்டு கூட்டும் முறை :

கோதையாய் குடத்தி வாய்மொழி கோது என உடத்தி நீ ஒரு வாது அருள் ஓர்ந்து கேள். மடத்து யாது எனும் கிள்ளை வகுத்தன, இடத்து யாவரும் கேட்பது இல் ஆவதோ?

சொற்பொருள் :

கோதையாய் – மாலை போன்றவளே!; குடத்தி வாய்மொழி கோது என – இடைச்சியின் வாய்ச் சொல் பழுதுள்ளதென்று; உடத்தி நீ ஒரு வாது – நீ சினந்து விலக்காது; அருள் ஓர்ந்து கேள் – கருணை கூர்ந்து கேட்பாயாக; மடத்து யாது எனும் கிள்ளை வகுத்தன – கிளி, அறியாமையாற் கூறிய எதனையும்; இடத்து யாவரும் கேட்பது இல் ஆவதோ? – இவ்வுலகத்தில் எவரேனும் அதனைக் கேட்காமல் விட்டு விடுவதும் உண்டோ?

பொழிப்பு :

மாலை போன்றவளே! இடைச்சியின் வாய்ச் சொல் குற்றமுடையதென்று நீ சினந்து விலக்காது கருணையுடன் கேட்பாயாக. கிளி அறியாமையாற் கூறிய எதையும், இவ்வுலகத்தில் எவரேனும் அதனைக் கேட்காமல் விட்டு விடுவது உண்டோ? (இல்லை என்பதாம்).

விளக்கம் :

"உடற்றி" என்பது எதுகை இன்னோசையின் பொருட்டு "உடத்தி" என மாறி வந்துள்ளது. "ஏனும்" என்பது "எனும்" எனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுகி நின்றது. மடத்து யாது, இடத்து யாவர் என்பன குற்றியலுகரப் புணர்ச்சியில் யகரமானது உகரம், இகரமாய்த் திரிந்து மடத்தி யாது?, இடத்தி யாவர் என நின்றன (இந் நூலில் பாடலானது எளிமைப் படுத்தியே மடத்து, இடத்து எனத் தரப்பட்டுள்ளது). "கோதையாய்" என்பது மாலை அணிந்தவளே, பெண்ணே எனப் பொருள் தரும். "ஓர்ந்து" என்பது கருதி, கூர்ந்து எனக் கருதுக. சில நூல்களில் "ஆர்ந்து கேள்" எனவும் பாடபேதம் காணப்படுகிறது. ஆர்ந்து - அக்கறையுடன். ஓர்ந்து, கேட்பதில் - வினையெச்சங்கள். ஆய், என, எனும், உம் என்பன இடைச் சொற்கள். "ஆவதோ" என்பதில் "ஓ" காரம் வினாப் பொருளில் வந்துள்ளது.

அருஞ்சொற்பொருள்:

கோதை - மாலை; கோது - பழுது, குற்றம்; உடத்தி - சினந்து, கோபித்து; ஒருவாது - விலக்காது; ஓர்ந்து - கருதி; மடம் - அறியாமை; கிள்ளை - கிளி; வகுத்தன - பேசியவை; இடத்து - இவ்வுலகில்; கேட்பதில் - கேட்காமல்.

சாந்தியின் வினாக்கள்

20. **ஆவ தேமுனர் ஆயது போல் அறிந்து,**
ஈவ தேநசை பின்ற அளித்திடும்
கோவ தேமிசை ஆள்தனிக் கோலினான்,
நோவ தேஇனி தென்றுஉதித் தான்கொலோ?

கொண்டு கூட்டும் முறை:

ஆவதே முனர் ஆயது போல் அறிந்து ஈவதே நசை பின்ற அளித்திடும், கோ அதே மிசை ஆள் தனிக் கோலினான், நேவதே இனிது என்று உதித்தான் கொலோ?

சொற்பொருள்:

ஆவதே முனர் ஆயது போல் அறிந்து - எதிர்காலத்தில் நடக்கவிருப்பதை முன்னர் நடந்தது போல் (ஞானப் பார்வையால்) அறிந்து; ஈவதே நசை பின்ற அளித்திடும் - மனிதற்கு ஈவதென்றால் அவர்கள் கொண்ட ஆசைக்கும் அதிகமாய்த் தருபவனாய்; கோ அதே மிசை ஆள் தனிக் கோலினான் - வானத்தின் மீது இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியரசு செலுத்தும் செங்கோலையுடைய ஆண்டவன்; நோவதே இனிது என்று உதித்தான் கொலோ? - (மனிதனாகத் தோன்றி) துன்புறுவதே தனக்கு இனியதென்று கருதி இவ்வெளிமைக் கோலத்தில் மண்ணுலகில் பிறந்தானோ?

பொழிப்பு :

எதிர்காலத்தில் நடக்கவிருப்பதனை முன்னர் நடந்தது போல் அறிந்து, மனிதர்க்கு அவர்கள் கொண்ட ஆசைக்கும் அதிகமாகத் தருபவனாய், வானத்தின் மீதிருந்து தனியரசு செலுத்தும் செங்கோலையுடைய ஆண்டவன், துன்புறுவதே தனக்கு இன்பம் தரும் எனக் கருதி இவ்வெளிமைக் கோலத்தில் மனிதனாக மண்ணுலகில் பிறந்தானோ?

விளக்கம் :

சாந்தி என்னும் இடைச்சி, திருக்குமாரனின் தாயாகிய மரியாளிடம் கேட்ட முதல் கேள்வி இதுவெனக் கூறப்பட்டுள்ளது. எல்லாம் அறிந்த ஆண்டவன் துன்பங்களை அரவணைக்கும் விதத்தில் ஏன் பிறந்தான்? எனக் கேட்பதாகச் சாந்தியின் வினா அமைந்துள்ளது. மனிதனாகப் பிறந்தாலும் வசதி படைத்த இடத்தில், துன்பம் அணுகாத விதத்தில் பிறந்திருக்கலாமே எனற மன ஆதங்கம் சாந்தியின் வினாவில் காணப்படுகிறது. மக்களைக் காப்பாற்ற விண்ணகத் தரசை நடத்தும் ஆண்டவனால், மக்களின் ஆசைக்கும் அதிகமாக அள்ளித் தருபவனால், தன்னைக் காப்பாற்ற ஏன் முடியவில்லை? என்பதே சாந்தியிடம் ஏற்பட்ட சந்தேகமாகத் தெரிவதை இப்பாடல் உணர்த்துகிறது. "கோவதே" என்ற இடத்து "அது" பகுதிப் பொருள் விகுதியாகும். போல், ஏ, கொலோ, என்று - இடைச் சொற்கள். அறிந்து, பின்ற, நோவதே - வினையெச்சங்கள். "கொலோ" என்பது வினாப் பொருளில் வந்தது. "முனர்" என்பது முன்னர் என்பதன் இடைக் குறை விகாரமாகும்.

அருஞ்சொற்பொருள் :

முனர் - முன்னர்; ஆயது - நடந்தது; ஈவதே - தருவதே, கொடுப்பதே; நசை - விருப்பம், ஆசை; பின்ற - பிற்பட, பின்னும்; கோ - அரசன்; மிசை - மேல்; கோலினான் - செங்கோலையுடையவன்; நோவதே - துயருறுவதே; உதித்தான் - பிறந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. கொல்லும் வேலொடும் கூர்நெடும் வாளொடும்
வில்லும் வாளியும் ஆழியும் வில்செய,
ஒல்லும் ஆழி உருட்டிடக் கோன்துணை
செல்லும் வீரவெஞ் சேனைஇலா யதுஏன்?

கொண்டு கூட்டும் முறை :

கொல்லும் வேலொடும், கூர் நெடும் வாளொடும், வில்லும், வாளியும், ஆழியும் வில்செய, ஒல்லும், ஆழி உருட்டிடக் கோன் துணை செல்லும், வீர வெஞ்சேனை இல் ஆயது ஏன்?

சொற்பொருள் :

கொல்லும் வேலொடும் - பகைவர்களைக் கொல்லும் வேலொடும்; கூர்நெடும் வாளொடும் - கூர்மையான நீண்ட வாளோடும்; வில்லும், வாளியும் - அம்பு பூட்டிய வில்லும்; ஆழியும் - சுழற்றி எறியும் சக்கராயுதமும்; வில்செய - ஆகிய படைக் கலன்கள் ஒளி வீச; ஒல்லும், ஆழி உருட்டிடக் கோன் துணை செல்லும் - தனக்குரித்தான ஆணைச் சக்கரத்தை உருட்டி ஆட்சி செய்யும் அரசனுக்குத் துணையாகச் செல்லக் கூடிய; வீர வெஞ்சேனை இல் ஆயது ஏன்? - வீரமுள்ள கொடிய சேனை இவனுக்கு இல்லாது போனது ஏன்?

பொழிப்பு :

பகைவர்களை அழிக்கக் கூடிய வேல், கூர்மையான நீண்ட வாள், அம்பு பூட்டிய வில், சக்கராயுதம் ஆகிய படைக் கலன்கள் ஒளிர, தனக்குரிய ஆணைச் சக்கரத்தை உருட்டி (செலுத்தி) ஆட்சி செய்யும் அரசனுக்குத் துணையாகச் செல்லக் கூடிய வீரமுள்ள கொடிய சேனை, இவனுக்கு இல்லாது போனது ஏன்?

விளக்கம் :

ஓர் அரசனுக்குத் துணையாயுள்ள படைக் கலன்களும், படை வீரர்களும் இவனுக்கு (திருக்குமாரனாகிய ஆண்டவனுக்கு) இல்லாது போனது ஏன்? என்று சாந்தியாகிய இடைச்சி வினவும் பாடலிது. இங்கே, வேற்படை, வாட்படை, வில்படை, சக்கரப் படை ஆகியவற்றுடன், காலாட்படையையும் பாடல் காட்டுகிறது. "வில் செய" என்பது பளபளக்க, ஒளி வீச, ஒளிர எனக் கருதலாம். "ஒல்லும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைப் பொருந்திய, இயலக் கூடிய, தகுதியான எனப் பொருள் கொள்ளலாம். இல்ஆயது - இல்லாமற் போனது. கொல்லும், ஒல்லும், செல்லும் என்பன பெயரெச்சங்களாக இப் பாடலில் வந்துள்ளனவாயினும், அவை வினை முற்றுக்களாகவும் வேல் கொல்லும், ஆழி ஒல்லும், சேனை செல்லும் என்று வரக் கூடியவையாகும். செய, உருட்டிட - வினையெச்சங்கள். உம் - இடைச் சொல். வெஞ்சேனை - பண்புத் தொகை.

அருஞ்சொற்பொருள் :

ஆழி - சக்கரம், சமுத்திரம், மோதிரம், வட்டம்; வில் செய - ஒளி வீச; ஒல்லும் - பொருந்தும்; கோன் - அரசன்; வெஞ்சேனை - கொடிய சேனை; இல் ஆயது - இல்லாமற் போனது.

22. ஆய வான்மணி ஆர்ந்து அணி உச்சியால்
காய நெற்றி கடந்து உயர் மாடமும்,
தூய பொன்னொடு சூழ்சுடர் பூணும் இத்
தேய வேந்தர் தம் செல்வமொன்று இல்லதேன்?

கொண்டு கூட்டும் முறை :

ஆய வான்மணி ஆர்ந்து அணி உச்சியால் காய நெற்றி கடந்து உயர் மாடமும், தூய பொன்னொடு சூழ் சுடர் பூணும் இத்தேய வேந்தர் தம் செல்வம் ஒன்று இல்லது ஏன்?

சொற்பொருள் :

ஆய வான்மணி ஆர்ந்து அணி உச்சியால் - அமைந்த சிறந்த மணிகள் நிறையக் கொண்டு பதித்த (கூம்பொடு) கோபுர உச்சியால்; காய நெற்றி கடந்து உயர் மாடமும் - ஆகாயத்தின் உச்சியையும் தாண்டி உயர்ந்து நிற்கும் மாட மாளிகைகளும்; தூய பொன்னொடு சூழ் சுடர் பூணும் - தூய்மையான பொன்னினாற் செய்யப்பட்டு சூழப் பதித்த மணிகள் ஒளிரும் அணிகலன்களும்; இத்தேய வேந்தர் தம் செல்வம் ஒன்று இல்லது ஏன்? - இங்குள்ள நாடுகளை ஆளும் அரசர்க்குரிய பிற செல்வங்களும், ஆகிய இவற்றுள், ஒன்றும் இவனுக்கு இல்லாதது ஏன்?

பொழிப்பு :

அமைந்த சிறு மணிகள் நிறையக் கொண்டு பதித்த கோபுர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சியால், ஆகாயத்தின் உச்சியையும் தாண்டி உயர்ந்து நிற்கும் மாட மாளிகைகளும், தூய பொன்னாற் செய்யப்பட்டு சூழப் பதித்த மணிகள் ஒளிரும் அணிகலன்களும், இங்குள்ள நாடுகளை ஆளும் அரசர்க்குரிய பிற செல்வங்களும் ஆகிய இவற்றுள் யாதேனும் ஒன்றும் இவனுக்கு இல்லாமற் போனது ஏன்?

விளக்கம்:

இடைச்சியாகிய சாந்தியின் மூன்றாவது வினாவாக இது அமைந்துள்ளது. உலகையே தன் ஆணையின் கீழ் ஆட்சி செய்யும் வானுலக ஆண்டவனுக்கு, பூமியில் பிறந்த போது சாதாரண அரசருக்குரிய செல்வங்கள் எவையும் கூட இல்லாமற் போனது ஏன் என்பதே இவ்வினாவாகும். மாடமாளிகைகள், பொன்னா பரணங் கள், பிறசெல்வங்கள் யாவும் மண்ணாளும் அரசருக் குரியவை எனப் பாடல் காட்டுகிறது. ஆனால் விண்ணையும், மண்ணையும் ஆளும் ஆண்டவனுக்கு எதுவுமே இல்லை என்பதையும் உணர்த்தி நிற்கிறது. ஆர்ந்து, கடந்து, பொன்னொடு - வினையெச்சங்கள். ஆய, அணி, உயர், தூய, பூணும், வேந்தர்தம் - பெயரெச்சங்கள். பூணும் என்பது வினை முற்றாகவும் வரும். அணிஉச்சி, உயர்மாடம், சூழ் சுடர் - வினைத் தொகைகள். அணி என்பது பெயர்ச் சொல்லாகவும் வரும். வான் மணி என்பது சிறந்த மணி எனக் கொள்க. ஆல், உம், ஓடு - இடைச் சொற்கள். உச்சி - கோபுர உச்சி எனக் கொள்க. காயம் - ஆகாயம் என்பதன் முதற் குறை.

அருஞ்சொற்பொருள் :

ஆய - அமைந்த; ஆர்ந்து - பதித்த; காயம் - ஆகாயம்; பூணும் - அணிகலன்களும்.

23. **இல்லதேஇல இவ்வழி வந்ததேன்?**
செல்ல வான்வழி செய்ய வந்தானெனில்,
வல்ல வேடம் அணிந்து, மறைவுஅற
வெல்ல வானுரு வேய்ந்தின் நன்றல்லதோ?

கொண்டு கூட்டும் முறை

இல் அதே இல, இவ்வழி வந்தது ஏன்? செல்ல வான்வழி செய்ய வந்தான் எனில், வல்ல வேடம் அணிந்து மறைவு அற வெல்ல வான் உரு வேய்ந்தின் நன்று அல்லதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொருள் :

இல் அதே இல - தங்கி வாழ்வதற்கு இல்லம் இன்றி; இவ்வழி வந்தது ஏன்? - இக் குகையில் (மாட்டுத் தொழுவத்தில்) வந்து பிறந்தது ஏன்?; செல்ல வான்வழி செய்ய வந்தான் எனில் - மானுடர்க்குச் சுவர்க்கம் அடைவதற்கான வழியினைக் காட்டுவதற்கு வந்தவர் என்றால்; வல்ல வேடம் அணிந்து - அதற்குரிய வல்லமை யான கோலமதாகிய; வெல்ல வான் உரு - பகைவரை வெல்லத்தக்க வானுலக உருவில் வராமல்; மறைவு அற - உருவத்தை மறைத்துக் கொண்டு; வேய்ந்தின் நன்று அல்லதோ? - வந்தது நல்லதாகுமோ?

பொழிப்பு :

தங்கி வாழ்வதற்கு இல்லம் இன்றி, இக் குகையில் வந்து பிறந்தது ஏன்? மானுடர்க்குச் சுவர்க்கம் அடைய வழிகாட்ட வந்தவரென்றால், அதற்குரிய வல்லமைக் கோலமாகிய, பகைவரை வென்றழிக்கக் கூடிய வானுலக உருவில் வராமல், உருவத்தை மறைத்துக் கொண்டு வந்தது நல்லதாகுமோ?

விளக்கம் :

சாந்தியின் நான்காவது வினா இதுவாகும். குடியிருக்கும் இல்லமின்றி இக் குகையில் (மாட்டுத் தொழுவத்தில்) பிறந்தது ஏன்? மானிடர்க்குச் சுவர்க்கமடைய வழிகாட்டப் பிறந்தாரெனில், அதற்குரிய வல்லமைக் கோலமாகிய வானுலக உருவில் வராமல், உருவத்தை மறைத்து வந்தது நல்லதோ? என்பதே சாந்தியின் ஐயங்கள். செல்ல, செய்ய, அணிந்து, வெல்ல, வேய்ந்தின், அற - வினையெச்சங்கள். வல்ல - பெயரெச்சம். எனில், இன், ஓ, - இடைச் சொற்கள். "அல்லதோ" என்பதில் "ஓ" காரம் வினாப்பொருளில் ஐயத்தை உணர்த்தியுள்ளது.

அருஞ்சொற்பொருள் :

இல்அதே - வீடாகிய அது; வான்வழி - சுவர்க்கம்; வல்ல - வல்லமையுள்ள, ஆற்றலுள்ள; மறைவு அற - மறைவின்றி; வேய்ந்தின் - தோன்றினால்.

24. **ஓவு உண்டாய உருக்கொடு, என்னுளத்து**
ஆவுஉண்டாயின ஐயம் இதே; இனித்
தூவுஉண் தாதுவ தூய்மலர் வாய்திறந்து
ஏவஉண்டு ஓதுதி ஆயிழையாய்! என்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு கூட்டும் முறை :

ஓவு உண்டு ஆய உருக்கொடு என் உளத்து ஆவு உண்டாயின ஐயம் இதே; ஆய் இழையாய்! தூவு உண் தாதுவ தூய்மலர் வாய் திறந்து, ஏவ உண்டு ஓதுதி! என்றாள்.

சொற்பொருள் :

ஓவு உண்டு ஆய - துன்பத்தை உட்கொண்டு அமைந்த; உருக்கொடு என் உளத்து - இக் குழந்தைநாதனின் உருவத்தை நினைவிற் கொண்டு என் உள்ளத்தில்; ஆவு உண்டாயின ஐயம் இதே - ஆவல் காரணமாக எழுந்த சந்தேகம் இதுவே; ஆய் இழையாய்! - அழகிய ஞான அணிகளை உடையவளே!; தூவு உண் தாதுவ தூய்மலர் வாய் திறந்து - இனித் தூவுகின்ற உண்ணத்தக்க தேனைக் கொண்ட, உன் மலர் போன்ற திருவாயினைத் திறந்து; ஏவ உண்டு ஓதுதி! என்றாள் - எனக்குரிய கட்டளையையும் மனதிற் கொண்டு இதற்கு மறுமொழி கூறுவாய் என்று (சாந்தி) கூறி முடித்தாள்.

பொழிப்பு :

துன்பத்தை உட்கொண்டு அமைந்த இக் குழந்தைநாதனின் உருவத்தை நினைவிற் கொண்டு என் உள்ளத்தில் ஆவல் காரணமாக எழுந்த சந்தேகம் இதுவே. இனி, தூவுகின்ற, உண்ணத்தக்க தேனைக் கொண்ட மலர் போன்ற உன் திருவாயினைத் திறந்து, எனக்குரிய கட்டளைகளையும் மனதிற் கொண்டு இதற்கு மறுமொழி கூறுவாயாக என்று (சாந்தி) சொல்லி முடித்தாள்.

விளக்கம் :

தெய்வக் குழந்தையின் மீது கொண்ட அன்பினால், துன்ப வடிவில் என் மனத்தில் உருக் கொண்டு எழுந்த வினாக்கள் இவை தான். இதற்கு மறுமொழி கூறுவாயெனச் சாந்தி மரியாதையுடன் கூறுவதே இப் பாடலாகும். திருக்குழந்தை பிறந்த இடமும், சூழலும் அவரைத் துன்பத்தை உட்கொண்டவர் போலக் காட்டியுள்ளமையைச் சாந்தியின் கூற்று உணர்த்துகிறது. அதன் காரணமாகவே தன் உள்ளத்தில் ஐயம் ஏற்பட்டதெனச் சாந்தி கூறுவதையும் நோக்க முடிகிறது. ஆய் இழையாய் - ஆராய்ந்தெடுக்கப்பட்ட ஆபரணங்களை அணிந்தவள்; இங்கு மரியாளைக் குறித்து நிற்கிறது. தாதுவ - மகரந்தத் தாதினை உடைய, தேனை உடைய (குறிப்புப் பெயரெச்சம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு தேனைக் குறித்தது. தூய் மலர் - தூய்மையான மலர் (அழகிய மலர்); மலர்வாய் - உவமை அணி. "ஏவ உண்டு ஓதுதி" என்பதனால் தனக்கு உரிய கட்டளைகளை எடுத்துக் கூறுமாறு கேட்கப் பட்டுள்ளது. ஆய, தூவு - பெயரெச்சம்; உள்ளத்து, திறந்து, ஏவ, ஆவு - வினையெச்சங்கள். உண் தாது - வினைத் தொகை. உண்டு என்பது வினையெச்சமாய் வந்துள்ளது. இது மூவிடப் படர்க்கை வினை முற்று ஆகும்.

அருஞ்சொற்பொருள்:

ஓவு - துன்பம்; உண்டு - உட்கொண்டு; ஆய - அமைந்த, பொருந்திய; உரு - வடிவம்; கொடு - கொண்டு; ஆவு - ஆவல், ஆசை; ஐயம் - சந்தேகம்; தூவு - தூவுகின்ற; உண் - உண்ணத்தக்க; தாதுவ - மகரந்தத் தாதினை உடைய, தேனையுடைய; தூய் - தூய்மையான அழகிய; ஏவ - கட்டளையிட; ஓதுதி - சொல்லுவாய்; ஆய் - ஆராய்ந்த; இழை - ஆபரணம்.

மரியாள் விடைகூறத் தொடங்குதல்

25. என்ற வாசகம், எந்தை மனுக்குலம்
சென்றவாய் அருள் காட்டிய சீர், உணர்வு
ஒன்றலாகி, உருகிய தாய், புனல்
மின்தவா விழி தூவி விளம்பினாள்.

கொண்டு கூட்டும் முறை:

என்ற வாசகம், எந்தை மனுக்குலம் சென்றவாய் அருள் காட்டிய சீர் உணர்வு ஒன்றல் ஆகி, உருகிய தாய், மின் தவா விழி புனல் தூவி விளம்பினாள்.

சொற்பொருள்:

என்ற வாசகம் - என்று சாந்தி கூறிய சொற்கள்; எந்தை மனுக்குலம் சென்றவாய் - நம் தந்தையாகிய ஆண்டவன் மனித குலத்தில் தானும் ஒருவனாய் வந்து பிறந்தவிடத்து; அருள் காட்டிய சீர் உணர்வு ஒன்றல் ஆகி - அருள் காட்டிய சிறப்பும் தன் உள்ளத்து உணர்வில் பொருந்தியதால்; உருகிய தாய் - உள்ளம் உருகிய தாயாகிய மரியாள்; மின் தவா விழி புனல் தூவி விளம்பினாள் - மின்னொளி நீங்காத தன் கண்களினின்றும் நீரைச் சிந்திய வண்ணம் பின்வருமாறு கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு :

என்று சாந்தி கூறிய சொற்கள், நம் தந்தையாகிய ஆண்டவன் மனித குலத்தில் தானும் ஒருவனாய் வந்து பிறந்தவிடத்து, அருள் காட்டிய சிறப்பும் தன் உணர்வில் பொருந்தியதால் உள்ளம் உருகிய தாயாகிய மரியாள், மின்னொளி நீங்காத தன் கண்களினின்றும் நீரைச் சிந்திய வண்ணம் பின்வருமாறு கூறினாள்.

விளக்கம் :

சாந்தியின் வினாக்களுக்கு மரியாள் பதில் சொல்லத் தொடங்கியதை இப்பாடல் கூறுகிறது. மரியாளின் உணர்வில், மனுக்குலத்தில் பிறந்த ஆண்டவன் காட்டிய அருளின் சிறப்பு, அவளது உணர்வில் ஊறி இருப்பதால், உள்ளம் உருகிக் கண்ணீர் சிந்தியபடி பதில் கூறினாள் என்க. புனல் தூவி என்பதை நீர் பொழிந்து எனக் கூறுவாரும் உளர். "நீரைச் சிந்தி" என்பதே பொருந்தக் கூடியது. வாசகம் - வார்த்தைகள் (ஐய வினாக்கள்) என்க. பிரகாசிக்கும் கண்கள் என்பதை "மின் தவா விழி" எனப்பட்டது. என்ற, காட்டிய, உருகிய - பெயரெச்சங்கள். சென்றவாய், ஒன்றல், ஆகி, தூவி - வினையெச் சங்கள்.

அருஞ்சொற்பொருள் :

எந்தை - தந்தை; சென்றவாய் - சென்றவிடத்து, சென்ற போது; சீர் - சிறப்பு; ஒன்றல் - பொருந்துதல், கொள்ளுதல்; மின்தவா - மின்னொளி விலகாத; புனல் - நீர்; தூவி - சிந்தி.

26. அன்பினால் அபயர் செயும் அத்துணை
நம்பினார், தனி நற்செய்கை ஈடிலார்.
கொம்பில் ஏறும், இடைத்துவளும் கொடி;
எம்பிரான் வலிக்கு இத்துணை வேண்டுமோ?

கொண்டு கூட்டும் முறை

இடைத்துவளும் கொடி கொம்பில் ஏறும்; தனி நல் செய்கை ஈடு இலார் அம்பினால் அபயர் செயும் அத்துணை நம்பினார்; எம்பிரான் வலிக்கு இத்துணை வேண்டுமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொருள் :

இடைத்துவளும் கொடி கொம்பில் ஏறும் - இடையிலே துவண்டு விழுந்து விடக் கூடிய கொடி தான் கொழு கொம்பைப் பற்றிப் படர்ந்து ஏறிப் போகும்; தனி நல் செய்கை ஈடு இலார் அம்பினால் அபயர் செயும் அத்துணை நம்பினார் - அதுபோல் தனியே நின்று பகைவரைத் தாக்கி வெல்வதற்குரிய திறமை இல்லாதவர்தாம், அம்பு முதலான படைக் கலன்களால் பகைவரைத் தாக்கித் துணை செய்கின்ற வீரர்களை நம்பியிருப்பர்; எம்பிரான் வலிக்கு இத் துணை வேண்டுமோ? - எம்பெருமானின் வலிமைக்கு இவ்விதமான படைவீரர் துணையெல்லாம் வேண்டுமா? (வேண்டுவதில்லை).

பொழிப்பு :

இடையிலே துவண்டு விழுந்து விடக் கூடிய கொடிதான் கொழு கொம்பைப் பற்றிப் படர்ந்து ஏறிப் போகும். அதுபோல் தனியே ஒருவனாய் நின்று பகைவரைத் தாக்கி வெல்வதற்குரிய திறமை இல்லாதவர்கள் தாம், அம்பு முதலான படைக் கருவிகளால் பகைவரைத் தாக்கித் துணை செய்கின்ற வீரர்களை நம்பியிருப்பர். எம்பெருமானின் வல்லமைக்கு இவ்விதமான படைவீரர்களின் துணை வேண்டுமா? (வேண்டுவதில்லை).

விளக்கம் :

சாந்தி கேட்ட வினாவான, படைவீரர் துணை ஆண்ட வனுக்கு இல்லாமல் போனது ஏன்? என்பதற்கான பதிலே இதுவாகும். தனித்து நின்று பகை வெல்ல முடியாதவருக்கே துணை தேவை. எம் பெருமானுக்கு அது தேவையற்றது என்பது இதன் கருத்தாகும். கொம்பில் ஏறும் கொடி - உவமானம்; வீரர்களின் துணையை நம்பியிருப்பவர் - உவமேயம்; தனித்து இயங்க முடியாமை - பொதுத் தன்மை. "எம்பிரான் வலிக்கு இத்துணை வேண்டுமோ?" என்பதனூ டாக ஆண்டவனின் சர்வ வல்லமை புலப்படுகிறது. செயும், ஏறும், துவளும் - பெயரெச்சங்கள். இவை வினை முற்றாகவும் வரக் கூடியவை. நம்பினார் என்பதும் இங்கு பெயரெச்சமாய் வந்துள்ளது. (நம்பினார் நல்செய்கை) ஆனால் அது வினை முற்றாகவும், நல்செய்கை நம்பினார் எனவும் வரக் கூடியது. ஆல், உம், இல், கு, ஓ - இடைச் சொற்கள். வேண்டுமோ? என்பதில் "ஓ" காரம் வினாப் பொருளில் வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருஞ்சொற்பொருள் :

அபயர் - வீரர்; தனி நல்செய்கை - தனித்த செயல்; ஈடு இலார் - இயலாதவர், முடியாதவர்; இடைத் துவளும் - இடை நடுவில் துவண்டு விடும்; வலி - வல்லமை, ஆற்றல்;

27. **வேண்டும் ஓர்வினை வேண்டுமென் றால், முடித்து**
ஆண்டும் ஓர்தனிக் கோல் அரசான், எரி
தூண்டும் ஓர்சினம் தோன்றுழி, அப்பகை
தாண்டும் ஓர்வலி தாங்குவர் யாவரோ?

கொண்டு கூட்டும் முறை :

வேண்டும் ஓர் வினை வேண்டும் என்றால் முடித்து ஆண்டும் ஓர் தனிக் கோல் அரசான், எரி தூண்டும் ஓர் சினம் தோன்று உழி, அப்பகை தாண்டும் ஓர் வலி தாங்குவர் யாவரோ?

சொற்பொருள் :

வேண்டும் ஓர் வினை - தான், செய்ய விரும்பும் ஒரு செயலை; வேண்டும் என்றால் முடித்து - நினைத்த மாத்திரத்திலேயே செய்து முடித்து; ஆண்டும் ஓர் தனிக் கோல் அரசான் - ஒரு தனிச் செங்கோலால் உலகங்களை எல்லாம் ஆளும் அரசனாகிய ஆண்டவனிடம்; எரி தூண்டும் ஓர் சினம் தோன்று உழி - நெருப்பை மூட்டி விட்டது போல் ஒரு கோபமானது தோன்றும் போது; அப்பகை - அந்தப் பகையினை; தாண்டும் ஓர் வலி தாங்குவர் யாவரோ? - தாண்டிச் செல்லக்கூடிய (முறியடிக்கக் கூடிய) வல்லமை கொண்டவர் இவ்வுலகில் யாராக இருக்க முடியும்?

பொழிப்பு :

தான், செய்ய விரும்பும் ஒரு செயலை, நினைத்த மாத்திரத்திலேயே செய்து முடித்து, ஒரு தனிச் செங்கோலினால் இவ்வுலகங்களை எல்லாம் ஆளும் அரசனாகிய ஆண்டவனிடம் நெருப்பை மூட்டி விட்டதுபோல் ஒரு கோபம் தோன்றும் போது, அந்தப் பகையினை முறியடிக்கக் கூடிய வல்லமை கொண்டவர் இவ்வுலகில் உளரோ?

விளக்கம் :

ஆண்டவன் எவ்வித துணையுமின்றிப் பூமியில் பிறந்தது ஏன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன வினாவுக்குரிய விடையாக இப்பாடல் அமைந்துள்ளது. ஆண்டவனை வெல்ல யாராலும் முடியுமா என அறிவுறுத்தப் படுகிறது. ஆண்டும் – ஆளும்; வேண்டும், ஆண்டும், தூண்டும், தாண்டும் – பெயரெச்சங்கள்; வினை முற்றாகவும் வரும். என்றால், முடித்து, தோன்றுவழி – வினையெச்சங்கள். என்றால், உம், ஓ – இடைச் சொற்கள். யாவரோ என்பதில் "ஓ" காரம் வினைப் பொருளில் வந்துள்ளது.

அருஞ்சொற்பொருள்:

சினம் – கோபம்; தோன்றுழி – தோன்றும்போது; வலி – வல்லமை; தாண்டும் – தாண்டிச் செல்லக் கூடிய.

28. **யாவரும் கடிது அஞ்சலொடு எஞ்சுவான்,**
மீவரும் துளி மேதினி மொய்த்ததும்,
தீவரும் துளி ஐம்புரம் தீந்ததும்,
தூவரும் பல வும்தொகை சொற்றவா?

கொண்டு கூட்டும் முறை:

யாவரும் கடிது அஞ்சலொடு எஞ்சுவான், மீவரும் துளி மேதினி மொய்த்ததும், தீவரும் துளி ஐம்புரம் தீந்ததும், தூவரும் பலவும் தொகை சொற்றவோ?

சொற்பொருள்:

யாவரும் கடிது அஞ்சலொடு எஞ்சுவான் – மக்கள் அனைவரும் மிகுந்த அச்சத்தோடு மடிந்து ஒளியுமாறு; மீவரும் துளி மேதினி மொய்த்ததும் – பொழியும் மழை வெள்ளம் உலகத்தை மூடிக் கொண்டதும்; தீவரும் துளி ஐம்புரம் தீந்ததும் – அக்கினி மழையால் சோதோம், கொமரா முதலிய ஐந்து நகரங்கள் எரிந்ததும்; தூவரும் பலவும் தொகை சொற்றவோ? – இவ் ஆண்டவனால் தூய்மை பொருந்த வரும் பிற வல்லமையுடைய செயல்களையும் தொகை சொல்லிக் காட்ட வேண்டுமா?

பொழிப்பு:

மக்கள் அனைவரும் மிகுந்த பயத்துடன் இறந்தொழியுமாறு, பொழியும் மழை வெள்ளம் உலகினை மூடி மறைத்ததும், அக்கினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழையினால் ஐந்து நகரங்கள் எரிந்து போனதும், இவ் ஆண்டவனால் தூய்மை பொருந்தி வரும் ஏனைய வல்லமை மிகுந்த செயல்களையும் தொகை சொல்லிக் காட்ட வேண்டுமோ?

விளக்கம்:

ஆண்டவனின் வல்லமையை மரியாள் எடுத்துக் காட்டும் பாடலிது. மழை பொழிந்து வெள்ளம் உலகை அழித்தமை, அக்கினி மழை ஐந்து நகர்களை எரித்தமை ஆகியவற்றைக் கூறி இவைபோல் ஏனைய பலவும் உள்ளது எனப்பட்டது. "சொற்றவோ" என்பதில் "ஓ" காரம் வினைப் பொருளில் வந்தது. "வேண்டுவதில்லை" என்ற எதிர் மறைக் கருத்தை உணர்த்துகிறது. சொற்றவோ - சொல்லவோ; அஞ்சலொடு, பலவும், யாவரும் - வினையெச்சச் சொற்கள்; கடிது, மீவரும் - பெயரெச்சங்கள்; வினைமுற்றாகவும் வரக்கூடியன. பாடலின் ஐந்து நகரங்களை எரித்த செய்தி "துளி மேதினி மொய்த்தது முன்" எனத் தேம்பாவணியின் திருமணப் படலத்தின் 37 ஆம் பாடலிலும், 14 ஆவது படலமான இளவல் மாட்சிப் படலத்திலும் (129 - 137) கூறப்பட்டுள்ளது. மேலும் ஆதியாகமம் பழைய ஏற்பாட்டில் "ஐம்புரம் தீர்ந்தது" எனக் கூறப்பட்டுள்ளது (18 : 16 - 33, 19 : 1 - 25).

ஜோர்தான் ஆற்றங்கரை நகரங்களான சோதோம், கொமோரோ ஆகியவற்றில் ஓரினச் சேர்க்கை போன்ற பாவங்கள் மலிந்துள்ள போது ஆபிரகாம் கர்த்தரை நோக்கி அவ்விடங்களில் 50 நீதிமான்கள் இருந்தால் அந்நகர்களை அழிப்பீர்களா என்று கேட்க, ஆண்டவன் இல்லை என்றார். இப்படியே படிப்படியாக 01 நீதிமான் இருந்தாலும் அழிக்கமாட்டேன் என்றார். இறைத்தூதர்கள் இருவரையும் சோதோம் நகரில் லோர்த்து என்பவர் வரவேற்று உபசரித்ததை அறிந்த மக்கள், லோர்த்துவின் வீட்டை முற்றுகையிட்டு அவர்களை தண்டிக்க விரும்பினார்கள். இப்படிப் பாவங்கள் அதிகரித்தமை கண்டு ஆண்டவன் வானத்திலிருந்து அக்கினியையும், கந்தக மழையையும் வரவழைத்து இரண்டு நகர்களையும் அழித்ததுடன், அயலிலுள்ள பாவ நகர்களான அட்மா, சீபோம், பெலா ஆகியவற்றையும் அழித்தொழித்தார் என விவிலியத்தின் மூலம் அறிய முடிகிறது.

அருஞ்சொற்பொருள்:

அஞ்சலொடு - பயத்தோடு; மடிந்து - இறந்து; மீவரும் - பெருகி வரும், அதிகரித்து வரும்; மொய்த்ததும் - மூடிக் கொண்டதும்; தீவரும் துளி - அக்கினி மழை; தீந்ததும் - எரிந்தழிந்ததும்; ஐம்புரம் - ஐந்து நகரங்கள்; தூவரும் - தூய்மையான; சொற்றவோ - சொல்லிக் காட்டவோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தி தான் கேட்ட வேதவுரையைக் கூறுதல்

29. **சொல்தவிர்ந்த அருள் தொழில் கால் இது என்று**
உற்று அவிர்ந்த உடுமுடியாள் உரைத்து,
இற்று அவிர்ந்த இடைச்சி உணர்ந்தபின்,
பற்று அவிர்ந்த உரைப்பயன் கூறுவாள்:

கொண்டு கூட்டும் முறை :

சொல் தவிர்ந்த அருள் தொழில் கால் இது, உற்று அவிர்ந்த உடு முடியாள் என்று உரைத்து, இற்று அவிர்ந்த இடைச்சி உணர்ந்த பின், பற்று அவிர்ந்த உரைப் பயன் கூறுவாள்.

சொற்பொருள் :

சொல் தவிர்ந்த – (மேலும் இது) சொற்களால் விபரித்துக் கூற முடியாத; அருள் தொழில் கால் இது – கருணைச் செயலைக் கடவுள் செய்யும் காலம் ஆகும்; உற்று அவிர்ந்த உடு முடியாள் என்று உரைத்து – என்று, ஒளி மிகுந்த விண் மீன்களை முடியாகச் சூடியுள்ள மரியாள் கூறவும்; இற்று அவிர்ந்த இடைச்சி உணர்ந்த பின் – உணர்ந்து கொள்ளக் கூடிய அறிவினைக் கொண்டு ஒளிர்ந்த சாந்தி என்னும் இடைச்சி; பற்று அவிர்ந்த உரைப் பயன் கூறுவாள் – தன் ஆர்வம் மிக்க கேள்விகளுக்குரிய விடையை அறிந்து உணர்ந்து பயன்தரும் சொற்களைக் (தான் கேட்ட வேத உரைகள் பற்றி) கூறத் தொடங்கினாள்.

பொழிப்பு :

சொற்களால் விபரிக்க முடியாத கருணைச் செயலைக் கடவுள் செய்யும் காலமிது என்று ஒளி மிகுந்த விண்மீன்களை முடியாகச் சூடிய மரியாள் கூறவும், அதை உணர்ந்து கொள்ளும் அறிவினைக் கொண்டவளாய் ஒளிர்ந்த இடைச்சியாகிய சாந்தி, தன் ஆர்வம் மிக்க கேள்விகளுக்கான விடையை அறிந்து உணர்ந்து பயன்தரும் சொற்களைக் (தான் கேட்ட வேத உரைகள் பற்றி) கூறத் தொடங்கினாள்.

விளக்கம் :

ஆண்டவன் அருள் செய்யும் காலம் இதுவென மரியாள் கூறியதும் அதை உணர்ந்து கொண்ட சாந்தி தன் வினாக்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை கிடைத்ததால், மேலும் சில பயன் மிக்க உரைகளைக் கூற முற்பட்டதை இப்பாடல் காட்டுகிறது. இறைவனின் கருணையைச் சொற்களால் கூற முடியாது என்பதும், அதனை உணர்ந்து அனுபவிக்கவே முடியும் என்பதும் இப்பாடலில் உணர்த்தப்பட்டுள்ளது. "உடு முடியாள்" என்பது உருவக அணி. மரியாளின் ஒளிரும் முடி பற்றிக் கூறப்பட்டது. "இற்று அவிர்ந்த" என்பதால் "இத்தன்மையாக ஒளிர்ந்த" எனக் கருதலாம். இடைச்சியின் அழகுத் தோற்றம் கருதியும், அதே வேளை உண்மையை உணர்ந்து உள்ளம் ஒளிபெறல் கருதியும், "அவிர்ந்த இடைச்சி" என்பதனைக் கொள்ள முடியும். நான்காம் அடியில் வரும் "பற்று அவிர்ந்த" என்பதை "ஆசை விளங்க" எனக் கொள்க. தவிர்ந்த, அவிர்ந்த, உணர்ந்த - பெயரெச்சங்கள். என்று, உரைத்து - வினையெச்சங்கள். என்று - இடைச் சொல்.

அருஞ்சொற்பொருள்:

கால் - காலம், காற்று, உடலின் உறுப்பான கால்; உற்று அவிர்ந்த - ஒளி மிகுந்த; அவிர்தல் - ஒளிர்தல், விளங்குதல்; உடு - நட்சத்திரம்; பற்று - ஆசை, ஆர்வம், விருப்பம்.

30. **கூறு வாள் செயும் கொள்கையின், என் உளம்**
பீறு வாள்எனப் பின்னை ஓர் ஐயமும்,
தேறு வாய் மொழி கேட்டிடச் செப்புவேன்;
ஈறுவாய் இல எந்தையின் அன்னையே!

கொண்டு கூட்டும் முறை:

ஈறுவாய் இல எந்தையின் அன்னையே! கூறுவாள் செயும் கொள்கையின் என் உளம், பீறுவாள் எனப் பின்னை ஓர் ஐயமும், தேறுவாய் மொழி கேட்டிடச் செப்புவேன்.

சொற்பொருள்:

ஈறுவாய் இல, எந்தையின் அன்னையே! - முடிவு காலம் என்று ஒன்றில்லாத நம் தந்தையாகிய ஆண்டவனின் தாயே!; கூறுவாள் செயும் கொள்கையின் - கூறுபடுத்தும் கொலை வாளின் குணத்தைப் போல; என் உளம் - என் உள்ளத்தை; பீறுவாள் எனப் பின்னை ஓர் ஐயமும் - கிழிக்கும் வாள்போல் மீண்டும் ஓர் சந்தேகமும் தெளிய வேண்டி உள்ளது; தேறுவாய் மொழி கேட்டிடச் செப்புவேன் - அது தெளிவு பெற வேண்டி, உன் வாய் மொழியைக் கேட்டு அறியுமாறு இதைக் கூறுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு :

முடிவுக் காலம் இல்லாத நம் தந்தையாகிய ஆண்டவனின் தாயே! கூறுபடுத்தும் கொலை வாளின் குணத்தைப் போல, என் உள்ளத்தைக் கிழிக்கும் வாள் போல் மீண்டும் ஒரு சந்தேகமும் எழுகின்றது. அது தெளிவு பெற வேண்டி, உன் வாய் மொழியைக் கேட்டறியுமாறு இதனைக் கூறுகின்றேன்.

விளக்கம் :

மீண்டும் ஒரு ஐயத்துக்குத் தெளிவு பெற மரியாளை வேண்டுகின்ற சாந்தியின் கூற்றினை இப்பாடல் காட்டுகிறது. அந்த ஐயம் எதுவென்பதை அடுத்து வரும் பாடலில் அதனை அறிய முடியும். இறைவன் அநாதியானவர் என்பது இப் பாடலால் விளங்குகிறது. கூறுபடுத்தும் கொலை வாளினை உவமையாகச் சாந்தியின் மனத்தில் எழுந்த ஐயத்துக்கு கூறப்பட்டுள்ளது. வாளின் அறுக்கும் தன்மையும், ஐயத்தின் அறுத்தெடுக்கும் தன்மையும் பொதுவாக்கப்பட்டு, "வருத்துதல்" உணர்த்தப்பட்டுள்ளது. செயும், தேறுவாய் - பெயரெச்சங்கள்; வினைமுற்றாகவும் முடியவல்லன. கேட்டிட - வினையெச்சம்; கூறுவாள், பீறுவாள் என்பன வினைத் தொகைகள்.

அருஞ்சொற்பொருள் :

கூறு - துண்டுபடுத்தும், கூறாக்கும்; கொள்கை - குணம்; பீறு - பிளவு படுத்தும், பிளக்கும்; பின்னை - பின்பும்; ஐயம் - சந்தேகம்; தேறு - தெளிவு; செப்புவேன் - சொல்லுவேன்; ஈறு - முடிவு.

31. **அன்னை தந்தையிலான் அறை நூற்படி**
என்னை இங்கு அளித்தோன் வரும் எல்வையின்,
மின்னை ஒன்றிய வேடம் எடுத்தவன்,
தன்னை , யாவரும் தாழ இறைஞ்சுவார்.

கொண்டு கூட்டும் முறை

அறை நூற்படி அன்னை தந்தை இலான்; என்னை இங்கு அளித்தோன் வரும் எல்வையின், மின்னை ஒன்றிய வேடம் எடுத்து அவன் தன்னை யாவரும் தாழ் இறைஞ்சுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொருள்

அறை நூற்படி அன்னை தந்தை இலான் - வேத நூல்கள் சொல்லியுள்ள படி தாயும் தந்தையும் இல்லாமல் தானாய் விளங்கும் ஆண்டவன்; என்னை இங்கு அளித்தோன் வரும் எல்வையின் - என் போன்ற மனிதரை மீட்டுக் காப்பவனாய் இவ்வுலகில் வந்து தோன்றும் காலத்தில்; மின்னை ஒன்றிய வேடம் எடுத்து வரவே - மின்னலைப் போன்ற வேடம் எடுத்து வந்தால்; அவன் தன்னை யாவரும் தாழ் இறைஞ்சுவார் - அனைவரும் அவனைப் பணிந்து வணங்குவார்.

பொழிப்பு

வேதநூல்கள் சொல்லியுள்ளபடி, தாயும் தந்தையும் இல்லாமல் தானாய் விளங்கும் ஆண்டவன், என்போன்ற மானிடரை மீட்டுக் காப்பாற்றும் பொருட்டு இவ்வுலகில் வந்து தோன்றும் காலத்தில் மின்னலைப் போன்ற வேடம் எடுத்து வந்தால், அவனை அனைவரும் பணிந்து வணங்குவார்கள்.

விளக்கம்:

அழித்தோன் - அழிப்பவன் (உறுதி காரணமாக வந்த கால வழுவமைதி) அறைநூற்படி - வேத நூல்களில் கூறியபடி, அவற்றைக் கற்றுணர்ந்தபடி. "மின்னை ஒன்றிய வேடம்" என்றது, ஒளி பொருந்திய வடிவத்தைக் குறித்தது. "தாழ இறைஞ்சுவார்" என்பது தாழ்ந்து பணிவர் என்பதாகும். சில பிரதிகளில் "தாழ் இறைஞ்சுவார்" எனப் பாட பேதமாய்க் காணப்படுகிறது. ஐ, இன், உம் - இடைச் சொற்கள். ஒன்றிய - பெயரெச்சம்; தாழ, யாவரும் - வினையெச் சங்கள். மின்னலைப் போன்ற வேடம் என்பது உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

அருஞ்சொற்பொருள்:

அறைநூல் - வேத நூல்கள் கூறும்; எல்வையின் - காலத்தில்; ஒன்றிய - ஒத்த, போன்ற; வேடம் - வடிவம், உருவம்; தாழ - பணிந்து.

32. **அஞ்சுவார், அவன்முன் உலகாள்பவர்;**
எஞ்சுவார், அவனை இறைஞ்சுவார் எனா;
விஞ்சும் ஆரணமாக விளம்பினார்;
துஞ்சும் மாதவரே! எனச் சொல்லினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு கூட்டும் முறை :

உலகு ஆள்பவர் அவன் முன் அஞ்சுவார், அவனை இறைஞ் சுவார் எஞ்சுவார் எனா, விஞ்சும் ஆரணம் ஆக விளம்பினார் துஞ்சு மாதவரே எனச் சொல்லினாள்.

சொற்பொருள் :

உலகு ஆள்பவர் அவன் முன் அஞ்சுவார் - இவ்வுலகத்தை ஆளும் அரசரெல்லாம் அவன் முன்னர் அஞ்சி நடுங்குவரென்றும்; அவனை இறைஞ்சுவார் எஞ்சுவார் எனா - அவனை வணங்குபவர் களே இவ்வுலகில் மீதியாக நின்று உயிர் வாழ்வாரென்றும்; விஞ்சும் ஆரணம் ஆக விளம்பினார் துஞ்சு மாதவரே - மறைந்து விட்ட பெருந் தவத்தோர் (முனிவர்கள்) மேலான வேதவாக்காகச் சொல்லியுள் ளார்களே; எனச் சொல்லினாள் - என்று சாந்தி கூறினாள்.

பொழிப்பு :

இவ்வுலகை ஆளும் அரசரெல்லாம் அவன் முன் அஞ்சி நடுங்குவரென்றும், அவனை வணங்குபவர்கள் மட்டுமே உலகில் மீதியாக உயிர் வாழ்வாரென்றும், மறைந்து விட்ட பெருந்தவ முனிவர்கள் வேதவாக்காகச் சொல்லியுள்ளார்களே என்று சாந்தி கூறினாள்.

விளக்கம் :

சகல வல்லமையுள்ள அரசர்கள் கூட அஞ்சி நடுங்கக் கூடிய வல்லமை இவ் ஆண்டவருடையது. அதுபோல் அவரை வணங்கா தோர் உலகில் கெட்டொழிய, வணங்குபவர் மட்டுமே உயிர் வாழ்வர், இவ்வாறு வேதத்தில் சொல்லப்பட்டதை, மறைந்து போன முனிவர்கள் எடுத்துக் கூறியுள்ளனர் என்றவாறு சாந்தி உரைத்த வார்த்தைகள், ஆண்டவனின் அருள் வல்லமையை உணர்த்துகிறது என்பதை இப் பாடல் காட்டுகிறது. "எஞ்சுவார்" என்பது அழிந்தவர்கள் போக மிஞ்சியவர்களைக் குறிப்பதாகும். விஞ்சும் ஆரணம் - மேலான வேதம். விஞ்சும், துஞ்சும் - பெயரெச்சங்கள். எனா, ஆக, ஏ, ஐ - இடைச் சொற்கள்.

அருஞ்சொற்பொருள் :

அஞ்சுவார் - பயப்படுவார்; எஞ்சுவார் - மீதப்படுவார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஞ்சியிருப்பார்; இறைஞ்சுவார் - வணங்குவார், வழிபடுபவர்; விஞ்சும் - அதிகரிக்கும், மேலாகும்; ஆரணம் - வேதம், மறை; துஞ்சும் - மறைந்து போன, இறந்து விட்ட.

மரியாள் விளக்கம் கூறத் தொடங்குதல்

33. சொல்லக் கேட்டனள் தொன்மொழித் தன்மையும்
வெல்லக் கேட்பரும் வெஞ்சினத்து எல்லைநாள்
ஒல்லக் கேட்டனர் உட்குற ஆவதைப்
புல்லக் கேட்கில் யான்புகல் வேன்என்றாள்

கொண்டு கூட்டும் முறை :

சொல்லக் கேட்டனள்; தொன்மொழித் தன்மையும் வெல்ல, கேட்பு அரும் வெஞ்சினத்து எல்லை நாள் ஒல்ல, கேட்டனர் உட்கு உற ஆவதைப் பல்லக் கேட்கில், யான் புகல்வேன் என்றாள்.

சொற்பொருள் :

சொல்லக் கேட்டனள் - சாந்தி சொன்னதைக் கேட்ட மரியாள்; தொன்மொழித் தன்மையும் வெல்ல - உலக முடிவு நாள் வரவே, அது பற்றிப் பழைமையாகச் சொல்லப்பட்ட செய்திகளை வெல்லும் வகையிலும்; கேட்பு அரும் வெஞ்சினத்து - கேட்பதற்கு அரியதான கொடிய கோபத்துடனும்; எல்லை நாள் ஒல்ல - இவ்வுலகின் முடிவுக் காலத்தில்; கேட்டனர் உட்கு உற - கேட்பவர் எல்லோரும் அஞ்சி நடுங்கும் படி; ஆவதைப் பல்லக் கேட்கில் - நிகழவிருக்கும் அருஞ் செயல்களை நீர் விரும்பிக் கேட்பீராகில்; யான் புகல்வேன் என்றாள் - நான் கூறுவேன் என்றாள்.

பொழிப்பு :

சாந்தி சொன்னதைக் கேட்ட மரியாள், உலக முடிவு நாள் வரவே அது பற்றிப் பழைமையாகச் சொல்லப்பட்ட செய்திகளை வெல்லும் வகையிலும், கேட்பதற்கு அரியதான கொடிய கோபத்துடனும், இவ்வுலகின் முடிவுக் காலத்தில், கேட்பவர்கள் எல்லோரும் அஞ்சி நடுங்கும்படி நிகழவிருக்கும் அருஞ் செயல்களை, நீர் விரும்பிக் கேட்பீராகில் நான் கூறுவேன் என்றாள்.

விளக்கம் :

உலகின் முடிவுக் காலத்தின்போது, நடக்கவிருப்பன பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாள் கூறுவது அடுத்து வரும் பாடலில் இடம்பெறும். இந்தப் பாடலில் அதற்கான ஆயத்தநிலை தென்படுகிறது. சாந்தி விரும்பினால், அதைக் கூறுவதாக மரியாள் சொல்கிறாள். உலக முடிவு பற்றிய பழையசெய்திகள் அச்சமூட்டுபவை. அவற்றையும் வெல்லக் கூடியதாக இனிவரும் உலக முடிவு அச்சமூட்டுவதாக அமையவிருப்பதை இப்பாடல் உணர்த்துகிறது. "தொன்மொழி" பழைய வார்த்தைகள் ஆகும். "தன்மை" என்பது அவற்றில் சொல்லப்பட்ட விடயங்களின் நிலையாகும். சொல்ல, வெல்ல, ஒல்ல, பல்ல, உட்குஉற - வினையெச்சங்கள். கேட்புஅரும் - பெயரெச்சம். உம், ஐ, இல் - இடைச் சொற்கள். கேட்கில் + யான் = கேட்கிலியான். யகரம் வர மெய்யின் முன் இகரம் தோன்றியுள்ளது. மூலப் பாடலில் கேட்கிலியான் என்றே உள்ளது.

அருஞ்சொற்பொருள்:

தொன்மொழி - பழைமையான வார்த்தை; கேட்பு அரும் - கேட்பதற்கரிய; வெஞ்சினம் - கொடிய கோபம், கடுங்கோபம்; எல்லை - முடிவு; ஒல்ல - அடைய; உட்குற - அஞ்சி நடுங்க; பல்ல - விரும்பி, மேலும்; புகல்வேன் - சொல்வேன்.

34. தாள்எழும் கமலம் சுடர் தாவிய
கோள்எழும் கதிர் கொண்டெனக் கேட்டலும்
வாள்எழுந்த கண் மாதொடு யாவரும்
சூள் எழுந்துறச் சொல்லெனச் சொல்லுவாள்.

கொண்டு கூட்டும் முறை:

கேட்டலும், வாள் எழுந்த கண் மாதொடு யாவரும், தாள் எழும் கமலம் சுடர் தாவிய கோள் எழும் கதிர் கொண்டு என, சூள் எழுந்து "உறச் சொல்" என, சொல்லுவாள்.

சொற்பொருள்:

கேட்டலும் - இவ்வாறு மரியாள் சொல்லக் கேட்டதும்; வாள் எழுந்த கண் மாதொடு யாவரும் - வாள் போன்ற கண்களையுடைய சாந்தியோடு, ஏனைய இடைச்சியர் எல்லோரும்; தாள் எழும் கமலம் - தண்டில் எழுந்து நின்ற தாமரை; சுடர் தாவிய கோள் எழும் கதிர் கொண்டு என - சுடர் பரந்த கதிரவனின் கதிரை உட்கொண்டு மலர்ந்தது போல; சூள் எழுந்து - ஆணையிட்ட முறையில் எழுந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று; "உறச் சொல்" என - "புரியும்படி சொல்" என்று கூற; சொல்லுவாள் - மரியாள் மேலும் கூறலானாள்.

பொழிப்பு :

இவ்வாறு மரியாள் சொல்லக் கேட்டதும், வாள் போன்ற கண்களையுடைய சாந்தியோடு, ஏனைய இடைச்சியர் யாவரும், தண்டில் எழுந்து நின்ற தாமரை, ஒளி பரவிய சூரியனின் கதிரை உட்கொண்டு (கதிர்பட்டு) மலர்ந்தது போல, ஆணையிட்ட முறையில் எழுந்து நின்று "புரியும்படி சொல்" என்று கூற, மரியாள் மேலும் கூறலுற்றாள்.

விளக்கம் :

"சூழ்" என்பது எதுகை காரணமாகச் "சூள்" எனத் திரிந்து வந்துள்ளது. வாள் - உவமானம்; சாந்தியின் கண்கள் - உவமேயம்; ஒளி வீசுதல் - பொதுத்தன்மை. சூரிய ஒளிக் கதிரினால் தாமரை மலருதல் உவமானம்; மரியாளின் சொல் கேட்டு இடைச்சியர் ஆணையிட்டு எழுதல் - உவமேயம்; மலர்ச்சியும் எழுச்சியும் - பொதுத் தன்மை. "உறச்சொல்" என்பது புரியும்படிசொல், தெளிவாகச் சொல், நன்றாகச் சொல் எனக் கருதுக. "சூள் எழுந்து" என்பதற்குச் சூழ்ந்து நின்று எனப் பொருள் கொள்ளாது, ஆணையிட்ட முறையில் எழுந்து நின்று என்பதே பொருத்தமானதாகும். ஏனெனில் அச்சமூட்டும் விடயங்களைச் சொல்லவா? என மரியாள் இதற்கு முதற் பாடலில் கேட்பதனால், இடைச்சியர்கள், தாம் "அச்சப்பட மாட்டோம்; நீவீர் கூறலாம்" என்பது போல் சத்தியம் செய்த முறைமையில் எழுந்து நின்றனர் எனக் கருதலாம். தாவிய, எழும், எழுந்த - பெயரெச்சங்கள். எழும் - வினைமுற்றாகவும் வரக் கூடியது. கேட்டலும், எழுந்து - வினையெச்சங்கள். என், உம், ஓடு - இடைச் சொற்கள்.

அருஞ்சொற்பொருள் :

தாள் - தண்டு; சுடர் - ஒளி; தாவிய - பரவிய; கோள் - சூரியன்; மாது - பெண்; சூள் - சூழ்ந்து, ஆணையிட்டு; உற - புரியும்படி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகள்

1. இயேசு கிறிஸ்துவின் பெருமைகள் :

i. வேதங்களுக்குத் தலைவன்.

ii. மின்னலைப் போன்ற அன்னை ஈன்றவன்.

iii. கணிப்பிற்கு அடங்காத உயர் மாட்சிமை பூண்டு, விண்ணுலகில் பொலிவுடன் மகிழ்ந்திருப்பவன்; வானவர்க்கு அரசன்.

iv. வானவர் வணங்குகின்ற பராபரன்.

v. மண்ணுலகோர் நல்வாழ்வு வாழும் பொருட்டு விண்ணுலகில் மதிக்கு ஒப்பான குளிர்ந்த வெண்கொற்றக் குடையைத் தாங்கிய இனிய அன்பு கொண்ட மன்னவன்.

vi. மாணிக்கப் பாத்திரத்தில் ஊற்றி வைத்த தேவஅமுதம் போன்ற மார்பினன்.

vii. நோய் கொண்ட மனித குலத்தில் வந்து பிறந்தவன்.

viii. சொற்களால் ஆராய்ந்து கூற முடியாத பெருமை உடையவன்.

ix. சூரிய கிரணங்கள் பட்டு மலர்ந்த தாமரை ஈன்ற முத்துப் போன்றவன்.

x. யாரையும் வெல்லத்தக்க கொடையிற் சிறந்தவன்.

xi. குறையில்லாமல் கதிரவன் தந்த கதிரைப் போன்றவன்.

xii. தன் ஒரே ஆணை எங்கும் செல்ல ஏகனாகி ஆள்பவன்.

xiii. மாடுகள் தங்கியுள்ள தொழுவத்தில் வந்து பிறந்தவன்.

xiv. வானத்து நீர் கொண்ட மேகம் மின்னுவது போல் இடையர்களைக் கண்களால் நோக்கி, அவர்களது உள்ளத்தில் ஞான ஒளி கொடுத்ததுடன், பேரின்ப மழையைப் பெய்யச் செய்தவன்.

xv. மனிதர் விரும்பியதற்கும் அதிகமாய் ஈபவன்.

xvi. வானத்தில் தனியரசு செலுத்தும் செங்கோலை உடையவன்.

xvii. தன் துணை அல்லால் வேறு எவ்விதமான பணபலம், படைபலம் வேண்டாதவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

xviii. சினமாகிய நெருப்பு மூண்டுவிட்டால், அதை எவராலும் முறியடிக்கவியலாத தன்மையன்.

xix. ஊழிக்காலத்தின்போது முன்னர் "சோதோம்" முதலான ஐந்து நகரங்களை எரித்தழித்தவன்.

xx. முடிவு என்று எதுவும் இல்லாதவன்.

xxi. வேதங்கள் கூறியபடி தாயும், தந்தையும் இல்லாது தானாய்த் தோன்றியவன்.

2. மரியாளின் பெருமை :

I. மின்னலைப் போன்ற கன்னித்தாய்.

ii. இயேசு நாதரைப் பெற்ற ஒப்பற்ற அன்னை.

iii. இயேசுவாகிய திருக்குழந்தையைத் தன் கன்னிமைக்குப் பழுதில்லாமல் பெற்றவள்.

iv. மாலை போன்றவள்.

v. மின்னொளியை உட்கொண்டு விளங்கிய மென்மையான பாதங்களை உடையவள்.

vi. மின்னொளி நீங்காத கண்களால் கண்ணீரைச் சொரிந்த வள்.

vii. ஆண்டவன் மண்ணில் வந்து பிறந்து அருள் காட்டிய சிறப்பு, தன் உள்ளத்து உணர்வில் பொருந்தியதால் உள்ளம் உருகுகின்றவள்.

viii. சாந்தி என்ற இடையர் குலப் பெண்ணின் ஐய வினாக்களுக்கு, ஆண்டவனின் பெருமை பற்றி எடுத்துக் கூறியவள்.

ix. முடிவேயில்லாத இறைவனின் அன்னை.

x. ஆதவனின் ஒளியை ஆடையாக அணிந்தவள்.

xi. ஞான அணிகளை உடையவள்.

xii. தேன் மலர் போன்ற திருவாயினை உடையவள்.

xiii. விண்மீன்களை முடியாகச் சூடியவள்.

3. சூசையின் பெருமை :

I. உயர்ந்த காவலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. வேத உருவினனான மாட்சிமை பூண்ட மரியாளின் துணைவனான பெருந்தவ வடிவில் தோன்றிய மன்னன்.

iii. இடையர்களால் வணங்கப்பட்டவன்.

iv. திருக்குழந்தையைத் தாயுடன் இணைந்து வாழ்த்தியவன். (இப் பாடப் பகுதியில் தூசை பற்றி அதிகம் கூறப்படவில்லை)

4. இடையர்கள் பண்பும், சிறப்பும் :

I. பொன்னுலகில் வாழும் தேவர்களால், இயேசுவாகிய திருக் குமாரனை வணங்க வருமாறு அழைத்துச் செல்லப்பட்ட வர்கள்.

ii. குளிர்ந்த முல்லை நிலத்தினைக் குடியிருப்பாகக் கொண்ட வர்கள்.

iii. திருக்குழந்தையைச் சென்று வணங்குந்தோறும் விளங்கு கின்ற அக்குழந்தையின் தோற்றத்தையே கண்டவர்கள்.

iv. மாலையில் மலரும் வேங்கை மலரில் வண்டு தேனை உண்ணாதது போன்று பொன்னின் மீது பற்றில்லாதவர்கள்.

v. முல்லை மலர்களால் கட்டப்பட்ட மாலைகளோடு திருக் குழந்தை வதிகின்ற குகையைச் சூழ்ந்து நின்றவர்கள்.

vi. ஐம்பொறிகளாகிய அரங்கில் இன்பம் நுகர்ந்ததால் கிடைத்த வரம் என்னும் அழகிய கடலைத் தோண்டி, அதனுடன் மகிழ்ந்து மூழ்கி, உள்ளத்தில் பேரின்பம் பெருகப் பெற்றும் அடங்காமல் வாய் வழியாய் வார்த்தைகளைக் கூறி நின்ற வர்கள்.

vii. உன்னை விட்டுப் பிரிந்து காணாமற் போன ஆட்டை மீட்டு, அதன் புண்ணுக்கு மருந்து தடவிக் காப்பதற்காகவா இம் மண்ணுலகில் அவதாரமெடுத்து வந்துள்ளீர் என இறைவனா கிய திருக் குழந்தையைப் போற்றியவர்கள்.

viii. அன்பு கொண்ட கொற்றவா; உன் கட்டளையை அணிக ளாகக் கொண்ட எமது அன்பு நீங்காது உம்மீது நிலை பெறுவதாக எனப் போற்றியவர்கள்.

ix. சொற்களால் ஆராய்ந்து கூறமுடியாத புகழுடையவனே; எனத் திருக் குழந்தையைப் பாராட்டியவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

x. தந்தை, தாய், மகன் என மூவரையும் வாழ்த்தி வணங்கிய வர்கள்.

xi. (இடைச்சியர்கள்) தேன் ததும்பும் மலர் மாலைகளைப் பக்தியுடன் திருக்குழந்தையின் திருவடிகளில் சாத்தியவர் கள்.

xii. மரியன்னை திருவடிகளில் இனிய பாலைக் காணிக்கையாக அலங்கரித்தவர்கள்.

xiii. திருக்குழந்தையின் அருள் நோக்கத்தினால் வானவர்க் கொப்பான விரிந்த ஞானத்தைப் பெற்றதுடன், வானுலக இன்பத்தையும் பெற்றுக் கொண்டவர்கள்.

xiv. சூசையும், மரியாளும் சொல்லிய இனிய வார்த்தைகளால் நெஞ்சம் குளிர்ந்து மின்னலொடு மழை தூவுகின்றதை ஒத்ததாக ஆனந்தக் கண்ணீர் சொரிந்தவர்கள்.

xv. இயேசு, மரியாள், சூசை ஆகியோரை வணங்கிய பின் பிரிந்து சென்ற போதும் திரும்பவும் நாள் தோறும் இறைவனைத் தரிசிக்க விரும்பி வந்து கொண்டே இருந்தவர்கள்.

xvi. திருக் குழந்தையின் பேரன்பினால் உள்ளத்தில் ஞான ஒளியைப் பெற்றதுடன், பேரின்ப மழையிலும் நனைந்தவர் கள்.

xvii. தங்கள் நாவில் பொருந்திய நல்லுரைகளால் திருக் குழந்தையை (இடைச்சியர்) வாழ்த்தியவர்கள்.

5. சாந்தி மரியாள் ஆகியவர்களுக்கிடையிலான உரையாடல்:

I. சாந்தி என்னும் பெயருள்ள இடைச்சி திருக்குழந்தையாற் கிடைத்த பேரின்ப பரவசத்தால், அந்தப் பேரின்பமாகிய நெடிய கடலுக்குக் கரைகாண முடியாமையால் மரியாளை நோக்கிக் கனிவோடு பின்வருமாறு கூறலுற்றாள்.

ii. மாலை போன்றவளே! இடைச்சியின் வாய்மொழி பழுதெனக் கருதி விலக்காது, கருணை கூர்ந்து நான் கூறுவதைக் கேட்பாயாக. கிளி அறியாமையாற் கூறிய எதனையும் இவ்வுலகத்தில் எவரும் கேட்காமல் விட்டுவிடுவதுண்டோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. எதிர்காலத்தில் நடக்கவிருப்பதை முன்னரேயறிந்து, மனிதர்களின் ஆசைக்குமதிகமாய் அளிக்கின்ற ஆண்டவன், வானத்திலிருந்து தனியரசு செலுத்தும் ஆண்டவன், துன்புறுவதே தனக்கு இன்பமெனக் கருதி, எளிமைக் கோலத்தில் மண்ணுலகில் மானுடராக வந்து பிறந்தாரோ?

iv. வேல், வாள், வில், சக்கராயுதம் ஆகிய படைக்கலங்கள் துணையுடன், ஆட்சி செய்யும் ஓர் அரசனுக்குத் துணையாகச் செல்லக் கூடிய வீரவெஞ்சேனை இவனுக்கு இல்லாமல் போனது ஏன்?

v. சிறந்த மணிகள் பதிக்கப்பட்ட கும்புடைய உயர் மாட மாளிகைகளும், தூய பொன்னாற் செய்யப்பட்டு மணிகள் பதித்த அணிகலன்களும், இங்குள்ள நாடுகளின் அரசர்களிடமுள்ள பிற செல்வங்களும் ஆகியவற்றுள் ஒன்றேனும் இவனுக்கு இல்லாதது ஏன்?

vi. குடியிருக்கும் இல்லமின்றி மாட்டுத் தொழுவத்தில் பிறந்தது ஏன்? மானுடருக்குச் சுவர்க்கமடைய வழிகாட்டப் பிறந்தாரெனில் அதற்குரிய வானுலக உருவில் வராமல் உருவத்தை மறைத்து வந்தது நல்லதோ?

vii. துன்பமே உருவான இக்குழந்தைநாதனை நினைப்பிற் கொண்டு என் உள்ளத்தில் எழுந்த ஐயங்கள் இவையே; ஞான அணிகளை உடையவளே! உன் மலர் போன்ற இனிய வாயைத் திறந்து, எனக்குரிய கட்டளைகளையும் மனங் கொண்டு மறுமொழி கூறுவாயாக.

மரியாளின் விடைகள்:

viii. நம் தந்தையாகிய ஆண்டவன் மனுக்குலத்தில் தானும் ஒருவனாய்த் தோன்றி அருள் பூரிந்த சிறப்பு உள்ளத்தில் ஒன்ற, மனமுருகிய மரியாள், சாந்தி கேட்ட வினாக்களுக்கு விடை கூறத் தொடங்கினாள்.

ix. இடையிலே துவண்டு விழக்கூடிய கொடிதான் கொழுகொம்பைப் பற்றிப் படர்ந்து போகும். அதுபோல் தனித்து நின்று பகைவரை வெல்ல முடியாதவர் தான் அம்பு முதலான படைக் கலன்களால் பகைவரைத் தாக்கக் கூடிய வீரர்களைத் துணைகொள்வர். எம்பிரான் வலிமைக்கு இவ்வித துணை வேண்டுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

x. தான் விரும்பியதை நினைத்த மாத்திரத்தில் செய்து முடித்து, தனிச் செங்கோலால் உலகையெல்லாம் ஆளும் ஆண்ட வனிடம், நெருப்பை மூட்டி விட்டது போன்ற சினம் தோன்றுமானால், அதைத் தாண்டிச் செல்லக் கூடியவர் இவ் வுலகில் இருக்க முடியாது.

xi. மக்கள் அனைவரும் இறந்து படுமாறு பொழியும் மழைவெள்ளம் உலகை மூடி மறைத்ததும், அக்கினி மழையால் சோதோம் முதலான நகரங்கள் எரிந்து அழிந்ததும், இந்த ஆண்டவனால் தூய்மை பொருந்தவரும் ஏனைய பல வல்லமையுடைய செயல்களையும் தொகை சொல்லிக் காட்ட முடியாது.

சாந்தியின் பதிலுரை :

xii. சொல்லாலே விளக்க முடியாத கருணைச் செயல்களைக் கடவுள் செய்யும் காலம் இதுவென்று மரியாள் கூறவும், அதை உணர்ந்து கொண்ட சாந்தி, மேலும் பயன்தரும் சொற்களைக் கூறலானாள்.

xiii. முடிவில்லாத என் தந்தையின் தாயே! கூறுபடுத்தும் கொலைவாளின் குணத்தைப் போல என் உள்ளத்தைக் கிழிக்கும் மேலுமொரு சந்தேகமும் உள்ளது. அது தெளிவு பெறுமாறு இதனைக் கூறுகின்றேன்.

xiv. தாய், தந்தையின்றித் தானாகத் தோன்றிய ஆண்டவன், என்போன்ற மனிதரை மீட்டுக் காப்பாற்ற இவ்வுலகில் தோன்றும் காலத்தில் மின்னலைப் போல வேடமெடுத்து வந்தால் அவனை அனைவரும் பணிந்து வணங்குவார்கள்; இவ்வுலகை ஆள்பவர்கள் அவன் முன் அஞ்சி நடுங்குவர்; அவனை வணங்குவோர் மட்டும் இவ்வுலகில் மீதியாக உயிர்வாழ்வர் என்று தேவ வாக்காகப் பெருந்தவ முனிவர்கள் சொல்லியுள்ளார்களே என்று சாந்தி உரைத்தாள்.

மரியாள் பதில் கூறுதல் :

xv. உலக முடிவு நாளினைப் பற்றி அதிகமாகச் சொல்லப்பட்ட செய்திகளை வெல்லும் வகையில், கேட்பதற்கு அரியதான கொடிய கோபத்துடன், இவ்வுலக முடிவில் கேட்பவர்கள் அஞ்சி நடுங்குமாறு நிகழவிருக்கும் அருஞ் செயல்களை நீர் விரும்பிக் கேட்பீராயின் நான் கூறுவேன் என மரியாள் உரைத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தியின் விபரக் கூற்று :

xvi. மரியாள் கூறியதைக் கேட்டதும், வாள் போன்ற கண்களை யுடைய சாந்தியுடன் ஏனைய இடைச்சியரும், தண்டில் எழுந்த தாமரை கதிரவன் கதிரை உண்டு மலர்ந்தது போல் ஆணையிட்ட முறையில் எழுந்து நின்று "புரியும்படி சொல்" என்று கூற, மரியாள் மேலும் கூறலுற்றாள்.

6. அணிச் சிறப்புக்கள் :

i. "மின்னல் நேரும் அன்னை" (உவமை அணி)

ii. "மாலை மேவு வேங்கை பற்றி வண்டு உணாதென, மனம் மாலை மேவு வேங்கை பற்றி வண்டு உணாதென" (உவமை அணி) - மடக்கு அணியாகவும் விளங்குகின்றது.

iii. "புண்ணுள மருந்து நீவிப் போன ஆட்டை மீட்கவோ" (உருவக அணி)

iv. "விண்தலம் கலந்து இலங்கு வெண்களங்கன் ஒப்பெனா" (உவமை அணி)

v. "மணிக் கலத்தகத்து அமைத்த வானமிர்த மார்பினோய்" (உவமை அணி)

vi. "இரவி வேய்ந்த கஞ்சம் ஈன்ற இலகு முத்தம் ஏய்த்து, எல்புரவில் வேய்ந்த சேயை ஈன்ற பொருவில் அன்னை" (உவமை அணி)

vii. "முடித்த திங்களைத் தொடுத்து உடுக்கள் உற்றல் ஒத்ததே" (உவமை அணி)

viii. "ஏதமின்றி மாலியீன்ற காந்தி என்று தோன்றலை" (உவமை அணி)

ix. "பாதமொன்றும் சோமன் ஈன்ற பால் நிலாவை மானுமே" (உவமை அணி)

x. "பதும நேரு கண்செய" (உவமை அணி)

xi. "மின்னல் மாரி தூவலொத்த" (உவமை அணி)

xii. "நீர் தவழ் தீ என" (உவமை அணி)

xiii. "விண்ணின் நீர்முகில் மீன் என" (உவமை அணி)

xiv. "காவில் ஓடிய முத்து என" (உவமை அணி)

xv. "ஏவி ஓடிய கோல் விழி" (உவமை அணி)

xvi. "இன்ப நெடுங்கடல்" (உருவக அணி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

xvii. "தூவு உண்கண் தாதுவ தூய்மலர் வாய்" (உவமை அணி)

xviii. "இடைத் துவளும் கொடி கொம்பில் ஏறும், தனி நல் செய்கை ஈடு இலார் அம்பினால் அபயர் செயும் அத்துணை நம்பினார்" (உவமை அணி)

xix. "உடுமுடியாள்" (உருவக அணி)

xx. "கூறுவாள் செயும் கொள்கையின்" (உவமை அணி)

xxi. "வாள் எடுத்த கண் மாதொடு" (உவமை அணி)

xxii. "தாள் எழும் கமலம் சுடர் தாவிய கோள் எழும் கதிர் கொண்டு என" (உவமை அணி)

xxiii. "மாலை மேவு வேங்கை பற்றி" – பாடல் முழுவதும் மடக்கணி இடம்பெற்றுள்ளது.

7. வீரமாமுனிவரின் கவிதைப் பண்புகள் :

i. விருத்தப் பாவால் ஆனதாக இப் பாடல்கள் அமைந்துள்ளன.

ii. பதினைந்தாம் பாடலில் தொடங்கி ஒரு சில பாடல்கள் நீங்கலாக அந்தாதித் தொடையில் (ஒரு பாடலின் இறுதிச் சீர், அடுத்துவரும் பாடலின் தொடக்கமாக அமைதல்) பாடல்கள் அமைந்துள்ளன.

iii. விவிலியச் செய்திகளையும், வரலாற்றையும் பின்பற்றியதாகவே தேம்பாவணி காப்பியத்தின் கதை அமைந்துள்ளது.

iv. பாடல்கள் பலவும் தமிழர் பண்பாட்டினைத் தழுவியே இயற்றப்பட்டுள்ளன.

v. பொருளழகு, சொல்லழகு, ஓசையின்பம், அணிச்சிறப்பு என்பன மெருகுடன் விளங்குகின்றன.

vi. பெரும்பாலும் உவமையணியினைப் பயன்படுத்தியதுடன், சிறுபான்மை உருவக அணியையும் பயன்படுத்தியுள்ளதைக் காண முடிகிறது. ஒரு பாடலில் மட்டும் (மூன்றாம் பாடல்) மடக்கணி வந்துள்ளது.

vii. கணிசமான அளவு வடசொற்கள் பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

viii. வர்ணனைகள், உரையாடல்கள், உணர்ச்சிச் சுழிப்புகள் என்றவாறு கதையும் பாடல்களால் நகர்த்தப்படுவது சிறப்பானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பாரதியார் பாடல்கள்

"பாமரராய், விலங்குகளாய், உலகம் அனைத்தும் இகழ்ச்சி சொலப்பான்மை கெட்டு" ப் பாரத மக்கள் பிரித்தானியருக்கு அடிமை களாய் வாழ்ந்து வந்த காலத்தில், 1882 டிசம்பர் 11 இல் தமிழ் நாட்டின் எட்டயபுரத்தில் தோன்றியவர் தான் 'பாட்டுக்கொரு புலவன்' பாரதியார். 1921ஆம் ஆண்டு செப்டெம்பர் 12 இல் தமது 39வது வயதில் புகழுடம் பெய்தினார். இந்தக் குறுகிய கால வாழ்வில் அவர் சாதித்தவை ஏராளம்.

தமிழ்க் கவிதையுலகம் புதுத் தடத்தில் நடைபோடப் பாதை சமைத்தார். 20ஆம் நூற்றாண்டு 'பாரதியுகம்' எனத் தக்கதாகத் தம் எழுத்துக்களால் புதிய பரிமாணங் களை உருவாக்கினார். தாய்மொழியாம் தமிழ்மொழிப்பற்றும், பாரத தேசப்பற்றும் அவரிரு கண்களாக விளங்கின. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் உந்துசக்தியாக விளங்கி, அதற்கெனத் தேசபக்திப் பாடல்களை இயற்றியும், கட்டுரைகளை எழுதியும் விடுதலைத் தீ மூட்டினார். 'இந்தியா', 'சுதேசமித்திரன்', 'சக்கரவர்த்தினி', 'பாலபாரதா' (ஆங்கிலம்), 'விஜயா', 'தினசரி', 'சூர்யோதயம்', 'கர்மயோகி', முதலான பத்திரிகைகளில் பணிபுரிந்து தமது கருத்துக்களைத் துணிவோடு எழுதினார்.

பாரதியார் தமிழ்ச்சிறுகதையின் முன்னோடிகளில் ஒருவர். அவரது 'ஆறில் ஒரு பங்கு' 'சுவர்ணகுமாரி', போன்றகதைகளும், வங்காளமொழியில் தாகூர் எழுதிய கதைகளின் மொழிபெயர்ப்பு களும் குறிப்பிடத்தக்கவை. நாவல் முயற்சியிலும் பாரதியார் ஈடுபட்டு "சின்னச்சங்கரன் கதை" (1913 – 14) எழுதிய போதிலும், அதன் பிரதி கிடைக்கவில்லை. எளியசொல், பொருண்மை, பாமரரும் படித்தின் புறும் யாப்புக்கள், இனிய மெட்டுகள், சந்தங்கள் ஆகியன கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி கவி பாடினார். கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயிற்பாட்டு ஆகியன பாரதிக்குப் பெருமை சேர்த்த முப்பெரும் இலக்கியச் செல்வங்களாகும். தத்துவப் பொருள் பொதிந்த 'ஞானரதம்', புரட்சிக் கருத்தமைந்த 'சந்திரிகையின்கதை', நீதிபோதிக்கும் 'நவதந்திரக் கதைகள்' ஆகியன பாரதியின் இன்னொரு பரிமாணத்தைக் காட்டுவன. தேசிய கீதங்கள், தோத்திரப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள், புதிய ஆத்திசூடி, பாப்பாப் பாடல்கள், பாரதி அறுபத்தாறு, சுயசரிதை, வசன கவிதைகள், சான்றோர் பற்றிய பாடல்கள், இயற்கை பற்றிய பாடல்கள், பெண்கள் பற்றிய பாடல்கள், சமூக சீர்திருத்தப் பாடல்கள் எனப் பாரதியியற்றிய பாடல்களின் பரப்பு விரிகிறது.

பதினான்கு வயதில் செல்லம்மாளை மணம்புரிந்து, தங்கம்மாள் என்னும் பெண் குழந்தைக்குத் தந்தையாகி, வறுமையின் கோரப்பிடியில் சிக்கித்தவித்து, ஆங்கிலேய ஏகாபத்தியத்தின் இரும்புக் கரங்களுக்கு அஞ்சிப் புதுச்சேரியில் வாழ்க்கை நடத்தி, அங்கிருக்கும் போது பாரதிதாசனுடன் அன்புறவைப் பேணி, மீண்டும் மனைவியின் ஊரான கடலூருக்குத் திரும்பி, திருவல்லிக்கேணியில் கோயில் யானையால் தாக்குண்டு, நோயினால் துன்பமுற்றுத் தம் சிம்மக்குரலை நிறுத்திக் கொண்டவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

பாரதியார் இயற்றிய வசன கவிதைகள் மூலம், தமிழின் இன்றைய புதுக்கவிதைக்கு அவர் முன்னோடியாகின்றார். பாரதியின் காலகட்டத்தினை நடுநாயகமாகக் கொண்டே இன்று தமிழிலக்கிய ஆய்வுகள் பலவும் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், பிரெஞ்சு, போன்ற மொழிகளில் சிறந்து விளங்கிய பாரதியார் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்" என்றார். தற்காலத்தில் பாரதியின் படைப்புக்கள் பற்றிய ஏராளமான நூல்கள் வெளிவந்துள்ளன. அவரது வாழ்க்கையைச் சித்திரிக்கும் திரைப்படங்களும் வெளியாகியுள்ளன.

இங்கு பாரதியாரின் **குயிற் பாட்டு, கண்ணம்மா என் காதலி பெண் விடுதலை, பாஞ்சாலி சபதம்** ஆகிய நான்கு பாடல்களின் சில பகுதிகள் மாத்திரம் இடம்பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. குயிற் பாட்டு

மகாகவி பாரதியாரின் முப்பெரும் கவிதைகளில் ஒன்றாகக் **குயிற் பாட்டு** அமைந்துள்ளது. இந்த மூன்று பெரும் கவிதைகளும் 1912 ஆம் ஆண்டு இயற்றப்பட்டவை. ஆனால் அவை அச்சில் வெளிவந்த காலப்பகுதி பிந்தியதாகும். குயிற் பாட்டு ஒன்பது சிறு பிரிவுகளைக் கொண்டது; 262 அடிகளால் ஆனது. இறுதி இரண்டு அடிகளிலும் "வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்க, யாதானுஞ் சற்றே இடமிருந்தாற் கூறீரோ?" என்று பாரதியார் நிறைவு செய்திருப்பதனால், தத்துவ ரீதியாகவும் "குயிற் பாட்டை" நோக்க இடமுண்டு. வெளிப்படையாகப் பார்த்தால் குயில், தனது காதல் கதையைக் கூறுவதாகவும்., அதன்மீது கவிஞர் கொண்ட காதலை எடுத்துரைப்பதாகவும் தோன்றும்.

இங்கு குயிற் பாட்டின் இரண்டாம் பகுதியான "குயிலின் கதை" என்பதில் காணப்படும் 28 – 46 பாடல் அடிகள் வரையான பகுதியே, பாடப் பரப்புக்குரியதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. குயிலின் இன்னிசையில் மனம் பறிகொடுத்த கவிஞர் (பாரதியார்), அது கூறிய காதல் கதையினைச் செவி மடுக்கும் போது, குயில் கூறியதாகக் காணப்படும் இப் பகுதியில், இயற்கையின் பல்வேறுபட்ட இனிய இசைக் கோலங்கள், பெண்கள் இசைக்கும் இனிமையான கீதங்கள், மனிதர்கள் இசைக்கும் கருவிகளின் இன்னோசைகள் ஆகியவற்றில், மனம் பறிகொடுத்த குயிலின் நிலை எடுத்துக் காட்டப் பட்டுள்ளது.

கானப் பறவை கலகலெனும் ஓசையிலும்
காற்று மரங்களிடைக் காட்டும் இசைகளிலும்
ஆற்றுநீ ரோசை அருவி யொலியினிலும்,
நீலப் பெருங்கடலெந் நேரமுமே தானிசைக்கும்

ஓலத்திடையே உதிக்கும் இசையினிலும்
மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால்
ஊனுருகப் பாடுபடுவதில் ஊறிடுந்தேன் வாரியிலும்
ஏற்றநீர்ப் பாட்டின் இசையினிலும்ஈ நெல்லிடிக்குங்

கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ண மிடிப்பார்தஞ் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார் பழகு பல பாட்டினிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டமிட்டுப் பெண்கள் வளைக் கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி யிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்

வேயின் குழலோடு வீணைமுதலா மனிதர்
வாயினிலுங் கையாலும் வாசிக்கும் பல்கருவி
நாட்டினிலுங் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும்
பாட்டினிலும், நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்
நாவும் மொழிய நடுக்கமுறும் வார்த்தைகளைப்
பாவி மனந் தானிறுகப் பற்றிநிற்ப தென்னேயோ?

பாடற் பொருள் :

காட்டில் வசிக்கும் பல்வேறுபட்ட பறவைகள்" கல கல" என எழுப்புகின்ற ஒலியினிலும், காற்றானது மரங்களிடையே வீசும் போது, மரங்கள் அசைந்து அசைந்து எழுப்புகின்ற ஒலியினினும், ஆற்று நீரானது சலசலத்து ஓடும் ஒலியினிலும், அவ்வருவிகள் மலையுச்சிகளிலிருந்து வீழும் போது எழுப்புகின்ற ஒலியினிலும், நீல நிறமுடைய நீண்ட பெரும் கடலானது தொடர்ச்சியாக எந்நேரமும் இரைகின்ற சத்தத்தினால் உண்டாகும் இசை ஒலியினிலும், மனித குலப் பெண்களிடையே ஏற்படும் காதலானது வளர்ச்சி பெறுகையில், உள்ளத்தில் ஊறுகின்ற உணர்ச்சிகளால் அவர்கள் உடலுருகிப் பாடும்போது ஏற்படுகின்ற இனிய இன்ப வெள்ளத்திலும், ஏற்றம் இறைப்பவர்கள் பாடுகின்ற பாடலின் இசையிலும், நெல்லினை உரலில் இட்டுக் குற்றுகின்ற, அரியதான ஆபரணங்களை அணிந்த பெண்கள், குற்றும் போது ஏற்படுகின்ற "குக்கு" எனும் ஒலியினிலும், மாவினைப் பொடி செய்யச் சுண்ணம் இடிப்பவர்கள் பாடுகின்ற சுவைததும்பும் இனிய இசைப் பண்களிலும், பண்ணைகளில் வேலை செய்யும் பெண்கள் பாடுகின்ற அவர்களின் பழக்கத்தில் அமைந்த பல பாடல்களின் ஓசையிலும், பெண்கள் வட்ட வடிவமாக நின்று, தமது வளையல் அணிந்த கைகளைத் தட்டி ஒலி செய்து பாடிடும் இனிய கும்மிப் பாடலிலும், புல்லாங் குழலோடு வீணை முதலாக மனிதர்கள் வாயினாலும், கையினாலும் வாசிக்கும் பல்வேறு இசைக் கருவிகளின் இசையிலும், நாட்டிலும், காட்டிலும் நாள் முழுவதும் நன்றாக ஒலிக்கின்ற பல்வேறு இசைகளிலும், பாவியாகிய யான் என் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டேன். (ஆயினும்) நாவால் சொல்வதற்கே நடுங்குகின்ற சொற்களைப் பாவியாகிய எமது மனமானது இறுக்கமாகப் பற்றிக் கொண்டு நிற்பது ஏனோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் :

இயற்கையின் இனிய இசைக் கோலங்களிலும், மாந்தர்கள் தம் தொழில் முயற்சிகளின் போது பாடும் நாட்டார் பாடல்களிலும், பெண்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பாடுகின்ற, ஆடிப் பாடுகின்ற பாடல்களின் இனிமையிலும், வாயினாலும், கையினாலும் மனிதர்கள் இசைக்கின்ற பல்வேறு வாத்தியக் கருவிகளினின்றும் எழுப்புகின்ற இன்பந்தரும் இசையினிலும் தமது உள்ளத்தைத் தோயவிட்டு மகிழ்ச்சி கண்டவர் பாரதியார். அவரது கற்பனைச் சித்திரமாக அமைந்த கவிதையில், குயில் கூறுவதாக தமது மன உணர்ச்சியைப் பிரதிபலித்துள்ளமையை இங்குள்ள பாடல் வரிகள் எடுத்துக் காட்டுகின்றன.

இவ்விதமான இனிய இசைகளில் மனம் பறிகொடுத்த குயில் இறுதியிற் கூறிய இரண்டடியிலான வார்த்தைகள் அதன் துன்பமான தூழ்நிலையைக் காண்பிக்கின்றன. "நாவால் மொழிய நடுக்கமுறும் வார்த்தைகளை" என்பது, "காதல் போயிற் சாதல்" எனக் கொள்ளலாம். காதலால் வாடுகின்ற குயில், காதல் நிறைவேறாது போனால் சாதல் தான் முடிவு எனக் கூறுவதைக் "குயிற் பாட்டின்" முற்பகுதியில் காண முடியும். அந்த எண்ணத்தையே தொடர்ந்தும் இறுகப் பற்றிக் கொண்டிருப்பதையே "பாவி மனம் தானிறுகப் பற்றி நிற்பதென்னேயோ?"எனக் கூறப்பட்டுள்ளது. எத்தனையோ இசை வகைகளைக் கேட்டு, அனுபவித்து, இன்புற்ற என் மனம் இன்று, காதலில் கரைந்து தவிக்கிறதே என்பதைக் குயிலின் கூற்று உணர்த்துகிறது. இப் பாடல் வரிகளில் பறவைகள், மரங்கள், ஆற்று நீர், அருவி நீர், கடல் ஆகியன பிறப்பிக்கும் இசை இன்பத்தோடு பெண்களின் காதற் பாடல், ஆண்களின் ஏற்றமிறைக்கும் பாடல், பெண்கள் நெல்லிடிக்கும் ஓசை, சுண்ணம் இடிக்கும் போது பெண்கள் பாடும் பாடல், பண்ணையில் வேலை செய்யும் பெண்கள் பாடும் பாடல், பெண்கள் பாடும் கும்மிப் பாடல், பல்வேறு இசைக் கருவிகளின் இன்னிசை என்பன எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இவற்றைவிட "நாட்டினிலும், காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும்" என்பதனால் வாயாலும் கையாலும் இசைத்து எங்கும் ஒலிக்கின்ற இனிய இசை தரும் இன்பத்தில் திளைப்பதை உணர முடிகிறது.

கலகல - இரட்டைக் கிளவி; கானப்பறவை என்பது பறவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்குப் பொதுமைப் படுத்தப் பட்டுள்ளது; நீலப் பெருங்கடல் - பண்புத் தொகை; கோற்றொடியார் - அரிய ஆபரணம் அணிந்த பெண்கள், அலங்கரிக்கப்பட்ட ஆபரணம் அணிந்த பெண்கள். குக்கு - ஒலிக் குறிப்புச் சொல்; சுண்ணம் என்பது பொடி ஆகும், மஞ்சளைப் பொடி செய்தல், அரிசி வகைகளைப் பொடி செய்தல் முதலான வற்றைக் கருதியது சுண்ணம் இடித்தலாகும். அமுதம் இனிமையைக் குறிப்பது; கூட்டமுதம் என்பதனால் பெண்கள் பலர் பாடிடும் குரலினிமையின் அதிகரிப்பைக் கருதுக. வேயின் குழல் - புல்லாங் குழல். எனினும், உம், கலகல, ஓடு, ஓ - இடைச் சொற்கள். "தென்னேயோ" என்பதில் "ஓ" காரம் வினாப் பொருளில் வந்துள்ளது,

அருஞ்சொற் பொருள் :

கானப் பறவை - காட்டுப் பறவை; ஓலம் - ஆரவாரம்; ஊனுருக - உடலுருக; தேன் வாரி - தேன் வெள்ளம், தேன் மழை; ஏற்றநீர் - நீர் இறைக்கும்; கோற்றொடி - அரியதாகச் செய்யப்பட்ட வளையல்; பண் இசை; அமுதப் பாட்டு - இனிமையான பாடல்; கூட்டமுதம் - ஒன்று சேர்ந்த இனிமை; வேய் - மூங்கில்; நடுக்கமுறும் - அச்சமுறும், பயப்படும்.

ஆ. கண்ணம்மா என் காதலி

பாரதியாரின் முப்பெரும் பாடல்களில் "கண்ணன் பாட்டு"த் தொகுதியும் அடங்கும். இதில் 23 தலைப்புக்களிலான பாடல்களுள. கண்ணன் மீது அதீத பக்தி கொண்டவர் பாரதியார். இப் பாடல்களில் கண்ணனைத் தோழனாக, தாயாக, தந்தையாக, சேவகனாக, அரசனாக, சீடனாக, சற்குருவாக, கண்ணம்மா எனும் குழந்தையாக, விளையாட்டுப் பிள்ளையாக, காதலனாக, காந்தனாக, கண்ணம்மா எனும் காதலியாக, ஆண்டவனாக, குலதெய்வமாகப் பல்வேறு நிலைகளிலும் கற்பனை செய்து பாடியுள்ளார். ஒவ்வொரு பாடலிலும் பாரதியாரின் கற்பனாசக்தி, மொழிஆளுமை, கண்ணன் மீது கொண்டுள்ள பக்தி, ஓசையின்பம், கலைத்துவம் முதலான பலவற்றையும் தரிசிக்க முடிகிறது. இதில் "கண்ணன் என் காதலன்" பற்றிய ஐந்து பாடல்களும், "கண்ணம்மா என் காதலி" பற்றிய ஆறு பாடல்களும் தனித்துவமான பல்வேறு பாவனைக் கோலங்களில் பாடப்பட்டுள்ளன. இங்கு **கண்ணம்மா என் காதலி** என்ற தலைப்பி லுள்ள இரண்டாவது பாடல் பாடப்பரப்பிற்குரியதாக அமைந்துள் ளது. பின்னே வந்து கண் மறைக்கும் காதலியின் செயல்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிறுத்திய சிருங்காரரசப் பாடல் இதுவாகும். பல்லவர் காலத்தில் பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகவும், தன்னைத் தாயாகவும் கருதித் தாலாட்டுப் பாடினார். அதே போன்று குலசேகர ஆழ்வாரும் தாலாட்டுப் பாடல்களைப் பாடியுள்ளார். தேவாரத் திருமுறைகளில் இறைவனைத் தலைவனாகவும், ஆன்மாவைத் தலைவியாகவும் கருதிய நாயகன் - நாயகி பாவத்துடனான பல பாடல்களைக் காண முடியும். ஆண்டாளின் "நாச்சியார் திருமொழிப் பாசுரங்கள்" கூட இத்தகையனவே. இந்த மரபின் தொடர்ச்சியாகப் பாரதியாரும் "கண்ணம்மா என் காதலி" யைப் பாடினாரெனலாம். ஆனால் இப் பாடலில் தன்னைக் காதலனாகவும், கண்ணனைக் காதலியாகவும் பாவனை செய்துள்ளார் பாரதியார். கண்ணன் மீதான காதல் உணர்வை மறுதலையாகக் கண்ணம்மா மீது ஏற்றிப் பாடும் பாடல்களில் இயற்கையின் வனப்புக்கள் பலவற்றையும் கண்ணம்மாவின் எழிற்றோற்றத்தில் கண்டு மகிழ்வதாகப் படைத்துள்ளார்.

1. மாலைப் பொழுதிலொரு மேடை மிசையே
வானையும் கடலையும் நோக்கி யிருந்தேன்
மூலைக் கடலினையவ் வான வளையம்
முத்தமிட் டேதழுவி முகிழ்த்தல் கண்டேன்
நீல நெருங்கிடையில் நெஞ்சு செலுத்தி
நேரங் கழிவதிலும் நினைப்பின்றியே
சாலப் பலபலநற் பகற் கனவில்
தன்னை மறந்தலயந் தன்னில் இருந்தேன்

பொருள்:

மாலை வேளையில், ஒரு மேடை போன்ற இருக்கையின் மீது அமர்ந்து வானையும், கடலையும் பார்த்தபடி இருந்தேன். அப்போது கடலின் எல்லையாகத் தோன்றும் அடிப்பகுதியில், அந்த வளைந்து தோன்றும் வானமானது, கடலை முத்தமிட்டுத் தழுவிக் கொள்வது போல் குவிந்திருக்கக் கண்டேன். நீலநிறமான கடலுக்கும் வானுக்கும் இடையிலான நெருக்கமான காட்சியில் மனதைப் போகவிட்டு, நேரம் கழிந்து செல்வது பற்றிய சிந்தனை இல்லாமல், மிகவும் பல்வேறு நல்ல காட்சிகளைப் பகலில் காணும் கனவு போலக் கண்டு தன்னையே மறந்திருக்கும் ஓர் ஒழுங்கு முறையினில், நான் இருந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் :

கடலை, வான் தழுவும் இயற்கைக் காட்சி தந்த இன்பத்தில் தன்னை மறந்து இலயித்திருந்த கவிதா உள்ளத்தை இப் பாடலில் தரிசிக்க முடிகிறது. கண்களின் எட்டிய தூரத்தில் கடலின் எல்லை போல் தெரியும் பகுதியே "மூலைக் கடல்" எனக் கூறியிருப்பது நோக்கத் தக்கது. பார்க்கும் போது வானும் கடலும் நெருங்கி முத்தமிட்டு ஆலிங்கனம் செய்வது போல் தோன்றுகிறது எனக் கற்பனை செய்கிறார் கவிஞர். "நீலநெருக்கிடையில்" எனக் கூறியிருப்பது, நீல நிறமுடைய கடலுக்கும் வானத்துக்குமான நெருக்கமான தோற்றத்தையாகும். "வான் வளையம்" என்பதனூடாக அரைவட்ட வடிவிலான வானத் தோற்றம் உருவகமாக வர்ணிக்கப் பட்டுள்ளது. "முகிழ்த்தல்" என்பது குவிதல் என்று பொருள் தரும். "நெஞ்சு செலுத்தி" என்பது நெஞ்சம் பறிகொடுத்து எனக் கொள்ளலாம். "பகற் கனவு" என்பதனால் கவிஞரின் கற்பனைகள் உண்மையற்ற போலித் தோற்றங்கள் எனவும் கொள்ளலாம். "லயந் தன்னில்" என்பது ஓர் ஒழுங்கு முறைக்காட்பட்டு எனக் கருதலாம். சால - உரிச் சொல்; ஏ, உம், ஐ, இல் - இடைச் சொற்கள்.

அருஞ்சொற் பொருள் :

மேடை - உயர்ந்ததான இருக்கை; மிசை - மேல்; மூலைக் கடல் - எல்லையாகத் தோன்றும் கடல்; வான வளையம் - அரை வட்டமான வானம்; முகிழ்த்தல் - குவிதல்; சால - மிகவும்; பகற் கனவு - பலிக்காத கனவு, நிறைவேறாத கனவு; லயம் - தாளம், ஒழுங்கு;

2. **ஆங்கப் பொழுதிலென் பின்பு றத்திலே**
ஆள்வந்து நின்றெனது கண்ம றைக்கவே
பாங்கினிற் கையிரண்டுந் தீண்டி யறிந்தேன்
பட்டுடை வீசுகமழ் தன்னிலறிந்தேன்
ஓங்கிவரு மூவகை யூற்றி லறிந்தேன்
ஒட்டுமி ரண்டுளத்தின் தட்டிலறிந்தேன்
வாங்கி விடடிகையை யேடி கண்ணம்மா!
மாய மெவரிடத்தில்? என்று மொழிந்தேன்.

பொருள் :

அங்கே, அப்பொழுது, என் பின்புறமாக ஆளொன்று வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று என் கண்ணைப் பொத்தி மறைக்கவே, மறைத்தவர் யாரென்பதை இயல்பாகவே அவரது பொத்திய கைகள் இரண்டையும் தொட்டுப் பிடித்ததன் மூலம் அறிந்து கொண்டேன்; அவரது பட்டாடையில் வீசுகின்ற வாசத்தினால் அறிந்து கொண்டேன்; பெருகி வரும் மகிழ்ச்சியுணர்வின் ஊற்றினால் அறிந்து கொண்டேன்; ஒன்று சேர்ந்த இரண்டு உள்ளங்களின் இணைப்பின் மூலம் அறிந்து கொண்டேன். "எடியே கண்ணம்மா" கைகளை எடுத்து விடுவாயடி; இந்த மறைக்கின்ற வேலைகளை யாரிடத்தில் செய்கிறாய்? என்று கூறினேன்.

விளக்கம்:

இயற்கை இன்பத்தில் திளைத்திருந்த கவிஞரைப் பின்புறமாக ஒரு ஆள் வந்து இரு கைகளாலும் கண்ணை மூடி மறைத்த போது, அந்தக் கைகளைத் தொட்டுப் பார்த்தும், அணிந்திருந்த பட்டாடையில் கமழும் மணத்தைக் கொண்டும், பெருகி நிற்கும் மகிழ்வினால் உண்டாய உணர்வின் அதிகரிப்பினையுணர்ந்தும், ஒன்று சேர்ந்த இரண்டு மனங்கள் எழுப்பும் ஓசையைக் கொண்டும் பொத்தியவள் தன் காதலி கண்ணம்மா என அறிந்து, கையை விடடி கண்ணம்மா, இந்த மறைக்கின்ற மாய வேலைகளை நீ யாரிடத்தில் செய்கிறாய்? எனச் சொல்லியதாக அமைந்த கற்பனையினை வெளிக் காட்டுவதே இந்தப் பாடல். "கண் பொத்துதல்" என்பது சங்க காலம் முதல் தமிழர் பண்பாட்டில் வெளிக் காட்டப்படும் காதல் நாடகம். இப் பாடலிலும் தன் கண்களைப் பொத்தியவள் தனது காதலி கண்ணம்மாவே தான் என்பதைக் கவிஞர் உணர்ந்தறிந்ததாகக் குறிப்பிடும் நான்கு விதமான அனுபவங்கள் நயமானவை. உண்மைக் காதலின் உயர்வைக் காட்டுபவை. சாதாரணமான நடைமுறையில் பின்னாலிருந்து கண்ணை மூடி மறைப்பதுவும், மறைத்தவரை அடையாளம் கண்டு "கையை எடு" எனக் கூறுவதும் உள்ளதாயினும், இங்கு கவிஞர், இனங் கண்ட அம்சங்கள் சிறப்பானவை. நிறைவேறாத காரியத்தைக் குறிக்கப் "பகற் கனவு" என்ற மரபுத் தொடரைப் பயன்படுத்துவர். இப் பாடலிலும் கற்பனைக் கனவில் மிதந்த கவிஞர் இதனைப் பயன்படுத்தியுள்ளார் எனலாம். வீசுகமழ் - வினைத் தொகை. உவகையூற்று - வேற்றுமைத்தொகை. வாங்கி விடல் - விட்டு விடல்; உள்ளத்தின் தட்டு என்பது, உள்ளத்தினது தட்டு என்பதாகி, ஆறாம் வேற்றுமைப் பொருளில் வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருஞ்சொற் பொருள் :

ஆங்கு - அங்கு; பாங்கினில் - இயல்பினில், தன்மையில்; தீண்டி - தொட்டு; கமழ் - மணக்கும்; ஓங்கி - அதிகரித்து, மிகுந்து; உவகை - மகிழ்ச்சி, ஆனந்தம்; ஊற்று - பெருக்கு, சுரப்பு; தட்டில் - மண், உலோகப் பாத்திர வகை, தங்குதல், கட்டுதல்; வாங்கி விடல் - எடுத்து விடல்; மாயம் - பொய், களவு.

3. **சிரித்த ஒலியிலவள் கைவி லக்கியே**
திருமித் தழுவி என்ன செய்தி சொல் என்றேன்
நெரித்த திரைக் கடலில் என்ன கண்டிட்டாய்?
நீல விசும்பினிடை என்ன கண்டிட்டாய்?
திரித்த நுரையினிடை என்ன கண்டிட்டாய்?
சின்னக் குமிழிகளில் என்ன கண்டிட்டாய்?
பிரித்துப் பிரித்துநிதம் மேகம் அளந்தே
பெற்ற நலன்கள் என்ன? பேசுதி என்றாள்

பொருள் :

அவள் (கண்ணம்மா) சிரித்த சிரிப்பொலியைக் கேட்டு, அவளின் கைகளை அப்புறமாக விலக்கி, திடீரென அவளைக் கட்டித் தழுவி "என்ன செய்தி சொல்" என்றேன். வானுடன் நெருங்கியிருந்த அலை வீசும் கடலில் எதனைக் கண்டாய்?; நீல வானத்தில் எதனைக் கண்டாய்?; அலைகின்ற கடல் நுரைகளிடத்தில் எதனைக் கண்டாய்?; சிறிய அலைக் குமிழிகளில் எதனைக் கண்டாய்?; விட்டு விட்டுத் தினமும் மேகத்தை ஆராய்ந்து பெற்றுக் கொண்ட நன்மைகள் எவையெனக் கூறுவாயாக என்றாள்.

விளக்கம் :

கண் மறைத்த கண்ணம்மாவைக் கவிஞர் அடையாம் கண்ட போது, அவள் சிரித்தாள். அவளின் கைகளை விலக்கிய கவிஞர், அவளைத் திடீரெனக் கட்டித் தழுவி "என்ன செய்தி சொல்" என்று கூறினார். அவளோ, கடலில், வானில், கடல் நுரையில், அலைக் குமிழியில் எவற்றைக் கண்டு விட்டாய்? எனக் கேட்டதுடன், விட்டு விட்டுத் தினமும் மேகத்தை ஆராய்ந்து, நீபெற்ற நன்மைகள் எவையெனச் சொல்லுவாய் எனக் கூறி நின்றாள் என்பதை இப்பாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுகிறது. கவிஞரின் கற்பனைகளை அவள் கேலி செய்கிறாளோ அல்லது அவரிடமிருந்து தகுந்த, நல்ல இனிமையான பதிலை எதிர் பார்க்கிறாளோ தெரியாது. "திருமித் தழுவி" என்பதைத் திடீரெனக் கட்டித் தழுவி எனக் கொள்ளலாம். "பிரித்துப் பிரித்துத் தினம் மேகம் அளந்தே" என்பதன் மூலம் தினந்தோறும் வந்து கடற்கரையோரம் அமர்ந்து கற்பனையில் மூழ்கும் கவிஞரின் செயல் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. நீல விசும்பு -பண்புத் தொகை.

அருஞ்சொற் பொருள் :

திருமி - திடீரென்று; நெரித்த - நெருங்கிய; விசும்பு - ஆகாயம்; திரித்த - அலைந்த, முறுக்குண்ட; அளந்தே - ஆராய்ந்தே; நலங்கள் - நன்மைகள்.

4. நெரித்த திரைக் கடலில் நின்முகங் கண்டேன்
நீல விசும்பினிடை நின்முகங் கண்டேன்
திரித்த நுரையினிடை நின்முகங் கண்டேன்
சின்னக் குமிழிகளில் நின்முகங் கண்டேன்
பிரித்துப் பிரித்துநிதம் மேகம் அளந்தே
பெற்றதுன் முகமன்றிப் பிறிதொன் றில்லை
சிரித்த ஒலியினுள் கைவி லக்கியே
திருமித் தழுவியதில் நின்முகங் கண்டேன்

பொருள் :

நெருங்கிய அலைவீசும் கடலில், உன் முகத்தைப் பார்த் தேன்; நீல வானத்தில் உனது முகத்தைப் பார்த்தேன்; அலைகின்ற கடல் நுரைகளிடத்தில் உனது முகத்தைப் பார்த்தேன்; சிறிய நீர்க் குமிழிகளில் உனது முகத்தைப் பார்த்தேன்; விட்டு விட்டுத் தினமும் மேகத்தை ஆராய்ந்து பெற்றதெல்லாம் உன் முகம் அல்லாது வேறொன்றுமில்லை. உன் சிரிப்பொலியின் போது உனது கைகளை விலக்கித் திடீரெனக் கட்டித் தழுவிய போதும் உன் முகத்தையே பார்த்தேன்.

விளக்கம் :

பார்க்கும் போதெல்லாம் இயற்கையின் எல்லாவிடங்களிலும் கண்ணம்மாவின் முகத்தையே பார்த்ததாகக் கவிஞர் கூறுவதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்த பாடலிது. இதற்கு முதற் பாடலில் "என்ன கண்டிட்டாய்" என்று கண்ணம்மா கேட்ட கேள்விக்குரிய பதில் இப் பாடலில் கூறப்பட்டுள்ளது. கண்ணம்மா மீது கொண்ட காதலையன்றி வேறொன்றையும் காண முடியாத உள்ளத்தின் வெளிப்பாடு இது வாகும். கண்ணனைக் காதலியாகக் கற்பனை செய்த பாரதியாரின் பக்தியின் குரல் இதுவெனலாம். "நின் முகங் கண்டேன்" என்பதைப் பாரதியாரின் "காக்கைச் சிறகினிலே நந்தலாலா" பாடலுடன் பொருத்திப் பார்க்க முடியும்.

அருஞ் சொற் பொருள் :

நின் முகம் – உனது முகம்; பிறிதொன்றும் – வேறொன்றும்;

இ. பெண் விடுதலை

பாரதியாரின் பல்வகைப் பாடல்கள் பகுதியில் **பெண் விடுதலை** என்னும் கவிதையும் இடம்பெற்றுள்ளது. புதுமைப் பெண், பெண்மை வாழ்க, பெண்கள் விடுதலைக் கும்மி ஆகிய பாடல்களை அடுத்து இப் பாடல் விளங்குகிறது. இந்த நான்கு கவிதைகளும் பெண்களின் எழுச்சியைப் பறைசாற்றுகின்றன. பாரதியார் பெண்ணுரிமைகள், பெண் விடுதலை பற்றியெல்லாம் தூர நோக்கோடு சிந்தித்தவர். உலக நாடுகளின் பெண் விடுதலை இயக்கங்கள் பற்றியும், பெண் விடுதலைக்காகப் பாடுபடுபவர்கள் பற்றியும் அறிந்திருந்தார். சீன நாட்டின் பெண் உரிமைவாதியும், தேசியவாதியுமான கவிஞர் சியூசீன் (1875 – 1970) பற்றி விரிவான கட்டுரையை எழுதியிருந்தார். அவரது கவிதை ஒன்றையும் ஆங்கில மூலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்துத் தந்திருந்தார். இந்தக் கவிதையே "பெண் விடுதலை" என்ற தலைப்பில் இங்கு தரப் பட்டுள்ளது.

பெண் விடுதலைக் கருத்துக்கள் உலக நாடுகள் பலவற்றில் பரவத் தொடங்கியிருந்த காலத்தில் வாழ்ந்தவர் பாரதியார். இயல்பாகவே ஆணும் பெண்ணும் சரிநிகர் சமமானவர்கள் என்பது அவரது கருத்து. பெண் விடுதலையானது தேச விடுதலை, சமூக விடுதலை ஆகிய தளங்களில் இருந்து வெளிப்பட்டது. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பும், இந்தியச் சமூகத்தில் பெண்ணடிமைத் தனத்தை ஒழிப்பதற்கான பெண்களின் முன்னோடி முயற்சிகளும் பாரதியாரைக் கவர்ந்தன. பெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைக்காகப் பெண்களுடன் ஆண்கள் பலரும் சேர்ந்து உழைக்கவும் போராடவும் தொடங்கினர். அவர்களில் பாரதியாரும் முக்கியமானவர். அவர், தமது கட்டுரைகள் பாடல்கள் மூலமாக முற்போக்கான கருத்துக்களை வெளிப் படுத்தினார். பால்ய விவாகம், பெண் கல்வி, விதவைகளின் மறுமணம் ஆகியன பற்றி ஆக்ரோஜமாக முழங்கினார். பெண்கள் எழுச்சி பெற வேண்டும் என அவர்களைத் தூண்டினார். அவர்கள் தமக்கெதிராக மேற்கொள்ளப் படும் அடக்கு முறைகளுக்கும், ஒடுக்கு முறைகளுக்கும் எதிராகப் போராட வேண்டும் என்றார். இத்தகைய சிந்தனைகளை உள்ளடக் கியதே "பெண் விடுதலை" க் கவிதையாகும். எளிய மொழி நடையில் எவரும் புரிந்து கொள்ளும் விதத்தில் இக்கவிதை படைக்கப் பட்டுள்ளது.

1. **விடுத லைக்கு மகளிரெல் லோரும்**
வேட்கை கொண்டனம்' வெல்லுவம் என்றே
திடம னத்தின் மதுக்கிண்ண மீது
சேர்ந்து நாம்பிர திக்கினை செய்வோம்
உடைய வள்சக்தி ஆண்பெண் ணிரண்டும்
ஒருநி கர்செய் துரிமை சமைத்தாள்'
இடையி லேபட்ட கீழ்நிலை கண்டீர்
இதற்கு நாமொருப் பட்டிருப் போமோ?

பொருள்:

பெண்களின் விடுதலையை மேற்கொள்வதற்கு, பெண்கள் யாவரும் விருப்பம் கொண்டவர்களாய் நிற்கின்றோம். இந்த முயற்சியில் நாம் வெற்றி பெறுவோம் என்று உறுதியுடைய மனத்தின் ஆசை நிரம்பிய கிண்ணத்தின் மீது நாம் அனைவரும் சேர்ந்து உறுதி மொழியினை எடுத்துக் கொள்வோம் என்று நிலைபெற்ற பராசக்தியா னவள், ஆணையும், பெண்ணையும் சரிநிகர் சமனாய்ப் படைத்து, அவர்களுக்கான உரிமையையும் ஆக்கிக் கொடுத்தாள். ஆனால் பெண்கள் இடைக் காலத்திலே அடிமை நிலையினை அடைந்து விட்டனர். இதனை நாம் ஏற்றுக் கொண்டு இருக்க முடியுமா?

விளக்கம்:

பெண் விடுதலை நோக்கிய பயணத்தின் தேவையை இப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் வலியுறுத்துகின்றது. சக்தியால் சமமாகப் படைக்கப்பட்ட ஆண், பெண் ஆகியோரிடையே இடையில் வந்த பேதம், பெண்களை அடிமையாக்கி விட்டது. அதைப் பொறுத்திருக்க மாட்டோம், விடுதலை விருப்பில் அனைவரும் இணைந்து கொண்டோம். அதற்கான உறுதி மொழியை எடுத்துக் கொண்டோம் என்று பெண்களின் விடுதலைக்கான எழுச்சி மொழிகள் இப் பாடலில் காணப்படுகின்றன. "திடமனத்தின் மதுக் கிண்ணமீது" என்பது உறுதி கொண்ட உள்ளத்தில் நிரம்பியுள்ள ஒரே விருப்பத்தின் மீது என்பதாகும். "மதுக் கிண்ணம்" - ஆசைக் கிண்ணம்; மதுவாகிய கிண்ணம் (பாத்திரம்) உருவக அணி; பிரதிக்கினை - உறுதி மொழி, சத்தியம்; "உடையவள் சக்தி" என்பதனை என்றும் நிலை பெற்றிருப்பவள் சக்தி எனக் கருதுக. "கீழ் நிலை" என்பது அடிமை நிலையைக் குறித்தது. ஆணுக்கு அடங்கி வாழும் நிலையாகும். "ஒருப்படல்" -ஏற்றுக்கொள்ளல், சம்மதித்தல்.

அருஞ் சொற்பொருள் :

வேட்கை - விருப்பம், ஆசை; திட - உறுதி; மது - இனிமை, தேன், கள்; பிரதிக்ஞை - உறுதி மொழி, சத்தியம்; ஒருப்படல் - உடன்படல்.

2. **திறமை யால்இங்கு மேனிலை சேர்வோம்**
தீய பண்டை இகழ்ச்சிகள் தேய்ப்போம்'
குறைவி லாது முழுநிகர் நம்மை
கொள்வ ராண்க ளெனிலவ ரோடும்
சிறுமை தீரநந் தாய்த்திரு நாட்டைத்
திரும்ப வெல்வதில் சேர்ந்திங் குழைப்போம்
அறவி ழுந்தது பண்டை வழக்கம்
ஆணுக் குப்பெண் விலங்கெனும் அ.:தே

பொருள் :

எங்கள் திறமையால் உயர்வு நிலையை அடைவோம்; தீமை தரும் பழைய காலத்துக் கீழ்மையான செயல்களை இல்லாது ஒழிப்போம்; எந்த விதமான குறையும் இல்லாமல் ஆண்களுக்குச் சமமாகப் பெண்களை ஏற்று நடத்துபவராக ஆண்கள் விளங்குவாராயின், அவரோடு நம் தாய்த் திரு நாட்டின் அடிமை நிலையை அகற்றி மீண்டும் வெற்றி காண்பதற்காக ஒன்றுபட்டு உழைப்போம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிமேல் பழைய காலத்து மூடவழக்கமெல்லாம் முற்றாகவே அகன்று விடும்; அதுபோன்றதே ஆணுக்குப் பெண் என்ற தடையுமாகும்.

விளக்கம் :

பெண்ணடிமைத் தனத்தை இல்லாதொழிப்பதற்குப் பெண்கள் முயற்ச்சிப்பதையும், ஆணும் பெண்ணும் சரிநிகர் என்பதை ஏற்கும் ஆண்களுடன் இணைந்து தாயக விடுதலைக்கு உழைக்கப் பெண்கள் தயாராயிருப்பதையும் அப்போது பெண்களை அடிமைப் படுத்திய பண்டைக் கால வழக்கங்களும், ஆணுக்குப் பெண் அடிமை என்ற விலங்கும் இல்லாது போகும். என்பதையும் இப்பாடல் எடுத்துக் கூறியுள்ளது. தங்கள் திறமையில் நம்பிக்கை கொண்ட பெண்மை பற்றியும், தேச விடுதலையானது பெண்களின் விடுதலையை வென்று தருவதாய் அமைய வேண்டும் என்பது பற்றியும் பெண்களின் குரல் இப் பாடலில் ஒலிப்பதைக் காண முடிகிறது. "பண்டை இகழ்ச்சிகள்" என்பது பழைமையான மூடப் பழக்க வழக்கங்களைக் குறிப்பது. அதனடிப்படையிலேயே பெண்ணடிமையும் தோன்றியது எனலாம். "அற விழுந்தது" - முற்றாகவே இல்லாமற் போனது. "ஆணுக்குப் பெண் விலங்கு" என்பதால் ஆணுக்குப் பெண் தடையானவள் என்ற மூடக் கருத்தை உணர்த்தியுள்ளமையை நோக்குக.

அருஞ் சொற்பொருள் :

மேனிலை - மேலான நிலை, உயர்வு நிலை; பண்டை - பழைய; இகழ்ச்சிகள் - கேவலமானவைகள், தாழ்வானவைகள், வெறுக்கத் தக்கவைகள்; தேய்ப்போம் - அகற்றுவோம், இல்லாமற் செய்வோம்; அற - முற்றாக; விலங்கு - தடை, மிருகம்.

3. **விடியும் நல்லொளி காணுதி நின்றே**
மேவு நாகரிகம்புதி தொன்றே
கொடியர் நம்மை அடிமைகள் என்றே
கொண்டு, தாம்முதல் என்றன ரன்றே
அடியோ டந்த வழக்கத்தைக் கொன்றே
அறிவு யாவும் பயிற்சியில் வென்றே
கடமை செய்விர், நந்தேசத்து வீரக்
காரி கைக்கணத் தீர், துணி வுற்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்:

நமது தேசத்தின் வீரமுள்ள பெண்கள் கூட்டத்தினரே! விடியலுக்கான நன்மை தருகின்ற ஒளியினை நின்று காணுங்கள். நாம் அடையப் போகின்ற நாகரிகமும் புதுமையான ஒன்றாகும். கொடியவர்கள் (ஆடவர்கள்) நம்மை அடிமைகள் என்று ஆக்கிக் கொண்டு தாம் எம்மிலும் மேலானவர்கள் என்று கூறிக் கொண்டார் கள் அல்லவா? அந்த வழக்கத்தை முற்றிலும் இல்லாது அழித்து, அறிவு சார்ந்த அனைத்திலும் அனுபவமுடையவராய் வெற்றி கண்டு நீங்கள் துணிவுடன் கடைமையைச் செய்வீராக.

விளக்கம்:

தங்கள் விடுதலைக்காகப் பெண்கள் ஆற்ற வேண்டிய கடைமையைத் துணிவுடன் செய்யுமாறு விழிப்புணர்வூட்டும் பாடலிது. இதில் பெண்கள் தம்மை அடிமைப் படுத்திய ஆண்களின் மேலாதிக்கத்தை இல்லாமற் செய்வதற்கு, அறிவு சார்ந்த அனைத்து விடயங்களிலும் பயிற்சி பெறவும், அவற்றுள் வெற்றி காணவும் வேண்டும் என அறிவுரை கூறப்பட்டுள்ளது. அத்துடன் துணிவுடன் பெண்கள் செயற்பட்டால் விடியலில் ஒளியைக் காணவும், புது நாகரிகத்தைப் பேணவும் முடியும் எனவும் பாடல் நம்பிக்கை ஊட்டுகிறது. இந்தியப் பெண்களை எழுச்சி கொள்ளச் செய்யும் பாரதியாரின் இலட்சியம் இப்பாடலில் விளங்குகிறது. "விடியும் நல்லொளி" என்பது பெண்கள் விடுதலை ஆகும். பெண்கள் அறிவிலும் அனுபவத்திலும் சிறப்புற்று, அடிமை நீங்கி வாழ்வது புது நாகரிகமாக விளங்கும் எனப்படுகிறது. பெண்களை அடிமை செய்யும் ஆண்களைக் "கொடியர்" எனப் பட்டது. காரிகைக் கணத்தீர் - பெண்கள் கூட்டத்தீர்.

அருஞ் சொற்பொருள்:

காணுதி - காணுங்கள்; மேவும் - அடையும், விரும்பும்; காரிகை - பெண்; கணம் - கூட்டம்.

ஈ. பாஞ்சாலி சபதம்

பாரதியாரின் முப்பெரும் பாடல்களில் **பாஞ்சாலி சபதமும்** ஒன்று. அடிமைப் பட்டுக் கிடந்த பாரத நாட்டின் விடுதலையை இலக்காகக் கொண்டு பாரத தேவியின் சபதமாக இதனை பாரதியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்தளித்தார். மகாபாரதத்தின் இப் பகுதியை எளிமையான சொல்லாட்சியுடனே, உணர்ச்சியைத் தூண்டும் விதத்தில் தந்துள்ளார். ஆங்கிலேயரைக் கௌரவர்களாகவும், இந்தியர்களைப் பாண்டவர்களாகவும், அஸ்தினாபுரத்தை இந்திய நாடாகவும் உருவகப்படுத்தி அஸ்தினாபுர மக்களை இந்திய மக்களாகவும், அவர்களை அடிமை நிலையிலிருந்து விடுதலை பெற ஊக்கமளிப் பதாகவும் இப் பாஞ்சாலி சபதம் அமைகின்றது. இதிலுள்ள இரண்டு பகுதிகளும் 72 தலைப்புக்களைக் கொண்டுள்ளன. இரண்டாம் பகுதியிலுள்ள **சூது மீண்டும் தொடங்குதல்** என்னும் தலைப்பின் கீழுள்ள ஒவ்வொன்றும் நான்கு அடிகளைக் கொண்ட நான்கு பாடல்களே பாடப்பரப்புக்குரியனவாக இங்கு தரப்பட்டுள்ளது. சூதாட்டத்தில் தருமன், சகுனியிடம் நாட்டை வைத்து இழந்ததன் பின்னர், மீண்டும் சூதினைத் தொடங்குதல் பற்றிய பாடல் இதுவாகும். திரும்பவும் ஆடிய சூதினிலேயே தருமன் தனது தம்பியரையும், திரௌபதியையும், தன்னையும் பணயம் வைத்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

காயுருட்டலானார் - சூதுக் களி தொடங்கலானார்
மாய முள்ள சகுனி - பின்னும் வார்த்தை சொல்லு கின்றான்
நீ அழித்த தெல்லாம் - பின்னும் நின் னிடத்து மீளும்
ஓய் வடைந்திடாதே - தருமா! ஊக்க மெய்து கென்றான்

கோயிற் பூசை செய்வோர் - சிலையைக் கொண்டு விற்றல் போலும்
வாயில் காத்து நிற்போன் - வீட்டை வைத் திழத்தல் போலும்
ஆயிரங்க ளான - நீதி யவை உணர்ந்த தருமன்
தேயம் வைத் திழந்தான் - சிச்சீ! சிறியர் செய்கை செய்தான்

நாட்டு மாந்தரெல்லாம் - தம்போல் நரர்களென்று கருதார்
ஆட்டு மந்தையாமென் - றுலகை அரசரெண்ணிவிட்டார்
காட்டு முண்மை நூல்கள் - பல தாங் காட்டினார்களேனும்
நாட்டு ராஜ நீதி - மனிதர் நன்கு செய்யவில்லை

ஓரஞ் செய்திடா மே - தருமத் துறுதி கொன் றிடாமே
சோரஞ் செய்திடா மே - பிறரைத் துயரில் வீழ்த் திடாமே
ஊரை யாளு முறைமை - உலகில் ஓர் புறத்து மில்லை
சாரமற்ற வார்த்தை! - மேலே சரிதை சொல்லுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்:

சூதாடும் தருமனும் சகுனியும் சொக்கட்டான் காய்களை உருட்டலானார்கள். மதிமயக்கும் சூதாட்டத்தைத் தொடங்கலானார்கள். தந்திரமுள்ள சகுனி, பின்னரும் சில வார்த்தைகளைச் சொல்லலானான். தருமா! இதுவரை நீ இழந்து போன அனைத்தும் திரும்பவும் உன்னிடத்தில் வந்து சேரும்; தளர்ந்து போய் விடாதே ஊக்கத்துடன் சூதாடு என்றான்.

கோயில்களில் பூசை செய்பவர்கள் கோயிற் சிலைகளையே எடுத்துக் கொண்டு போய் விற்றுப் பணம் சம்பாதிப்பதைப் போல, வீட்டினைப் பாதுகாத்து நிற்பவன், அந்த வீட்டையே ஈடு வைத்து இழந்து விட்டது போல, ஆயிரக் கணக்கான நீதி நெறிகள் யாவற்றையும் நன்கு அறிந்து உணர்ந்திருந்த தருமன், நாட்டைப் பணயமாக வைத்து இழந்து விட்டான். கேவலம், இழிந்தவர்கள் செய்யும் செயலைச் செய்து விட்டான்.

தேசத்து மக்களெல்லாம் தம்மைப் போன்ற மனிதர்கள் தானே என்று நினைக்க மாட்டார்கள். ஆட்டு மந்தையர்கள் போன்றவர்கள் என்று உலகத்தவர்களை அரசர்கள் நினைத்து விட்டனர். உண்மையான நீதி பற்றிக் கூறும் நூல்களில் உள்ளவை பலவற்றையும் தாங்களும் எடுத்துக் காட்டியுள்ளனர் ஆயினும், அரசர்கள் நிலை நிறுத்த வேண்டிய நீதியை ஆட்சி செய்யும் மனிதர்கள் நன்கு கடைப் பிடிக்கவில்லை.

பாரபட்சம் காட்டாமல், தரும நெறியில் செல்ல வேண்டிய உறுதியினை அழித்து விடாமல், வஞ்சகமாய் நடந்து விடாமல், மற்றவர்களைத் துன்பத்தில் ஆழ்த்தி விடாமல் நாட்டை ஆளுகின்ற முறையானது ஓர் இடத்திலும் இல்லை. பொருளற்ற சொற்கள் இவை. மேலும் வரலாற்றைக் கூறுகிறோம்.

விளக்கம்:

தனது வஞ்சக எண்ணம் கைகூடும் வரை தருமனைச் சூதாட்டத்தில் ஈடுபடுத்த விரும்பிய சகுனியின் கபடமான வார்த்தைகளே, இழந்ததை எல்லாம் திரும்பவும் பெற முடியுமாதலால் தொடர்ந்து சூதாடு எனத் தருமனை நோக்கிக் கூறியதாகும். தருமன் நீதி நெறிகள் உணர்ந்தவனாயினும் நாட்டைப் பணயமாக வைத்த இழிவான செயலை உவமைகள் மூலம் பாரதி கண்டிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேவேளை நாட்டை ஆளும் அரசர்கள் தமது குடிமக்களை ஆட்டு மந்தைகள் எனக் கருதி நடக்கும் முறையையும் எடுத்துக் கூறுவ துடன், நீதியான ஆட்சி உலகில் இல்லை; எல்லா அரசர்களும் பாரபட்சம், வஞ்சகம், பிறரைத் துன்பத்தில் ஆழ்த்தல் போன்ற வற்றையே செய்கிறார்கள் எனவும் கோபத்துடன் குறிப்பிடுவதை இப் பாடல் உணர்த்துகிறது.

கோயிற் பூசை செய்வோர் சிலையைக் கொண்டு விற்றல் - உவமானம்; தருமன் நாட்டைப் பணயமாக வைத்து இழந்தமை - உவமேயம்; பாதுகாக்க வேண்டியவரே அதனை அழித்தல் - பொதுத் தன்மை. வாயில் காத்து நிற்போன் வீட்டை வைத்திழத்தல் - உவமானம்; தருமன் நாட்டைப் பணயமாக வைத்திழந்தமை - உவமேயம்; பாதுகாக்க வேண்டியவரே பாதுகாக்கத் தவறியமை - பொதுத் தன்மை.

அருஞ் சொற்பொருள் :

காய் - சூதாட்டத்தில் பயன்படுத்தப் படும் சொக்கட்டான் காய்; களி - மயக்கந் தரும் மகிழ்ச்சி; மாயம் - பொய், களவு, மறைதல்; மீளும் - திரும்பும்; ஓய்வு - தளர்வு; ஊக்கம் - முயற்சி, மனவெழுச்சி; தேயம் - தேசம், நாடு; சிறியர் - இழிவானவர்; மாந்தர் - மனிதர்; நரர் - மனிதர்; மந்தை - கூட்டம்; நாட்டு - நிலை நிறுத்தும்; ஓரம் - பாரபட்சம்; உறுதி - திடம்; சோரம் - வஞ்சனை, களவு; வீழ்த்துதல் - அழுந்தச் செய்தல்; புறத்தும் - பக்கமும், இடத்தும்; சாரமற்ற - பொருளற்ற; சரிதை - சரித்திரம், வரலாறு.

குறிப்புகள்

1. பாரதியார் கண்ட குயிலை, மயங்கச் செய்த இசையொலி வகைகள் :

i. கானப் பறவையின் "கலகல" ஓசை.

ii. காற்றானது மரங்களுக்கிடையே வீசுவதால் எழும் ஒலி.

iii. ஆற்று நீரோசை.

iv. அருவி ஒலி.

v. நீலப் பெருங்கடலின் ஓலத்து ஓசை.

vi. மானுடப் பெண்கள் காதலுணர்வினால் உருகிப் பாடும் பாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை.

vii. ஏற்றம் இறைப்பவர் பாடும் இசை.

viii. பெண்கள் நெல்லிடிக்கையில் எழும் "குக்கு" எனும் ஒலி.

ix. சுண்ணம் இடிப்பார் பாடும் பாடலிசை.

x. பண்ணையில் வேலை செய்யும் பெண்கள் அடிக்கடி பாடும் பாடலிசை.

xi. பெண்கள் கைகொட்டி ஆடும் கும்மிப் பாடலின் இசை.

xii. புல்லாங் குழல், வீணை ஆகியவற்றின் இசை.

xiii. மனிதர்கள் வாயாலும், கையாலும் வாசிக்கும் பல்வேறு கருவிகளின் இசை.

xiv. நாட்டினில், காட்டினில் எந்நேரமும் நன்றாக ஒலிக்கும் பாட்டின் இசை.

2. பாரதியாரின் குயிற் பாட்டில் காணப்படும் கவிதைச் சிறப்புகள் :

i. நாட்டுப்புற இசைவகைகளையும், இயற்கையின் இசைக் கோலங்களையும் எடுத்துக் காட்டியுள்ளமை.

ii. இந்த இசை மரபுகளை இயற்கைவழி, கருவிவழி, வாய்ப் பாடல்வழி என மூன்று விதங்களில் வெளிப்படுத்தியுள்ளமை.

iii. பெண்கள், காதலுணர்வில் தோய்ந்து பாடும் பாடலைத் "தேன்வாரி" எனச் சிறப்பித்துக் கூறியுள்ளமை.

iv. "ஏற்ற நீர்ப் பாட்டு" என்பதில் ஏற்றம் இறைக்கும் ஒலி, நீரின் ஒலி, நீரிறைப்பவர் பாடும் பாட்டின் ஒலி ஆகிய மூவகை ஒலிகளையும் சங்கமிக்கச் செய்து சொல்லடுக்கியுள்ளமை.

v. நெல் இடிக்கும் மகளிர் வெளிப்படுத்தும் "குக்கு" வெனும் ஓசையைக் சிறப்பாகக் கூறியுள்ளமை.

vi. "பண்ணை மடவார் பழகு பல பாட்டினிலும்" என்ற தொடர் மூலம், காலங்காலமாய் அவர்கள் பழக்கப்பட்ட பல்வேறு பாடல்களைப் பாடி வருவதும், அவை எப்போதும் தெவிட்டாது, இன்பத்தை அவர்களுக்குத் தந்து உற்சாக மூட்டுவதையும் அழகுற எடுத்துக் காட்டியுள்ளமை.

vii. பெண்கள் கூட்டமாய்க் கூடியாடும் நாட்டுப்புறக் கும்மிப் பாடலின் போது, அவர்களின் பாட்டுக்குக் கைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துள்ள வளையல்கள் பின்னணி இசையை வழங்கிப் பெருமைப்படுத்துவதை "வளைக் கரங்கள் தாமொலிக்க" எனும் தொடர் மூலமாக உணர்த்தியுள்ளமை.

viii. எளிய சொல், இனிய சந்தம், இயற்கை தழுவிய பாடு பொருள், பொருத்தமான அணிப் பயன்பாடு, மரபுக் கவிதைப் பாங்கு, இசைப் பாடலாகும் தன்மை ஆகிய பல்வகைச் சிறப்புகளும் காணப்படுகின்றமை.

3. "கண்ணம்மா என் காதலி" பாடலில் காணப்படும் சிறப்புகள் :

i. பாரதியார், தன்னைக் காதலனாகவும் கண்ணனைக் கண்ணம்மா என்னும் காதலியாகவும் கருதிப் பாடிய புது வகையிலான கற்பனை.

ii. தெய்வீகக் காதலை மானுட நிலையில் உணர்ச்சி வெள்ளம் ததும்ப வெளிப்படுத்தியுள்ளமை.

iii. இயற்கையின் பல்வேறு கூறுகளான கடல், வானம், கடல் நுரை, நீர்க்குமிழி ஆகியவற்றில் காதலியின் முகத்தையே கண்டதாக நுட்பமான முறையில் வெளிப்படுத்தியமை.

iv. காதலன் - காதலி உரையாடற் பாங்கில் காட்சிப்படுத்தி யுள்ளமை.

v. கற்பனை நினைவுகளினூடாகக் கவிதையின் பாடு பொருளை நாடகப் பாங்கில் நகர்த்திச் சென்றமை.

vi. எளிமையான சொல்லாட்சி, சந்தமாகிய ஓசைச்சிறப்பு, கலையழகுடனான காட்சிகளின் வர்ணனை, எதுகை மோனை அணிகளை இலாவகமாகக் கையாண்டமை போன்ற கவிதை நுட்பங்களைப் பயன்படுத்தியமை.

vii. பழந்தமிழர் காதல் மரபில் காணப்படும் "கண்பொத்தல்" எனும் நிகழ்ச்சியினை மையப்படுத்திக் கண்ணம்மாவை (கண்ணனை) அறிமுகப்படுத்தியமை.

viii. மூலைக் கடல், நீல நெருக்கிடை, தன்னை மறந்த லயந் தன்னில், உவகையூற்றில், உளத்தட்டில், வாங்கி விடடி, திருமித் தழுவி, மேகம் அளந்தே முதலான சொற்றொடர் களைப் பயன்படுத்தி கவிதைக்கு அழகு சேர்த்தமை.

ix. மரபுக் கவிதையாகவும், இசையுடன் பாடத்தக்கதாகவும் அமைந்துள்ளமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பாரதியாரின் "பெண் விடுதலை" என்னும் கவிதை வெளிப் படுத்தும் கருத்துக்கள் :

i. பாரதியார் வாழ்ந்த காலத்தில் பெண்களின் அடிமை நிலை உச்சத்திலிருந்தது. இதனை நீக்குவதற்கு உதவவும், பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் கூடியதாகப் பாடிய பாடலாக விளங்குகிறது.

ii. இந்தியப் பெண்களின் விடுதலையை வற்புறுத்திய அதே வேளையில் இக்கவிதையானது, உலகப்பெண்கள் அனை வரதும் விடுதலையைப் பொதுமைப் படுத்தியதாகவும் கருதக் கூடியதாகவுள்ளது.

iii. ஆண்கள் சமுதாயம், பெண்ணினத்தை அடிமையாய் வைத்திருக்கும் கொடிய செயலை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்கிறது.

iv. ஆண் -பெண் சமத்துவத்தை வலியுறுத்துகிறது.

v. பெண்கள், தங்கள் விடுதலைக்காக ஒற்றுமையுடனும், துணிவுடனும் போராட வேண்டும் என்கிறது.

vi. பெண் விடுதலையைச் சமூக விடுதலையுடனும், தேச விடுதலையுடனும் இணைத்துக் கூறுகிறது.

vii. கால மாற்றம், விடுதலை முயற்சிகள், பெண்கள் அறிவிலும் அனுபவத்திலும் முன்னேறல் ஆகியவற்றைத் தெளிவு படுத்துகிறது.

viii. பெண் விடுதலைக்காக மகளிர் ஒன்றுகூடிப் பிரதிக்கினை (சபதம்) செய்வோம்; ஆணையும் பெண்ணையும் சரிநிகர் சமமாகச் சக்தி படைத்தாளாயினும் இடையிலே தான் பெண் அடிமைப் படுத்தப்பட்டாள்; அதனை நாம் ஏற்க மாட்டோம் என்று பெண்கள் சார்பான குரலாய் இக் கவிதை ஒலிக்கிறது.

ix. பெண்களாகிய நாம், எம் திறமையால் உயர்வோம்; பண்டைய மூட வழக்காறுகளை ஒழிப்போம், எமதுரிமையை ஆண்கள் ஏற்பாராகில் அவருடன் இணைந்து தேச விடுதலைக்குப் போராடுவோம் என்கிறது.

x. ஆணுக்குப் பெண் விலங்கு என்னும் பண்டைய வழக்கத்தை அழிப்போம்; எம்மை அடிமைகள் என்பவர் வழக்கத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாதொழிக்க அறிவு, பயிற்சி ஆகியவற்றில் வெற்றி காண்போம் என்கிறது இக் கவிதை.

xi. பெண்களிடையே விடுதலை உணர்வைத் தூண்டும் முகமாக, விடியலின் ஒளியைக் காணுவோம், புதிய நாகரிகம் பேணுவோம், அறிவாற்றலில் வெல்வோம், கடமையைச் செய்வோம், துணிவுடன் உழைப்போம், கூட்டமாகச் சேர்வோம், விடுதலைக்கான சபதம் எடுப்போம், திறமையால் உயர்வோம், பண்டைய வழக்கை ஒழிப்போம் என்றவாறு அழைப்பு விடுவதாக அமைந்துள்ளது.

5. பாரதியாரின் "பெண் விடுதலைக்" கவிதைச் சிறப்புக்கள் :

i. மொழி பெயர்ப்புக் கவிதை போலில்லாது, மூலக் கவிதை போன்று அமைந்திருத்தல்

ii. எளிய சொற் பிரயோகம், ஓசை நயம், எதுகை மோனை அணிப் பயன்பாடு.

iii. பெண் விடுதலை உணர்ச்சியை விதைப்பதான கருத்துச் செறிவு.

iv. பெண்கள் விடுதலை பெற முன்னரே, விடுதலை பெற்று விட்டதான உணர்வினை மிகைப்படுத்தும் அறைகூவலாக அமைந்திருத்தல்.

v. பெண்களின் விடுதலைக்கு உரமளிக்கக் கூடிய முன்னேற்ற வழிகளை இனங்காட்டல்.

vi. மரபுக் கவிதைப் பண்பினை உடையதாயிருத்தல்.

6. பாஞ்சாலி சபதத்தின் "சூது மீண்டும் தொடங்குதல்" பகுதியில் பாரதியார் முன்வைத்த கருத்துக்கள் :

i. ஏற்கெனவே சூதாட்டத்தில் நாட்டை வைத்திழந்த தருமனை, மேலும் சூதில் ஈடுபடுத்தும் கபடநோக்குடன் சகுனி, இதுவரை நீ இழந்ததனைத்தையும் திரும்பவும் பெற்றுக் கொள்ளலாம்; ஊக்கமுடன் சூதாடு எனக் கூறுதல்.

ii. தருமனின் செயலைக் கேவலமான சிறிய மனிதர் செயல் போன்றது எனக் கூறுவதுடன், கோயிற் பூசை செய்வோர் களவாகச் சிலையை விற்றல் போன்றும், வீட்டைக் காப்பவனே அதனை வைத்து இழத்தல் போன்றும், ஆயிரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி நெறிகளை உணர்ந்த தருமன் நாட்டைப் பணயம் வைத்து இழந்தான் எனக் கூறுதல்.

iii. நாட்டை ஆளும் மன்னர்கள், மக்களை ஆட்டு மந்தைகள் என்று கருதி நடக்கத் துணிந்து விட்டனர்; நீதி நூல்கள் பலவற்றை அறிந்து கூறினார்களேனும் அவர்கள் நீதியை நிலை நாட்டவில்லை. பாரபட்சம் இல்லாமல் தரும நீதியை அழிக்காமல், கபடத்தனமாக நடக்காமல், பிறரைத் துன்பப் படுத்தாமல் நாட்டை ஆளுகின்ற முறை உலகில் ஓரிடத்திலு மில்லை என்று கூறுதல்.

iv. அரசர்கள் பற்றிப் புகழ்ந்து கூறுவன யாவும் பொருளற்ற வார்த்தைகளே ஆகும் என வேதனையுடன் கூறுதல்.

7. "சூது மீண்டும் தொடங்குதல்" பகுதியின் கவிதைச் சிறப்புகள் :

i. எளிய சொற்கள், ஓசை ஒழுங்கு, அணி உபயோகம், உணர்ச்சியூட்டம் என்பன.

ii. தருமனின் செய்கையை உவமைகள் மூலம் எடுத்துக் காட்டல் (கோயிற் பூசை செய்வோர் சிலையைக் கொண்டு விற்றல், வாயில் காத்து நிற்போர் வீட்டை வைத்திழத்தல் ஆகியவைகள் உவமைகளாகும்).

iii. அரசர்கள் நாட்டை ஆளும் ஒழுங்கற்ற முறை பற்றி உணர்ச்சி ததும்ப எடுத்துரைத்தல்.

iv. நீதியான செயல்கள் பற்றிக் கூறுவது, "சாரமற்ற வார்த்தை" என வேதனைப் படுதல்.

v. அரசர்களின் ஆட்சி முறை பற்றிக் கூறும் முகமாக இந்திய நாட்டை ஆளுகின்ற ஆங்கிலேயரின் செயல்முறைகளை மறைமுகமாக உணர்த்துதல்.

vi. "சூதுக்களி", "மாயமுள்ள சகுனி" என்பவற்றினூடாகச் சூதாட்டமானது தொடர்ந்து ஈடுபடக் கூடிய மகிழ்ச்சி வெறி யைத் தருமென்பதும், சகுனியின் கபடமான குணவியல்பு களையும் உணர்த்துகின்றமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. ஈழ நாட்டுக் குறம்

- கவிஞர் ப. கு. சரவணபவன் (1909 - 1949)

கவிஞர் ப. கு. சரவணபவன் இலங்கையின் சப்த தீவுகளில் ஒன்றான நயினாதீவிற் பிறந்து வளர்ந்தவர். இவரது தந்தையார் பெயர் பரமலிங்கம். அங்குள்ள தில்லையம்பலம் வித்தியாசாலையில் (தற்போதைய நாகபூஷணி வித்தியாலயம்) கல்வி கற்றுப் பின்னர் எஸ். எஸ். சி. பரீட்சையில் சித்தி பெற்றவர். வித்துவ சிரோன்மணி கணேசையருக்கும், வேலணை தம்பு உபாத்தியாயருக்கும் மாணவர். கருவி நூல், முதனூல்களைக் கசடறக் கற்ற தமிழறிஞர். கவிபாடும் வல்லமையை இயல்பாகவே கொண்டவர். சிறிய வயதில் கடுமையான நோயினால் பீடிக்கப்பட்ட இவரை ஊரிலுள்ள முருகன் ஆலயத்தில் கொண்டு போய் இறைவனிடம் மன்றாடிய போது எதிர்பாராத விதமாக இவரது நோய் குணமாயிற்று. அன்றிலிருந்து இவரை குழந்தைவேலு எனச் செல்லமாக அழைத்தனர். இவரது பேரனார் முத்துக்குமாரு ஆவர். சரவணபவன் தனது பெயரின் முன்னால் குழந்தைவேலுவையும் சேர்த்துக் கொண்டார். இவர் மலை நாட்டின் எட்டியாந்தோட்டைக்கு அண்மையிலுள்ள ருவான்வெல என்னும் இடத்திலுள்ள பாடசாலையொன்றில் கற்பித்தவர். தன்னை **பாரதி அடியான்** என அழைத்துக் கொண்டவர். மனோன்மணி ஆசிரியையை மணம்புரிந்து மூன்று ஆண் மக்களுக்குத் தந்தையானவர். ஒரு மகனார் வெளிநாட்டில் வாழ்கிறார். சரவணபவன் அவர்கள் திடீரென மாரடைப்பினால் காலமானார். இவரது கவிதைகளின் தொகுப்பு ஒன்று உலவியதாக ஊரவர்கள் கூறுகிறார்கள். இவ்வுலகில் நாற்பதே ஆண்டுகள் மட்டும் வாழ்ந்து தமிழ்ப் பணி புரிந்த இவர் நயினை நாகாம்பிகை பதிகம், ஈழ நாட்டுக் குறம், ஈழ மாதா திருப்பள்ளி யெழுச்சி, பாரதீயம், காந்தீயம், தேசியம் முதலான கவிதைகளுடன், தனிப் பாடல்கள் பலவற்றையும் இயற்றியுள்ளார். அந்தக் காலத்தில், புகைப்படம் எடுத்தால் ஆயுள் குறையுமென்று கூறப்பட்ட சம்பிரதாயத்தைப் பின்பற்றித் தன்னைப் புகைப்படம் எடுப்பதில் விருப்பங்காட்டாதவர் எனக் கூறப்படுகிறது. 1951இல் நயினாதீவு சனசமூக நிலைய வெளியீடாக இவரது கவிதைகள் அடங்கிய "எடுத்த முத்துக்கள்" சிறுநூல் வெளிவந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானமுறு மீனினம் மழுக்குமொரு பேரொளி
வகுத்தவோர் காட்சி கண்டேன்
மாதிரஞ் செவிடுபடு மொலியையு மடக்குமுன்
மந்திரக் கேள்வி கண்டேன்
மாணவன் எனப்பெயர் வகுத்துலக மாள்ராச
வன்மையின் வன்மை கண்டேன்
வையத்து ளொன்றுபல வாகியும் ஆகாத
மாசாத்திர மொன்று கண்டேன்

என்று தொடரும் நயினை நாகாம்பிகை பதிகப் பாடல் கவிஞரது கவியாற்றலின் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோற்றுப் பதம் போன்றது. சந்தம் பொலியும் மந்திரச் சொற்கள் இவருடையவை. "பாரதீயம்" கவிதையில் கலைவாணியை வேண்டியுருகி நிற்கும் கவிஞரின் நாவிலும், எழுத்திலும் அவள் அருள் நர்த்தனமாடுவதைக் காண முடிகிறது.

உள்ளக் கிழியில் உருவெழுதி யுன்புகழ்த்தேன்
அள்ளத் துடிக்குமிந்த ஆசைநிறை வேறாதோ
துள்ளிப் பிடித்துன் துணைத்தாட் புணையையின்ப
வெள்ளத்தி லோட்டி விளையாட மாட்டேனோ

நீண்ட காலம் வாழ்ந்திருப்பின் சரவணபவனிடமிருந்து உயிரோட்டமுள்ள பல கவிதைகளைத் தமிழுலகம் பெற்றிருக்கக் கூடும். இங்கு இவரது **"ஈழ நாட்டுக் குறம்"** என்னும் தேசப் பற்றை எடுத்துக் காட்டும் நான்கு அடிகள் கொண்ட ஏழு பாடல்களால் அமைந்த கவிதை இடம் பெற்றுள்ளது.

1. தேவரெலாங் கொலுவிருக்கும் ஈழமெங்கள் தேயஞ்
செப்பிடுவே னதன் பெருமை சற்றிருந்து கேளும்
மூவரன்று பாடுதிருக் கோணமலை நாட்டில்
முத்தொதுக்கிக் கத்துகடல் சூழுமெங்கள் தேயம். (தேவர்)

பொருள்:

தேவர்கள் எல்லோரும் அழகிய கொலுப் பொம்மைகள் போல வீற்றிருக்கும் தேசமாக எங்கள் ஈழநாடு விளங்குகின்றது. எமது நாட்டின் பெருமை பற்றி நான் கூறுவதைக் கொஞ்சம் இருந்து கேட்பீராக. தேவார மூவர்களால் அன்று பாடப் பெற்ற திருகோண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைப் பகுதியில், முத்துக்களை அள்ளி வந்து ஒதுக்குகின்ற ஆரவாரிக்கின்ற கடலாற் சூழப் பெற்றது எங்கள் நாடாகும்.



அருஞ் சொற்பொருள் :

கொலுவிருத்தல் - நிறுத்தி வைத்திருத்தல்; தேயம் - தேசம், நாடு; செப்பிடுவேன் - சொல்லிடுவேன், கூறிடுவேன்; சற்றிருந்து - கொஞ்சம் இருந்து; மூவர் - திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர்; பாடு - பாடிய; கத்துகடல் - ஆரவாரிக்கின்ற கடல், ஒலிக்கின்ற கடல்.

2. எத்திசையும் போற்றுங்கதிர் காமமலை நாட்டில்
எங்கள்வள்ளி குடியிருக்கும் ஈழமெங்கள் தேயம்
புத்தபிரான் பொன்னடியாம் பொற்கமல பீடம்
பொலியுமலை எங்கள்மலை ஈழமெங்கள் தேயம்.

(தேவர்)

பொருள் :

எல்லாப் பக்கங்களில் இருந்தும் மக்கள் வந்து வணங்குகின்ற கதிர்காமக் கந்தன் அருள் பாலிக்கும் கதிர்காம மலை (கதிர மலை) யுள்ள இடத்தில் எங்கள் வள்ளி நாயகி குடியிருக்கின்ற ஈழம், எங்கள் நாடாகும். புத்த பகவானின் பொன் போன்ற திருவடிகளாகிய பொற்றாமரைப் பீடங்கள் நிறைந்த எங்களின் ஈழம், எங்கள் நாடாகும்.

அருஞ் சொற்பொருள் :

பொன்னடி - பொன் போன்ற திருவடி; பொற்கமலம் - பொற்றாமரை; பீடம் - இருக்கை; பொலியும் - மிகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மகாவலிகங் கைப்புனலாந் தாவணியை வீசி
மாதிரமெ லாம்மணக்கும் வாசனையைப் பூசி
காவலரின் கண்மருட்டுங் கன்னிஎங்கள் தேயம்
காசினியி லிவளைப்போற் கன்னியில்லை யில்லை. (தேவர்)

பொருள்:

மகாவலி கங்கையானது நீராகிய தாவணியை வீசி திசையெல்லாம் வீசுகின்ற நறுமணத்தைப் பூசி, நாட்டை ஆளும் மன்னர்களின் கண்களைக் கவருகின்ற கன்னியாகிய இவளைப் போல பூவுலகில் எவருமில்லை எனும்படி விளங்குவது எங்கள் நாடு.



அருஞ் சொற்பொருள்:

மாவலி – மகாவலி; புனல் – நீர்; தாவணி – பெண்கள் அணியும் சேலையைத் தோள் மீது குறுக்காக அணிதல்; மாதிரம் – திசை; காவலர் – அரசர்; கண்மருட்டும் – கண்ணைக் கவரும்; காசினி – பூமி;

4. செந்தமிழுஞ் சிங்களமு மாயவிரு தோழி
சேவைசெய்யும் இராசகன்னி ஈழமெங்கள் தேயம்
இந்தியரெம் அக்கைமக்கள் என்றணைக்கும் அம்மை
வந்தனையல் லாதெமக்குச் சிந்தனைவே றில்லை. (தேவர்)

பொருள்:

செந்தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளும் தோழிகளாகப் பணி செய்கின்ற அரசிளங்குமரியை உடையது எங்கள் ஈழநாடு. அயல் நாடான இந்தியா, எமக்குத் தமக்கையாகும். இந்திய மக்களை அக்காவின் மக்கள் என்று அரவணைத்துப் போற்றுவதல்லாது, வேறு நினைவுகளே எமக்குக் கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருஞ் சொற்பொருள் :

இராசகன்னி – அரசிளங்குமரி; அணைக்கும் – தழுவும்; அம்மை – தாய், அழகு; வந்தனை – வழிபாடு, போற்றுதல், வணங்குதல்.

5. பொற்புதையல் கண்டெடுப்பார் போலச்சில மந்தி
பூமியுள்வெ டித்தபலாப் பொற்சுளையைக் கிண்டும்
நற்குணங்கொள் மங்கையரும் மைந்தர்களும் போல
நாலுகின்ற பூங்கொடியில் ஊசல்சில வாடும். (தேவர்)

பொருள் :

பொன்னையுடைய புதையல்களைக் கண்டெடுப் பவர்கள் போன்று சில மந்திக் குரங்குகள், நிலத்துள் வெடித்த வேரிற் பழுத்த பலாக் கனிகளின் சுவை மிகுந்த சுளைகளைப் பெறுவதற்காக நிலத்தைத் தோண்டும். நல்லகுணத்தைக் கொண்ட இளம் பெண்களும், இளைஞர்களும் போல, தொங்குகின்ற பூங் கொடிகளில் சில, ஊஞ்சலாடும்.

அருஞ் சொற்பொருள் :

மந்தி – பெண்குரங்கு; பொற் சுளை – சுவையான சுளை; கிண்டும் – தோண்டும்; நாலுகின்ற – தொங்குகின்ற; ஊசல் – ஊஞ்சல்.

6. மானின் கவைக் கொம்பெடுத்துக் கால்களென நாட்டி
வளமான பன்றிமுள்ளுக் கைம்மரங்கள் பாய்ச்சி
கானிலுதிர் மாமயிலின் தோகைகொண்டு வேய்ந்து
கட்டியத னுள்ளிருந்து சிற்றில்சில வாடும். (தேவர்)

பொருள் :

கலைமானின் இரட்டைக் கொம்பினை எடுத்துக் கால்கள் போன்று நட்டுவைத்து, கைம்மரங்களாக (சிறிய மரங்களாக) கொழுத்த பன்றியின் முட்களைக் குறுக்கே பரவி, காட்டு மயில்களின் உதிர்ந்த இறகினைக் கொண்டு வேய்ந்து, கட்டப்பட்ட சிறிய வீடுகளினுள் இருந்து சிறிய சில மிருகங்கள் வாடும்.

அருஞ் சொற்பொருள் :

கவை – இரண்டு, கவர்; வளமான – கொழுத்த; கைம்மரம் – சிறுமரம்; பாய்ச்சி – பரவி; கான் – காடு; உதிர் – கொட்டிய; தோகை – மயிலிறகு; சிற்றில் – சிறிய மிருகங்கள், சிறிய வீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. **கனிபெறவென் றொருகுறத்தி காதணியை வீசக்**
கடுவனதைக் கைப்பிடித்துக் காதலிதன் காதில்
நனியழுத்தக் கண்ணினின்று நீர்வடியும் வாயில்
நகைவருமக் குரங்கிருக்கும் ஈழமெங்கள் தேயம். (தேவர்)

பொருள்:

மலைக்குறப் பெண்ணொருத்தி, மரத்திலிருந்து பழத்தினைப் பறிப்பதற்காகத் தன் காதில் அணிந்திருந்த தோட்டினை எடுத்து எறிய, ஆண் குரங்கொன்று அதனைக் கையிலேந்தித், தனது காதலியாகிய மந்திக் குரங்கின் காதில் அணிவதற்காக அதன் காதில் வைத்து மிகவும் அழுத்த, பெண் குரங்கின் கண்களில் இருந்து கண்ணீர் வடியும்; ஆனால் வாயில் புன்னகை வரும். அத்தகைய குரங்கிருக்கும் ஈழம் எங்கள் நாடாகும்.

அருஞ் சொற்பொருள்:

காதணி – தோடு; கடுவன் – ஆண் குரங்கு; நனி – அதிகம், மிகவும்; அழுத்த – இறுக்க; நகை – புன்சிரிப்பு, சிரிப்பு.

குறிப்புகள்

1. நாட்டுப் பற்றினை ஊட்டும் விதமாக ப. கு. சரவணபவன் இயற்றிய பாடல் இது. இலங்கை மணித் திருநாட்டின் இயற்கை அழகையும், இங்கு வழங்கும் மொழிகளைப் பேசுவோரின் ஒற்றுமையையும், அயல் நாடான இந்தியாவை உறவு முறை கொண்டு அரவணைக்கும் பண்பையும் இப் பாடல்கள் வெளிப்படுத்தி உள்ளன.

2. "குறவஞ்சி" அல்லது "குறம்" என அழைக்கப்படும் தமிழ்ப் பிரபந்த வகைகளில் ஒன்றான சிற்றிலக்கிய வடிவத்தின் சில அடிப்படைக் கூறுகளைப் பயன்படுத்தி "ஈழநாட்டுக் குறம்" இயற்றப் பட்டுள்ளது.

3. நான்கு அடிகளாலான ஏழு பாடல்கள் இதில் அடங்கியுள்ளன. எளிய மொழி நடை, புதிய கற்பனை வளம், இனிய ஓசை நயம், பொருத்தமான அணிகளின் பயன்பாடு, வருணனைச் சிறப்பு ஆகியவற்றை உத்திமுறைகளாகக் கொண்டு உருவாக்கப் பெற்ற பாடல்கள் இவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. "ஈழமெங்கள் தேயம்" என்னும் தொடரின் மூலம், எமது தாய் நாடாகிய ஈழத்தின் மீது கவிஞர் கொண்ட பக்தியும், அதனை ஏனையவர்களும் உணர்ச்சி பூர்வமாகக் கைக்கொள்ள வேண்டு மென்ற வேட்கையும் புலப்படுகிறது.

5. "தேவரெலாங் கொலுவிருக்கும்" என்பதனூடாகத் தெய்வங்கள் நிலை கொண்டு அருள் புரியும் நாடு எனக் கூறப்பட்டுள்ளது.

6. தேவர்கள் கொலுவிருத்தல், திருகோணமலையில் முத்தொதுக் கிக் கடல் சூழல், கதிர்காம மலையிலிருக்கும் இறைவனை எத்திசையோரும் வணங்குதல், கதிர்காம மலைநாட்டில் கான வள்ளி குடியிருத்தல், புத்த பிரானின் பொற்றாமரைப் பீடங்கள் பொலிந்து விளங்குதல், மகாவலி கங்கை மலர் வாசனை வீசி ஓடுதல், செந்தமிழும் சிங்களமும் தோழிகளாக அரசாட்சியில் விளங்குதல், இந்திய மக்களை எமது அக்கை நாட்டு மக்களாக அரவணைத்தல், வேரிற் பழுத்த பலாக்கனிச் சுளையை எடுக்க மந்திக் குரங்குகள் தோண்டுதல், தொங்குகின்ற பூங்கொடிகளில் சில ஊஞ்சலாடுதல், மான் கொம்பையும் பன்றி முள்ளையும் மயிற்றோகையையும் கொண்டமைத்த சிறிய வீடுகளில் சிறு விலங்குகள் தங்கியிருத்தல், குறத்தி வீசிய காதணியைக் கடுவன் குரங்கு ஏந்தித் தன் காதலியான மந்தியின் காதில் வைத்து அழுத்தியதால் மந்தி கண்ணீர் விடுதலும், வாயிற் சிரிப்பு உண்டாதலும் முதலான விடயங்கள் இந்த ஏழு பாடல்கிலும் உள்ளடங்கியுள்ளன.

7. **அணிச் சிறப்புக்கள் :**

அ. "மகாவலி கங்கைப் புனலாந் தாவணியை வீசி மாதிரமெலாம் மணக்கும் வாசனையைப் பூசி" – உருவக அணி.

ஆ. "காவலரின் கண்மருட்டுங் கன்னி எங்கள் தேயம் காசினியி லிவளைப் போற் கன்னியில்லை" – உயர்வு நவிற்சி அணி.

இ. "செந்தமிழும் சிங்களமுமாயவிரு தோழி" – உருவக அணி.

ஈ. "இந்தியரெம் அக்கை மக்கள்" – உருவக அணி.

உ. "பொற்புதையல் கண்டெடுப்பார் போலச் சில மந்திகள் பூமியுள் வெடித்த பாலாப் பொற் சுளையைக் கிண்டும்" – உவமை அணி.

ஊ. "நற்குணங்கொள் மங்கையரும் மைந்தர்களும் போல நாலு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்ற பூங்கொடியில் ஊசல்சிலவாடும்" – உவமை அணி.

எ. "மானின் கவைக் கொம்பெடுத்துக் கால்களென நாட்டி" – உவமை அணி.

ஏ. "பன்றி முள்ளுக் கைம்மரங்கள்" – உருவக அணி.

ஐ. "குறத்தி கனிபெறக் காதணியை வீசுதலும் கடுவன் அதையேந்தித் தன் காதலி காதில் அழுத்துவதும் நாட்டு வளத்தை வெளிப்படுத்தும் உயர்வு நவிற்சியாகவும் கருதலாம்".

8. கவிச் சிறப்பு

அ. எளிய சொல்லாட்சி

ஆ. சிறப்பான அணிப் பிரயோகங்கள்.

இ. கற்பனை வளம்

ஈ. பொருத்தமான வருணனைகள்.

உ. இசையொடு பாடத்தக்க ஓசை (சந்தம்)

ஊ. நாட்டுப் பற்றை ஊட்டும் பாடுபொருள்.

எ. குறவஞ்சி இலக்கிய மரபின் சில கூறுகளையொட்டிய வடிவப் பாங்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. பாரதியார்

முதுதமிழ்ப் புலவர், பண்டிதர் மு. நல்லதம்பி

பண்டிதர் மு. நல்லதம்பி அவர்கள், ஈழத்துத் தமிழ்ப் புலவர்களிலே தனக்கென்று தனியான ஓரிடத்தைப் பிடித்துக் கொண்டவர். 55 ஆண்டுகள் மட்டும் (13.09.1896 - 08.05.1951) இம் மண்ணில் வாழ்ந்து புகழ் பெற்றவர். வட்டுக்கோட்டையின் சிவன் கோவிலடிக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது பெற்றோர் முருகப்பிள்ளை - தங்கம்மை ஆகியோர். தென்கோவை பண்டிதர் ச. கந்தையாபிள்ளை அவர்களிடம் இலக்கணம், இலக்கியம் கற்றுத் தேறியவர். இளமையில் கவிபாடும் ஆற்றல், நாடகம் நடிக்கும் ஈடுபாடு இவரிடம் காணப்பட்டன. இவர் பயிற்றப்பட்ட தமிழாசிரியராகத் தமது கல்விப் பணியைத் தொடங்கினார். ஆசிரிய சேவையில் கொழும்பு ஸாகிராக் கல்லூரியில் இருந்த காலம் உன்னதமானது. ஜெனாட் எஸ். எம். கமால்தீன் போன்ற பல தமிழறிஞர்களுக்குத் தமிழ் கற்பித்த பெருமைக்குரியவர். இக் கல்லூரியின் தலைமைத் தமிழ்ப் பண்டிதராக விளங்கியவர். யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பரீட்சகராயும், இலங்கை வித்தியா பகுதிப் பாடநூற் பிரசுரசபை அங்கத்தவராகவும் பணி புரிந்தவர். கொழும்பிலுள்ள இலங்கைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகவும், 1940 களில் சில ஆண்டுகள் பணியாற்றியவர். இவருடைய பிற் காலத்தின் பெரும்பகுதி கொழும்பிலேயே கழிந்தது.

பண்டிதர் மு. நல்லதம்பி அவர்களின் கவியாற்றலையும், தமிழ்ப் பணியையும் பாராட்டித் தமிழ்நாடு திருநெல்வேலி தமிழ்ச் சங்கத்தார் 1940 ஆம் ஆண்டு "முதுத் தமிழ்ப் புலவர்" எனும் பட்டமளித்து கௌரவித்தனர். தமிழ் நாட்டுடனும் இவருக்கு அதிக தொடர்பு காணப்பட்டது. இலங்கையின் "ஈழ கேசரி" மற்றும் தமிழகப் பத்திரிகைகளில் இலக்கண, இலக்கியக் கட்டுரைகளை அதிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதியுள்ளார். பாட நூல்கள், சிறுவர் பாடற்றொகுதிகள் போன்ற வற்றையும் எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றுள் **ஈழ வாசகம், மொழிப் பயிற்சி, இளைஞர் விருந்து** ஆகியவை குறிப்பிடத் தக்கன. இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் 1948 இல் ஆனந்த சமரக்கோன் அவர்களால் சிங்கள மொழியில் இயற்றப்பட்ட தேசிய கீதத்தினைத் தமிழில் உயிர்ப்புடையதாக 1950 ஆம் ஆண்டு மொழி பெயர்த்தவர் இவரே. "நமோ நமோ தாயே! நம் ஸ்ரீ லங்கா" எனத் தொடங்குவதே அந்தக் கீதமாகும். இலங்கையின் சுதந்திரத்தை முன்னிட்டு நடைபெற்ற மரதன் அஞ்சல் ஓட்டப் போட்டிக்காகத் தேசிய ரீதியில் நடைபெற்ற கவிதைப் போட்டியில் பண்டிதர் அவர்கள் கலந்து கொண்டு, "மணித் திருநாடும் மரதன் ஓட்டமும்" என்ற கவிதைக்காக முதற் பரிசினைப் பெற்றுக் கொண்டார்.

பூமணக்குஞ் செழுநறவின் பொலிவுமலி யழகொழுக
காமணக்கும் புகழ்நாடு காண்பமெனக் காமர்வண்டு
பாமணக்கு முயற்சியோடு பண்டைவினைப் பயன்கொழும
தேமணக்கும் பிழிபிறந்து திகழ்வதெங்கள் திருநாடு

மரதனோட்டப் பாடலில் இதுவும் ஒன்றாகும். மரபு தழுவிய புலவரது கவிதையில் சொற்செழுமையும், ஓசைநயமும், பொருள்வளமும் துலங்குகின்றன. சுவாமி விபுலாநந் தரிடம் புலவருக்குப் பெருமதிப்பும், நட்பும் உண்டு. கடிதப் பரிமாற்றங்களும் இருவரிடையேயும் அடிக்கடி நிகழ்ந்தன.

".... மனக்கினிய பெருங்குணத்து நல்லதம்பிப் பாவலன் என்று அழியாச் செய்யுளால் நற்சான்று பகர்ந்து விட்டேன். நீங்கள் எந்நாளும் தமிழ்த் தொண்டு புரிய வேண்டும். தமிழ்ப் புலவராகிய நாம் கம்பனின் வழித் தோன்றல்கள். அவனைப் போல் நாமும் மன்னனின் முன்னிலையில் இறுமாப்போடு நிற்க வேண்டும். நுலாராய்வதிலும், நூலெழுதுவதிலும் பொழுது கழிக்க வேண்டுமென்று கனிவாகக் கேட்டுக் கொள்ளுகின்றேன்".

விபுலானந்த அடிகள், நல்லதம்பிப் புலவருக்கு எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி இது. ஈழத் தமிழ்ப் புலவர்கள் இருவரின் தமிழ்நோக்கு இதனால் வெளிப்படுகின்றது. பண்டிதர் அவர்கள் முஸ்லீம் புலவர்களைப் பற்றிய ஆராய்ச்சிகளையும் மேற்கொண்ட வர். தமது உரைகளில் கரீம் புலவர், பக்கீர் முஹைதீன் புலவர் முதலிய இலங்கையர் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். 1936 ஆம் ஆண்டு தென்னிந்தியப் புனித தலங்களுக்கு யாத்திரை மேற்கொண்டவர். அப்போது இந்தியாவின் பல இடங்களிலும் சொற்பொழிவாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ ஆதீனங்களில் இவரது உரைகள் இடம்பெற்றன. இவரது நாவன்மை கண்டு வியந்தே திருநெல்வேலித் தமிழ்ச் சங்கம் பட்டமளித்தது. புலவர் அவர்கள் தமிழில் மாத்திரமன்றிச் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற புலமையாளர். 1951 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் விழா பிரசித்தி பெற்றது. அதில் பண்டிதர் மு. நல்லதம்பி ஆற்றிய தமிழுரை, விழாவில் கலந்துகொண்ட டாக்டர். ரா.பி. சேதுப்பிள்ளை, கல்கி. ரா. கிருஸ்ணமூர்த்தி ஆகியவர்களால் பாராட்டப்பட்டது. இவ் விழாவில் கலந்து உரையாற்றியமையே புலவரின் இறுதிப் பேச்சாகவும், கடைசி நிகழ்ச்சியாகவும் அமைந்து விட்டது.

பண்டிதர் நல்லதம்பியின் கவிதைகள் இயற்கை அழகின் ஈடுபாட்டைக் கூறுவன; தமிழ்ப் பற்றை, தேசியப் பற்றை, காதலை, சிறுவர் விளையாட்டுக்களை, தமிழறிஞர் பெருமைகளை வெளிப் படுத்துவன. "சுருளைகள் அவரை வருக வருக என அழைத்தன" என்று ஓரிடத்தில் கூறுகிறார். "ஊசல் வரி" யில்

உலகிற் பழைமை மிகவுடைய மொழிகளுள்ளே
இலகு முயிர் மொழியா மினித்த தமிழ்த் தாயையன்பாற்
குலவு மணிப்புதல்வீர் கொண்டாடிப் பாடியாம்
அலகில் மகிழ்முகிழ்ப்ப ஆடோமோ ஊசல்
அரிய புகழ்பாடி ஆடோமோ ஊசல்

என்று தாய்த்தமிழைப் போற்றுகிறார். இன்னோர் பாடலில் செங்கதிரோன் தன் கதிர் பரப்பிக் கடல்மேல் தோன்றும் காட்சியை, வெற்றிவடி வேலன் பவனிவரும் காட்சியாகக் கண்டு இன்புறுகிறார்.

கறுத்த உடல் வெளுத்த நகைக்
குறத்தியரே வாரீர்
சிறுத்த இடைக் கறுத்த உடைச்
சிறுக்கி நீ ரெவ்வூரீர்?

இது "குறத்தியும் சிறுவனும்" பாடலடிகள். "அணில்" பற்றிய பாடலில் "குந்தி முன்னங் கால்களைக் குவித்துக் கையொன்றாக்குவாய், கொந்திக் காய்பழம் கொட்டையுண வாக்குவாய்" என்கிறார். "கடலை கடலை கொண்டல் கடலை" என்ற சிறுவர் பாடலும் இவர் இயற்றியதாகும். சந்தம் கொஞ்சும் பாடல்கள் இவருடையவை. சங்கநூற் பயிற்சி மிக்க இவர், தாம் வாழ்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்துக் கேற்றதாகப் பல்துறைப் பாடல்களையும் படைத்துள்ளார்.

வாலறுந்த சேவலென மயிர் குறைத்தே - சில
மடப்ப மிழந்த சிறு மங்கையர்களும் - உயர்
கோலமென முழங்காலின் மேலிலமையும் - சட்டை
கொண்ட சிறுபேதையரு மண்டி நடந்தார்

இப் பாடலடிகள், வெள்ளவத்தைக் கடற்கரையில் புலவர் கண்ட காட்சி பற்றிய பாடலின் ஒரு பகுதி. இது நாகரிகப் பெண்டிரும், பிள்ளைகளும் செல்லுகின்ற காட்சியைக் காட்டுகிறது. தீபாவளி, தைப் பொங்கல் பண்டிகைகள் பற்றியும் புலவரின் பாடல்கள் காணப்படுகின்றன.

விஞ்சு களிப்பொடு பொங்குக பொங்கி
விளங்குக தைப் பொங்கல்
மிக்க நலத்தினை யொக்க வளித்து
விளக்க முறத்துக வே!

தைப் பொங்கல் பற்றிய பாடலடிகள் இவை. பண்டிதர் மு. நல்லதம்பி அவர்கள் மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்திருப்பாராயின், அவரது தமிழ்ப் பணியால் தமிழுலகம் கூடிய பலனைப் பெற்றிருக்கும் என நம்பலாம்.

இங்கே **இளைஞர் விருந்து** என்னும் சிறுவர்களுக்கான பாடல்களை உள்ளடக்கிய அவரது நூலிலிருந்து "பாரதியார்" பற்றிய கவிதை பாடப் பரப்புக்குரியதாக அமைந்துள்ளது. இந்நூல் அவரது மரணத்தின் பின்னர் 1951 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் வெளியானது. பாரதியார் மீதுள்ள பக்தியையும், அவரது பாடல்களில் காணப்படும் அரிய கருத்துக்களையும், பாடப்பட்ட எளிமையையும் கண்டு வியந்து போற்றும் பாடலாக இக் கவிதை காணப்படுகிறது.

பண்டிதர் மு. நல்லதம்பி இயற்றிய சிறுவர்களுக்கான பாடல்களின் தொகுதியாக "இளைஞர் விருந்து" நூல் விளங்குகிறது. இதிலடங்கிய பாடல்கள் பலவும் சிறுவர்கள் படித்தின்புறுவதற் கெனக் கூறப்பட்டாலும், அவற்றின் மொழிநடை, சற்றுக் கடினமான தாகவே காணப்படுகிறது. இந்நூலின் ஐந்தாவது தலைப்பாகப் "பெரியோர்" அமைந்துள்ளது. அதில் பாரதியார், ஆறுமுக நாவலர் முதலானவர்களின் பெருமை பேசும் பாடல்களுள. பாரதியார் பற்றிய முதல் இரண்டு பாடல்களிலும், இரண்டாவது பாடலே இங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரப்பட்டுள்ளது. இதில் பாரதி கவிதைகளின் சிறப்புகள் பரிமளிக்கின்றன.

பாரதியார்

1. **பாரதி யென்றொரு தாமரை பூத்தது**
பாரத நாடெனும் வாவியிலே - அதன்
சீரித ழாயிரஞ் செங்கதிர் போலொளி
செய்து விளங்குது பூமியிலே (பாரதி)

பொருள் :

பாரத நாடாகிய குளத்தினிலே பாரதி என்றொரு தாமரை மலர் பூத்தது. அத்தாமரை மலரின் இதழ்கள் சூரியனின் ஆயிரக் கணக்கான செந்நிறக் கதிர்கள் போன்று, பூமியிலே ஒளி பரப்பி விளங்குகின்றன.

2. **இந்த நறுமலர் கூம்பிடுமோ இதன்**
இன்பம் என்றாயினும் குன்றிடுமோ - உயர்
சிந்தனை யாமெனும் வானுலகேறித்
திளைத்திடலாமது சாம்பிடுமோ (பாரதி)

பொருள் :

இத்தகைய வாசனை மிக்க மலரானது வாடிக் குவிந்து விடுமோ? இதனால் பெறக் கூடிய மகிழ்ச்சி என்றைக்காவது குறைந்து விடுமோ? உயர்ந்த சிந்தனையாகிய வானுலகம் ஏறிச்சென்று அதுதரும் தொடர்ச்சியான இன்பத்தில் மனதினை ஆழ்த்தி விடலாம். அது(மலர்) ஒரு பொழுதும் வாடி விடுவதில்லை.

3. **சந்தமிகுந்திடு சிந்தென வந்தது**
சாரலருவிகள் போல் விழுந்தே - தமிழ்ச்
சிந்தையுருக்குது செம்மை பெருக்குது
சித்திரங் காட்டுது புத்துயிர் போல் (பாரதி)

பொருள் :

ஓசை ஒழுங்குகளுடனான சந்தங்கள் அதிகமாயுள்ள "சிந்து"ப் பாடலகள் போன்று வந்த அது, மலைச்சாரலிலிருந்து வீழ்கின்ற அருவிகள் போல் மனங்களில் விழுந்து, துயிர்களாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது உள்ளத்தை உருக்குகிறது. தமிழின் சிறப்புகளைக் கூட்டுகிறது. புதியதாய்ப் பிறந்த உயிர் போல வண்ணங்கள் காட்டி மயக்குகிறது.

4. தாமரைக் காடிது நித்தலுஞ் செந்தமிழ்த்
தண்ண) வெங்குஞ் சொரிவது பார் - பல
காமரு பாவலராகிய வண்டினங்
கண்டன மண்டிக் களித்திடல் பார் (பாரதி)

பொருள்

தாமரைக் காடாக விளங்குவது இது. இங்கே தினமும் செந்தமிழாகிய குளிர்ந்த தேன் எங்கும் சிந்துவதைப் பார்ப்பாயாக. அழகிய பாவலராகிய பல வண்டினங்கள், இதனைக் கண்டு இதில் விழுந்து, அதனைக் குடித்து மகிழுவதைப் பார்ப்பாயாக.

5. புத்தப் புதிய சுவையிது முன்னொரு
பூக்களு மிச்சுவை தந்ததில்லை - மெத்த
மெத்த வெறிக்குது காதல் சிறக்குது
வீரம் பிறக்குது நேரினிலே (பாரதி)

பொருள் :

புத்தம் புதிய சுவையிதுவாகும். முன்னர் காணப்பட்ட எந்த மலர்களும் இத்தகைய சுவையினிமையைத் தந்ததில்லை. இந்தச் சுவை மிகுந்த தேனினை அருந்திய உடனேயே, மிகவும் வெறியூட்டுகிறது; காதல் உணர்வு மேம்படுகிறது; வீரம் பிறக்கிறது.

6. முல்லைகுறுஞ்சி யிளமருதம் நல்ல
மோகனப்பாலை முதிர்ந்த நெய்தல் - பண்கள்
கல்லையுருக்க முரன்று முரன்று
கவிக்கணி கூட்டிடல் கண்டிடுவாய். (பாரதி)

பொருள் :

ஐந்திணைகளாகிய முல்லை, குறிஞ்சி, இள மருதம், நல்ல அழகிய பாலை, முதிர்ந்த நெய்தல் ஆகிய நிலங்களுக்குரிய இசைப் பண்கள் கல்லையும் உருக்கக் கூடியவாறு ஒலித்து, ஒலித்து (பாரதி) பாடல்களுக்கு அழகு சேர்த்திடுவதைக் காண்பாயாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. மாடு மரங்களு மிச்சுவை கேட்டிங்கு
வண்டு களாகி மயங்குதல் பார் - அது
காடு துறக்குது கோடை தணிக்குது
கானல் பறிக்குது கண்ணனென்றே (பாரதி)

பொருள் :

மாடுகள், மரங்கள் ஆகியன கூட இப் பாடலின் சுவை கேட்டு இங்கு வண்டுகள் ஆகி மயங்குவதைப் பார்ப்பாயாக. அந்தப் பாடற் சுவையானது கண்ணபிரான் அருள் போன்று காட்டினை விட்டு நீங்கச் செய்கிறது; கோடை வெயிலின் வெம்மை குளிர்விக் கிறது; கானலின் வெம்மையை இல்லாமற் செய்கிறது.

குறிப்புகள்

1. செந்தமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி அவர்கள், மகாகவி சுப்பிர மணிய பாரதியார் மீதும், அவரது பாடல்கள் மீதும் கொண்டிருந்த ஆழமான பக்தியை இப் பாடல்கள் வெளிப்படுத்தியுள்ளன.

2. முதற் பாடலில் பாரதியைத் தாமரையாகவும், அதன் இதழ்களைப் பாரதியின் பாடல்களாகவும், பாரத நாட்டினைத் தாமரைத் தடாகமாகவும் கவிஞர் உருவகித்துள்ளார். மேலும் பாரதியாகிய தாமரையின் பூவிதழ்கள், சூரியனின் ஆயிரம் செங்கதிர்கள் போல ஒளிவீசிய பூமியில் பிரகாசிப்பதாக உவமித்துள்ளார். சூரியனின் செங்கதிர்கள் - உவமானம்; பாரதி பாடல்கள் - உவமேயம்; பூமியில் பிரகாசித்தல் - பொதுத் தன்மை.

3. இரண்டாவது பாடலில், பாரதியாகிய தாமரை மலர் கூம்பிடுமோ? எனக் கூறுவதனூடாக, இதழ் விரிந்து மணம் பரப்பாமல் வாடிக் குவிந்து விடுமோ? என்ற கருத்தைக் கவிஞர் முன்வைத்துள்ளார். "கூம்பிடுமோ?" என்பதில் உள்ள "ஓ" காரம் வினாப் பொருளில் வந்தது. மறுதலையாகக் கூம்பிடாது என்ற உறுதிப் பொருளையும் வலியுறுத்தியுள்ளது. "இதன் இன்பம் என்றாயினும் குன்றிடு மோ?" என வினாவெழுப்பிக் குன்றாது என்பதையும் தேற்றமாகக் காட்டியுள்ளார். குன்றிடுமோ என்பதிலும் "ஓ"காரம் வினாப் பொருளில் அமைந்துள்ளது. மேலும் உயர்ந்த சிந்தனையாகிய வானுலகேறித் திளைத்திடலாம் எனக் கூறுவதன் மூலம், பாரதியின் பாடல்கள் உயர்ந்த சிந்தனையின் உச்சத்திற்கு நம்மை இட்டுச் செல்லும் என்பதையும், அந்தச் சிந்தனையை நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவிக்கலாம் என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார். திளைத்தல் - அனுபவித்தல், தொடர்ச்சியாக ஈடுபடல். இத்தகைய பாரதியாகிய தாமரை வாடி விடுமோ என்று கேட்பதற்கு அது "சாம்பிடுமோ?" என்ற கிராமியச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். இங்கும் "ஓ" காரம் வினாப்பொருளில் வந்து எதிர் மறைக் கருத்தான சாம்பிடாது என்பதை உணர்த்துகிறது.

4. மூன்றாவது பாடலில், பாரதியின் பாடல்கள் ஏற்படுத்திய தாக்கத்தினைக் கவிஞர் சுவைபடக் காட்டியுள்ளார். "சந்த மிகுந்திடும் சிந்து என வந்தது", "சாரலருவிகள் போல் விழுந்தது" என்பன பாரதி பாடலின் இனிமையைக் காட்டுவன உவமை அணிகள். "தமிழ்ச் சிந்தனையுருக்குது" என்பதனால் தமிழ் மொழி பேசுவோரின் மனங்களை நெகிழச் செய்கிறது எனக் கருதலாம். செம்மை பெருக்குது - சிறப்பினைக் கூட்டுகிறது; சித்திரங் காட்டுது - பலபல வண்ணங்களைக் காட்டுகிறது; புத்துயிர் போல் - புதிதாகப் பிறந்த குழந்தையைப் போல். புத்துயிர் என்பதை மானுடக் குழந்தையுடன், ஏனைய புதிய உயிர்களையும் கருதமுடியும். புத்துயிர் போல் என்பதனூடாகப் பாரதி கவிதைகள் காட்டும் புதிய புதிய காட்சிகள் கருதப்பட வேண்டும்.

5. பாரதியின் பாடல்களைத் "தாமரைக் காடு" என உருவகப்படுத்தப் பட்டுள்ளமை நான்காவது பாடலில் தெரிகிறது.உண்மையில் இது தாமரைப் பூக்கள் நிறைந்த வாவி எனலாம் இங்கே செந் தமிழாகிய குளிர்ந்த தேன் சொரிகிறது பார் என்கிறார். இதுவும் உருவக அணியாகும். அத்துடன் விருப்பமுடன், பாவலராகிய பல வண்டினங்கள் வந்து மலர்களில் விழுந்து, அண்டிக் கிடந்து, தேனையுண்டு மகிழ்வதையும் கவிஞர் எடுத்துக் கூறுகிறார். காமம் - விருப்பம், அழகு; பாவலராகிய வண்டினம் - உருவக அணி; கண்டன - கண்டு விழுந்து; மண்டி - அண்டி, அதிக அளவில்; களித்திடல் - மகிழல்.

6. ஐந்தாம் பாடலில், எமது அனுபவத்திற்குப் பாரதி பாடல்கள், புதிய சுவையினைத் தந்ததுடன், முன்னருள்ள பூக்கள் தராத சுவை இதுவெனவும் கவிஞர் கூறுவதன் மூலம் "சொல் புதிது! சுவை புதிது! பொருள் புதிது! சோதிமிக்க நவ கவிதை" என்ற பாரதி பாடலின் அடிகளையும் நினைவூட்டுகிறது. இதை (பாரதி பாடலாகிய தேனை) அருந்திய மாத்திரத்தில் மிகவும் வெறி கூட்டுது, காதலுணர்ச்சியைத் தூண்டுது, வீரம் பிறக்குது என்கிறார். பாரதி பாடலைத் தாமரை மலராகவும், முன்னைய கவிஞர்களின் பாடலை முன்னருள்ள பூக்களாகவும் கவிஞர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவகப்படுத்தியுள்ளார். பாரதி பாடலின் இனிமையையும், தாமரை மலர்த்தேனாக உருவகப்படுத்தியுள்ளமை புலனாகிறது. அந்தத் தேனை உண்டு களிக்கத் தக்கவர்கள் செந்தமிழ் மக்கள் எனவும் மறைமுகமாகக் காட்டியுள்ளார். அவர்களில் கவிஞரும் அடங்குகின்றார். சிறக்குது - சிறப்படைகின்றது, மதிப்புக்குரியதாகின்றது.

7. ஆறாம் பாடலில், ஐவகை நிலங்களுக்குரிய இசைப் பண்களைப் பயன்படுத்திப் பாரதி பாடல்களைப் பாடும்போது, கல்லையும் உருக்கும் ஓசையொலிகள் பிறந்து பாடல்களுக்கு அழகு செய்வதாகக் கவிஞரின் மனம் உவகை கொள்கிறது. முரன்று - ஒலித்து; அணி - அழகு; கூட்டிடல் - சேர்த்திடல்.

8. ஏழாவதான இறுதிப் பாடலில், பாரதி பாடலை இசையுடன் பாடக் கேட்டு அஃறிணைப் பொருட்களாகிய மாடுகள், மரங்கள் போன்றவைகளும் வண்டுகளாகி மயங்குகின்றன என்கிறார். "வண்டுகளாகி "என்பது உருவகமாகும். அந்த இசைச் சுவையானது கண்ணபிரான் அருளாக விளங்குவதால் கோடை வெப்பத்தைத் தணிக்கவும், காட்டிலிருந்து நீங்கி விடவும், கானலின் வெம்மையை அகற்றவும் கூடிய வல்லமையை அளிக்கிறது என்கிறார். பாரதியார், கண்ணன் மீது அபார பக்தி உடையவர். "காக்கைச் சிறகினிலே நந்தலாலா" பாடலில் எங்கும் எதிலும் கண்ணனையே கண்டவர். இங்கேயும் காடு, கோடை, கானல் ஆகியவற்றிலும் கண்ணனையே கண்ட அன்பினால், அவற்றினால் எதுவித துன்பமும் ஏற்படாமல், மாறாக அந்தவிட மெல்லாம் இன்ப இடமாக மாறியதெனக் கவிஞர் நல்லதம்பி பாடியுள்ளமையைக் காணலாம். துறத்தல் - நீங்குதல்; தணித்தல் - குறைத்தல், குளிர்வித்தல்; பறித்தல் - கவருதல்.

9. பாரதியார் என்னும் தலைப்பிலான கவிதையில் காணப்படும் கவிதைச் சிறப்புக்கள் :

அ. பாரதி மீதும், அவர் பாடல்கள் மீதும் கொண்ட அதீத பக்தியை வெளிக்காட்டல்.

ஆ. பெருமளவுக்கு உருவக அணியைப் பயன்படுத்தியிருத்தல்.

இ. சில இடங்களில் மாத்திரம் உவமை அணியைப் பயன்படுத்தி இருத்தல்.

ஈ. பாரதி பாடல்கள் வெளிப்படுத்தும் உணர்ச்சிகளைக் காட்டுதல்

உ. எளிமையும், கடினமும் கொண்ட கவிதை மொழிநடையைப் பேணியிருத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊ. சந்தத்துடன் இசையோடு பாடத்தக்க பாடல்களாக விளங்குதல்.

எ. இயன்ற அளவு, ஒரு சில சொற்கள் தவிர்ந்த ஏனையவற்றைத் தூய தமிழில் ஆக்கியிருத்தல்.

ஏ. பாரதி பற்றிக் கூறியதான, "பாரத வாவியில் பூத்த தாமரை" என்னும் அழகிய உருவகச் சிறப்பு.

ஐ. பாரதி பாடல்கள் பற்றிக் கூறிய பெருமிதங்களின் சிறப்புக்கள்.

i. பாரதி பாடல்கள் பூமியில் ஒளி வீசுகின்றன.

ii. பாரதி பாடல்களுக்கு என்றைக்கும் வாட்டமில்லை; அவைதரும் இன்பத்திற்கும் குறைவில்லை.

iii. பாரதி பாடல்கள் உயர்ந்த சிந்தனைக்கு மக்களை அழைத்துச் செல்வன.

iv. ஓசை ஒழுங்குடைய சிந்து கவி போல்வன.

v. தமிழ்ச் சாதியின் சிந்தையை உருக்கிச் சிறப்பைப் பெருக்குவன.

vi. புதிய புதிய விதங்களில் பரிமளிப்பன; புதுச் சுவை அளிப்பன.

vii. (கவிஞர்கள்) பாவலர்கள் விரும்பிப் படித்து, பாடி இன்பமுறத் தக்கன. பாரதி பாடல்கள் படிக்கும் போது இன்ப வெறியூட்டுவன.; தூய காதலுணர்வைத் தூண்டுவன; வீரத்தைத் தோற்றுவிப்பன.

viii. ஐவகைப் பண்களால் இனிமை தவழப் பாடக் கூடியன. துன்பம் தரும் இடமெல்லாம் கண்ணனாகவே காட்சி தந்து, துன்பங்கள் இல்லாமல், இன்பமாய் மிளிர்வன.

ix. பாரதியார் பாடல்களில் காணப்படும் வீரம் (அறியாமை இருளிற் கிடந்த பாரத நாட்டு மக்களைத் தட்டியெழுப்பி நாட்டு விடுதலைக்குப் போராட அழைத்தவர்), காதல் (இயற்கைக் காதலையும், தெய்வீகக் காதலையும் பாடியவர்), வெறி கொளல் (பல்வகைப் பாடல்களால் மக்களைக் கிளர்ந்தெழச் செய்தவர்) முதலானவற்றை நினைவுபடுத்திக் காட்டுவன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. தமிழ்த் தொண்டு

கட்டுரை ஆசிரியர் அறிமுகம்

- சுவாமி விபுலாநந்தர்

இலங்கையின் கிழக்குப் பிரதேசத் துத் தென்கோடியான காரைதீவில் சாமித் தம்பி விதானையாருக்கும், கண்ணம்மைக்கும் 27.03.1892இல் பிறந்தவர் தம்பிப்பிள்ளை, மயில்வாகனம் ஆகிய இளமைப்பெயர்களைக் கொண்ட சுவாமி விபுலாநந்தர் அவர்கள். நல்லரத்தினம் ஆசிரியரிடம் வித்தியாரம்பம் பெற்று, தந்தையிடமும் குஞ்சித்தம்பி, தாய் மாமன்மார் வசந்தராசபிள்ளை, சிவகுருநாத பிள்ளை மற்றும் புலோலி பொ. வைத்திலிங்கதேசிகர் ஆகியோரிட மும் கல்வி கற்றவர். கல்முனை மெதடிஸ்த மிஷன் பாடசாலை, மட்டக்களப்பு அர்ச்மைக்கேல் கல்லூரி ஆகியவற்றில் கற்று, 1906 இல் கேம்பிரிஜ் பல்கலைக்கழக ஜூனியர் பரீட்சையிலும், 1908 இல் சீனியர் பரீட்சையிலும் தேர்ச்சியடைந்தார். 1909 - 1910 காலப்பகுதியில் தான் படித்த அர்ச்மைக்கேல் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார். 1911 இல் தாயார் மரணமடைந்த பின், சொந்த ஊருக்குச் சென்று கல்முனை கத்தோலிக்கமிஷன் பாடசாலையில் ஆசிரியரானார். அதன் பின்னர் கொழும்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையில் இரு ஆண்டுகள் (1911 - 1212) பயிற்சி பெற்றார். மீண்டும் (1913 - 1914) அர்ச்மைக்கேல் கல்லூரியில் பணியாற்றினார். இவ்வேளை பண்டிதர் தென்கோவை கந்தையா பிள்ளை, வித்துவான் தாமோதரம்பிள்ளை, வித்துவான் கைலாய பிள்ளை போன்றோரிடம் சங்க இலக்கியத்தைக் கற்றுத்தேர்ந்தார்.

1915 இல் அரசினர் பொறியியற்கல்லூரி டிப்ளோமாப் பயிற்சி; 1916இல் டிப்புளோமாப்பட்டமும், மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் பட்டமும் பெறல், 1917இல் கொழும்பு அரசினர் கல்லூரி வேதிநூல் உதவியாசிரியர் பணி, இதே காலத்தில் இலண்டன் பல்கலைக்கழக பி.எஸ். சி. பட்டதாரி; இருமொழிப்புலமையுடன் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் தலைவர் பொறுப்பு (1920 - 1922);

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலரின் துணையோடு யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நிறுவல்; ஆகிய பணிகளின் பின்னர் 1922 இல் சென்னை மைலாப்பூர் இராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்தார் மயில்வாகனனார். அங்கு 1924ஆம் ஆண்டு சித்திரா பூரணைத் திருநாளன்று ஞானோபதேசம்பெற்றுச் சுவாமி சிவானந்தரால் **சுவாமி விபுலாநந்தர்** என்ற துறவுத் திருநாமம் சூட்டப் பெற்றார். ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம் (தமிழ்), வேதாந்தகேசரி (ஆங்கிலம்) சஞ்சிகைகளின் ஆசிரியராகப் பணியாற்றியதுடன் "செந்தமிழ்" முதலிய பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதினார். சென்னையில் பலசொற்பொழிவுகள் நிகழ்த்தினார். 'விவேகானந்த ஞானதீபம்', 'கர்மயோகம்', ஞானயோகம்", "நம்மவர் நாட்டு ஞானவாழ்க்கை', விவேகானந்தர் சம்பாஷணைகள்' ஆகிய நூல்களை ஆங்கில மூலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்தார் விபுலாநந்த அடிகள். ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் விருப்பங்கொண்டார். பாரதி பாடல்களில் உள்ளம் பறிகொடுத்தார். 'செந்தமிழ்' பத்திரிகையில் 'மதங்கசூளாமணி' என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பினை வெளியிட்டுப் பின், 1926 இல் நூலாக்கினார். இயற்றமிழ்க்கட்டுரைகள் பலவற்றை எழுதினார்.

இரவீந்திரநாத் தாகூரின் ஆங்கிலப்பாடல்களின் மொழி பெயர்ப்பான பூஞ்சோலைக்காவலன் (1923) மற்றும் மேற்றிசைச் செல்வம் (1923), விஞ்ஞானதீபம் (1923) பொருணூற்சிறப்பு (1922), யவனபுரத்துக் கலைச்செல்வம் (1923), உலகபுராணம் (1941-42), இமயம் சேர்ந்த காக்கை (1955-4ஆம் பதிப்பு) , பாரிஜாத வீணை (1944), சோழமண்டலத்தமிழும் ஈழமண்டலத்தமிழும் (1941), பயனுள்ளகல்வி (1934), ஆங்கிலவாணி முதலான ஐம்பது வரையிலான கட்டுரைகளைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் பல்வேறு ஏடுகளில் எழுதிய விபுலாநந்தர், பல மாநாடுகளிலும் ஆற்றிய தலைமையுரைகளும், பேருரைகளும் ஏராளமானவை. இவைகளும் ஏடுகளில் வெளிவந்துள்ளன. கவித்துறையில் பெருவிருப்புடன் உழைத்தவர் விபுலாநந்தர். ஓசைநயமும், கற்பனை வளமும், பொருள் வளமும் மிக்க கவிதைகள் அவருடையவை. "வெள்ளை நிறமல்லிகையோ" எனத்தொடங்கும் கவிதையில் "உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது" எனக்கூறிய உள்ளம் அவருடையது. பண்டைய மரபினைப் பின்பற்றிய கவிதைச் செல்நெறி அவருடையது. சேக்ஷ்பியரின் கவிதைகளைத் தமிழில் மொழிபெயர்க்கும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சினர்க்குச் சதமரண மஞ்சாத நெஞ்சத்
தாடவனுக்கொருமரண மவனிமிசைப் பிறந்தோர்
துஞ்சுவரென் றறிந்திருந்துஞ் சாதலுக்கு நடுங்குந்
துன்மதிமூ டரைக்கண்டாற் புன்னகைசெய் பவன் யான்

என யூலியசீசரின் வீர வசனங்களைப், பாடியிருப்பது உன்னதமானதாகும். விபுலாநந்தரின் மிகப்பெரிய தமிழிசைப் பணியாக "யாழ்நூல்" விளங்குகின்றது. பழந்தமிழ் நூல்களை ஆராய்ந்து தாம் அரும்பாடுபட்டுழைத்த "யாழ்நூலினை" கரந்தைத் தமிழ்ச் சங்க ஆதரவில் திருக்கொள்ளம்புதூரில் 1947 யூன் 5ஆம், 6ஆம் திகதிகளில் அரங்கேற்றினார். பல்வேறு தமிழறிஞர்களாலும் பாராட்டப்பெற்ற இந்நூலானது தமிழுள்ளவரை இசைத்தமிழின் பெருமையையும், விபுலாநந்தரின் பெருமையையும் பறைசாற்றக் கூடியது.

பாயிரம், யாழுறுப்பியல், இசைநரம்பியல் ,பாலைத்திரிபியல், பண்ணியல், தேவாரவியல், ஒழிபியல் ஆகிய ஏழு இயல்களைக் கொண்ட ஆராய்ச்சி நூலிதுவாகும். மஹாலக்ஷ்மி தோத்திரம், தேவிவணக்கம், கங்கையில் விடுத்தஓலை, கணேசதோத்திர பஞ்சகம், கதிரையம்பதி மாணிக்கப்பிள்ளையார் இரட்டை மணிமாலை, சுப்பிரமணிய சுவாமிகள் இரட்டைமணிமாலை, குமாரவேணவ மணிமாலை உட்படப்பல செய்யுள்களைப் படைத்தவர் விபுலாநந்தர். இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று துறைகளிலும் உழைத்தமையினால் "முத்தமிழ் வித்தகர்" எனப்போற்றப்பட்டார்.

கிழக்குமாகாணத்தில் விவேகானந்த சபையின் ஆதரவில் நடைபெற்ற பல பாடசாலைகளைப் பொறுப்பேற்றமை (1925), யாழ்ப்பாண வைத்தீஸ்வரா வித்தியாலயம், விவேகானந்த வித்தியாலயம் ஆகியவற்றைப் பொறுப்பேற்றமை (1926), கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயம் (ஆங்கிலம்), திருகோணமலை இந்துக்கல்லூரி ஆகியவற்றை உருவாக்கி அங்கு பணிபுரிந்தமை முதலான கல்விப்பணிகள் அவருடையவை. மகாத்மாகாந்தியடிகள் இலங்கை வந்தபோது, மாணவர் மாநாட்டுத்தலைவர் என்ற முறையில் வரவேற்றார். சென்னைப் பல்கலைக்கழகத்தினரின் விருப்பப்படி அண்ணாமலைப் பல்கலைக்கழகம் உருவாக விதப்புரை செய்தார். அதன்படி உருவான அப்பல்கலைக்கழகத்தின் முதற்றமிழ்ப்பேராசிரியரானார் (1931 - 1933). இலங்கைப் பல்கலைக் கழகத்தினதும் முதல் தமிழ்ப் பேராசிரியராக (1943 - 1947)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றினார். வட இந்தியாவின் "பிரபுத்த பாரத" இதழாசிரிய ராகவும் பணிசெய்தார்(1939 - 1941). இலங்கைப் பாடநூற்சபை, தேர்வுச்சபை, கல்வியாராய்ச்சிச்சபை ஆகியவற்றின் உறுப்பினரா கவும் பணி புரிந்தார். தமிழ் நாட்டிலும், ஈழத்திலும் உள்ள தமிழறிஞர்கள் பலருடைய தொடர்பையும், நட்பையும் பேணி நின்றவர் சுவாமிகள். 19.07.1947 இல் மரணமான சுவாமி விபுலாநந்தரின் நினைவு தினத்தன்று இலங்கைத்தமிழ்மொழி மூலப்பாடசாலைகளின் தேசியமட்டத் தமிழ்மொழித்திறன் விழா நடைபெறுவது பலவருடங்களாக வழக்கமாயிருந்து வந்துள்ளது. அருள் செல்வநாயகம் அவர்கள் விபுலாநந்த அடிகளாரின் ஆக்கங்களை விபுலாநந்த கவிமலர், விபுலாநந்த அமுதம், விபுலாநந்த செல்வம், விபுலாநந்தத்தேன், விபுலாநந்த வெள்ளம் என நூல்களாக வெளியிட்டுள்ளார். தமிழக, ஈழத்து ஏடுகளில் விபுலாநந்தர் பற்றிய கட்டுரைகள் ஏராளமாக வெளிவந்துள்ளன. அவரைப்பற்றிய பல நூல்களும் வெளிவந்துள்ளன. ஈழமணி, முத்தமிழ்ப்புலவர், விபுலாநந்த அடிகள், யாழ்நூல் தந்தோன், முத்தமிழ் வித்தகர் முதலானவை இவற்றுள் சிலவாகும். சுவாமி விபுலாநந்தர் ஆற்றிய தமிழ்ப் பணியும், சமயப் பணியும் என்றும் நினைவு கூரத்தக்கனவாகும்.

சுவாமி விபுலாநந்தரின் **தமிழ்த் தொண்டு** என்னும் கட்டுரை இங்கு இடம்பெற்றுள்ளது.

தமிழ்த் தொண்டு

தமிழ் வளர்த்த முடி மன்னராகிய சேர சோழ பாண்டியருங் கழிந்து போயினர். அகத்தியரை முதலாகக் கொண்ட புலவர் பெருமக்கள் குழுமியிருந்து தமிழாராய்ந்த முச்சங்கங்களும் அழிந்து போயின. செல்வத்தில் வளர்ந்த சீமாட்டி அல்லலுற்றலைகின்ற தன்மைபோலத் தமிழ்மாது பொலிவிழந்து தோன்றுகின்றாள். இவளுக்குத் தொண்டு புரிய முன்வருவார் யாவருளர்? இப் பூமண்டலத்தில் இப்பொழுது வழங்குகின்ற மொழிகள் தோற்று முன்தோன்றிய தமிழ்மொழியானது இன்றும் நிலைபெற்று நின்று இரண்டு கோடி மக்களுடைய வழக்கு மொழியாக விளங்குகின்றது. தமிழர் உலகத்தின் பல பாகங்களிலும் வசித்து வருகின்றார்கள். வாணிகத்திலும், தொழிற்றுறைகளிலும் ஈடுபட்டவர்களாய்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னாபிரிக்கா, மத்திய அமெரிக்கா, மலாயா, சிங்கப்பூர் முதலிய பிறதேசங்களிலும் பலவகை இயற்கை வனப்பு வாய்ந்த நமது தாய்நாடாகிய இவ்விலங்கைத் தீவிலும்; திருவேங்கடந் தென்குமரி எல்லையாகவுடைய பழந்தமிழ் நாட்டிலும் தமிழர் வசித்து வருகின்றனர். இரண்டு கோடி மக்களால் வழங்கப்பட்டு வருகின்ற இம்மொழி உயிருடைய மொழி என்பதை மறுக்க வல்லார் யாவர்? தமிழ் அழிந்து போகவில்லை, உயிருடனிருக்கிறது. அரசியல் மாற்றங்களினாலும், பிறமொழியாட்சியினாலும் தன்னியல்பினிற் குன்றிச் சோர்வினாலயற்சியடைந்த தமிழ்மாது மீண்டும் விழித் தெழுந்து விட்டாள். அன்னையாகிய தமிழ்மாது விழித்தெழுந்த சிறப்பினைக் கண்ட பாவலரும், நாவலரும் இவளுக்குத் திருப்பள்ளியெழுச்சி கூறுகின்றனர். காரிருட் காலங் கழிந்துவிட்டது. புதிய ஊக்கத்தோடு எழுந்த நம் அன்னையினுடைய அடியிணை மலருக்கு வணக்கஞ் செலுத்துவோமாக.

வாழ்க்கையினது மர்மத்தையறிந்து கொள்ளுவதற்கு உபயோகமான கல்வியே கல்வியெனப்படுவது. வாழ்க்கையின் இரகசியங்களை ஊடுருவி நோக்குமாற்றல் உத்தமகவிகளுக்கு இருப்பது போலப் பிறருக்கில்லை. புறநானூறென்னும் சங்கத் தொகை நூலிலும், சீவகன் சரிதையிலும், கம்பராமாயணத்திலும் அழகுபெற வகுத்துச் சொல்லப்பட்டிருக்கின்ற தெள்ளிய உண்மை களை மனத்தினெண்ணி மாசறத் தெரிந்து கொண்டு அவற்றின் வழிநின்று வாழ்க்கையை நடத்துபவன் உயர்நிலை அடைவான் என்பதற்கு ஐயப்பாடில்லை. கலைமகளுடைய அருளினைப் பெற்ற கவிவாணர் நான்முகத் தேவனைப் போலப் புத்துருவங்களையாக்க வல்லவர்கள். கலைநூல்களையோதியுணர்ந்த கல்விமான் இப்புத்துருவங்களைத் தெளிவாக நோக்கி மனத்துக்கணை அமைத்துக் கொண்டு தன்னுடைய வாழ்க்கையை அவற்றுக்கு நேராகச் சீர்படுத்துகின்றான். நோக்கம் உயர்வடையச் செய்கை உயர்வடையும், செய்கை உயர்வடைய வாழ்க்கை உயர்வடையும்.

வாரீர் சகோதரர்களே! நாம் இவ்வுலகத்தில் ஏனைய தேசத்தாரோடு ஒத்த பான்மையினராய்ச் சிறப்புற வேண்டுமாயின் நாம் நமது தாய்மொழிக்குத் தொண்டு புரிதலை மேற்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல்வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியி லியற்றல்வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமையில்லைத்
திறமான புலமையெனிற் பிறநாட்டார்
ரதை வணக்கஞ் செய்யவேண்டும்.

என ஆற்றல் சான்ற கவியரசராகிய சுப்பிரமணிய பாரதியார் வற்புறுத்திக் கூறுகின்றார். "தமிழ் பழைமை வாய்ந்தது, தொண்டர் நாதனைத் தூதிடைப் போக்கியது" என்றின்னன பழங்கதைகளை நமக்குள்ளே பேசிக் கொள்வதில் எய்துதற்குரிய பிரயோசனம் யாது மில்லை. நாற்றிசை மக்களும் நமது நாகரிகத்துக்கு ஏற்றமுரைக்க வேண்டுமென நாம் எண்ணுவோமாயின் தமிழ் நூல் பொதிந்த க்ருவூலத்தினுள்ளே அமைந்து கிடைக்கும் நன் மணிகளை எடுத்து அவற்றினது மதிப்பை நாம் பிறருக்கு உணர்த்துதல் வேண்டும். பிற நாட்டாரிடத்துள்ள அரிய பெரிய விஞ்ஞான நூல்களையும் பிறவற்றையும் மொழிபெயர்த்துத் தமிழுக்கு உரிமையாக்க வேண்டும். அனைவரும் எளிதில் உணர்ந்து கொள்ளத்தக்க இலகுவாகிய தமிழ் நடையில் உயிர்க்குறுதி பயக்கும் உயர்ந்த சாஸ்திரங்களை எழுது வித்தல் வேண்டும். தேகத்துக்கு வலிமையையும், மனதுக்கு உறுதியையும் தரத்தக்க எண்ணங்கள் தமிழ்நாடெங்கும் பரவுவதற்கு முயற்சித்தல் வேண்டும்.

ஒரு தேசத்தில் வாழுகின்ற மக்கள் தமது அரசியல் நிலை, பொருளாதார நிலை, சமூகவாழ்க்கை நிலை என்பவற்றைச் சீர்படுத்திக் கொள்ள முயல்வாராயின் முதலிலே தாம் எய்த வேண்டுமென்றெண்ணுகிற நிலையை அவர் தம் மனத்திடையே தெளிவுற உருவகப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இது உத்தமக் கவிகளினுடைய கருத்தினை நுனித்து நோக்கி அமைக்குந் தரத்தது. இந்நாளில் நடந்துவருகின்ற நாகரிக வழக்கங்களுக்கும், பல தேசத் தொடர்புகளுக்கும் இயைபாகும்படி நித்தியமான உண்மைகளை மக்களுடைய உள்ளத்திற் படியும்படியாக எடுத்துச் சொல்லும் ஆற்றலுடையவனே தன்னுடைய நாட்டுக்குப் புத்துயிரளிக்க வல்ல உண்மைக் கவியாவான். இத்தகைய ஒரு கவியைத் தமிழ்நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றது இந்நாடு செய்த பெருந்தவப் பயனேயாகும். கவியரசராகிய சுப்பிரமண்ய பாரதியார் இவ்வுலக வாழ்வை நீத்துப் பல வருடங்களாக வில்லை. இதற்கிடையில் அவருடைய கவி தேசமெங்கும் செறிந்து நாட்டிலுள்ள மக்களுக்குப் புத்துயிரளித்து வருகின்றது. இத்தகைய கவி சிரேட்டர்கள் இன்னும் பலரை இந்நாட்டில் உதிக்கச் செய்யுமாறு உலகமாதாவாகிய பராசக்தியை வேண்டிக் கொள்வோமாக.

வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்படவேண்டிய பல நூல்கள் மிகப் பலவிருக்கின்றன. நியாயம், வைசேஷிகம், சாங்கியம், யோகம், பூர்வமீமாம்சை, உத்தரமீமாம்சை என்கிற வேறு வகைப்பட்ட தத்துவ விசாரணை நூல்களை மேல்நாட்டாசிரியர்கள் தம் மொழியிற் பெயர்த்தெழுதித் தமக்கு உரிமையாக்கிக் கொண்டனர். வேத வேதாந்தங்களுக்கு மொழி பெயர்ப்பும், உரையும் ஆங்கிலம் முதலிய மேனாட்டு மொழிகளிலுண்டு. தமிழிலோ வென்றால் சூத்திரருக்கும் பெண்களுக்குந் தகவுடையனவெனக் கூறப்பட்ட சில புராணக்கதைகள் மாத்திரமே மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன. சிற்பம், ரசாயனம், ஆயுர்வேதம், அர்த்தவேதம், தநுர்வேதம், காந்தர்வவேதம், கணிதம், தருக்கம் என்றின்னன பலவாய துறைகளிலே கடல் போல விரிந்து கிடக்கின்ற சாத்திரங்களைத் தமிழிலே மொழிபெயர்த்தெழுதினால் அதனால் விழையக்கூடிய நலத்துக்கு எல்லை கூற முடியுமா? வடமொழியிலுள்ள நூல்களைத் தமிழில் பெயர்த்தெழுத முயல்வது சிறந்த தமிழ்த் தொண்டாகும்.

குறிப்புகள்

1. இக் கட்டுரையானது "தமிழ்த் தொண்டன்" பத்திரிகையில் விபுலானந்த அடிகளாரால் எழுதப்பட்டதாகும். பின்னர் "சுவாமி விபுலானந்தரின் ஆக்கங்கள் தொகுதி 2" என்னும் நூலில் எட்டாவது கட்டுரையாக இடம்பெற்றுள்ளது.

2. **கட்டுரையின் பிரதான கருத்து :**

ஏனைய தேசத்தவர்களுக்கு இணையாகத் தமிழர்களாகிய நாம் வாழ வேண்டுமாயின், சோர்வுற்று மீண்டெழுந்த எம் தாய்மொழியாகிய தமிழ் மொழிக்கு ஏற்றதான தொண்டினைச் செய்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கட்டுரையில் காணப்படும் துணைக் கருத்துக்கள் :

i. மூவேந்தர்கள், முச்சங்கங்கள் வளர்த்த தமிழ் மொழிக்குத் தொண்டு புரிய யாவர் உளர்?

ii. உலகில் தற்போது வழங்கும் மொழிகளுள், முன் தோன்றிய தமிழ்மொழி இன்னும் இரண்டு கோடி மக்கள் பேசும் மொழியாக (தற்போது எட்டுக் கோடிக்கு மேல்) நிலை பெற்றுள்ளது.

iii. தமிழர்கள் உலகின் பல பாகங்களிலும் வசித்து வருகின்றனர்; தொழில், வணிக முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் (இலங்கை, தமிழ்நாடு, தென்னாபிரிக்கா, மலாயா, சிங்கப்பூர், மத்திய அமெரிக்கா போன்ற இடங்களில்).

iv. தமிழ்மொழி அழிவுறாமல் இருக்கிறது.

v. அரசியல் மாற்றம், பிற நாட்டு மொழியாட்சி ஆகியவற்றால் தன்னியல்பு குன்றிச் சோர்வடைந்த நிலைமாறித் தமிழன்னை மீண்டும் விழித்தெழுந்து விட்டாள்.

vi. தமிழ் மொழியின் விழித்தெழுகை கண்டு பலரும் போற்றுகின்றனர்..

vii. காரிருட் காலம் கழிந்து விட்டமையால் எமது அன்னை மொழியை வளர்க்கப் புதிய ஊக்கத்துடன் நாம் தொண்டு செய்வோம்.

viii. பழைய பெருமைகளைப் பேசாமல் மகாகவி பாரதி கூறியபடி, பிற நாட்டு நல்லறிஞர் சாஸ்திரங்கள், விஞ்ஞான நூல்கள், வடமொழியிலுள்ள தகுதியான நூல்கள் ஆகியவற்றை எளியநடையில் தமிழில் மொழிபெயர்த்துக் கொள்ள வேண்டும்.

ix. அதேபோன்று தமிழ் மொழியிலுள்ள நன்மணிகளைப் பிறர் அறியுமாறு செய்தல் வேண்டும்; பிற மொழிகளில் பெயர்க்க வேண்டும்.

x. தமிழ் மக்கள் தாம் எய்த வேண்டிய அரசியல், பொருளாதார, சமூக வாழ்க்கை நிலைகளைச் சீர்ப்படுத்த, உடல் வலிவையும் மன உறுதியையும் தரத்தக்க முயற்சிகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பாரதி பற்றிய விபலாநந்தரின் கருத்துகள் :

i. பிறநாட்டு நல்லறிஞர் சாஸ்திரங்களைத் தமிழில் மொழி பெயர்த்தல், இறவாத புகழ் தரக்கூடிய புதிய நூல்களைத் தமிழ்மொழியில் இயற்றல், பழைய பெருமைகளைப் பேசாமல் பிறநாட்டவர் போற்றக் கூடிய முறையில் தமிழர்கள் புலமைசார் இலக்கியங்கள், நூல்கள் போன்றவற்றைப் படைத்தல் முதலானவற்றைப் பாரதியார் வற்புறுத்திக் கூறுகின்றார்.

ii. இந்நாளில் நடக்கின்ற நாகரிக வழக்கங்கள், பலதேசத் தொடர்புகள் ஆகியவற்றுக்கு ஏற்றதாக, நிலையான உண்மைகளை மக்கள் உள்ளத்தில் படியும் படியாக எடுத்துச் சொல்லும் ஆற்றலடையவனே உண்மைக் கவிஞன்; நாட்டுக்குப் புத்துயிர் அளிக்க வல்லவன்; அத்தகைய கவிஞனே தமிழ்நாடு தந்த பாரதி.

iii. பாரதியார் மறைந்து பல ஆண்டுகளாகி விட்டாலும், அவருடைய கவிதைகள் நாடு முழுவதும் பரவி, மக்களுக்குப் புத்துயிர் அளித்து வருகின்றன.

5. உத்தம கவிகள் பற்றிய விபுலாநந்தரின் கருத்துகள் :

i. வாழ்க்கையின் இரகசியங்களை ஊடுருவி நோக்கும் ஆற்றல் உத்தம கவிகளுக்கு உண்டு.

ii. உத்தம கவிகள் கூறியுள்ள கருத்துண்மைகளை மனத்தில் எண்ணி, அவற்றைக் குற்றமில்லாத முறையில் உணர்ந்து, வாழ்க்கை நடத்துபவன் உயர்ந்த நிலையடை வான்.

iii. புறநானூறு, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற நூல்கள் உத்தம கவிகளால் படைக்கப்பட்டவை.

iv. உத்தம கவிகள் பிரம்மாவைப் போல புதியவற்றைப் படைக்கக் கூடியவர்கள்.

v. நோக்கத்தால் செய்கையும், செய்கையால் நோக்கமும் உயர்வடைய உத்தம கவிகள் வழிகாட்டியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. வடமொழிகளில் நூல்களை மொழி பெயர்த்தல் பற்றிய விபுலாநந்தர் கருத்துக்கள் :

i. வடமொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட வேண்டிய நூல்கள் பலவுள.

ii. மேனாட்டார் வடமொழியிலுள்ள தத்துவ விசாரணை நூல்களைத் தமது மொழியில் பெயர்த்து உரிமையாக்கிக் கொண்டனர். ஆயினும் தமிழில் சூத்திரர்க்கும், பெண்களுக்கும் ஏற்ற சில புராணக் கதைகளே மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

iii. வடமொழியில் கடல்போல விரிந்துகிடக்கின்ற சிற்பம், இரசாயனம், ஆயுர்வேதம், அர்த்தவேதம், தநுர்வேதம், காந்தருவ வேதம், கணிதம், தருக்கம் போன்ற நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தல் வேண்டும்.

iv. வட மொழி நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தல் சிறந்த தமிழ்த் தொண்டாகும்.

7. கட்டுரையாசிரியரின் மொழிநடை :

i. எளிமையும், இலக்கிச் செம்மையும் கலந்த மொழி நடை.

ii. பெருமளவுக்கு நீண்டதான வாக்கியங்களின் பயன்பாடு.

iii. தேவைப்பட்ட இடங்கள் சிலவற்றைத் தவிர (நூற் பெயர்கள் முதலானவை) ஏனையவற்றில் தூய தமிழ்ச் சொற்களின் பயன்பாடு.

iv. காரண - காரிய ரீதியில், தர்க்க முறையில், தமிழ்த் தொண்டிற்கான விடயங்களை முன்னெடுத்துச் செல்லல்.

v. ஆங்காங்கே உத்தமகவிகள், அவர்களின் நூல்கள், பாரதியாரின் வேண்டுகோள், பாரதியின் மகத்துவம் ஆகிய வற்றை எடுத்துக் காட்டித் தமிழ்த் தொண்டினை வலியுறுத்தல்.

vi. தமிழில், பிறமொழி நூல்களின், குறிப்பாக வடமொழி நூல்களின் மொழி பெயர்ப்புப் பற்றி தெளிவான வரையறைகளைச் சுட்டிக் காட்டல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. அருஞ்சொற் பொருள் :

அயர்ச்சி - தளர்ச்சி, சோர்வு; திருப்பள்ளியெழுச்சி - இறைவன் துயிலெழப் பாடும் பாடல், தமிழின் எழுச்சிக்காக பாடும் பாடல்; மர்மம் - இரகசியம்; மாசற - குற்றமில்லாமல்; இறவாத - அழியாத; பழங்கதை - பழைய பெருமைகளைக் கதையாகப் பேசுதல்; பொதிந்த - உள்ளடங்கிய; உருவகப்படுத்தி - ஒழுங்காக உருவாக்கி; நுனித்து - நுண்மையாக, ஆராய்ந்து; நித்தியமான - நிலையான; கவிசிரேட்டர்கள் - கவிதையில் உயர்ந்தவர்கள், மேம்பட்ட கவிஞர்கள்; நியாயம், வைசேஷிகம், சாங்கியம், யோகம், பூர்வமீமாம்சை, உத்தரமீமாம்சை ஆகியன - இந்துமத அறுவகைத் தத்துவ தரிசனங்கள்; உத்தரமீமாம்சை - வேதாந்தம்; அர்த்தம் - பொருள்; தநுர் - போர், வில்; காந்தருவம் - காதல் மணம்; தகவுடைய - தகுதியுடைய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. தமிழர் நாகரிகத்தில் கிராம வாழ்க்கை

கட்டுரையாசிரியர் அறிமுகம்

- புதுமைப்பித்தன்

நவீன தமிழ்ச் சிறுகதையின் பிதாமகரென்றும், "சாம்ராட்" என்றும் கூறப்படும் புதுமைப்பித்தனின் இயற் பெயர் விருத்தாசலம் என்பதாகும். இவர் சொக்கலிங்கம்பிள்ளைக்கும், பர்வதத் தம்மாளுக்கும் தலைமகனாக, தமிழ் நாட்டின் கடலூரையடுத்துள்ள திருப் பாதிரிப் புலியூரில் 25.04.1906இல் பிறந் தார். திருநெல்வேலி யோவான் கல்லூரியிலும், பின்னர் இந்துக் கல்லூரியிலும் கல்வி கற்று, 25வது வயதில் பி.ஏ பட்டம் பெற்றார். இளமையில் குறும்புத்தனங்களும், பொறுப்பின்மையும் காணப் பட்டாலும், இலக்கிய சர்ச்சைகளில் ஈடுபடுவதிலும் புத்தகங்களைப் படிப்பதிலும் ஆர்வமுடன் ஈடுபட்டார்.

சிறுவயதில்தாயை இழந்து, சிற்றன்னையின் கொடுமைக் காளானார். தந்தையாரின் விருப்பப்படி சட்டம் படித்து நியாயவாதியா கவோ,அரச உத்தியோகம் பெறவோ முயலாமையால் அவரைப் பிரிந்து சென்னை சென்று பத்திரிகைப்பணியை விரும்பி ஏற்றுக் கொண்டார்.எப்போதும் சுதந்திரமான போக்குடையவராக விளங்கி னார். திருவனந்தபுரம் பி.டி.சுப்பிரமணியபிள்ளையின் மகளான கமலாம்பாளை 1931 யூலை மாதத்தில் திருமணஞ்செய்து, தினகரி என்ற பெண்ணுக்குத் தந்தையானார்.

தனது எழுத்தாற்றலில் நம்பிக்கைகொண்ட புதுமைப்பித்தன் அவர்கள், டி.எஸ்.சொக்கலிங்கம்பிள்ளை நடத்திய ஊழியன், தினமணி, தினசரி பத்திரிகைகளின் உதவியாசிரியராகப் (1936-1943)பணியாற்றினார். "மணிக்கொடி"யிலும் பணியாற்றினார். வறுமையான வாழ்க்கைச் சூழ்நிலையிலும் பி.எஸ்.ராமையா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.ஸ்ரீனிவாசன் முதலான எழுத்தாளர்களின் தொடர்பினால் பத்திரிகை உதவியாசிரியர் வேலை கிடைத்தது. ஆனால் எந்தத் தொழிலிலும் அவர் நிலைத்து நின்றதில்லை. நாளிதழ்களில் பணியாற்றிய காலத்தில் அவர் எழுத்துத் துறையில் ஈடுபட்டு உழைத்தார். தமிழ்ச் சூழலில் தனது பெயரை நிலைநிறுத்தும் வகையில் சிறுகதை, கட்டுரை, கவிதை, மொழிபெயர்ப்பு, நாடகம், நாவல், வாழ்க்கை வரலாறு போன்ற படைப்புருவங்களையளித்தார். சிறுகதைகளில் அவருடைய ஆளுமையின் வீச்சுச் சிறப்பானது. சுமார் நூறு சிறுகதைகளைத் தான் அவர் எழுதியிருப்பினும் அவற்றின் உருவம், உள்ளடக்கம், கதை சொல்லும் நேர்த்தி ஆகியவற்றில் அவற்றுள் பல சிறந்து விளங்கின. அவர் கதை எழுதத் தொடங்கிய 1934 ஆம் ஆண்டில் மட்டும் ஒருவித இலக்கிய ஆவேசத்துடன் நாற்பதுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதிக் குவித்தார். இவற்றுள் பல கதைகள் சாதாரணமானவைதான். இருப்பினும் அவருடைய சிறப்பான பார்வையும், மரபைமறுதலித்தல், கிண்டல், விமர்சனம், நூதனமான தெறிப்புக்கள், இலாவகமான எழுத்துப்போக்கு முதலான குணாம்சங்களும் பிற்காலத்தைய அவரது சிறந்த கதைகளைப் போல இவற்றிலும் ஊடுருவிக் காணப் பட்டன. கே.ஸ்ரீனிவாசனின் "மணிக்கொடி", டி.எஸ்.சொக்கலிங்கம் பிள்ளையின் "காந்தி", சுப்பிரமணியத்தின் "சுதந்திரச் சங்கு" ஆகியவற்றிலும் இவருடைய கதைகள் அதிகம் பிரசுரமாயின. "மணிக்கொடி" கால எழுத்தாளர்களில் புதுமைப்பித்தன் தலைசிறந்து காணப்பட்டார். அச்சஞ்சிகையில் 42 சிறுகதைகள் எழுதினார். அவை பின்னர் வி.ஏ.அரசுவினால் தொகுக்கப்பட்டு "புதுமைப்பித்தன் கதைகள் மணிக்கொடி கதைகள்" என்ற பெயரில் சென்னை அலைகள் வெளியீட்டகத்தினால் அச்சில் கொண்டு வரப்பட்டுள்ளன.

புதுமைப்பித்தன் 1934 – 1948 வரையிலான 14 ஆண்டுகளே தமிழிலக்கியச் சூழலிற் செயற்பட்டார். "கலைமகள்" சஞ்சிகையில் "என் கதைகளும் நானும்" என்ற தலைப்பில் அவர் 200 கதைகள் வரை தான் எழுதியதாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் 2005ம் ஆண்டு ஆ.இரா.வேங்கடாசலபதி தொகுத்த "புதுமைப்பித்தன் சிறுகதைத் தொகுதி" யின் நான்காம் பதிப்பில் இதுவரை கிடைக்கப்பெற்ற 97 சிறுகதைகள் இடம்பெற்றிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொதுவாக என்னுடைய கதைகள் உலகத்துக்கு உபதேசஞ் செய்து உய்விக்க ஏற்பாடு செய்யும் ஸ்தாபனம் அல்ல. பிற்கால நல்வாழ்வுக்குச் சௌகரியம் பண்ணி வைக்கும் "இன்ஷ்யூரன்ஸ்" ஏற்பாடும் அல்ல. எனக்குப் பிடிக்கிறவர்களையும், பிடிக்காதவர் களையும் கிண்டல் செய்து கொண்டிருக்கிறேன். சிலர் என்னோடு சேர்ந்து கொண்டு சிரிக்கிறார்கள்; இன்னுஞ்சிலர் கோபிக்கிறார்கள்: இவர்கள் கோபிக்கக் கோபிக்கத்தான் அவர்களை இன்னும் கோபிக்க வைத்து முகம் சிவப்பதைப் பார்க்க வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது. ஆனால் இப்படிக்கோபிப்பவர்கள் கூட்டம் குறையக் குறையத்தான் எனக்குக் கவலை அதிகமாகி வருகிறது.

இவ்வாறு கூறியுள்ளார் புதுமைப்பித்தன் ("எச்சரிக்கை" - காஞ்சனை 3ஆம் பதிப்பு 1957பக் VI - VII). இவரது முதற்கதையாக "புதிய ஒளி"யும் (1934), இறுதிச்சிறுகதையாக 1948இல் காலமான பின் வெளிவந்த "கயிற்றரவு"வும் விளங்குகின்றன. "திறந்தயன்னல்", "சாயங்கால மயக்கம்" ஆகியவை 4 பக்கங்களிலான கதைகள். 37பக்கங்களில் நீண்ட சிறுகதையாக அமைந்தது "துன்பக் கேணி"யாகும். தமிழக வரலாற்றுப் பின்னணியில் அமைந்தவை போன்று போலியாக எழுதப்பட்டவை "சிற்பியின் நரகம்", "கொன்ற சிரிப்பு" ஆகியன. புராணக்கருவை அடிப்படையாகக் கொண்டவை "சாபவிமோசனம்", "அகல்யை", "அன்று இரவு" ஆகியன.

"காஞ்சனை", பிரம்ம ராக்ஷஷ், பூதக்கதைகள். பாரதியாரின் "சந்திரிகை" எனற பூர்த்தியடையாத நாவலில் வரும் பாத்திரங் களைக் கொண்டு படைக்கப்பட்ட கதை "கோபல்லய்யங்காரரின் மனைவி". ஒரு சில நிமிடத்துள் முடியும் சம்பவங்களைக் கொண்டது. "திறந்த யன்னல்" கதை. நனவோடை உத்தியில் அமைந்தது "கயிற்றரவு". வறுமைக்கோட்டுக்குள் கீழுள்ள சேரித் தொழிலாளர் களான ஏழை மக்களிடையே "கற்பு" பற்றிய அக்கறையின்மையை அழகுற உணர்த்தும் சிறிய அளவிலான சிறுகதை "பொன்னகரம்" ஆகும். இலங்கையின் மலையகத் தமிழர்களது துன்பியல் அவல வாழ்வினை, தாய் , மகள் ஆகிய இரு பரம்பரைகளின் நிகழ்ச்சிகளி னூடாகச் சித்திரிப்பது "துன்பக்கேணி"யாகும். நகைச்சுவையும் நையாண்டியும் நிறைந்த "கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்", "திருக்குறள் செய்த திருக்கூத்து" ஆகியவற்றுடன் "ஒரு நாள் கழிந்தது", "விநாயக சதுர்த்தி", "கவந்தனும் காமனும்", "கல்யாணி", "இது மிஷின்யுகம்", "மனக்குகை ஓவியங்கள்", "செவ்வாய் தோஷம்",

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காஞ்சனை", "செல்லம்மாள்", "அவதாரம்" முதலான பல சிறுகதைகளையும் தமிழுக்குத் தந்தவர் புதுமைப்பித்தன்.

"சிற்றன்னை" அவரது சிறந்த குறுநாவலாகும். "அன்னை இட்டதீ" முற்றுப் பெறாத இன்னுமொரு நாவலாகும். புதுமைப் பித்தன் கதைகளின் நிகழ்களங்களாகத் திருநெல்வேலியும், சென்னையும் காணப்படுகின்றன. அப்பிரதேசங்களின் பேச்சு வழக்கு மொழியையே அவர் அதிகம் கையாண்டார். தமது 12 வயதில் நெல்லை மண்ணுக்கு வந்தவர், 25 வயதில் அம்மண்ணைத் துறந்து சென்னை சென்றார். "தமிழ் எழுத்தாளர் சமூகத்திலே புதுமைப் பித்தன் முதன்முதல் வாழ்க்கையின் யதார்த்த நிலைகளை ஸ்பஷ்டமாகவும், ஆணித்தரமாகவும், பட்டவர்த்தனமாகவும் எழுதினார், எழுதி வழிகாட்டினார்." என்று சிதம்பரரகுநாதன் கூறியுள்ளார்.

புதுமைப்பித்தனின் "நாரத ராமாயணம்" புதுமையான உரை நடைக் காவியமாகும். "உலகத்துச் சிறுகதைகள்", "பலிங்குச்சிலை", "தெய்வம்", "கொடுத்த வரம்" "மணியோசை", "உயிராசை", "பிரேத மனிதன்" (நாவல்), "உலக அரங்கு", "பாஸிஸ்ட் ஐடாமுனி" ஆகியன இவரது மொழிபெயர்ப்புப் படைப்புகளாகும். "நமது இலக்கியம்", "அதிகாரம் யாருக்கு", முதலான பல இலக்கியக் கட்டுரைகளையும் இவர் எழுதியுள்ளார். இவரது பல்துறை அளாவிய 32 கட்டுரை களையும், 19 கவிதைகளையும் கொண்ட "புதுமைப்பித்தன் கவிதைகள் கட்டுரைகள்" நூல் 2004 ஆம் ஆண்டு பூம்புகார் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. புதுக்கவிதைகளின் முன்னோடிகளில் புதுமைப்பித்தனும் ஒருவர்.

வானத்து அமரன்
வந்தான் காண்
வந்தது போல்
போனான் காண் என்று
புலம்பாதீர்
அத்தனையும் வேண்டாம்
அடியேனை விட்டுவிடும்

-புதுமைப்பித்தன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெலிந்த தோற்றம், 5 அடி 9அங்குலம் உயரம், தீக்ஷயண்ய மான விழிகள், நீண்ட தலைமுடி, சற்றே முன்வந்த பெரிய பற்கள், ஒட்டியகன்னம் - புதுமைப்பித்தனின் பிற்காலத்தைய தோற்றம் இவ்வாறிருந்தது எனப்படுகிறது.

தமிழ்த் திரைப்படத்துறையிலும் புதுமைப்பித்தன் ஈடுபட்டுள்ளார். "ஜெமினி"யின் "ஔவையார்" படத்தின் திரைக் கதைக்குழுவினருள் ஒருவராகவும், "காமவல்லி" (1948) படத்தின் கதை - வசனகர்த்தாவாகவும் விளங்கினார், தியாகராச பாகவதரின் "ராஜமுக்தி" (1948) படத்துக்குக் கதை - வசனம் எழுதப் பூனே சென்றார். அங்கு கடுமையான கயரோகத்தினால் பீடிக்கப்பட்டதால் வீடு திரும்பி 30.06.1948இல் காலமானார். அவரது மறைவின்பின் அவரது கதை - வசனத்துடன் "ராஜமுக்தி" திரையிடப்பட்டது. வறுமைக்கும், காச நோய்க்கும் பலியாகிய இந்த மாபெரும் தமிழ் எழுத்தாளனின் வாழ்வு 42 வருடங்களுடன் முடிந்து விட்டது. வெளிவராத "லெட்சுமி விஜயம்" என்னும் திரைப்படத்திற்காக இவரெழுதிய உரைச்சித்திரம் "வாக்கும் வக்கும்" ஆகும். அது பின்னர் மாற்றங்களுடன் வேறு திரைப்படத்தில் பயன்படுத்தப்பட்டது. இவரது "சிற்றன்னை" குறுநாவலைத் தழுவி 1979இல் மகேந்திரனின் "உதிரிப்பூக்கள்" திரைப்படம் வெளியானது. 2002யூன் மாதம் புதுமைப்பித்தனின் இலக்கியப் படைப்புகள் யாவும் அரசுடைமை யாக்கப்பட்டன.

புதுமைப்பித்தன் காலமாகி எட்டு ஆண்டுகளின் பின்னர் விஜயபாஸ்கரனின் "சரஸ்வதி" சஞ்சிகையானது "புதுமைப்பித்தன் மலர்" (1957 யூலை) ஒன்றினை வெளியிட்டிருந்தது. அதில் கூறப்படுள்ள சில கருத்துகள் வருமாறு:

"அவரது எழுத்துக்கள் உள்ளத்தைக் கசக்கிப் பிழிந்தன. மனச்சாட்சியின் நெற்றியில் சூடு போட்டன. சூதுள்ள நெஞ்சுக்கு நஞ்சாக இருந்தன."

"அவரது எழுத்து இருளில் மறைகிறவைகளை, இருளில் நடக்கிறவற்றை விளக்குப் போட்டுக் காட்டின. மனிதன் செய்யும் பாதகங்களை மறைக்க உபயோகிக்கும் பண்புக் கவசங்களை உடைத்தெறிந்தன. அவர் காலடியில் விழுந்து குவிந்த முகமூடி களுக்குத்தான் கணக்கு வழக்கு உண்டோ?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவரது விளக்கைக் கண்டு எத்தனை மனித ஆந்தைகள் இருளை நோக்கி ஓட்டம் பிடித்தன. பழைமை அழுக்கைத் தேடிச் சென்று "கையும் மெய்யுமாய்ப் பிடித்துக் கைதுசெய்து குற்றப் பத்திரிகை வாசிக்கும் அவரது எழுத்துக்கள் எத்தனையோ விசிறி மடிப்புக்களுக்கும் விபூதிப் பட்டைகளுக்கும் விஷமாயிருந்தன."

"காரணம் புதுமைப்பித்தன் ஒரு கலகக்கார. குருட்டுப் பழைமையின் தீராத விரோதி."

"புதுமைப்பித்தனின் இந்த ஆன்மீக சக்தியும் ஆன்மீகத் துணிவும் தான், அவரது இலக்கியத்துக்கு இந்தக் குணவிஷேங் களைத் தந்தன."

கருத்தில் பிரதிபலித்த கலகம்தான் அவரது கதை உருவங் களிலும் வெளிப்பட் ன.

புதுமைப் ின் தமிழர் நாகரிகத்தில் கிராம வாழ்க்கை என்னும் கட்டுரை அ டம்பெற்றுள்ளது.

தமிழர் நாகரிகத்தில் கிராம வாழ்க்கை

நாகரிகம் ...து என்ன? பிராதஸ்னானம், திருநீற்றுச் சம்புடம் ஆகியவற்ை ...வத்துச் சிலர் நாகரிகத்தை அளக்கிறார்கள். வேறு சிலர் வெடிகுண்டுக்கு இருக்கும் நாச சக்தியையும், மின்சார விளக்கின் வெளிச்ச உக்கிரத்தையும் கொண்டு கணிக்கிறார்கள். இன்னும் சிலருக்கு - ஏன் - இப்படியே எத்தனை விதமானாலும் அடுக்கிக் கொண்டே போகலாம். நாகரிகம் என்ற கருத்து ஓரளவு மேற் சொன்னவற்றின் களையுடன் சோபிக்கும் ஒரு தன்மை என்பதுடன் அதற்கு அதீதமானதுமாகும். நாகரிகம் என்பது சமுதாயம் இற்றுப் போகாமல் எடுத்துக் கட்டிய ஞாபகச் சரடு; நினைவுப் பாதை; சமுதாயம், எறும்புச் சாரை போல் ஊர்ந்து ஊர்ந்து, பழக்கப்பட்டுப் போன பாதை; அது இருந்து வருவதற்கு உயிர் கொடுத்து வருவது. இந்த ரீதியில் கவனித்தால், நாகரிகம் என்பது வெறும் பிழைப்புக்கும், பிறகு சுகானுபவத்துக்கும், அதன் பிறகு உள்ளத்தில் உடைந்து மசியும் நினைவுக் கோயில்களுக்கும் ஆதார பீடமாக அமைந்திருப்பதாகும். நாகரிகத்தை அமைக்கிறதற்கு கிராமம் என்ன செய்கிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராம வாழ்க்கை என்பது கிராம்யமான ஒரு காரியம் அல்ல. ஏதோ வன போஜனத்துக்காகப் போகிறவர்கள் வழக்கமாக உட்காரும் ஸோபாவை இழப்பதால் தமக்குக் கிடைப்பதாகக் கருதிக் கொள்ளும் சுகானுபவம் போன்றதல்ல. "கிராமத்துக்குப் போங்கள்" என்ற உருக்கமான பிரசங்கங்கள் பட்டணத்துக் காரர்களை நெட்டி நெட்டித் தள்ளுகின்றன. "சார், நான் ரிட்டயரானதும். ஏதாவது சுகமா ஒரு கிராமத்திலே போய்க் கழிக்கலாம்னு ப்ளான் போட்டிருக்கேன், நீங்க என்ன நினைக்கிறியள்?" என்கிறார் ஒருவர். இருபத்தியைந்து வருஷ உழைப்பால் உடலைக் கெடுத்துக் கொண்டதுடன், நேர்ச்சைக் கடனுக்காகக் கைகளைக் கும்பிட்டபடி உயரத் தூக்கி சூம்பவைத்துக் கொண்ட பைராகி மாதிரி காலை பத்து மணிமுதல் ஐந்து மணி வரை மூளையை ஒரே திசையில் விரட்டி விரட்டி இற்றுப் போக வைத்துக் கொண்ட ஒருவருக்கு தாம் சாம்பலாக வேண்டிய சுடுகாட்டுக்கும், தம்முடைய மிச்ச வாழ்வுக்கும் இடையில் கிடக்கும் ரேழியாக கிராமம் தென்படுவதில் அதிசயமில்லை. அது அவர் பண்ணின புண்ணியம். டில்லி சர்காரி காரியாலயத்தில் ஒரு மகன், எஞ்ஜினியரிங் கம்பனியில் ஒரு மகன், ஒரு அட்வகேட் ஜெனரலின் தகனுக்கு சகதர்மிணியாக ஒரு மகள், காலேஜுக்கு ஐம்பது மைல் வேகத்தில் மோட்டார் சைக்கிளில் போவது தான் மோட்ச சாம்ராஜ்யம் என்று நினைக்கும் சுந்தா, இவ்வாறு ஒருபடியாக தமது வாரிஸ் வர்க்கத்தைப் பங்கீடு செய்து விட்டு, தம்முடைய அஜீர்ணம், 1936 வருஷ மோட்டார் கார், தொய்ந்து போன காதில் வைத்து உசாவாடும் வைரக் கம்மல் மனைவி, விட்டமின் விசாரம், திருக்குறள் உபாசனை ஆகியவற்றுடன் இவர் போய் ஒரு கிராமத்தில் குடியேறுகிறார் என்று வைத்துக் கொள்ளுவோம். பத்திரிகையும், பழக் கூடையும் பட்டணத்திலிருந்து வந்துகொண்டே இருக்கும். ஆறு நிறையத் தண்ணீர் போனாலும் வெண்ணீரில் தான் குளிப்பார்" உடம்புக்குள் உயிர் பெய்வது போல் தென்றல் இழைந்தாலும் பிளானல் சட்டை போட்டுக் கொண்டு, வெள்ளித் தடியோடு உலாவ, அதாவது வாக்கிங் போவார். எதிரே உட்கார்ந்திருக்கும் வெட்டியான் கைகட்டி வாய் புதைத்து, "எச்மான் புத்தி" என்று சொல்லிக் கொண்டு எழுந்திருப்பான். அவ்வளவு தான் அவர் கிராமத்தில் அனுபவிக்கப் போகிறதும், அனுபவிக்கிறதும். ராவணன், மண்ணோடு பெயர்த்துச் சீதையைத் தூக்கிக் கொண்டு போய், அசோக வனத்தில் சிறை வைத்தானாம். அது நிஜமா பொய்யா எனக்குத் தெரியாது. ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சொன்னேனே, இந்த மாஜி உத்யோக வர்க்கம், அது, பட்டணத்தில் கொஞ்சம் பெயர்த்துக் கொண்டு போய், கிராமத்தில் போட்டு, அதன்மேல் உட்கார்ந்து கொண்டுதான் கிராமத்தைப் பார்க்கிறார்கள்; கிராமத்தை அனுபவிக்கிறார்கள். இவர்களுக்குக் கிராமம் தென்படாது; அனுபவத்துக்கும் கிட்டாது. இவர்களது இந்த ராவண கைங்கரியத்துக்குள் அகப்படாத கிராமம் என்பது என்ன என்று கேட்கிறீர்களா? அப்படிக் கேளுங்கள்.

நீங்கள் நெல்லுக் காய்ச்சி மரம் என்று கேள்விப் பட்டிருக்கிறீர்களா? உணவு வகைகளில் ஒன்றைக் கொடுக்கும் புல் வகையில் ஒன்றல்லவா என்று தாவரவியல் நிபுணர் உறுமுகிறார். ஆமாம், அப்படியும் சொல்லுவார்கள். நெல்லுக் காய்ச்சி மரம் என்றால் பட்டணத்துக் காரனைப் பற்றி கிராமவாசி செய்யும் கிண்டல் என்று அர்த்தம். உங்கள் மோட்டார் காரை அவன் உன்னிப்பாகப் பார்த்தால், நீ அவனை உதாசீனமாகப் பார்க்கிறீர் அல்லவா? அதற்கு அவனுடைய பதில் அது.

கிராமத்தில் சினிமா இருக்காது; ஷேவிங் ஸோப் கிடைக்காது; சிகரட் அகப்படாது; ஆனால் சுகம் உண்டு; அதாவது வாழத் தெரிந்தவர்களுக்கு.

எனக்குத் தெரிந்த கிராமத்தைக் கொஞ்சம் வர்ணிக்கிறேன். அதற்கு ஒரே ஒரு தெருதான் உண்டு. அக்கிரஹாரம் இல்லை. தெருவின் ஒரு கோடியில் கிராம முனிஸீபும் மறுகோடியில் கணக்கப் பிள்ளையும் இருக்கிறார்கள். இருவர் கோபத்துக்கும் ஆளாகாமல் பிழைத்துக் கொள்ளத் தெரிந்த தலையாரி, இந்தத் தெருவுக்குக் கூப்பிடு தூரத்தில் உள்ள மறவர் தெருவில் இருக்கிறான். இன்னும் பத்துப் பதினைந்து வீடுகள் இந்த வீரமறக் குலத்துக்கு நிழல் தருகிறது. இவர்கள் வாளையும் வேல்கம்பையும் விட்டெறிந்து ரொம்ப காலமாச்சு. "சாதியிலே மறவனாக்கும்" என்று அதட்டிக் கொண்டு, ஏர் பிடித்து உழுகிறார்கள். இவர்களுக்கும் எட்டாத் தொலைவில் பள்ளர்கள் சேரி. நாம் நினைவை விட்டு விரட்ட முயலும் கெட்ட நினைப்பைப் போல அவர்கள் அங்கு அக்ஞாதவாசம் பண்ணு கிறார்கள். ஊருக்கு ஒரு மைதானம் உண்டு. சாதாரணமாக மாடு படுத் திருக்கும். ஊர்த் தேவதை திருவிழாவில், வானத்தையே கூரையாகக் கொண்ட கலைமண்டபமாகும். சாணி தட்டவும், நெல் உலர்த்தவும் ஏற்றவையானது. இந்த ஊரிலே சைவச் சாப்பாட்டைச் சமையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தில் நிவேதனமாகவும் பொதுவாக அந்தக் கிராமத்தான் வணக்கத்தையும் பார்த்துப் பசியாறும் பிள்ளையாருடைய கோவில் உண்டு.

ஊர் எல்லையிலே ஊரின் காவல் தேவதை பேராய்ச்சி கோவில் உண்டு. கோவில் - கோவில் என்றதும் பிரமாதமான கற்கனவுகள் என்று நினைத்துவிட வேண்டாம். கிராம முனிசிபு பிள்ளையவர்கள் வீட்டைப் போல அடக்கமானது தான். அவரது மன இருட்டைப் போல இங்கே கர்ப்பக் கிரகமும் இருட்டிக் கிடக்கும். கலசம் மட்டும் பேராய்ச்சி கோவிலை, கோவிலென்று வேறுபடுத்திக் காட்டும்" மற்றபடி ஒன்றுதான். இந்தத் தேவதை அசைவம். வருஷத்துக்கு ஒரு தடவையாவது ரத்தம் காணவேணும், இல்லாவிட்டால் குடியே முழுகிப் போச்சு.

பட்டப் பகலானாலும் கர்ப்பக் கிரகத்தில் கும்மிருட்டு. கூர்மையாகக் கவனித்தால் வெள்ளையும் அதற்கப்புறம் அதன் மையத்தில் ஒரு கறுப்பு. இன்னும் பார்த்தால், விறைத்துப் பார்க்கும் கண்கள், பிறகு இருட்டு திரண்டு திரண்டு பத்தாயிரம் கைகளில் வேலும் சூலமும் தாங்கி எல்லையையே இமை கொட்டாமல் காத்து நிற்பது தெரியவரும். பட்டப்பகலானாலும், அதைக் கண்டு பயப்படுவோரைக் கண்டால் நாம் அவர்களைக் கேலி செய்யக் கூடாது. நாகரிகப்பட்டுப் போன பிறகு மனித வர்க்கம், ஏதோ எப்போதோ ஒரு காலத்தில், எது பயத்துக்கு வித்தாக இருந்ததோ, அதைப் பயம்போக்கும் மருந்தாக வசக்கிக் கொள்ள முற்பட்ட ஒரு சாதனத்தைக் கண்டு மிரளாமலிருப்பது பிசகு. இருட்டிலே, காட்டிலே மின்னுகிற புலிக் கண்ணைப் பார்த்து அதில் அன்புபெய்து வைத்துக் கற்பனை பண்ணின காரியம் இந்தப் பேராய்ச்சி. இந்தத் தாயின் மகத்துவத்தைப் பற்றிக் கிராமத்துப் புலவர் பாடுவதைக் கெட்டால், ஆஸ்பத்திரி எதற்கு. மலேரியா, மகமாரி, எதிர்ப்பு மருந்துவகை ஊசிக்குத்துமுறை எல்லாம் எதற்கு என்றெல்லாம் படும். அந்தவூரில் நிஜமான ஆட்சிப் பேராய்சியின் ஆட்சிதான். அந்த ஊர்க்காரர்கள் பயப்படுவது போல அவ்வளவு கொடுமைக் காரியல்ல அவள் மகா கண்டிப்புக் காரி.

அந்தவூர்க் காரர்கள் மனப்பண்பாடு நீங்கள் எதிர்பார்க்கிற மாதிரி அவ்வளவு நாஸூக்காக இருக்காது. மிஞ்சிமிஞ்சிப் போனாலும் அவர்கள் கற்பனையெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோளப் பொறி மத்தியிலே
சுட்டுவச்ச தோசையைப் போல்
சுட்டுவச்ச தோசையைப் போல்
தோணுமிந்தச் சோதி நிலா

என்றுதான் பாடுவார்கள்.

அருந்த அமரர் கலக்கிய நாள்
அமுதம் நிறைந்த பாற்கலசம்
இருந்த திடைவந்து எழுந்ததென
எழுந்த தாழி வெண்திங்கள்

என்று ஒரு சந்திரோதயத்தில் இதிகாச நாடகத்தைப் பார்க்கும் மனப்பண்பு அவர்களிடம் தென் படாது. நெஞ்சிலும் தோளிலும் உரம் உண்டு. உள்ளத்திலே பரிவு உண்டு.

மேழி பிடிக்குங்கை, வேல்வேந்தர் நோக்குங்கை
ஆழி பிடித்தே அருளுங்கை

என்று அவ்வைக் கிழவி சொன்னது போல, ரொம்பவும் பின்னிப் பிணைந்த கைத்தொழில் நாகரிகமாக இருந்தாலும், சமுதாயத்தின் ஸ்திரத் தன்மைக்கு அவசியமும் ஆதாரமுமானது விவசாயம்; பலர் எண்ணுகிற போல மட்டம் அல்ல.

தமிழ் இலக்கியத்திலே ஒரு கிழவி திரிந்து வருகிறாள். அவளுக்குப் பட்டணத்து நாகரிகத்தின் நெடி பிடிக்காது. எடுத் தெறிந்து பேசி உதறியடித்து விடுவாள். கிராம வாசிகள் உள்ளப் பண்பைக் காண்பதற்கு செய்துவைத்தது போல இருக்கிறது அவளுடைய பாட்டு.

- அண்டி

நெருக்குண்டேன், தள்ளுண்டேன் நீள்பசி யினாலே
சுருக்குண்டேன் சோறுண் டிலேன்.

என்று சுருக்கமாகச் சொல்லுகிறாள். இது எங்கே என்று கேட்டால் அதைவிட வினோதமாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்தமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்தில்
உண்ட பெருக்கம் உரைக்கக்கேள்.

என்று பொக்கை வாயைக் காட்டிக் கேலி செய்கிறாள் கிழவி. அவள் பார்த்தது எல்லாம், "நான் மாடக் கூடல் கல்வலிது" என்பது தான்.

வெய்தாய் நறுவிதாய் வேண்டளவும் தின்பதாய்
நெய்தான் அளாவி நிறம்பசந்து - பொய்யாய்
அடகென்று சொல்லி அமுதத்தை ஈந்தாள்
கடகம் செறிந்த கையாள்

என்று பெண்ணின் வளைபோட்ட கை இலக்கியத்தில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. அவள் கண்ட கைகள் தான் அது.

இன்னொருவன்; அவன் பேர் பூதன். பெயர்தான் ஆளை மிரட்டுகிற மாதிரி.

வரகரிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முறமுறெனவே புளித்த மோரும்

அவ்வைக் கிழவியின் பசியை ஆற்றுகிறது.

கிராமங்கள், இந்த மாதிரி திசை மாறித் திரிவோருக்கு மட்டும் அன்ன சத்திரமல்ல; நாகரிகத்தின் முதல் படி அன்னவிசாரம், பசிப் பகையை விரட்டும் முதல் மதிள் கிராமங்கள். சமுதாயத்தின் சித்தம் அல்லது விவேகம் மாதிரி நகரங்கள் இருக்கலாம்; இருக்க வேண்டும்; ஆனால் அவற்றின் உயிர்ப்புக்கும் தெம்புக்கும் தெளிவுக்கும் அவசிய மான ரத்தத்தைத் தருபவை கிராமங்களேயாரும். கிராமம் தூர்ந்து விட்டால் நகரம் பாழ். இது பொது நியதி. மிகவும் பின்னிப் போன யந்திர நாகரிகம் வந்துவிட்டாலும் அந்த அடிப்படைக்கு வாய்ப்பான கிராமங்கள் இருந்துதான் தீரும். எல்லாம் பட்டணங்களாகிவிட முடியாது. பட்டணங்கள் என்றால் சிந்தனையின் பயனால் இயற்கையின் கை பார்க்காமல் வாழ மனிதன் வகுத்துக் கொள்ளும் ஏற்பாடு என்பது தான் பொருள்.

கன்னலென்ற சிறுகுருவி ககனமழைக் காற்றாமல்
மின்னலெனும் புழுவெடுத்து விளக்கேற்றும் கார்காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பட்டணத்துக் கவிராயர் சமத்காரமாகப் பாடிவிடுவார்கள். ஆனால் உடை முள்ளையும் இண்டஞ் செடியையும் சுள்ளென்று அடிக்கும் வெயிலையும் ஆற்று வெள்ளத்தையும் கொடுங்காற்றையும் சகாக்களாகப் பாவித்து, அவற்றுடன் சேர்ந்து அவற்றையும் வசக்கி வயலில் வளத்தைப் பார்க்கிறவன் வாழுமிடந்தான் கிராமம்.

வரப்பு உயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்

இதுதான் சமுதாய வளர்ச்சியின் ஆதார சக்தி. பட்டணத்தில் பிழைக்கலாம், வாழ முடியாது. தனிமையாக நடமாட பட்டணம் வாக்கானது. ஆனால் கிராமத்தில் ஒதுங்கி வாழ உங்களை விட மாட்டார்கள். யாராவது புதிதாக வந்துவிட்டால் போதும், "யாரைத் தேடுதிய? ஓ அவுகளா; ஏலே காத்தான், நாவன்னா வீட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போ" என்று வீட்டு வரைக்கும் கொண்டு போய்விட்டுத் திரும்புவார்கள். மறுநாள் விடியற் காலம் பார்த்துவிட்டால் நீங்கள் ஒதுங்கி ஒதுங்கிப் போனாலும் உங்களை வாயைத் திறந்து நாலு வார்த்தையாவது பேச வைத்து விடுவார்கள். அவர்களுக்கு நேரம் அவகாசம் பார்க்காமல் வந்து உட்கார்ந்து பேசுவதற்குத் தெரியும். கிராமத்துக்காரன் ஒவ்வொருவனும் அந்த ஊர் சரித்திர ஆசிரியன். அந்த ஊர்ப் பிள்ளையார் பிரதிஷ்டை பண்ணினது, ஆலடி வயலில் வெள்ளம் மண்ணடித்து விட்டது, மூக்கன் மதகைத் திறக்காது போயிருந்தால் கரையே உடைத்துக் கொண்டு ஊர் அழிந்து போயிருக்கக் கூடிய ஆபத்து, நல்ல பாம்பை மண்வெட்டியினால் ஒரே வெட்டில் இரண்டு துண்டாக்கிப் போட்ட செம்பிலி, நடுச் சாமத்தில் பேராய்ச்சி ஊர் பார்த்து வருவதைப் பார்த்து ரெத்தம் கக்கிச் செத்துப் போன தொப்ளான் ஆகிய எல்லோரையும் நீங்கள் வெகு சீக்கிரத்தில் பரிச்சயம் செய்து கொள்ள முடியும். அச்சடித்த புத்தகங்களைப் போல இவர்களது சரித்திரங்களும் கொஞ்சம் அமிதமான புழுகுகள் நிறைந்திருக்கும். சமூக நலத்துக்காக அங்கீகரிக்கப் பட வேண்டிய சில பொய்களைச் சரித்திர சித்தாந்தம் அமைக்கிற மாதிரி இந்தக் கிராமத்து மனிதக் கும்பலும் தன்னுடைய வம்ச பரம்பரை இற்றுப் போகாமல் இருக்கக் கட்டிவைக்கும் ஞாபகக் கோவைதான் இவையும். சிறிது மட்டகரமான பொய்களாக இருந்தாலும், சரித்திரமென்றே மதிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றங்கரை மரமும், அரசவையில் வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே

என்று பயப்படுகிறான் கிராமத்துக் காரன். கிராமத்துக்காரனுக்குத் தன்னிச்சையாக நடமாடித் திரிவதற்கு இடவசதி வேண்டும். அவன் சிந்தனை சொற்பமாக இருந்தாலும், அது பறந்து திரிந்துவர விசாலமான இடம் வேண்டும் என்று ஆசைப்படுகின்றான். பட்டணத்திலே தென்படும் குறிப்பிட்ட ஒழுங்கு முறை, ஜன நெருக்கத்தினால் எடுத்துக் கூட்டி அமைத்துக் கொண்ட ஏற்பாடுகள் எல்லாம் அவனுக்குக் கட்டோடு பிடிக்காது. அவன் பசி வந்த போதுதான் சாப்பிட ஆசைப்படுவான்; ஆனால் உங்கள் ஹோட்டல்களில் பத்து மணிக்குப் போனால் மோரும் சாதமும் கிடைத்தால் உங்கள் அதிர்ஷ்டம். பட்டணத்திற்கு வந்தால், முங்கி முழுகிக் குளிக்க அவனுக்குக் குழாய்த் தண்ணீர் போதாது. இரண்டாவது நாள், "அய்யா நான் போய்விட்டு வருகிறேன்" என்று மூட்டை கட்டி விடுவான். நீங்கள் அங்கே போன "இரண்டாவது நாளே ரொம்ப டல்லா இருக்கு சார்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டு விடவில்லையா?

வானொலி உரை 1.10.1943

குறிப்புகள்.

1. புதுமைப்பித்தன் அவர்கள் 01.10.1943 அன்று இந்திய வானொலியில் ஆற்றிய உரையே இக் கட்டுரையாகும். இது, பின்னர் புதுமைப் பித்தன் கட்டுரைகள் (2002) என்னும் நூல் தொகுப்பினுள் சேர்க்கப்பட்டுள்ளது.

2. **கட்டுரையின் பிரதான கருத்து :**

நாகரிகம் என்றால் என்ன? தமிழர் நாகரிகத்தில் கிராம வாழ்க்கை பெற்றுள்ள இடம் எத்தகையது? கிராம வாழ்க்கைக்கும் நகர (பட்டண) வாழ்க்கைக்கும் இடையிலான வேறுபாடுகள் எவை? ஆகியவற்றை எடுத்துரைப்பதே இக் கட்டுரையின் பிரதான கருத்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கட்டுரையில் காணப்படும் துணைக் கருத்துக்கள் :

i. நாகரிகம் என்பது சமுதாயம் இற்றுப் போகாமல் எடுத்துக் கட்டிய ஞாபகச் சரடு.

ii. நாகரிகமானது இருந்து வருவதற்கு (முன்னர்) உயிர் கொடுப்பது.

iii. நாகரிகம் பிழைப்பு, சுகானுபவம், நினைவுகள் ஆகியவற்றின் ஆதாரபீடமாக அமைவது.

iv. நகரத்தில் நீண்ட காலம் தொழிலின் நிமித்தம் வாழ்ந்து பழக்கப்பட்ட ஒருவருக்குத் தமது பிற்கால வாழ்வுக்கும், தமது மரணத்திற்கும், இடைப்பட்ட தொடர்புடையதாகக் (ரேழியாக) கிராமம் விளங்குகிறது; ஆனால் உண்மையான கிராம வாழ்க்கை இவர்களுக்கு அகப்பட்டாது.

v. கிராமங்கள், திசை மாறித் திரிவோர்க்கு அன்னசத்திரமாகவும், அன்னவிசாரத்தையும் பசிப் பகையையும் விரட்டும் மதிள் கிராமங்களாகவும் விளங்குகின்றன.

vi. சமுதாயத்தின் விருப்பத்துக்கும், அறிவுக்கும் ஏற்றவையாக நகரங்கள் காணப்பட்டாலும் அவற்றின் உயிர்ப்புக்கும், தெம்புக்கும், தெளிவுக்கும் அவசியமான ரத்தத்தைத் தருபவை கிராமங்களேயாகும்.

vii. கிராமம் தூர்ந்து விட்டால் நகரம் பாழாகும்.

viii. இயந்திரங்களுடன் பின்னிப்போன நாகரிகம் வந்தாலும், அவற்றின் அடிப்படைக்குத் தேவையானவற்றை உதவும் கிராமங்கள் இருந்து தான் தீரும்.

ix. இயற்கையின் கைபார்க்காமல் தமது சிந்தனை மூலம் வாழ்வதற்கு மனிதன் வகுத்துக் கொள்ளும் ஏற்பாடுதான் பட்டணங்கள்.

x. முட்களை, செடிகளை, கடும்வெயிலை, ஆற்று வெள்ளத்தை, கொடுங்காற்றை தனது சகாக்களாக்கி (தோழர்களாக்கி) அவற்றுடன் சேர்ந்து, அவற்றை வசப்படுத்தி, வயலில் வளத்தைப் பார்ப்பவன் வாழுமிடந்தான் கிராமமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

xi. சமுதாய வளர்ச்சியின் ஆதாரசக்தி விவசாயமாகும்.

xii. பட்டணத்தில் பிழைக்கலாம்; தனியாக ஒதுங்கி நடமாடலாம், ஆனால் உண்மையாக வாழ முடியாது ஆனால் கிராமத்தில் ஒதுங்கி வாழ முடியாது; உண்மையாக வாழலாம்.

xiii. புழுகுகள் நிறைந்த சரித்திரங்களை, தமது வம்ச பரம்பரை இற்றுப் போகாமல் கிராமத்தவர் கட்டிக் காப்பர்.

xiv. பட்டணத்து ஒழுங்கு முறை, சன நெருக்கத்தால் ஏற்படுத்தப் பட்ட நடைமுறைகள் கிராமத்தவருக்குப் பிடிக்காது. அவர்கள் நடமாட விசாலமான இடம் வேண்டும்; விரும்பிய நேரத்தில் பசி வந்த போது விரும்பியதை உண்ண வேண்டும்; குளிப்பதற்குக் குழாய்த் தண்ணீர் போதாது; தாராளமாகத் தண்ணீர் வேண்டும்.

4. கட்டுரையில் தனக்குத் தெரிந்த கிராமமொன்றின் இயல்புகளைப் புதுமைப்பித்தன் வெளிப்படுத்தும் பாங்கு :

i. கிராமத்தில் சினிமா இருக்காது; ஷேவிங் ஸோப் கிடைக்காது; சிகரட் அகப்படாது; ஆனால் சுகம் உண்டு; அதாவது வாழத் தெரிந்தவர்களுக்கு.

ii. ஒரேயொரு தெருவுண்டு; அக்கிரஹாரம் இல்லை; ஒரு கோடியில் கிராம முனீஸிப்பும், மறு கோடியில் கணக்கப் பிள்ளையும் இருக்கிறார்கள்.

iii. முனீஸிப், கணக்கப்பிள்ளை இருவரது கோபத்துக்கும் ஆளாகாமல் நடந்து கொள்ளும் தலையாரி இருக்கிறார்.

iv. தெருவுக்குக் கூப்பிடு தூரத்தில் பத்துப் பதினைந்து வீடுகளைக் கொண்ட மறவர்குலத்தினர் வாழுகிறார்கள். இவர்கள் வேல், கம்பு ஆகியவற்றைக் கைவிட்டு ஏர் பிடித்து உழுகிறார்கள்.

v. மறவர் குடியிருப்புக்கு எட்டாத தொலைவில், மறைவாக வாழும் பள்ளர் சேரி காணப்படுகின்றது.

vi. ஊரிலுள்ள ஒரே மைதானம், ஊர்த் தேவதையின் திரு விழாவில் மட்டும் வானம் பார்த்த கலை மண்டபமாகவும், ஏனைய வேளைகளில் மாடுகள் படுக்கவும், சாணி தட்டவும், நெல் உலர்த்தவும் கூடிய இடமாகவும் விளங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vii. ஊரிலே சைவச் சாப்பாட்டை நிவேதனமாகவும், கிராமத்தவரின் பொதுவான வணக்கத்தையும் பெறும் பிள்ளையார் கோவில் அமைந்திருக்கிறது.

viii. ஊரின் எல்லையில் காவல் தெய்வமான பேராய்ச்சி கோவில் உண்டு. மேலும் இந்தத் தேவதை அசைவம்; வருஷத்துக்கு ஒரு தடவை ரத்தம் காணாவிடின் குடியே முழுகி விடும்.

ix. பேராய்ச்சியின் கோவில் சிறியது; கர்ப்பக் கிரகம் இருண்டிருக்கும்; கூர்மையாகப் பார்த்தால் வெள்ளையும், மையத்தில் கறுப்பும் தென்படும்; இன்னும் பார்த்தால் விறைத்துப் பார்க்கும் கண்கள் தெரியும்; பயப்படக் கூடிய தோற்றம்.

x. பேராய்ச்சி கண்டிப்புக் காரி; கொடுமைக் காரியல்ல; அவள் மனது வைத்தால் மலேரியா போன்ற நோய்கள் பறந்தோடும் என்பது ஊரவர் நம்பிக்கை.

xi. கிராமத்தவர் மனப் பண்பாடு நாகூக்கானது அல்ல; எளிமையாகப் பாடுவார்கள்; இதிகாச நாடகம் பார்க்கும் மனப்பண்பு கிடையாது.

xii. உள்ளத்தில் பரிவும், நெஞ்சிலும் தோளிலும் உரமும் கிராமத்தவர்க்குண்டு.

xiii. ஒதுங்கி வாழுமாறு கிராமத்தவர் விட மாட்டார்கள்; யாராவது இடம் தேடினால், வீடு வரைக்கும் கூட்டிச் சென்று விட்டு விட்டே திரும்புவார்கள்.

xiv. கிராமத்தவர் அவகாசம் பார்க்காமல் வந்து உட்கார்ந்து பேசுவார்கள். புழுகு நிறைந்த பழைய கதைகளை ஞாபகத்துடன் சொல்லுவார்கள். நகரவாசி போல ஓர் ஒழுங்கு முறைக்குக் கட்டுப்பட்டு ஒதுங்கி வாழ விரும்ப மாட்டார்கள்.

xv. கிராமத்தவர், பசி வந்த போது சாப்பிடவும், விசாலமான இடத்தில் நடக்கவும், வாழவும், விரும்பிய அளவுக்கு நீராடவும் விரும்புபவர்கள்.

5. கட்டுரையினூடாகக் கதை சொல்லும் பாங்கில் புதுமைப்பித்தன் முன்வைத்துள்ள உதாரணங்கள்:

i. ரிட்டயரானபின் கிராமத்துக்குப் போக விரும்பும் ஒருவருக்குக் கிராமத்தில் கிடைக்கக் கூடிய அனுபவங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. பட்டணத்துக் காரனைக் கிராமத்தவன் கிண்டல் செய்வது.

iii. தனக்குத் தெரிந்த கிராமமொன்றின் இயல்புகள் பற்றிய வருணனை.

iv. கிராமத்துக் காவல் தெய்வமான பேராய்ச்சி பற்றிய வருணனைகளும், கிராமத்தவரின் நம்பிக்கைகளும்.

v. கிராமியப் பாடல், இதிகாசப் நாடகப் பாடல், ஔவைக் கிழவியின் அனுபவப் பாடல், ஔவையின் இலக்கியப் பாடல், ஔவைக்குப் பூதன் அளித்த உணவு பற்றிய பாடல், பட்டணத்துக் கவிராயர் பாடல், அரசனை வாழ்த்திப் பாடிய ஔவையாரின் பாடல், வாழ்வின் எழுச்சியும் வீழ்ச்சியும் பற்றிய ஔவையின் பாடல் ஆகியவை.

vi. கிராமத்தவனுக்கும் நகரத்தவனுக்கும் இடையிலுள்ள வாழ்க்கை முறை மாற்றங்கள்.

vii. விவசாயம், விவசாயி பற்றியவை.

6. கட்டுரையில் இடம்பெற்றுள்ள பாடல்கள், பாடலடிகள் :

i. **சோளப் பொறி மத்தியிலே**
சுட்டுவச்ச தோசையைப் போல்
சுட்டுவைச்ச தோசையைப் போல்
தோணுமிந்தச் சோதி நிலா

விளக்கம் :

சோளப் பொறி – நட்சத்திரங்கள்; சுட்டு வைச்ச தோசை – நிலா; உவமையணி பயன்படுத்தப்பட்டுள்ளது. இசையோடு பாடத்தக்க கிராமியப் பாடலிது.

ii. **அருந்த அமரர் கலக்கிய நாள்**
அமுதம் நிறைந்த பாற் கலசம்
இருந்த திடை வந்து எழுந்ததென
எழுந்த தாழி வெண்திங்கள்

விளக்கம் :

இது இதிகாச நாடகப்பாடல். சாதாரணமானவர்கள் விளங்குதற்கு அரியது. தேவாமிர்தம் அருந்துவதற்காகத் தேவர்கள் பாற் கடலைக் கடைந்த போது அமுதம் நிரம்பிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திரமானது பாற்கடலிலிருந்து மேலெழுந்தது போன்று, கடலின் மேலே வானத்தில் வெண்ணிலவு தோன்றியது என இப் பாடல் பொருள் கொண்டுள்ளது. கலசம் - பாத்திரம;" ஆழி - கடல், சமுத்திரம்; அருந்த - குடிக்க, பருக.

iii. **மேழி பிடிக்குங்கை வேல்வேந்தர் நோக்குங்கை**
ஆழி பிடித்தே அருளுங்கை

விளக்கம்:

மேழி - கலப்பை; வேல் வேந்தர் - வேலேந்திய அரசர்கள்; நோக்குங்கை - வில்லை வளைத்து அம்பை எய்வதற்காக இலக்குப் பார்க்குங் கை; ஆழி - ஆணைச் சக்கரம்; அருளுங்கை - உதவுகின்ற கை. அரசர்கள் தங்கள் ஆணைச் சக்கரத்தினால் குடிமக்களுக்குக் குறையணுகாது அருள்செய்வது அருள்செய்வர் எனப்படுகிறது. இது ஔவையார் பாடலின் ஒரு பகுதியாகும்.

iv. **வண்தமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்தில்**
உண்ட பெருக்கம் உரைக்க கேள் - அண்டி
நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீள்பசியினாலே
சுருக்குண்டேன் சோறுண் டிலேன்

விளக்கம்:

இதுவொரு வெண்பாவாகும். பாண்டிய மன்னனாகிய வழுதியின் கல்யாணத்துக்குச் சென்ற ஔவையார், அங்கு கூடியிருந்த மக்களின் நெருக்கத்தினால் உணவுண்ண முடியாமல் திரும்பிய நிலையை இப் பாடல் எடுத்துரைக்கின்றது. வண் தமிழ் - வள்ளன்மை மிக்க தமிழ்; தேர்ந்த - கற்றுத் தேர்ச்சி கண்ட; பெருக்கம் - உணவின் அளவு; அண்டி - நெருங்கி; நீள்பசி - கூடுதலான பசி; சுருக்குண்டேன் - பசியினாலும், நெரிசலினாலும் மெலிந்து விட்டேன்.

v. **வெய்தாய் நறுவிதாய் வேண்டளவும் தின்பதாய்**
நெய்தான் அளாவி நிறம் பசந்து - பொய்யாய்
அடகென்று சொல்லி அமுதத்தை ஈந்தாள்
கடகம் செறிந்த கையாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்:

இதுவும் ஔவையார் பாடிய பாடலாகும். பெண்ணொருத்தி, தன் வளையல் அணிந்த கையினால் ஔவையாருக்கு உணவு பரிமாறினாள். அந்த உணவின் சிறப்பையே புலவர் வியந்து பாராட்டியுள்ளார்.வெய்தாய் - விரும்பும்படியாய்; நறுவிதாய் - மணம் வீசுவதாய்; வேண்டளவும் தின்பதாய் - வேண்டிய மட்டும் உண்ணக் கூடியதாய்; நெய்தான் அளாவி - நெய்யினை விட்டுச் சேர்த்து; நிறம் பசந்து - நிறம் மாறி; பொய்யாய் - பொய்யாக; அடகென்று சொல்லி - இலைக்கறி சேர்த்த உணவென்று சொல்லி; அமுதத்தை ஈந்தாள் - அமுதம் போன்ற இனிமையான உணவைப் பரிமாறினாள்; கடகம் - வளையல்; செறிந்த கையாள் - நெருக்கமாக அணிந்த கையை உடையவள். உணவின் தன்மையை கூறுவது நயமிக்க தாகும்.

vi. **வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும் முறமுறெனவே புளித்த மோரும்**

விளக்கம்:

இன்னொரு வேளையில் ஔவை தன் பசி போக்க உண்ட உணவின் தன்மையைக் கூறும் வெண்பாவின் ஒரு பகுதிப் பாடலிதுவாகும். "வரகரிசியில் சமைத்த சோறு, கத்தரிக்காய்ப் பொரியல், நன்றாகப் புளித்துப் பொங்கித் தடிப்பாகக் காணப்படும் மோரும்" என்பது இதன் கருத்தாகும். வழுதுணங்காய் - கத்தரிக்காய்; வாட்டு பொரியல்; முறமுறென - பொங்கித் தடிப்பாக.

vii. **கன்னலென்ற சிறு குருவி ககனமழைக் காற்றாமல் மின்னலெனும் புழுவெடுத்து விளக்கேற்றும் கார்காலம்**

விளக்கம்:

இப் பாடலடிகள் பட்டணத்துக் கவிராயர் தமது பேச்சுத் திமையால் (கவிபாடும் திறமையால்) பாடிய பாடலெனக் கூறப்பட்ட போதும், பட்டணத்துக் கவிஞர்களைப் பொதுமைப் படுத்தியதாகும். சில வேளை புதுமைப்பித்தனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனைந்ததாகலாம். கன்னல் - குருவியைக் குறித்தது. ககனம் - வானம்; மின்னலெனும் புழு - உருவக அணி, ஆனால் கன்னல், குருவி ஆகியவை ஒத்த கருத்துடையவை. ஆதலால் கன்னல் என்று கூறப்படுகின்ற சிறு குருவி எனக் கருதலாம். கார் காலத்தில் மின்னல் விளக்கேற்றுவதாகவும் இங்கு உருவகிக்கப்பட்டுள்ளது. மின்னலைப் புழு என்று உருவகித்தமை அதன் நெளிவுத் தன்மை கருதியேயாகும். ககன மழைக்காற்றாமல் - வானத்து மழையைத் தாங்க மாட்டாமல்.

viii. **வரப்புயர நீர் உயரும்**
நீருயர நெல் உயரும்

விளக்கம்:

இது ஔவையாரின் பிரசித்தி பெற்ற பாடல் வரிகள். விவசாயத்தின் வளர்ச்சியிலேயே மனித வாழ்க்கை தங்கியுள்ளமையைக் காட்டுவது. பாடலின் இறுதியில் "குடியுயரக் கோனுயர்வான்" என முடிகிறது.

ix. **ஆற்றங்கரையின் மரமும் அரசவையில்**
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே

விளக்கம்:

இதுவும் ஔவையாரின் வெண்பாப் பாடலின் முதலிரு வரிகளாகும். ஆற்றங்கரையிலுள்ள மரமும் தண்ணீரால் அரிக்கப்பட்டு விழுந்து விடும்; அரச சபையில் அதிகாரத்துடன் வீற்றிருக்கும் வாழ்க்கையும் ஒரு காலத்தில் இல்லாமற் போய்விடும். பாடலின் பின்னடிகளிரண்டும் உழவுத் தொழிலின் பெருமையையும், ஏனைய தொழில்கள் பழுதுக் குரியவை என்பதையும் உணர்த்தி விடுவதையும் நாம் அறியலாம்.

7. கட்டுரையாசிரியரின் மொழி நடை:

i. வருணனைப் பாங்கான மொழி நடை.

ii. கூடுதலான அளவுக்குப் பேச்சு வழக்குச் சொற்கள் (வட்டார வழக்குச் சொற்கள்) பயன்படுத்தப்பட்ட மொழி நடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. வடமொழிச்சொற்கள் மிகவும் பயன்படுத்தப்பட்ட மணிப் பிரவாள மொழிநடை.

iv. ஆங்கில மற்றும் வடமொழி தவிர்ந்த ஏனைய மொழிச் சொற்களும் அரிதாகச் சேர்க்கப்பட்ட மொழிநடை.

v. உயிர்ப்பும், உணர்வும் நிறைந்ததான மொழி நடை.

vi. எள்ளல் தன்மையும் (கேலி), நகைச் சுவையும், அங்கதமும் (மறைமுகமாகக் கூறுதல்) கலந்த மொழி நடை.

vii. மறைமுகமாக, மனிதர்களின் நடத்தைகளை விமர்சனம் செய்யும் மொழி நடை.

8. கட்டுரையில் இடம்பெற்றுள்ள வடமொழிச் சொற்கள் :

நாகரிகம், பிராதஸ்னானம், சம்புடம், உக்கிரம், சோபிக்கும், சரடு, சுகானுபவம், கிராம்யமான, போஜன, பிரசங்கங்கள், நேர்ச்சை, பைராகி, சகதர்மிணி, மோட்ச சாம்ராஜ்யம், வாரிஸ், வர்க்கம், வருஷம், விசாரம், உபாசனை, நிஜம், கைங்காரியம், அக்கிரஹாரம், அஞ்ஞாதவாசம், நிவேதனம:, கர்ப்பக்கிரகம், அசைவம், ரத்தம், வசக்கி, அன்னிசாரம், யந்திரம், சமத்காரம், சகாக்கள், ஆதாரம், சக்தி, அவகாசம், பிரதிஸ்டை, பரிச்சயம், விசால, சூம்ப, காரியாலயம், ஜனம், அஜீர்ணம், சித்தம், விவேகம்.

9. கட்டுரையில் இடம்பெற்றுள்ள ஆங்கிலச் சொற்கள் :

ரிட்டயர், என்ஜினியரிங், கம்பனி, அட்வகேட், ஜெனரல், காலேஜு, ஷேவிங், ஸோப், ஹோட்டல், டல்லா, மோட்டார், கார், சிகரட், சார், வாக்கிங்.

10. கட்டுரையில் இடம்பெற்றுள்ள ஏனைய பிற மொழிச் சொற்கள் :

ரேழி, சர்க்கார், முன்ஸீபு, ஆஸ்பத்திரி, மலேரியா, நாசூக்காக, ரொம்ப, பிளான், மாஜி, பிசகு.

11. அருஞ்சொற் பொருள் :

பிராதஸ்னானம் – சூரிய உதயத்திற்கு முன் நீராடல்; சம்புடம் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்பு; சரடு - முறுக்கு நூல்; உக்கிரம் - தீவிரம், மூர்க்கம், கோபம்; சோபிக்கும் - அழகொளிரும்; சாரை - வரிசை; ஆதாரபீடம் - அடிப்படை; ரிட்டயர் - இளைப்பாறுகை, ஓய்வு பெறுதல்; சூம்ப - வாட; இற்று - சிதைவுற்று; ரேழி - ஒடுங்கிய வழி; சர்க்கார் - அரசு; மாஜி - முன்னாள்; கைங்கரியம் - செயல், காரியம்; அக்கிரஹாரம் - பிராமணர் குடியிருப்பு; முனிஸீப் - கிராமத் தலைவர்; தலையாரி - அடிமை குடிமைத் தொழில் செய்பவர்களுக்குத் தலைமை வகிப்பவன்; மறவர் - வீரர்; அக்ஞாதவாசம் - மறைந்து வாழுதல்; நிவேதனம் - கடவுளர்க்கான படையல்; கர்ப்பக்கிரகம் (கர்ப்பக்கிருகம்) - கருவறை; நாஸூக்கு - தந்திரம்; மேழி - கலப்பை, ஏர்; அமரர் - தேவர்; ஆழி - கடல், சமுத்திரம், மோதிரம், சக்கரம், வட்டம்; கன்னல் - குருவி, கரும்பு; ககனம் - வானம்; பிரதிஷ்டை - கடவுள் சிலையினை நிலை நிறுத்தல்; சமத்காரம் - பேச்சுத் திறமை; அவுகளா - அவர்களா; தேடுதிய - தேடுகிறீர்கள்; ஏலே - எட; பரிச்சயம் - பழக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. மானுடம் தழுவிய கவிஞர்கள்

கட்டுரையாசிரியர் அறிமுகம்

- பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள்

பேராசிரியர் கனகசபாபதி கைலாசபதி அவர்கள் (05.04.1933 - 06.12.1982) தமிழிலக்கிய வளர்ச்சிக்குக் காத்திரமான பங்களிப்பினை நல்கியவர். திறனாய்வு, ஒப்பியல் முதலான துறைகளில் புதிய பார்வையும், புதிய வீச்சும் கொண்டு செயற்பட்டவர். அவரது இலக்கியக் கொள்கைகள் உலகந் தழுவியவையாகவும், அறிவியல் பூர்வமானவைகளாகவும் அமைந்திருந்தன. தமிழுலகப் பழைமையை அவர் என்றும் நிராகரித்தவரல்லர். பழையவற்றின் அடித்தளத்தில் இருந்து புதியன நோக்கிய நகர்வுகளுக்கு வழிகாட்டியவர். அவரிடம் வாய்க்கப் பெற்றிருந்த ஆங்கிலப் புலைமையும் இதனைச் சாத்தியமாக்கிற்று. உலக வியாபகமாகிய சமவுடைமைக் கோட்பாட்டினை ஏற்றுச் செயற்பட்ட இடதுசாரி அரசியலாளர் அவர். உலகரீதியான மக்கள் போராட்டங்கள் பற்றியும், அவற்றின் உன்னதங்கள் பற்றியும் எழுதாத இலக்கியப் படைப்புக்களை அவர் கருத்தில் கொள்ளவில்லை. சமூகப் பிரச்சினைகளைச் சித்திரித்து இலக்கியமாக்குவதுடன், சமூக மாற்றத்துக்கான பணிகளில் ஈடுபட்டுழைப்பவர்களையே அவர் விரும்பி நின்றாரெனலாம். வெறும் இயற்பண்பு சார் இலக்கியங்களில் மேன்மை காட்டியவர்களையும், கலை கலைக்காகவே என்பதில் மன நிறைவு கண்டவர்களையும் கைலாசபதி அவர்கள் கவனத்தில் கொள்ளாதது உண்மையே ஆகும். பொருண்மையும், கலைத் துவமும் இணைந்த படைப்பிலக்கியங்களே அவரை ஆகர்சித்துக் கொண்டன. அவை பற்றி எழுதுவதிலும், ஆய்வு செய்வதிலும் அவர் முக்கிய கவனம் செலுத்தினார்.

பேராசிரியர் எழுதியவைகளாக 18 தமிழ் நூல்களும், 4 ஆங்கில நூல்களும், 238 கட்டுரைகளும், முகவுரைகள், அணிந்துரைகள், அறிமுகவுரைகள், மதிப்புரைகள், வாழ்த்துரைகள் சார்பாக 44 எழுத்தாக்கங்களும் இதுவரை வெளிவந்துள்ளன. அவரது எழுத்துக்கள் தொடர்பான பல்வேறுபட்ட கணிப்புகள் இன்றுவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையிலும், தமிழ்நாட்டிலும் வெளிவந்த வண்ணமேயுள்ளன. அவை எதிரும் புதிருமான கருத்துக்களாகவும் விளங்குகின்றன. தமிழ் இலக்கியம் தொடர்பான பல ஆய்வு முயற்சிகள் பல்கலைக்கழக மட்டங்களில் பட்டப்பின் கற்கைத்துறைகளில் மேற்கொள்ளப் படுகின்றன. இத்தகைய ஆய்வுக் கட்டுரைகள் எழுதுவது இந்தியாவிலும், இலங்கையிலும் மேற்கொள்ளப்படும்போது அவற்றுள் அதிகமானவை கைலாசபதி அவர்களின் நூல்களையும், எழுத்துக்களையும் மேற்கோள் காட்டியுள்ளமையைப் பரீட்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

கைலாசபதியின் பெற்றோர் கனகசபாபதி, தில்லைநாயகி ஆகியோர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவர்கள் தொழிலின் நிமித்தம் மலேசியாவில் வாழ்ந்த காலத்திலேயே கைலாசபதி பிறந்தார். இவரின் தந்தையார் கோலாலம்பூரில் பட வரைஞராகப் பணியாற்றினார். கைலாசபதி அவர்களின் ஆரம்பக் கல்வி கோலாலம்பூர்ப் பாடசாலை ஒன்றில் வழங்கப்பட்டதாயினும், இரண்டாம் உலக யுத்தம் காரணமாக கனகசபாபதி, குடும்பத்தவருடன் 1946 - 47 ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணம் திரும்பினார். இதனால் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும், தொடர்ந்து றோயல் கல்லூரியில் உயர்கல்வியையும் கைலாசபதி பெற்றுக் கொண்டார். 1953 இல் பட்டதாரி மாணவனாக இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து தமிழ் சிறப்புக் கற்கைநெறியில் தமிழுடன், மேலைத்தேய வரலாற்றையும் பாடங்களாகக் கற்றுக் கொண்டார். முதலாம் வகுப்பில் திறமைச் சித்தி பெற்றபின், 1957 - 1961 காலப்பகுதியில் லேக் ஹவுஸ் நிறுவனத்தாரின் "தினகரன்" பத்திரிகையில் வாராந்தரி ஆசிரியராகவும், பின்னர் "தினகரனின்" ஆசிரியராகவும் பணி செய்தார். அப்பத்திரிகையில் பணியாற்றிய போது ஈழத்து இலக்கியங்களுக்கும், இலக்கியகாரர்களுக்கும் ஊக்கமளித்ததுடன், செய்திகளின் ஒழுங்கமைப்பு, அரசியல், சமூக விடயங்கள், தமிழ், முஸ்லீம் செய்திகள் என்றவாறு பல்வேறு புதுமைகளால் பத்திரிகையைச் செல்வாக்குள்ள ஏடாக மாற்றினார். "சிரித்திரன்" சிவஞானசுந்தரத்தின் (சிவாஜி) கார்ட்டூன் படங்களையும், சவாரித்தம்பர் நகைச்சுவைத் துணுக்குகளையும் பிரசுரிக்கச் செய்தார். இதுவரை காலமும் இந்திய எழுத்தாளர்கள் பெற்றிருந்த முதன்மையை ஈழத்து எழுத்தாளருக்கு அளித்தார். கே. டானியல், டொமினிக் ஜீவா, செ. கதிர்காமநாதன், நீர்வை பொன்னையன், அ. ந. கந்தசாமி, எஸ். அகஸ்தியர், எஸ். பொன்னுத்துரை முதலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைஞர்கள் பிற்காலத்தில் ஆக்கமும் ஊக்கமும் பெறுவதற்கு ஊக்கமளித்தவர் கைலாசபதி ஆவார். "தினகரன்" விழாவை நடத்தி, அதற்குத் தமிழக நடிகர் சிவாஜி கணேசனை முதன்மை விருந்தினராக அழைத்துப் பத்திரிகையை மக்களிடம் எழுச்சியுடன் செல்வாக்குப் பெறச் செய்தார். பல்கலைக்கழகத்தில் பயிலும்போது பேராசிரியர்கள் க. கணபதிப்பிள்ளை, சு. வித்தியானந்தன் அவர்களுடன் நெருங்கிப் பழகியதுடன் நாடகங்களிலும் நடித்தார். இலக்கியத்துறையில் ஈடுபட்டபின் தொ. மு. சி.ரகுநாதன் விஜயபாஸ்கரன் ஆகிய இந்திய எழுத்தாளர்களுடன் நட்பைப் பேணியதுடன் இரகுநாதனின் "சாந்தி" இதழிலும், விஜய பாஸ்கரனின் "சரஸ்வதி" சஞ்சிகையிலும் கட்டுரைகள் எழுதிவந்தார். தமது மாமன் மாணிக்க இடைக்காடரின் மகளான சர்வமங்களம் என்பவரை 1964 ஆம் ஆண்டு மணம் முடித்து, சுமங்களா, பவித்திரா ஆகிய இரு பெண் பிள்ளைகளுக்குத் தந்தையானவர் கைலாசபதி. சிறு வயதிலேயே அன்னையை இழந்தவர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கற்கும்போது "கொம்யூனிஸ்ட்" மு. கார்த்திகேயன் ஆசிரியரின் மார்க்சிய சித்தாந்த வழிகாட்டலில் செயற்பட்டவர்.

1961 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், பின் கொழும்புப் பல்கலைக் கழகத்திலும் விரிவுரையாளரானார். 1963 இல் கலாநிதிப் பட்டப் படிப்புக்காக இலண்டன் பர்மிங்காம் பல்கலைக் கழகம் சென்று பேராசிரியர் ஜோர்ஜ் தொம்சனின் வழிகாட்டலில் **TAMIL HEROIC POETRY** என்னும் தலைப்பில் ஆய்வு செய்து பட்டம் பெற்றுத் திரும்பினார். இந்த ஆய்வினை நூலாக 1968 இல் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் வெளியிட்டது. பாடசாலை நாட்களில் தமிழ்மணி, இந்துசாதனம், சுரபி, யுகம், வீரகேசரி முதலான ஏடுகளில் கவிதைகள், கட்டுரைகள் எழுதிய கைலாசபதி, சில பரீட்சார்த்தமான சிறுகதைகளையும் எழுதியிருக்கிறார். இருப்பினும் படைப்பாக்கங்களைத் திறனாய்வு செய்வதில் தன்னை ஈடுபடுத்த விரும்பிச் செயற்பட்டவர். பல்வேறு கட்டுரைகள், விமர்சனங்கள் என்பவற்றைப் பத்திரிகை, சஞ்சிகைகளில் எழுதினார். **தினகரனின்** ஞாயிறு பதிப்பில் "நான்கு நாடுகளில் நாற்பது நாட்கள்" என்னும் பயணக் கட்டுரையை எழுதினார். பேராதனையில் தமிழ் விரிவுரையாளராகவும், வித்தியாலங்காரப் பல்கலைக்கழக வளாகத்தில் தமிழ் மற்றும் இந்து சமய பீடத் தலைவராகவும் பணியாற்றிய கைலாசபதி அவர்கள், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகம் ஆரம்பிக்கப் பட்டபோது அதன் தலைவராகவும் 19.07.1974

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கம் 31.07.1977 வரை பணியாற்றினார். பின்னர் பேராசிரியராகவும், தமிழ்த் துறைத் தலைவராகவும் விளங்கினார்.

பேராசிரியர் எழுதிய நூல்களாக இரு மகாகவிகள்(1962), பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்(1966), தமிழ் நாவல் இலக்கியம் 1968), ஒப்பியல் இலக்கியம் (1969), அடியும் முடியும் (1970), கவிதைநயம் (இ. முருகையனுடன் இணைந்து எழுதியது 1970), இலக்கியமும் திறனாய்வும் (1972), பாரதி நூல்களும் பாடபேத ஆராய்ச்சியும் (1973), மக்கள் சீனம் காட்சியும் கருத்தும் (மனைவியுடன் இணைந்து எழுதியது 1979), சமூகவியலும் இலக்கியமும் (1979), திறனாய்வுப் பிரச்சனைகள் (1980), நவீன இலக்கியத்தின் அடிப்படைகள் (1980), இலக்கியச் சிந்தனைகள் (1983), பாரதி ஆய்வுகள் (1984), ஈழத்து இலக்கிய முன்னோடிகள் (1986), சர்வதேச அரசியல் நிகழ்வுகள் 1979 - 1982 (1982), முன்னுரைகள் (2004), நாவலர் பற்றிக் கைலாசபதி (2005), TANIL HEROIC POETRY (1968), THE RELATION OF TAMIL AND WESTERN LITERATURE (1984), Un art and literature (1987), On bharathi (1987) ஆகிய இருபத்தெட்டு நூல்கள் இதுவரை அச்சில் வெளிவந்துள்ளன. பெரும்பாலான வானொலி நாடகங்களுட்பட 40 நாடகங்கள் வரை கைலாசபதி எழுதியுள்ளார். "குரல்கள்" நாடகம் அவரெழுதியது. புதுமைப்பித்தனின் "கபாடபுரம்" நாவலையும் நாடகமாக்கித் தந்துள்ளார். Ladis lansfodder என்ற நாடகத்தைத் "திறந்த கல்லறை" என்னும் பெயரில் மொழிபெயர்த்தார். இந்நாடகம் நத்தார் தினத்தையொட்டி வானொலியில் ஒலிபரப்பானது. சங்க கால இலக்கியம், வாய்மொழி இலக்கியமே என்று நிறுவியவர் பேராசிரியர் அவர்கள். யுனெஸ்கோவுக்கான தேசிய ஆணைக்குழு (1970), இலங்கைப் பாடநூல் ஆணைக்குழு (1970), இலங்கைப் பாடநூல் ஆலோசனைக் குழு, இலங்கைப் பல்கலைக்கழக மக்கள் தொடர்பு ஆய்வுக்கழகம் (1971- 74), இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சி ஆய்வுக்குழு (1973) ஆகியவற்றில் பணியாற்றியவர் கைலாசபதி. ஆறுமுக நாவலர் சபையிலும் பங்குபற்றியதுடன் 1979 இல் நாவலர் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடவும், நாவலருக்குச் சிலையமைக்கவும், அரும்பாடு பட்டவர். நாவலரைத் தேசிய வீரராக இலங்கை அரசு ஏற்றதற்கு கைலாசபதி அவர்களது முயற்சியும், அவரெழுதிய நாவலர் பற்றிய கட்டுரைகளும் காரணமெனலாம். ஆரம்ப நாட்களில் திராவிட சிந்தனைக் கருத்துக்களை எடுத்துக் காட்டக் கூடிய தி.மு.க வினர் எழுதிய நூல்களிலும், பின்னர் பாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாசன், புதுமைப் பித்தன், ரகுநாதன், மு. வரதராசன், சுத்தானந்த பாரதியார், ச.து.சு. யோகியார் ஆகியோரின் எழுத்துக்களை வாசிப்பதிலும் கைலாசபதி அவர்கள் ஈடுபாடு காட்டினார். பின்னர் பொதுவுடைமை வாதியாக மாற்றங்கண்டார். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கப் பணிகளில் அக்கறை கொண்டிருந்தார் (1957 முதல்).

ஈழத்துப் பத்திரிகைத் துறையில் அவர் வழியாக வந்த மாற்றங்கள், தமிழியல் ஆய்வுத் துறையில் அவரது பங்களிப்பு ஆகிய இரு விடயங்கள் கைலாசபதி பற்றிய ஆய்வில் முக்கியமானதென பேராசிரியர் கா. சிவத்தம்பி கூறியுள்ளார். அக நிலைப்பட்ட அளவு கோல்களைக் கொண்டு இலக்கியப் படைப்புக்களை மதிப்பீடு செய்வதை கைலாசபதி ஏற்கவில்லை. வரலாற்றுப் பார்வை, சமுதாய நோக்கு, அழகியல் அக்கறை ஆகியனவே முக்கியமென்றும், உருவம் உள்ளடக்கத்தில் அமிழ்ந்து போகத் தேவையில்லை என்றும் கூறியுள்ளார். "ஏனைய பல துறைகளைப் போலவே இலக்கியமும் நவீன அறிவியலுக்கு முரணற்ற ஒரு துணையாக விளங்கும்" என்றார். இதனைப் பின் நவீனத்துவ சிந்தனைகளுடன் பொருத்தி நோக்க முடியும். பேராசிரியரின் கலாநிதி ஆய்வினைத் தமிழில் "தமிழ் வீர யுகக் கவிதை" எனும் பெயரில் முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன் மொழிபெயர்த்துள்ளார். 25 நூல்களுக்குக் கைலாசபதி எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு "முன்னுரை" என்ற நூலாக வந்துள்ளது. "விமர்சனம் என்பது உலகை விபரிப்பது மாத்திரமன்றி அது உலகத்தை மாற்றியமைப்பதற்கு - ஓயாது பயன்படுத்தும் ஆயுதமாகவும் இருக்க வேண்டும் என்பது கைலாசபதி அவர்களின் விமர்சனம் பற்றிய கருத்தாகும். இளங்கீரன் எழுதிய பேராசிரியர் கைலாசபதி நினைவுகளும் கருத்துக்களும், முறைகள் மு. இளங்கோவன் எழுதிய "இலங்கைப் பேராசிரியர் கைலாசபதி", பேராசிரியர் நா. சுப்பிரமணியனின் "தமிழாய்வில் கலாநிதி கைலாசபதி" ஆகிய நூல்களுடன் பல நூல்களும், கட்டுரைகளும் பேராசிரியர் க. கைலாசபதி பற்றி ஏடுகளிலும் ஏனைய ஊடகங்களிலும் வந்த வண்ணமே உள்ளன. இரத்தப் புற்று நோயினால் பீடிக்கப்பட்டு, கொழும்பு பிரதான வைத்தியசாலையில் மரணமான அவர், 49 ஆண்டுகளே மண்ணில் வாழ்ந்தார். அவரால் தமிழுலகம் பெற்ற நன்மைகள் பலவாகும்.

நாற்பத்தொன்பது ஆண்டுகள் வாழ்வியலில் சுமார் 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் இலக்கியப் பணியினை பேராசிரியர் கைலாசபதி தொடர்பாக நாம் காண முடியும். அவரது அறிவுப் பாதை குறுகிய அரசியலைக் கடந்து விரிவடைந்த போக்கினைக் கொண்டது. மனித நேயத்தையும், மனித அவலங்களையும், மனித குல மீட்பையும் அடிப்படையாகக் கொண்ட இலக்கியங்களை அவர் நேசித்தார். அதற்கேற்பதான இயங்கு திசையில் இயக்கமயப்படுத்தப்பட்ட அரசியல் நிறுவனத்தைச் சார்ந்து செயற்பட்டார். அவரது எழுத்துக்கள் தமிழ் மொழிக்குப் புதியதான ஊட்டச் சத்துகளைக் கொடுத்துள்ளன. அவை அவரது அரசியலில் பிடிக்காதோரையும் பல சந்தர்ப்பங்களில் கவர்ந்து இழுத்துள்ளன. அவரது முன் முயற்சிகள் தமிழ் இலக்கியச் செல்நெறியில் அடைபட்ட சாளரங்களைத் திறக்கச் செய்துள்ளன. அவற்றினூடாகப் பின்னாலுள்ள பலர் தரிசனம் பெறுவதைக் காண முடிகிறது. காலப்போக்கில் கைலாசபதி அவர்களின் தமிழிலக்கியத்துக்கான பணிகளும் அவரை ஒரு இலக்கிய முன்னோடியாகக் காட்டும் என்பது நிச்சயமாகும். அவர் இன்னும் நீண்ட காலம் வாழ்ந்திருப்பாரானால் பல உயரிய படைப்பிலக்கியச் சிந்தனைகளையும் பண்புகளையும் தமிழுலகம் பெற்று உயர்ந்திருக்க முடியும்.

பேராசிரியர் க. கைலாசபதி அவர்களின் **மானுடம் தழுவிய கவிஞர்கள்** என்னும் கட்டுரை இங்கு இடம்பெற்றுள்ளது.

மானுடம் தழுவிய கவிஞர்கள்

உலக இலக்கிய ஆசிரியர்களின் உன்னதமான வரிசையில் பாரதியாரை வைத்து நாம் எண்ணுவதைப் போலவே தமிழ் இலக்கியப் பரப்பிலும் காலத்துக்குக் காலம் உருவாகிய பெரும் புலவர்களின் வரிசையில் அவரை வைத்துப் பாராட்டுகின்றோம். வள்ளுவர், இளங்கோ, கம்பர், பாரதி என்று வரிசைப் படுத்துவது இப்பொழுது வழக்கமாகி விட்டது. கால அடைவை ஒட்டியது இவ்வரிசை. சங்க காலத்தில் வாழ்ந்த சான்றோரில் ஒருவரான பரணரிலிருந்து நமது காலத்தில் வாழ்ந்த பாரதிதாசனார் வரையில் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் சிறப்புக்குரிய புலவர்கள் எத்தனையோ பேர் தோன்றியிருக்கின்றனர். ஆயினும் மகாகவிகள் என்று விதந்துரைக்கக் கூடியவர்கள் வெகு சிலரே.

ஆற்றல் வாய்ந்த கவிஞராக விளங்கிய பாரதியாரே தனக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் சென்ற கவிகுலத் திலகங்களை தமிழ்ப் பெருங்கவிஞரை நினைவுகூர்ந்த வேளைகளில் வள்ளுவர், இளங்கோ, கம்பர் ஆகிய மூவரையுமே குறிப்பிட்டிருக்கின்றார். ஔவையார் முதல் இராம லிங்கர்வரை பல புலவர்களைக் குறிப்பிட்டு அவர்களின் சிறப்பியல்பு களை விபரித்திருக்கின்றாரெனினும் வேற்று மொழியாளரும் ஏற்றுப் போற்றக்கூடிய தமிழ்க்கவிஞர்களாக முற்கூறிய மூவரையுமே குறிப்பிட்டார். பாரதியாரின் கவிதைகளையும், கட்டுரைகளையும் ஏனைய படைப்புக்களையும் தமிழுலகம் உவந்து அங்கீகரித்துக் கொண்டிருப்பதைப் போலவே அவரின் அபிப்பிராயங்கள் பலவற்றை யும் அடிப்படை உண்மைகளாக ஏற்றுக் கொண்டுள்ளது. வள்ளுவரும் இளங்கோவும், கம்பரும் பாரதிக்கு முன்னரே தமிழ் இலக்கிய உலகில் பெருமைக்குரியவர்களாய்க் கருதப் பட்டவர்கள். "கல்வியிற் பெரியர் கம்பர்" என்ற முதுமொழி நன்கு பிரசித்தமானதே. வள்ளுவரின் குறளடிகளை எடுத்தாளாத தமிழ்ப் புலவர்கள் இல்லை. என்றே கூறி விடலாம். சிலம்பின் செல்வாக்கு நாட்டார் இலக்கியம் வரை படர்ந் திருப்பதை நாம் அறிவோம். ஆயினும் முப்பெரும் கவிஞர்களைப் பாரதியார் சிறப்பித்துக் கூறியபின் அதுவே நம்மவர்க்கு ஆதாரமான அளவுகோலாயிற்று. பாரதியார் பாராட்டிய தாலும் முன்சென்ற மூவர்க்கும் பெருமை பெருகியிருக்கிறது.

இவ்விடத்தில் ஒன்று கவனிக்கத் தக்கது. தனக்கு முன்னிருந்த பெருங் கவிஞரை இனங்கண்டு வரிசையறிந்து பாரதியார் கூறும் பொழுது அறிந்தோ, அறியாமலோ தனது இலக்கிய நோக்கினை அடிப்படையாகக் கொண்டே அவர்களை வரிசைப் படுத்தியிருப்பார் என்று கூறுவது தவறாகாது. பொதுவில் நாம் "இலக்கியம்" என்று கூறும் பொழுது நம் உள்ளத்தில் – சிந்தனையில் – பல எண்ணக் கூறுகள் ஏக காலத்தில் எழுகின்றன. ஒருவரது கல்வி, பயிற்சி, உணர்வு, அனுபவம், உலகநோக்கு இவற்றுக்கேற்ப இலக்கியம் பற்றிய "வரைவிலக்கணம்" வேறுபடும். எனினும் சாதாரணமாக சொல்லலங்காரம், சப்தநயம், உவமை, உருவகம் முதலிய சிறப்புக்களும் உணர்வினைத் தாக்கி வாழ்க்கைக்குப் புதிய விளக்கத்தைத் தரவல்ல கருத்துமே கவிதைக்கு உயிர்நாடியாக இருப்பதைப் பலரும் ஏற்றுக் கொள்வர். இது ஒரு கவிஞனின் பொது இலக்கணம். எல்லாக் கவிஞர்களுக்கும் இச் சிறப்பியல்புகள். ஏதோ ஒரு அளவில் அமைந்திருத்தல் வேண்டும். இவர்களுள் பெருங் கவிஞர்களாகப் பரிணமிப்பவர்கள் மொழியாற்றல் முதலியவற்றைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவின்றிப் பெற்றிருக்கும் அதே வேளையில், தாம் வாழும் காலத்துச் சமுதாயத்தின் அடிப்படைப் பிரச்சனைகளை அறிந்து, அவற்றுக்குப் பரிகாரம் காண முற்படுபவர்களாகவும் இருக்கின்றனர். தத்தம் அனுபவங்களின் துணைகொண்டு கவிபாடத் துவங்கும் பலர் அனுபவங்களின் மட்டத்திலேயே தங்கிவிடுகின்றனர். ஆனால் பெருங்கவிஞன் தன் சொந்த அனுபவங்களை மாத்திரம் பொருளாகக் கொள்ளாது மனுக்குலத்தின் நிலைமையினை உணர்ந்து அதனோடு தான் கலந்து எழுதுகின்றான். உதாரணமாக பாரதி அடிமைப்பட்டுக் கிடந்த பாரத சமுதாயத்தில் வாழ்ந்தவன்; தன்னளவிலும் தனது சமுதாயத்தைப் பொறுத்த அளவிலும் அடிமைத்தனத்தை அறிந்தவன். அடிமைத்தனத்தை உள்ளும் புறமும் கண்டவன். அது அவரது அடிப்படை அனுபவம். அவ்வனுபவத்துடன் உலகை நோக்கிய பொழுது வேறு பல சமுதாயங்களும் நாடுகளும் அடிமைத் தனத்திலும் தாழ்வுற்று இழி நிலையிலும் அல்லற்படுவதைக் கண்டான். அங்கே பொதுமை யுணர்வு எழுகின்றது. "மண்ணுலகத்து மானுடன் தன்னைக் கட்டிய தளையெலாம் சிதறுக" என்று உலகளாவிய கண்ணோட்டத்தில் அவர் குரல் எழுப்பினார். இந்த உணர்வுடனேயே பழந்தமிழ்ப் பனுவல்களையும் நோக்கினான்.

வையத்தில் மானுடன் வாழ்வாங்கு வாழ வழிகாண முற்பட்ட வள்ளுவன், இராமராச்சியம் என்ற கற்பனைக்கு அடிப்படையான இலட்சியமான அரசு ஒன்றை இலக்கியத்தில் உருவாக்கிய கம்பன், அறம், அரசியல், வாழ்க்கை இவற்றுக்கிடையே இருக்கக்கூடிய தொடர்பு எத்தகையது என்பதைக் குடிமக்கள் காப்பியம் ஒன்றின் மூலம் அலசி ஆராய்ந்த இளங்கோ ஆகியோரைப் பாரதி கண்டான். இம் மூவருமே தனியொரு அரசனைப் பற்றியோ, தெய்வத்தைப் பற்றியோ, வள்ளலைப் பற்றியோ அல்லது குறிப்பிட்ட குலம், சாதி என்பவற்றையோ பாடினர் அல்லர். மனுக்குலம் பற்றிப் பாடினார். "மானுடம் வென்றதம்மா" என்றே கம்பனும் குறிப்பிட்டான். தாம் வாழ்ந்த காலத்துச் சமுதாய நிறுவனங்களும் நியதிகளும் குறைபாடுடையவை என்னும் நம்பிக்கையுணர்வின் உந்தலினா லேயே இப்பெருங் கவிஞர்கள் மானுடன் கேடின்றி வாழத்தக்க கற்பனை உலகுகளைப் படைக்க முற்பட்டனர். காலத்துக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்த அவர்கள், காலத்தைக் கடந்து சிந்தித்தனர். செயலாற்றினர். அதனாலேயே காலத்தை வென்ற கவிஞராகினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவன் வகுத்த அறம், அவன் காலத்து நடைமுறைகளின் திரட்சி அன்று. மனிதன் கடைப்பிடிக்க வேண்டுமென்று அவன் விழைந்த சமுதாய நெறியை நூலில் வடித்தான். தனது காலத்தின் அவலங் களையும் பிரச்சனைகளையும் உணர்வுபூர்வமாகவும், அறிவு பூர்வமாகவும் தெளிந்து கொள்ளும் ஒருவனே கால உணர்வுடன் செயற்பட முடியும். அவன் கூறும் முடிவுகள் பூரணமானவையாக அமையாமற் போகலாம். ஆனால் இவ்வுலகை மாற்றியமைக்க வேண்டுமென்ற உணர்வு தோன்றியவுடனேயே அவனது படைப் புக்குத் தனியாற்றல் பொருந்தி விடுகின்றது. அத்தகைய ஆற்றலை அளவுகோலாகக் கொண்டே பெருங் கவிஞர்களை இனங்கண்டு கொள்கின்றோம். அந்த முறையிலேயே வள்ளுவர், இளங்கோ, கம்பன், பாரதி முதலியோர் மகாகவிகள் என மதிக்கப்படுகின்றனர்.

குறிப்புகள்

1. இக் கட்டுரையானது பேராசிரியர் க. கைலாசபதி அவர்களால் எழுதப்பட்டு 1982 ஆம் ஆண்டு **திருக்குறள் மாநாடு சிறப்பு மலரில்** வெளிவந்ததாகும். பின்னர் பேராசிரியரின் **இலக்கியச் சிந்தனைகள்** (1983) நூலில் இடம்பெற்றுள்ளது.

2. **கட்டுரையின் பிரதான கருத்து :**

மானுடம் கேடின்றி வாழ்வதற்கு, இவ்வுலகை மாற்றிய மைக்க வேண்டும் என்ற உணர்வுடன், தமது படைப்புக்கள் மூலம் கற்பனை உலகைப் படைக்க முற்பட்ட வள்ளுவர், இளங்கோ, கம்பர், பாரதி ஆகியோர் மகா கவிகள் என மதிக்கப்படுகின்றனர்.

3. **கட்டுரையில் காணப்படும் துணைக் கருத்துக்கள் :**

i. தமிழ் இலக்கியப் பரப்பில் காலத்துக்குக் காலம் உருவாகிய பெரும் புலவர்கள் வரிசையில் வள்ளுவர், இளங்கோ, கம்பர், பாரதி என்று வரிசைப்படுத்துவது இப்பொழுது வழக்கமாகி விட்டது.

ii. சங்ககாலம் முதல் இன்றுவரை தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் பல்வேறு புலவர்கள் தோன்றியிருப்பினும் மகாகவிகள் என்று விதந்துரைக்கத் தக்கவர்கள் வெகு சிலரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. வேற்று மொழியாளரும் ஏற்கத்தக்க தமிழ்க் கவிஞர்களாக வள்ளுவர், இளங்கோ, கம்பர் ஆகிய மூவரையுமே பாரதியார் குறிப்பிட்டுள்ளார்.

iv. பாரதியாரின் படைப்புக்களையும், அபிப்பிராயங்களையும் அடிப்படை உண்மையாகத் தமிழுலகம் ஏற்றுள்ளது.

v. பாரதிக்கு முன்னரே, அவர் குறிப்பிட்ட மூவரும் தமிழ் இலக்கிய உலகில் பெருமைக்குரியவர்களாக விளங்கியுள்ளனர்.

vi. பாரதியார், தனது இலக்கிய நோக்கினை அடிப்படையாகக் கொண்டே தனக்கு முன்னிருந்த பெருங்கவிஞர்களை வரிசைப்படுத்தியுள்ளார்.

vii. ஒருவரது கல்வி, பயிற்சி, உணர்வு, அனுபவம், உலக நோக்கு இவற்றுக்கேற்ப இலக்கியம் பற்றிய வரைவிலக்கணம் வேறுபடும்.

viii. சொல்லலங்காரம், சப்தநயம், உவமை, உருவகம் முதலிய சிறப்புக்களும் உணர்வினைத் தாக்கி வாழ்க்கைக் குப் புதிய விளக்கம் தரக்கூடிய கருத்துமே கவிதைக்கு உயிர் நாடியாகும்.

ix. பெருங்கவிஞர்கள், மொழியாற்றல் முதலியவற்றோடு தாம் வாழும் சமுதாயத்தின் அடிப்படைப் பிரச்சினைகளை அறிந்து, அவற்றுக்குப் பரிகாரம் தேடுபவர்களாக இருப்பார்கள்.

x. பெருங்கவிஞன், தன் சொந்த அனுபவங்களுடன் மனித குலத்தின் நிலையுணர்ந்து, அதனோடு தான் கலந்து எழுதுகின்றான்.

xi. பாரதி, இந்திய நாட்டின் அடிமைத் தளையுடன், ஏனைய நாடுகள், சமுதாயங்கள் போன்றவற்றின் அடிமை நிலையையும் ஒழித்து விட உலகளாவிய பொதுமை உணர்வுடன் பாடல்கள் பாடினார்.

xii. வையத்துள் மானுடன் வாழ்வாங்கு வாழ வழிகண்டவர் வள்ளுவர்; இலட்சிய அரசை இலக்கியத்தில் உருவாக்கியவர் கம்பர்; அறம், அரசியல், வாழ்க்கை பற்றி ஆராய்ந்தவர் இளங்கோ; இவர்கள் மனுக் குலம் பற்றிப் பாடினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

xiii. தனது காலத்து அவலங்களையும், பிரச்சனைகளையும் உணர்வுபூர்வமாகவும், அறிவுபூர்வமாகவும் தெளிந்து கொள்பவனே காலவுணர்வுடன் செயற்பட முடியும். பாரதி இந்த ஆற்றலை அளவு கோலாகக் கொண்டே குறிப்பிட்ட மூவரையும் மகாகவிகள் என்றார்.

4. பாரதி பற்றிய பேராசிரியர் க. கைலாசபதி அவர்களின் கருத்துக்கள்:

i. பாரதியார், வள்ளுவர், இளங்கோ, கம்பர் ஆகிய மூவரையும் வரிசைப் படுத்தி மகா கவிகள் என்றார்.

ii. பாரதியாரின் படைப்புக்கள், அபிபிராயங்கள் ஆகியவற்றை அடிப்படை உண்மைகளாகத் தமிழுலகம் ஏற்றுக் கொண்டது.

iii. பாரதியார் குறிப்பிட்ட மகா கவிகள் வேற்று மொழியாளரும் போற்றக் கூடியவர்கள்.

iv. முப்பெரும் கவிஞர்களைப் பாரதியார் சிறப்பித்துக் கூறியபின், அதுவே நம்மவர்க்கு அளவு கோலாயிற்று.

v. பாரதியார் பாராட்டியதால், அவர் குறிப்பிட்ட மூவருக்கும் பெருமை பெருக்கியுள்ளது.

vi. அடிமைப் பட்டுக் கிடந்த பாரத சமுதாயத்தில் வாழ்ந்த பாரதி, உலகளாவிய கண்ணோட்டத்துடன், பொதுமை உணர்வுடன் தாய்நாடு மற்றும் நாடுகள், சமுதாயங்களின் அடிமைத் தளை நீங்கப் பாடல்களை இயற்றினார்.

vii. பாரதியார் குறிப்பிட்ட மூன்று மகாகவிகளுடன் நானுங் காவதாகப் பாரதியையும் வரிசையில் சேர்த்துத் தமிழுலகால் மதிக்கப்படுகிறது.

5. கவிஞனின் பொதுவிலக்கணம் பற்றிய கைலாசபதியின் கருத்துக்கள்:

i. சொல்லலங்காரம், சப்தநயம், உவமை, உருவகம் முதலியவற்றைக் கவிதையில் கையாளல்.

ii. உணர்வில் தாக்கமுண்டாக்கி வாழ்க்கைக்குப் புது விளக்கத்தைத் தரவல்ல பாடு பொருள்களைக் கவிதையிற் கொண்டிருத்தல்.

iii. தத்தம் அனுபவங்களின் துணை கொண்டு கவிபாடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. மகாகவிகள் பற்றிய கைலாசபதியின் கருத்துகள் :

i. மொழியாற்றல் முதலியவற்றைக் குறைவின்றிப் பெற்றிருப்பர்.

ii. தாம் வாழும் சமகாலத்துச் சமுதாயத்தின் அடிப்படைப் பிரச்சினைகளை அறிந்திருப்பதுடன், அவற்றுக்குப் பரிகாரம் தேட முயல்வர்.

iii. தமது சொந்த அனுபவங்களை மாத்திரம் பாடுபொருளாகக் கொள்ளாது மனித குலத்தின் நிலையுணர்ந்து அதனோடு கலந்து எழுதுவர்.

iv. உலகந் தழுவிய பொதுமை உணர்வுடன் மானுடம் வாழ்வுற இலக்கியம் படைப்பர்.

7. கட்டுரை ஆசிரியரின் மொழிநடை :

i. தர்க்க ரீதியாகக் காரண - காரியத் தொடர்புடன் விடயங்களை எடுத்துக் காட்டும் வளமிக்க மொழிநடை.

ii. நியாயிக்கும் ஆற்றலுடனான மொழிநடை.

iii. ஆய்வு நிலைப்பட்ட இயல்பினை வெளிப்படுத்தும் மொழிநடை.

iv. சிறு சிறு வாக்கியங்களும், சிலவிடங்களில் பெரிய வாக்கியங்களுமாகக் கருத்தினை வெளிப்படுத்தும் மொழிநடை.

v. ஒரு சில சொற்கள் தவிர்ந்த ஏனையவை யாவும் தூய தமிழ்ச் சொற்களாகக் கொண்டமைந்த மொழிநடை.

vi. கட்டுரையின் கனதிக்கேற்ற எடுத்துக்காட்டுகளைப் பிரயோகித்துள்ள மொழிநடை.

vii. ஆதாரபூர்வமான விளக்கமளிக்கும், ஐயப்பாட்டுக்கு இடமில்லாத மொழிநடை.

8. அருஞ் சொற் பொருள் :

உன்னதமான - மேன்மையான, மிகச் சிறந்த; மகாகவி - மாபெரும் கவி; சொல்லலங்காரம் - சொல்லழகு; சப்த நயம் - ஓசையின்பம்; தளை - கட்டு, விலங்கு, பிணிப்பு; திரட்சி - தொகுப்பு, திரட்டியது; நெறி - வழி, மார்க்கம், பாதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ச்சிறுகதை வளர்ச்சி பற்றிய அறிமுகம்

மேலைத்தேயவர்களின் தொடர்பினால் தமிழில் தோற்றம் பெற்ற இலக்கிய வடிவங்களில் சிறுகதையும் ஒன்றாகும். இது நாவல் இலக்கியத்துக்குப் பிந்தியதாகவே அறிமுகமாயிற்று. நாவல், சிறுகதை முதலான இலக்கிய வடிவங்கள் "புனைகதைகள்" என அழைக்கப்படுகின்றன. ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் ஏற்பட்ட புரட்சிகளும் (அரசியல், கைத்தொழில் சார்ந்தவை), நவீன விஞ்ஞானத்துறையின் வளர்ச்சியும், சமூக - பண்பாட்டு மாற்றங்களும் இலக்கியத்துறையில் புதிய வடிவங்கள் உருவாகுவதற்குக் காரணிகளாயின. 18ஆம் நூற்றாண்டிலேயே இதற்கான முன்னோடியான நிகழ்ச்சிகள் இடம்பெறலாயின. எட்கார் அலன்போ, கோகோல் போன்றவர்கள் புதிய படைப்பாகச் சிறுகதையைத் தந்தனர். மேலை நாடுகளில் ஏற்படத் தொடங்கிய இத்தகைய இலக்கிய முயற்சிகள் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளையும் காலப் போக்கில் சென்றடைந்தன. ஆங்கிலம் முதலான மேலைத் தேய மொழிகளைக் கற்றுக்கொண்ட மத்திய தர வர்க்கத்தினரின் தோற்றம், ஆங்கிலக் கல்வி, அரசியல் அமைப்பு முறைமைகள், அச்சு இயந்திரப் பயன்பாடு, உரைநடையிலக்கிய வாய்ப்பு, சமூக பொருளாதார பண்பாட்டு முறைமைகளின் வளர்ச்சி ஆகியன இணைந்து தமிழில் புனைகதை இலக்கியத்தின் தோற்றத்துக்கு வழிசமைத்தன. அவை மொழி பெயர்ப்புக்களாகவும், சொந்த ஆக்கங்களாகவும், தழுவல்களாகவும் விளங்கின.

சிறுகதை என்னும் இலக்கிய வடிவமானது வாமன அவதாரம் போன்றதென மூதறிஞர் ராஜாஜி குறிப்பிட்டுள்ளார். அது சிறியதான உருவத்தினூடாக மிகப்பெரியதான தாக்கத்தினை உணர்த்துவதாக அமையக்கூடியது. ஓர் உணர்ச்சியை, அனுபவத்தை, பிரச்சினையை, சம்பவத்தை, தகவலை மையமாகக் கொண்டு சுற்றிச் சூழல்வது தான் சிறுகதை. அதன் கருப்பொருளை வெளிப்படுத்தும்போது பொருத்தமான உத்தி முறைகளைப் பின்பற்றலாம். கதைப்பின்னலானது நிகழ்ச்சிக் கோர்வைகளினூடாகவோ, உரையாடல்கள் மூலமோ, அல்லது செயற்பாடுகள் ஊடாகவோ வளர்த்துச் செல்லப்படலாம். கதை சொல்லும் விதம் தன் கூற்றாகவோ, பாத்திரக் கூற்றாகவோ விளங்கமுடியும். கதைக்கரு, கதைக்களம், கதைப்பின்னல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையின் தொடக்கமும் முடிவும், கதை சொல்லும் உத்தி, பாத்திரவார்ப்பு, கலையழகு, மொழிநடை, பொருண்மை ஆகியன நிறைந்ததாகச் சிறுகதைப் பண்பு காணப்படல் வேண்டும். கதைப் பொருளும், கலைநயமும் ஒன்றுடனொன்று தொடர்புபட்டமை வதால் சிறுகதை மேன்மையுறும். ஆரம்பம், படிப்படியான வளர்ச்சி, முடிவு என்றவாறு சிறுகதை அமைந்து, வியப்பான முடிவைத்தருதல் வேண்டும். வாசகர் உள்ளத்தில் உணர்வலைகளை எழுப்பித் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய யதார்த்தப் பண்பே நல்லதொரு சிறுகதைக்கான வெற்றியாகும்.

சமகாலப் பிரச்சினைகளுடன் தாக்கங் கொண்ட படைப்பாளியால் சிறுகதை படைக்கப்படும்போது அது உணர்வும், உணர்ச்சியும் நிறைந்ததாய் விளங்குகிறது. போதனைகளை அடிப்படையாகக் கொண்ட கதைகளிலிருந்து வேறுபட்டதாகச் சிறுகதை விளங்கிச் சமூகப்பயன்பாடு கருதியதாய் அமைதல் வேண்டும். அதன் கருப்பொருளானது வாய்மொழிக் கதைகளையும் இதிகாசம், புராணம் போன்றவற்றையும் மறுவாசிப்புக்குட்படுத்த வேண்டும். சிறுகதையானது குறுகிய நேரத்தில் வாசித்து முடிக்கக் கூடியதாக (ஐந்து நிமிடங்கள் தொடங்கி முப்பது நிமிடங்கள் வரை) இருப்பது சிறந்ததாகும். அதன் அளவு பற்றிய வரையறைகள் இல்லாவிடினும் குறித்ததொரு கருப்பொருள், குறைவான கதாபாத்திரங்கள், பொருத்தமான காலநீட்சி, பொருத்தமான அளவு ஆகியவற்றை உள்ளடக்கிக் காணப்பட வேண்டும். புதுமைப் பித்தனின் 'பொன்னகரம்' இருபக்கங்களிலும், 'துன்பக்கேணி' சுமார் நாற்பது பக்கங்களிலும் அமைந்த சிறுதைகளாகும். முதலில் அமெரிக்காவில் தோற்றம் பெற்ற இலக்கிய வடிவம் சிறுகதையாகும்.

தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் சங்ககால அகத்திணை இலக்கியங்களில் செய்யுள் வடிவில் காணப்பட்ட விடயங்கள் பலவும் சிறுகதைப் பண்பு வாய்ந்தவைகளேயாகும். தொல்காப்பியர் கூறும் 'பொருளொடு புணராப் பொய்ம்மொழியானும், பொருளொடு புணர்ந்த நகைமொழியானும்' என்பது கட்டுக்கதை (Fiction) போன்ற உரைநடை வகைகளைக் குறித்து நிற்பது. ஆனால் அவை போன்ற கதைகள் எவையும் எமக்குக் கிடைக்கவில்லை. இதிகாச, புராண, நாடகக் கதைகள் பல ஏற்கெனவே தமிழில் வழங்கி வந்துள்ளன. இருப்பினும் முன்னோடி முயற்சியாக வீரமாமுனிவரின் வாமன்கதை, பரமார்த்தகுரு கதை ஆகியன அமைந்தன. அதனைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து மகாராஷ்டிர மொழியிலிருந்து கடன் வாங்கித் தாண்டவராய முதலியார் எழுதிய பஞ்சதந்திரக் கதைகள், வீராச்சாமிச் செட்டியாரின் விநோதரசமஞ்சரி, 'விக்கிரமாதித்தன் கதைகள்' ஆகியன விளங்கின. மகாகவி சுப்பிரமணிய பாரதியார் வங்காள மொழியிலிருந்து தாகூரின் பல கதைகளைத் தமிழில் மொழி பெயர்த்ததுடன் ஆறில் ஒரு பங்கு, சுவர்ணகுமாரி, துளசிபாய் அல்லது ராஜபுத்திர கன்னிகையின் சரித்திரம், காக்காய்ப் பார்லிமென்ட், காற்று போன்ற சில கதைகளையும் எழுதினார். அ.மாதவையாவும் குசிகர் குட்டிக் கதைகள் என்பதைத் தமிழுக்குத் தந்தார். இவை யாவும் தமிழில் சிறுகதை உதயமாவதற்குரிய நல்லதோர் சூழ்நிலையை உருவாக்கித் தந்த முயற்சிகளாகும். வ.வே.சு.ஐயர், பாரதியார், மாதவையா ஆகியோரைத் தமிழ்ச் சிறுகதை முன்னோடிகளாகக் கொள்வது மரபாகி விட்டது.

எனினும் பலராலும் ஏற்றுக் கொள்ளத்தக்க உருவ, உத்தி அமைப்புடன் தமிழில் சிறுகதையிலக்கியம் படைத்த முன்னோடியாக வ.வே.சு.ஐயர் கருதப்படுகின்றார். அவரது எட்டுச் சிறுகதைகள் அடங்கிய 'மங்கையற்கரசியின் காதல்' 1927 இல் வெளி வந்தது. இதில் காணப்பட்ட குளத்தங்கரை அரசமரம் என்னும் சிறுகதையே விதந்து கூறத்தக்க தரமான முதற்றமிழ்ச் சிறுகதை எனக் கூறப்படுகின்றது. இந்தச் சிறுகதையானது ஏற்கெனவே அவரது மனைவி பெயரில் 1917ஆம் ஆண்டு அவரால் எழுதப்பட்டு ஒரு பத்திரிகையில் வெளியானதாகும். அரசமரம் கதை கூறுவதாக 'பஞ்சதந்திர' பாணியில் அமைந்திருந்தாலும் கதை கூறப்பட்ட முறை சிறப்பானது. தேசபக்தன், தமிழ்நாடு, காந்தி, சுதந்திரச்சங்கு, மணிக்கொடி, பாரததேவி, கலைமகள், ஆனந்தபோதினி, ஹனுமான், சுதேசமித்திரன், சக்தி போன்ற பத்திரிகைகள் அக்காலத்தில் அதிகளவில் சிறுகதைகளை வெளியிட்டு ஊக்குவித்தன. ராஜாஜி (தேவானை, முகுந்தன் பறையனான கதை), கல்கி (சாரதையின் தந்திரம், வீணை பவானி, கணையாழியின் கனவு, திருவழுந்தூர் சிவக்கொழுந்து, கேதாரியின் தாயார்) ஆகியோரின் தொடர்ந்த சிறுகதை முயற்சிகள் இக்காலத்தில் நிகழ்ந்தன.

1933 இல் 'ஆனந்த விகடன்' சஞ்சிகையானது சிறுகதைப் போட்டியொன்றை நடத்தி "ஊமைச்சியின் காதலன்" என்னும் இராமலிங்கம் என்பவர் எழுதிய சிறுகதைக்கு முதற் பரிசினை வழங்கியது. 1930 இல் தோற்றம் பெற்ற 'மணிக்கொடி' சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு விட்டு இரு தடவைகள் நடத்தப்பட்டது. தமிழ்ச் சிறுகதை களுக்குப் புதிய பரிமாணமும் வல்லமையும் அளித்த சஞ்சிகை அதுவாகும். தமிழிலக்கிய வரலாற்றில் 'மணிக்கொடிக்காலம்' எனச் சிறப்பிக்கத்தக்க விதத்தில் கருப்பொருள், கலைத்துவம், கதை சொல்லும் உத்தி ஆகியவற்றில் அதிலெழுதிய எழுத்தாளர்கள் புதுமை படைத்தனர். நவீன தமிழ்ச் சிறுகதையின் பிதாமகர் என அழைக்கப்படும் புதுமைப்பித்தன் மற்றும் கு.ப.ராஜகோபாலன், வ.ராமசாமி, மௌனி, பி.எஸ்.ராமையா, ந.பிச்சமூர்த்தி, சி.சு.செல்லப்பா, தி.ஜ.ர, கு.அழகிரிசாமி, திரிலோகசீதாராம், சிதம்பரசுப்பிரமணியம், கே.வெங்கட்ராம், இளங்கோவன், பி.எம்.கண்ணன் போன்றவர்கள் 'மணிக்கொடி' கால எழுத்தாளர் களாவர். இவர்களை விட இன்னும் பலர் சிறுகதைத் துறையில் இணைந்து கொண்டு உழைத்தனர். க.நா.சுப்பிரமணியம், தி.ஜானகிராமன், கூடாமணி, அநுத்தமா, லட்சுமி, சுந்தரராமசாமி, அகிலன், ஆர்வி, கோவி மணிசேகரன், ஜெகசிற்பியன், நா.பார்த்த சாரதி, சி.என்அண்ணாத்துரை ஆகியோருட்பட இன்றுவரை தமிழ்ச் சிறுகதைத் துறையினுக்குப் பங்களிப்புச் செய்தவர்களின் எண்ணிக்கை மிகமிக அதிகமாகும்.

சமகாலத்தில் திலகவதி, பூமணி, ஜெயமோகன், சுப்பிரபாரதி மணியன், தோப்பில் முகம்மது மீரான் போன்றவர்கள் வித்தியாசமான முறைகளில் சிறுகதைகள் எழுதி வருகின்றனர். இச்சிறுகதைகளின் கருப்பொருள்களும் இதிகாச, புராண வரலாற்று நகைச்சுவை சார்ந்த நிலைகள் தொடக்கம் சமகாலச் சமூகப் பிரச்சினைகளின் பல்வேறு கூறுகளையும் தழுவியமைந்தனவாகும். மேலாண்மை பொன்னுச் சாமி, தனுஷ்கோடி இராமசாமி, சா.கந்தசாமி, நகுலன், த.ஜெய காந்தன், அசோகமித்திரன், விட்டல்ராவ், லா.சா.ராமாமிர்தம், இந்திராபார்த்தசாரதி, நீலபத்மநாதன், ராஜம் கிருஷ்ணன், நாஞ்சில் நாடன், ஆ.மாதவன், பிரபஞ்சன், சின்னப்பபாரதி, சு. சமுத்திரம், மு.கருணாநிதி, சுஜாதா, எஸ்.சங்கரநாராயணன், காவேரி, சிவகாமி, தமிழவன், ஹெப்சிபா ஜேசுதாசன், அநுராதா ரமணன், சி.ஆர் ரவீந்திரன், பாவண்ணன் முதலான பலர் நாவல்களுடன் சிறுகதைகளையும் படைத்தளித்துள்ளனர். சிறுகதை, நாவல் ஆகிய இலக்கிய வடிவங்களை ஒருசேரக் கையாண்ட எழுத்தாளர்கள் பலராவர். புதுமைப்பித்தன் துன்பக்கேணி, அகலிகை, சாப விமோசனம், விநாயகசதுர்த்தி, பக்தகுசேலர், கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும், ஒரு நாள் கழிந்தது முதலான சுமார் நூறு சிறுகதை களைப் படைத்துள்ளார். முப்பதுக்கும் குறைவான சிறுகதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களினூடு புதிய பரிமாணம் காட்டியவர் மௌனி. மனக்கோலம், காதல்சாலை, மாறுதல், பிரபஞ்சகானம், அழியாச்சுடர் போன்றவை அவரது அரிய கதைகளாகும். முந்நூறுக்கு மேற்பட்ட சிறுகதை களை பி.எஸ் ராமையா எழுதியுள்ளார். ந.பிச்சமூர்த்தியின் கதைகளுள் ஈஸ்வரலீலை, இரும்பும் புரட்சியும், பாம்பின் கோபம் போன்ற பலவும் அடங்குவன. சிதம்பரசுப்பிரமணியம் (புவனேஸ்வரி, ஊர்வலத்தில்), தி.ஜானகிராமன் (பஞ்சத்து ஆண்டி, ரசிகரும் ரசிகையும்), கு.அழகிரிசாமி (அன்பளிப்பு, திரிவேணி, ராஜா வந்திருக்கிறார்), தி.ஜ.ர (பணக்காரி, குஞ்சிதம், பவுண்செடி, மஞ்சள்துணி, சங்கு மோதிரம்), சி.சு.செல்லப்பா (ஸரஸாவின் பொம்மை சிறுகதைத் தொகுப்பு), லா.ச.ராமாமிர்தம் (ஜனனி, இதழ்கள் சிறுகதைத் தொகுப்புகள்), சூடாமணி (ஒளியின் முன்), அகிலன் (காசுமரம், பூச்சாண்டி, கோயில் விளக்கு, குழந்தை சிரித்தது), அறிஞர் அண்ணாத்துரை (செவ்வாழை, சொர்க்கத்தில் நரகம், பிடி சாம்பல்), ஜெயகாந்தன் (சமூகம் என்பது நாலு பேர், கோகிலா என்ன செய்து விட்டாள், ஆடும் நாற்காலிகள் ஆடுகின்றன, பகல் நேரப் பாசஞ்சர் வண்டி, பிரம்மோபதேசம்), ஜெயமோகன் (பத்மவியூகம்), அனுராதா ரமணன் (சிறை) போன்றவர்களின் சிறுகதைகள் குறிப்பிடத்தக்க மாதிரிச் சான்றுகளாகும். சொந்தமான கற்பனை ஆக்கங்களை விடப் பல்வேறு மொழிகளிலிருந்தும் பன்னூறு சிறுகதைகள் வெளிவந்தன. மொத்தச் சிறு கதைகளின் எண்ணிக்கை பல்லாயிரக் கணக்கானது. அவற்றைப் படைத் தளித்தவர்கள் எண்ணிக்கையும் பலநூறாகும். ஆனால் காலத்தினை வென்று நிற்கக்கூடிய சிறப்பு வாய்ந்தவை குறைவானவைகளே யாகும். இன்றைய காலகட்டத்தில் பத்திரிகைகள், சஞ்சிகைகள், சிறப்பு மலர்கள், நூல்கள் தவிர இணையமும் சிறுகதை வளர்ச்சிக்குத் துணை புரிவது கண்கூடு.

தமிழ் நாட்டுக்கப்பால் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புலம்பெயர்ந்த தமிழர் வாழும் நாடுகளிலிருந்தும் தமிழிலான சிறுகதையிலக்கியங்கள் வெளிவருகின்றன; வெளிவந்துள்ளன. இலங்கையின் முதல் தமிழ்ப் பத்திரிகையான 'உதய தாரகை' (1841) யின் ஆசிரியராக 1860 களில் பணியாற்றிய ஜே.ஆர்.ஆனால்ட் சதாசிவம்பிள்ளை பல சிறுகதைகளை அப்பத்திரிகையில் எழுதியதுடன், நன்னெறிக் கதா சங்கிரகம் என்னும் சிறுகதைத் தொகுதியையும் வெளியிட்டார். அப்படிப்பார்த்தால் தமிழ் நாட்டுக்கு முந்தியே ஈழத்தில் சிறுகதையிலக்கியம் தோன்றிவிட்டதாகக் கருத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடமுண்டு. தமிழ்ச் சிறுகதையின் பிதாமகராகச் சதாசிவம் பிள்ளையைக் கருதமுடியும். இதன் பின்னர் பண்டிதர் சந்தியாகோ சந்திரவர்ணம்பிள்ளையின் கதாசிந்தாமணி (1875 – ஏழு கதைகளின் தொகுதி), தம்பிமுத்துப்பிள்ளையின் ஊர்க்கதைகள் தொகுதி, 101 கதைகளைக் கொண்ட ஐதுருஸ் லெப்பை மரைக்கார் என்பவரின் ஹைதர்சா சரித்திரம், நற்பவளத்திரட்டு ஆகியன வெளிவந்தமை பற்றியும் அறியமுடிகிறது. தமிழகச் சஞ்சிகைகளின் செல்வாக்கும், ஆங்கிலக் கல்வியும் ஈழத்தவரையும் 1930 களில் சிறுகதை படைக்கத்தூண்டிற்று. பாரதியாரின் பாடல்கள், மகாத்மா காந்தியின் கொள்கைகள், சுதந்திரவுணர்ச்சி முதலானவை கருப்பொருள்களாக விளங்குமாறு சிறுகதைகள் எழுதப்பட்டன. 1930 யூன் 22 இல் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரத் தொடங்கிய 'ஈழகேசரி' (1930 – 1958) இதற்கான களத்தை அமைத்துக்கொடுத்தது.

நவீன உருவப் பிரக்ஞை கொண்ட இலங்கையர் கோனின் மரியமதலேனா சிறுகதை 1930 களினாரம்பத்தில் 'கலைமகள்' சஞ்சிகையில் வெளிவந்தது. மலையகத்திலிருந்து கோ.நடேசைய ரின் ஒரு இராமசாமி சேர்வையின் சரித்திரம் சிறுகதையானது 1931 இல் வெளிவந்தது. 1933 இல் 'ஈழகேசரி' யின் முதற்சிறுகதையாகிய பறைச்சேரியில் தீ விபத்து அல்லது வேதாங்க ஐயங்கார் வெளியானது. இதனை அளவெட்டி த.சிவலிங்கம் எழுதியிருந்தார். தொடர்ந்து நவாலியூர் சோ.நடராஜன் (மாலினி – 1934), சோ.சிவபாதசுந்தரம் (தோட்டத்து மீனாட்சி – 1936), சு.நல்லையா-சுயா (அன்னையின் கட்டளையும் அதுதான் – 1936), சம்பந்தன் (தார்ராபாய் – 1938), ஆனந்தன் (ஹரிசனங்களின் கண்ணீர் – 1938), பாணன் (அவிந்த மலர் – 1938), சி.வைத்திலிங்கம் (ஏன் சிரித்தார்? – 1939), பவன் (தியாகி – 1939) ஆகியோரின் சிறுகதைகள் 'ஈழகேசரி', 'கலைமகள்' ஆகிய ஏடுகளில் வெளிவந்தன. எனவே எழுத்தாளர் செங்கையாழியான் அவர்களின் கூற்றுப்படி இந்தப் பத்துப்பேரும் ஈழத்தமிழ்ச் சிறுகதையின் முன்னோடிகளாகின்றனர். ஆனால் நடேசையர், இலங்கையர்கோன் ஆகியோர் எழுதிய கதைகளில் எது முந்தியது? என்பதற்கு மரிய மதலேனா வெளிவந்த காலம் சரியாகத் தெரிதல் வேண்டும்.

தமிழக அல்லயன்ஸ் பதிப்பக உரிமையாளர் திரு குப்புசாமி ஐயரால் தொகுக்கப்பட்ட நான்கு சிறுகதைத் தொகுதிகள் 1940 – 44 காலகட்டத்தில் வெளிவந்தபோது அவற்றுள் ஈழத்தவரின் சில கதைகளும் அடங்கியிருந்தன. முதல் தொகுப்பில் ஈழத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளர்களான சி.வைத்திலிங்கம், இலங்கையர்கோன், சம்பந்தன் ஆகியோரது தலா ஒவ்வொரு சிறுகதை இடம் பெற்றிருந்தது. அதனைக் கருத்தில் கொண்டு ஈழத்துத் தமிழ்ச் சிறுகதையின் மூலவர்களாக இம்மூவரையும் கருதுவது மரபாகி விட்டது. 'ஈழகேசரி'யில் 513 சிறுகதைகள் வெளிவந்துள்ளன. 1930 இல் வெளிவந்த 'வீரகேசரி', 1931 இல் வெளிவந்த 'தினகரன்', அறுபதுகளில் வெளிவந்து நின்றுபோன 'தினபதி', 'சிந்தாமணி', யாழ்ப்பாணத்திலிருந்து 1959 முதல் வெளிவந்த 'ஈழநாடு' ஆகிய தினசரிகளின் வாரப் பதிப்புகளில் ஏராளமான சிறுகதைகள் வெளிவந்து ள்ளன. 'சுதந்திரன்' வாரப்பத்திரிகையானது (1947 – 1982) தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக்குப் பெரும்பணியாற்றியுள்ளது. 1945 இல் தொடங்கி 23 இதழ்கள் மாத்திரம் வெளிவந்த 'மறுமலர்ச்சி' இலக்கியச் சஞ்சிகையானது புதியதொரு காலகட்டத்தைத் தொடக்கி வைத்தது. 1970 களின் தொடக்கத்தில் வெளிவந்த 'சுடர்', 'மல்லிகை' (1966), 'ஞானம்' (2000), 'பூரணி', 'கொழுந்து', 'மலர்', 'கதம்பம்', 'நந்தலாலா' முதலான பல சஞ்சிகைகள் ஈழத்துச் சிறுகதைத் துறைக்கு அரியபணி ஆற்றியுள்ளன. இவற்றுள் சில இன்னமும் வெளிவந்து தமது பணியைத் தொடருகின்றன. 'தாமரை', 'சரஸ்வதி', 'கலைமகள்', 'கல்கி', 'சக்தி', 'குமுதம்' போன்ற தமிழகச் சஞ்சிகைகளும் ஈழத்தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதைகளை முன்னர் வெளியிட்டு ஊக்கமூட்டின. ஈழத்தில் காலந்தோறும் வெளிவந்த தினசரிகள், வாரவெளியீடுகள், மாதச்சஞ்சிகைகள் உட்பட பல ஏடுகளும் சிறுகதைத்துறைக்குப் பங்களிப்பைச் செய்துள்ளன. பல்வேறு சிறப்பு மலர்களும் இதிலடங்கும். இவை தவிரச் சிறுகதைத் தொகுதிகளும் ஏராளமாக வெளிவந்துள்ளன. அவற்றுள் தனியொருவரதும், பலபேரதும் தொகுப்புகள் அடங்கும். 'கலைச்செல்வி' ஆசிரியர் சிற்பி சரவணபவன் தொகுத்தளித்த ஈழத்துச் சிறுகதைகள் (1958), பேராதனைப் பல்கலைக்கழக வெளியீடுகளான கதைப்பூங்கா, விண்ணும் மண்ணும், காலத்தின் குரல்கள், யுகம் ஆகியனவும் கொழும்பு தமிழ் எழுத்தாளர் மன்றம் வெளியிட்ட ஈழத்துப் பரிசுச் சிறுகதைகள் (1963), ஈழநாடு பரிசுச்சிறுகதைகள் (1971), மலைநாட்டு எழுத்தாளர் மன்றமும் 'வீரகேசரி'யும் இணைந்து வெளியிட்ட கதைக்கனிகள் (1963), மாத்தளை எழுத்தாளர் ஒன்றியத்தின் தோட்டக்காட்டினிலே, தகவம் பரிசுக்கதைகள் – 1, தகவம் பரிசுக் கதைகள் – 11, எழுத்தாளர் செ.யோகநாதனும் அவரது மனைவியும் தொகுத்து வெளியிட்ட வெள்ளிப் பாதசரம் (1993), ஒரு கூடைக் கொழுந்து (1994), மற்றும் மலையகப் பரிசுக்கதைகள் (1994), துரை விஸ்வநாதன் வெளியிட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகச் சிறுகதைகள், உழைக்கப் பிறந்தவர்கள் ஆகியனவும், மறுமலர்ச்சிக் கதைகள் (1997), சுதந்திர இலங்கையின் தமிழ்ச் சிறுகதைகள் (1998), துரைவி வெளியீடான பரிசு பெற்ற சிறுகதைகள் (1988), ஈழகேசரிச் சிறுகதைகள் (1998) என்பனவும் குறிப்பிடத்தக்க சிறுகதைத் தொகுதிகளாகும். பல தனிப்பட்ட எழுத்தாளர்களினதும், பல எழுத்தாளர்களின் கூட்டுத் தொகுப்புகளினதும் சிறுகதை நூல்கள் இன்று வரை வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஈழத்தமிழ்ச் சிறுகதைப் படைப்புக்களைக் காலகட்டங் களாகப் பிரித்து நோக்குவது தமிழிலக்கிய ஆய்வாளரின் பணி யாக அமைந்துள்ளது. சிலர் எழுதிய சிறுகதைகளின் எண்ணிக்கை மிகக்குறைவானது. சிலரது சிறுகதைகளின் எண்ணிக்கை அதிக மானது. தண்ணீர்த்தாகம் (ஆனந்தன்), கற்சிலை (நவாலியூர் சோ.நடராஜன்), வண்டிற் சவாரி (அ.செ.முருகானந்தன்), வெள்ளிப்பாதசரம் (இலங்கையர்கோன்), வெள்ளம் (இராஜ அரியரத்தினம்), ஒருபிடி சோறு (கனகசெந்திநாதன்), தோணி (வ.அ.ராசரத்தினம்) ஆகிய ஈழகேசரிச் சிறுகதைகள் மிகவும் உன்னதமானவை என எழுத்தாளர் செங்கையாழியான் குறிப் பிட்டுள்ளார். பிற்காலத்தில் பாட்டி சொன்ன கதை (தெளிவத்தை ஜோசேப்), மக்கத்துச் சால்வை (எல்.எம்.ஹனீபா), அரசனின் வருகை (உமாவரதராஜன்), கோசலை, கோளறு பதிகம் போன்றவை (ரஞ்சகுமார்), கேள்விகள் உருவாகின்றன (நந்தி), கடல் (சொக்கன்), நந்தாவதி (நவம்), தேடிவந்த கண்கள் (உதயணன்), இங்கேயும் சில இழப்புக்கள் (தாமரைச்செல்வி) முதலான பல சிறுகதைகள் வாசகரின் மதிப்பைப் பெற்றுள்ளன.

தி.ச.வரதராசன் (வரதர்), அ.ந.கந்தசாமி, சோ.தியாகராசா, கு.பெரியதம்பி, கே.கணேஸ், பித்தன், கசின் சிவகுருநாதன், டானியல், டொமினிக்ஜீவா, சு.வே, சொக்கன், ஈழத்துச் சோமு, எஸ். அகஸ்தியர், செ.கணேசலிங்கன், காவலூர் ராஜதுரை, என்.எஸ்.எம்.ராமையா, நீர்வை பொன்னையன், மு.தளையசிங்கம், செ.கதிர்காமநாதன், செங்கையாழியான், செம்பியன் செல்வன், மருதூர்க்கொத்தன், யோ.பெனடிக்பாலன், செ.யோகநாதன், நந்தி, சு.இராஜநாயகம், கே.வி.நடராஜன், தெணியான், சாந்தன், குந்தவை, பவானி, ந.பாலேஸ்வரி, எல்.எம்.மன்சூர், மலரவன், மலரன்பன், தெளிவத்தையோசேப், ப.ஆப்டீன், லெ.முருகபூபதி, அ.யேசுராசா, திக்குவெல்லை கமால், நயினா சித்திக், தாமரைச் செல்வி, பத்மா சோமகாந்தன், அ.ஸ.அப்துல்ஸமது, ஆதிலட்சுமி சிவகுமார், யோகேஸ்வரி சிவப்பிரகாசம், கெக்கிராவை ஸகானா முதலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய, புதிய சிறுகதை எழுத்தாளர்களின் சிறுகதைகள் தமிழுலகினை அணி செய்வனவாகும். இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் உதயணன், ஆ.சி. கந்தராசா, அ. முத்துலிங்கம், கருணாகரமூர்த்தி, இராசேஸ்வரி பாலசுப்பிரமணியம் போன்ற பலர் தமிழ்ச் சிறுகதைகளை படைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இன்றைய கால கட்டத்தில் ஏராளமான புதியவர்களின் சிறுகதைப் பிரவேசம் ஆரோக்கியமானது என்றாலும் அவற்றின் தரம் பற்றிய ஆழ்ந்த கவலையும் உணரப்படுகின்றது. இன்று புலம்பெயர்ந்து ஐரோப்பிய, வட அமெரிக்க நாடுகளில் வாழும் ஏராளமான தமிழ் எழுத்தாளர்கள் அவ்வவ் நாடுகளிலிருந்து வெளிவரும் ஏடுகளில் பல சிறுகதைகளை எழுதி வருகின்றனர். சொந்தநாடு பற்றிய ஏக்கவுணர்வுகளும், சென்றடைந்த நாட்டின் அனுபவவுணர்வுகளும் அவற்றில் பிரதிபலிக்கின்றன. இந்த வகையில் தமிழ்ச் சிறுகதையுலகம் உலகந்தழுவியதாக விரிவடைந்துள்ளது எனலாம்.

சிறுகதை ஆசிரியர் பற்றிய அறிமுகம்

- கு. அழகிரிசாமி

தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்த்த இந்திய எழுத்தாளர்களில் கு. அழகிரி சாமி முன்னணியில் இருப்பவர். இவரது வாழ்வியற் காலம் 23.09.1923 முதல் 05.07.1970 வரையுள்ள சுமார் 47 ஆண்டுகளாகும். தமிழ் நாட்டின் கோவில் பட்டிக்கு அருகாமையி லுள்ள இடைச் சேவல் கிராமம் இவர் பிறந்த இடமாகும். S.S.L.C சித்தி பெற்ற பின்னர், ஆசிரியப் பணியில் ஈடுபட்டார். பின் பதிவாளர் அலுவலகத்தில் எழுது வினைஞரா னார். சில காலத்திற்குப் பிறகு பத்திரிகையாள ரானார். இவரது இளமைக்கால நண்பர் எழுத்தாளர் கி. இராஜ நாராயணன், தமிழ்மணி சக்தி, பிரசண்ட விகடன் ஆகிய ஏடுகளில் ஆரம்ப காலத்தில் எழுதினார். அழகிரிசாமியின் முதற் சிறுகதை "உறக்கம் கொள்ளுமா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆனந்த போதினி" சஞ்சிகையில் 1943 இல் வெளியானது. "சக்தி" பத்திரிகையில் உதவியாசிரியர் பணியில் இருக்கும்போது (1947 இல்) வல்லிக் கண்ணன், புதுமைப்பித்தன், தி. க. சிதம்பரரகுநாதன் ஆகிய இலக்கியக்காரர்களின் நட்புக் கிடைத்தது. 1952 ஆம் ஆண்டு "கு. அழகிரிசாமி கதைகள்" சிறுகதைத் தொகுதி பிரசுரமானது. அத் தொகுதிக்கு கல்கி. ரா.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முகவுரை எழுதியிருந்தார்.

கு. அழகிரிசாமி அவர்கள் 1953 இல் மலேசியா சென்று "தமிழ் நேசன்" பத்திரிகையில் பணியாற்றினார். அங்கிருக்கும் போதே 1955 ஆம் ஆண்டு சீதாலக்ஷ்மி என்னும் நல்லாளைக் காதல் திருமணம் செய்து கொண்டார். பிற்காலத்தில் தமது மனைவி பற்றிக் குறிப்பிடுகையில் "அவர் கிடைத்தது தான் செய்த பாக்கியம்" என்றார். 1957 இல் குடும்பத்துடன் தாய்நாடு திரும்பி "நவசக்தி" பத்திரிகையின் (1960 - 1965) துணையாசிரியர் ஆனார். பின்னர் 1965 - 1970 காலப்பகுதியில் "சோவியத் நாடு" இதழில் வேலை பார்த்தார். தாம் இறக்கும் வரை அங்கேயே பணிபுரிந்தார். 1967 இல் தமிழ் நாடு அரசின் அபிவிருத்தித் திணைக்கள் விருது இவரது "கவிச் சக்கரவர்த்தி" நாடக நூலுக்குக் கிடைத்தது. இந்திய அரசின் சாகித்திய அக்கடமி விருது 1970 இல் "அன்பளிப்பு" சிறுகதைத் தொகுதிக்கு இவரது இறப்பின் பின் வழங்கப்பட்டது. இசையில் அபாரமான ஈடுபாடு கொண்டவர் அழகிரிசாமி. இடைக்காலத் தமிழ்ப் பிரபந்தங்களில் இரசனை மிக்கவர். மலேசியாவில் பணியாற்றிய அனுபவத்தைச் "சரஸ்வதி" சஞ்சிகையில் மலேசியாவில் தமிழ் எழுத்தாளர்கள் என்ற தலைப்பில் தொடர் கட்டுரையாக எழுதினார். இவர் சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு, நாட்டார் இலக்கியச் சேகரிப்பு ஆகிய துறைகளில் கவனம் செலுத்திய எழுத்தாளராகத் திகழ்கிறார். டாக்டர் அனுராதா, தீராத விளையாட்டு, புது வீடு புது உலகம், வாழ்க்கைப் பாதை என்பன இவர் எழுதிய நாவல்கள். சிறுவர்களுக்காக மூன்று பிள்ளைகள், காளி வரம் ஆகிய நூல்களைப் படைத்தளித்தார். வஞ்சமகள், கவிச் சக்கரவர்த்தி என்பன அழகிரிசாமியின் நாடக இலக்கியங்கள். ரஷ்ய எழுத்தாளர் மார்க்சிம் கோர்க்கியின் நூல்கள் சிலவற்றையம் லெனினுடன் சில நாட்கள், அமெரிக்காவிலே, யுத்தம் வேண்டாம், விரோதி, பணியாவிட்டால் முதலான தலைப்புக்களில் இவர் மொழி பெயர்த்துள்ளார். Laurence Binyan's Akbar என்பதும் இவரின் மொழிப் பெயர்ப்பு நூலாகும். இலக்கியத் தேன், தமிழ் தந்த கவியின்பம், தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்த கவிச்செல்வம், நான் கண்ட எழுத்தாளர்கள் முதலான கட்டுரை நூல்களுக்கும் இவர் சொந்தக்காரர்.

அன்பளிப்பு, சிரிக்கவில்லை, தவப் பயன், வரப்பிரசாதம், கவியும் காதலும், செவி சாய்க்க ஒருவன், புதிய ரோஜா, துறவு ஆகிய சிறுகதைத் தொகுதிகள் இவர் எழுதிய கதைகளின் பெயர்களையே தலைப்பாகக் கொண்டுள்ளன. இவற்றுடன் கு. அழகிரிசாமி சிறு கதைகள் தொகுதியையும் சேர்த்து முழுச் சிறுகதைகள் அடங்கிய நூல் ஏப்ரல் 2011 இல் வெளிவந்துள்ளது. அழகிரிசாமியின் சிறுகதைகள் நூற்றுக்கு மேற்பட்டவை. அவற்றுள் ராஜா வந்திருக்கிறார். புன்னகை, புது உலகம், திரிபுரம், அக்கினி கவசம், மனப்பால், முருங்கை மர மோகினி, தரிசனம், சிறுமைக் கதை, போன்றவைகளும் அடங்கும். பிற்காலத்தில் சென்னையில் திருவல்லிக் கேணியில் உள்ள வீட்டில்தான் கு. அழகிரிசாமி வாழ்ந்தார். பெரும்பாலான இலக்கியக் காரர்களின் வாழ்வு பொருளாதாரப் பலம் குன்றியது என்பதற்கு அழகிரிசாமியும் விதிவிலக்கல்லர். காலமெல்லாம் துன்பத்தில் உழன்று, எலும்புருக்கி நோயால் பீடிக்கப்பட்டு, சாகா வரம் மிக்க இலக்கியங்களை தமிழ் உலகிற்குத் தந்து விட்டு 1970 இல் கண்ணை மூடிக் கொண்டார்.

கு. அழகிரிசாமி எழுதிய தரம் வாய்ந்த சிறுகதையாகிய **தியாகம்** இங்கு இடம்பெற்றுள்ளது. கற்பனை, படைப்பாற்றல், மனோபாவ அலசல் ஆகியவை இச்சிறுகதையில் அபாரமாய் விளங்குகின்றன.

அ. தியாகம்

கோவில்பட்டி மளிகைக் கடை கதிரேசன் செட்டியார் காலையில் பலகாரம் சாப்பிட மணி பத்து ஆகும். அப்புறம் ஒரு பத்து நிமிஷம் உட்கார்ந்து, சாப்பிட்ட சிரமத்தைப் போக்கிக் கொள்ள வேண்டும். அதன் பின் கடையை நோக்கிப் புறப்படுவார். சரியாகப் பதினைந்து நிமிஷ நடை. பத்து இருபத்தைந்துக்குக் கடையில் வந்து உட்காருவார். கையில் கடிகாரம் கட்டாமலே நிமிஷக் கணக்கு தவறாமல் வருஷம் முந்நூற்று அறுபத்தைந்து நாளும் ஒரே மாதிரி யாக அவர் கடைக்கு வருவதும் வீடு திரும்புவதும் இந்தக் காலத்துச் கடைச் சிப்பந்திகளுக்கு ஓர் அதிசயமாக இருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. அவர் அந்தக் காலத்து மனுஷர். அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழகிய உலகம் அவரை விட்டாலும் அவர் அதை விடத் தயாராக இல்லை.

அன்றும் காலை 10.25 க்குக் கடைக்கு வந்தார். கடைக்குள் நுழையும்போது முகத்தை எப்படி வைத்துக் கொள்ள வேண்டுமோ – ஒரு குறிப்பிட்ட முறையில் வைத்துக் கொள்ளவேண்டும் – அப்படி வைத்துக் கொண்டார். இந்த முகபாவத்தின் பிரதான அம்சம், கடுகடுப்பு; பிரதானமில்லாத அம்சம், ஒரு மாதிரியான விறைப்பு. இந்த முகபாவத்தைக் கடையில் உட்கார்ந்திருக்கும் வரையில் எக் காரணத்தைக் கொண்டும் மாற்ற மாட்டார். நண்பர்களோ, அந்தஸ்து மிக்க வாடிக்கையாளர்களோ வரும்போது அவர் சிரிக்கவோ, புன்னகை செய்யவோ வேண்டிய அவசியம் ஏற்படும். அதையும் இந்த முகபாவத்தை மாற்றாமலே நிறைவேற்றி விடுவார்.

கடையில் வந்து உட்கார்ந்த செட்டியார், கணக்கு எழுதும் சோமசுந்தரம்பிள்ளையை ஒருதடவை ஏறிட்டுப் பார்த்தார். பிள்ளையும் அவ்வண்ணமே செய்தார். பிறகு செட்டியார் முகத்தைத் திருப்பி, பெட்டியைத் திறந்து அங்கே கிடக்கும் கையால் துழாவிவிட்டு, கடைச் சிப்பந்திகளை அந்த நான்கு பேரையும் மொத்த மாகவும் தனித்தனியாகவும் பார்த்தார். இனி வசை புராணத்தை ஆரம்பிக்க வேண்டியதுதான்! எதைச் சாக்காக வைத்துக்கொண்டு ஆரம்பிக்கலாம் என்று ஒரு கணம் யோசித்தார். ஒரே ஒரு கணம் தான் சாக்குக் கிடைத்துவிட்டது.

"ஏண்டா தடிப் பயல்களா! நீங்க என்ன பரதேசிகளா, சந்யாசிகளாடா? எருமை மாட்டுப் பயல்கள்! விடிஞ்சதும் நாலு வீட்டுக்கு யாசகத்துக்குப் போற பிச்சைக் காரப் பயல்கூட இப்படிச் சாம்பலை அள்ளிப் பூசமாட்டானேடா? நீங்க வந்து கடையிலே மொளைசீங்களோ இல்லையோ, யாவாரம் ஒண்ணுக்குப் பாதியாப் படுத்துப் போச்சு. இன்னும் மிச்சம் மீதியையும் படுக்க வச்சிட்டுப் போகவாடா, இப்படி நெத்தியில அள்ளிப் பூசிக்கிட்டு வந்திருக்கீங்க, சாம்பலை?...."

கடையில் புதிதாகச் சேர்ந்திருந்த ஒரு சிப்பந்தி, "நீங்களும் விபூதி பூசியிருக்கீங்களே மொதலாளி?" என்று கேட்டுவிட்டான்.

"அடி செருப்பாலே! நாயே! வாயைத் தொறக்கிறியா நீ? (கணக்குப்பிள்ளையைப் பார்த்து) பார்த்தீரா சோமசுந்தரம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயல் எதுத்தில்லே வெவகாரம் பண்றான்? ஜோட்டாலே அடிச்சு வெளியே பத்தும் இவனை! நமக்குச் சரிப்படாது. கஞ்சிக்கில்லாம செத்த பயல்களை எரக்கப்பட்டுக் கடையிலே வச்சது என் முட்டாள்தனம்., சோமசுந்தரம்பிள்ளை....." என்று செட்டியார் பொரிந்து கொண்டிருக்கும்போது, கணக்கப்பிள்ளை அந்தப் புதுப் பையனைப் பார்த்து, "வேலையைப் போய்ப் பாரேண்டா. மொதலாளிகிட்ட எப்படிப் பேசணும்கிறது கூடத் தெரியல்லையேடா, ஒனக்கு! உம்.... போ! வேலையைப் பாரு" என்றார்.

அந்தப் பையனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. போதாக் குறைக்கு மற்ற மூன்று பையன்களும் திரும்பிக் கொண்டு அவனைப் பார்த்துச் சிரித்தார்கள்.

செட்டியார் அதோடு அவனை விட்டு விட்டார். மற்றொரு பையனைப் பார்த்து அஸ்திரத்தைத் தொடுத்தார். "ஏ கழுதே! ஒன்னைத்தானே! பருப்புலே ஒரே கல்லாக் கெடக்குன்னு சொன்னனே, பொடைச்சி வச்சியா, கழுதை?"

"பொடைச்சிட்டேன், முதலாளி. கல்லு ஒண்ணும் இல்லையே?"

"என்னடா! இல்லையா? அப்போ நான் பொய்யா சொல்றேன்? டேய்! இந்தமாதிரி நீ பேசிக்கிட்டே இருந்தா, செருப்படி வாங்கிக்கிட்டுத் தான் இந்தக் கடையை விட்டுப் போகப்போறே. ஆமா, நல்லா யாவுகத்திலே வச்சுக்கோ. வேலையை ஒழுங்காச் செய். சோமசுந்தரம்பிள்ளை, பய பேச்சைப் பார்த்தீரா? பார்த்துக் கிட்டீரான்னேன்? கடைக்கு வர்ரவனெல்லாம் ஒருத்தன் பாக்கி யில்லாமே, "என்ன செட்டியாரே இப்படிக் கல்லைப் போட்டிருக் கிறீரே பருப்பிலே" ன்னு கேக்கறான். இவன் என்னடான்னா "பொடைச்சேன்; கல்லில்லே" ங்கிறானே! உம்... ஏ கழுதை! நீ பொடைச்சது நெசந்தானா? கேட்டத்துக்குப் பதில் சொல்லு! இல்லே, இப்படியே கடையை விட்டுக் கீழே எறங்கு...."

சோமசுந்தரம்பிள்ளை அந்தப் பையனைப் பார்த்து, "பொடைச்சேன், கல்லைச் சுத்தமாப் பொறுக்கிட்டேன், மொதலா ளின்னு சொன்னா என்னப்பா? நெசத்தைச் சொல்றதுக்கென்ன?" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பையன் பதில் சொல்லாமல் நின்றான்.

செட்டியார் கடைப் பையன்கள் அத்தனைபேரையும் மொத்தமாகப் பார்த்து, "போங்கலே, எம் மூஞ்சியிலே முளிக்காதீங்க. ஒங்களைக் கட்டிக்கிட்டு மாரடிக்கிறதுக்கு ஒரு குத்துக்கல்லைக் கட்டிக்கிட்டு மாரடிக்கலாம்... தொலைஞ்சி போங்கடா" என்று விரட்டினார்.

கடைப் பையன்கள் நால்வரும் உள்ளே போய்விட்டார்கள் உள்ளே போனதும் பழைய மூவரும் சிரித்தார்கள்.

மறுநிமிஷமே செட்டியார் அவர்களை அழைத்தார். "ஏண்டா, எங்கடா கூண்டோட கைலாசம் போயிட்டீங்க? உள்ளே சமுக்காளத்தை விரிச்சிப் படுத்துத் தூங்குங்கடா; நல்லாத் தூங்குங்க! இங்கே வர்ரவங்களுக்குப் புளியும் கடுகும் நான் நிறுத்துப் போடுறன்."

புதுப்பையன் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, "நீங்கதானே மொதலாளி, உள்ளே போகச் சொன்னீங்க? நாங்க எது செஞ்சாலும் குத்தமாச் சொல்லுறீங்களே..." என்று, இரண்டு வாரங்களாக அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தைக் கக்கியே விட்டான்.

அவன் பேசியதைக் கேட்டு மற்றப் பையன்கள் முகத்தைத் திருப்பிக் கொண்டு சிரிக்க, செட்டியார் தம் முகத்தை இன்னும் கடுகடுப்பாக வைத்துக் கொண்டு சோமசுந்தரம் பிள்ளையை ஏறிட்டுப் பார்க்க, பிள்ளை அந்தப் பையனைப் பார்த்து "ஏண்டா, பேசாதே பேசாதேன்னு ஒனக்கு எத்தனை தரம் சொல்றது? என்ன பயல்டா நீ? போய் அந்த ஈராங்காயத்தை மூடையிலேருந்து எடுத்துகிட்டு வா... இங்கே பொட்டியிலே ஈரங்காயமில்லே" என்றார்.

"அதெல்லாம் எங்கே தெரியுது? எல்லாம் சொல்லித்தான் நடக்கவேண்டியிருக்கு. ஏண்டா, சோறு திங்கிறீங்களே, அதையும் சொன்னாத்தான் திம்பீங்களா? இல்லை, கேக்கிறேன். இப்படி அறிவு கெட்ட பயல்களா வந்து நமக்குன்னு வந்து சேந்திருக்காங்களே, அதைச் சொல்லும்... டேய், ஒன்னைத் தாண்டா! அந்த முத்தையாப்பிள்ளை பாக்கியைப் போய்க் கேட்டியா? அதையும் சொன்னாத்தான் செய்வியா?

"கேட்டேன், மொதலாளி."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கேட்டியாக்கும்? கெட்டிக்காரன் தான்! கேட்டுவாங் கணும்னு தோணலியோ?"

"பாக்கியைக் குடுத்திட்டாரு" என்று பெருமிதத்தோடு சொன்னான் பையன்.

"அட! என்னமோ இவன் சாமர்த்தியத்தில வாங்கினமாதிரி யில்லே பேசுறான்.! கடன் வாங்கினவர் குடுக்காமலா இருப்பாரு? முத்தையாபிள்ளை யோக்கியன். இவனைப் போல முடிச்சுமாறிப் பயலா இருப்பாருன்னு நெனச்சான் போல இருக்கு. அதனாலே தான் குடுத்திட்டாருன்னு ரொம்பச் சவடாலாச் சொல்றான். ஏய்? நீ எப்படிடா போய்க் கேட்டே? கண்டிப்பாக் கேட்டியா?

"கண்டிப்பாத் தான் கேட்டன் மொதலாளி"

"கண்டிப்பாக் கேட்டியா? உன்னை யாருடா அப்படிக் கேக்கச் சொன்னது? எதம் பதமாப் பேசணும்னு ஒனக்கு எத்தனை தரம் சொல்லியிருக்கேன்? கண்டிப்பாப் பேசினா நாளைக்கு எவண்டா கடைக்கு வருவான்?"

அப்போது சோமசுந்தரம்பிள்ளை குறுக்கிட்டு, சாவதானமாக, "முருகையா, அந்தப் பெரிய கணக்கு நோட்டை இப்பிடி எடு" என்றார்.

செட்டியார் முருகையாவை விட்டு விட்டார். மற்றொரு பையனை ஏறிட்டுப் பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில் ஷண்முகம் பிள்ளை கடைக்கு வந்து சேர்ந்தார்.

"அண்ணாச்சி, வாங்க!" என்று அவரை வரவேற்ற செட்டியார், அந்தப் பையனைப் பார்த்து, "ஏய் பரதேசி! நான் உனக்கு என்ன சொன்னேன்? என்னலே சொன்னேன்?..." என்று கேட்டுக் கொண்டிருக்கும் போதே, ஷண்முகம் பிள்ளை பேச்சுக் கொடுத்தார். "செட்டியாரையா, நாளைக்கு மதுரைக்குப் போறேன்..." என்று தான் சொல்ல வந்த விஷயத்தை ஆரம்பித்தார். செட்டியாரும் கவனத்தை அவரிடம் திருப்பினார். அத்துடன் சாமான்கள் வாங்கவும் இரண்டொருவர் வந்தார்கள். பையன்கள் சுறுசுறுப்பாக வேலையில் ஈடுபட்டார்கள்.

கதிரேசன் செட்டியார் எப்பொழுது பார்த்தாலும் கடைச் சிப்பந்திகள் மீது இப்படிச் சீறி விழுவதைப் பலவருஷங்களாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துக் கொண்டு வந்தவர் ஷண்முகம் பிள்ளை. ஒருநாள் கூட செட்டியார் அன்பாக ஒரு பையனைப் பார்த்துப் பேசியதில்லை. மாதத்தில் பத்து நாட்களாவது அவர் செட்டியார் கடைக்கு வந்து சிறிது நேரம் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்து விட்டுப் போவார். அவர் வந்துவிட்டால் கடைப் பையன்களுக்கு ஒரே கொண்டாட்டம். ஏனென்றால், அவரோடு பேசிக் கொண்டிருக்கும் போது செட்டியார் சஹஸ்ரநாம அர்ச்சனையைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்து விடுவார் என்பது அவர்களுக்குத் தெரியும்.

செட்டியாருமம் கூட அர்ச்சனையை நிறுத்துவதற்கு அதை ஒரு நல்ல சந்தர்ப்பமாகக் கருதுவார்! சோமசுந்தரம்பிள்ளை குறுக்கிட்டுக் கடைப் பையன்களுக்குப் புத்தி சொல்லத் தொடங்கி விட்டாலும், கொஞ்சம் மூச்சுவிட்டு ஓய்வெடுத்துக் கொள்வார். பையன்களைத் தாம் திட்டும்போது தடுத்து நிறுத்துவதற்கு ஒரு ஆள் வேண்டும் என்பதற்காகவே சோமசுந்தரம் பிள்ளையை அந்த முப்பது வருஷ காலமும் தம் கடையில் கணக்குப் பிள்ளையாக வைத்துக் கொண்டிருக்கிறார் என்று சொன்னாலும் தவறில்லை.

செட்டியாரின் குணாதிசயங்களெல்லாம் கடைப் பையன் களுக்கு மனப்பாடம். இரண்டு வாரங்களுக்கு முன் வந்து சேர்ந்த புதுப் பையன் வெங்கடாசலத்துக்கு இன்னும் முதற்பாடம் கூடச் சரிவரப் புரியவில்லை. அதனால் தான் செட்டியார் அவனைத் திட்டும் போது உள்ளூர மனம் குமுறியது. "பிச்சைக்காரன்", "கஞ்சிக்கு இல்லாதவன்", "நாயே, பேயே" என்று எத்தனையோ இழிசொற் களைச் சேற்றிலே தோய்த்து எடுத்துச் செட்டியார் வீசியிருக்கிறார். அவன் சொல்லாமல் கொள்ளாமல் கடையை விட்டு ஓடிவிடலாம் என்று நினைத்தாலும், தன் தகப்பனாரின் கண்டிப்புக்குப் பயந்து இன்னும் அங்கேயே இருந்து கொண்டிருந்தான்.

அவனுடைய ரோஷத்தைக் கண்டும், செட்டியார் தங்களைத் திட்டுவதைக் கண்டும் மற்றப் பையன்கள் சிரித்ததற்குக் காரணம் அவர்களுக்கு மானமோ ரோஷமோ இல்லாதது தான் என்று யாராவது நினைத்தால், அதைவிடப் பெரிய தவறு வேறொன்று இருக்க முடியாது. அவர்கள் அங்கேயே இருந்து பழகியவர்கள். செட்டியாரின் வார்த்தைகளுக்குப் பொருள் கிடையாது. என்று மனப்பூர்வமாக அவர்கள் நம்பினார்கள். அதற்குப் பல காரணங்கள் உண்டு: ஒன்று, வேறு எந்தக் கடையிலும் கடைச்சிப்பந்திகளுக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கும் சம்பளத்தை விட இங்கே அதிகச் சம்பளம். தீபாவளிக்குப் புது வேஷ்டி சட்டைகளுடன் ஆளுக்குப் பத்து ரூபாய் ரொக்கமும் கொடுப்பார் செட்டியார். கடை வேலையைத் தவிர தம்மை மறந்து கூட வீட்டு வேலை செய்யச் சொல்ல மாட்டார். அவருடைய வீட்டுக்குக் கடைப் பையன்கள் போனால், முகத்தில் கடுகடுப் பில்லாமல், "ஐயா ராசா" என்று அன்போடு பேசுவார். ஏகதேசமாகச் சாப்பிடச் சொல்வதும் உண்டு. எல்லாவற்றையும் விட முக்கியமாக, யார் என்ன புகார் சொன்னாலும், எந்தப் பையனையும் வேலையி லிருந்து நீக்குவதே கிடையாது. பையன்கள் வாலிபர்களாகி கல்யாணம் செய்து கொள்ளும் போது, கல்யாணச் செலவுக்கு ஒரு கணிசமான தொகையும் கொடுப்பது வழக்கம். அவர் கடையில் வேலை பார்த்த பையன் பெரியவனாகித் தனிக் கடை தொடங்க நினைத்தால், அதற்கும் உதவி செய்வார். அப்படி அவர் கைதூக்கி விட்டு இன்று மூன்று பேர் அதே ஊரில் மளிகைக் கடைகளை லாப கரமாக நடத்திக் கொண்டு வருகிறார்கள். - இந்த ரகசியங்களெல் லாம் கடைப் பையன்களுக்குத் தெரியும். அதனால் தான் அவருடைய வசை புராணத்தை ஏதோ வழக்கொழிந்த ஓர் அந்நிய பாஷையில் இயற்றப்பட்ட காவியமாகக் கருதி ஒதுக்கித் தள்ளி விட்டார்கள்.

2

காலையில் பையன்கள் விபூதி பூசி வந்ததைக் கண்டு சீறி விழுந்ததைப் பார்த்த புதுப் பையன், மறுநாள் வெறும் நெற்றியோடு வந்துவிட்டான். அவ்வளவுதான்; "நீ என்னடா சைவனா? இல்லை, வேதக்காரனா?(கிறிஸ்தவனா) என்னலே முழிக்கிறே? ஒன் மூஞ்சியைப் பார்த்தா எவண்டா கடைக்கு வருவான்?... நெத்தியைச் சுடுகாடு மாதிரி வச்சிக்கிட்டு..."

"போய் விபூதியை எடுத்துப் பூசு" என்று கணக்குப் பிள்ளை அவனுக்குப் புத்தி சொன்னார். செட்டியார் திட்டுவதை உடனே நிறுத்திவிட்டார்.

அன்று ஷெண்பக வல்லியம்மன் கோவிலில் கடைசி நாள் விழா. பெரிய மேளக்கச்சேரி. வாண வேடிக்கைகள் எல்லாம் ஏற்பாடாகியிருந்தன. வெளியூர்க் கூட்டம் தெருவெல்லாம் நிரம்பி வழிந்தது. அன்று ஒரு மணி நேரம் முன்னதாகவே அதாவது, எட்டு மணிக்கே கடையை அடைத்து விட்டுத் தாமும் கோவிலுக்குப் போகலாம், மற்றவர்களையும் வீட்டுக்கு அனுப்பிவிடலாம் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவு கட்டியிருந்தார் செட்டியார். ஏழரை மணிக்கெல்லாம் ஷண்முகம் பிள்ளை வந்தார். செட்டியார் தம் ஓய்வொழிச்சலற்ற வசை புராணத்தை நிறுத்தி, "அண்ணாச்சி, வாங்க" என்று புன்னகையோடு அவரை வரவேற்றுவிட்டு, "மதுரைக்கு நேத்துத் தானே போனீங்க" என்று ஆச்சரியத்தோடு கேட்டார்.

"அங்கே சோலி? போன காரியம் முடிஞ்சதும் திரும்ப வேண்டியது தானே? இன்னிக்குக் காலையிலே முதல் வண்டிக்கே வந்துட்டேனே! குளிச்சுச் சாப்பிட்டேன். கொஞ்சம் அசந்து தூங்கினேன், தூங்கிப்பிட்டு வர்ரேன்..."

செட்டியார் கடிகாரத்தைப் பார்த்தார். மணி ஏழே முக்கால். இதுதான் சமயம் என்று அரம்பித்து விட்டார்.

"ஏண்டா! தீவட்டித் தடியன்களா?"

"என்ன மொதலாளி" என்று இரண்டு பையன்கள் ஏக காலத்தில் கேட்டார்கள்.

"என்ன மொதலாளியா? நானும் ஒருமணி நேரமாப் பாத்துக்கிட்டே இருக்கேன், இந்தப் பயக வாயைத் தொறந்து கேட்கட்டும்னு. நீங்க எங்கே கேப்பீங்க? ஒங்களுக்குச் சாமி ஏது, சாத்தா ஏதுடா? அப்படி தெய்வ பக்தி இருந்தா, ஒங்க மூஞ்சியில கொஞ்சமாச்சும் களை இருக்குமே! அறிவுகெட்ட பயகளா, இண்ணைக்குத் திருவா ஆச்சே, ஊர் பூராவும் கோயிலுக்குப் போய்ச் சாமி கும்பிடுதே, நாமளும் போகணும்னு ஏண்டா ஒங்களுக்குத் தோணல்லே?"

அப்போது ஷண்முகம் பிள்ளை, "மொதலாளி சொல்லாமே எப்படிக் கடையைப் போட்டுட்டுச் சாமி பாக்கப் போவாங்க? நீங்க சொல்றது நியாயமில்லியே, செட்டியாரையா!" என்றார்.

"ஆமா, அண்ணாச்சி, சாமி கும்பிடுறது கூட மொதலாளியைக் கேட்டுத்தான் கும்பிடணும்! நீங்களும் அவங்க கட்சியிலே சேர்ந்து பேசுங்க!" என்றார் செட்டியார்.

சோமசுந்தரம்பிள்ளை பையன்களைப் பார்த்து, கடையை அடைப்பதற்கு எல்லாவற்றையும் எடுத்து உள்ளே வைக்கச் சொன்னார். அவர்களும் ஜரூராக அந்த வேலையில் இறங்கினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டியார் மிகவும் கவலையோடு, "இந்தப் பயகளோட கத்திக் கத்தி என் தொண்டைத் தண்ணி தான் வத்துது, அண்ணாச்சி சேச்சேச்சே!" என்று சலித்துக் கொண்டார்.

ஷண்முகம் பிள்ளை சிரித்தார்.

சிறிது நேரத்தில் கடையை எடுத்து வைத்துப் பூட்டி முடித்ததும் பையன்கள் கோவிலுக்குப் போக உத்தரவிற்குக் காத்திருந்தார்கள்.

"என்னடா, கோயிலுக்குத் தானே?" என்று கேட்டார் செட்டியார்.

"ஆமா, மொதலாளி."

"கோயிலுக்கு வெறுங் கையை வீசிக்கிட்டுத் தான் போகப் போறீங்களா?"

பதில் இல்லை

"என்னடா, நான் கேக்கிறேன், பேசாம நிக்கிறீங்களே? வாயிலே என்ன கொளக்கட்டையா இருக்கு?"

அதற்கும் பதிலில்லை.

"பாருங்க, அண்ணாச்சி, வாயைத் தொறக்கிறாங்களா பாருங்க. கோயிலுக்குப் போறதுன்னா தேங்கா, பளம், சூடமெல்லாம் கொண்டுபோக வேண்டாமா?"

"கொண்டுதான் போகணும்" என்றார் ஷண்முகம் பிள்ளை.

"அது இந்தப் பயகளுக்குத் தெரியுதா, பாருங்க... கடவுளே! கடவுளே!" என்று தலையில் அடித்துக் கொண்டு, "டேய்! இந்தாங்கடா, ஆளுக்கு ஒத்த ரூபா. போய், தேங்கா, பளம் வாங்கிட்டுப் போங்க, "எங்க தலையில ஏன் களிமண்ண வச்சே, சாமி? மூளையை வைக்கலேண்ணாலும் வெள்ளை மெழுகை யாவது வச்சிருக்கக் கூடாதா?" ன்னு சாமியைக் கேளுங்கடா" என்று சொல்லிவிட்டு நான்கு பேருக்கும் நான்கு ரூபாய்களைக் கொடுத்தார். பையன்கள் போய்விட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டியார் சாவிக் கொத்தோடு வீட்டை நோக்கி நடந்தார்.

சாப்பிட்டுவிட்டு அம்பாளின் நகர்வலத்தைப் பார்ப்பதாக உத்தேசம். அம்பாள் கடைத்தெருவுக்கு வர மணி பதினொன்றாகி விடும் என்பது அவருக்குத் தெரியும். ஷண்முகம்பிள்ளையும் அவரும் பேசிக் கொண்டே போனார்கள். அப்போது ஷண்முகம் பிள்ளை தாம் வெகு நாட்களாகக் கேட்க நினைத்ததை அன்று அப்பட்டமாகக் கேட்டுவிடத் துணிந்தார்.

"என்ன செட்டியாரையா, நம்ம சிநேகிதத்தைப் பொறுத்து கேக்கிறேன்டு கோவிச்சுக்கிட மாட்டீங்களே?

"என்ன அண்ணாச்சி, ஒங்களை எப்போ நான் கோவிச் சிருக்கேன்? என்ன இப்பிடிக் கேக்கிறீங்க? நமக்குள்ள என்ன வேத்துமை?"

"இல்லே நீங்க ரொம்ப தயாள குணத்தோட இருக்கிறீங்க; ஊரிலையும் ஒங்களப் பத்திப் பெருமையாப் பேசிக்கிறாங்க. கடைப் பையன்களுக்கு உங்களைப் போலச் சம்பளம் குடுக்கிறவங்க இல்லேன்னும் எனக்குத் தெரியும். எல்லாம் நல்லாத்தான் இருக்கு. ஆனா , ஏன் இப்பிடி இருபத்துநாலு மணி நேரமும் கடைப் பையன் களைத் திட்டிக்கிட்டே இருக்கிறீங்க? எப்போ வந்து பார்த்தாலும், எவனையாவது நிப்பாட்டி வச்சிக்கிட்டுப் பொரியிறீங்களே?, எதுக்கு? கொஞ்சம் அன்பா ஆதரவா இருக்கலாமில்லே?

"அண்ணாச்சி, அன்பாதரவா இல்லேன்னா நான் திட்டு வனா? அதைக் கொஞ்சம் யோசனை பண்ணிப் பாருங்க. பயகளை நெசமா எனக்குப் பிடிக்கலேன்னா, ஒரே சொல்லிலே கடையை விட்டு வெளியேத்திப்பிட்டு மறுசோலி பார்க்க மாட்டனா? சொல் லுங்க, இந்த முப்பது வருஷத்திலே, ஒருத்தனை நான் வேலையை விட்டுப் போகச் சொல்லியிருக்கிறனா? பயக விருத்திக்கு வரணும்னு தானே தொண்டைத் தண்ணியை வத்த வச்சிக்கிட்டு இருக்கேன்? கத்திக் கத்தி என் உசுரும் போகுது."

"ஏன் கத்தணும்? நல்லபடியா ஒரு சொல் சொன்னாப் பத்தாதா?"

"அப்படியா சொல்றீங்க, அண்ணாச்சி? சரிதான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லபடியாச் சொன்னா பயகளுக்குத் திமிர் இல்லே ஏறிப் போகும்? ஒடம்பு வளையுமா? அந்தக் காலத்திலே நான் கடைப் பையனா இருந்தப்போ எங்க மொதலாளி பேசினதை நீங்க கேட்டிருக்கணும்... ஹூம்அதில் பத்திலே ஒரு பங்கு கூட நான் பேசியிருக்க மாட்டன்; அதுவும் தெரியாது"

"அப்பேர்ப்பட்ட மொதலாளியா அவரு!"

"என்னங்கிறீங்க? என்னப்பத்தி மட்டுமா? என் தாயி, தகப்பன், பாட்டன் - அத்தனை பேரையும் சேர்த்துக் கேவலமாப் பேசுவாரு. புளுத்த நாய் குறுக்கே போகாது. ஒரு நாள் என் மூஞ்சியிலே அஞ்சுப் பலப் படியையே தூக்கி வீசிட்டாரு. தலையைக் குனிஞ்சனோ, தப்பிச்சனோ! அப்படியெல்லாம் வசக்கிவிடப் போய்த்தான் நானும் கடைண்ணு வச்சு, யாவாரம் பண்ணி, இவ்வளவு காலமும் ஒருத்தன் பாத்து ஒரு கொறை சொல்றதுக்கு இடமில்லாமே நிர்வாகம் பண்ணிக்கிட்டு வர்றேன்..."

ஷண்முகம் பிள்ளை செட்டியாரின் வார்த்தைகளைக் கேட்டுச் சிரிக்க நினைத்தார். ஆனாலும் அப்புறம் சிரித்துக் கொள்ளலாம் என்று அதை அடக்கிக் கொண்டு, "செட்டியாரையா! ஒங்க மேலே தப்பில்லே; ஒங்க மொதலாளியைச் சொல்லணும். ஒங்களுக்கு நல்லாத்தான்பாடம் சொல்லிக் கொடுத்திருக்காரு!..."

செட்டியாருக்கு அவர் சொன்னது விளங்கவில்லை. அதனால் "என்ன அண்ணாச்சி? என்ன சொல்றீங்க?" என்று கேட்டார்.

"ஒங்களைப் பார்க்க எனக்கு உண்மையிலேயே பாவமா இருக்கு. இப்படிக் கத்தினா மொதல்ல ஒங்க ஒடம்புக்கு ஆகுமா?"

செட்டியாரும் தம் நிலையை எண்ணித் தாமே வருந்தினார். "என்ன செய்றது? நாம வாங்கின வரம் அப்படி. அந்தச் சோமசுந்தரம் பிள்ளை நடுவிலே ஏதாச்சும் செய்வாரு. அதுதான் சாக்குண்ணு கொஞ்சம் வாயை மூடுவேன். அவரு இல்லேன்னா நான் கத்திக் கத்தி மூச்சே போயிருக்கும். பயக நல்லாத் தல எடுக்கணுமேன்னு தான் பாக்கிறேன். அவங்க தாய் தகப்பன்மாரு என்னை நம்பி ஒப்படைச்சியிருக்காங்களே... என்னமோ அண்ணாச்சி, ராத்திரி ராத்திரி வீட்டிலே வந்து படுத்துக்கிட்டே நானா நெனைச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருத்தப்பட்டுக்கிடுவேன். ஒவ்வொரு சமயம் தொண்டை கட்டிக்கிடும். பாலிலே பனங்கல்கண்டும் மொளகும் போட்டுக் குடிப்பேன். மொதலாளின்னு ஆயிட்டோம், செய்றதைச் செய்யத்தானே வேணும்? அந்தச் சம்புகவல்லி புண்ணியத்திலே இதுவரையிலும் ஒடம்புக்கு ஒண்ணு வந்து படுத்ததில்லை."

"சரி சரி, எவ்வளவு காலம் தான் ஒடம்பு தாங்கும்? இனிமே ஒவ்வொண்ணையும் அப்பிடி அப்பிடிக் கொறைச்சிக்கிட்டு வர வேண்டியது தான். நமக்குப் பகவான் தொண்டையை என்ன வெங்கலத்திலையா படைச்சிருக்கான்?"

ஷண்முகம் பிள்ளை சிரித்துக்கொண்டே சொன்ன புத்திமதி, நியாயமானதாகவே செட்டியாருக்குப் பட்டது. ஆனாலும் அதை ஒப்புக் கொள்வது சுயநலம் என்று கருதினார்.

"அண்ணாச்சி! நீங்க என்னதான் சொல்லுங்க; பயக நல்லபடியாத் தலையெடுக்கணும். இவ்வளவு காலமும் இப்பிடி இருந்துட்டு இனி என்ன எக்கேடு கெட்டா என்னண்ணு என்னாலே இருக்க முடியாது. இனிமே என்ன? வயசு அறுபதாச்சு. உசுரை வச்சிருந்து என்னத்தைச் சாதிச்சிறப் போறோம்?" என்று தியாக உணர்ச்சியோடு பேசினார். பேச்சில் ஒரு உறுதி நிறைந்திருந்தது.

ஷண்முகம் பிள்ளை அதைப் பார்த்து, "அப்பிடின்னா, நித்தியப்படி அர்ச்சனை நடக்கும்ணு தான் சொல்லுங்க" என்று சொல்லிவிட்டு உரக்கச் சிரித்தார்.

செட்டியார் அவருடைய சிரிப்பைப் பார்த்து மிகவும் மனம் நொந்து கொண்டு, "என்னமோ அண்ணாச்சி, ஒங்களுக்குச் சிரிப்பா இருக்கு. பாருங்க, இப்போ ஒங்ககிட்டே சரியாகக் கூடப் பேச முடியல்லே, தொண்டை வலிக்குது. நான் பொறந்த வேளை!" என்று அழமாட்டாத குறையாகச் சொல்லியபடி நடந்தார்.

குறிப்புகள்

1. கோவில்பட்டிக் கிராமத்தில் மளிகைக் கடை (பலசரக்குக் கடை) நடத்தி வரும் கதிரேசன் செட்டியார், அங்கு வேலை செய்யும் பையன்களுடன் வெளிப்பார்வைக்கு மிகவும் கடுமையான வராகவும், கொடுமையானவராகவும் தன்னைக் காட்டிக் கொள்ளும் அதேவேளை, மறுபுறத்தில் அந்தப் பையன்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலத்தில் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் வரவேண்டும் என்ற விருப்பமும், அவர்களின் நலன்களில் அக்கறையும் கொண்டு செயற்படுவதையும், தினமும் அவர்களுடன் கத்திக் கத்தி ஏசுவதால், தனது உடல் நலத்தையும் பொருட்படுத்தாது தியாகஞ் செய்பவராகவும் விளங்குவதே "தியாகம்" சிறுகதையின் கருப்பொருளாகும்.

2. நல்லதொரு சிறுகதை எவ்வாறு அமைய வேண்டுமென்பதற்கு எடுத்துக் காட்டாகவும், தொடக்கம் முதல், முடிவு வரை வாசகரின் ஆவலைத் தூண்டுவதாகவும், கூடுதலான அளவு பேச்சு வழக்குச் சொற்களுடனான உரையாடல்கள் கொண்ட தாகவும், குறைவான கதாபாத்திரங்கள் இடம் பெறுவதாகவும் இச் சிறுகதை அமைந்துள்ளது.

3. கதையாசிரியரே கதைசொல்லியாக விளங்குவதால், அவரது பார்வையிலேயே கதை கூறப்படுவதும், நகர்த்தப் படுவதுமாகக் காணப்படுகிறது.

4. கதிரேசன் செட்டியாரின் மளிகைக் கடை, கதை நிகழ்களமாக விளங்கினாலும், செட்டியார் வீட்டை நோக்கி நடக்கும்போது ஷண்முகம் பிள்ளையுடன் உரையாடிக் கொண்டு போகும் பாதையும் சிறுகதையின் இறுதிப் பகுதிக்குரிய களமாகவுள்ளது.

5. கதிரேசன் செட்டியார், ஷண்முகம் பிள்ளை (அடிக்கடி கடைக்கு வரும் செட்டியாரின் நண்பர்), சோமசுந்தரம்பிள்ளை (கடையில் கணக்குப்பிள்ளையாக வேலை செய்பவர்), புதிதாகக் கடையில் சேர்ந்த சிப்பந்தி பையன் வெங்கடாசலம், கடையில் வேலை பார்க்கும் முருகையா உட்பட மூன்று பையன்கள் ஆகியோரே இச் சிறுகதையின் கதாபாத்திரங்கள்.

6. கதையின் கடைசி வரையிலும் கதிரேசன் செட்டியாரின் கடைப் பையன்கள் மீதான கடுமையான போக்கின் உள்நோக்கம் தெரியாமல் கதை நகர்த்தப்பட்டு, இறுதியில் அது வெளிப்படும் போது வியத்தகு முடிவாக நின்று கதை சிறப்படைகின்றது.

7. சிறுகதையின் பிரதான கதாபாத்திரமான கதிரேசன் செட்டியாரின் குணாம்சங்கள்:

i. எதையும் கண்டிப்பாகவும், கட்டுப்பாடாகவும், உரிய வேளையிலும் செய்பவர். (காலை பத்து மணிக்குப் பலகாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிடல், பின்னர் சாப்பிட்ட சிரமம் போக்கப் பத்து நிமிடங்கள் உட்கார்ந்திருத்தல், அதன் பின் கடைக்குப் புறப்படல், பத்து இருபத்தைந்துக்குக் கடையில் வந்து உட்காருதல்)

ii. பழைய காலத்து மனிதராகையால் பழகிய பழக்கத்திலிருந்து மாறாதவர்.

iii. கடையில் இருக்கும்போது முகத்தை விறைப்பாகவும், கடுகடுப்பாகவும் வைத்திருப்பவர். வேண்டியவர்கள் வரும்போது கூட இம்முகபாவத்தை மாற்றாமலே சிரிப்பவர்.

iv. கடையில் வேலை செய்யும் சிப்பந்திப் பையன்களை எந்நேரமும் ஏசிக் கொண்டிருப்பவர். அவர்களைத் திட்டுவதற்குச் சரியாகவோ, தவறாகவோ காரணத்தைத் தேடிக் கொண்டிருப்பவர்.

v. இளம் பையன்கள் மனம் கூசும்படியாகவும், ஆத்திரப்படும் படியாகவும் வார்த்தைகளைப் பயன்படுத்துபவர். (தடிப் பயகளா!, பரதேசிகளா, சந்நியாசிகளாடா?, எருமை மாட்டுப் பயல்கள், தரித்திரம் பிடிச்ச பயகளா, அடிசெருப்பாலே!, நாயே!, வாயைத் தொறக்கிறியா நீ?, கழுதை, அறிவுகெட்ட பயல்களா!, தீவட்டித் தடியன்களா?)

vi. தனது கடையில் கணக்குப் பிள்ளையாக வேலை பார்க்கும் சோமசுந்தரம் பிள்ளையை மதித்து நடப்பவர். பையன்களைத் திட்டும்போது அவர் தடுத்துப் பேசுவதை விரும்புபவர். அதேபோல் தமது நண்பர் ஷண்முகம் பிள்ளையிடமும் அன்னும் மதிப்பும் கொண்டவர். அவரது கருத்துக்களை மதித்து ஏற்றுக் கொள்பவர்.

vii. தானும் ஒரு காலத்தில் கடைச் சிப்பந்தியாக வேலை பார்த்த போது, தனது முதலாளி தன்னைக் கேவலமாகத் திட்டி, ஏசி (தன்னை விட அதிகமாக) வழிப்படுத்தியதால்தான், இன்று இந்த நிலைமைக்குத் தன்னால் உயர முடிந்ததை எண்ணத்தில் கொண்டு, அதுபோல் தானும் நடந்து கொள்பவர்.

viii. வெளிப் பார்வைக்குக் கடைப் பையன்களிடம் கடுமையாக நடந்து கொண்டாலும், உள்ளூர அவர்களின் நலன்களிலும், முன்னேற்றத்திலும், எதிர் காலத்திலும் அக்கறை கொண்டு தன்னையே வருத்திச் செயற்படுபவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ix. முன்னர், கடையில் வேலை பார்த்த பையன்கள் வளர்ந்து தனிக்கடை நடத்துவதற்கு உதவியவர்; வேறு எந்தக் கடையிலும் கடைச் சிப்பந்திகளுக்குக் கொடுக்கும் சம்பளத்திலும் பார்க்கக் கூடுதலாகத் தனது கடைச் சிப்பந்திகளுக்குக் கொடுப்பவர். பையன்கள் வாலிபர்களாகித் திருமணம் செய்கையில் கலியாணச் செலவுக்கு ஒரு தொகைப் பணமும் கொடுப்பவர். யார் என்ன புகார் சென்னாலும் கடைப் பையன்களை வேலையிலிருந்து நீக்க மாட்டார்; கடை வேலையைத் தவிர மறந்தும் கூட வீட்டு வேலை செய்யச் சொல்ல மாட்டார்; அவருடைய வீட்டுக்குக் கடைப் பையன்கள் போனால் சிலவேளை சாப்பிடச் சொல்வார்; ஷெண்பகவல்லி கோயிலுக்குப் பையன்களைத் திருவிழா பார்க்கப் போகச் சொல்லி ஆளுக்கொரு ரூபா, அர்ச்சனை செய்யக் கொடுத்தனுப்புவார். இவ்வாறாக அக ரீதியாகவும், புற ரீதியாகவும் செயற்படுபவர் கதிரேசன் செட்டியார்.

x. கடைப் பையன்களை அன்பாகப் பேசித் திருத்த முயன்றால் அவர்களுக்குத் திமிர் கூடிவிடும் என நினைப்பவர்.

xi. எந்நேரமும் கடைப் பையன்களைப் பொருளற்ற விதத்தில் ஏசினாலும், அதனால் தனது தொண்டையையும் உடலையும் வருத்தமுறச் செய்தாலும், உளரீதியாக அவர்களிடம் அன்புடையவராகவும், தான் அவர்களை ஏசி வேலை வாங்கு வதை நினைத்து வருந்துபவராகவும் காணப்படுபவர்.

8. சிறுகதையின் எடுத்துரைப்பு முறை :

i. கதிரேசன் செட்டியார் பற்றிய அறிமுகம், கடையிலுள்ள சிப்பந்திப் பையன்களுடனான அவரது கடுமையானதும், ஏச்சும் பேச்சும் நிறைந்ததுமான அணுகு முறை, கணக்குப் பிள்ளையாகிய சோமசுந்தரம் பிள்ளையின் மனோபாவமும், செட்டியாருக்கும் பையன்களுக்கும் இடையில் அவரது சமயோசிதமான அணுகுமுறைகளும், ஷண்முகம் பிள்ளை யின் வருகையும், செட்டியாருடனான அவரது உரையாடல் களும், சென்பகவல்லி கோயில் திருவிழாவுக்காகக் கடைப் பையன்களைச் செட்டியார் தமக்கேயுரிய ஏச்சுக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமாக போகச் சொன்னதும், அவர்களுக்குப் பணம் கொடுத்ததும், ஷண்முகம்பிள்ளையுடன் வீடு திரும்பும் வழியில் இடம்பெற்ற உரையாடல்கள் மூலம் பையன்கள் மீது தான் கடுமையாக நடப்பதற்கான உள்நோக்கத்தை வெளிப் படுத்தியதும், அவரது உடல் நலம் கெட்டு வருவதுமான கதை நகர்வினால் கதிரேசன் செட்டியாரின் "தியாகம்" வெளிப் படுத்தப்பட்டுள்ளதாக இச் சிறுகதையின் எடுத்துரைப்பு அமைந்துள்ளது.

ii. கதிரேசன் செட்டியாரின் உள்நோக்கம் கதையில் வெளிப்படுத்தப் படாமல் நுட்பமான முறையில் கதை கூறப்பட்டுக் கதை முடிவில் அது வெளிப்படும் விதம் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது.

iii. செட்டியாரின் எதிர்மறையான குணங்களைச் சிறுகதையின் முற்பகுதியில் விவரணையிலும், உரையாடல்கள், மூலமாகவும் கூறிவிட்டு, பிற்பகுதியில் அவரது நேரான சிறந்த பண்புகளை விபரிப்பதும், அதனைத் தொடர்ந்து தனது கடுமையான நடத்தைகளுக்கு அவர் கூறும் காரணங்களினூடு அவரது நன்னோக்கும், தியாக உள்ளமும் புலப்படுவதும் மிகவும் தரமான சிறுகதையாக விளங்கு வதற்கான உத்தியாகும்.

iv. தமிழ் நாட்டுக்குப் பரிச்சயமான மொழிவழக்கும், மணிப் பிரவாள மொழிநடையும், இந்தியாவில் வழங்கும் பிறமொழிச் சொற்களின் அரிதான பிரயோகமும் இச் சிறுகதையினூடு கூடுதலாகப் பேச்சு மொழியிலேயே பயன்படுத்தப்பட்டுள் ளது. எளிமையான சொற்களே கையாளப் பட்டுள்ளன.

v. சிறு சிறு வாக்கியங்களும், பெரும்பாலும் காணப்படும் சிறுசிறு உரையாடற்பாங்கும், கதை கூறப்படும் இலாவகமும், யதார்த்தமான கதைக் கருவும், வியப்பான கதை முடிவும், உளவியல் ரீதியிலான குணப்பண்புகளும் உட்பொதிந்து "தியாகம்" சிறுகதையை வளமுள்ளதாகவும், தரமுள்ளதா கவும் உருவாகத் துணை செய்துள்ளன.

9. கதாசிரியரின் சிறப்பான மொழிநடைக்கான உதாரணங்கள் :

i. "அவரோடு பேசிக் கொண்டிருக்கும் போது செட்டியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமான சஹஸ்ரநாம அர்ச்சனையைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்து விடுவார் என்பது அவர்களுக்குத் தெரியும்" (செட்டியார், கடைச் சிப்பந்திப் பையன்களை ஏசுவதை நிறுத்தி விடுவார்).

ii. "செட்டியாரின் வார்த்தைகளுக்குப் பொருள் கிடையாது என்று மனப்பூர்வமாக அவர்கள் நம்பினார்கள்" (மனதில் எதையும் கருதாது வேண்டுமென்றே ஏசுவார் என்பதைப் பலகால அனுபவத்தில் அறிந்து வைத்திருக் கிறார்கள்).

iii. "அதனால்தான் அவருடைய வசை புராணத்தை ஏதோ வழக்கொழிந்த ஓர் அந்நிய பாஷையில் இயற்றப்பட்ட காவியமாகக் கருதி ஒதுக்கித் தள்ளி விட்டார்கள்" (அவரது வசைகளைக் கருத்தில் கொள்ளவில்லை).

iv. "நாம வாங்கின வரம் அப்பிடி" (தனது செயலுக்காகச் செட்டியார் வருந்திக் கூறியது).

v. "எத்தனையோ இழிசொற்களைச் சேற்றிலே தோய்த்து எடுத்துச் செட்டியார் வீசியிருக்கிறார்". கேவலமான வார்த் தைகளால் செட்டியார் ஏசியிருகிறார்.

vi. "வயசு அறுபதாச்சு, உசுரை வச்சிருந்து என்னத்தைச் சாதிச்சிறப் போறோம்" (செட்டியாரின் உள் மனத்திலிருந்து எழுந்த தியாக உணர்ச்சிப் பேச்சு).

10. அருஞ்சொற் பொருள்:

சிரமம் - கஷ்டம்; ஜோட்டு - செருப்பு; அஸ்திரம் - அம்பு; சமுக்காளம் - போர்வை; பாக்கி - மீதி; முடிச்சு மாறி - திருடன்; சவடால் - ஏமாற்று; எதம்பதம் - ஏற்றதாக, பொருத்தமாக; ஏகதேசம் - இருந்தாற்போல, எப்போதாவது; சோலி - அலுவல், வேலை; ஜரூர் - வேகமாக.

11. பேச்சுவழக்குச் சொற்கள்:

பயகளா - பயல்களா; வச்சிட்டு - வைத்து விட்டு; பூசிக்கிட்டு - பூசிக் கொண்டு; பூசியிருக்கீங்களே - பூசியிருக் கிறீர்களே; மொதலாளி - முதலாளி; எதுத்தில்லே - எதனில்; வெவகாரம் - விவகாரம்; வெளியெ பத்தும் - வெளியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரத்தும்; பாரேண்டா - பாரனடா; கெடக்கு - கிடக்கு; பொடைச்சி - புடைத்து; வச்சியா - வைத்தாயா; ஒண்ணும் - ஒன்றும்; யாவுகத்திலே - ஞாபகத்திலே; வைச்சுக்கொ - வைத்துக் கொள்; பய - பயல்; பார்த்துக்கிட்டீரான்னேன் - பார்த்துக்கிட்டீரா என்றேன்; வர்ரவனெல்லாம் - வருகிறவனெல்லாம்; பாக்கியில்லாமே - பாக்கியில்லாமல்; பருப்புலே - பருப்பில்; பொறக்கிட்டேன் - பொறுக்கி விட்டேன்; நெசத்தை - நிஜத்தை; போங்கலே - போங்கள் அங்கு; மூஞ்சி - முகம்; போயிட்டீங்க - போய்விட்டீர்கள்; ஏண்டா - ஏனடா; எங்கடா - எங்கேயடா; செஞ்சாலும் - செய்தாலும்; குத்தமா - குற்றமாய்; ஒனக்கு - உனக்கு; சொல்றது - சொல்கிறது; ஈராங்காயம் - ஈரவெங்காயம்; மூடையிலேருந்து - மூடையில் இருந்து; பயல்டா - பயலடா; கேட்டியாக்கும் - கேட்டீராக்கும்; சொன்னாத்தான் - சொன்னால்தான்; திம்பீங்களா - தின்பீர்களா; வாங்கணும்னு - வாங்க வேண்டுமென்று; தோணலியோ - தோன்றவில்லையோ; குடுத்திட்டாரு - கொடுத்துவிட்டார்; மாதிரியில்ல - மாதிரியல்லவா; செய்வியா - செய்வீரா; ரொம்ப - நிறைய; யாருடா - யாரடா; இருப்பாருன்னு - இருப்பாரென்று; நெனைச்சான் - நினைத்தான்; கேக்க - கேட்க; எதம்பதமா - இதம் பதமாய்; பேசணும்னு - பேச வேண்டுமென்று; என்னலே - எதனைப் பற்றி; நெத்தியை - நெற்றியை; வச்சுக்கிட்டு - வைத்துக் கொண்டு; வாங்க - வாருங்கள்; தீவட்டி - தீவர்த்தி; பூராவும் - முழுவதும்; ஏதுடா - எதுவடா; திருளா - திருவிழா; ஆச்சே - இருக்கிறதே; தொறந்து - திறந்து; ஒங்க - உங்களுடைய; கேப்பீங்க - கேட்பீர்கள்; தோணல்லே - தோன்றவில்லை; ஒங்களுக்கு - உங்களுக்கு; இண்ணைக்கு - இன்றைக்கு; நாமளும் - நாங்களும்; கொளக்கட்டையா - கொழுக்கட்டையா; தேங்கா - தேங்காய்; பளம் - பழம்; ஒத்த - ஒரு; வச்சே - வைத்தீர்; வேத்துமை - வேற்றுமை; நிப்பாட்டி - நிறுத்தி; இருக்கலாமில்லே - இருக்கலாமல்லவா; வத்த - வற்ற; உசுரும் - உயிரும்; பத்தாதா - போதாதா; ஒடம்பு - உடம்பு; இருந்தப்போ - இருந்தபோது; பாத்து - பார்த்து; கொறை - குறை; சொல்றதுக்கு - சொல்வதற்கு; சாக்குண்ணு - சாட்டென்று; மொளகும் - மிளகும்; போறோம் - போகிறோம்; ஒங்ககிட்ட - உங்களிடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதையாசிரியர் அறிமுகம்

- எஸ். பொன்னுத்துரை

ஈழத்துத் தமிழிலக்கிய வுலகில் பரந்த அளவில் செல்வாக் குச் செலுத்திய, விரல்விட்டு எண்ணக்கூடிய ஆளுமை களில் முன்னிற்பவர் எஸ். பொ. என்று சுருக்கமான பெயரால் தமிழ் இலக் கியவுலகம் முழுவதும் அறிந்த சண்முகம் பொன்னுத்துரை (04.06. 1932 - 26.11.2004) அவர்கள் இவர் ஈழத்துக்கு அப்பால் தமிழகத்திலும், தமிழர் புலம் பெயர் நாடுகளிலும் இலக்கியச் செல்வாக்கு மிக்கவராக விளங்கியவர். தமது 82 ஆண்டுகால வாழ்வியலில் 68 ஆண்டுகளாக இலக்கியத்துடன் பின்னிப் பிணைந்த வாழ்க்கையை நடத்தியவர். 14 வயதில் மெல்ல அரும்பாகிய அவரது எழுத்துப் பணி, இறக்கும் வரையில் பல் பரிமாணங்களுடனும், புதிய புதிய மாறுதல்களுடனும், கனதியான வீச்சுக்களுடனும் தொடர்ந் தது. தமிழ் என் ஊழியம்; தமிழ் என் தவம்; தமிழ் என் தரிசனம் என வாழ்ந்தவர் அவர்.

எஸ். பொன்னுத்துரை அவர்கள் சண்முகம், அம்மாக் கட்டி தம்பதியரின் மூத்தபிள்ளை. நல்லூரில் பிறந்தவர். குடும்பத்தில் அவருடன் சேர்த்து ஐந்து ஆண்களும் நான்கு பெண்களுமாக ஒன்பது பிள்ளைகள் சண்முகம் தம்பதியருக்கு. ஒரு காலத்தில் அடக்கு முறைக்கு ஆளாக்கப்பட்ட யாழ்ப்பாணச் சமுகத்தினர் எஸ் பொ. தாய்மாமன் மார்க்கண்டுவின் விருப்பப்படி யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் ஆரம்பக் கல்வியை ஆங்கில மொழி மூலம் கற்கத் தொடங்கியவர். 10 ஆம் வகுப்பு வரை (1947 ஆம் ஆண்டு வரையில்) அங்கு கல்வி கற்றார். அவரின் தாயாரின் சகோதரி மகனான தம்பையாவும் (பின்னர் பொலிஸ் சார்ஜன்ட் பதவியிலிருந்தவர்) அங்கே உயர் வகுப்பில் கற்றுக் கொண்டிருந்த துடன், மாணவர்கள் தேர்ச்சிக் கழகம் சார்பில் "ஞானோதயம்" என்னும் கையெழுத்துச் சஞ்சிகையையும் நடத்தி வந்தார். அதில், தனது 14 வது வயதில் முதன் முதல் எழுதியவர்தான் எஸ். பொ. பாடசாலைக் காலத்தில் கொம்யூனிஸ்ட் பத்திரிகையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேசாபிமானி"யை விற்றதால் பாடசாலையிலிருந்து நீக்கப்பட்ட அவரை, சி. சிவபாதசுந்தரம் அவர்கள் தாம் அதிபராயிருந்த பரமேஸ்வராக் கல்லூரியில் கற்பதற்கு இடமளித்தார். 1947 ஆம் ஆண்டு முதல் சில ஆண்டுகள் அங்கு கற்று எஸ். எஸ்.சி பரீட்சையில் தேறினார் எஸ். பொ. சிறு வயது முதல் வாசிப்பில் ஆர்வங்கொண்ட அவர் தமிழக எழுத்தாளர்களின் நூல்களையும், மேலைத்தேய நூல்களையும் வாசிப்பதில் அக்கறை காட்டி வந்தார். பரமேஸ்வராவில் படிப்பை முடித்தபின், சென்னை சென்று அங்கு தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரி, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்ஆகியவற்றில் கற்று, வரலாற்றை முதன்மைப் பாடமாகக் கொண்டு பீ. ஏ. பட்டதாரியானார். தமிழிலும், ஆங்கிலத்திலும் சம புலமையுடைய இவருக்கு இலத்தீன் மொழியும் பரிச்சயமானது. தரமான நூல்களை இனங்கண்டு வாசித்தறியவும், பொதுவுடைமைச் சிந்தனையை வளர்த்துக்கொள்ளவும் திரு. த. இராஜகோபால் என்பவர் தன்னை ஆற்றுப்படுத்தியதாக நன்றியுடன் எஸ். பொ. நினைவு கூர்ந்துள்ளார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாணக் கிளை உருவாக்கப்பட்ட போது எஸ். பொ. வும் அதில் பங்கெடுத்துக் கொண்டார். திரு. எம். சி. சுப்பிரமணியம் அவர்கள் எஸ். பொ. வின் மைத்துனர். 1950 ஆம் ஆண்டு இலக்கியச் சிந்தனையை அதிகரிக்கச் செய்யவும், மார்க்சீய நூல்களின் விற்பனையை அதிகரிக்கவும் திரு. மு. கார்த்திகேசன் அவர்களது முயற்சியால் யாழ்ப்பாணம் நகரில் கே. கே. எஸ். வீதியில் நிறுவப்பட்ட பாரதி புத்தகசாலையின் பொறுப்பும், சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் பிரசார ஏடான "உதயா" வின் ஆசிரியர் பொறுப்பும் எஸ். பொ. விடம் ஒப்படைக்கப்பட்டன.அத்துடன் கொம்யூனிஸ்ட் பிரச்சார மேடைகளிலும் அவரைப் பேச வைத்தனர். எம். சி. சுப்பிரமணியம், மு. கார்த்திகேசன் ஆகியோரது வழிகாட்டல்களால் அவர் இடதுசாரிச் சிந்தனாவாதியானார். கொடுமை கண்டு பொங்கும் குணமுடைய எஸ். பொ. சிலகாலம் ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரியில் ஆங்கில ஆசிரிய ராகப் பணியாற்றி, முரண்பாடுகளால் வேலையை விட்டு நீங்கியவர். டாக்டர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் அவர்கள் இவருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கினார். யாழ்ப்பாணத்தில் கடமையாற்றுவதில் பிரச்சினைகளை எதிர்கொண்டதால் மாற்றம் பெற்றுக் கம்பளை சென்று பணியாற்றினார். எஸ். பொ. வின் ஆசிரியத் தொழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், மலையகம், கொழும்பு, மட்டக்களப்பு எனச் சுழன்றடித்தது. 1956 ஆம் ஆண்டு மட்டக்களப்புக்குப் பணியின் நிமித்தம் சென்றவர், அங்கேயே தன் வாழ்க்கைத் துணையைத் தேடிக் கொண்டார். மட்டக்களப்பில் சிங்களவாடிப் பகுதியில் வசித்து வந்த வன்னிய சிங்கம் தம்பதியரின் மகளான ஈஸ்பரம் என்பவரை 1956 இல் திருமணம் செய்து கொண்டு மட்டக்களப்பு வாசியாக மாறி விட்டார். எஸ். பொ. தம்பதியருக்கு நான்கு பிள்ளைகள்.

ஆசிரியராக, அதிபராக, சேவைக்கால ஆலோசகராகப் பணியாற்றிய போதிலும், பதவியேற்றங்களில் தமக்குரிய கௌரவம் அளிக்கப்படாமை, பழிவாங்கல்கள் முதலான காரணங்களாலும், பொதுவுடமைச் சிந்தனையாளன் என்ற பார்வையினாலும், எஸ். பொ. பல சந்தர்ப்பங்களில் அவமானப் படுத்தப்பட்டதாகக் கூறியுள்ளார். இதனால் 27 வருட அரச ஆசிரியப் பணியிலிருந்து விலகி 1981 ஆம் ஆண்டு நைஜீரியாவுக்குச் சென்று ஆங்கில ஆசிரியராகவும், ஆங்கிலத்துறைத் தலைவராகவும் சிலவாண்டுகள் மதிப்புடன் பணியாற்றியபின், அங்கிருந்து அவுஸ்ரேலியாவுக்கு இடம் பெயர்ந்தார். அவுஸ்திரேலியாப் பிரசையான பின்னரும், தமிழகத்தில் தமது மறைந்த மகன் மித்ரவின் பெயரில் சென்னை கோடம் பாக்கத்தில் மித்ர நிறுவனமொன்றைத் தொடங்கிப் பதிப்பு முயற்சிகளில் ஈடுபட்டு வந்தார். தனது நூல்களுடன் ஈழத்து, தமிழகத்தின் எழுத்தாளர்களின் நூல்களையும் பதிப்பித்து வெளிவரச் செய்தார். அவரது நீண்ட கால நண்பரான "இளம்பிறை" ரகுமானும் அவருடைய முயற்சிக்குத் துணை நின்றதுடன், கோடம்பாக்கத்தில் தானும் ஒரு நிறுவனத்தை நடத்தி வருகின்றார். அடிக்கடி அவுஸ்திரேலியா, இந்தியா என ஓடிக் கொண்டிருந்த எஸ். பொ. சிறிது உடல் தளர்ந்த நிலையிலும் தமது எழுத்துப் பணி, பதிப்புப் பணியைத் தொடர்ந்த வண்ணமே இருந்தார். 26.11.2014 அன்று தமது 82 ஆவது அகவையில் அவுஸ்திரேலியாவில் சிட்னி நகரில் அவரது குரல் ஓய்ந்தது. எழுத்துப் பணி நிறைவெய்திற்று. எழுத்துப் போராளியாக, இலக்கியக் கலகக்காரராக, கடுமையான விமர்சகராக, தமிழக எழுத்தாளர்களே பாராட்டக் கூடிய தகைமை வாய்ந்தவராகத் தம்மை இலக்கியவுலகில் நிலை நிறுத்தியவர் எஸ். பொ. கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம், விமர்சனம், நாவல், பத்தியெழுத்து, மொழிபெயர்ப்பு, சொற்பொழிவு என்றவாறு பல்துறை அளாவிய பணிகளுக்கு உரித்தானவர். 1960 களின் ஆரம்பத்தில் இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் முரண்பட்டுக் கொண்டதால், 1964 இல் வ. அ. இராசரெத்தினம், அண்ணல் போன்றவர்களின் துணையோடு நற்போக்கு இயக்கத்தை ஆரம்பித்து, இலக்கியம் படைத்தவர்.

எஸ். பொ. 19555 ஆம் ஆண்டு வரை கவிதை, கட்டுரை, கதை எனப் பத்திரிகை, சஞ்சிகைகளில் எழுதி வந்த போதிலும் 1955 இற்குப் பிறகு தனது எழுத்துகளுக்கு அங்கீகாரம் கிடைத்தது என்கிறார். 1946 இல் "வீரகேசரி" யில் வெளியான "மலர்கள்" என்ற கவிதையே அச்சில் வெளிவந்த அவரது முதற் பிரசவமாகும்.

பச்சை இலைகள் நடுவினிலே
தலையை ஆட்டும் மல்லிகையே
அளிப்பாய் உனது அழகின்பம்
அணங்கின் முத்துப் பற்களைப் போல்

இது தான் எஸ். பொ. வின் முதற் கவிதை. "மார்க்சியம் மனிதகுலத்தின் ஈடேற்றத்துக்கும், பொருளியல் விமுக்திக்கும் ஏற்ற ஒரே வழி என்ற நம்பிக்கையை வரித்த அதே காலத்தில்தான் என் தமிழ் ஊழியம் முனைப்புடன் தொடங்கிற்று" என்பார் எஸ். பொ. அவருடைய முதலாவது நாவலான "தீ" 1952 இல் எழுதப்பட்டதாயினும், 1961 இல் தான் தமிழகத்தின் "சரஸ்வதி" சஞ்சிகை ஆசிரியரான விஜயபாஸ்கரனால் நூலாக வெளியிடப்பட்டது. தனியொருவனின் பாலியல் உணர்ச்சி களை வெளிக்காட்டும் அனுபவ தரிசனமான இந்நாவல் எஸ். பொ. வின் ஆளுமைக்கு முன்னுதாரணமாகக் காணப்பட்டாலும், பல்வேறு எதிரும் புதிருமான விமர்சனங்களுக்கும் இன்று வரை உட்பட்ட தாகும். "சுதந்திரன்" பத்திரிகையில் 1966 இல் தொடராக வந்து, பின்னர் 1971 இல் நூலுருப்பெற்ற "சடங்கு" நாவலானது யாழ்ப் பாணக் குடும்பமொன்றின் பாலியல் உணர்வுகளைச் சித்திரிக்கும் சிறந்த படைப்பாகும். கடந்த 50 ஆண்டுகளில் 160,000 பிரதிகள் விற்பனையானதெனக் கூறப்படுகிறது. எஸ். பொ. வின் நாவல்களில் மிகவும் தரம் வாய்ந்ததெனக் கருதப் படுகிறது. ஆசிரிய கலாசாலை போன்றவற்றின் பாடத்திட்டங்களிலும் சேர்க்கப்பட்டுள்ளது. செல்வா கனகநாயகம் அவர்களால் ஆங்கிலத்திலும் பிற்காலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. அறுபதுகளில் வரலாற்று நாவலான "மணி மகுடம்" (1962) "வீரகேசரியில்" வெளியானது. இது மூவரால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதப்பட்டது. 2007 இல் நூலாக்கப் பெற்றது. இதன் பின்னர் அதன் தொடர்ச்சியாக "யோகம்" நாவல் "வீரகேசரியில்" வந்ததாயினும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினதும், சிங்களப் பத்திரிகை ஒன்றினதும் எதிர்ப்பினால் இரு அத்தியாயங்களுடன் நிறுத்தப் பட்டது. "தேடல்" எனும் "வீரகேசரி" நாவலும் அண்மையில் தான் நூலுருப் பெற்றுள்ளது. எஸ் பொ. வுடன் இ. நாகராஜன், கனக செந்தில்நாதன், சு. வே, குறமகள் ஆகியோரிணைந்து எழுதி ஆறு வாரங்களாக வீரகேசரியில் வந்த குறுநாவல் "மத்தாப்பு" (1962) ஆகும். "சுவடு", "ஆகுதி", "அவா", "சதுரங்கம்" (1971) ஆகியன எஸ். பொ. வின் குறுநாவல்கள் ஆகும். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் எஸ். பொ. வின் "மாயினி" என்னும் அரசியல் நாவலானது 2007 இல் வெளிவந்தது. இலங்கையின் வரலாற்று, அரசியல் தலைவர்களும், அரசியல் பிரச்சினைகளும் இதில் முறையே கதாபாத்திரங் களாகவும், பாடுபொருள்களாகவும் விளங்குவதைக் காணலாம். வெளிநாட்டு எழுத்தாளர்களின் எழுத்துக்களில் ஈடுபாடு கொண்ட எஸ். பொ, 11 ஆபிரிக்க நாவல்களை மொழிபெயர்த்துத் தமிழுக்குத் தந்துள்ளார். அவற்றுள் செனகல் நாட்டு எழுத்தாளர் செம்பொன் ஒஸ்மான் என்பவருடைய "ஆண்மையற்ற" எனும் பொருளில் அமைந்த "ஹால" நாவலும் (1999), மற்றும் "மக்களின் மனிதன்", "தேம்பி அழாதே பாப்பா" போன்றவைகளும் அடங்கும். அடுத்ததாகப் பல ஆண்டுகளாக முயற்சி செய்து 2003 ஆம் ஆண்டு வெளியிட்ட "வரலாற்றில் வாழ்தல்" தன் வரலாற்றுப் படைப்பு 1924 பக்கங்களை யும், இரண்டு பாகங்களையும் கொண்டது. முதற் பாகத்தில் இரண்டு தொகுதிகளும் உப தலைப்புக்களும் அடங்கியுள்ளன. அதேபோன்று தான் இரண்டாம் பாகமும். ஓரளவுக்கு ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றுடன் அமைந்த எஸ். பொ. வின் அனுபவங்களாகவும், தமிழிலக்கியத் துறையின் காத்திரமான பங்களிப்பாகவும் அது விளங்கியுள்ளது.

எஸ். பொ. வின் மொழிநடை எவருக்குமே வாய்க்காதது. வடமொழிச் செல்வாக்கும், தேவைப்பட்டபோது பிற மொழிச் செல்வாக்கும் அதிலுண்டு. யாழ்ப்பாணப் பேச்சு வழக்கின் உன்னதம், மட்டக்களப்புப் பேச்சு வழக்கின் மேன்மை அவரது எழுத்துக்களில் காணப்படும். 1948 இல் "வீரகேசரி" யில்தான் அவரது முதற் சிறுகதைப் பிரவேசம் நிகழ்ந்தது. தொடர்ந்து 200 சிறுகதைகள் வரை எழுதியுள்ளார். முன்னணி ஏடுகள் யாவற்றிலும் அவை வந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது பல சிறுகதைகள் உயிர்ப்புடையவை. உரையாடலில் மனதை வசீகரப்படுத்துபவை, முதற் சிறுகதைத் தொகுப்பான "வீ" 53 சிறுகதைகளுடன் 1966 இல் வெளிவந்தது. தேர், வேலி, நிழல், மறு, விலை, மற்றொன்று, ஆண்மை, அணி, களரி, பாசக் கயிறு, யானைக் கதை, ஈரா (இஸ்லாமியக் கதை), பங்கம், நிலவில் நடந்தது, Adieq, பசி, மித்தி, பலிபீடம், முள், சில ஆநரத்தில் சில தோழர்கள் முதலான சிறந்த கதைகள் பலவுள. யாழ்ப்பாணப் பேச்சுவழக்கின் மெருகைக் காட்டும் "பங்கம்" சிறுகதையும், தலித் மக்கள் பற்றிய "களரி" சிறுகதையும் பெரிய அளவில் பேசப்படுவன. ஆனந்த போதினி, பிரசண்ட விகடன், கலைமகள், கல்கி, ரசிகன், சரஸ்வதி உட்படத் தமிழகத்தின் பிரபல சஞ்சிகைகளில் இவரது கதைகளும், ஏனைய எழுத்துக்களும் பிரசுரமாகியுள்ளன. "நனவிடை தோய்தல்" (2008) எனும் படைப்பு எஸ். பொ. வின் யாழ்ப்பாண அனுபவங்களின் தரிசனம். யாழ்ப்பாணப் பேச்சுமொழி வழக்கினை உணர்ச்சியும் உயிர்ப்பும், உன்னதமுமாகத் தந்துள்ளார். "காந்தியக் கதைகள்" (1965) "காந்தி தரிசனம்" (இந்திய இலக்கிய எழுத்தாளர்களுடன் சேர்ந்து - மொழிபெயர்ப்பு 1969), "இஸ்லாமும் தமிழும்" (1975), "நீலாவணன் : எஸ் பொ. நினைவுகள்", "கல்கி" சஞ்சிகையில் வெளியான உருவகக் கதைகள், "மரபு", "தீபன்" ஆகிய உருவகக் கதைகளின் தொகுப்பு - (19964), "பனியும் பனையும்" (புலம் பெயர்ந்தோர் சிறுகதைத் தொகுப்பு - 1994 - இணையாசிரியர்), "பனிக்குள் நெருப்பு" (புலம் பெயர்ந்தோர் இலக்கியம் - 2006), "தேடல் சில உண்மைகள்" (நீண்டதான இரு பேட்டிகள் 2001), "தீதும் நன்றும்" (2004 "ஞானம்" சஞ்சிகைப் பேட்டி) "உறவுகள்" தொகுப்புக் கதைகள், "?" (பந்த நூல் மூலமும் நச்சாதார்க்கு இனியன் உரையும் - 1972) "இனி ஒரு விதி செய்வோம்" (கட்டுரைத் தொகுதி - 2000) ஆகிய படைப்புக்கள் எஸ் பொ. என்ற மனிதரின் தனியான முயற்சியையும், இலக்கிய ஆளுமையையும் வெளிக் காட்டுவன.

எஸ். பொ. வின் எழுத்துக்கள் பலவும் பிற்காலத்தில் சேர்ந்ததொரு பெருந்தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. எஸ். பொ. சில வானொலி நாடகங்களை அறுபதுகளில் எழுதியவர்; "கலைக் கோலம்" நிகழ்ச்சியைச் சில காலம் வானொலியில் நடத்தியவர். முதல் முழக்கம் (அரசியல் நாடகம்), அந்த நாள், வலை, தலைக்கு மேலே கூண்டுக்கு வெளியே, முறுவல் முதலான இவரது நாடகங்கள் மட்டக்களப்பில் மேடையேறியுள்ளன. எஸ். பொ. வின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மட்டக்களப்பு மாப்பிள்ளை" நாடகம் வானொலியில் ஆறுமாதங்கள் ஒலிபரப்பப்பட்டது. சமகாலப் போராட்ட வரலாறு தழுவிய "ஈடு" நாடகத்தை அ. சந்திரதாசன் என்பவருடன் இணைந்தும் எஸ். பொ. எழுதியுள்ளார். ஏற்கெனவே எழுபதுகளில் "சிந்தாமணி" வாரவெளியீட்டில் துரை சண்முகம் என்ற புனைபெயரில் "எம், ஜி. ஆர் வருகின்றார்" என்ற கட்டுரைத் தொடரையும் எழுதினார். "வலை", "முறுவல்" போன்றவைகளும் இவரது நாடகங்களாகும்.

எஸ். பொ, தமிழகத்திலிருந்து வெளிவரும் "யுகமாயினி" மாத சஞ்சிகையின் நிறுவுனராவார். தமது காலத்தில் Wil Gelm Geiger ஆங்கிலத்தில் எழுதிய மகாவம்சக் கதையை "சிங்களவர் கதை" என்ற பெயரில் மொழி பெயர்க்கும் முயற்சியில் ஈடுபட்டார். இத்தகைய இலக்கிய, சமூகவாதியான எஸ். பொ. எப்பொழுதும் சர்ச்சைக்குரியவராக, இலக்கியப்புயலை உண்டாக்குபவராகத் திகழ்ந்தாராயினும், நேர்மையான இலக்கிய ஊழியத்தின் மூலம் தமிழ் மொழிக்கு ஊட்டங் கொடுத்தவர் எனலாம். அவரது இலக்கியப் பணிகள் பற்றிய ஆய்வு முயற்சிகள் தொடருகின்றன. அவர் உயிருடன் இருக்கும்போதே "எஸ். பொ. ஒரு பன்முகப் பார்வை" (2003) என்ற நூலானது இந்திரன், ப. தி. அரசு ஆகியோரது தொகுப்பில் 76 இலக்கியப் படைப்பாளிகளின் எண்ணங்களுடன் வெளியானது. "ஞானம்" சஞ்சிகை டிசம்பர் 2009 இதழை எஸ். பொ. சிறப்பு மலராகவும், "மகுடம்" சஞ்சிகை ஒக் - டிசம் 2015 - சன - 2016 வரையுள்ள கால இதழை எஸ். பொ. சிறப்பு மலராகவும் காத்திரமாக வெளியிட்டுள்ளன.

ஆ. தேர்

முகத்தார் என்றழைக்கப்படும் ஆறுமுகம் துயிலெழுவது ஒரு திருக்காட்சி. தலையணையையும் போர்வையையும் உட்திணித்துப் பாயைப் பக்குவமாகச் சுருட்டி வைப்பது ஒரு கலை. கொட்டாவியை மறைப் பொருளெதுவுமின்றி ஊளையிட்டு, கைகளை நீட்டி மடக்கி, உடலை உலுப்பிச் சோம்பலை முறித்தால், துயிலெழு படலத்தின் ஓரம்சம் நிறைவுறும். தலைமாட்டில் நெருப்புப் பெட்டியும், தாவடிப் புகையிலைச் சுத்தும் எப்பொழுதும் தயாராக இருக்கும். சுத்தை நேர்த்தியாகப் பற்ற வைத்தால், கால்கள் தம் இச்சையாகவே கொல்லைப் பக்கம் நடக்கத் தொடங்கும். எப்பொழுது தொடக்கம் வைகறை துயிலெழும் வழக்கத்தை வாலாயப் படுத்திக் கொண்டார் என்பது அவருக்கே ஞாபகமில்லாத சங்கதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபது ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து விட்டார். கடிகாரத்தைப் பார்க்காது, கடிகாரத்தின் விநாடி முள்ளைப் பார்க்கிலும் நுணுக்கமான நேரக் கணக்கில் இயங்குவது அவருடைய இரத்தத்திலேயே ஊறியிருக்கின்றது. கொல்லையிலே கழிவுக் கருமத்தை முடித்து, அடிக்கழுவி, கிணற்றடிக் கமுக மரத்திலே தொங்கும் குரும்பைப் பாதியிற் கிடக்கும் உமிக் கரியினாற் பற்களைச் சுத்தஞ் செய்து, திண்ணைக்கு மீழுவார். இறப்பில் தொங்கும் வெண் சங்கிலே கதிர்காமத்து விபூதி இருக்கும். வலக்கை விரல்களுக்குள் எடுத்து, "சிவ... சிவா" என்று உச்சரிக்கும் பொழுது, நல்லூர்க் கந்தனின் உதய காலப் பூசைமணி கேட்கும்.

இன்றும் "சிவ... சிவா" என்று விபூதி பூசும் பொழுது, உதய காலப் பூசைமணி கேட்கின்றது. கால ஓட்டத்திலே தரிக்காது நடைபெறும் நித்திய கருமங்கள்.

இன்று வருடப் பிறப்பு... - முதன் முதலில் இந்த எண்ணந் தான் முகத்தாருக்கு ஏற்படுகின்றது. எத்தனையோ வருடப் பிறப்புகள் வந்து போய்விட்டன. அவற்றுடன் எத்தனையோ வருடங்களும் ஓடி மறைந்து விட்டன. பார்வதிப்பிள்ளையைக் கல்யாணஞ் செய்த முதல் வருடம் வந்த வருடப் பிறப்பு. இராமேசுவர நேர்த்திக் கடனுக்குப் பிறகு சுப்பிரமணியனைப் பெற்று, முருகண்டியிலே மயிர்நீக்கக் கடன் செய்த மறுநாள் வந்த வருடப் பிறப்பு; சௌந்தரம் கல்யாணமாகி, மருமகனுடன் வந்த வருடப் பிறப்பு; தகப்பனுக்குத் தலைக் கொள்ளி வைத்து, கோடி கட்டாதே கழிந்த வருடப் பிறப்பு; பார்வதிப் பிள்ளை போய், நாளே காடாகிக் கிடந்த வருடப் பிறப்பு; - இப்படிப் பல கால ஓட்டம் அவர்தம் உழைப்பை விழுங்கி, உடலைச் சருகாக்கி விட்டது. முன்னர் போல சுறுசுறுப்பில்லை. நல்லெண்ணெயில் வெதுப்பிய கத்தரிக்காயுடன் மூன்று நீற்றுப் பெட்டி பிட்டுச் சாப்பிட்டும், நாலு மரவள்ளிக் கிழங்கைச் சுட்டுப் பச்சை மிளகாய் சகிதம் போட்டுக் கொண்டாற்றான் காலைப்பசி அடங்கும் என்பன இளைளுப் பருவ நினைவுகள். பிள்ளைகளைப் படிக்க வைத்து உத்தியோகக் காரராக்கியதினால் இரண்டு பாண் துண்டுகளைக் "கொறி"க்கும் பழக்கம் முகத்தார் வீட்டிலும் பரவி விட்டது. படுத்த படுக்கையாக வைக்கும் படியாக உடம்பிற்கு அப்படியொன்றுமில்லை. முதுமை உணர்வு வலுக்கின்றது. சிறிது வாதக் குணம் போன்ற எண்ணமும் மேலிடுகின்றது. திடீரெனக் குந்தியெழும்பச் சிரமப்படுகின்றார். இதனைப் பிள்ளைகள் அறிந்து கொள்ளாத வகையில் நடந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கின்றார். கடைக்குட்டி மகளைப் பற்றித்தான் கொஞ்சம் கவலை.

திண்ணையிற் குந்தி, கப்புடன் சாய்ந்து கொள்கின்றார்.

அவள் பொடிச்சிதான் பாவம். தாயத்தின்னியாப் போயிட்டுது. படிப்பை முடிச்சுப் போட்டு, மூலையிலே கிடந்து பெருமூச்சு விடுகுது. அவளை மேலை படிக்க வைக்கலாமெண்டு மூத்ததுகள் விரும்பினது தான். வேணுமெண்டால், உதுகளின்ரை பொம்பிளைப் பிள்ளையள் படிச்சு உத்தியோகம் பாக்கட்டும். இளையவனின்ரை பாடு பிழை யில்லை. ஒருமாதிரி ஒரு வேலையிலை கொழுவீட்டான். ஏதோ கொம்பனியிலதான் வேலையாம். ஆனா சம்பளம் புழையில்லை. மேலுக்கு நல்லா வரலாமெண்டு மூத்தவனும் மச்சானும் சொன் னாங்கள். அவன் கடைக்குட்டி எண்டு வீட்டோடை இருந்து சாப்பிட்டுப் பழகியவன். மூண்டு நாலு மாசம் அதுவுமில்லை. கயிற்றப்பட்டு வாழ்ந்தால் தானே, பேந்து பின்னடிக்குத் தங்கடை பாடுகளைத் தாங்களே பாக்குங்கள். நல்லூரான்ரை புண்ணியத் திலை எல்லாம் தங்டை சீவியப் பாடுகளைப் பாக்கக் கூடிய நிலைக்கு வந்துட்டுதுகள். என்ரை கெட்டித் தனம் என்ன இருக்கு? ஆண்டவன் அளந்த படி நடக்குது. விடியப்புறக் கோச்சியிலே மூத்தவன் வருவான். அவன் மறந்தாலும் அலுத்தாலும் அவன்ரை மனுஷி கமலா இஞ்ச வராம இருக்காள். என்னெட்டைக் கைவியளம் வாங்கிறதிலை அவளுக்கு அவளவு நம்பிக்கை.... ஓம்... அதுகளின்ரை மூத்ததுக்கும் - உந்தப் புது நாணயப் பேர் சட்டெண்டு மனசிலை வாறேல்லை... அவள்தான் அம்சதொனிக்குப் பத்து வயசுக்கு மேல இருக்க வேணும்... என்ன பத்து? பதினொண்டுக்கு மேலை. கடுக்கண்ணுற பருவம் - ஓ, இவ போயே நேற்றெண்டாப் போலை இருக்குது... ஆனா வருசம் அஞ்சாகுது. அவள் புண்ணியஞ் செய்தவள். எல்லாப் பாரத்தையும் என்ரை தலையிலை சுமத்திப் போட்டுப் போயிட்டாள்.

இடைவெட்டில் மனோகரன் நேற்று எழுதியிருந்த கடிதம் முகத்தாருடைய ஞாபகத்திற்கு வருகின்றது. வருடப் பிறப்பன்றே கொழும்புக்குத் திரும்பி விட வேண்டுமென்று எழுதியிருந்தான்.

அதுவும் சரிதான். எங்கடை வாகடங்கள் நெடுகச் சரிவருமே? இப்பதான் போய் வேலையிலை சேந்திருக்கிறான். லீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீவு எடுத்துப் பழுதாக்கப்படாது.

"அப்பனே முருகா"

வீட்டின் சின்ன அறைக் கதவு திறக்கப் படுகின்றது. கடைக்குட்டி பத்மாதான் வருகிறாள்.

என்னதான் பேரளவிலை பெரியபிள்ளை எண்டாலும், வீட்டிலே சின்னப்பிள்ளை தானே? சரியா, இவ பார்வதிப் பிள்ளையை உரிச்சு வைச்ச மாதிரி இருக்கிறாள். இவளை ஒப்பேத்திப் போட்டேனெண்டால், பேந்தென்ன? சிவனே எண்டு கண்ணை மூடலாம். இவன் மனோகரனை இவவின்ரை அண்ணனின்ரை பொடிச்சிக்குத்தான். பொடியங்களின்ரை காரியத்தை நிதானமாகச் சொல்லேலா.

முதற் காரியமாகப் பத்மா வீட்டு முற்றத்தைக் கூட்டி, சாணகத் தண்ணீர் தெளித்து முடிக்கின்றாள். வருடப் பிறப்பன்று விடியும் முன்னரே, அன்றைய வழமையான கடமைகளைச் செய்து முடிக்கும் வேட்கை. வருடப் பிறப்பன்று எல்லாக் காரியங்களையும் விக்கனமின்றி உரிய முறைப்படி நிறைவேற்றி விட்டால், வருடம் முழுவதும் அவ்வாறே அமையுமென்னும் நம்பிக்கையில் ஊறித் திளைத்த மனம். வருடப் பிறப்பன்று பழங்கறிகளுக்கு மதிப்பில்லை. கறிச்சட்டிகளை அடுக்களைக்கு வெளியே இடப்பக்கமாகவுள்ள செவ்விளநீர்க் கன்றடியிற் பரப்பி வைத்து, சாம்பல் தோய்த்தெடுக்கப் படும் பொச்சு மட்டையால் தேய்த்துக் கழுவத் தொடங்குகின்றாள். திண்ணையிலே குந்தியிருந்து, சிந்தனையிலாழ்ந்திருக்கும் தந்தையை அவள் கண்கள் கவனிக்கின்றன. மரவள்ளிக் கிழங்கு காய்ச்சிய சட்டியில் அடிப்பிடித்திருந்த பாகத்தைப் பொச்சு மட்டையால் நன்றாகச் சுரண்டிக் கொண்டே பேச்சுக் கொடுக்கின்றாள்.

"என்ன அப்பு... இண்டைக்குக் காலமைக் கோச்சியிலை மூத்தண்ணா வருவாரெல்லே?"

"ஓம் புள்ளை, சுப்பிரமணியம் வராமல் வருஷம் பிறக்குமே? என்னதான் இருந்தாலும் அவன் வருஷத்துக்கு வராமல் இருப்பானே?"

எப்பிடியும் அவன் வருவான். காதுப்பிடியிலை கமலா கூட்டியந்துடுவாள். கோச்சி இன்னும் நாவற்குழியைத் தாண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருக்காது. இப்ப நடக்கத் துவங்கினாலும், நேரத்தோடை ஸ்ரேசனுக்குப் போயிடலாம். ஆனா, அவனுக்கு உதொண்டும் புடிக்கிறேல்லை. "நான் எங்கடை வீட்டுக்கு வாறதுக்கு ஆரும் வந்து வழிகாட்டத் தேவையில்லை" எண்டு எத்தினை கோசு கோவிச்சது எனக்கல்லோ தெரியும்?...

"புள்ளை. தேத்தண்ணிக்கு உலை வைக்கல்லையே?"

"வைச்சிட்டன்"

"கொக்கா பரிமளம் இன்னும் எழும்பல்லையே?... உங்கடை அத்தாரும் வலுநேரஞ்செண்டுதான் வந்தவர். சரியாச் சாப்பிட்டிருக்கவும் மாட்டார்".

முகத்தாரின் இன்னொரு மகளான பரிமளத்தின் கணவனும் கொழும்பிலே தான் வேலை பார்க்கின்றான். பரிமளம் தைப் பொங்கலுக்குத் தந்தையின் வீட்டிற்கு வந்தவள், திரும்பிப் போகவில்லை. கணவன் சதாசிவம் நேற்றிரவு யாழ்தேவியிலேதான் திரும்பியிருக்கிறான்.

பாவம் அதுகளுக்கு ஆண்டவன் ஒண்டும் குறை வைக்கேல்லை. இதுக்கிடையிலை முப்பதினாயிரம் கொட்டி புதுமோடியிலை ஒரு வீடும் கட்டிப் போட்டுதுகள். கதைச்சாங்கத்திலை வைகாசி நாளுக்குத்தான் குடியேறுவினம் போலை கிடக்குது. பேந்தென்ன நெடுகிலும் குடியிருக்கப் போகினமோ? வாடகைக்குத் தான் விடுவினம். காரும் ஒண்டு வாங்கியிருக்கினமாம். அதை இன்னும் ஒருநாளும் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரல்லை. அதுகளின்ரை அன்புக்கும் அந்நியோன்யத்துக்கும் ஒரு குழந்தையைத்தான் ஆண்டவன் குடுக்கேல்லை. சாதகத்திலை பின்னடிச் சந்ததி விருத்தி எண்டுதான் இருக்கு. ஏழு வருஷத்துக்குப் புறகுதான் சதாசிவமும் தலைச்சனாப் பிறந்தவனாம். கொழும்பிலை பேர்போன டாக்குத்தரிட்டை எல்லாம் காட்டினவை. அதுகளுக்கு ஒரு குறையுமில்லை எண்டுதான் சொன்னவையாம்.

"கோப்பியை ஆர்றதுக்கிடையிலை குடியுங்கோ அப்பு" என்று பத்மா கோப்பி கிளாஸை நீட்டுகிறாள்.

"என்ன புள்ளை, முட்டைக் கோப்பி அடிச்சிருக்கிறாய். அத்தாரும் நிக்கிறார். இப்ப சுப்பிரமணியமும் வந்திடுவான். அவன்ரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசோகன் முட்டைக் கள்ளனல்லே?"

"இஞ்சை தாராளமா முட்டையள் இருக்குது. புட்டுக்கும் பொரிச்சும் வைக்கலாம்"

முகத்தார் கோப்பியைக் குடிக்கின்றார்.

"மெய்ய புள்ளை.. கொக்கா சௌந்தரம் இஞ்சை நேத்து வந்திட்டுப் போனவளல்லே? என்ன சொல்லிப்போட்டுப் போனவள்? மத்தியானச் சாப்பாட்டிற்கு வருவாளாமோ?"

"அத்தான் நேத்துத் தான் வந்தவராம். அவரின்ரை சகோதரி - அவைதான் பறங்கித் தெருவார் - மத்தியானச் சாப்பாட்டிற்கு வீட்டை வருவினமாம். பின்னேரம் போலைதான் வர வசதிப்படும் எண்டு சொன்னவ. எதுக்கும் கைவியளத்துக்கு முகுந்தனை அனுப்பி வைக்கிறாவாம்".

சௌந்தரம் பெரிய குடும்பக் காரிதான். இருந்தாலும் சீமாட்டி ஒரு சீதேவி. ஆறு பஞ்சானும் குஞ்சுகளையும் ஒரு குறையுமில்லாமல் படிப்பிக்கிறாள். ஏதோ ஆனை சேனையையே சீதனமாக் குடுத் தனான்? புருசன் தங்கராசா உண்மையிலை ஒரு தருமராசாதான். புள்ளையளின்ரை படிப்புக்காக குடும்பத்தை ஊரோடை விட்டிட்டுப் போயிட்டான். அங்கை கடைச் சாப்பாட்டோடை வயித்தை வாயைக் கட்டிச் சீவிக்கிறான். அங்கையும் இங்கையுமாக ரெண்டு செலவு களைச் சமாளிக்கிறதுக்கு கந்தோர் விட்டாப்புறகு வேற வேலை யளையும் பாக்கிறதாம். அந்தந்த வயசிலை ஓடியாடிப் பிரயாசைப் பட்டு உழைச்சு சம்பாரிக்கத்தான் வேணும். அதுக்கு ஏத்த சாப்பாடு வேண்டாமே? நல்ல வேளை... பெட்டையள் கீழ்க் கண்டுகள்தான். அந்த அளவிலை ஒரு ஆறுதல். வந்தவனுக்கு ரெண்டு வேளை தன்ர கையாலை சமைச்சுக் குடுக்காமல் இஞ்சை ஓடியாறாளோ? பொம்பளைப் புள்ளையள் கரைசேருமட்டுந்தான் எங்கடை".

"என்ரை மடிசஞ்சையும் சால்வையையும் எடுத்துத்தா புள்ளை".

"இவ்வளவு வெள்ளணத்தோடை கடைக்குப் போகப் போறியளே?"

"இல்லை, உந்த முச்சந்தி மட்டும் போயிட்டு வாறன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தச்சேலா ஏதேன் அரியது நரியது கிடைச்சால்...."

சாறனை உதறிக் கொண்டு, மடிசஞ்சை இடுப்பிலே சொருகி, ஏகாவடமிடச் சால்வையை எறிந்து படலையைக் கடக்கிறார்.

ரோஜா இதழ்ப் படுக்கையான மென்மைசேர் நினைவுகளில், ஏதோ ஒரு முள்ளின் உறுத்தல், கால்களின் இயக்கத்திலேயே படரும் நடை. சந்திக்கடைப் பசுபதியின் குரல் அவரைக் கடைப்பக்கம் ஆகர்ஷிக்கின்றது.

"எப்படி அண்ணா? வருஷம் எத்தினை மணிக்குப் பிக்குதாம்? கைவியளம், நாள்வேலைக்கு நேரம் எப்பிடிப் போட்டிருக்கு?" பத்துப் பேரிடம் கேட்டும் பசுபதிக்குப் பொச்சந் தீரவில்லை.

"பத்து இருபத்தெட்டுக்குத் தான் வருஷம் பிறக்குது. கைவியளத்துக்கு இண்டைக்கு நாள் போடேல்லை. ஆனா பொது நாள். உடனேயே கொடுத்தாலும் பாதகமில்லை".

முகத்தார் பஞ்சாங்கம் பார்த்து வைப்பதில் வெகு ஒழுங்கு. கடிகாரம் பார்க்கும் பழக்கமில்லாத அவர், எந்தச் சுபவேளையையும் விநாடி தப்பாமற் சொல்லுவார்.

"நான் ஒருநாளும் இந்த நேரம் காலம் பாத்துக் கொண்டிருக்கிறேல்ல. வருஷப் பிறப்பண்டைக்கே துவங்கீட்டால் சரிதானே? இல்லாட்டில் இழுவல். ரெண்டு மூண்டு நாளைக்கும் நாள் போட மாட்டாங்கள். அதுக்காகக் கடையைப் பூட்டி வைக்கிறதே?

"ஓமோம்... எல்லாம் நம்பிக்கையைப் பொறுத்துத்தான் பசுபதி" என்ற முகத்தார் "கோச்சி இன்னும் வரேல்லைப் போலை" என வேறு திசையிற் கதையைத் திருப்புகின்றார்.

"நேரமாயிட்டுது... வருஷத்துக்கு இஞ்சினை வாற சனக் கூட்டத்தோடை வாற ரயில் கொஞ்சம் முந்திப் பிந்தித்தான் வந்து சேரும். உங்கடை மற்ற மேன் குமாரசாமியும் இண்டைக்கு வாறார் போல இருக்குது. தம்பியும் இஞ்சாலைப் பக்கம் வந்து வெகு காலமாப் போச்சுது".

நெஞ்சிற் குத்திக் கொண்டிருந்த முள், ரோஜா இதழ்ப் படுக்கைக்குள் இனிதாக மறைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரசாமி வருவானென்பது முகத்தாருக்குத் தெரியாது. அவனை எந்த விசேடத்திற்கும் வீட்டில் யாருமே எதிர்பார்ப்பதில்லை. அவனுடைய போக்கு அப்படி இருப்பினும் குமாரசாமி வருவது தனக்குப் புதினம் என்பதை முகத்தார் வெளியே காட்டிக் கொள்ள வில்லை.

"இஞ்சை பாத்தியளே நோட்டீசை. முத்தமிழ் மன்றம் வருஷக் கொண்டாட்டம் நடத்துதாம். நாடகங்களும் நடத்துறாங்களாம். அதுகளுக்குத் தலைமை தாங்க குமாரசாமி வருகுதாம்".

பசுபதி நோட்டீசைக் கொடுக்கின்றான்.

இப்பொழுது முகத்தாருக்குக் கண் கொஞ்சம் வெள்ளெழுத்து. ஆனாலும் கொட்டை எழுத்தில் அச்சடிக்கப் பட்டுள்ள மகனுடைய பெயரைக் கண்டு பிடிக்கின்றார். மனம் மலர்கின்றது. முகபாவம் மாறாமல் நோட்டீசைத் திருப்பிக் கொடுக்கின்றார்.

"கண்ணும் புகைச்சலாய்க் கிடக்குது"

"நான் வாசிச்சுக் காட்டட்டே?"

"வேண்டாம் பசுபதி. நான் வாறன். மூத்தவன் போறான் போலை இருக்குது காரிலை"

மூத்தவனைச் சொல்லி விடைபெற்றுக் கொண்டாலும் முகத்தாருக்குக் குமாரசாமியைப் பற்றிய எண்ணமே மேலோங்கி இருக்கின்றது. குமாரசாமி முகத்தாரின் இரண்டாவது புத்திரன். சிறுவயதிலேயே படித்து முன்னுக்கு வந்து கொண்டிருந்தான்.

"அவன்ரை மூளைக்கு அவன் உப்புடியே இருக்க வேணும். சீமைப் படிப்பெல்லாம் முடிச்சு, ரெண்டு மூண்டு காரும், நாலைஞ்சு பங்களாவும் வைச்சல்லோ வாழவேணும். அந்தக் காலத்திலை கண்ணூறு பட்டுப் போறாப்போலை சொல்லுவானுகள். சுப்பிர மணியனைக் காட்டி சௌந்தரத்துக்கு மாப்பிள்ளை; குமாரசாமியைக் காட்டி பரிமளத்துக்கு மாப்பிள்ளை"

அதே நாக்குகள் திசை திருப்பி அவரை மல்லாத்திக் கிடத்திக் குறிசுட்ட பொழுது...

"பிஞ்சிலை பழுத்தவன். தமையன் இருக்கக் கூடியவனாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெண்டு குமர்கள் வீட்டுக்குள்ளை பெருமூச்சு விட்டுக் கொண்டி ருக்கக் கூடியதாக இவனுக்குக் கலியாணப் பைத்தியம். அதுவும் ஊர் பேர் தெரியாத வேதக் காரிச்சியாம்... தூ இவன்ரை படிப்பு நாக்கு வழிக்கத்தான் உதவும். இவன் தன்ரை படிப்பைத் தூக்கி எறிஞ்சுப் போட்டு கக்கூசு வாளியைத் தூக்கித் திரியட்டும்".

இத்தகைய வார்த்தைகள் மார்பு மயிரைப் பொசுக்கி இதயக் குலையை வெதுப்பி எடுத்த பொழுது... குறுக்கு இழைகளைத் தறி தலையிலே மின்சார வேகத்தில் இணைக்கின்றன. சின்னத் தலையிடிக்கும் காய்ச்சலுக்கும் கூடச் சீனிச் சுருளும் தேயிலைச் சரை யும் வெற்றிலைப் பாக்குப் பெட்டியும் "காவி"க் கொண்டு வந்தவர்கள், குமாரசாமியின் அவசரக் கலியாணத்தின் பின்னர், முகத்தார் வீட்டுப் படலையைத் திறக்க முகஞ்சுழித்துக் கூசினார்கள். அப்பொழுது சுப்பிரமணியம் எல்லாவற்றிற்கும் ஆறுதலாக இருந்துங்கூட, முகத்தார் இந்தப் பென்னம்பெரிய உலகத்திலே தன்னந் தனியாக விடப்பட்ட உணர்வுகளுடன் தத்தளித்தார்.

நானோ, அவனோ என்னத்தைச் செய்யிறது? எல்லாம் அளந்த படிதான் நடக்கும். அவன்தான் ஒரு புத்தியிலை செய்திட்டான். இனி, விரலை வெட்டியே எறியிறது? வெக்கம் ரோஷத்தை விட்டிட்டு ஒருக்காப் போய்அதுகளைப் பாத்தன். அவள் பொடிச்சி புழையில்லை. குணவதி எண்டு முகத்தைப் பாத்தோடனை சொல்லுவினம். இவன்ரை குணத்துக்கு அவளிலை தான் பச்சம் வைக்கவேணும். வேதக்காரிச்சி எண்டாப் போலை என்ன? சாதி குலம் பாத்துக் கூழ்ப்பானைக்கை விழுந்தவை எத்தனைபேர் இருக்கினம்? இவன் எண்டாப்போலை ஒழுங்காகக் கோயில் குளம் போறவனே? விபூதி பூசுறவனே? அவள் பொடிச்சியையும் கோயிலுக் குப் போகாமல் மறிச்சுப் போட்டானாம், அவனுக்கு உடம்பு மட்டும் பயித்தங்காய் போலை. ஆனா, உடும்பைப் போலைத்தான் பிடிவாதம். இவ பார்வதிப்பிள்ளை எண்டாப்போல குறைஞ்ச பிடிவாதக்காரி யோ?... அவன்ரை போக்கு ஒரு தனிப் போக்கு. இஞ்ச ஒருத்தருக்கும் விளங்குறேல்லை. "உங்கை யாழ்ப்பாணத்துக் கிடுகு வேலியளாலை சங்கையை மறைச்சுக் கொண்டு மனச்சாட்சிக்கு விரோதமாக நடித்துக் கொண்டே வாழ்பவருக்கு என்ரை போக்கு விளங்காது. என்ரை போக்கு எனக்கு விளங்கும்" எண்டு ஒருநாள் உங்கினை சத்தம் போட்டான். இதுகளிலையும் புழையில்லை. ஒட்டி நடக்காதவ னோடை என்ன சகவாசம் எண்டு விலகிக் கொண்டுதுகள். புறம்பு

Digitized by Arunachalam Foundation
noolaham.org | aavanaham.org

காட்டி நடக்கிற இவையளோடை எனக்கென்ன தொடர்சல் எண்டு அவனும் விலகிக் கொண்டான். அவன்ரை மூண்டு பிள்ளையளும் படிப்பிலை வலு விண்ணராம். எனக்கெண்டா அதுகளைப் பார்க்க ஆசைதான். இவவின்ரை ஆண்டுத் திவசத்துக்குத்தான் ஒரு பொடியனைக் கூட்டியந்தான். "அப்பப்பா" எண்டு அவன் வாழைப் பழத்தோடை என்ரை மடியையிட்டு இறங்கவும் மாட்டான். பொங்கல் - புதுவருஷம் - தீபாவளி எண்டு மூண்டு கொண்டாட்டம் வருகுது. ஒண்டுக்கும் வாறேல்லை. எப்பவாவது இருந்திட்டு ஒருநாள் தனியா வருவான். புள்ளையின்ரை சுகபலனைப் பற்றிச் சளப்புவான். குசினிக்கை போய் ஏதாவது போட்டுத் தின்னுவான். இங்கை கூட்டம், இஞ்சை கூட்டம் எண்டு சொல்லுவான். உடனையே போயிடுவான், பேந்து விசாரிச்சுப் பாத்தால் அண்டைய கோச்சியிலையே ஊருக்குத் திரும்பீட்டான் எண்டு தெரியவரும்... மெய்தான். அவன்ரை போக்கு இஞ்சை ஒருத்தருக்கும் விளங்கேல்லை. அதோடை அந்தப் போக்கிலை ஒருத்தருக்கும் விருப்பமுமில்லை. ஒரு மாதிரியான கோபத்தனல் இவையளின்ரை மனங்களிலை இருக்குது. என்ன இருந்தாலும் சகோதரபாசம் எண்ட சாம்பல் அதுகளை மூடி வச்சிருக்குது. வீட்டிலை எல்லாரும் அவனைக் குறையாத்தான் பேசுவினம். நான் மட்டுந்தான் அவன்ரை பக்கத்துலை பேசுறது. என்ன இருந்தாலும் அவனும் என்ரை மேன் தானே? இதுகள் இதுகளின்ரை போக்கு. அவன் அவன்ரை போக்கு. கையிலே இருக்கிற அஞ்சு விரலும் சமமே? ஒண்டுக்கொண்டு வித்தியாச மில்லையே? வீட்டுக்குள்ளும் உப்புடித்தான். ஊருக்குள்ளை அவனுக்குத் தானே பேரும் நடப்பும்? அவன் இவ்வளவு உத்தவரங் கெட்டவனெண்டால் ஊரிலை உப்புடிப் பேர் இருக்குமே? இது களுக்குப் படிச்சும் புத்தியில்லை. இவங்களைக் குடும்பத்துக்காகப் பெத்தன். குடும்பம் தேர் போலை நடக்குது. அவனை ஊருக்காகப் பெத்தன். அவன் றோட்டளக்கிறான் எண்டு வச்சுக் கொள்ளுவம். அதுக்காக நான் அவனை மெச்சிக் கதைக்கிறதும் இதுகளுக்குச் சிலநேரம் புடிக்கிறேல்லை. ஓரவஞ்சக மனுஷன் எண்டுகூட நினைக்குதுகள். "நீங்கள் என்னத்தைத்தான் சொன்னாலும், அவனும் என்ரை புள்ளைதான்" எண்டு சொல்லுவன். இதுகளும் பேக் கூத்துத்தான் ஆடுகிறது. ஏதோ நான் அவன்தான் என்ரை புள்ளை எண்டு சொல்லிப் போட்டதைப் போலை. தாய் மனம் பித்துத்தான், இவவும் இப்ப இல்லை. என்ரை மனமும் பித்துத்தான். இது ஒண்டை மட்டும் நான் குமாரசாமியைப் பற்றி மறக்க மாட்டன். இவையள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரத்தைச் சொல்லட்டும். சுப்பிரமணியமா இருக்கட் டும்;சவுந்தரம் பரிமளமா இருக்கட்டும்; மனோகரன் பத்மாவாக இருக்கட்டும், முகத்தார் ஆறுமுகத்தின்ரை புள்ளையளெண்டுதான் ஊர்த் தேசத்திலை தெரியும்... ஏன், சதாசிவம் தங்கராசா எண்டாப் போலை என்ன? என்ரை மருமக்கள் எண்டாத்தான் நல்ல விளப்பமாத் தெரியும். ஆனா, கடைத் தெருவிலை எத்தினைபேருக்கு என்னைக் குமாரசாமியின்ரை அப்பனெண்டுதான் தெரியுமெண்டு இவையளுக் குத் தெரியுமே?அண்டைக்குப் பஸ்ஸிலை நான் தெல்லிப்பழைக்குப் போகேக்கிள்ளை ஒரு பொடியன் "நீங்க குமாரசாமியின்ரை தகப் பனல்லோ?" எண்டு கேட்டுப்போட்டு, தான் குந்தியிருந்த இடத்தை எனக்குத் தாறான். அந்தப் பொடியனும் பெரிய படிப்புத் தானாக்கும்.

"என்ன முகத்தார்? என்ன பொடியள் எல்லாம் வந்திட் டினமோ?" ஐயம்பிள்ளை தன்னுடைய படலையில் நின்றபடி குரல் கொடுக்கிறார்.

"கோச்சி அப்பவே வந்திட்டுது. வந்திருக்க வேணும்."

"சுப்பிரமணியம் வராமல் நிற்கமாட்டான். மனோகரனும் வாறானாமோ?"

"ஓம். கடதாசி போட்டிருந்தான்".

"படலையிலை நிண்டு கதைக்கிறியள்? கடைக்குப் போற துக்கு முந்திக் கொஞ்சம் பாவிச்சிட்டுப் போகலாமெண்டால்... என்ரை மனுஷியைத் தெரியாதே? ஆற்றையேன் சாட்டிலை தான்... உள்ளுக்கை வாருங்கோவன்."

"இப்ப வாதக் குணமாவும் இருக்குது. ஒத்துக் கொள்ளுது மில்லை."

"இது நித்தமே முகத்தார்? ஒரு வருஷம் பெருநாளுக்குத் தானே? உங்களைத் தூரத்திலை கண்டோடனையே, உங்களோடை தான் வருஷத்தைத் துவங்க வேணுமெண்டு ஆசை வந்துட்டுது".

"ஏன்தான் உன்ரை ஆசையையும் கெடுப்பான்?"

முகத்தார் ஐயம்பிள்ளையுடன் கொஞ்சம் முஸ்பாத்தி பண்ணி விட்டு, அவருடனேயே கடைக்குச் சென்று, மக்கள் - பேரப் பிள்ளைகள் ஆகிய சகலருக்கும் இதமாகக் கறி - காய்கறி - பழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைகள் வாங்கிக் கொண்டு வீடு திரும்பும்பொழுது பத்து மணியாகி விட்டது.

வீடு கலகலப்பு நிறைந்து காணப்படுகின்றது. சுப்பிர மணியமும் குடும்பமும் வந்தால் சத்தத்திற்குக் குறைவேயில்லை. பிள்ளைகள் புத்தாடை புனைந்து காணப்படுகின்றார்கள்.

ஐயம்பிள்ளையோடை மினக்கட்டு நான்தான் நேரம் பிந்தீட் டன் போலை கிடக்குது. சுப்பிரமணியம் எல்லாப் புள்ளைகளுக்கும் ஒரு நிறத்திலைதான் உடுப்புகள் வாங்கியிருக்கிறான். இஞ்சை பாருங்கோவன் இவன் கடைக்குட்டி தன்ரை சட்டைதான் திற மெண்டு சண்டை பிடிக்கிறதை... ஓ, பரிமளமும் சதாசிவமும் கூட முழுகீட்டினம். உந்த உடுப்புகள் சரியான விலையாம். வருஷப் பிறப்புக்கு நெடுகிலும் உவை உப்படித்தான் எடுக்கிறவை. கோயி லுக்குப் போகப் புறப்பட்டு நிற்கினை போலை. நல்லாராளே இதுக ளுக்கு ஒரு புள்ளைப் பாக்கியத்தைக் குடு. சே, கண்ணூறு பட்டிடப் பிடாது. பத்மாவுக்கு உந்தச் சீலை வடிவாத்தான் கிடக்குது. சாமத்திய வீட்டுக்குள்ளை சீலையோடை பாத்ததுக்கு இப்பதான் சந்தனக் கலரிலை தனக்கொரு சீலை வாங்கியர வேண்டும் எண்டு மனோகரனுக்கு எழுதினவள். அவன்தான் வாங்கியந்திருக்க வேணும். இன்னும் சுப்பிரமணியமும் கமலாவும் முழுகி முடிக் கேல்லை போலை. உங்கை கிணத்தடியிலை நிக்கினம்..

"புள்ளை பத்மா! இந்தக் காய்கறி சாமான்களைக் கொண்டு போய்க் குசுனீக்கை வை."

"அப்பு காலைச்சாப்பாடும் இல்லாமல் கடைக்குப் போனவர். நீங்கள் வருவியளெண்டு முட்டையும் பொரிச்சுக் காத்திருந்தது தான் மிச்சம்."

"அவன் ஐயம்பிள்ளை விடேல்லை. அவனோடை அப்படியே கடைக்குப் போனதும் நல்லதாப் போச்சுது. சவ்வு கிவ்வு இல்லாத நல்ல இறைச்சி கிடைச்சுது. சின்னதுகள் உறைப்புத் தின்னாயினம். பால்கறி வைக்க ஈரல் கிடைச்சுது. கொத்தார் இறைச்சி வகை தின்னாதவர். நல்லொரு பாரை கிடைச்சுது. மிச்சம் பொரியலுக்கும் உதவும். கைவியளத்தை முடிச்சிட்டுப் போயிருந்தால் கடையிலை ஒரு மண்ணும் வாங்கியிருக்கேலாது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்புவுக்கு இந்த வருஷப் பிறப்பு நல்ல முழுவியளத்தோடை துவங்கியிருக்குது" என்று சொல்லிக் கொண்டே, பெரிய உமலைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு அடுக்களைப் பக்கம் பத்மா போகின்றாள்.

"இந்த வேட்டிதான் பெத்தப்பாவுக்கு" என்று கூறிக் கொண்டே பீஸ் வேட்டி ஒன்றை ரீப்போவில் அசோகன் வைக்கின்றான். "சித்தப்பாவும் அப்பாவுக்குக் கரை போட்ட வேட்டி ஒண்டு வாங்கியந்தவர்" என்பதையும் அறிவிக்கின்றான். எவ்வளவோ தடுத்தும் பரிமளம் கேட்கவில்லை. அவள் நேற்றே "பரமாஸ்" சோடி சோடி ஒன்று எடுத்துக் கொடுத்து விட்டாள். தான் முன்னர் கொண்டு வந்த வேட்டியுடன் பெத்தப்பாவின் மற்றைய உடுப்புகளையுங் கொண்டு வந்து அடுக்கி "டோய், பெத்தப்பாவுக்கு இந்த முறை நாலு புதுவேட்டி" என்று உரக்கக் கத்தினான்.

"மூன்று வேட்டிதானே ? ஒன்று சால்வையல்லோ?" என்று மூலையில் நின்று மூத்தவள் ஹம்ஸதொனி திருத்துகின்றாள்.

"வீண் சிலவு. எவ்வளவு சொன்னாலும் கேட்க மாட்டுதுகள். அதுகளுக்கு ஏதோ செய்ய வேணுமெண்ட ஆசை. வீட்டோடை நிக்கேக்கிள்ளை உதெல்லாத்தையும் மனோகரன்தான் உடுத்துக் கிழிப்பான். இப்ப அவருமெல்லோ எடுத்துத் தரத் துவங்கியிருக்கிறார். இதுகளை இனி உடுத்துக் கிழிக்கிறதுக்கு சௌந்தரத்தின்ரை மூத்தவன் முகுந்தன்தான் இருக்கின்றான். அவனும் இந்த மார்கழியிலை சீனியர் சோதினை எடுக்கப் போறானாக்கும்."

ஈரச் சீலையுடன் கமலா பெரிய அறைக்குள் ஓடுகிறாள். முற்றத்தில் கம்பிக் கொடிக்குப் பக்கத்தில் நின்று தலையைத் துவட்டிக் கொண்டிருந்த சுப்பிரமணியம், "மருத்துநீர் அந்தா கிணத்துக் கட்டிலை இருக்குது போய்க் குளிச்சிட்டு வாருங்கோ அப்பு" என்கிறான்.

"என்ன அவசரம்? மனோகரனும் முழுகீட்டு விடட்டன். எங்கை அவனைக் காணேல்லை?"

"உதுகள் ஏதோ ஐஸ்கிறீம் வேணும் சீனிச் சித்தப்பா எண்டதுகள். அவன் வாங்கப் போயிட்டான் போலை கிடக்குது. அவன் ஆறுதலாகக் குளிக்கட்டும். நீங்கள் முதலிலை குளியங்கோ;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருஷம் பிறக்கப் போகுது, கும்பம் வைக்கவல்லோ வேணும்?"

"ஓமோம்". முகத்தார் கிணற்றடிக்குப் போகின்றார். கட்டியிருக்குஞ் சாறத்துடன் குளிப்பது அவருடைய வழக்கம். "சனி நீராடு" என்று வாரத்திற்கு ஒருமுறை; மூன்று பெருநாள் நீராட்டம் பிரத்தியேகமாக வந்து சேரும். தலையிலே மருத்து நீரை வைத்து நன்றாகத் தப்புகின்றார்.

"சித்தப்பா, சித்தப்பா" என்று அசோகன் ஆர்ப்பரிக்கின்றான்.

குமாரசாமி வந்திட்டானோ?

ஆசையுடன் எட்டிப் பார்க்கின்றார் தொட்டாச்சுருங்கி இலைகள் கூம்புகின்றன.

இல்லை அவன் மனோகரன்தான். மூண்டு நாலு மாசத்திலை கொஞ்சம் வளர்ந்திருக்கான். சொந்தமாகச் சம்பாரிக்கத் துவங்கீட்டால் கொஞ்சம் பூரிப்புத்தானே? நல்ல தாராளமாகச் சிலவழிக்கிறார். ஓம், போய்க் கொஞ்ச மாசந்தானே? இன்னும் கொழும்புப் பழக்கங்கள் நல்லாப் புடிபடேல்லைப் போலை. குமாரசாமியை இன்னும் காணேல்லை. சிலவேளை, நல்லநாளும் பெருநாளுமா எல்லாரும் கொண்டாட்டத்திலை நிக்கேக்கிள்ளை நான் ஏன் குழப்புவான் எண்டுபோட்டு நிண்டிடுவானோ?"

இந்த எண்ணம் ஏற்பட, காலையில் இலேசாக உறுத்திய நெஞ்சில் முள் ஆழமாக இறங்குகின்றது. வலி தாங்க மாட்டாது அவஸ்தைப் படுகின்றார். அவஸ்தைப் பரிகார எத்தனத்தில் பெருமூச்சொன்று நீள்கின்றது. இயந்திர வேகத்தில் கைகள் துலாக்கயிற்றை மேலும் கீழுமாக இழுக்க வாளி வாளியாகத் தண்ணீர் தலையிலே கொட்டப்படுகின்றது.

"நானும் நல்ல வேளைக்குத் தான் வந்திருக்கன். எல்லாரும் மருத்து நீராட்டம் முடித்தாயிற்றுப் போலை... பத்மா இதைப் புள்ளையளுக்குப் பிரிச்சுக் குடு."

இது நிச்சயமாகக் குமாரசாமியின்ரை குரல்தான். உந்த வெண்கலக்கடை யானையின்ரை குரல் அவன்ரை தான்.

தண்ணீர் காதுக்குள் புகுந்து, தன் மனக்குகை நினைவுகளுக்கு உருவங் கொடுத்தது. மாரீச ஜாலம் நடைபெறுகின்றதோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூட ஒரு கணம் நினைக்கின்றார். இருந்தாலும் ஆசை இழுக்கின்றது.

"அப்பு எங்கை?"

"அவர் குளிக்கிறார் - அப்பு! சின்னண்ணா வந்திருக்கிறார்" என்று பத்மா குரல் வைக்கின்றாள்.

துளிர்க்கும் நம்பிக்கை, பச்சையின் பசுமையை உறிஞ்ச மறைப்புத் தட்டிக்கு மேலால் எட்டிப் பார்கின்றார்.

முற்றத்தில் குமாரசாமி சிரித்தபடி நிற்கின்றான். அவன் பக்கத்தில் பத்மா நின்று, அவன் கொடுத்த "சரை"யிலிருந்த இஞ்சி விசுக்கோத்துகளைப் பங்கிடுகின்றாள். சுப்பிரமணியத்தின் கடைக் குட்டி, வேற்று முகத்தைக் கண்டு பயந்த மாதிரி, திரையின் பின்னால் மறைவதை அவன் கவனிக்கத் தவறவில்லை. அவனுடைய பயத்தைக் கவனித்த குமாரசாமி, "நானுஞ் சித்தப்பா தான்... ஒருத்தருஞ் சொல்லித் தரேல்லையா?" என்று சொல்லி மீண்டுஞ் சிரிக்கின்றான்.

அதே சிரிப்பு. இவன்ரை சிரிப்பு ஒருநாளும் மாறாது. என்னைப் போலை அந்தச் சுருட்டை மயிர் முன் குடும்பி வைச்சது போலை நிக்கிறதும் மாறாது. என்னதான் மனக் கோவங்கள் இருந்தாலும், அவன்ரை அந்தச் சிரிப்பைக் கண்டோடனை ஒருத்தருக்கும் அவனை ஏசப் பேச மனம் வராது. ஆரையும் மருட்டும்.

"என்ன வாறனெண்டு அறிவிக்க ஒரு போஸ்ட் கார்டு கிடைக்காமல் போச்சுது உனக்கு" என்று முகத்தார் கடிந்து கொள்ளுகிறார்.

"எல்லாம் அவசரந்தான், அப்பு. போஸ்ட் காட் என்னத்துக்கு? நான் தான் நேரிலை வந்துட்டனே. அது கிடக்க, பத்மா வருஷத்துக்குச் சீலை கட்டியிருக்கிறாள்" குமாரசாமி பத்மாவை அந்தக் கோலத்தில் அப்பொழுது தான் முதல் முறையாகப் பார்க்கின்றான்.

"ஓம். இவன் மனோகரன் தன்ரை முதல் சம்பளத்திலை எடுத்துக் கொண்டாந்து குடுத்திருக்கிறான்" வாளிக் கயிற்றைப் பிடித்துக் கொண்டே முகத்தார் சம்பாஷணையில் ஈடுபடுகின்றார்.

"அத்தான் எங்கை பத்மா? காரிலையே வந்தவர்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை. ராத்திரி உத்தரதேவியிலை வந்து சேர்ந்தவர். இப்ப அக்காவோடை கோயிலுக்குப் போயிட்டார்" என்று கூறிக் கொண்டே பத்மா அடுக்களைப் பக்கம் போகின்றாள்.

"புதுக் காரொண்டு எடுத்ததெண்டு கேள்விப்பட்டன். என்ன சாதிக் காராம்?"

"எனக்கென்னடா தெரியும்?"

"காரின்ரை விலையளும் இப்ப என்னமாதிரி ஏறிக்கிடக்கு தெரியுமே? உங்காலை வீட்டுப் பொடியன் அவன்தான் ரத்தின கோபால் காரை வித்துப் போட்டு ஸ்கூட்டர் வாங்கியிருக்கிறானாம்".

"காரை விக்கேல்லையாம் இசுக்கூட்டரும் வாங்கினவனாம்."

"இப்ப ஏதும் சாமான் கீமான் வாங்க முடியுமே? அதுதான் வித்துப் போட்டான். அவன்ரை காரை ராசாத் தோட்ட சங்கரப் பிள்ளை தான் வாங்கினதாம். அவன்ரை கல்யாணப் பேச்சுக்கால் எப்பிடியாம்?"

"அது குழம்பிப்போய்க கிடக்குதாம்."

"நீங்கள் மானிப்பாய்ப் பகுதியிலை இருந்து வந்த சம்பந் தத்தையல்லோ சொல்லுறியள்? இது இங்காலை கோப்பாய்ப் பகுதியிலையாம்."

"அதைப்பற்றி நான் கேள்விப் படேல்லை."

தூணுடன் சாய்ந்து கொண்டு நிற்கும் மனோகரனைப் பார்த்து "தம்பி, உங்கடை கொம்பனியை அரசாங்கம் கெதியா எடுக்கப் போகுது போலை, தென் யூ வில் ஓல்சோ பிக்கம் ஏ கவுண்மென்ட் சேவண்ட்" என்கிறான்.

"அப்பிடி நடக்காது.."

"நீ இருந்து பாரன் தம்பி. அப்பு! தங்கராசா அத்தானுக்கு அடுத்த மாசம் உத்தியோக உயர்வு கிடைக்கப் போகுதாம் தெரியுமே?"

"உதுகள் எனக்குத் தெரியுமே?"

"முந்தநாள் அவரை ஸ்டேசனிலை கொண்டாந்து விடேக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிள்ளைதான் அப்பிடி ஒரு புரமோசன் கிடைச்சாலும் கிடைக்கும் எண்டு அத்தான் சொன்னவர்" மனோகரன் தனக்குத் தெரிந்த சமாச்சாரத்தைச் சொல்லுகிறான்.

"இவன் ஊருக்கு வாறதோ அத்தி பூத்தாப்போலை. ஆனா, ஊரிலை நடக்கிற ஒண்டையும் விடாமல் அறிஞ்சு வச்சிருக்கான்."

முகத்தார் அவசரமாக மூன்று நான்கு "பட்டை"களை ஊற்றி, "முழு"க்கைச் சுபத்துடன் முடிக்கிறார்.

வந்துகொண்டே, ஆனைக் கோட்டை வைத்தியரின்ரை பொடிச்சியைப் பற்றிக் கேள்விப் பட்டனீயே?" என்கிறார்.

"ஓமோம். நான் கேள்விப்பட்டன். சாதி ஒரு மாதிரி எண்டு தான் இவை கூத்தாடினவை. அவன் நல்ல பொடியன். கெல கதரையிலை படிப்பிக்கிறான்."

"ஓ. என்னவோ உப்பிடித்தான் ஒரு பேர் சொல்லுகினம்."

தலையைத் துவட்டும் பொழுது, எந்தப் புத்தாடையை அணிவது என்னும் யோசனை அவரை ஆக்கிரமித்துக் கொள் கின்றது. சிறுபிள்ளைத் தனமன்று. பெரிய பிள்ளைகளுக்குள் தன்னுடைய செயலால் மனத்தாங்கல் ஏற்படக் கூடாது என்பதில் அக்கறை.

அதற்கிடையில், "நீங்கள் ஏன் ஈரத்தோடை நிக்கிறியள்? இதைக் கட்டுங்கோ. நீங்கள் விரும்பிக் கட்டுவியளே, நீலக் கட்டம் போட்ட சாறன்" என்றபடி கையில் வைத்திருந்த ஒரு பார்சலை நீட்டுகின்றான்.

குசேலனின் அவல் முடிச்சை அவிழ்த்து உண்ட கண்ணனின் உள்ளத்தில் கூட இவ்வளவு மகிழ்ச்சி தோன்றியிருக்க முடியாது.

விரித்து உடுக்கின்றார்.

சலனமெதுவுமின்றி மற்றவர்களைப் பார்க்கின்றார்.

மௌனம்.

"அப்புவுக்கு நல்லாத்தான் இருக்குது." வெளியே வந்த பத்மா மௌனத்தைக் கலைக்கின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ நிண்ட ஊராலை வந்தனீயே? இரன்; கும்பம் வைக்கப் போகிறன். பொது நாளா இருக்கிறதாலை உடனையே கைவியளம் குடுக்கலாமெண்டிருக்கிறன்."

"இல்லை அப்பு. எனக்கு உதுகளிலை அவ்வளவு நம்பிக்கை இல்லை எண்டது தெரியுந்தானே? அதோடை விடியக் காலமையே கார்க் காரனிட்டைக் கைவியளம் வாங்கீட்டன்."

முகத்தாரின் முகத்தில் மூட்டம்.

"இவன்தான் புது நாணயமாப் புறந்தவன். ஒண்டிலும் நம்பிக்கை இல்லாதவன். டேய்! புத்தகப் படிப்பும், நீ எழுதுற கதையளும் நாடகங்களும் படிப்பில்லை. ஆவது அறிவது அறிவல்ல; வீட்டிலைவேவது அறிவது தான் அறிவு. ஊரோடு ஒத்து வாழுறது தான் படிப்பு" இவ்வளவு நேரமும் அமைதியாக இருந்த சுப்பிரமணியம் சொல்லுகிறான்.

"அதுக்கில்லை அண்ணை. நான் அஞ்சாறு பேரோடை வந்திருக்கிறன். ஊராங்கடை காசிலை அவங்களை இவ்வளவு தூரம் கூட்டியந்தனான். இந்த ஊருக்கு அவங்கள் புதுசு. அவங்களை ஹோட்டலிலை விட்டிட்டு நான் இஞ்சை மினக்கடுது அவ்வளவு வடிவில்லை எண்டுதான் சொல்ல வந்தனான். அப்ப நான் வாறன்" பதிலுக்குக் காத்திருக்காமல் திருப்புகின்றான்.

என்ன இருந்தாலும் மரியாதை தப்பாது. ஆர் சொன்னாலும் தலையைக் கவண்டு கொண்டுதான் கேப்பான். மரியாதைக்காகத் தான். ஆனா, தான் நினைச்சதைத் தான் செய்வான்.

"சின்னண்ணை.. இஞ்ச கோப்பி கொண்டந்துட்டன். குடியுங் கோவன்..." என்று பத்மா கோப்பி கிளாஸை நீட்டுகிறாள். பதிலொன்றும் பேசாமல் அதை வாங்கிக் குடித்துவிட்டு, கிளாஸைத் திருப்பிக் கொடுக்கின்றான்.

முற்றத்து மாங்கன்றில், கும்பத்துக்கு மாவிலைகள் ஒடித்துக் கொண்டே, "அப்ப மத்தியானச் சாப்பாட்டுக் கெண்டாலும் வாறியோ?" என்று முகத்தார் கேட்கின்றார். நப்பாசையின் உள் முடிச்சு அவ்வினாவிற் காளத்திரியாட்டமிடுகின்றது.

"அவன்தானே அப்ப சொல்லிப் போட்டான். கூட்டாளியளை விட்டுப் போட்டு வரேலாது எண்டு" என்று சுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுகின்றான். வழக்கத்தில் மூத்தவன் அதிகம் பேசுவதில்லை.

"அப்ப வாறன்... எல்லாருக்கும் வாறன்" என்று கூறி அவசரமாகப் படலையைத் திறக்கும் குமாரசாமி, ஒரு கணந் தரித்து, "அப்பு, இண்டைக்கு எங்கடை நாடகம் பின்னேரம் முத்தவெளியிலை நடக்கும். நல்லா இருக்கும். நேரம் இருந்தா வாருங்கோவன்" என்று குரல் கொடுத்துச் செல்லுகிறான்.

கும்பம் வைத்துக் கைவிசேடம் பரிமாறப் பட்டாகிவிட்டது. விறாந்தையிலுள்ள செற்றிக் கதிரைகளில் அமர்ந்து சுப்பிரமணியமும், சதாசிவமும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பேச்சு சதாசிவம் புதிதாக வாங்கியுள்ள காரைச் சுற்றிச் சுழல்கின்றது. அவர்களுக்கச் சற்றுத் தூரத்தில், தூணிலே சாய்ந்தவாறு சௌந்தரத்தின் சார்பாக கைவிசேட வைபவத்திற் கலந்துகொண்ட முகுந்தன் நிற்கிறான்.

அவன் மூத்த மாமனுக்கு நல்ல மரியாதை.

கமலா. பரிமளம், பத்மா ஆகிய மூவரும் சமையல் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றார்கள். ஹம்சதொனியும் பெரியமனுஷி மாதிரிக் கூடமாட வேலை செய்கின்றாள். குத்திப் பலகையில் இருந்துகொண்டு, அவர்களுக்கு மனோகரன் தன்னுடைய கொழும்பு அநுபவங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறான்.

கறித் தேங்காய்களையெல்லாம் போர்த் தேங்காய்களாக்கி முற்றத்திலே போர்த் தேங்காயடி நடைபெறுகின்றது. யாருடன் என்ன விளையாட்டில் ஈடுபட்டிருந்தாலும், அசோகன் "குழப்"பாமல், இருக்க மாட்டான். கல்லிலே பட்டுத்தான் தன்னுடைய "கையான்" உடைந்த தாக அவன் சண்டை பிடிக்கின்றான்.

புதுவருடத்துக்கு ஏனைய மக்களின் அன்பளிப்பாகக் கிடைத்த புத்தாடைகள் ரீப்போவில் இருக்கின்றன. அவற்றை முகத்தாரின் கண்கள் மேய்கின்றன.

"புள்ளை பத்மா"

அவள் கைவேலைகளை விட்டுவிட்டு வருகின்றாள்.

உந்த உடுப்புகளை எடுத்துவை புள்ளை. பின்னேரம் ஒருக்கா முத்தவெளிக்குப் போகவேணும் நாடகம் பாக்க. போகேக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தண்ணர் வாங்கித் தந்த வேட்டியையும், கொத்தார் வாங்கித் தந்த சால்வையையுந்தான் போட்டுக் கொண்டு போகவேணும்."

"ஐயோ, இளையண்ணர் தான் பாவம்"

"ஓம் தங்கச்சி. எளியவனாப் பிறந்தாலும், இளையவனாப் பிறக்கக் கூடாது" என்று மனோகரன் அடுக்களையில் இருந்தபடியே சொல்லுகின்றான்.

இதிலே என்ன நகைச்சுவையைக் கண்டார்களோ? அண்ரும் அத்தானும் விழுந்து விழுந்து சிரிக்கின்றார்கள். மனோகரன் கையில் ஒரு நெருப்புக் கொள்ளியைத் தூக்கிக் கொண்டு, அடுக்களையின் மறைவான மூலையைப் பார்த்து நகருகின்றான்.

"இப்ப தம்பியும் பெரியாக்களைப் போலை" என்று பரிமளம் குரல் எழுப்புகின்றாள்.

"சும்மா சத்தம் போடாதை பரிமளம். இளையவன் எண்டாப் போலை நெடுகிலும் சின்னப் பொடியன் எண்ட நினைப்பே? அவனும் உழைக்கிறான்; சம்பாரிக்கிறான்" என்று மச்சான் சார்பில் கமலா பேசுகின்றாள்.

மனோகரன் சிகரட் குடிக்கத் துவங்கீட்டான் போலை. ஓ, உங்கை கிறாதியாலை புகை வருகுது. வளந்தாப் பிறகு, அது அது, அதுகளின்ரை விருப்பம்.

என்ன மருமகன்? சயன்ஸ் பாடங்கள் தானே? பேத்தனமா இங்கிலீசை நெக்லட் பண்ணாதை.

"ஹி இஸ் குட் இன் இங்கிலிஸ். கிறடிற் எடுப்பான்" என்று சதாசிவம் முகுந்தனின் சார்பாக உத்தரவாதமளிக்கின்றான்."

"தூண் விழுந்திடப் போகுது. அந்தக் கதிரையிலை இரன்."

"அத்தான், உந்தத் தூணடியிலை நிண்டு பாத்தால் ஹம்சத் தொனி அடுப்படியிலை இருந்து வேலை செய்யிறது தெரியுதாக்கும்"

"சதாசிவம்... வானதிக்குக் கூடப் பிந்தீட்டியள்... அசோகனுக் கெண்டாலும் முந்தலாம்..."

சதாசிவத்தின் கண்கள் பரிமளத்தைத் தேடுகின்றன.

வாயைப் பொத்தும்படி சுப்பிரமணியத்திற்குக் கமலா சைகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுகின்றாள்.

விறாந்தை ஓரத்தில் விழுந்த கிடந்த ஓர் இஞ்சி விசுக் கோத்தை எட்டியெடுத்த முகத்தார், குழந்தையின் சுபாவத்துடன் ஒருவருக்குந் தெரியாமல் தன்னுடைய தளர்ந்து போன பற்களுக் கிடையில் நசுக்குகின்றார்.

குறிப்புகள்

1. எஸ். பொன்னுத்துரையின் "தேர்" சிறுகதை அவரது "வீ" சிறுகதைத் தொகுப்பில் (1966) இடம்பெற்றுள்ளதாகும். ஏற்கெனவே இச் சிறுகதை முதலில் "சுதந்திரன்" பத்திரிகையில் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

2. யாழ்ப்பாணத்துச் சராசரிக் குடும்பமொன்றில், புதுவருடத் தினத்தன்று, குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் கூடி மகிழ்கின்ற, கலந்துறவாடுகின்ற நிகழ்ச்சியை, அக் குடும்பத்தின் தலைவராக விளங்கும் கதாபாத்திரத்தி மனவோட்டங்களின் மூலமாக பொருண்மையும் கலைத்துவமும் மிக்கதாகச் சித்தி ரித்துக் காட்டுவதுதான் "தேர்" சிறுகதையாகும்.

3. இச் சிறுகதையின் கதைசொல்லியாகக் கதாசிரியரே விளங்கு கிறார்.

4. சிறுகதையின் நிகழ்களமாக முகத்தார் வீடு அமைந்துள்ளது. அந்த இடம் நல்லூர்க் கோயிலின் மணியோசை கேட்கக் கூடிய இடமாகக் காணப்படுவதும் கருதத் தக்கதாகும்.

5. ஆறுமுகம் (குடும்பத் தலைவர் – முகத்தார்) அவரது மூத்த மகன் சுப்பிரமணியம், அவனது மனைவி கமலா, மகள் ஹம்சத்வனி, மகன் அசோகன், முகத்தார் தம்பதியரின் இன்னொரு மகள் பரிமளம், அவளது கணவன் சதாசிவம், வேறொரு மகள் சுவந்தரம், அவளது கணவன் தங்கராசா, அவர்களின் பிள்ளைகள், முகத்தாரின் இன்னொரு மகன் குமாரசாமி, அவன் மனைவி, பிள்ளைகள், இளைய மகன் மனோகரன், இளைய மகள் பத்மா ஆகியோர் குடும்ப உறுப்பினர்க்கான கதாபாத்திரங் களாகும். இவர்கள் தவிர சந்திக் கடைப் பசுபதி, ஐயம்பிள்ளை, முகத்தாரின் பேரப்பிள்ளைகளில் முகுந்தன், அசோகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோரும் துணைக் கதாபாத்திரங்களாகத் தொடர்பு படுத்தப் பட்டுள்ளனர். மேலும் முகத்தாரின் பின்னோக்கிய சிந்தனை யோட்டத்தில் இடைக்கிடை மறைந்து போய்விட்ட அவரின் மனைவி பார்வதிப்பிள்ளையும் வந்து செல்வதைக் கதையில் தரிசிக்க முடிகிறது.

6. இந்தச் சிறுகதையானது முழுக்க முழுக்க யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்கு மொழியைக் கையாண்டு படைக்கப்பட்டுள்ளது. கொஞ்சமேனும் இலக்கியத் தமிழையோ, இலக்கணத் தமிழையோ பயன்படுத்தாமல் கத்தி முனையில் நடப்பது போல் மிகவும் கவனத்துடன் மொழி நடை பேணப்பட்டுள்ளது.

7. தேரொன்று பல பாகங்களைக் கொண்டு உருவாக்கப்படுகிறது. அதன் இயக்கத்தின் ஆதாரமாக விளங்குவது அச்சாணி ஆகும். "அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது" என்பது பழமொழி. அதுபோலக் குடும்பமாகிய தேரும் பல உறுப்பினர் களைக் கொண்டிருக்கிறது. ஆனால் அதன் இயங்கு சக்தி அச்சாணியாக இக் கதையில் குடும்பத் தலைவராகிய முகத்தார் விளங்குகிறார். எனவே அவரைச் சுற்றியே கதை நிகழ்கிறது.

8. **"தேர்" சிறுகதையின் பிரதான அச்சாணியாகக் காணப்படும் ஆறுமுகத்தாரின் குணப் பண்புகள் :**

i. அறுபது வயதைத் தாண்டியவர்; முகத்தார் என அழைக்கப் படுபவர்; ஐந்து வருடங்களுக்கு முன்னர் மனைவி பார்வதிப் பிள்ளையை இழந்தவர்; ஆண்கள் மூன்றும் பெண்கள் மூன்றுமாய் ஆறு பிள்ளைகளுக்குத் தந்தை; கடைசி மகன் மனோகரனும் கடைசி மகள் பத்மாவும் இன்னும் மணம் முடிக்கவில்லை. கடைசி மகளின் விசயத்தை இன்னும் ஒப்பேற்றாத கவலை அவருக்குண்டு. மகனுக்குத் தனது மனைவியின் அண்ணன் மகளைச் செய்து வைக்கும் எண்ணமும் உண்டு. இப்போது முதுமை, வாதக்குணம், குந்தியெழும்பக் கஷ்டம் ஆகியவற்றால் சிரமப்பட்டாலும் மற்றவர்களுக்குத் தெரியாமல் சமாளிக்கும் திறமை உள்ளவர்; வைகறையில் துயிலெழும் பழக்கமுள்ளவர். புகைத்தலுக்காகத் தாவடிப் புகையிலைச் சுத்தைப் பாவிப்பவர்; தனது எல்லாப் பிள்ளைகளிலும் மிகுந்த பாசமுடையவர். இருந்தாலும் வீட்டாரோடு, அதிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டாமற் போய்விட்டவனும், தனது இஷ்டப்படி வேதக்காரப் பெண்ணொருத்தியை மணந்து, குழந்தைகளுக்குத் தந்தை யானவனும், சமூக முன்னேற்றத்துக்காகக் கலை – இலக் கிய சமூகப் பணிகளில் ஈடுபட்டுழைக்கும் முற்போக்கு வாதி யுமான இரண்டாவது மகன் குமாரசாமி மீது அதிகமான கரிசனை உடையவர்; வருடப் பிறப்புக்கு வீட்டில் வந்து கூடும் தனது பிள்ளைகளும், அவர்தம் குடும்பத்தினரும் மனங் கோணாதபடி நடக்க விரும்புபவர்; அனைவரையும் நன்கு உபசரிக்க வேண்டுமென்ற ஆவலுடையவர்; விசேச நாட்களில் சற்று மதுபானமம் அருந்துபவர். தனது மகன் குமாரசாமியைப் பற்றி ஏனையவர்கள் புகழ்ந்து கூறுவதைக் கேட்டுப் பெருமிதம் கொள்பவர். இடையிடையே இறந்து போன தனது மனைவியின் நினைவுகளிலும் மூழ்குபவர். வருடப் பிறப்பன்று தனது கையால் பிள்ளைகள், மருமக்கள், பேரப் பிள்ளைகள் யாவருக்கும் கைவியளம் கொடுப்பதில் மகிழ்ச்சி அடைபவர். குமாரசாமி தலைமை தாங்கும் நாடகம் பார்க்கப் போகும் ஆவலுடன் இருப்பவர். குமாரசாமி மீது கொண்டுள்ள வெளிக்காட்டவியலாத பாசத்தின் காரண மாக, அவன் வாங்கி வந்த இஞ்சி விசுக்கோத்தொன்றை எடுத்து வாயினுள் வைத்துச் சுவைத்துப் பார்த்தவர்.

9. சிறுகதையின் துணைக் கதாபாத்திரங்களின் குணவியல்புகள் :

i. **முகத்தாரின் மூத்த மகன் சுப்பிரமணியம் :**

கொழும்பில் வேலையின் நிமித்தம் மனைவி, மகள், மகன் ஆகியோருடன் வசிப்பவன். வருடப் பிறப்புக்குக் குடும்பமாய் யாழ்ப்பாணத்துக்கு வந்து தகப்பன், சகோதரங் களைக் கண்டு உறவாடிச் செல்வதில் விருப்பமுடையவன். "நான் எங்கடை வீட்டுக்கு வாறதுக்கு ஆரும் வழிகாட்டத் தேவையில்லை" என்ற மனப்பாங்கு உடையவன். புது வருடத்திற்காக எல்லாப் பிள்ளைகளுக்கும் ஒரு நிறத்தி லேயே உடுப்புகள் எடுத்துக் கொடுத்தவன். தந்தையிடம் கைவியளம் வாங்குவதில் நம்பிக்கையில்லாத தம்பி குமார சாமியை நோக்கி "ஆவது அறிவது அறிவல்ல; வீட்டிலே வேவது அறிவது தான் அறிவு" என்று பேசியவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. **முகத்தாரின் இரண்டாவது மகன் குமாரசாமி :**

சிறுவயதிலேயே படித்து முன்னுக்கு வந்தவன். தமையன் மற்றும் இரண்டு குமருகள் வீட்டிலிருக்கையில், தான் விரும்பிய கிறிஸ்தவப் பெண்ணை மணம் முடித்துக் கொண்டு வீட்டாரோடும் அதிகம் ஒட்டாமல் போய்விட்டவன். அதனால் ஊரவர்களால் கேவலமாகப் பேசப்பட்டவன். ஊரவர்களின் பேச்சினால் தகப்பன் ஆறுமுகத்தாரை வேதனைக்கு உள்ளாக்கியவன். எதிலும் பிடிவாத குணமுடையவன்; தனிப்போக்குடையவன்.விபூதி பூசாதவன்; கோயில் குளம் போகாதவன்; மனைவியையும் போகவிடாது மறித்துக் கொண்டவன். மெல்லிய உடல் வாகினன்; மூன்று பிள்ளைகளுக்குத் தகப்பன். தாயாரின் ஆண்டுத் திவசத்திற்கு வரும்போது மட்டும் ஒரு மகனைக் கூட்டி வந்தான். மற்றைப்படி எவரையும் அழைத்து வருவதில்லை. தானும் அதிகமாக வருவதுமில்லை. கொழும்பில் வேலை பார்க்கிறான். அபூர்வமாக வீட்டுக்கு வந்தாலும் (யாழ்ப்பாணம்) உடனே திரும்பி விடுவான். அவனுடைய நடத்தையில் சகோதரங்களுக்குப் பிடிப்பில்லாவிட்டாலும், சகோதர பாசம் உண்டு. ஊருக்குள்ளே பேரும் புகழும் உடையவனாக மாறியிருக்கிறான். "அவனை ஊருக்காகப் பெத்தன்" என முகத்தார் கருதும் அளவுக்கு அவனது செயற்பாடுகள் காணப்பட்டன. "நீங்கள் குமாரசாமியின்ரை தகப்பனல்லோ?" என்று கேட்டு பஸ்ஸிலை ஒருவன் இருக்கை தந்ததை முகத்தார் பெருமையாகக்கொள்ளத் தக்கவன். முற்ற வெளியில் நடக்கவிருக்கும் நாடகத்துக்குத் தலைமை வகிக்குடம் சாட்டில் புதுவருடப் பிறப்பன்று வீட்டுக்கு வந்து தலைகாட்டிவிட்டுச் சென்றவன். சமய சம்பிரதாயங்களில் நம்பிக்கை இல்லாதவன். நிகழ்ச்சிக்காகத் தன்னுடன் வேறு ஐந்தாறு பேர்களையும் கூட்டி வந்தவன். முற்போக்குச் சிந்தனையுடையவன்.

iii. **முகத்தாரின் இளைய மகன் மனோகரன் :**

கொழும்பிலுள்ள கம்பனியொன்றில் புதிதாகச் சேர்ந்து வேலை பார்ப்பவன். தமது மனைவியின் அண்ணன் மகளுக்கு அவனை மணமுடித்து வைக்க முகத்தாருக்குரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பம் பற்றி எதுவும் கூறாதவன். வேலை, சம்பளம் பற்றித் தகப்பன் திருப்தியடையக் கூடியளவில் இருப்பவன், புதுவருடாப் பிறப்புக்கெனத் தகப்பனுக்குப் "பீஸ் வேட்டி" எடுத்துக் கொடுத்தவன். தமையனின் பிள்ளைகளுக்காக ஐஸ் கிறீம் வாங்கிக் கொடுத்தவன். முதல் சம்பளத்தில் தங்கை பத்மாவுக்குச் சேலை எடுத்துக் கொடுத்தவன். மனோகரன் வேலை பார்க்கும் கம்பனியை விரைவில் அரசாங்கம் எடுக்கவிருப்பதால், நீயும் அரச ஊழியனாகப் போகிறாய் என்று குமாரசாமி கூறியதற்கு, "அப்பிடி நடக்காது" என அவநம்பிக்கையுடன் கூறியவன். வருடப் பிறப்பன்றே கொழும்பு திரும்ப எண்ணியவன்; சிகரட்டும் பிடிப்பவன்.

10. முகத்தாரின் மகள் பரிமளம் பற்றிய சித்திரிப்பு:

முகத்தாரின் மகளான பரிமளமும், கணவன் சதாசிவமும் கொழும்பில் வசிப்பவர்கள். பரிமளத்தின் கணவனுக்குக் கொழும்பில் வேலை. தைப்பொங்கலுக்குத் தகப்பனிடம் வந்த பரிமளம், இன்னும் திரும்பவில்லை. சதாசிவமும் யாழ்தேவியில் வருடப்பிறப்புக்காக யாழ்ப் பாணம் வந்து சேர்ந்து விட்டான். பாவம்; அவர்களுக்குக் குழந்தையில்லை. டாக்டர்மாரிடம் காட்டியும் இதுவரை பலன் கிட்டவில்லை. பின்னடிச் சந்ததி விருத்தி என்று சாதகத்திலே கிடக்குதெண்டு கூறி முகத்தார் மனதைத் மனதைத் தேற்றிக் கொள்வார். புது வீடு கட்டி வைகாசியில் குடிபுகக் கருதியுள்ளனர். காரும் வாங்கியிருக்கிறார்கள். வசதியான வாழ்க்கை.

11. முகத்தாரின் மகள் சௌந்தரம் பற்றிய சித்திரிப்பு :

சௌந்தரம் - தங்கராசா தம்பதியருக்கு ஆறு குழந்தைகள். முகுந்தன் அவர்களில் ஒருவன். தனிக் குடும்பமாயுள்ளனர். தங்கராசா கொழும்பில் வேலை பார்ப்பவன். அவனும் வருடப் பிறப்புக்குத் தனது வீடு வந்துள்ளான். கைவியளம் வாங்க மகன் முகுந்தனைத் தான் சௌந்தரம் முகத்தார் வீட்டுக்கு அனுப்பியிருந்தாள். கணவனின் உறவினர் தமது வீட்டுக்கு வருவதால் அவளும் கணவனும் வர முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. முகத்தாரின் கடைசி மகள் பத்மா பற்றிய சித்தரிப்பு :

தாயார் இறந்தபின் தந்தையைக் கவனிப்பதும், வீட்டைக் கவனிப்பதும் அவளது பொறுப்பு. இன்னும் மணமாகவில்லை. படிப்பு முடிந்ததும் ஆறுமுகத்தார் அவளை மேலே படிக்க அனுப்பவில்லை. வருடப் பிறப்பன்று சகோதர, சகோதரிகள் குடும்பத்தாருடன் வருவதை எதிர்பார்த்து அதிகாலையிலேயே முற்றங்கூட்டி, சாணந் தெளித்து, சட்டி பானை கழுவி, வேலை செய்தவள். தந்தைக்கு முட்டைக் கோப்பி அடித்துக் கொடுத்தவள். அக்காமார், அண்ணி, மருமகள் ஆகியோருடன் சமையல் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டவள்.

13. "தேர்" சிறுகதையின் சிறப்பம்சங்கள் :

i. "தேர்" சிறுகதையின் அச்சாணியான கதாபாத்திரம் ஆறுமுகம், அவரது நினைவுகளுக்கு ஏற்றதாகவும், மன வோட்டங்களுக்குத் தக்கதாகவும் கதை நகர்ந்து செல்கிறது. அவரது இயங்கு திசைக்கேற்ப கதையைச் செலுத்திச் செல்வது சிறுகதையில் புதுவகை உத்தியாக விளங்குகிறது.

ii. முகத்தார் என அழைக்கப்படும் ஆறுமுகத்தின் குடும்ப விடயங்கள் அனைத்தும் அவரது மனவோட்டங்கள் மூலமே தரிசிக்கப்படுவதும், முன்னோக்கு, பின்னோக்கு உத்தி களைப் பயன்படுத்திக் கதை கூறுவதும், குடும்பத்தின் அத்தனை கதாபாத்திரங்களையும் இணைக்கின்ற, தாங்கி நிற்கின்ற ஆதாரசக்தியாகப் பிரதான கதாபாத்திரம் விளங்குவதும், கதைத் தலைப்புக்கு மிகவும் பொருத்தமாகக் காணப்படுகிறது.

iii. சிறுகதையின் தொடக்கம், முகத்தார் துயிலெழும் காட்சி வர்ணனைகளுடன் ஆரம்பமாகி, அவரது ஒவ்வொரு செயற்பாடுகளும், ஒவ்வொரு நினைவும் மாறி மாறிச் சங்கமிக்கும் நீரோடையாகத் தெளிவுடன் கதை நகர்ந்து சென்று, முகத்தார் இரண்டாவது மகன் கொண்டுவந்த இஞ்சி விசுக்கோத்தொன்றினைப் பற்களுக்கிடையில் வைத்து மெல்லுவதாகக் கதை முடிகையில் முகத்தாருடன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர்களும்சேர்ந்து பயணிக்கும் பலம் கிட்டுவதான சிறப்பு அமைந்துள்ளது.

iv. யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழை இலாவகமாகக் கையாண்டு படைக்கப்பட்டுள்ள இச் சிறுகதை, யாழ்ப்பாண மக்களின் வாழ்வியலது பொதுமைப்படுத்தப்பட்ட வெட்டு முகத் தோற்றமாகும்.

v. இச்சிறுகதையில் வரும் எல்லாக் கதாபாத்திரங்களும் யதார்த்தமாகப் படைக்கப்பட்டிருப்பதுடன், கதையின் தொடக்கம் முதல் இறுதி வரை முகத்தாரே நிறைந்து நிற்பதும், கதையின் மிகப்பெரிய பலமாக அமைகின்றது.

vi. மனைவியை இழந்த துன்பம், மகளுக்கு இன்னமும் மணமுடித்து வைக்காத கவலை, இரண்டாவது மகனின் செயலால் ஊரவர்கள் அவனை இழிவாகப் பேசியதுடன், தனது வீட்டுக்கும் அதிகம் வராமற் போன ஆதங்கம், குமார சாமி, தங்கள் குடும்பத்தவருடன் ஒட்டாமல் விலகி நிற்கும் மிகப் பெரிய துன்பம், அவனது சில நடத்தைகள் ஏற்படுத்தும் மனச்சங்கடம் முதலான பல மனவோட்டங்கள் இயல்பான சித்திரிப்புக்களுடன் இக்கதையில் ஒளிவிடுகின்றன.

vii. அதேபோன்று வருடப் பிறப்பன்று குடும்பத்தவர் அனைவரும் கூடி மகிழும் இன்பம், அவர்களுக்குத் தன் கையால் கைவியளம் கொடுக்கும் மனத் திருப்தி, பிள்ளைகள் வருகைக்காக முச்சந்தி வரை சென்று இறைச்சி, மரக்கறி வாங்குவதில் ஆனந்தம். விசேச நாளுக்கு நண்பன் ஐயம்பிள்ளை தந்த சாராயத்தைக் குடித்த மகிழ்ச்சி, கும்பம் வைக்கும் பெருமை, பிள்ளைகள் - மருமக்கள் - பேரப் பிள்ளைகள் யாபேருடனும் உரையாடி மகிழும் திருப்தி, குமாரசாமியின் விருப்பப்படி நாடகம் பார்க்கப் போகும் ஆவல், அவன்மீது கொண்ட அதீத அன்பின் நிமித்தம் நிலத்தில் கிடந்த, அவன் வாங்கி வந்த விசுக்கோத்தை எடுத்து உண்ணும் பாசப் பிணைப்பு ஆகியன சிறுகதையின் செல்நெறியில் இடம்பெற்று உணர்ச்சியும், உணர்வும் மிக்கனவாகச் சிறப்படைகின்றன.

viii. யதார்த்தமான கதைக்கரு, இயல்பான பாத்திர வார்ப்புகள், சிறப்பான கதைக்குரிய கட்டுக் கோப்பு, பொருத்தமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சு வழக்கு மொழிக் கையாளுகை, ஆற்றொழுக்குப் போன்ற உரையாடல் திறன், மிகச் சிறப்பான கதை சொல்லும் பாங்கு, வியப்பான கதை முடிவு ஆகியவற்றால் இச் சிறுகதை உயர்வான தரத்துடன் விளங்குகிறது.

ix. சற்று நீளமான சிறுகதையானாலும், எவ்விடத்திலும் தொய்வு ஏற்படாத வண்ணம் அமைந்து சிறப்பாயுள்ளது.

x. "இலங்கைத் தமிழ்ச் சிறுகதையின் வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக் காட்டாகத் "தேர்" திகழ்கிறது. இப்படைப்பு எஸ். பொ. வின் சிறந்த படைப்பாற்றலை மிக நேர்த்தியாக இனம் காட்டுகிறது. "தேர்", எஸ். பொ. வின் சிறந்த படைப்பக்களுள் ஒன்று மாத்திரமல்ல; தமிழின் சிறந்த சிறுகதைப் படைப்புக் களில் ஒன்றாகவும் திகழ்கிறது. தேர் "எஸ். பொ. வின் பெயரை நிலைத்திருக்கச் செய்யும். அதேபோன்று, தமிழ்ச் சிறுகதையின் பெயரையும் இப்படைப்புப் பாதுகாக்கும் என்பது நிச்சயம்" எனப் பேராசிரியர் துரைமனோகரன் ("ஞானம்" எஸ். பொ. சிறப்பு மலர் - டிசம்பர் 2009) கூறியிருப்பது இங்கு நோக்கத்தக்கது.

xi. "லா. ச. ராவின் பாற்கடல், ஜெயகாந்தனின் யுகசந்தி, ரி. செல்வராசனின் யுகசங்கமம் ஆகியனவும் தேர் கொண் டுள்ள கருவைச் சுற்றியுள்ளன. அவற்றிலே காண முடியாத கலை முழுத்துவத்தை "தேர்" கொண்டுள்ளது. இந்த நல்லதோர் சிறுகதையைத் தமிழன்னைக்குச் சமர்ப்பித்ததற் காக எஸ். பொ. வுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள் (பேராசிரியர் சாலை இளந்திரையன் - "வீ" முன்னுரையில் இரசிகமணி கனக செந்திநாதன் எடுத்துக் காட்டியது)

14. எஸ். பொ. வின் மொழியாளுமைத் திறன் :

i. யாழப்பாணப் பேச்சுத் தமிழை உயிரோட்டம் நிறைந்ததாக வும், கொஞ்சமேனும் எழுத்துத் தமிழ் கலந்துவிடாதவாறும் கையாண்டுள்ளமை.

ii. கதைப்பொருளும், கதை சொல்லும் நேர்த்தியும், கதா பாத்திரங்களின் சித்திரிப்பும், மனவுணர்வுகளும், சராசரி யாழ்ப்பாணக் குடும்பமொன்றின் பண்பாட்டு வழக்காறுகளு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன் பின்னிப் பிணைந்திருப்பதைப் போன்று மொழியைப் பயன்படுத்தியுள்ளமை.

iii. சிறிய சிறிய வாக்கியங்கள்; தேவைக்கேற்ப ஆங்கிலச் சொற்களின் (பழக்கத்திலுள்ளவை) பிரயோகம்; ஒவ்வொரு கதாபாத்திரமும் தத்தம் வரம்பு மீறாத உரையாடல்; நினைவுகளை – எண்ணங்களை அசைபோடும் போது நேரடியாக இன்னொருவருக்குக் கூறுவது போன்ற உணர்வு வெளிப்பாடு ஆகிய அனைத்திலும் மொழியானது எஸ். பொ. வுக்குக் கைகட்டிச் சேவகஞ் செய்துள்ளது.

iv. "கால ஓட்டம் அவர்தம் உழைப்பை விழுங்கி, உடலைச் சருகாக்கி விட்டது"

"வருடப் பிறப்பன்று எல்லாக் காரியங்களையும் விக்கினமின்றி உரிய முறைப்படி நிறைவேற்றி விட்டால், வருடம் முழுவதும் அவ்வாறே அமையுமென்னும் நம்பிக்கையில் ஊறித் திளைத்த மனம்"

"இல்லை, உந்த முச்சந்தி மட்டும்போயிட்டு வாறன், தச்சேலா ஏதேன் அரியது நரியது கிடைச்சால்..."

"ரோஜா இதழ்ப் படுக்கையான மென்மைசேர் நினைவுகளில், ஏதோ ஒரு முள்ளின் உறுத்தல்"

"உங்கை யாழ்ப்பாணத்துக் கிடுகு வேலிகளாலை சங்கையை மறைச்சுக் கொண்டு மனச்சாட்சிக்கு விரோதமாக நடிச்சுக் கொண்டே வாழ்பவருக்கு என்ரை போக்கு விளங்காது"

"சொந்தமாச் சம்பாரிக்கத் துவங்கீட்டால் கொஞ்சம் பூரிப்புத் தானே?"

"என்னதான் மனக்கோவங்கள் இருந்தாலும், அவன்ரை அந்தச் சிரிப்பைக் கண்டோடனை ஒருத்தருக்கும் அவனை ஏசப் பேச மனம் வராது; ஆளையும் மருட்டும்"

"குசேலனின் அவல் முடிச்சை அவிழ்த்து உண்ட கண்ணனின் உள்ளத்திலே கூட இவ்வளவு மகிழ்ச்சி தோன்றியிருக்க முடியாது"

"இவன்தான் புதுநாணயமாப் புறந்தவன். ஒண்டிலும் நம்பிக்கை இல்லாதவன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆவது அறிவல்ல; வீட்டிலை வேவது அறிவது தான் அறிவு"

"அவனுக்கு உடம்பு மட்டும் தான் பயித்தங்காய் போலை – ஆனால் உடும்பைப் போலத்தான் பிடிவாதம்"

எஸ். பொ. வின் மொழிநடைக்கான சில சிறப்பான எடுத்துக்காட்டுக்கள் இவையாகும்.

15. "தேர்" சிறுகதையில் காணப்படும் யாழ்ப்பாணத்துப் பண்பாட்டு அம்சங்கள் :

i. பாயில் நித்திரை செய்தல்.

ii. காலைக் கடனைக் கழிக்கச் கொல்லைப்புறம் செல்லல்.

iii. சுருட்டுப் புகைத்தல்.

iv. உமிக்கரியால் பல் துலக்குதல்.

v. காலையில் முகம் கழுவி விபூதி தரித்தல்.

vi. வெண்சங்கில் விபூதி வைத்துத் தொங்கவிடுதல்.

vii. நேர்த்திக் கடன் நிறைவேற்றல்.

viii. மயிர் நீக்கக் கடன் செய்தல்.

ix. நீற்றுப் பெட்டியில் பிட்டு அவித்தல்.

x. நல்லெண்ணெயில் கத்தரிக்காய் பொரித்தல்.

xi. மரவள்ளிக் கிழங்கு சுட்டுக் கத்தரிக்காயுடன் உண்ணல்.

xii. பாண் சாப்பிடல் (பிற்காலத்தில் ஏற்பட்டது).

xiii. பெண் பிள்ளைகளை அதிகம் படிக்கவிடாதிருத்தல்.

xiv. சாம்பல் போட்டுப் பொச்சு மட்டையால் உரசிப் பாத்திரங்கள் கழுவல்.

xv. புதுவருடப் பிறப்பன்று பழைய கறிகளை, பாத்திரங்களை அப்புறப்படுத்தல்.

xvi. புதுவருடப் பிறப்பன்று கைவியளம் கொடுத்தல்.

xvii. புதுவருடக் கொண்டாட்டத்தில் குடும்பத்தவர் அனைவரும் பங்குபற்றல்.

xviii. புதுவருடத்தன்று நீராடிப் புத்தாடை அணிதல்.

xix. புதுவருடப் பிறப்பன்று கும்பம் வைத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

xx. முட்டைக் கோப்பி குடித்தல்; இறைச்சி, மீன் சாப்பிடல்.

xxi. காசு வைப்பதற்காக மடிசஞ்சைப் பயன்படுத்தல்.

xxii. கழுத்தினைச் சுற்றியதாகச் சால்வை அணிதல்.

xxiii. பஞ்சாங்கம் பார்த்தல்.

xxiv. சாமத்தியச் சடங்கு செய்தல்.

xxv. கிணற்று நீரை அள்ள வாளி பயன்படுத்தல்.

xxvi. வருடப் பிறப்பன்று மருத்து நீர் வைத்து முழுகல்.

xxvii. நாடகங்கள் நடித்தல்.

xxviii. போர்த் தேங்காய் அடித்து விளையாடல்.

xxix. திருமணப் பேச்சுக்கள் நடைபெறல்.

16. அருஞ்சொற் பொருள்:

மயிர் நீக்கக் கடன் - நேர்த்தி வைத்துத் துடக்கு மயிரெடுத்தல்; தலைக் கொள்ளி - முதன் முதல் கொள்ளி வைத்தல்; வாகடங்கள் - மிருகங்கள் முதலானவற்றின் நோய் தர்க்கும் மருத்துவக் குறிப்புக்கள், பழைய கதை மரபுகள்; விக்கினம் - இடையூறு; பொச்சுமட்டை - தேங்காய்ப் பொச்சு மட்டை; அடிப்பிடித்தல் - எரிந்து சட்டியுடன் ஒட்டியிருத்தல்; பஞ்சானும் குஞ்சுகளும் - சின்னஞ் சிறுசுகள்; அரியது நரியது - அருமையானதும் நல்லதும்; சாறணை - சாரத்தை; ஏகாவடம் - கழுத்தில் வட்டமாக; மடிசஞ்சு - காசுவைப்பதற்கான துணியினால் தைக்கப்பட்ட சிறு பை; ஆகர்ஷிக்கிறது - கவருகிறது, ஈர்க்கிறது; சங்கை - அவமானம், வெட்கம்; மினக்கட்டு - நேரத்தைச் செலவழித்து; மருத்து நீர் - பல்வேறு மூலிகைகள் சேர்த்து அவித்த புனித நீர்; புது நாணயமாய் - புதுமையாய்; போர்த் தேங்காய் அடித்தல் - சிறியதும், நீளமானதும், வலிமையானதுமான தேங்காயைத் தேங்காயால் அடித்து டைத்து வெற்றிகாணும் விளையாட்டு; சுபாவம் - இயல்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாவல் வளர்ச்சி பற்றிய அறிமுகம்

18ஆம் நூற்றாண்டு உலகுக்கு அளித்த புதிய இலக்கிய வடிவமாக 'நாவல்' திகழ்கிறது. ஆனால் இதற்கான முன்னோடி முயற்சிகள் சில நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தே படிப்படியாக நடைபெற்று வந்துள்ளன. 1350 இல் இத்தாலி நாட்டைச் சேர்ந்த புக்காச்சியோ (Boccaccio) என்பவர் Novella Storia of Fresh Stories என்ற தலைப்பில் தமது கதைத் தொகுதிகளை வெளியிட்டு உலகம் முழுவதும் பரவச் செய்தார். இவை Decameron என அழைக்கப் பட்டன. ஆனால் சாமுவேல் ரிட்சர்ட்ஸனின் 'பாமெலா' என்னும் 1741 இல் வெளிவந்த இலக்கியப் படைப்பே உலகில் முதல் நாவல் என்று கருதப்படுகின்றது. புதிய, புதுமை என்னும் பொருள்களைத் தரும் 'நெளஸ்' என்னும் இலத்தீன் மொழி அடிச் சொல்லிலிருந்து 'நாவல்லஸ்' என்னும் இலத்தீன் மொழிப் பெயர் உரிச் சொல் தோன்றியது. இதிலிருந்தே 'நாவல்லா' என்னும் இத்தாலிய மொழிச் சொல்லும், அதிலிருந்து Novel எனப்படும் ஆங்கில மொழிச் சொல்லும் பிறந்தன. இது "அண்மைத் தன்மையுடையது" ,"உண்மைத் தன்மையுடையது" எனப் பொருள் தரும்.

நாவல், புதினம், புனைகதை, நெடுங்கதை என்ற பெயர்களால் தமிழில் அழைக்கப்படும் இலக்கிய வடிவமானது 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே தமிழுக்கு அறிமுகமாயிற்று. நாவலின் பண்புகள், இலக்கணங்கள் தொடர்பாக ஏராளமான இலக்கிய அறிஞர்களின் கருத்துகள் இருந்த போதிலும், இன்னதுதான் என்று உறுதிபடக் கூறமுடியாத நிலையே காணப்படுகின்றது. பிற இலக்கிய வடிவங்களைக் காட்டிலும் மிகுதியாக மாறுதல்களுக்கு உட்படுத்தக் கூடியதும், முன்னர் கூறப்பட்ட வரைவிலக்கணங்களுக்கு மிகக் குறைந்த அளவில் உட்படக் கூடியதுமான இலக்கிய வடிவம்; மிகப்பரந்து பட்டதும் அதேவேளை எளிய எல்லைகளுக்கு உட்பட்டதும், வளைந்து கொடுக்கும் இயல்புடையதுமான இலக்கிய வடிவம் நாவலாகும்.

வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்புடையது; கதையினை அடிப்படையாகக் கொண்டது; உரைநடையிலமைந்தது; தன்னுரிமை யுடையது நாவலாகும். வெறும் கதை மட்டும் நாவலாகி விடாது. அழகியல் அதனோடு சுவைபடக் கலந்து நிகழ்ச்சிகளின் அமைப்பில் இயல்புற அமைதல் வேண்டும். நாம் வாழ்வில் காணும் மனிதர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை மாந்தர்களாக அமைய வேண்டும். அவர்கள் சமூகத்தின் ஒரு கூறாக விளங்க வேண்டும். கதை உரைக்கும் தோரணை மாற்றம், தனிநபர் உளவியல் நுட்பங்கள், தனிநபரியப்படுதல், சமூகஞ்சார்ந்த அறிவு நுட்பங்கள், சமூகம் - தனிநபர் சார்புக் கூறுகள், நாவலாசிரியரின் படைப்பு மனம், நாவல் படிப்போரின் மனநிலைகள், நாவலாசிரியருக்குரிய கதை மூலகங்கள், விலகி நின்று இன்பத்தில் திளைக்கும் மனநிலை போன்றவற்றைப் புதிய இலக்கிய அடிப்படைகளாக டாக்டர் துரை சீனிச்சாமி தமது "நாவல்கள் - நவீன விமர்சனங்கள்" (1967) நூலில் குறிப்பிட்டுள்ளமை கருதத்தக்கதாகும். நாவலின் பிரதான கூறுகளாகக் கதைப்பின்னல், கதைக்கரு, பாத்திரப் படைப்பு, பின்னணி, மொழிநடை, நோக்குநிலை என்பவற்றைக் கருதமுடியும்.

சமூகத்தின் அல்லது தனி மனிதரின் அனுபவங்களை, பிரச்சினைகளை முழுமையான விதத்தில் வெளிப்படுத்தல், பரந்துபட்ட கதை நிகழ்களத்தினைக் கொண்டிருப்பதால் பல கதா பாத்திரங்களைக் கொண்டிருத்தல், பாத்திரங்களின் குணவியல் புகளை, உரையாடல்களை, செயற்பாடுகளை விளக்கமாக வெளிப்படுத்தல், கதைப்பின்னலுக்கு (நிகழ்ச்சிக் கோர்வைக்கு) முதன்மையளித்தல், நனவோடை உத்தி, பின்னோக்கு உத்தி, கடித உத்தி, காட்சி உத்தி போன்ற பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தல் ஆகியன நாவலில் இடம் பெறமுடியும். அதே போன்று நடப்பியல் கதைப்பின்னல், புனைவியல் கதைப்பின்னல், முடிவுறு கதைப் பின்னல், முடிவிலாக் கதைப்பின்னல் ஆகியவற்றின் அடிப்படையில் கதைப்பின்னல் வேறுபடலாம். எல்லாவற்றுக்கும் மேலாக நாவலானது வாழ்க்கையை இயல்புடன் சித்திரிக்க வேண்டும்.

'நல்ல இலக்கியம் நமது வாழ்க்கை பற்றிய கண்ணோட்டத்தை விரிவுபடுத்தவும், ஆழமாக்கவும், கூர்மைப்படுத்தவும் உதவுகின்றது. வாழ்க்கையின் ஒரு புரிதலோடு இன்பமும் அளிக்கிறது. யதார்த்த உலகில் நம்மை ஆழமாகக் கொண்டு செலுத்துவதே நல்லிலக்கியத்தின் நோக்கம்'

இவ்வாறு ம.திருமலை, "நீல.பத்மனாதனின் பள்ளி கொண்டபுரம்" கட்டுரையில் (1989) கூறுவது நாவலுக்குப் பொருத்த மானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய மொழிகளில் முதலாவதாக பியாரிசாத் மிஸ்ரா என்பவர் வங்காளமொழியில் 1858 இல் எழுதி வெளிவந்த பழங்குடி மக்கள் பற்றிய 'ஆலடர் காரர்ட்யூட்டல்' என்ற நாவலைத் தொடர்ந்து 1865 இல் சரத்சந்திரரின் முதல் நாவல் வெளியானது. தமிழில் 1876 இல் மாயூரம் வேதநாயகம்பிள்ளை எழுதிய "பிரதாப முதலியார் சரித்திரம்" போதனை களையும், நீதிப்பாடல்களையும் உள்ளடக்கியதாக வெளிவந்தது. சிலர் இதனை 1879 இல் வெளிவந்ததாகவும் கருதுவர். ஆனால் நடப்பியல் நாவல் எனக் கருதப்படும் ராஜம் ஐயரின் "கமலாம்பாள் சரித்திரம்" 1893 இல் வெளிவந்து புதிய நெல்நெறியைத் தொடக்கி வைத்தது. ஆங்கிலம் முதலான மொழிப்புலமையும், உத்தியோகம் பார்க்கும் மத்தியதர வர்க்கத்தினரின் தோற்றமும், புதிய அரசியல் சூழ்நிலைகளும், வணிகப் பெருக்கமும் 'நாவல்' என்ற புதிய இலக்கிய வடிவினைத் தமிழ்மொழியில் பிறப்பித்த காரணிகளெனலாம்.

ஸ்ரீ.வை. குருஸ்வாமி சர்மாவின் "பிரேமகலாவத்யம்" (1893), வேதநாயகம்பிள்ளையின் "சுகுணசுந்தரி சரித்திரம்" (1887), அ.மாதவையாவின் "பத்மாவதி சரித்திரம்" (1898), "முத்துமீனாட்சி"(1903), "விஜயமார்த்தாண்டம்" (1903) ஆகியன தமிழின் முன்னோடி நாவல்களாய் விளங்கின. பண்டிதர் ச.ம.நடேச சாஸ்திரி "தீனதயாளு" (1900) உட்பட ஆறு நாவல்களைத் தந்தார். வி.கோ.சூரியநாராயண சாஸ்திரியாரின் "மதிவாணன்" (1897), வி.ஏ.கோபாலகிருஷ்ண ஐயரின் "குணசீலன்" (1900), வி.நடராச அய்யரின் "ஞானபூசணி" (1896), டி.சி.நாராயணசாமிப்பிள்ளையின் "வினோதசரித்திரம்" (1886), ஓ.கே.கோபாலாசாரியின் "ஜீவரத்தினம்" (1889), சி.அருணாசல ஐயரின் "நீலா" (1900) ஆகிய நாவல்களும் இக்காலகட்டத்துக்குரியவை. மேலும் ஆரணி குப்புசாமி முதலியார், வடுவூர் கே.துரைசாமிஐயங்கார், ஜே.ஆர்.ரங்கராஜு ஆகியோர் துப்பறியும் நாவல்களையும், தழுவல் நாவல்களையும் ஏராளமாக எழுதி வாசகர்களிடையே புகழ்பெற்றனர். பெண்களிலும் நாவல் எழுதும் முயற்சியில் சிலர் ஈடுபட்டனர். பண்டிதை விஷாலாட்சி அம்மாள் 1906 இலிருந்து 14 நாவல்களை எழுதினார். பத்திரிகையாசிரியராகவும், எண்பதுக்கு மேற்பட்ட நாவல்களையும் எழுதிய வை.மு.கோதைநாயகி அம்மாளின் முதல் நாவலான "வைதேகி" 1925 இல் வெளிவந்தது. வ.ராமசாமி (வ.ரா)யின் நாவல்கள் "சுந்தரி", "விஜயம்", "கோதைத்தீவு", "சின்னச்சாம்பு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன. மறைமலையடிகளின் "நாகநாட்டரசி"யானது மொழி பெயர்ப்பு நாவலாகும். 1920 ஆம் ஆண்டுக்கு முன்னர் பாரதியாரும் "சந்திரிகையின் கதை" என்ற நாவலை எழுதியிருந்தார். பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளையும் "ராஜி" என்னும் நாவலை முப்பதுகளில் தமிழுக்குத் தந்தார். தேசியவுணர்வையூட்டிய கா.சீ.வேங்கட ரமணியின் "முருகன் ஓர் உழவன்" (1927), "தேசபக்தன் கந்தன்" (1932) ஆகிய நாவல்கள் மக்களின் வரவேற்பைப் பெற்றன.

தமிழில் வரலாற்று நாவலைத் தொடக்கி வைத்து சனரஞ்சகமான வரவேற்பைப் பெற்றவர் கல்கி.ரா.கிருஸ்ணமூர்த்தி. அவரது 'பார்த்திபன் கனவு' (1941 – 43) 'சிவகாமியின் சபதம்' (1944 – 46) 'பொன்னியின் செல்வன்' (1950 – 54) ஆகியன முக்கியமானவை. 35 நூல்கள் வரை அவரால் படைக்கப்பட்டன. 1937 – 38 இல் 'ஆனந்தவிகடன்' சஞ்சிகையில் அவரெழுதி நூலாக 1938 இல் வெளிவந்த தொடர் சமூக நாவல் 'கள்வனின் காதலி'யாகும். இதுவே அவரது முதல் நாவலாகும். 1938 – 39 இல் அதே சஞ்சிகையில் 'தியாகபூமி'யை எழுதினார். 'சோலைமலை இளவரசி' (1947), 'அலைஓசை' (1948 – 49), 'மகுடபதி' (1942), 'பொய்மான் கரடு' (1950), 'தேவகியின் கணவன்' (1950), அபலையின் கண்ணீர் (1947), புன்னைவனத்துப்புலி (1952) ஆகியவை கல்கியின் சமூக நாவல்களாகும். கிராமங்களுக்குச் செல்லுங்கள் என்ற மகாத்மாகாந்தியின் கோரிக்கைக் கிணங்க இந்தியாவின் முதல் வட்டார நாவலாக ஆர். ஷண்முகசுந்தரம் எழுதிய 'நாகம்மாள்' (1942) விளங்குகிறது.

இத்தகைய முன்னோடி முயற்சிகளைத் தொடர்ந்து தமிழ் நாவலிலக்கியமானது வரலாறு, சமூகம், இதிகாசம், புராணம் என்ற வழியில் பரந்த கருப்பொருள்களை அவாவி நின்று பல நூற்றுக்கணக்கான எழுத்தாளர்களின் கை வண்ணத்தில் பொலிவு பெறுவதாயிற்று. வாசகர்களிடையே வெற்றியும் தோல்வியும் கண்டன இவர்களது படைப்புகள். நடப்பியல் சார்ந்த கற்பனை களையும், அதீத கற்பனைகளையும் இப்புதினங்கள் பிரதிபலித்தன. அகிலனின் 'பாவை விளக்கு', 'சித்திரப்பாவை' (ஞானபீடப்பரிசு பெற்ற முதல் தமிழ் நாவல்), 'வேங்கையின் மைந்தன்', 'கயல்விழி', 'வாழ்வு எங்கே' ஆகியனவும், நா.பார்த்தசாரதியின் 'பாண்டிமாதேவி', 'குறிஞ்சிமலர்', 'சமுதாயவீதி' ஆகியனவும், டாக்டர் மு.வரதராசனின் 'அல்லி', 'செந்தாமரை', 'கள்ளோ? காவியமோ'? 'அகல்விளக்கு'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவைகளும், கொத்தமங்கலம் சுப்புவின் 'தில்லானா மோகனாம்பாளும்', சாண்டில்யனின் 'யவனராணி', 'கடல்புறா', 'ராஜமுத்திரை' முதலான வரலாற்று நாவல்களும், ஜெகசிற்பியனின் 'நந்திவர்மன் காதலி', 'திருச்சிற்றம்பலம்', 'பத்தினிக்கோட்டம்' போன்றவைகளும், தேவனின் 'மிஸ்ரர் வேதாந்தம்', 'துப்பறியும் சாம்பு' ஆகியவைகளும், அரு.ராமநாதனின் 'வீரபாண்டியன் மனைவியும்' மக்கள் மத்தியில் வரவேற்புப் பெற்ற சமூக, வரலாற்று நாவல்களில் சிலவாகும். காலமாற்றத்துக்கிசைவாகத் தமிழ் நாவல்களில் யதார்த்தப்போக்கும் சமகாலப் பிரச்சினைகளைக் கையாளலும் அதிகரித்தன. கதை சொல்லும் பாங்கிலும் மாற்றங்கள் காணப்பட்டன. குறுநாவல், நாவல் எனப் பேதங்களும் நிலவின. மொழிபெயர்ப்பு நாவல்கள் பலவும் தோன்றின. இந்திய மொழிகளில் சிறந்த எழுத்தாளர்களின் நாவல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. ஏனைய மொழி எழுத்துக்களும் தமிழுக்கு நாவல்களாக மாற்றங்கண்டன.

விந்தன் (பாலும் பாவையும்), டி.கே.சீனிவாசன் (ஆடும் மாடும்), தி.ஜானகிராமன் (அம்மா வந்தாள், மோகமுள், செம்பருத்தி), பி.எஸ்.ராமையா (பிரேமஹாரம்), அறிஞர் அண்ணா (பார்வதி பீ.ஏ, ரங்கோன் ராதா), சி.சு.செல்லப்பா (வாடிவாசல், சுதந்திரதாகம்), ஹெப்சிபா யேசுதாசன் (புத்தம்வீடு, டாக்டர் செல்லப்பா), லட்சுமி (காஞ்சனையின் கனவு, மிதிலாவிலாஸ், பெண்மனம், ஒரு காவிரியைப் போல), ராஜம் கிருஷ்ணன் (வளைக்கரம், அலை வாய்க்கரையில்), சுந்தரராமசாமி (ஜே.ஜே சில குறிப்புக்கள்), க.நா.சுப்பிரமணியம் (கோதை சிரித்தாள், பித்தப்பூ), த.ஜெயகாந்தன் (சில நேரங்களில் சில மனிதர்கள், சுந்தரகாண்டம்), நீலபத்மநாதன் (தேரோடும் வீதி), விட்டல்ராவ் (காலவெளி), இந்திராபார்த்தசாரதி (ஏசுவின் தோழர்கள்), அசோகமித்திரன் (ஆகாயத்தாமரை, ஒற்றன்), சா.கந்தசாமி (சாயாவனம், தொலைந்து போனவர்கள்), பூமணி (வெக்கை, பிறகு, நைவேத்தியம்), ஆ.மாதவன் (கிருஷ்ணப்பருந்து), பிரபஞ்சன் (வானம் வசப்படும்), சின்னப்பபாரதி (தோழர், சங்கம்), சு.சமுத்திரம் (ஒரு கோட்டுக்கு வெளியே), மு.கருணாநிதி (தென்பாண்டிச்சிங்கம்), சுஜாதா (ரத்தம் ஒரே நிறம்), தோப்பில் முகம்மது மீரான் (கடலோரக் கிராமத்தின் கதை, கூனன் தோப்பு), காவேரி (ஆத்துக்குப் போகணும்), சிவகாமி (பழையன கழிதலும்), தமிழவன் (ஏற்கெனவே சொல்லப்பட்ட மனிதர்கள்), கி.எம்.முத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கறிச்சோறு), பாவண்ணன் (வாழ்க்கை ஒரு விசாரணை), கி.ஆர்.ரவீந்திரன் (ஈரநிலம், அங்குத்தாய்), ஜெயமோகன் (விஷ்ணு புரம்) ஆகியோரது நாவல்கள் குறிப்பிடத்தக்க சில உதாரணங் களாகும். இவை போன்று பல எழுத்தாளர்களின் படைப்புகளான நாவல்கள் தமிழன்னையை வளப்படுத்தியுள்ளன. இவையனைத்தும் இந்தியத் தமிழ் மண்ணிலிருந்து பூத்தவை. இன்றும் கூட ஏராளமாகத் தமிழ் நாவல்கள் நூல்களாகவும், பத்திரிகை - சஞ்சிகைகளிலும் வந்த வண்ணமேயுள்ளன. உலகத் தரத்திற்கு ஏற்றவகையில் அவை அமையுமாயின் தமிழிலக்கியம் பெருமை பெறுமெனலாம்.

உலகில் ஏற்பட்ட சமூக, அரசியல், பொருளாதார, கல்வி மாறுதல்கள் தமிழ் நாட்டில் நாவல் இலக்கியம் தோன்றுவதற்கு எவ்வாறு உந்து சக்தியை அளித்தனவோ, அதே போன்று இலங்கையிலும் மாறுதல்களை ஏற்படுத்திப் புதிய படைப்புகளில் ஆர்வங் கொள்ளச் செய்தன. படித்தவர்களிடையே இதற்கான அக்கறை எழுந்தது. 1885 இல் அறிஞர் சித்திலெப்பையின் பலஸ்தீனக் கதையாகிய 'அசன் பேயுடைய கதை', 'முஸ்லிம் நேசன்' அழுத்தகத்தில் அச்சிடப்பட்டு வெளிவந்தது. இதுவே ஈழத்தின் முதற்றமிழ் நாவலாகக் கருதப்படுகிறது. 1856 இல் 'காவலப்பன் கதை' வெளிவந்ததாயினும், அது Parley the Porter என்ற (ஹன்னாமூர் இதன் ஆசிரியர்) ஆங்கில நூலின் தமிழாக்கமாகும். இது யாழ்ப்பாணம் ரிலிஜஸ் சொசைட்டியின் வெளியீடாகும். இதே போன்று போர்த்துக்கேயக் கதையொன்றினை ஆதாரமாகக் கொண்டு திருகோணமலை எஸ்.இன்னாசித்தம்பியால் எழுதப்பட்ட 'ஊசோன் பாலந்தை கதை'யானது 1891 இல் வெளியானது. இருப்பினும் தமிழில் முதலாவது வரலாற்று நாவலும் ஈழத்தின் இரண்டாவது நாவலுமாகிய 'மோகனாங்கி' 1895 இல் வெளிவந்தது. திருகோணமலை தி.சரவணமுத்துப்பிள்ளை இந்நாவலை எழுதினார். தமிழ் நாட்டுச் சோழராட்சிக் காலப் பின்னணியைக் கொண்ட நாவலிது. சார்ளஸ் கிங்சிலி என்பவரெழுதிய 'ஹைபாதியா' என்னும் நாவலைத் தழுவி எழுதப்பட்டது.

தமிழறிஞர் சி.வை.தாமோதரம்பிள்ளையின் இளைய சகோதரரான சி.வை.சின்னப்பிள்ளை எழுதிய 'வீரசிங்கன் கதை அல்லது சன்மார்க்க ஜெயம்' (1905), 'விஜயசீலம்' (1916), 'உதிரபாசம் அல்லது இரத்தினபவானி' (1915) ஆகியன ஈழத்து மண்ணை நிலைக்களனாகக் கொண்டு எழுதப்பட்டவை. திருமதி மங்கள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயகம் தம்பையா தமது 'நொருங்குண்ட இருதயம்' (1914) மூலம் ஈழத்தின் முதற்பெண் தமிழ் நாவலாசிரியையானார். கிறிஸ்தவ சமயச் சார்பான சமூகச் சீர்திருத்தத்தினை நோக்கமாகக் கொண்டது இந்நாவலாகும். 'அரியமலர்' (1926) என்ற நாவலையும் இவர் எழுதினார். சாதிப் பிரச்சினையை வெளிப்படுத்தும் முதல் நாவல் 1925 இல் இடைக்காடர் எழுதிய 'நீலகண்டன் ஒரு சாதி வேளாளன்' ஆகும். இவர் 'சித்தகுமாரன்' நாவலையும் இதே ஆண்டில் எழுதினார். திருமதி செம்பொற்சோதீஸ்வரர் செல்லம்மா வின் 'இராசதுரை' (1924), எஸ்.தம்பிமுத்துப்பிள்ளையின் 'சுந்தரன் செய்த தந்திரம்' (1918), 'அழகவல்லி' (1926), 'இந்துசாதனம்' 'பத்திரிகாசிரியர்' ம.வே.திருஞானசம்பந்த பிள்ளையின் 'காசிநாதன் நேசமலர்' (1924), கோபாலநேசரத்தினம் (1927), 'துரைரத்தினம் நேசமலர்' (1928), எஸ்.கே.சுப்பிரமணியம் எழுதிய 'நீலா' (1918), அ.நாகலிங்கம் பிள்ளையின் 'சாம்பசிவஞானாமிர்தம் அல்லது 'நன்னெறிக் களஞ்சியம்' (1927), வண்ணை மா.சிவராமலிங்கம் பிள்ளையின் 'பூங்காவனம்' (1930), வ.மு.சின்னத்தம்பியின் 'வீரம்மாள் அல்லது விபரீத மங்கை' (1930), சார்ள்ஸ் ஸ்ரிக்னியின் 'தேம்பாமலர்' (1929), 'ஞானபூரணி' (1933), சி.வே.தாமோதரம்பிள்ளையின் 'காந்தமலர்' அல்லது 'கற்பின் மாட்சி' (1936), மூத்ததம்பி செல்லப்பாவின் 'சுந்தரவதனா அல்லது இன்பக்காதலர்' (1938), வரணியூர் ஆ.சி.இராசையாவின் 'பவளகாந்தன் அல்லது கேசரிவிஜயம்' (1932), 'அருணோதயம் அல்லது சிம்மக்கொடி' (1933), ஆகியன ஈழத்திலெழுந்த முன்னோடித் தமிழ் நாவல்களாகும். தமிழ் நாட்டைப் போலவே தாம் எழுதிய நாவல்களுக்கு இரண்டு தலைப்புக்கள் கொடுக்கும் பழக்கத்தைச் சிலர் கையாண்டனர். சமய, சமூக, வரலாற்று அம்சங்களைக் கூடுதலாக கருப்பொருள்களாகக் கொண்டனர். சமூக நன்மை கருதிய போதனைப் பண்பும் அவர்களது நாவல்களில் காணப்பட்டது.

இதுவரை எழுநூற்றுக்கு மேற்பட்ட ஈழத்துத் தமிழ் நாவல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் அதிகமானவை குறுநாவல்களாகும். 500க்கு மேற்பட்ட பக்கங்களைக் கொண்டதாக ஒரு தமிழ் நாவல் ஈழத்தில் இன்னமும் வெளிவரவில்லை. பொருளாதாரப் பிரச்சினையும் இதற்குக்குரிய காரணிகளிலொன்றாகும். யாழ்ப் பாணம், வன்னி, மட்டக்களப்பு, திருமலை, தென்னிலங்கை எனப் பிரதேச நாவல்களும் இஸ்லாமிய, இந்து, கிறிஸ்தவப் பாரம்பரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவல்களும், செந்தமிழ் நடையிலும் பேச்சு மொழி நடையிலும் அமைந்த நாவல்களும் இவற்றுள் காணப்படுகின்றன. சிங்களத் திலிருந்து 'கம்பரெலிய' போன்ற நாவல்களும் (கிராமப்பிறழ்வு), ஏனைய மொழிகளிலிருந்து சில நாவல்களும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவை தவிரத் தழுவல் நாவல்களும் உள.

'சோமாவதி அல்லது இலங்கை இந்தியர் நட்பு' (1940) நாவலை எழுதிய 'வீரகேசரி' ஆசிரியராயிருந்த எச்.நெல்லையா பல நாவல்களைப் பத்திரிகைத் தொடர்களாகத் தந்தவர். 'ஈழகேசரி', 'வீரகேசரி', 'தினகரன்', 'சுதந்திரன்' ஆகிய பத்திரிகைகளில் பல நாவல்கள் தொடர்களாக வெளிவந்துள்ளன. அவற்றுள் பல பின்னர் நூல் வடிவம் பெற்றன. நாவல்களுக்கான கருப்பொருள்களும் பின்னணிகளும் சமூக யதார்த்தத்தை நோக்கித் திரும்பிய போது பல்வேறு சமூகப்பிரச்சினைகள் அலசி ஆராயப்பட்டன. பெண்ணடிமை, பெண் விடுதலை, சாதியொடுக்கு முறை, வர்க்க பேதம், தனிமனித ஒழுக்கம், இறைநம்பிக்கை, சமயசமரசம், இனஒற்றுமை, இனமுரண்பாடுகள், கல்விப் பிரச்சினைகள் என்றவாறு ஈழத்துத் தமிழ் நாவல்களின் பாடுபொருள்கள் பன்முகங்களை வெளிக்காட்டின. தமிழர்களும் இஸ்லாமியர்களும் தமிழ் நாவல்களைப் படைத்தனர். இன்றுவரை அந்தப்பணி தொடர்கிறது. ரவீந்திரநாத் தாகூரின் நாவலொன்றை 'அறுந்த தளைகள்' (1937) என்ற பெயரில் ரவீந்திரனும், ஜெர்மானிய நாவலாசிரியர்களான வில்ஹெல்ம் ஸ்மித், தோமஸ்மான் ஆகியோரது படைப்புகளைப் 'போட்டி' (1941), 'மனவிகாரம்' (1945) ஆகிய தலைப்புகளில் முறையே அ.செ.முருகானந்தம், சோணாசலம் ஆகியோரும் முல்க்ராஜ் ஆனந்தின் untouchable நாவலை கே.கணேஸ் 'தீண்டாதான்', என்ற பெயரிலும் மார்ட்டின் விக்கிரமசிங்கவின் சிங்களநாவலான 'கம்பரெலிய'வை பேராசிரியர் ம.மு.உவைஸ் 'கிராமப் பிறழ்வு' என்ற தலைப்பிலும் தமிழுக்குக் கொண்டு வந்தனர். இது போன்றதாக எமிலிஜோலாவின் பிரெஞ்சு நாவலான 'நானா'வை அ.ந.கந்தசாமி மொழிபெயர்த்தார். இவை போன்று செ.கதிர்காமநாதன், சொக்கன், இலங்கையர்கோன், சி.வைத்திலிங்கம், தேவன் போன்றோர் மொழிபெயர்ப்புக்களைத் தந்துள்ளனர்.

பொன் குமாரவேற்பிள்ளை (உத்தம மனைவி 1935), கே.வி.செல்லத்துரை (சுசீலா 1939), வில்லன் (மல்லிகை 1940),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி.ச.வரதராசன் (சோமுவின் காதல் 1943), சம்பந்தன் (பாசம் 1947), க.சச்சிதானந்தன் (அன்னபூரணி 1942), கு.வே (மனநிழல் 1948), யாழ்ப்பாணம் தேவன் (கேட்டதும் நடந்ததும் 1954 - 55), க.சிவகுருநாதன் (சகடயோகம் 1949), சொக்கன் (மலர்ப்பலி 1947) ஆகியோரது பங்களிப்புகளும் கவனிப்புக்குரியவை களாகும். அ.செ.முருகானந்தம் எழுதிய குறுநாவல்களான 'வண்டிச்சவாரி '(1944), புகையில் தெரிந்த முகம் (1950) ஆகியனவும் 'யாத்திரை' (1958) தொடர் நாவலும் யாழ்ப்பாண மண் வாசனையை நுகரவைப்பவை. 'வீரகேசரி' ஆசிரியராயிருந்த கே.வி.எஸ்.வாஸ் அவர்கள் 'ரஜினி' என்ற புனை பெயரில் 'குந்தளப்பிரேமா' (1949 - 50), 'நந்தினி' (1953), 'தாரிணி' (1954), 'மலைக்கன்னி' (1955), 'உதயகன்னி' முதலிய நாவல்களைத் தொடராக எழுதியுள்ளார். கனக செந்திநாதன் (விதியின் கை - 1953, வெறும்பானை 1956 - 57), வ.அ.இராசரெத்தினம் (கொழுகொம்பு 1955 - 56, துறைக்காரன் 1959), சி.வி.வேலுப்பிள்ளை (வீடற்றவன், வாழ்வற்ற வாழ்வு), டி.எம்பீர் முகமது (கங்காணிமகள்), நந்தி (மலைக்கொழுந்து 1962), சொக்கன் (செல்லும் வழி இருட்டு 1961), ஆகியனவும் ஈழத்தமிழ் நாவல் வரிசையில் முன்முயற்சிகளாக விளங்குவன.

ஐம்பதுகளில் ஈழத்தமிழ் நாவலுக்குப் புதிய பரிமாணங் கொடுத்தவர்களில் சுபைர் இளங்கீரன் முக்கியமானவர். முற்போக்குச் சிந்தனைகளுடன் இவர் படைத்த நாவல்களில் 'தென்றலும் புயலும்' (1955), 'நீதியே நீ கேள்' (1959), 'புயல் அடங்குமா' (1954), 'சொர்க்கம் எங்கே' (1955), 'மனிதர்கள்' (1956), 'இங்கிருந்து எங்கே?' (1961), 'காலம் மாறுகிறது' (1964) ஆகியன 'தினகரன்' பத்திரிகையில் தொடராக வந்தவை; சில நூல் வடிவிலும் வந்துள்ளன. 'மண்ணில் விளைந்தவர்கள்' (1960), 'அவளுக்கு ஒரு வேலை வேண்டும்' (1972), 'அன்னை அழைத்தாள்' ஆகியனவும் இளங்கீரனது நாவல்களாகும்.

எழுத்தாளர் செ.கணேசலிங்கம் சாதிப்பிரச்சினை, அரசியற் பிரச்சினை மற்றும் வர்க்க சமத்துவம் சார்ந்த 38 நாவல்களைப் படைத்துள்ளார். 'நீண்ட பயணம்' (1965), 'சடங்கு' (1966), 'போர்க்கோலம்' (1969), 'செவ்வானம்' (1967), 'தரையும் தாரகையும்' (1968) போன்றவை குறிப்பிடத்தக்கவை. செங்கையாழியான் க.குணராசா நாற்பதுக்கு மேற்பட்ட நாவல் - குறுநாவல்களை மண்வாசனையோடும், மரபுகளோடும் தந்தவர். 'பிரளயம்',

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'காட்டாறு', 'அக்கினி', 'ஒரு மைய வட்டங்கள்', 'வாடைக்காற்று' என்பன அவரது சிறந்த நாவல்களிலடங்குவன. தலித் எழுத்தாளர் எனக் கருதப்படும் கே.டானியலின் 'பஞ்சமர்', 'கோவிந்தன்', 'அடிமைகள்', 'தண்ணீர்', 'கானல்', 'பஞ்சகோணங்கள்', 'போராளிகள் காத்திருக்கின்றனர்' முதலானவை ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்வுகளை அடிப்படையாகக்கொண்டவை.

சாதிப் பிரச்சினையை நவீன வடிவத்தில் முதன்முதல் சித்திரித்த ஈழத்தமிழ் நாவல் சொக்கனின் 'சீதா'வாகும். ஞானசேகரனின் 'புதிய சுவடுகள்', 'குருதிமலை' நந்தியின் 'தங்கச்சியம்மா', 'மலைக்கொழுந்து', கோகிலம் சுப்பையாவின் 'தூரத்துப்பச்சை', பாலேஸ்வரியின் 'பூசைக்கு வந்த மலர்', 'சுடர் விளக்கு', ஈழத்துச்சோமுவின் 'விடிவெள்ளி பூத்தது', தெணியானின் 'விடிவைநோக்கி', 'மரக்கொக்கு', 'கானலில்மான்', 'கழுகு', தெளிவத்தை ஜோசப்பின் 'காலங்கள் சாவதில்லை', கே.டேவிட்டின் 'வரலாறு அவளைத் தோற்றுவிட்டது', எஸ்.பொன்னுத்துரையின் 'தீ', 'சடங்கு', 'ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் 'ஒரு கோடை விடுமுறை', ஷோபாசக்தியின் 'கொரில்லா', 'ம்', சட்டநாதனின் 'நீலும்பாலை' குறுநாவல், மு.தளையசிங்கத்தின் 'ஒரு தனி வீடு', செ.யோகநாதனின், 'காவியத்தின் மறுபக்கம்', 'நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே', தாமரைச்செல்வியின் 'சுமைகள்', 'தாகம்', 'பச்சை வயல் கனவு', புலோலியூர் சதாசிவத்தின் 'மூட்டத்தி னுள்ளே', 'நாணயம்', செம்பியன் செல்வனின் 'நெருப்பு மல்லிகை', ஞானரதனின் 'ஊமை உள்ளங்கள்', யோ.பெனடிக்பாலனின் 'குட்டி', சொந்தக்காரன்', ஐ.சாந்தனின் 'ஓட்டுமா' குறுநாவல், சோ.ராமேஸ்வரனின் 'மௌன ஓலங்கள்', முல்லைமணியின் 'வன்னியர் திலகம்', 'மழைக்கோலம்', எஸ்.அகஸ்தியரின் 'திருமணத்துக்காக ஒரு பெண் காத்திருக்கிறாள்', 'இருளினுள்ளே', சிற்பியின் 'உனக்காகக் கண்ணே', கோகிலா மகேந்திரனின் 'துயிலும் ஒருநாள் கலையும்', 'தூவானம் கவனம்', அருளரின் 'லங்காராணி', கே.விஜயனின் 'விடிவு கால நட்சத்திரம்', மலரவனின் 'போர் உலா', ஆ.மு.சி.வேலழகனின் 'சில்லி ஆற்றங்கரை', அருள் சுப்பிரமணியத் தின் 'நான்கெடமாட்டேன்' 'அவர்களுக்கு வயது வந்துவிட்டது', 'அக்கரைகள் பச்சையில்லை' ஆகிய நாவல்கள் வாசகர்களின் கவனத்துக்கும், ஆய்வாளர்களின் நோக்குகளுக்கும் உரியனவாக விளங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.பாலமனோகரன் எழுதிய 'நிலக்கிளி', 'குமரபுரம்' ஆகிய நாவல்கள் வன்னிப்பிரதேத்துக்குரிய பண்புகளைச் சித்திரிப்பவை. சிக்கன்ராஜ் எழுதிய 'தாயகம்' மலையகம் பற்றியது. 'ஒரு வெண்மணற் கிராமம் காத்துக்கிடக்கிறது' மூதூர் பிரதேசச்சூழலைச் சித்திரிக்கும் வ.அ.இராசத்தினத்தின் பிற்கால நாவல். இவை தவிர கோவிந்தனின் 'புதியஉலகம்', செங்கையாழியானின் 'மரணங்கள மலிந்த பூமி', மாத்தளை சோமுவின் 'நான்காவது உலகம்' முதலான நாவல்களையும் நாம் அவதானிக்க முடிகிறது. இங்கே எடுத்துக்காட்டுகளாகத் தரப்பட்ட பட்டியலில் காணப்படும் நாவல்களும், நாவலாசிரியர்கள் பெயர்களும் மேலோட்டமான தெரிவுகளாகும். அண்மையில் கூடச்சில நாவல்கள் வெளிவந்துள்ளன. உதயணன் (பனிநிலவு), தேவகாந்தன் (கனவுச்சிறை), வி.ஜீவகுமாரன் (சங்கானைச்சண்டியன்.), என்.நடேசன் (வண்ணாத்திக் குளம்) முதலான புலம்பெயர்ந்த ஈழத்தவர்கள் பலர் நிறைய நாவல்களைப் படைத்து வருகின்றனர். இவர்களுள் ஓரிரு நாவல்களை எழுதியோரும் உள்ளனர். கூடுதலான படைப்புகளைத் தந்தோரும் உள்ளனர். இளைய தலைமுறையைச் சேர்ந்த இஸ்லாமிய - தமிழ் எழுத் தாளர்கள் பலர் இன்று ஈழத்தமிழ் இலக்கியத்துக்குத் தமது நாவல் மற்றும் ஏனைய படைப்புகளூடாகப் புதிய இரத்தம் பாய்ச்சி வருகின்றனர். பெண் எழுத்தாளர்களும் அதிகரித்த அளவில் எழுதி வருகிறார்கள். பிரதேசஞ் சார்ந்த பண்புகளை வெளிப்படுத்தும் இலக்கியப்படைப்புகள் வந்த வண்ணமேயுள்ளன. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக கணினி அச்சுப் பதிப்பகங்கள் அதிகரித்துள்ளமையால் வெளீயீடுகளும் அதிகரித்துள்ளன. இணையத் தளங்களிலும் குறுநாவல்கள் வெளிவருகின்றன. அதிகமான நாவல்கள் வருவதிலும் பார்க்கத் தரமான நாவல்கள் வருவதனாற்றான் ஈழத்தமிழிலக்கியம் பயன் எய்த முடியும். சர்வதேச தரத்துக்கு எட்டக்கூடிய நாவல்களை ஈழத்து எழுத்தாளர்கள் இனிவருங் காலத்திலாவது படைப்பார்களென நம்புவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலாசிரியர் அறிமுகம்



- வ.அ.இராசரத்தினம்

ஈழத்தமிழ் இலக்கியத்துக்குக் கிழக்கிலங்கை மண்வாசனையோடு ஆக்கபூர்வமான படைப்புகளை அளித்தவர்களுள் முதன்மையானவர் வ.அ.இராசரத்தினம் அவர்கள். கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை, மொழிபெயர்ப்பு, விமர்சனம், வரலாறு, நூற்பதிப்பு என அவருடைய இலக்கியப் படைப்பின் பன்முகங்கள் விரிகின்றன. ஈழத்தமிழ் இலக்கியத்தில் தனது காத்திரமான பங்களிப்பின் மூலம் நிலைபெற்று நிமிர்ந்து நிற்பவர் அவர்.

இயற்கை எழில் கொஞ்சும் மூதூர் கடற்கரைக்கிராமத்தில் வஸ்தியாம்பிள்ளை அந்தோனி - அந்தோனியா தம்பதியருக்கு இரண்டாவது மகவாக 05.06.1925இல் பிறந்த இராசரத்தினம், ஆசிரியரான தந்தையின் வழிகாட்டலாலும், குடும்பத்தின் கத்தோலிக்க பண்பாட்டுச் சூழலாலும், பெண்களிருவரும் ஆண்கள் மூவருமான உடன்பிறப்புகளின் பாசப்பிணைப்பினாலும் நல்லதொரு மானிடனாக வளர்ந்து வந்தார். தந்தையார் பணி செய்த மூதூர் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும், மூதூர் அந்தோனியார் பாடசாலையில் இடைநிலைக் கல்வியையும் கற்ற பின், மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஈராண்டுகள் (1946 - 1947) பயிற்சி பெற்று 01.10.1948 முதல் ஆசிரியரானார். முதல் நியமனம் டெனியாய புனித மத்தியூஸ் கல்லூரியில் கிடைத்தது. அதற்குபின் மொறட்டுவ, திருகோணமலை, சம்பூர், உப்பாறு, பள்ளிக்குடியிருப்பு, இறால்குழி, சேனையூர், மூதூர், பாரதிபுரம், பெரியவெளி ஆகியவிடங்களிலுள்ள பாடசாலைகளில் ஆசிரியராகவும், பின் அதிபராகவும் பணியாற்றி 1985ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

1952இல் மூதூர் அந்தோனி றோச்டிவாஸ் - பிரகாசியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பதியரின் மகளான ஆசிரியை மேரிலில்லி திரேசாவைத் திருமணஞ் செய்து பத்துப்பிள்ளை களுக்குத் (ஏழு ஆண்கள், மூன்று பெண்கள்) தந்தையானார் வ.அ.இ அவர்கள். தமிழ்மொழி மூலம் கல்வி கற்றவரான போதிலும், சுயமாகவே ஆங்கிலமொழியையுங் கற்று அம்மொழியிலுள்ள இலக்கியங்களைத் தமிழுக்கு மொழி பெயர்க்குமளவுக்குப் புலமையாளரானார். இவரது பாடசாலைக் கல்வி ஆசிரியர்களில் திரு.ஏ.எஸ்.லிகோரி, திரு.சுப்பிரியன்பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். தந்தையாரிடம் நிகண்டுகளைக் கற்றுக் கொண்ட பயிற்சியும் அவருக்குக் கைகொடுத்தது. ஆசிரியகலாசாலைக் காலமே எழுத்துத் துறையில் ஈடுபடுவதற்கான உந்துதல்களையும், வாய்ப்புகளையும் அவருக்களித்தது. ஆசிரிய பயிற்சி நிறைவில் ஆக்கப்பாட்டு வேலைகளைச் செய்து சமர்ப்பிக்க வேண்டிய தேவையேற்பட்ட போது கவிதை சார்பாக முயன்றவிடத்து அதன் போதாமை கண்டு சிறுகதைகளை எழுதிச் சமர்ப்பித்தார். அந்தப் படைப்பிலக்கியங்களில் ஒரு சிறுகதையான "மழையால் இழந்த காதல்" என்பது "தினகரன்" பத்திரிகையில் (1948) வ.அ.இயின் முதற் சிறுகதையாக வெளிவந்தது.

ஏனைய படைப்புக்கள் "வசந்தம்" சஞ்சிகையில் இரண்டு வருடங்களாக மாதந்தோறும் வெளிவந்தன. 250க்கு மேற்பட்ட சிறுகதைகள், 150க்கு மேற்பட்ட வானொலி நாடகங்கள், மூன்று மேடை நாடகங்கள், நான்கு நாவல்கள், மூன்று குறுநாவல்கள், ஏராளமான கட்டுரைகள் உட்பட வ.அ.இராச ரத்தினத்தின் எழுத்துக்கள் பலவாகும். "ஈழகேசரி", "தினகரன்", "வீரகேசரி", "கலைவாணி", "தமிழின்பம்", "இளம்பிறை", "விவேகி", "தினபதி", "சுடர்" முதலான பல ஏடுகளில் அவர் எழுதினார். 01.10.1950 "ஈழகேசரி"யில் அவரது "இதயதாகம்" சிறுகதை வெளிவந்தது. அப்பத்திரிகையில் 1957 நவம்பர் வரை 29 சிறுகதைகளையும், "கொழுகொம்பு" என்ற நாவலையும் (1956), இருபத்திரண்டு பத்தியெழுத்துக் கட்டுரைகளையும், இரண்டு கவிதைகளையும் தந்து "ஈழகேசரிப்" பண்ணையில் வளர்ந்த எழுத்தாளரானார்.

ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் மிகவும் சிறந்த ஒன்றாகக் கருதப்படும் "தோணி" 20.12.1953இல் "ஈழகேசரி"யில் வெளிவந்ததாகும். பின்னர் (1962)இந்தத் தலைப்பில் இவரது 14 சிறுகதைகள் அடங்கிய தொகுதி நூல் அரசு பதிப்பக வெளியீடாக வந்தது. "தோணி" சிறுகதையானது 18 அவதாரங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துள்ளது. அக்கரைச்சேனை முஸ்லீம்களின் கதையான இதனைத் தமிழ் மீனவர் கதையாக வ.அ.இ படைத்தளித்தார். கருப்பொருளினாலும், கலைத்துவத்தினாலும் சிறந்து விளக்கும் சிறுகதையிது. இதனுடன் "அறுவடை" என்ற சிறுகதையையும் சேர்ந்து "மிகச்சிறப்பான இராசரத்தினத்தின் சிறுகதைகள்: எனச் செங்கையாழியான் (2001) குறிப்பிட்டுள்ளார். ஈழத்துச் சிறுகதைகள், அக்கரை இலக்கியம், மஞ்சரி, ஆகியவற்றில் "தோணி" மறுபிரசுரஞ் செய்யப்பட்டது. மேலும் சிங்களம், மலையாளம், ஆங்கிலம், ரஷ்யன் ஆகிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

1955களிலேயே "ஈழகேசரி"யில் "ஈழநாகன்" என்னும் புனைபெயரில் தேசிய இலக்கியம், பிராந்திய இலக்கியம், உருவமும் உள்ளடக்கமும், மண்வாசனை இலக்கியம், முற்போக்கு இலக்கியம் முதலான தலைப்புகளில் கட்டுரைகளை எழுதியிருந்தார் வ.அ.இ. பின்னர் "வீரகேசரி"யில் ஏராளமாக எழுதினார். ஈழத்தின் தமிழ் எழுத்தாளர் பலருடன் நட்புக் கொண்டிருந்தார். யாழ்ப்பாணத்த வருடன் அவருக்குள்ள இலக்கிய உறவும், அன்பும் விசேடமானது. இவரது எழுத்துக்களை ஈழத்தமிழ்த் தினசரிகளும், சஞ்சிகைகளும், சிறப்பு மலர்களும் வெளியிட்டு ஊக்குவித்தன. "குடிமகன்" நாடகம் இலங்கை வானொலியில் ஒலிபரப்பானது. இலங்கை வானொலி யுடன் சிங்கப்பூர் வானொலி, அகில இந்திய வானொலி, தென்கிழக் காசிய ஒலிபரப்பு ஆகியவற்றிலும் இவரின் நாடகங்கள் ஒலிபரப்பாகி வாசகர்களைக் கவர்ந்தன.

"முதற் துரோகம்", "முதல் முழக்கம்" என்பவை களும் இவரது நாடகங்களேயாகும். எழுத்தாளர் அ.செ.முருகா னந்தம் அவர்கள் திருகோணமலையிலிருந்து வெளியிட்ட "எரிமலை" பத்திரிகையில் இராசரத்தினத்தின் முதற்கவிதை வெளிவந்தது. அதில்

நேவி வேலை முடிஞ்சு போச்சு.
வீட்டுக்கு வாங்க
உங்க சேவை இனித் தேவல்லியாம்
வீட்டுக்கு வாங்க

என்ற அடிகள் இடம்பெற்றிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொழுகொம்பு" (1956), "துறைக்காரன்" (1959), "கிரௌவஞ்சப்பறவைகள்" (1975), "ஒரு வெண் மணற் கிராமம் காத்திருக்கிறது" (1993), "மண்ணிற் சமைந்த மனிதர்கள்" (1996) ஆகிய நாவல்களும், "தேய்பிறை" (1968), "சந்தானாள் புரவி" (1973), "ஒரு காவியம் நிறைவு பெறுகிறது" (1975), ஆகிய குறுநாவல்களும், "தோணி" (1962), "கொட்டியாரக் கதைகள்", "ஒரு காவியம் நிறைவு பெறுகிறது" ஆகிய சிறுகதைத் தொகுதிகளும், "பொச்சங்கள்", "ஐந்திணைக் கதைகள்", "வெள்ளிவீதியார்" (குறு நாவல்), "இலக்கிய நினைவுகள்", "பூவரசம்பூ" (மொழிபெயர்ப்புக் கவிதைகள்) ஆகிய படைப்புகளும் வ.அ.இ அவர்களது எழுத்துக்களை வெளிப்படுத்துவன. சரித்திரநாவல் "கிரௌவஞ்சப் பறவைகள்" ஆகும். இது "வீரகேசரிப்" பிரசுரமாக வெளியானது. 1991இல் "வீரகேசரி" யில் தொடராக வந்த "ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது" நாவலானது மட்டக்களப்பு உதயம் வெளியீடாக வந்தது. வ.அ.இ.அவர்கள் தமது அருமை மனைவியின் மறைவினால் ஏற்பட்ட மண வாழ்க்கை நினைவுகளை மீட்பதாக மனைவி மறைந்து ஒரு மாத காலத்தினுள் எழுதி வெளியிட்ட "ஒரு காவியம் நிறைவு பெறுகிறது" குறுநாவல் விளங்குகிறது. இதே தலைப்பில் இவரது 50 சிறுகதைகளைத் தொகுத்து மித்ர வெளியீடாக எஸ்.பொன்னுத்துரை அவர்கள் வெளிக்கொணர்ந்ததுடன், சென்னையில் நடைபெற்ற அதன் வெளியீட்டு விழாவில் (2001) வ.அ.இ. அவர்களையும் கலந்து கொள்ளச் செய்தார்.

மண்வாசனை, தேசியம், மதம், வாழும் மனிதர்களின் பிரச்சினைகள், வர்க்க வேறுபாடுகள் போன்றவை வ.அ.இராச ரத்தினம் அவர்களது எழுத்துக்களின் அடிநாதங்களான கருப் பொருள்கள். "தான் வாழும் பிரதேசத்து மக்களது வாழ்க்கை, பிரதேச அழகு, அவர்களின் வாழ்க்கையின் பலமும் பலவீனமும் என்பவற் றினை எழுத்தில் தந்துவிடும் ஆவலும், அவற்றினூடாகத் தாம் வாழ்கின்ற சமூகத்தின் மேம்பாட்டிற்குச் சில கருத்துகளைச் சொல்லிவிடும் ஆதங்கமும் அவரது படைப்புகளில் காணப் படுகின்றன." (செங்கையாழியான் – ஈழத்துச் சிறுகதை வரலாறு 2001).

தமிழர் பிரதேசங்களில் வலிந்து மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றம் பற்றிய முன்னோடிச் சிறுகதையாக இவரது "புதை பொருளாராய்ச்சி" ("ஈழகேசரி" 19.08.1956) அமைந்துள்ளது. "தையலக்கா", "மறைப்பு", "வலை", "உண்ணி", "அவசரம்",

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடலின் அக்கரை போனாரே", "கடலை ஞானம்", "நம்பிக்கை", "தலாக்", "வீடு", "நத்தார் ஓலம்", "கறுப்புநாய்", "வேர்கள்", "பிறந்தமண்", "ஓர் ஆலமரத்தின் கதை", "பாலை", "பாசம்", "இரசிகன்", "குதிரை", "குடிமகன்", "தாய்", "அபேதவாதி", "ஆண்மகன்" போன்றவை வ.அ.இ. யின் சில சிறுகதைகளாகும். சிறுகதை இலக்கியத்திலேயே அவரது பெரும் பணி அமைந்தது. இயல்பான கிழக்கிலங்கை - குறிப்பாக திருகோணமலைப் பிரதேசப் பேச்சுத் தமிழையும், தேவைப்பட்ட போது இலக்கியத் தமிழையும் தமது எழுத்துக்களில் கையாண்டவர். வ.அ.இ. "நான் ஏன் எழுதுகிறேன்?" என்ற தலைப்பில் 1970களில் திருமலையில் இயங்கிய "முன்னோடிகள்" அமைப்பினரின் கருத்தரங்கில் பேசியவர். முற்போக்காளருடனும் பழைமைவாதிகளுடனும் அனுசரித்துச் செல்கின்ற இயல்பினர். இவரது சங்க இலக்கியத் தேர்ச்சிக்கு "ஐந்திணைக் கதை" களும், "வெள்ளிவீதியார்" குறுநாவலும் சான்றுகள். மாணவ சமுதாயத்துக்குப் பயன்படக் கூடியதாக "பொச்சங்கள்" நூல் அமைந்துள்ளது. அவரது எழுத்துலக வாழ்க்கை பற்றிய நூலாக "இலக்கிய நினைவுகள்" நூல் காணப்படுகிறது. "தேய்பிறை" குறுநாவல் 1968இல் "விவேகி" சஞ்சிகையிலும், "சந்தானாள் புரவி" (1973) "மித்திரன்" வாரமலரிலும் வெளிவந்தவையாகும். கவிஞராகவே இலக்கியப் பிரவேசம் செய்த போதிலும் இவரது கவிதைத் தொகுதியாக "பூவரசம்பூ" மட்டுமே விளங்குகிறது. மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் உருதுக் கவிஞர் அல்லாமா இக்பால் அவர்களின் துர்ஸினாவின் பயாம் - இமஷ்ரிக் என்ற கவிதையை ஆங்கில மூலத்திலிருந்து "பூவரசம்பூ" என்ற பெயரில் படைத்தளித்தார். 1977இல் இது நூல் வடிவம் பெற்றது. ஜனாப் எஸ்.எம்.கமாலுத்தீன் முன்னுரை வழங்கியிருந்தார்.

மட்டிலடங்கா ஆலயங்கள்
வானைமுட்டும் கோபுரங்கள்
தட்டும் கைகள் எல்லாம் இக்
களிமண் தன்னால் ஆனவையே
கட்டி வாழும் அன்னியனின்
கட்டில் இருந்து விடுவிக்க
முட்டாள் மனிதா உன்இதயம்
தன்னால் முடியும் அறிந்திலையோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய சொல்லாட்சியும் எளிமையும் மிக்கதாக அறுசீர் விருத்த யாப்பில் அமைக்கப்பட்ட கவிதைகள் இவை. மார்க்ஸிம் கோர்க்கி போன்றவர்களின் எழுத்துக்களையும் இவர் மொழி பெயர்த்துள்ளார் வ.அ.இராசரத்தினம் அவர்களின் 75வது வயது நிறைவில் (2000) பவளவிழா கொண்டாடி "இலக்கியப்பூங்கா" என்ற மலரும் வெளியிடப்பட்டது. திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்டச்சமூகத் தொடர்பு நிலையத்தின் தொடர்பு சாதன விருது(1996), இலங்கைக் கலாசார அமைச்சின் "கலாபூஷணம்" விருது (22.05.2000), வடகிழக்கு ஆளுநர் விருது(1998), "தமிழ் ஒளி" இலக்கிய விருது ஆகியன இவரது எழுத்துப் பணிக்குக் கிடைத்த பெருமைகளாகும். "தோணி"(1962), "மண்ணிற் சமைந்த மனிதர்கள்" (1996) ஆகிய நூல்கள் இலங்கைச் சாகித்ய மண்டலப் பரிசு பெற்றவைகளாகும். 1996இல் இலண்டன் "ஈழகேசரி"யில் இவரது "ஆக்காண்டிக் கவிதை" வெளியானது. 1975இல் மிகவும் சிரமப்பட்டு திருகோணமலை அகிலேசபிள்ளையின் "திருக்கரசைப் புராணம்" நூலினை மறுபதிப்புச் செய்தார். கவிஞர்களான செ.குணரத்தினத் தின் "நெஞ்சில் ஒரு முள்", நீலாவணனின் "வேளாண்மை" காவியம் ஆகியவற்றை நூல் வடிவில் கொண்டு வந்தார். இவரது இலக்கியப் படைப்புகள் பல்கலைக்கழக மட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

வ.அ.இ. அவர்கள் தமது இறுதிக்காலத்தை மூதூரிலுள்ள மகளின் "திரிகூடம்" இல்லத்தில் கழித்து வந்தார். 2001 பெப்ரவரி 22இல் காலமானார். அவருடைய தமிழ்ப் பணிகள் என்றும் நிலைத்திருக்கும். இவருடைய **ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது** என்னும் நாவல் இங்கு தரப்பட்டுள்ளது.

ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது

சாயந்தரம் மூன்றுமணி தாண்டினாலும் இன்னமும் சுடும் வெக்கையும் தாங்கமுடியாமற்தான் இருந்தது. பங்குனி வெயிலிற் தாமோதரம் தன்கைப் பெட்டியுடன் வீட்டையடைந்தான். வீட்டு முற்றத்திலிருந்த மாமரத்தின் கீழ் கற்பன் பாயில் அறுதுயிலிற் கிடந்த மயில்வாகனம் காலடிச் சத்தம் கேட்டு எழுந்து கொண்டார். எழுந்தவர் "கடிதம் போட்டிருந்தயெண்டாக் கிண்ணியாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையடிக்குச் சைக்கிளோட தம்பிய அனுப்பியிருப்பன்" என்றவாறு பாயைச் சுருட்டியபடியே "புள்ள தம்பி வந்துற்றான்" என்று குரல் கொடுத்தார்.

"துறையடியில இருந்து நான் அம்பலவாணனோட சைக்கிளில தான் வந்தனான்" என்று கூறிக்கொண்டே தாமோதரம் வீட்டிற்குள் நுழைந்தான்.

மகன் வந்தாலென்ன? மகேசனே வந்தாலென்ன? மயில் வாகனத்தால் இன்னமும் படுத்திருக்க முடியாது, வீட்டிலே தரிக்கவும் முடியாது. முகத்தைக் கழுவித் தேநீரைக் குடித்ததும் காவுதடியிற் தொங்கும் குடங்களோடு இப்போ நடக்கத் தொடங்கினாற்தான் இருட்டு முன்னே பொன்னாங்காணிப் பட்டிக்குச் செல்லலாம். சுணங்கவே கூடாது. முன்னிருட்டுக் காலம்.

மயில்வாகனம் கிணற்றை நோக்கிச் சென்றார். காய்ச்சப் பட்டுக் கொண்டிருக்கும் எருமைப் பாலின் மணம் வீட்டுக்குள்ளும் வெளியிலும் கமகமத்துக் கொண்டிருந்தது. வீட்டினுள்ளே சென்று தன் சிறிய கைப்பெட்டியை வைத்த தாமோதரம், அங்கிருந்து வெளியேறித் தனியாக ஒதுங்கியிருந்த அடுக்களைக்குள் நுழைந்தான்.

அங்கே பென்னம்பெரிய மண் மிடாவிற் காய்ச்சிய எருமைப் பாலைப் பாற் பேணிகளிலும் சிறிய போத்தல்களிலும் ஊற்றி உறையிட்டு முடித்த தெய்வானை தன் கைகளைச் சேலைத் தலைப்பிற் தடைத்துக் கொண்டு "ஆறாந் திகதி தானே லீவு எண்டு எழுதியிருந்தாய். ஒருகிழமைக்கு முதல் வந்துற்றியே. முதல்ல சாப்பிடு. பஸ்ஸில வரக்குள்ள சாப்பிட்டிருக்க மாட்டாய்" என்று அடுக்கிலிருந்த மண் பீங்கானை எடுத்தாள்.

"வேணாமம்மா; நான் வரக்குள்ள பன்குளத்துக் கடையில வடிவாச் சாப்பிட்டிற்றன்" என்ற தாமோதரம், "ஏனம்மா என்னைக் கண்டதும் சௌந்தரம் கதைக்காமப் போறாள்" என்று தாயிடம் கேட்டான்.

"உன்னைக் கண்டதும் அவளுக்கு வெக்கம் வந்திற்று; இன்னமும் அவள் சின்னப்பிள்ளையில்ல" என்ற தெய்வானை "அதுசரி ஆறாந் திகதி தானே பள்ளிக்கூடம் எல்லாத்துக்கும் லீவு. நீ என்ன ஒருகிழமைக்கு முன்னாலயே வந்திற்றா" என்று மகனிடம் மீண்டும் கேட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குள் கிணற்றடியிலிருந்து உடம்பைத் துடைத்துக் கொண்டே வந்த மயில்வாகனம் அடுக்களைக்குள் நுழைந்து "உன்னோடை கதைக்கக் கூட நேரமில்ல மகன். நாளைக் காலையில பட்டியால வந்தபிறகுதான் நேரங் கிடைக்கும்" என்று அலுத்துக் கொண்டே, "அதுசரி, ஏன் ஒரு கிழமை முன்னாலயே வந்துற்றாய்? என்று தாய் கேட்ட கேள்வியை, அவரும் கேட்டார்.

"எங்களுக்கு ரெஸ்ட் முடிஞ்சிற்று. ஆவணி மாசத்தில ஏ. எல் சோதனை. அந்தச் சோதனை எடுக்கிறவங்களையெல்லாம் நேரத்தோடேயே அனுப்பி வருசங் கழிச்ச அடுத்த நாளே வரச் சொல்லியிருக்கார் பிறின்சிப்பல். நான் அடுத்த மாதம் பதினைஞ்சாந் திகதி போக வேணும்" என்று விளக்கினான் தாமோதரம்.

தெய்வானை தந்தைக்கும் மகனுக்கும் தேநீர் கொடுத்தாள். அடுக்களைக் குத்திகளில் அமர்ந்தபடியே இருவரும் தேநீரைப் பருகினர். தேநீரைக் குடித்து முடித்ததும் வெளியே வந்த மயில்வாகனம் அடுக்களைக்கு முன்னாலிருந்த பரணிலே சார்த்தி வைக்கப்பட்டிருந்த காவுதடியை எடுத்துக் கொண்டார். பரணிலே கழுவப்பட்டுக் காய்ந்துகொண்டிருந்த இரண்டு பென்னம்பெரிய குடங்களையும் எடுத்து அவற்றின் கழுத்துக்களை வளைத்துக் கட்டப்பட்டிருந்த நார் வளையங்களுள் காவுதடியைப் புகுத்தித் தரையில் வைத்தபடியே வெற்றிலைப் பையை எடுத்தார். தெய்வானை சீனிச் சுருளையும், வெற்றிலை, பாக்கு, புகையிலை அடங்கிய இன்னொரு சரையையும் கொண்டுவந்து சுருளை ஒரு குடத்திலும் சரையை அடுத்த குடத்திலும் வைத்தாள். அவைகள் பட்டிக் காரருக்கு. வெற்றிலை போட்டு முடித்த மயில்வாகனம் தன் காக்கிச் சட்டையையும் போர்வையையும் எடுத்துத் தோளிலே போட்டுக் கொண்டார். போட்டுக்கொண்ட தன் வலது தோளின் மேற் காவுதடியைத் தூக்கிவைத்து "நான் போயிற்று வாரன்" என்றபடி நடக்கத் தொடங்கினார்.

காவுதடியைத் தோளில் வைத்ததுமே எங்கிருந்தோ ஒரு வேகம் வந்துவிடுகின்றது. காவுதடியின் அசைவுக்கேற்பத் தாளலயத்துடன் தன் தந்தையார் வேகமாக நடப்பதைப் பார்த்தபடியே தாமோதரம் நின்றான். கோயிலுக்கு முன்னாலிருந்த ஒழுங்கையில் இறங்கிக் கரைச்சை வெளியில் நடக்கும் அவர் உருவம் மறையும் வரையில் அவன் பார்த்துக்கொண்டே நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயில்வாகனத்துக்கு வயது ஐம்பதாயிருக்கும். காவுதடியைத் தோளில் சுமந்து காய்த்துப்போன தோள்கள், கட்டுமஸ்தான உடற்கட்டு, சற்றே குள்ளமானவர் எனினும், வசம்பு போல மெலிந்து வைரித்திருந்தமையாற் குள்ளம் எடுபடவில்லை. பரந்த நெற்றியில் எப்போதுமே துலாம்பரமாகத் திருநீறு அணிந்திருப்பார்.

எத்தனை ஆண்டுகளாக அவர் இந்தக் காவுதடியைச் சுமக்கிறார் என்பது தாமோதரத்துக்குத் தெரியாது. அவனுக்கு அறிவு தெரிந்த நாளிலிருந்து அவர் சுமக்கிறார். அதற்கு முன்னரும் காவுதடியைச் சுமந்தேயிருப்பார்!

இதோ இப்போது காவுதடியைச் சுமந்து செல்லும் அவர் ஆலங்கேணிக் கரைச்சையைத் தாண்டிப் பூவரசந் தீவுத் திடலில் ஏறி, மீண்டும் கரைச்சையிலிறங்கிக் கண்டற் காட்டுத் துறையைத் தாண்டி வயல்வெளிகளூடே நடந்து மகாவலிக் கரையிலுள்ள பொன்னாங் காணிப் பட்டியை அடையும்போது இருட்டிவிடும்.

பட்டியில் நுளம்புகளோடு போராடி இராத்தாங்கி, அதிகாலையிற் பாற்குடங்களைத் தூக்கிக் கொண்டு ஊருக்கு வர ஏறத்தாளப் பத்துமணியாகிவிடும். பத்துமணியிலிருந்து நான்கு மணிவரையுமே ஓய்வு; அந்த ஓய்வு நேரத்திற் செம்பாதிநேரம் தாமரைத் தீவுக் கள்ளுக் கொட்டிலிற் கழியும். கள்ளுக் கொட்டிலிலிருந்து திரும்பி வீட்டுக்கு வருகிறபோதெல்லாம் அவர் சொல்வார், "என்ற சின்ன மகன் யாழ்ப்பாணத்தில பெரிய படிப்புப் படிக்கிறான், அவன் படிச்சி வந்தப் பிறகுதான் என்ர காவுதடியைக் கழற்றுவன்."

அவரின் காவுதடி, பாற்குடங்களை மட்டுமல்ல ஓரோர் வேளை பட்டியை அண்மிய காட்டிலே வேட்டையாடப்பட்ட காட்டு மிருகங்களின் இறைச்சியையும் சுமந்திருக்கிறது. ஆவணிமாதத்து அருங்கோடையிற் குளங்கள் வற்றிவிட அந்தக் குளத்து ஆம்பல்களுக்கிடையே அகப்பட்ட வரால், சுங்கான் போன்ற நன்னீர் மீன்களின் புகையூட்டப்பட்ட கருவாட்டையும் சுமந்திருக்கிறது. குடும்பச் சுமையைக் குறைக்கும் கைங்கர்யத்தில் அக் காவுதடி காலங்காலமாக அவருக்குக் கைகொடுத்திருக்கிறது!

இப்படியாகத் தனக்குள் எண்ணிக் கொண்ட தாமோதரம் கிணற்றடிக்குச் சென்று தண்ணீரை அள்ளி அள்ளித் தலையிற் கொட்டிக் கொண்டான். கிணற்றில் பின்பக்கமாக அடைக்கப் பட்டிருந்த கொல்லைக்குள் கத்தரியும், தக்காளியும், வெண்டையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்த்துக் கொழித்துக் கொண்டிருந்தன. ஒருபக்கத்தில் வேலியோரமாக இருந்த ஒரேயொரு வற்றாளை வரம்பில் இலைகள் பழுப்படைந்து ஏன் இன்னமும் என்னைக் கல்லாமல் விட்டு வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டுக் கொண்டிருந்தது.

ஆலங்கேணிக் கிராமம் முழுமையுமே மணற்பாங்கானது தான். ஆனால் அந்த மணலிலும் மனித முயற்சியின் காரணமாகப் பசுமை படர்ந்தேயிருந்தது. ஒவ்வொரு வீட்டு வளவுக்குள்ளும் பெண்கள் குடங்குடமாக நீரைச் சுமந்து ஊற்றிக் காய்கறிகளும் கிழங்குகளும் பயிரிட்டிருந்தனர்.

தாமோதரம் குளித்துக் கொண்டிருக்கையில் தெய்வானை கொல்லைப் படலையைத் திறந்து, கைக்கிண்டியால் வற்றாளை வரம்புகளைக் கிளறிக் கிழங்குகளைப் பிடுங்கிக் கொண்டிருந்தாள். அவள் அருகேயிருந்த ஓலைப் பெட்டியில் செக்கச் சிவந்த சீனி வற்றாளைக் கிழங்குகள் நிறைந்து கொண்டிருந்தன.

தாமோதரம் தன் நீராடலை முடித்துக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தான். அது இரண்டு அறைகளும் அறைகளுக்கு முன்னால் விசாலமான பெரிய மண்டபமும் அமைந்த வீடு. சுவர்கள் செங்கல் லாலும் களிமண்ணாலும் ஆனவை. சுவர்களுக்கு சுண்ணாம்பு பூசப்பட்டிருந்தது. தரைக்குச் சீமெந்துப் பூச்சு. ஆனால் ஓலைக் கூரைதான். வீட்டிற்குள் நுழைந்த தாமோதரம் தன்பெட்டிக்குள் இருந்து நாலுமுழத் துண்டையும் தன் சேட்டையும் எடுத்துக் கொண்டான். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் சர்வகலா சாலைப் புகுமுக வகுப்பிற் படிக்கும் தாமோதரம் பாடசாலையில் நீளக் காற்சட்டையும் சப்பாத்தும் அணிவான். ஆனால் தன் பிறந்த ஊரான ஆலங்கேணியில் அவன் வேட்டியே உடுப்பான். ஆலங்கேணிக் கிராமம், இன்னமும் காற்சட்டை நாகரிகத்துக்குத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்ளவில்லை.

உடையணிந்த தாமோதரம் மண்டபத்து நிலையிலே தொங்கிய விபூதிச் சிரட்டையிலிருந்து பாம்பு விரலால் திருநீற்றைத் தொட்டு நெற்றி நடுவில் அழுத்திப் பூசியபோது, "தம்பி நீ வரட்டும் என்றுதான் ஒரு வற்றாளை வரம்பைப் பிடுங்காம விட்டிருந்தனான். இதைச் சாப்பிட்டிற்றுப் போ, யாழ்ப்பாணத்தில வற்றாளைக் கிழங்கு இல்லையாம்" என்று தட்டை நீட்டினாள். தட்டிலே இருந்த வற்றாளைக் கிழங்குகளிலிருந்து ஆவி பறந்து கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமோதரம் வற்றாளைக் கிழங்கின் மெல்லிய சிவப்புத் தோலை உரித்து அவற்றை வெள்ளையாக்கிச் சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் தெய்வானை கேட்டாள், "எங்கே போப்போறாய் மாமா வீட்டயா?"

"இல்லம்மா, முதல்ல நான் பெரிய வாத்தியாரைச் சந்திக்க வேணும்."

"ஓமோம். அந்த மனிசன் தானே நீ ஸ்கொலர்சிப்பில யாழ்ப்பாணம் போய்ப் படிக்கிறதுக்குக் காரணம். பொயிற்று வாற வழியிலதானே மாமா வீடும், வரக்குள்ள அங்கயும் போயிற்று வா."

தாமோதரம் அதற்கு விடையளிக்காமலே அம்மாவிடம் கேட்டான். "அண்ணன் வரவில்லையா அம்மா?"

"அவன் இன்னமும் திருக்கிணாமலையால வரவில்லைப் போல இருக்கு. சிலவேளை அவன் வர இருட்டாயும் போகும். நல்லா இருட்டினப்பிறகு வந்தானெண்டா இஞ்சவரமாட்டான். காலையில தயிர்ப்பேணி எடுக்கத்தான் வருவான்."

"இப்ப அவரும் குடிக்கிறாராமே"

"அப்படிப் போலத்தான் கிடக்கு. அப்பா கள்ளுக் கொட்டிலுல குடிச்சா, மகன் சீல் சாராயம் குடிக்கிறான் போல. ஆனா நான் அவன் இன்னமும் அவன் குடிச்சதக் காணல்ல. தயிர் விக்க நாளாந்தம் திருக்கிணாமலைக்குப் போறான். இங்கே இல்லாத சாராயக்கட அங்கே இருக்கு. வியாபாரத்த முடிச்சிற்று வரக்குள்ள இரண்டு போத்தல் சாராயம் கொண்டுவந்து இஞ்ச விக்கிறானாம். சிலவேளை அவனும் குடிக்கலாம். உனக்கெப்பிடித் தெரியும் அவன் குடிக்கிறான் எண்டு?"

"அண்ணா சாடைமாடையாக குடிக்கிறதாக மயில்வாகனம் எனக்குக் கடிதம் எழுதியிருந்தான். இந்த வருஷம் மாட்டுப் பொங்கலண்றைக்கு அவனுக்கு நல்ல வெறியாம்."

"இந்த ஊரில வெறிவைக்காதவனே பிறக்க மாட்டான் போல இருக்கு" என்று வெறுத்துக் கொண்ட தெய்வானை மீண்டும் அடுக்களைக்குட் சென்று தேநீர்க் கோப்பையுடன் வந்தாள்.

தேநீரைக் குடித்து முடித்த தாமோதரம் "அம்மா நான் வாத்தியாரிட்டப் போயிற்று வாறன்" என்று தெருவிலிறங்கி நடந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குனி மாதத்தின் இறுக்கம் சற்றுத் தளர்ந்திருந்தது. மெதுவாக அசைந்த கொண்டலில் முற்றத்து மாமரத்தின் தளிர்கள் சோம்பிக் கொண்டே அசைந்தன. தாமோதரம் முற்றத்து மாமரத்தைத் தாண்டிப் புழுதி படிந்த மணல் ஒழுங்கையினூடே பாடசாலையை நோக்கி நடந்தான்.

தாமோதரம் தந்தையாரைப் போலல்லாது சற்று நெடுத்து வளர்ந்திருந்தான். தாயைப்போல நிறத்திலும் அவன் தாயையே கொண்டிருந்தான். செம்மை படர்ந்த அவன் முகத்திலே உதட்டின் மேல தலைப்புப் பழுத்த கறுத்த சீனட்டி நெற்கதிரின் வாக்கில் மீசை அரும்பிக் கொண்டிருந்தது. கனவு காணும் கண்கள். தலைக்குள் எத்தனையோ சிந்தனைகள். மனதுக்குள் எத்தனையோ ஆசைகள்.

ஒழுங்கை மணலிற் கால்புதைத்து அவன் நடந்து செல்கையில் அடுத்த வீட்டுத் தெருவேலியின் கண்களினூடாக இரண்டு மனிதக் கண்கள் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தன. அவன் தன் வீட்டிற்குத் தன்னையே தேடி வருகிறான் என்ற எண்ணம் அக்கண்ணுக்குடையாளின் மனதில் வெட்கந்தோய்ந்த இன்பக் கிளர்ச்சிகளை எழுப்பிக் கொண்டிருந்தது. ஆனால் தாமோதரம் மணல் ஒழுங்கையில் நேராக நடப்பதைக் கண்டு அக்கண்கள் கலங்கின. அதை அறியாதவனாய் தாமோதரம் நடந்து பாட சாலையை அடைந்தான். அவன் தேடிவந்த தலைமை ஆசிரியரும் பாடசாலை வாயிலிலே நின்றார்.

அத்தியாயம் - 2

கிராமத்தின் மத்தியில் இருந்த அப் பாடசாலை றோமன் கத்தோலிக்க மிஷனால் அரம்பிக்கப் பட்டது. இந்த வட்டாரத்தில் அந்த மிஷனரிகளின் தலைமைத் தானமான மூதூரில் இருக்கும் புனித அந்தோனியார் பாடசாலைக்கு அடுத்ததாக அவர்களது பெரிய பாடசாலை ஆலங்கேணியிற்தான் இருந்தது. அப்பாடசாலையின் தலைமை ஆசிரியர்தான் சின்னத்தம்பி.

சின்னத்தம்பி வாத்தியார் யாழ்ப்பாணத்து நெல்லியடியைச் சேர்ந்தவர். கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக ஆலங் கேணிப் பாடசாலையில் அவர்தான் தலைமையாசிரியர். பிறவிச் சைவராகிய அவர், எப்படியோ கிறிஸ்தவச் சகோதரர்கள் மட்டக் களப்பில் நடத்திய ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிற் சேர்ந்து மூன்று ஆண்டுகள் பயிற்சியை முடித்துக் கொண்டு ஆலங்கேணிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியராக வந்தார். ஐந்து ஆண்டுகளின் பின்னால் அப்பாட சாலையின் தலைமையாசிரியர் ஓய்வுபெற்றபோது அவரிடத்திற்கு உயர்த்தப்பட்டிருந்தார்.

அவர் வரவின் பின்னர் பாடசாலை எவ்வளவோ முன்னேற்றங் கண்டது ஆரம்பப் பாடசாலையாக இருந்த பாடசாலை சிரேஷ்ட பாடசாலையாக உயர்ந்தது. அது மட்டுமல்ல; ஆங்கிலமும் நன்கு தெரிந்த சின்னத்தம்பி வாத்தியார் மாணவர்களுக்கு ஆங்கிலமும் படிப்பித்தார். சாதாரணமாகப் புத்தியறிந்த பின்னர் தங்கள் பாடசாலைப் படிப்பை முடித்துவிடும் பெண்களிற்கூட ஒருசிலர் மேற்படிப்புப் படித்தனர். சைவமத போதனைகூட அப்பாடசாலையில் ஒழுங்காக நடைபெற்றது. புதிதாக மிஷனைக் கையேற்ற அமெரிக்கக் குருமார் அதற்குத் தாராளமாக இடங் கொடுத்தனர்.

பாடசாலையில் மிகக் கெட்டிக்காரனாக இருந்த தாமோதரம் எட்டாம் வகுப்புப் புலமைப்பரிசிற் பரீட்சையிற் சித்தி பெற்றதும், மேற்படிப்புப் படிப்பதற்கு வந்தாறுமூலைக்குப் பதிலாகத் தமதூரான நெல்லியடியைத் தெரிவுசெய்து அங்குள்ள மத்திய மகாவித்தி யாலயத்திற்கு அனுப்பிவைத்தார் சின்னத்தம்பி வாத்தியார். தாமோதரத்திற்குப் பிரம்மாண்டமான எதிர்காலம் இருக்கிறதாக அவர் கணித்தார்.

அவர் கணிப்புப் பிழைக்கவில்லை. தாமோதரம் வருடமொரு வகுப்பாகச் சித்தியடைந்து, தற்போது சர்வகலாசாலைப் புதுமுக வகுப்பில் கடைசி ஆண்டில் விஞ்ஞானம் படிக்கிறான். சித்தி யடைந்தால் சர்வகலாசாலைக்கும் அவனுக்கு உபகாரச் சம்பளம் கிடைக்கும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன், அவன் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்பிற் சித்தியடைந்த போது தந்தை மயில்வாகனம் அவன் படிப்பை நிறுத்தி ஏதாவது உத்தியோகத்திற்கனுப்ப வேண்டும் என்று விரும்பினார். ஆனால் சின்னத்தம்பி ஆசிரியர் அதற்குச் சம்மதிக்கவில்லை. தாமோதரம் மேற்படிப்புப் படிக்க வேண்டுமென்று வற்புறுத்தி அவன் தந்தையை அதற்குச் சம்மதிக்க வைத்தார்.

நெல்லியடிக்குச் சென்று ஊருலகத்தை அறிந்துகொண்ட தாமோதரமும் தான் ஒரு டாக்டராக வேண்டும் என்று கனவு கண்டான். ஆகக் குறைந்தது ஒரு விஞ்ஞானப் பட்டதாரியாகவாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேண்டும் என்று விரும்பினான். ஆலங்கேணிக் கிராமத்தின் முதலாவது பட்டதாரியாக வேண்டும் என்ற ஆர்வத்தோடு படித்தான்.

தாமோதரத்தைக் கண்ட தலைமையாசிரியர், "வாரும் வாரும்! இன்றைக்குத்தான் வந்தீரா? இந்த வழியாகத்தானே வந்திருப்பீர் எனக்குத் தெரியவில்லையே" என்று வரவேற்றுப் பாடசாலைக் கட்டிடத்துள் அழைத்துச் சென்றார். சென்று கொண்டிருக்கையில் "கிண்ணியாவிலிருந்து நான் இந்த வழியாக வரவில்லை சேர், கிண்ணியாத் தபாற் கந்தோருக்கு வந்திருந்த அப்பலவாணன்ற சைக்கிளில் ஏறிக்கொண்டு குட்டிக்கரச்சைப் பக்கமாக மேல்வழியால வந்தனான். அதுதான் நீங்கள் காண வில்லை" என்று விளக்கமளித்தான் தாமோதரம்.

பாடசாலைக்குள் நுழைந்ததும் தன் பெரிய மேசையடியில் இருந்த கதிரையில் அமருமுன் சின்னத்தம்பி ஆசிரியர் இன்னோர் கதிரையை இழுத்துப் பக்கத்திற் போட்டு இதில் இரும் என்று சொல்லி தானும் தன் கதிரையில் அமர்ந்தார்.

ஆனால் தாமோதரம் அந்த மேசைக்குப் பக்கத்தில் தன் ஆசிரியருக்கு முன்னால் அவருக்குச் சமதையாகக் கதிரையில் உட்கார விரும்பவில்லை. நான் இப்படியிருக்கிறேன் சேர், என்று சொல்லிக்கொண்டே பக்கத்திற் கிடந்த டெஸ்க்கில் அமர்ந்து கொண்டான்.

முன்னாலிருந்த மேசையில் பாடசாலை இடாப்புகளும் சம்பவத் திரட்டுப் பத்தகமும், வேறு புத்தகங்களும் ஒழுங்கற்று இருந்தன. ஆசிரியரின் வலது பக்க மூலையில் சுருட்டுப் புகையிலை ஒன்றின் அரைவாசியும் சுருட்டுப் பற்றவைத்த நெருப்புக் கொள்ளியும் இருந்தன. நெருப்பு அவிந்து கரியாகி மேசையிற் சாம்பற் துகள்கள் கொட்டியிருந்தன. தேநீர் குடித்த கிளாஸ் ஒன்றும் மேசையில் இருந்தது. பக்கத்திலே கோதுமை மாவைக் கொண்டு கிவறிய பசைச் சட்டியொன்று இருந்தது.

ஆம், அந்த மேசைதான் சின்னத்தம்பி ஆசிரியரின் ஆஸ்தான பீடம். அந்த ஆஸ்தான பீடத்தில் அமர்ந்து படிப்பித்துக் கொண்டே மரக்கறியும் வெட்டுவார். கீரையும் அரிவார். வெங்காயத் தையும் உரிப்பார். எது எப்படியிருப்பினும் எல்லா வகுப்புக்களிலும் பாடங்கள் ஒழுங்காகவே நடக்கும். ஒன்றரை மணிக்குப் பாடசாலை முடியும்போது ஆசிரியரின் சமையலும் முடிவடைந்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை முடிந்ததும் சின்னத்தம்பி ஆசிரியரைத் தவிர மற்றைய ஐந்து ஆசிரியர்களும் பாடசாலையை விட்டுப் போய்விடுவார்கள். அடுத்தநாட் காலையிற்தான் அவர்களைப் பாடசாலையிற் காணலாம். ஆனால், சின்னத்தம்பி ஆசிரியர் மதியச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு ஒரு சுருட்டைப் பற்றவைத்து பாடசாலைக்கு முன்னால் தெருவோரத்தில் நிழல் கவித்து நின்ற ஆலமரத்தின் கீழே தன் படங்குச் சாய்கதிரையில் அமர்ந்து ஒழு கோழித் தூக்கம் போட்டுவிட்டு மூன்று மணிக்கெல்லாம் மீண்டும் தன் ஆஸ்தான பீடத்தில் அமர்ந்து கொள்வார். பெரிய வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடமும் நடத்துவார். இன்று ஆங்கிலப் பாடம் முடிவடைந்து விட்டது போலும் வெளியே இருள் பரவிக் கொண்டு வந்தது.

கொஞ்சம் இரும் என்று எழுந்து சென்று அறைக்குள்ளே இருந்த பெற்றோமக்ஸ் விளக்கை எடுத்து வந்து அதைக் கொழுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். சில நிமிடங்களில், ஆலங்கேணிக் கிராமத்திற்கு அறிவொளியைக் கொடுத்துக் கொண்டிருந்த அப் பாடசாலையில் பெற்றொமக்ஸ் விளக்கு பிரகாசமாக எரிந்து இருளைக் கடிந்து கொண்டிருந்தது. அந்த விளக்கொளியில் அக்கிராமத்துப் பாடசாலை மாணவர்கள் பலர் வந்து மௌனமாகத் தம் பாடங்களைப் படிப்பார்கள். தங்கள் வீட்டுப் பாடங்களைச் செய்வார்கள். அந்தப் பெற்றோமக்ஸ் விளக்கொளியில் தாமோதரமும் நான்கு ஆண்டுகள் படித்திருக்கிறான்.

மீண்டும் வசதியாகச் சின்னத்தம்பி ஆசிரியர் தம் இருக்கையில் அமர்ந்துகொண்டதும் தாமோதரம் அவரிடம் கேட்டான். "சௌந்தரம் பாடசாலைக்கு வாறதில்லையாமே. அம்பலவாணன் எனக்கு எழுதியிருந்தான் சேர்".

"மச்சாளில் மெத்தக் கரிசனை தான். நானும் எவ்வளவோ தெண்டித்துப் பாத்துட்டன் அவள் பெரிய மனுஷி ஆனபிறகு உன்ர மாமா அவளைப் பாடசாலைக்கு அனுப்பமாட்டன் என்றிட்டார். என்னால ஒண்ணுஞ் செய்ய முடியல்ல" என்றார் சின்னத்தம்பி.

"அறிவுகெட்ட ஜன்மங்கள்" என்று முணுமுணுத்துக் கொண்டான் தாமோதரம்.

இராப்படிப்புக்காக பிள்ளைகள் தங்கள் புத்தகங்களோடு வந்துகொண்டிருந்தார்கள். பாடசாலைக்கு முன்னால் மணல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டிய தெருவில் திருகோணமலைக்குச் சென்றிருந்த தயிர் வியாபாரிகளும் கடற்படைத் தளத்தில் வேலை செய்பவர்களும் அலுத்துக் களைத்து வீடுசென்றுகொண்டிருந்தார்கள்.

"நான் வாறன் சேர். இன்றைக்கு எனக்கு அலுப்பாயிருக்கு. நாளைக்கு நானும் இங்கே வந்துதான் படிக்கப் போறன். இப்ப சும்மா உங்களைக் கண்டு போகத்தான் வந்தனான்" என்று விடைபெற்றான் தாமோதரம்.

"சரி போய் வாரும்" என்று அவனை வழியனுப்பினார் சின்னத்தம்பி.

தாமோதரம் பாடசாலையிலிருந்து வெளியேறிய போது இருளிலே ஒன்றுமே புலப்படவில்லை. தெருப் படலையிற் சற்றுத் தாமதித்தான். கண்கள் இருளுக்குப் பழகிக் கொண்டன. கன்னங்கரிய இருளிலே தெருவின் வெண்மணல் பளிச்சென்று வழியைக் காட்டிற்று. தாமோதரம் வீட்டை நோக்கி நடந்தான்.

அவனுக்குத் தன் கிராம மக்களின் அறியாமையையிட்டு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. பதின்மூன்று பதினான்கு வயதிற் பெண்கள் பராயமடைந்ததும் அதை ஊருக்கெல்லாம் பறையடிப்பது போல ஒலிபெருக்கியை முடுக்கிவிட்டு, நீராட்டு விழா நடத்தி அதன் பின் அந்தப் பெண்ணுக்கு அறிவின் பிரகாசமே படக் கூடாது என்று எண்ணியவர்களாய் அவள் பாடசாலைக்குச் செல்வதை நிறுத்தி விடுவார்கள். இது என்ன கொடுமை! சௌந்தரமும் இதற்கு விதிவிலக்கல்ல என்ற கசப்பான எண்ணங்கள் மனத்தைக் குடைய அவன் மணலிற் கால் புதைய நடந்து கொண்டிருந்தான்.

பிள்ளையார் கோயிலடியை அடைந்து விட்டான். கோயிலிற்கு எதிரிலே தான் அவன் மாமனாரின் வீடு. அங்கே விளக்கொளி தென்பட்டாலும் வீடு நிசப்தமாகத்தானிருந்தது. காலையிலே மாமாவைக் கண்டு அவருக்குச் சூடாக இரண்டு வார்த்தைகளைச் சொல்ல வேண்டுமென்று மனத்துட்கறுவிக் கொண்டு மேலே நடக்கையில் எதிரே குள்ளமான ஒரு உருவம் தள்ளாடிக் கொண்டிருந்தது.

தாமோதரம் தரித்து நின்று இருளிலே வந்த அந்த உருவத்தைக் கூர்ந்து கவனித்தான். நிச்சயமாக அது கோணாமலைக் கிழவர்தான் என்று நிதானித்துக்கொண்ட தாமோதரம் இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தில் அவரின் கண்ணிற் பட்டுவிடாமல் எப்படியாவது தப்பித்துவிட வேண்டுமென்று விரும்பினான். ஆனால் அதற்குள் அவனை நெருங்கிவிட்ட அந்தக் கிழவர் ஒருதடவை காறித் துப்பிவிட்டு யார்ரா அவன்? என்று உறுமியபடி கேட்டது.

இனி அவரிடமிருந்து விடபட முடியாது என்று உணர்ந்த தாமோதரம் "நான்தான் பெத்தப்பா" என்றான்.

"நான் - எண்டா யார்ரா - அவன் பெரிய கொம்பன் இங்கால வாடா பாப்பம்" என்று அவன் கையை எட்டிப் பிடித்துக்கொண்டது.

"நான்தான் பெத்தப்பா தாமோதரம்" என்று தன்னைத் தானே அறிமுகப்படுத்திக் கொண்டான் தாமோதரம்.

"யாரு மயில்வாகனத்திட மகனா?"

"ஓம் பெத்தப்பா. இண்டைக்குத்தான் யாழ்ப்பாணத்திலிருந்து வந்தன்."

அப்படிச் சொன்னதும் கோணாமலைக் கிழவர் அவனைக் கட்டியணைத்துக் கொண்டார். அவர் வாயிலிருந்து வந்த புளித்த கள்ளின் கோரமான நெடி தாமோதரத்துக்கு அருவருப்பாக இருந்தாலும் அவனும் அவரைக் கட்டியணைத்துக் கொண்டான். ஒருவாரமாகச் சவரஞ் செய்யப்படாமலிருந்த அவரது தாடி மயிர் நெருஞ்சி முள்ளாக அவன் தோளிற் குத்தியது. "ஏண்டா வந்த உடனே பெத்தப்பாவ வந்து பாக்கல்ல" என்று அக்கிழவர் கடிந்து கேட்டபோது

"பின்னேரம் வீட்ட வந்தனான் பெத்தப்பா; ஆனா பின்னேரத்தில நீங்க வீட்ட இருக்க மாட்டீங்களே" என்று நெஞ்சாரப் பொய் சொன்னான் தாமோதரம்.

"இப்ப இந்த இருட்டில எங்க போறா? வீட்ட போ காலமைக்கு வீட்ட வா" என்று சொல்லி அவனை விட்டு விட்டுத் தள்ளாடித் தள்ளாடி முன்னேறினார் கோணாமலைக் கிழவர்.

அவரின் பிடியிலிருந்து விடபட்ட தாமோதரம் தன்குரலைக் கெட்டுத் தெருப்படலைக்கு வந்து எட்டிப்பார்த்த சௌந்தரத்தைக் கண்டுகொள்ளாதவனாக விறுவிறு என்று வீட்டை நோக்கி நடந்தான். கோணாமலைக் கிழவருக்கு வயது அறுபதும் இருக்கலாம் எண்பதும் இருக்கலாம். அவர் வயதை மதிக்கவே முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவனாக இருந்தாலும் திடகாத்திரமான தேகக்கட்டு. இப்போது தள்ளாடிக் கொண்டு நடக்கும் கிழவர் வயலில் இறங்கி ஏர்க்காலைப் பிடித்தாரானால் ஏர் இழுக்கும் மாடுகள் களைத்துச் சொர்ந்து நடைபயிலத் தயங்கினாலும், கோணாமலையாருக்குக் களைப்பு ஏற்படாது. கிழவருக்குக் கண்டக் காட்டிலே முப்பது ஏக்கருக்கு மேல் மானாவாரிக் காணி இருந்தது. நான்கு சோடி எருத்து மாடுகளும் இருந்தன. பட்டியிலே நூற்றுக்கும் மேற்பட்ட உருப்படிகள். மாரி தொடங்கித் தலைமழை பெய்ததும் அவர் கண்டற் காட்டு வயலுக்குப் போய்விடுவார். முதலில் குடியிருப்புத் திடலை உழுது இராசவள்ளி, வற்றாளை என்று கிழங்குகளைப் பயிரிட்டு மீதி நிலத்தில் கச்சான் விதைப்பார். தனது கறிக்காகக் கத்தரியும் வெண்டியும் மிளகாயும் நடுவார். அந்த வேலை முடிந்ததும் முதலில் பள்ளப் பகுதியை உழுது மூத்த நெல் விதைப்பார். பின்னர் படிப்படியாகத் திடலை உழுது காலங்குறைந்த சீனாட்டியை விதைத்தால் தைப்பூசம் கழிய எல்லாமே அறுவடைக்குத் தயாராகி விடும்.

அருவிவெட்டிச் சூடடித்து வீட்டிற்குத் திரும்ப பங்குனி நடுப்பகுதியாகிவிடும். அந்த ஆறு ஏழு மாதங்களும் கண்டற் காட்டு வெளியிலே ஒரு தபஸியாகத்தான் அவர் வாழ்க்கை நடத்துவார். அவர் வேளாண்மைச் செய்கை ஒரு மகாயக்ஞம்! அந்த வேள்வியை முடித்துக்கொண்டு வந்தாரானால் அடுத்த மாரி தொடங்கும் வரை சாயந்தர வேளைகளில் தாமரை வில் கள்ளுக் கொட்டிலிற்றான் அவரைக் காண முடியும்.

காலையிலே பருத்தித்துறை வத்தைக் காரருக்காக நெல் அளந்து கட்டுவார். வியாபாரத்துக்கென்று அவர் கட்டிய நெல்லும், அவரது வயலில் விளைந்த நெல்லும் வீட்டிலே மூட்டை மூட்டையாக அடுக்கப்பட்டிருந்தன. ஆலங்கேணிக் கிராமத்திலே செயலுள்ள மனிதராக விளங்கிய அவர் தாமோதரத்தின் தாய்வழிப் பூட்டன். தன் பூட்டன் தனது முன்னோர்களின் ஊரான வட மராட்சியில் உயர்கல்வி கறடறான் என்பதில் கோணாமலை யாருக்கு ஒரு பெருமை!

அத்தியாயம் - 3

தாமோதரம் வீட்டை அடைந்தபோது அவர் தாயும் சின்னத் தங்கையும் முற்றத்திலிருந்த மாமரத்தின் கீழே பாயில் அமர்ந்திருந்தார்கள். இரண்டு தம்பிமாரும் பாடசாலைக்குப் படிக்கப் போய்விட்டார்கள் போலும் மாமரத்தின் கீழே அரிக்கேன் விளக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிந்து கொண்டிருந்தது. தாமோதரம் பாயில் வந்தமர்ந்தபோது "நீ வந்திருக்கிறாய் என்று கேள்விப்பட்டு மாமா இங்கே வந்தார். நீ அவர் வீட்டுக்கு போனியா? என்று கேட்டாள் தெய்வானை.

"ம்" என்று உறுமிய தாமோதரம் "நான் அங்க போகல்ல. வாத்தியாருட்டதான் போனன்"

"நீ அங்க போயிட்டாய் எண்டுதான் நான் நினைச்சுக் கொண்டிருந்தன்"

"வந்த உடன அவர் வீட்ட போய் கையெழுத்து வைக்க வேணுமோ எப்பவும் போறாப்போல போறதுதானே, முந்தியெல்லாம் அங்க கிடந்து தானே விடிவாய். அந்தக் கதை இருக்கட்டும். எனக்குப் பசிக்குது சாப்பிட வேணும்" என்றான் தாமோதரம். தெருப் படலையைத் திறந்துகொண்டு அவன் தம்பிமார் இருவரும் வந்துகொண்டிருந்தார்கள். ஒருவன் கையில் டோச் லைட்டும் கூரான நீண்ட இரும்புக் கம்பியொன்றும் இருந்தது. அடுத்தவன் கையில் நீண்ட தகட்டுக் கத்தியும் குட்டிச் சாக்கும் இருந்தன. சாக்குப் பை கனமாகவே இருந்தது. அவர்கள் இருவரும் எங்கே போய் வருகிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்ட தாமோதரத்திற்கு ஆத்திரம் குமுறிப் பொங்கியது. கொட்டியாபுரக் குடாவின் கரையோரமாகக் கிண்ணியா ஊடாகச் செல்லும் திருக்கோணமலை மட்டக்களப்புப் பிரதான பாதையிலிருந்து அரை மைல் தூரத்திற்றான் ஆலங்கேணிக் கிராமம் அமைந்துள்ளது. மெயின் வீதிச் சந்தியில் இருந்து தெற்காக நடந்தால் கிண்ணியாக் குடாவிலிருந்து கிழக்காக ஓடும் கட்டையாற்றைத் தாண்டித்தான் ஆலங்கேணிக்குச் செல்ல வேண்டும். மேற்குப் பக்கமாகக் குறிஞ்சாக்கேணி உப்பு நீராறு வடக்குத் தெற்காக ஓடுகிறது. வெள்ள நேரத்தில் அவ்வாற்றின் கிழக்குப் பக்கமாக இருக்கும் உப்புக் கரைச்சையில் முழங்காலளவு நீர் தேங்கும். இந்த ஆற்று வளத்தின் காரணமாக ஆலங்கேணியில் நண்டுகளும் இறால்களும் குறைவின்றிக் கிடைக்கும். இரவிலே தென்னோலைச் சூள் வெளிச்சத்திலோ அல்லது மின சூள் வெளிச்சத்திலோ ஆற்றோரங்களில் நண்டு குத்துவது ஆலங் கேணிக் கிராமத்தில் பெரியவர்களுக்கும் இளைஞர்களுக்கும் பிடித்தமான பொழுதுபோக்கு.

அதற்குத்தான் ஆறாம்வகுப்பும் எட்டாம் வகுப்பும் படிக்கும் தம்பிமார் இருவரும் சென்றிருக்கிறார்கள் என்று அறிந்தபோது தாமோதரத்தின் மனம் குமுறியது. ஆனாலும் தன் கோபத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிக்காட்டிக் கொள்ளாமல் மனதுட் கறுவிக் கொண்டிருந்தான். ஆனாலும் இரவுணவாக பிட்டையும் நண்டுக்கறியையும் ரசித்துச் சாப்பிட்டான். சாப்பிட்டு முடித்தபோது சாயந்தரம் மிகமிக மெதுவாக மாந்தளிர்களை அசைத்த கொண்டற்காற்று அசமந்து அற்றுப் போயிருந்தது. எங்கும் இலை அசையவில்லை. காற்றாடவில்லை, ஒரே புழுக்கமும் அவிச்சலுமாக இருந்தது! தாமோதரம் மண்டபத்துள் மடித்துச் சுவரோடு சார்த்தப்பட்டிருந்த சாக்குக் கட்டிலை எடுத்து முற்றத்தில் விரித்தான். அதனைக் கண்ட தெய்வானை "இப்ப சுகமாகத்தான் இருக்கும் ஆனா விடியப்புறத்தில் சரியான பனி. அந்தக் குளிரில படுத்துக்க மாட்டா. கட்டில் விரிச்சு மண்டபத்துக்குள்ளேயே படு" என்று சொல்லி அவனைத் தடுத்தாள். ஆனால் தாமோதரம் கேட்கவில்லை. கட்டிலின் மேலே நான்காக மடித்த அம்மாவின் வைல் சேலையை விரித்து அதன்மேல் தலையணையை வைத்த தாமோதரம் தலையைச் சரித்த சற்று நேரத்திற்கெல்லாம் நித்திரையாகி விட்டான். அவனுக்குப் பயணித்து வந்த அலுப்பு.

தெய்வானை கட்டிலுக்கு சற்றுத் தூரத்தில் நெருப்புச் சட்டியைக் கொண்டுவந்து வைத்து அதன்மேல் கொத்துக் கொத்தாக வேப்பங்குழைகளை அடுக்கியபோது நெருப்புச் சட்டியிலிருந்து புகை எழுந்தது. "இந்தப் புகைக்கு எந்த நுளம்பும் வராது" என்ற திருப்தியோடு அடுக்களைப் பக்கம் சென்றாள். தன் கதவு சிக்காராகச் சாத்தப்பட்டுத்தான் இருந்தது உள்ளே உறையிடப்பட்டிருந்த பாற்பேணிகள் இருந்தன. அவள் வளர்க்காத அயல்வீட்டுப் பூனைக்குத் தெய்வானை பயந்தாள். "பயப்படாதே இதோ நான் காவலுக்கு இருக்கிறேன்" என்று சொல்வது போல கதவருகில் படுத்துக் கிடந்த வீரன் உறுமியது அதன் உறுமலிற் திருப்தியை அடைந்தவளாகத் தெய்வானை மீண்டும் முன்பக்கமாக முற்றத்துக்கு வந்தபோது தாமோதரம் அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருந்தான் இரவின் மௌனத்தைப் பிளந்துகொண்டு வடக்கே கட்டையாற்றுக் கரைச்சைப் பக்கமிருந்து மனிதக் குரல்கள் கேட்டுக்கொண்டிருந்தன. இரவு ஒன்பது மணிக்கு மேல் ஆலங்கேணிக் கிராமத்தில் அக்குரல்கள் பழக்கமானவை தான். ஆனால் அக்குரல்கள் கிராமத்தில் பல பக்கங்களிலுமிருந்து நாளுக்கு ஒரு இடத்திற் கேட்கும். இன்று வடக்கே கட்டையாற்றுப் பக்கமிருந்து கேட்கிறது. "கொச்சியான்ற வீட்டுப்பக்கம் தான் சத்தம் கேக்குது. சும்மா வெறியில கிடந்து கத்துறானுகள்" என்று அலுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட தெய்வானை மண்டப வாயில் சீமெந்துத் தரையில் முந்தானையை விரித்துப் படுத்துக்கொண்டாள் நன்றாகப் பூசி மினுக்கிய சீமெந்துத் தளத்தின் குளுமை பங்குனிமாதப் புழுக்கத்துக்கு இதமாக இருந்தது. படுத்ததும் தெய்வானை கண்ணயர்ந்து விட்டாள். முற்றத்திலே படுத்திருந்த தாமோதரம் அதிகாலையிலே விழித்துக் கொண்டான். அவன் தாயார் சொன்னதுபோல அந்த அதிகாலை கடுமையான குளிராகத்தான் இருந்தது. அந்தக் குளிர்தான் அவனை எழுப்பிவிட்டிருக்க வேண்டும். எழுந்துவிட்ட தாமோதரம் கட்டிலில் விரித்திருந்த சேலை மடிப்பை விரித்துக் கால்களையும், தலையையும் கூடச் சேலையால் போர்த்துக் கொண்டு மீண்டும் மல்லாந்து படுத்தான். அதிகாலைக் குளிருக்கு அந்தப் போர்வை இதமாக இருந்ததே தவிர நித்திரை வரவில்லை.

தலையை மூடியிருந்த சேலையை சற்று நெகிழ்த்திய போது மாங்கொத்துக்களினூடே அர்த்த சந்திரன் நிலவைப் பொழிந்து கொண்டிருந்தது. திடீரெனச் செட்டைகளைத் தட்டிக் கொண்டு சௌந்தரத்தின் வீட்டுப் பனிச்சை மரத்திலிருந்து சேவல் கூவியது. அதைத் தொடர்ந்து ஊரிலுள்ள எல்லாச் சேவல்களும் முறை வைத்துக் கூவின. அக் கூவல்களிடையே மணல் ஒழுங்கையில் சரசரத்துச் செல்லும் கட்டை வண்டிகளின் சப்தமும், கிலகிலுத்துப் பறந்து செல்லும் கரிச்சான் குருவிகளின் ஓசையும் கேட்டன. தூரத்தே குட்டிக் கரச்சிப் பள்ளிவாயிலிருந்து பாங்கு சொல்லும் மோதீனின் குரல் காற்றிலிழைந்து வந்தது. இந்த மண்ணுலகத்து நல்லோசைகளையெல்லாம் கேட்டபடி படுத்துக் கொண்டிருந்தான் தாமோதரம்.

மண்டபத்தின் தாழ்வாரத்துப் பந்தலில் பற்றிப் படர்ந்திருந்த கொடிமல்லிகைப் பூக்களின் நறுமணத்தை அனுபவித்துக் கொண்டே தாமோதரம் கட்டிலில் மல்லாந்து படுக்கையில் கிழக்கு வெளுக்கத் தொடங்கிக் கும்பிய முகைவிரிவது போலக் காலை மலர்ந்து கொண்டிருந்தது. வரவர மாட்டுவண்டிகளின் சத்தம் அதிகரித்தது. அவை மணல் ஒழுங்கைகளால் சென்று வேலும் மயிலும் கடைச் சந்தியிற் திரும்பி கரைச்சையில் இறங்குகையில் பாதி இடிந்திருந்த மதகிலே டொக்கென்று ஏறிவிழும் சப்தம் காலை நேரத்தில் நாராசமாகக் கேட்டது. அந்த ஒலியை மீறிக் கொண்டு பிள்ளையார் கோயிலிலிருந்து சங்கொலி கிளம்பியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு மேலும் தாமோதரத்தாற் படுத்திருக்க முடியவில்லை. எழுந்து கட்டிலை மடக்கி மாமரத்தோடு சாத்தி வைத்துவிட்டுப் பின்னாலிருந்த மல்லிகைப் பந்தலைத் தாண்டி மண்டபத்துள் நுழைந்து சுவரின் ஆணியிற் தொங்கிய மெய்கண்டான் நாட்காடிக்கு மேலாகத் தொங்கிய சட்டையை எடுத்து உடம்பிலே மாட்டிக் கொண்டான். மண்டபத்துள்ளிருந்து பார்க்கையில் அடுக்களைக் குள்ளே விளக்கு எரிவது தெரிந்தது.

அத்தியாயம் - 4

ஆனால் தாமோதரம் அடுக்களைப் பக்கம் செல்லாமல் மீண்டும் முற்றத்துக்கு வந்து தெருப்படலையைத் திறந்து தெருவோரத்தே நின்ற சின்னஞ்சிறிய வேப்பங்கன்றின் குச்சியை உடைத்துப் பல்விளக்கிக் கொண்டிருந்தபோது அவன் அண்ணா நாகேந்திரம் தோளிலே காவுதடியுடன் வந்துகொண்டிருந்தான். காவுதடியின் இரு அந்தங்களிலும் இரண்டு பெரிய தடிப்பான அட்டைப் பெட்டிகள் தொங்கிக்கொண்டிருந்தது. தாமோதரத்தைக் கண்டதும் "எப்ப தம்பி வந்தாய்?" என்று ஆச்சரியத்தோடு கேட்டான் நாகேந்திரம்.

"நேற்றுத்தான் அண்ணா வந்தேன்" என்றான் தாமோதரம். ஆனால் அவன் பதிலைக் காதில் வாங்கிக் கொள்ள நேரமில்லா தவனைப்போல் தெருவின் தகரக் கதவைத் தள்ளித் திறந்து கொண்டு தன் காவுதடியுடன் அடுக்களைப் பக்கமாகப் போய்க் கொண்டி ருந்தான்.

அவனுக்குப் பின்னால் தெருக்கதவுகள் தானாகவே மூடிக்கொண்டபோது கதவின் பின்னால் கயிற்றில் கட்டப்பட்டு மேலே உருளையிற் தொங்கிக் கொண்டிருந்த கல் பெருஞ் சத்தமாய்க் கதவில் முட்டிக் கொண்டது. வெளியே நின்ற தாமோதரம் தெருப்படலையை மெதுவாகத் திறந்து அண்ணனின் பின்னால் அடுக்களைப் பக்கஞ் சென்றான்.

அடுக்களைக்குட் சென்ற நாகேந்திரமும் அம்மாவும் அட்டைப் பெட்டிக்குள்ளே தயிர்ப்பேணிகளை அடுக்கிக் கொண்டி ருந்தனர். சின்னத்தங்கையும் அவர்கள் இருவருக்கும் உதவி செய்து கொண்டிருந்தாள். தயிர்ப்பேணிகளை அடக்கிக் கொண்டே தெய்வானை கேட்டாள் "என்னடா மனே, உன்னிட்ட இருந்து எனக்கு ஐம்பது ரூபா நிலுவையா இருக்கு. தாறகதையே கதைக்கிறாய் இல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டுக்கார வல்லிபுரம் எனக்கென்ன சும்மாவா பால் தாரான்?" என்றாள் அம்மா.

"இன்றைக்கு வெள்ளிக்கிழமை. நேவில வேலை செய்யிற வனுக்கெல்லாம் சம்பளம். ஆனா அவன்கள் வீட்ட வர ஐந்து மணிக்கு மேலாயிரும். அதுமட்டும் நான் திருகோணமலையில நிக்கேலா. நாளைக்கு நான் அவங்களிட்ட காசப் பிரிச்சிடுவன். பின்னேரம் உனக்கு காசத்தருவன்" என்றான் நாகேந்திரம்.

"சரிதான், நாளைக்குக் காசுவராட்டி இந்த வியாபாரத்தையே நீ விட்டிற வேண்டியதுதான்" என்று கண்டிப்பாய்ச் சொல்லிய தெய்வானை இரு பெட்டிகளிலும் சரியாக இருநூற்றைம்பது பேணிகளை அடுக்கி முடித்தாள். அடக்கி முடித்ததும் "இந்தா தேத்தண்ணி குடி" என்று அவனிடம் தேநீர்க் கோப்பையை நீட்டினாள். தேநீரை வாங்கிக் குடித்த பின்னர், நாகேந்திரம் தயிர்ப்பேணிகள் அடங்கிய பெட்டிகளை மெதுவாக வெளியிலே கொண்டுவந்து வைத்து, அவைகளின் மேலேயிருந்த கயிற்று வளையத்தில் காவுதடியின் இரு அந்தங்களையும் லாவகமாக நுழைத்துக் காவுதடியைத் தோளில் வைத்து இருபக்கப் பாரத்தையும் சமன் செய்வதற்காய் தோளில் வைத்த காவுதடியைப் சற்றுப் பின்னால் நகர்த்தி நடக்கத் தொடங்கியதும் அவனது தங்கை முன்னால் ஓடிச் சென்று தெருக்கதவைத் திறந்து பிடித்தபடி நின்றாள்.

அடுக்களைக்குள்ளிருந்து அவனுடனே வெளியேறிவந்த தெய்வானை "அதுசரி, வெறும் பேணிகளைக் கொண்டு வரவில்லையே. இன்றைக்கு என்னத்தில பாலூத்திறது" என்று கேட்டாள்.

"நேத்துத் திருக்கிணாமலையால வர நல்லா நேரஞ்செண்டு போச்சு. அதால அப்படியே வீட்ட போயிற்றன். தங்கச்சிய அனுப்பி வெறும்பேணிய எடுத்துக்கம்மா" என்று நடையிலேயே பதில் சொல்லிக் கொண்டு தெருப்படலையைத் தாண்டி மண் ஒழுங்கையில் இறங்கி தோளிலுள்ள கா ஆட, ஆட விசுக்கு விசுக்கென்று நடந்தான் நாகேந்திரம்.

இவைகளையெல்லாம் பல் தேய்த்துக் கொண்டிருந்த தாமோதரம் தன் தாய் மீண்டும் அடுக்களைக்குள் வந்ததும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தைக் கழுவிக் கொண்டு அடுக்களைக்குள் நுழைந்தான். குத்தியில் அமர்ந்து கொண்ட தாமோதரத்திற்குத் தெய்வானை சுடச்சுடத் தேநீர் கொடுத்தாள். அதைக் கொஞ்சங் கொஞ்சமாகச் சுவைத்துக் கொண்டே "அம்மா, அண்ணனைப் பார்த்தாப் பரிதாபமாக இருக்கு. விடியற் காலையிலே காவுதடியைச் சுமந்து போறான். திருக்கிணாமலை வெயில் எல்லாந் திரிஞ்சு பொழுதுபடத் தான் வீட்டுக்கு வாறான்".

"யார நோகிறது? இந்தக் கறுமத்த அவன்தான் தேடிக் கொண்டான். முளைக்க முன்னம் அவனுக்குக் கல்யாணம். இந்த ஆனி பொறந்தாத்தான் அவனுக்கு இருபத்தொரு வயசு முடியும். ஆனி மாதத்தில் அவன் பிறந்ததாலை அந்த வருடம் தம்பலகாமக் கோணேசர் திருவிழாவுக்குக் கூட நான் போகல்ல".

"ஆனா அப்ப அப்பா சண்டை பிடிச்சாலு, நீயும் தானே அம்மா கல்யாணத்துக்குச் சம்மதிச்சா"

"என்ன செய்யிறது? குமர்ப் பழியைத் தேடிக் கொள்ளக் கூடாது என்று தான் சம்மதிச்சன். செம்பர்ர பெட்டை வடிவான பெட்டைதான். பயல் பூந்துகொண்டு அங்கேயே இருந்திற்றான். அதுகளும் இதுதான் தாயமெண்டு பூதாக்கலத்திலை சோறு போட்டிற்றுகள். இனி என்ன செய்வது நானும் சம்மதிச்சன். அந்த நாய்க்குக் கோணமலையப்பா தம்பலகாமத்தில் கல்யாணம் பேசினார். அங்கின முடிச்சிருந்தான் என்டா ரெண்டேக்கர் நீர்ப் பாய்ச்சல் காணியாவது கிடைச்சிருக்கும். இஞ்ச போன இடத்திலை ஒரு மண்ணாங் கட்டியும் இல்ல. அதனால காத்தடியச் சமக்கிறான் இது அவன்ர தல விதி"

ஆத்திரத்துடனும், ஆற்றாமையுடனும், அனுதாபத்தோடும் பேசி முடித்த தெய்வானை தன் மகளைக் கூப்பிட்டு இரண்டு முட்டைகளைக் கொடுத்து "இதைக் கொண்டேய் ஆத்தைக்கிட்டக் கொடுத்திற்று வாம்மா. அவ அண்ணாக்கு அப்பம் அனுப்பிறன் எண்டு சொன்னவ. கொடுத்திற்று வரக்குள்ள பெரியண்ணாட்டப் போய் வெறும் பேணியையும் எடுத்திற்று வா" என்றாள்.

இலட்சுமி முட்டைகளை வாங்கிக் கொண்டு ஓடினாள். தாமோதரம் மண்டபத்துட் சென்று தலைவாரி முகப் பூச்சையும் பூசிக் கொண்டு தெருவுக்கு வந்தான்.

தெருவோரத்தேயிருந்த பனிச்சை மரம் வளவுக்குள்ளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த மாமரத்துக்குப் போட்டியாகக் கண்ணைப் பறிக்கும் இளஞ்சிவப்பு நிறத்தில் இளந் தளிர்களைப் பொதுளிக் கொண்டு குடை கவிந்து நின்றது. எதிர் வளவுக்குள்ளே மூலஸ்தானம் மட்டும் கல்லால் அமைந்த பிள்ளையார் கோயிலின் முன்னால் அமைந் திருந்த ஓலைப் பந்தலின் கீழ் இருந்த கல்லில் பூசாரியார் செவ்வரத் தம் பூக்களை வைத்துக் கொண்டிருந்தார். பூவரசந்தீவுப் பக்கமிருந்து வரும் மாட்டு வண்டிகளும், கண்டக் காட்டை நோக்கிப் பொகும் வண்டிகளும் தெருவிலே புழுதியைக் கிளப்பிக் கொண்டு சென்றன. சந்தியில் வேலும் மயிலும் தேத்தண்ணீர்க் கடையில் பிளேன்ரீ அடிக்கும் சத்தம் அமர்க்களமாகக் கேட்டது.

தாமோதரத்துக்கு என்ன செய்வது என்று தோன்றவில்லை. மாமாவின் வீட்டிற்குப் போகலாம் என்ற எண்ணம் தோன்றியது. ஆனாலும் இந்த அதிகாலையிலா போவது? என்று அந்த எண்ணத்தைக் கைவிட்டுப் பனிச்சை மரப் பக்கமாக நடந்தான். எதிரேயுள்ள கோயில் வளவு முழுவதும் சருகுகள் நிறைந்து காணப்பட்டன. இன்று வெள்ளிக்கிழமை வழிபாட்டிற்காக வரும் பாடசாலைச் சிறுவர்கள் வளவைக் கூட்டிப் பெருக்குவார்கள் என்று பூசாரியார் எண்ணிக் கொண்டிருக்கிறார் போலும். அவருக்கென்ன சம்பளமா? அந்தக் கோயிலுக்கு எந்த அரசன் நிவந்தம் கொடுத் திருக்கிறான்? கூறு சங்கு தோல் முரசு கொட்டோசையைப் பூசாரியார் நேரத்துக்கு நேரம் கொடுத்து வருகிறாரே அது போதாதா?

கோயில் வளவைக் கூட்டிப் பெருக்கலாம் என்று முன்னேறிய தாமோதரத்தை தேநீர்க் கடைப்பக்கமிருந்து வந்த கைதட்டல் திரும்பிப் பார்க்க வைத்தது. தேநீர்க் கடைக்குள்ளிருந்து பாலாவும், பரமனும் வந்துகொண்டிருந்தார்கள். அவசர அவசரமாக வந்த பாலா தாமோதரத்தின் கைகளைப் பிடித்துக் கொண்டு "எப்படாப்பா வந்த நீ? பாடசாலை லீவு விட்டாச்சா" என்று கேட்டான்.

"என்ர கிளாசுக்கு மட்டும் லீவு. ஆனாச் சித்திரை வருஷங் கழிச்ச அடுத்த நாள் போக வேணும். ஆவணி மாதத்தில் கடைசிச் சோதனை. புரட்டாசியிலதான் மறுபடியும் இங்க வருவன்".

"அப்ப நல்லதாப் போச்சு. நாளைக்கு நீ இல்லியே எண்டு கவலைப் பட்டுக் கொண்டிருந்தன்".

"ஏன் என்ன சங்கதி?" என்று வினாவினான் தாமோதரம். "ஒண்ணுமில்ல நம்ம எம். பி. நாளைக் காலையில இஞ்ச வாறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றுத் தான் அறிவிச்சிருந்தார். நாளைக்குப் பத்துமணியளவில வந்து சாயந்தரந்தான் திரும்புவாராம். இந்த ஊரில மக்கள்ர குறைகளை அறிய வேண்டுமாம். அதுக்குத்தான் வாறாராம்" என்று விளக்கினான் பாலா.

தொடர்ந்து "இன்னமும் பெரியய்யாட்டக் கூடச் சொல் லல்ல. மத்தியானச் சாப்பாட்டை பாடசாலையிலே தானே எம். பி. க்குக் கொடுக்க வேணும்" என்றான் பரமன்.

பரமன் ஆலங்கேணி இளைஞர்களிடையே ஒரு முக்கியமான பேர்வழி. இரண்டு நிலைக் கண்ணாடிகளும் நான்கு யப்பானியப் பெண்களைத் தனித்தனியே சட்டமிட்ட படங்களும் மண்சுவரிற் தொங்கும் சலூன் என்னும் சிகையலங்கார நிலையத்தை அவன் நடத்தி வந்தான். நான்கு படங்களுக்கும் நடுவாகப் பேரறிஞர் அண்ணாத்துரையின் படம் தினம் தினம் புத்தம் புது மாலைகளுடன் காட்சியளிக்கும். அத்தோடு அவன் சலூனுக்கு நாள் தவறாமல் வீரகேசரி வரும். வாரந் தவறாமல் சுதந்திரன் பத்திரிகையும் வரும். சுயமரியாதைக் காரர்களின் சின்னஞ்சிறிய புத்தகங்களும் அங்கே இருக்கும். இதனால் பனிச்சைமர நிழலில் அவன் சலூனுக்கு முன்னால் எப்போதுமே இளைஞர் கூட்டம் ஒன்று குழுமியிருக்கும். அத்தோடு அவன் கையிற் தினந்தினம் காசு புரளும். கடந்த ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தல் நடந்த போது அவன் சலூனும் பனிச்சைமர நிழலுந்தான் தமிழரசுக் கட்சிக் காரியாலயமாக விளங்கின.

நெல்லியடியிற் படித்துக்கொண்டிருந்த தாமோதரத்திற்குச் சோஷலிச தத்துவார்த்தங்களிற் பிடிப்பு ஏற்பட்டிருந்தாலும் ஆலங்கேணியில் அந்தக் கந்தபதத்துவம் எடுபடாது என்ற விவகாரம் தெரியும். ஆகவே ஊரோடு சேர்ந்த அவனும் தமிழரசுக் கட்சி ஆதரவாளனானான். மேலும் இரண்டு வருடங்களுக்கு முன்னே நாட்டில் நடந்த இனக் கலவரம் தமிழ் மக்களை எல்லாம் ஏதோ ஒரு கட்சியின் கீழ் ஒன்றிணைய வேண்டும் என்ற எண்ணத்தையும் ஏற்படுத்தியது.

ஆலங்கேணியைப் பொறுத்தவரையும் இனக்கலவரம் என்ற ஒன்று நடக்கவில்லைதான். ஆனாலும் தன் எருமைகளைத் தேடிக்கொண்டு திருக்கிணா மேட்டுக்குச் சென்ற மாட்டுக்கார வல்லிபுரம் அக்கலவரத்தின் போது அங்கேயிருந்த மன்னம் பிட்டிக்குச் சென்று பொலநறுவையிற் கலவரத்தில் மாட்டிக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மாதத்திற்குப் பின்னர்தான் ஊருக்கு வந்து சேர்ந்தார். பொலநறுவைக் கலவரத்தைப் பற்றி அவர் கூறிய கதைகள் ஆலங்கேணி மக்களுக்கும் உணர்ச்சியை ஊட்டிற்று. அந்தக் காலகட்டத்திற்தான் பரமனின் முயற்சியால் பாலா தமிழரசுக் கட்சிக் கிளையை ஆலங்கேணியில் ஆரம்பித்தான்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னால் பாராளுமன்றத் தேர்தல் வந்தது. இலங்கை சுதந்திரமடைந்த காலந்தொட்டு நடைபெற்ற மூன்று பாராளுமன்றத் தேர்தல்களிலும் ஆலங்கேணி மக்கள் மூதூர்த் தொகுதியிற் பெரும்பான்மையினராக வாழ்ந்த முஸ்லிம் ஒருவருக்கே வாக்களித்தார்கள்.

ஆலங்கேணியின் அருகாமையிலிருந்த கிண்ணியா மிகப் பெரிய முஸ்லிம் கிராமம். கிழக்கிலங்கையிலே காத்தான்குடிக்கு அடுத்ததாகப் பெரிய கிராமமான கிண்ணியாவிலிருந்து தான் மூதூர்த் தொகுதி எம். பி. ஒருவர் வரக்கூடியதாக இருந்தது.

கிண்ணியா அபேட்சகர் யாரோ ஒருவருக்கு எந்தவிதமான உணர்வும் பிடிப்பும் இன்றி வாக்களித்த ஆலங்கேணி மக்கள் தம் கிராமத்தில் தமிழரசுக் கட்சிக் கிளை நிறுவப்பட்ட பின்னர் தமிழரசுக் கட்சி நிறுத்திய அபேட்சகருக்கு உணர்ச்சி வயப்பட்டு வாக்களிக்கக் கூடிய வகையில் மூதூர்த் தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதி ஆக்கப்பட்டது. தமிழரசுக் கட்சிப் பிரச்சாரத்தில் தாமோதரமும் உற்சாகமாக ஈடுபட்டான்.

அந்த ஆண்டு அடுத்தடுத்து நடந்த இரு தேர்தல்களிலும் ஆலங்கேணி மக்களும், அயலிலுள்ள ஈச்சந்தீவு, உப்பாறு என்ற கிராமங்களின் தமிழ் மக்களும் தமிழ் அபேட்சகருக்கே வாக்களித்தனர். தங்கள் கட்சியும், தமது அபேட்சகரும் இரண்டு தேர்தல்களிலும் அமோக வெற்றியடைந்தமையை தமிழரசுக் கட்சியைத் தாபித்த இளைஞர்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடினர். ஊரிலுள்ள கிழடு கட்டைகள் தங்கள் சொந்தக்காரன் எம். பி. ஆகிவிட்டான் என்று பெருமைப் பட்டார்கள்.

அந்தப் பாராளுமன்ற அங்கத்தவர் வெற்றிவிழா கொண்டாடக் கிராமத்திற்கு வந்த பின்பு ஒன்பது மாதங்கள் கழித்து மீண்டும் கிராமத்தவர்களைச் சந்திக்க வருகிறார்.

"அவருக்குக் கோலாகலமாக வரவேற்பு அளிக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்ரஸ் பேர்ர் எழுதி வாசிக்க வேண்டும்" என்று உற்சாகத்துடன் சொன்னான் பரமன்.

தாமோதரம் சொன்னான் "அவரை வரவேற்கத்தான் வேண்டும்; ஆனால் அதற்காகப் பந்தல்; போடவோ மேடை அமைக்கவோ, லவுட் ஸ்பீக்கர் கட்டவோ தேவையில்லை. ஏனென்றால் அவர் முதற் தடவையாக இங்கு வரவில்லை. மக்களின் குறைகளைக் கேட்கவே வருகிறார். அதற்காக நாம் மக்களுக்கு உதவி செய்து அவர்களை நெறிப்படுத்தலாம். நாம் செய்ய வண்டியது அதுதான்".

அவன் சொன்னதைப் பாலாவும் ஆமோதித்தான். ஆனாற் பரமனுக்கோ கூட்டம் வேண்டும் மாலை வேண்டும் . ஒலிபெருக்கி வேண்டும், என்றிருந்தாலும் வேறு வழியின்றிப் பரமனும் அவர்களுக்கு உடன்பட்டாலும் எம். பி. க்கு நல்ல பூமாலைகளாவது போட வேண்டும். "உன்ர மச்சாள் சௌந்தரம் சோக்காக மாலை கட்டுவாள். போனமுறை வரவேற்கக்குள்ள அவள்தான் மாலை கட்டித் தந்தாள். திருக்கினாமலையில் கூட அப்படி மாலையை நான் பார்க்கல, அவட்டச் சொல்லி இரண்டு மாலையாவது கட்டித் தா" என்றான் பரமன்.

"ஓ அதுக்கென்ன!" என்றான் தாமோதரம்.

"அத்தோட சாப்பாட்டு விஷயம். ஒரு கிடாய் அறுத்துப் பாடசாலையில விருந்து போடுவம்"

"ஒரு ஆளுக்காகவா ஒரு கிடாய்?" அவர் என்ன திருக்கினாமலையில இருந்து தனியாவா வருவார்? அத்தோட அவர் வாறார் என்று கேள்விப்பட்டு மூதூரிலிருந்தும் கட்டப்பறிச்சானி லிருந்தும் ஆக்கள் வருவாங்க. எப்படியும் முப்பது பேருக்குக் குறையாது ஒரு ஆடு அடிக்கத்தான் வேணும்".

"அதைப்பற்றித் தலைமை வாத்தியாரோட யோசிப்பம்" என்றான் தாமோதரம். அப்போது பாடசாலை தாழ்வாதாரத்திற் தொங்கிய தண்டவாளத் துண்டில் இரும்புக் கம்பியால் அடித்து எழுப்பிய ஓசை, பாடசாலை தொடங்க இன்னமும் அரை மணித்தியாலந்தான் இருக்கிறது என்ற செய்தியை ஆலங்கேணிக் கிராமம் முழுமைக்கும் அறிவித்தது. தெருவிலே மாணவர்களும் மாணவிகளும் தங்கள் புத்தகங்களுடன் பாடசாலையை நோக்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தார்கள்.

"அப்ப நான் போய்க் கடையைத் திறக்கிறன். நீர் போய்ச் சௌந்தரத்திற்ற மாலை கட்டுற விஷயத்தை இப்பவே சொல்லும்" என்ற பரமன் தாமோதரத்தின்கையைப் பிடித்துக்கொண்டே கடைப்பக்கம் செல்கையில் தாமோதரத்தின் மாமா வீட்டுத் தெருப்படலையைத் திறந்து அவனை உள்ளே தள்ளிவிட்டுப் பாலுவோடு சேர்ந்து மேலே நடந்தான்.

அத்தியாயம் - 5

தெருப்படலையைத் தாண்டி வெண்மணலில் இறங்கித் தன் மாமனார் வீட்டை நோக்கி நடந்தான் தாமோதரம். ஆலங்கேணிக் கிராமத்தின் விரல் விட்டு எண்ணக்கூடிய ஓட்டு வீடுகளில் அவரது வீடும் ஒன்று. இரண்டு அறைகளும், ஒரு பூஜையறையும் கொண்ட வீட்டின் முன்னால் விசாலமான விறாந்தையும் கொண்ட அவ்வீட்டுக்குச் செல்லும் வழியில் ஒரு பாக அகலமான மணற் பாதையின் இரு மருங்கிலும் செங்கற்கள் நடப்பட்டுச் சுண்ணாம்பு தீட்டப் பெற்றிருந்தது. கற்களுக்குப் பின்னாற் கிராமத்தவரால் "கானல் வாழை" என்றழைக்கப்படும் கனாஸ் செடிகள் மஞ்சளும் சிவப்புமாகப் பூத்திருந்தன. அவற்றினிடையே சமமான இடைவெளி களில் குறோட்டன்கள் பல்வேறு நிறங்களிலும் இரு பக்கமும் அணிவகுத்து நின்றன. விறாந்தைக்கு முன்னால் பென்னம்பெரிய பந்தலில் கொடிமல்லிகை படர்ந்திருந்தது. மல்லிகைப் பூக்களின் சுகந்தம் மனத்துள் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கிக் கொண்டிருந்தது.

வீட்டினுள்ளே சந்தடியைக் காணவில்லை. அரைச் சுவருக்கு மேலே மரக்கிராதிகளடிக்கப்பட்ட விறாந்தையின் முன் கதவு மூடப்பட்டிருந்தது. தாமோதரம் பூந்தோட்டப் பாதை வழியே நடந்து மல்லிகைப் பந்தலை அண்மியபோது சௌந்தரம் மண்குடத்தை இடுப்பில் வைத்துத் தண்ணீர் சுமந்துகொண்டு வந்தாள். வரும் வழியிலிருந்த குறோட்டன்களிலும், கனாஸ்களிலும் இருந்து நீர் சொட்டிக் கொண்டிருப்பதைப் போல அவள் பாவாடைகளிலும், கைகளிலும் கூட நீர் சொட்டிக் கொண்டிருந்தது. வைகறையின் குளுமையில், வெண்பனி தோய்ந்து, இளநகை சிந்தி அரும்பிக் கொண்டிருக்கும் மல்லிகையைப் போலவே அவள் தோற்றமளித் தாள்.

மானாக வெருண்டு தாமோதரத்தைக் கண்டதும் அவள் ஓடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவோமா என்று நினைந்து எப்படியோ சூதாரித்துக் கொண்டு தான் சுமந்து வந்த தண்ணீர்க் குடத்தைப் பயந்து போனவள் போல மல்லிகையின் அடியிற் சரித்தாள். சரித்து முடித்ததும் குடத்தை அங்கேயே வைத்துவிட்டுப் பின் பக்கமாகத் திரும்புகையில் "எங்கே போகிறாய் மாமா இல்லையா?" என்று அதட்டலாகக் கேட்டான் தாமோதரம்.

"அப்பு தம்பலகாமம் போயிற்றார். நில்லுங்க வாறன்" என்று நாணிக் கொண்டே பின்பக்கமாகப் போனாள் சௌந்தரம்.

தாமோதரம் அவளைத் தன் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு தன்னந்தனியாகத் தம்பலகாமம் சென்றிருக்கிறான். அவளுக்கு அடித்திருக்கிறான். ஏன் அவளை முத்தமிட்டுக்கூட இருக்கிறான். அப்போதெல்லாம் எந்தக் கூச்சமும் அடையாதவள் இப்போது மட்டும் ஏன் இப்படி வெட்கப்படுகிறாள்.

ஆனாலும் அவள் வெட்கப்படுவதும் அழகாகத்தான் இருக்கிறது. அவன் எட்டாம் வகுப்புப் படிக்கையில் மூதூர் வேதக்கார வாத்தியார் வைத்திருந்த பைபிளிலிருந்து ஞானி சலமோனின் உன்னதப் பாடல்களைப் படித்திருக்கிறான்; அந்தப் பாடல் வரிகள் அவன் ஞாபகத்திற்கு வந்தன.

என்னே உன் அழகு! என் அன்பே
என்னே உன் அழகு!
மயிர் கத்தரித்த பின் குளிப்பாட்டப்பட்டுக் கரையேறும்
ஆட்டுமந்தை போன்றவை உன் பற்கள்.
உன் இதழ்கள் செம்பட்டு நூலிழைகள்'
கன்னங்கள் வெடித்த மாதுளம் பழம் போன்றவை
உன் தனங்கள் இரண்டும்
லீலிகளின் இடையே மேயும்
இரட்டை மான் கன்றுகள்.

ஞானி சலமோனின் உன்னதப் பாடல் அடிகளைத் தாமோதரம் அசைபோட்டு நினைத்து பரவசப்பட்டுக் கொண்டிருக் கையில் சௌந்தரம் வீட்டினுட்புறமாக வந்து கதவைத் திறந்து விறாந்தைக் கதவைத் திறந்து "வாருங்கள் அத்தான்" என்று அவனை அழைத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன் நாவின் அடியிற் தேனும் பாலும் இருக்கின்றன என்ற சலமோனின் அடிகளை நினைத்துக் கொண்டான் தாமோதரம். கதிரையில் வந்து அமர்ந்த பின் "அப்பா எங்கே?" என்று மீண்டும் கேட்டான்.

சௌந்தரம் அறைக்கதவின் நிலையிலே சார்ந்து கொண்டு நின்று ஏதோ சொல்ல வாயெடுத்த போது "அவர் தம்பலகாமம் போயிற்றார். கோடைப் போக விதைப்புக்கு அங்கே வயல் உழுக்கிறாங்க. பெருமிதியை முடிச்சிக் கொண்டுதான் வருவார்" என்று சொன்ன அவள் தாய் அபிராமி, "இருங்க தம்பி வாறன்" என்று விட்டு மீண்டும் பின்புறமாக அடுக்களைப் பக்கம் நடந்தாள்.

அவள் தம்பலகாமத்தில் பிறந்தவள். அங்கே நாயன்மார் திடல் ஆலமரத்தடிக்குப் பக்கத்தில் அவள் பிறந்த வீடு இருக்கிறது. தெருவைத் கடந்து கரைச்சைத் திடலுக்குப் போகும் வயல் வெளியில் அவளுக்கு ஐந்து ஏக்கர் நீர்ப் பாய்ச்சற் காணி சீதனம். அந்த வயலை உழக்கத்தான் தன் மாமனார் சென்றிருப்பார் என்றெண்ணிக் கொண்டே "உன்னோட நான் கோவம்" என்றான் தாமோதரம்.

"அதுதான் நேற்று வராததிலிருந்து தெரியுமே"

"ஓஹோ"

"என்ன ஓஹோ, இப்ப மாமாவைத் தேடிக் கொண்டு வந்தீங்களாக்கும். அவரில்லையெண்டு போப்போறீங்களாக்கும்" என்று விஷமமாகச் சிரித்தாள் சௌந்தரம்.

தாமோதரம் முகத்தைச் சற்றுக் கடுமையாக்கிக் கொண்டு "நீ ஏன் பாடசாலைக்குப் போகல்ல"

"அதை உங்கட மாமாட்டக் கேளுங்க"

"ஏன், அவர் போக வேண்டாம் என்றாரா?" அவள் பதில் சொல்லவில்லை.

தாமோதரம் மீண்டும் பேசினான். "அப்பா சொன்னார் என்று நீயும் போகாமல் இருந்திற்றாய். எல்லாம் நீ இந்த ஊரில பிறந்த கொடுமை. நீயும் தம்பலகாமத்தில் பிறந்திருந்தாப் படிப்பை நிறுத்தி யிருக்க மாட்டாய். இந்த நாட்டில முடியாதெண்டு அந்த ஊரில ஆணும் பெண்ணும் இந்தியாவுக்குப் போய் கிராஜுவேட் பண்ணிட்டு வாராங்க"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சௌந்தரம் அதற்கும் மௌனமாகவே இருந்தாள். இப்ப இந்தியாவுக்குப் போகத் தேவையில்ல எஸ். எஸ். சி மட்டும் ஆலங் கேணியிலேயே படித்து ஆகக் குறைந்தது ஒரு ஆசிரியை ஆகலாம். ஆலங்கேணியில் முதலாவது ஆசிரியையாக நீ ஆவாய் என்று நான் கனவு கண்டேன்."

அப்போதுங்கூடச் சௌந்தரம் தன் மௌனத்தைக் கலைக்கவில்லை.

"மாமாட்ட நான் சொல்லுறன். இனிமேலாவது நம்ம பாடசாலைக்குப் போறியா?"

"பாடசாலைக்குப் போகாம விட்டு மூணு மாசத்துக்கு மேல ஆச்சு. இனிமேல்ப் போறதெண்டா எனக்கு வெக்கமாக் கிடக்கு. மாமிகூட நான் பாடசாலைக்குப் போறத விரும்பல்ல" என்றிழுத்தாள் சௌந்தரம்.

"எல்லார்ர விருப்பத்துக்கும் நீ ஆட ஏலாது. நீ கட்டாயம் பள்ளிக்குப் போகத்தான் வேணும்" என்று கடுமையாகச் சொன்னான்.

"எனக்குஞ் சேர்த்து நீங்க படிச்சிக் கொள்ளுங்க பின்னே ரத்தில் நான் ரீச்சருட்ட நான் தையல் படிக்கிறன். அது எனக்குப் போதும்".

"அப்ப நான் சொல்லுறதக் கேட்க மாட்ட?"

இதற்குள் அடுக்களையிலிருந்து அபிராமி வந்துவிட்டாள். டிஷ் ஒன்றிலே ஆவி பறந்துகொண்டிருக்கும் இராசவள்ளிக் கிழங்குப் புக்கையும் கரண்டியும் இருந்தது. அதை முன்னால் இருந்த ஸ்டூலில் வைத்துவிட்டுச் "சாப்பிடுங்க தம்பி" என்றாள். இதுதான் தருணம் என்று சௌந்தரம். வீட்டுக்குள்ளே போனாள். தாமோதரம் தன் விருப்பு வெறுப்புக்களை வெளிக்காட்டிக் கொள்ளாமற் சாப்பிடத் தொடங்கினான்.

"என்ன தம்பி, பாடசாலை லீவு விட்டிற்றா? இன்னமும் இங்கிலீசுக்குச் சித்திரை பிறக்கவில்லையே" என்று கேட்டாள் அபிராமி.

"எங்கட வகுப்ப மட்டும் விட்டுட்டாங்க. ஆனா நான் வருஷம் கழித்து அடுத்த நாளே போக வேணும். ரியூசன் வகுப்பு இருக்கு ஆவணியிலே சோதனை" என்றான் தாமோதரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிராமிக்கு அதற்குமேலே என்ன பேசுவதென்று தெரிய வில்லை. அவளும் கதவு நிலையிற் சார்ந்து கொண்டு முந்தானைத் தலைப்பை முறுக்கிக்கொண்டு நின்றாள். கழுத்திலே கிடந்த கனமான தாலிக் கொடியும், கைகளிற் கிடந்த வளையல்களும் பளபளத்து மின்னின.

தாமோதரம் மீண்டும் பேச்சைத் தொடங்கினான் "மாமா எப்போது வருவார்?"

"அவர் விடியப்புறத்திலேயே போயிற்றார். இன்றைக்கு நல்ல நாள் பங்குனி உத்தரம். திருக்கிணாமலை கோணேசர் திருவிழா. பெருமிதியை இன்றைக்குத் தொடங்குவார். ஐஞ்சு நாளாவது ஆகும். புதன் கிழமைக்குப் பிறகுதான் வருவார்" என்ற அபிராமி ஏன் தம்பி, நீங்க அவசரமா அவரைப் பார்க்க வேணுமா? என்று கேட்டாள்.

"இல்லை மாமி நாளைக்கு இங்க எம். பி. வாறாராம். முக்கியமான வேலை இருக்கு நானும் நிக்க வேணும் என்று எல்லாப் பொடியன்களும் சொல்றாங்க".

"அப்படியா? சாப்பிவில்லையே வைச்சது அப்படியே இருக்கே"

"போதும் மாமி" என்று தாமோதரம் சொல்லியபோது சௌந்தரம் பாற் கிளாசுடன் வந்தாள். பரமனின் சலூனிலிருந்து ரேடியோ "பாலும் பழமும் கைகளிலேந்தி" என்று பாடியது. தாமோதரம் பாலைக் கையில் வாங்கிக் கொண்ட போது அபிராமி "நெல்லுத் தீஞ்சு மணக்கிறாப்போல இருக்கு" என்று சொல்லிக் கொண்டே அடுக்களைப் பக்கம் அவசரமாக ஓடினாள்.

தாமோதரம் பாலைக் குடித்துக் கொண்டே "நீ பள்ளிக்குப் போற சங்கதி இருக்கட்டும். இப்போது நீ எனக்கு ஒரு வேலை செய்து தர வேண்டும்."

"என்னத்தான்"

"நாளைக்கு எம். பி. இங்க வாறாராம் அவருக்குப் போட இரண்டு அழகான பூமாலை கட்டித் தர வேணும்."

"நான் எட்டாம் வகுப்புத்தானே பாஸ் பண்ணியிருக்கன். பள்ளிக் கூடத்தில் பத்தாம் வகுப்புப் படிக்கிற பெண்கள் இருக்காங்க. அவங்களிட்டச் சொன்னா ரீச்சரோட சேர்ந்து அழகான மாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டித் தருவாங்க".

"அது தெரியாம நான் கேக்கல. ஆனா இந்த ஊரில் நீதான் மாலை கட்டிறதுல எக்ஸ்பேட்டாம் எண்டு ஊரெல்லாஞ் சொல்லுது. உன்னால கட்டித்தர ஏலுமா? ஏலாதா? அதைச் சொல்லு" என்று சற்று ஆத்திரமாகவே கேட்டான்.

"எப்ப மால வேணும்?"

"நாளைக்குப் பத்து மணிக்கு முன்ன. ஏலுமா? ஏலாதா? என்று சொல்". "எனக்கு வேற வேல இருக்கு" என்று எழுந்தான் தாமோதரம்.

"வீட்ட கொண்டு வரவா? அல்லது இங்க வந்து எடுப்பீங் களா?"

"நான் வராட்டித் தம்பியை அனுப்புறன்" என்ற தாமோதரம் "அம்மா எங்கே?" என்று கேட்டான்.

பின்கதவு வழியாகப் பார்த்த சௌந்தரம் "அம்மா அவித்த நெல்லைப் பாயில் கொட்டிப் பரவிக் கொண்டிருக்கா" என்றாள் சௌந்தரம்.

தாமோதரம் வீட்டுக்குள் நுழைந்து பின்கதவு வரை சென்று "நான் போய்வாறன் மாமி" என்று கூறிவிட்டு வழிநடந்தான்.

குரோட்டன்களுக்கு மத்தியிலுள்ள பாதை வழியே அவன் நடக்கையில் சௌந்தரம் உருவத்தால் அழகி மட்டுமல்ல மனதிலே சௌந்தர்ய உணர்வும் கொண்டவள். அவள் சௌந்தர்ய உணர்வுக்கு இப் பூந்தோட்டமே சாட்சியென்று எண்ணிக் கொண்டான் தாமோதரம். ஆனால் வீணையைப் பறிகொடுத்த சரஸ்வதி போல அவள் எட்டாம் வகுப்புச் சித்தியடைந்ததோடு வீட்டுக்குள் முடங்கி விட்டாளே என்ற எண்ணம் அவனை வதைத்துக் கொண்டிருந்தது. அவன் பின்னாலேயே சௌந்தரம் வந்து கொண்டிருப்பதை அப்போது கவனித்த தாமோதரம் "நீயெங்கே வருகிறாய்" என்று அதட்டினான்.

"உங்கட வீட்ட தான் போக வேணும் மாமி பால் காய்ச்சத் தொடங்கிருவா அவருக்கு உதவி செய்ய வேணும். முன்படலையைக் கட்டி விட்டு நான் பின் வழியாய் வேலி மங்கடை குள்ளால உங்க வீட்ட போறன். படலையைக் கட்டத்தான் உங்க பின்னால வாறன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"படலையை நான் கட்டிற்றுப் போறன் நீ பின்னால போ" "ஏன் நான் உங்களோட வாறது உங்களுக்கு விருப்பமில்லையாக்கும்".

தாமோதரம் அவளைப் பார்த்துச் சிரித்தான். சௌந்தரமும் சிரித்தாள் ஒழுங்கையிலே மறி ஆடு ஒன்று பிணை ஆட்டைத் துரத்தி அதைத் தழுவ முயன்று கொண்டிருந்தது.

அதைப் பார்த்த சௌந்தரம் "ஆடு வந்திரும் அத்தான் படலையை இழுத்துக் கட்டிற்றுப் போங்க" என்றுவிட்டு வீட்டின் பின்பக்கமாக நடந்தாள்.

இனிப்பான நினைவுகளோடு தாமோதரமும் வெளியிலிறங்கிப் படலையைச் சிக்காராகக் கட்டிவிட்டுப் பரமனின் சலூனை நோக்கி நடந்தான்.

கோயிலடியிலே பந்தரின் கீழ்க் குழுமியிருந்த பாடசாலைப் பிள்ளைகள் தேவாரம் பாடிக் கொண்டிருந்தனர்.

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தமை நன்னெறி யுய்ப்பதும்...."

சின்னத்தம்பி வாத்தியார் இடுப்பில் சால்வையைக் கட்டிக் கொண்டு துலாம்பரமாக நீறு பூசிய நெற்றியின் மையத்தில் சந்தனப் பொட்டு மிளிரக் கை கூப்பியபடி தேவாரம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

அத்தியாயம் - 6

பரமனின் சலூனிலிருந்து சில யார்களுக்கு அப்பால் கோயிலின் எதிர்த் திசையில் அவ்வூர் வாசிகசாலை இருந்தது. வைரமான காட்டு மரங்களைத் தூண்களாக நட்டு அத்தூண்களின் இருமருங்கிலும் நெருக்கமாக வரிச்சுத் தடிகளை கட்டி அத்தடி களிடையே குழைத்த களிமண்ணைச் செலுத்தி வைக்கப்பட்ட சுவர் அதன்மேல் ஓலைக் கூரை. ஒரு அறையும் மண்டபமும் கொண்ட நீளமான கட்டிடம். மண்டபத்துள்ளே கிடந்த மேசையின் இரு பக்கமும் இருந்த டெஸ்குகளில் ஒன்றிலே தாமோதரம் சென்று உட்கார்ந்து கொண்டான். ஏற்கனவே சின்னவனும், தங்கராசனும், அருளனும் வந்திருந்தார்கள். பாலாவும், பரமனும் இன்னும் பத்துப் பன்னிரெண்டு இளைஞர்களோடு வந்து கொண்டிருந்தார்கள்.

கோயிலிலே மாணவர்கள் தம் பிரார்த்தனையை முடித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு இவ்விருவராக அணிஅணியாய் முதலிலே ஆண்களும் பெண்களுமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். கடைசியாய்ச் சென்ற தலைமை ஆசிரியரிடம் பாலா ஏதோ பேசிவிட்டு அவசர அவசரமாகத் தன் கூட்டத்தினரோடு வாசிகசாலையை அடைந்தான். வாசிக சாலையிற் கூட்டம் தொடங்கியது. ஆரம்பத்திற் தாமோதரம் தேவாரம் பாடினான்.

"நிரைகழலரவஞ் சிலம்பொலியலம்பும் நிமலர்நீறணி திருமேனி....."

கூட்டத்திற்கு பாலா தலைமை வகித்தாலும் தாமோதரமே அக்கூட்டத்தில் முக்கியஸ்தனாக இருந்தான். "நாளைக்கு வரப் போகும் எம். பி. தன் கடமைக்காகத்தான் இங்கே வருகிறார். அதற்கு தடபுடலான வரவேற்பு அவசியமில்லை. அவரிடம் நம்மூரின் குறைகளையும், தேவைகளையும் சொல்வது தான் முக்கியமானது" என்ற அவனது கருத்தை எல்லோருமே ஏற்றுக் கொண்டாலும், பரமனுக்கு அது திருப்தியாக இல்லை. அவனுக்குப் பூமாலை, மேடை, லவுட்ஸ்பீக்கர் என்று ஒரு விழா வேண்டும்.

அதற்காக அவன் எவ்வளவும் செலவழிக்கவுந் தயார். நாளாந்தம் அவனிடம் காசும் புழக்கத்திலுள்ளது.

ஆனாலும் மற்றவர்கள் தம் கிராமத்தின் தேவைகளை ஆராய்ந்தார்கள்.

"ஊருக்கு ஒரு உப தபாற் கந்தோர் வேண்டும். பத்துச் சத முத்திரை வாங்கவும் சின்னக்கிண்ணியாவுக்குச் செல்ல வேண்டி உள்ளது" என்றான் அருளன்.

"நம்ம வாசிகசாலைக்கு ஒரு நல்ல கட்டிடம் வேண்டும்" என்றான் பரமன்.

"இவையெல்லாம் வேண்டுந்தான். ஆனால் நமது கிராம மக்களின் அடிப்படைத் தேவை இவைகளல்ல. விவசாயத்தையும் கால்நடைகளையும் நம்பி வாழ்பவர் நம்மூரவர். ஊரவர்களுக்கு கண்டற் காட்டு மானாவாரிக் கிராமத்தைத் தவிர வேறு காணிகளே இல்லை. அந்த மானாவாரிக் காணியும் எல்லோருக்கும் இல்லை. கந்தளாய்க் கொலனித் திட்டத்தில் நீர்ப்பாய்ச்சல் காணியும் மேட்டுக் காணியும் கொடுத்துங் கூட நம்மூரிலிருந்து இரண்டே இரண்டு குடும்பங்கள் தான் அங்கு சென்றன. மற்ற எவருமே பிறந்த ஊரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுப்போக விரும்பவில்லை. ஆகவே நமக்கு முதல் தேவை கண்டகாட்டு மானாவாரித் தரைக்கு நீர்ப் பாய்ச்சல் ஏற்படுத்துவது தான். அந்த வெளியில் இருந்து கூப்பிடு தூரத்தில் தான் மகாவலி கங்கை ஓடுது".

"அடுத்து கண்டக் காட்டுத் துறையடிக்கு நல்ல பாதை வேண்டும். ஒரு நல்ல றோட் மட்டும் இருந்தால் நம்மூரவர்கள் மாட்டுப் பட்டிக்குச் சைக்கிளிலோ - ஏன் காரிலேயே சென்று பாலைக் கொண்டு வரலாம். காவுதடியில் சுமக்கத் தேவையில்லை. ஆகவே கண்டக்காட்டு வெளிக்குத் தண்ணீரும், அங்கு போகத் தெருவுந்தான் நமது முக்கியத் தேவைகள்" என்று தெளிவு படுத்தினான் தாமோதரம்.

கூடியிருந்த வாலிபர்கள் தாமோதரத்தை ஒருமுகமாக ஆதரித்தார்கள். எம். பி. யிடம் கொடுப்பதற்கான மனுவைத் தயாரிக்கும் படியும் கூட்டம் அவனைக் கேட்டுக் கொண்டது. பாடசாலை முடிந்ததும் தலைமை ஆசிரியரோடும் ஆலோசித்து அம் மனுவை எழுதுவதாகத் தாமோதரம் ஒப்புக் கொண்டான். பாராளுமன்ற அங்கத்தவரை வாசிகசாலையிற் சந்தித்து மனுவைக் கொடுப்பதெனவும், மற்றைய விடயங்களைப் பாடசாலையிலேயே நடத்த வேண்டும் எனவும் கூட்டம் தீர்மானித்தது. இத் தீர்மானத்தை எடுத்துக் கூட்டம் முடிவடைகையில் ஏறத்தாழப் பதினொரு மணியாகிவிட்டது. வேலும் மயிலும் கடையிலிருந்து பரமன் கொண்டுவந்த சோடாப் போத்தல்களை அவர்கள் குடித்துக் கொண்டிருக்கையில் வெளியே பங்குனி மாத வெயில் ஆலங்கேணி மணலை வறுத்துக் கொட்டிக் கொண்டிருந்தது.

"இந்தச் சுடுமணலிலே சோளங் கொட்டையைப் போட்டால் பொரிஞ்சு போகும். காண்டாவனம் தொவங்கிட்டுப் போல" என்றான் பரமன்.

காண்டாவனம் இல்லை. காண்டவ தகனம் என்று திருத்தினான் தாமோதரம்.

"அது என்ன தகனண்டாப்பா" என்று கேட்டான் அருளன்.

"இந் நாட்களிற் தான் அருச்சுனன் காண்டவம் என்ற வனத்தை எரித்தானாம். அதனாற் தான் இந்த நாட்களில் சூடும், வெக்கையும் அதிகரிப்பதாக நம் கிராமத்தவர்கள் நம்புகிறார்கள்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆனால் உண்மை அதுவல்ல. சித்திரை முதல் வாரத்தில் தான் சூரியன் இலங்கைக்கு நேரே உச்சங் கொடுக்கிறான். அதனால் தான் சூடு அதிகரிக்கிறது" என்று விளக்கினான் தாமோதரம்.

தாமோதரம் காலையில் வீட்டைவிட்டுப் புறப்பட்டு வருகையில் காலில் செருப்பின்றியே வந்தான். இப்போது வெறுங்காலுடன் வீட்டுக்குப் போவதை எண்ணிய போது அவனுக்குத் திகிலாயிருந்தது. மெதுவாக பனிச்சை மரத்தடிக்கு வந்து அதன் நிழலின் குளுமையிற் சில விநாடிகள் தரித்து நின்று அங்கிருந்து வேலி ஆமணக்குகள் விழுத்தும் நிழலில் காலடிகள் பதியுமாறு ஓடியே சென்றான் வீட்டுக்கு. யாழ்ப்பாணம் படிக்கச் சென்றதன் பின்னர் ஐந்து ஆண்டுகளாக காற் செருப்பைக் கழற்றாததினால் அவன் பாதங்கள் சூட்டைத் தாங்கும் சக்தியை இழந்திருந்தன.

வேர்த்துக் களைத்து வந்தவன் முற்றத்தின் மாமரத்தின் கீழ் சற்றுத் தரித்து நின்று அதன் பின்னர் வீட்டை அடைந்தான். வீட்டு விறாந்தையில் சௌந்தரம் ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். தாமோதரத்தைக் கண்டதும், அவள் தன் இருக்கையிலிருந்து எழுந்து நின்றாள். அவள் அறைக்குள் ஓட முடியாதபடி தாமோதரம் அறைக்கதவின் வாசலிற் போய் நின்றான்.

தாமோதரம் அவள் கையிலிருந்த புத்தகத்தைப் பார்த்தான். அது கடந்த ஆண்டுப் பொதுத் தேர்தலுக்கான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம். அதன் அட்டையில் ஸ்ரீமாவோ அம்மையாரின் படம் இருந்தது. அந்த அம்மையாரின் கட்சியிற் போட்டியிட்ட அயலூர் முஸ்லிம் அபேட்சகர் அவ் விஞ்ஞாபனத்தை ஆலங்கேணியிலுள்ள எல்லா வீடுகளுக்குமே கொடுத்திருந்தார். அவ் விஞ்ஞாபனத்தைப் பார்த்தபடியே,

"உலகில் முதலாவது பெண் பிரதமரை இந்த நாடு பெற்றெடுத்திருக்கிறது. ஆனால் அப்பெண் பிரதமரின் நாட்டுப் பெண்களுக்கு எட்டாம் வகுப்புக்கு மேல் படிக்க விருப்பமில்லை" என்றான் தாமோதரம்.

அவன் குத்தலைக் கேட்டதும் சௌந்தரத்திற்கு ஆத்திரம் வந்தது. காலையில் தண்ணீர்க் குடத்தோடு நின்ற போதிலிருந்த வெட்கம் இப்போது இல்லை. குட்டக் குட்டக் குனியக் கூடாது என்று அவள் மனத்தில் எண்ணினாள். அந்த எண்ணத்தில் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்த அம்மையார் ஒண்ணும் பட்டதாரியில்லை. அவருடைய கணவர் தான் ஒக்ஸ்போட் பட்டதாரி" என்றாள் பளிச்சென்று.

"அப்போ எதிர்காலத்தில் பிரதமராகலாம் என்ற எண்ணமாக்கும்".

"எனக்குப் பிரதமராக வரவேண்டிய தேவையில்லை. ஆனால்

"ராணியாக இருக்கவே விரும்புகிறேன்."

"சரிதான் இப்போ உலகில இருக்கிற இங்கிலாந்து ராணியும் போனா அதுக்குப் பிறகு கடதாசிக் கூட்டத்தில் தான் நாலு ராணி இருப்பாங்க."

"நானும் ராணியாகத் தான் இருப்பன்."

"எந்த நாட்டுக்கு?"

"ஏதாவது ஒரு நாட்டுக்குத் தான் ராணியாக இருக்க வேணுமோ?"

"பிறகு"

"சொல்லட்டா"

அவள் என்ன சொல்லப் போகிறாள் என்று தாமோதரத்திற்குத் தெரிந்திருந்தாலும் அதை அவள் வாயாற் கேட்கவே அவன் விரும்பினான். ஆகவே "சொல்லேன்" என்றான்.

"நான் உங்களுக்குத் தான் ராணி" என்ற சௌந்தரம் இரு கைகளாலும் தன் கைகளைப் பொத்திக் கொண்டாள்.

தாமோதரம் அவள் வலது கை மணிக்கட்டைக் குரங்குப் பிடியாகப் பிடித்துக் கொண்டபோது அவள் தன் அடுத்த கையை அவன்மேல் வைத்து "விடுங்கத்தான்" என்று திமிறினாள். ஆனால தாமோதரம் விடவில்லை. நாணிச் சிவந்துவிட்ட அவள் கன்னங்களில் முத்தமிட வேண்டும் என்று அவனுக்குள் கிளர்ந்தாலும் அதற்கும் அவனால் முடியாமல் இருந்தது. அவனுக்கும் வெட்கமா? அல்லது எல்லை மீறக் கூடாது என்ற நினைப்பா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் - 7

"அந்தா மாமி வாரா விடுங்க அத்தான்" என்றதும் தாமோதரம் தன் பிடியைச் சடாரென விட்டு விட்டு வாசற் பக்கமும் உட்பக்கமும் பார்த்தான். சௌந்தரம் கலகலவென நகைத்தாள். நகைத்துக் கொண்டே

"மாமி இங்கே இல்லை, நான் இந்தா, இதில் ஈச்சந்தீவுக்குப் போயிற்றுச் சுணங்காம வாறன் என்று சொல்லிற்று அவ வெளிய போயிற்றா. இப்ப வந்தாலும் வருவா" என்றாள் சௌந்தரம்.

"அப்பாவும் இல்லையா?"

"அவர் வழக்கம்போலக் காலையிலேயே போயிற்றார்".

சனிக்கிழமை வந்தது. காத்திருந்தபடியே பாராளுமன்ற அங்கத்தவரும் வந்தார். தாமோதரத்தின் யோசனைப்படி அடக்கமான உபசாரம் அவருக்கு. சௌந்தரம் கட்டிக் கொடுத்த பூமாலையை தாமோதரம் அவருக்கு அணிவித்தான். அதனைத் தொடர்ந்து பல பூமாலைகள்.

ஊரவர்களின் தேவைகள் எழுதப்பட்ட மனுவை அவரிடம் கொடுத்து அதைச் சபைக்கு விளக்கியபோது ஊரவர் எல்லோருமே வியந்தார்கள். எவ்வளவு நறுக்காக விஷயத்தைச் சொல்லியிருக்கிறான் என்று ஊரவர் எல்லோருமே பாராட்டினார்கள். ஏற்கனவே தேர்தல் பிரச்சார நாட்களில் அவனைத் தெரிந்தாலும், இப்போது பாராளுமன்ற அங்கத்தவர் தாமோதரத்திடம் பல கேள்விகளைக் கேட்டு அவனைப் பற்றி நன்றாக அறிந்து கொண்டார். இந்தக் கிராமத்தின் முதலாவது டாக்டராக வரவேண்டும் என்று அவனுக்கு ஆசி வழங்கினார். கூட்டத்தை முடித்துக் கொண்டு மதிய உணவை உண்ணும்போது பிற்பகல் மூன்றுமணியாகி விட்டது. சாப்பிட்டு முடிந்ததுமே அவர் போய்விட்டார்.

எல்லாமே சுமுகமாக முடிந்திருந்தாலும் பரமனுக்கு மட்டும் மனக்குறை. அவனுக்கு எதற்கும், எல்லாவற்றிற்கும், ஒலி பெருக்கியும், பாட்டும், மேடைப் பேச்சும் வேண்டும்! அவைகளின்றிக் கூட்டம் முடிந்ததிற் குறைபட்டுக் கொண்டாலும் அவன் ஆனந்த மாகவே இருந்தான்.

விருந்து நடந்த பாடசாலை மண்டபத்தை மீண்டும் ஒழுங்குபடுத்தி வைத்துவிட்டு அந்த விருந்திற்காகச் சௌந்தரத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிலிருந்து எடுத்த சில பீங்கான்களையும், கிளாஸ்களையும் எடுத்துக் கொண்டு அங்கே சென்ற போது மேற்கே பரந்து கிடக்கும் கரைச்சைகளுக்கு மேலாகத் தூரத்தே தலையை நிமிர்த்திக் கொண்டிருந்த கந்தளாய்க் குன்றுகளிடையே தகதகத்த செம் பந்தாய்ச் சூரியன் விழுந்து கொண்டிருந்தது. செக்கர் வானின் ஒளி அசையாது விறைத்து நிற்கும் தென்னோலைகளிலும், இலையசைக் காமல் ஸ்தம்பித்து நிற்கும் மரங்களிலும் படர்ந்து விகசித்தது.

தெருப்படலையைத் திறந்து கொண்டு தாமோதரம் நுழைந்த போது மல்லிகைப் பந்தரின் கீழே சௌந்தரம் புன்னகை பூக்க நின்று கொண்டிருந்தாள். அந்திச் செவ்வானம் போல மின்னும் அவள் முகத்தில் நெற்றியிலிருந்த கருஞ்சாந்துப் பொட்டு அவள் முகத்திற்கு மேலும் அழகூட்டியது. நீண்ட பின்னல் முடிவடைந்தவிடத்திலே கட்டப் பட்டிருந்த சிவப்பு ரிப்பன் வண்ணாத்திப் பூச்சியைப் போல மார்பில் மொய்த்துக் கிடக்க அவள் பந்தற் கப்பிற் சார்ந்தபடி நின்றுகொண்டிருந்தாள்.

தான் கொண்டுவந்த பிரம்புக் கூடையை அவளிடம் கொடுத்து "கூட்டத்துக்கு நீயும் வந்திருக்கலாமே" என்றான் தாமோதரம்.

"வாசிகசாலையிலே நடந்த கூட்டத்தை வேலிக்குள்ளால பாத்தன்"

"மறைப்புக்காகக் கட்டின கிடுகு வேலிக்குள்ளால தான் உலகத்தைப் பாக்குது நம்ம பெண் சமுகம். எப்பதான் இவர்கள் நேரடியாக உலகத்தைப் பார்க்கப் போகிறார்களோ. இந்த வேலியெல்லாம் எப்பதான் தொலையப் போகிறதோ?" என்று அலுத்துக் கொண்டான் தாமோதரம்.

"வளவுக்கு வேலியில்லாட்டிக் கட்டாக்காலி மாடு வந்து எல்லாத்தையுமே மேய்ஞ்சிடும்" என்றவள், "இருங்க அத்தான் தேத்தண்ணி கொண்டு வாறன்" என்று அடுக்களைப் பக்கமாக நடந்தாள்.

"வேண்டாம், வேண்டாம் என்று அவளைத் தடுத்து நிறுத்திய தாமோதரம் எம். பி. யையும் அனுப்பி எல்லாத்தையும் ஒழுங்குபண்ணி வைச்சிட்டு இப்பதான் சாப்பிட்டுற்று வாறன். எனக்கு அலுப்பாய்க் கிடக்கு நான் போய்ப் படுக்கப் போறன்" என்று விளக்கங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்துவிட்டு அவள்பதிலை எதிர்பாராமலே வீட்டுக்குப் போனான் தாமோதரம்.

அவன் வீட்டு முற்றத்தில் மாமரத்தின் கீழே சாக்குக் கட்டில் விரித்தபடியே தான் கிடந்தது. அலுத்துக் களைத்து வந்த தாமோதரம் பொத்தென்று கட்டிலில் விழுந்து படுத்தான். சில வினாடிகளிற் தன்னை மறந்து நித்திரையாகி விட்டான்.

"தம்பி, தம்பி என்று யாரோ உருட்டி உருட்டி எழுப்பிய போது தான் தாமோதரம் எழுந்து சோம்பல் முறித்துக்கொண்டு கண்களை விழித்துப் பார்த்தான். அவன் முன்னால் அண்ணன் நாகேந்திரம் நின்றான். வீட்டினுள்ளே விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

"இப்பதானா அண்ணா வாரீங்க". இல்ல யாழ்ப்பாணத்தில இருந்து வந்த உன்னோட ஆறுதலாக் கதைக்க வேணுமென்று ஐஞ்சு மணிக்கு முதல் வந்துற்றன். ஆனா நீ நித்திரையாய் இருந்தாய். வீட்ட போயிற்று இப்பதான் வாறன்"

"ஓமண்ணா அலுப்பாயிருக்கெண்டு சரிஞ்ச நான் என்னை அறியாமலே நித்திரை கொண்டுற்றன்".

"அதுக்கென்ன. உன்ர படிப்பெல்லாம் எப்படியிருக்கு?

"நல்லாத்தான் அண்ணா படிக்கிறன். முதல் தடவையிலேயே நான் அட்வான்ஸ் லெவல் பாஸ் பண்ணி வாசிற்றிக்கும் போவன்"

"எப்ப சோதனை?"

"ஆவணி மாசத்தில"

"அப்ப இந்த மாசம் நீ தம்பலகாமத் திருவிழாவுக்கு வர மாட்டாய் போல"

"ஓமண்ணா. வரத்தான் மாட்டன். ஆனிக் கடைசியிலோ இல்லாட்டி இங்கிலீசுக்கு ஆடி பிறந்த பின்போதான் திருவிழா வரும். இந்த வருஷம் அதுக்கு எப்படி அண்ணா வாறது?. ஏனண்ணா இந்த முறை ஏதும் விஷேசமோ?"

என்ன விஷேடம் நடக்கப் போகுது எண்டு இப்ப எப்படிச் சொல்ல முடியும் அளவெட்டியிலிருந்து திறமான நாதஸ்வரம் வருகுதாம். மட்ராஸ் ரேடியோவிலெல்லாம் வாசிக்கிற கூட்டமாம்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பத்மநாதன் குழு தானே. நான் யாழ்ப்பாணத்தில பல இடங்களில் கேட்டிருக்கன் அதுக்காகச் சோதனையை விட்டிற்று இங்க வாறதா?"

"அதுக்கில்ல என்ர தம்பி நல்லாப் படிச்சு டாக்டரா வர வேணுமென்டு நேத்திக்கடன் வச்சி வரிசா வரிசம் நான் காவடி எடுக்கிறன். நான் மூத்தபிள்ளையாக இருந்தும் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் உதவாம அலக்கழிஞ்சு போனன். நீயண்டான நல்லா வாறதுக்கு அந்தக் கோணேசர்த்தான் அனுக்கிரகம் பண்ண வேணும்."

தன் பிழையை உணர்ந்து இறைவனிடம் மன்னிப்புக் கேட்கும் பக்தனைப் போல தன்னிடம் பேசும் தன் அண்ணனிடம் தாமோதரத்துக்கு ஓர் அனுதாபம் ஏற்பட்டது. வாலிப மிடுக்குடன் கவலையற்றுத் திரிய வேண்டிய இந்த வயதிலே அண்ணாவின் மனதில் என்னென்ன கவலைகளோ! அப்பா அவனோடு முகங் கொடுத்துப் பேசாமலிருப்பது அவன் மனத்தைப் பூவைக் குடையும் வண்டு போலக் குடைந்து கொண்டிருக்கிறதா?

தாமோதரம் யோசித்துக் கொண்டிருக்கையில் இந்த வருஷம் நீ திருவிழாவுக்கு வர முடியாது தான். இப்ப இங்க நிக்கிற ரெண்டு கிழமைக்குள்ள எப்பெண்டான ஒரு நாளைக்குத் தம்பலகாமம் போய்க் கோணேசரரைக் கும்பிட்டுற்று வா. இந்தா இத வச்சிக்க" என்று அவன் கைகளில் இரண்டு பத்து ரூபா நோட்டுக்களைத் திணித்தான் நாகேந்திரம்.

அண்ணனின் இரண்டு கைகளையும் பொத்திப் பிடித்துக் கொண்ட தாமோதரம் எப்பெண்டாலும் இல்லண்ணா. நாளைக்கே போறன் என்று சொல்கையில் அவன் கண்கள் கலங்கின. குடும்பத்தில் உதவாக்கரை என்று எண்ணப்பட்ட தன் உடன்பிறப்பு எத்தனை அன்பும் பாசமும் கொண்டவனாக இருக்கிறான் என்று எண்ணியபோது அவன் மனம் புல்லரித்தது.

"சரி தம்பி நான் போயிற்று வாறன். இப்ப போய்ப் படுத்தாத்தான் பலபலவென்று விடியக்குள்ள எழும்பலாம் என்று சொல்லிக் கொண்டே நாகேந்திரம் தன் வீட்டிற்குப் புறப்பட்டான். தாமோதரமும் எழுந்து தன் உடைகளைக் களைந்து மண்டபத் திற்குள் இருந்த கொடியிற் போட்டு வேற்றுடை மாற்றிக் கொண்டு துவாயுடன் கிணற்றை நோக்கி நடந்தான். பங்குனிப் புழுக்கத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர்ந்த தண்ணீர் படுவது இதமாகத்தான் இருந்தது. தாமோதரம் குளித்து முடித்ததும் அம்மா சாப்பிடக் கூப்பிட்டாள். "சோறா? எனக்கு வேண்டாம் என்றாள் தாமோதரம்".

"சோறில்லை இடியப்பம் அவிச்சிருக்கேன்" என்றாள் தெய்வானை.

தாமோதரம் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் அண்ணன் கோணேசர் கோயிலுக்குப் போகும்படி கேட்டுக் கொண்டதை அம்மாவிடம் சொன்னான்.

"எனக்குத் தெரியும் பின்னேரமே என்னட்டச் சொன்னவன். அவன் விரும்பிறாப்போலக் கோயிலுக்குப் போய் அர்ச்சனையையும் பண்ணிற்று வாவன்".

"ஓமம்மா வெயில் ஏறும் முன்னம் விடியப்புறமே வெளிக்கிட வேணும். ஆனால் சைக்கிளில்லையே இதுக்குப் பிறகு யாரிட்டப் போய்க் கேட்பது.

"ஒருத்தருட்டையும் கேட்க வேணாம் மாமாட சைக்கிள் அவர் வீட்ட தான் இருக்கு அவர் வயலடிக்குச் சாமான்கள் ஏத்திற்று வண்டியில தான் போறார். நீ காலமையோட போய்ச் சைக்கிள எடுத்திற்றுப் போ என்று அவன் கவலையைப் போக்கினாள் தெய்வானை.

எனக்குத் தெரியாதே மாமா சைக்கிளில போயிருப்பாரெண்டு தான் நினைச்சன் காலையில போய் சைக்கிள எடுத்திற்றுப் போறன் என்று தாமோதரம் கையலம்பிவிட்டு மண்டபத்துட் சென்றான். பாயை விரித்துப் படுத்துக் கொண்டாலும் தாமோதரத்துக்கு நித்திரை வரவில்லை. அவன் நினைவுகளில் சௌந்தரம் தோன்றினாள் வைகறைப் பனியிற் தோய்ந்து இதழ் விரிக்கும் மல்லிகையைப் போல அவள் மல்லிகைப் பந்தலடியில் தண்ணீர் குடத்தோடு நின்ற தோற்றமும், அதே பந்தலின் கீழ் செக்கர் வானத்தின் செம்மை முகத்திற் படர தன் ஒற்றைப் பின்னலை மார்பின்மேற் தொங்க விட்டபடி கருஞ் சாந்துப் பொட்டு நெற்றியில் மின்ன அவள் நின்ற அழகும் அவன் நினைவுகளிற் காட்சிளித்தன. தனக்குப் பின்னாற் சின்னஞ்சிறுமியாய் தன் வாலாகவே திரிந்தவள் இப்போது எவ்வளவு வளர்ச்சியடைந்து விட்டாள். தங்கம் உருக்கித் தழல் குறைத்துத் தேனாக்கிய அந்த உருவமும், இனிமையும் எப்படி அவளுக்கு இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சில மாதங்களில் வந்து விட்டன.

சென்ற ஆண்டு தம்பலகாமத் திருவிழாவுக்குச் சென்றிருந்த போதும். அவள் சிறுமியாகத் தான் இருந்தாள் திருவிழாக் கடைத் தெருவெல்லாம் தன்னோடு தான் சுற்றினாள். தாமோதரம் கோணேசர் கோயிலையும் தம்பலகாமத்தையும் நினைத்துக் கொண்டான்.

அத்தியாயம் - 8

கோணேசர் தாயினும் நல்ல தலைவராகத் திருகோண மலைப் பட்டினத்திற் தான் குடியிருந்தார்.

அவர் எப்போது தொடக்கம் அங்கிருக்கிறார் என்பது சரித்திர ஆசிரியர்களுக்கே சரியாகத் தெரியாதாம். குளக் கோட்டு மன்னன் அவருக்குக் கோயில் கட்டி, கந்தளாய்க் குளத்தையும் அதனருகே வயல்களையும் ஏற்படுத்தினானாம். இப்படி பழம்பெருமையுடனும், செல்வச் செழிப்புடனும் இருந்த கோணேசர் கோயிலை 1624 ஆம் அண்டு கொன்ஸ்ரன்ரின் டிசா என்ற பொத்துக்கீசத் தளபதி இடித்துத் தரைமட்டமாக்கி கோயிற் கற்களைக் கொண்டு கோட்டை கட்டினானாம்.

ஆனால் அவன் கோயிலை இடித்தபோது, பக்தர்கள் கோயிலிலிருந்த மூல விக்கிரகங்களைத் தூக்கிக் கொண்டு காட்டுக்குள் ஓடி ஒளித்தார்களாம். அப்படி ஒளித்தவர்கள் தாங்கள் கொண்டுவந்த விக்கிரகங்களைக் கோயிலுக்குப் பொருத்தமான இடம் எனத் தாங்கள் தேர்ந்தெடுத்த இடத்தில் வைத்துச் சின்னஞ்சிறிய கோயிலைக் கட்டி வழிபட்டார்களாம். கடலோரத்துக் குன்றிலே இருப்பதை விட மருத நிலத்து மத்தியிலே இருப்பதைத் தான் கோணேசரும் விரும்பினார் போலும். அதனாற்றான் மூன்று நூற்றாண்டுகளில் இலங்கையிலேயே ஒரு மகத்தான இராஜ கோபுரத்தையும் தனக்கு அமைத்துக் கொண்டு தன் பரிவாரங்களோடு தம்பலகாமத்தில் வாழ்கிறார். தான் இடம்பெயர்ந்து வந்தாலும் ஆதிகோணேச நாயகராகத் தான் அங்கே மிளிர்கிறார். வருடா வருடம் ஆனி உத்தரத்தில் அவருக்குத் திருவிழா நடக்கும். அந்தத் திருவிழாக்களைத் தான் அறிவறிந்த காலத்திலிருந்து தவறிவிடவில்லை. கச்சான் காற்று சீறியடித்து, ஆலங்கேணியைச் சூழவுள்ள உப்பங்கழிகளில் எல்லாம் நீர் வற்றி உப்புப் பொரிந்து கிடக்கும். அந்தத் தரவையைத் தாண்டி கெண்டைக் காலளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரோடும் உப்பு நீரோடையைத் தாண்டிச் "சமாவச்ச தீவில்" ஏறினால் அதன் பின்னர் ஒரே வெளி. இடக்கைப் பக்கமாகக் கிண்ணியாக் குடாக் கடலின் அருகாமையிற் சடைத்து வளர்ந்திருக்கும் நீர் முள்ளிச் செடிகளின் மேலே கண்டல் மரங்கள். வலக்கைப் பக்கமாக ஒரே வெளி, வெளி...

அந்த நெடுங் கரைச்சை வெளியில் மாலை மயங்கிக் கொண்ட வருகையில் திருவிழாவிற்குச் செல்லும் ஆலங்கேணி வண்டிகளின் சவாரி முன்னே செல்லும் வண்டியைப் பக்கமாக வந்து முந்திச் செல்கையில் வண்டிக்குள்ளிருக்கும் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும்தான் எத்தனை மகிழ்ச்சி. இந்த வண்டிச் சவாரிக்காகவே தம் காளை மாடுகளைப் போஷித்து வளர்ப்போர் சிலர்.

மாட்டு வண்டிகளை முந்திக் கொண்டு முகத்திலடிக்கும் சோழகக் காற்றை எதிர்த்துச் செல்லும் இளைஞர்களின் துவிச்சக்கர வண்டிகளின் மணிச் சப்தம் வண்டிக் காளைகளின் கழுத்து மணிகளின் சப்தத்திற்கு போட்டியாகக் கேட்டுக் கொண்டிருக்கும். முள்ளியடிப் பாலத்தை அடைந்து விட்டால் அதன் பின் தம்பலகாமந்தான்.

அங்கிருந்து பார்த்தால் நடுப் பிரப்பந்திடலின் தென்னை மரங்கள் தெரியும். இப்படியாகத் திருவிழாத் தொடங்க முன்னமே கோயிலடிக்குப் போய் விடுபவர்கள், கோயிலைச் சுற்றி சுவாமி வலம் வந்து முடியும் அதிகாலையிலேயே மீண்டும் ஆலங்கேணிக்குத் திரும்பி விடுவார்கள். பதின் மூன்றாம் திருவிழா வரையும் இது நடக்கும்.

பதினான்காம் திருவிழா ஆலங்கேணி மக்களின் உறவினர்களான தம்பலகாமத்துப் பெரிய புள்ளிகளின் உபயம். அந்தத் திருவிழாவுக்கு ஆலங்கேணியிலிருந்து செல்லும் வண்டிகள் அதிகமாக ஒன்றும் திரும்பி வரா. தங்கள் உறவினர்களின் வீடுகளில் தங்கியிருந்து பதினெட்டாந் திருவிழாவையும் பன்றி வேட்டையையும் முடித்துக் கொண்டுதான் ஊருக்கு மீள்வர். ஆலங்கேணி மக்கள் மட்டுமல்ல, நான்கு துறைகளைக் கடந்து கட்டை பறிச்சானிலிருந்து வந்த மக்களுட் தங்கள் வண்டி மாடுகளோடும், சைக்கிள்களோடும் தங்கி விடுவர். நடுப் பிரப்பந் திடலிலும், நாயன்மார் திடலிலும், வர்ண மேட்டுத் திடலிலும், கரைச்சைத் திடலிலும்அதிகமாக எல்லாரது வீடுகளிலும், ஆலங்கேணியிலும், கட்டை பறிச்சானிலும் இருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவர்கள் விருந்தினராக இருப்பர். அவர்களுக்கெல்லாம் அங்கு ராஜோபசாரமான விருந்து.

சென்ற ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து வந்தவன் கரைச்சைத் திடலிலே ஒரு வீட்டின் விருந்தினனாக இருந்தான்.

திருவிழா முடிந்து வந்து நித்திரை செய்தவன் காலை எட்டு மணிக்கு மேல் எழுந்து குளித்துவிட்டு கரைச்சைத் திடலூடாகச் செல்லும் வீதியிலிருந்து மேற்கே தெரியும் கோயில் கோபுரத்தைப் பார்த்தான்.

எதிரேயிருந்த வயல்களின் வரம்பு நிறைந்த தண்ணீருக்கு மேலே பச்சைப் பசேலென்ற நெற் பயிர்கள். அவை குலை குலையாய் காய்த்துப் பால்முற்றி, அன்னம் வாங்கி, தலை சாய்த்து வெறிகாரனைப் போல கச்சான் காற்றில் தள்ளாடிக் கொண்டிருந்தன. அந்தப் பசுங் கதிர்களுக்கு மேலாகக் கோயிற் குடியிருப்புத் திடலில் தங்கள் உச்சந் தலைகளை கச்சான் காற்று அடைக்கச் "சாமியாடி"க் கொண்டிருக்கும் தென்னை மரங்கள். தென்னை மரங்களுக்கு மேலாக ஆதி கோணை நாயகரின் கோபுரமும், கலசமும் கம்பீரமாகத் தோற்றமளித்துக் கொண்டிருந்தது.

சோறுடைய சோழவள நாட்டின் தலைநகரான தஞ்சாவூரையும் அதன் பொன் கொழிக்கும் வயல்களின் நடுவே சோழ மாமன்னன் ராஜராஜன் கட்டிய பெருவுடையார் கோயில் என்ற பிரகதீஸ்வரர் ஆலயத்தையும் அதன் நிழல் சாயாக் கோபுரத்தையும் தாமோதரம் திரைப்படங்களில் தான் பார்த்திருக்கிறான். அந்தப் பிரகதீஸ்வரர் ஆலயத்தின் மறுபதிப்பா இந்த ஆதி கோணை நாயகர் கோயில்? அந்தச் சோறுடைய சோழவள நாட்டின் ஒரு பகுதியா இந்தத் தம்பலகாமப் பிரதேசம்?

பார்க்கும் இடமெல்லாம் பங்கப்பழனம். அப்பழனங்களின் நடுவே அமைந்துள்ள தீவுத் திடல்களில் எல்லாம் குலை குலையாய்க காய்த்துத் தொங்கும் தென்னை மரங்களின் நடுவே ஓட்டுக் கூரை வேய்ந்த கல் வீடுகள். அவ்வீடுகளின் முன்னால் கற்றூண்களின் மேல் முதிரப் பலகைகளால் அமைக்கப்பட்ட நெற் பட்டறைகள். அவ் வீடுகளுக்குள்ளே வந்த விருந்தினர்களை வளமாக உபசரிக்கும் இனிய அவர்களுக்குக் குற்றேவல் செய்யும் அயற் கிராமத்தவர்கள்.

ஐம்பத்தெட்டாம் ஆண்டுப் பெருவெள்ளத்தின் போது அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையார் பேராசைப்பட்டுக் கண்டற் காட்டிலே முப்பது ஏக்கர் வேளாண்மை விதைத்திருந்தார். ஆனால் குடலைப் பருவத்தில் வெள்ளம் பெருகி அந்தக் கண்டற் காட்டு மானாவாரி வெளி முழுவதையுமே அழித்து விட்டது. அடுத்த வருடம் அவருக்கு விதை நெல்லும் இல்லை. காவுதடி இல்லாவிட்டால் சோறே இல்லை என்ற நிலை.

ஆனால் வெள்ளம் வடிந்த பின்னர் தம்பலகாமத்தில் கோடைப்போகம் அமோகமாக விளைந்தது. எல்லாப் பட்டறை களிலும் நெல் ஏறிக் கொண்டது. அந்த வருடம் ஆவணி மாதத்தில் அவன் விடுதலையில் இருந்த போது தந்தையார் வண்டி கட்டிக் கொண்டு தம்பலகாமம் வந்திருந்தார். சின்னையா அம்மாச்சியின் பட்டறையிலிருந்து இரண்டு அவணம் விதை நெல் அளந்து கொண்டார்.

ஆனால் விருந்தினரை உபசரிப்பதென்பது ஒரு விடயம், கொடுக்கல் வாங்கல் வேறு விடயம் என்ற கொள்கை தம்பல காமத்தில் எல்லோரிடமுமே உண்டு. சின்னையா அம்மாச்சி. தயாராக அச்சடித்து வைத்திருந்த புரோ நோட்டில் மூன்று அவணம் நெல்லின் தற்போதைய பெறுமதியை காசாகக் கொடுத்ததாக எழுதிக் கொண்டார். கண்டற் காட்டு வெளி வந்ததும் மூன்று அவணம் நெல்லைக் கொண்டுவந்து கொடுத்தால் புரோ நோட்டைக் கொடுத்து விடுவார். மானாவாரிக் காணிக் காரர்களுக்கு அவர் கடன் கொடுப்பதில்லையாம். ஆனாலும் அப்பாவுக்குக் கொடுத்தார். ஊர் வழக்கம் போல அடுத்த பங்குனி மாதத்தில் அப்பா மூன்று அவணம் நெல் கொண்டுவந்து கொடுத்து விட்டார்.

தம்பலகாமம் இத்தனை செழிப்பிலும், செல்வத்திலும் கொழித்தாலும் இன்னமும் தன் பழைமையை விட்டுக் கொடுக்காமற் தானிருந்தது. இங்கே சிகை அலங்கரிக்கும் பரமனோடு பழகுவது போலத் தம்பலகாமத்தில் முடியுமா? "எங்களைப் போல உயர்ந்த சாதி வேளாளர் இந்த இலங்கைச் சிலோனிலே கிடையாது"என்று கூட்டாம் புலியிலும், கள்ளி மேட்டிலும் வசிப்போர் பெருமை பேசிக் கொள்கின்றனர்.

"நாங்கள் சாதாரண கரையார் அல்ல. மச்சகந்தியைப் பரிமள காந்தியாக்கிய குருகுலத்துச் சத்திரியர்கள்" என்று மகாபாரதப் பெருமை பேசிக் கொள்கிறார்கள் மற்ற மேடுகளில் உள்ளவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இருசாராரும் குறைந்த சாதிக் காரரென்று சிலரைச் சிப்பித் திடரிலே ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். அந்தக் குறைந்த சாதிக் காரர்களுக்குச் செம்பிலே தண்ணீர் கூடக் கொடுக்க மாட்டார்கள். கோயிற் பிரகாரத்தில் அங்கப் பிரதட்சணம் செய்யக் கூட விட மாட்டார்கள்.

ஆனால் நல்ல காலமாக, அந்தச் சோறுடைய சோழ நாட்டைப்போல் இந்தக் கிராமத்தில் அக்கிரஹாரமும், பிராமணர் களும் இல்லை. இருந்திருந்தால் குருகுலமென்றும், வேளாள ரென்றும் பெருமை பேசுபவர்களையும், மற்றவர்களையும் தூத்திரரென முத்திரை குத்தி ஒதுக்கியிருப்பார்கள்.

அங்கேயுள்ளவர்களையெல்லாம் ஒரே குலமாகக் கருதலாம் போல இருந்தது தாமோதரத்திற்கு. அவர்கள் எல்லாருமே விவசாயி கள். "கார் காக்காத விவசாயிகவ்" என்ற புதிய சாதியினராக அவர் களைக் குறிப்பிடலாம். அவர்கள் தான் மழையை நம்பியிருப்ப தில்லையே. அவர்களுக்காக குளக்கோட்டன் கந்தளாய்க் குளத் தைக் கட்டிவைத்திருக்கிறானே! பங்குனிப் புழுக்கத்தையும் நுளம்புக் கடியையும் பொருட்படுத்தாமல் நினைவுகளிற் தோய்ந்து கொண்டி ருந்த தாமோதரம் நடுச்சாமமான போது தான் நித்திரையானான்.

அத்தியாயம் - 9

குட்டிக் கரைச்சைப் பள்ளிவாசலிலிருந்து வாங்குச் சத்தம் கேட்டபோது தாமோதரம் விழித்துக் கொண்டான்.

தலைமாட்டிலிருந்த அரிக்கன் விளக்கின் திரியைத் தூண்டி மண்டபத்தை வெளிச்சமாக்கிய பின் பாயைச் சுருட்டித் தலை யணையையும் விரிப்பையும் பாயின் மேல் வைத்துவிட்டு முற்றத்துக்கு வந்தான். முற்றத்து மாமரத்தின் கீழே. அப்பா படுத்திருந்த சாக்குக் கட்டிலில் சிங்கப்பூர் பாய் தலையணையோடு சுருட்டப்பட்டுத் தலைமாட்டில் வைக்கப்பட்டிருந்தது; தந்தையார் எழுந்து சென்றிருக்கிறார் என்று தெரிந்து கொண்ட தாமோதரம் "அவர் எங்கே போயிருப்பார்? இன்றைக்குப் பால் கொண்டுவரப் போவதில்லை என்று நேற்றே அம்மாவிடம் சொல்லியிருந்தாரே"

பாற்குடங்களையும் நேற்றுச் சாயந்தரமே தம்பையா அண்ணன் கொண்டு போய்விட்டாரே. அப்படியானால் அதி காலையில் அப்பா எங்கே போனார்? என்று தன்னுள்ளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விகளை எழுப்பிக்கொண்டு காலைக் குளிரையும் பொருட் படுத்தாதவனாக வேலியோரம் சென்று வேப்பங்கன்றின் குச்சியை முறித்துக் கடித்துத் துப்பிக் கொண்டு பல் விளக்கத் தொடங்கினான்.

அடுக்களையைக் கடந்து செல்கையில் "அப்பு எங்கம்மா?" என்று கேட்டான்.

"இங்கினதான் நின்டார் வெளிக்குப் போயிற்றார் போல" என்று அம்மா பதில் கொடுத்தாள்.

தாமோதரம் கிணத்தடிக்குச் சென்று கிணற்றுக் கட்டில் துவாயைப் போட்டுவிட்டுச் சாரத்தோடு நின்று முழுகத் தொடங் கினான். கிணற்றுக்குத் துலா இருந்தது. ஆனாலும் அவன் கைவாளியினால் தான் அள்ளி முழுகினான். அவனுக்கு நெல்லியடிக் கிணறுகள் ஞாபகத்திற்கு வந்தன.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னே அவன் பாடசாலைக்குச் சேர்வதற்காகச் சின்னத்தம்பி வாத்தியாரோடு நெல்லியடி போய்ச சேர்ந்தபோது பிற்பகல் மூன்று மணி இருக்கும். போய்ச் சேர்ந்ததும் குளிக்க வேண்டும் போலிருந்தது அவனுக்கு. தானாகவே கிணற்றடிக்கச் சென்றான். கிணற்றை எட்டிப் பார்த்தான். அவனுக்கு நெஞ்சு பகீரென்றது! இத்தனை ஆழமான கிணற்றிலிருந்து எப்படித் தண்ணீரள்ளிக் குளிப்பது? துலாவைப் பார்த்தான் நீள் சதுரக் கற்தூண்களில் அச்சுலக்கையைப் புகுத்திய ஒரு முழுப் பனைமரமே துலாவாக இருந்தது. துலாவின் அந்தத்திற் கட்டிய பனை நார்க் கயிற்றில் வாளி தொங்கிக் கொண்டிருந்தது. அந்த நார்க் கயிறுதான் துலாக்கொடி போலும். இத்தனை ஆழமான கிணற்றில் இந்த முழுப் பனை மரத்தை இழுத்து நீர் அள்ளுவதை எண்ணியபோது அவனுக்குத் தலை விறைத்தது.

கிணற்றடிக்கு வந்த ஆசிரியர் அவன் மலைத்து நிற்பதைக் கண்டு தானே துலாவைத் தாழ்த்தி கிணற்றடியிலிருந்த பெரிய வாளியிற் தண்ணீரூற்றி "இப்போ பருமட்டா மேலைக் கழுவும்" பின்னேரம் தம்பி வீட்ட போய்க் குளிக்கலாம். அங்கே மோட்டரும் பைப்பும் இருக்கு".

மாலையில் ஆசிரியர் அவனைத் தன் தம்பியின் வீட்டிற்குக் கூட்டிச் சென்றார். செட்டிதரை என்ற பிராந்தியத்தில் உள்ள அவர் தம்பி வீட்டுக் கிணறு முன்னர் பார்த்த கிணற்றை விட ஆழமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. எட்டிப் பார்த்தால் தண்ணீர் இருப்பதே தெரியாத அளவிற்கு அத்தனை ஆழம். "இந்தப் பாதாளத் தண்ணீரை இறைத்தல்லவா யாழ்ப்பாண விவசாயி பயிர் செய்கிறான்" என்று எண்ணிக் கொண்டே ஐந்தடி ஆழத்திலிருந்த தண்ணீரைக் கைவாளியால் முண்டு தலையில் ஊற்றி ஊற்றித் தன் குளியலை முடித்துக் கொண்டான்.

வீட்டினுட் சென்று சலவை செய்த வேட்டியை உடுத்துச் சட்டையும் தரித்த பின்னர் திருநீறு பூசிக் கொண்டிருக்கையில் தேநீரை நீட்டிய அம்மா "ஏன் தம்பி சாப்பிட்டிற்றுப் போவன்" என்றாள். "இப்ப என்னம்மா சாப்பிடுறது? நான் சைக்கிளில் தானே போறன், அரை மணித்தியாலத்தில் போய்ச் சேர்ந்திருவன் அங்க போய்ச் சாப்பிடலாம்".என்றுவிட்டு மாமரத்தைக் கடந்து தெருப்படலையைக் கடந்த வெளியேறினான். மாமனாரின் வீட்டு முற்றத்திலே அபிராமி பெருக்கிக் கொண்டு நின்றாள். "சைக்கிளைக் கொஞ்சந் தாங்க மாமி என்று தாமோதரம் கேட்டபோது தான் அவள் நிமிர்ந்தாள்.

"மண்டபத்துக்குள்ள தானிருக்கு போய் எடுங்க" என்ற அபிராமி "ஏன் தம்பி எங்க போறீங்க" என்று கேட்டாள்.

"சைக்கிளை உருட்டிக் கொண்டு மண்டபத்துக்கு வெளியே வந்தவன் தம்பலகாமம் போப்போறன் என்று விடையளிக்கையில் அறைக்குள்ளிருந்து சௌந்தரமும் வந்தாள். அவளைப் பார்த்த போது தன் உடன் மாணவன் பொன்னம்பலத்தின் "கொமெண்ட்" ஞாபகத்திற்கு வந்தது.

அன்று ஞாயிற்றுக் கிழமை. மாணவர்கள் சிலரோடு சேர்ந்து அவன் பருத்தித்துறைப் பட்டினத்துக்குச் சென்றான். சந்தையைத் தாண்டிக் கடற்கரைப் பக்கமாகத் தொண்டமானாற்று வீதியால் சென்று கொண்டிருக்கையில் எதிரே மெதடிஸ்த பெண்கள் கல்லூரி விடுதி மாணவிகள் தங்கள் மேற்றன் சகிதம் வந்துகொண்டிருந்தார்கள். அவர்களைக் கடந்து முடிந்ததும் "பின்னால மூன்றாவது அணியில இடது பக்கமாப் போற பெட்டை அரபிக் குதிரை மாதிரி அழகான பெட்டை மச்சான்" என்று கொமெண்ட் சொன்னான். அதைக் கேட்டுத் தான் பொன்னம்பலம் சொன்னான் "பெட்டை வடிவா வடிவில்லையா என்று இப்படி நேரத்தில சொல்லேலாது. வெளிக் கிடக்குள்ள எல்லோரும் மேக்கப் பண்ணிக் கொண்டுதான் வருவினம். உண்மையா அழகு தானா என்பதைக் கண்டுபிடிக்க ஒரு பெட்டை விடிஞ்சி படுக்கையால எழும்பின உடன தான் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேணும்".

அவனது விமர்சன நோக்கோடு தான் தாமோதரம் சௌந்தரத்தைப் பார்த்தான் அந்த அதிகாலையில் கூம்பிய இதழ்களை ஒவ்வொன்றாக விரிக்கும் செந்தாமரையைப் போலச் சௌந்தரம் அழகாகத் தான் இருந்தாள்.

"நேற்று இதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே அத்தான்"

"நேற்று இரவுதான் தீர்மானிச்சன்" என்ற தாமோதரம் "மாமாட்ட என்ன மாமி சொல்ல?" என்று கேட்டான். ஆனால் நேற்று இரவுதான் தீர்மானிச்சன் என்றதைக் கேட்டதும் சௌந்தரத்தின் முகம் சாம்பிற்று. முகத்தைத் தொங்கவிட்ட படியே அறைக்குட் சென்றாள்.

மாமாட்டச் சொல்லுறதுக்கு விஷேசமா ஏதும் இல்ல.என்று அபிராமி சொல்லிக் கொண்டிருக்கையில் தாமோதரம் சைக்கிளை உருட்டிக் கொண்டு வெளியேறி விட்டான். பின் சக்கரத்திற்குக் காற்றுப் போதாது போல இருந்தது. ஆனால் வேலும் மயிலும் கடை அதிகாலையிலே திறந்தது. அங்கே சென்று காற்றடித்துக் கொண்டு குட்டிக் கரைச்சிப் பக்கமாகச் சைக்கிளை மிதித்தான்.

அவன் சென்று கொண்டிருக்கையில் "இவர் ஏன் தம்பல காமம் போகிறார். அதுவும் இரவுதான் அங்க போவாரெனத் தீர்மானித்தாராம். சென்ற இரவு முழுக்க நான் அவரையே நினைத்து நினைத்து இன்பக் கனவு கண்டு கொண்டிருக்கையில் அவர் மட்டும் என்னை நினைக்கவில்லையா? திடீரெனத் தம்பலகாமத்து நினைவு அவருக்கு ஏன் வந்தது? அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அழ வேண்டும் போல இருந்தது. கண்கள் கலங்கியே விட்டன. அவர் அதற்காகத்தான் போகிறார். திருக்கோணமலை சண்முக வித்தியா லயத்தில் போடிங்கில படிக்கிற மனோன் அக்கா இன்றைக்குத் தம்பலகாமம் வந்திருப்பா அவளைப் பார்க்கத்தான் அவர் போயி ருக்கிறார்.

சென்ற ஆண்டு மனோனும் எங்களோடு கூடத் திருவிழாக் கடைத்தெருவெல்லாம் சுற்றினாள். அவள் எவ்வளவு ஆனந்தமாக அவருடன் சிரித்துப் பேசிக் கொண்டு போனாள்? எனக்கு அப்பவே சந்தேகம். நான் பள்ளிக்குப் போகல்ல என்று அவர் கோபிப்பதற்கு இப்பதான் காரணம் தெரியுது. இல்லாட்டா எவருக்கும் சொல்லாம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி அமுசடக்காத் தம்பலகாமம் போவாரா? படுக்கையிற் கிடந்த படி சௌந்தரம் இப்படி என்னென்னவெல்லாமோ எண்ணினாள். மனோனுக்கும் அவருக்குமிடையில் ஏதோ இருக்க வேண்டும் சில வேளை அவளைத் தான்.... நினைவுகளின் அகோரத்தில் சௌந்தரத்திற்கு அழுகையே வந்துவிட்டது.

"ஏன்புள்ள காலையில ஒரு வேலையும் இல்லியா? சும்மா படுக்கிறா? மாமி வீட்ட போகல்லியா? மனுஷி இருபது முட்டிப் பாலையும் காய்ச்சிப் பேணியில ஊத்தத் தட்டத் தனிய அவதிப் படப் போகுது" என்றாள் அபிராமி.

அன்று அவள் தனது கானல் வாழைகளுக்கும் குரோட்டன் களுக்கும் தண்ணீரூற்றவில்லை. கோழிகளுக்குத் தீன் வைக்க வில்லை. வேறு எந்த வேலையுமே செய்யாமல் கிணற்றடியில் அசமந்து நின்றாள். கிணற்றடியிலே முதுகுத் தோலை உரித்து விடுவது போலச் சுள்ளென்றடிக்கும் காலை வெயில் கூட அவளுக்கு உறைக்கவில்லை.

சௌந்தரம் இப்படிக் கவலைப் பட்டுக் கொண்டிருக்கையில் தாமோதரம் குட்டிக் கரைச்சிப் பாடசாலைக்குச் சமீபமாக, கிண்ணியாக் குடா உள்வாங்கிச் செல்லும் ஓடையின் விண்ணாங் கடிப் பரவலை வள்ளத்திலேறிக் கடந்து காக்காமுனையைத் தாண்டிக் குறிஞ்சாக்கேணிச் சந்தியடிக்கு வந்த போது சூரியன் முதுகுப் பக்கமாகத் தீய்த்துக் கொண்டிருந்தான் சந்திக்கப்பால் இருந்த கரைச்சையில் முழங்காலளவு நீரில் நின்று கொண்டு கைவலையை வீசி மீன் பிடித்துக் கொண்டிருந்த முஸ்லீம்களின் அரையிலிருந்த "சிறுவால்" களின் (பொத்தானோ, பக்கிள்சோ இல்லாத அரைக்காற் சட்டை) மேற்கட்டப்பட்டிருந்த பிரம்புப் பறிகளில் கயல் மீன்கள் துள்ளித் துடித்துக் கொண்டிருந்தன. பெருவெள்ளத்தின்போது தம்யதாஸ்தானத்தை விட்டுக் கிளம்பி விட்ட கற்களில் ஏறியும் இறங்கியும் மெதுவாக ஓடிக் கோழிமுட்டைக் கரைச்சையைத் தாண்டிய பின் நெடுங்கரைச்சை வெளியூடே சைக்கிளை உழக்கிக் கொண்டு கச்சான் காற்றுக்கு எதிராகச் சென்று கொண்டிருந்தான் தாமோதரம்.

வெளியைத் தாண்டிய பின்னர் "காலிபாஞ்சான்" ஆறு குறுக்கிட்டது. கச்சான் காற்று வீசத் தொடங்கி இந்தக் கரைச்சை வெளியெல்லாம் உப்புப் பொரிந்து வரண்டு கிடக்கும் காலிபாஞ்சான் மதகிலும் கெண்டைக் காலளவு தண்ணீர் தான் இருக்கும். ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது காலிபாஞ்சான் ஆற்றில் பெருந்தொடைக்கு மேல் தண்ணீர் போய்க்கொண்டிருந்தது. உப்பு நீர் பட்டாற் சைக்கிளிற் கறள் பிடித்துவிடும் என்பதற்காகத் தாமோதரம் வேட்டியை மடித்து அரைக்கு மேற் கட்டிக் கொண்டு, இரண்டு கைகளாலும் சைக்கிளைப் பிடித்துத் தலைக்கு மேலே உயர்த்தித் தூக்கிக் கொண்டு ஆற்றைத் தாண்டினான். பின்னர், தன் வண்டியில் ஏறி முள்ளியடிப் பாலத்தை அடைந்ததும், சைக்கிளை விட்டிறங்கி தன் சண்டிக்கட்டு வேஷ்டியை அவிழ்த்து நன்றாக உடுத்திக் கொண்டான். சேட் பையில் வைத்திருந்த சிறிய சீப்பினால் தலையை வாரிக் கொண்டான். சேட் கொலருக்குப் பின்னால் நீளமாக மடித்து வைக்கப்பட்டிருந்த கைக் குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டான். இவ்வாறு தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்ட பின் மீண்டும் சைக்கிளில் ஏறிக் கொண்டு கல்யாண ஊர்வலத்திற் செல்பவனைப்போல மெதுவாக நகர்ந்தான். வழியிலே நடுப் பிரப்பந்திடலிலும், அப்பால் நாயன்மார் திடலிலும் சந்தித்த நண்பர்களுக்கெல்லாம் "கோயிலுக் குப் போயிற்று வாறன்" என்று சொல்லிக் கொண்டு கோயிலை அடைந்தபோது காலைப்பூசை முடிவடைந்திருந்தது. ஆனாலும் கோபுரத்தின் கீழேயிருந்த காரியாலயத்தில் அர்ச்சனைக்குப் பணஞ் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொண்டு கோயிலை வலம்வந்தான்.

கோணேசரையும் அவரின் பரிவாரங்கள் அனைவரையும் ஒவ்வொருவராகக் கும்பிட்ட பின்னர் திருநீறணிந்து, சந்தனந் தரித்து, வலது காதின் மேற் செருகிய பன்னீர்ப் பூவோடுமீண்டும் வண்டியில் ஏறிக்கொண்டு நாயன்மார் திடலை நோக்கித் திரும்பினான்.

நாயன்மார் திடலிலே தான் அவன் மாமனானர் பெண் கொண்டிருந்தார். மாமியாருடைய மூத்த சகோதரி தன் தாயதி வீட்டிற்தான் வாழ்ந்து கொண்டிருந்தாள். அவன், அவ்வீட்டை அடைந்த போது பேரிளம் பெண்ணான அவள் பெரிய மாமியார் முற்றத்துப் பலாமர நிழலிலே பெரிய பானையிற் சமைத்துக் கொண்டிருந்தாள்.

தாமோதரத்தைக் கண்டதும் "வாருங்கோ தம்பி. எப்ப யாழ்ப்பாணத்தால வந்தீங்க? சாப்பிட்டீங்களா?" என்று அடுக்கடுக் காகக் கேட்டாள்.

"இப்பத்தான் மாமி வாறன். நேரடியாகக் கோயிலுக்குப் போயிற்று இங்க வாறன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இருங்க தம்பி முதலில சாப்பிடுங்க" என்றவள் "மூத்தவனும் அவரும் உங்கட மாமாவும் வயலுக்க போயிற்றாங்க. மனோனும் திருக்கிணாமலையில. பெருமிதி மிதிக்கிறவங்களுக்குச் சமைக்க வேணும்"என்றவள் பீங்கான்களில் சாப்பாட்டை எடுத்து வந்தாள். பிட்டு, வாழைப்பழம், தயிர், பருப்புச் சொதி, அப்பளப் பொரியல் இத்தனையும் கண்ட தாமோதரம் "என்ன மாமி எனக்காக இத்தனையுமா?" என்றான்.

"நீங்க வாறதா உங்க மாமா கூடச் சொல்லல்ல. வயலுக்குப் போறவங்க காலையில சாப்பிட்டிற்றுப் போகட்டும் என்று தான் செய்தன். ஆனா அவங்க எல்லாருமே அரையுங் குறையுமாகக் கொறிச்சிற்றுப் போயிற்றாங்க" என்றாள் இராசம்மா. தாமோதரம் காலையுணவை முடித்துக் கொண்டான்.

இராசம்மா தன் சமையல் வேலையில் ஈடுபட்டாள். அவர் கணவன் சொல்லுவார் "வயல் வேலையைச் செய்யிறவங்களுக்கக் கூலியைக் குறைச்சாலும் அதைப்பற்றி ஒரு குறையும் ஊரில வராது. ஆனாச் சாப்பாட மட்டும் சரியில்லாட்டி அதுதான் ஊரில பெரிய வசையாவரும். அதனால ஒழுங்காக் கறிபுளி இருக்க வேணும்" இராசம்மா மீன் குளம்பும், இரண்டு மரக்கறிகளும், புளியாணமுமாக எல்லாச் சமையலையும் ஏறத்தாள முடித்து விட்டாள்.

வெளியே வெய்யில் கொளுத்திக் கொண்டிருந்தது. அந்த வெய்யிலில் வெளியில் இறங்கவே பயமாக இருந்தது. வீட்டுக் குள்ளேயே சும்மா குந்திக் கொண்டிருக்கவும் முடியவில்லை. மேசையில் ரேடியோவும் இருக்கவில்லை. என்ன செய்வதென்று தெரியாமற் தாமோதரம் மேசையிற் கிடந்த புத்தகங்களைக் கிண்டிக் கொண்டிருந்தான். அந்த பாடசாலைப் புத்தகங்களிடையே ஆனந்த விகடன் இதழ்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு ஒழுங்காகக் கட்டப் பட்டிருந்த ஒரு நாவல் இருந்தது. அது "தேவன்" எழுதிய "துப்பறியும் சாம்பு" என்ற நாவல். அதன் அட்டையில் மனோன்மணி தன் பெயரை எழுதியிருந்தாள்.

தாமோதரத்திற்கு நாவலோ சிறு கதைகளோ படிப்பதில் அத்தனை ஆர்வம் இல்லை. எப்போதாவது படிப்பான். இன்னாரைத் தான் படிக்க வேண்டும் என்ற வரையறையும் இல்லை. அகப்பட்டதை நேரமிருந்தாற் படிப்பான். எந்த நாவலையும் வாசித்து முடிக்க வேண்டும் என்ற ஆசையும் அவனுக்கு ஏற்பட்டதில்லை. எதையாவது படித்தபின் அரைவாசியில் வேறுவேலை வந்து விட்டால், மீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரைவாசியை பின்னர் அவன் படித்ததும் கிடையாது. இப்போது தேவனின் துப்பறியும் சாம்பு என்ற நாவலைப் படிக்க ஆரம்பித்தான். சுவையாகத்தான் இருந்தது.

அவன் படித்துக் கொண்டிருக்கையில் இராசம்மா தன் சமையலைமுடித்துவிட்டு, அடுக்களையைக் கூட்டி ஒழுங்குபடுத்தி விட்டு அதனைப் பூட்டிக் கொண்டு உள்ளே வந்தாள். அவள் சர்வாங்கமும் வியர்த்துக் கொட்டிக் கொண்டிருந்தது.

வீட்டிற்குள் வந்தவள் "இருங்க தம்பி. இன்னும் கொஞ்ச நேரத்தில அத்தான் சாப்பாடு கொண்டுபோக வந்திருவார். அதுக் குள்ள நான் போய் இரண்டு வாளித் தண்ணீர் அள்ளி ஊத்திற்று வாறன். ஒரே அவிச்சலாய் அவியுது" என்று தனக்குத் தானே சொல்பவள் போலச் சொல்லிக் கொண்டு பின்பக்கமாகக் கிணற்றடியை நோக்கி நடந்தாள்.

தாமோதரமும் எழுந்து தன் சேட்டைக் கழற்றிச் சுவர் ஆணியில் தொங்கவிட்டு கொடியிலே மடித்துக் கிடந்த சாரத்தை எடுத்துக் கட்டிக் கொண்டு மீண்டும் விட்ட இடத்திலிருந்து படிக்கத் தொடங்கினான்.

பெருமிதி மிதிப்பதற்காகச் சூழவுள்ள வயல்களில் எல்லாம் வரம்பு கொள்ளுமளவு தண்ணீர் இருந்து சூழலைக் குளிர்வித்தாலும் கொழுக்கி ஓட்டுக் கூரையின் வெப்பம் அதை மழுங்கடிப்பதாக இருந்தது. கதிரையிலிருந்து வாசித்துக் கொண்டிருந்தவன் தூங்கி விழுந்து மேசையின் மேற் கைகளிற் தலையைக் கவித்த படியே நித்திரையாய் விட்டான்.

"மச்சான், எப்படா வந்தா?" என்ற குரல் அவனை இவ்வுலகுக்குக் கொண்டுவந்தது. எதிரே தம்பிராசா என்ற அவன் மைத்துனன் நின்று கொண்டிருந்தான். அரையிற் கட்டிய நாலு முழ வேட்டிக்கு மேலாக மார்பிலே திரணை திரணையாய்ச் சுருண்டு கிடக்கும் மயிர்க் கற்றை கறுப்பு என்று ஒதுக்கவும் முடியாமல், சிவப்பு என்று மெச்சவும் முடியாமல் கபில நிறமாய் இருந்தான். நீண்ட ஆனால் வைரித்த உடற்கட்டு.

"காலையில தான் வந்தன் மச்சான்"

"வயலுக்கு வந்திருக்கலாமே. கிட்டத்தானே இருக்கு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வரத்தான் நினைச்சன். ஆனா வெய்யிலா இருந்தது. உங்கட அம்மாவும் போக வேணாம் என்றா. கதைப்புத்தகத்தைப் படிச்சுக் கொண்டிருந்த நான் நித்திரையாகிற்றன்".

அடுக்களையிலுந்து இராசம்மா குரல் கொடுத்தாள். "சாப்பாடெல்லாம் போட்டு வச்சிற்றன். கொண்டு போகலாம் ராசா".

தம்பிராசா அடுக்களைக்குள் வந்தான். தாமோதரமும் அவன் பின்னாற் போனான்.

பனையோலைப் பெட்டியிற் சோறு போடப்பட்டு வாழை இலையால் மூடப்பட்டிருந்தது. பக்கத்திலே தூக்குக் கயிறு கட்டப் பட்ட மண்பானைப் புளியாணம் மூன்றும், வெண்கலச் சட்டிகளிற் கறிகள். அம்மூன்று சட்டிகளும் வெள்ளை வெளேரென்ற தலையணை உறையொன்றில் அடுக்கப்பட்டுப் பையின் வாய் கூட்டிக் கட்டப்பட்டிருந்தது. சோற்றுப் பெட்டி வாழையிலைக்கு மேலே அகப்பையும் இரண்டு கரண்டிகளும்.

தம்பிராசாவுடன் வந்த கிண்ணியாவைச் சேர்ந்த வேலையாள் சோற்றுப் பெட்டியைத் தூக்க, தம்பிராசா கறிச்சட்டிகள் இருந்த பையைத் தூக்கிக் கொண்டான். தாமோதரம் புளிப் பானைக் கயிற்றைப் பிடித்துத் தூக்கிக் கொண்டான். தம்பிராசா இடக்கையில் வாழையிலைக் கட்டுகளையும் எடுத்துக் கொண்டான்.

"தம்பிய என்னத்துக்கக் கூட்டிற்றுப் போறா? அவர் இஞ்ச சாப்பிடட்டும்" என்றாள் இராசம்மா.

"இல்ல மாமி நானும் அத்தானோட போறன்" என்றுவிட்டு நடந்தான் தாமோதரம்.

மூவரும் மெயின் ரோட்டிலே கோயிற் பக்கமாக நடந்து வாசிகசாலைக்குப் பக்கத்தில் நிழல் கவித்து நின்ற ஆலமரத்தைத் தாண்டி, எதிரே இருந்த தேநீர்க் கடையையும் தாண்டி அரிசி ஆலையின் பக்கமாக வயல்வெளிக்குள் இறங்குகையிற் தாமோதரம் கேட்டான் "மச்சான் இந்தக் கடையில தேத்தண்ணி அடிக்கிற சத்தமே இல்ல. தின்ற சாமானையும் காணல்ல. ஆனா ஆக்கள் மட்டும் கனக்கப் பேர் போய் வாறாங்க".

"அது பேருக்குத் தான் மச்சான் தேத்தண்ணிக் கடை. ஆனா அங்க சீலும் விக்கிது வடியும் விக்கிது. இரண்டு ரூபாய் குடுத்து ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளாஸ் வடி அடிச்சிப் பாரன் மச்சான். இந்த அகோர வெயிலில் கிறுகிறு என்று ஏறும். நுவரெலியாவில் இருக்கிறது போல இருக்கும்".

"அப்ப மச்சானுக்கு அடிச்சுப் பழக்கம் போல".

"சீ..... எப்பெண்டான அப்பாவுக்குத் தெரியாம. அதுவும் இங்க இல்ல. திருக்கிணாமலையில குடிச்சிருக்கன். கிங்ஸ் கொட்டலில் ஒரு கிளாஸ் அடிச்சிற்றுப் பத்தாம் நம்பர் கடற்கரையில போயிருந்தா என்ன சுகம்! அப்பாவுக்குத் தெரிஞ்சிதெண்டா முதுகுத் தோலை உரிச்சுப் போடுவார்.

அத்தியாயம் - 10

வேலைய முடிச்சிற்றுப் போகக்குள்ள நா ஒரு கால அடிச்சிற்றுத் தான் போவன் தோழ. அப்ப தான் வேலை செய்த அலுப்பும் தெரியாது கோழி முட்டக் கரைச்சைக்குத் தேரிலே போற மாதிரிப் போகலாம்" என்றான் அவர்களோடு வந்த அபூபக்கர்.

மூவரும் வயல் வரவைக்குள் இறங்கிக் கெண்டைக் காலுக்கு மேற்பட்ட தண்ணிரில் சலசலெக்கென்று அடிவைத்து நீரைச் சேறாக்கிக் கொண்டு நடந்தார்கள். வயல் வரம்புகளிலே ஆமைகள் வெயிற் காய்ந்து கொண்டிருந்தன அவைகளைக் காட்டித் தம்பிராசா சொன்னான் "இவங்க எல்லாம் போன ஜன்மத்தில் கோணேசர் சொத்தைக் கொள்ளையடிச்சிச் சாப்பிட்டவங்களாம் இப்ப ஊரில இருக்கிற கழிவு எல்லாத்தையும் சாப்பிடுதுகள்".

தண்ணீர் சலசலக்க வயல் வழியே நடந்து சென்ற மூவரும் சின்னஞ்சிறிய திடலில் ஏறினர். அந்தத் திடல் முழுவதையும் பென்னம்பெரிய இலுப்பை மரம் தன் கிளைகளால் கவித்து நின்றது. அம்மரத்தின் கீழே நான்கு வயல்களில் மாடு வளைத்தவர்களும் வரம்பு கட்டியவர்களும் தெத்தி, தெத்தியாகவிருந்து இளைப்பாறிக் கொண்டிருந்தனர். எல்லாமாக முப்பது பேர் வரை இருக்கும். அவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டவர் கிண்ணியா முஸ்லீம்கள்.

தாமோதரத்தைக் கண்டதும் "எப்ப தம்பி வந்தீங்க?" என்று பெரிய மாமா கேட்டார்.

தான் நான்கு நாட்களுக்கு முன்னால் வந்த விபரத்தைத் தாமோதரம் தெரிவித்தான். இதற்குள் அவர் தான் இருந்த கற்பன் பாயை மீண்டும் உதறி விரித்து எல்லாருக்கும் சோறு படைக்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கினார்.

"நானும் மச்சானும் வீட்ட போய்ச் சாப்பிடுவம்" என்றான் தம்பிராசா.

மற்றைய வயற்காரர்களும் இன்னம் மூன்று பந்திகளில் அமர்ந்து சாப்பிடத் தொடங்கினார்கள்.

எல்லாரும் சாப்பிட்டு முடித்ததும் தம்பிராசா சோறு கொண்டுவந்த பாத்திரங்களை எடுத்துக் கொண்டு தாமோதரத்தோடு வீட்டுக்கு வந்தான். சாப்பிட்டுவிட்டு விட்டு ஆலமரத்தின் கீழ் வந்தால், அம்மரத்தின் கீழ் எத்தனையோ நண்பர்களும் உறவினர் களும். அவர்களோடு பேசிக் கொண்டிருந்ததில் பொழுது போனதே தெரியவில்லை தாமோதரத்திற்கு.

சித்திரை வருடப் பிறப்புக்காகப் பாடசாலை மூடப்பட்டு விட்டது. பதைபதைக்கும் வெய்யிலில் பிள்ளைகள் திரிந்து காய்ச்சல், தலையிடியைத் தேடிக் கொள்வார்கள் என்று பெற்றார் பயந்தனர். ஆனால் சிறுவர்களோ கொழுத்தும் வெயிலிற் கட்டையாற்றில் இறால் பிடித்தார்கள். இரவானதும் நிலவொளியிற் துள்ளி மகிழ்ந்து விளையாடினார்கள்.

பெருவெள்ளத்தினால் நொடித்துப் போன மயில்வாகனம் கொட்டியாபுரத்துப் புதுக்குடியேற்றத் திட்டத்தில் நாலு ஏக்கர் நீர்ப் பாய்ச்சற் காணியைக் குத்தகைக்குப் பெற்றுக் கொண்டார். வருடப் பிறப்புக் கழிந்ததும் அங்கு விதைப்பு வேலைகளுக்குச் செல்ல வேண்டும் என்பதையே அடிக்கடி கதைத்துக் கொண்டிருந்தார்.

செல்லையா தம்பலகாமத்து விதைப்பை முடித்துக் கொண்டு வருடப்பிறப்பிற்கு மூன்று நாட்களுக்கு முன்னமே ஊருக்கு வந்துவிட்டார். வரும்போதே திருகோணமலைக்குச் சென்று வருடப் பிறப்புக்காக எல்லாருக்கும் புத்தாடைகள் வாங்கி வந்தார்.

தனக்கு அவர் சேலை வாங்கி வந்தது சௌந்தரத்திற்கு ஏமாற்றமாக இருந்தது. அவள் அடுத்த தவணை ஆரம்பமாகும் போது மீண்டும் பாடசாலைக்குப் போகவே விரும்பினாள். எப்படியாவது தன் தந்தையை அதற்குச் சம்மதிக்கச் செய்யலாமென்றும் அவள் நம்பினாள். ஆனால் அவர் தனக்குச் சேலை வாங்கி வந்திருப்பதைக் கண்டபோது தன் தந்தையார் தன்னைப் பாடசாலைக்கு அனுப்புவதில்லை என அறுதியாகத் தீர்மானித்து விட்டார் என்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்குத் தோன்றியது. ஆனாலும் தன் கலக்கத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் "அத்தானுக்கு ஒன்றும் வாங்கி வரவில்லையே அப்பா" என்றுதான் கேட்டாள்.

"அவனுக்கு என்ன வாங்குவதென்றே தெரியவில்லை. அவன் சோதனை எடுக்கப் போகிறான். காற்சட்டைத் துணி வாங்குவதா அல்லது வேட்டி வாங்குவதா என்றே எனக்குத் தெரியவில்லை.

அப்போதுதான் அங்கு வந்த தாமோதரம் "புதுவருடத்திற்குக் கோயிலுக்குக் கட்ட வேட்டியே வாங்கியிருக்கலாம்" என்றான்.

"அப்படியா பாடசாலையில் காற்சட்டை போட வேண்டியிருக்குமே என்று யோசித்தேன். நாளைக்கே வேட்டி வாங்குவோம்".

தனக்கு சேலை வாங்கியிருக்கத் தேவையில்லை. அடுத்த தவணை தொடக்கம் பாடசாலைக்குப் போக வேண்டும்" எனத் தன்னைப் பற்றிச் சொல்வானெனச் சௌந்தரம் எதிர்பார்த்தாள். ஆனால் தாமோதரம் அதைப்பற்றிப் பேசவில்லை. அது தன்னை அலட்சியம் பண்ணுவதாக அவளுக்குப் பட்டது. தனிமையாய் இருந்தபோது அவள் கேட்டாள் "என்னைப் பாடசாலைக்கு அனுப்பும்படி அப்பாவிடம் சொல்லுங்களேன்".

"நீ ஒன்றும் எனக்காகப் பாடசாலைக்குப் போகவேண்டியதில்லை. உனக்க விருப்பமிருந்தால் போ. உனக்காக நான் ஏன் வக்காலத்து வாங்க வேண்டும்" என்று எழுந்தமானமாகச் சொன்னான் தாமோதரம்.

சௌந்தரத்தின் கண்கள் கலங்கில. ஓரோர் வேளை பாடசாலைக்குப் போ என்று கட்டாயப் படுத்துகிறார். இப்போது அலட்சியமாகப் பேசுகிறார். இதன் காரணந்தான் என்ன? குழப்ப மடைந்த நிலையில் "பாவாடை வாங்கி உடுக்க" என்று கோபமாகக் கேட்டாள் அபிராமி.

"நான் ஒண்ணும் கிழவியில்ல இன்னமும் எனக்குப் பதினாறு வயசு ஆகல்ல"

"அது வயசில்லையா. உன்னோடொத்ததுகள் இந்த ஊரில கல்யாணம் முடிச்சிருக்கிறாங்க".

"ஏன் என்னோடொத்ததுகள் இன்னமும் பாடசாலைக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகிறார்களே அதைச் சொல்லுங்களேன்".

"அந்த விஷயம் எனக்குத் தெரியாது. உங்க அப்பா விட்டா நீயும் போ".

"அடுத்த தவணை பாடசாலை தொடங்கியதும் நான் போகத்தான் போறன்".

"போற நேரம் போ. இப்ப சீலையை எடுத்து உடு".

"எனக்கேலாது. பொங்கலுக்கு வாங்கின பாவாடை சட்டை இன்னமும் புதுசாய்த்தானிருக்கு அதைத்தான் உடுப்பன்".

"அது உன் இஷ்டம். ஆனா அப்பா கோபிச்சாரெண்டா என்னட்ட முறப்படாத" என்றாள் அபிராமி.

மயில்வாகனத்தாரும் அன்று குதூகலமாகவே இருந்தார். வீட்டுக்கு அன்று அவர் மச்சான் செல்லையாவும் வந்திருந்தார். இருவரும் கைவிசேடம் பரிமாறிக் கொண்ட பின்னர் தங்கள் தொழில் சம்பந்தமாகப் பேசிக் கொண்டார்கள். மயில்வாகனம் சொன்னார் "தம்பலகாமத்தில் மட்டுமா தண்ணிக் காடும் வயல்வெளியும்? அல்லைத் திட்டம் வந்தபிறகு கொட்டியா புரத்தில எங்க பாத்தாலும் தண்ணிக் காடுதான். வயல் வெட்டைதான். முந்திக் குளமாக இருந்த பெரிய வெளி இப்ப வயல் காணியாய்ப் போச்சு. அங்குதான் நாலு ஏக்கர் குத்தகைக்கு எடுத்திருக்கன். மானாவாரி செய்து அலுத்துப் போச்சு. மானாவாரிச் செய்கை சூது விளையாடுற மாதிரி. "வந்தால் சுல்தான் போனாப் பக்கீர்" என்று கிண்ணியாக் காரன் சொல்ற பழமொழி போலத்தான்".

"மானாவாரியோ, கோடையோ மண் மாதா விளைய வேணும். அது விளைஞ்சாத்தான் நமக்கு வாழ்க்கை" என்று சொல்லிச் செல்லையா புறப்படுகையில் "எங்க மச்சான் போறீங்க? வருஷம் பொறந்த பிறகு வந்த முதல் விருந்தாளி நீங்க தான். எனக்குக் கைவிசளம் தந்தது நீங்கதான். இப்ப எங்க போறீங்க?" என்று சொல்லிக் கையமர்த்தி இருக்கச் செய்து விட்டு வீட்டுக்குட் சென்று பித்தளைக் குடத்துட் கையை விட்டு தென்னஞ் சாராயப் போத்தலை எடுத்து மூடியைத் திருகித் திறந்தார்.

தென்னஞ்சாராயமும் ஆட்டிறைச்சிக் குளம்பும் புதுவருடத் தைச் சிறப்பித்தன. அவர்கள் இருவரும் சல்லாபித்துக் கொண்டிருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் தாமோதரம் எழுந்து வெளியே சென்றான்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக அவன் யாழ்ப்பாணத்தில் படிக்கிறான். ஆனால் எந்த ஒரு வருடப்பிறப்புக்கும் அவன் அங்கே நின்றதில்லை. ஆனால் அங்கு நடைபெறும் சித்திரை வருடப் பிறப்பன்று அதிகமான வீடுகளில் மரக்கறி உணவுதானாம். கோயிலுக்குப் போவது முக்கியமானதாக இருக்குமாம். ஆடு பங்கு போடுவதும், போத்தல் உடைப்பதும் தீபாவளிக்குத் தானாம். அந்த வழக்கம் அவனுக்குச் சிறந்ததாகவே பட்டது. புதுவருடத்தை எவ்வளவோ நம்பிக்கைகளோடு வரவேற்கிறோம். அப்படி வரவேற்கையில் கோயிலுக்குச் சென்று வணங்குவதும், அத்தினத்தில் உயிர்க் கொலை செய்யாதிருப்பதும் நல்லதாகவே அவனுக்குத் தோன்றிற்று. ஆனால் இங்கே யாரதை நினைக் கிறார்கள். புதுவருடம் மதுவும் மாமிசமுமாகத்தான் தொடங்குகிறது. இதன் காரணந்தான் என்ன. சித்திரை வருடம் பிறக்கும் போது ஊரிலே எல்லா ஆண்களும் இருப்பார்கள். ஆனால் தீபாவளிக்கு ஊரில் அரைவாசிக்கு மேற்பட்ட ஆண்கள் கண்டற் காட்டு வயல்வெளிகளிலே இருக்க வேண்டிய நிர்ப்பந்தம். அதன் காரணமாகத்தான் வசந்த காலத் தொடக்கமான இச்சித்திரை வருடம் இங்கே குதூகலமாகக் கொண்டாடப் படுகிறதா?

தன் நினைவுகளோடு நடந்து வந்தவன் சலூனுக்கு முன்னாலுள்ள பனிச்சை மரத்தை அடைந்தான். சலூன் பூட்டப்பட்டிருந்தது. சந்தியிலிருந்த வேலும் மயிலும் கடையும் பூட்டப்பட்டுத்தான் இருந்தது. ஆனால் கிண்ணியாவிலிருந்து வந்த கடலைத் தட்டிக் காரர்களும், மணிக் கடைக் காரர்களும் கடை பரப்பியிருந்தார்கள். பனிச்சை மரத்தின் கீழேயிருந்த கடலைத் தட்டிக் கடையைச் சுற்றிச் சில இளைஞர்கள்! அவர்கள் எல்லாருமே புத்தாடை அணிந்திருந்தார்கள். நெற்றி நிறைய விபூதி, காதிலே பூ. கோயிலிற்குப் போயிருக்கிறார்கள் போலத் தெரிகிறது. கூட்டத்தின் தலைவனாக இருந்த பாலா "வா மச்சான் வா" என்று தாமோதரத்தை வரவேற்ற போது அவன் வாயிலிருந்து சாராய வாடை குப்பென்று அடித்தது. தட்டிக் கடைக்காரரிடம் சுண்டற் கடலை வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்த இளைஞர்களும் வெறியாகத்தான் இருப்பார்கள் போலும்! தாமோதரத்திற்கு அவர்களைப் பார்க்கக் கோபமாகவும் இருந்தது. பரிதாபமாகவும் இருந்தது.

தன் உணர்வுகளை வெளிக்காட்டிக் கொள்ளாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எல்லாருக்கும் புதுவருஷம் போல இருக்கு" என்றான் பொதுவாக.

"ஓம் மச்சான். நெடுகயுமா? வீட்ட இருந்து குடிக்கவும் ஏலாது அதுதான் கோயிலுக்குப் போரம் என்று சொல்லிற்று இங்கனைக்கு வாறம்" என்றான் பாலா.

"இங்க எங்க அந்தச் சாமானிருக்கு"

"நேத்தே இரண்டு வாங்கி வச்சிற்றம். பரமன் சலூனைப் பூட்டிற்று வெள்ளை மணலுக்கு அவன்ர அக்கா வீட்டுக்குப் போயிற்றான். ஆனால் எங்களுக்காகப் பின் கதவைப் பூட்டாமல் சும்மா சாத்தியிருக்கான். அதுக்குள்ள தான் போத்தல் வச்சிருக்கம்".

தாமோதரத்திற்கு அதற்கு மேலும் என்ன பேசுவதென்று தெரியவில்லை. பிரமை பிடித்தவனாய் நின்றான். பாலா "உனக்கொரு சங்கதி தெரியுமா" என்று தாமோதரத்தின் காதில் கேட்டான்.

"என்ன சங்கதி".

"என்ர மச்சாள் லக்ஸ்மிக்கும் மட்டக்களப்பு வேதக்கார இங்கிலீஸ் வாத்திக்கும் லவ்".

"சீ. என்ன கதை பேசுற. அந்த இங்கிலீஸ் மாஸ்டர் அருமையான மனுசன். சும்மா வீண் கதையைக் கதைக்காத".

"இல்ல மச்சான் இதுல உண்மை இருக்க அதால தான் நான் அவளைப் பள்ளிக்குப் போக வேணாமென்று சொன்னாலும் என்னையும் மதியாம பாஞ்சு விழுந்து போறா".

"ஏன் உன்னைப் போல அவளும் படியாம இருக்க வேணும் என்று விரும்புறியா?"

"படிச்சது போதும் மச்சான். இன்னமும் படிச்சாளென்டா அவள் என்னை மதிக்க மாட்டாள். படிச்சிக் கிழிச்சி வாத்தியாராப் போனாளெண்டா பிறகு அவளுக்கு ஒரு வாத்தி மாப்பிள தான் தேவைப்படும்".

அத்தியாயம் - 11

"அதில என்ன குற்றமிருக்கு?

"குற்றமில்லத்தான், ஆனா அவள் எனக்கு வேணும் அதுக்கு அவள் மேலே படிக்காமலிருக்க வேணும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் பேச்சைக் கேட்கத் தாமோதரத்திற்கு அருவருப் பாகவும், வெறுப்பாகவும் இருந்தது. வைக்கற் பட்டறை நாயாக இருக்கிறானே இந்தப் பாலா. தான் படிக்கவில்லை என்பதற்காக அவளையும் படிக்க வேண்டாம என்கிறானே. இந்த ஆண்டு மார்கழிக்கு அவள் எஸ். எஸ். சி. சோதனை எடுக்கிறாள். ஆலங்கேணிப் பாடசாலையில் படிக்கும் மூன்றே நான்கு குமர்ப் பெண்களில் லட்சுமியும் ஒருத்தி.

சலூனுள்ளே இருந்து உதடுகளைத் துடைத்துக் கொண்டு, செருமிக் கொண்டு வந்த விசுவம் "ஓம் மச்சான் நீ சொல்றது சரிதான். உன்ர மச்சாள் பின்னேரத்திலயும் இங்கிலீஸ் வாத்திகிட்ட டியூசன் எடுக்கிறா".

"சீ சத்தம் போட்டுப் பேசாதே" என்று அவனைத் தடுத்த பாலா தாமோதரத்தின் காதோடு காதாகச் சொன்னான். "மச்சான் விஷயம் எண்டாப் பொய்தான் ஆனா இப்படிக் கதைகட்டி விட்டாத் தான் அவள் பாடசாலைக்குப் போறதை நிப்பாட்டுவாள்" என்றான்.

தாமோதரம் அதிர்ச்சி அடைந்தான். இந்தக் கிராமத்தின் இளஞ் சமூகம் எத்தனை கேவலமாகவும், குரூரமாகவும் சிந்திக்கிறது என்று எண்ணுகையில் அந்த எண்ணத்தின் வேதனையை அவனாற் தாங்க முடியாமலிருந்தது. போதையில் நிற்கும் அந்த முட்டாள் களிடம் இப்போது என்ன சொன்னாலும் பிரயோசனம் இல்லை என்று எண்ணினான். மெதுவாகப் பாலாவை அணைத்துக் கொண்டு "மச்சான் இப்ப ஒண்ணும் கதைக்காத. பின்னேரமா நான் உன்னோட பேசிக் கொள்றன்" என்றான்.

"என்னத்தைப் பேசுறது? உன்ர மச்சாள் மட்டும் படிக்காம வீட்டோட இருக்கச் சொல்லியிருக்கா. என்ர மச்சாளையும் அப்படி இரு என்று சொன்னாக் குற்றமா? பாப்பம் இனி அவள் பள்ளிக்குப் போற சமத்த" என்று சொல்லிக் கொண்டே சலூனின் பின் பக்கமாக நுழையப் போகையில் விசுவம் சொன்னான் "அங்க ஒண்ணும் இல்ல மச்சான்".

"சரிதான். தாமரை வில்லுக் கள்ளுக் கடைக்கும் போக ஏலாது. அங்கே கோணமலையப்பாவும் கிழட்டுக் கணபதிப்பிள்ளை விதானையும் இருக்கும். வாங்கடா வேறெங்காவது போவம்" என்று நடந்தான் பாலா. இளைஞர் கூட்டம் அவன் பின்னால் சென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமோதரம் பனிச்சை மரத்தின் கீழே சிந்தித்த படியே நின்றான். சௌந்தரத்தைத் தான் அல்லவா பாடசாலைக்குப் போகவிடாமற் தடுத்து வைத்திருப்பதாகப் பாலா குற்றஞ்சாட்டு கிறான். சில வேளை சௌந்தரம் பாடசாலைக்குச் சென்றால் பாலா லட்சுமியையும் செல்ல விட்டு விடுவானோ? என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

இல்லை. பாலாவுக்கு ஒருவித தாழ்வு மனப்பான்மை. லட்சுமி படித்து விட்டாற் தன்னை மதிக்க மாட்டாள் என்று எண்ணுகிறாள். இந்த எண்ணத்தைத் தான் மாற்ற வேண்டும். அதற்கு என்ன செய்யலாம்?விடிந்தால் யாழ்ப்பாணம் நான் போக வேண்டும். அதற்கள் பாலாவின் இந்த எண்ணத்தை மாற்ற வேண்டும். ஆனால் எப்படி மாற்றுவது என்றுதான் அவனுக்குத் தெரியவில்லை. தலைமை ஆசிரியரும் ஊரில் இல்லை. இருந்தால் அவர் சமாளிப்பார். என்ன செய்யலாம் என்றெண்ணிக் கொண்டே நடந்தான்.

மதிய வெளியிற் தூரத்தே கரைச்சை வெளியிற் கானல் நீர் நெளிந்தது. பனிச்சை மரத்தடியிற் சொறிநாய் ஒன்று முடங்கிக் கொண்டு கிடந்தது. தட்டிக் கடைக்காரனின் பீடிப் புகை கூட ஆடாமல் அசையாமல் அந்தரத்தில் நின்று கொண்டிருந்தது. சிந்தித்த படியே அடிமேல் அடிவைத்து நடந்த தாமோதரம் அவனை அறியாமலே தன் மாமனார் வீட்டுப் படலையைத் திறந்து கொண்டு அவன் வீட்டை நோக்கி நடந்தான்.

தெருப்படலையைத் திறந்து கொண்டு பசையற்ற வெண் மணலிலே சௌந்தரத்தின் முயற்சியால் செழித்து வளர்ந்திருந்த பூந்தோட்டப் பாதையின் நடுவே அவன் சென்று கொண்டிருக்கையில் "மதியமும் சறுக்கிற்று. இன்னமும் அப்பாவைக் காணவில்லையே எங்க போனாரோ" என்ற அபிராமியின் குரலுக்கு "எனக்கென்ன தெரியும் அவர் எங்க போனாரெண்டு" என்று சௌந்தரம் வெறுப்பொடு பதிலளித்தது தாமோதரத்தின் காதுகளில் விழுந்தது.

வாசற் படியில் கால் வைக்கையில் தாமோதரம் சொன்னான் "மாமா வீட்ட இருக்கார்".

அவனைக் கண்டதும் அபிராமி "வாங்க தம்பி என்று அவனை வரவேற்றாள். வாசலிலே கிடந்த சாக்கிலே கால்களைத் தட்டித் துடைத்துக் கொண்டு ஆசனத்தமர்ந்தான் தாமோதரம். சௌந்தரம் மேசையில் மார்பைப் புதைத்தவாறு தன் இரு கைகளாலும் நாடியைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கிப் பிடித்துக் கொண்டு தான் நின்ற நிலையைக் கொஞ்சமும் தளர்த்தாதபடி ஒருக்களித்து நின்றுகொண்டிருந்தாள். அவளுக்கு ஏதோ கோபம் என்று தாமோதரத்துக்குத் தெரிந்தாலும் அது ஏன் என்று தெரியவில்லை.

உள்ளே இருந்து அவளைத் தாயார் அழைத்தார் "சௌந்தரம் இதைக் கொண்டு போ".

அந்தக் குரலைக் கேட்டதும் கூடச் சௌந்தரம் அசையாமல் தான் நின்றாள். தாமோதரம் அவளது இறுக்கத்தைத் தளர்த்த வேண்டும் என்ற எண்ணத்தில் என்ன வருஷப் பிறப்பிற்குப் புது உடுப்பு ஒன்றையும் காணோம்"என்றான்.

"ஏன் இல்லை உங்க மாமா பதினாறு முழத்திலே எனக்கு பங்களூர்ப் பட்டுச் சேலை வாங்கி வந்திருக்கிறார்" என்றாள் சௌந்தரம் வெறுப்போடு.

தாமோதரத்திற்கு அவள் கோபத்தின் காரணம் புரிந்தது. சிரித்துக் கொண்டே அவன் சொன்னான் "இந்தக் காலத்தில பதினாறு முழத்தில சேலையில்லை. மிஞ்சிப் போனால் பன்னிரண்டு முழத்தில தான் இருக்கும். அதில சோழித் துண்டை வெட்டினால் பத்து முழந்தான் தேறும். அதையும் உடுக்கப் பஞ்சியா?"

"ஏன் மாமா உனக்குச் சேலை வாங்கி வந்தார். இப்போது அது தேவையில்லையே" என்று தான் தாமோதரம் சொல்வானென அவள் எதிர்பார்த்திருக்க வேண்டும் ஆனால் அப்படிச் சொல்லாமல் தற்காலச் சேலைகளுக்கு இலக்கணம் சொல்வதும் அதற்கும் மேலாக அச் சேலையை உடுத்திக் கொள்ளச் சொல்வதும் அவளுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது. வெடுக்கென்று அறைக்குள் நுழைந்தவள் தந்தையார் வாங்கி வந்த புத்தம்புது சேலையை எடுத்து வந்து இந்தாங்க உங்க மாமா வாங்கி வந்தத நீங்க தான் உடுத்துங்க" என்று சேலையை அவன் மடியிற் போட்டாள். புத்தம் புதிய நீலப் பட்டுச் சேலை அதன் அகலமான தங்கச் சரிகைகளுடன் அவன் மடியில் விரிந்து கிடந்தது. அதைத் தடவி அதன் மென்மையை ரசித்துக் கொண்டே அந்த நீலப் புடவையில் சௌந்தரம் எப்படித் தோற்றமளிப்பாள் என்று நினைத்து அந்த நினைவுத் தோற்றத்தினை ரசித்துக் கொண்டே சில வினாடிகள் யோக நிஷ்டையில் இருந்தான் தாமோதரம். அந் நினைவிலே

பட்டுக்கரு நீலப்புடவை பதித்த நல் வைரம் நட்ட நடு நிசியிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பாரதியின் கண்ணம்மாப் பாட்டின் அடிகள் நெளிந்தன. அந்தப் பட்டுக் கரு நீலப் புடவையை உடுத்திக் கொண்டிருக்கும் சௌந்தரத்தின் சேலை மரரொளி போன்ற சுந்தரப் புன்னகையை அவன் ரசித்தான். நீலக் கடல் அலைகளாய் எழும் அவள் நெஞ்சின் குமுறல்களை ரசித்தான். அவள் வேதனையை இன்னமும் தூண்டி விட்டு வேடிக்கை பார்க்கவும் முனைந்தான். அறைக்குள் போய்விட்டு வந்த சௌந்தரம் அவன் முன்னாலிருந்த மேசையிற் கொண்டுவந்த தட்டை வைத்து விட்டு அவன் மடியிலே கிடந்த சேலையை எடுக்கையில் தாமோதரம் அச் சேலையை அவள் எடுக்காதபடி பிடித்துக் கொண்டு உனக்குத் தான் இது வேண்டாம் என்றாயே.

"அப்ப நீங்களா உடுத்தப் போறீங்க"

அப்படித் தானே நீ சொன்னாய்" என்று சிரித்தான் தாமோதரம்.

"நான் சொல்றதைத் தான் நீங்க செய்யிறீங்களாக்கும்"

"ஏன் என்னத்தச் செய்யல்ல?"

"நான் பாடசாலைக்குப் போறதையிட்டு அப்பாக்கிட்ட கதையிங்க என்று சொன்னேனே. செய்தீங்களா" அவள் குரல் கெஞ்சியது.

ஆனாலும் தாமோதரம் அவள் கெஞ்சலைப் பொருட்படுத் தாமல் "நான் என்ன கேட்பது அவரிடம். படிக்கப் போகிறவள் நீ. படிக்க வேண்டியவள் நீ. நீயல்லவா கேட்க வேண்டும்".

"நான் கேட்டுத் தான் அவர் விடுகிறார் இல்லையே".

"அவர் உன்னை இழுத்துப் பிடிச்சுக் கொண்டிருக்கவில்லை நான் போகத்தான் போவேன் என்று வெளிக்கிட்டால் அவர் தடுக்க மாட்டார் என்று தான் நான் எண்ணுகிறேன்".

"அவர் போக வேண்டாம் என்று சொல்லி விட்டார் என்னால் அதை மீறவும் முடியவில்லை. விரும்பவும் இல்லை".

"அப்படி விரும்பாமல் இருப்பதைத் தான் நான் விரும்ப வில்லை". அஞ்சுவதற்குத் தான் அஞ்ச வேண்டும் எல்லாவற்றிற்கும் அஞ்சக் கூடாது. அப்படிப் பயப்படுபவர்களை நம்பவும் கூடாது".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் சொல்வதொன்றுமே எனக்கு விளங்கவில்லை. உங்கள் தத்துவங்கள் எனக்கொன்றும் விளங்கவில்லை".

"இதிலே தத்துவம் என்ன இருக்கிறது. ஒரு வேளை அப்பா என்னிடம் கதைக்க வேண்டாம் என்று உன்னிடம் சொன்னால் அதைக் கேட்பாய் போல இருக்கிறது. அதைத் தான் நம்பவும் கூடாது என்று சொன்னேன்".

"நம்பக் கூடியவர்கள் இருக்கிறார்களாக்கும்".

"நெஞ்சுத் துணிச்சலும் நேர்மையும் உள்ள எவரையும் நம்பலாம். கோழைகளை நம்பக் கூடாது".

"துணிச்சல் என்னிடம் இல்லாமல் இருக்கலாம் நேர்மையும் இல்லை என்றா சொல்கிறீர்கள் என்று ஆத்திரத்தோடு கேட்டாள் சௌந்தரம்".

அறைக்குள்ளிருந்து கையிலே மோர்க் குவளையுடன் வந்த அபிராமி "என்ன தம்பி ஒன்றுமே சாப்பிடவில்லையே நீங்கள் பலகாரமெல்லாம் அப்படியே இருக்கு".

"வயிற்றிலே இடமேயில்லை மாமி" என்றவன் முறுக் கொன்றை எடுத்துக் கொறித்தான் அபிராமி உள்ளே சென்றாள். முறுக்கைக் கொறித்துக் கொண்டிருந்த தாமோதரம், சௌந்தரம் உன்னிடம் ஒரு விஷயம் கேட்க வெண்டும் இரகசியமாக" என்று பீடிகை போட்டான்.

"என்ன இரகசியம்? நான் தான் நம்பக் கூடியவள் அல்லவே".

"அந்தக் கதைய விடு. நான் உண்மையா உன்னிட்ட ஒரு விஷயம் கேட்க வேண்டும்".

"என்ன விஷயம் கேளுங்களேன்".

"லட்சுமி எப்படி?" என்று மெதுவாகவே கேட்டான்.

"இந்தக் கேள்வி சௌந்தரத்தின் மனதில் ஒரு புதுக் குழப்பத்தை உண்டாக்கிற்று. ஏன் அவளைப் பற்றிக் கேட்கிறார் என்று எண்ணிக் கொண்டே "அவளுக்கென்ன மெத்தம் நல்லவள். அருமையான குணம். படிப்பிலேயும் மிகக் கெட்டிக்காரி".

"அப்படியா? ஆனால் பாவம் அவளைப் பற்றிஊரிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீணான அபவாதம் கிளம்ப இருக்கிறது".

"எப்படி உங்களுக்குத் தெரியும். அந்த அபவாதத்தைக் கிளப்பப் போவது யார்?"

"பாலா தான். எரிச்சலிலும் பொறாமையிலும் ஏதோ உளறு கிறான். எப்படியும் நான் அவனைத் தடுக்க வேண்டும் அதுவும் இன்றைக்கே".

"அவனுக்கென்ன எரிச்சலும் பொறாமையும் லட்சுமி அவன்ர மச்சாள் தானே".

"அதாலதான் அவனுக்குப் பொறாமையாக இருக்கிறது. அவள் பாடசாலைக்கப் போய்க் கொண்டிருப்பது அவனுக்குப் பிடிக்க வில்லை".

"ஏனாம் அவன் என்ன புரளி கிளப்பப் போகிறான்?"

அத்தியாயம் - 12

"நீ ரகசியமாகவே வைத்துக் கொள். இங்கிலீஸ் வாத்தியாரோட அவளுக்குக் காதல் என்று கயிறு திரிக்கிறான் வெறியில சொன்னாலும் அவன் மனதில அது இருக்கு".

"நாசமாய்ப் போவான். அவளைப் போலக் குணமான பிள்ளை இந்த ஊரிலேயே இல்லை. அவளையா அப்படிச் சொன்னான்" என்று ஆத்திரப் பட்டாள் சௌந்தரம்.

"இன்னம் அவன் வெளியால சொல்லல இப்படிக் கதையைக் கிளப்பப் போறன் என்று என்னட்ட தான் சொன்னான். ஆனா வெறி முறிஞ்சதும் நான் அவனைச் சமாளிக்க வேணும்".

"அவன என்ன சமாளிக்கிறது? அவளிட்டச் சொல்லி அவள்ர காற் செருப்பால அந்த நாய்க்கு இரண்டு போட வேண்டும்" என்றாள் சௌந்தரம். ஆத்திரத்தில் அவள் உதடுகள் துடித்தன கைகள் படபடத்தன.

"ஆ, இத்தனை வீரமிருந்தால் உன்னையும் எதற்கும் நம்பலாம். நம்ம ஊர்ப் பெண்களுக்கு இன்றைக்கு வேண்டுவது இந்தத் துணிச்சலும் வீரமும் தான். பாரதியார் கூறுவது போல "நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சாத நெறிகளும் தான் நமது பெண்களுக்குத் தேவை. ஊர் என்ன சொன்னாலும் பரவாயில்லை. நாம் செய்ய வேண்டியதைச் செய்வோம் என்ற துணிச்சல் வேண்டும். ஆனால் அந்தத் துணிச்சல் சில ஆண்டுகளுக்குக் கூட இந்த ஊரில் இல்லை" என்றான் தாமோதரம்.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"ஊர் ஏதாவது சொல்லுமென்று பயந்து தானே உங்கள் அப்பாவும் கூட உன்னைப் பாடசாலைக்குப் போக வேண்டாம் என்கிறார். ஊருக்கு அவர் பயம். அவருக்கு நீ பயம். பயப்படாமல் எதிர்த்து நின்றால் அவரும் பணிந்து விடுவார்".

"எதற்கும் ஒரு தடவை நீங்களும் அப்பாவிடம் சொல்லுங்களேன்".

"சொல்லலாம் தான் ஆனால் இந்த விஷயத்தில் அவர் மேலே எனக்குச் சரியான ஆத்திரமாக இருக்கிறது. அவரிடம் கதைத்தால் ஆத்திரத்தில் அவரிடம் என்ன கதைப்பேனோ, எப்படிக் கதைப்பேனோ என்று எனக்குத் தெரியாது. அவர் என்மேல் நேசமும் பாசமும் உள்ளவர். என்னைத் தூக்கி வளர்த்தவர். ஏன் உன்னை விட அதிகமாக அவர் என்னைத் தூக்கியிருக்கிறார். அத்தகையவரிடம் ரசாபாசமாக ஏதும் பேசி விடுவேனோ என்று பயப்படுகிறேன். யாழ்ப்பாணம் போனதும் அவருக்கு இதைப்பற்றி ஒரு கடிதம் எழுதுவேன்."

தன் தந்தையாரிடம் அவர் வைத்திருக்கும் பாசத்தைக் கண்டு சௌந்தரம் மனம் பூரித்தாள். ஒரு கணம் அப்படியே அவனைக் கட்டியணைத்துக் கொள்ள வேண்டும் போலத் தோன்றிற்று. அடுத்த கணம் "கடிதம் ரசாபாசமாக இருந்தால் ....." என்று கேட்டாள்.

"இருக்காது அப்படி எழுத மாட்டேன். ஆற அமர யோசித்தே எழுதுவேன்" என்று சொல்லிக் கொண்டே மோரைப் பருகினான்.

"சாப்பிடுங்களேன்" என்றாள் சௌந்தரம்.

"வேண்டாம். வேண்டுமானால் இரவைக்கு இங்கே சாப்பிடுகிறேன். நான் சொன்னதை மிக ரகசியமாக வைத்துக்கொள். இப்பவே நான் பாலாவைக் காணுவேன்" என்று எழுந்து வீட்டை நோக்கி நடக்கையில்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எப்போது நீங்கள் யாழ்ப்பாணம் போகிறீர்கள்?"

"நாளைக் காலையிற் போக வேண்டும் எட்டரை மணிக்கு திருக்கிணாமலையிலிருந்து பருத்தித்துறை பஸ் பிடிக்க வேண்டும்".

"வருஷம் கழிச்ச கையோட அவ்வளவு அவசரமாகப் போக வேண்டுமா? ஒரு நாள் சுணங்கினால் என்ன?"

"ஒரு மணித்தியாலம் கூடச் சுணங்க ஏலாது பிறின்சிப்பல் கண்டிப்பாகச் சொல்லியிருக்கிறார். பிஸிக்ஸ் இன்னமும் கொஞ்சம் படிக்க வேண்டி இருக்கு" என்று சொல்லி நடந்தான்.

"சரி போங்க அத்தான் கொஞ்சம் சுணங்கி நான் வீட்ட வாறன்".

"நீலச் சேலையை உடுத்திக் கொண்டா? என்று சிரித்துக் கொண்டே கேட்டான் தாமோதரம்.

"உங்களுக்கு விருப்பமாயிருந்தா உடுத்திக் கொண்டு வாறன்".

"ஓமோம் கூத்துக்கு வேஷம் போடுறாப் போல ஒரு நாளைக்கு சேலை உடுத்திக் கொண்டா உன் மாணவத் தன்மை ஒன்றும் தொலைந்து போய் விடாது. வெள்ளைப் பாவாடை கட்டவில்லையே என்று சரஸ்வதியும் ஓடிவிட மாட்டாள்" என்று கொண்டே தாமோதரம் வீட்டை நோக்கி நடந்தான்.

சூரியன் மதியத்திலிருந்து சறுக்கியிருந்தாலும் வெயில் அகோரமாத் தான் இருந்தது. சித்திரை இருபத்தெட்டிற்குப் பின்னர் தான் தென்மேற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்றின் முன்னறிவிப்பாகச் சாயந்தரமானதும் இடியுடன் மழை பெய்யுமாம் என்று ஊரவர்கள் சொல்லுவார்கள். அந்த இருபத்தெட்டாம் குழப்பம் வரையும் வெய்யில் இதைப் போலத்தான் கொளுத்தும்.

தாமோதரத்தின் முற்றத்தின் மரத்தின் கீழே அவன் தந்தையாரும் மாமனாரும் ஆளுக்கொரு காத்தான்குடிக் கற்பன் பாயிற் சுக நித்திரை செய்து கொண்டிருந்தார்கள்.

தாமோதரம் மெதுவாகச் சந்தடியின்றி அவர்களைத் தாண்டி வீட்டுக்குட் சென்றான். சாப்பாட்டை முடித்துக் கொண்டு மண்டபத்தில் அமர்ந்திருக்கையில் பாலா கிளப்ப இருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரளியைப் பற்றியும் அவனை எப்படித் தடுப்பது என்பதைப் பற்றியுமே எண்ணிக் கொண்டிருந்தான்.

வெய்யில் நிர்ப்பந்தித்து ஏற்படுத்திய அமைதியைக் கிழித்துக் கொண்டு தூரத்தே பெரிய ஆரவாரமும் கூக்குரலும் கேட்டது. பெண்களின் ஓலமும் கேட்டது. சரி தான்! புதுவருடம் அதன் உச்சக் கட்டத்தை அடைந்து விட்டது போலும் என்றெண்ணிக் கொண்டே, அந்தக் கூக்குரலை அலட்சியஞ் செய்தவனாக பாலாவைப் பற்றிய ஏகாக்கிரக சிந்தையனாக இருந்தான் தாமோதரம்.

சற்று வெய்யில் தணிந்த போது தாமோதரம் எழுந்து பாலாவைத் தேடிக் கொண்டு நடந்தான். ஊரிலே சித்திரை வருடப் பிறப்பு உச்சிப் போதில் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. தற்போது சற்றுத் தணிந்திருந்தது. மாலையில் மீண்டும் முருக்கை மரம் ஏறமுன்னர் அவன் பாலாவைச் சந்திக்க விரும்பினான்.

மணல் தெருவிலே நடந்து பாடசாலையைத் தாண்டியதும் இடப்பக்கமாகத் திரும்பித் தென்னஞ்சோலைகளினூடே ஒற்றை யடிப் பாதையில் நடந்தான். கட்டையாற்றுக் கரைச்சைப் பக்கமாகத் தான் பாவாவின் வீடு இருந்தது.

தென்னை மர நிழலிலே புத்தாடையணிந்த சிறுவர்கள் காசு குலுக்கி விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களிற் பாலாவின் தம்பியும் ஒருவன். அவனிடம் தாமோதரம் கேட்டான்.

"அண்ணன் இருக்காரா?

"இல்லையே" என்று கைவிரித்தான் பையன்.

"எங்கே போயிற்றார்?

"எனக்கென்ன தெரியும்! இன்னமும் சாப்பிடவும் வரவில்லை யெண்டு அம்மா பேசிக் கொண்டிருக்கா" என்றுவிட்டுத் தன் விளையாட்டைத் தொடர்ந்தான் சிறுவன்.

"அவங்க எல்லாம் உப்பாற்றுக்குப் போறாங்க. அங்கிருந்து வரேக்க நான் அவங்களக் கண்டனான்" என்றான் இன்னொருவன்.

சரிதான் தாமரைவில்லுக் கள்ளுக் கடையில ஊர்க் கிழம் எல்லாம் இருக்கும் என்றெண்ணி மறைவாக அந்தக் கூட்டம் உப்பாற்றுக்குத் துறையைத் தாண்டிப் போயிருக்கிறது என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானித்த தாமோதரம் மேலே போகாமல் மீண்டும் வீட்டுக்குத் திரும்பி வந்தான்.

முற்றத்து மாமரத்தின் கீழே சயனித்திருந்த அப்பாவையும் மாமாவையும் அவன் காணவில்லை. வீட்டுக்குள்ளேயும் அவர்களைக் காணவில்லை. தாமோதரத்திற்குக் கவலையாக இருந்தாலும் எந்த அடாவடிக்கும் அவர்கள் போக மாட்டார்கள் என்று அவன் நம்பினான். வீட்டுக்குள்ளே சௌந்தரம் தன் நீலப் பட்டுச் சேலையை உடுத்திக் கொண்டிருந்தாள்.

உடுத்து முடிந்ததும் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். இயற்கையாகவே சிவந்த அவள் முகத்தில் நாணத்தின் செம்மையும் படர்ந்திருந்தது. தாமோதரம் திக் பிரமையோடு அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் தலையைக் குனிந்து கொண்டு "தெருவால சீலை உடுத்துக் கொண்டு வர வெட்கமா இருந்துச்சு" என்றாள் குழைந்து கொண்டே.

"சீலை உடுத்துவர என்ன வெட்கம்? உடுக்காமல் வந்தாற் தான் வெட்கப்பட வேண்டும்"

அவன் சொன்னதன் அர்த்தம் பிடிபடாதவள் போலச் சௌந்தரம் "இதை உடுத்துக் கொண்டு வேலிக்கால பூந்து வரவும் முடியாது. அதனால தான் பாவாடையோட வேலிக்கால பூந்து வந்து சீலையை இங்கே உடுத்தன்" என்று விளக்கங் கொடுத்தாள்.

"சரிதான் இப்ப ஏன் வெட்கப்படுறா?"

"நான் ஒண்ணும் வெட்கப்படல்ல இந்தச் சீலை நல்லா இருக்கா என்று கேட்கிறேன்"

"சீலை நல்லா இருக்கு"

"சீலை உடுத்த நான் நல்லாயில்லையாக்கும்"

"நான் அப்படிச் சொல்லவில்லையே. நீ தான் உன்னைப் பற்றி அப்படிச் சொல்றா"

"அதுதான் கனநேரம் ஒண்ணும் பேசாம ஊமை மாதிரி இருந்தீங்களோ?"

"என்னத்தைச் சொல்றது? சில நேரங்களில் நம் உணர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை வெளியிடுவதற்குச் சொற்கள் வலுவற்றவை ஆகிவிடுகின்றன. அப்போது பேசாமலிருப்பது தான் புத்திசாலித்தனம். அந்தப் புத்திசாலித் தனத்தோடு தான் உன்னைப் பார்த்துக் கொண்டிருந்தேன்".

"சரிதான் பார்த்துக் கொண்டிருப்பதற்கும் புத்திசாலித்தனம் வேண்டும் என்று எனக்கு இன்றைக்குத் தான் தெரியும் " என்ற சௌந்தரம் "நாளைக்குப் போகத்தான் வேணுமா?" என்று கேட்டாள்.

"கட்டாயமாக அதிலே எந்த மாற்றமும் இல்லை எட்டரை மணி பஸ்ஸைப் பிடிக்க விடிஞ்சவுடன் போக வேணும்".

"திருவிழாவுக்கு வருவீங்களா?"

"நிச்சயமாக வரமாட்டேன். கோணேசர் அடுத்த வருஷமும் விழாக் கொண்டாடுவார். ஆனா இந்த வருஷப் பரீட்சையில நான் சித்தியடைய வேண்டும். அப்பதான் தொடர்ந்தும் எனக்கு வாசிற்றிற்கும் ஸ்கொலர்சிப் கிடைக்கும்".

"போய் அப்பாவிற்குக் கடிதம் எழுதுவீர்களா?"

"எழுதுவேன்"

"வெளியே மாலை மயங்கிக் கொண்டிருந்தது. ஊருக்கு மேற்குப் புறமாக இருந்த உப்புக் கரைச்சைகளுக்கு மேலால் நிமிர்ந்து நிற்கும் கண்ணா மரங்களுக்கு அப்பால் தூரத்தே தெரிந்த கந்தளாய்க் குன்றுகளில் மாலைச் சூரியன் தலையை மோதி உடைத்துக் கொள்கையில் அந்த இரத்தப் பிரவாகத்தில் மேற்கு வானிற் செம்மை படர்ந்தது. உப்பு நீரிற் குளித்துக் கொண்டிருந்த காகங்கள் தம் சிறகுகளை அடித்து உலர்த்திக் கொண்டு கண்ணா மரங்களை நோக்கிப் பறந்து கொண்டிருந்தன. வெப்பந் தணிந்த அந்த மாலைப் பொழுதில் ஊர் மீண்டும் கலகலப்பாயிற்று.

"நீங்கள் போவதாயிருந்தால் நான் நாளைக் காலையிலேயே வந்து சந்திக்கிறேன். அம்மாவும் ஒரு பார்சல் தருவதாகச் சொல்லியிருக்கா"

"அவலையோ, வற்றாளைக் கிழங்கையோ கட்டிப் பெரிய மூட்டையாகத் தந்திராத என்னால் சுமக்க ஏலாது. யாழ்ப்பாணத்தில் அவைகள் தேவையுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் - 13

"அப்படி ஒன்றுமில்லை" என்று சொன்னவள் பின்புறமாய்ச் சென்றாள். தெய்வானை வீட்டிற்குள் விளக்கேற்றினாள். விளக் கொளியில் நீலப் புடவையைக் கட்டிக் கொண்டு சௌந்தரம் ஒரு தேவதையைப் போல் ஒல்கி ஒசிந்து நடப்பதைக் கண் கொட்டாமற் பார்த்துக் கொண்டிருந்தான். விளக்கேற்றிய அம்மாவோடு சேர்ந்து சௌந்தரமும் முன் விறாந்தையில் அமர்ந்து கொண்ட போது தாமோதரம் தன் பிரயாணத்திற்கான பெட்டியை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தான். பெட்டியை அடுக்கி முடிந்ததும் "நான் கொஞ்சம் வெளியே போயிற்று வாறன்" என்று கிளம்பினான் தாமோதரம். அப்பா என்னதான் கோபித்துக் கொண்டாலும் அவன் தன் அண்ணாவின் வீட்டிற்குப் போக வேண்டும் என்று விரும்பினான். அது தெய்வானைக்கும் தெரியும்.

அவன் விருப்பை உணர்ந்த சௌந்தரம் "எங்க போகப் போறீர்கள் என்று எனக்குத் தெரியும். நான் மாமாட்ட நிச்சயமாச் சொல்வேன்" என்று பயமுறுத்தினாள்.

"சொல் எனக்குப் பயமில்லை. என்னதான் இருந்தாலும் அவன் என் சகோதரன் என் இரத்தத்தின் இரத்தம்" என்று தாமோதரம் வெளியில் சென்றான்.

அவன் தாயார் சொன்னாள் "இளமை முறுக்கில அவன் தான் விரும்பின பெட்டையோட போயிற்றான். அதைத் தவிர அவன் ஒரு குற்றமும் செய்யல்ல. தானும் தன்பாடுமா வாழ்றான். இவர்தான் அவள் சாதில குறைவு என்று கழிச்சி வைச்சிருக்கிறார். எத்தனை நாளைக்கென்றுதான் பார்ப்போமே" என்று ஆதங்கப்பட்டுக் கொண்டாள்.

"மாமி அத்தானை நான் சும்மா வெருட்டினனான்.பெரிய அத்தானோட நானும் கதைக்கிறனான் தான். அப்பாவும் மாமாட கோபம் ஆறும் வரையும் கொஞ்சக் காலம் பொறுத்திருப்பம் என்கிறார்" என்றாள் சௌந்தரம் குற்ற உணர்வோடு.

"எனக்குத் தெரியும். அண்ணா இவனோட எவ்வளவு நேச மோ அவ்வளவு நேசம் மூத்த மருமகனிலயும் ஆனால் அவரிட்டக் கூடச் சொல்லாமல் அங்கே மாட்டுப்பட்டுக் கொண்டான்".

"பெரிய அத்தான் இன்றைக்கு வரவில்லையா மாமி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பாக்குப் பயத்தில வரல்ல. ஆனா மத்தியானம் அவர் நித்திரையாயிருக்கக்குள்ள வேலிக்கு மேலால மகனைத் தூக்கித் தந்தான். கொஞ்ச நேரந்தான் நான் வைத்திருந்தன். பிறகு அவன்ர அழுகை பொறுக்கேலாமக் கொடுத்தனுப்பிற்றன்".

"காலம வீட்டயும் வந்தார் மாமி.அப்ப வீட்டில் அப்பாவும் இல்ல. என்னோட கொஞ்சநேரம் கதைச்சிற்றுப் போயிற்றார். அரைப் பார்த்தால் எனக்கும் வேதனையாக இருக்கிறது. எப்படி மெலிந்து போனார்" என்று அனுதாபப் பட்டாள் செளந்தரம்.

இருள் குமைந்து விட்டது. முன்னிருட்டுக் காலம் தொட்டால் ஒட்டிக் கொள்வது போன்ற மையிருட்டு. பனிச்சை மரத்திலே மின்மினிப் பூச்சிகள் கண்சிமிட்டின. சந்தியிலே வேலும் மயிலும் கடையிலிருந்த பெற்றோமக்ஸ் விளக்கின் ஒளி தெருவிலே குமைந்த இருளின் நெஞ்சைப் பிளந்து கொண்டிருந்தது. அந்த இருளிலே வெளியே சென்றிருந்த சிறிய பிள்ளைகள் மூவரும் வீட்டுக்கு வந்தனர். அவர்களின் புதுவருடக் கோலாகலம் அப்போதுதான் முடி வடைந்தது போலும். தெய்வானை அவர்களைக் கடிந்து கொண் டாள். எட்டு வயது நிறைந்த தன் ஒரே பெண்ணை அடிக்க முயன்றாள். ஆனாற் செளந்தரம் அவளைத் தடுத்தாள்.

கண்களைக் கசக்கி அழுதுகொண்டிருந்த தன் மகளிடம் "கொஞ்ச நேரம் வீட்டில இருந்துகொள். நான் மச்சாள அவட வீட்டில விட்டிற்று வாறன்" என்று கிளம்பினாள்.

"நானும் வாறன்" என்று சிணுங்கினாள் மகள்.

"பகல் முத்திலாக் காவடி ஆட்டம் ஆடிற்று இப்பத்தான் வந்திருக்கா. அதுக்குள்ள மறுபடியும் ஆடிற்று வரப் போறாவாம். போயிருடி" என்று அவளை விரட்டினாள் தெய்வானை.

"அவளும் வரட்டும் மாமி. நானும் இன்று முழுதாக அவளைக் காணல்ல மாமி" என்று பரிந்து பேசினாள் செளந்தரம்.

"சரி வா ஒரேயொரு பொம்புளப்பிள்ளை என்று அப்பா செல்லங்குடுத்துக் கெடுத்துப் போட்டார்" என்று சொல்லித் தெய்வானை புறப்பட்டதும் செளந்தரத்தின் கையைப் பிடித்துக் கொண்டு இந்திராணியும் குதூகலத்தோடு புறப்பட்டாள்.

வெளியே வந்தபோது சில கணங்களுக்கு அவர்களுக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதை புலப்படவில்லை. ஆனாற் கண்கள் இருளுக்குப் பழகிக் கொண்டதும் அந்த மையிருட்டிலே தெருப்படலைக்குச் செல்லும் பாதை பனங்குருத்தால் முடைந்த பாயைப் போல வெண் பச்சையாக விரிந்து கிடந்தது. தெருவில் இறங்கியதும் வேலும் மயிலும் கடையின் பெற்றோமக்ஸ் விளக்கொளி தெருவை ஒளிசெய்து கொண்டிருந்தது. அந்த விளக்கொளியிற் பட்டுச் சேலை சரசரக்கப் புதுமணப் பெண் போல நடந்து செல்லச் சௌந்தரத்திற்கு வெட்கமாக இருந்தது. இருளிலே முக்காடு போட்ட முஸ்லீம் பெண்கள் ஆடவர் கண்களுக்குப் பட்டு விடுவோமோ என்ற அச்சத்தில் நடப்பதைப் போலச் சௌந்தரமும் வேலியோரமாக மறைப்புக்காகக் கட்டப்பட்ட கிடுகுகளை உரசியவாறு நடந்து கொண்டிருந்தாள்.

"ஏன் பிள்ளை வேலியோரமாய்ப் போறாய்? பூச்சி பொட்டுக் கிடக்கும். நடு றோட்டால வா" என்று அவள் கையைப் பிடித்து நடு வீதிக்குக் கொண்டு வந்தாள் தெய்வானை.

நாணிக் கொண்டு வேகமாக நடந்தாள் சௌந்தரம். மாமியை முந்திக் கொண்டு தெருப்படலையைத் திறந்து உள்ளே போனாள். அவளுக்கு முன்னம் இந்திராணி ஓடிவிட்டாள். தன்னை அம்மா மீண்டும் வீட்டுக்குக் கொண்டு போய் விடுவாளோ என்ற பயம் அவளுக்கு.

தெருப்படலையில் நின்று கொண்டே நான் போயிற்று வாறன் பிள்ளை மாமா வந்த பிறகு அவரையும் கூட்டிக் கொண்டு வீட்ட வாறன் எண்டு அம்மாட்டச் சொல்" என்று கொண்டே திரும்ப எத்தனிக்கையில் "ஏன் மச்சாள் வாங்களேன்" அவள் கையைப் பிடித் தாள் அபிராமி.

"வீட்டில் ஒருத்தருமில்ல அவர் வந்ததும் இரண்டு பேருமா வாறம்" என்று அவளது கையை விலக்கிவிட்டுத் திரும்பி நடந்தாள்.

"அப்ப காத்துக் கொண்டே இருப்பன்"

"ஓமோம். எச்சாமஞ் சென்றாலும் வருவம்" என்றுவிட்டுத் தன் வீட்டுக்குப் போனாள் தெய்வானை.

தெருப்பலையைத் திறந்து அவள் உள்ளே சென்றபோது அப்போது தான் அவள் கணவரும் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அவர் சற்று உற்சாகமாக இருந்தார் "தாமன் எங்கே?" என்று அவர் கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சம் முன்ன தான் வெளிக்கிட்டுப் போனான். நாளைக் காலையில் யாழ்ப்பாணம் போறவன் இரவைக்குள்ள சந்திக்கிற ஆக்களைச் சந்திக்க வேணாமா?"

"யாரைச் சந்திக்கிறது" என்று சற்றுச் சூடாகவே கேட்டார்.

"எனக்கென்ன தெரியும். இளந்தாரிப் பிள்ளைற்ற இதெல்லாம் கேட்டுக் கொண்டா இருக்க"

"சும்மா மறைக்காத நானும் அத்தானும் ஈச்சந் தீவில இருந்து வரக்க அவனைக் கண்டம் நீ சும்மா மறைக்காத"

தெய்வானை ஒன்றுமே பேசாமல் அவர் பின்னால் நடந்தாள். அன்றிரவு செல்லையா வீட்டில் அவர்கள் இருவருக்கும் சம்பிரமமான விருந்து. ஈச்சந்தீவிலிருந்து அறா விலைக்கு வாங்கி வந்திருந்த தென்னஞ் சாராயத்தைச் சுவைத்துக் கொண்டே கோழிக் கறியையும் பிட்டையும் ஒரு வெட்டு வெட்டினார்கள்.

மயில்வாகனத்தாரும் அவர் மனைவியும் வீட்டுக்குத் திரும்பும்போது நடுச் சாமமாக இருந்தது.

வீட்டுக்குட் சென்று அமர்ந்து கொண்ட மயில்வாகனம் "அந்த மூத்த தறுதலையைப் பாக்கத்தான் அவன் போறான். ம்... எனக்கென்ன. நான் மட்டும் தான் இந்த வீட்டில் தட்டத்தனியா இருக்கன். மற்ற எல்லாரும் அந்தத் தறுதலையின் பக்கந்தான்" என்றார் ஆற்றாமையோடு.

தெய்வானை ஒன்றும் பேசாமற் சில கணங்கள் இருந்துவிட்டு அதுசரி. நீங்க ரெண்டு பேரும் ஏன் ஈச்சந்தீவுப் பக்கம் போனீங்க என்று கேட்டாள் சிரித்துக் கொண்டே.

அத்தியாயம் - 14

"நாங்க தேவையாத்தான் போனம். சரி சரி அத்தார் காத்துக் கொண்டிருப்பார் வெளிக்கிடு நீயும் அங்க போவம். இரவைக்குச் சாப்பாடு நமக்கு அங்கதான்"

அடுத்த கணமே தெய்வானை சரி என்று சொல்லிச் சேலையை மாற்றிக் கொண்டு புறப்பட்டாள். போய்க் கொண்டு இருக்கையிலே மயில் வாகனம் சொன்னார் "ஆவணி பிறக்கட்டும் அவனர படிப்பு முடிஞ்சதோ முடியல்லியோ அவனுக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாணத்த முடிச்சு வைக்க வேணும் என்றார்.

பஸ்ஸிலே யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துக் கொண்டி ருக்கையில் ஊர் நினைவுகள் தாமோதரத்தின் நெஞ்சை நிறைத்துக் கொண்டிருந்தன. அன்று அதிகாலையிலேயே அவன் மாமனாரும் சௌந்தரமும் தன்னை வழியனுப்ப வீட்டுக்கு வந்திருந்தனர் மாமனார் அவனுக்கு நூறு ரூபா பணம் கொடுத்தார். அவரிடம் விடைபெற்றுக் கொண்டு வந்ததும் தெருப்படலையை அடைந்த போது மாமனாரின் முன்பாக ஏதுமே சௌந்தரத்திடம் பேசாமல் வந்துவிட்டதை நினைத்துக் கொண்டு எதையோ விட்டு விட்டு வந்தவனைப் போல வீட்டுக்குட் சென்று சௌந்தரத்தின் கையைப் பிடித்துக் கொண்டு நான் போய் வருகிறேன் என்று அவளிடம் விடைபெற்றுக் கொண்டதையும் எண்ணிக் கொண்டான். அவளிடமிருந்து பிரிகையில் அழுதாளா அல்லது சிரித்தாளா என்பதை அவனால் நிதானிக்க முடியாமல் இருந்தது. நேசம் மறக்கவில்லை நெஞ்சம் நினைவு முகம் மறக்கலாமோ. என்ற பாரதியாரின் பாடலை அவன் எண்ணிக் கொண்டான்.

அதற்கும் மேலால் அந்த அதிகாலையிலேயே அவனை வழியனுப்பப் பாலா வந்து விட்டான். அவன் தான் கிண்ணியாத் துறை வரையும் அவனைச் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு வந்தான். அடுமட்டுமல்ல. சைக்கிளை இக்கரையில் வைத்துப் பூட்டிவிட்டு கிண்ணியாத் துறையைத் தோணியிற் கடந்து திருகோணமலை வரையும் வந்து பஸ்ஸில் ஏற்றியும் விட்டான். வரும் வழியில் அவன் சொன்னான் "நேற்றுக் கொஞ்சம் ஓவராய்ப் போச்சுது, அம்மாவுக் கும் தெரிஞ்சு போச்சு விடிய விடியப் பேசிக் கொண்டிருந்தா".

"பேசுவதா உங்களையெல்லாம் கட்டி வைச்சு உரிச்சு உப்புத் திடாவ வேணும்" என்றான் தாமோதரம்.

"ஒருநாட் கூத்துத் தானே இனிச் சீவன் கிடந்தாத் தீபாவளி வரட்டும். அதுக்குள்ள தொழில் துறையைப் பார்க்க வேணும். நாளைக்கே நான் பொன்னங்காணிக்குப் போறன். அங்க போய் இரண்டு "தொடுவை"க் கிடாவைச் சாய்ச்சுக் கொண்டு கங்கையைக் கடந்து சங்கு வேலிக்குப் போக வேணும். அங்க ஒரு நாற்பது ஏக்கர் வயலடி இருக்கு. நாற்பது ஏக்கருக்கும் மாட்டு விஷக்களை எட்டு அவணம் வரும். கொட்டியாரத்து அவண விலைக்கு இரண்டாயிரம் ரூபா".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதென்ன கொட்டியாரத்து அவணம்?"

"உன்ர படிப்புக்கு இது விளங்காது தான். நம்ம ஊரிலயும் தம்பலகாமத்திலயும் எழுபத்தைஞ்சு கொத்தா நாலு சாக்கு அவணம். கொட்டியாரத்து அறுபது கொத்துக் கொண்ட ஆறு சாக்கு ஒரு அவணம்".

"அந்தக் கணக்கிருக்கட்டும். நேற்றுக் கதைச்ச கத"

"என்ன மச்சான் நேற்றுக் கதைச்ச?"

"லட்சுமியைப் பற்றி ஞாபகம் இல்லையா?"

"ஓ அதுவா அந்தப் பெட்டைக்குச் சரியான கிறுக்கு"

"அதுக்காக அவள் படிக்கிறதைக் குளப்பப் போறியா?"

"என்ன படிப்பு? அவவுக்கு அவ என்ன பி. ஏ. யா படிக்கப் போறா"

"ஏன் படிச்சா என்ன?"

"பெட்டைக் கோழி கூவி விடியாது மச்சான்"

"இல்லை நீ சொல்வது முழுப் பிழை. நல்லா யோசித்துப் பார். நம்ம பள்ளிக் கூடத்தில படிப்பிக்கிறதுக்கு இதுவரை கொட்டியாரத்தில இருந்தும், யாழ்ப்பாணத்தில இருந்தும் தான் வாத்திமார் வந்தாங்க இன்னம் பத்து வருசத்தில பார் ஆணும் பெண்ணுமா நம்ம ஊரிலயும் பத்துப் பட்டதாரி இருப்பம். இருக்க வேணும் அப்படியாக வளரவேண்டிய சமுதாயத்தைச் சின்னஞ்சிறு கதைகள் பேசிக் கெடுத்துப் போடாதே"

"சத்தியமாகக் கெடுக்க மாட்டன் தாமு. நேற்றுக் கதைச்சது குடிகாரன் கதை. இப்ப விடிஞ்சு போச்சு. குடிகாரன் பேச்சு விடிஞ்சாப் போச்சு".

"உண்மையாகவா?"

"சத்தியமாக" பாலா தாமோதரத்தின் கையிலடித்துச் சத்தியம் செய்தான் தொடர்ந்து நான் அந்தக் கதையையே கதைக்க மாட்டன். நாளை விடிஞ்சா நான் ஊருக்குத் திரும்பி வர ஒரு மாசமோ இரண்டு மாசமோ செல்லும்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியா நான் உன்னை நம்புறன் எனக்குச் சந்தோசமா யிருக்கு" என்று சொல்லிக் கொண்டுதான் தாமோதரம் பஸ் ஏறினான்.

நான்கு மணியான போது புருத்தித் துறை பஸ் நெல்லியடியை அடைந்த போது தாமோதரம் பாடசாலைக்குச் செல்லாது இடையி லேயே சின்னத்தம்பி ஆசிரியரின் வீட்டில் இறங்கினான்.

சின்னத்தம்பி அவனை அகங் குளிர வரவேற்றார். தனக்கு எதிர்காலத்திற் பெருமை தேடித்தர இருக்கும் தன் மாணவனிடம் இப்ப பாடசாலையிற் கொஸ்டல் திறபடாது சமையற் காரரெல்லாம் வீட்டுக்குப் போயிருப்பாங்க. பாடசாலை தொடங்க மட்டும் இங்கேயே இருந்து கிளாசுக்குப் போ. நான் ஏற்கனவே பிறின்சிப்ப லிட்டயும் கதைச்சிட்டன்.

தாமோதரமும் அவரை ஒப்புக்கொண்டு தன் படிப்பிலே தீவிர அக்கறை காட்டினான். மற்ற எல்லாவற்றையும் மறந்தாலும் தன் மாமனாருக்கு உருக்கமான ஒரு கடிதம் எழுதினான். அதிலே கல்வியின் அவசியம் பற்றிக் குறிப்பிட்டுச் சௌந்தரத்தைத் தொடர்ந்து பாடசாலைக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டி ருந்தான்.

ஆலங்கேணியிற் பழைய பத்தத்திப் பிரகாரமே வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது. சித்திரை வெய்யில் வறுத்துக் கொட்டியது. மயில்வாகனம் தான் குத்தகைக்கெடுத்த பெரிய வெளி வயலை விதைத்து முடித்திருந்தார். வைகாசி மாதம் பிறந்த போது சாயந்த வேளைகளில் வானம் இருண்டு இடித்து முழங்கி மின்வெட்டி மழை பொழிந்த போது அதிகாலையில் அந்த ஈரத்தைத் தொட்டு புஸ்புஸ் என்று வீசிய இளஞ் சோழகம் சித்திரைச் சூட்டைத் தவிர்த்தது. அந்தக் காற்றிலே லட்சுமியைப் பற்றிய அபவாதமும் மிதந்து வந்தது. ஆனால், அந்தப் புரளியைப் பாலா கிளப்பவில்லை. அவன் அன்று சொன்னதை யாரோ ஒருத்தன் கிளப்பி விட்டான் அக்கதை ஊரெல்லாம் பரவியது. இதைப்பற்றி ஏற்கனவே தாமோதரம் மூலம் தலைமை ஆசிரியர் அறிந்திருந்தார். ஆகவே அந்தப் புரளியை சாமர்த்தியமாக அடக்கினார்.

லட்சுமியும் எதையும் தாங்கும் இதயமுள்ளவளாக இருந்தாள். அவள் அந்த அபவாதத்தைச் சட்டை செய்யவில்லை. அவள் குடும்பத்தினரும் அதைப் பொருட்படுத்தவில்லை. ஆனால் அந்தக் கதைகளுக்குப் பாலாதான் காரணமென அவர் நம்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலா ஊரிலே அந்தக் கதை அடிபட்டுக் கொண்டு இருக்கையில் அவன் கங்கு வேலியிலே எருமைக் கடாக்களின் பின்னால் திரிந்து கொண்டிருந்தான்.

ஆனாலும் அந்தக் கதைகளினால் சௌந்தரத்தின் பாடசாலைப் படிப்புக்கு நிரந்தரமாகவே முற்றுப்புள்ளி வைத்துவிட செல்லையா விரும்பினார். "கண்ணுக்குத் தைத்த" தன் மகளைப் பாடசாலைக்கு அனுப்ப அவர் தயங்கினார்.

ஆனால் சௌந்தரம் வீர ஆவேசத்துடன் போராடினாள். அவரின் போர். அவரின் போராட்டமும், தாமோதரத்தின் கடிதமும் அவரைப் பணிய வைத்தன.

நீண்ட நாட்களின் பின் பாலா இவ்விடயங்களையெல்லாம் நீண்ட கடிதத்தில் எழுதினான்.

வழைமை போல ஆனி மாதத்தில் தம்பலகாமம் ஆதி கோணை நாயகர் கோயிலிற் கொடியேறிற்று. பதின்னாற்காம் திருவிழாவுக்க வரும்படி சௌந்தரம் எழுதிய கடிதத்தைத் தாமோதரம் ஆத்திரத்தோடு சுக்குநூறாகக் கிழித்தெறிந்தான்.

ஆடிமாதம் மணலை வாரி இறைத்துக் கொண்டு சோழகக் காற்று கடூரமாக வீசிற்று. கரைச்சைகளில் நீர் வற்றி உப்புக் பொரிந்து கிடந்தது. மரங்கள் தம் செழுமை குன்றி வரண்டு காய்ந்து இலையுதிர்த்தன. ஆடிக் கச்சானில் ஆதி கோணை நாயகர் எழுந்தருளி, சமாவெச்ச தீவு ஆலங்கேணியூடாக மகாவலிகங்கைக் கரையை அடைந்து இரவு முழுவதும் தீர்த்தக் கரையிற் தங்கியிருந்து காலையில் கங்கையில் ஆடித் தீர்த்தம் ஆடினர். அமாவாசை கழித்த பின் தாமோதரத்திற்குப் பரீட்சை தொடங்க இருந்தது.

பரீட்சையில் அவன் மிகச் சிறப்பாகப் பாடசாலையிலே முதல்வனாகச் சித்தியடைவானென்று ஆசிரியர்கள் எல்லாருமே நம்பினார்கள். ஆவணி விடுதலையின் போது சின்னத்தம்பி ஆசிரியர் அவனைத் தம் வீட்டுக்கு அழைத்துக் கொண்டார். அங்கிருந்து தான் அவன் பரீட்சை எழுத ஆயத்தமாகிக் கொண்டிருந்தான்.

பரீட்சை தொடங்கி விட்டது!

ஆனால் விஞ்ஞான பாடங்களில் தோற்றும் தாமோதரத் திற்குப் பரீட்சைக்கு இன்னமும் இரண்டு வாரங்களுக்கு மேற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருக்க வேண்டியிருந்தது. தாமோதரம் பரபரப்போடு ஆனால் நம்பிக்கையோடு பரீட்சையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்போது தான் சின்னத்தம்பி ஆசிரியருக்கு அந்தத் தந்தி வந்தது. அந்தத் தந்தியைச் சின்னத்தம்பி ஆசிரியரால் நம்பவே முடியவில்லை. அவர் விடுதலைக்காக ஊருக்குப் புறப்பட்டு வருகையிலும் மயில்வாகனம் மிக்க ஆரோக்கியமாகத்தான் இருந்தார். அவருக்குத் திடீரென எப்படி மரணம் வந்தது.

ஆசிரியர் குளம்பினார். நல்ல வேளையாக அந்தத் தந்தி வந்தது தாமோதரத்திற்குத் தெரியாது. அவன் வெளியே போயிருந்தான். தாமோதரத்திற்கு அந்த விஷயத்தைச் சொல்லி அவனையும் ஆலங்கேணிக்கு அழைத்துப் போவதா என்று யோசித்தார். கடைசியாக அவனுக்கு இன்னமும் பதினைந்து நாட்களேதான் இருக்கின்றன. ஆகையினால் அவனுக்கு விஷயத்தைத் தெரிவிக்காமல் தான்மட்டும் ஆலங்கேணிக்கப் போவது எனத் தீர்மானித்தார். ஆனால் அவர் மனைவி அத் தீர்மானத்தை எதிர்த்தாள் "நீங்கள் இங்கிருந்து சொல்லாமற் போகலாம். ஆனால் அவன் ஊரிலிருந்து யாராவது இதைப்பற்றி அவனுக்கு இதைப்பற்றித் தெரிவிக்காமலா இருக்கப் போகிறார்கள். தந்தையின் பிணத்தையாவது அவன் காண வேண்டும். அவனையும் அழைத்துக் கொண்டு, வேண்டுமானாலும் நானும் வருகிறேன்" என்றாள் அவர் மனைவி.

மீண்டும் குழம்பிய ஆசிரியர் அவள் சொல்வதிலுள்ள உண்மையைப் புரிந்து கொண்டு அடுத்த நாட் காலையிலேயே அவனையும் அழைத்துக் கொண்டு ஆலங்கேணிக்குப் புறப்பட்டார். தாமோதரம் ஏன் என்று துளைந்துத் துளைத்து அவரைக் கேட்டான். எனக்கு மிகமிக முக்கியமான ஒரு காரியம் திருகோணமலையிற் பார்க்க வேண்டி இருக்கிறது. நீயும் படித்து நன்றாகக் களைத்து விட்டாய். உனக்கு ஓய்வு வேண்டும். அதற்காக இரண்டு நாட்கள் ஊரிலிருந்து கோணேசர் கோயிலுக்குப் போய்விட்டு மூன்றாம் நாளே இங்கு வரலாம் என்று மட்டும் சொன்னார் ஆசிரியர்.

அவர் சொல்லைத் தாமோதரம் என்றைக்குமே தட்டிய தில்லை. உடனே அவருடன் அவன் புறப்பட்டான். பிற்பகல் இரண்டு மணியளவில் கிண்ணியாத் துறையை அடைந்தான். அங்கே தான் ஆசிரியர் சொன்னார் உன் அப்பாவுக்கும் கடுமையான சுகவீனம் என்று நேற்றுத் தந்தி வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமோதரம் அதிர்ந்து போனான். ஏதோ நடக்கக் கூடாதது நடந்து விட்டதாக அவன் உள்ளுணர்வு சொல்லிற்று. துறையடி யிலேயே ஓவென்றழுது விட்டான். துறையடியிற் காத்திருந்த பாலாவும் மணியனும் அவர்கள் இருவரையும் தங்கள் தங்கள் துவிச்சக்கர வண்டியில் ஏற்றிக் கொண்டு சந்தியிற் திரும்பிக் கட்டையாற்றுப் பாலத்தைத் தாண்டி ஊரின் வெண்மணலிற் சைக்கிளை உருட்டிக் கொண்டு நடக்கையிற் பறைமேளச் சப்தம் கேட்டது! ஒப்பாரிக் குரல் சீறியடிக்கும் கச்சான் காற்றின் ஓசைக்கும் மேலாற் கேட்டது.

அத்தியாயம் - 15

தாமோதரம் தலையடித்துக் கொண்டு ஓவென்று அழுதான். அவனை எதிர்கொண்டு வந்த நாகேந்திரம் தம்பியைத் தழுவிக் கொண்டு நான் தான்டா அப்பாவைக் கொண்டுற்றன். என்னால தான்டா அவர் செத்துப் போனார். என்று குமுறி அழுதான். தாமோதரமே அவனைத் தேற்ற வேண்டியிருந்தது. இருவரும் கட்டியணைத்துக் கொண்டு அழுதனர்.

வீட்டிற்கு முன்னால் புதிதாகப் போடப்பட்டிருந்த பந்தலின் கீழ் மயில்வாகனம் தன் சேலம் பட்டு வேட்டியுள்ளே நீட்டி நிமிர்த்து படுத்திருந்தார். தலைப்பாகையின் சந்தனப் பொட்டிற்குக் கீழே மின்னிய அவர் முகத்தின் கன்னங்கரிய மீசையின் கீழே உதடுகளிற் புன்னகை அவருக்கே உரித்தான அந்தக் குறுஞ் சிரிப்பு.

தாமோதரத்தைக் கண்டதும் குழுமியிருந்த ஊர் முழுவதும் மீண்டும் ஆர்ப்பரித்து அழுதது. அம்மா அவனைக் கட்டியணைத்துக் கொண்டு புலம்பினாள். தாமோதரத்திற்கு இதயமே நின்று விட்டதைப் போல இருந்தது. எதிர்காலம் அவனுக்குப் புலப்படவில்லை. நிகழ்காலம் ஏதோ ஒரு பொய்மையாயிருந்தது. இறந்தகாலம் மட்டுமே தெளிவாகத் தெரிந்தது.

அவனைக் கட்டியணைத்துக் கொண்டிருந்த தாயிடமிருந்து செல்லையா தாமோதரத்தை விடுவித்து அணைத்துக் கொண்டு பந்தலுக்கு வெளியே வந்தபோது அவராலும் அழாமல் இருக்க முடியவில்லை.

அதன் பின்னர் விடயங்கள் துரித கதியில் நடந்தன. செல்லையா தன் தங்கையின் கணவருக்கு ஐயரைக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருத்தியங்கள் செய்து சுடலையில் தகனம் செய்யத்தான் முயன்றார். ஆனாற் திருகோணமலையிலிருந்து ஐயரைக் கொண்டுவர முடியாம லிருந்தது. அன்று அவருக்குக் குச்சவெளியிற் கிருத்தியமாம். நாளை வரையும் காத்திருக்கவும் முடியாது. ஆகவே தாமோதரம் வந்த சில மணித்தியாலங்களில் உள்ளூர் சேமக்காலையில் அவர் பிரேதம் அடக்கம் செய்யப்பட்டது. சேமக்காலைக்குச் சென்றவர்கள் திரும்புகையில் இருள் கவிந்து விட்டது. வீட்டிலே சற்று முன்னர் இருந்த ஒப்பாரியும் அழுகையும் கூச்சலும், குழப்பமும் அடங்கி யிருந்தது. தலைவிரி கோலமாகக் கதறிய பண்கள் தலை முழுகிவிட்டு அலங்காரங்கூடச் செய்து கொண்டிருந்தார்கள். ஆண்கள் தலை முழுகிய பின்னர் அலுப்பிற்குக் கொஞ்சம் போட்டு விட்டு உற்சாகமாக இருந்தார்கள். பெற்றோமக்ஸ் விளக்குகள் இரண்டு வீட்டுக்குள்ளும் வெளியிலுமாக ஒளியை உமிழ்ந்து கொண்டிருந்தன. கட்டுக் காவல் தளர்ந்ததினாற் சிறுவர்கள் நிலவொளியில் வெண்மணலிற் புழுதியைக் கிளப்பி விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஆசிரியர் சின்னத்தம்பி

ஊரைக் கூட்டி ஒலிக்க அழுதுட்டுப்
பேரை நீக்கிப் பிணம் என்ற பேரிட்டுச்
சூரையங் காட்டிலே கொண்டு போய்ச் சுட்டபின்
நீரில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே.

என்ற திருமூலரின் திருமந்திரத்தை நினைந்து கொண்டார். அவர் பந்தலுக்குக் கீழே பாயில் மல்லாந்து படுத்திருந்தார். அவர் பக்கலில் தாமோதரமும், நாகேந்திரமும் சோகமே உருவாக அமர்ந்திருந்தனர். காலந்தான் அவர்கள் சோகத்தை ஆற்ற வேண்டும் என்றெண்ணியவராகச் சின்னத்தம்பி மௌனமாகவே இருந்தார்.

முந்தநாள்ப் பின்னேரம் தான் அப்பா பெருவெளியில் இருந்து வந்தார். இரண்டு மூன்று நாட்களில் வேளாண்மை வெட்ட வேண்டும் என்று சொன்னார். காலையில் நெஞ்சுக்க நோகுது என்டார். வாயுச் சேட்டை என்று உள்ளியைக் குடுத்திற்றுக் கிண்ணியா ஆஸ்பத்திரிக் குக் கூட்டிப்போக இருந்தன். ஆனா அதுக்குள்ள அவர் போயிற்றார். தாமோதரத்தின் பக்கலில் வந்த அம்மா அழுதழுது சொன்னாள்.

அதைக் கேட்ட தாமோதரம் மீண்டும் மௌனமாக அழத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கினான். அழுது முடிந்ததும் "இந்த ஓய்வுக்காகத் தானா என்னை யாழ்ப்பாணத்திலிருந்து கூட்டிற்று வந்தீங்க" என்று சின்னத்தம்பி ஆசிரியரிடம் குழறிக் கேட்டான். சின்னத்தம்பி ஆசிரியர் அவன் தலையை இலேசாக வருடினார். அவன் கேள்விக்கு அவரால் விடையளிக்க முடியவில்லை.

காலம் யாருக்காகவும் கவலைப்படவும் இல்லை. காத்திருக்கவும் இல்லை. மூன்றாம் நாள் எட்டுச் சடங்குகள் நடந்தன. அடுத்த நாட் காலையிலேயே சின்னத்தம்பி ஆசிரியர் தாமோதரத்தையும் கூட்டிக் கொண்டு யாழ்ப்பாணம் செல்லப் புறப்பட்டார். என்ன செய்யலாம் தம்பி எல்லாம் விதிப்படிதான் நடக்கும். நீ நடந்ததை மறந்து முதலில் சோதனையை எழுது. கோணேசா கைவிட மாட்டார் என்று செல்லையா தாமோதரத்தைத் தேற்றி வழியனுப்பினார்.

"எல்லாத்துக்கும் அண்ணா இருக்கேன்டா. நீ தைரியமாகப் போ" என்று தைரியமளித்தான் நாகேந்திரம். அம்மா தலையைத் தடவிக் கண்ணீருடன் வழியனுப்புகையிற் சௌந்தரமும் அவள் பக்கலில் விழிகளில் அருவி சொட்ட நின்றாள்.

யாழ்ப்பாணம் சென்ற தாமோதரம் சின்னத்தம்பி ஆசிரியரின் தேற்றுதல்களுடனும், ஆசிகளுடனும் பரீட்சையை எழுதிவிட்டு மீண்டும் அவருடன் ஆலங்கேணிக்கு வந்தான். அவருக்கும் விடுதலை முடிந்து விட்டது.

கச்சான் காற்று முற்றி அதன் அந்திமதசையை அடைந்து மாண்டு மடிவதற்கு முன் எதையாவது செய்து தீருவோம் என்ற வீராப்போடு சூறாவளியாய்ச் சுழற்றி அடித்தது. கிணறுகளில் நீர் வற்றியது. வாரியடித்த புழுதியைச் சுமந்து கொண்டு மரங்களெல்லாம் கருகித் தீய்ந்தன. வரட்சியும் வெப்பமும் ஊரைக் கருக்கியது. தாமோதரமும் நெருப்பில் விழுந்த பூவாய் கருகிக் கொண்டிருந்தான்.

கணவன் இறந்து விட்டான் என்ற செய்தியைக் கேட்டதும் மனைவி உண்ணாமல் உறங்காமற் கல்லைப் போல உணர்ச்சி களற்று இருந்தாளாம் என்று கல் என்ற ஒரு ஆங்கிலக் கவிதையைத் தாமோதரம் படித்திருக்கிறான். அந்தக் கவிதையில் வரும் பெண்ணைப் போலவே தாமோதரமும் செயல்மறந்து சிரிப்பு மறந்து, கலகலப்பு மறந்து உணர்வுகள் மதர்த்துப் போனவனாக வாழ்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தான்.

சின்னத்தம்பி வாத்தியார் அவன் கவலைகளை மறந்திருக்க வேண்டும் என்பதற்காகப் பாடசாலைக்கு வந்து படிக்கும்படி கேட்டார்.

இதற்குள் நாகேந்திரம் பெரிய வெளியிற் தன் தந்தையார் செய்த வயலை அறுவடை செய்து சூடு குவித்து விட்டு வந்தவன் சூடு மிதிப்பதற்காக மீண்டும் பெரிய வெளிக்குப் பயணந் தொடங்கினான்.

தானும் அவனோடு புறப்பட்டு வருவதாகத் தாமோதரம் சொன்னபோது நாகேந்திரம் அவனைக் கண்டிப்பாக வரவேண்டாம் என்றான். எனவே வேறு வழியின்றிப் பாடசாலைக்குச் சென்று அங்கே படிக்கத் தொடங்கினான். சம்பளமற்ற சேவகம்!

அம்மாவையும், தம்பிமார் இருவரையும், தங்கையையும் காப்பாற்ற வேண்டும். அதற்குத் தான் ஒரு உத்தியோகத்தைத் தேடிக் கொள்ள வேண்டும் என்று அவன் லிரும்பினான். துன்ப நினைவு களால் பரீட்சையைக் கூடச் சரியாக எழுதவில்லை. பரீட்சையில் என்ன எழுதினான் என்றே அவனுக்குத் தெளிவில்லை. முதற் தடவையிலே நன்கு சித்தியடைந்து சர்வ கலாசாலைக்குச் சென்றாற் தான் தொடர்ந்தும் உபகாரச் சம்பளம் கிடைக்கும். ஆனாற் பரீட்சையில் சித்தியடைவதே நிச்சயமில்லை. ஆகவே மேலே படிக்கும் வாய்ப்பும் இல்லை என அவன் எண்ணினான்.

ஆனால் நாகேந்திரம் மட்டும் "நீ தொடர்ந்து படிக்கத்தான் வேண்டும்" என்று சொல்லிக் கொண்டு இருந்தான். ஆனால் அவன் சொல்வது நடைமுறையிற் சாத்தியமாக இராது என்று எண்ணித் தாமோதரம் வேலை தேடுவதில் முனைந்தான்.

பாலா அவனுக்கு வழிகாட்டினான். புதிதாகக் கட்டிய பாடசாலைகள் சிலவற்றை அரசாங்கம் பொறுப்பேற்க இருப்ப தாகவும் அவைகளில் ஒன்றான சுங்கான்குளிப் பாடசாலையில் தாமோதரத்தின் பெயரைப் பதிவதாகவும் அவன் சொன்னான்.

ஊரிலிருந்து ஆறுமைல்களுக்கு அப்பால் காட்டுப் பிரதேசத்தில் ஓர் குளம். கோடையிலும் சுமார் நூற்றைம்பது ஏக்கர்களுக்கு அக்குளத்திலிருந்து நீர் பாய்ச்சலாம். குளத்தை அண்டிய மேட்டுப் பகுதியில் ஆலங்கேணிக் கிராமத்தவர் சிலர் குடியேறியிருந்தார்கள். ஒரு பாடசாலை அவர்களுக்கு வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பாலா அங்கோர் ஓலைக் கொட்டிலைக் கட்டிப் பாடசாலையும் நடத்தினான். இப்போதும் அவன்தான் அப் பாடசாலையின் மனேஜர்.

பாலா தாமோதரத்தையும் கூட்டிக் கொண்டு எம். பி. யிடம் சென்றான்.

தாமோதரத்திடம் துக்கம் விசாரித்துவிட்டு அவர் ஏன் தம்பி அவசரப்படுகிறீர்? உமக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது. வேண்டுமாயின் நான் உம்மை ஒரு கிராமசேவகர் ஆக்குகிறேன். நமது தொகுதியில் புதிதாக ஒன்பது கிராம சேவகர்கள் நியமிக்கப்பட் இருக்கிறார்கள் என்றார்.

"இல்லை எனக்கு வேறு எந்த உத்தியோகமும் வேண்டாம். ஆசிரியனாகவே நான் விரும்புகிறேன். அப்போது தான் மேலே படிக்கலாம்" என்று வாதித்தான் தாமோதரம்.

"அப்படியா? எனக்குத் தடையில்லை. இந்த மாதம் அரசாங்கம் சுங்கான்குழிப் பாடசாலையைக் கையேற்கும் அதற்கான ஒழுங்குகள் முடிவடைந்து விட்டன"

"அங்கேயா? எனக்குக் கண்டிப்பாக உத்தியோகம் கிடைத்தால் நன்றாக இருக்கும். படித்து ஒரு டாக்டராக வேண்டும் என்று கனவு கண்டேன் அது முடியாமற் போய்விட்டது. இப்போது ஆகக் குறைந்தது ஒரு பட்டதாரியாகவாவது வரவேண்டும். ஏகலைவன் துரோணனின் உருவச்சிலையைப் பார்த்து வணங்கிக் கொண்டே வில்வித்தை வித்தகனானது போல நானும் என்னாற் செல்ல முடியாத அந்தப் பல்கலைக்கழகத்தின் கட்டிடங்களைப் பார்த்துக் கொண்டே பட்டதாரியாக வேண்டுமென்று சொன்ன போது அவன் கண்கள் கலங்கின.

அவன் முதுகிற் தட்டிக் கொடுத்த பாராளுமன்ற அங்கத்தவர் "முதலில உத்தியோக நியமனம் வரட்டும். அதன் பின்னர் கண்டிக்கு மாற்றம் எடுக்கலாம். ஆனால் ஏகலைவன் கட்டைவிரலைத் தட்சணையாகக் கொடுத்து தான் கற்ற வித்தையையே செயற்படுத்த முடியாதவனானது போல நீரும் நிதானத்தை இழக்கக் கூடாது. அமைதியாய் இரும்" என்றார்.

அவர் கூறியது போலவே அடுத்த மாதமே அரசாங்கம் சுங்கான் குழிப் பாடசாலையைப் பொறுப்பேற்றது. தாமோதரத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பாடசாலையில் உத்தியோகம் கிடைத்தது.

அந்தக் கிராமப்புறப் பாடசாலையில் இருந்துகொண்டு மேலே படிக்க முடியுமா என்று கவலைப்பட்டான் தாமோதரம். மாதங்கள் கடந்தன. பரீட்சை முடிவுகள் வெளியாகின. அவன் நான்கு பாடங்களிலும் சாதாரண சித்தியடைந்திருந்தான்.

இதற்குள் தனியார் பாடசாலைகளை எல்லாம் அரசாங்கம் சுவீகரித்துக் கொண்டது. ஆலங்கேணி மிஷனரி பாடசாலையும் அரசாங்கப் பாடசாலை ஆனது. தாமோதரம் விஞ்ஞானப் பாடங்களிற் சித்தியடைந்து இருந்தமையால் சின்னத்தம்பி ஆசிரியரின் முயற்சியினால் அவனுக்கு ஆலங்கேணிப் பாடசாலைக்கு மாற்றம் கிடைத்தது.

ஆனால் தாமோதரம் கண்டிக்கு மாறுவதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தான்.

ஆனால் சின்னத்தம்பி ஆசிரியர் அவனை நெறிப்படுத்தினார். ஆங்கில இலக்கியம் படிக்க முயன்றவனைத் தடுத்து "அதைப் படிப்பிக்க நல்ல ஆசான் வேண்டும். இங்கு அதற்கான ஆசிரியர்கள் இல்லை. மீண்டும் விஞ்ஞானப் பாடங்களை எடுத்துச் சர்வ காலாசாலைக்குச் சென்றாலும் நான்கு ஆண்டுகள் சம்பளமற்ற விடுதலைதான் கிடைக்கும். ஆகவே வெளிவாரி மாணவனாக கலைப்படிப்புப் படிக்கலாம். தமிழ், சமயம், தர்க்கம் போன்ற பாடங்களை நாமாகவே படிக்கலாம். விடுதலைக் காலங்களில் யாழ்ப்பாணம் சென்று ரியூசன் எடுத்தாற் போதும். இதற்கிடையில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்குப் பயிற்சிக்கு அழைக்கப்பட்டால் அதற்குப் போம் பலாலியில் இருந்து கொண்டு மேற்படிப்பும் படிக்கலாம். சம்பளமும் கிடைக்கும்.

காலம் அவன் தயரத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றிக் கொண்டிருந்தது. தந்தையாரின் முதலாம் ஆண்டுத் திவசமும் முடிந்தது. அச்சடங்கு மிகச் சுருக்கமாகவே நடந்தது. அதை நடத்துவதில் அவன் தன் மாமனாரோடு வாழ்வில் முதல் முறையாக அபிப்பிராயப்பேதப் பட்டான்! என்றாலும் நீண்ட நாட்களின் பின்னர் அன்று தான் அவன் சௌந்தரத்தோடு சற்றுக் கலகலப்பாகக் கதைத்தான் அவன்கூறிய கருத்துக்கள் சில அவளைக் குழப்பின.

"எனக்கு எத்தனையோ கடமைகள் இருக்கின்றன. எனக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்டாத சர்வகலாசாலைப் படிப்பு என் தம்பிமாருக்கும் தங்கைக்கு மாவது கிடைக்க வேண்டும்"

"ஒருவரும் அதைத் தடுக்கவில்லையே" என்றாள் சௌந்தரம்.

ஆனால் பொருளாதார நிலைத் தடுக்கும் ஒரு டாக்டராகிக் கைநிறைய சம்பாதித்தால் அந்தப் பிரச்சனை எழாது. இப்போது நான் ஒரு சாதாரண ஆசிரியன். என்பொருளாதார நிலையைக் கொண்டு தான் என் வாழ்க்கை அமைய வேண்டும்.

"நீங்கள் சொல்வதொன்றும் விளங்கவில்லையே"

"விளங்கிக் கொள்ளாதவரை நல்லது தான்" என்ற தாமோதரம் சற்று யோசித்து விட்டு எதற்கும் இந்த மார்கழி மாதம் எஸ். எஸ். சி. யை எடு".

சௌந்தரம் அவன் சொல்வதைத் தலைகுனிந்தபடி கேட்டபோது அவள் கண்கள் கலங்கின.

அழுது என்ன செய்வது. எனது சகோதரங்களுக்காக நான் என்னுடைய ஆசைகள் சிலவற்றைத் தியாகம் செய்ய வேண்டி இருக்கும். ஆதலால் எந்த நம்பிக்கையையும் மனதிலே வளர்த்துக் கொள்ள வேண்டாம் என்றவன் அதற்கு மேலும் பேச முடியாத வனாய்ச் சென்று விட்டான்.

அவன் வார்த்தைகள் சௌந்தரத்தின் காதுகளில் நாராசமாகப் பாய்ந்தது. மனக் கோட்டைகள் சரிந்து கொண்டி ருந்தன. கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. இதயம் விம்மிப் பெருகியது. கால்கள் நிலைகொள்ளாமல் தள்ளாடி விழுந்து விடுவாள் போலிருந்தது. யன்னற் கம்பிகளைப் பிடித்தபடி வெளியே செல்லும் தாமோதரனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

காலடிச் சத்தம் கேட்டுத் தெய்வானையைக் கண்டபோது அவள் கண்களைத் துடைத்துக் கொண்டாள். அதைக்கண்ட தெய்வானை கேட்டாள் "ஏள் பிள்ளை அழுகிறாய்".

என்ன நினைத்தாளோ தெரியாது. சௌந்தரம் தன்மாமியின் மார்பில் புதைந்து கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

தெய்வானை என்ன நடந்திருக்கும் என்பதை ஊகித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாள். கொஞ்ச நாட்களாகத் தாமோதரத்தின் போக்கை அவள் அவதானித்தே வருகிறாள். சௌந்தரத்தை அவன் அலட்சியப் படுத்தியே வருகிறான். தான் மேலே படிக்க முடிய வில்லையே என்ற ஏக்கமும், மன உளைச்சலும் அவனுக்குள்ளே விசித்திரமான மனச் சிக்கல்களை உண்டாக்கி இருந்தன.

ஒருநாள் அவள் தாமோதரத்திடம் கேட்டாள் "ஏன் நீ மாமா வீட்டுக்குப் போறதில்லை".

"ஏன் போக வேண்டும்? அவர்களுக்கு ஏன் நம்பிக்கையை வளர்க்க வேண்டும்"

"என்னடா இப்படிச் சொல்கிறாய் இதைக் கேட்டால் அண்ணாச்சிக்கு நெஞ்சு வெடிச்சிடும்".

"எதைப்பற்றியும் நான் கவலைப்படல. யார் நெஞ்சாவது வெடிக்கட்டும். என்ர தம்பிமாரையும் தங்கையையும் பற்றித்தான் எனக்குக் கவலை".

"இப்ப என்னடா அவர்களுக்குக் குறை?"

"அம்மா மடத்தனமாப் பேசாதீங்க. அவங்கட நல்வாழ்வுக் காக நான் எப்படி எப்படியெல்லாமோ மாற வேணும்"

"அதுக்காக".

"அம்மா இந்த வயதில அப்பா செத்துப் போவாரென்று நாம் கனவுகூடக் காணல. இது தலைவிதி என்பீங்க. அதுபோலத்தான். நானும் சௌந்தரத்தைக் கல்யாணம் முடிக்காம இருக்கலாம் அதையும் தலைவிதி என்று நினைச்சுக் கொள்ளுங்க அந்த விதியைப் பிரம்மா எழுதல்ல. நான் எழுதிக் கொண்டிருக்கன்".

அத்தியாயம் - 16

தெய்வானைக்கு மகனைப் புரிந்து கொண்டது போலவும் தோன்றிற்று. புரியாமலும் இருந்தது. ஆனாலும் தன் மாமனாருக்கு முன்னால் அவன் பெட்டிப் பாம்பாக அடங்கி விடுவான் என்று எண்ணினாள்.

அவள் மார்பிற் தலையைப் புதைத்துக் கொண்டு விம்மி அழுத சௌந்தரம் தலையை நிமிர்த்திக் கொண்டு "ஏன் மாமி இப்படி எல்லாம் பேசுறார்" எனக்கு வாழ்வே போயிரும் போல இருக்கு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாள் சௌந்தரம்.

"சீ இப்படியெல்லாம் பேசாத அவன் எதையோ நினைச்சுக் கொண்டு, எதையோ சொல்றான். மாமி இருக்க மட்டும் நீ பயப்படாதே".

சௌந்தரம் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு சிரித்தர்ள்.

"மாலை படுற நேரத்தில அழாமப் போய் முகத்தைக் கழுவிக் கொண்டு வா" என்றதும் அவள் கிணற்றடிக்குச் சென்றாள்.

வெளியெ சென்ற தாமோதரம் சௌந்தரத்திடம் ஏன் இத்தனை கடுமையாகப் பேசினோம் என்று நினைத்த போது அவனாற் தாழ முடியவில்லை. பாவம்! அவள் அழுது கொண்டிருப்பாள் என்று எண்ணினான். சில வேளை அம்மாவும் அழுவாள் என்று எண்ணிக் கொண்ட தாமோதரம் மேலே எங்கும் போக முடியாதவனாக வீட்டுக்குத் திரும்பினான். வீட்டிலே விளக்கொளியிற் சௌந்தரத்தின் முகம் பளிச்சென்று மின்னியது. ஆனாலும் அவள் அழுதிருக்கிறாள் என்பதை வீங்கியிருக்கும் அவள் முகம் சொல்லிற்று.

வீட்டுக்குள் வந்த தாமோதரம் அவள் கரத்தைப் பற்றிக் கொண்டு "அழுதாயா?" என்றான். அவள் பட்டென அவன் கரங்களை விலக்கிக் கொண்டு "விடுங்கள் என்னோடு கதைக்க வேண்டாம் என் நம்பிக்கைகளை வளர்க்கவும் வேண்டாம்" என்றாள்.

"இனிமேற் தானா அது வளர வேண்டும்".

"வளர்ந்திருந்ததையும் வெட்டிச் சரித்து விட்டீர்களே அது முருங்கை மரம் போல வெட்ட வெட்டத் தழைக்கும்"

"இன்னமும் வளர்த்துக் கொள்ள நான் முட்டாளுமல்ல, சுயமரியாதை இல்லாதவளும் அல்ல. தயவு செய்துஇனிமேல் என்னிடம் கதைக்க வேண்டாம்"

கோபம் அவள் முகத்தில் செம்மை சோர்த்தது. நீலக் கடலின் ஆழப் பரப்பிலே வட்டப் படகோட்டும் அவள் வண்ண விழிகளை துடிக்கும் அவள் செம்பவள உதடுகளைத் தாமோதரம் பார்த்துக் கொண்டே இருந்தான். தன் வெற்றியை உணர்ந்து கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சௌந்தரம் இந்த வருஷம் எஸ். எஸ். சி. யில நான் நிச்சயமாகப் பாஸ் பண்ணுவன். அதன் பிறகு என்னாலும் சுதந்திரமாக நிமிர்ந்து நிற்க முடியும் என்று ஆத்திரத்தோடு சொல்லி விட்டு வீட்டிற்குச் சென்றாள்.

அவள் பின்னாலேயே சென்ற தாமோதரத்தை "நீ ஏன் ரா அந்தப் பிள்ளையை சுத்திக் கொண்டு திரியிறா?" என்ர அண்ணனுக்கு அவள் ஒண்ணும் பாரமாப் போகல்ல. நீதான் வச்சாக் கொம்பு சிரைச்சா மொட்டை என்று எண்ணிக் கொள்ளாதே" என்று ஆத்திரத்தோடு சொன்னாள் தெய்வானை.

"சரிதான். தாங்கள் பேசியதை எல்லாம் அம்மாவும் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறாள் என்றெண்ணிய தாமோதரம் தலையைக் குனிந்து கொண்டு வீட்டை விட்டு வெளியேறினான்.

மார்கழி மாத முற்பகுதியில் ஆசிரிய கலாசாலைப் பயிற்சிக்கான அழைப்புக் கடிதம் தாமோதரத்திற்கு வந்தது. தாமோதரத்திற்கு அது அத்தனை பிடிப்பாக இல்லை. பட்டதாரி ஆவதைப் பற்றியே அவன் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

ஆனாலும் சின்னத்தம்பி ஆசிரியர் அவனை விடவில்லை. "பட்டதாரியாக ஆவதை விட விஞ்ஞான பாடத்திற் பயிற்றப்பட்ட ஆசிரியராவது மேலானது என்றே எனக்குப் படுகிறது. மேலும் பலாலிக்குச் சென்றால் வெளிவாரிப் பட்டப்படிப்பிற்கும் ஆயத்தம் பண்ணலாம்" என்று அவனுக்கு உபதேசம் செய்தார்.

அவன் உபதேசம் பெறுகையில் சௌந்தரம் கிண்ணியா மகாவித்தியாலயத்தில் எஸ். எஸ். சி. சோதனை எழுதிக் கொண்டிருந்தாள்.

தை பிறந்த போது தாமோதரம் பலாலிக்குப் புறப்பட்டான். மாரி மழையில் கரைச்சைகள் நிரம்பி வழிந்தன. கட்டையாற்று மதகுக்கு மேலால் ஓடைத் தண்ணீர் கரைபுரண்டது. பாடசாலைக்குப் போகும் வழியில் கோணமலைக் கிழவர் வீட்டு நாவல் மரத்தடியில் முழங்காலளவு தண்ணீர் தேங்கி நின்றது. மாரித் தவளைகளின் சத்தம் இரவிலே கர்ண கடூரமாகக் கேட்டது.

யாழ்ப்பாணம் புறப்பட முன்னர் தாமோதரம் தன் மாமனார் வீட்டிற்குப் போனான். செல்லையாவிற்குத், தாமோதரத்திற்கும், தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிற்குமிடையில் ஏற்பட்ட வாக்குவாதமோ தம் மகளின் சபதமோ எதுவுமே தெரியாது. தன் மருமகனை வரவேற்ற அவர் இரண்டு ஆண்டுகள் தானே பாத்திருக்கப் போயிரும் பத்திரமாய் போய்வா தம்பி என்று அவனை வழியனுப்பினார்.

ஆனாலும் தாமோதரம் உடனடியாகப் போய்விடவில்லை.

அவன் சௌந்தரத்தைத் தான் காத்துக் கொண்டு நிற்கிறான் என்பதை உணர்ந்து கொண்ட செல்லையா, அவ்விடத்தை விட்டெழுந்து பின்பக்கமாகச் சென்றார்.

நிமிடங்கள் பல கடந்தும் சௌந்தரம் வரவில்லை. காத்துக் கொண்டிருந்த தாமோதரம் அங்கு தற்செயலாக வந்த தன் தங்கையிடம் "மச்சாள் இல்லியா?" என்று கேட்டான்.

"குசினிக்க இருக்காளண்ணா"

"போய் வரச் சொல்லடி"

"அவ வரமாட்டா அண்ணா. உங்களோட கோபமாம்" என்றாள் இந்திராணி.

தாமோதரம் பின் பக்கமாகச் சென்று அவளைக் கூப்பிடுவமோ என்று எண்ணினான். ஆனாலும் அது அவனுக்குக் கௌரவக் குறைச்சலாகவும் பட்டது.

அவன் யோசித்துக் கொண்டிருக்கையிலே சௌந்தரம் அவன் முன்னாற் பிரசன்னமானாள். ஒரு வார்த்தையும் பேசாதவளாய் அவன் முன் அகோவியமாக நின்றாள்.

"பேசமாட்டாயா?" தாமோதரம் கேட்டான்.

சௌந்தரம் மௌனித்தே நின்றாள்.

அவளது மௌனம் தாமோதரத்திற்கு ஆத்திரத்தைக் கொடுத்தது. இவ்வளவு பிடிவாதமா? என்று சொல்லிக் கொண்டே அவளது கையைப் பற்றினான்.

மாரி காலத்தே மணற் காட்டிலே திடீரென முளைத்த செங்காந்தள் என்று தெரிந்து கொள்ளப் படாமலே சிவந்திருக்கும் கார்த்திகைப் பூப்போன்ற அவள் விரல்களையும் உள்ளங்கை களையும் மெதுவாக வருடினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் அவனைத் தடுக்கவில்லை. அவனது ஸ்பரிசத்தை ரசித்தவளாக அவள் நின்றாள். உதடுகள் அவனோடு ஆயிரம் ஆயிரம் பேசவேண்டும் என்று துடித்தன. ஆனால் வார்த்தைகள் வெளிவரவில்லை.

அவள் என்ன சொல்கிறாள் என்பதை அவள் கண்களிலிருந்து படித்துக் கொண்ட தாமோதரம் அவள் கைகளை முத்தமிட்டுவிட்டு "நான் போய் வருகிறேன்" என்று மட்டும் சொல்லிவிட்டுப் புறப்பட்டான். தெருப்படலை வரை வந்து வழியனுப்பினாலும் சௌந்தரம் தன் வாயைத் திறக்கவேயில்லை.

காலம் ஓடிக் கொண்டிருந்தது. எஸ். எஸ். சி. யிற் திறமையாகச் சித்தியடைந்தாள் ஆனால் அதனைக் கூட, அவள் தாமோதரத்திற்கு அறிவிக்கவில்லை. பாலாதான் அதை அவனுக்கு அறிவித்து அவளுக்கும் விரைவில் ஆசிரியைப் பதவி கிடைக்கும் என நம்பிக்கை தெரிவித்திருந்தான்.

ஆனி பிறந்தபோது வழைமை போல ஆதி கோணை நாயகர் விழாக் கொண்டாடினார். ஆனாலும் தாமோதரத்திற்கு முன்னைப் போல அவ்விழாவிற் சிரத்தை இருக்கவில்லை. பலாலியிலிருந்து அவன் வரவேயில்லை.

ஆடிமாதம் பிறந்த போது ஊரிலே மிக முக்கியமான சம்பவம் ஒன்று நடந்தது. இருபது ஆண்டுகளாகப் பாடசாலைத் தலைமை ஆசிரியராக இருந்த சின்னத்தம்பி ஊருக்கு மாறிப் போக இருந்தார். ஊரோடு மாற்றம் என்ற தமிழாசிரியரின் "ஜீவன் முக்தி" இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் அவருக்குச் சித்தித்தது. அதுவும் பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்ததால்.

அவரது பிரியாவிடை விழாவிற்குத் தாமோதரமும் விடுதலை வாங்கிக் கொண்டு வந்திருந்தான். ஊரே ஒருமித்துத் திரண்டு ஒரு வார காலமாக அவருக்கு ஒரு மாபெரும் பிரியா விடையை விழாவாகவே நடத்திற்று.

அந்தப் பிரியாவிடை விழாவிலே சின்னத்தம்பி ஆசிரியர் "நான் இங்கே வந்தபோது இங்கே நான்கே நான்கு ஆசிரியர்கள். எவருமே ஊரவரில்லை. அன்றைக்கிருந்த ஓலைக் கொட்டிலைக் கற்கட்டிடமாக்கினேன். உங்களின் உதவியுடன் இப்போது இங்கே இரண்டு மண்டபங்கள் இருக்கின்றன. பதின்நான்கு ஆசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறார்கள். எல்லாருமே இவ்வூரவர்கள். அவர்களை உருவாக்க இருபது ஆண்டுகள் எடுத்தன. இன்னும் சில வருடங்களில் இங்கே பல பட்டதாரிகள் இருப்பார்கள். டாக்டரும், எஞ்ஜினியரும் கூட வருவார்கள். ஆசிரியர்கள் மட்டுமல்ல பல உத்தியோகங்களிலும் என் மாணவர்கள் இருப்பார்கள். இந்த நிலையை அடைய இருபது ஆண்டுகள் காத்திருந்தேன். இப் பாடசாலையின் ஆசிரியர்களுக்கும் நான் "காத்திருங்கள்" என்ற மந்திரத்தைத் தான் நான் உபதேசிக் கிறேன். ஆம் காத்திருப்பதிலே தான் இவ்வூரின் முன்னேற்றமே இருக்கிறது. இக்கிராமத்து இளைஞர்கள் காத்திருப்பதில்லை. இளம் வயதிலேயே வாழ்க்கையை அனுபவிக்கத் தொடங்கிக் கஸ்டப்படுகிறார்கள். இதுதான் இவ்வூரின் முக்கிய குறைபாடு என்று கூறினார். அவரின் பேச்சை அவ்வூர் இளைஞர்கள் புரிந்து கொண்டார்கள்.

அடுத்த ஆண்டுத் தொடக்கத்திற் சௌந்தரம் ஈச்சந்தீவு பாடசாலையில் ஆசிரியை ஆனாள். அதன் ஞாபகார்த்தமாகத் தாமோதரம் அவளுக்கு ஒரு நூலைப் பரிசாக அனுப்பியிருந்தான்.

நேருவின் இளைய சகோதரி கிறிஸ்ணாவின் சுய சரித்திரமே அந் நூல். "விதி என்ன செய்யும்" என்ற தலைப்பில் அந் நூல் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருந்தது. அந்நூலின் ஒரு அத்தியாயத்தின் தலைப்பில் இதைக்கருத்தாகப் படிக்கவும் எனத் தாமோதரம் குறிப்பிட்டிருந்தாள். சௌந்தரம் அந்த நூலையும் விஷேடமாக அவன் குறிப்பிட்டிருந்த பகுதியையும் ஆர்வத்தோடு படித்தாள்.

இளைய வயதினளான கிறிஸ்ணா காங்கிரஸ் காரிய கமிட்டிக் கூட்டம் ஒன்றிற்குத் தன் சகோதரனுடன் சென்றிருந்தாள். அங்கே ராஜா ஹத்தி சிங் என்ற இளைஞனைச் சந்திக்கிறாள் அவனைக் காதல் கொள்கிறாள். இருவருமே காதலிக்கிறார்கள்.

ஊருக்கு மீண்ட சில நாட்களில் கிறிஸ்ணா தன் சகோதரனுக்கு தன் மனதைத் திறந்து காட்டினாள். நேருஜிக்கு எவ்வளவோ ராஜ்ய அலுவல்கள். இந்த விவகாரத்தைக் கவனிக்க அவருக்கு நேரமேயில்லை.

சில மாதங்கள் கழிந்த பின்னர் தன் தங்கையிடம் "நான் அவனைப் பற்றி அறிய வேண்டும்" என்று மட்டும் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்ணா இதைத் தன் காதலனுக்கு அறிவித்தாள். ராஜா ஹத்தி சிங் குறும்பன். குறும்புத் தனமாக நேருவுக்குத் தன்னைப் பற்றி எழுதினான். வயது, நிறம், உயரம், நிறை, மார்புச் சுற்றளவு போன்ற விடயங்களைக் குறிப்பிட்ட காதலன் இறுதியில் தொழில் வேலையில்லாத வக்கீலென்றும் இனிச் செய்ய இருப்பது அரசியலிற் சேர்ந்து அலக்கழிவதும் எனக் குறிப்பிட்டிருந்தான்.

இதை வாசித்த நேருவிற்கு மூக்கிற்கு மேலே கோபம் வந்துவிட்டது. இயல்பாகவே அவர் முற்கோபி. தனக்கு வந்த கோபத்திற் தங்கையை அழைத்து இந்தக் குறும்பனுக்கு உன்னை மனைவியாக்க என் சம்மதம் கிடைக்காது, என்று ஆத்திரத்தோடு சொன்னார்.

கிறிஸ்ணா பதட்டமடையவில்லை. ஆத்திரப்படவுமில்லை. அவள் காத்திருந்தாள். ஒன்றிரண்டு ஆண்டுகளல்ல. பன்னிரண்டு ஆண்டுகள் காத்திருந்தாள். கடைசியாய் நேருஜி தன் தங்கைக்கு அவளின் காதலனான அந்தக் குறும்பன் ராஜா ஹத்தி சிங்கையே மணம் முடித்து வைத்தார்.

இதைக் கூர்ந்து படித்த சௌந்தரம் கிருஸ்ணா நேருவால் மட்டுமல்ல என்னாலும் காத்திருக்க முடியும். பன்னிரண்டு ஆண்டுகளல்ல யுகம் யுகாந்திரமாகக் காத்திருக்க முடியும் என இரத்தினச் சுருக்கமாக எழுதித் தன் கடிதத்தை "எற்றைக்கும், ஏழேழ் பிறவிக்கும் உம்மோடு உற்றோமே யாவோம். உமக்கே நாம் அன்பு செய்வோம்" என்ற பாசுர அடிகளுடன் முடித்திருந்தாள்.

பின்னுரை

முப்பது ஆண்டுகள் கடந்துவிட்டன. இப்போது ஆலங்கேணி வெண்மணற் கிராமம் எங்கே? அவ்வூருக்கு அறிவொளி பரப்பிய பாடசாலை எங்கே. அருள் சுரந்த பிள்ளையார் கோயில் எங்கே? நிழல் கவித்து நின்ற பனிச்சை மரம் எங்கே? மாமரங்களும் தென்னைகளும் எங்கே? எருமைப் பாலின் நறுமணம் வீசும் குடிசைகளும் வீடுகளும் எங்கே?

ஆசிரியர்கள் மட்டுமல்ல, பட்டதாரிகள், டாக்டர்கள், எஞ்ஜினியர்கள், கல்வியதிகாரிகள், விவசாயிகள் என்ற எல்லாருமே அந்நிய ஊர்களிலும் அகதி முகாம்களிலும் வாழ்ந்து கொண்டு தங்கள் அழகான வெண்மணற் கிராமத்திற்கு எப்போது செல்வோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று காத்துக் கொண்டிருந்தார்கள்.

ஆம், காத்துக் கொண்டே இருக்கிறார்கள். எப்போ அவர்கள் தங்களது வெண்மணற் கிராமத்துக்குப் போவார்கள் என்பதை அவாகளின் தோற்றாத் துணையான ஆதி கோணை நாயகரே அறிவார்.

குறிப்புகள்

1. இந்த நாவல் வ. அ. இராசரெத்தினம் அவர்களால் எழுதப்பட்டு, 1991 ஆம் ஆண்டு "வீரகேசரி" ப் பத்திரிகையில் தொடராக வெளிவந்தது. பின்னர் 1993 மார்ச்சில் மட்டக்களப்பு "உதயம்" வெளியீட்டு நிறுவனத்தினால் அதன் பதினோராவது வெளியீடாகச் சிறிய அளவில் 116 பக்கங்களில், பதினாறு அத்தியாயங்களாக வெளியிடப்பட்டது.

2. 1960 களின் ஆரம்பத்தில் இந் நாவலாசிரியர் திருகோணமலை மாவட்டத்து ஆலங்கேணிக் கிராமத்தின் றோ.க.த.க. பாடசாலையில் ஆசிரியப் பணியாற்றியவர். அவரது உறவினர்கள் சிலரும் அங்கு வாழ்ந்தனர். மணல் வெளியாக இருந்தாலும் செழிப்பான கிராமம் அது. அங்குள்ள மக்கள் உயிர்த் துடிப்பும், முயற்சியும் உள்ளவர்கள். கிராமத்தினைச் சூழ முஸ்லீம்கள் வாழும் கிராமங்கள் இருப்பினும், அது தமிழ்ப் பாரம்பரியத்தைத் தனித்துவமாகக் காத்து வந்தது. அந்தக் கிராமம்தான் இந் நாவலின் கதை நிகழ்விடமாக விளங்குகிறது.

   ஆலங்கேணிக் கிராமம் கிண்ணியாப் பிரதேச செயலர் பிரிவினுள் அடங்குகிறது. மூதூர்த் தொகுதிக்குரியது. தொன்மையான தமிழ்க் கிராமமாகிய இது, முன்னர் சுமார் எண்ணூறு குடும்பங்களைக் கொண்டிருந்தது. வடக்கேயுள்ள கிண்ணியா விலிருந்து கல் பரப்பி மணலினூடு வீதிகள் செப்பஞ் செய்யப் பட்டுள்ளன. திருகோணமலையிலிருந்து 10 மைல் தொலை விலும், தம்பலகாமத்திலிந்து 5 மைல் தொலைவிலும் இக் கிராமம் அமைந்துள்ளது. பெரிய ஆலமரமும் தாமரைக் கேணியும் இருந்ததால் இப் பெயர் பெற்றதென்பர். இதன் தென்மேற்கில் திருநகர் எனப்படும் பழைய கிராமம் இருந்து அழிந்துள்ளது. அங்கே பாண்டியனாற்றுச் சிவாலயம் இருந்ததற்கான இடிபாடுகள் காணப்படுவதுடன், பல ஆயிரம் ஏக்கர் வயல்களும் இருந்துள்ளன. தற்போது அவ்விடத்தினை தீனேரி என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்பர். அறிஞர்கள், எழுத்தாளர்கள், அண்ணாவிமார், மருத்துவர்கள் எனப் பலராலும் புகழ்பெற்ற ஆலங்கேணிக் கிராமம் உள்நாட்டு யுத்தத்தால் ஏற்பட்ட இடப் பெயர்வினால் அலைக்கழிக்கப்பட்டு, சில ஆண்டுகளாகத் திரும்பவும் பொலிவு பெறத் தொடங்கியுள்ளது.

3. உண்மையான சம்பவங்களுக்குச் சிறிது கற்பனை முலாம் பூசிச் சுவாரஸ்யத்துடன் படைக்கப்பட்டதே இந் நாவலாகும். எண்பது களின் இறுதிப் பகுதியில் நாட்டின் உள்நாட்டு யுத்தம் காரணமாக ஏற்பட்ட அச்சுறுத்தல்களால், ஆலங்கேணிக் கிராமம் புரட்டிப் போடப்பட்டது. மக்கள் அனைவரும் முற்றாக வெளியேறி அகதி முகாம்களிலும், ஏனைய இடங்களிலும் ஏதிலிகளாகத் தங்கியிருந்தனர். நீண்ட பல வருடங்களாக இந் நிலை தொடர்ந்தது. இத்தகைய சூழ் நிலையில் எதிர்பாராத விதத்தில் நாவலாசிரியரை திருகோணமலை நகரத்தில் சந்தித்த பெண்ணொருத்தி - அந்தக் காலத்தில் ஓரளவு வசதியோடு வாழ்ந்தவள்; எட்டாம் வகுப்பு வரை உள்ளூர்ப் பாடசாலையில் படித்துச் சித்தியடைந்தவள்; மேற்கொண்டு படிக்க விடாமல் தந்தை மறித்துப் போட்டார். இந் நாவலாசிரியர் அப்போது எவ்வளவோ அவளது தந்தையிடம் எடுத்துக் கூறியபோதும் அவளைப் பாடசாலைக்குள் அனுப்ப அவர் சம்மதிக்கவில்லை. இப்போது அந்தப் பெண் அழுது கொண்டே "மாமா" என அழைத்து, நாவலாசிரியரிடம் பல விசயங்களைக் கூறியிருக்கி றாள். தனது மாணவியின் துயரக் கதை ஆசிரியர் நெஞ்சைக் கரைத்து விட்டது.

4. அதேபோல் அவள் படித்த பாடசாலையில் நாவலாசிரியரிடம் படித்த மாணவனொருவன் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் படித்தவன். பின்னர் திருகோணமலை மகா வித்தியாலயம் ஒன்றில் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தவன். திடீரென இயற்கை மரணமடைந்து விட்டான். மார்கழி மாத மழை கொட்டிக் கொண்டிருக்கையில் திருகோணமலை மயானத்தில் அவனது சடலம் எரிந்து கொண்டிருப்பதை அவனது ஆசிரியரும், இந்த நாவலின் ஆசிரியருமானவர் கண்டு கண்ணீர் வடித்திருக் கிறார். இந்த இரு சம்பவங்களுமே மனதை உறுத்திக் கொண்டிருந்ததால் "ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது" என்னும் நாவலை எழுதத் தொடங்கியதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலாசிரியர் நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

5. 1960 களிலுள்ள ஆலங்கேணிக் கிராமத்தை அழகாகப் படம் பிடித்துக் காட்டிய திருப்தி நாவலாசிரியருக்குள்ளது போல், வாசகர்களுக்கும், ஏற்படுகிறது. பிரசுரங்களின் நிர்ப்பந்தம் காரண மாகவும், நாவல் சிறியதாய் அமைய வேண்டும் என்ற காரணத்தி னாலும் நாவலின் கதை சுருக்கமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது. இருந்தும் இந் நாவலின் இரண்டாம், மூன்றாம் பாகங்கள் தொடரப்பட வேண்டும் என்ற நூலாசிரியரின் விருப்பம் நிறைவேற வில்லை.

6. இந்த நாவல் வ. அ. இராசரெத்தினத்தின் நான்காவது நாவலாகும். அவரது 68 ஆவது வயதில் எழுதப்பட்டது கதை நிகழ்ந்த காலத்துக்கும், கதை சொல்லப்பட்ட காலத்துக்கும் இடையில் 33 வருட இடைவெளி காணப்பட்டது.

7. "மாக்ஸிம் கோர்க்கியின் "தாயை"ப் போல, இந்திரா பார்த்த சாரதியின் "குருதிப் புனல்" போல, தகழியின் செம்மீனை"ப் போல படைக்க வேண்டுமென்ற ஆவலாலோ என்னவோ வ. அ. இந்த நாவலில் ஆலங்கேணிக்கிராமத்தில் வாழுகின்ற மனிதர்களின் தனிமனித உணர்வுகளை வடிப்பதில் காட்டிய நாட்டம் நாவலுக் குப் பொருத்தமாக இல்லாவிட்டாலும் கூட, அந்தக் கிராமத்தின் அடிப்படைப் பிரச்சினைகள், போராட்டங்கள், வாழ்க்கை முறை கள் ஆகியவற்றை அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சொல்லி யிருப்பது நாவலுக்கு அழகு தருகிறது".

இவ்வாறு திருமலை நவம் எழுதிய "திருகோணமலை கலை, இலக்கிய வரலாறு" (2012) நூல் கூறியுள்ளது.

8. ஆலங்கேணிக் கிராமம் இயற்கை அழகு மிக்கது. எருமை மாடுகள் அடைக்கும் பட்டிகள், கரைச்சை வெளிகள், கண்டற் காடுகள், உப்பு வெளிகள் ஆகியவற்றுடன், குடங்களில் தண்ணீர் எடுத்து வந்து ஊற்றி வளர்க்கும் மரக்கறிப் பயிர்களையும், வற்றாளை முதலான கிழங்கு வகைகளையும் கொண்டதான வீட்டுத் தோட்டங்கள் ஆகியவற்றையும் இயல்பான முறையில் இந் நாவலில் தரிசிக்க முடிகிறது.

9. வீடுகளிலிருந்து புறம்பான இடங்களில் வயல்கள் பெருமளவில் இருப்பதையும், கால போகங்களில் அவை பயிர் செய்யப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுவதையும், கிராம மக்களின் ஜீவாதாரத் தொழிலாக விவசாயமே விளங்குவதையும் நாவல் சுட்டிக் காட்டுகிறது.

10. பெண், பெரியவளானதும் தொடர்ந்து படிப்பதை அதிகமான பெற்றோர் விரும்பாததையும், அவளின் பாதுகாப்புக் கருதிப் பாடசாலை செல்ல விடாது மறித்து விடுவதையும் இந் நாவல் காட்டுகிறது. இதனால் பெண் கல்வி பற்றிய அக்கறை இந் நாவலில் பெரிதாகப் பேசப்பட்டுள்ளது.

11. "ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது" என்ற நாவலின் பெயருக்கு மிகப் பொருத்தமான முறையில் மூன்று காத்திருப்புக்கள் நாவலின் முடிவில் வெளிப்படுத்தப் பட்டுள்ளதை ஊகிக்க முடிகிறது.

அ. தங்கள் காதல் நிறைவேறுவதற்காகத் தாமோதரமும், சௌந்தரமும் ஆசிரியர் பதவியில் இருந்தவாறு காலத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

ஆ. ஆலங்கேணிக் கிராமப் பாடசாலையில் கற்றவர்கள் ஆசிரியர்களாகிக் கிராமத்துப் பிள்ளைகளினதும், கிராமத் தினதும் வாழ்வுக்கு கல்வி ஒளி கொடுப்பதற்காகச் சுமார் இருபது ஆண்டுகள் தலைமை ஆசிரியர் சின்னத்தம்பி அர்ப்பணிப்புடன் காத்திருந்தார். அதன் பயனாகச் சிலர் ஆசிரியராகி விட்டனர். மேலும் பலரை எதிர்பார்த்து அந்த மிஷன் பாடசாலை காத்திருக்கிறது.

இ. இந் நாவல் எழுதப்பட்ட காலச் சூழ்நிலைக்குப் பொருத்த மாக, நாவலினூடு எடுத்துக் காட்டப்படாவிட்டாலும், அகதி களாகிக் கிராமத்தை விட்டு முற்றாக வெளியேறிப் பல ஆண்டுகளாக அகதி முகாம்களிலும் வேறு இன்னோரன்ன இடங்களிலும் வாழும் ஆலங்கேணி மக்கள் தங்கள் சொந்த ஊருக்குத் திரும்பும்" நல்ல நாளையும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர் எனக் கருதவும் முடிகின்றது.

12. நாவலின் பிற்பகுதி திடீரென முடிவடைந்தது போன்றிருக்கிறது. சுருக்கமாகக் கதை கூறப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. நிர்ப்பந்தம் இல்லாதிருப்பின் நாவல் இன்னும் விரிவடைந் திருக்கக் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைச் சுருக்கம்

ஆலங்கேணிக் கிராமத்தைச் சேர்ந்த தாமோதரம் என்ற மாணவன் உள்ளூர்ப் பாடசாலையில் கல்வி கற்று, எட்டாம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து நெல்லியடியைச் சொந்தவூராக உடைய தலைமை ஆசிரியர் சின்னத் தம்பியால் அவனது எதிர்கால நன்மை கருதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கற்கும் பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டான். இப்போது அவன் சர்வகலாசாசாலைப் புகுமுக வகுப்பின் விஞ்ஞானப் பிரிவில் இறுதியாண்டு மாணவன். எதிர்வரும் ஆவணி மாதத்தில் ஏ. எல் சோதனை எடுக்க வேண்டியவன். சித்திரை லீவு விடுவதற்கு சில நாட்கள் முன்னரே சோதனை முடிந்தவுடன் அவர்களது வகுப்பு மாணவர்களை லீவில் அனுப்பி, பாடசாலை தொடங்குவதற்கு ஒரு கிழமைக்கு முன்னதாக வருமாறு பணிக்கப்பட்டதன் பிரகாரம் ஊருக்குந் திரும்பியிருந்தான். அவனது தந்தை மயில்வாகனத்தின் அன்றாட முக்கியமான வேலை, மாலையில் காவுதடியுடன் சில மைல்கள் தாண்டி எருமை மாடுகள் அடைக்கும் பொன்னாங்காணிப் பட்டிக்குச் சென்று இராத் தங்கி, காலையில் பாற்குடங்களுடன் காவுதடி சுமந்து பகல் பத்து மணியளவில் வீடு வந்து சேர்வதாகும். தாயார் தெய்வானை, வீட்டு வேலைகளுடன், தயிரைப் பேணிகளில் அடைத்து விற்பதற்குத் தயாராக வைக்கும் வேலையையும் கவனிப்பார். தனது விருப்பப்படி சின்ன வயதிலேயே திருமணம் முடித்த அண்ணன் நாகேந்திரம், காலையில் நேரத்துடன் தனது வீட்டில் இருந்து வந்து, தாயார் ஒழுங்கு படுத்தி வைத்திருக்கும் தயிர்ப் பேணிகளைக் காவுதடியில் எடுத்துச் சென்று திருகோணமலைப் பட்டினத்தில் விற்று விட்டு மாலையில் திரும்புவதை வாடிக்கையாகக் கொண்டவன்.

ஊருக்கு வந்த தாமோதரம், பக்கத்து வீடாகிய மாமன் வீடு செல்லாமல் பாடசாலைக்குச் சென்று தலைமை ஆசிரியருடன் அளவளாவுகையில் தனது மச்சாள் செளந்தரம் பாடசாலைக்க வருவதில்லை என்றும், எட்டாம் வகுப்புடன் தகப்பன் செல்லையா மறித்துப் போட்டார் என்றும் அறிந்து வேதனைப் பட்டான். ஊரவர்களின் அறியாமையை எண்ணி விசனப்பட்டான். தனது மச்சாளுடனான சிறு வயது ஞாபகங்களை மீட்டிப் பார்த்து மன மகிழ்ச்சி கொண்டான். மாமன் வீடு சென்று மச்சாள் செளந்தரத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை செல்லுமாறு வற்புறுத்தினான் "உங்க மாமாவிடம் சொல்லுங்க" என்று சௌந்தரம் கூறினாள். இடையில் சினேகிதர் கள், பூட்டன் கோணமலையார் ஆகியோரைச் சந்தித்தான். எம். பி. யை வரவேற்கும் கூட்டத்திற்கும் சென்றான். அண்ணனின் விருப்பப்படி தம்பலகாமம் கோணேஸ்வரர் கோயிலுக்கும் சென்று வந்தான். இதன் பிறகு நெல்லியடிப் பாடசாலைக்கும் திரும்பியி ருந்தான். இறுதிப் பரீட்சைக்குச் சில நாட்கள் முன்னதாகத் தகப்பன் மயில்வாகனம் திடீரென இறந்த செய்தி, அப்போது நெல்லியடியில் இருந்த சின்னத்தம்பி மாஸ்டருக்குக் கிட்டியபோது, தாமோதரத் துக்குத் தெரிவிக்காமலேயே அவனையும் ஊருக்கு அழைத்து வந்து, தந்தையாரின் இறுதிச் சடங்குகளில் அவனைக் கலந்து கொள்ளச் செய்தார். மீண்டும் பாடசாலை திரும்பியவனாய் எதிர்பார்த்தபடி சோதனை செய்ய மனம் இடம் தரவில்லை. பரீட்சை முடிந்து ஊர் திரும்பியவன், தான் கற்ற பாடசாலையில் சின்னத்தம்பி மாஸ்ரரின் விருப்பப்படி தற்காலிகமாகக் கற்பித்தான். பரீட்சையில் சாதாரண சித்தியே கிடைக்கப் பெற்றது. தாய், தம்பிமார் இருவர், தங்கை ஆகியோரைக் காப்பாற்ற வேண்டிய நிலை. மச்சாள் சௌந்தரத் துடன் பழகுவதைக் குறைத்துக் கொள்ள விரும்பினான். அவளது ஆசையை வளர்க்க விரும்பவில்லை. நாளடைவில் அரசாங்கம் பாடசாலைகளைச் சுவீகரித்தது. எம். பி. யின் உதவியினாலும், சின்னத்தம்பி மாஸ்ரரின் செயற்பாட்டினாலும் தாமோதரம் விஞ்ஞான ஆசிரியர் உத்தியோகம் பெற்று முதலில் சுங்கான் குழிப் பாடசாலை யிலும் பின்னர் ஊர்ப் பள்ளிக் கூடத்திலும் விஞ்ஞான ஆசிரியனா னான். பட்டதாரியாக வேண்டும் என்பதிலும் பார்க்கப் பயிற்றப்பட்ட ஆசிரியராவது நல்லது என்பதை உணர்ந்த சின்னத்தம்பி ஆசிரியர், அவனைப் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு விண்ணப்பித் துப் போகும்படி கூறினார். தாமோதரம் பலாலியில் ஆசிரிய பயிற்சிக்குப் புறப்படும் போது சௌந்தரத்தைச் சந்தித்து விட்டுத் தான் வந்தான். இதற்கிடையில் சௌந்தரமும் கிண்ணியாப் பாடசாலை யில் எஸ்.எஸ்.சி. எழுதிச் சித்தி பெற்று விட்டாள். விரைவில் அவளுக்கும் ஈச்சந்தீவுப் பாடசாலையில் ஆசிரிய நியமனம் கிடைத்தது. பலாலியில் இருந்து தாமோதரம் அவளுக்கு நேருவின் தங்கை கிருஷ்ணா, தன் காதலுக்காகப் பன்னிரு வருடங்கள் காத்திருந்த செய்தியைக் கூறும் "விதி என்ன செய்யும்" என்ற நூலை அன்பளிப்பாக அனுப்பியிருந்தான். கிருஷ்ணா என்ன? நானும் பன்னிரண்டு ஆண்டுகளல்ல, எத்தனை யுகங்களாயினும் காத்திருப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேன் எனச் சௌந்தரமும் கடிதம் எழுதித் தாமோதரனுக்கு அனுப்பி வைத்தாள். சௌந்தரம், தாமோதரம் இருவரும் தமது காதல் நிறைவேறக் காலத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். இதுவே இந் நாவலின் கதைச் சுருக்கமாகும்.

கதைக்கரு

பின்தங்கிய கிராமமொன்றின், ஏழை விவசாயக் குடும்பமொன்றில் பிறந்து வளர்ந்த ஒருவன், கல்வியின் மூலம், தான் எதிர்பார்த்த இலக்கினை அடைய முடியாவிட்டாலும், குறைந்தது உள்ளூர்ப் பாடசாலை ஆசிரியனாகிவிட்ட நிலையில், தனது குடும்பப் பொறுப்பின் காரணமாகச் சொந்த மச்சாள் மீதான காதலை உள்ளூர மறைத்துக் கொண்டு, அவளுடன் ஒதுங்கி நடக்க விரும்பிய போது, அவளும் இடையிலே தடைப்பட்ட தனது கல்வியைத் தொடர்ந்து எஸ்.எஸ்.ஸி. பரீட்சையெடுத்துச் சித்தி பெற்று, நாளடைவில் ஆசிரியையாகிய போதிலும், காதலரிருவரும் தங்கள் காதல் நிறைவேற இன்னமும் காலத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பதே இந் நாவலின் கதைக் கருவாகும்.

கதைக்களம்

இந் நாவலின் பிரதான கதைக்களமாக ஆலங்கேணிக் கிராமம் விளங்குகின்றது. அதனுடன் தொடர்புபட்டனவாகத் தம்பல காமம், நெல்லியடி ஆகிய இடங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

கதா பாத்திரங்கள்

நாவலின் பிரதான கதாபாத்திரமாக தாமோதரம் விளங்கு கின்றான். அவனது சொந்த மாமன் மகள் சௌந்தரம், தாமோ தரத்தின் தாய், தந்தையர்களாகிய மயில்வாகனம், தெய்வானை ஆகியோர், தாமோதரத்தின் அண்ணன் நாகேந்திரம், தாமோதரத் தின் தாய் மாமனும் மாமியுமாகிய செல்லையா, அபிராமி, ஆகியோர், உள்ளூர்ப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் சின்னத்தம்பி, தாமோதரத்தின் நண்பன் பாலன், பாலனின் மச்சாள் இலட்சுமி, தாமோதரத்தின் தாய்வழிப் பூட்டன் கோணமலைக் கிழவன், சிகையலங்கார நிலையம் நடத்தும் பரமன், பரமனின் நண்பர்களான சின்னவன், தங்கராசன், போடிங்கில் இருந்து படிக்கின்ற தம்பலகாமத்து மனோனன்மணி ஆகியோர், தாமோதரத்தின் தம்பலகாமத்து மாமியார் இராசம்மா, மச்சான் தம்பிராசா, பெரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமா ஆகியோர், வேதக்கார இங்கிலீஸ் வாத்தியார், தாமோதரத்தின் தம்பிமார் இருவரும், தங்கை, அம்பலவாணன், பிரதேசப் பாராளுமன்ற உறுப்பினர், தம்பலகாமத்து மாமா வீட்டு வயலில் வேலை செய்யும் வேலையாள் ஆகிய கதாபாத்திரங்களில் அதிகமானவை முக்கியத்துவம் குறைந்த, கதைத் தொடர்புக்கு ஏற்றவையாகக் காணப்படுகின்றன.

கதாபாத்திரங்களின் குணாம்சங்கள்

அ. தாமோதரம்

நாவலின் பிரதான கதாபாத்திரமாகத் திகழ்பவன். எட்டாம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வி கற்றவன். உயர்தர விஞ்ஞானப் பிரிவில் இறுதியாண்டுப் பரீட்சைக்குத் தயாரான வேளையில் தந்தை இறந்தமையால் சோதனையைச் சரிவர எழுதாமல் சாதாரண சித்தி பெற்றவன். டாக்டராகவோ, விஞ்ஞானப் பட்டதாரியாகவோ வர வேண்டுமென்ற ஆசை பொய்த்து விட்ட போதிலும் விஞ்ஞான ஆசிரியராகித் தான் கற்ற பாடசாலையிலேலே கற்பிக்கத் தொடங்கியவன். தனக்குக் கிட்டாத பட்டதாரியாகும் வாய்ப்புத் தம்பிமார், தங்கை ஆகியோருக்குக் கிட்ட வேண்டுமென்று நினைத்துப் பாடுபடுபவன். குடும்பத்தவர் மீது பற்றும் பாசமும் உள்ளவன். அண்ணனின் கஷ்டமான வாழ்க்கை பற்றிக் கவலைப்படுபவன். தலைமையாசிரியர் சின்னத் தம்பியைத் தெய்வமாகப் போற்றுவதுடன், அவர் சொற்படி நடப்பவன். அண்ணனின் விருப்பத்தை நிறைவேற்றத் தம்பலகாமம் கோணேசர் கோயில் சென்று வழிபட்டவன். அங்குள்ள மாமா வீட்டுக்கும் சென்று வந்தவன். நண்பர்களின் விருப்பப்படி எம். பி. யின் வரவேற்பு ஏற்பாடுகளில் கலந்ததுடன், கிராமத்து அவசியமான தேவைகளையும் எடுத்துக் கூறியவன். பக்கத்து வீட்டு மாமாவின் மகளான மச்சாள் சௌந்தரத்துடன் சிறுவயதிலிருந்தே பழகிப் பெரியவனாகியதும் இருவரும் காதலர்களாகி, அவள் பற்றிய கனவுகளிலும் கற்பனைகளிலும் சிறகடித்துப் பறந்தவன். அவளின் கையைப் பற்றினாலும், காதல் கதைகள் பேசினாலும் எல்லை தாண்டாத பண்புடன் நடந்து கொண்டவன். தந்தையின் எதிர்பாராத மறைவினால் குடும்ப நிலையைக் கருத்திற் கொண்டும், தங்களிலும் பார்க்க ஓரளவு வசதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய வாழ்க்கை உடையவர்களான தாய் மாமன் குடும்பச் சூழலை நினைத்தும், தனது ஆசைகளை அடக்கி மறைத்துக் கொண்டு, மச்சாள் மீதான பழக்கத்தைக் குறைத்து ஒதுங்க நினைத்தவன். அவளது ஆசைகளை வளர்க்கக் கூடா தென்று கருதியவன். பெண்கள் அதிகம் படிக்கக் கூடா தென்ற கிராமத்தவர் மூடக் கொள்கைளை விரும்பாதவன். அவளை ஏற்கெனவே நிறுத்திவிட்ட படிப்பைத் தொடருமாறு வலியுறுத்தியவன். நண்பன் பாலா, அவளது மச்சாள் இலட்சுமி மீது சுமத்திய வீணான குற்றச்சாட்டை மறுத்து அவனைத் திருந்தச் சொன்னவன். தமிழரசுக் கட்சிப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுழைத்தவன். சின்னத்தம்பி ஆசிரியரின் அறிவுரைப் படி பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெறும்போது, சௌந்தரமும் எஸ்.எஸ்.சி. பரீட்சை எழுதிச் சித்தி பெற்றதுடன், ஆசிரியை ஆகியதும் அறிந்து மகிழ்ந்தவன். சின்னத்தம்பி ஆசிரியரின் பிரியாவிடைக்கு வந்தபோது அவர் பேசிய பேச்சின் உட்பொருளை நன்கு விளங்கிக் கொண்டவன். பலாலி பயிற்சிக் கலாசாலை யிலிருந்து, காதலர்கள் பல வருடங்கள் காத்திருத்தலை நேருவின் தங்கை கிருஷ்ணாவின் காதல் அனுபவமாகக் கூறும் "விதி என்ன செய்யும்" நூலினை தனது காதலி சௌந்தரத்துக்கு அனுப்பி வைத்தவன்.

ஆ. சௌந்தரம்:

தாமோதரத்தின் தாய் மாமன் மகள்; பக்கத்து வீடு; தாமோதரம் குடும்பத்திலும் பார்க்க வசதி கூடிய வாழ்க்கை; தாமோதரத்திலும் ஒரு வயது குறைந்தவள். தாமோதரத் துடன் சிறு வயதிலிருந்தே அன்பாகப் பழகியவள். அவன் நெல்லியடியிலே ஏ. எல். படித்துக் கொண்டிருக்கும் போது எட்டாம் வகுப்புடன் பள்ளிக்குச் செல்ல விடாது தந்தையால் மறிக்கப்பட்டவள். இதனால் வருத்தப்பட்ட தாமோதரம் அவளைப் பள்ளி செல்லுமாறு சொல்ல, "மாமாவிடம் சொல்லுங்கள் என்றவள்". தாமோதரத்தின் மீது காதல் கொண்டவள். அவனையே நம்பியிருந்தவள். அடிக்கடி பக்கத்து வீடு சென்று மாமிக்கு ஒத்தாசை புரிபவள். தாமோதரம் விடுமுறையில் வந்த அன்று வீதியால் செல்லும் போது தன்னைப் பார்க்க வராமையால் அவனையே மறைவாகப் பார்த்த படி கண் கலங்கி நின்றவள். எம். பி. யை வரவேற்பதற்காக அவனது விருப்பப்படி மாலை கட்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தவள். "வாருங்கள் அத்தான்" என்று அவனை உரிமையோடு அழைப்பவள். "நான் உங்களுக்குத் தான் ராணி" என்று சொல்லி அவனுக்கு முன்னால் நாணிக் கண் புதைத்தவள். தாமோதரம் தம்பலகாமம் சென்றதை எண்ணி மனம் சஞ்சலப் பட்டவள். திருகோணமலை சண்முக வித்தியாலயத்தில் போடிங்கில் இருந்து படிக்கும் மனோன் அக்கா வீட்டுக்கு வந்திருப்பா; அவவைப் பார்க்கத் தான் இரகசியமாய்ப் போயிருப்பார் என்று சந்தேகப்பட்டவள். ஏனெனில், தான் பள்ளிக்குப் போகாதது குறித்தும் என்மேல் அவருக்குக் கோபம் என நினைத்தவள். அழுது என்ன செய்வது? எனது சகோதரங்களுக்காக நான் எனது ஆசைகள் சிலதை தியாகம் செய்யவேண்டியிருக்கும் ஆதலால் எந்த நம்பிக்கையையும் வளர்த்துக் கொள்ள வேண்டாம் என்று தாமோதரம் கூறியபோது மிகுந்த வேதனையுடன் மாமியாரைக் கட்டிக் கொண்டு அழுதவள். இருந்தும் ஆசிரிய பயிற்சிக்காகப் பலாலி செல்லும் போது தன்னிடம் வந்து சொல்லிவிட்டுத் தாமோதரம் போனதால் மனத் திருப்தியும் அடைந்தவள். தாமோதரம் அனுப்பிய நூலைப் படித்த பின் "கிருஷ்ணா நேருவால் மட்டுமல்ல, என்னாலும் காத்திருக்க முடியும், பன்னிரண்டு ஆண்டு களல்ல, யுகம் யுகாந்திரமாகக் காத்திருக்க முடியும்" என அவனுக்குப் பதிலனுப்பியவள்.

இ. தலைமை ஆசிரியர் சின்னத்தம்பி:

யாழ்ப்பாணத்து நெல்லியடியைச் சேர்ந்தவர். பிறவிச் சைவர், மட்டக்களப்பில் ஆசிரிய பயிற்சியை முடித்த பின் ஆலங்கேணிக்கு ஆசிரியராக வந்து ஐந்தாண்டுகள் கற்பித்த பின், தலைமை ஆசிரியராகி, அர்ப்பணிப்புடன் இரவு, பகல் பாராது மாணவர்களுக்கு ஆங்கிலம் உட்படப் பாடங்களைக் கற்பித்தவர். 20 ஆண்டுகள் இப் பாடசாலையோடு தன்னைப் பிணைத்திருந்தவர். தனது ஊர்ப் பாடசாலையில் உயர் கல்வி கற்க தாமோதரத்தை அனுப்பி வைத்தவர். சில வேளை களில் தனது வீட்டிலிருந்தும் அவன் பாடசாலை சென்று கற்க உதவியவர் (போடிங் மூடப்பட்ட வேளை). தனது பாடசாலை மாணவர்கள் ஆசிரியராக வந்து, கல்வி கற்பிப் பதற்காக இருபது ஆண்டுகள் காத்திருந்தவர். தாமோதர மும் சௌந்தரமும் ஆசிரியப் பணியில் ஈடுபடுவதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சி அடைந்தவர். தாமோதரத்தை விஞ்ஞான ஆசிரியப் பயிற்சிக்காகப் பலாலிக்கு அனுப்பி வைத்தவர். அவன் மீது கூடிய கரிசனை கொண்டவர். தாமோதரத்தின் தந்தை இறந்த செய்தியை அறிந்து அவனைக் கூட்டி வந்தவர். அவன் சோதனை எழுதுதல் தடைபடாமல் கவனித்துக் கொண்டவர். தனது செல்வாக்கினால் தாமோதரத்துக்கு ஆலங்கேணிப் பாடசாலைக்கு மாற்றம் பெற்றுக் கொடுத்த வர். ஊரவர்களின் நம்பிக்கைக்கும் விசுவாசத்திற்கும் உரியவர். ஊரோடு மாற்றம் பெற்றுச் செல்கையில் ஆலங் கேணி மக்களால் தமக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடை வைபவத்தில் "நான் இங்கே வந்த போது இங்கே நான்கு ஆசிரியர்கள், எவருமே ஊரவர்கள் இல்லை, அன்றைக்கு இருந்த ஓலைக் கொட்டிலைக் கற்கட்டிடமாக்கினேன். உங்களின் உதவியுடன் இப்போது இங்கே இரண்டு மண்டபங்கள் இருக்கின்றன. பதினான்கு ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். எல்லோருமே இவ்வூரவர்கள். அவர் களை உருவாக்க இருபது ஆண்டுகள் எடுத்தன. இன்னும் பல வருடங்களில் இங்கே பல பட்டதாரிகள் இருப்பார்கள். டாக்டரும் எஞ்சினியரும் கூட வருவார்கள். ஆசிரியர்கள் மட்டுமல்ல பல உத்தியோகங்களிலும் என் மாணவர்கள் இருப்பார்கள். இந் நிலையை அடைய இருபது ஆண்டுகள் காத்திருந்தேன். இப் பாடசாலையின் ஆசிரியர்களுக்கும் நான் "காத்திருங்கள்" என்ற மந்திரத்தைத் தான் உபதேசிக் கின்றேன். ஆம், காத்திருப்பதிலே தான் இவ்வூரின் முன்னேற்றமே இருக்கிறது. இக் கிராமத்து இளைஞர்கள் இளம் வயதிலேயே வாழ்க்கையை அனுபவிக்கத் தொடங் கிக் கஷ்டப்படுகிறார்கள். இது தான் இவ்வூரின் முக்கிய குறைபாடு" என்று பேசி விழிப்புணர்வைத் தூண்டியவர்.

ஈ. தெய்வானை :

கணவர் மயில்வாகனம், ஐந்து பிள்ளைகள், உறவினர்கள், ஊரவர்கள் என அனைவருடனும் அன்பும், பண்பும் கொண்டு வாழும் இடைவிடா முயற்சியுள்ள இல்லத் தலைவி. பாலைக் காய்ச்சி உறையிடலும் தயிரினைப் பேணிக்குள் அடைத்து விற்பனைக்குத் தயாராக மூத்த மகனிடம் கொடுத்து விடுவதும், கணக்கு வழக்குகளைச் சரிபார்ப்பதும் அவரின் முக்கிய வேலை. தனது அண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகள் சௌந்தரத்திடம் வலு பிரியம். தாமோதரம் அவளை மணம் செய்ய வேண்டுமென்ற ஆவலும் உண்டு. கணவர் இறந்த துயரத்தையும் தாங்கிக் கொண்டு பிள்ளைகளையும் பாதுகாத்தவர். சௌந்தரத்தைத் தாமோதரம் புறக்கணிப் பதைப் பொறுக்காமல் அவனை ஏசியவர். மூத்த மகனின் கஷ்டமான குடும்ப நிலைக்காக வருந்துபவர்.

உ. மயில்வாகனம்:

குடும்பத் தலைவரான மயில்வாகனம் ஐம்பது வயதுடையவர். ஊருக்கு ஏற்றாற் போல் எருமை மாடுகளை வளர்த்தும், வயல் செய்தும் வருபவர். மாலையில் காவுதடி யுடன் பல வெளிகளைத் தாண்டிப் பொன்னாங்காணிப் பட்டிக்குச் சென்று இரவு முழுவதும் அங்கு தங்கி நுளம்புகளுடன் போராடி, காலையில் பால் கறந்து குடங்களில் நிரப்பிக் காவுதடியில் கொழுவிக் காவிக் கொண்டு பகல் பத்து மணியளவில் வீடு வந்து சேருவது அவரது வழமை. சில வேளைகளில் அவரது காவுதடி, வேட்டையாடப்பட்ட மிருகங்களின் இறைச்சியையும், வற்றிய குளத்துச் சுங்கான் போன்ற நன்னீர் மீன்களின் புகையூட்டப் பட்ட கருவாட்டினையும் சுமந்து வரும். தாமோதரத்திற்கு உயர்தர வகுப்புக்கான இறுதிப் பரீட்சை நெருங்கிய வேளையில் திடீரென இறந்து போனவர். "முந்த நாள்ப் பின்னேரம் பெருவெளியில் இருந்து வந்தவர், இரண்டு மூன்று நாட்களில் வேளாண்மை வெட்ட வேண்டும் எனச் சொன்னவர், காலையில் நெஞ்சு நோகுது எண்டவர், கிண்ணியா ஆஸ்பத்திரிக்குக் கூட்டிப் போகமுன் இறந்து போனார்" என மனைவி தெய்வானை மகன் தாமோதரத்துக் குக் கூறி அழுததன் மூலம் அவரது திடீர் மரணம் குடும்பத் தினரைப் பாதிக்கச் செய்துள்ளது.

ஊ. நாகேந்திரம்:

தம்பி தாமோதரத்தின் மீது பாசமுள்ளவன். தாயாரிடம் தயிர்ப் பேணிகளைப் பெற்றுக் காவுதடியில் சுமந்து, திருகோணமலைப் பட்டினம் சென்று விற்றுவிட்டு மாலை திரும்புபவன். சின்ன வயதிலேயே, அதாவது இருபத்தொரு வயதுக்குள் தங்கள் சாதியில் குறைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணைத் திருமணஞ் செய்து கொண்டு தனிக் குடித்தனம் நடத்துபவன். காணி பூமியற்ற கஷ்டமான வாழ்க்கை தான். தகப்பன் இறந்த துன்பத்தால் வருந்திய தம்பியை "எல்லாத்துக்கும் அண்ணா இருக்கேண்டா. நீ தைரியமாகப் போ" எனத் தைரியம் கூறி அனுப்பி வைத்த வன். தம்பி டாக்டராக வரவேணுமென்று தம்பலகாமம் கோணே சருக்கு நேர்த்தி வைத்து வருடா வருடம் காவடி எடுப்பவன். தம்பி ஊருக்கு வந்த போது, அவனால் திரு விழாவுக்கு வர முடியாதென்பதை அறிந்து, கோவிலுக்குப் போய்க் கும்பிட்டு வருமாறு 20 ரூபாய்களைக் கொடுத்து விட்டுச் சென்றவன்.

எ. சலூன் காரப் பரமன்:

உள்ளூர் வாசிகசாலைக்குச் சில யார்கள் எதிர்த் திசையில் சலூன் வைத்து நடத்துபவன். தாமோதரத்தின் நண்பன். வாசிகசாலையில் எம்.பி. யை வரவேற்பது தொடர்பாக நடைபெற்ற இளைஞர்கள் கூட்டத்தில் "நம்ம வாசிகசாலைக்கு ஒரு நல்ல கட்டிடம் வேணும்" என்றவன். எம்.பி.யின் வரவேற்பு ஆடம்பரமாக அமைய வேண்டு மென்று விரும்பியவன். பூமாலை, மேடை, லவுட் ஸ்பீக்கர் கொண்டதான விழாவை எதிர் பார்த்தவன். கூட்டத்தில் பங்கு பற்றியவர்களுக்காக வேலும் மயிலும் கடையிலிருந்து சோடாப் போத்தல்கள் வாங்கி வந்து குடிக்கக் கொடுத்தவன்.

ஏ. பாலா:

தாமோதரத்தின் சினேகிதன். புதுவருடச் சாட்டில் நண்பர்களுடன் சேர்ந்து சாராயம் குடிப்பவன். தனது மச்சாள் இலட்சுமி, மேலும் பள்ளிக்குச் சென்று படிப்பதை விரும்பாதவன் "எனர மச்சாள் லட்சுமிக்கும் மட்டக்களப்பு வேதக்கார இங்கிலிஷ் வாத்திக்கும் லவ்" என அவதூறாகக் கூறியவன். தான், பள்ளிக்குப் போக வேண்டாம் என்று சொல்லியும், தன்னை மதிக்காமல் லட்சுமி பள்ளிக்குப் போவதாகவும், அதற்குக் காரணம் "லவ்" தான் எனவும் சொல்லியவன். மேலும், அவள் படிச்சு வாத்தியாராய்ப் போனாளெண்டாப் பின் அவளுக்கு ஒரு வாத்தி மாப்பிள்ளை தான் தேவைப்படும் எனக் கருதியவன். இருந்தும் அவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு வேணும்; விசயம் பொய்தான்; இப்படிக் கதை கட்டி விட்டாத்தான் அவள் பாடசாலைக்குப் போக மாட்டாள். எனவும் கூறியவன். சௌந்தரம் படிப்பை நிறுத்திய விசயத்தைப் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த தாமோதரத்துக்கு முதலில் தெரிவித்தவனும் இவனேதான். தாமோதரத்தின் தந்தை இறந்த பின் அவனுக்கு வழிகாட்டிய வன். புதிதாகக் கட்டிய பாடசாலைகள் சிலவற்றை அரசாங்கம் எடுக்கவிருப்பதாகவும், அவைகளில் ஒன்றான சுங்கான் குழிப் பாடசாலையில் தாமோதரத்தின் பெயரைப் பதிவதாகவும் கூறியவன். சுங்கான் குழியின் தற்காலிகமாக அமைத்த பாடசாலைக்கு மனேஜராயிருந்தவன்.

ஈ. அபிராமி மாமி :

தாமோதரத்தின் சொந்த மாமன் செல்லையாவின் மனைவி. மச்சாள் சௌந்தரத்தின் தாய். தம்பலகாமத்தில் பிறந்தவள். தாமோதரம், அவர்கள் வீட்டுக்கு வந்தால் அன்போடு வரவேற்றுப் பலகாரமும், தேநீரும் கொடுப்பவள். கணவன் வயல் வேலையாய்ப் போயிருப்பதைக் கூறியும் தனக்கு அலுவல் இருப்பதாகக் கூறியும், மகளுடன் அவன் கதைக்க விரும்புவதை உணர்ந்து விலகிச் சென்றவள். தாலிக்கொடி, வளையல்கள் அணிந்து படாடோபமாக விளங்குபவள்.

ஒ. கோணமலைக் கிழவர் :

தாமோதரத்தின் தாய் வழிப் பூட்டன். வயல் வேலைக் காலம் தவிர ஏனைய வேளைகளில் கள்ளுக் கொட்டிலில் தான் தஞ்சமடைந்திருப்பார். இந்த வயதிலும் சுறுசுறுப்பான வர். தாமோதரம் அவனைப் பெத்தப்பா என அழைப்பான். "நான் எண்டா யார்ரா – அவன் பெரிய கொம்பன், இங்கால வாடா பாப்பம்" என்று சொல்லிக் கொண்டே தாமோதரத் தின் கையைப் பிடித்துக் கொண்டவர். அவனைக் கட்டியணைத்துக் கொண்டவர். "ஏன்டா வந்தவுடன் பெத்தப்பாவ வந்து பாக்கல்ல" என்று கடிந்து கொண்டவர். களைப்பு அறியாத உழைப்பாளி அவர். கண்டக் காட்டிலே உள்ள முப்பது ஏக்கருக்கு மேலான மானாவாரிக் காணியும், நான்கு சோடி எருது மாடுகளும், பட்டியில் நூற்றுக்கு மேற்பட்ட உருப்படிகளும் அவருக்குச் சொந்தமாயிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றாளை, கச்சான், இராசவள்ளி, மிளகாய் பயிர் வகைகளைச் செய்வார். மூத்த நெல் விதைப்பார். குறைந்த காலப் பயிரான சீனட்டி நெல்லையும் விதைப்பார். அவருக்கு வேளாண்மைச் செய்கை ஒரு மகாயக்ஞம்.

ஓ. செல்லையா :

பள்ளிக் கூடத்திலிருந்து தாமோதரம் ஊருக்கு வந்த போது பக்கத்து வீட்டு மாமா செல்லையாவைச் சந்திக்க முடியவில்லை. அவர் தனது சீதன வயல் வேலையாகத் தம்பலகாமம் போயிருந்தார். நன்றாக உழைத்துக் கல் வீட்டில் வசதியுடன் வாழ்பவர். தம்பலகாமத்திலிருந்து வயல் வேலை முடிந்த பின் திருகோணமலை சென்று புதுவருடப் பிறப்புக்காக எல்லாருக்கும் புத்தாடை வாங்கி வந்தவர். சௌந்தரம் மனம் அறியாது அவளுக்குச் சேலை வாங்கி வந்தவர். "அத்தானுக்கு என்ன வாங்கி வந்தீர்கள்" என்று சௌந்தரம் கேட்ட போது அவர் காற்சட்டை போடுறவர் எதை எடுப்பது என்று தெரியவில்லை எனக் கூற "கோயிலுக்குக் கட்ட வேட்டி எடுத்திருக்கலாம்" எனத் தாமோதரம் சொன்னவுடன், நாளைக்கு எடுத்தாற் போச்சுது என்றவர். புதுவருடத்தன்று சகோதரி வீடு சென்று மச்சான் மயில் வாகனத்துடன் அளவளாவிச் சாராயம் குடித்தும், ஆட்டிறைச்சிக் கறியோடு உணவு உண்டும் புதுவருடத்தைக் கொண்டாடியவர். மைத்துனர் இறந்தபோது மருமகனுக்கு ஆறுதல் கூறியவர்.

நாவலாசிரியரின் படைப்பாக்கத் திறன்

1. மண் வாசனை நாவலாக உருவாக்கியமை (பழக்க வழக்கங்கள், தொழில் முறைமைகள், உணவு வகைகள், ஆடை அணிகலன்கள், போக்குவரத்துக்கள், இடப் பெயர்கள், ஆட்பெயர்கள், பிரதேச வழக்குகள், பிரதேச வர்ணனைகள், பிரதேசப் பேச்சு வழக்குச் சொற்கள், சடங்கு முறைகள் முதலானவற்றை உள்ளடக்கியமை).

2. சமகாலப் பிரச்சினைக்கு மையங்கொடுத்த கதையைக் கொண்டிருந்தமை. (சமகாலச் சூழலிலிருந்து கதைக் கருவைத் தெரிவு செய்தமை. பெண்கள் கல்வி பெறுவதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒள்ள தடைகள், ஆண்களின் இவ வயதுத் திருமணங்கள், பாடசாலைக் கல்விக்கான வளப் பற்றாக்குறைகள், முற் போக்கான சிந்தனைகள் எழவிடாத வாழ்வியல், தாழ்வான பொருளாதாரமுறை, மதுப்பாவனை,சூழலுக்கு அடிமை யாதல், சாதீய ஏற்றத் தாழ்வுகள் போன்றவை).

3. இருபது வருடங்கள் காத்திருந்து உள்ளூர் ஆசிரியர்களை உருவாக்க வேண்டிய நிலை, வயது வந்த பெண் பிள்ளை களின் பாதுகாப்புக் கருதி அவர்கள் விரும்பிய போதும் கல்வி பெறுவதற்குப் பெற்றோர் ஏற்படுத்தும் தடைகள், தடையை யும் தாண்டிக் கற்கின்ற பெண்கள் மீது வீணான பழிகளை யும், அவமானங்களையும் ஏற்படுத்துதல் முதலானவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளமை.

4. இலட்சிய வேட்கையுடைய மாணவர் ஆயினும் குடும்பச் சூழ்நிலையால் கல்வியில் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாத துர்பாக்கிய நிலையைச் சுட்டி நின்றமை.

5. தங்கள் சொந்தக்காரனை (பிரதேசத்தைச் சேர்ந்த தமிழர்) எம்.பி. ஆக்கிய பெருமையும், அரசியல் ஈடுபாடும் நாவலி னூடு நாசூக்காக நுழைக்கப்பட்டமையும், அரசியல் பிரசாரங் களை கதையினூடு புகுத்திக் காட்டியமையும்.

6. சரளமான கிராமத்துப் பேச்சு வழக்கைக் கையாண்டமை, இயல்பானதும், உணர்ச்சி கரமானதுமான வருணனைகளை ஆங்காங்கே பயன்படுத்திய மொழியாளுமை, குறிப்பிட் பிரதேசத்திற்கே உரிய நாட்டுப்புறப் பண்பாட்டு அம்சங்களி னூடு நாவலின் உரையாடல்கள் அமையப் பெற்றுக் கதை நகர்த்தப்பட்டமை.

7. எரியும் பிரச்சனைகளுக்கு முதன்மை கொடுத்தமை. (கல்வி, வேலை வாய்ப்பு, தொழில், பொருளாதாரம், காதல், போக்கு வரத்து, மூடக் கொள்கை, பண்பாட்டுப் பேணுகை, அரசியல் போன்றவை).

8. கிழக்கு மாகாணத்தின் மூதூர்த் தொகுதியிலுள்ள ஆலங் கேணிக் கிராமத்தினை, வாழ்வியல் ரீதியாக உயிர்ப்புடனும், உணர்வுடனும் படம் பிடித்தது போல் சித்திரித்துக் காட்டி யமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. நாவலின் கதாபாத்திரங்கள் ஒவ்வொன்றும் இன்றும் நாம் கண்டு தரிசிக்கக் கூடிய யதார்த்தமான படைப்பாக விளங்குகின்றமை.

10. நாவலின் தலைப்புக்கு ஏற்றாற்போல "காத்திருத்தல்" என்பது கல்விக்காக, காதலுக்காக என்றவாறான பொருள்களைத் தந்து நின்று நாவலுக்கு அழுத்தங் கொடுத்துள்ளமை.

கதைப் பின்னல்

விடுமுறையில் ஊருக்கு வந்த மாணவனின் ஊர்த் தரிசிப்பினூடாகக் கதை நகர்த்தப்படுகிறது. வீட்டாருடன் உறவாடல், பாடசாலை சென்று தலைமை ஆசிரியருடன் அளவளாவல், பூட்டன் கோணாமலையாருடனான சந்திப்பு, சினேகிதர்களுடனான சந்திப்பு, மாமா வீடு சென்று மச்சாளைச் சந்தித்தல், எம். பி. யை வரவேற்றலில் பங்கு கொள்ளல், தம்பலகாமம் சென்று கோணேஸ்வரரை வழிபடலும், பெரிய மாமா வீடு சென்று வருதலும் என்றவாறு இயல்பான முறையில் கதையோட்டம் அமைந்துள்ளது. பின்னர் பாடசாலை திரும்பல், தந்தையார் மறைவு, பரீட்சை எடுத்தல், ஆசிரியராதல், ஆசிரிய பயிற்சிக்குச் செல்லல், மச்சாளும் சோதனை பாஸ் பண்ணி ஆசிரியை ஆதல், காதலரிருவரும் காத்திருத்தல் என்று நாவலின் பிற்பகுதியிலும் ஆற்றொழுக்குப் போல் சிக்கலின்றிக் கதை பின்பற்பட்டுள்ளது. சாதாரண கிராமியக் கதையானாலும், உயிர்ப்புடைய கதாபாத்திர வார்ப்பும், பேச்சோசைப் பண்புடைய சொற்களாலான உரையாடல்களும், பண்பாட்டம்சங்கள் பரிமளிப்பதும் நாவலுக்குச் சுவை கூட்டுகிறது. எதிர்பாராத் திருப்பமாகத் தாமோதரத்தின் தந்தை இறந்ததும், தனது சகோதர நலன்களை முன்னிறுத்தி அவன், சௌந்தரத்திடம் விலகி நடக்கத் துணிந்ததும் கதைப் பின்னலின் இயல்பான அம்சங்களாகும். முடிவு காதலுக்குரிய காத்திருப்பாயிருப்பினும், இம்மண்ணின் பொதுமைப் பாடாக அனைவருக்கும் உரியதாக அமைந்தமை சிறப்பான தாகும்.

நாவலாசிரியரின் மொழிநடை

நாவலாசிரியரின் மொழி நடையானது எவரும் புரிந்து கொள்ளக் கூடிய எளிமை நிரம்பியது. சிறு சிறு வாக்கியங்களால் ஆனது. திருகோணமலைக் கிராமத்துப் பேச்சுத்தமிழை உயிர் நாடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகக் கொண்டது. வர்ணனைகள் யாவும் யதார்த்த பூர்வமானவை. கதைசொல்லியின் (நாவலாசிரியரின்) கூற்றாக வரும் இடங்களில் மாத்திரம் பொதுத்தமிழ் (எழுத்துத்தமிழ்) கையாளப்பட்டுள்ளது. வருணனைகள் மண்வாசனையோடு அமைந்து கதையோட்டத் திற்குத் துணை செய்கின்றன. குறைந்த அளவிலேயே மரபுத் தொடர்கள், பழமொழிகள் போன்றவை கையாளப்பட்டுள்ளன. அணிச் சிறப்புக்களும் அவ்வாறே பரிச்சயமான ஆங்கிலச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தொழில் மரபுப் பேச்சுவழக்குகள், பண்பாட்டுப் பேச்சுவழக்குகள் அதிகமாக இடம்பெற்றுள்ளன. திருகோணமலைப் பிரதேச மக்களின் அகப்புற உணர்வுகளின் பிரதிபலிப்புக்களான மொழிவழக்குகள் இந் நாவலில் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

வருணனைகள் : சில எடுத்துக் காட்டுக்கள்

1. "அவள் வெட்கப்படுவதும் அழகாகத்தான் இருக்கிறது. அவள் எட்டாம் வகுப்புப் படிக்கையில் மூதூர் வேதக்கார வாத்தியார் வைத்திருந்த பைபிளிலிருந்து ஞானி சலமோனின் உன்னதப் பாடல்களைப் படித்திருக்கிறான். அந்தப் பாடல் வரிகள் அவன் ஞாபகத்துக்கு வந்தன. "என்னே உன் அழகு! என் அன்பே! என்னே உன் அழகு! மயிர் கத்தரித்த பின் குளிப்பாட்டப்பட்டுக் கரையேறும் ஆட்டு மந்தை போன் றவை உன் பற்கள்; உன் இதழ்கள் செம்பட்டு நூலிழைகள்; கன்னங்கள் வெடித்த மாதுளம்பழம் போன்றவை; உன் தனங்கள் இரண்டும் பீலிகளின் இடையே மேயும் இரட்டை மாங்கன்றுகள்" ஞானி சலமோனின் இந்தப் பாடல் தாமோதரம் அசைபோட்டு நினைந்து பரவசப்பட்டுக் கொண்டிருக்கையில் சௌந்தரம் வீட்டினுட் புறமாக வந்து விறாந்தைக் கதவைத் திறந்து "வாருங்கள் அத்தான்" என்று அவனை அழைத்தாள்"

2. "பழுத்த கறுத்தச் சீனாட்டி நெற்கதிரின் வாக்கில் மீசை அரும்பிக் கொண்டிருந்தது. கனவு காணும் கண்கள்; தலைக்குள் எத்தனையோ சிந்தனைகள்; மனதுக்குள் எத்தனையோ ஆசைகள்."

3. "அந்தச் செவ்வானம் போல மின்னும் அவள் முகத்தில் நெற்றியில் இருந்த கருஞ் சாந்துப் பொட்டு அவள் முகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கு மேலும் அழகூட்டியது. நீண்ட பின்னல் முடிவடைந்த விடத்திலே கட்டப்பட்டிருந்த சிவப்புறிபன் வண்ணாத்திப் பூச்சியைப் போல மார்பில் மொய்த்துக் கிடக்க அவள் பந்தற் கப்பில் சார்ந்தபடி நின்று கொண்டிருந்தாள்."

4. "வெளியே மாலை மயங்கிக் கொண்டிருந்தது. ஊருக்கு மேற்குப் புறமாக இருந்த உப்புக் கரைச்சைகளுக்கு மேலால் நிமிர்ந்து நிற்கும் கண்ணாமரங்களுக்கு அப்பால் தூரத்தே தெரிந்த கந்தளாய்க் குன்றுகளில் மாலைச் சூரியன் தலையை மோதி உடைத்துக் கொள்கையில், அந்த இரத்தப் பிரவாகத்தில் மேற்கு வானில் செம்மை படர்ந்தது. உப்பு நீரில் குளித்துக் கொண்டிருந்த காகங்கள் தம் சிறகுகளை அடித்து உலர்த்திக் கொண்டு கண்ணாமரங்களை நோக்கிப் பறந்து கொண்டிருந்தன. வெப்பந் தணிந்த அந்த மாலைப் பொழுதில் ஊர் மீண்டும் கலகலப்பாயிற்று."

5. "மாரி காலத்தே மணற் காட்டிலே திடீரென முளைத்த செங் காந்தள் என்று தெரிந்து கொள்ளப் படாமலே சிவந்திருக்கும் கார்த்திகைப் பூப்போன்ற அவள் விரல்களையும், உள்ளங் கையையும் மெதுவாக வருடினான்."

6. "மறைப்புக்காகக் கட்டின கிடுகு வேலிக்குள்ளாலதான் உலகத்தைப் பார்க்குது நம்ம பெண் சமூகம். எப்பதான் இவர்கள் நேரடியாக உலகத்தைப் பார்க்கப் போகின்றார் களோ? இந்த வேலியெல்லாம் எப்பதான் தொலையப் போகிறதோ?"

உவமைத் தொடர்கள் :

"மூத்த கறுத்தச் சீனாட்டி நெற்கதிரின் வாக்கில்"

"வீணையைப் பறிகொடுத்த சரஸ்வதி போல"

"செவ்வானம் போல மின்னும்"

"கூம்பிய முகை விரிவது போல"

"வைகறைப் பனியில் தோய்ந்து இதழ் விரிக்கும் மல்லிகையைப் போல"

"முதுகுத் தோலை உரித்து விடுவது போல"

"கார்த்திகைப் பூப் போன்ற"

"வெறிகாரனைப் போல"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முக்காடு போட்ட முஸ்லிம் பெண்கள் ஆடவர்கண்களுக்குப் பட்டுவிடுவோமோ என்ற அச்சத்தில் நடப்பதைப் போல"

"கல்யாண ஊர்வலத்தில் செல்பவனைப் போல"

இரட்டைக் கிளவிகள் :

கமகம

முணுமுணு

சரசர

கலகல

அடுக்குத் தொடர் :

அணிஅணியாய்

குடங்குடமாய்

அடுக்கிடுக்குத் தொடர் :

பச்சைப் பசேலென்று

கன்னங்கரிய

செக்கச் சிவந்த

மரபுத் தொடர்

கைகொடுத்திருக்கிறது, சாமியாடிக் கொண்டிருத்தல், கைவிரித்தல்

ஆங்கிலச் சொற்கள் :

பஸ், லீவு, ரெஸ்ட், பிறின்சிப்பல், டாக்டர், சேர், வைல், சைக்கிள், எம். பி, சலூன், குறோட்டன், ஸ்டூல், கனாஸ், லவுட் ஸ்பீக்கர், எஸ். எஸ். சி, அட்ரஸ், பேப்பர், றிபன், றோட், இங்கிலீஷ், புறோநோட், பக்கிள்ஸ், லவ், ரியூசன், பெற்றோமெக்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருஞ்சொற் பொருள் :

காவுதடி	–	பாற்குடங்கள், பாற் பேணிகள் முதலான வற்றைக் காவுதடி. வளையங்கள் மூலமாகக் கொழுவிக் காவப்படும் தடி.
பூதாக்கலம்	–	மணமக்களுக்கு முதன் முதலில் அளிக்கப் படும் சோற்று விருந்து.
துலாம்பரம்	–	வெட்ட வெளிச்சம்
வாக்கில்	–	சாயலில்
காண்டவ தகனம்	–	காண்டவ வனத்தினைத் தகனம் செய்தமை – புராணச் செய்தி
விஞ்ஞாபனம்	–	அறிக்கைப் பிரசுரம்
குற்றேவல்	–	அடிமைவேலை, ஏவிய சிறிய சிறிய வேலைகளைச் செய்தல்.
மானாவாரி	–	கால போகப் பயிர்ச் செய்கை.
அவணம்	–	நெல்லை அளக்கின்ற அளவீடு (புசல், சாக்கு கணக்கில்).
தீய்ந்து	–	அவிந்து
புளியாணம்	–	புளிக் குழம்பு
உப்புக் கரைச்சை	–	உப்பு வெளிகள்
புரளி	–	ஏமாற்று
பிரவாகம்	–	வெள்ளம்
தாள லயம்	–	ஒழுங்கு தவறாமை
சோம்பி	–	வாடி
கவித்து	–	மூடி
பிரகாசம்	–	ஒளி
பராயம்	–	வயது
கறுவிக் கொண்டு	–	ஆத்திரப்பட்டுக் கொண்டு
ஏர்க் கால்	–	கலப்பைப் பிடி
மகாயக்ஞம்	–	பெருந் தவம்
காசப் பிரிச்சிடுவன்	–	காசை வாங்கிடுவேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைச்சை	-	வெளி
தாயம் எண்டு	-	சந்தர்ப்பம் என்று
இளநகை	-	புன்னகை
தனங்கள்	-	மார்பகங்கள்
பெருமிதி	-	பெரும் கூடு மிதித்தல்
அலுத்து	-	சலித்து
செக்கர்	-	சிவந்த
அங்கப் பிரதட்சணம்	-	நிலத்தில் உருளுதல்
சூத்திரர்	-	தொழிலாளர்
தமயதாஸ்தானம்	-	நிலைபெற்ற இடம்
சறுகிற்று	-	விலகிற்று
சாயந்தரம்	-	மாலை நேரம்
அந்திம தசை	-	கடைசிக் காலம்
சம்பிரமமான	-	கோலாகலமான, சிறப்பான

"ஒரு வெண் மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது" நாவலில் காணப்படும் நாட்டாரியல் பண்பாட்டுக் கோலங்கள்.

1. பாயில் படுத்துறங்கலும், படுத்த பாயைச் சுருட்டி வைத்தலும்.
2. காவுதடியில் பாற் குடங்கள், தயிர்ப் பேணிகள் காவுதல்.
3. பெரிய மண் மிடாவிற் காய்ச்சிய எருமைப் பாலைப் பாற் பேணிகளிலும், சிறிய போத்தல்களிலும் ஊற்றி உறையிட்டு வைத்து, உறைந்த பின் தயிராக எடுத்தல்.
4. அடுக்களைக் குத்திகளை ஆசனமாகப் பயன்படுத்தி குந்தியிருந்து தேநீர் குடித்தல்.
5. மண் பீங்கான் தட்டில் உணவு உண்ணல்.
6. எருமை மாடுகளைப் பட்டியில் அடைத்தலும், பசுக்களிலிருந்து பால் கறத்தலும்.
7. வீடுகளில் அடுக்களைக்கு மேலே பரண் அமைத்திருத்தல்.
8. வெற்றிலை, பாக்கு, புகையிலை உண்ணப் பயன்படுத்தலும், அவற்றைச் சரையில் கட்டி வைத்தலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. நெற்றியில் திருநீறு பூசுதல்.

10. கள்ளுக் கொட்டிலுக்குச் சென்று கள்ளுக் குடித்தல்.

11. பொருத்தமான காட்டு மிருகங்களை வேட்டையாடி அவற்றின் இறைச்சியை உண்ணல்.

12. வற்றிய குளங்களில் காணப்படும் சுங்கான் போன்ற நன்னீர் மீன்களைப் புகையூட்டப்பட்ட கருவாட்டை உண்ணல்.

13. வீட்டுத் தோட்டங்களில் கத்தரி, தக்காளி, வெண்டை போன்றவற்றைப் பயிரிடலும், தோட்ட வரம்புகளில் வற்றாளை பயிரிடலும்.

14. வீட்டு வளவுகளில் போக்குவரத்துச் செய்யப் படலைகள் காணப்படல்.

15. வீட்டுச் சுவர்கள் செங்கல்லாலும், களிமண்ணாலும் ஆக்கப் பட்டுச் சுண்ணாம்பு பூசப்பட்டிருத்தல்; தரைக்குச் சீமெந்து பூசப்பட்டிருத்தல்; கூரை ஓலையால் வேயப்பட்டிருத்தல்.

16. ஆண்கள் சேட்டுடன் நாலு முழ வேட்டியை அணிதல்.

17. வீட்டு மண்டபத்து நிலையில் விபூதிச் சிரட்டையைத் தொங்கவிடல்.

18. சாராயம் குடிக்கும் பழக்கம் ஆண்களில் பெரியவர் மற்றும் இளைஞர் ஆகியோரில் சில பேரிடம் காணப்படல்.

19. தயிர் வியாபாரத்தினைத் தொழிலாகக் கொள்ளல்.

20. மாட்டுப் பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாடல்.

21. புழுதி படிந்த மணல் ஒழுங்கைகளால் நடந்து செல்லல்.

22. பெருந் தொழிலாக நெல் விவசாயத்தை மேற் கொள்ளல்.

23. பெண் பிள்ளைகள் பெரியவர்களானதும் அவர்களைப் பாட சாலைக்கு அனுப்ப அதிகமான பெற்றோர் மறுத்து விடல்.

24. சுருட்டுப் பிடித்தல்.

25. பெண் பிள்ளை பெரியவளானதும் பூப்புனித நீராட்டுச் சடங்கு நடத்துதல்; அதில் ஒலி பெருக்கியை முடுக்கி விடல்.

26. வயலிலே விளைந்த நெல்லை வீட்டில் மூட்டை மூட்டையாக அடுக்கி வைத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. இரவில் மாமரத்தின் கீழே பாயிலிருந்து அரிக்கன் விளக்கு வெளிச்சத்தில் மாணவர்கள் பாடம் படித்தல்.

28. கடல் நீர் தேங்கி நிற்கும் உப்புக் கரைச்சைகளின் ஆற்றோரங் களில் இரவு நேரம் தென்னோலைச் சூள் வெளிச்சத்திலோ, மின் சூள் ஒளியிலோ பெரியவர்களும் இளைஞர்களுமாகப் பொழுது போக்காக நண்டு குத்துதல்.

29. இரவுணவாகப் பிட்டும் நண்டுக் கறியும் சாப்பிடல்.

30. முற்றத்திலே சாக்குக் கட்டிலைப் போட்டு நித்திரை செய்தல்.

31. நாட்காட்டி பார்த்தல்.

32. வீட்டு முற்றத்தில் மல்லிகைப் பந்தல் காணப்படல்.

33. பூதாக்கலத்தில் சோறு போட்டுக் கொடுத்துச் சுருக்கமாகக் கல்யாணத்தை முடித்து வைத்தல்.

34. முட்டைகளைக் கொடுத்துப் பதிலாக அப்பம் வாங்குதல்.

35. மாட்டு வண்டியில் பயணம் செய்தல்.

36. கோயில்களில் பூசை வழிபாடுகள் நடைபெறல்.

37. கோயிற் பூசாரியார் நேரத்துக்கு நேரம் கூறு சங்கு, தோல்முரசு கொட்டோசை கொடுத்தல்.

38. பாடசாலையில் தண்டவாளத் துண்டில் இரும்புக் கம்பியால் அடித்து மணியோசை கேட்கச் செய்தல்.

39. வீட்டு முற்றங்களில் மல்லிகைப் பந்தலுடன், குரோட்டன்கள், கானல் வாழை ஆகியவற்றை அழகுக்காக வளர்த்தல்.

40. பெண்கள் மண்குடங்களில் தண்ணீர் சுமந்து வருதல்.

41. நீர்ப் பாய்ச்சல் வயற் காணிகளைப் பெண்களுக்குச் சீதனமாகக் கொடுத்தல்.

42. மணமான பெண்கள் தாலிக் கொடி, வளையல் அணிதல்.

43. பெண் பிள்ளைகள் மாலை கட்டல்.

44. நெல்லைப் பாயில் கொட்டிப் பரவிக் காய விடுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45. அக்கம் பக்கத்து வீடுகளுக்குத் தத்தம் வீடுகளிலிருந்து பின் பக்கமாகச் செல்லுவதற்கு "மங்கடை" எனப்படும் சிறிய படலை அமைத்திருத்தல்.

46. காட்டு மரத் தூண்களுக்கிடையில் வரிச்சுத் தடிகளைக் கட்டி, அவற்றுக்கிடையே குழைத்த களிமண்ணைச் செலுத்திச் சுவரமைத்தல்.

47. இராசவள்ளிக் கிழங்குப் புக்கை, இடியப்பம் போன்றவற்றை உண்ணல்.

48. மணமாகாத பெண்கள் சாந்துப் பொட்டு இட்டுக் கொள்ளல்.

49. கோயில் திருவிழாக்களைக் கோலாகலமாகக் கொண்டாடல்.

50. கல் வீடுகளின் முன்னால் கற்றூண்களின் மேல் முதிரைப் பலகைகளால் ஆன நெற் பட்டறைகள் அமைத்திருத்தல்.

51. புறோநோட்டில் எழுதி வாங்கிக் கொண்டு கடனுக்கு அவணக் கணக்கில் நெல் கொடுத்தல்.

52. குறைந்த சாதியினருக்குச் செம்பிலே தண்ணீர் கொடுக்கவும் கோயிலில் அங்கப் பிரதட்சணம் செய்யவும் மறுத்தல்.

53. தங்கள் தங்கள் சாதிப் பெருமைகள் பேசல்.

54. வேப்பங் குச்சியினால் பல் துலக்கல்.

55. ஆழமான கிணற்றில் நீரெடுப்பதற்காக நீள்சதுரக் கற்றூண் களில் அச்சுலக்கையைப் புகுத்திய ஒரு முழுப் பனை மரமே சீவப் பட்டுத் துலாவாகப் பயன்படுத்தல்.

56. கிணற்றிலிருந்து துலா மூலம் வாளியால் தண்ணீர் அள்ளிக் குளித்தல்.

57. இறந்தவர் நினைவாக ஆண்டுத் திவசம் செய்தல்.

58. நுளம்புக் கடியிலிருந்து தப்புவதற்காக வேப்பமிலைக் கொத்து களை நெருப்புச் சட்டியில் போட்டுப் புகை போடல்.

59. சிறுவர்கள் குறைந்தளவு கடல் நீரில் நின்று கைவலை வீசி மீன் பிடித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60. பிட்டு, தயிர், பருப்புச் சொதி, அப்பளப் பொரியல், மரக்கறி, மீன் குழம்பு, புளியாணம் ஆகியன உணவில் இடம்பெறல்.

61. வயலில் வேலை செய்வோருக்கு மதிய உணவு கொடுப்பதற்காக பனையோலைப் பெட்டியினுள் சோறு போட்டு வாழை இலையி னால் மூடி, தூக்குக் கயிறு கட்டப்பட்ட மண் பானையில் புளியாணம், வெண்கலச் சட்டிகளில் கறிகள், அவ் வெண்கலச் சட்டிகள் தூய தலையணை உறையினுள் அடுக்கப்பட்டு பையின் வாய் கூட்டித் தைக்கப்பட்டிருப்பதுடன், கூடவே அகப்பை, கரண்டிகளும் எடுத்துச் செல்லப்படுதல்.

62. வயல்களில் மாடு வளைத்தவர்கள் இலுப்பை மர நிழலில் இளைப்பாறுதல்.

63. சிறுவர்கள் நிலவொளியில் துள்ளி மகிழ்ந்து விளையாடுதல்.

64. பெண் பெரியவளான பிறகு சேலை அணிதல்.

65. புதுவருஷக் கைவிசேடம் வழங்குதல்.

66. ஆட்டிறைச்சியைப் பங்கு போடல்.

67. புதுவருஷத்தைச் சிறப்பாகக் கொண்டாடல். சிலர் இறைச்சி, சாராயம் என வாங்கிப் பயன்படுத்தல்.

68. ஆண்களில் சிலர் பீடி, சுருட்டுக் குடித்தல்.

69. சிறுவர்கள் காசுகுலுக்கி விளையாடுதல்.

70. இறந்தவரின் இறுதிச் சடங்கில் ஐயர் வந்து கிருத்தியம் செய்தல்.

71. மரண வீடுகளில் இரவு நேரம் பெற்றோமெக்ஸ் விளக்குகள் கொழுத்தி வைத்தல்.

72. அறுவடை செய்த நெல்லினை, வெளிகளில் போட்டுச் சூடு மிதித்தல்.

73. கிராமத்து இளைஞர்கள் குறைந்த வயதிலே திருமணஞ் செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாடக வளர்ச்சி பற்றிய அறிமுகம்

இயலும், இசையும் சேர்ந்து கதையைத் தழுவி வரும் கூத்தே நாடகமாகும். சங்ககால அகத்திணைச் செய்யுட்கள் அனைத்தும் நாடகக் கூற்றாக வருவதால் நாடகத் தனிநிலைச் செய்யுட்கள் என்பர். தமிழில் சிலப்பதிகாரம் முதன்முதல் தோன்றிய காப்பியமாகும். "வாயிற் கூத்தும் சேரிப்பாடலும் கோயில் நாடகக் குழுக்களும் வருகென" எனவரும் சொற்றொடர் கி.பி 8 ஆம் நூற்றாண்டில் நாடகம் நடிக்கப்பட்டதையும், நாடகக் குழுக்கள் செயற்பட்டதையும் எடுத்துக் காட்டியுள்ளது. மாணிக்கவாசகர் "நாடகத்தால் உன்னடியார்போல் நடித்து" எனவும், நம்மாழ்வார் "பிறவிமாயக் கூத்தினை" எனவும் கூறியிருப்பதால் கி.பி 9 ஆம் நூற்றாண்டின் முன்னரே நாடகம் நடிக்கப்பட்டதை உணரலாம். நாடகம் என்னும் சொல் "கூத்து" என்னும் பொருளைத் தான் குறித்து நின்றது. சோழப் பெருமன்னர் காலத்தில் நடிக்கப்பட்ட நாடகங்களில் "இராஜராஜ விஜயம்" ஒன்றாகும். கி.பி 1119 இல் கமலாயபட்டர் என்பவர் "பூம்புலியூர் நாடகம்" என்பதை இயற்றியுள்ளார். தமிழ் நாட்டில் முதன்முதல் நடிக்கும் நாடகம் கி.பி 10 ஆம் நூற்றாண்டுக்குச் சிறிது முன் தோன்றியது எனலாம். 17 ஆம் நூற்றாண்டில் குறவஞ்சி நாடகம், நொண்டி நாடகம் ஆகியவை இசைப் பாட்டு வடிவில் தோன்றி மக்களைக் கவர்ந்தன. திரிகூடராசப்பக் கவிராயரின் குற்றாலக்குறவஞ்சியும், மாரிமுத்தாபிள்ளையின் நொண்டி நாடகமும், பெயர் தெரியாதவரால் இயற்றப் பட்ட முக் கூடற் பள்ளும் சமுதாயத்தின் அடித்தள மக்கள் வாழ்வைச் சித்திரிக்கும் பொதுமக்கள் நாடக இலக்கியமாகும்.

18 ஆம் நூற்றாண்டில் அருணாசலக் கவிராயரின் "இராம நாடகமும்", "அசோமுகி நாடகமும்", கோபால கிருஷ்ண பாரதியாரின் "இயற்பகை நாயனார் நாடகமும்", "நந்தனார் நாடகமும்" கீர்த்தனை வடிவில் எழுந்தவையாகும். 19 ஆம் நூற்றாண்டில் எழுந்த 500 வரையான நாடகங்களுள் 100 வரையானவையே அச்சில் வெளிவந்துள்ளன. இவை நாடோடிக் கற்பனை நாடகங்கள் ("மதுரைவீரன்", "பவளக் கொடி", "நல்லதங்கை" போன்றவை), புராண இதிகாச நாடகங்கள் ("இராமாயணம்", "மகாபாரதம்" கதைப் பகுதிகளான "அரிச்சந்திர விலாசம்", "சகுந்தலை விலாசம்", "ஸ்ரீ மகாபாரத விலாசம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவை), வரலாற்று நாடகங்கள் (வாய்வழி வந்த கதைகளான "தேசிங்குராஜன் நாடகம்" முதலியன), சமூக நாடகங்கள் (சமுதாயக் கேட்டினை விளக்கும் "சீர்திருத்த இயல்பு கொண்ட "டம்பாச்சாரி விலாசம்" போன்றவை), நகைச்சுவை நாடகங்கள் (16 ஆம் நூற்றாண்டில் தோன்றிய "சனமனோல்லாசினி" முதலியன) எனப் பலவகையினவாகும். மேலும் இஸ்லாமியர்கள் "அப்பாசு நாடகம்", "அலிபாதுஷா நாடகம்" போன்றவற்றை எழுதினர். வேத நாயக சாஸ்திரி கிறிஸ்தவ தத்துவப் பொருளடிப்படையில் "ஞானத் தச்சன்" எழுதியுள்ளார். "ஞான சௌந்தரியம்மாள்" நாடகத்தை 1889 இல் முத்துநாயக்கரும், ஊதாரிப் பிள்ளை கதையை நாடகமாக மரியதாசரும் (1898) எழுதி வெளியிட்டுள்ளனர்.

பிற மொழி நாடகங்களான ஷேக்ஸ்பியர், ரஸின், போலியர் ஆகியோரின் எழுத்துக்களைப் பின்பற்றி தமிழ் நாடகங்கள் பல எழுந்தன. மேனாட்டுக் கல்வித் தொடர்பின் விளைவால் இந்த எழுச்சி ஏற்பட்டது. ஷேக்ஸ்பியரின் Merchant of Venice, Midsummer Nights Dreams போன்ற நாடகங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. Cymbeline நாடகத்தை சலசலோசனச் செட்டியார் "சரசாங்கி" என்ற பெயரில் மொழி பெயர்த்தார். றோமியோ ஜூலியட், சிம்பலின், ஒதெல்லோ முதலானவற்றை சங்கரதாஸ் சுவாமிகள் மொழிபெயர்த்துள்ளார். பிரெஞ்சு நாடகாசிரியர் மோலியரின் "லோபி" என்ற நாடகத்தையும், Sophocles என்ற கிரேக்க ஆசிரியரின் இரண்டு நாடகங்களையும் 19 ஆம் நூற்றாண்டில் பாவடிவில் மொழிபெயர்த்து வெளியிட்டுள் ளனர். தமிழ் நாடகங்கள் உரைநடையில் அதிகம் வெளிவரத் தொடங்கியது. "பிரதாப சந்திர விலாசம்" (1876) முதன்முதல் வெளிவந்த உரைநடையிலான நாடகமாகும். இதனை இராமசாமி இராசு இயற்றியிருந்தார். 19 ஆம் நூற்றாண்டில் தலை சிறந்த நாடகாசிரிய ரான பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை அவர்கள் லார்ட்டு லிட்டன் எழுதிய "இரகசிய வழி" (the Secret Way) என்ற ஆங்கிலக் கதையை தமிழ் மணம் கமழும் "மனோன்மணீயம்" நாடகக் காப்பியமாகத் தந்துள்ளார். வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் வடமொழி நாடக இலக்கண முறைகளைப் பின்பற்றி "நாடகவியல்" என்ற நூலை எழுதியதுடன், "ரூபாவதி", "கலாவதி", "மான விஜயம்" ஆகிய நாடகங்களையும் எழுதியுள்ளார். உரிய செந்தமிழ் நடையில் அமைந்த இவற்றுள் இடையிடையே கீர்த்தனைப் பாக்களும் இடம்பெற்றுள்ளன. 19 ஆம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டின் இறுதியில் தோன்றி தமிழின் இசை நாடகத் துறைக்கு அரும் பணியாற்றியவர் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள். சுமார் இருபத்தைந்துக்கு மேற்பட்ட நாடகங்களை எழுதியவர்; நடித்தவர்; நாடகக் கம்பனி நடத்தியவர்.

நவீன தமிழ் நாடகத் துறையின் தந்தையென அழைக்கப்படும் பம்மல் சம்பந்த முதலியார் 40 இற்கு மேலான நாடகங்களை எழுதியவர்; நடித்தவர்; "மனோகரா" "லீலாவதி சுலோசனா", "அமலாதித்யன்", "சபாபதி" போன்றவை அவரின் சிறந்த நாடகங்களாகும். "ஹாம்லெட்" ஷேக்ஸ்பியரின் நாடகத்துக்குச் சிறந்த மொழிபெயர்ப்பாகும். " லீலாவதி சுலோசனா", உரைநடையில் எழுதி முதல் அச்சிடப்பட்ட நாடகமாகும். 1891 இல் சுகுண விலாச சபையினை நிறுவியவரும் இவரே. 20 ஆம் நூற்றாண்டில் தேச பக்தி நாடகங்கள் எழுந்தன. தெ. பொ. கிருஸ்ணசாமிப் பாவலரின் கதரின் வெற்றி, தேசியக் கொடி, வீரபாண்டிய கட்டப்பொம்மன் வரலாற்றைக் கூறும் ரா. வேங்கடாசலம் எழுதிய "முதல் முழக்கம்", மற்றும் "இமயத்தில் நாம்" ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

20 ஆம் நூற்றாண்டின் சமுதாய சீர்திருத்த நாடகங்கள் பலவும் தோன்றின. இளமை மணம், பொருந்தாமணம், வரதட்சிணைக் கொடுமை ஆியவற்றை இவை பிரதி பலித்தன. "இராஜாம்பாள்", "மோகன சுந்தரம்", "சந்திர காந்தா" போன்றவை அரங்கேறின. சிவாஜி மன்றத்தினரும் டி. கே. எஸ். சகோதரர்களும் முறையே "வீரபாண்டிய கட்டப்பொம்மன்", "இராஜ இராஜ சோழன்" நாடகங்களை இருபதாம் நூற்றண்டின் நடுப்பகுதியில் வெற்றிகரமாக நடத்தினர். சமுதாய மறுமலர்ச்சி நாடகங்களில் கு. சா. கிருஷ்ணமூர்த்தியின் "அந்தமான் கைதி", ப. நீலகண்டனின் "முள்ளில் ரோஜா", சி. என். அண்ணாதுரையின் "வேலைக்காரி", "ஓரிரவு, நாரணதுரைக் கண்ணனின் "உயிரோவியம்", எஸ். டி. சுந்தரம் எழுதிய "மனிதனும் மிருகமும்", கல்கி கிருஷ்ணமூர்த்தியின் "கள்வனின் காதலி", கலைவாணரின் "ஐம்பதும் அறுபதும்" (நாராயணகவி இயற்றியது) ஆகியவை வெற்றிகரமான சில நாடகங்களாகும். இலக்கிய நடையில் டாக்டர் மு. வரதராசன் "பச்சையப்பர்" நாடகத்தையும், வ. சுப. மாணிக்கம் "மனைவியின் உரிமை" யையும் சுவாமி விபுலாநந்தர் "மதங்க சூளாமணி" யையும் தந்துள்ளனர். பிற மொழிக் கதைகளைத் தழுவி தமிழில் டி. கே. முத்துச்சாமி "குமாஸ்தாவின் பெண்", பி. எஸ். இராமையா "பிரசிடன்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சாட்சரம்" முதலான நாடகங்களையும் எழுதியும் நடித்தும் உள்ளனர். மேலும் வடமொழி நாடகத் தழுவலாக பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாரின் "மண்ணியல் சிறிதேர" (மிருச்ச கடிகம்), மறைமலை அடிகளாரின் "சாகுந்தலம்" ஆகியவையும் குறிப்பிடக் கூடியவை.

20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து நாட்டுக் கூத்து, இசை நாடகம், விலாசங்கள், பார்சி முறை நாடகங்கள் என வளர்ச்சி பெற்று, படச் சட்ட அரங்கு, தெருவெளி அரங்கு எனத் தமிழ் நாடகத் துறையின் செல்நெறி விரிவாக்கம் பெற்றது. நவீன தொழில் நுட்பங்களை உள்வாங்கி மேடை அமைப்பில் பல்பரிமாணங்கள் உருவாகின. பல அமைச்சூர் நாடகக் கம்பனிகள் உருவாகின. ஆர். எஸ். மனோகர் "இலங்கேஸ்வரன்" முதலான நாடகங்களால் பெயர் பெற்றார். சோ. மீனா, எஸ் வி. சேகர், கே. பாலச்சந்தர், கோமல் சுவாமிநாதன், பூர்ணம் விஸ்வநாதன் முதலான பலர் நாடகம், சினிமா இரண்டுடனும் தொடர்பு பட்டிருந்தனர். தமிழ் கூறும் நல்லுல கெங்கணும் நாடகங்கள் ஏராளமாக எழுதப் பெற்றும் நடிக்கப் பெற்றும் உள்ளமை கண்கூடு. நாடகமே தங்கள் வாழ்க்கையாகவும், தொழிலாகவும் பலர் வாழ்கின்றனர். நாடக வாழ்க்கை பற்றிய நூல் களும் பம்மல் சம்பந்த முதலியார், டி. கே. சண்முகம், எஸ். வி. சகஸ்ர நாமம், கு. சா. கிருஷ்ணமூர்த்தி முதலான பல கலைஞர்களால் எழுதப்பட்டுக் காலத்துக்குக் காலம் வெளிவந்துள்ளன. சினிமாவின் எழுச்சியால் ஓரளவு தமிழ் நாடகத் துறை வீழ்ச்சி கண்ட போதிலும் இரண்டும் இரட்டைக் குழந்தைகளாகவே விளங்குகின்றன. புதிய புதிய பாநாடகங்களும், உரைநடை நாடகங்களும் வந்த வண்ணமே யுள்ளன. புதிய புதிய நாடக மன்றங்களும் தோன்றுகின்றன.

இலங்கைத் தமிழரின் தேசியக் கலை வடிவம் நாட்டுக் கூத்தாகும். அதன் ஆரம்பம் அறுதியிட்டுக் கூற முடியாத காலத்துக்குரியது. சைவ, கிறிஸ்தவ நாட்டுக் கூத்துக்களும், இசை நாடகங்களும் 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை பெருமளவில் இடம்பெற்றன. 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து படிப் படியாக நவீன நாடகங்களும் மேடையேற்றப்பட்டன. தென்னிந்திய நாடகக் கலைஞர்கள் பலர் இலங்கை வந்து இசை நாடகம், நவீன நாடகம் ஆகியவற்றை நடத்தி வந்தனர். அவர்களுடன் ஈழத்துக் கலைஞர்களும் பல சந்தர்ப்பங்களில் இணைந்து நடித்தனர். சங்கரதாஸ் சுவாமிகள் இலங்கையில் தங்கியிருந்து சில இசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகங்களை எழுதிக் கொடுத்ததாக அறிய முடிகிறது. இது 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலாகும். பின்னர் பம்மல் சம்பந்த முதலியாரின் பங்களிப்பு நவீன நாடக வளர்ச்சிக்கு உந்து சக்தியை அளித்தது, ஈழத்தில் கலையரசு க. சொர்ணலிங்கம் நவீன நாடகத் தின் பிதாமகராக விளங்கினார். தனது நாடக அனுபவங்களை "நாடகமும் நானும்" என நூலாக எழுதினார். பல நாடகங்களில் நடித்ததுடன் நாடக சபையினையும் உருவாக்கினார். பல மாணவர் களையும் உருவாக்கினார். வட மாகாணம் முழுவதிலும் (யாழ்ப் பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு), கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் புத்தளம், சிலாபம், நீர் கொழும்பு, கொழும்பு, மலையகம் உட்பட பல பிரதேசங்களிலும் தமிழ் நாட்டுக் கூத்துக்கள், இசை நாடகங்கள், நவீன நாடகங்கள் இடம்பெற்றன. வடமோடி, தென்மோடிக் கூத்து வகைகள் பிரபல்யம் பெற்றன. சைவ சமயம், கிறிஸ்தவ சமயம், வரலாறு, மொழிப் பெருமை சார்ந்த நாடகங்கள் எழுதியும் நடித்தும் தமிழ்க் கலை வளர உதவின.

ஏ. ரி. பொன்னுத்துரை, லடீஸ் வீரமணி, நடிகமணி. வி.வி. வைரமுத்துப் போன்றவர்கள் நாடகத் துறைக்கு இலங்கையில் பாரிய பங்களிப்பை நல்கியுள்ள முன்னோடிகள். மலையகத்தில் அந்தனி ஜீவா போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள். யாழ்ப்பாணத்தில் "டிறாமா" நாடக வடிவம் செல்வாக்குப் பெற்றிருந்தது. வைரமுத்து வின் "மயான காண்டம்" அழியாப் புகழ் பெற்றது. பண்டார வன்னியன், பூதத்தம்பி, நொண்டி நாடகம், ஞான சௌந்தரி, எஸ்தேக்கியார், அரிச்சந்திரா, கோவலன் கண்ணகி முதலான பல்துறை நாடகங்கள் அவ்வக்காலங்களில் மக்களை ஈர்த்துக் கொண்டவைகளாகும். நாடகங்கள் நடிப்பதற்காகவும், படிப்பதற் காகவும் எழுதப்பட்டன. கதிர்காமர் கனகசபையின் நற்குண சேகரன் (1927), பிரான்சிஸ் கிங்ஸ்பெரியின் சந்திரகாசன் (1940), மனோன்மணி (1941), மு. இராமலிங்கத்தின் அசோகமாலா (1943), பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் மாணிக்க மாலை (1943), க. சிதம்பரநாதனின் சாவித்திரிதேவி சரிதம் (1917), க. இராமலிங்கத்தின் நமசிவாயம் அல்லது நான் யார்? (1929), நவாலியூர் க. சோமசுந்தரப் புலவரின் உயிரிளங்குமரன் (1936), க. செல்வநாயகத்தின் சாமளா அல்லது இன்பத்தின் துன்பம் (1937), சாரா எழுதிய சத்தியேஸ்வரி முதலான நாடகங்கள் ஈழத் தமிழில் முன்னோடியாகவும் பெரிதும் படிப்பதற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கானவையாகவும் விளங்குவன.

இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் க. கணபதிப் பிள்ளை தமிழ் நாடகத்துறைக்கு வெளிச்சம் பாய்ச்சியவர். யாழ்ப்பாணப் பேச்சு வழக்கை முதன் முதலில் பயன்படுத்தி நாடகம் எழுதியவர். தமது ஊரான தும்பளைப் பிரதேச மொழிவழக்கைப் பயன்படுத்தி புதுமை செய்தவர். எட்டுச் சமூக நாடகங்களையும், ஒரு வராலாற்று நாடகத்தையும், ஒரு நாடகத்தை வடமொழி தழுவியும் எழுதியுள்ளார். சமூக நாடகங்கள் எட்டினுள் ஆறு நாடகங்கள் நானாடகம், இரு நாடகம் என்னும் இரு தொகுதிகளாக வெளி வந்துள்ளன. "சுந்தரம் எங்கே?", துரோகிகள் 1940 ஆகியவை நூலுருப் பெறவில்லை. "சங்கிலி" (1956) வரலாற்று நாடகமாகவும், "மாணிக்க மாலை" வடமொழி தழுவியதாகவும் அமைந்துள்ளன. உடையார் மிடுக்கு, முருகன் திருகுதாளம், கண்ணன் கூத்து, நாட்டவன் நகர வாழ்க்கை என்பன நானாடகத்திலும், பொருளோ பொருள் அல்லது கார்த்திகேயன் வீழ்கை, தவறான எண்ணம் ஆகியன இரு நாடகத்திலும் இடம் பெற்றவைகளாகும். இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை மூலம் பேராசிரியர் தமிழ் நாடகங் களை நடித்தும், எழுதியும் நமிழ் நாடகத் துறை வளர்ச்சிக்கு வித் திட்டார். இவரின் வழியில் பேராசிரியர்களான சு. வித்தியானந்தன், சி.மௌனகுரு, கா.சிவத்தம்பி, க.கைலாசபதி முதலியோரும் தமிழ் நாடகத் துறை வளர்ச்சிக்கு அரும் பணியாற்றினர். 1957 முதல் கலைக் கழகத் தமிழ் நாடகக் குழுவின் தலைவராகப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பொறுப்பேற்றுக் கொண்டார். தமிழ் நாடகத்துறையை நவீன மயப்படுத்தும் முயற்சிகள் இடம்பெற்றன. அண்ணாவிமார் மாநாடுகளும் கௌரவிப்பும், நாட்டுக் கூத்துப் போட்டிகள், நாடகக் கருத்தரங்ககள், நாட்டுக் கூத்துப் பிரதிகளைத் தேடி அச்சேற்றல், கூத்துகள் மேடையேற்றல் முதலான பணிகளில் ஆர்வமுடன் வித்தியானந்தன் செயற்பட்டார். கர்ணன் போர்,, வாலிவதை, நொண்டி நாடகம், இராவணேசன் முதலான கூத்துக்கள் தயாரித்து மேடையேற்றப் பட்டன. இதன் பின்னணியில் பேராசிரியர் மௌனகுரு இன்று வரை தமிழ்க் கூத்து மரபினைக் கட்டிக் காத்து வருகின்றமை கண்கூடாகும்.

சுஹைர் ஹமீட், நா. சுந்தரலிங்கம், சு. தாசீசியஸ் முதலானவர்கள் நாடகங்களை மேடையேற்றினர். கவிஞர் இ. முருகையன் நாடகப் பிரதியாக்கங்களில் பா நாடகங்கள் உட்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பங்கு வகித்தார். என். கே. ரகுநாதனின் "கந்தன் கருணை" நாடகம் மேடையில் நடிக்கப்பட்டு, அச்சிலும் வெளிவந்த **சாதீயப் பிரச்சனை** நாடகமாகும். மஹாகவி, அம்பி, முருகையன், காரை சுந்தரம்பிள்ளை முதலியோரின் பா நாடகங்கள் குறிப்பிடத்தக்கன. கலைச் செல்வன், மாத்தளை கார்த்திகேசு, வி. கே. பாலன், இராஜசேகரன், பௌசுல் அமீர், சுஹைர் ஹமீட், இ. சிவானந்தன் முதலியோரும் காத்திரமான நாடகங்களை எழுதினர். எழுபதுகளின் பிற்பகுதியில் நாடக அரங்கக் கல்லூரி, அவைக்காற்றுக் கலைக் கழகம் ஆகியன நாடகக் கலைஞர்களுக்குரிய பயிற்சிக் களங்களாக விளங்கின. சுய ஆக்கங்களுடன், மொழி பெயர்ப்பு நாடகங்களையும் இவை மேடையேற்றின. மஹாகவியின் கோடை, புதியதொரு வீடு, மௌனகுருவின் சங்காரம், முருகையனின் கடுழியம், நா. சுந்தரலிங்கத்தின் விழிப்பு, அ. தாசீசியஸின் பொறுத்தது போதும், குழந்தை ம. சண்முகலிங்கத்தின் பா நாடகங்கள் யாவும் நாடக அரங்கக் கல்லூரியால் மேடையேற்றப்பட்டன. இளைய பத்மநாதன், ஆனந்தராசா, வி. எம். குகராசா, பிரான்சிஸ் ஜெனம், பாலேந்திரா, ரகுநாதன், க. சிதம்பரநாதன், ஜெயசங்கர், பாலசுகுமார் முதலான பலரைத் தமிழ் நாடகத்திற்குப் பங்களிப்புச் செய்தோராகக் காணமுடிகிறது. 1980 இல் குழந்தை சண்முகலிங்கத்தின் மண்சுமந்த மேனியர் நாடகம், க. சிதம்பரநாதனால் நெறிப்படுத்தப்பட்டு பல மேடைகள் கண்டு வெற்றிவாக சூடியது. அவரது "உயிர்த்த மனிதர் கூத்து" என்ற நாடகமும் சிறப்பானதாய்ப் பாராட்டப் பெற்றது, இயக்கங்களின் போராட்டக் காலங்களின் போது விடுதலையை வலியுறுத்தும் வீதி நாடகங்கள், தெருவெளி நாடகங்கள் பலவும் தமிழ்ப் பிரதேசங்களில் மேடையேற்றப்பட்டன.

சி. மௌனகுரு, குழந்தை ம. சண்முகலிங்கம் போன்றோர் சிறுவர் நாடகங்கள் பலவற்றை எழுதி மேடையேற்றியுள்ளனர். "கூடி விளையாடு பாப்பா", "தாடி அறுந்த வேடன்" முதலானவை இவற்றுட் சிலவாகும். கவிஞர் வி. கந்தவனம், குறமகள், கோகிலாமகேந்திரன், பண்டிதர் கதிரேசபிள்ளை, கந்தையா ஸ்ரீகணேசன், க. கந்தவேள், ஜோன்சன் ராஜ்குமார், அருணா செல்லத்துரை முதலான பல எழுத்தாளர்களை நாடகத் துறை சார்பாக ஈழத்தில் இனங்காண முடியும். யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் ஐம்பது ஆண்டுகாலப் பணிகள் காத்திரமானவை. நல்லூர் நாட்டாரியல் பண்பாட்டுக் கழகம் திரு. செ. மெட்ராஸ் மெயில் தலைமையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரிய கலை வளர்ச்சியை முன்னெடுத்த நிறுவனமாகும். வவுனியா, மட்டக்களப்பு, முல்லைத் தீவு போன்ற இடங்களிலும் குறிப்பிட்ட சில நிறுவனங்கள் பாரம்பரிய நாடகத் துறையையும், நவீன நாடகத் துறையையும் வளர்ப்பதில் துணை செய்கின்றன. புலம் பெயர் நாடுகளில் நவீன முறை நாடகங்கள் பல அடிக்கடி ஈழத் தமிழர்களால் மேடையேற்றப் படுகின்றன. பிரான்ஸிலிருந்து "உடல்" போன்ற சஞ்சிகைகளும் வெளிவந்து நாடகம், கூத்து ஆகிய கலைகளுக்குத் துணை புரிகின்றன. இலங்கை அரசினர் ஆண்டு தோறும் நாடகப் போட்டிகளை நடத்திப் பரிசில்கள் வழங்கி ஊக்குவிக்கின்றனர். பாடசாலைகள் மட்டத்தில் இடம்பெறும் தமிழ்த் தினப்போட்டிகளில் பாரம்பரியக் கலைசார் வடிவங்கள் இடம் பெறுகின்றன. நாடகம், கூத்துப் போன்றவை இவற்றுள் அடங்கும். அரியாலை, பாஷையூர், வட்டுக்கோட்டை, ஊர்காவற்றுறை, நாவாந்துறை, அல்வாய், முல்லைத்தீவு, முள்ளியவளை, வவுனியா, உடப்பு, கொழும்பு, மலையகத்தின் பல கிராமங்கள், திருகோண மலை முதலான இடங்களில் தமிழ்க் கலைகளான கூத்தும் நாடகமும் கூடுதலான அக்கறையுடன் வளர்த்தெடுக்கப் படுவதை இன்றும் காண முடிகிறது.

நாடக ஆசிரியர் பற்றிய அறிமுகம்

- இ. முருகையன்



ஈழத் தமிழ்க் கவிதைக்கு வளஞ் சேர்த்த கவிஞர்களுள் முதன்மையானவர் முருகையன். விஞ்ஞானப் பார்வையும், முற் போக்குச் சிந்தனையும், மரபு தழுவிய கவிதைச் செல்நெறியும், ஒடுக்கப்பட்ட - உழைப்பாளி மக்கள் மீதான அக்கறையும் ஈழத்து நவீன தமிழ்க் கவிதை யுலகில் திருப்புமுனையை ஏற் படுத்திய ஒருவராக அவரை இனங் காட்டியது. ஆழ்ந்த கல்விப்புலமை, சிங்கள - ஆங்கில மொழிப்பரிச்சயம், இயல்பாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்த நகைச்சுவையுணர்வு, கொடுமை கண்டு பொங்கியெழும் குணாம்சம் ஆகியன முருகையனின் கவிதா ஆற்றலுக்குக் களமமைத்தன. அவரது கவிதைகளின் பாடுபொருள்கள் பன்முகத் தன்மையானவை. சமூக அவலங்களையும், மானிட மேம்பாட்டு முயற்சிகளையும், பழைமையின் வசீகரங்களையும், புதுமையின் சாகசங்களையும், வாழ்க்கையின் அறைகூவல்களையும், மனிதவுணர்வுகளின் பரிமாணங்களையும் அங்கதச் சுவையோடும், அழகியல் உணர்வோடும் சித்திரித்துக்காட்டுவன.

தென்மராட்சிப் பிரதேசத்தின் சைவத்தமிழ்ப் பாரம்பரியமிக்க கல்வயல் கிராமத்தில் 23.04.1935 இல் பிறந்தவர் முருகையன். தமிழாசிரியர் இராமுப்பிள்ளையின் புதல்வர். தாயார் பெயர் செல்லம்மா. மூத்த, இளைய சகோதரிகளும், தம்பியும் உடன் பிறந்தவர்கள். ஆரம்பக்கல்வியைக் கல்வயல் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், இடைநிலைக்கல்வியில் ஆறாம் வகுப்பினைச் சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் கற்றபின், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் விடுதி மாணவராயிருந்து கற்றார். தம்மிலும் இரு வயது மூத்தவரான கைலாசபதி அவர்களுடன் விடுதியில் தங்கியிருந்த வேளையில் ஏற்பட்ட நட்பும், இலக்கிய உறவும் தொடர்ந்து நீடித்ததால் இருவரும் பயனடைந்தனர். கல்லூரிக் காலத்திலேயே மாணவர் சஞ்சிகைகளில் கவிதைகள், நடைச்சித்திரங்கள், கட்டுரைகள் என முருகையன் எழுதினார். முருகையனின் முதற்கவிதை,

"வள்ளுவனின் வழுவற்ற கொள்கையில்லை

வளமுடை நல்லகிம்சையுடன் ஒழுக்கமில்லை" எனத் தொடங்கியதாகப் பேராசிரியர் க.கைலாசபதி நினைவு கூர்ந்துள்ளார். "இந்து சாதனம்" பத்திரிகையின் வைரவிழா (1950) மலரில் முருகையனின் முதற்கவிதை வெளிவந்தது. பன்னிரண்டு வயதில் கையெழுத்துப் பிரதிகளில் எழுதியவருக்குப் பதினைந்தாவது வயதில் இந்த வாய்ப்புக் கிடைத்தது. வித்துவான் க.கார்த்திகேசு ஆசிரியரின் தூண்டல்களும், க.சிங்காரம், நடனசபாபதி ஐயர் போன்ற சக மாணவர்களின் ஊக்குவிப்புகளும், கைலாசபதி அவர்களின் தொடர்பும் இணைந்து முருகையனது இலக்கிய தாகத்தை அதிகரிக்கச் செய்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் (1953-1956) பயின்று விஞ்ஞானப்பட்டதாரியான முருகையன், பின்னர் இலண்டன் பல்கலைகழகக் கலைப்பட்டதாரி (1961) ஆனார். 1985இல் யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தின் முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். 1956 ஆம் ஆண்டு முதல் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகப் பணியாற்றிய பின், அரசகரும மொழித் திணைக்களத்தில் அறிவியற்றுறை மொழி பெயர்ப்பாள ராகவும், பின்னர் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பதிப்பாசிரியர், பிரதம பதிப்பாசிரியர் பதவிகளிலும் 1962 - 1978 வரை பணியாற்றினார். இக்காலப்பகுதியில் தமிழ்க் கலைச் சொல்லாக் கத்துக்கு அவராற்றிய பணி பெரியது. முருகையனின் பதவிகளும், கடமைகளும் விஞ்ஞானப்பின்னணியில் அமைந்திருந்தமையால், அவரது கவிதைகளும் ஆய்வறிப் பண்புடையனவாகக் காணப் பட்டன.

1979 - 1982 கால கட்டத்தில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராகக் கடமையாற்றிய பின், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் கல்விப்பணிப்பாளராகப் பணியாற்றி, 1983 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அசாதாரணச் சூழ்நிலை காரணமாகச் சொந்த விருப்பின் பேரில் ஓய்வு பெற்றுக் கொண்டார். அதற்குப்பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராயிருந்த பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களின் அழைப்புக்கிணங்க அங்கு, 1986 முதல் முதுதுணைப் பதிவாளராகப் பணி புரிந்து, 1995 இல் தமது அறுபதாவது அகவை நிறைவில் ஓய்வு பெற்றார்.

நீர்வேலிக் கிராமத்தில் திருமணஞ் செய்து, அங்கேயே வாழ்ந்து வந்த முருகையனுக்கு ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர். தெல்லியூர் செ.நடராசன் நடத்திய 'தமிழ்மணி', டிக்கோயாவிலிருந்து வெளிவந்த 'கலைச்சுடர்', யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிச் சஞ்சிகையான 'இந்து இளைஞன்', 'இந்துசாதனம்', 'ஈழகேசரி', 'வீரகேசரி', 'தினகரன்', 'சுதந்திரன்' ஆகிய ஏடுகளில் முருகையனின் ஆரம்பகாலப்படைப்புகள் வெளிவந்தன. தொடர்ந்து தமிழக ஏடுகளான சரஸ்வதி, தாமரை, கலைமகள், கல்கி, தீபம், முதலியவற்றிலும், ஈழத்தின் சமூகத் தொண்டன், ஆனந்தன், கலைச்செல்வி, மத்தியதீபம்,கலைமதி, மரகதம், இனமுழக்கம், அல்லி, தேனருவி, தேன்மொழி, கலைச்சுடர், கவிஞன், நோக்கு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகரந்தம், மல்லிகை, ஈழநாடு, ஈழநாதம், உதயன், வலம்புரி, தினக்குரல் உள்ளிட்டபல்வேறு ஏடுகளிலும், சிறப்பு மலர்களிலும் வெளிவந்தன. எத்தனையோ எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு முருகையனின் அணிந்துரைகள் சிறப்புச் செய்துள்ளன. நாடளாவிய ரீதியிலும், தமிழ் நாட்டிலும் சமகாலக் கவிஞர்களுடனும், இலக்கியகர்த்தாக்களுடனும் நட்பைப் பேணியவர் கவிஞர் முருகையன் அறுபதுகளில் அமரர் இணுவில் க.இரத்தினத்துடன் இணைந்து "நோக்கு" என்னும் கவிதைக்கான சஞ்சிகையை நடத்தியவர். செ.கணேஸ்வரன் முதலான குழுவினருடன் சேர்ந்து "அறிவொளி" விஞ்ஞான மாதச் சஞ்சிகையைச் சிலகாலம் நடத்தியவர். இளங்கவிஞர்கள் பலரை ஊக்கமூட்டி உயர்த்தி விட்டவர். எவருடனும் அன்போடும் பண்போடும் அளவளாவும் உயரிய மனத்தினர்.

1958 வரையிலும் தமிழ்த்தேசியத்தில் நம்பிக்கை கொண்டு உழைத்தவர். அதற்குப் பின்னர் முற்போக்கு இலக்கிய அணியினைச் சார்ந்து செயற்பட்டவர். இருப்பினும் தமது நிலைதளராது 1980களிலிருந்து இன வன்மங்களுக்கும், ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக ஓங்கிக் குரல் கொடுத்தவர். "தமிழ் எங்கள் ஆயுதம்" (1962) நூலில் மஹாகவியின் கவிதைக்கு அடுத்து இரண்டாவதாக இவரது கவிதையிடம் பெற்றிருந்தது. யாழ்ப்பாண நூலக எரிப்பின் தாக்கமே இவரது "வெறியாட்டு" பாநாடகம் (1986) ஆகும். பத்திரிகைகள், சஞ்சிகைகளில் பல விமர்சனக் கட்டுரைகளை எழுதியுள்ள இவரது படைப்புகள் வானொலியிலும் ஒலிபரப்பாயின. நாடகங்கள், பேச்சுக்கள், உரையிசைச் சித்திரங்கள், கவிதைவாசிப்புகள் ஆகியன வானொலியில் இடம்பெற்றன.

1955ஆம் ஆண்டளவில் கவியரங்குகளில் பங்குபற்றத் தொடங்கிய இவர், இரசனையுடனும், பொருள் பொதிந்த நகைச்சுவையுடனும் கவிதை வாசிப்பதில் பெயர் பெற்றவர். பிற்காலத்தில் பல கவியரங்குகளைத் தலைமையேற்று நடத்தியுள்ளார். "புதுவகைக் கற்பனைகளை அழகிய சந்தநடையில் கவியாக்குவதில் வல்லார்" என்று அறுபதுகளில் கனக.செந்திநாதன் அவர்கள் இவரைப் புகழ்ந்துள்ளார். சிறந்ததொரு மரபுக் கவிஞரான முருகையன், புதுக்கவிதைகளிலும்கவனஞ் செலுத்திய போதிலும் மரபை மறுதலிக்காத கொள்கையுடையவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் அதிகளவிலான பா நாடகங்களைத் தமிழில் தந்தவர் இவர்தான். 'வந்து சேர்ந்தன' (1965 இருநாடகங்கள்), 'தரிசனம்' (1965), 'கோபுரவாசல்' (1969), 'வெறியாட்டு' (1986), 'மேற்பூச்சு' (1995), 'சங்கடங்கள்' (2000), 'உண்மை' (மொழிபெயர்ப்பு நாடகத் தொகுதி 2002) சோபக்கிளி சின் 'அன்ரி கனி' நாடகத்தின் மொழிபெயர்ப்பான 'கர்வபங்கம்'(2007) என்பன இவரது நாடக நூல்களாகும். இவரின் 'கடுழியம்', ' அப்பரும் சுப்பரும்' ஆகிய மேடைநாடகங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை. முற்போக்குச் சிந்தனை கொண்ட அரசியல் நாடகங்கள் இவையாகும். 'பொய்க்கால்', 'குற்றம் குற்றமே', 'சத்தியச்சாறு' ஆகிய மேடை நாடகங்களும், 'துளிர்', 'கூவல்' முதலான வானொலி நாடகங்களும் முருகையனின் புகழைப் பறை சாற்றுவன. இவரது முதலாவது நூல் 'ஒருவரம்' (1964) ஆகும். ஹீட்ஸ், வேட்ஸ்வோர்த், பைரன், மில்டன்முதலான பன்னிரு ஆங்கிலக் கவிஞர்களின் கவிதைகளது மொழிபெர்ப்பு இது. 'நெடும்பகல்' (1967) காவியம், 'கோபுர வாசல்' (1969), 'ஆதிபகவன்' காவியம் (1978), 'அது அவர்கள்' நீண்டகவிதை (1986), 'மாடும் கயிறு அறுக்கும்' கவிதைத் தொகுதி (1990), 'நாங்கள் மனிதர்' கவிதைத் தொகுதி (1992), 'ஒவ்வொரு புல்லும் பூவும் பிள்ளையும்' கவிதைத் தொகுதி (2001) ஆகியன இதுவரை வெளிவந்த முருகையனின் கவிதை நூல்களாகும். 'இன்றைய உலகில் இலக்கியம்', ' ஒரு சில விதி செய்வோம்' (1972) ஆகிய திறனாய்வு நூல்களும், "திருவெம்பாவையர்" உரைநடைச் சித்திர நூலும், வடமொழியிலுள்ள குமாரசம்பவத்தைத் தழுவிய "இளநலம்" நூலும் பேராசியர் கைலாசபதியுடன் இணைந்தெழுதிய "கவிதை நயம்"(1970) நூலும் இவரது படைப்புக்களாகும். இவரது "மொழி பெயர்ப்பு நுட்பம்" நூலும் சில ஆண்டுகளுக்கு முன் வெளியானது. 2010இல் இவரது மொழிபெயர்ப்புக் கவிதைகளைக் கொண்ட நூலும் வந்துள்ளது. இவை தவிரப் பல்துறை சார்ந்த 300க்கு மேற்பட்ட கட்டுரைகளையும் முருகையன் அவர்கள் எழுதியுள்ளார். தமிழகத்திலிருந்து வெளிவந்த விஜயபாஸ்கரன் அவர்களின் "சரஸ்வதி" சஞ்சிகையில் "யமசோதனை" என்னும் சிறுகதையினை எழுதியிருந்தார். அதுவொன்றே இவரெழுதிய சிறுகதையாகும்.

"முருகையனது தத்துவ வீச்சு எத்துணை முக்கியமோ, அத்துணை முக்கியமானவை அவர் மேற்கொண்டு வந்துள்ள கவிதை வடிவப் பரிசோதனைகள். நவீன தமிழில் காத்திரமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசோதனைகளைச் செய்த கவிஞரில் முருகையனுக்குச் சிறப்பானதோர் இடம் உண்டு. இப்பரிசோதனைகள் யாவை? பல்வேறுவகை யாப்புகளையும் கையாண்டமை, நவீன கவிதைக்கு வேண்டிய உருவத்தை நோக்கிய தேட்டம், புதுமைப்பித்தன், ரகுநாதன் ஆகியோரின் எடுப்பான கவிதை முயற்சிகளால் உந்தப்பட்டும், கவியரங்குப் பாமொழிவு அனுபவங்களாலும், தான் தோன்றிக் கவிராயர் தொடர்பாலும் கவிதையிலே பேச்சோசையை முதன்மைப்படுத்தி வளர்த்தெடுத்தமை பிறிதோரிடத்திலே நான் எழுதியது போல, முருகையன் கவிதை மூலம் பிறருடன் 'உரையாடும் பண்பை' நன்குணர்ந்தவர். கவிதை உயிர்த்துடிப்புள்ள இலக்கியவடிவம் என்பதை நம்மவர்க்கு இக்காலத்தில் உணர்த்திய கவிஞரில் முக்கியமானவர் முருகையன்". இவ்வாறு பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் கூறுவதனூடாகக் கவிஞர் முருகையனின் கவிதைகள் பற்றியும், அவை ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் பற்றியும் உணர முடிகிறது. முருகையனின் கவிதைகளைத் தனிக்கவிதை, நெடும்பாட்டு, நாடகம் என மூன்று பிரிவுகளாக நோக்கி ஆராய முடியும். கலையம்சம், சமூகப்பயன்பாடு, ஒலி நயம் ஆகியவற்றைத் தமது கவிதைகளில் பிரதிபலித்தவர் முருகையன். மஹாகவியுடன் இணைந்து இவரெழுதிய "தகனம்" இன்னும் நூலுருப் பெறவில்லை. தனது நண்பர் கைலாசபதியவர்கள் "தினகரன்" பத்திரிகை ஆசிரியராகவிருந்தபோது அதில் நிறையவே எழுதினார். கவிதையே தனக்கு விருப்பத்துக்குரிய துறையாயிருந்தபடியால் அத்துறையிலீடுபட்டதாகக் கூறுமிவர் அதிகமான வேளைகளில் இலங்கைச் சாகித்யக்குழு உறுப்பினராயிருந்துள்ளார். இதன் காரணமாகவும், விருப்பமின்மையாலும் தாமெழுதிய நூல்களைச் சாகித்யப் பரிசுக்கு அனுப்பாமல் இருந்துள்ளார். இருப்பினும் 1992இல் இவரது "நாங்கள் மனிதர்" கவிதைத் தொகுதிக்குப் பரிசு கிடைத்தது.

1995ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் முருகையனுக்குக் கௌரவ கலாநிதிப் பட்டமளித்துக் கௌரவித்தது. 2009இல் இலங்கை அரசினரின் உயரிய இலக்கிய விருதான "சாகித்ய இரத்தினம்" விருதினை முருகையன் பெற்றுக் கொண்டார். "உருவத்திற்கும் உள்ளடக்கத்துக்கு முள்ள நுட்பமான இயங்கியல் ரீதியான உறவைத் தெளிவுற உணர்ந்து கவிதை படைப்பவர் முருகையன்". இக்காரணத்தினாலேயே முருகையனைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கவிஞர்க்குக் கவிஞர்" என நான் குறிப்பிடுவது வழக்கம்.

இவ்வாறு முருகையனின் கவிதைத் தரத்தை உயர்த்திக் கூறிய பேராசிரியரின் கருத்து மிகையன்று. ஏனெனில் ஈழத்தமிழ் இலக்கியத்தில், குறிப்பாகக் கவிதையிலக்கியத்தில் புதிய செல்நெறியை அறிவுபூர்வமாக உருவாக்கிய கவிஞர் இவரெனலாம். சில வருடங்கள் நோயுற்றிருந்த இவர், 27.06.2009இல் கொழும்பில் காலமானார். முருகையனின் **இரு துயரங்கள்** என்ற மொழிபெயர்ப்பு ஈரங்க நாடகம் இங்கு இடம்பெற்றுள்ளது.

இரு துயரங்கள்

(ஈரங்க நாடகம்)

காட்சி 1

மேடைத் திரை விலக முன்னர் மண்டபத்து ஒளி மங்கத் தொடங்குகிறது. அரை மங்கலில் இசைக் குழு இந் நாடகத்துக்கான இசையை வாசிக்கத் தொடங்குகிறது. தொடக்கத்தில் இசை வேகமாக ஆரம்பித்து சடுதியாக சோக இசையாக மாறுகிறது. சோக இசையை மீட்டத் தொடங்கும்போது மண்டபத்து ஒளி மங்கி மறைகிறது. திரை மெல்ல விலகுகிறது. மேடையில் சற்று மங்கிய ஒளி பாய்ச்சப்பட்டுள்ளது. மேடையின் இடது அரைப் பகுதியில் கீழ்மேடை இடம் பிற்பகுதியை அண்டி சோபா செற்றிகள், பூச்சாடியோடு கூடிய நீள மேசை ஆகியன உள்ளன. நடு மேடை இடம் பின் மூலையடியில் நிறுத்தியோடு கூடிய மின் விளக்கும், அதனை அண்டி மேல் மேடை இடத்தில், புத்தகங்களோடு கூடிய இறாக்கையும், அதன் மேல் அலங்கோலமாகக் கிடக்கும் அலங்காரப் பொருட்களும் பெரிய இரண்டு மூன்று புத்தகங்களும் உள்ளன. மேல் மேடை வலத்தை அண்டி ஒரு கட்டில். அதன் மேல் தலைமாட்டில் குத்து விளக்கோடு கூடிய சிறிய மேசையும், பின் புறத்துள்ள யன்னலை அண்டி சற்று உயரமான மேசையும், அதன்மேல் மருந்துப் போத்தல்கள் வகையறாக்களும், திறந்தபடியுள்ள ஒரு தடித்த புத்தகமும் காணப் படுகின்றன. நடிகர்கள் மேடைக்குள் பிரவேசிப்பதற்கு கீழ்மேடை இடத்தின் பக்கச் சுவரில் கதவொன்றும், நடுமேடை வலத்தின் பக்கச் சுவரில் இன்னுமொரு கதவும் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது இளைப்பாறிய டக்ற்றர் கந்தப்புவின் இருக்கை அறையும், படுக்கை அறையும் சேர்ந்த பகுதியாகும். இவற்றின் பிரிப்பைக் காட்டுவதற்கு நடு மேடை மத்தியில் நிலைக் கதவைக் குறிக்கும் ஒரு சட்டப்படல் வைக்கப்படலாம். இவ்விரு பகுதிகளும் சபையோருக்கு நன்கு தெரிகின்றன. மேல்மேடை வலத்தை அண்டிய கட்டிலிலே கந்தப்புவினது குழந்தையின் பிணம் வைத்து மூடப் பட்டுள்ளது. கந்தப்பு நரை விழுந்த கிழவர். கட்டிலருகில் முழந்தாளில் குனிந்து நின்று முனகி முனகி விம்மிக் கொண்டிருக் கிறாள் கந்தப்புவின் மனைவி. அவளும் வயது போனவள்தான். மருந்துப் போத்தல் வகையறாக்கள் உள்ள மேசையில் கைகளை ஊன்றியபடி பக்கவாட்டாக யன்னலினூடாக வெறித்துப் பார்த்தபடி நிற்கிறார் டக்ற்றர்.

நெறியாளர் மேடையில் வந்து அவரது அறிமுகத்தை முடித்துப் போகும் வரை இருவரும் சோகச் சிலையாக நிற்கிறார்கள். இசை சோக மழை பொழிகிறது. நெறியாளர் பேசத் தொடங்கியதும் இசை மெல்லத் தேய்ந்து, அவர் சென்றதும் கூடி, பின் வசனங்களுக்கு இடம் கொடுக்க தேய்ந்து மறைகிறது.

நெறியாளர் : (மேடையில் உள்ள பொருட்கள், நடிகர் எல்லா வற்றையும் கவனித்தபடி கீழ் மேடை மத்திக்கு வந்து)

இரு துயரங்கள். இந்த நாடகத்தினுடைய மூலம் செக்கோவினுடைய ஒரு சிறுகதை. அந்தச் சிறு கதையிலை நாடக அம்சம் நிறைய இருக்கெண்டு தோன்றிச்சுது எனக்கு. அதுதான் நாடகமாக்கித் தரச்சொல்லிக் கேட்டன். முருகையன்தான் நாடகமாக்கித் தந்தவர். அங்கை நிக்கிறவர்தான் டக்ற்றர் கந்தப்பு. இது அவருடைய மனைவி. அவைக்கு ஒரேயொரு பிள்ளை. அந்தப்பிள்ளை இப்போ கொஞ்சம் முந்தித்தான் செத்துப் போச்சு. வயிற்றோட்டம் - படுவன் எண்டு தமிழிலை சொல்லுறது. வயதான காலத்திலைதான் அவவுக்கு அந்தப் பிள்ளை பிறந்தது. அவையும் அந்தப் பிள்ளையை ஆசையாயும், கவனமாயும்தான் வளர்த்தவை. என்ன செய்யிறது. அந்தக் கவலை யிலைதான் அவரும் அவற்றை பெஞ்சாதியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிக்கினம். இந்தத் துக்கமான செய்தியோடை தான், நாங்கள் நாடகத்தை ஆரம்பிக்கிறம். சரி உங்கிடை ரசனைக்குக் குறுக்க நான் நிக்கிறது சரியில்லை. நீங்கள் நாடகத்தைப் பாருங்கோ.

(நெறியாளர் போகிறார். கந்தப்பு தலைமயிரை ஒதுக்கிக் கொண்டே வெளிப்புறமாகப் பார்க்கிறார். பின்னர் பெருமூச்சு விடுகிறார். சட்டைப் பையைத் துழாவி இருபது முப்பது செக்கனுக்குப் பிறகு ஒரு கைலேஞ்சியை எடுக்கிறார். அதை இடது கைக்கு மாற்றிக் கொண்டு, பிறகும் காற்சட்டைப் பையில் ஏதோ தேடுகிறார். ஒரு நெருப்புப் பெட்டி அகப்படுகிறது. சிறிது நேரம் அதை வருடிக் கொண்டிருந்து விட்டு, பிணத்தின் தலைமாட்டில் உள்ள குத்து விளக்கில் ஒரு திரியை இட்டு ஏற்றுகிறார். பிறகு சில ஊதுவத்திகளையும் பற்றவைத்துப் பிணத்தருகிலே வைக்கிறார். சிறிது நேரம் குனிந்து பார்த்துக் கொண்டு நிற்கிறார். கண்களை ஒரு தடவை மூடித் திறந்து விட்டு வெளியே வருகிறார். கதவு மணி அலறுகிறது. டக்ற்றர் சட்டைத் தெறியைக் கூடப் பூட்டாமல் வெளியே வந்து பார்க்கிறார். மனோகரன் விரைந்து நுழைகிறான்)

மனோ : டக்ற்றர் இருக்கிறாரா வீட்டிலை?

கந்த : ஓ..... நான்தான் டக்ற்றர். என்ன வேணும்?

மனோ : ஓ..... சந்தோஷம் டக்ற்றர். நல்லகாலம் நீங்கள் வீட்டிலை இருந்தது. (டக்ற்றரின் கைகளைப் பற்றியபடி) உங்களை, எனக்குத் தெரியும் டக்ற்றர். என்ரை பேர் மனோகரன். மிசிஸ் ஆறுமுகத்தின்ரை றிலேஷன். நீங்கள் ஓரிடமும் வெளியாலை போகாமல் இருந்ததே பெரிய காரியம். உடனே என்னோடை வரவேணும் டக்ற்றர். என்ரை சம்சாரத்துக்குச் சுகமில்லை. கடும் நோய். ஆபத்து. கார் கொண்டு வந்திருக்கிறன் டக்ற்றர்.

(படபடப்புடன் பதறிப் பதறிப் பேசுகிறான் மனோகரன். கந்தப்பு எதுவும் பேசவில்லை. குனிந்து கொண்டு நிற்கிறார்)

நீங்கள் வீட்டிலை இருப்பியளோ இல்லையோ எண்டு பயந்து கொண்டு தான் வந்தனான். வழி முழுவதும் இதே கவலைதான் எனக்கு. அப்பிடியே அந்தரிச்சுப் போனன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டக்ற்றர். சட்டையைப் போட்டுக் கொண்டு வாருங்கோ. உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும்.

(டக்ற்றர் முகத்தில் எவ்வித சலனமும் காட்டாமல் சோகத்தோடு பெருமூச்சு விட்டபடி மேலே பார்க்கிறார்)

டக்ற்றர் நடந்தது இதுதான். பஞ்சாட்சரம் வந்தவன் என்னைக் காணிறத்துக் கெண்டு - எங்கடை வீட்டுக்கு. கொஞ்ச நேரம் பலதையும் பத்தையும் பேசிக்கொண்டு நாங்கள் இருந்தம். பிறகு தேத்தண்ணி குடிச்சம். பஞ்சாட்சரத்துக்கு வயலின் வாசிக்கிறது கேக்க நல்ல விருப்பம். அவன் வயலின் வாசிக்கச் சொல்லி பாமாவைக் கேட்டான். பாமா என்ரை சம்சாரம் டக்ற்றர். அவள் உடனை வயலினை எடுத்து வாசிச்சாள்.திடீரெண்டு அவள் கையை நெஞ்சிலே வைச்சபடியே அலறினாள். அப்படியே பொத்தெண்டு விழுந்து போனாள். அவளைத் தூக்கி கட்டிலடிக்குக் கொண்டு போய் ஆறுதலாய்ப் படுக்க வைச்சம். நெத்தியிலை பாம் பூசி, முகமெங்கும் தண்ணி தெளிச்சுப் பாத்தம். ஆள் அசையவே இல்லை. மரக் கட்டை மாதிரிக் கிடக்குறாள். இது அநூநிசிம் எண்டு தான் நான் நினைக்கிறென். அவவின்ரை தகப்பனார் கூட அநூநிசத்தாலைதான் செத்தவர். அதை நினைக்கத்தான் பயமாய் இருக்கு.

(டக்ற்றர் எதையுமே வாங்கிக் கொள்ளாதவர் போல் மௌனமாய் இருக்கிறார்)

நீங்கள் உடனே வெளிக்கிடுங்கோ டக்ற்றர். சட்டையைப் போட்டுக் கொண்டு வாருங்கோ.

(கந்தப்புவின் கைகளை இரு கைகளாலும் பற்றியபடியே அழைக் கிறான் மனோகரன். கைகளை விடுவித்து பின்வாங்கிய படியே ஒரு அசுமாத்தமும் இன்றிப் பேசுகின்றார்)

கந்த : மன்னிக்க வேணும். ஐஞ்சு நிமிஷத்துக்கு முந்தித்தான் என்ரை பிள்ளை மோசம் போயிட்டுது.

மனோ : ச்...ச்...ச்... *(சிறிது நேரம் பொறுத்து)*

ஆ கடவுளே! எப்படிப்பட்ட அசந்தர்ப்பமான வேளையிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வந்திட்டன். என்ன அதிட்டக் குறைவான நாள்.... ஆனால் என்ன பொருத்தம். இரண்டு சம்பவங்களும் ஒரே நாளிலை.... ஆர்தான் நினைச்சிருப்பினம் இப்பிடி நடக்கும் எண்டு. ச்...ச்...ச்...

(யோசனையில் ஆழ்ந்தபடி போவதா விடுவதா என்று தயங்குகிறான் மனோகரன். டக்ற்றரின் கையை உரிமையுடன் நெருக்கமாகப் பற்றியபடி)

மன்னிச்சுக் கொள்ளுங்கோ டக்ற்றர். தயவு செய்து கேளுங்கோ நான் சொல்லிறதை. உங்கிடை நிலைமை எனக்கு விளங்குது. இந்த வேளையிலை உங்களை வரச்சொல்லிக் கேட்கிறது எவ்வளவு வெட்கக் கேடான காரியம். கடவுளுக்குத்தான் தெரியும் நான் படுற பாடு. ஆனால் என்ன செய்யிறது. வேறை வழியில்லை டக்ற்றர். நீங்களே யோசிச்சுப் பாருங்கோ... நான் வேறை ஆரிட்டைப் போறது? உங்களை விட வேறை டக்ற்றரே இல்லை இந்த ஊரிலே. வேறை ஊருக்குப் போய்த் தேடிப்பிடிச்சு வாறதுக்கிடையிலை... இது மிச்சம் ஆபத்தான வியாதி. அநா றிசிம் டக்ற்றர். பாமாவின்ரை தகப்பனும் அநா றிசித்தாலை தான் செத்தவர். கனகாலம் வருத்தமாயும் கிடக்கேல்லை. திடீரெண்டு ஒரு நாள் .....டக்ற்றர், நீங்க எனக்கு இப்ப கடவுள் போலை. தயவு செய்து மறுக்காமல் வாருங்கோ. டக்ற்றர் நான் எனக்காய்க் கேட்கேல்லை. வேற ஒரு உயிருக்காகக் கேட்கிறன். தயவு செய்து.....Please

(சிறிது நேரம் மௌனம். கந்தப்பு திரும்புகிறார். மனோகரனுக்குப் பின்காட்டிய படி சில கணங்கள் நிற்கிறார். பின்னர் யந்திரம் போல உள்ளறைக்குப் போகிறார். அங்குள்ள குத்து விளக்கைத் தூண்டி விட்ட பிறகு,எண்ணெய்ப் போத்தலை எடுத்து எண்ணெய் விடுகிறார். கையை ஒரு துவாயாலை துடைத்த பிறகு, பிணத்தருகிலேநின்று ஒரு வெற்றுப் பார்வையைப் படியவிடுகிறார்.தமது மூக்கினை விரல்களால் அர்த்தமின்றிப் பிடித்து விட்ட பிறகு, நாடியைத் தடவுகிறார். மேசையிலே விரித்தபடி இருந்த மொத்தமான ஒரு புத்தகத்தை எடுத்து நடுப் பக்கத்தைப் பார்க்கிறார். பின்னர் அப்புத்தகத்தை விறுவிறுவென்று முன்னும் பின்னுமாய் புரட்டுகிறார். நெற்றியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகட்டை விறுவிறுவென்று உரசி விட்டுக் கொண்ட கந்தப்பு வெளிக் கூடத்துக்கு வருகிறார்)

மனோ : (ஆறுதலாய்ப் பெருமூச்சு விட்டபடி) அப்பாடா ..... வாருங்கோ டக்ற்றர்.

(மனோகரனைக் கண்ட பிறகுதான், அப்படி ஒருவன் தன் வீட்டில் வந்து நிற்கிறான்; தன் மனைவியின் நோய்க்கு வைத்தியம் பார்க்கும் பொருட்டுத் தன் வீட்டுக்கு வருமாறு தன்னை அழைத்தான் என்ற நினைவு டக்ற்றருக்கு உண்டாகிறது).

கந்த : ஓ.... நான்.... நான் அப்பவே சொன்னேனே, வர ஏலாதெண்டு. தயவுசெய்து என்னைக் கரைச்சல் செய்யாதையும்.

மனோ : இல்லை டக்ற்றர் உங்களுடைய நிலைமை எனக்கு நல்லாய் விளங்குது. நான் என்ன கல்லுச் சிலையா, அல்லது மரக் குத்தியா... நல்லாய்த் தெரியும் நீங்கள் எப்பிடிப்பட்ட மனநிலையிலே இருக்கிறியள் எண்டு. நானும் மனிசன் தான். ஒரே பிள்ளையை, அதுகும் இந்த வயசிலை பறிகுடுக்கிறதெண்டால், அது எவ்வளவு ஏமாற்றமாய் இருக்கும்... எவ்வளவு துக்கமாய், கவலையாய் இருக்கும்.... அதெல்லாம் எனக்குப் பூரணமாய் விளங்கும். ஆனால் நான் கேட்கிறது எனக்காக இல்லை டக்ற்றர். வேறை ஒரு உயிர் சீவத் தறுவாயில் இருக்குது. சாகக் கிடக்கிறவள் என்ரை சம்சாரம். அந்தக் கிறீச்செண்ட குரலைக் கேட்டிருந்தியளெண்டால், அந்த முகத்தைப் பாத்திருந்தியளெண்டால் என்ரை கிலேசம் உங்களுக்கு விளங்கும். கடவுளே கடவுளே.... சத்தியமாய் நான் நினைச்சன் நீங்கள் உடுப்புப் போடத்தான் உள்ளை போட்டீங்கள் எண்டு, டக்ற்றர் பிளீஸ் வாருங்கோ. நேரம் பொன்னானது. மன்றாடிக் கேட்கிறன். நீங்கள் வரத்தான் வேணும்.... பிளீஸ்....

கந்த : (தெளிவாகவும், திடமாகவும்) மன்னிச்சுக் கொள்ளும். நான் இப்ப உம்மோடை வர ஏலாது.

(இவ்வாறு சொன்ன டக்ற்றர் உள்ளே செல்லத் திரும்புகிறார். தொடர்ந்து சென்ற மனோகரன் கந்தப்புவின் கையைப் பிடித்துக் கொள்கிறான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோ : டக்ற்றர் நீங்கள் படுகிற சங்கடம் எனக்குத் தெரியும். அது எவ்வளவு கடுமையானது என்டதும் எனக்கு விளங்கும். ஆனால் நான் வரச் சொல்லிறது ஒரு பல்லுக் கொதிப்புக் குப் பரிகாரம் செய்யிறதுக்கு இல்லை டக்ற்றர். தடிமன் காய்ச்சலுக்கு மருந்தெழுதிக் குடுக்கிறதுக்காக இல்லை உங்களை நான் வரச் சொல்லி மண்டாடிறது. ஒரு உயிரைக் காப்பாற்றுறதுக்கு ஒரு மனிச சீவனைக் காக்கிற துக்காக.... (மன்றாட்டமாக) டக்ற்றர் மனிச சீவன் தனிப் பட்ட துயரங்களை விட மேலானது. விலை மதிப்பில்லா தது. மனிசத் தன்மையின்ரை பேராலை கேட்கிறென் டக்ற்றர். உங்கிடை மனத் தைரியத்தையும், தியாக சிந்தையையும் காட்டுங்கோ..... தயவு செய்து

கந்த : மனிசத் தன்மை (விரக்திச் சிரிப்பு). அது இரண்டு பக்கமும் கூருள்ள ஆயுதம். அதே மனிசத் தன்மையின்ரை பேராலை உம்மை நானும் கேட்டுக் கொள்ளலாம். என்னை இப்ப தனிமையிலை விட்டிடும் எண்டு.என்ன கரைச்சலப்பா இது. காலே தள்ளாடுது. விழாமல் நிக்கிறதுக்கே நான் திண்டாடிறன். நீர் என்னோடை வந்து மனிசத் தன்மையைப் பற்றிப் பேசுறீர். இப்ப நான் ஒரு இடத்துக்கும் வர முடியாது. என்ன தந்தாலும் நான் வர மாட்டேன். இஞ்சை மனிசிக்குத் துணையாக விட்டிட்டு வாறதுக்கும் ஒருவரும் இல்லை. இந்த நிலையிலை... இந்த வேளை யிலை... நான் வீட்டை விட்டிட்டு வர ஏலாது..... முடியாது.

மனோ : டக்ற்றர்.....

கந்த : (பதற்றத்துடன்) தயவுசெய்து என்னை இனித் தெண்டிக்க வேண்டாம். மன்னிச்சுக் கொள்ளும். வைத்திய தர்ம விதி பதின் மூண்டாம் புத்தகத்தின் முதலாம் பிரமாணப்படி, என்ரை கழுத்தைப் பிடிச்சு இழுத்துக் கொண்டு போறதுக்கு உமக்கு உரிமை இருக்குது. வைத்திய தர்மத்தின் படி உம்மிடை வேண்டுகோளை மறுக்கிறதுக்கு எனக்கு உரிமை இல்லை. விருப்பமெண்டால் என்னை நீர் அப்பிடி இழுத்துக் கொண்டு போம். ஆனால் எந்த வேலையையும் செய்யக் கூடிய நிலைமையிலை இப்ப நான் இல்லை. பேசவே இயக்கமில்லை எனக்கு. என்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னிச்சுக் கொள்ளும் மிஸ்ரர் மனோகரன்.

மனோ : இல்லை டக்ற்ர். நீங்கள் அந்தத் தொனியில் பேசக் கூடாது நீங்களாய் மனமிரங்கி வாறதெண்டால் வாருங்கோ. வைத்திய தருமத்தைப் பற்றியும், பதின் மூண்டாம் புத்தகத்தைப் பற்றியும் எனக்கென்ன கவலை? உங்களைக் கட்டாயப் படுத்துறதுக்கு எனக்கு என்ன உரிமை இருக்கு? அப்பிடி நான் கனவிலையும் நினைக்க மாட்டன். இப்ப என்ரை சம்சாரத்தை நீங்கள் தான் காப்பாற்ற வேணும். நீங்கள் தான் தெய்வம். நீங்கள் தான் கடவுள். மனமிரங்கி, மனமிசைஞ்சு வாறதெண்டால் வாருங்கோ. இல்லையெண்டால் நான் என்ன செய்ய முடியும். என்ரை தலைவிதி எண்டிட்டுப் போகவேண்டியது தான்..... போறதா? நான் எங்கை போறது? டக்ற்ர். எனக்கு உங்களைத் தவிர வேறை கதியே இல்லை. உங்கிடை மகன் உங்களை விட்டிட்டு இப்பத்தான் பிரிஞ்சிட்டான் எண்டு சொன்னியள். அப்பிடியெண்டால், என்ரை அந்தரம் இப்ப உங்களைத் தவிர வேறை யாருக்குத் தான் விளங்கும். என்னடா அலம்பிக் கொண்டு நிக்கிறான், மடையன் எண்டு நினையாதையுங்கோ. என்ன பேசிற தெண்டு யோசிக்கிற மனநிலையே எனக்கு இல்லை. தயவு செய்து குறை நினைக்க வேண்டாம். உடனே வாருங்கோ. வைத்தியர் தானே கண் கண்ட தெய்வம். நீங்கள் வாருங்கோ டக்ற்ர் அநூ றிசிம் எண்டால்..... ஐயோ கடவுளே! டக்ற் கன நேரம் நான் மினக்கெடுத்த மாட்டன். ஒரு அரை மணித்தியாலம்.

கந்த : கன தூரம் போக வேணுமா?

மனோ : இல்லை ஒரு நாலு நாலரைக் கட்டை தான் இருக்கும். கார் கொண்டு வந்திருக்கிறன். அரை மணித்தியாலம் எடுக்காது போய்த் திரும்பி வர. மறுக்காமல் வாருங்கோ.

கந்த : (சிறிது நேரம் பெருமூச்சு விட்டபடி) ம்.....

(கந்தப்பு உள்ளே சென்று மனைவியையும் குழந்தையையும் மாறி மாறிப் பார்த்தபடி சிறிது நேரம் நிற்கிறார். மனோகரன் நிலையின்றித் தவிப்பவனாய் நிற்கிறான். சிறிது நேரத்தின் பின் கோட்டை மாற்றிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு கைப்பெட்டி சகிதம் வருகிறார் கந்தப்பு. மனோகரன் அவரிடமிருந்து பெட்டியை வாங்கிக் கொண்டு முன்னே அவரை அழைத்துச் செல்கிறான். நடந்து வெளியேறப் போன கந்தப்பு, ஒரு கணம் நின்று உள்ளறைப் பக்கம் பார்க்கிறார். மனோகரன் அவர் கையைப் பிடிக்கவே மெல்லத் திரும்பிப் போகிறார். சோக கீதம் மெல்ல இசைத்துக் கூடுகிறது. ஒளி மெல்ல மெல்ல மங்க, திரை மெதுவாக மூடுகிறது)

காட்சி 2

காட்சி 2, மனோகரன் வரவேற்பறையில் நடைபெறுகிறது. மனோகரனின் வீடு வசதி உள்ள ஒருவரின் வீடாகக் காட்சி அளிக்கிறது. மேடையின் இட அறையின் பிற் பகுதியில் மேல் வீட்டிற்குச் செல்வதற்கான படிக்கட்டு தென் படுகிறது. நடு மேடை இடத்தின பிற் பகுதியிலும் படிக்கட்டுக்கு முன்பாகவும் ஒரு "ஷோ கேஸ்" உள்ளது. "ஷோ கேஸ்" இற்கு மேல் தொலைக்காட்சி, டெக் போன்ற வகையறாக்கள் உள்ளன. இடப் பக்கச் சுவரின் நடுப் பகுதியை அண்டி ஒரு புத்தக இறாக்கை உள்ளது. மேடையின் வல அரையின் நடுப்பகுதியில் சோபா செற்றிகள் போடப்பட்டுள்ளன. நீள மேசை மீது "ஆஷ் ட்ரே", சில கவர்ச்சிப் பத்திரிகைகள் உள்ளன. இவற்றோடு நிறுத்தியில் பொருத்திய படி பெண்ணின் படமும் வைக்கப்பட்டுள்ளது. நடு மேடை வலத்தின் கீழ் வல மூலையில் நிறுத்தியோடு கூடிய ஒரு மீன் விளக்கும் உண்டு. நீளமான செற்றியில் ஓர் தலையணையும் குழம்பிய கோலத்தில் கிடக்கும் ஓர் படுக்கை விரிப்பும் காணப்படுகின்றன.

முந்திய காட்சியை விட இந்தக் காட்சியில் அதிகம் வெளிச்சம் உண்டு. இப்போதுதான் பாத்திரங்களை இரசிகர் பூரணமாய்ப் பார்க்கிறார்கள். டக்ற்றரின் பெட்டியைத் தூக்கிக் கொண்டு கதவைத் திறந்தபடி மனோகரன் உள்ளே நுழைகிறான். கந்தப்பு பின்னால் வருகிறார். அறையைச் சுற்று முற்றும் நோட்டமிட்டு நின்று.....

மனோ : ஏதாவது அவக்கேடாய் நடந்திட்டால்..... கடவுளே!

(திடீரென்று டக்ற்றர் நிற்கும் பக்கமாக முகத்தைத் திருப்புகிறான். அவர் இன்னும் இருப்புக் கொள்ளாமல் அவன் இருக்கும் திசையை நோக்கியபடி, ஆனால் சிந்தனை வேறெங்கோ அலைய வெறிப்புடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கிறார். அவரை உரியபடி உபசரிக்க வேண்டும் என்ற விழிப்பு வர.....)

இருங்கோ டக்ற்றர் இருங்கோ. அவை மேலைதான் இருக்க வேணும், நீங்கள் வந்திருக்கிறியள் எண்டு சொல்லிப் போட்டு வாறன்.

(டக்ற்றர் ஏதோ முணு முணுப்பது போல வாய் அசைக்கிறார். ஆனால் குரல் வெளிப்படவில்லை)

உண்மையிலை டக்ற்றர் உங்கிடை பெருந்தன்மையை நினைக்க நினைக்க..... அதைப்பற்றி என்ன சொல்லுற தெண்டே எனக்குத் தெரியேல்லை. சத்தியமாய்ச் சொல்லுறேன் டக்ற்றர்..... சரி, சரி..... நீங்கள் இருந்து கொள்ளுங்கோ. நான் அவைக்குச் சொல்லிப் போட்டு வாறென்.

(கட கடவென்று மாடிப் படியேறிப் போகிறான் மனோகரன். டக்ற்றர் இரண்டொரு தடவை தலைமயிரைக் கோதி விடுகிறார். மருந்துக் கறை படிந்த தன் கைகளை ஒருக்கால் மணந்து பார்த்து விட்டு, பின்னர் அவற்றை உற்று நோக்குகிறார். ஒரே அமைதி சூழ்ந்திருக்கிறது. பின்னர் மேல்மாடியில் "ஆ!" என்ற அலறல் கேட்கிறது. ஓர் அலுமாரியின் கண்ணாடி சடாரென அடித்துச் சுக்கல் சுக்கலாக நொருங்கிய சத்தம் கேட்கிறது. பின்னர் சிறிது நேர அமைதி. டக்ற்றர் மனோகரன் மாடிக்குச் சென்ற படிக்கட்டுப் பக்கமாக நோக்குகிறார். மேற்படிக்கட்டில் மனோகரன் நிற்கிறான். அவன் தோற்றம் முற்றாக மாறி விட்டது. படு பயங்கரமான எதுவோ நடந்துவிட்டது போன்ற பாவம் அவன் முகத்திலே தெரிகிறது. வருத்தமும், ஆத்திரமும் ஏமாற்றமும் மாறி மாறித் தோன்றுகின்றன. படிக்கட்டால் இறங்கிக் கைகளை பிசைந்தபடியே நடு மேடைக்கு வருகிறான். பற்களை நற நறவென்று நெரித்துக் கொண்டு.....)

மனோ : அவள் என்னை ஏமாத்திப் போட்டாள். ஏமாத்துக்காரி. விட்டிட்டு ஓடித் துலைஞ்சு போனாள். வருத்தமெண்டு சொல்லி என்னை டக்ற்றரிட்டை அனுப்பினது என்னத்துக் கெண்டு எனக்கு விளங்கேல்லை. இப்ப விளங்குது எல்லாம். பஞ்சாட்சரத்தோடை ஓடிப் போறதுக்காகத் தான் என்னை அனுப்பினாள் டக்ற்றரிட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(டக்ற்றருக்குக் கிட்டப்போய்)

என்னைக் கைவிட்டிட்டாள். ஓடிப்போட்டாள். ஏமாத்திப் போட்டாள். ஏன் எடி உனக்கு இந்தப் பொய்? ஏன் இந்தப் பசப்பும் பாசாங்கும்? ஏனிந்த சூதும், சதியும் கைகேகித் தனமும்? என்ன தீமையப்பா நான் உனக்குச் செய்திருப் பன். ஒரு துரோகம் நினைச்சிருப்பேனா? ஏனப்பா நீ, இந்த மாதிரி நீ செய்தாய்? (டக்ற்றரிடம்) அவள் ஓடிப் போயிட் டாள் டக்ற்றர். என்னை விட்டிட்டு ஓடியிட்டாள் டக்ற்றர்.

(கண்ணீர் முட்டுகிறது. மனோகரனுக்கு ஆத்திரமும் துயரமும் போட்டி போடுகின்றன)

கந்த : ஆ..... ஆ..... வருத்தக்காரி எங்கை?

மனோ : வருத்தக்காரி... வருத்தக்காரி. அவள் வருத்தக்காரி இல்லை. எங்கேயோ கிடந்த மூதேசி. என்ன கேவலம். என்ன எளியதனம். கொடும்பாவி. இதைப்போல ஒரு சூழ்ச்சி செய்யிற புத்தி பேய் பிசாசுக்குக் கூட வராது என்னை உங்களிற்றை அனுப்பினவள்..... வருத்த மெண்டு சொல்லி. உண்மையான நோக்கம், அந்த நாய்ப் பயல் பஞ்சாட்சரத்தோடை, அவளின்ரை கள்ளப் புரியனோடை ஓடுறதுக்கு. ஐயோ கடவுளே, இதிலும் பாக்க நான் செத்திருக்கலாம். இந்த அதிர்ச்சியிலையிருந்து எனக்கு மீட்சி இல்லை. ஒரு காலமும் இல்லை.

கந்த : மன்னிக்க வேணும் மிஸ்ரர் மனோகரன். இதெல்லாம் என்ன? என்ரை பிள்ளை செத்துப் போச்சு. என்ரை மனிசி வீட்டிலை துக்கமும் துன்பமுமாய் அழுதபடியே இருக்குது. எனக்கு ..... எனக்கு..... நிக்கவே முடியாதபடி களைப்பாயும் சோர்வாயும் இருக்கு. மூண்டு நாளாய், இரவு பகலாய் எனக்கு நித்திரை இல்லை. இப்படியெல்லாம் இருக்க நீர்.... நீர்.... நீர் என்ன செய்யிறீர்? வேடிக்கை காட்டிறீர். ஏதோ ஒரு படுமோசமான உம்மிடை கோமாளிக் கூத்துக்குப் பக்க வாத்தியம் வாசிக்கச் சொல்லி என்னைக் கேக்குறீர். இல்லை.... இல்லை. பக்க வாத்தியம் வாசிக்கிறது என்றாற் கூடப் பரவாயில்லை. உம்மிடை கூத்து மேடைக்குப் பந்தல் காலாய் நிண்டு சுமக்கச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிறீர். எனக்கு... எனக்கு ஒண்டுமே விளங்கேல்லை.

(மனோகரன் கையில் வைத்திருந்த கடிதம் போன்ற ஒரு கடதாசியை வெறுப்புடன் கீழே வீசி எறிந்து, ஏதோ ஓர் அருவருப்பான பூச்சியை மிதிப்பது போல உழக்குகிறான்)

மனோ : எல்லாம் கண்ணுக்கு முன்னையே நடக்குது. நான் தான் ஒண்டையும் கவனிக்கேல்லை. எனக்குத்தான் ஒண்டும் விளங்கேல்லை.அவன் ஒவ்வொரு நாளும் ஏன் வந்து போனான் எண்டதைக் கூடி நான் கவனிக்கேல்லை. இண்டைக்கு ஏன் இந்தப் பஞ்சாட்சரம் கார் பிடிச்சுக் கொண்டு வந்தவன்? அதைக் கூட நான் யோசிச்சுப் பாக்கேல்லை. ஏன் கார்? நான் ஒரு குருட்டு மடையன். கண்ணிருந்தும் பாக்கத் தெரியாதவன். சீ... நான் ஒரு முட்டாள்.

கந்த : எனக்கு... எனக்கு... ஒண்டுமே விளங்கேல்லை. இதுக்கெல்லாம் என்ன கருத்து? செருப்பாலை அடிச்சது போலை... காறித் துப்பினது போலை இருக்கு உம்மிடை வேலை. மனிசன்ரை துக்கத்தைப் பகிடி பண்ணிறது போலை.... துயரத்தை நையாண்டி பண்ணிறது போலை இருக்கு. ஒரு மனிசன் செய்யமாட்டான் இப்பிடியான காரியத்தை. இப்பிடி ஒரு விசர்த்தனமான வேலையை நான் இது வரையிலை கேள்விப் பட்டதே கிடையாது.

(தனக்கு அவமானம் நேர்ந்து விட்டது என்னும் உணர்வு சிறிது சிறிதாக டக்ற்றரின் நெஞ்சிலே விடிந்து கொண்டு வர, சொல்வ தென்ன , செய்வதென்ன என்று அறியாதவராக மனம் புழுங்குகிறார்)

மனோ : அப்ப உனக்கு என்னிலை அன்பு இல்லை. வேறை ஆளிலை தான் உனக்கு விருப்பம் சரியப்பா, ஆனால் ஏன் இந்த ஏமாத்து? கீழ்த் தரமான துரோகம் ஏன்? எளிய தனமான தந்திரத்தாலை என்னப்பா நன்மை உனக்கு? என்ன லாபம்? ஏனப்பா இந்த வேலையை நீ செய்தாய்? நான் உனக்கு என்ன கெடுதி செய்தன்?

(டக்ற்றரை நோக்கி)

டக்ற்றர், என்ரை துர்ப்பாக்கியத்தை நீங்களே நேரிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிருக்கிறியள். நீங்கள் விரும்பாமலே சந்தர்ப்ப வசத்தாலை இங்கை வந்து சேர்ந்திருக்கிறியள். உண்மை முழுவதையும் உங்களுக்கு நான் சொல்லுறன்..... கேளுங்கோ டக்ற்றர் இந்த அநியாயத்தை. சத்தியம் பண்ணிச் சொல்லுறன்... நான் ஒரு சொல்லுக் கூட பொய் பேசயில்லை. எல்லாம் வெளியாய்ச் சொல்லிறன் உங்களுக்கு. அந்த மனிசியை என்ரை உயிர் போல விரும்பினன். இல்லை உயிர் போலை எண்டு சொன் னாலும் போதாது. உயிரை விட மேலாக விரும்பினென். அன்பு செலுத்தினென். ஆதரவு காட்டினென். அவளைக் கும்பிடக் கூடத் தயாராய் இருந்தென். அவளுக்காய் எல்லாத்தையும் பலியிட்டன் - தியாகம் செய்தன். என்ரை சொந்தக் காரர் எல்லாரோடையும் சண்டை பிடிச்சன் டக்ற்றர் எத்தினை பிழையளெல்லாம் செய்திருப்பாள்? அதை எல்லாத்தையும் மன்னிச்சன். என்ரை சொந்த அம்மாவோ அக்காவோ அந்தத் தவறுகளைச் செய்திருந்தால் நான் பொறுத்திருக்க மாட்டன். ஏன்? அவளை நான் கடுகடுப்பான முகத்தோடை கூடப் பாத்த தில்லை. ஒரு விதமான குறையும் நான் வைக்கேல்லை. அப்படி எல்லாம் இருக்க, ஏன் இந்தப் பொய் இவளுக்கு? இந்தக் கபடமும், தந்திரமும், குள்ள புத்தியும் ஏன்? உன்ரை அன்பு வேணும் எண்டு நான் பிடிவாதம் பிடிக்கேல்லை. பின்னை ஏன் இந்த எளியதனம்? என்னிலை உனக்கு அன்பில்லை எண்டால் ..... சரி! உன்னை நான் விரும்பேல்லை இன்னாரோடை தான் நான் ஓடப் போறன் எண்டு சொல்லியிருக்கலாமே? வெளி வெளியாய்க் கதைச்சிருக்கலாமே? இதைப் பற்றி யெல்லாம் என்ரை கொள்கை என்ன எண்டு உனக்கு நல்லாய்த் தெரியும். பிறகேன் அப்பா இந்த மூடு மந்திரம்.

(நீள் மேசையில் இருந்த பாமாவின் படத்தை எடுத்து முன்னாற் பிடித்துக் கொண்டு)

மனோ : பாருங்கோ டக்ற்றர் இப்பிடிச் சாந்தமான ஒருத்தி இப்பிடியான கேவலமான ஒரு காரியத்தைச் செய்திருக்க முடியுமா? நீங்களே சொல்லுங்கோ டக்ற்றர். பாருங்கோ இந்தப் படத்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(டக்ற்ரரின் முகத்துக்கு நேரே படத்தை நீட்டுகிறான். டக்ற்ரரின் ஆத்திரம் அதிகரிக்கிறது. மிருக வெறி ஒன்று பளீரிடுகின்றது அவர் விழிகளில். ஒவ்வொரு சொல்லாக அழுத்தி அழுத்தி அவர் பேசுகிறார்)

கந்த : ஏன் காணும் இதையெல்லாம் எனக்குச் சொல்லுறீர்? இதைப் பற்றியெல்லாம் எனக்கு அக்கறையும் இல்லை., கவலையும் இல்லை. எனக்குத் தேவையில்லைக் காணும் உம்மிடை சில்லறை இரகசியங்கள். கொண்டு போய்க் குப்பையிலை போடும் உம்மிடை ஒப்பாரியளை. உந்த அழுக்குக் கஞ்சலையெல்லாம் எனக்கு முன்னாலை அவிட்டுக் கொட்ட வேண்டாம். எனக்கு நீர் செய்த அவமானமும் இழிவும் போதாதெண்டு நினைக்கிறீர் போலை இருக்கு. நான் என்ன உம்மிடை வேலைக் காரன் எண்டு நினைச்சீரா, உம்மிடை குளரலையும் கூச்சலையும் கேட்டுக் கொண்டிருக்கிறதுக்கு. உம்மிடை அவமானங் களைப் பொறுத்துக் கொண்டிருக்கிறதுக்கு? என்ன காணும் இதெல்லாம்?

(மனோகரன் கந்தப்புவிடமிருந்து சிறிதே பின்வாங்கி, ஆச்சரியத் தோடு அவரைப் பார்க்கிறான்)

ஏன் காணும் என்னை இங்கை கூட்டி வந்த நீர் இப்ப? நீர் கலியாணம் பண்ணினீர், வேலை இல்லாமல். நீர் உம்மிடை உணர்ச்சி மயமான நாடகத்தை ஆடலாம் அல்லது கோமாளிக் கூத்தை ஆடியாலும் சரிதான். உமக்கு வேறை வேலை இல்லை எண்டால் அதுகளைச் செய்து கொண்டு இரும். ஆனால் என்னை ஏன் காணும் இதுக்கை இழுக்கிறீர்? எனக்கும் உதுகளுக்கும் என்ன அலுவல்? உம்மிடை காதல் கதைகளுக்கையும், சல்லா பங்களுக்கையும் என்னை ஏன் கொண்டு வந்து மினைக் கெடுத்துறீர்? என்னை என் பாட்டிலை விட்டிடும். ஆரேன் உம் தரவழி உல்லாசிகளோடை போய் உம்மிடை மனிசத் தன்மை, தியாக சிந்தை, பண்பு, பணியாரம் - இதுவளைப் பற்றிப் பேசும், பிரசங்கம் பண்ணும் அல்லது புறுபுறுத்துக் கொண்டு புசத்தும். வேணுமெண்டால் உம்மிடை வீணை யை எடுத்து, கருணா ரசந் ததும்ப ஒரு கீர்த்தனையைப் பிடுங்கி எறியும். நீர் காம்போதியை வாசிச்சால் என்ன -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாரியிலை அழுது வடிச்சால் என்ன? எனக்கென்ன காணும் அதைப்பற்றி? மனிசர் மக்களோடை உம்மிடை சேட்டையை வைச்சக் கொள்ளாதையும், மற்றவைக்கு மரியாதை குடுக்கிறது எப்பிடி எண்டு உமக்குத் தெரியாட்டால், அவைக்குக் கிட்டப் போகாதையம். அவ்வளவு தான் நான் சொல்லக் கூடியது.

மனோ : மன்னிக்க வேணும் இதுக்கெல்லாம் என்ன கருத்து?

கந்த : கருத்தா கேட்கிறீர் மிஸ்ரர் மனோகரன்? மனிதரை விளையாட்டுச் சாமான் போலை மதிக்கிறது சரியில்லை எண்டு தான் இதுக்குக் கருத்து. நான் ஒரு டக்ற்றர். அத்தர் வாசனையும், பரைத்தைமை மணமும் இல்லாதவையும், டக்ற்றர்மாரும், மற்றத் தொழில்காறர் எல்லாரும் உம்மிடை வீட்டு விளக்குமாறுகள் - துடைப்புக் கட்டையள் எண்டா நினைச்சீர்? விருப்பமெண்டால் நீர் அந்த வேலையைச் செய்யும். ஆனால் துன்பப்படுகிற ஒரு மனிசனைப் பிடிச்சு, கூத்து மேடைக்குக் கல்லாய் வைச்சுப் பாக்கிறதுக்கு உமக்கு உரிமை இல்லை.

மனோ : என்ன துணிச்சலோடை நீர் எனக்கு உதைச் சொல்லுறீர்.

கந்த : என்ரை துன்ப நிலைமைகளைத் தெரிஞ்ச பிறகும், என்னை இஞ்சை கொண்டு வந்து, உம்மிடை அலம்பல்களைக் கேட்க வைக்கிறதுக்கு உமக்குத்தான் எவ்வளவு துணிச்சல். மற்றவன்ரை மனக் கவலையை நையாண்டி செய்யிறதுக்கு, என்ன உரிமை காணும் இருக்கு, உமக்கு?

மனோ : உமக்கென்ன விசரா? என்ன கருணையில்லாத கல்லுத் தான் நீர். நானோ கவலையிலை மூழ்கி இருக்கிறன்.... நீர்

கந்த : கவலை. (உரத்து) கவலை. அந்தச் சொல்லை உச்சரியாதையும். உமக்கும் அதுக்கும் வெகுதூரம். கடைச் செலவுக்குக் காசு போதாதவனும் கவலைப் படுகிறதாய்த் தான் சொல்லிறாங்கள். அடைப்பன் வியாதி பிடிச்ச கோழிச் சாவலும் கவலை தான் படுகிது.

மனோ : டக்ற்றர், நீர் உம்மை மறந்து பேசுகிறீர். உப்பிடிப்பட்ட பேச்சுக்கு கையாலை தான் மறுமொழி குடுக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கம். விளங்குதா நான் சொல்லிறது?

(மனோகரன் சட்டைப் பையில் இருந்து இரண்டு காசுத் தாள்களை எடுக்கிறான். அவற்றை மேசை மீது அடித்து வைத்து)

இந்தாரும். இது நீர் வந்ததுக்காக நான் தரவேண்டிய காசு.

கந்த : எனக்குக் காசு தரத் தெண்டிக்க வேண்டாம் (காசுத் தாள்களை எடுத்துக் கிழித்து எறிகிறார்) அவமானத்துக்கு ஈடாய்க் காசு குடுத்துச் சமாளிக்க ஏலாது.

மனோ : டக்ற்றர், அளவோடை நிறுத்திக் கொள்ளும்.

கந்த : அளவு என்ன காணும் அளவு? செய்யிறதையும் செய்து போட்டு, பிறகு எச்சரிக்கை பண்ணிறிரா, எச்சரிக்கை?

மனோ : ஓ, நீர் பெரிய டக்ற்றர் தான். ஆனால் என்ரை நிலைமையையும் கொஞ்சம் யோசிச்சுப் பாரும்.

கந்த : எனக்கென்ன வேறை வேலை இல்லை, உம்மைப் போலை பொழுது போகாத் துணிச்சல் ஏவறைக் காரன் எண்டா நினைச்சீர் என்னையும்?

மனோ : மரியாதைக்காய்ப் பார்க்கிறென்.

கந்த : மரியாதையைப் பற்றி என்ன காணும் தெரியும், உமக்கு?

மனோ : டக்ற்றர், நீங்கள் இனிப் போகலாம்.

கந்த : போகத்தான் போறன். பின்னை என்ன உம்மோடை விருந்து சாப்பிடவா வந்த நான்? என்னைக் கொண்டு போய் விடுறதுக்கு ஒழுங்கு பண்ணும்.

மனோ : ஓ.... ஒழுங்கு. கொண்டு போய் விடுறதுக்கு ஒழுங்கு கட்டாயம் செய்யத் தான் வேணும்.

(மேசை மணியை கிடு கிடுவென அடிக்கிறான். ஒருவரும் வரவில்லை. மீண்டும் அடிக்கிறான். யாரும் இல்லை. கோபாவேசத்தோடு மணியை நிலத்தில் வீசுகிறான். அப்போது ஒரு வேலையாள் வருகிறான்)

எங்கை போய்த் துலைஞ்சிட்டியள் எல்லாரும்? எங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன நீ இப்ப? போய் ட்ரைவரிட்டைச் சொல்லு, காரைக் கொண்டு வரட்டாம் எண்டு. இவர் போக வேணும்.

(வேலையாள் திரும்பும் போது)

இந்தா, எல்லா வேலைக் காரரையும் வெளியிலை போகச் சொல்லு, நீ மட்டும் நில். அவங்கள் ஒருதருக்கும் இனி இந்த வீட்டிலை வேலை இல்லை. துரோகியள். ஒண்டும் தெரியாதது மாதிரி நடிப்பு. நன்றியில்லா நாய்கள். எல்லாரும் போய்த் துலையுங்கோ. ம்.... நீங்கள் போகலாம்.

(வேலையாள் டக்ற்றரின் பெட்டியைத் தூக்கியபடி அவரை அழைத்துச் செல்கிறான். டக்ற்றர் வெறுப்போடும், அருவருப்போடும் சினத்தோடும் வெளியேறுகிறார். மனோகரன் நிலை கொள்ளாமல் இரண்டொரு தரம் அங்கும் இங்கும் அலைந்த பின் விறு விறுவென்று மாடிப் படிகளில் ஏறி உள்ளறைக்குச் செல்கிறான். சிறிது நேரத்தில் கைத் துப்பாக்கியோடு இறங்கியவன் நடு மேடைக்கு வந்து, பாமாவின் படத்தை வெறித்துப் பார்க்கிறான். சஞ்சல இசை வலுக்கிறது. டக்கென்று திரும்பி வெளியேறுகிறான். மேடை வெற்றாக இருக்கிறது. நெறியாளர் பக்கப் படிக்கட்டால் ஏறிக் கீழ்மேடை நடுப்பகுதிக்கு வருகிறார்).

நெறி : என்ன நடந்தது எண்டதையெல்லாம் நீங்கள் பாத்தீங்கள். மனசார டக்ற்றருக்குக் கோபம் வாறது நியாயம் தான். குழந்தையைப் பறிகுடுத்த துக்கம் அவருக்கு. எவ்வளவோ தெண்டிச்சுத் தானே மனோகரனும் கூட்டி வந்தவன் அவரை.

பெண்சாதி விட்டிட்டு ஓடியிட்டாள் எண்ட துயரம் மனோகரனுக்கு. துயரம் மட்டுமல்ல, ஏமாற்றமும் தான். அவன்ரை துயரம் அவனுக்கு.

ஒருத்தர் துயரத்தை மற்றவருக்குச் சொல்லிப் பங்கிட்டுக் கொண்டால், இரண்டு பேருக்கும் துயரம் குறையும் எண்டொரு தத்துவத்தைச் சிலபேர் அடிக்கடி சொல்லி றதை நீங்களும் கேட்டிருப்பியள். ஆனால் இப்ப நீங்களே நேருக்கு நேரை பாத்தியள். துயரப்படுகிற மனங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி, நியாயம், தர்மம் இதுகளொண்டும் தெரியாது. தங்கடை துயரம் தான் மற்ற எல்லாத்தையும் மூடி மறைச்ப் போடும். ஆன படியாலை தான் இவை இரண்டு பேற்றை துயரங்களும் இரண்டு முனைகளிலை நிண்டு தத்தளிச்சது கள்.

எண்டாலும் டக்ற்றர்றை வெறுப்பும், சினமும் அநியாய மானவை. டக்ற்றர் இப்ப வீட்டை போய்க் கொண் டிருக்கிறார். ஒரு வேளை நீங்கள் நினைப்பீர்கள் அவர் தன்ரை வீட்டிலை இருக்கிற பெண்சாதியைப் பற்றி யோசிச்சுக் கொண்டு போறார் எண்டு. மோசம் போன பிள்ளையைப் பற்றித் தான் மனவருத்தப்பட்டுக் கொண்டு போறார் எண்டும் சில வேளை நீங்கள் நினைப்பீங்கள். ஆனால் உண்மையிலை இப்ப அவற்றை மனத்திலை நிறைஞ்சிருக்கிறது மனோகரன்ரை வீடு; அவன்ரை பெண்சாதி பாமாவைக் கூட்டிக் கொண்டு ஓடின கோர நாயகன் பஞ்சாட்சரம், அவனைப் போல ஆக்களின்ரை சோக்கு - சொகுசு - உல்லாசம் லீலா வினோதங்கள் - இவைகளைப் பற்றியெல்லாம் டக்ற்றருக்குத் தீராத கசப்பு, வெறுப்பு. இந்தச் கசப்பும் வெறுப்பும் அவருக்குச் சாகு மட்டும்தீராது.

இரண்டு துயரங்களும் தனித்தனி நிண்டு மோதினதாலை உண்டானதுகள் இரண்டு வெறுப்புகள். இந்த இரண்டு வெறுப்புக்குள்ளையும் டக்ற்றரின்ரை வெறுப்புத்தான் கடுமையானது, கசப்பானது.

சரி, மேடை அடுக்கணியள் எல்லாம் சிதறுப்பட்டு போய்க் கிடக்குது. அதெல்லாத்தையும் ஒழுங்கு செய்ய வேணும் நீங்கள் பாத்துக் கொண்டிருக்கக் கூடியதாய் அந்த வேலையை நான் தொடங்கக் கூடாது. ஆனபடியாலை உங்களுக்கும் வணக்கம் கூறி விடைபெறுகிறேன். (பக்கத்தே பார்த்து) தம்பி இனித் திரையை மூடி விடும்.

(திரை மூடப்படுகிறது. இரு துயரங்கள் முற்றும்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகள்

1. இது ஓர் ஈரங்க நாடமாகும். ரஷ்ய நாட்டின் பிரபல சிறுகதை எழுத்தாளரான அன்ரன் செக்கோவ் என்பவரது Enimey என்ற சிறுகதையைத் தழுவி, கவிஞர். இ. முருகையன் அவர்களால் யாழ்ப்பாணப் பேச்சுவழக்கினையும், பண்பாட்டினையும் கையாண்டு படைக்கப்பட்டதாகும்.

2. அன்ரன் பவியோவிச் செக்கோவ் (Anton Paviovich Chekhov) *28 - 01 - 1860* இல் ரஷ்யாவின் Taganrog என்னும் இடத்தில் பிறந்தவர். *44* ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்து ஜெர்மனியின் Badenweller என்னும் இடத்தில் *15.07.1904* இல் மறைந்தவர். Novodevicty Cemelery, Moscow என்னும் இடத்திலேயே வாழ்ந்தவர். உளவியலாளராகவும், எழுத்தாளராகவும் பணிபுரிந்தவர். *1901* இல் ஒல்கா நிப்பர் (Olga Knipper) என்பவரைத் திருமணஞ் செய்து கொண்டவர். நாடகங்கள், சிறுகதைகளை எழுதியதன் மூலம் உலகளாவிய பெருமையைப் பெற்றவர். இவரது *201* சிறுகதைகள் ரஷ்யாவில் *13* தொகுதிகளாக *(1916 - 1922)* வெளியிடப்பட்டுள்ளன. இவரின் எழுத்துக்கள் உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. ரஷ்ய நாட்டின் இலக்கிய விருதான புஸ்கின் விருதினையும் இவர் பெற்றுள்ளார்.

3. இந்த நாடகமானது *1980* களின் இறுதியில் முருகையனால் மொழிபெயர்க்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நாடகமும் அரங்கக் கலைகளும் துறையில் பயிலும் மாணவர்களுக்காகப் பயன்படுத்தப்பட்டதுடன், அவர்களால் மேடையேற்றப்பட்டதுமாகும். *1991* ஆம் ஆண்டு இத்துறை மாணவர்களுக்கான வினாப்பத்திரத்திலும் இந் நாடகம் பற்றிய பிரதான வினா கொடுக்கப்பட்டுள்ளது.

4. நீண்ட காலத்தின் பின்னர் வயோதிபம் தலையெடுக்கத் தொடங்கிய காலத்தில் பிறந்த மகன், இறந்து சிலமணி நேரங் களாகிவிட்ட துன்பத்தில் டொக்டர் கந்தப்புவும், அவரது மனைவியும் வீட்டில் மகனருகில் இருக்கும்போது, நான்கு அல்லது நான்கரை மைல் தூரத்திலுள்ள தனது வீட்டிலிருந்து காரில் வந்திறங்கிய மனோகரன், டொக்டரை நாடி வந்து, திடீரெனத் தனது மனைவி, அனூறிசம் என்னும் நோயினால் பீடிக்கப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதாகக் கூறி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே வந்து வைத்தியம் செய்யுமாறு வேண்டுகின்றான். முதலில் அதனைப் பொருட்படுத்தாது, தனது துன்பத்தை எடுத்துக் கூறி மறுத்த டொக்டர், அவனது மனிதாபிமான வேண்டுகோளுக்காகவும், ஓர் உயிரைக் காப்பாற்றும் நோக்கத் துடனும் அவனுடன் புறப்படுகிறார். வசதியான தனது வீட்டின் வரவேற்பறையில் டாக்டரை இருக்கச் சொல்லிவிட்டு, மாடிப் படியேறி நோயாளியைப் பார்க்கச் சென்ற மனோகரன், தனது மனைவி பொய்யாக நோய் என நடித்துத் தன்னை டாக்டரிடம் அனுப்பிவிட்டு, அவளது காதலனான பஞ்சாட்சரத்துடன் ஓடிப் போய்விட்டதை அறிந்து துக்கத்துடனும் கோபத்துடனும் அலறுகிறான். டாக்டரிடம் தனது ஏமாற்றத்தைக் கூறுகிறான். டாக்டரோ மிகவும் கோபங் கொண்டு அவனை இழிவாகப் பேச, மனோகரனும் ஆத்திரப்படுகிறான். முடிவில் கார்ச்சாரதியைக் கூப்பிட்டு டாக்டரைக் காரில் அவரது வீட்டுக்குக் கொண்டு போய் விடுமாறு கூற, டொக்டரும் புறப்பட்டுச் செல்கிறார். அவரது மனம், தனது குடும்பத்தில் ஏற்பட்ட துயரத்தை விட, மனோகரனால் ஏற்பட்ட ஏமாற்றத்தையே தாங்கி நின்றது. இதுதான் "இரு துயரங்கள்" நாடகத்தின் கதைச் சுருக்கமாகும்.

5. "இரு துயரங்கள்" நாடகத்தின் நிகழ் களங்களாக டொக்டரின் வீடு இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, இடது பக்கத்தில் டொக்டரின் படுக்கை, வைத்திய சாதனங்கள் முதலியனவும், வலது பக்கத்தில் கட்டிலில் கிடத்தப்பட்ட சிறுவனின் பிணம், தலைமாட்டில் குத்து விளக்கு, பிணத்தினருகில் துயரமேயுரு வான டொக்டரின் மனைவி, யன்னலையும் மகனையும் மாறி மாறிப் பார்த்தபடி நிற்கும் டொக்டர் ஆகிய காட்சிகள் ஒழுங்க மைக்கப்பட்டுள்ளன.

6. மனோகரன் வீட்டில் வரவேற்பறையும், மாடிக்கான படிகளும் காட்சிகளாக மேடையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

7. டொக்டர் கந்தப்பு, மனோகரன் ஆகிய பிரதான இரு பாத்திரங் களின் உரையாடல்கள் மூலமே காட்சிகள் நகர்த்தப்படுகின்றன. அவர்களின் உரையாடல்களினூடு மனோகரனின் மனைவி பாமா, அவளின் தகப்பனார், மனோகரனின் நண்பன் பஞ்சாட் சரம், மனோகரன் வீட்டு வேலையாட்கள் ஆகியோர் தொடர்பு படுத்தப்பட்டுள்ளனர். இருப்பினும் நாடகத்தின் முடிவில் மனோகரனின் கார்ச் சாரதி என்ற கதாபாத்திரம் நேரடியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இவற்றுடன் டொக்டரின் மனைவி, இறந்துவிட்ட மகன் ஆகியோர் காட்சிப்படுத்தலுடன் மட்டும் நாடகத்துக்குத் துணை நிற்பதை அவதானிக்க முடிகிறது.

8. இந் நாடகத்தின் கருப்பொருள்களாக "இரு துயரங்கள்", டொக்டர் கந்தப்புவுக்கு மகனது மரணத்தினால் உண்டான துயரம், மனோகரனுக்கு மனைவி இன்னொருவனுடன் ஓடிப் போய்விட்ட துயரம் ஆகியவை விளங்குகின்றன.

9. வீட்டில் மகன் இறந்து சில மணித்தியாலங்கள் ஆகிவிட்ட நிலையில் மனோகரனின் அழைப்பை ஏற்க மறுத்ததில் டொக்டர் கந்தப்புவின் நியாயங்கள், அதனை மீறித் தனது மனைவியின் உயிரைக் காப்பாற்றுவது பற்றி மனோகரன் வலியுறுத்திய நியாயங்கள், டொக்டருடன் மனோகரன் தன் வீடு சென்ற போது, தனது மனைவி பஞ்சாட்சரத்துடன் ஓடிப் போய்விட்டதனால் அடைந்த துயரம், அதை டொக்டருக்கு வெளிப்படுத்திய நியாயங்கள், தனது துயரத்தையும் மீறி வீணாக வந்து, தான் ஏமாற்றத்துக்குள்ளானதை எண்ணிய டொக்டரின் கோபத்தினால் வெளிப்பட்ட நியாயங்கள் ஆகியவை இந் நாடகத்தில் உயிர்ப்புடன் வெளிக் கொணரப்பட்டுள்ளன. இவற்றுக்கான உரையாடல்கள் யாழ்ப்பாணப் பேச்சுவழக்கில் இயல்புடன் அமைந்துள்ளன.

10. துன்பப்படுகின்ற இரண்டு மனங்களும் நீதி நேர்மை, அற நீதியிலான செயன்முறை முதலானவற்றை மறந்து விடுகின்றன. தத்தம் துயரமே எனையவர்களின் துயரத்தை விடப் பெரியது என்று முடிவெடுத்து விடுகின்றன. இந்த நாடகத்திலும் டொக்டர் கந்தப்பு, மனோகரன் ஆகிய இருவரும் துயரங்களுக்கு ஆளானவர்கள்தான். இருப்பினும் ஒவ்வொருவரும் தமது துயரமே மேலோங்கியது எனத் தவறாகவும், உணர்ச்சிவசப் பட்டும் கருதியதால் நாடக முடிவில் இருவருக்கும் முரண் பாடுகள் எற்பட்டு காரசாரமான வாக்கு வாதங்கள் உருவாகின. இருவரும் தங்கள் துயரங்களை மனம் விட்டுப் பேசிப் பங்கு போட்டுக் கொண்டிருந்தால் முரண்பாடுகளின்றிச் சகிப்பு மனப்பான்மையுடன் சிந்தித்துச் செயற்பட்டிருப்பர். ஒருவர் துயரத்தை மற்றவர் புரிந்து கொண்டிருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. விட்டுக் கொடுத்தலும், அடுத்தவர் துயரத்தில் பங்கு பற்றலும் மனித வாழ்வின் முக்கியமான பண்பு என்பதை இந்த நாடகம் உணர்த்தி நிற்கிறது.

12. இரு துயரங்கள் நாடகத்தின் சிறப்பம்சங்கள் :

i. சுவையான முறையில், இரண்டு காட்சிகளாக நாடகத்தை உருவாக்கியதுடன், நாடக நெறியாளரே முதலில் மேடையில் தோன்றி நாடகம் சம்பந்தமான அறிமுகத்தைச் செய்வதுடன், நாடக முடிவிலும் தோன்றி, நாடகத்தை முடித்து வைக்கும் சிறந்த உத்தியைப் பேணியமை.

ii. யதார்த்தமான யாழ்ப்பாணப் பேச்சு மொழியைப் பிரதான இரு கதாபாத்திரங்களின் உரையாடல்களில் உணர்ச்சிமயமாக - துயரம், ஏக்கம், ஆற்றாமை, பணிவு, ஏமாற்றம், சினம் ஆகிய உணர்ச்சிகளின் வெளிப்பாடாகப் பயன்படுத்தியமை.

iii. இரு கதாபாத்திரங்களின் உரையாடல்களில் நியாய பூர்வமான தர்க்கித்தலைப் பின்பற்றி வாசகர்களின் - இரசிகர்களின் சிந்தனைகளில் தாக்கமுறச் செய்தமை.

iv. மேடைக் காட்சியமைப்பு, நெறியாளரின் நாடக அறிமுகமும் முடிவும், நாடக இயங்கு நிலை ஆகியவற்றில் சிறு சிறு வாக்கியங்களைப் பேணியிருந்தமை.

v. இந்நாடகத்தைப் படிப்பதற்குரியதாகவும், நடிப்பதற்குரிய தாகவும் படைத்தளித்தமை.

vi. நாடக முடிவில், இரு கதாபாத்திரங்களின் துயரங்களும் பற்றிய நீதித் தீர்ப்பினை நாடகம் பார்ப்போர் எடுக்கத்தக்க தான விதத்தில் அமைந்துள்ளமை.

vii. தேவைப்பட்ட இடங்களில் ஆங்கிலச் சொற்களை (பழக்கத்திலுள்ள) பொருத்தமாகப் பயன்படுத்தி நாடகத்துக்குச் சுவை கூட்டியமை.

viii. பிறமொழிச் சிறுகதையின் தழுவலானாலும், யாழ்ப் பாணத்துப் பண்பாட்டுக்குரிய புதிய கதைக்கருவுடன் அமைத்துப் பிரச்சினையை உணரக்கூடிய விதத்தில் உருவாக்கித் தந்துள்ளமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ix. நாடக ஆசிரியரின் மொழியாட்சிக்கான சில எடுத்துக் காட்டுக்கள்:

அ. "மனிசத்தன்மை, அது இரண்டு புறமும் கூருள்ள ஆயுதம்"

(மனிதாபிமானத்தால் நல்லதும் கெட்டதும் நடைபெறக் கூடும்).

ஆ. "வைத்திய தர்ம விதி பதின்மூண்டாம் புத்தகத்தின் முதலாம் பிரமாணப்படி, என்ரை கழுத்தைப் பிடிச்சு இழுத்துக் கொண்டு போறதுக்கு உமக்கு உரிமை இருக்குது"

(வைத்திய தர்ம நூலில் கூறியுள்ளபடி, சாகப் போகின்ற உயிரைக் காப்பாற்ற வேண்டுமானால் ஒருவர் பலாத் காரத்தையும் கடைப்பிடிக்க முடியும்)

இ. "அப்படியெண்டால் என்ரை அந்தரம் இப்ப உங்களைத் தவிர வேறை ஆருக்குத் தான் விளங்கும்"

(துயரத்திற்கு ஆளான ஒருவரால்தான் அதேபோன்ற இன்னொருவரின் துயரத்தைப் புரிந்து கொள்ள முடியும்)

ஈ. "ஏன் இந்தப் பசப்பும் பாசாங்கும்? ஏனிந்த சூதும், சதியும், கைகேகித் தனமும்"

(வஞ்சக நோக்கமுடையவரின் செயல்கள் இவை; பொய்யாக நல்லவர் போல் காட்டுதல், நல்லவர் போல் நடித்தல், தந்திரமான காரியம் செய்தல், துரோகம் செய்தல், வஞ்சக குணத்தைப் பொருத்தமான வேளை யில் வெளிப்படுத்தல்)

உ. "உம்மிடை கூத்து மேடைக்குப் பந்தல்காலாய் நிண்டு சுமக்கச் சொல்லுறீர்"

(உமது விளையாட்டுச் செயற்பாடுகளை ஏற்றுத் தாங்குகிற ஆளாக நிற்கச் சொல்லுகின்றீர்)

ஊ. "வேணுமெண்டால் உம்மிடை வீணையை எடுத்து, கருணாரசந் ததும்ப ஒரு கீர்த்தனையைப் பிடுங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறியும்"

(தேவையாயிருந்தால் உமது மனத்துக்குப் பிடித்தமான செயலை நீர் செய்வாயாக - வீணையை மீட்டி அதிலிருந்து அன்பொழுகும் இனிய இசையை ஒரு கீர்த்தனை மூலம் (பாடல் மூலம்) வெளிப்படுத்துவாயாக)

13. அருஞ்சொற்பொருள்:

அனுதாபம் - திடீரென ஆளைக் கொல்லும் பயங்கர நோய்; சீவத் தறுவாய் - உயிர் பிரியும் வேளை; பதின் மூண்டாம் புத்தகம் - வைத்திய தரும விதிகளைக் கூறும் நூல்; நாலரைக் கட்டை - நாலரை மைல்; கைகேயித் தனம் - வஞ்சகமான செயல்; அழுக்குக் கஞ்சல் - அசுத்தமான குப்பைகள்; கருணாரசம் ததும்ப - அன்புச் சுவை பொழியும் விதமாக; அலம்பல்கள் - வேண்டாத வார்த்தைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. மாதிரி வினாப்பத்திரம் - தரம் - 12

நேரம் : 3 மணித்தியாலங்கள்.

தமிழ் - 1

முதலாம் பகுதியிலுள்ள இரு வினாக்களுக்கும், இரண்டாம் பகுதியிலுள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும், எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

பகுதி 1

1. மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

i. **கன்றுதன் பயமுலை மாந்த முன்னிற்
றினைபிடி யுண்ணும் பெருங்கன் னாட
கெட்டிடத் துவந்த வுதவி கட்டில்
வீறுபெற்று மறந்த மன்னன் போல
நன்றிமறந் தமையா யாயின் மென்சீர்க்
கலிமயிற் கலாவத் தன்னவிவள்
ஒலிமென் கூந்த லுரியவா நினக்கே**

அ) இப்பாடலின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.

ஆ) இப் பாடலிற் காணப்படும் அணிச் சிறப்பை எடுத்துக் காட்டுக.

இ) சங்ககால அகத்திணை மரபின் சிறப்பம்சங்கள் எவையெனக் குறிப்பிடுக.

ii. **ஆழ நெடுந் திரைஆறு கடந்து
இவர் போவாரோ?
வேழ நெடும் படை கண்டு
விலங்கிடும் வில்லாளோ?
"தோழமை" என்று, அவர்
சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ?
ஏழமை வேடன் இறந்திலேன் என்று,
எனை ஏசாரோ?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முன்னவன்" என்று நினைந்திலன்;
மொய் புலி அன்னான் ஓர்
பின்னவன் நின்றனன் என்றிலன்;
அன்னவை பேசானேல்;
என் இவன் என்னை இகழ்ந்தது?
இவ் எல்லை கடந்து அன்றோ?
மன்னவர் நெஞ்சினில்,
வேடர் விடும் சரம் வாயாவோ?

அ) இப் பாடல்கள் இடம்பெற்ற சந்தர்ப்பத்தை விளக்குக.

ஆ) இப் பாடல்களினூடாக வெளிப்படும் வீரம் எத்தகையது?

இ) தடித்த எழுத்திலுள்ள பகுதியை விளக்குக.

ஈ) கம்பராமாயணத்தில் குகப் படலத்தில் (கங்கைகாண் படலத்தில்) இடம்பெறும் பரதனின் சேனை பற்றிய வருணனை எவ்வாறு அமைந்துள்ளது?

(24 புள்ளிகள்)

2. "அ" பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடைதருக

அல்லது

"ஆ" பகுதியிலுள்ள உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

"அ" தேவரெலாங் கொலுவிருக்கும் ஈழமெங்கள் தேயஞ்
செப்பிடுவே னதன் பெருமை சற்றிருந்து கேளும்
மூவரன்று பாடுதிருக் கோணமலை நாட்டில்
முத்தொதுக்கிக் கத்து கடல் சூழுமெங்கள் தேயம்.

எத்திசையும் போற்றுங்கதிர் காமமலை நாட்டில்
எங்கள்வள்ளி குடியிருக்கும் ஈழமெங்கள் தேயம்
புத்தபிரான் பொன்னடியாம் பொற்கமல பீடம்
பொலியுமலை எங்கள்மலை ஈழமெங்கள் தேயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவலிகங் கைப்புனலாந் தாவணியை வீசி
மாதிரமெ லாம்மணக்கும் வாசனையைப் பூசி
காவலரின் மண்மருட்டுங் கன்னிளங்கள் தேயம்
காசினியி லிவளைப்போற் கன்னியில்லை யில்லை.

செந்தமிழுஞ் சிங்களமு மாயவிரு தோழி
சேவைசெய்யும் இராசகன்னி ஈழமெங்கள் தேயம்
இந்தியரெம் அக்கைமக்கள் என்றணைக்கும் அம்மை
வந்தனையல் லாதெமக்குச் சிந்தனைவே றில்லை.

பொற்புதையல் கண்டெடுப்பார் போலச்சில மந்தி
பூமியுள்வெ டித்தபலாப் பொற்சுளையைக் கிண்டும்
நற்குணங்கொள் மங்கையரும் மைந்தர்களும் போல
நாலுகின்ற பூங்கொடியில் ஊசல்சில வாடும்.

மானின் கவைக் கொம்பெடுத்துக் கால்களென நாட்டி
வளமான பன்றிமுள்ளுக் கைம்மரங்கள் பாய்ச்சி
கானிலுதிர் மாமயிலின் தோகைகொண்டு வேய்ந்து
கட்டியதனுள்ளிருந்து சிற்றில்சில வாடும்.

கனிபெறவென் றொருகுறத்தி காதணியை வீசக்
கடுவனதைக் கைப்பிடித்துக் காதலிதன் காதில்
நனியழுத்தக் கண்ணினின்று நீர்வடியும் வாயில்
நகைவருமக் குரங்கிருக்கும் ஈழமெங்கள் தேயம்.

அ) இக் கவிதையின் பிரதான கருப்பொருளை விளக்குக.

ஆ) இலங்கை வளம் பற்றிய கவிஞரின் கருத்துகள் யாவை?

இ) இக்கவிதையிற் காணப்படுகின்ற அணிச் சிறப்புகளை எடுத்துக்காட்டுக.

ஈ) இக்கவிதையினூடாகக் கவிஞர் வலியுறுத்திய சமத்துவக் கருத்துகள் எத்தகையன?

(16 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது

"ஆ" வாழ்க்கையினது மர்மத்தையறிந்து கொள்ளுவதற்கு உபயோகமான கல்வியே கல்வியெனப்படுவது. வாழ்க்கையின் இரகசியங்களை ஊடுருவி நோக்குமாற்றல் உத்தம கவிகளுக்கு இருப்பது போலப் பிறருக்கில்லை. புறநானூறென்னும் சங்கத்தொகை நூலிலும், சீவகன் சரிதையிலும், கம்பராமாயணத்திலும் அழகுபெற வகுத்துச் சொல்லப் பட்டிருக்கின்ற தெள்ளிய உண்மைகளை மனத்தினெண்ணி மாசறத் தொரிந்துகொண்டு அவற்றின் வழிநின்று வாழ்க்கையை நடத்துபவன் உயர்நிலை அடைவான் என்பதற்கு ஐயப்பாடில்லை. கலை மகளுடைய அருளினைப் பெற்ற கவிவாணர் நான்முகத் தேவனைப் போலப் புத்துருவங்களையாக்க வல்லவர்கள். கலை நூல்களை யோதியுணர்ந்த கல்விமான் இப்புத்துருவங்களைத் தெளிவாக நோக்கி மனத்துக்கணதையமைத்துக் கொண்டு தன்னுடைய வாழ்க்கையை அவற்றுக்கு நேராகச் சீர்ப்படுத்துகின்றான். நோக்கம் உயர்வடையச் செய்கை உயர்வடையும். செய்கை உயர்வடைய வாழ்க்கை உயர்வடையும்.

அ) உத்தமகவிகள் பற்றி இப் பந்தியிற் கூறப்பட்டவை யாவை?

ஆ) "கவிவாணர் நான்முகத் தேவனைப் போலப் புத்துருவங்களை யாக்க வல்லவர்கள்" என்பதால் உணர்த்தப்பட்ட விடயத்தினை விளக்குக.

இ) இப்பந்தியாசிரியரின் மொழிநடை பற்றிய கருத்துக்களை எடுத்துக் காட்டுக.

ஈ) இப் பந்தியிற் கூறப்பட்டுள்ள நூல்களுள் ஒன்றினைச் சுருக்கமாக அறிமுகப்படுத்துக.

(16 புள்ளிகள்)

பகுதி ii

3. திருவள்ளுவர் "பெரியாரைத் துணைக்கோடல்" என்னும் அதிகாரத்தில் கூறுவனவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) பெரியாரைத் துணைக்கோடல் என்பதனால் உணர்த்தப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) பெரியாரைத் துணைக்கொள்வதனால் உண்டாகக் கூடிய நன்மைகள்.

இ) பெரியாரைத் துணை கொள்ளாமையால் உண்டாகும் தீமைகள்.

(20 புள்ளிகள்)

4. தேம்பாவணி, காட்சிப் படலத்தில் சாந்தி - மரியாள் இருவருக்கும் இடையிலான உரையாடற் பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) மரியாளிடம் சாந்தி கேட்ட வினாக்கள்.

ஆ) சாந்தியின் வினாக்களுக்கான மரியாளின் மறுமொழிகள்.

இ) சாந்தி, மரியாள் உரையாடலினூடாக வெளிப்பட்ட இயேசுவாகிய திருக்குழந்தையின் பெருமைகள்.

(20 புள்ளிகள்)

5. பாரதியாரின் "பெண் விடுதலை" என்னும் பாடலில்,

அ) பெண்களின் அடிமைத் தளைகள்

ஆ) பெண் விடுதலை பற்றிய சிந்தனைகள்

இ) பெண் விடுதலையில் ஆண்களின் பங்கு

ஆகியன புலப்படுமாற்றை எடுத்துக்காட்டுக.

(20 புள்ளிகள்)

6. எஸ். பொன்னுத்துரையின் "தேர்" சிறுகதையில் காணப்படும்

அ) கதைக்கரு

ஆ) பாத்திர வார்ப்புக்கள்

இ) பிரதேச மொழிவழக்கு

ஆகியவற்றின் முக்கியத்துவத்தை விளக்குக.

(20 புள்ளிகள்)

7. சிலப்பதிகாரம், ஊர்காண் காதையில்,

அ) கோவலனின் கழிவிரக்கக் கூற்றுகள்

ஆ) கவுந்தியடிகள் கோவலனுக்குக் கூறிய அறிவுரைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) ஊழ்வினைப் பயன் விளைந்தே தீருமென்ற உண்மை

ஆகியன கூறப்பட்டுள்ள விதத்தினைத் தெளிவுபடுத்துக.

(20 புள்ளிகள்)

8. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டை விளக்குக.

அ) திருவாசகம், கோயில் திருப்பதிகத்தில், தன்னைச் சிவபெருமான் ஆட்கொண்ட விதம் பற்றிய மாணிக்க வாசகரின் கூற்றுகள்.

ஆ) பண்டிதர் மு. நல்லதம்பியின் பாரதியார் பாடலினூடாக வெளிக் காட்டப்பட்ட பாரதியாரைப் பற்றியும், பாரதி பாடல்களைப் பற்றியதுமான கருத்துகள்.

இ) "ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது" நாவலினூடாக வ. அ. இராசரத்தினம் எடுத்துக்காட்டிய நாட்டுப்புறப் பண்பாட்டு அம்சங்கள்.

ஈ) சுவையும் தரமும் மிகுந்த நாடகமாக இ. முருகையனின் "இரு துயரங்கள்" விளங்குவதற்கான காரணிகள்.

(2 x 10 = 20 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Rs. 1,200.00
380568
Book Centre

ISBN 978 - 955 - 52960 - 6 - 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை : ரூ.1200.00